JL
V911 m N70TA.
N71.
184707



தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 30.6.1977 அன்று அண்ணா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து, 'பேரறிஞர் அண்ணா வழி நடந்து அவரது இலட்சியங்களை நிறைவேற்றுவேன்' என்று உறுதி எடுத்துக் கொள்கிறார்.



பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 4—6—1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் அனைத்து இந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினர்.



# தமிழரசு


| மலர் : 8 | ஜூலை 1977 முதல் இதழ் | இதழ் : 1 |
|---|---|---|


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| அண்ணா வழியில் அரசை நடத்துவோம் | .. 18 |
| தமிழக மக்களுக்கு முதலமைச்சர் அளித்த உறுதி | .. 22 |
| தமிழகத்தில் புதுமலர்ச்சி காண்போம்! | .. 26 |
| வரவு—செலவுத் திட்டமிடுதல் | .. 41 |


அட்டைப்படம் உதவியதற்காக நன்றி: பொம்மை, சென்னை-26.

# படமும் செய்தியும்!



சென்னை-600 008

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தல்களில் தனிப்பெரும்பான்மையுள்ள கட்சியாக வெற்றி பெற்ற அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டப் பேரவை உறுப்பினர்களின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு எம். ஜி. ஆர். அவர்கள், தமது அமைச்சரவைப் பட்டியலை ஆளுநரிடம் அளிப்பதற்காக 29.6.1977 அன்று கிண்டி ராஜ்பவனுக்குச் சென்ற போது அவரை, ஆளுநர் மகிழ்வுடன் வரவேற்றார்.

திரு எம். ஜி. ஆர் அவர்கள், அமைச்சர்களின் பட்டியலை 29.6.1977 அன்று ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களிடம் அளிக்கிறார். திரு கி. மனோகரன் அவர்கள் உடன் உள்ளார்.





ஆங்கிலேயர் ஆட்சியால் அடிமைப்பட்டுக் கிடந்த நம் நாட்டிற்கு-அகிம்சைவழி நின்று போராடி-விடுதலை வாங்கித் தந்த உலக உத்தமர் அண்ணல் காந்தியடிகளின் சிலைக்கு 30.6.1977 அன்று-முதலமைச்சராகப் பதவியேற்கும் முன்-திரு எம்.ஜி.ஆர் அவர்கள் மாலை அணிவித்து, அண்ணலிடம் ஆசி வேண்டினார்.

அடுத்து, தன்னை ஆளாக்கி விட்டவரும், 'தென்னாட்டுக் காந்தி' என்று புகழப் பட்டவருமான பேரறிஞர் அண்ணா அவர்கள் நீங்காத்துயில் கொண்டுள்ள சமாதியில் மலர்வளையம் வைக்க திரு எம். ஜி. ஆர். அவர்கள் விரைந்து சென்றார்.





"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!" என்று கூறிய பேரறிஞர் அண்ணாவின் இதயக்கனியாக விளங்கும் திரு எம்.ஜி.ஆர் அவர்கள் 30.6.1977 அன்று-முதலமைச்சராகப் பதவியேற்கு முன்பு-அண்ணா சமாதியில் மலர் வளையம் வைத்து, ஆசி வேண்டினார்.

இருள் சூழ்ந்த தமிழகத்தில் ஒளிவிளக்கேற்றி வைத்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு 30.6.1977 அன்று திரு எம் ஜி.ஆர் அவர்கள் மலர்மாலை அணிவித்து, "நீங்கள் ஏற்றிய ஒளிவிளக்கை, அண்ணா வழி நின்று பாதுகாப்பேன்" என்று உறுதி எடுத்துக் கொண்டார்.





சென்னை இராஜாஜி மண்டபத்தில் 30.6.1977 அன்று நடைபெற்ற அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில், பதவிப்பிரமாணம் செய்துவைக்க வந்த ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், முதலமைச்சராகப் பதவி ஏற்கவிருந்த திரு எம். ஜி. ஆர் அவர்களுடன் கைகுலுக்கி மகிழ்கிறார்.

இராஜாஜி மண்டபத்தின் உள்ளே நடைபெறும் பதவியேற்பு விழாவைக் காணமுடியாத மக்கள், மண்டபத்தின் முன்னே திரண்டு 'அண்ணா வாழ்க', 'புரட்சித் தலைவர் வாழ்க!', 'மக்கள் திலகம் வாழ்க' என முழங்கி, மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வாழ்த்தொலி வழங்கிய வண்ணமிருந்தனர் !





தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்கும் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கு, ஆளுநர் அவர்கள் 30.6.1977 அன்று காலை 9-15 மணியளவில் இராஜாஜி மண்டபத்தில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.



முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைக் காண, அண்ணா சாலையில், அண்ணா சிலையின் நாற்புறமும், திரண்டிருந்த மக்கள் வெள்ளம்!



முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட திரு எம். ஜி. ஆர். அவர்கள், தம் பணியைத் துவங்கக் கோட்டைக்குச் செல்லுமுன், சென்னை அடையாறுப் பகுதியில் அமைந்துள்ள மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத்திற்குச் சென்று இராஜாஜி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து, ஆசிவழங்குமாறு வேண்டினர்.

அடுத்து, நாட்டின் நலனுக்காகவே தம்வாழ்நாளை எல்லாம் அர்ப்பணித்துக்கொண்ட பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் நினைவகத்திற்குச் சென்று, மலர்வளையம் வைத்து நாட்டிற்கு உழைக்க நல்லாசி வழங்குமாறு வேண்டினர்.



# அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் நிகழ்ச்சி




நிதியமைச்சராக திரு. கி. மனோகரன்

பொதுப்பணித் துறை அமைச்சராக திரு. ச. இராமச்சந்திரன்






சட்ட அமைச்சராக திரு. கே. நாராயணசாமி முதலியார்

உணவு அமைச்சராக திரு. ஜி. ஆர். எட்மண்ட்





செய்தி-மக்கள் தொடர்புத்துறை அமைச்சராக திரு. ஆர். எம். வீரப்பன்

கல்வி அமைச்சராக திரு. சி. அரங்கநாயகம்





உள்ளாட்சித்துறை அமைச்சராக திரு. கே. காளிமுத்து

தொழிலாளர் நலத்துறை அமைச்சராக திரு. எஸ். இராகவானந்தம்





அரிசனநலத் துறை அமைச்சராக திரு. பி. சௌந்தரபாண்டியன்

போக்குவரத்துத்துறை அமைச்சராக திரு. சி. பொன்னையன்





சமூக-நலத்துறை அமைச்சராக செல்வி. பி. டி. சரஸ்வதி

வேளாண்மைத்துறை அமைச்சராக திரு. ப. குழந்தைவேலு





கைத்தறித்துறை அமைச்சராக திரு. கே. இராஜாமுகமது

அண்ணல் காந்தியடிகளின் அருமை நண்பரும், சர்வோதயத் தலைவரும், சுதந்தரப் போராட்ட வீரருமாகிய 94-வயதுடைய திரு. ரவிசங்கர் மகராஜ் அவர்கள் 1—7—1977 அன்று காலை, தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு ஆசி வழங்கினார். ஆளுநர் அவர்களும், சட்டமன்றப் பேரவையின் தற்காலிக சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்களும் உடனிருந்தனர்.





இந்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் அவர்களைத் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 2.7.1977 அன்று புதுடில்லியில் சந்தித்து உரையாடினார்.

இந்திய அரசின் பெட்ரோலியம் - இரசாயனப் பொருள் அமைச்சர் திரு பஹுகுணா அவர்களைத் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 2-7-1977 அன்று புதுடில்லியில் சந்தித்து உரையாடினார்.



# அண்ணா வழியில் அரசை நடத்துவோம்

"அன்புக்குரிய தாய்க்குலமே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே! இதயதெய்வம் அண்ணாவின் மீது ஆணையிட்டு, இங்கே உறுதி எடுக்க விரும்புகிறேன்.

"அங்கு (ராஜாஜி மண்டபத்தில்) நடந்தது அரசாங்கச் சடங்கு. ஆனால் இங்கே நடப்பது உங்களின் கட்டளையை எதிர்பார்த்து நடக்கும் சடங்கு.

"மக்கள் குரலே மகேசன் குரல்" என்ற அண்ணாவின் தத்துவப்படி மக்களின் பிரதிநிதிகள் நாங்கள் என்ற எண்ணம் தவறாமல் இந்த அரசாங்கத்தை நடத்துவோம்.

"எங்கள் அமைச்சரவையின் சார்பில் தமிழகத்தில் உள்ள மக்களுக்கும், இந்தியத் துணைக்கண்டத்தின் பிற மாநிலங்களில் வாழுகிற தமிழ் மக்களுக்கும் நாங்கள் உழைப்போம்.

"மக்களின் எண்ணங்களை—மக்களின் விருப்பங்களை—சட்டமாக்கவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றவும்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பப்படுகிறார்கள் என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல அதனை உள்ளத்திலே இருத்தி, இலஞ்சலாவண்யம் இல்லாத—ஊழலற்ற—நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத—அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம். எங்களின் வாழ்வுவசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும் அதற்காக எதிர்ப்படுகிற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம். இதனை அமரர் அண்ணா அவர்களின் மீது ஆணையிட்டு அமைச்சரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"இப்பொழுது உங்களது ஆசி பெற்று எங்களது பணியைத் தொடரச் செல்கிறோம்.

"அண்ணா நாமம் வாழ்க!"

[முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர், அண்ணா சிலை அருகே அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடையில் இருந்து, தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரை.]



# தமிழக அமைச்சர்கள்



திரு கி. மனோகரன்
நிதியமைச்சர்



திரு எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்



திரு. ச. இராமச்சந்திரன்
பொதுப்பணித்துறை அமைச்சர்



திரு கே. நாராயணசாமி முதலியார்
சட்ட அமைச்சர்



திரு ஜி. ஆர். எட்மண்ட்
உணவு அமைச்சர்



திரு ஆர். எம். வீரப்பன்
செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர்



திரு சி. அரங்கநாயகம்
கல்வி அமைச்சர்



திரு கே. காளிமுத்து
உள்ளாட்சித்துறை அமைச்சர்



திரு எஸ் இராகவானந்தம்
தொழிலாளர்நலத்துறை அமைச்சர்



திரு பி. சௌந்தர பாண்டியன்
அரிசன நலத்துறை அமைச்சர்



திரு சி. பொன்னையன்
போக்குவரத்துத்துறை அமைச்சர்



செல்வி பி. டி. சரஸ்வதி
சமூகநலத்துறை அமைச்சர்



திரு ப. குழந்தைவேலு
வேளாண்மை அமைச்சர்



திரு. கே. இராஜா முகமது
கைத்தறித்துறை அமைச்சர்



# தமிழக மக்களுக்கு முதலமைச்சர் அளித்த உறுதி

1967-ஆம் ஆண்டு தமிழக மக்கள் எந்த நம்பிக்கையுடன் அமரர் பேரறிஞர் அண்ணாவைத் தமிழகத்தின் முதலமைச்சராக ஆக்கினார்களோ, அந்த அண்ணாவின் கொள்கைகள் மீண்டும் எந்தவிதத் தடங்கலும் இன்றி, குறைவும் இன்றி, ஊழல், இலஞ்சம், உறவினர்களுக்குச் சலுகை போன்ற நீதிக்கு எதிரான செயல்முறைகளை அடியோடு நீக்குவதற்கும், 'உழைப்பவரே உயர்ந்தவர்' , 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்', 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற தத்துவத்தின் அடிப்படையில், தமிழகத்தில் மீண்டும் நல்லாட்சி நடைபெற வேண்டும் என்ற பேரார்வத்தோடு அகில இந்திய அ.தி.மு.க.வை ஆட்சியில் அமர்த்தி இருக்கிறார்கள்.

**மக்கள் கட்டளைப்படி கடமையைச் செய்வோம்!**

“நாங்கள் மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக நேர்மையான வழியில் உழைப்போம். எங்களுடைய நன் முயற்சிகளுக்கு, யார் ஊறு விளைவிக்க முயன்றாலும் அதை மக்களுக்கு அறிவித்து, மக்களின் கட்டளைப்படி எங்கள் கடமையைச்செய்வோம் என்பதைத் தமிழக மக்களுக்கு உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**நீதியின் முன் நிறுத்திடுவோம்!**

“தமிழக மக்களின் பணத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும், நிரபராதிகளின் சாவுக்கு யார் காரணமாக இருந்த போதிலும்—அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் —அவர்களையும் நீதிக்கு முன் நிறுத்தி, யார் எதிர்காலத்தில் ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் தந்த அதிகாரத்தைத் தவறான வழியில் துர்விநியோகம் செய்யாமல் தடுக்க —எச்சரிக்க—நீதியின் தீர்ப்பு உதவி செய்ய வேண்டும் என்று மக்களுக்குத் தந்த வாக்குறுதியைத் தங்கு தடையின்றி நிறைவேற்றப் பாடுபடுவோம்.

**வறுமையை நீக்குவோம்!**

“ஏழ்மை, வறுமை இவைகளை நீக்க நல்ல திட்டங்களைத் தீட்ட நிபுணர்களின் ஆற்றல், அறிவு நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்போம்!**

“மதுவிலக்கை நேர்மையான வழியில், மதுவின் தீமையைப் பற்றி மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்குத் தக்க முறையில் நடவடிக்கை எடுத்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைக்க நிச்சயம் பாடுபடுவோம்.

“நிறையச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பற்றியும், எனது கட்சியின் மற்ற தலைவர்கள் பற்றியும்,எனது அமைச்சரவையில் இடம் பெற்று இருப்பவர்கள், இனி பங்கு பெற இருப்பவர்கள் அனைவர் பற்றியும் மக்கள் நன்கு புரிந்து கொண்டு இருக்கிறார்கள்.

**கடமையைச் சீரிய முறையில் செயல்படுத்துவோம்**

“எனவே என்னை வாழவைத்த, வாழவைத்துக் கொண்டிருக்கிற தமிழக மக்களுக்கு—தெய்வங்களுக்கு இதயபூர்வமான விளக்கத்தைக் கூறி நாங்கள் எங்கள் கடமையைச் சீரிய முறையில் செயல்படுத்துவோம் என்று உறுதிகூறி இப்போது நிறுத்திக் கொள்கிறேன்.

**மக்களிடம் எதையும் மறைக்க மாட்டேன்**

“தமிழக மக்களின் ஆதரவு என்றென்றும் எங்கள்பால் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. மக்களிடம் நாங்கள் எதையும் மறைக்க மாட்டோம் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு எங்கள் மீது உண்டு. அந்த உறுதியோடும், தமிழக மக்களின் ஆசியோடும் எங்கள் பணியைத் தொடங்குகிறோம். அண்ணா நாமம் வாழ்க!''

**(முதலமைச்சராகப் பதவி ஏற்றபின், திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமிழக மக்களுக்கு விடுத்துள்ள செய்தி).**



திரு முனு ஆதி

சபாநாயகர்



திரு எஸ். திருநாவுக்கரசு

துணை சபாநாயகர்




அண்ணா சாலையில், அண்ணா சிலையருகே அலைகடலென சூழ்ந்திருந்த இலட்சக் கணக்கான மக்களிடையே மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள்.

# தமிழகத்தில் புது மலர்ச்சி காண்போம்!

"தலைமைச் செயலர் அவர்களே! அமைச்சர் பெருமக்களே! இங்கே குழுமியுள்ள தாய்க்குலமே! ஆன்றோர்களே! சான்றோர்களே! அறிவு மிக்கவர்களே! என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே! எவ்வளவு தொல்லைகள் இருந்தாலும்—எவ்வளவு துன்பங்கள் இருந்தாலும் நகைச்சுவையோடு அனுபவிக்கத் தகுந்த அறிவு தமிழனுக்கு உண்டு என்பதை, மிக அழகாக இங்கே பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைக் கண்டு உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

''தமிழகத்தின் முதலமைச்சர் என்ற பெயரைத் தாங்கி, அந்தப் பதவியில் இன்றைய தினம் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று உறுதி கூறி, நானும் எனது உடன்பிறப்புக்களான மற்ற அமைச்சர்களும் ஆட்சிக்கட்டிலிலே அமருகிறோம் என்றால், எங்களுடைய ஆற்றலை, எங்களுடைய அனுபவத்தை மட்டும் நம்பியோ அல்ல என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை இல்லை என்றாலும், நான் இங்கே என்னுடைய கடமையின் வாயிலாக அவைகளைத் தெரிவித்துக் கொள்வது எனது நீங்காத பொறுப்பு என்று கருதுகிறேன்.

''இங்கே பேசிய தலைமைச் செயலாளர் அவர்கள் மிகத் தெளிவாகத் தங்களுடைய கடமை எப்படி என்பதை அவர்கள் உணர்ந்திருக்கின்ற பாங்கினையும், அவர்களோடு ஒத்துழைக்கின்ற உங்கள் அனைவருடைய பொறுப்பு மிக்க பணியினையும் தெளிவாக எடுத்து, எங்களுக்கு ஆறுதல் கூறுவதுபோல, உத்திரவாதம் அளித்திருக்கின்றார்கள். அதுபோலவே திரு ரங்கராஜன் அவர்களும், திரு முனுசாமி அவர்களும், 'தேவையில்லை, தேவையில்லை' என்று சொல்லியே, எவ்வளவு தேவை இங்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். 'கேட்கமாட்டேன், கேட்கமாட்டேன்' என்று சொல்லிக் கொண்டு, 'நீங்களாகத் தந்துவிடுங்கள் என்று எச்சரிப்பதுபோல—பள்ளி மாணவர்க்கு ஆசிரியர் தெளிவுபடுத்துவது போல—மிக அழகாக இங்கே சுட்டிக் காட்டியதை உண்மையிலேயே நான் மகிழ்ச்சியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் என்று என்னைக் கூறினார்கள். இப்பொழுது

## முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களின் பேருரையில் சில பகுதிகள்.

''எடுத்து, எடுத்துச் சிவக்க வேண்டிய கரங்க
ளாக'' என்னை ஆக்கிவிட்டிருக்கிறார்கள் என்ப
தையும் நாடு புரிந்திருக்கும்; நீங்கள் நன்கு
தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதில்
எனக்கு ஐயமில்லை. நாட்டிலே உள்ள பிரச்சினை
களை எப்படித் தீர்ப்பது என்பதை, ஐந்தாண்டு
கள் அல்லது ஆறு ஆண்டுகள் இடையே பத
விக்கு வந்து செல்லுகின்றவர்கள், ஒரு முடி
வுக்குக் கொண்டு வர முடியும் என்று கற்பனை
செய்வதைவிட அறியாமை வேறு இருக்காது
என்பதை நீங்கள் நிச்சயமாக ஒப்புக்கொள்
வீர்கள். இருபது, முப்பது ஆண்டுகளாக
அனுபவம் பெற்ற நீங்கள், இந்நாட்டுக்கு —
என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தித்து
—இன்னமும் உழைக்கின்றீர்கள் என்பதை
எண்ணிப் பார்க்கும் போதே, மக்களால் அவ்
வப்போது ஏற்படுகின்ற சூழ்நிலைக்கேற்ப —
நம்பிக்கைக்கு ஏற்பத் தேர்ந்தெடுக்கப்படு
கின்ற ஒரு அமைச்சு — ஐந்தாண்டு அல்லது
ஆறு ஆண்டுக் காலத்தில் எதைத்தான் தீவிர
மாக—திட்டவட்டமாக—தீர்த்து வைத்து
நிறைவேற்ற முடியும் என்பதை உங்கள் சிந்த
னைக்குக் கேள்வியாக வைத்து, உங்களுக்குத்
தெரியாத ஒன்றை உங்களுக்குப் புரிய வைக்க
முற்படுவதான ஒரு நிலையை உருவாக்க
நான் விரும்பவில்லை.

''எந்த அமைச்சர்களானாலும் எப்படிப்பட்ட திறமை படைத்த அமைச்சர்களானாலும்—பதவியிலே வந்து உட்காரும்பொழுது அவர்கள் பதவியைப் பற்றி எண்ணுவார்களேயானால்—எவ்வளவு உயர்ந்த பதவி என்று நினைப்பார்களேயானால்—மற்ற எல்லோரையும் விட மக்கள் நம்மைத்தான் அறிவாளி — விஷயம் தெரிந்தவர்—உண்மையானவர் என்று நம்பியிருக்கிறார்கள் என்று நினைத்து ஒரு கண நேரம் தம்மை மறந்து அகந்தையிலே மூழ்கிவிட்டார்களேயானால் அதன் விளைவு எவ்வளவு பயங்கரமாக ஒரு நாட்டைத் தாக்கும் என்பதை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

### உங்கள் அறிவும் அனுபவமும் நாட்டின் பொதுச் சொத்து!

''நான் ஒன்றை உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பல்வேறு நேரங்களில் இவைகளை நான் வற்புறுத்திக் கூறியவன் என்றாலும், உங்களுக்கு முன்னால் இதைச் சொல்லுவது மிக மிகத் தேவை என்றே நான் கருதுகின்றேன். நீங்கள் பெற்றிருக்கின்ற ஆற்றல்—



அடைந்திருக்கின்ற அனுபவம்—படித்திருக்கின்ற கலை நுணுக்கங்கள், நுண்ணறிவு இவை அத்தனையும் இந்த நாட்டின் பொதுச்சொத்து என்பதை நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். ஒரு மனிதன் சம்பாதிக்க உழைக்கின்றான் என்றால், முதலில் தான், தனது குடும்பம் என்று எண்ணுவது இயல்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அந்த மனிதன் செய்கின்ற காரியத்தின் விளைவு, எத்தனை மக்களுடைய வாழ்வுக்கு அடிகோலுகிறது என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அந்த மனிதனுடைய செயலையும், ஆற்றலையும், கடமையுணர்வையும், பொறுப்புணர்வையும் ஒரு நாடு மதிக்கும் என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொண்டவர்களாக இருப்பீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

## நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் !

''ஒரு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்றவர்கள் மக்களேதான் என்பது, மக்களாட்சித் தத்துவத்திலே ஒரு முடிவான உண்மைதான் என்றபோதிலும், நடத்தித் தருபவர்கள்—மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு உதவி செய்பவர்கள் உங்களைப் போன்ற பொறுப்பு மிக்கவர்கள்தான் என்பதை இந்த நாடு என்றும் மறக்கக் கூடாது என்பதை நான் பல்வேறு நேரங்களில் கூறியிருக்கிறேன்.

## ஊழியர்கள் என்ற பெயரையே மாற்றி அமைப்போம்!

''இங்கு உங்களுக்குச் சொல்ல ஆசைப்படுவதெல்லாம்—இங்கே நண்பர்கள் பேசும் போதும் சொன்னார்கள்—இங்கே இருக்கின்ற உங்களுக்குத் தெரியாத ஒன்றைச் சொல்லுவதற்கு நான் இங்கே வந்திருப்பது போல, 'அவர்கள் நமக்குச் சொல்ல இருக்கின்றார்கள்' என்ற கருத்தை வெளியிட்டார்கள். நாங்கள் இங்கே சொல்ல வரவில்லை. தெரிந்து கொள்ள வந்திருக்கின்றோம். உங்களைப் புரிந்துகொள்ள வரவில்லை. உங்களிடமிருந்து நிலைமைகளைப் புரிந்துகொள்ள வந்திருக்கின்றோம். 'ஊழியர்கள்'' என்ற பெயரையே நான் வெறுக்கிறேன், என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். யாருக்கும் யாரும் ஊழியர்களாக இருக்க வேண்டிய நிலை தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதிலே எனக்கு நிச்சயமாக அக்கறை உண்டு. விரைவில் 'ஊழியர்கள்' என்ற பெயரையே மாற்றியமைக்க வேண்டும் என்ற ஆசையிலே நான் இருக்கின்றேன்.

## உங்கள் பொறுப்பு

''இதை நான் சொல்லுவதற்குக்காரணம் இந்த நாட்டிற்காக உழைக்கின்ற நீங்கள்தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்பது மட்டுமல்ல; கோடிக் கணக்கான தமிழகத் தாய்மார்களின் மானத்தையும், தமிழகக் குழந்தைகளின் எதிர்காலத்தையும், தமிழ்நாட்டின் உயர்வையும் காப்பாற்றி, பேணி வளர்த்து, மற்ற மாநிலங்களில், இன்னும் சொல்லப் போனால் வெளிநாடுகளில், அங்கே இருக்கின்ற ஆன்றோர்கள் அனைவரும் உங்களைப் பார்த்துப் பொறாமைப்பட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள் என்பதை இங்கே நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## அண்ணாவின் கொள்கைகள்

''இந்த நாடு யாரை நம்பியிருக்கின்றது? 1967ஆம் ஆண்டு அமரர் பேரறிஞர் அண்ணாவின் கையிலே இந்தத் தமிழகத்தை ஒப்படைத்த நேரத்தில், அண்ணா அவர்கள் சொன்ன தத்துவத்தை—கொள்கையை—இலட்சியத்தை இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பொருத்தமானது என்ற நம்பிக்கையில் —அதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்—மக்கள் உணர்ந்து அந்த நிலைமையை உருவாக்கினார்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் மீண்டும் என்னைப் போன்றவர்கள், மக்களிடத்திலே எங்கள் எண்ணங்களைச் சொல்லி, அமரர் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகள் நாட்டில் சட்டங்களாக—திட்டங்களாக மாற்றப்பட்டு, அந்தக்கொள்கைகள் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அமைப்புக்களைச் செவ்வனே—சீராக—நிறுவித் தருகின்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்கிற நிலைமை தோற்றுவிக்கப்பட்டு, இன்றைய தினம் நாங்கள் வந்திருக்கின்றோம் என்றால் நாங்கள் அமைத்த ஒரு கட்சி தோன்றி ஏறத்தாழ ஐந்தாண்டு காலம் கூட ஆகவில்லை. இந்த இடைக்காலத்தில் நாங்கள் பட்ட துன்பங்கள் எதுவாக இருந்தாலும்—தொல்லைகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும்—எத்தனையோ இளைஞர்கள் சாவுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக இருந்தாலும், நாங்கள் அதைப் பற்றி இப்போது பேச விரும்பவில்லை என்றாலும் ஐந்தாண்டு இடைக்காலத்தில் ஒரு கட்சி தோன்றி, மக்களுடைய அனுதாபத்தைப் பெற்று—ஆதரவைப் பெற்று ஒரு ஆட்சியை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் உங்களுடைய நல்ல உள்ளங்களுக்குச் சில கேள்விகளை வைக்க விரும்புகின்றேன்.

''இந் நிலை ஏன் ஏற்பட்டது? எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது? தமிழக மக்கள், அமரர் பேரறிஞர் அண்ணாவைப் போல் என்னை நம்பிவிட்டார்கள் என்று நான் நினைக்கப்போகிறேனா? சொல்லப் போகிறேனா ? நிச்சயமாகக் கிடையாது! அமரர் பேரறிஞர் அண்ணாவைப் போல நான் ஆட்சி செய்துவிடுவேன், அவ்வளவு திறமையுள்ளவன் என்ற நம்பிக்கை யிருப்பதாக மக்களிடம் சொல்லப் போகிறேனா? இல்லை. ஆனாலும் இந்த மாற்றம் ஐந்தாண்டுக் கால இடைக்காலத்திற்குள் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்றால், மக்கள் அனுபவித்த துன்பங்கள், மக்களுடைய தேவைகள் இந்த நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## எச்சரிக்கையாக எடுத்துக் கொள்கிறேன் !

''நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். நண்பர் ஒருவர் ஒரு கதையையே சொன்னார். என்னைச் சோழனாக்கினார். அவரைக் குந்தவையாக்கிக் கொண்டார். நல்ல வேளை! இங்கும் அந்த வேடங்களைப் போட வேண்டிய அவசி



யம் எங்கள் இருவருக்கும் ஏற்படவில்லை. இங்கே ஏற்படுத்தவும் வேண்டாம் என்று நான் கருதுகிறேன். நான் இதனைச் சொல்லுவதற்குக் காரணம், கோட்டைக்குள் என்ன நடக்கின்றது என்பதைக் கவனிக்காமல் இருக்கின்ற ஆட்சி இருக்கக் கூடாது என்ற பேரார்வத்தில், எனது நண்பர் அவர்கள் அந்தக் கதையை அழகாக எடுத்துச் சொல்லும் பொழுது நான் உண்மையிலேயே பெருமைப்படுகின்றேன் ; நல்ல வேளையாக இன்றுதான் முதன் முதலாகக் கோட்டையிலே நான் அடியெடுத்து வைத்திருக்கின்றேன். ஆகவே அந்தக் குற்றச்சாட்டு என்னைப் பாதிக்காது என்பதும், அந்தக் குறைபாடு என்னிடத்தில் இருக்கிறதா, இல்லையா என்பதைச் சோதிப்பதற்கு நாட்கள் இருக்கின்றன என்பதையும் எண்ணிப் பார்க்கும்பொழுது அந்தக் குற்றச்சாட்டு யாருக்கோ, எங்கோ போய்ச் சேருகிறது என்பதோடு நான் திருப்தி அடைந்தாலும், உண்மையில் நான் அதை எச்சரிக்யாக எடுத்துக் கொள்கின்றேன்.

## தொண்டனாக, தோழனாக, நண்பனாக இருப்பேன் !

''நானே எனது நண்பர்களோ நிச்சயமாக உங்களுடைய குறைகளை ஆராய்வதிலும், உங்களுடைய தொல்லைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவதிலும், உங்களோடு இணைந்து—நான் முதலமைச்சர் என்ற பதவியில் இருந்தாலும்—தோளோடு தோள் நின்று, உங்களுடைய தொண்டனாக—தோழனாக — நண்பனாக இருப்பேன் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பவேண்டும்.

“இரகசியம் போய்விடாது என்று உத்திரவாதம் கொடுத்தார்கள். நான் சந்தேகிக்கவில்லையே! நீங்கள் ஏன் சொல்லிக் காட்டுகிறீர்கள்? இவ்வளவு அவசரப்பட வேண்டிய தேவை இல்லை. யாரையும் சந்தேகிப்பதற்காக இங்கே நாங்கள் வரவில்லை. நம்பித்தான் வந்திருக்கின்றோம். உங்களது அறிவையும், நாணயத்தையும் ,ஆற்றலையும், நேர்மையையும் நம்பித்தான் நாங்கள் இந்த ஆட்சியிலே அமருகின்றோமே தவிர, நாங்கள் யாரோ பதினான்கு பேர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டு, எல்லாவற்றையும் நாங்களே செய்து முடித்துவிடுவோம்—எல்லா இரகசியத்தையும் நாங்களே வைத்துக் கொள்ளுவோம் என்ற நிலையில் நான் இங்கே வரவில்லை —நண்பர்கள் வரவில்லை. நாங்கள் உங்களை நம்பித்தான் வந்திருக்கின்றோம். எங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளுவது என்றால், எங்களுக்காக அல்ல. உங்களை வாழ வைக்கின்ற தெய்வங்களாக இருக்கின்ற தமிழ் நாட்டு மக்களுக்காக நீங்கள் நிச்சயமாகத் தொண்டு செய்வீர்கள் என்பது மட்டுமல்ல. அவர்களுக்காக உழைப்பீர்கள் என்ற உத்திரவாதத்தைத் தருகின்ற நேரத்திலே யெல்லாம் உண்மையிலேயே நான் புல்லரித்துப் போனேன் என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

''இந்த நாடு யாரை நம்பியிருக்கிறது? ஐந்தாண்டுக் காலம், இரண்டாண்டுக் காலம் அல்லது ஓராண்டுக்காலம் அல்லது பத்தாண்டுக் காலம் அல்லது ஏழாண்டுக் காலம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த இடைக் காலத்தில் வந்து போகின்ற அமைச்சர்களை மட்டும் நம்பியா இந்த நாடு இருக்கிறது? மனிதனுடைய ஆயுள் எவ்வளவு என்பதைச் சொல்ல முடியாத சூழ்நிலையில் நாமிருக்கின்றோம். வேலையை விட்டு வீடு திரும்பும்போது ஒரு பத்தாயிரம் ரூபாய் கிடைக்காதா? கையிலே கொண்டு போகமாட்டோமா! எனக் கேட்கின்ற அளவிலேதான் மக்களுக்குத் தொண்டு செய்கின்ற நீங்கள் இருக்கின்றீர்கள் என்று நண்பர்கள் எடுத்துக் காட்டுகின்ற சூழ்நிலை உள்ளது. இந்த நாட்டில் எவ்வளவுதான் தேவைகள்—எவ்வளவுதான் நல்ல எண்ணங்கள்—எவ்வளவுதான் சூழ்நிலைகள் உதவினாலும், வற்புறுத்தப்பட்டாலும் எந்த ஒரு அரசியல் கட்சியாலும் தனிமையில், அல்லது சில அமைச்சர்களால் அல்லது ஆயிரக்கணக்கான நண்பர்களால், தொண்டர்களால், ஒரு கட்சியினுடைய அமைப்புக்களால் நிச்சயமாக எதையும் சாதித்து விட முடியாது என்பதை நான் இங்கே திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். ஒன்றைச் சாதிக்க முடியும். அரசியல் கட்சிகள் அவ்வப்போது தங்களுடைய எண்ணங்களை மக்களிடம் சொல்லி, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்ற—சூழ்நிலையைச் சாதகமாக உருவாக்குகின்ற—திறமையுள்ளவர்கள் வேண்டுமானால் சில நேரங்களில் சில சமயங்களில் வெற்றி பெற்றதாக ஒரு தோற்றத்தை உலகத்திலே தோற்றுவிக்க அவர்களால் முடியுமே தவிர, **எந்த அரசியல் கட்சியும் நுண்ணறிவு படைத்தவர்களுடைய—திட்டமிட்டுத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஆற்றல் படைத்தவர்களுடைய ஒத்துழைப்பில்லாமல் எந்தக் காரியத்தையும் சாதித்து விட முடியாது என்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதை நான் நன்கு உணர்ந்தவன்.**

## யாருக்காக இங்கே வந்திருக்கிறோம் என்பதை மறந்திடமாட்டோம் !

''அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது, சிறு சேமிப்புத் துணைத் தலைவராக நான் இருந்த நேரத்தில் நான் எழுதியவை கோப்புகளில் உள்ளன. அந்தக் கோப்புகளை எடுத்துப் பார்ப்பீர்களானால் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். அவற்றிலே பிரச்சினைகள் வரும்பொழுது, பல இடங்களில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். 'எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் தவறு செய்திருந்தால் தயவுசெய்து கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும்' என்று நான் கோப்புகளில் எழுதியவை, பேரறிஞர் அண்ணா அவர்களிடம் குறையாகக் கொண்டு போய்க் காட்டப்பட்டதுண்டு. அவர்கள் என்னை அழைத்துப் பாராட்டியதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். இதைச் சொல்லுவதற்குக் காரணம், நாம் யாருக்காக இங்கேவந்திருக்கின்றோம் என்பதை நாங்கள் என்றும் மறந்து விடமாட்டோம்.

**“தமிழகத்திலே உள்ள யாரோ ஒரு குடும்பம்—யாரோ ஒரு தனி மனிதர், எங்கோ கஷ்டப்பட்டால் நமக்கு என்ன என்று நினைக்கின்ற மனநிலை—அலட்சியம் —அந்த சுயநலம்—யாருக்கும் வந்துவிடக் கூடாது என்பதிலே நாங்கள் மிக மிக**

எச்சரிக்கையாக இருப்போம் என்பதைத் தெளிவு படுத்த வேண்டியது என்னுடைய நீங்காத கடமையாகக் கருதுகின்றேன்.

## திரித்துக் கூறினார்கள் !

''நாடாளுமன்றத் தேர்தலின்போது சென்னையிலே நான் ஒரு செய்தியினை வெளியிட்டேன். அதை நண்பர்கள் பத்திரிகைகளிலே திரித்துக் கூறினார்கள். நாடாளுமன்றத் தேர்தலையொட்டித் தமிழகத்தைச் சுற்றி வந்தபொழுது—அதற்கு முன் பல கூட்டங்களில் பேசுவதற்கும், வாக்குகளைக் கேட்பதற்குமாக மக்களைச் சந்தித்ததுண்டு. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின்போது — நான் சுற்றியது போல—மக்களைச் சந்தித்தது போல நான் சென்ற இடங்களில் கண்டது அதுதான் முதல் தடவை என்பதிலே நீங்கள் நம்பிக்கை வைத்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலைமைகளைக் கண்டறிந்து வந்த பிறகுதான், நான் தியாகராய நகரிலே பேசும்பொழுது தெளிவாகச் சொன்னேன். '500 ரூபாய் சம்பளம் வாங்குகின்றவர்கள், தனக்கு இன்னொரு ஐந்தோ, பத்தோ வேண்டுமெனக் கேட்கும்பொழுது, அந்த 500 ரூபாய் கூடக் கிடைக்காமல் இருக்கின்ற மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்' என்று நான் சொன்னதைத் திரித்துக் கூறி, 500 ரூபாய்க்கு மேல் யாருக்கும் சம்பளமே கொடுக்கக்கூடாது என்று எம். ஜி. ஆர். சொல்லுகிறார் எனப் பிரச்சாரம் செய்தார்கள். இது எத்தனை நாட்களுக்கு நிற்கும்? நாடாளுமன்றத் தேர்தலோடு அந்தப் பிரச்சினை முடிந்தது. பிறகு சட்டமன்றத் தேர்தல் வந்தது. நிலைமைகளை நாம் கண்கூடாகக் கண்டோம்.

## கிராமங்களில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லை !

''இவைகளை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், யார் எவ்வளவு நல்ல திட்டங்களைத் தீட்டினார்கள் அல்லது தீட்டவில்லை என்பது பற்றி இங்கே பிரச்சார மேடையாக்க நான் விரும்பவில்லை. யாரையும் குறை கூறி மகிழ்வதற்கு நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இல்லை. ஒன்றைச் சொல்லுவேன். தயவுசெய்து இங்கே இருக்கின்ற அதிகாரிகளாகிய நீங்கள் எவ்வளவு அழகாகத் திட்டங்களைத் தீட்டியிருந்தாலும் அல்லது தீட்டுவதற்கு முற்பட்டிருந்தாலும் **தமிழகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பாலான கிராமங்களில, 'குடிநீர் இல்லை! குடிநீர் இல்லை' என்ற பிரச்சினை இருக்கிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்பதற்காகத்தான் அந்த ஒன்றை மட்டும் இங்கே நான் வெளியிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். குடிப்பதற்குத் தண்ணீர்தான் கேட்கின்றார்கள். நல்ல தண்ணீர்தான் அவர்களுக்குத் தேவை. எங்கு போனாலும் இந்தக் குறை இல்லாமல் இல்லை.**

''நான் வெற்றி பெற்று வந்த தொகுதி அருப்புக்கோட்டை என்பதற்காகப் பேசவில்லை. இத்தனை ஆண்டுகளாக ஆட்சி செய்திருக்கின் ... சுதந்திரம் கிடைத்துவிட்டது என்ற நிலைமை ஏற்பட்ட பிறகும், ஒரு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த மாவட்டம் ஆண்டுக்கொரு முறை பஞ்சத்திற்குச் சொந்த மாகிறது. பஞ்சம் ஏற்படுகிறது என்றால் அதைப் பற்றி முடிவு செய்ய வேண்டாமா? யார் சிந்திக்க வேண்டும்? அரசியல்வாதிகள் சிந்தித்தால் மட்டும் போதாது; அரசியல்வாதிகள் அங்கே வாக்குறுதிகள் கொடுக்கலாம். நாங்கள் பதவிக்குச் சென்றால் இதை நிறைவேற்றலாம் என்றிருக்கிறோம் எனச் சொல்லலாம். நிறைவேற்றித் தருபவர்கள்—அதை ஒழுங்குபடுத்திச் சீராக வெற்றி பெறச் செய்பவர்கள் நீங்கள்தான் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை என்பதையும், நன்றாகப் புரிந்து கொண்டுள்ளோம் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ள வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன்.

## நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டாமா ?

''அங்கே இருப்பவர்கள் குடிநீரில்லாது கஷ்டப்படுகிறார்கள். தர்மபுரி மாவட்டமும் அப்படித்தான். திருச்சியிலே பல இடங்களிலேயும் அப்படித்தான். இப்படிப்பட்ட கொடுமைகள் நாட்டில் இன்னமும் இருக்கின்றன. ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்று நிதி நிலை அறிக்கையிலே நாம் சொல்லிவிட்டால் மட்டும் போதாது. இவைகளுக்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை, மனச்சாட்சியுள்ள நாம், நம்மை நாமே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டாமா ? இந்த உணர்வில் சொன்னதை இப்படித் திரித்துக் கூற முற்படுகிறார்கள் என்றால் — நான் வேதனையோடு சொல்வேன்—இப்படிப்பட்ட அரசியலைகவனிக்காமல் ஒதுக்க வேண்டியது உங்களுடைய கடமை என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

## அரசியல் குறுக்கீடு கூடாது!

''இங்கே ஒரு நண்பர் சொன்னார். நாங்கள் எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமல்ல என்றார். மன்னிக்க வேண்டும். அரசியல் கொள்கைகளைத் தங்கள் கொள்கையாக ஏற்றுக் கொள்வது யாருக்கும் உரிமையுள்ள ஒன்று. நான் அதில் தலையிட மாட்டேன் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன். அவரவர்களுக்குச் சில நம்பிக்கைகள் இருக்கலாம், அவரவர்களுக்குச் சில கொள்கைகளில் பிடித்தம் இருக்கலாம். அவரவர்களுக்குச் சில செயல்களிலே இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற நம்பிக்கை இருக்கலாம். அதிலே நான் குறுக்கிடவில்லை. குறுக்கிட மாட்டேன். அது அவர்களுடைய பிறப்புரிமை. வாக்குகள் அளிப்பதற்கு, ஒரு மனிதனுக்குச் சுதந்தரமிருக்கிறதென்றால், 'யாருக்கு வாக்களிப்பது? எதற்காக வாக்களிப்பது?' என்பதைப் புரிந்து கொள்ள அவர்களுக்குச் சுதந்தரமில்லையென்று சொல்லுவது நியாயமல்ல என்று நான் கருதுகிறேன். **ஆனால் நாலரைக் கோடி தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது எந்த அரசியலும் குறுக்கிட்டுவிடக் கூடாது என்பது ஒன்றுதான் எனது அக்கறையே தவிர, வேறு எதுவுமல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன்.**



''இந்தச் சாதிக்காக ஒன்று—இந்த மதத்திற்காக ஒன்று—இந்தப் பிரிவுக்காக ஒன்று என்ற நிலைமையை நாம் ஏற்படுத்துவோமானால் — சிந்திப்போமானால் — நம்முடைய அறிவு, நேர்மை, உழைப்பு, நம்முடைய திறமை, நல்ல எண்ணம் ஆகியவை வீணாகி விடும் என்ற அச்சம் எனக்கு நிறைய உண்டு. ஆகவே நாம் அதற்கெல்லாம் அப்பாற்பட்டு, ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டிய கட்டாயம் இன்று நாட்டிலே உருவாக்கப்பட்டு இருக்கிறது.

## உங்கள் ஆற்றலுக்கு விலை நிர்ணயிக்க முடியுமா ?

''ஒன்றை உங்களிடம் சொல்வேன். நிதி நிலை அறிக்கையை உங்களுக்குத் தெரியாமல் வெளியிடப் போவதில்லை. உங்களுக்குத் தெரிந்து, நீங்கள் தருகின்ற திட்டங்களின் வழியாக—எங்கள் ஆசைகளை நிறைவேற்ற எப்படி உருவாக்கி வகுத்துத் தருகின்றீர்களோ அதற்கேற்ப, நிதிநிலை அறிக்கை உருவாக்கப்படும் என்பது—என்னைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும். உங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எதற்காகவும் தனியாகப் பிரித்துப் பார்த்து ஒதுக்கிவிட முடியாது. இந்த நேரத்தில், ஆறு மாதங்கள் கழிந்த பிறகு எப்படி நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறதென்பதும், தமிழகத்தின் நிதி நிலை எப்படி இருக்கிறது என்பதும் உங்களுக்கு மிக மிக நன்றாகத் தெரியும். இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைச் சொல்லுவேன். என் நண்பர்களைப் பற்றிய உறுதியோடு நான் சொல்லுவேன். **உங்களுக்குத் தேவையானவற்றை—உங்கள் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை—உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்திற்கு உத்திரவாதமளிக்கக் கூடிய சூழ்நிலையை—உங்களுடைய உழைப்புக்கும் தகுதிக்கும் ஏற்ப யாரும் உங்களுடைய ஆற்றலுக்கு விலை நிர்ணயித்து விட முடியாது என்பது எனக்குப் புரிந்த ஒன்றாகும்.** ஏனெனில், ஒரு நாட்டின் தலைவிதி உங்கள் கையிலே இருக்கிறது. அதற்கு யார் சம்பளத்தை நிர்ணயிப்பது? இவ்வளவுதான் என்று வரையறுக்க முடியுமா? ஒரு நாட்டை உயர்த்தி, வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து மக்களைக் காப்பாற்றி, குடிநீர் கொடுத்து, விவசாயிகளுக்கும், உழைக்கும் வர்க்கத்துக்கும் பாதுகாப்புத் தந்து, மேம்படுத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கக்கூடிய உங்களுடைய உழைப்புக்கு 'இதுதான் சம்பளம்—இதுதான் விதி—இவ்வளவுதான் வரையறை' என்பதை யாராவது நிர்ணயிக்க முடியும் என்று சொன்னால், நான் நிச்சயமாக அதை, யார் சொன்னாலும், ஒப்புக் கொள்ள மாட்டேன்.

''ஒரு நாட்டை வாழ்விக்கின்றவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாகப் பாதுகாப்போடு அமைய வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

## வீட்டிலே வறுமையைச் சந்தித்துவிட்டு வந்து ஏழைமக்களுக்கு வாழ்வு கேட்கிறீர்கள்!

''நிதியமைச்சராக சி. எஸ். அவர்கள் இருந்த சமயம் பேசியபோது குறிப்பிட்டிருந்தேன். ஆசிரியர் ஒருவர், பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வரும் பொழுது, வீட்டிலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை வாழ்க்கைத் துணைவியோ அல்லது உடன் பிறப்புக்களோ சொல்லி அந்த வேதனையோடு அங்கே வந்து அந்தச் சிந்தனையில் மூழ்கியிருக்கின்ற ஒரு ஆசிரியர், எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டிய ஒரு மாணவனை, எப்படிச் சரியான பாதையில் உருவாக்க முடியும்—அவனுக்கு அறிவு தரமுடியும் என்ற கேள்வியை நான் அங்கே வைத்தேன். அப்போது சி. எஸ். கல்வி அமைச்சராகவும் இருந்தார். அதைப் போல் நான் உணருகின்றவன். வீட்டிலே வறுமையைச் சந்தித்து விட்டு வந்து, இங்கே ஏழைகள் வாழ்வு மலர வேண்டுமென்று திட்டம் போடுகின்ற உங்களை, 'ஏழை மக்களுக்கு வாழ்வு கொடுங்கள்' என்று கேட்க இந்த நாட்டில் யாருக்கும் உரிமையில்லை என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

## திட்டம் தீட்டுகிற முறைகளை மாற்றியமைக்க வேண்டும் !

''அந்த வகையில், எங்களைப் பொறுத்த வரையில் நாங்கள் வேறுபாடின்றி, எங்கள் உள்ளத்திலே வேறு ஏதாவது எண்ணத்தை வைத்துக் கொண்டு, மீண்டும் சொல்கிறேன் —நாங்கள் சந்தேகத்தோடு வரவில்லை. நம்பிக்கையோடு வந்திருக்கிறோம். யாரையும் சந்தேகிக்கவில்லை. உங்களிடம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அந்த வகையில் சொல்லுகின்றேன். இருக்கின்ற பிரச்சினையும், பொறுப்பும் மிக மிக மகத்தானதாகும். நீங்கள் அறியாதது அல்ல. நாட்டு மக்கள் சதவிகிதத்தை எடுத்துக் கொண்டால், எத்தனை பேர் படித்து வேலையில்லாத் திண்டாட்டத்திலே இருக்கிறார்கள் என்பதை நீங்கள் கணக்கிட்டு வைத்திருப்பீர்கள். அவர்களுக்கு எப்படி வேலைகொடுப்பது என்கின்ற பிரச்சினை, வேலை கொடுத்தாலும் அவர்களுக்குத் தேவையான வருமானம் எவ்வளவு கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்ற பிரச்சினை, தாய்க் குலத்துக்குச் சொத்துரிமை இல்லாத பிரச்சினை, இப்படி ஒவ்வொரு பிரச்சினையையும்—மாணவர் நலனை எடுத்துக் கொண்டால்—சாதிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால்— இவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துவது எளிதான காரியமல்ல. எத்தனையோ பேர் முயற்சித்து, 'செய்துவிட்டோம், செய்துவிட்டோம்' என்று புள்ளி விவரங்கள் கொடுக்க முடிந்திருக்கின்றதே தவிர, நான் குறிப்பிட்டதைப் போல—நான் இங்கே பட்டியல் கொண்டு வந்துள்ளேன்—எந்தெந்த ஊரில் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை வைத்துப் பார்ப்பீர்களானால், உண்மையிலேயே **நாம் உழைத்தது போதாது என்பதையும், நீங்கள் திட்டம் தீட்டவேண்டிய முறைகளையே மாற்றியமைத்தாக வேண்டும் என்பதையும், வேறு கண்ணோட்டத்தில் திட்டங்**

களை உருவாக்க நீங்கள் முன் வரவேண்டுமென்பதையும், இந்த நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு நீங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும், தயவுசெய்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்பி வேண்டிக் கொள்கிறேன். அந்த நிலை உருவாகியிருக்கிறது.

## திட்டங்களின் அடிப்படையிலேயே மாற்றம் காணவேண்டும் !

*''பொருளாதாரத் திட்டங்கள்—பொருளாதார அமைப்புக்கள்—அதனால் ஏற்படுகின்ற விளைவுகளைப் பற்றி இது வரை எல்லோரும் பேசியுள்ளார்கள். பணக்காரன் பணக்காரனாகி விட்டான். ஏழை ஏழையாகி விட்டான். முன்பு டாட்டா முன்னால் நின்றார். இப்போது பிர்லா முன்னால் வந்துவிட்டார். முன்பு 600 கோடி அவருக்கிருந்தது. இப்போது 900 கோடி இவருக்கு வந்திருக்கிறது. இப்படிச் சொல்லுகிறார்கள்.* **திட்டங்கள் தீட்டியதிலே தவறுகள் இல்லை. தீட்டுகின்ற திறமையாளர்களுக்கு எந்த எண்ணத்தின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டவேண்டுமென்று சொல்லத் தவறிவிட்டார்கள் என்ற நிலைமையைப் பெரியவர்கள் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.** *ஆகவே, நான் வேண்டுகோளாக வைக்கின்றேன். நீங்கள் நிதிநிலை அறிக்கையைத் தரும்போதோ மற்ற திட்டங்களை உருவாக்கும் போதோ, இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அடிப்படையிலேயே நாம் மாற்றத்தைக் கண்டாக வேண்டும். பொருளாதார அடிப்படையில் நாம் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கினால் அன்றி இவைகளுக்கெல்லாம் ஒரு முடிவு காண இயலாது. நல்ல ஏற்பாட்டைச் செய்து நாம் முன்னேற முடியாது என்ற அச்சமும் அவநம்பிக்கையும் கூட எனக்கு இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன். இவற்றையெல்லாம் நாங்கள் யாரிடம் ஒப்படைக்கப் போகிறோம்? யாரை நம்பி நிறைவேற்றப் போகின்றோம்? உங்களை நம்பித்தான்! எங்களுக்கு வேறு வழியில்லை. உங்களைத்தான் நாங்கள் நம்பியிருக்கின்றோம். நீங்கள்தான் தமிழ்நாட்டிற்கு ஒரு நல்ல முடிவைச் செய்து தரவேண்டும். நீங்கள் நினைத்தால் செய்து தரமுடியும். நீங்கள் உட்கார்ந்து பேச வேண்டுமென்பது என் விருப்பம்.*

## எங்களையும் நீங்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும் !

*"இங்கே சொன்னார்கள்; இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கு ஒரு முறை எங்களையெல்லாம் சந்தித்து நாங்கள் எப்படியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அதோடு நான் ஒன்று சொல்லுவேன். நீங்களும் எங்களைப் பார்த்து நாங்கள் எப்படி யிருக்கிறோம் என்பதையும் கவனிக்க வேண்டும். அதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.*

## தமிழகத்தை உயர்த்த உதவுங்கள் !

*''அந்த நிலைமையில் நான் சொல்ல விரும்புவது ஒன்று. நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து—பதவி என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர—நாம் எல்லோரும் மனிதர்கள்தான். எல்லோரும் ஓர் குலம்தான். எல்லோரும் ஓரினம்தான். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற எங்கள் அமரர் அண்ணாவின் கொள்கை அடிப்படையில் நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து, எதையும் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன்.*

**"நாம் வேறுபாடு காணாத வகையில், வேற்று எண்ணங்களுக்கு அடிமையாகாமல், சிந்தை குலையாமல், சஞ்சலத்திற்கு ஆட்பட்டு விடாமல் செயல்படுகிற முடிவுக்கு நாம் வருவோமேயானால், நிச்சயமாக மற்ற மாநிலங்களைவிட தமிழகம் உயர்ந்திருக்கிறது—தமிழக மக்கள் நல்வாழ்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை ஐந்தாண்டுக் காலத்திற்குள் இந்தியத் துணைக் கண்டத்திற்கும், வெளிநாடுகளுக்கும் அனுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.** *அந்த மாற்றத்தைச் செய்ய நீங்கள் துணை புரியவேண்டும். பொருளாதாரத் திட்டத்தை அடிப்படையிலேயே மாற்றியமைக்க நீங்கள் எனக்கு உதவ வேண்டும்.*

## உங்கள் பக்கம் இருப்பேன் !

*''நாங்கள் எடுத்துக் கொடுத்து, 'நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லுவதைவிட நீங்கள் எடுத்துக் கொண்டு மிச்சத்தை மக்களுக்குத் தாருங்கள்' என்று சொல்லுகிற அளவுக்கு இங்கே' நான் துணிவு படைத்தவனாக இருக்கின்றேன். நீங்கள் கணக்கிட்டுத் தீர்ப்புச் சொல்லுங்கள். மக்களுக்கு எவ்வளவு கொடுக்கலாம், நாம் எவ்வளவு எடுத்துக் கொள்ளலாம் என்பதை நீங்கள் சிந்தியுங்கள். நான் குறுக்கே வரவில்லை. நிச்சயமாக வர மாட்டேன். தடை சொல்லவே மாட்டேன். நீங்கள் உறுதியாக நம்பலாம். இத்தனை கோடி ரூபாய்களை வரியாகப் பெறுகின்றோம். அதில் மக்களுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு செய்கின்றோம்? நாம் எவ்வளவு எடுத்துக் கொள்ளுகின்றோம்? இப்படிக் கணக்கிட்டுப் பார்த்து, • உங்களுக்குத் தேவை எவ்வளவு என்று விரும்புகின்றீர்களோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லுவேன். நீங்கள் விரும்பினால் நிறையப் பலனை உண்டாக்க முடியும். வருகின்ற வரிப் பணம் போதாது என்றால், உங்களால் நிறைய—மக்கள் கஷ்டப்படாத வகையில் வரியை விதித்து அல்லது வரியைப் பெறுகின்ற வகையில் உங்களால் நிலைமையை உருவாக்கித் தர முடியும். தமிழகத்திலே உள்ள எத்தனையோ அதிகாரிகள் இதில் பங்கு கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அரசுக்கு வர வேண்டிய உண்மையான வரி, நான் வெளியிலேயிருந்து கவனித்த வரையில் ஏறத்தாழ 70 அல்லது 80 கோடி ரூபாய்கள் நேரிடையாக அரசுக்கு வராமல் அங்கங்கே சிதறிப் போகின்றன என்பதை உங்களுக்கு நான் சொல்லிக் காட்ட வேண்டியவனாக இருக்கின்றேன். நீங்கள், ஒழுங்காக வரியைப் பெறக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யக் கூடிய துணிவை, நீங்கள் தாட்சண்யமின்றி நடந்து, வரியைப் பெற முயற்சிப்பீர்களேயானால், முன் வருவீர்களேயானால் எந்தக் குறையும் உங்களுக்கு இல்லாத வகையில் என்னால் உங்களுக்கு நிச்சயமாகத் தொண்டு செய்ய முடியும். நான் உங்கள் பக்கம் இருப்பேன் என்பதைத் தயவு செய்து நம்பலாம்.*

*''இப்படிச் சொல்வதால், ''என்ன? முன்னால் பார்த்தால் செட்டியார் குதிரை பின்னால் பார்த்தால் முதலியார் குதிரை'' என்று சாட்சி சொன்னது போல், 'இங்கேயும் இல்லாமல், அங்கேயும் இல்லாமல் 'இருப்பதை எல்லாம் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்,' என்கிறார்; 'வரியை வாங்கிக் கொடுங்கள்' என்கிறார்; இப்படி சொல்லிவிட்டுப் போகிறாரே''என்று தவறாகக் கருத வேண்டாம்.*

**நிச்சயமாக உங்களுக்காக, உங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கின்ற வகையில் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருக்கின்றோம். அதைச் செய்வதற்கு நாங்கள் முயலுவோம் என்பதை, நிச்சயமாக—உளப்பூர்வமாக—நாங்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்வோம் என்று சொல்லுகின்ற நேரத்தில் இறுதியாக ஒன்றைக் கூறுகின்றேன்!**

## சிந்தித்துப் பாருங்கள் !

*''தமிழக மக்கள் பொறுமையற்றிருக்கின்றார்கள். கிராமப்புறப் பகுதிகளுக்கும் மற்ற இடங்களுக்கும் போனால் மக்கள் வேதனைகளைச் சொல்லிச் சொல்லிச் சோர்ந்து போய் இருக்கிறார்கள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து—சகிக்க முடியாத நிலைமைக்கு ஆளாகி—அதன் விளைவாக ஏற்படுகின்ற ஆத்திரம், வெறுப்பு சமூகத்தின் மேலேயே ஒரு அருவருப்பு இதன் காரணமாகத் தோன்றுகின்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.*

## புதிய முறையில் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்குவோம் !

*''நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே மட்டுமல்ல. இந்தியத் துணைக் கண்டம் எப்படியிருக்கிறது என்பதை நான் சொல்வது தவறு என்றாலும், வேதனையில் இருப்பவர்கள், விரக்தி நிலைக்குப் போகின்றவர்கள், வெறுப்பு நிலைக்குச் சென்று வெறி நிலைக்கு மாறுவார்கள் என்றால் இந்த நாடு எவ்வளவு கொடுமையைச் சந்திக்கவேண்டியிருக்கும் என்பதைத் தயவுசெய்து நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆகவே, நாம் புதியமுறையில் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்கி, அடிப்படையிலேயே நாம் மக்களுக்குச் செய்ய வேண்டிய அவசியத் தேவைகளை நிறைவேற்றித் தரும் மாபெரும் பொறுப்பை நிறைவேற்றினால்தான்—கொஞ்சமாவது நிறைவேற்றினால் இப்படிப் பட்டவர்களைத் தோற்றுவிக்காமல் தடுக்க முடியுமே தவிர, வெறும் சட்டமும், பிரச்சாரமும் மக்களுடைய தூண்டுதலைத் தடுக்க முடியாவிட்டாலும் அல்லது போலீசை வைத்துக் கொண்டு இவர்களைத் தடுத்து விடலாம் என்று நினைத்தாலும், நீண்ட நாட்களுக்கு அது தொடர்ந்து நடைபெறுமா என்பதிலே எனக்கு அச்சமிருக்கின்றது.*

*''நான் பொறுப்பேற்றிருக்கின்ற நிலைமையில் இதைச் சொல்ல வேண்டியது என் நீங்காத கடமை—மனத்தில் எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பது என் கருத்து. ஆகவே சமுதாயத்தை, தமிழகத்தை காப்பாற்றி, எந்த ஒரு அழிவுப் பாதைக்கும் இளைஞர்களை இழுத்துச் செல்வதற்கு மற்றவர்கள் வாய்ப்புத் தராமல், தடைபோட வேண்டிய அறிவால், ஆற்றலால், திட்டங்களால் நிறைவேற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை—நம்மிடம் தமிழக மக்கள் இந்த '77ஆம் ஆண்டில் ஒப்படைத்திருக்கிறார்கள்.*

*''நண்பர் சொன்னார். அது 1967. இது 1977 என்றார். அன்றைக்கு அறிஞர் அண்ணா இருந்தார்கள். நான் சாதாரண ஒருவன். ஆனால் எண்ண அலைகள், குமுறல்கள், மக்களுடைய உள்ளத்தில் எப்படியிருக்கின்றன என்பதை மட்டும் நிச்சயமாக என்னால் சரியாகப் பிரதிபலிக்க முடியும்.*

## வெற்றி பெறுவோம் !

*''அவைகளை மட்டும் நீங்கள் உணர்ந்து எங்களுக்கு உதவி செய்வீர்களேயானால், உண்மையிலேயே சொல்லுகிறேன்,* **எதிர்காலம் உங்களுக்கு வரலாற்றிலே இடத்தைத் தந்து உங்களைப் போற்றும், புகழும்; என்றும் தமிழகம் உங்களை மறக்காது** *என்பதைச் சொல்லி, இன்று இதுபோதும் என்ற நிலையோடு நான் நிறுத்திக் கொண்டு, உங்களுக்குத் தொண்டனாக இருப்பேன், தோழனாக இருப்பேன். உங்களுடைய எண்ணத்தை எந்த அளவு பிரதிபலிக்க முடியுமோ அதை நிறைவேற்ற நாங்கள் நிச்சயமாக முயல்வோம் என்பதை மீண்டும் கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த தலைமைச் செயலருக்கும், நண்பர்களுக்கும், பொறுமையாக இருக்கின்ற உங்களுக்கும் நன்றி கூறி,* **நாம் தொடர்ந்து பணியாற்றி தமிழகத்திலே ஒரு புதுமலர்ச்சியை ஏற்படுத்த முயன்று வெற்றி பெறுவோம் என்ற** *என் ஆவலையும், நம்பிக்கையையும் தெரிவித்துக்கொண்டு, உங்கள் நல்ல உள்ளங்களுக்கு வணக்கம் கூறி, அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.''*

**[தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பாக 30-6-77 அன்று மாலை தலைமைச் செயலகத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரையில் சில பகுதிகள்]**

# அமைச்சர்கள் பொறுப்பு ஏற்கும் துறைகள்

## திரு எம். ஜி. இராமச்சந்திரன்
*முதலமைச்சர்*

(பொது, பொது நிருவாகம், ஐ.சி.எஸ். மற்றும் ஐ.ஏ.எஸ். அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், துணை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவலர், தேர்தல் பாஸ்போர்ட், மதுவிலக்கு, நல்வாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழிற்சாலை.)

---

## திரு கி. மனோகரன்
*நிதியமைச்சர்*

(நிதி, திட்டம், வணிக வரி, ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.)

---

## திரு. ச. இராமச்சந்திரன்
*பொதுப்பணித்துறை அமைச்சர்*

(பொதுப்பணித் துறை, சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகள் உள்ளிட்ட சிறு பாசனத் திட்டம், சுரங்கம், கனிப் பொருள்கள், இரும்பு, எஃகுக் கட்டுப்பாடு.)

---

## திரு கே. நாராயணசாமி முதலியார்
*சட்ட அமைச்சர்*

(சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடை மற்றும் அளவைகள் பற்றிய சட்டம், கடன் கொடுத்தல் பற்றிய சட்டம், சீட்டு நிதி பற்றிய சட்டம், கம்பெனிகள் பதிவு.)

---

## திரு ஜி. ஆர். எட்மண்ட்
*உணவு அமைச்சர்*

(உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம்.)

---

## திரு ஆர். எம். வீரப்பன்
*செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைச்சர்*

(செய்தி மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில்நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.)

---

## திரு சி. அரங்கநாயகம்
*கல்வி அமைச்சர்*

(கல்வி, தொழில்நுட்பக் கல்வி, ஆட்சி மொழி, சீர்திருத்தப் பள்ளி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி.)

## திரு கே. காளிமுத்து
*உள்ளாட்சித்துறை அமைச்சர்*

(நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், கிராமத் தொழில், கிராமப்புறத் தொழில் திட்டம், கிராமப்புறக் கடன்கள்.)

---

## திரு எஸ். இராகவானந்தம்
*தொழிலாளர்நலத்துறை அமைச்சர்*

(தொழிலாளர் நலம், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளியியல், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர் அமைப்பு.)

---

## திரு பி. சௌந்தர பாண்டியன்
*அரிசன நலத்துறை அமைச்சர்*

(அரிசன நலம், பிற்பட்டோர் நலம், எழுது பொருள் மற்றும் அச்சகத்துறை, அரசினர் அச்சகம், மலைவாழ் ஆதிவாசிகள் நலம்.)

---

## திரு சி. பொன்னையன்
*போக்குவரத்துத்துறை அமைச்சர்*

(போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துகள், மோட்டார் வாகன வரி, நெடுஞ்சாலை, துறைமுகங்கள்.)

---

## செல்வி பி. டி. சரஸ்வதி
*சமூகநலத்துறை அமைச்சர்*

(மகளிர், சிறுவர் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர் இல்லம், அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.)

---

## திரு ப. குழந்தைவேலு
*வேளாண்மை அமைச்சர்*

(வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் —தொழில் பிரிவு, பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.)

---

## திரு. கே. இராஜா முகமது
*கைத்தறித்துறை அமைச்சர்*

(இடவசதிக் கட்டுப்பாடு, இணையங்கள் உள்ளிட்ட வட்டார, மாவட்ட, மாநில மட்ட சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்போர்டு, நெசவுத் தொழில், நூல், கைத்தறி.)

# உணவில் காய்கனிகள்

நாம் அறிவோடும், ஆற்றலோடும் வலிவோடும், வனப்போடும் விளங்க வேண்டுமானால், நாள்தோறும் சத்து நிறைந்த சமச்சீர் உணவைச் சாப்பிட வேண்டும். சத்து நிறைந்த சீரான உணவில் காய்கறிகள், பழங்கள் ஆகியவை போதிய அளவில் இடம் பெறவேண்டும். ஆகவே, இவற்றைப் பயிரிடுவதன் அவசியத்தை எவ்வளவு வலியுறுத்தினாலும் மிகையாகாது. சாதாரண வருவாயுள்ளவர்கள் கூட வாங்கக்கூடிய அளவிற்குப் பழம் மற்றும் காய்கற்களின் உற்பத்தியைப் பெருக்கப் பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக அந்தந்தப் பருவத்திற்கான பழங்கள், காய்கறிகளைப் பயிரிடுதல் மிகவும் அவசியம்.

அநேக, பழங்கள், அவற்றின் காலத்தில், ஏராளமாகக் கிடைக்கின்றன. பொதுவாக எல்லாப் பழங்களுமே 'வைட்டமின்-சி' சத்து நிறைந்தவை.

மாம்பழம், பப்பாளிப்பழம் ஆகியவற்றில் 'வைட்டமின்-ஏ' பெருமளவில் இருக்கிறது.

தக்காளிப் பழம், நாரத்தை வகையைச் சேர்ந்த பழங்கள், கொய்யா, பப்பாளி ஆகியவை 'வைட்டமின்-சி' நிறைந்தவை.

உலர்ந்த திராட்சை, பேரீச்சை ஆகியவற்றில் பெருமளவுக்கு இரும்புச் சத்து உள்ளது.

ஆப்பிள், பச்சைத் திராட்சை, மாதுளை போன்ற விலையுயர்ந்த பழங்களைவிட, மாம்பழம், பப்பாளி, வாழை, கொய்யா, தக்காளி ஆகிய பழங்களில் அதிசயிக்கத்தக்க அளவுக்கு, அதிகமான வைட்டமின்களும், தாது உப்புக்களும் நிறைந்திருக்கின்றன. மாம்பழம், பப்பாளி, வாழை, கொய்யா, தக்காளி ஆகிய பழங்கள் அவற்றின் பருவங்களில் ஏராளமாகவும் கிடைக்கின்றன.

**வைட்டமின்களும், தாது உப்புக்களும்**

வேண்டுமான அளவிற்கு 'வைட்டமின்-ஏ' பெற, போதுமான கீரை வகைகள், காரட், தக்காளி ஆகியவைகளை உட்கொள்வதே சுலபமான-அதிகச் செலவில்லாத-வழியாகும். நம் நாட்டில் 'வைட்டமின்-ஏ' பற்றுக்குறை மிகவும் சாதாரணம். வளர்ச்சிக் குறைவு, மாலைக்கண் ஆகியவை இப்பற்றுக்குறையின் விளைவே. மேலும் இப் பற்றுக்குறையுள்ளவர்களை எளிதில்



நோயும் பீடிக்கும். ஆகையால், இந்த முக்கியமான வைட்டமின்களைத் தேவையான அளவிற்கு உட்கொள்ள வேண்டியது அவசியம்.

அழகான தோல், கெட்டியான ஈறுகள், தெளிவான கண்கள், பொதுவாக ஆரோக்கியமான தோற்றம் ஆகியவற்றிற்கு 'வைட்டமின்-சி' மிகவும் அவசியமானது. இந்த வைட்டமின் புதிய பழங்கள், காய்கறிகள்-முக்கியமாக கீரை வகைகள்-ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது. சர்வ சாதாரணமான-மலிவாகக் கிடைக்கக் கூடிய-நெல்லிக்காயில் 'வைட்டமின்-சி' சத்து எல்லாப் பழங்களையும்விட அதிக அளவில் இருக்கிறது.






கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை, வாழை, தக்காளிப் பழங்களிலும், கீரை வகை ஆகியவைகளிலும் 'வைட்டமின்-சி' நிறைந்திருக்கிறது.

பழங்களுள் வாழைப்பழத்தைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். இந்த மலிவான பழம் நம் நாட்டில் எப்போதும் கிடைக்கிறது. வாழைப்பழத்தில் ஏராளமான அளவிற்கு எளிதாகச் செரிக்கக் கூடிய சர்க்கரை, 'வைட்டமின்-ஏ', 'வைட்டமின்-சி' ஆகியவற்றுடன் மிகவும் அவசியமான தாது உப்புக்கள் சிலவும் அடங்கியிருக்கின்றன. எல்லோருக்குமே நன்மை தரும் இப்பழம் வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல் ஆகியவற்றையும் நீக்குகிறது.

அன்றாடத் தேவையான 'வைட்டமின்-சி'யைப் பச்சைக் கீரை, முட்டைக்கோசு, சரியாகச் சமைக்கப்பட்ட காய்கறிகள் ஆகியவைகளை உண்பதன் மூலம் பெருமளவுக்குச் சரிக்கட்டி விடலாம். இதைத்தவிர, சிறிதளவு பழம், கீரை ஆகியவற்றை உட்கொண்டால் தேவையான அளவு 'வைட்டமின்-சி' கிடைத்து விடுகிறது. பள்ளிச் சிறுவர்களின் சீரான உணவில் நாளொன்றுக்கு 50-லிருந்து 70 மில்லி கிராம் வைட்டமின் 'சி' அடங்கியிருக்க வேண்டும்.

**பதன் செய்யப்பட்ட பழங்கள், காய்கறிகள்**

பழங்கள், காய்கறிகளைப் பதன் செய்தல் இலாபகரமானதொரு தொழிலாகும். மாம்பழம், அன்ஞசிப் பழம், ஆரஞ்சு, பீச்-இவற்றுள் எது உங்களுக்கு மிகவும் பிரியமானதாக இருந்தாலும், அப்பழம் அதிகமாகக் கிடைக்கும் பருவங்களில் பதன் செய்து, டப்பாக்களில் அடைத்து விட்டால் ஆண்டு முழுவதும் உண்ணலாம்.

பழங்களுள் பெரும்பாலானவை இனிப்பான சாறுமிக்கவை. இச் சாற்றைப் பிழிந்து வேண்டுமென்கிறபோது உபயோகிக்க, சீசாக்களில் அடைத்து வைக்கலாம். இதைப்போலவே, பற்பல பழங்கள், காய்கறிகளினல் பல விதமான 'சட்னி' மற்றும் ஊறுகாய்கள் செய்யலாம்.

இயற்கை பரிவுடன் வாரி வழங்கும் பழங்களுள்-பழங்களின் மன்னன் எனப்படும் மாம்பழம் சத்து மிக்கது - எல்லோராலும் விரும்பப்படுவது, மாம்பழத்தையும் அது மலிவாக இருக்கும் காலத்தில் பதன் செய்து, அது கிடைக்காத காலத்திலும் கூட அதன் சுவையைப் பெற டப்பாக்களில் அடைத்து வைக்கலாம். பழங்களை 'முறப்பா' 'சட்னி' போன்றவைகளாகப் பதன் செய்து வைத்தல் நம் நாட்டில் பண்டைய காலத்திலிருந்தே





வந்த பழக்கமாகும். 'முறப்பா' நாட்டு வைத்தியங்களில்-முக்கியமாக யூனுனி வைத்திய முறையில் முக்கியமான இடம் வகிக்கிறது. இவ்வைத்தியம் மொகலாய மன்னர்களின் காலத்தில் அரசாங்க ஆதரவைப் பெற்றுப் பெருமளவுக்குத் தழைத்திருந்தது.

மலிவாயிருக்கும் காலத்தில் காய்கறிகளையும், பற்பல வகைகளில் பதன் செய்யலாம். உதாரணமாகத் தக்காளியின் சாற்றினுல், 'சாஸ்', 'கெச்சப்', 'சட்னி' ஆகியவை செய்யலாம்.

நல்ல இனத்தைச் சேர்ந்த பச்சைப் பட்டாணியையும் பதன் செய்து டப்பாக்களில் அடைத்து வைக்கலாம்.

வெயிலில் உலர்த்தி, காய்கறிகளைப் பதன் செய்தல் பழமையிலும் பழமையான காலத்திலிருந்தே வந்த முறை. நவீன முறையான-சீதோஷ்ணம், ஈரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய கூடங்களில்-பண்டங்களைப் பதன் செய்வதில் நன்மைகளுண்டு. இம் முறையில் சீதோஷ்ணம், காற்று ஆகியவை கட்டுப்படுத்தப்பட்ட 'டிஹைடிரேடர்' என்ற கூடத்தில் பழம் அல்லது காய் பதன் செய்யப்படுகிறது. பதன் செய்யப்படும் பண்டம் இம்முறையில் சீக்கிரமாக உலர்ந்து விடுகிறது.

**காய்கறிகள்**

தெளிவான கண்கள், அழகான தோல், நோயை எதிர்க்கும் தெம்பு ஆகியவற்றைக் கொடுக்கும் 'வைட்டமின்-ஏ', காய்கறிகளில் நிறைந்திருக்கிறது.



ஆரோக்கியமான ஈறு, சருமம் இவைகளுக்குக் காரணமான 'வைட்டமின்-சி' யைப் பச்சைக் காய்கறிகளிலிருந்து பெருமளவுக்குப் பெறலாம். உருளைக் கிழங்கு, 'டர்னிப்' ஆகியவைகளும் 'வைட்டமின்-சி'யை அளிக்கின்றன.

**காய்கறிகளைச் சமைக்கும் முறை**

புத்தம் புதிய காய்கறிகளே மிகவும் சிறந்தவை. செடியிலிருந்து பறித்த உடனேயே காய்கறிகளைப் பயன்படுத்த வேண்டும். பறித்த காய்கறிகளை நாட்பட வைத்திருந்து பயன்படுத்தினுல் வைட்டமின் சத்துக்கள் குறைந்துவிடும். காய்கறிகளை அறியும்போதும், சமைக்கும் போதும், சத்துப் பொருள்களை வீணுக்காமல் இருக்க வேண்டும். காய்கறிகளை நன்ருக அலசிக் கழுவலாம். ஆனுல் தண்ணீரில் ஊற வைக்கக்கூடாது. வைட்டமின்களும், தாது உப்புக்களும் நிறைந்த பூக்கோசின் மேல் இதழ்களைக் களைந்து விடாமல் அவற்றைச் சன்னமாக அரிந்து 'சூப்' போன்றவைகளில் உபயோகிக்கலாம்.

**கிழங்குகள்**

கிழங்குகளின் தோலைச் சுரண்டி நீக்க வேண்டும். கடினமான தோலாக இருந்தால் இலேசாகச் சீவ வேண்டும். முள்ளங்கி, காரட் போன்றவற்றின் கீரை வைட்டமின்கள், தாது உப்புக்கள் நிறைந்தவை. இவற்றைக் களைந்து விடக் கூடாது. அநேக காய்கறிகளை 10 முதல் 15 நிமிடங்கள் வேக வைத்தால் போதுமானது. காய்கறிகளை வேகவிடும் போது பாத்திரத்தை நன்ருக மூடி வேகவிட வேண்டும். 'பை கார்பனேட் சோடா' சேர்க்கக் கூடாது. சோடாவினுல் காய்கறிகளின் 'வைட்டமின்-சி' சத்து சேதமடைந்து விடுகின்றது. அதிக நேரம் வேகவிடுவதால் 'வைட்டமின்-சி' நஷ்டமடைந்து விடுகிறது. காய்கறிகளிலிருந்து முழு உணவுச் சத்தும் கிடைக்க, சமைத்த உடனேயே சாப்பிட்டு விட வேண்டும்.

உடலின் வைட்டமின் பற்ருக் குறையை நீக்க அந்தந்த வைட்டமின் கொண்ட காய்கறிகளை உண்ண வேண்டும். உணவு சீரானதாக அமைய அன்ருடம் ஒன்றல்லது இரண்டு காய்கறிகளை உட்கொள்ள வேண்டும். நமது உணவில் முக்கியமானதொரு அம்சமான காய்கறிகளை வீட்டுத் தோட்டத்திலே பயிர் செய்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.



## காய்கறிகள், பழங்களிலுள்ள வைட்டமின்களின் அளவு

*[உண்ணக்கூடிய பாகத்தில் — 100 கிராமில்]*

| உணவுப் பண்டங்களின் பெயர் | வைட்டமின் 'ஏ' மதிப்பு (இன்டர் நேஷனல் யூனிட்) | 'தியமின்' (மி. கி.) | 'ரிபோஃப்ளவின்' (மி. கி.) | நிகோடனிக் அமிலம் (மி. கி.) | வைட்டமின் 'சி' (மி.கி.) |
|---|---|---|---|---|---|
| **பழ வகைகள்:—** | | | | | |
| ஆப்பிள் | 0 | 0.12 | 0.03 | 0.2 | 2 |
| வாழைப்பழம் | 124 | 0.05 | 0.17 | 0.3 | 6 |
| பச்சை திராட்சை | 0 | — | — | 0 | 1 |
| நாட்டுக் கொய்யா | 0 | 0.03 | 0.03 | 0.4 | 212 |
| எலுமிச்சை | 26 | — | — | — | — |
| மாம்பழம் | 4,800 | 0.04 | 0.05 | 0.3 | 13 |
| ஆரஞ்சு | 326 | 0.12 | 0.06 | 0.3 | 68 |
| பப்பாளிப்பழம் | 1,110 | 0.04 | 0.25 | 0.2 | 57 |
| அன்னுசிப்பழம் | 30 | 0.20 | 0.12 | 0.1 | 39 |
| மாதுளம்பழம் | 0 | 0.06 | 0.10 | 0.3 | 14 |
| ஹைதராபாத் சீதாப்பழம் | 0 | 0.33 | 0.44 | 1.3 | 16 |
| தக்காளிப்பழம் | 585 | 0.12 | 0.06 | 0.4 | 27 |
| **கீரை வகைகள்:—** | | | | | |
| இளசான முளைக்கீரை | 9,200 | 0.03 | 0.10 | 1.0 | 99 |
| வெந்தயக் கீரை | 3,900 | 0.04 | 0.16 | 0.8 | 52 |
| முள்ளங்கிக் கீரை | 18,660 | 0.03 | 0.16 | 0.3 | 103 |
| ஸ்பைனஷ் | 9,300 | 0.03 | 0.07 | 0.5 | 28 |
| **கிழங்கு வகைகள்:—** | | | | | |
| காரட் | 3,150 | 0.04 | 0.02 | 0.6 | 3 |
| பெரு வெங்காயம் | 0 | 0.08 | 0.01 | 0.4 | 11 |
| உருளைக் கிழங்கு | 40 | 0.10 | 0.01 | 1.2 | 17 |
| சிவப்பு முள்ளங்கி | 5 | 0.06 | 0.02 | 0.4 | 17 |
| டர்னிப் | 0 | 0.04 | 0.04 | 0.5 | 43 |
| **காய்கறி வகைகள்:—** | | | | | |
| கத்தரிக்காய் | 124 | 0.04 | 0.11 | 0.9 | 12 |
| பூக்கோஸ் | 51 | 0.04 | 0.10 | 1.0 | 56 |
| நூல்கோல் | 36 | 0.05 | 0.09 | 0.5 | 85 |
| வெண்டைக்காய் | 88 | 0.07 | 0.10 | 0.6 | 13 |
| நெல்லிக்காய் | 15 | 0.03 | 0.01 | 0.2 | 600 |
| பச்சைப் பட்டாணி | 139 | 0.25 | 0.01 | 0.8 | 9 |
| முட்டைக்கோஸ் | 2,000 | 0.06 | 0.03 | — | 124 |

## காய்கறிகள், பழங்களிலுள்ள தாது உப்புகளின் அளவு

*[உண்ணக்கூடிய பாகத்தில் — 100 கிராமில்]*

| உணவுப் பண்டங்களின் பெயர் | 'கால்சியம்' (மி. கி.) | 'பாஸ்வரம்' (மி. கி.) | இரும்புச்சத்து (மி. கி.) |
|---|---|---|---|
| **பழ வகைகள்:—** | | | |
| ஆப்பிள் | 9 | 20 | 1.0 |
| வாழைப்பழம் | 10 | 30 | 0.5 |
| பச்சை திராட்சை | 20 | 30 | 1.5 |
| நாட்டுக் கொய்யா | 10 | 28 | 1.4 |
| எலுமிச்சை | 90 | 20 | 0.3 |
| மாம்பழம் | 10 | 20 | 0.3 |
| ஆரஞ்சு | 20 | 20 | 0.2 |
| பப்பாளிப்பழம் | 17 | 13 | 0.5 |
| அன்னுசிப்பழம் | 20 | 9 | 1.2 |
| மாதுளம்பழம் | 10 | 70 | 0.3 |
| ஹைதராபாத் சீதாப்பழம் | 398 | 40 | 0.3 |
| தக்காளிப்பழம் | 48 | 20 | 0.4 |
| **கீரை வகைகள் :—** | | | |
| இளசான முளைக் கீரை | 397 | 83 | 25.5 |
| வெந்தயக் கீரை | 395 | 51 | 16.5 |
| முள்ளங்கிக் கீரை | 310 | 60 | 16.1 |
| ஸ்பைனஷ் | 73 | 21 | 10.9 |
| **கிழங்கு வகைகள்:—** | | | |
| காரட் | 80 | 530 | 2.2 |
| பெரு வெங்காயம் | 180 | 50 | 0.7 |
| உருளைக்கிழங்கு | 10 | 40 | 0.7 |
| சிவப்பு முள்ளங்கி | 50 | 20 | 0.5 |
| டர்னிப் | 30 | 40 | 0.4 |
| **காய்கறி வகைகள்:—** | | | |
| கத்தரிக்காய் | 18 | 47 | 0.9 |
| பூக்கோஸ் | 33 | 57 | 1.5 |
| நூல்கோல் | 20 | 35 | 0.4 |
| வெண்டைக்காய் | 66 | 56 | 1.5 |
| நெல்லிக்காய் | 50 | 20 | 1.2 |
| பச்சைப்பட்டாணி | 20 | 139 | 1.5 |
| முட்டைக்கோஸ் | 39 | 44 | 0.8 |



குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517


# வரவு—செலவுத் திட்டமிடுதல்


எஸ். குகன், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர், நிதித்துறை,
தமிழ்நாடு அரசு.


'பட்ஜெட் என்னும் சொல் இந்திய அரசியல் அமைப்பில் எந்த இடத்திலும் பயன்படுத்தப் படவில்லை. அது, சட்டச் சார்பு உடைய சொல்லும் அல்ல. இங்கிலாந்தின் நிதி அமைச்சர் மக்கள் சபைக்கு, ஆண்டு நிதிநிலை பற்றிய திட்டங்களை வைத்து எடுத்துச் செல்லும் சிறிய தோல் பையையே அச்சொல் முதலில்குறித்தது. பயன்பாடு காரணமாக அச்சொல்லின் பொருள், பையிலிருந்து, அதன் உள்ளே இருந்த அறிக்கையைக் குறிப்பதாக மாறிவிட்டது. இச்சொல்லுக்குச் சமமான தமிழ்ச் சொற்றொடர் ''ஆண்டு வரவு செலவு அறிக்கை'' என்பது, இதன் பொருளை மிகவும் சரியாக உணர்த்துகிறது. இந்திய அரசியலமைப்பில் இதனைக் குறிக்க, ''ஆண்டு நிதி நிலை அறிக்கை'' என்னும் தொடரே பயன்படுத்தப்பட்டுள்ளது.

வருவாய்க் கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுநலக் கணக்கு எனப்படும் 3 தலையாய பகுதிகள் கொண்டதாக பட்ஜெட் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு கணக்கிலும் அந்த ஆண்டின் வரவு மற்றும் செலவு மதிப்பிடப் பெற்று, இரட்டைப் பதிவு சிட்டைப் பதிவேட்டு முறையில் எழுதப்படுகிறது.

வருவாய் வரவில் வரி, வரியல்லாத வருவாய், மாநில அரசால் பெறப்பட்ட மானியம் ஆகியவை அடங்கும். வருவாய்ச் செலவுகளில் முக்கியமாகச் சம்பளங்கள், படிகள், பராமரிப்பு ஒதுக்கீடுகள், வட்டி செலுத்துதல், ஓய்வூதியங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு மாநில அரசிலிருந்து அளிக்கப்படும் மானியங்கள் ஆகியவை அடங்கும். வருவாய் வரவு, வருவாய்ச் செலவை விட அதிகமானால், நாம் உபரி வருவாய் பெறுகிறோம். இது, மூலதனச் செலவுகளுக்கு நிதி உதவி அளிக்க தற்போது உள்ள சேமிப்புக் கிடைக்கிறது என்பதைக்காட்டுகிறது. இந்நிலைக்கு எதிர்மாறாக இருக்குமானால், வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இது, தற்போதைய செலவுகளின் ஒரு பகுதி, கடன் வாங்குவதன் மூலமாக நிதியுதவி பெறுகிறது என்பதைக் காட்டுகிறது.

கட்டடங்கள், சாலைகள், நீர்ப்பாசனம், இயந்திரங்கள் மற்றும் துணைச்சாதனங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்ட செலவுகள், பங்கு மூலதன முதலீடுகள் போன்றவற்றை மூலதனக் கணக்கு நிலவரப்படுத்துகிறது. மாநிலஅரசால் கொடுக்கப்படும் கடன் மற்றும் முன் பணம் ஆகியவையும் மூலதனக் கணக்கில் ஒரு பகுதியாக உள்ளன. இக்கடன்களிலிருந்து திருப்பி வசூலிக்கப்படும் தொகை, மத்திய அரசு மற்றும் இதர ஆதாரங்களிலிருந்து பெறப்படும் புதியகடன் மற்றும் முன் பணம் ஆகியவை மூல தனக் கணக்கின் வரவுப்பகுதியில் முக்கிய இடம் பெறுகின்றன.

பட்ஜெட்டின் மூன்றாவது தலையாய பகுதியாக உள்ள பொது நலக் கணக்கு கொடுக்கல் வாங்கல் நடைமுறைப் படுத்துதல் பற்றியதாகும். இது பற்றி விரிவாகச் சொல்ல வேண்டுமானால், பல்வேறு வகையான பணங்களை ஏற்றுக் கொள்ளுதல், வைத்திருத்தல், திருப்பிக் கொடுத்தல் ஆகியவற்றில் ஒரு பேங்கரைப் போல் அரசு செயல்படுகிறது. இதில், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை கார்ப்பொரேஷன்கள், அரசால் ஏற்படுத்தப்பட்ட நிதி, பிராவிடெண்ட் பண்டுத் தொகை ஆகியவற்றின் வைப்புத் தொகைகள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற தனியார்களிடம் இருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள் ஆகியவை அடங்கும்.

ஆரம்ப பண இருப்பும், இம் மூவகைக் கணக்குகளிலும் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டின் முடிவில் இறுதிப் பண இருப்பைக் காட்டுகின்றன. இவ்வெண், கூடுதல் அல்லது குறைவாக இருப்பதற்கு ஏற்ப, பட்ஜெட்டில் ஒட்டுமொத்த உபரி அல்லது பற்றாக் குறை என்று குறிப்பிடப்படுகிறது.

பரந்த அடிப்படையில் பட்ஜெட்டின் அமைப்புகள் விவரிக்கப்பட்டு விட்டதால், நாம் இனி பட்ஜெட் உருவாக்கும் செயல்முறையை சுருங்கக்கூற முற்படலாம். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கு வரவு-செலவுத் திட்டமிடுவதில், அரசினால் முன்பே அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிய செலவுகளே முதலில் இடம்பெறுகின்றன. அது போலவே, வரவுப் பகுதியில், தற்பொழுது நடைமுறையில் உள்ள வரிகளையும், உறுதியாகக் கிடைக்கக்கூடும் என்று தெரியக் கூடிய இதர வரவுகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு நாம் செயல்படத் துவங்கலாம்.

நடைமுறை நிலைமைக்கேற்ப வகுக்கப்படும் பட்ஜெட்டின் இப்பகுதி, பட்ஜெட்டின் முதல் பகுதி ( Part I ) என்று அழைக்கப்படுகிறது. இது ஆண்டு தோறும் அக்டோபர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் தயாரிக்கப்படுகிறது.

இதற்கிடையில், செப்டம்பர் மாதத்திலிருந்து செலவினங்களுக்குரிய அரசுத் துறை ஒவ்வொன்றும் பல புதிய திட்டங்களை அல்லது 2-ஆம் பகுதித் (Part II) திட்டங்களை உருவாக்குகின்றன. இதில், புதிய திட்டங்களைத் துவக்குதல், தற்பொழுது நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை மேம்பாட்டு நிலைக்குக் கொணர்தல் அல்லது விரிவுபடுத்துதல் அல்லது பொது நிருவாகத்தில் சீரமைப்புச் செய்தல் ஆகியவை பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. எண்ணிக்கையில் சுமார் 400 முதல் 500 ஆகும் இத்திட்டங்கள், ஒவ்வொரு துறையினாலும் முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு முன்பே தெரிவிக்கப்பட்ட மொத்த நிதி உச்ச வரம்புக்குள் அமைக்கப்படுகின்றன. இத் திட்டங்கள் ஒவ்வொன்றும் நிதித் துறையில் விரிவாக ஆய்வு செய்யப்படுகின்றன.

அமைச்சரவையின் நிலையான நிதிக் குழுவினால், இரண்டாம் பகு

தித் திட்டங்கள் டிசம்பர் மாத இறுதியில் விவாதிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்படுகின்றன. இக்குழுவிற்கு முதலமைச்சர் தலைவர் ஆவார். இக் குழு வழக்கமாக 2 நாட்கள் அமர்ந்து, அரசுத்துறைகளால் அனுப்பப்படும் புதிய திட்டங்கள் பற்றிய பல்வேறு முன்மொழிவுகளை தீவிரமாக ஆய்வு செய்கிறது. திட்டங்கள் தனித் தனியாக, அனுப்பியவாறே அனுமதிக்கப்படுகின்றன. அல்லது மொத்தத்தில் தள்ளுபடி செய்யப்படுகின்றன அல்லது தகுந்த வகையில் மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வாய்வு நடக்கையில் திட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு இடையேயும், பகுதியொன்றின் இடையேயும் முன்னுரிமை விதிக்கப்படுகிறது.

ஜனவரி மாதத்தில் எல்லாத் திட்டங்களையும் முறையாக ஒன்று சேர்க்கும் நிலையில் உள்ளோம். அப்போது, நடைபெற்று வரும் திட்டங்களின் முதல் பகுதிச் செலவினங்கள், அதே போல் வரும் நிதிநிலை ஆண்டில் செலவிடத் திட்டமிட்டுள்ள 2-ஆம் பகுதித் திட்ட அல்லது புதிய திட்டச் செலவினங்கள் ஆகியவற்றின் ஒட்டு மொத்தத் தோற்றம் தெரியவரும். மொத்தத் திட்ட நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப, திட்டம் சார்ந்த திட்டங்களின் முதல் பகுதி மற்றும் 2-ஆம் பகுதி மதிப்பீடுகள் இரண்டும் சேர்ந்து அமைகின்றனவா என்றும் உறுதிப்படுத்திக் கொள்ளப்படுகிறது.

ஜனவரி மாத மத்தியில், ஆண்டுத் திட்டம் பற்றிய இறுதிச் சுற்று கலந்தாய்வு யூனியன் திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவருக்கும், முதலமைச்சருக்கும் இடையில் நடைபெறுகிறது. இக்கலந்தாய்வின் அடிப்படையில், ஒப்புக்கொள்ளப் பெற்ற திட்ட அளவுக்கு ஏற்ப, ஒதுக்கீடுகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த நேரத்தில், நடைமுறையில் உள்ள வரி விதிப்புகளிலிருந்து கிடைக்கும் வருவாய் மதிப்பீடுகளும், மத்திய அரசிலிருந்து கிடைக்கக் கூடிய வரவு மதிப்பீடுகளும் அன்றைய நிலைக்குத் தக திருத்தப்படுகின்றன. இந்தக் கட்டத்தில் ஒட்டு மொத்தமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் முடிவாகப் பெரும்பாலும் பற்றுக்குறை ஏற்படக்கூடும். இப்பற்றுக் குறையை நிறைவு செய்ய வேண்டும்.

செலவைக் குறைத்தல் மூலமாகவோ அல்லது வரவை அதிகப்படுத்தல் மூலமாகவோ தான் பற்றுக் குறையை நிறைவு செய்ய முடியும் என்பது பலரும் நன்கறிந்த உண்மையாகும். இன்றியமையாமை மற்றும் சிக்கனம் பற்றிய கண்டிப்பான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்பே, 2-வது பகுதித் திட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன என்று கொள்ளப்படுவதால் இந்நிலையில் புதிய செலவினங்களைக் குறைப்பதற்கு மேலும் வாய்ப்பில்லை. ஆயினும் நடைமுறையில் மேற்கொள்ளப் பெற்று வரும் செலவினங்களில் சிக்கனத்தை அனுசரிக்க முடியும். இதற்கான வாய்ப்புகள் முழு அளவில் துருவி ஆராயப்படுகின்றன. வரவுகளைப் பொறுத்த வரையில், அப்போதைய ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் மதிப்பீடுகள் முடிந்த அளவுக்கு மிதப்பாற்றல், தீவிர வசூல் முயற்சி ஆகியவைகளைக் கணக்கில் கொண்டு விரிவுபடுத்தப்படுகின்றன.

இவை எல்லாம் செய்யப்பட்ட பிறகும், பற்றுக்குறை ஏதேனும் இருக்குமானால் அதை நிறைவு செய்வதற்குரிய இதர ஒரே வழி புதிதாக வரி விதிப்பதுவேயாகும். வரி விதிப்புத் திட்டங்களை உருவாக்குவதில், மரபுப்படியான, அளவுகோலுக்கொத்த, எளிமை, சமநிலை, பயன், வசூலிப்பதற்கு ஆகும்செலவில் சிக்கனம்ஆகிய தர அம்சங்களுக்கு ஒத்து வருகிறதா என்று பார்க்கமுயற்சிக்கின்றோம். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் என்ன செய்து முடிக்க முடியுமோ, எதை ஏற்றுக் கொள்ளமுடியுமோ அதற்கேற்ப எடுக்க வேண்டிய நடவடிக்கைகளின் தன்மை மற்றும் அளவு ஆகிய இரண்டையும் இணைத்திட முயற்சிக்கிறோம். தேவையான அரசியல் விருப்பம் மற்றும் முயற்சியையும் இணைத்திடுகின்றோம்.

ஜனவரி மாத இறுதியில் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில், இறுதி நிருவாக ஒப்புதலைப் பட்ஜெட் பெறுகிறது. அமைச்சரவை அல்லது அதனுடைய குழுக்களில் ஒன்று புதிய திட்டங்கள், பட்ஜெட்டின் மொத்த அளவு, குறிப்பிட்ட வரி விதிப்புத் திட்டங்கள் ஆகியவற்றை அனுமதிப்பதால், பட்ஜெட் உருவாக்குவதின் எல்லா நிலைகளிலும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு முழு அளவில் உள்ளது.

பட்ஜெட் அறிக்கைகளை அச்சிடுவதற்குச் சுமார் ஒரு மாத காலமாகக் கூடும். இந்த ஒரு மாத கால இடைவெளிக்குப் பிறகு, மார்ச்சு மாத ஆரம்பத்தில் சட்டமன்றங்களில் 'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இப்பொழுது, பட்ஜெட்டின் முக்கியத்துவம் மற்றும் பயன்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகளில் தொகுத்துக் கூற விரும்புகின்றேன். முதலாவதாக, சட்டமன்ற ஆய்வு, அனுமதி, அரசுச் செலவினங்களில் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு உதவும் கருவியாக 'பட்ஜெட்' விளங்குகிறது. இரண்டாவதாக, நிருவாகத்தினருக்கு ஒட்டுமொத்தமான கட்டுப்பாடு செய்வதற்கும், நிருவாகம் செய்வதற்குமான அடிப்படையை அளிக்கிறது. மூன்றாவதாக, விரிவானதாகவும், ஒருங்கிணைந்ததாகவும் உள்ள பட்ஜெட் அறிக்கைகள் பின்கண்டவாறு வினாக்களை எழுப்பவும் அதற்கு விடையளிக்கவும் வகை செய்கிறது :

—தன்னிடம் உள்ள ஆதாரங்களைக் கொண்டே அரசு இயங்குகிறதா?

—மூலதனம் உருவாவதற்கான நிதியளிக்க, தற்காலச் சேமிப்பு கிடைக்கிறதா?

—ஆண்டுத் திட்டத்தில் காணப்படும் முன்னுரிமைகள், மக்களின் இன்றைய பொது விருப்பத்தையும், மாநிலத்தின் நீண்டகால நலனையும் போதுமான அளவில் பிரதிபலிக்கின்றனவா?

—மாநில ஆதாரங்களின் அடிப்படையை மேம்படுத்தவும், அரசுக்கு வரவேண்டிய வரிகளை வசூலிக்கவும், இன்றியமையாதவை அல்லாத செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறதா?

இவ்வாறாக, 'பட்ஜெட்' என்பது, செலவில் கவனமாக இருக்கும் உணர்ச்சிவிழிப்புள்ள நிலைமை சிக்கனமாகவும் திறமையாகவும் செயல்படும் உணர்வு, முக்கியத்துவத்திற்கு ஏற்ப முன்னுரிமை அளித்துக்குறிக்கோளுடன் செயல்படும் உணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கும் கருவியாக உள்ளது. இந்தக் காரணத்தினாலேயே பட்ஜெட்டை அலசி ஆராய்ந்து புரிந்து கொள்வது அவசியமாகும். பட்ஜெட் சட்ட மன்ற உறுப்பினர்கள் மற்றும் நிருவாகிகளுக்கு மட்டுமல்ல, வரி செலுத்துவோருக்கும், பொதுவாழ்வில் ஈடுபாடு உள்ளோருக்கும், குடிமக்களுக்கும் பெருமளவில் பயனளிப்பதாக உள்ளது.

**(அனைத்திந்திய வானொலியில் 23—6—1977 அன்று ஒலிபரப்பப் பெற்ற உரையின் தமிழாக்கம்.)**



# மரவள்ளிக் கிழங்கு ஆய்வில் புதிய கண்டுபிடிப்புகள்




தமிழ்நாட்டில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படும் நிலப்பரப்பின் அளவு கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்த வண்ணம் உள்ளது. தற்பொழுது, சேலம் மாவட்டத்தில் 23,000 எக்டேர் பரப்பளவிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,000 எக்டேர் பரப்பளவிலும் இது பயிரிடப்பட்டு வருகின்றது. சேலம், தர்மபுரி தவிர மற்ற மாவட்டங்களில் இது ஓர் உணவுப் பொருளாகப் பயிரிடப்பட்டு வருகின்றது.

சேலம்—தர்மபுரி மாவட்டங்களில் இது மாவுப் பொருள் (ஸ்டார்ச்), சவ்வரிசி ஆகியவை தயாரிக்கப் பயன்படுகின்றது. தற்பொழுது சுமார் 700தொழிற்சாலைகளில் 1.5 முதல் 2 இலட்சம் டன்கள் அளவுள்ள மாவுப் பொருள் சவ்வரிசி ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் சுமார் 3 முதல் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள அளவு மேற்கு வங்காளம், மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

புதிய மரவள்ளிக் கிழங்கு இரகங்களான மளவல்லா, ஆனைக் கொம்பன் ஆகியவை தமிழ்நாட்டில் பரவலாகப் பயிரிடப்பட்டு வருகிறது. தற்பொழுது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து ''கோ. 1 மரவள்ளி'' இம்மாநில விவசாயிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றது. இதனுடைய வயது 8.5 முதல் 9 மாதங்களாகும். (மற்ற இரகம் 10 முதல் 12 மாதங்களில் அறுவடைக்கு வரும்). இந்த இரக கிழங்கில் 35 சதம் மாவுப் பொருள் உள்ளது. இதைப் பயிரிடுவதன் மூலம் எக்டேருக்கு 10 டன் மாவுப் பொருள் கிடைக்கும். சராசரியாக இந்த இரகம் எக்டேருக்கு 30 டன், கிழங்குகளை மகசூலாகக் கொடுக்கின்றது. இந்த இரகத்தை 75 செ.மீ.× 75 செ.மீ. இடைவெளியில் நட்டால், மிகுந்த இலாபம் அடையலாம். 'மொசைக்' என்ற வைரஸ் நோய் இந்த இரகத்தில் மிகவும் குறைந்த அளவே தாக்குகின்றது. இதற்கு எக்டேருக்கு 50 கிலோ தழைச் சத்து, 50 கிலோ மணிச் சத்து, 100 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இட வேண்டும். இதை மானாவாரியில் பயிரிடுவதைவிட, இறவையில் பயிரிட்டு, வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சினால் எக்டேருக்கு ரூ. 2,270 அதிக இலாபம் அடையலாம். மேலும் மரவள்ளியில் ஊடுபயிராக பெரிய வெங்காயத்தைப் (பெல்லாரி வெங்காயம்) பயிரிட்டால் எக்டேருக்கு 1,036 ரூபாய் அதிக இலாபம் அடையலாம்.

மேற்கூறியபடி, மரவள்ளியை புதிய முறைகளைக் கையாண்டு பயிர் செய்தால் குறைந்த செலவில் நிறைந்த இலாபம் அடையலாம் என்பதில் சந்தேகமில்லை. மேலும் ஒரு டன் மக்காச்சோளத்தை உற்பத்தி செய்ய 153 மனித நாட்கள் தேவைப்படுகின்றன. ஆனால் அதே அளவு மரவள்ளியை உற்பத்தி செய்ய 30 மனித நாட்களே போதுமானது.





தகவல் : தோட்டக்கலைத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

வெளியீடு :
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.






# கொடைக்கானல்—பழனி மலைச் சாலை

தேவை: நம் நாட்டில் பல பாகங்களிலிருந்தும் உல்லாசப் பயணிகள் தேக ஆரோக்கியத்தை முன்னிட்டு குளிர்ப் பிரதேசமான கொடைக்கானலுக்குப் பெருமளவில் செல்லுகின்றனர்கள். ''ஆறு படை வீடுகளில்'' ஒன்றான பழனியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைத் தரிசிக்க பக்த கோடிகள் பெருமளவில் பழனியில் குவிகின்றனர்கள். இந்தப் பழனி, மலையின் மறுபக்க அடிவாரத்தில் அமைந்துள்ளது.

தற்போது கொடைக்கானலையும் பழனியையும் நேரடியாக இணைத்திட சாலை வசதி இல்லை. கொடைக்கானலிலிருந்து வத்தலகுண்டு, செம்பட்டி மற்றும் ஒட்டன்சத்திரம் வழியாகப் பழனியை அடைய அமைந்துள்ள சாலை வழி சுற்று வழியாக 136 கி.மீ. தூரமுள்ளதாக அமைந்துள்ளது. நாற்பது கி.மீ. நீளமுள்ள இந்தப் புதிய மலைச்சாலை பழனியையும் கொடைக்கானலையும் நேரடியாக இணைத்துப் பயண தூரத்தை 68 கி. மீட்டராக குறைத்துப் பயணிகளுக்கு மிகவும் உதவுகிறது. இந்த மலைச்சாலை 7.5 மீ. அகலமுள்ள 3.75 மீ. அகலம் தார் பரப்புடைய தளங் கொண்ட, முக்கியத்துவ மாவட்ட சாலைகளின் தரத்தை உடையது. இந்த மலைச்சாலை, நம் நாடு சுதந்திரம் அடைந்தபின் அமைக்கப் பட்ட மிக நீளமான மலைச்சாலை ஆகும்.

அம்சங்கள்: புதிய மலைச்சாலை, லாஸ் மலைச்சாலையில் 41/2 கி.மீ. இல் ஆரம்பித்து பெருமாள் மலை, நாய்க்கன் கால்வாய்மேல்பள்ளம், கோம்புகாடு, சௌரிகாடு மற்றும் வண்ணாத்தி ஊற்று வழியாக, பழனி மருங்கில் மலை அடிவாரத்திலுள்ள தேக்கன் தோட்டத்தில் முடிவடைகிறது. அங்கிருந்து பழனியை அடைய 13 கி.மீ. நீள சாலை முன்பே அமைந்துள்ளது. மலைச்சாலையின் மொத்த நீளம் 40 கி.மீ. ஆகும். பாரதி அண்ணா நகர், வடகவுஞ்சி மற்றும் அஞ்சுரான் மந்தை ஆகிய சிற்றூர்களுக்கு இணைப்புச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பிற்பட்ட நிலைகொண்ட பகுதியில் உருவாகியுள்ள இம்மலைச்சாலை அப்பகுதிகளுக்கு முன்னேற்றமடைவதற்கான பல வாய்ப்புகளை ஏற்படுத்தி, அங்கு வாழும் மக்களின் சமூக வாழ்வு, சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் உயர்வடைய உதவும் என்பதில் ஐயமில்லை. இவ்வட்டாரங்களில் பயிராகும் காபி, ஆரஞ்சு மற்றும் வாழை போன்ற மலைப்பொருட்களை விரைவாகவும் சேதமில்லாமலும் விற்பனைக் கூடங்களுக்குச் சௌகரியமாக எடுத்துச் செல்ல இனி முடியும். இத்திட்டம் சுதந்திர இந்தியாவில் நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையினரால் எடுத்து முடிக்கப்பட்ட பெரிய திட்டமுமாகும்.

அமைப்புப்பணி: நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறையின் ஓர் அங்கமாக விளங்கிவரும் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவு இப்பணியைச் செய்துள்ளது.

பணியின் மதிப்பு—ரூ. 135.00 இலட்சம்.

பணி துவங்கியது—பிப்ரவரி திங்கள், 1972.

பணி நிறைவு பெற்றது—மே திங்கள் 1977.

தொழில்நுட்ப விவரங்கள்:

சாலையின் நீளம்—40 கி.மீ.

தள அமைப்பு அகலம்—7.5 மீ.

தள அமைப்பு —15 செ. மீ.

கனத்திற்கு நீர்விட்டு உறுதியாக்கிய கற்சாலை.

மேற்பரப்பு—25 செ. மீ. கனத்திற்குத் தார் அமைப்பு.

கொண்டை ஊசி வளைவுகள்—13 சிறு பாலங்கள்—163.

பாறை உடைப்பு வேலை—4,59,000 க.மீ.

தாங்கு சுவர் வேலை—1,23,000 க.மீ.

மிக உயரமான பகுதி—பெருமாள்மலை 1583 மீ.

மிகத்தாழ்வான பகுதி—தேக்கன் தோட்டம் 692 மீ.



# உங்கள் பணத்தை இரட்டிப்பாக்கவும்!

தேசிய சேமிப்புப் பத்திரங்கள் மூலம் (V-வது வெளியீடு)

ரூ. 100, 7 வருடத்தில் ரூ. 200 ஆக வளர்கிறது.

வேறு சில நலன்களும் உண்டு!

* வரியில்லா வட்டி (வருடம் ரூ. 3,000 வரை)
* சொத்து வரியிலிருந்து விலக்கு (ரூ. 1.5 லட்சம் வரை)

davp. 76/927

இதர விவரங்களுக்கு அங்கீகாரம் பெற்ற ஏஜண்டையோ தபாலாபீஸிலோ விசாரிக்கவும்.

தேசிய சேமிப்பு நிறுவனம்




# மத்திய சாலை நிதி வேலைகள்

அந்நாளைய மத்தியச் சட்ட சபையின் தீர்மானத்தின்படி இந்திய அரசு 1929-ஆம் ஆண்டில் காலக் கெடுவற்ற மத்திய சாலை நிதியை ஏற்படுத்தியது. இந்நிதி பின் தங்கியுள்ள பகுதிகளில் சாலை வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது. பெட்ரோல் மற்றும் மோட்டார் வாகன எரி பொருள்களின் மீது விதிக்கப்படும் வரி மற்றும் சுங்கத் தீர்வை ஆகியவைகளின் ஒரு பங்கு இத் திட்டத்தின் வருவாயாக ஒரு லிட்டருக்கு 3.5 பைசா வீதம், பற்று வைக்கப்படுகின்றது. மேற்படிக் கணக்கீட்டின்படிப் பெறப்படும் வருவாயில் 80 சதவீதம் மாநில அரசுகளுக்கு அந்தந்த மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்ட அளவுகளுக்கேற்பப் பங்கீடு செய்யப்படுகின்றது. இவ்வாறு மத்திய அரசால் வழங்கப்படும் தொகைகள் மத்திய அரசால் ஒப்புதலளிக்கப்படும் வேலைகளுக்குச் செலவிடப்படவேண்டும். மேற்படி வருவாயில் மிஞ்சியுள்ள 20 சதவீதம், மத்திய அரசால் சேமநிதியாகப் பற்று வைக்கப்படுகின்றது. மத்திய சேமநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு ஆகும் செலவை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியை மான்யமாகவோ வழங்குகின்றது. மத்திய அரசின் ஒப்புதல் பெற்று இத்திட்டத்தின் கீழ் வேலைகள் மாநில அரசால் நிறைவேற்றப்படுகின்றன.

நான்காவது திட்ட காலத்தில் 478 இலட்ச ரூபாய் செலவில் 21 வேலைகளுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவ்வேலைகளில் 220 இலட்ச ரூபாய் செலவில் மூன்று மலைச் சாலை வேலைகள் மதுரை மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவை: (1) கொடைக்கானல் பழனி மலைச் சாலை (2) பாச்சலூர் வடகாடு ஒட்டன்சத்திரம் மலைச் சாலை, மற்றும் (3) பண்ணைப் பட்டி பாச்சலூர் சாலையிலுள்ள ஆடலூரிலிருந்து தாண்டிக் குடி மலைச் சாலையை இணைக்கும் ஒரு மலைச்சாலை.

இதுவரை ஐந்தாவது திட்ட காலத்தில் 178 இலட்ச ரூபாய் மதிப்பில் 10 வேலைகளுக்கு மத்தியஅரசு ஒப்புதல் அளித்துள்ளது. அண்மையில் இத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட முக்கியமான வேலைகளில் சில (1) எடைக் காட்டூர் மற்றும் பெரிய கோட்டை கிராமங்களை இணைக்கும்படி வைகையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஒரு மூழ்கு பாலம் (இராமனுதபுரம் மாவட்டம்) (2) கைகளத்தூர் பெரிய வடகரைச் சாலையில் கி.மீ. 1/2 கல்லாற்றின் குறுக்கே அமைக்கப் பட்டுள்ள ஒரு மூழ்கு பாலம் (திருச்சி மாவட்டம்) (3) அரவக் குறிச்சி சின்னதாராபுரம் சாலையில் கி.மீ. 3/2-ல் இராஜபுரம் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள ஒரு மூழ்கு பாலம் (திருச்சி மாவட்டம்).

நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் முக்கிய வேலைகளாவன: (1) எலையமுத்தூர் கல்லாபுரம் சாலையில் கி.மீ. 5/6 இல் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் (கோவை மாவட்டம்) மதிப்பு: ரூ. 11.55 இலட்சம். (2) பாளையம்கோட்டை நாகலாபுரம் சாலையில் கி.மீ. 11/8-ல் சீவலப்பேரி யருகே, தாமிரபரணி ஆற்றில் குறுக்கே ஒரு தாம்போதி, மதிப்பு ரூ. 20.5 இலட்சம். (3) மதுரை—தனுஷ்கோடி சாலையில் கி.மீ. 178/2-லிருந்து ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி கோவிலுக்கு ஒரு சாலை (இராமேஸ்வரம் தீவு. இராமநாதபுரம் மாவட்டம், மதிப்பு ரூ. 8.80 இலட்சம்.

# சிறு சேமிப்பை பிரபலமாக்கும் நடவடிக்கைகள்!

நம் நாட்டில், குறிப்பாக கிராமப் பகுதிகளில் சிறு சேமிப்பை பிரபலமாக்குவதற்கென அஞ்சல் தந்தித் துறை, மே மாதம் 15-ந் தேதி முதல் துறை ரீதியிலான 97 ஆயிரம் கூடுதல் கிளை அஞ்சல் நிலையங்களில் ஒருபுதிய வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது. அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்கள் கணக்கிலிருந்து 100 ரூபாய் வரையில் தான் தற்போது பணம் எடுக்க முடியும். அஞ்சல் தந்தித் துறை அறிமுகப்படுத்தவிருக்கும் புதிய வசதியின்படி அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக் கணக்குகள் வைத்திருப்பவர்கள் 250 ரூபாய் வரையில் பணம் எடுப்பதற்கு அனுமதி வழங்க இத்துறை ரீதியிலான கூடுதல் கிளை அஞ்சல்-அலுவலர்களுக்கு ஒப்புதல வழங்கப் பட்டுள்ளன.

சேமிப்புக் கணக்குக் கவுண்ட்டர்களில பொது மக்கள் நீண்டநேரம் காத்திருப்பதைத் தவிர்க்கும் விதத்தில் தலைமை அஞ்சல் நிலையங்கள், 5,400 துணை அஞ்சல் நிலையங்களில் 'உடனடிச் சேவை கவுண்ட்டர்கள்' ஏற்படுத்தப் பட்டுள்ளன. துணை அஞ்சல் நிலையங்களில் பணம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த அளவும் 100 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

# பாரதி வேண்டிய பெண் விடுதலை



"ஆண் பெண் சமத்துவமே அறமென்று தெரிகிறதா? வாருங்கள்! மாதர்களை இலட்சக் கணக்கில் விடுதலை செய்வோம்" என்று அழைக்கிறான் பாரதி.

சில்லறைச் சீர்திருத்தக்காரர்கள் போல், பெண் மக்களுக்கான சில சிறு சிறு சீர்திருத் தங்களைப் பாரதி பாடவில்லை. "ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்று ஆண்—பெண் நேர்—நிகர் வாழ்வையே கோருகிறான். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்து வோம்" என்று.பாரதி பாடும்பொழுது பெண் ணடிமையைச் 'சொக்கப்பனை' கொளுத்த அவன் மூட்டும் நெருப்பை வளர்க்க 'டின் டின்' ஆக எண்ணெய் கொண்டு போகவேண்டும் என்று நம்மிடம் ஆவேசம் பாய்கிறது.

அரசியல் விடுதலையையும், பிற விடுதலை களையும் பெண் விடுதலையை மறந்து, பேசித் திரிந்த பெரியார்களையும் 'வீரர்களையும்' பார்த்து,

**"விண்ணுக்குப் பறப்பது போல் கதைகள்**
**சொல்வீர்**
**விடுதலை யென்பீர், கருணை வெள்ளமென்பீர்**
**பெண்ணுக்கு விடுதலைநீர் இல்லையென்றால்**
**பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"**

என்று கிண்டல் செய்தும், மண்டையிலடித்தும் மயக்கம் தெளிவிக்கிறான்.

"பெண்டாட்டிதனை யடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?

என்று பாரதி 'ஈரேழுலகமும்' ஊடுருவிப் பாயும்படி ஒரு கேள்வியைப் போடும்பொழுது, 'ஆயிரம்ஆயிரம்ஆண்டுகளாகத் தாயினத்திற்கு இழிந்த தன்னலத்தால் என்ன அநீதம் புரிந் தோம்' என்று நம்மை நாமே சபிக்கத் தோன்றுகிறது.

பாரதி சோவியத் பெண்ணைக் (நவீன ரஷ்யா"வின் பெண்ணை) கண்டான். "நங்கை கூறும் நவீனங்களையும்" "பெண்மைத் தெய் வத்தின் பேச்சுகளை"யும், "உதய கன்னியின் உரையாடல்களை"யும் கேட்டான். புதுமைப் பெண்ணைக் கண்டு, அவளை அழைத்து வந்து, தமிழர்களிடையில்"துன்பம் நீக்கும்சுதந்திரப் பேரிகை" முழக்கச் செய்கிறான்.

புதுமைப்பெண், தனது 'வண்ணமலர்த் திருவாயால்'

"அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தர்"

என்றும்,

"சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயிலிட்டுப் பொசுக்கிட வேண்டும்"

என்றும்,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்கும்"

என்றும்,

"நாணுமச்சமும் நாய்கட்கு வேண்டும்
ஞானம் நல்லறம் வீர சுதந்திரம்
பேணுநற்குடி பெண்ணின் குணங்கள்"

என்றும்,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் [யும்
திமிர்ந்த ஞானச்செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லை"

என்றும்,

"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவும்
ஓது பற்பல நூல்வகை கேட்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலகவாள் நுதலார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திட வேண்டும்"

என்றும்,

"விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்பர்"

"சாத்திரங்கள் பலபல கற்பர்
சௌரியங்கள் பலபல செய்வர்
மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பர்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பர்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வர்"

என்றும் சீனியின் பந்தலில் தேன்மாரியாகப் பொழிகிறான்.

"ஒவ்வொரு சமையற்காரியும் அரசாங் கத்தை நடத்தக் கற்றுத் தீர வேண்டுமென்றார் புது உலகச் சிற்பி லெனின் அன்று. சோவியத் ஆட்சி அத்தகைய வாய்ப்பு அளித்தது புதுமைப் பெண்ணுக்கு.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி"

என்று கும்மியடித்தான். பாரதியின் கனவு இன்று நனவாகி வருகிறது நாடு முழுவதிலும்,

**('பாரதி வழி' என்னும் நூலிலிருந்து......)**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"



DIPR.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

முகவரி :



# அரசு-மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது**

AC-16



# தமிழரசு

மலர் : 8 இதழ் : 2

16—7—1977


## இந்த இதழில்

பக்க எண்


காந்திய வழியில் அண்ணாவின் கொள்கை வழி நின்று இன்றைய அரசு செயல்படும்! —ஆளுநர் உரை .. 2

புதுமையான கொத்துரக மிளகாய்! .. 10

படமும் செய்தியும் .. .. .. 11

பண்ணையிலே குளம் தோண்டி, பலவகை மீன் வளர்த்து, பயன்மிகப் பெற்றிடலாம்! .. .. .. 13

லோக்பால்—மக்கள் காவலர்! .. .. 17

செம்மறி ஆடுகளைப் பாதிக்கும் ஒட்டுண்ணிகள் .. .. .. 22

தமிழகச் சிற்பக் கலை .. .. 24

தொலை—தகவல் தொடர்பு வளர்ச்சி .. 30

வாழ்க்கைக் குறிப்புகள் .. .. 33

கிண்டி தொழிற்பேட்டையில் ஒரு முன்னோடி தொழிற்கூடம் .. .. 39

சூரிய வெப்ப அடுப்பு .. .. 41

சென்னை வானொலியில் இன்னிசை கேட்க உதவும் புதிய ஒலிபரப்பு முறை .. 45

அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பு என்றால் என்ன? .. .. .. 47


அட்டைப் படம் : ஐந்தருவி, குற்றாலம்.
[நன்றி: பொது (சுற்றுலா) துறை, சென்னை-9]



## குற்றாலம் அருவியிலே குளித்து மகிழ வாரீர்!

குற்றாலம் அருவியிலே குளிப்பது போன்ற ஒரு சுகம் வேறெங்கும் காண முடியாது! தற்பொழுது 'சாரல்' பருவம் துவங்கி விட்டதால், குற்றாலம் அருவியிலே குளித்து மகிழ விரும்புவோர், உடன் குற்றாலம் சென்று அருவியிலே குளித்து மகிழலாம்! திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியிலிருந்து மூன்றரை மைல் தொலைவில் உள்ள திருக்குற்றாலம் நகரில் 'சாரல்' பருவத்தின் காரணமாக 10 டிகிரி வெப்பம் குறைவாக உள்ளது. அரிய மூலிகைகள் பலவற்றைத் தழுவியோடி வந்து 200 அடி உயரத்திலிருந்து கீழே விழும் குற்றாலம் அருவியிலே குளிப்பது மனத்திற்கு மகிழ்ச்சியை அளிப்பதுடன், உடல் நலத்திற்கும் உதவுகிறது.

குற்றாலத்திலே, 'குற்றால அருவி' (Main falls), 'சண்பக அருவி', 'தேனருவி', 'ஐந்தருவி' ஆகிய அருவிகள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒருவகையில் சிறப்புடையவை என்றால் மிகையாகாது!

குற்றாலத்தில் தங்கி மகிழ்வதற்குரிய இருப்பிடங்களும், உணவு விடுதிகளும் உள்ளன.

குற்றாலத்தில் 'சாரல்' பருவம் செப்டம்பர் வரை தொடரும். எனவே, குற்றாலம் அருவியிலே குளித்து மகிழ உடன் புறப்படுவீர்! என்று கேட்டுக் கொள்கின்றோம்.

# காந்திய வழியில் அண்ணாவின் கொள்கை வழி நின்று இன்றைய அரசு செயல்படும்!



## ஆளுநர் உரை

[தமிழ்நாடு சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில் மேதகு தமிழ் நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 7-7-1977 அன்று ஆற்றிய உரை]



"மேன்மை தங்கிய சட்டமன்ற உறுப்பினர்களே,

"சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று வந்துள்ள உங்கள் அனைவரையும் பாராட்டி வரவேற்கிறேன். நீங்கள் அனைவரும் சட்ட மன்றத்தில் ஆக்கத்துடனும் ஊக்கத்துடனும் பணியாற்றுமாறு வேண்டி என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்கு அருஞ்சேவை புரிவீர்களாக!

"இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த, நமது பேரன்புக்கு உரிய அறிவு சால் திரு பக்ருதீன் அலி அகமது அவர்களின் மறைவு பற்றி இத்தருணத்தில் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் மதச் சார்பற்ற இலட்சியத்தின் சின்னமாக விளங்கினார். பீகம் அபிதா அகமது அவர்களுக்கு நமது மனமார்ந்த இரங்கலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

### மக்களாட்சி மலர்ந்தது!

"தமிழ் நாட்டில் 17 மாத காலம் நீண்ட, குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுற்று, அச்சமற்ற, நேர்மையான தேர்தல் நடத்தப்பட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இன்று மலர்ந்திருக்கிறது. இது நம் அனைவருக்கும் ஆறுதலையும், பெரு மகிழ்ச்சியையும் அளிப்பதாக இருக்கிறது. தமிழ் நாடு முழுவதும் அமைதியாகவும் ஒழுங்காகவும் தேர்தல் நடைபெறப் பாடுபட்ட வெவ்வேறு அரசியல் கட்சியினரின் ஒத்துழைப்பும், அரசின் செயல் திறனும் பாராட்டுக்கு உரியனவாகும். **நடைபெற்ற தேர்தலில், நம் மாநில மக்கள் தங்கள் முடிவைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்துள்ளார்கள். இது மக்களாட்சி மரபுகளின் மீது நாம் வைத்துள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்துவதுடன், தமிழ்நாட்டில் வலுவுள்ள, நிலையான அரசாங்கம் அமையும் வாய்ப்பினை அளித்துள்ளது.**



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில், 7-7-1977 அன்று, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் உரையாற்றினர்.

### அரசின் இலட்சியங்கள்!

"எனது அரசாங்கம், தன்னை ஆட்சிக்குத் தேர்ந்தெடுத்துள்ள தமிழ் நாட்டு மக்களுக்கு நேர்மையும், திறமையும் கொண்டதோர் ஆட்சி வழங்குவதையும், எல்லா நிலைகளிலும் லஞ்ச ஊழலைக் களைவதையும் தன் தலையாய கடமையாகக் கருதுகிறது. நாணயத்துடனும், திறமையுடனும் செயல்படுவதோடு, இந்த அரசாங்கம், மக்களின் நியாயமான வேண்டுகோள்களுக்குப் பரிவுடனும் பொறுப்புடனும் செவி சாய்த்துப் பணி புரியும். அரசாங்கத்தின் பல்வேறு ஒழுங்குமுறை நடவடிக்கைகளில், நிர்வாக அமைப்புகளிலும், நீதிமன்றங்களிலும் ஏழை எளிய மக்களுக்கு நியாயம் கிடைப்பதில் தடங்கல்களும் தாமதங்களும் உள்ளன. இந்நிலை மாறி, ஏழைகளுக்கு நியாயம் கிடைக்க **இலவச சட்ட உதவி வழங்குவதற்கு இந்த அரசு சிறப்புக் கவனம் செலுத்தும்.** நிர்வாகத்தில் லஞ்ச ஊழல், வீண் விரயம், பாரபட்சம் ஆகியவற்றைக் களையும் முயற்சிகளில், வந்த பின் பரிகாரம் தேடுவதை விட வருமுன் காப்பதே ஏற்ற முறையாகும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். லஞ்ச ஊழல், வீண் விரயம் தலைகாட்டா வண்ணமும், அதிகாரத்தைத் தவறுகப் பயன்படுத்த முடியாத வகையிலும், நிர்வாக நெறிமுறைகளையும், செயல் முறைகளையும் சீரமைக்க வேண்டியது அவசியமாகும். இந்த அடிப்படையில், லஞ்சத் தடுப்பு நடவடிக்கைகள், நிர்வாகச் சீர்திருத்தங்களின் ஒருங்கிணைந்தபகுதியாக மேற்கொள்ளப்படும். அதே போல, வளர்ச்சித் திட்டங்களையும், நல்வாழ்வுத் திட்டங்களையும், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த பலதரப்பட்ட மக்களின் மனக் குறைகள், தேவைகள், வளரும் எதிர்பார்ப்புகள் இவை அனைத்தையும் முழு அனுதாபத்துடன் கவனித்துச் செயல்படுத்துவோம். குறிப்பாக, இந்த முன்னேற்றத் திட்டங்களில் சமுதாயத்

**"எனது அரசாங்கம், தன்னை ஆட்சிக்குத் தேர்ந்தெடுத்துள்ள தமிழ்நாட்டு மக்களுக்கு நேர்மையும், திறமையும் கொண்டதோர் ஆட்சி வழங்குவதையும், எல்லா நிலைகளிலும் லஞ்ச ஊழலைக் களைவதையும் தன் தலையாய கடமையாகக் கருதுகிறது."**

—திரு. பிரபுதாஸ் பட்வாரி,
தமிழக ஆளுநர்.

தின் அடித்தள மக்கள், பிற்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் ஆகியவர்களுக்குத் தனிக் கவனம் அளிக்கப்படும். அரசு நடவடிக்கைகள் அனைத்திலும்—அவை ஒழுங்கு முறை நடவடிக்கைகளாயினும், வளர்ச்சி நடவடிக்கைகளாயினும்—அச்சத்திற்கும், தாட்சண்யத்திற்கும் ஆட்படாமல் நிர்வாகம் செயல்பட வேண்டும் என்பதே எங்கள் கொள்கை. **மக்கள் அனைவருக்கும், அவர்கள் சாதி, சமய, கட்சி சார்பு எதுவாயிருப்பினும், நியாயமும் நன்மையும் பாரபட்சமற்ற முறையில் கிடைக்கும்.**




### மத்திய—மாநில உறவு

"இன்றைய நிலைமையில் இந்தியக் குடியரசில் மத்திய-மாநில உறவும், ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் உள்ள தொடர்பும், நெருங்கியதாக மட்டுமல்லாமல், பிரச்சினைகளுக்கு இடங் கொடுப்பதாகவும் உள்ளன. பாரதப் பிரதமர் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள தொடர்பு, கட்சிப் பற்றற்று தோழைமை முறையில் அமைந்திருக்குமென உறுதி கூறியுள்ளதை வரவேற்கிறோம். **எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங்கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நாம் அண்ணாவின் கொள்கை வழி நின்று ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு நல்குவோமென உறுதி கூறுகிறேன்.** அதே நேரத்தில். தமிழ் நாட்டின் அரசியல், கலாச்சார, பொருளாதார, மொழிப் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் திடமாக வாதாட அனைத்துச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவோம். அதன் மூலம் தமிழ் நாட்டு மக்களின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்க மத்திய அரசு செவி சாய்த்துச் செயல்பட ஆவன செய்வோம். **இந்திய யூனியனின் பொருளாதார அமைப்பை வலுப்படுத்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படுமென்று பாரதப் பிரதமர் உறுதி யளித்திருப்பதையும் வரவேற்கிறோம்.** மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படுமென நம்புகிறோம். இதற்காக மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் முழு ஒத்துழைப்பு அளிப்போம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதன் மூலம், தமிழ் நாட்டினை வளங்கொழிக்கச் செய்வதற்கு நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில் விரைவான முன்னேற்றம் காண முடியுமென நம்புகிறோம்.

### அண்டை மாநிலங்களுடன் உறவை வளர்ப்போம்!

"அண்டை மாநிலங்களுடன் நமது உறவுகள், குறிப்பாக, குடிதண்ணீர், பாசன, மின் வசதிகளைப் பொறுத்த வரை, பரஸ்பர ஒத்துழைப்பின அடிப்படையில், நல்லவிதமாகத் தொடர்ந்து பேணப்பட வேண்டும். துரதிருஷ்டவசமாக, கடந்த காலத்தில் இந்த உறவுகள் எப்போதும் சீராக இருந்தன என்று சொல்ல முடியாது. நல்லெண்ணம், புரிந்து கொள்ளும் தன்மை, பொதுப் பயன் இவற்றின் அடிப்படையில் இந்த உறவைப் பேணி வளர்ப்பது எனது அரசின் கொள்கையாக இருக்கும்.

### மொழிக்கொள்கை

"அமரர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கிய, இப்பேரவையால் ஒரு மனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட, இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதே எனது அரசாங்கத்தின் உறுதியான கோட்பாடாக இருக்கும். இந்த இருமொழிக் கொள்கை தமிழ் நாட்டு மக்களின் விருப்பத்தை அப்படியே பிரதிபலிக்கிறது. **எல்லா வகையிலும் தமிழை வளர்க்கச் சிறப்பு நாட்டம் செலுத்துவோம்.** பிற மாநிலங்களில் தமிழ் பயிலுவதற்கு ஊக்க உதவி அளிக்கப்படும். தமிழ் இலக்கியம், கலை, வரலாறு, தொல்பொருள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அவசியமான நிதி ஒதுக்கப்படும். பிற மொழிகளில் வெளிவந்துள்ள பண்டைய இலக்கியங்களையும், பல்வேறு துறைகளிலும் வந்துள்ள தற்கால நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும். வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அரசு நிதி உதவி செய்யும்.




### பாசன வசதியைப் போதிய அளவில் கிடைக்கச் செய்வோம்!

"இப்போது முடிவடைந்துள்ள விவசாய ஆண்டு, தமிழ் நாட்டு மக்களுக்குக் கவலையளித்துள்ளது. நீர்கோள் பகுதிகளில் தென்மேற்குப் பருவக்காற்றின் மூலம் போதுமான மழை பெய்யவில்லை. மேலும், காவிரிப் பகுதிகளில் பல இடர்ப்பாடுகள் இருந்தன. இருப்பினும், இதனால் விளையக்கூடிய உற்பத்திக் குறைவைத் தடுக்கும் வகையில் வேளாண்மைத் துறை உரிய நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டது. இந்த நடவடிக்கைகளுக்கு விழிப்புணர்ச்சியும், செயல் திறனும் கொண்ட விவசாயப் பெருமக்கள் இம்மாநிலம் முழுவதிலும், சிறப்பாகக் காவிரி கழிமுகப் பகுதிகளில் ஒத்துழைப்பு நல்கியது குறிப்பிடத் தக்கது. அடுத்து வரும் பயிரிடு காலத்தில், விவசாய மக்களுக்கு பாசன வசதி போதிய அளவிலும், உரிய காலத்திலும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம்.

**"எனது அரசாங்கத்தின் சார்பில், ஜனநாயக, சமதர்ம அடிப்படையில் மலர்ந்து வளங் கொழிக்கும் இந்தியாவைக் காந்திய வழியில் உருவாக்க, மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அண்ணாவின் கொள்கை வழிநின்று, ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவோமென கூறுகிறேன்."**

—திரு. பிரபுதாஸ் பட்வாரி,
தமிழக ஆளுநர்.

## உணவு நிலைமை திருப்திகரமாக உள்ளது!

''தமிழ் நாட்டின் உணவு நிலை திருப்திகரமாக இருக்கிறது. அடுத்து வரும் மாதங்களில் பற்றுக்குறை ஏதும் இராது என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பொது மக்களின் தேவைகளுக்கு ஏற்ப அரிசி கையிருப்பும் போதுமானதாக உள்ளது. தனியார் கடைகளில் அரிசி பெரும்பாலும் நியாயமான விலையில் எளிதாகக் கிடைக்கிறது. புன்செய்த் தானிய வகைகளும் நியாயமான விலையில் கிடைக்கும் நிலை இருக்கிறது. கடலை எண்ணெய் போன்ற சமையல் எண்ணெய் வகைகளில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றம் கவலைக்கிடமாக உள்ளது. இந்த விலைவாசி நிலையை அரசு கூர்ந்து கவனித்து வருகிறது. செயற்கையான பற்றுக் குறைநிலையோ, அளவு மீறிய விலையேற்றமோ ஏற்பட்டால்,




அவசியமான, தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயங்காது. சமையல் எண்ணெய்களைப் பொறுத்த வரையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை நம் மாநிலத்தை மட்டும் பாதிக்கும் ஒன்றல்ல; இந்தியா முழுவதிலுமே ஏற்பட்டுள்ள இந்த நிலையை அனைத்திந்திய அடிப்படையில் சமாளிக்க வேண்டியது அவசியம்.

## உற்பத்தி செய்வோர்க்குத் தக்க வருவாய்! உபயோகிப்போர்க்கு நியாயமான விலை!

''உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிக்கும் தக்க வருவாய் கிடைக்க வேண்டும்; அதே நேரத்தில் இடைத் தரகர் லாபம் குறைக்கப்பட்டு, வாங்கி உபயோகிக்கும் பொது மக்களுக்கும் அவை நியாயமான விலையில் கிடைக்க வேண்டும்—இதுவே அரசின் கொள்கை. இக்கொள்கையைக் கடைப்பிடிப்பதில் உற்பத்தியாளருடைய அல்லது உபயோகிப்பவர்களுடைய நன்மையை மட்டும் ஒருதலைப் பட்சமாகக் கருதாமல், பொதுமக்களின் ஒருங்கிணைந்த நன்மையை அடிப்படையாகக் கொண்டு அரசு செயல்படும்.

## 16,000 கிராமங்களில் நியாய விலைக் கடைகள்!

''அரசுத் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இயங்கும் நியாய விலைக் கடைகளை விரிவுபடுத்தி, அத்தியாவசியப் பொருட்களை வசதியாகவும், குறைந்த விலையிலும் மக்களுக்கு வழங்க எனது அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும். இப்போது, அரிசி, கோதுமை, 'லெவி' சர்க்கரை ஆகியவற்றைக் கட்டுப்பாட்டு விலையில் வழங்க, ஏறக்குறைய 9,300 நியாய விலைக் கடைகள் உள்ளன. இந்த வசதியை




மேலும் விரிவாக்கி, தமிழ் நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாய விலைக் கடை ஒன்றையேனும் அமைக்க முயற்சிகள் மேற்கொள்வோம். இந்த நியாய விலைக் கடைகள் பொது மக்களுக்கு இப்போது வழங்கி வரும் பொருள்களோடு, பிற உணவுத் தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், புளி, மிளகாய் ஆகிய இன்றியமையாப் பொருள்களையும் வழங்க முற்படும். இதனால் எல்லாப் பகுதிமக்களுக்கும்அன்றுடத் தேவைக்குரிய பொருள்கள் நியாயமான விலைக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

''இந்தச் சட்ட மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் கொண்டு வரப்படும். புதிய அரசின் திட்டங்களையும், திட்டப் பணிகளையும் விரிவாக ஆராய, அப்போது உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, அரசின் முக்கியமான கொள்கைகளையும் குறிக்கோள்களையும் மட்டும் இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விழைகிறேன்.

## வறுமையை ஒழிப்போம்! வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவோம்!

''கடந்த 25 ஆண்டுகளாக முன்னேற்றத் திட்டங்கள் பல செயல்படுத்தப்பட்ட போதிலும், தமிழ் நாட்டில் வறுமை நிலை வரம்பிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை, இக்கால அளவில் வளர்ந்து, 1974-ஆம் ஆண்டில் 59 சதவீதமாக உயர்ந்துள்ளதென அண்மைக் கால ஆய்வு புலப்படுத்தி உள்ளது. இந்த நிலை வருந்தத்தக்கதாகும். **வறுமையை ஒழிப்பது, வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவது இவையே இந்த அரசாங்கத்தின் தலையாய குறிக்கோள்களாக இருக்கும்.** இவை இன்று தேசியக் குறிக்கோள்களாகவும் விளங்குகின்றன. நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு திட்டமும், வறுமையைக் குறைக்குமா, வேலை வாய்ப்பைப் பெருக்குமா என்ற அடிப்படையில் பரிசீலனைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.





## கிராமங்கள் முழுவளர்ச்சி பெறுவதே அரசின் குறிக்கோள்!

''நமது நாட்டின் வாழ்வுக்கும்,வளர்ச்சிக்கும் கிராமங்களே உயிர் நாடி. தமிழ் நாட்டில் 70 சதவீத மக்களின் வாழ்க்கையும், உழைப்பும் கிராமப் புறங்களிலேதான் நடைபெறுகின்றன. இவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பல முனைகளிலும் முயற்சிகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டும். இவை விவசாயம், பாசனம், விவசாய அடிப்படையிலும் பிற வகையிலும் உருவாகும் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கிராமப் புற வீட்டு வசதி, வணிகம், போக்குவரத்து வசதி, கிராமப்புற மின்வசதி ஆகிய பலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும். விவசாய இடுபொருள்களான விதைகள், இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் மக்கள் பெருவாரியாக உபயோகிக்கும் துணிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதிலும் கிராமப்புற மக்களுக்குக் கூடுதலான வேலை வாய்ப்பு, அதிகப்படியான வருவாய் நேரடியாகக் கிடைக்க வேண்டும். அதே நேரத்தில், அடிப்படை வாழ்க்கை வசதிகளான குடிநீர், கல்வி,எழுத்தறிவு, சுகாதாரம், வீட்டு மனைகள், வீட்டு வசதி, சாலைப் போக்குவரத்து வசதிகள் ஆகிய பலவும் அமைந்து அவர்களுடைய அன்றாட வாழ்க்கை நலம் பெற விளங்க வேண்டும். **கிராமப்புறங்கள் இப்படி பலவகைகளிலும் முழுமையான வளர்ச்சி பெறுவதே இந்த அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக விளங்கும்.**




## நல்ல குடிநீர் வசதி அளிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்!

''ஐந்தாண்டுத் திட்டங்களில் தொடர்ந்து செலவு செய்தும், கிராமப்புறங்களில் இன்னும் பல இடங்களில் அடிப்படைத் தேவையான நல்ல குடிநீர் வசதி இன்றும் இல்லாமலிருப்பது வருந்துவதற்குரியதாகும். மத்திய அரசின் வரவு—செலவுத் திட்டத்தில் இதற்காகக் கணிசமான அளவு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். இந்தத் துறைக்காக நமது நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதோடு, கிராமப்புற குடிநீர் தேவையை நிறைவு செய்ய காலவரையறைக் குட்பட்ட திட்டம் ஒன்றை நமது வரவு—செலவு அறிக்கையில் அறிவிப்போம். வீராணம் குடிநீர் திட்டத்தில் பெருமளவு செலவு செய்திருந்த போதிலும், சென்னை மாநகரின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினைத் தீர்த்து வைக்க இன்னும் வழிவகை காணவில்லை என்பது வருந்துதற்குரியதாகும். நாம் உடனடியாக இப்பிரச்சினையை ஆராய்ந்து இதற்குத் தீர்வு காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்போம். குறிப்பாக, அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்புடன் கிருஷ்ணா குடிநீர் திட்டத்தைச் செயற்படுத்த விரைந்து நடவடிக்கை எடுப்போம்.

## வேலைவாய்ப்புகள் பெருக்கப்படும்! வேண்டிய பயிற்சியும் அளிக்கப்படும்!

''கிராமப் புறங்களில் வேளாண்மையில்லாத காலங்களில் வேறு வேலையற்ற நிலைமை பரவலாக உள்ளது. இந்தக் குறையைப் போக்கும் வகையில், பெரும் அளவுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும். இந்தத் திட்டங்கள், சிறு பாசன வசதிகள், நடுத்தர பாசன வசதிகள், சாலைகள், வீடுகள், பள்ளிகள், சமுதாய நல வசதிகள், மண்வளப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்று மக்களுக்குப் பயன்தரக் கூடிய உடைமைகளை உருவாக்கவும், பராமரிக்கவும் உதவும். ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில் துறை வாய்ப்புகள் ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் கல்வி முறையில் தொழில் சார்ந்த பயிற்சிகள் இணைக்கப்படும். தொழில் படிப்பும், தொழில் துறையில் பெருகி வரும் முதலீடுகளும், பெருநகரங்களிலும் சிறு நகரங்களிலும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க உதவும். வணிக வங்கிகளின் உதவியைப் பெற்று, கிராமப்புறங்களில் கைத்திறனை அடிப்படையாகக் கொண்டு, சொந்த முயற்சியில் சிறுதொழில்களில் ஈடுபடும் எளிய மக்களுக்குப் பெருவாரியாக வேலை வாய்ப்பு அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நமது சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாக வாய்ப்பற்று, நலிவுற்று நிற்கும் அரிசனங்கள், பழங்குடி மக்கள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், மகளிர் ஆகியோருக்கு அரசு குறிப்பாக உதவும். இவர்களின் பொருளாதார முன்னேற்றத்தையும், சமுதாய மறுமலர்ச்சியையும் ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்த வேண்டும். **சமுதாயத்தில் தொடர்ந்து இடர்ப்பாடுகளை அனுபவித்து வரும் இப்பெரும்பான்மை மக்களின் துயர் துடைக்கும் வகையில் அரசு தக்க திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தும்.**



## மின்சார, பாசனத்திட்டங்களுக்கு முக்கியத்துவம்

''மின்சார உற்பத்தியில் அதிக முதலீடு செய்வதிலும், பெரிய, நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களை மேற்கொள்வதிலும், நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதிலும் அரசாங்கம் உடனடியாகவும் தொடர்ந்தும் அக்கறையோடு செயற்படும். இம்முயற்சியில் இப்போதுள்ள வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவும் புதிய முதலீடுகளை விரைவுபடுத்தவும், மின்சக்தி, தண்ணீர் ஆகியவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும் வழிமுறைகள் வகுக்கப்படும்.




## மதுவை ஒழிக்க மக்களிடம் பிரச்சாரம்!

மக்கள் நலனை அடிப்படையாகக்கொண்ட மதுவிலக்குக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுவோம். மகளிரும் இளைஞர்களும் குடித் தீமையால் குறிப்பாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். பல துறைகளில் சமூக விரோதச் செயல்கள் நடைபெறுவதற்கும், அதன் மூலம்



சமூக விரோதிகள் பொருளாதாரக் கட்டுக்கோப்புகளையும், சமூக நெறிகளையும் உருக்குலைப்பதற்கும் இது உடந்தையாக இருக்கிறது. மதுவிலக்கைக் கண்டிப்புடன் செயற்படுத்துவதற்குச் சட்ட வகையில் நடவடிக்கைகள் எடுப்பதுடன், குடிப்பழக்கத்தை மேற்கொள்ளாமல் இருக்கும்படி மக்களிடம் பிரச்சாரம் செய்வதும் இந்த அரசின் முயற்சியாய் இருக்கும்.




## விரைவில் உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்தல்!

''குறித்த காலத்தில் நடத்தப்பட வேண்டிய மாநகராட்சி மன்ற, நகராட்சி மன்ற, ஊராட்சி மன்றத் தேர்தல்கள் இதுவரை நடத்தப்படாமல் இருந்திருக்கின்றன. மஸ்டர் ரோல் வழக்கு முடிந்தவுடன் சென்னை மாநகராட்சிக்கு உடனடியாகத் தேர்தல் நடத்தப்படும். வாக்காளர் பட்டியலில் குறைகள் இருப்பதாக மக்கள் கருதுவதால், விரைவில் அவற்றைத் திருத்தி, ஒழுங்குபடுத்தி, அந்தப் பணி நிறைவேற்றப்பட்டவுடன், மதுரை மாநகராட்சி, ஏனைய நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்தப்படும். அதோடு, ஊராட்சி மன்றத் தலைவரைப் பொது மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பது போல ஒன்றிய தலைவரையும், நகர சபைத் தலைவரையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென இந்த அரசு விரும்புகிறது. வெகு விரைவில், அதற்குரிய சட்டங்கள் இப்பேரவையில் வைக்கப்படும்.

## மக்களின் நெடுநாளைய தேவையை நிறைவேற்றும் வகையில் திட்டங்கள் வகுக்கப்படும்!

''நம்முடைய பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் யாவும் நீண்ட கால நோக்கின அடிப்படையாகக் கொண்ட ஒரு பெரும் முயற்சியைச் சார்ந்திருக்க வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரை, திட்டம் வகுக்கும் பணி இன்று ஒரு தேக்க நிலையை அடைந்து விட்டது துரதிருஷ்டமாகும். புதிய அரசு, மாநிலத் திட்டக் குழுவிற்குக் கூடிய விரைவில் புத்துயிர் அளித்து, 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை விரிவாகவும், விளக்கமாகவும் வகுக்கும் பொறுப்பை அதனிடம் அளிக்கும். நீண்ட காலத் திட்டம், நடைமுறையில் செயற்படக் கூடியதாகவும், பொருளாதார வாய்ப்பின் அடிப்படையிலும் இருத்தல் வேண்டும்; அது மட்டுமல்ல; பொது மக்கள் புரிந்து கொண்டு, ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கி ஈடுபடும் வகையில் திட்டங்கள் அமையவேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு, வட்டார, வட்ட, மாவட்டப் பகுதி மக்களின் நெடுநாளையத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கும், ஆங்காங்கே உள்ள மூலப் பொருட்கள், மனித சக்தி, திறமை ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் ஏற்றவாறு திட்டங்கள் வகுக்கப்படும்.




''மேன்மை தங்கிய உறுப்பினர்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் ஒரு சில நாட்களே நடக்கும். தள்ளிப்போட முடியாத சில முக்கியமான சட்டப் பணிகள் மட்டுமே இக்கூட்டத்தில் உங்கள் முன் கொண்டு வரப்படும். இந்தக் கூட்டத்திலும், இனி வரும் சட்ட மன்றத் தொடர் கூட்டத்திலும், நடைபெற்ற தேர்தலில் ஏற்பட்ட வெப்பங்களிலிருந்தும், சர்ச்சைகளிலிருந்தும் விடுபட்டுப் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாமன்றம் தனக்கேயுரிய கண்ணியம், மரியாதை, தரம் போன்ற பாரம்பரியங்களைப் பாதுகாக்கத் தக்க வகையில், எதிர்க்கட்சியினர் தங்கள் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பைத் தந்தும், ஆளுங் கட்சியினர் ஒருதலைப் பட்சமற்ற அணுகுமுறைகளை மேற்கொண்டும், அவையின் நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று கோருகிறேன். தமிழகத்தின் மொத்த நலனை முன்னிலைப்படுத்தி, தனிப்பட்ட நலன்களைப் பின்னிலைப் படுத்தி, பொது நோக்குடன் பணியாற்றினால், இந்த மாமன்றம் வாக்காளப் பெருமக்கள் சுமத்திய பெரும் பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதில் எனக்கு எந்த வித ஐயமும் இல்லை. உங்களுடைய நற்பணிகளில் நீங்கள் வெற்றி பெற, உங்கள் எதிர்காலம் சிறக்க, வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

''வணக்கம்.''








# புதுமையான கொத்துரக மிளகாய்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மதுரை வேளாண் கல்லூரியின் தோட்டக்கலைப் பிரிவில் நடத்தப் பட்ட ஆராய்ச்சிகளின் பயனாக உருவாக்கப் பட்டதே 'மதுரை-1' மிளகாய் இரகம். இது கொத்துக் கொத்தாகக் காய்ப்பதுதான் ஒரு புதுமை. அதுவே இதன் பெருமை. இதன் பழங்கள் தரமானவை. அழகிய சிவப்பு நிறம் கொண்டவை. இது எக்டேருக்கு 1800 கிலோ மிளகாய் வற்றல் மகசூல் தரக்கூடியது. இதன் வயது 210 நாட்கள். இந்த இரகம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங் களில் பயிர் செய்வதற்கு மிகவும் ஏற்றது. இந்த 'மதுரை-1' மிளகாய் இரகத்தைப் பயிரிட பின்கண்ட சாகுபடி முறைகளை மேற் கொள்ளலாம்:

## 'மதுரை-1' மிளகாய் சாகுபடி முறைகள்

| | |
|---|---|
| பருவம் ... | ஜூன்-ஜூலை அல்லது செப் டம்பர்-அக்டோபர். |
| வயது ... | 210 நாட்கள் |
| நாற்றங்கால்: | விதை அளவு-எக்டேருக்கு 1.65 கிலோ. அதை 3 சென்ட் பரப்பளவுள்ள நாற்றங்காலில் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ர சான்' என்ற அளவில் கலந்து பின் விதைக்கவும்.<br><br>நாற்றுவிட்ட 21-ஆம் நாளில் 'போர்டோ' கலவையை (0.5 சதம்), பாத்திகளில் நாற்றை விலக்கிக்கொண்டு ஊற்றவும். நாற்றுவிட்ட 25 முதல் 30 நாட்களில் 3 சென்ட் நாற்றங்காலில் 1/2 கிலோ 'பி. எச்.சி. 10 சதம்' தூவவும். |
| நாற்றின் வயது | 40-45 நாட்கள் |
| வயல் ... | 4 முதல் 6 தடவை நன்கு உழுது பண்படுத்தவும். |
| அடியுரம் ... | எக்டேருக்கு 25 டன் (50 வண்டி) கம்போஸ்ட் அல்லது தொழு உரம், மணிச்சத்து 35 கிலோ; சாம்பல் சத்து 35 கிலோ. |
| மேலுரம் ... | எக்டேருக்கு தழைச்சத்து 75 கிலோ; இதை மூன்று முறை அதாவது நாற்று நட்ட 30, 60, 90-வது நாட்களில் சம அளவில் பிரித்துக் கொடுக்கவும். |
| பின்செய் நேர்த்தி ... | செடிகளுக்கு மேலுரமிடும் போது மண் அணைக்கவும், தேவையானபோது களை எடுக்கவும். |
| இடைவெளி | 30 செ. மீ. x 25 செ. மீ. |
| நீர்ப்பாசனம். | வாரம் ஒருமுறை மண்ணின் தன்மையறிந்து நீர் பாய்ச்ச வும். |
| நேர்த்தி பயிர்ப்பாது காப்பு | சாதாரணமாக இலைப்பேன், சாம்பல் நோய், நுனிவாடல் நோய், பழ அழுகல் நோய் முதலியவை இதனைத் தாக்கு கின்றன. |

ஒரு எக்டேர் மிளகாய்ப் பயிருக்கு மெட் டாசிஸ்டாக்ஸ் 500 மில்லி லிட்டர் மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து, மிளகாய் நாற்று நட்ட 15-வது நாளில் தொடங்கி 21 நாள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும். மிளகாய் நாற்று நட்ட 70-வது நாளிலிருந்து 21 நாள் இடைவெளியில் மூன்று முறை 500 கிராம் செவின் (50 சதம் தண்ணீ ரில் கரையும் தூள்) 1 கிலோ மருந்தையும் 500 கிராம் தண்ணீரில் கரையும் கந்தகத் தூளையும் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு எக்டேரில் தெளிக்கவும்.

பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்த, மிளகாய்க் கன்று நட்ட 30-ஆம் நாளிலிருந்து மாதம் ஒரு முறையாக மூன்று தடவை, 'டைத்தேன் இசட். 78' (ஒரு லிட்டர் தண் ணீரில் 2 கிராம் மருந்து வீதம் கலந்து) தெளிக்கவும்.

பூச்சி அல்லது பூஞ்சாள மருந்து தெளிப் பது, பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதல் பருவநிலை ஆகியவைகளைப் பொறுத்து மாறு படும்.

மகசூல்: எக்டேருக்கு 1,800 கிலோ மிளகாய் வற்றல் கிடைக்கும்.

### எக்டேருக்கு நிகர வருவாய்

| | |
|---|---|
| மதுரை-1 மிளகாய் இரகம் | —ரூ. 9,045 |
| கோவில்பட்டி-1 இரகம் | —ரூ. 7,535 |
| கோவில்பட்டி-2 இரகம் | —ரூ. 7,765 |

எனவே, மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு, 'மதுரை-1' மிளகாய் பயி ரிட்டு இலாபம் பெறுமாறு உழவர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.



# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், 4-7-1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை யின் உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.



திரு முனுஆதி அவர்கள், 6-7-1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தலைவராக, ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவைமுன்னவர் திரு கி. மனோகரன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு மு. கருணாநிதி அவர்களும் திரு முனுஆதி அவர்களைப் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அழைத்துச் சென்றனர்.

வியட்நாம் சோஷியலிஸ்ட் குடியரசிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தந்த திரைப்படக் குழுவினர், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில், 7-7-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.



# பண்ணையிலே குளம் தோண்டி பலவகை மீன் வளர்த்து பயன்மிகப் பெற்றிடலாம்!

நிலமும், நீரும் ஒருங்கே பெற்றுள்ள வேளாண் பெருமக்கள், வேளாண்மையுடன் மீன் வளர்ப்பையும் தமது இணைந்த தொழிலாக ஏற்றால், மாவுச் சத்து நிறைந்த வேளாண் பொருள்களுடன், விலங்கினப் புரதச் சத்து செறிந்த மீனையும் உற்பத்தி நிலையிலேயே சமச்சீர் சத்துணவாகப் பெறமுடியும். எனவே, வயலின் ஒரு பகுதியை மீன் வளர்ப்புக்கெனப் பயன்படுத்தலாம். மீன் வளர்ப்புக் குளங்களின் அளவைப் பொறுத்து, குடும்பத் தேவை அல்லது கூடுதல் வருவாய் பெறும் நோக்கோடு, மீன் உற்பத்தி செய்யலாம். குறிப்பாக வேளாண்மைக்கு ஒவ்வாத காரத் தன்மையுடைய நிலங்கள், மீன் வளர்ப்புக்குச் சிறந்த இடங்களாகும். கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் நன்செய் நிலப் பகுதியில், சிறு குளங்கள் உருவாக்கி மீன் உற்பத்தி செய்வது பற்றிய ஆய்வு நிகழ்த்தப்பட்டது.

## குளங்கள் அமைப்பும், மீன் வளர்ப்புக்குத் தகுதியாக்கும் முறையும்

மீன் வளர்ப்பதற்காகத் தோண்டப்பட்ட குளங்கள் 15 மீட்டர் நீளமும், 12 மீ. அகலமும், 1.5 மீ. ஆழமும் உடையன. உண்பதற்கென உற்பத்தி செய்யும் மீன் குளங்கள் குறைந்தது 1,000 ச. மீ. (0.1 எக்டேர்) அளவிலேனும் இருக்க வேண்டும். மேற்கூறிய அளவிலான மூன்று சிறு குளங்களில் மீன் உற்பத்தி குறித்த முடிவுகள் அறியப்பட்டுள்ளன.

மீன் குஞ்சுகள் விடுவதற்கு முன்பாக, குளங்களுக்கு அடியுரமிட்டு, இயற்கையாக மீன் உணவு உற்பத்தி செய்தல் அவசியம். மீன் குஞ்சுகளைக் குளத்தில் இருப்புச் செய்த பின்னரும், சீரான மீன் உணவு உற்பத்திக்கென, மேலுரமும் தொடர்ந்து, இடவேண்டும். கீழ்க்கண்ட இருவகை உரமிடும் முறைகள் ஆராய்ச்சியில் மேற்கொள்ளப்பட்டன.

முதல் குளத்தில் இயற்கை—செயற்கை—உரங்கள் இணைத்து உரமிடப்பட்டன. அடியுரமாக ஓர் எக்டேருக்கு மாட்டு சாணம் 10,000 கிலோ, சூப்பர், பாஸ்பேட் 100 கிலோ என்ற அளவில் போடப்பட்டது. மேலுரமாக, மாதமிரு முறை மேற்கண்ட உரங்களின் அளவுகளில் ஆறில் ஒரு பங்காகவும் இடப்பட்டன.

இரண்டாவது குளத்தில் உரமிடுவதற்குச் செயற்கை உரங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. ஓர் எக்டேருக்கு 50 கிலோ அளவில் சூப்பர் பாஸ்பேட் 5 பங்கு, பொட்டாஷ் 1 பங்கு என்ற விகிதத்தில் அடியுரமும், பின்னர் மாதமிருமுறை

குளத்தில் உரமிடப் படுகிறது.





மீன்களுக்கு உணவு இடப்படுகிறது.

இதே அளவுகளில் மேலுரமும் இடப்பட்டன.

### மீன் குஞ்சுகளை இருப்புச் செய்தலும்—உணவு இடுதலும் !

குளத்தின் எல்லாப் பகுதியிலுமுள்ள உணவையும் உண்டு, மீன் வளர்ச்சியையும், உற்பத்தியையும் பெருக்கும் வகையில் பல மீன் இனங்களைக் கலந்து இருப்புச் செய்வதைக் கருத்தில் கொள்ள வேண்டும். முன் கூறிய உரமிட்ட இரு குளங்களிலும் வெள்ளிக்கெண்டை 'தோப்பா', 'மிர்கால்', சேல் கெண்டை; சாதாக்கெண்டை, பால் கெண்டை, புல் கெண்டை ஆகிய ஏழு மீன் இனங்களின் குஞ்சுகளை இணைத்து இருப்புச் செய்யப்பட்டன. ஒரு எக்டேருக்கு 5,000 மீன் குஞ்சுகள் என்ற அளவில் 180 ச. மீ. அளவுள்ள குளம் ஒவ்வொன்றிலும் 90 மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டன.

வெள்ளிக் கெண்டையும், தோப்பாவும் மேல் மட்டத் தண்ணீரிலுள்ள தாவரம், விலங்கின நுண்ணுயிரினங்களை முறையே உண்பன. மொத்தத்தில் இவ்விரண்டு மீன் இனங்களின் பங்கு 39 விழுக்காடு.

'மிர்கால்', சாதாக்கெண்டை, சேல் கெண்டை முதலிய மீன் இனங்கள் குளத்தின் அடிப்பகுதியில் உள்ள அழுகும் உயிரினங்கள், தாவரம், மற்றும் புழு, பூச்சிகளை உண்ணும். இருப்பு செய்த மீன்களில் இம் மூன்று மீன் வகைகளின் பங்கு 45 விழுக்காடு ஆகும்.

பால் கெண்டை நீரிலுள்ள பாசிகளையும், பாசிகளிலுள்ள உயிரினங்களையும் உணவாகக் கொள்ளும். புல் கெண்டை நீர்ச் செடிகளையும், தரைப் புல் போன்ற பெரிய தாவரங்களையும் உண்ணும். இவ்விரண்டு இனமும் முறையே 11, 5 விழுக்காடு அளவில் இருப்புச்செய்யப் பட்டன.

இயற்கையான மீன் உணவு உற்பத்திக்காக அடியுரம், மேலுரம் இடுவதோடல்லாமல், சரிவிகித எடை அளவில் தவிடு-பிண்ணாக்குத் தூள்களை ஒன்றாகக் கலந்து, இருப்புச் செய்த மீன்களின் எடைக்கு 2 விழுக்காடு அளவில் நாள்தோறும் மீன்களுக்கு உணவு அளித்து வரப் பட்டது.

மூன்றாவது குளத்தில் மேற்கூறிய மீன் இனங்களுடன், இடை மட்ட நீரிலுள்ள அழுகும் தாவர இனங்களை உட்கொள்ளும் 30 'ரோகு' மீன் குஞ்சுகளையும் இணைத்து எக்டேருக்கு 7,277 என்ற எண்ணிக்கையில் மீன்கள் வளர்க்கப்பட்டன. வேறு உரம் ஏதுமில்லாமல், உரமிட்ட குளங்களிலிருந்து நீர்க்கசிவு, மீன்களுக்கு அளிக்கும் உணவு ஆகியனவே இக்குளத்திற்கு உரமாக அமைந்தன.

## கண்ணாடி கெண்டை







## பால் கெண்டை

### மீன்களின் வளர்ச்சியும், உற்பத்தியும் !

முதலிரண்டு குளங்களில் 15 மாதங்கள் வரையும், மூன்றாவது குளத்தில் 21 மாதங்கள் வரையும் வளர்த்து, பின்னர் எல்லா மீன்களையும் பிடித்து. மீன்களின் வளர்ச்சியும், உற்பத்தியும் அறியப்பட்டன. வெள்ளிக் கெண்டை, புல் கெண்டை', 'மிர்கால், 'தோப்பா', 'ரோகு', சாதாக் கெண்டை, சேல் கெண்டை, பால் கெண்டை என்ற வரிசையில் மீன்களின் வளர்ச்சிவேகம் சிறப்பாக அமைந்திருந்தது. ஓர் ஆண்டில் எக்டேருக்கு மீன் உற்பத்தி முதல் குளத்தில் 2,400 கிலோ, இரண்டாம் குளத்தில் 1,944 கிலோ, மூன்றாம் குளத்தில் 3,166 கிலோ ஆக இருந்தன.



## சேல் கெண்டை

### மீன் வளர்ப்பில் பொருளியல் நிலைமை !

சிறு குளங்களில் மீன் வளர்ப்பதை மேற்பார்வைச் செலவில்லாமல், வேளாண் மக்களே கவனித்துக் கொள்ள இயலும். எனவே, தவிடு, கடலைப் பிண்ணாக்கு, செயற்கை உரங்கள், மீன் குஞ்சுகள் ஆகியனவற்றுக்கான செலவினங்களைக் கருத்தில் கொண்டால், ஒரு கிலோ மீனின் உற்பத்தி விலை ரூ. 2.20 முதல் ரூ. 3.25 ஆகிறது.

ஒரு எக்டேரில் ஆண்டுச் சராசரி மீன் உற்பத்தி 2,000 கிலோ எனக் கொண்டாலும், எக்டேருக்கு மீன் உற்பத்தி விலை ரூ. 4,400-6,500 என்று ஆகிறது. ஒரு கிலோ மீனின் இன்றைய விலை ரூ.5 என்ற அடிப்படையில், ஆண்டுக்கு ஒரு எக்டேரில் கிடைக்கும் நிகர இலாபம் ரூ. 3,500 லிருந்து ரூ. 5,500 வரை இருக்கும். மேலும் மீன், விலங்கினப் புரதச் சத்து அளிக்கும், எளிதில் செரிக்கும் சிறந்த உணவுப் பொருளாகும். எனவே, வேளாண் விளை பொருள்களுடன், இயன்ற அளவுக்கு மீன் உற்பத்தியையும் மேற்கொண்டு வேளாண் மக்கள் உரிய பயனைப் பெறலாம்.

தகவல் :

திரு. வே. நடராசன்,
டாக்டர் மெ. நா. குட்டி,
டாக்டர் கி. வெங்கிட ராமானுஜம்,

மீன் வள அறிவியல் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்.
கோவை—3.

# நீர் நிலைகளில் வளர்ப்பதற்கேற்ற மீன் இனங்கள்



'திலேப்பியா'



'ரோகு'



'மிர்கால்'



வெள்ளிக் கெண்டை,



புல் கெண்டை



சாதாக்கெண்டை

கழிவு நீரிலுள்ள உரச் சத்துகளில் இயற்கையாகவே மீன்களுக்கு உணவாகும் உயிரினப் பொருள்கள் பெருமளவில் உற்பத்தியாகின்றன. மேலும் இதனால், இருப்புச் செய்யும் மீன்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கலாம். சாதாரணமாக, எக்டேருக்கு 10,000 முதல் 12,000 மீன் குஞ்சுகள் வரை இருப்புச்செய்யலாம். இதில் பாதியளவு மட்டுமே நன்னீர் மீன் குளங்களில் இருப்புச்செய்யப்படுகின்றன.

நன்னீர் மீன் குளங்களில் உள்ள அனைத்து மீன் இனங்களையுமே கழிவுநீர் மீன் குளங்களிலும் வளர்க்கலாம். நீர்ப்பரப்பிலுள்ள தாவர நுண்ணுயிரினங்களை உண்ணும் வெள்ளி நிறக் கெண்டை, பிற நுண்ணுயிரினங்களை உட்கொள்ளும் 'தோப்பா', அடிமட்டத்திலுள்ள உயிரினங்கள் மற்றும் அழுகும் பொருட்களை உண்ணும் 'மிர்கால்', சாதாக்கெண்டை, சேல்கெண்டை, நீரின் இடைப்பட்ட நிலையிலுள்ள தாவரம் மற்றும் பிற உயிரினங்களை உட்கொள்ளும் 'ரோகு' ஆகிய பல்வேறு இனங்களை ஒருசேர இவற்றில் வளர்க்கலாம். கிடைக்கும் அனைத்து உணவுப் பொருள்களையும் உட்கொள்ள வாய்ப்பிருப்பதால் மீன்களின் வளர்ச்சியும், உற்பத்தியும் அதிகரிக்க ஏதுவாகின்றது.

நீரில் செடி இருந்தால், அவைகளைக் கட்டுப்படுத்த புல் உண்ணும் கெண்டை மீன்களை உடன் வளர்க்கலாம். நீரிலுள்ள பூச்சிகளை உண்ணக்கூடியதும், நீரில் உயிர்வளிக் குறைவைத் தாங்கக் கூடியதுமான விரால் மீன்கள் கழிவு நீரில் வளர்வதற்கு ஏற்றன. இம்மீன்கள் பிற மீன் குஞ்சுகளையும் உண்ணுமாதலால், அவை சற்றுப் பெரிதாக வளர்ந்த பின்னரே விரால் மீன்குஞ்சுகளைக் குளத்தில் இருப்புச்செய்யவேண்டும்.

'திலேப்பியா' இயற்கையாகவே விரைந்து இனப்பெருக்கம் செய்யும் தன்மையுடையது. ஆதலின், அதன் எண்ணிக்கை பெருகி, பிற மீன்களின் வளர்ச்சி பெரிதும் குறைகிறது. எனவே, கெண்டைமீன்கள் இல்லாத தனிக் குளங்களில் விரால் மீன்களுடன் 'திலேப்பியா'மீன்களை இணைத்து வளர்க்கலாம். பெருமளவில் உற்பத்தியாகும் 'திலேப்பியா' மீன்குஞ்சுகள் விரால் மீன்களுக்கு இரையாகி, எண்ணிக்கைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். 'திலேப்பியா' மீன் வளர்ப்பதனால் மீன் உற்பத்தி அளவை அதிகரிக்க முடியும். உண்பதற்கேற்ற வளர்ச்சி பெறாத நிலையில் இச்சிறு மீன்களிலிருந்து மீன் தூள் தயாரித்துக் கால்நடைகளுக்குத் தீவனமாக அளக்கப் பயன்படுத்தலாம்.

தகவல் : மீன்வள அறிவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

வெளியீடு : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



# லோக் பால்- மக்கள் காவலர்

—எஸ். கே. ஸோரப்ஜி, பாரதத்தின் கூடுதல் உயர் ஸொலிஸிடர். –

குடிமக்களின் நல்வாழ்வைப் பேண விரும்பும் அரசு ஒன்றில் நல்ல பரிபாலனம் நிலவ வேண்டும்.

'நல்வாழ்வு அரசு' என்று கூறப்படுவதன் அரசு முறையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

*(1)* நிர்வாகத்தில் நேர்மை. அதாவது லஞ்ச ஊழலின்மையும், முறை கேடான நடத்தை இன்மையும்.

*(2)* நிர்வாகத்தில் திறமையும், பயனுடைமையும். இதை இரு வழிகளில் அடையலாம். முதலாவதாக, அநியாயமானவையும், நிதியற்றவையும், கொடுமையானவையுமான நிர்வாக நடைமுறைகளை நீக்கிவிட வேண்டும். இரண்டாவதாக, நிர்வாகச் செயலை மேற்கொள்வதில் கவனமின்மையையும், அனாவசியத் தாமதத்தையும் தவிர்க்க வேண்டும். சட்டத்தின் தாமதங்களும், பதவியின் செருக்கும்தான் மக்களின் பல தொல்லைகளுக்குக் காரணம். கடைசியாக, ஆனால் கடைசிப்பட்சமாக அல்ல, மக்களின் சுதந்திர உரிமைகளைத் தாமதமில்லாத முறையிலும், செலவில்லாத முறையிலும், நடைமுறைச் சழக்குகளில்லாத சாதாரண முறையிலும் பெறுவதற்கு வகை செய்ய வேண்டும்.

நல்லாட்சி ஒன்றின் வெற்றி, உயரளவிலான பொதுவாழ்வு உணர்வுடன் நெருங்கிப் பிணைந்த ஒன்று என்பது அனுபவம் காட்டும் உண்மை. நம் மக்களின் அரசியல் உணர்வுக்கும் முதிர்ச்சிக்கும் அருமையான உதாரணம் ஒன்றை அண்மையில் கண்டோம். மக்களின் பொதுவாழ்வு உணர்வு பற்றி யாருக்காவது இருக்கக் கூடிய ஐயத்தையும், அவநம்பிக்கையையும் விரட்டக் கூடிய உதாரணம் அது.அந்த உணர்வு இருக்கவே செய்கிறது. நம்பிக்கைக்குகந்த நண்பரான நல்ல பாதுகாவலர் மட்டும் மக்களுக்கு இருந்துவிட்டால், தன்னை நிலை நாட்டிக் கொள்ள விரும்பும் அந்த உணர்வு.

'லோக் பால்' 'லோக் ஆயுக்தர்' என்னும் ஏற்பாடு இதற்குத்தக்க பரிகாரமாயிருக்கும். 'ஆம்புட்ஸ்மென்' என்பது ஒரு 'ஸ்காண்டிநேவிய' ஏற்பாடு. இப்போதைய வடிவில் அதை முதலில் ஏற்ற நாடு ஸ்விடன். *1899*-இல் ஏற்றது. பிறகு பின்லாந்து, டென்மார்க், நார்வே ஆகியவை ஏற்றன. நியுஜிலாந்து *1962* — லும், பிரிட்டன் *1966* — லும் அதை ஏற்றன. அந்த நாடுகள் ஒவ்வொன்றிலும், அலுவலர் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதும் , துஷ்பிரயோகங்களைத்



தவிர்ப்பதும் வேண்டும் என்ற ஒரேநோக்கத்துடன், ஏற்கெனவே இருந்த கட்டமைப்பும் நடைமுறைகளும் போதுமானவையாயிருக்காதபடியால், புதிய கட்டமைப்பு ஏற்கப்பட்டது.

பாரத அனுபவமும் மாறுபட்டதல்ல. லஞ்ச ஊழலின் தாண்டவத்துக்கெதிராகவும், எங்கும் பரவிய திறமையின்மைக்கெதிராகவும், மக்களின் தேவைகளை நிர்வாகம் மதியாமைக்கெதிராகவும் மக்கள் ஓலம் பலமுறை வெளிப்பட்டதுண்டு. பாரதத்தில் நிலவும் ஒரு கருத்து என்னவெனில், 'மட மனமே, மந்திரிகளையும் , அதிகாரிகளையும் நம்பாதே!' என்பதாகும். பார்லிமென்ட் என்னும் நாடாளுமன்றத்தில் போடப்படும் கேள்விகளாலும், தம்முடைய பார்லிமென்ட் உறுப்பினருக்கு எழுதும் கடிதங்களாலும் உபயோகம் அதிகமில்லை என்று சாதாரணப் பிரஜை எண்ணுவது சரியே. நீதித்துறைமூலம் கிடைக்கக் கூடிய பரிகாரமும், பல சமயங்களில் போதுமானதுமல்ல, தக்க பலனளிப்பதுமல்ல என்று அவர் எண்ணுவதிலும் தவறில்லை. ஏனெனில், நடைமுறைக் கட்டுப்பாடுகளாலும், சட்ட நுட்ப விஷயங்களாலும் இறுகக்கட்டுண்டவை நீதிமன்றங்கள். இது தவிர, கோர்ட்டுக்குக் கோர்ட்டு இழுத்தடிக்கும் விவகாரத்தால் ஆகும் பெருஞ் செலவைச் சமாளிக்கக் கூடியவர் வெகு சிலரே.

பாரதத்தில் என்ன செய்யப்பட்டது? *1966* ஆகஸ்டிலேயே 'நிர்வாகச் சீர்திருத்தங்கள் குழு' 'ஆம்பட்ஸ்மென்' போன்ற அமைப்பை ஏற்கலாம். என்று தன் அறிக்கையில் கூறியது.

இந்தப் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கென *1968* மே *9* அன்று லோக் சபாவில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. லோக் சபா அதை ஏற்றும் விட்டது. ஆனால் அது ராஜ்ய சபாவின் பரிசீலனையில் இருக்கையில் லோக் சபா கலைக்கப்பட்டு விட்டபடியால், மசோதா காலாவதியாகிவிட்டது.

பிறகு புதிய மசோதா ஒன்று *1971* ஆகஸ்டில் லோக் சபாவில் தாக்கல் செய்யப்பட்டது. இதுவும், ஐந்தாவது லோக் சபா கலைந்தபோது காலாவதியாகி விட்டது.

மத்திய 'லோக்பால்' மசோதாவின் மாதிரியில் சட்டங்களை இயற்றியுள்ள மாநிலங்களில், ஓரிஸ்ஸா, மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகியவை சில ஆகும்.

பாரதத் தலைமை நீதிபதி லோக் சபாவில் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் ஆலோசனை நடத்தி விட்டு குடியரசுத் தலைவர் லோக்பாலை நியமிப்பதற்கு மத்திய மசோதா வகை செய்தது.

லோக் பாலிடம் பார்லிமென்ட்டின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கான சீரிய ஏற்பாடு இது. பதவிக்காலம் ஐந்தாண்டு. நடத்தைக்கேடு அல்லது ஆற்றலின்மை என்ற காரணத்தின் பேரில்தான்_ வேறு ஒரு காரணத்தின் பேரிலுமல்ல_ குடியரசுத்

தலைவரால் லோக் பால் அகற்றப் பட முடியும் என்றும் விதிக்கப் பட்டது. அவரை அகற்றுவதற்கான நடைமுறை, உச்சி நீதி மன்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியை அகற்றுவதற்கு அரசியல் சாசனத்தில் விதித்துள்ள நடைமுறையே என்றும் கூறப் பட்டது. ஒரு மந்திரியோ அல்லது செயலரோ அல்லது வேறு எந்தப் பொது ஊழியரோ மேற்கொண்ட எந்த நடவடிக்கையையும் 'லோக் பால்' விசாரிப்பதற்கு மத்திய மசோதா அதிகாரமளித்தது. மசோதாவில் கண்டிருந்தபடி லோக் பாலின் பிரதான பணி, புலன் விசாரிப்பதுதான், நீதித் தீர்ப்பு அளிப்பதல்ல. லஞ்ச ஊழல் அல்லது கேடான நிர்வாகம் பற்றிய புகார் ஆதாரமுள்ளதுதான் என்று விசாரணைக்குப் பிறகு லோக் பால் திருப்தியுற்றால், குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் தீங்குக்குப் பரிகாரம் செய்யப்பட்டாக வேண்டும் என்பதாக சம்பந்தப்பட்ட பொது ஊழியருக்கும் உரிய அதிகார நிறுவனத்துக்கும் பரிந்துரை கூறி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

தம் பரிந்துரை மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவருக்குத் திருப்தி ஏற்படாத பட்சத்தில் குடியரசுத் தலைவருக்கு அவர் விசேஷ அறிக்கை ஒன்றை அனுப்புவதற்கு வகை செய்யப்பட்டது. மேலும், குடியரசுத் தலைவருக்கு அவர் முழுமையான ஆண்டு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் இவ்விரு அறிக்கைகளையுமே பார்லிமென்டின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மசோதா விதித்தது.

பார்லிமென்டில் சமர்ப்பிக்கப்பட்ட இரு மசோதாக்களும் தனிச் சிறப்பானவையாக இல்லாவிட்டாலும், சரியான திசையின் மேற்கொண்ட நடவடிக்கைகளே. வருங்கால மசோதா எதிலும், லோக் பாலின் விசாரணைக்கு அப்பாற்பட்டதாகக் குறிக்கும் விஷயங்களை மட்டுப்படுத்தியாக வேண்டும் என்பது நான் கூறும் யோசனை. மேலும், நடத்தை பற்றி லோக் பாலால் விசாரணை செய்யப்படக்கூடிய நபர்களில் ஒருவராகப் பிரதம மந்திரியையும் சேர்ப்பது பற்றித் தீவிரமாகச் சிந்திப்பது நல்லது. கடமையில் தவறும் பொதுத் துறையினர் அம்பலப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், பிறகு பார்லிமென்ட்டிலோ, நீதிமன்றத்திலோ விளைவுகளை அனுபவிக்க வேண்டும் என்பதையும் மறவாதிருப்போமாக!

லோக் பாலை அமைத்தால், மந்திரியினுடைய பொறுப்புக்கு அது முரணாகும் என்பது, அதற்கெதிராகத் தெரிவிக்கப்படும் வன்மையான ஆட்சேபணைகளில் ஒன்று. ஆதாரமில்லாத ஆட்சேபணை. முதலாவதாக, தமது துறையின் பிழைகளை விசாரிப்பதற்கு மந்திரிக்குத் தனிப்பட்ட பொறுப்பு இருக்க வேண்டும் என்பதாக நெறி ஒன்றும் கிடையாது. அதிகார பீடத்தில் இருப்போருக்கெதிரான தனிப்பட்ட புகார்களை விசாரிப்பதற்கு, நிலையான, திறமையான, அரசியல் சார்பற்ற ஏற்பாடு ஒன்று இருப்பது, நிர்வாகத்தில் நீதி நிலவுவதற்குத் தேவையான ஒன்றாகும். 'மந்திரிப் பொறுப்பு' என்பது, இதைத்தான் அளிக்காமல் போகிறது. லோக் பாலும், லோக ஆயுக்தர்களும், அதிகாரம் செலுத்துவோருக்குக் கட்டாயம் மடியிலே தேளாய்த்தான் இருப்பார்கள். ஆனால் 'மந்திரிப் பொறுப்பு' என்னும் நெறிக்கு இதனால் தீங்கு நேர்ந்துவிடாது. மாறாக, பதில் சொல்லும் பொறுப்பு மேலும் உறுதி செய்யப்படுவதாகக் கூறலாம்.

மேலும், பார்லிமென்ட் உறுப்பினர்களில் அனைவரும் முறையீடுகளை விசாரிப்பதற்கு முழு ஆற்றல் உள்ளவர்களாயிருக்க மாட்டார்கள் என்றே அனுபவம் காட்டுகிறது. கட்சிக் கட்டுப்பாட்டின் வளர்ச்சியும், அரசின் செயல்களை ஆதரிப்பதில் கட்சி விசுவாசம் மேலோங்கி நிற்பதும், தனிப்பட்ட புகார்களை அமைதியாக விசாரிப்பதற்குக் கேடாக இருப்பவையாகும். மந்திரிகளின் செயல்களை விசாரிப்பதற்கு, விசாரணைக் கமிஷன்கள் சட்டத்தின்படி கமிஷன்கள் நியமிக்கப்படுகின்றன. உதாரணமாக, பஞ்சாபில் கைரோன் மந்திரி சபையின் விவகாரங்களை தாஸ் கமிஷன் விசாரித்தது. இங்கு 'மந்திரிப் பொறுப்பு' மீறப்பட்டு விட்டதாக யாரும் கூறவில்லை.

நீதிமன்றங்களின் நீதிப்பணிகளில் லோக் பால் குறுக்கிடுவது போலாகும் என்ற ஆட்சேபணையும் ஆதாரமற்றதே. லோக் பாலின் முக்கியமான அலுவல்கள் நிர்வாகச் செயல்களைப் புலன் விசாரிப்பதும், குறை கூறுவதும், சில சமயங்களில் பகிரங்கப் படுத்துவதும்தான். அரசுச் செயல்களை மாற்றுவது அல்லவே அல்ல. லோக் பாலின் நோக்கம், நீதித் தீர்ப்பு அளிப்பதல்ல. ஆனால், நிர்வாகத்துக்கெதிரான புகார்களைக் கண்ணியமாகவும், சாதாரண முறையிலும் விசாரிப்பதற்கான நிலையான அமைப்பு ஒன்றை அளிப்பதே நோக்கம்.

## தமிழ்நாட்டில் "கடல் பாசி" வளர்ப்பு !

தமிழ்நாட்டில் மண்டபம் முகாம் அருகே கடல்பாசி வளர்ப்பு, மற்றும் 'அகர்' உற்பத்தி பற்றிய ஒரு மாதிரித் திட்டத்தைச் செயல்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை எர்ணாகுளத்திலுள்ள மத்திய மீன்வள ஆராய்ச்சிக் கழகம் செயல்படுத்தும். இத்திட்டம் ஆண்டுதோறும் 8.6 டன் கடல்பாசியையும், 4.30 டன் 'அகரை'யும் உற்பத்தி செய்வதனை உறுதிப்படுத்தும். பச்சை மற்றும் சிவப்புக் கடல்பாசிகளை ஒரு சில வெளிநாடுகளில் பின்பற்றப்படும் சமையல் முறைகளைப் பின்பற்றிச் சமைப்பதன் மூலம் சிறந்த உணவாகப் பயன்படுத்தலாம். தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் ஏற்கெனவே 'கிரேசிலேரியா இடுலிஸ்' என்றழைக்கப்படும் ஒரு வகை கடல் பாசியைக் கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தி வருகின்றனர். உலரவைக்கப்பட்டு, நுண்துகள்களாக்கப்பட்ட கடல் பாசிகள் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் அன்றாடத் தீவனமாகப் பயன்படுகின்றன. இவை தவிர கடலோரப் பகுதிகளில் கடல் பாசிகள் உரமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. மத்திய மீன்வள ஆராய்ச்சிக் கழகம் வெண்டைக்காய், உருளைக் கிழங்கு, முருங்கைக்காய், எலுமிச்சை, பப்பாளி போன்றவற்றிற்குக் கடல்பாசியை உரமாகப் பயன்படுத்திப் பார்த்ததில் திருப்திகரமான, ஊக்கமளிக்கும் பலன்கள் கிடைத்துள்ளன.

'அகர்', 'அல்ஜின்', 'மன்னிடால்' போன்றவை கடல்பாசியிலிருந்து கிடைக்கப்படும் துணைப்பொருட்களாகும். கடல்பாசிகள் வளர்க்கப்பட்டு அவை 'அகர்-அகர்' தயாரிப்பதற்கெனத் தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கப்படும். ஒரு கிலோ கிராம் 'அகர்—அகர்' தயாரிக்கச் சுமார் 80 ரூபாய் செலவாகும்.



உண்மையில், கண்டிப்பான இயல்பு இல்லாமல் சாதாரணமான முறையில் அணுகுவதுதான் இந்த ஏற்பாட்டிலேயே ஒரு பெரிய அனுகூலம்.

மேலும், பல துறைகளில் நீதி மன்றங்கள் பரிகாரம் அளிக்க முடியாமல் இருப்பதால்தான், 'லோக் பால்' வர வேண்டியிருக்கிறது. நமது அரசியல் சாசனம் உத்தரவாதமளிக்கும் பாரபட்சமற்ற சமத்துவம் என்ற ஆதார உரிமையை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள். நாகரிக



சமுதாயத்துக்கெல்லாம் அஸ்திவாரம் சமத்துவம் என்ற நெறிதான். சாதி, சமயம் ஆகியவை காரணமான விருப்பு வெறுப்புகள் பலமாக இயங்கும். நம்முடைய நாட்டில் பாரபட்சத்தைக் களைந்தெறிவது பரம முக்கியமாகிறது. ஆனால் நீதிமன்றங்களின் அதிகாரங்களோ, பாரபட்சமின்மை பற்றிய உத்தரவாதத்தை அரசமைப்புக்கெதிராக மட்டுமே அமல்படுத்த முடியுமாதலால், வரம்புக்குட்பட்டவையாயுள்ளன. அரசமைப்பு என்றால் மைய அரசு, மாநில அரசுகள், ஊராட்சி அமைப்புகள், ஓரளவில் அரசு அதிகாரங்களைப் பிரயோகிக்கும் நிறுவனங்கள் ஆகியவை என்பது அரசியல் சாசனம் கூறும் இலக்கணம். இதன் விளைவாக, பல்கலைக்கழகங்கள், மருத்துவமனைகள் அரசுடைமையாக்கிய வங்கிகள், சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள பல கார்ப்பரேஷன்கள், பொது அலுவல்களைச் செய்யும் நிறுவனங்கள் போன்ற பொது நிறுவனங்களில் இருக்கக்கூடிய பாரபட்சம் சம்பந்தமாக நீதி மன்றங்கள் ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. இது மாதிரி இடங்களில்தான் லோக் பால் கவனிக்க வேண்டும். வருங்கால சட்டமெதிலும் இது மாதிரி விஷயங்களுக்குப் போதுமான ஏற்பாடு இருக்க வேண்டும். பொது உரிமைகள் ஏட்டுச் சுரைக்காயாக இல்லாமல் வாழும் உண்மைகளாக விளங்குவதற்கு இது அவசியம்.

மேலும், தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லாமல், 'தானே ராஜா, தானே மந்திரி' என்று லோக் பால் இருக்கப் போவதில்லை. தம் வரம்புகளை அவர் மீறினால், உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வை அதிகாரத்துக்குள் அவரைக் கொண்டு வரலாம். இது பற்றி ஏதாவது சந்தேகமிருந்தால், சட்டத்தில் இதைத் தெளிவாகக் கூறி விடலாம்.

லோக் பால் சிகிச்சையளிப்பவர் மட்டுமல்ல, தடுப்பவரும்கூட. அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்கு அவர் பரிகாரம் அளிப்பதுடன், முடிவு செய்வதில் மேலும் ஜாக்கிரதையாயிருக்கும்படி நிர்வாகத்துக்குத் தூண்டுதலும் கிடைக்கிறது. அதிகாரிகள் எப்போதும் துடிப்பாய் இருக்கும்படி அவர் செய்கிறார். அதோடு, பெருந்தொகையான புகார்களைச் சக்கையானவையாக அவர் கண்டறிந்து கூறினால், அந்த அளவுக்கு நிர்வாகத்தின் தோற்றப் பொலிவுறும். மக்களின் நம்பிக்கை ஓங்கும். மக்களுக்கும் மனத்திருப்தி. ஒரு குறிப்பிட்ட விவகாரத்தில் பரிகாரம் அளிக்க முடியவில்லை என்றால் கூட, சுயேச்சையான ஒருவர் விஷயத்தைப் பரிசீலனை செய்தார் என்ற நிகழ்ச்சியே கூட புகார் செய்தவருக்குப் பெரும் திருப்தி அளிக்கும்.

வேறு நாடுகளில் பல சமயங்களில் என்ன நடந்ததென்றால், குறிப்பிட்ட நிர்வாகத் தீர்மானத்துக்கான முகாந்திரங்களை புகார்தாரர்கள் சரிவரப் புரிந்து கொள்ளாமையால்தான் புகார்கள் தோன்றலாயின என்று 'ஆம்பட்ஸ்மென்' விசாரணையின் மூலம் தெரிய வந்தது. முகாந்திரங்களை விளக்கினால் புகார்தாரர்கள் சமாதானம் அடைவதும் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே லோக் பால் அமைப்பினால் பொது மக்களுடன் நல்லுறவுகளைப் பேணும் நற்பலனும் உண்டு. நிர்வாகத்துக்கும் , மக்களுக்குமிடையே நம்பிக்கை இழப்பு நல்லாட்சிக்குக் கேடான ஒன்று. லோக் பால் அதைத் தவிர்ப்பார்.

லோக் பால் ஏற்பாட்டின் வெற்றி, அந்தப் பணியை ஏற்க விருப்போரையே பொறுத்திருக்கும். நம் ஆட்சி முறையில் அந்த அமைப்பு வகிக்கப் போகும் இடத்தை உருவாக்கப் போகிறவர்கள் அவர்கள்தான்; சட்டத்தின் வாசகம் அல்ல. பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர், வலுவான சுயேச்சை மனப்பான்மைக்கும், நியாய மனப்பான்மைக்கும் பெயர் பெற்றவராயிருப்பது மிக அவசியம். எனவே மும்முரமாக அரசியலில் உள்ள எவரும் இப்பதவிக்கு நியமிக்கப்படாமலிருப்பது மிக மிக விரும்பத்தக்கது. ஏனென்றால், புராதனமான பழமொழி சொல்வது போல, நீதி அளிக்கப்படுவது மட்டுமின்றி, அளிக்கப்படுவதாகக் கண்கூடாகத் தெரிவதும் அவசியம்.




பார்லிமெண்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மசோதாக்களிலும் லோக் பாலாக நியமிக்கப்படுவதற்கான தகுதி எதுவும் குறிக்கப்படவில்லை. தாம் செயற்படுகையில் லோக் பால் சட்டம் சம்பந்தமான பல விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கும். அவர் தொழில் நடத்திய ஒரு வழக்குரைஞராக இருந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்றாலும், அவர் கொண்டிருக்கும் சட்டக்கல்வி உள்ளவராயிருப்பது மிக அவசியம். ஸ்காண்டிநேவிய நாடுகளிலும் இத்தேவை உண்டு. குடியரசுத் தலைவரின் கருத்தின்படி அவர் சிறந்த ஒரு நீதி இயல் நிபுணராயிருப்பதும் அவசியம். உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்தின் நீதிபதிக்குத் தேவைப்படும் தகுதி இது.

மில்டனின் அமர கவிதைகளைப் போற்றுகிறோம். ஆனால், ''அரியோபகிடிகா'' என்னும் நூலில், தொலைநோக்குடன் இந்த அழியாச் சொற்களை மொழிந்தவரும் அவரே என்பதை மறக்கிறோம்.

''பொதுச் செல்வச் சமுதாயத்திலே ஒருக்காலும் ஒரு புகாரும் எழுப்பவே கூடாது என்பதல்ல நாம் விரும்பும் சுதந்தரத்தின் பொருள். இவ்வுலகில் அதை ஒருவரும் எதிர்பார்க்க வேண்டாம். ஆனால், புகார்கள் தாராளமாகக் கேட்கப்படும்போது, ஆழ்ந்து பரிசீலனை செய்யப்படும் போது, விரைவாகச் சீர் செய்யப் படும்போது, அப்போதுதான், நல்லறிவுள்ளோர் நாடும் பொது வாழ்வு உரிமையின் அறுதி எல்லை அடையப்படுகிறது.''

[நன்றி: "ஸ்பாட்லைட்" அனைத்து இந்திய வானொலி.]

# மாசேடி®

# உங்கள் நெல் வயலில் உள்ள களைகளை விரை வாகவும், சிக்கன-மாகவும் அழிக்கிறது.

மாசேடி உங்கள் நெல் வயலில் உள்ள களைகளை விரைவாகவும் குறைவான உழைப்புடனும் அழிக்கிறது. களைகள் முளைக்கும் முன்பே அவற்றை அழித்து-விடுகிறது. உங்களுக்கு நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்துகிறது.

மற்றும் மாசேடி உரங்கள், சத்துணவுகள்-இவற்றின் உபயோகிப்புத்தன்மையைப் பெற்று மகசூலை அதிகரிக்கிறது. மாசேடி மிக்க பயனளிக்கக் கூடியது. மற்றும் எளிதில் உபயோகிக்கக் கூடியது. ஒரு முறை உபயோகித்து திருப்தி பெறுவீர்

## ...அவை முளைப்பதற்கும் முன்னால்




களைகளை அழித்திடுங்கள்—அவை வளர்வதற்கு முன்னால்...உபயோகியுங்கள்

**மாசேடி®**

களை நீக்கி தயாரிப்பாளர் **Monsanto** மான்ஸான்டோ

ஈஸி மற்றும் குறுணைகளாகக் கிடைக்கிறது.

**மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரை. லி.,**

தலைமை அலுவலகம் : பேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ராட் ரோடு, பாலர்டு எஸ்டேட், பம்பாய் 400 038.
கிளைகள் : 3/8, அஸஃப் அலி ரோடு, புது டெல்லி 110 001
19, ராஜேந்திரநாத் முகர்ஜீ ரோடு. கல்கத்தா 700 001
310/311, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

**மான்ஸான்டோ—இந்திய விவசாயிக்குச் சேவைபுரிவோர்**

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட்மார்க் அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிமிடெட் உபயோகிப்பது.

Grant.28 TM







# துவரையைக் காப்போம்

நமது நாட்டில் பெருமளவில் துவரை பயிர் செய்யப்படுகிறது. துவரையைத் தாக்கும் பூச்சி வகைகள் பல. இப்பூச்சி வகைகளில் காய்ப்புழுவின் தாக்குதலால் மட்டும் துவரைக்குப் பெரும் சேதமும், நட்டமும் ஏற்படுகிறது. துவரைக் காயை மட்டும் ஐந்து விதமான பூச்சிகள் தாக்குகின்றன.

இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'என்டோசல்பான்' (தயோடான்) 0.07 சதம் (2 மி.லி./லிட்டர்) அல்லது 'மோனோகுரோட்டோபாஸ்' (நுவக்ரான்) 0.04 () மி.லி./லி.) சத மருந்தைத் துவரைக்காய் பிடிக்கும் தருணத்தில் ஒரு முறையும், பின் 15 நாள் கழித்து மறுமுறையும் தெளித்தல் சிறந்த முறையாகும்.

**தகவல் : பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.**

# தோட்டப்பயிர்களுக் கேற்ற களைக்கொல்லி

மதுரை வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த உழவியல் துறையில் தோட்டக்கால் நிலங்களுக்கும், பயிர்களுக்கும் ஏற்ற இரசாயனக் களைக்கொல்லிகளைத் தேர்ந்தெடுக்கும் ஆராய்ச்சி 1972 முதல் 1976 முடிய நடத்தப்பெற்றது. அதன் முடிவுகள் பின்வருமாறு:—

''லாசோ'' களைக் கொல்லியை எக்டேருக்கு 5 லிட்டர் என்ற அளவில் தரிசு நிலத்தில் விதைக்கும் முன்பு தெளித்து ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாறு தெளித்தபோது , களைகளின் விதைகள் முளைப்புத் தன்மை இழந்து காணப்பட்டன. பின்பு முளைத்த ஒரு சில செடிகள் களைக் கொத்தியால் விதைத்த மூன்று வாரங்கழித்து வெட்டி நீக்கப் பட்டன.

பருத்தி விதையை விதைத்த ஆரம்பத்தில் ''லாசோ'' வும், ''டோக்-கி-25'' என்ற களைக் கொல்லியும் ஓரளவு பலனைக் கொடுத்தன. ஆயினும் இந்த வகை களைக் கொல்லிகளின் நச்சுத் தன்மை நிலத்தில் நீடித்து இல்லாமையால், களைகள் பின்பு வளரத் தொடங்கின. எனவே ''டோக்-கி-25'' தெளித்து , பின்பு ஒரு முறை களைக் கொத்தியால் எடுத்து விட்டால் நல்ல முறையில் களைகளைக் கட்டுப் படுத்த முடியும் எனத் தெரிய வந்துள்ளது.

எக்டேருக்கு அதிக அளவு விளைச்சலான 1,356 கிலோ பருத்தி மகசூல், ''கார்மெக்ஸ்'' என்ற களைக்கொல்லி தெளித்த பாத்தியில் கிடைத்துள்ளது. இந்தக் களைக்கொல்லி தெளித்த பின்பும் ஒரு முறை களைக் கொத்தியால் களையெடுத்தல் வேண்டும்.

**தகவல்: திரு எஸ். சுப்ரமணியன்,
எம். எஸ்ஸி., (விவ),
உழவியல் துறை,
வேளாண்மைக் கல்லூரி,
மதுரை.**

**வெளியீடு : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.**



# செம்மறி ஆடுகளைப் பாதிக்கும் ஒட்டுண்ணிகள்

செம்மறி ஆடுகளைப் பாதிக்கும் ஒட்டுண்ணி நோய் பற்றிய ஆய்வுகள், ஊட்டியிலுள்ள அரசினர் ஆட்டுப் பெருக்க ஆராய்ச்சி நிலையத்திலும், கோவைப் பல்கலைக் கழகத்திலும் நடத்தப் பட்டன.

இந்த ஆய்வுக்காக ஊட்டி ஆட்டுப் பண்ணையில் 311 பரிந்த ஆடுகளும், கோவை நகராட்சி ஆட்டுத் தொட்டி மற்றும் சுற்றுப்புற ஆட்டுத் தொட்டிகளிலுமிருந்து தருவிக்கப்பட்ட 20 செம்மறியாடுகளின் வயிறு, குடல் பகுதிகளும் பரிசோதனை செய்யப்பட்டன. அத்துடன் ஊட்டியில் தனியார் ஆட்டுப் பண்ணைகளின் ஆடுகளில் காணப்பட்ட வெளியுறை ஒட்டுண்ணி பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டில் ஆடு வளர்ப்பு மிகுதியாக உள்ள பகுதிகளைத் தட்ப வெப்ப அடிப்படையில் இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவை: குளிர் மிகுந்த மலைப் பகுதி; மற்றொன்று, மிதவெப்ப சமவெளிப் பகுதி. முன் வகைக்கு ஊட்டியும், பின் வகைக்கு கோவைப் புறமும் சான்றாக வைத்து, இவ்விரு தட்பவெப்பப் பகுதிகளில் உள்ள செம்மறி ஆடுகளைப் பாதிக்கும் ஒட்டுண்ணி நோய்கள் பற்றி ஆராயப்பட்டது.

வெவ்வேறு தட்ப வெப்பப்பகுதிகளில் வெவ்வேறு, ஒட்டுண்ணி இனங்கள் கால்நடைகளைப் பாதிக்கின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் வழி வகைகளும், மருத்துவ முறைகளும் மாறுபடுவதால், தமிழ்நாட்டில இவ்விரு தட்ப வெப்பப் பகுதிகளுக்கேற்றவாறு ஆடுகளைப் பாதிக்கும் ஒட்டுண்ணி நோய்த் தடுப்புமுறைகளை வகுக்க இவ்வாய்வு முடிவுகள் மிக உதவியாகுமென்று கருதப்படுகிறது.

இவ்வாய்வின் விளைவாகக் கண்டறியப்பட்ட ஒட்டுண்ணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

நாக்குப்பூச்சி வகைகள்—17.

துளைப் பூச்சி வகைகள்—6

நாடாப் பூச்சி வகைகள் — 7

ஈ உண்ணி வகைகள் (இணைகாலிகள்) — 5

இவற்றில் வயிற்றில் இரத்தம் உறிஞ்சும் 'ஆய்டர்டேஜியா' வகைகள் (இரண்டு வகைகள்) ஊட்டி ஆடுகளில் மாத்திரமே காணப்பட்டன. மொத்தத்தில் 17 வகை ஒட்டுண்ணிகள் தமிழ்நாட்டுச் செம்மறி ஆடுகளைத் தாக்குகின்றன என்று முதன் முறையாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குளிர்ந்த மலைப் பகுதிகளில் பருவ மழைக் காலங்களில் ஆடுகள் ஒட்டுண்ணிகளால் பெரிதும் தாக்கப்படுகின்றன. தென்மேற்குப் பருவ மழைக்கு முன் அதாவது ஏப்ரல், மே மாதங்களில் மாத்திரம் ஆடுகள் பெரும்பாலும் பாதிக்கப்படுவதில்லை. இதற்கு முன் காலமாகிய வறட்சியான பனிக் காலத்தில் (டிசம்பர் — மார்ச் மாதங்களில்) மேய்ச்சல் வெளியில் ஒட்டுண்ணிகளின் இடைப் பருவங்கள் மரித்துப் போவதுதான் இதற்குக் காரணம் என்று அறிய முடிந்தது.

சமவெளிப் பகுதி ஆடுகளில் 25 விழுக்காடு ஆடுகள் ஒட்டுண்ணிகளால் வெகுவாய்ப் பாதிக்கப் படுகின்றன என்று அறியப்பட்டது. ஆனால், பண்ணை ஆடுகளில் ஒட்டுண்ணிகளால் வெகுவாய்ப் பாதிக்கப்பட்ட ஆடுகள் 3 விழுக்காட்டிற்கு மேல் இல்லை. இதன் காரணம் பண்ணையில் முறையான ஒட்டுண்ணி மருந்து கொடுப்பதும் அவ்விதமான மருத்துவம் ஏதும் தனியார் ஆடுகளில் (சமவெளிப் பகுதியில்) கொடுக்கப்படாததுமே என்பது புலனாகிறது.

மேலும், காதுகளில் ஒட்டி வாழும் காதுறை உண்ணி, ஊட்டியில் செம்மறி ஆடுகள், மாடுகள், நாய் மற்றும் ஆடு பராமரிக்கும் மனிதர் காதுகளில் இருந்து (இந்தியாவில்) முதன் முறையாக எடுக்கப்பட்டது. இந்த உண்ணிகளின் பெருக்கத்தை சுமித்தியான் 0.5 சதம் கரைசலைக் கொண்டு காதுகளில் செலுத்தியும், ஆடு வாழ் கட்டடங்களில் விசைத் தழல் கருவியால் சுத்தம் செய்தும் பெரிதும் கட்டுப்படுத்த முடிந்தது.

சமவெளி ஆடுகளில் காணப்பட்ட உண்ணி வகைகளில் பெரும்பாலானவை மிகக் கேடு விளைவிக்கும் பூச்சிகளாகும். அவற்றால் ஆடுகள் உடனே இறந்துபடாவிட்டாலும், உடல் நலிந்து எடைக் குறைவு ஏற்படுவதால் பெரும் பொருளாதார நட்டம் உண்டாக்கக் காரணமாகிறது.





ஆகவே, குளிர் மிகுந்த மலைப் பகுதிகளில் நுரையீரல் புழு மற்றும் வயிறு குடற்புழுக்களை அகற்றும் 'நில்வர்ம்' போன்ற மருந்துகளை முறையாகப் பயன்படுத்துவதால் உள்ளுறை ஒட்டுண்ணித் தொல்லையைத் தவிர்க்கலாம். மித வெப்பச் சமவெளிப் பகுதி ஆடுகளுக்குப் 'பிரேவிஸ்,' மயில்துத்தக் கரைசல் போன்ற மலிவான மருந்துகளை முறையே (கால்நடை மருத்துவரின் மேற்பார்வையில்) கொடுப்பதால், குறைவான செலவில் ஆடுகளை ஒட்டுண்ணிகளால் (குறிப்பாக இரத்தம் உறிஞ்சும்) உண்டாகும் நலிவிலிருந்து காப்பாற்றலாம்.

தகவல் : கால்நடைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.



'ரோம்னி மார்ஸ்'
(ரஷிய இனம்)

# தமிழகச் சிற்பக் கலை




கபாலீச்வரர் கோவில், சென்னை.

தமிழகக் கோயில்கள் தோன்றுதொட்டே மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலை ஆகியவற்றைப் பேணிக்காத்து வளர்க்கும் உறைவிடங்களாக இருந்து வந்திருக்கின்றன. இந்தியக் கட்டடக் கலை, பொறியியல், சிற்பக் கலை ஆகியவற்றின் சிறப்புக்களை எடுத்துக்காட்டும் இறவா வரம் பெற்ற இலக்கியங்களாக இக் கோயில்கள் விளங்குகின்றன. கோயில் கட்டடக்கலை, முறையே பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், விசயநகர மன்னர்கள், நாயக்கர்கள் காலங்களில் தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் சிற்பக்கலை இருந்து வந்திருக்கிறது என்றாலும் பல்லவர்கள் காலத்திலிருந்துதான் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை) சிற்பக் கலையின் வளர்ச்சி ஆதார பூர்வமான சான்றுகளுடன் ஆரம்பமாகிறது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் சிற்பக்கலை ஒப்புயர்வற்ற நிலையை அடைந்தது.

பல்லவர் காலச் சிற்பங்கள், பெரும்பாலும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியைச் சித்திரிப்பனவாகவே அமைந்துள்ளன. பல்லவர்கள் சிற்பக்கலையில் கைதேர்ந்தவர்கள். கட்டடக் கலையின் ஓர் அங்கமாக சிற்பக்கலை இருந்தாலும் இவர்களது கைத்திறனால் அவை தனித் தன்மையோடு விளங்குகின்றன. பார்ப்போரின் கவனத்தைத் தம் வசம் ஈர்த்துக்கொண்டு அவைகளுக்கு ஆதாரமாக நிற்கும் கட்டடக்கலையின் தன்மையை மறக்கச் செய்து விடுகின்றன. மாமல்லபுரம், பல்லவர்களின் சிற்பத் திறனுக்கு எடுத்துக் காட்டாகும்.

பல்லவர்கள் காலத்துச் சிற்பங்களில் காணப்படும் ஒசிந்த தோற்றம், சோழர்கள் காலத்தில் ஒருவித நளினத்தைப் பெற்றது. மெல்லிய வடிவமைப்பு துல்லியமான உருவம் பெற்றது. இக்காலச் சிற்பங்கள் அழகானவை, நேர்த்தியானவை. பார்ப்போர் உள்ளத்தில் கவிதை உணர்ச்சியைத் தூண்டவல்ல தன்மை வாய்ந்தவைகளாக இருந்த பல்லவர்கள் காலச் சிற்பங்கள், படிப்படியாக, கல்லில் கவிபாடி நிற்கும் கலைக் களஞ்சியங்களாக சோழர்கள் காலத்தில் மாற்றம் அடைந்தன. சோழர்கள் கட்டடக்கலையில் வல்லவர்கள். அவர்களது நெடிதுயர்ந்த கோயில்களின் கம்பீரமான தோற்றத்தில் சிற்பக்கலை ஐக்கியமாகிவிடுகிறது. சீனிவாசநல்லூர், கும்பகோணம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் போன்ற இடங்களில் உள்ள கோயில்கள் சோழர் காலச் சிற்பங்களின் சிறப்பை விளக்கும் கலைக்களஞ்சியங்களாகும்.

சோழர்கள் காலப் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட ஆடை அணிகலன் முதலிய அழகிய நுட்ப வேலைப்பாடுகள் பிற்காலச் சிற்பங்களில் முக்கியத்துவம் பெற்றன. இக்காலத்தில் எவரும் வியப்புறும் அளவிற்கு ஏராளமான சிற்பங்கள் உருவாக்கப்பட்டன. அவை அளவில் பெரியவை, நுட்ப வேலைப்பாடுகள் அமைந்தவை. மதுரை, நெல்லை, தென்காசி, பேரூர், சுசீந்திரம் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள் இத்தன்மை வாய்ந்தவை.

தமிழகத்தில் உள்ள எல்லாக் கோயில்களுமே தனித்தன்மை வாய்ந்தவை; இத்தகைய சிறப்பு மிகு சிற்பங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டவை. அவற்றில் தேர்ந்து எடுக்கப்பட்ட சிலவற்றை மட்டும் சில்பியின் கை வண்ணத்தில் யாவரும் பார்த்து மகிழும் வண்ணம், தமிழ்நாடு அரசின் சுற்றுலாத்துறை ஒரு மடிப்பு வெளியீட்டினை (Folder) அச்சிட்டு விற்பனை செய்து வருகிறது. அதிலிருந்து சில ஓவியங்களை எடுத்து 'தமிழரசு' வாசகர்களின் பயன் கருதி ஈண்டு வெளியிட்டுள்ளோம்.

## 1. கபாலீச்வரர் கோவில், சென்னை.

சென்னை மாநகரின் கண்ணமைந்த புகழ்மிகு கோயில்கள் பலவற்றில் முக்கியமானது அழகு மிகு கபாலீச்வரர் கோயில். உமா பிராட்டியார் சிவபெருமானை இவண் மயிலுருவில் வழிபட்டதாக வரலாறு. இத்தலத்திலே இறந்த பெண்ணொருத்தியைத் திருஞானசம்பந்தர் உயிர்ப்பித்த அதிசயமும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. திராவிடக் கோயில் கட்டடக் கலைக்கு இக்கோயிலின் நுழைவாயில் கோபுரம் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும். சுமார் 300 ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட இக்கோயில் நுழைவாயில் கோபுரத்தின் ஒரு தோற்றம் இது.

## 2. நடராஜர் கங்கைகொண்ட சோழபுரம்

தஞ்சைப் பெருவுடையார் கோயில் பாணியில் இராசேந்திர சோழனால் பதினோராம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிவன் கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் வெளிப்புறத்தில் நேர்த்தி மிகு சிலைகள் பல பெருமாடங்களில் வைத்திருப்பதைக் காணலாம். இவற்றில் ஒன்று, தெற்குப் பக்கத்தில் காணப்படும் நடராசர் சிலையாகும். எருதின்மேல் கை ஊன்றிய வண்ணம் இச்சிற்பத்தின் வலது பக்கத்தில் பார்வதி காட்சி தருகிறார். இடது பக்கத்தில் விநாயகர், சுப்பிரமணியர் தத்தம் ஊர்திகளில் காட்சி தருகின்றனர். வலது கை ஒன்றில் உடுக்கையுடனும், மற்றொரு கை வரமளிக்கும் (அபயகஸ்தம்) நிலையிலும், இடது கை ஒன்றில் தீயுடனும், மற்றொரு கை உடலின் குறுக்கேயும், சடாமுடி நடனத்திற்கேற்ப விரிந்தாடும் நிலையிலும் சித்திரிக்கப்பட்டுள்ள இச்சிற்பம் ஓர் அற்புதப் படைப்பாகும்.

நடராஜர், கங்கைகொண்ட சோழபுரம் →






பிச்சாடனர், சிதம்பரம்

### 3. பிச்சாடனர், சிதம்பரம்

சிவபெருமானின் பிச்சாடனர் தோற்றம் தில்லை நடராசர் கோயில் கோபுரங்களில் காணப்படுகின்றது. இங்குச் சித்திரிக்கப்பட்டிருக்கும் பிச்சாடனர், சுப்பிரமணியர் ஆலயத்தின் பின்புறம் கிழக்கு வாயில் கோபுரத்தில் காணப்படுகிறார். இடது முன் கையில் பிரம்ம கபாலம், பின் கையில் திரிசூலம், வலது பின் கையில் உடுக்கை, பாதக் குறடுகள் ஆகியவற்றோடு, பிச்சாடனர் இங்கு மிகவும் தத்ரூபமாகக் காட்சியளிக்கிறார். இக்கோபுரம் 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

### 4. அறங்காக்கும் அன்னை, திருபுவனம்

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர் செல்லும் வழியில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருபுவனத்தில் அமைந்துள்ள கம்பகரேச்வரர் கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழனால் 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. கோயிலில் முதலில் வழிபாட்டில் இருந்த அறங்காக்கும் அன்னையின் (தர்மசம்வர்த்தினி) சிலை மிகச் சிறப்பு வாய்ந்தது. வரமளிக்கும் (அபயகஸ்த) நிலையில் இருந்த வலதுகையும் தாமரை மலர் தாங்கிய (பத்மம்) நிலையில் இருந்த இடது கையும் பழுதடைந்த காரணத்தால் 6 அடி உயரம் உள்ள இந்த அற்புதச் சிலை தற்போது வெளிப் பிரகாரத்தில் வைக்கப்பட்டுள்ளது.

### 5. பிரம்மா, திருக்கண்டியூர்

இவ்வூர் தஞ்சையில் இருந்து திருவையாறு செல்லும் வழியில் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பிரம்மாவிற்கும் சிவனைப் போலவே ஐந்து தலைகள் இருந்ததாகவும், அவற்றில் ஒன்றைச் சிவன் இவ்வூரிலே துண்டித்து விட்டதாகவும் ஒரு புராண வரலாறு கூறுகிறது. நான்கு முகங்கள் உடைய பிரம்மாவின் தோற்றமே இங்கு இரு தோற்றங்களில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இக்கோயில் 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறப்படுகிறது.

### 6. மீனாட்சி கல்யாணம், மதுரை

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள சுந்தரேச்வரர் ஆலயத்தில் கம்பத்தடி மண்டபத்தில் காணப்படும் மீனாட்சி கல்யாண சிற்பம் அபூர்வ அழகு வாய்ந்தது. மீனாட்சி அம்மனை சுந்தரேச்வரருக்குத் திருமால் தாரை வார்த்துக் கல்யாணம் செய்து கொடுக்கும் காட்சி கவினுறச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பிரம்மா திருமணச் சடங்குகளைச் செய்கிறார். இச்சிற்பத்தில் ஆடைகளும், மணி மாலைகளும், முத்தாரங்களும், அதி நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. பனிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றாலும் இக்கோயிலின் பல பாகங்கள் பின்னர் சேர்க்கப்பட்டவை.

### 7. அக்கினி வீரபத்திரர், தென் காசி

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசியில் இருக்கும் காசி விசுவநாதர் ஆலய மண்டபத்தில் பிரம்மாண்டமான அளவில் சிற்பங்கள் அமைந்துள்ளன. அவற்றில் ஒன்று மிகவும் வேலைப்பாடமைந்த அக்கினி வீரபத்திரர் சிலையாகும். எட்டுக் கைகள், ஒவ்வொரு கையிலும் பாம்பு ஆபரணங்கள், கத்தி, கேடயம், உடுக்கை, திரி சூலம், கபாலம் ஆகியவற்றுடன் இச்சிலை நேர்த்தியான தோற்றத்துடன் விளங்கும் காட்சி வியப்பூட்டுவதாகும். சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்டது இம்மண்டபம்.

### 8. குறத்தி மகளிர் ஸ்ரீவைகுண்டம்

இரு குறத்திப் பெண்டிர் நாட்டியம் ஆடுவதுபோலச் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிற்பம் 1.75 அடி உயரத்தில் ஒரே கல்லில் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீவைகுண்டம் கள்ளர் பிரான் கோயிலில் திருவேங்கடமுடையான் மண்டபத்தில் இவ்வற்புதச் சிற்பத்தைக் காணலாம். குறமகளிர் இருவரும் கூடை ஒன்றை இடுப்பின் மேல் கையால் இடுக்கிக் கொண்டு அதே கையில் உணவு வைத்துக் கொண்டு தோளில் அமர்ந்திருக்கும் குழந்தை உண்ண உதவுவதைக் காணலாம். கீழேயும் இரு சிறுவர்கள் உணவு உண்கின்றனர். உற்றுக் கவனித்தால் குறமகளிர் மார்பின் கீழே கைக்




மீனாட்சி கல்யாணம், மதுரை



நூற்றுக்கால் மண்டபம், காஞ்சிபுரம்

குழந்தையைக் கட்டிக் கொண்டிருப்பதும் தெரியும். பச்சை மணி, பவள மணி, பாசி மணி முதலிய மணிகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர். இக்கோயில் 900 ஆண்டுகட்கு முற்பட்டது. நெல்லையில் இருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

### 9. கருடாழ்வார்
### சுசீந்திரம்

குமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் தாணுமாலையன் ஆலயத்தில் உள்ள கருட மண்டபம் திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. நுட்ப வேலைப்பாடுகள் அமைந்த பெரிய கருடாழ்வார் சிலை இம்மண்டபத்தில் இருக்கிறது. அதன் அருகில் திருமலை நாயக்கர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. திருமலை நாயக்கர் சிலையின் வலது மூக்கில் ஒரு குச்சியை விட்டால் அது இடது காதின் வழியே வெளி வரும். இடது மூக்கில் ஒரு குச்சியை விட்டால், அது வலது காதின் வழியே வெளிவரும். இந்தச் சிற்பங்கள் யாவும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டவை. சுசீந்திரம் கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் போகும் வழியில் 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

### 10. இரதி—மன்மதன்
### சுசீந்திரம்

சுசீந்திரம் கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் இரதி, மன்மதன், சிலைகள் உள்ளன. வலது கையில் பூ அம்பும், இடது கையில் கரும்பு வில்லும் ஏந்தி அம்பு எய்யத் தயாராக நிற்கிறான் மன்மதன். அருகில் இரதி தேவி அன்னத்தின் மேல் ஏறிக்கொண்டு இடது கையில் அன்னத்தின் லகானைப் பிடித்துக் கொண்டு வலது கையில் இருக்கும் பூச் செண்டினால் ஒட்டிய வண்ணம் காணப்படுகிறாள். பூ அம்பு, கரும்பு வில், பூச் செண்டு ஆகியவற்றில் கிளி கொத்திக் கொண்டிருப்பதைக் காணலாம்.

### 11. நூற்றுக்கால் மண்டபம்
### காஞ்சிபுரம்

காஞ்சி வரதராசர் கோயிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் விசயநகர மன்னர்கள் காலத்திய சிற்பக்கலைக்கு ஒப்பற்ற எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இம்மண்டபத்தின் முகப்புத் தோற்றமே இதற்குச் சான்றாகும். முதல் இரு தூண்களில் இரதியும் மன்மதனும் முறையே கிளி, அன்னம் வாகனங்களில் அமர்ந்திருப்பது அற்புதமாக அமைந்துள்ளது. மூன்றாவது தூணில் வீரன் குதிரை சவாரி செய்வது சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இத்தூணில் ஒரே கல்லில் மூன்று குதிரைகள் செதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலே மண்டபத்தின் மூலையில் இருந்து ஒரே கல்லில் செதுக்கப்பட்ட சங்கிலித்தொடர் தொங்குவதையும் காணலாம். இம்மண்டபம் சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்டது.

### 12. மாதவி
### பூம்புகார்

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் பிறப்பிடம் சோழர்களின் துறைமுகப் பட்டினமான காவேரிப்பூம் பட்டினமாகும். இவ்வூருக்கு, பூம்புகார் எனவும் பெயருண்டு. இங்கு கடற்கரையோரத்தில் சிலப்பதிகாரக் காட்சிகளைச் சித்திரிக்கும் கலைக்கூடம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது. இக்கலைக்கூடத்தில் உள்ள சிற்பங்கள் யாவும் மாமல்லபுரம் சிற்பிகளால் உருவாக்கப்பட்டவை. அச்சிற்பங்களில் ஒன்றான மாதவியின் சிலையை ஓவியர் கைவண்ணத்தில் இங்கே காண்கிறோம். பூம்புகார் தில்லையிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

### முகப்புப் படம்

கோவை மாவட்டத்தில் உள்ள பேரூர் பட்டீச்வரர் கோயிலில் இருக்கும் கனகசபையின் முகப்புத் தோற்றமே இவ்வெளியீட்டின் அட்டையை அலங்கரிக்கிறது. இம்மண்டபத்தில் உள்ள சிலைகள் சிகப்புக் கல்லில் செதுக்கப்பட்டிருப்பதால் அவை உயிருள்ள உருவங்கள்போலத் தத்ரூபமாகக் காட்சி அளிக்கின்றன. இம்மண்டபம் 17-ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. பேரூர் கோவையிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

### ஓவியர் 'சில்பி'

சில்பி என்ற பெயர் தமிழ் வாசகர்கள் நன்கறிந்த ஒன்றாகும். இப்புனைப்பெயரில் கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக கோயில் சிற்பங்களின் ஓவியங்களை வரைந்து வரும் ஓவியர் திரு பி. ம. ஸ்ரீனிவாசன் 1919-ஆம் ஆண்டில் சேலத்தில் பிறந்தவர்.




தமிழகமெங்கும் ஆயிரக்கணக்கில் உள்ள கோயில்களில் காணும் கவின்மிகு சிற்பங்களின் ஓவியங்களை வரைவதையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர். புகழ்மிக்க பெரிய கோயில்கள் மட்டுமின்றி தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள எல்லாக் கோயில்களுக்கும் நேரில் சென்று அவற்றின் சிற்பங்களை ஓவியமாக்கியுள்ளார்.

சிறு வயது முதலே ஓவியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் சென்னை ஓவியக் கல்லூரியில் ஓவியக் கலையில் பயிற்சி பெற்றார். கோயில் ஓவியங்கள் வரைவதில் இவரை ஈடுபடுத்தியவர் புகழ்பெற்ற நகைச்சுவைச் சித்திரம் வரையும் திரு மாலி என்பவராவார். சில்பி ஆனந்த விகடனில் வெளியான தென்னிந்தியக் கோயில்களைப் பற்றிய தொடர் கட்டுரைக்கு ஓவிய விளக்கப்படம் வரைந்துள்ளார். வேறு பல பத்திரிகைகளுக்கும் இவர் ஓவியங்கள் வரைந்துள்ளார். சென்னையைத் தமது இருப்பிடமாக்கிக்கொண்ட சில்பி மதக் கோட்பாடுகளில் சிறிதும் பிறழாமல் எளிமையான வாழ்க்கை நடத்தி வருகிறார். குறிப்பாக, கோயில் சிற்பங்களை வரையும்போது ஒரு முனிவரைப் போலவே வாழ்ந்து வருகிறார்.


நன்றி: பொது (சுற்றுலா) துறை, சென்னை-9.

# தொலை-தகவல் தொடர்பு வளர்ச்சி

டி. வி. ஸ்ரீரங்கன்,
கம்பியில்லாத் தந்தித்துறை ஆலோசகர்,
இந்திய அரசாங்கம்.

இறைவன் மனிதகுலத்துக்கு வழங்கியிருக்கும் செல்வங்களுள் தலை சிறந்தது-ஒப்பற்றது-அரியது மூளையும், தன் கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் ஆற்றலும்தான் எனலாம். எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவருடைய முகத்தைப் பார்த்து, நேருக்கு நேர் அவருடன் பேச இயலுகின்ற அளவுக்கு மனித நாகரிகம் வளர்ச்சியடைந்திருக்கிறது. தப்பட்டையும், கொம்பும் முழங்கிய கிராம வாழ்க்கை வாழ்ந்த மனிதன் இப்போது விண்வெளிக் கோள்களின் மூலம் எந்தச் செய்தியையும், எவ்வளவு நுட்பமான கருத்தையும் நொடிப் பொழுதில் உலகெங்கும் பரப்பிவிடக்கூடிய சக்தியைப் பெற்றுவிட்டான்.

வளர்ச்சி பெற்றுவிட்ட நாடுகள் தொலைதூரத் தகவல் தொடர்புத் துறையின் அவசியத்தையும் பயனையும் நன்ருக உணர்ந்திருக்கின்றன. ஆனல் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிற நாடுகளில், ''இது நமக்கு இன்றியமையாததா? இதற்கு இவ்வளவு பணம் செலவு செய்ய வேண்டுமா? முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் பெற்றதா?'' என்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. தொலைபேசிக் கருவி கூட, ஏதோ பணக்காரர்கள் வைத்துக் கொள்ள வேண்டிய வசதி என்றும், உல்லாசப் பொருள் என்றும் கருதுபவர்கள் உள்ளனர். மோட்டார் கார், மின்சாரம் ஆகியவைபோலத் தேசத்தின் முன்னேற்றத்துக்குத் தொலைபேசியும் அடிப்படையான தேவை என்பது இன்னும் உணரப்படவில்லை.

தொலைதூரத் தகவல் தொடர்புக்கு ஏராளமான மூலதனம் தேவைப்படுகிறது என்பது உண்மைதான். இது வியாபார ரீதியானது என்று கருதப்படுவதால், போடுகிற பணத்துக்குத் தகுந்தபடி இலாபம் கிடைக்குமா என்று கணக்குப் பார்க்கிருர்கள். சமுதாயப் பொருளாதார வளர்ச்சிகளில் ஏற்படுகிற முன்னேற்றமும் இலாபம்தான் என்பதை அறிஞர்கள்கூட மறந்து விடுகிருர்கள்.

வரவு செலவைச் சற்று நேரத்திற்கு மறந்து விடுவோம். ஒரு திட்டத்தை நிறைவேற்றவோ, ஒரு தொழிற்சாலை அமைக்கவோ அல்லது அமைத்த பிறகு அதை நடத்தவோ, விவசாயப் பண்ணைகளைச் சீராக இயக்கவோ, தொலைதூரத் தகவல் தொடர்புகள் பெரிதும் பயன்படுகின்றன. இந்த வசதிகள் தேவையான அளவில் இல்லை என்று வைத்துக் கொள்வோம். அதன் காரணமாக ஒரு தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப் பொருட்களோ, தேவையான இயந்திர உபகரணங்களோ, விவசாயத்துக்குத் தேவையான விதைகளோ, பூச்சி மருந்துகளோ, உரங்களோ, நிபுணர்களோ உரிய காலத்தில் வந்து சேராமல் போகலாம். இதனுல், பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படும் அல்லவா?

தொலைதூரத் தகவல்தொடர்பு இல்லாத காரணத்தால் கிராமப் புறங்களும், மூலை முடுக்குகளில் உள்ள பகுதிகளும், தீவுகளும், நாட்டின் பொது வளர்ச்சியில் பங்கு பெற முடியாமல் தவிக்கின்றன. கலை, நாகரிகம் ஆகிய துறைகளில் முன்னேற்றமின்றி, தனித் தனித் தீவுக் கூட்டங்களாய் அங்குள்ள மக்கள் வாழ்ந்து, பின் தங்கி விடுகின்றனர். நாட்டுப் பாதுகாப்புக்கும், ஐக்கியத்துக்கும் தொலைதூரத் தகவல் தொடர்பு வளர்ச்சி இன்றியமையாததாகும்.

சில இடங்களில் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் இருந்தும், அந்தப் பகுதியில் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாவிட்டால், தொழிற்சாலை ஏற்படாமல் போய்விடக்கூடும். நகர்ப்புறங்களில் மக்கள் நெருக்கம் மிகுதியாக ஏற்படுவதை நிறுத்தவும், கிராமப்புறங்களில் தொழில்கள் உண்டாவதை ஊக்குவிக்கவும் தகவல் தொடர்பு வசதி உதவும்.

## கம்ப்யூட்டர் தரும் படிப்பினை

எல்லா வகையான பணிகளிலும் தொலைதூரத் தகவல் தொடர்பினுல்தான், ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவு ஒவ்வொரு ஆண்டிலும் குறையும் என்பதை முன்னேற்றமான நாடுகளில் தெரிவித்திருக்கிருர்கள்.

சர்வதேச மட்டத்தில் பார்த்தால் பலநாடுகள் தொலைதூரத் தகவல் தொடர்பு மூலம் அறியாமையைப் போக்கி, உலக நாடுகளிடையே பரஸ்பர நல்லுறவை வளர்த்திருக்கின்றன. இதன் விளைவாகப் பேச்சுச் சுதந்தரமும், எழுத்துச் சுதந்தரமும் நிலைநாட்டப்பட்டு மக்களாட்சிக் கொள்கைகள் மலர்ந்திருக்கின்றன!

ஒரு நூற்றுண்டுக்கும் மேலாகவே தகவல் தொடர்புத் துறை சர்வதேச முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அரசாங்கங்களுக்கிடையே தொடர்பு ஏற்படுத்த சர்வதேசத் தொலைதூரத் தகவல் தொடர்புச் சங்கம் 1865-ல், முதலாவது சர்வதேசத் தந்திப் போக்குவரத்து உடன்பாட்டை எல்லா நாடுகளும் கையெழுத்துப் போட்டு ஏற்றுக் கொள்ளச் செய்தது. ஐக்கிய நாடுகள் சபை ஏற்பட்ட பிறகு, அதன் உறுப்பாக சர்வதேசத் தகவல் தொடர்பு நிலையம் இயங்கி வருகிறது. இந்தச் சங்கத்தில் 153 நாடுகள் சேர்ந்திருக்கின்றன.

உலகத் தொலைதூரத் தகவல் தொடர்பு நாள், 112 ஆண்டுகளுக்கு முன் சர்வதேச உடன்பாடு கையெழுத்து ஆனதைக் கொண்டாடும் நாளாகும். இந்த 1977-ஆம் ஆண்டில் தொலைதூரத் தகவல் தொடர்பு வளர்ச்சியில் எல்லா நாடுகளும் அக்கறை காட்டுவதற்காக இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

தொலைதூரத் தகவல் தொடர்பு எவ்வளவோ வேகமாக முன்னேறிக் கொண்டு போகிறது. அதன் பணிகளும் பலவகைப்பட்டன. புதிதாக வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில், திறமையான தந்தி வசதிகள், தொலைபேசி வசதிகள், கம்பியில்லாத் தந்தி வசதிகள், விண்வெளிச் சாதன வசதிகள் ஆகியவற்றை அதிகப்படுத்தவும், திறமையாக நடத்தவும் சர்வதேசத் தொலைதூரத் தகவல் தொடர்புச் சங்கம் மிகவும் பயனுள்ள முறையில் பணி புரிகிறது.

## சங்கத்தின் உதவி

சமீப ஆண்டுகளில் இச்சங்கம் பல நாடுகளின் தொலைதூரத் தகவல் தொடர்புப் பணிகளைத் திட்டமிட உதவி வருகிறது. தேவையான கருவிகளைக் கொடுக்கிறது. அவற்றை இயக்கக் கூடிய நிபுணர்களையும் வழங்குகிறது. இப்போது பல நாடுகளில் 750 வளர்ச்சித் திட்டங்கள் இச்சங்கத்தின் உதவியுடன் செயல்படுகின்றன.

இந்தியாவில் பொதுமக்களுக்கான தொலை தூரத் தகவல் தொடர்பு முறையில் 1,500 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. உரிய கருவிகள் யாவும் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகின்றன. இத்துறையில் இந்தியா தன்னிறைவு பெற்றிருக்கிறது. இந்தியாவுக்குள்ளும், வெளிநாடுகளுக்கும் தொலைபேசி சந்தாதாரர் நேரடியாக எண்களைச் சுற்றிப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. விண்வெளிச் சாதனங்கள் மூலம் அலைகடலுக்கு அப்பாலும் தொடர்பு ஏற்படுத்தப் பெற்றிருக்கிறது. இதன் மூலம் நீண்ட தொலைவிலுள்ள பகுதிகளையும், தீவுப்பகுதிகளையும் இணைக்க இயலும்.

## முன்னுரிமை

வளர்ச்சித் திட்டங்களுக்கு, தகவல் தொடர்புத் துறையின் வருவாயைக் கொண்டே மூலதனம் போட இயலுகிறது. கிராமப்புறங்களுக்கும், உள்நாட்டிலுள்ள பகுதிகளுக்கும் ஏற்படுத்தப்படும் தொடர்புகளில் போதிய வருமானம் கிடைக்காவிட்டாலும், சமூகப் பொருளாதார முன்னேற்றத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதிகளுக்கும் இந்த வசதிகள் விரிவாக்கப் பட்டிருக்கின்றன. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய நகர்ப்புறப்பகுதிகளிலும், பெருநகர்ப் பகுதிகளுக்கு இடையேயும் தொலைதூரத் தொடர்பு வசதிகள் பல மடங்காக்கப் பெற்றிருக்கின்றன.

சர்வதேசத் தகவல் தொடர்பு சங்கம், ''இண்டல் சாட்'' என்ற சர்வதேச விண்வெளி அமைப்பு, ஆசிய நாடுகளின் தொலைத் தகவல் தொடர்பு நிறுவனம் ஆகிய அமைப்புகளிலும் இந்தியா பெரும் பங்கு கொண்டிருக்கிறது. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தின் அமெரிக்கா ஆகிய நிலப்பரப்புக்களில் பல நாடுகளில் தொலைத் தகவல் தொடர்புகள் சீராக இயங்க இந்திய நிபுணர்கள் அங்கு சென்று பணியாற்றி வருகிருர்கள். இந்தத் துறையில் இந்தியா பெற்றிருக்கும் அனுபவத்தை, அது வளர்ச்சி பெற்று வரும் நாடுகளுடன் பகிர்ந்து கொண்டு வருகிறது.

தேசிய வளர்ச்சிக்குத் தொலைத் தகவல் தொடர்பு உதவுவதை இந்தியா உணர்ந்திருக்கிறது. இந்தத் துறை இந்தியாவில் வேரூன்றி விட்டது. அடுத்த சில ஆண்டுகளில் இந்தத் துறை மேன்மேலும் வளரும் என்பதும், இதனுடைய பயன் தெள்ளத் தெளிவாக உணரப்படும் என்பதும் உறுதி.



## எண்ணெய் கண்டுபிடிப்புக்கான ஆராய்ச்சிப் பணி.....

மண்டபத்துக்குத் தெற்கே பதினைந்து மைல் தொலைவில் உள்ள கடற்பகுதியில் எண்ணெய்க் கண்டுபிடிப்புக்கான ஆராய்ச்சிப் பணிகளை 'அஸ்மரா' என்னும் நிறுவனத்தினர், இந்திய எண்ணெய் மற்றும் நிலவாயுக் கமிஷனின் உதவியுடன் செய்து வருகின்றனர். இப்பூர்வாங்க ஆராய்ச்சியின் முடிவு 60 நாட்களில் தெரிய வரும். 70 அடி ஆழமுள்ள இக்கடல் பகுதியின் அடிமட்டத்திலிருந்து இவ்வாராய்ச்சிப் பணிக்காக 14 ஆயிரம் அடிவரை துளையிடப்படும். இந்த ஆராய்ச்சிப் பணி திருப்திகரமான முடிவைத் தருமாயின், நாள்தோறும் 50 ஆயிரம் பீப்பாய்கள் (பேரல்ஸ்) எண்ணெய் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டின் தேவையில் 15 சதவிகிதமாகும். இந்த ஆராய்ச்சிப் பணியில் 30 இந்தியர்களும், 40 வெளிநாட்டினரும் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக அரசு சமீபத்தில் இம்மாவட்டத்தின் வறட்சிப்பகுதிகளில் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க ஐந்து இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. சென்ற நிதியாண்டில் பதின்மூன்று கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க அனுமதிக்கப்பட்ட தொகை ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ரூபாயாகும்.








# வாழ்க்கைக் குறிப்புகள்

**தி**ரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் 1929-ஆம் ஆண்டு நாகர்கோவிலில் பிறந்தார்.

பட்டப் படிப்பை நாகர்கோவில் 'ஸ்காட்' கிறித்தவக் கல்லூரியில் முடித்து விட்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ''எம்.ஏ'' படித்தார். திராவிட இயக்கத்தில் தொடக்க காலத்திலிருந்தே மிகுந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்து, பல போராட்டங்களில் கலந்து கொண்டார்.

திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தி.மு.க.வில் இருந்து விலகியபோது அவருடன் மனோகரனும் விலகினார். அ.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராகப் பொறுப்பு ஏற்றார். 1962, 1967, 1971 தேர்தல்களில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப் பட்டார். பேச்சாற்றல் மிக்க திரு கி. மனோகரன் பல புத்தகங்களை எழுதியுள்ளார். பல வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்துள்ளார். நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில், பாளையங்கோட்டைத் தொகுதியில் இருந்து வெற்றி பெற்றார்.

தமிழக சட்டமன்றத்தில் இவர் ''அவை முன்னவர்'' ஆகவும் உள்ளார்.

நிதியமைச்சர் திருமணமானவர். அவருக்கு இரண்டு பெண் குழந்தைகளும், இரண்டு ஆண் குழந்தைகளும் இருக்கிறார்கள்.

நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத்தீர்வை, வருவாய், சட்டமன்றம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**தி**ரு ச. இராமச்சந்திரன் அவர்கள் 1937-ஆம் ஆண்டு தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள புலியூரில் பிறந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் படித்து பி.ஈ. (ஆனர்ஸ்) பட்டம் பெற்றவர்.

படிக்கும் போதே திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளராகப்பணியாற்றியிருக்கிறார். பல்வேறு தொழிற் சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பொறியாளராக 1959-ஆம் ஆண்டில் சேர்ந்தார். 1966-ஆம் ஆண்டில் பதவியை விட்டு விலகி அரசியலில் தீவிரமாகஇறங்கினார்.

1967ஆம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு எம்.எல்.ஏ. ஆனார். 1971ஆம் ஆண்டில் இருந்து 5 ஆண்டுகள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார். இவருடைய நிர்வாகத்தில் போக்குவரத்துத் துறை இலாபத்துடன் இயங்கியது. போக்குவரத்துத் துறையில் தொழிலாளர்களுக்குப் பங்குத் தொகை கொடுத்து, நிர்வாகத்தில் தொழிலாளர் பிரதிநிதிகளைச் சேர்த்த பெருமை இவருக்கு உண்டு.

பொதுப் பணி, சிறு பாசனம், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு மின்சாரம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**தி**ரு நாராயணசாமி முதலியாரின் சொந்த ஊர் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கருங்குழி. 1912-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ஆம் தேதி சென்னை திருவல்லிக்கேணியில் பிறந்தார்.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்து, 1935-ஆம் ஆண்டு ''எம்.ஏ.'' பட்டம் பெற்றார். 1937-ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் படித்து ''பி.எல்'' பட்டம் பெற்றார்.

1938-ஆம் ஆண்டில் வக்கீலாக வேலையைத் தொடங்கினார். 1930-ஆம் ஆண்டில் கல்லூரியில் படிக்கும்போது மறைந்த பேரறிஞர் அண்ணாவுடன் இவருக்கு நட்பு ஏற்பட்டது. இந் நட்பு நாளுக்கு நாள் வளர்ந்தது. தி.மு. கழகத்திற்காகப் பல்வேறு வழக்குகளில் இவர் வழக்கறிஞராக இருந்துள்ளார்.

1957 முதல் 1958 வரை காங்கிரஸ் ஆட்சியின்போது, இவர் சிறப்பு வழக்கு நடத்துநராகப் (Special Public Prosecutor) பணியாற்றினார். 1967ல் தி.மு.க. ஆட்சியில் தலைமை வழக்கறிஞராக ( Advocate General ) நியமிக்கப்பட்டார். 1969 ஜனவரி முதல் 1974 நவம்பர் மாதம் வரை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தார். ஓய்வு பெற்ற பின்னர் டெல்லி சுப்ரீம் கோர்ட் ''சீனியர் வக்கீல்'' ஆக வேலை பார்த்து வந்தார்.

சட்டம், நீதிமன்றம், சிறை, எடை, நிறுத்தல், லேவா தேவிச் சட்டம், சீட்டு கம்பெனிப் பதிவுச் சட்டம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.











திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் நெல்லை மாவட்டம் ஆறுமுகநேரியில் 1930ல் பிறந்தவர். பாளையங்கோட்டை தூய சேவியர் உயர்நிலைப் பள்ளிக்கூடத்திலும், தூய சேவியர் கல்லூரியிலும், பிறகு சென்னை சட்டக் கல்லூரியிலும் படித்து வக்கீல் ஆனார்.

1954-ஆம் ஆண்டு முதல், இவர் அரசியலில் தீவிர பங்கு பெற்று வருகிறார். 1964—69 வரை பாளையங்கோட்டை நகர மன்ற உறுப்பினராகவும், 1967—71ல் தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்தார். 1969 பிப்ரவரி மாதம் 2-ஆம் தேதி முதல் 1971ல் சட்ட மன்றம் கலைக்கப்படும் வரை துணைச் சபாநாயகராகப் பணியாற்றி வந்தார். 1971 பொதுத் தேர்தலில் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று 1976 ஜனவரி வரை சட்ட மன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன்வளம், வன வளம், பத்திரப்பதிவு, இளைஞர் அணி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வல்லதிராக்கோட்டையில் 1926-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ஆம் தேதி பிறந்தார்.

நாச்சியாபுரத்தில் (செட்டிநாடு) பள்ளிக் கூடக் கல்வியை முடித்தார். ஆரம்பத்தில் காங்கிரசில் ஈடுபாடு கொண்டு இருந்தார். பிறகு 1939ல் டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகக் குழுவில் சேர்ந்தார். அப்போது பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டது.

1944 முதல் 1945 வரை திராவிடர் கழகத்தில் சேர்ந்து முழு நேர ஊழியராகப் பணியாற்றினார். பெரியார், ஈ. வே. ரா. அவர்களுடன் ஈரோட்டில் இருந்தார். பின்னர் கே. ஆர். இராமசாமி நாடகக் குழுவில் சேர்ந்தார். 1947ல் பேரறிஞர் அண்ணாவுடன் இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அண்ணா அவர்களுடன் காஞ்சிபுரத்தில் சில காலம் இருந்து, 1953ல் ''எம். ஜி. ஆர். நாடக மன்ற''த்தில் சேர்ந்தார். ''எம். ஜி. ஆர் பிக்சர்ஸ்'' பட நிறுவனத்தை நிர்வகித்து வந்தார். 1963ல் ''சத்யா மூவீஸ்'' பட நிறுவனத்தைத் தொடங்கினார்.

தி.மு.க. வில் பொதுக்குழு உறுப்பினராகப் பதவி வகித்தார். அ.தி.மு.க. தொடங்கியதில் இருந்து அரசியலில் தீவிர பங்கு ஏற்றார். அ.தி.மு.க-வில் கலைப் பிரிவுச் செயலாளராக இருந்தார். பிறகு தலைமை நிலையச் செயலாளராக இருந்து வருகிறார்.

செய்தி-மக்கள் தொடர்பு, திரைப்படத் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம். ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திரு எஸ். அரங்கநாயகம் அவர்கள் கோவையில் உள்ள செல்வபுரத்தைச் சேர்ந்தவர். பி.ஏ., பி.டி. பட்டம் பெற்ற இவர் காரமடை, சித்தோடு அரசு உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் ஆசிரியர் வேலை பார்த்தார்.

பின்பு திங்களூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்து வந்தார். ஆசிரியர் தொழிலில் இருக்கும் போதே எம். ஏ. பட்டம் பெற்றார். பகல்பூர் பல்கலைக் கழகத்தில் சட்டப் படிப்புக்கான 'பி. எல்.' பட்டம் பெற்றார்.

தலைமை ஆசிரியர் பதவியை ராஜினாமா செய்து விட்டு வக்கீல் தொழில் செய்து கொண்டே, தீவிரமாக தி.மு. கழகத்தில் பங்கு கொண்டார். திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அ. தி. மு. கழகத்தை அமைத்ததும், இவரும் தி. மு. கழகத்தில் இருந்து வெளியேறி அ. தி. மு. கவில் சேர்ந்தார். 1973-ஆம் ஆண்டு நடந்த கோவை சட்ட மன்ற இடைத் தேர்தலில் அ. தி. மு. க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அரங்கநாயகத்திற்கு 1958-ஆம் ஆண்டு நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் சேலம் மாவட்டம் குல்லம்பட்டியில் திருமணம் நடந்தது.

கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திரு கே. காளிமுத்துவுக்குச் சொந்த ஊர் சிவகாசிக்கு அருகில் உள்ள ராமுத்தேவன்பட்டி.

மதுரை தியாகராஜர் கல்லூரியில் பி. ஏ. படித்தார். படிக்கும் போதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டார். மாணவர் தலைவராக விளங்கினார்.

பி. ஏ. முடித்தவுடன், தனியாக எம். ஏ. தேர்வு எழுதிப் பட்டம் பெற்றார். 1965ஆம் ஆண்டில் அவர் மாணவர் தி.மு.கவின் தென் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தார். 1970-ஆம் ஆண்டு தன்னுடைய சொந்த ஊரின் ஊராட்சி மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்பு 1971-ஆம் ஆண்டு அவர் சிவகாசித் தொகுதியில் இருந்து எம். எல். ஏ. ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பல போராட்டங்களில் ஈடுபட்டு இவர் பலமுறை சிறைக்குப் போயிருக்கிறார். தி. மு. க. விலிருந்து திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் விலகி அ. தி. மு. கவைத் தொடங்கியவுடன் இவரும் அதில் சேர்ந்தார்.

திரு காளிமுத்து சிறந்த கதை ஆசிரியர். திரைப் படம் ஒன்றிற்கும் கதை வசனம் எழுதியுள்ளார்.

நகர மன்ற நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சி ஒன்றியம், கிராமக் கடன் வசதி ஆகிய துறைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் 1917 ஆம் ஆண்டு ஜனவரி 4-ஆம் தேதி தஞ்சை மாவட்டம் பட்டீசுவரம் கிராமத்தில் பிறந்தார். தஞ்சையில் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர். இறுதி வகுப்பில் சிறப்பாகத் தேறியதற்காக 'பியர்ஸ் பரிசு'' என்ற விருதைப் பெற்றார். 1938-ஆம் ஆண்டு ரெயில்வே துறையில் டிக்கெட் சேகரிப்பவராக வேலையில் சேர்ந்தார். பிறகு ஸ்டேஷன் மாஸ்டராகப் பதவி உயர்வு பெற்றார். ரெயில்வே தொழிற் சங்க இயக்கத்தில் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றிருக்கிறார். 1961-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணாவின் அழைப்பை ஏற்று, ரெயில்வேத் துறை வேலையில் இருந்து விலகி தி. மு. கழகத்தில் சேர்ந்தார். தி. மு. கழகம் நடத்திய பல போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார். 1964-ஆம் ஆண்டு விழுப்புரம் நகரசபை உறுப்பினரானார். 1968-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு மேல் சபை உறுப்பினராக 2 ஆண்டு 7 மாத காலம் இருந்தார். 53 தொழிற் சங்கங்களின் தலைவராகப் பணியாற்றி இருக்கிறார். 1965-ஆம் ஆண்டு கட்டாய இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் இவர், மனைவியுடன் சிறை சென்றார். 'என்ஃபீல்டு', 'இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி', 'டி. ஐ. சைக்கிள்ஸ்', 'ஹாக்பிரிட்ஜ்,' 'அரசுப் போக்குவரத்து', 'எம். எம். ஃபோம்', 'மெட்ராஸ் மோட்டார்ஸ்', 'பி. அண்ட் சி' போன்ற நிறுவனங்களின் சங்கங்களில் தலைமை வகித்தது குறிப்பிடத் தக்கது. காலஞ் சென்ற தொழிற்சங்க மேதை திரு எஸ். குருசாமிக்குத் துணைத் தலைவராகவும், அதே போல் தொழிற்சங்கப் பெரியவர் திரு டி. வி. ஆனந்தன், முன்னாள் எம். பி. அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்ட ரயில்வே தொழிற் சங்கத்துக்குத் துணைத் தலைவராகவும் பணியாற்றியது குறிப்பிடத்தகுந்தது.

1971 ஜனவரியில் தி. மு. க. வை விட்டு விலகி காங்கிரஸில் சேர்ந்தார். பின்னர் 14—2—1973ல் அ. இ. அ. தி. மு. க. வில் சேர்ந்தார். தற்போது அகில இந்திய அ. தி. மு. கழகத் தொழிற் சங்கப் பிரிவுச் செயலாளராகவும், பேரவைப் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார். மொத்தம் 13 முறை சிறை சென்றுள்ளார். 1977-ஆம் ஆண்டு மார்ச் 27ல் கைது செய்யப்பட்டு மூன்று மணி நேரம் கழித்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொழிலாளர் நலம், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், வடிகால் வாரியம் நகரமைப்பு ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



**தி**ரு பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் 1938-ஆம் ஆண்டு மே மாதம் 5-ஆம் தேதி திருச்சி மாவட்டம் முசிறி அருகில் உள்ள சித்தூரில் பிறந்தார். முசிறி கழக உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்து விட்டு, புதுக்கோட்டை அரசாங்கக் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி, காரைக்குடி அழகப்பா கல்லூரிகளில் படித்து ''எம். ஏ.'' பட்டம் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் படித்து வக்கீல் பட்டம் பெற்றார்.

1964-ஆம் ஆண்டு தி.மு. கழகத்தில் சேர்ந்தார். சித்தூர் தி.மு. கழகக் கிளைச் செயலாளராக இருந்தார். தென் பிராந்திய ரெயில்வே பிரயாணிகள் சங்க ஆலோசனைக் குழு, மாநில தாழ்த்தப்பட்டோர் நலக் குழு, பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, விவசாய வருமான வரி பொதுக் குழு, மாநில அறநிலையப் பாதுகாப்புக் குழு ஆகியவற்றின் உறுப்பினராகப் பணியாற்றி இருக்கிறார்.

தி.மு. கழகத்தை விட்டு திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் விலகி அ.தி.மு.கவை அமைத்ததும், திரு சௌந்தரபாண்டியனும் விலகி, அ.தி.மு.கவில் சேர்ந்தார். அ.இ.அ.தி.மு.க.வின் பொருளாளராக நியமிக்கப்பட்டார்.

1971-ஆம் ஆண்டு நடந்த சட்ட மன்றத் தேர்தலில் திருச்சி மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தி.மு. கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இப்போது நடந்த சட்ட மன்றத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் அதே தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் வெற்றி பெற்றார்.

அரிசன நலம், பின் தங்கிய வகுப்பினர், மலைவாழ் மக்கள், எழுது பொருள், அச்சிடுதல், அரசு அச்சகம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



**தி**ரு சி. பொன்னையன் அவர்கள், சேலம் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள பட்லூர் கவுண்டம் பாளையத்தைச் சேர்ந்தவர். 22-2-194[illegible]-ல் பிறந்த அவர், திருச்செங்கோடு உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு, பட்டப் படிப்பை திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியிலும், சட்டப் படிப்பைச் சென்னை சட்டக் கல்லூரியிலும் முடித்தார். 1958-ஆம் ஆண்டிலிருந்து திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டார். விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்திலும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் பங்கேற்றுச் சிறை சென்றார். திரு எம். ஜி. இராமசந்திரன் அவர்கள் தி.மு.க.விலிருந்து பிரிந்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய ஆரம்ப நாள் தொட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தார். சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணிபுரிந்து வந்த இவர், சர்க்காரியா விசாரணை கமிஷனில் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களின் வழக்கறிஞராகவும் பணி புரிந்தார்.

1977 ஜூன் மாதத்தில் நடந்த தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் சேலம் மாவட்டம் திருச்செங்கோடு சட்ட சபைத் தொகுதியிலிருந்து தமிழ்நாட்டிலேயே அதிகமான வாக்குகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகன வரி, பெருவழித் துறை, துறைமுகம் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



**செ**ல்வி பி. டி. சரசுவதி அவர்கள், நெல்லை மாவட்டத்தில் உள்ள சேரன்மகாதேவியில் பிறந்தவர்.

மதுரை 'ஓ.சி.பி.எம்.' உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படித்து விட்டு, 'லேடி டோக்' கல்லூரியில் படித்தார். பின்பு சென்னை கிறித்தவக் கல்லூரியில் தத்துவம் மற்றும் மனோதத்துவத் துறையில் 'எம்.ஏ.' படித்தார். சென்னை சட்டக் கல்லூரியில் வக்கீல் வேலைக்குப் படித்து விட்டு, 1964-ஆம் ஆண்டு வக்கீல் தொழிலைத் தொடங்கினார்.

1965-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1972-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ஆம் தேதி காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி தி.மு. கழகத்தில் சேர்ந்தார். திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தி.மு.க.வை விட்டு விலகி, அ.தி.மு.க.வைத் தொடங்கியதும், இவரும் அ.தி.மு.க.வில் சேர்ந்தார்.

அ.இ.அ.தி.மு.க. சார்பில் பல வழக்குகளில் வாதம் புரிந்துள்ளார். அ.இ.அ.தி.மு.க. மகளிர் பிரிவுச் செயலாளராக இருந்து வருகிறார். நன்றாக வீணை வாசிப்பார். இவருடைய பொழுது போக்கு புத்தகங்கள் படிப்பது.

சமூக நலம், மகளிர் மற்றும் குழந்தை நலம், பிச்சைக்காரர் மறுவாழ்வு, அனாதை இல்லம், வெளிநாட்டு இந்தியர்கள், அகதிகள், குடிபெயர்ந்தோர் மற்றும் சீர்திருத்த நிருவாகம், ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



**தி**ரு ப. குழந்தைவேலு அவர்கள், 1938-ஆம் ஆண்டு மார்ச் 15-ஆம் தேதி பிறந்தார்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் 'எஸ்.எஸ்.எஸ்.சி.' வரை பொள்ளாச்சி நகர சபை உயர்நிலைப் பள்ளியில் படித்தார். அதன் பிறகு 'என்.ஜி.எம்' கல்லூரியில் 'பி.ஏ.' முடித்து விட்டு, சென்னை சட்டக் கல்லூரியில் 'பி.எல்.' பட்டம் பெற்றார்.

1965 ஜனவரியில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகிச் சிறை சென்றார். அனைத்திந்திய அ.தி.மு.க. தலைமை சட்ட திட்டக் குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்து வருகிறார்.

விவசாயம், விவசாய மறுநிதிக் கழகம், விவசாயப் பொறியியல், பால்வள நிறுவனம், வெள்ளத் தடுப்பு ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



**தி**ரு கே. இராஜா முகமது அவர்கள், மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 5—1—1943-ல் பிறந்தார்.

திரு இராஜா முகமது பெரியகுளத்தில் 'எஸ்.எஸ்.எல்.சி.' வரை படித்தார். பின்பு சென்னை மாநிலக் கல்லூரியில் 'பி.ஏ.' பட்டம் பெற்ற இவர், சட்டப் படிப்பு படித்து 'பி.எல்.' பட்டம் பெற்றார். பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே, தி.மு. கழகம் நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு 9 நாள் சிறைத் தண்டனை பெற்றார். பிறகு பாளையங்கோட்டையில் 45 நாள் சிறை வைக்கப்பட்டார்.

1972-ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சி மன்றச் செயலாளராகவும் பணிபுரிந்து வந்தார். கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட தனது வேலையை ராஜினாமா செய்தார்.

வீட்டு வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சேவைக் கூட்டுறவுகள், வக்ஃப் போர்டு, ஆலைத் துணி, நூல், கைத்தறி, கதர் ஆகிய துறைகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.





**த**மிழகச் சட்ட மன்றப் பேரவைத் தலைவராக விளங்கும் திரு முனு ஆதி அவர்கள், 1926 ஆம் ஆண்டு அக்டோபர் 9-ஆம் தேதி பிறந்தார். சென்னை எழும்பூர் 'எம்.சி.டி.எம்' உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றார்.

தி.மு. கழகத்தில் தீவிரப் பங்கு எடுத்துக் கொண்ட அவர், செங்கல்பட்டு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் பொறுப்பை வகித்தார். திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், அ.தி.மு.கவைத் துவக்கியபோது, அதன் ஆரம்ப காலத் தலைவர்களில் ஒருவராக இருந்திருக்கிறார்.

1948 முதல் 1953 வரை தாம்பரம் பேரூராட்சி உறுப்பினராகவும், 1953 முதல் 1958 வரை பேரூராட்சியின் துணைத் தலைவராகவும், 1958 முதல் 1963வரை அதன் தலைவராகவும், பின்னர் 1969 முதல் 1973 வரை தாம்பரம் நகர் மன்றத் தலைவராகவும் விளங்கினார்.

1962-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினராக இருந்து வருகிறார். 1977-ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு முனு ஆதி திருமணம் ஆனவர். அவருக்கு 3 மகள்கள் இருக்கிறார்கள்.

**தி**ரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 5—7—1949-ல் புதுக்கோட்டை மாவட்டம் தீயத்தூரில் பிறந்தார். தகப்பனார் பெயர் சுப்பராமத் தேவர். தாயார் பெயர் காளியம்மாள். இவர் தீயத்தூர் ஊராட்சித் தலைவர்.

தனது ஆரம்பப் படிப்பைப் பாதிரக்குடி, ஓரியூர் ஆகிய இடங்களில் முடித்த திரு திருநாவுக்கரசு அவர்கள், கல்லூரிப் படிப்பைப் பாளையங்கோட்டையில் உள்ள சவேரியார் கல்லூரியிலும், அதிராமப்பட்டினத்தில் உள்ள காதர் முகைதீன் கல்லூரியிலும் முடித்து, ''பி.ஏ.'' பட்டம் பெற்றார். பின்பு சென்னை சட்டக் கல்லூரியில் வக்கீல் வேலைக்குப் படித்து, ''பி.எல்.'' பட்டம் பெற்றார். பிறகு புதுக்கோட்டையில் வழக்கறிஞராகத் தொழில் செய்தார்.

பள்ளியில் மாணவத் தலைவராக இருந்தார்.

கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதன் பின்பு, திரு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அ.தி.மு.க.வைத் தொடங்கியவுடன் இவரும் தி.மு.க.வில் இருந்து விலகி அ.தி.மு.க.வில் சேர்ந்தார்.

இவர் சிறந்த பேச்சாளர்; சுறுசுறுப்பாகப் பணியாற்றக் கூடிய இளைஞர். இந்திய வரலாற்றில், 28 வயதில் துணைச் சபாநாயகர் பொறுப்பை ஏற்றிருக்கும் முதல் நபர் இவரே.





# கிண்டித் தொழிற்பேட்டையில் ஒரு முன்னோடித் தொழிற்கூடம்!

**ச**முதாய வளர்ச்சிக்கும், சீர் திருத்தத்துக்கும் வழிகோலும் சாதனங்களில் திரைப்படம் மிக மிக முக்கியமான இடத்தைப் பெற்று வருவதை நாம் பார்க்கிறோம்.

இன்று பெரும்பாலான மக்களின் பொழுதுபோக்குச் சாதனமாக விளங்கிவருவதும், நாடு நகரங்களிலும், பட்டி தொட்டிகளிலும் காட்சி தருவதுமான திரைப்படத்திற்கு அடிப்படைக் காரணமே, ஒரு கவிஞர்தான் என்றால் அது விந்தையாக இல்லையா?

ஆம்! 'திரைப்படம்' என்கிற 'சினிமா' கண்டு பிடிக்கப்படுவதற்கு முதல் காரண கர்த்தராக இருந்தவர் ரோமானியக் கவிஞர் லூக்ரீஷெஸ் என்பவர்! இவர் கி.மு. 65-ல், கண்ணுக்கு உள்ள ஒருவகைப் பண்பைக் கண்டுபிடித்தார்.

நாம் ஒரு பொருளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது திடீரென மறைந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொருள் மறைந்தவுடனே, அது நமது கண்ணிலே தோற்றுவித்த புலன் உணர்ச்சியும் மறைந்து விடுவதில்லை. அவ்வுணர்ச்சி மறைந்து போவதற்குச் சிறிது தாமதம் ஏற்படுகிறது. இத்தாமதக் காலம் ஒரு செகண்டிலே பதினாறில் ஒரு பங்காகும். எனவே ஒரு பொருள் நமது காட்சியிலிருந்து மறைந்து 1/16 செகண்டுக்குள்ளே மறுபடியும் தோன்றக்கூடுமானால், அப்பொருள் மறைந்து பின்னர் தோன்றியது நமது கண்ணுக்குப் புலனாகாது போய்விடும். கண்ணுக்குள்ள இப்பண்புக்கு 'பார்வை நிலைப்பு' என அக்கவிஞர் பெயரிட்டார்.

இக்கண்டுபிடிப்புக்கு 200 ஆண்டுகளுக்குப் பிறகு டாலமி என்னும் வானவியல் அறிஞர் இப்பண்பைப் பரிசோதனை மூலம் நிரூபித்தார். இவருக்குப்பின் வந்த தாமஸ் ஆல்வா எடிசன் உட்பட, பலநாட்டு அறிவியல் அறிஞர்களும் இத்துறையில் ஓயாது உழைத்து வந்தனர். அதன் பயனாக, இன்று நவீன திரைப்படக் கருவிகள் உருவாகியுள்ளன.

திரைப்படக் கருவிகள் என்றதும் நம் கண்முன் வந்து நிற்பது 'புரொஜக்டர்' (Projector) என்னும் திரைப்படங்காட்டும் கருவியாகும். இக்கருவிகளைத் 'தேவி நிறுவனத்'தார் மிகச் சிறந்த முறையில் தயாரித்து அனைத்திந்தியப் புகழ் பெற்றுள்ளனர்.

இந்தியாவிலேயே முதன் முதலில் புரொஜக்டர் தயாரிப்புக்காகத் தொடங்கப் பெற்ற தொழிற்கூடம் (Devi Cine Projector Manufacturing Company) இதுவேயாகும். பல்வேறு தொழில்களைப் பாங்காய் வளர்த்திட வேண்டும் என்ற நோக்குடன் அரசு உருவாக்கிய கிண்டித் தொழிற்பேட்டையில் இது 1959-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

திரைப்படப் புரொஜக்டர் போன்ற கருவிகள் முதலில் அமெரிக்கா, இங்கிலாந்து,

**இயந்திரப் பிரிவின் ஒரு தோற்றம்.**



ஐரோப்பா முதலான நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு வந்தன. இப்போது நம் நாட்டிலேயே தயாரிக்கும் அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறேம்.

திரைப்பட சம்பந்தமான கருவிகளை உருவாக்கும் இயந்திரங்களைப் பெறுவதற்குக்கூட நாம் மேலைநாட்டையே நம்பியிருந்தோம். ஆனல் இன்று 'இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ்' (H M T) நிறுவனம் இதற்கான இயந்திரங்களை உருவாக்கித் தருகின்றது. தேவி நிறுவனத்தொழிற்கூடத்திலும் இந்த இயந்திரங்கள் இயங்குகின்ற காட்சியைப் பார்க்கிறேம்.

தற்போது இந்தத் தொழிற்கூடத்திலே 35 எம். எம்., 70 எம். எம். புரொஜக்டர்கள் தயாரிக்கப்படுகின்றன. ஓராண்டுக்குச் சுமார் 100 புரொஜக்டர்கள் இங்குத் தயாராகின்றன. இங்கு உருவாகும் 35 எம். எம். புரொஜக்டர்கள் இந்தியாவில் 430 திரையரங்குகளிலும், 70 எம். எம். புரொஜக்டர்கள் 15 திரையரங்குகளிலும் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இவையன்றி, பங்களாதேஷுக்கும் இந்தப் புரொஜக்டர்கள் அனுப்பப்பட்டுள்ளன. அரேபிய நாடுகளுக்கும் இவை விரைவில் ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன.

இந்தப் புரொஜக்டர்கள், சென்னை, பெங்களூர், ஷில்லாங் திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள இராணுவ அலுவலர்கள் பயிற்சி நிலையங்களிலும் இயங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

1953-ம் ஆண்டு செப்டம்பரில் நியூயார்க்கில்தான் முதன்முதலில் 'சினிமாஸ்கோப்' காட்டப்பட்டது. அங்கு 'சினிமாஸ்கோப்-55' என்ற புதுவகை சினிமாஸ்கோப் ஒன்றும் காட்டப்படுகிறது. இவையன்றிச் 'சினெரமா' என்னும் ஒருவகைத் திரைப்படக் காட்சியும் அமெரிக்காவில் உள்ளது.

இன்று உலகநாடுகள் பலவற்றில் திரைப்படத் தொழில் நன்கு



**புரொஜக்டரின் பாகங்களை இணைக்கும் பிரிவு**

வளர்ந்து வருகின்றது. இந் தொழிலில் முதலிடம் பெறுவது அமெரிக்கா. இரண்டாவது ஜப்



**புரொஜக்டருக்கும், வில்விளக்குக்கும் உரிய 'கியர்'களைத் தயாரிக்கும் இயந்திரம்.**

பான்; மூன்ருவது இந்தியா என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

'தேவி புரொஜக்டர்கள் நல்ல தரமுடன் திகழ்கின்றன!' என்று அமெரிக்காவிலுள்ள திரைப்பட-தொலைக்காட்சி பொறியியல் வல்லுநர்கள் கழகம் (Society of Motion Picture and Television Engineers USA) அங்கீகரித்துள்ளது.

ஒரு புரொஜக்டரில் படச்சுருள் மாட்டும் வட்ட வடிவப்பெட்டி, பிலிம் மீண்டும் சுற்றிக் கொள்ளும் பெட்டி, ஒளிமிக்க கார்பன் வில் விளக்கு, லென்ஸ், ஒளி மின் கலம், கீற்றுத் தொளை, கண்டென்சர், மின்விளக்கு, ஒலி பெருக்கிக்கான இணைப்பு ஆகியவை உள்ளன. இவற்றில் 'லென்ஸ்' தவிர எல்லா உபகரணங்களும் இந்தத் தொழிற்கூடத்திலேயே தயாரிக்கப்படுகின்றன.

தயாரான புரொஜக்டர்கள் இங்குள்ள ஒரு 'மினி' திரையரங்கில் பரிசோதிக்கப்படுகின்றன. அப்போது ஒளி, ஒலி அமைப்பு எல்லாம் சரிசெய்யப்படுகின்றன. முழுதும் பரிசோதிக்கப்பட்ட பிறகே அவை விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன.

இந்நிறுவனத்தார் திரையரங்குகளை அழகுபடுத்தும் கலையிலும் திறம் பெற்று விளங்குகிருர்கள். இவர்களது கைவண்ணத்தால் பல திரையரங்குகள் எழில்வடிவம் பெற்றுள்ளன.

இவ்வாறு, நாளும் மக்கள் கண்டு களித்திடும் திரைப்படக் காட்சி மிக முக்கிய கருவியாக விளங்கும் புரொஜக்டர் தயாரிப்பில் ஒரு முன்னேடியாக இத் தொழிற்கூடம் இருந்து வருகிறது என்பதை நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

—பி. வி. கிரி.

**புரொஜக்டர் —இறுதியாகப் பரிசோதிக்கப்படுகிறது**



# சூரிய வெப்ப அடுப்பு



**பு**தைபட்டுக் கிடக்கும் எரி பொருட்களாகிய புராதன காலத்து மிருகம் அல்லது தாவரத்தின் மிஞ்சிய பகுதிகள், பூமியினுல் அளிக்கப்பட்டிருக்கும் வரப்பிரசாதங்களாகும்! முடிவில்லாது வளர்ந்து வரும் தனது தேவைகளுக்கு மனித இனம் எரிபொருட்களைத் தேடி பூமியினுள் பல மைல் தூரம் சென்றும், சக்தித் தட்டுப்பாடு அகன்றபாடில்லை! மாருக மனித இனத்தைப் பயமுறுத்தும் ஒரு கேள்விகுறியாக இந்த எரிபொருள் பிரச்சினை இலங்குகின்றது!

மனிதனின் கண்டுபிடிப்பான சக்தியளித்திடும் இயந்திரங்கள் பெருமளவில் நிறைந்திருப்பினும், சக்தித் தட்டுப்பாடுப் பிரச்சினையைத் தீர்க்க முடிவதில்லை. இதற்கான காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை பருவமழை தவறிவிடுதல், அணுமின் சக்தி நிலையத்தில் ஏற்படும் கோளாறுகள், அவற்றில் சில பணிகளைச் செய்திட தேவையான சக்தி, மனிதன், விலங்கினம், இயந்திரம் முதலியன கிடைக்கப் பெருமைபோன்றவைகளாகும். இன்றைய நவீன உலகத்தில் அறிவியல் ஆராய்ச்சி, மேற்கூறிய சக்திகளைத் தவிர வேறு சக்திகளை வெளிக்கொணர்ந்து பணியாற்றிட முடியுமா என்பதில் ஈடுபட்டுள்ளது.

மேற்கூறிய பணிகளின் விளைவாக காற்று, சூரியன், நீரலை, இயற்கை எரிவாயு ஆகியவைகளிலிருந்து சக்திகளைப் பெற முடியும் என்ற உண்மை அறியப்பட்டு, விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பண்ணைப் பொறியியல்துறை (Department of Farm Machinery) சூரிய சக்தியை மக்களின் அன்ருடத்தேவைகளுக்குப் பயன்படுத்தும் சக்தியாக உருமாற்றுவதற்குரிய வழிமுறைகளை அறிய முற்பட்டு, ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

உலகத்தின் சக்தி பசிக்கு இரையாகப் பெரிதளவில் பயன்படும் 'பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள், அதனைத் தன் பலமாகப் பயன்படுத்தி, உலகத்தினை அஞ்சத் செய்த நிலைமை, சூரிய சக்தியைப் பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு ஒரு வித்திட்டது. சூரியனிடமிருந்து வந்திடும் சக்தி எப்பொழுதும் நிற்பதில்லை. தொடர்ந்து கிடைக்கப் பெறுகின்றது. அங்ஙனம் வரும் சக்தியில் பெரும் பங்கு வான் வெளியிலேயே பரந்துவிடுகிறது.

## சூரிய சக்தி-ஓர் ஆய்வு

பூமியின் மீது விழும் சூரிய சக்தியின் அளவினைக் கணக்கிட்டால், அதன் அளவு நமக்கு பெரும் ஆச்சரியத்தை உண்டு பண்ணும். அமெரிக்க நாட்டின் நிலப்பரப்பின் மீது 1 நிமிடத்தில் விழுந்திடும் சூரியனின் வெப்பமானது அந்நாட்டின் ஒரு நாளைய சக்தித் தேவையினை அளிக்கவல்லது என விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர். இத்தகைய வல்லமை பெற்ற சூரியனுல் பூமிக்கு $1.73 \times 10^{11}$ மெகா வாட் (1 மெகா வாட்=1000 கிலோ வாட். 1 கிலோ வாட் மணி என்பது நாம் சாதாரணமாக குறிப்பிடும் ஒரு யூனிட் மின்சாரம் என்பதைக் குறிக்கும்) என்ற அளவில் சக்தி கிடைக்கின்றது. நிலப்பரப்பைக் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது இஃது ஏக்கருக்கு, ஆண்டிற்கு, 7 மில்லியன் கிலோ வாட் மணி என அறியப்படுகிறது. சூரிய வெப்பத்தை அடைவதற்கும், உபயோகிப்பதற்கும் ஒரு சில வரையறைகள் உள்ளன. பூமியின் அமைப்பைப் பொறுத்தே சூரிய வெளிச்சமும், வெப்பமும் கிடைக்கும். பூமத்திய ரேகைக்கு 40 டிகிரி வடக்கிலும் 20 டிகிரி தெற்கிலும் இடைப்பட்டுள்ள இடங்கள் நல்லமுறையில் சூரிய வெப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஏதுவாயுள்ளன. இந்தியாவின் பூகோள அமைப்பு மிகவும் பொருத்தமாக அமைந்திருப்பதால், சூரிய வெப்பத்தை மிகவும் பயனுள்ள முறையில் நாம் உபயோகிக்க முடியும்.

இயற்கையில்—சுலபமாக—செலவில்லாமல் — கிடைக்கும் சூரிய சக்தியைத் தக்க முறையில் பயன்படுத்தி நீரைமேலேற்றுதல், தானியங்களை உலர்த்துதல், தண்ணீரை வெப்பப்படுத்துதல், சமையல் செய்தல், மின்சாரம் உற்பத்தி செய்தல், குளிர்பதன கருவிகளை இயக்குதல் போன்ற பல செயல்களை நிறைவேற்றிட சாதனங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சூரிய சக்தியை மேற்கூறிய செயல்களுக்குப் பயன்படுத்துவதில் பல அனுகூலங்கள் உள்ளன. வழக்கத்திலுள்ள எரிபொருட்களைப் பயன்படுத்துவதினுல் காற்று அசுத்தப்படுகிறது. இக்குறையைச் சூரிய சக்தியைப் பயன்படுத்துவதால், தவிர்க்கப்படுகிறது. மேலும் பல வழிகளிலான செலவினங்கள் தவிர்க்க

படுகின்றன. ஆனால் சூரிய சக்தியைச் சேமித்து வைப்பதற்கான சாதனங்களைச் செய்வதற்கான செலவு அதிகமாக உள்ளது.



## சூரிய வெப்ப அடுப்பு

சூரிய ஒளியைப் பயன்படுத்தி தண்ணீரை வெந்நீராக்கும் திறனுள்ள ''சூரிய வெப்பத் தண்ணீர் சூடேற்றி''( SOLAR WATER HEATER) ஒன்றைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பண்ணைப் பொறியியல் துறை அமைத்துள்ளது. சூரிய வெப்பத்தை வீடுகளுக்கும், தொழில்களுக்கும் பயன்படுத்தும் சாதனங்களை கண்டுபிடித்தலில் இஃது ஒரு முதற் கட்டமாகும்.

இந்த அமைப்பில் வெப்பம் அரிதில் கடத்தப்படும் பொருட்களால் அமைக்கப்பட்ட வெந்நீர் சேகரிப்புத் தொட்டி சூடேற்றும் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனுல் சேகரிக்கப்பட்ட வெந்நீரின் வெப்பநிலை காக்கப்படுகிறது.

## அமைப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் சூரிய, வெப்பத் தண்ணீர் சூடேற்றி'' இரண்டு முக்கியமான அமைப்புகளைக் கொண்டுள்ளது. (1) சூரிய வெப்பம் பெறும் அமைப்பு (2) வெந்நீர் சேகரிக்கும் தொட்டி.

சூரிய சக்தியைச் சேகரிக்கும் தட்டு 305 செ. மீ. × 305 செ. மீ. அலுமினியத்தால் ஆனது.. இவ்வலுமினியத் தகடு 12 செ. மீ. உயரமுள்ள ஒரு பெட்டியில் பொருத்தப்பட்டுள்ளது. இத்தகட்டின் மீது கறுப்பு வண்ணம் பூசப்பட்ட—நீண்ட தொடர்ச்சியான — இரும்புக் குழாய்கள் அமைக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. இக் குழாய்களின் மொத்த நீளம் 100 மீட்டர். இப்பெட்டியின் மேல் பகுதி கண்ணுடியால் மூடப்பட்டுள்ளது. கீழ்ப்பகுதி, அதாவது சூரிய சக்தியைச் சேகரிக்கும் தட்டின் கீழ்ப் பகுதி சுமார் 2.5 செ. மீ. கனமுள்ள 'கல்நார்' என்ற அரிதில் கடத்திப்பொருளால் அடைக்கப்பட்டுள்ளது. இதனுல் தட்டிலிருந்து வெப்பம் அடிப் பகுதியின் வழியாக வீணுவது தடுக்கப்படுகிறது. கறுப்பு வண்ணத்திற்குச் சூரிய வெப்பச்சக்தியைக் கிரகிக்கும் தன்மை அதிகமாதலால், கறுப்பு வண்ணம் பூசப்பட்ட தட்டு, சூரிய வெப்பச் சக்தியைக் கிரகித்து குழாய்களிலுள்ள தண்ணீருக்கு அளிக்கிறது. மேலும் கண்ணுடிப் பலகை, வெப்பம் அளிக்கும் ஒளிக்கதிரை உள்ளடக்கும் தன்மை வாய்ந்தது. இதனுல் தண்ணீர் வெப்பமடைகிறது. தண்ணீர்த் தொட்டியை உயரே அமைப்பதின் மூலம் இக் குழாய்களின் மூலம் தொடர்ந்து தண்ணீர் வந்து வெப்பமடைவது சுலபமாகிறது.

வெப்பமடைந்த தண்ணீர் வெப்பநீர் சேகரிப்புத் தொட்டியில் சேகரிக்கப்படுகிறது. இத் தொட்டி செவ்வக வடிவத்தைக் கொண்டுள்ளது. மின் முலாம் பூசப்பட்ட இரும்பால் ஆன இத் தொட்டி 180 லிட்டர் வெந்நீர் சேகரிக்கும் கொள்ளளவு உடையது. வெந்நீர் உள்ளே வருவதற்கு மேலே ஒரு குழாயும், வெந்நீரைத் தேவைப்படும் இடத்திற்குக் கொண்டுச் செல்ல ஏதுவாக கீழ்ப்புறத்தில் மற்ெருரு குழாயும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் நீராவி வெளிச் செல்லுதற்கும், தொட்டி நிரம்பியதா எனக் கண்டுக்கொள்ள ஏதுவாகவும் ஒரு சிறு துவாரம்—வெந்நீர் உள்கொணரும் துளைக்கு அருகில்-அமைக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ள ''சூரிய வெப்ப அடுப்பு''.

## இட அமைவு

மேற் கூறிய சூரியவெப்பம் சேகரிக்கும் தகடு நாள்முழுவதும் சூரிய வெப்பத்தைக் கிரகிக்க கூடிய விகிதத்தில் அமைக்கப்பட வேண்டும். இவ்வமைப்பு அவ்விடத்தின் அட்சரேகை + 15 டிகிரி என்ற கோணத்தில் தெற்கு முகமாக அமைப்பதன் மூலமே இது சாத்தியமாகிறது. மேலும் இவ்வமைப்பு நாள் முழுவதும் சூரிய வெப்பம் படக்கூடிய நிழலற்ற பகுதியில் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது.



## இயங்கும் வகை

காலை சுமார் 11 மணி அளவில் வால்வைத்திறந்து, குளிர்ந்தநீரை சூரிய வெப்பம் பெறும் தகட்டிற்கு அனுப்புதல் வேண்டும். வெந்நீர் சேகரிப்புத் தொட்டி-ஒவ்வொரு நாளும் புதியதாக வெந்நீர் சேகரிக்கும் முன்—காலி செய்யப்பட்டால் அமைப்பின் திறன் அதிகமாகிறது. வெந்நீர் வெளிச்செல்லும் குழாயில் 1 நிமிடத்திற்கு 1 லிட்டர் என்ற அளவில் வெந்நீர் ஓட்டம் இருத்தல் வேண்டும். சுமார் 2 மணி அளவில் குளிர் நீர் அனுப்புதல் நிறுத்தப்படல் வேண்டும். இந் நேரத்திற்குள் வெந்நீர் சேகரிப்புத் தொட்டி நிரப்பப்படுகிறது. 180 லிட்டர் வெந்நீர், சுமார் 55 டிகிரி சென்டிகிரேடு அளவில் கிடைக்கப்பெறுகின்றது.

இந்த அமைப்பைப் பல்வேறு வெந்நீர் ஓட்ட அளவிலும், பல்வேறு நேரங்களிலிலும் சோதித்ததில் கீழ்க் கண்ட முடிவுகள் அறியப்பட்டுள்ளன.

1. தகட்டின் வழியே செல்லும் நீர் 1 நிமிடத்திற்கு 1 லிட்டர் என்ற அளவில் ஓட்டத்தைக் கொள்ளல் வேண்டும்.

2. காலை 10.30 முதல் மதியம் 2.30 மணி வரை இவ்வமைப்பு வேலை செய்வதற்கு ஏற்ற நேரமாகும்.

மதியம் 2 மணி அளவில் சேகரிக்கப்பட்ட வெந்நீர் இரவு முழுதும் சேமித்து வைக்கப்படுதலில் சுமார் 2 முதல் 8 டிகிரி சென்டிகிரேடு வெப்பத்தை இழக்கிறது. சூரிய வெப்பத்தின் அளவையும், வெப்ப நிலையைப் பொறுத்தும் இது மாறுபடும்.

தண்ணீரைச் சூடேற்றும் அமைப்பினை நிறுவுவதற்கும், குளிர்ந்த நீரை உயரத் தொட்டியில் ஏற்றுதலுக்குமான செலவுகளை அன்றி தண்ணீரை வெப்பப்படுத்த வேறெந்த செலவும் இல்லை. செலவின்றி கிடைக்கப் பெறும் சூரிய சக்தியைப் பயனுள்ள வகையில் மாற்றிட இவ்வமைப்பு பெரிதும் உதவுகிறது. 180 லிட்டர் தண்ணீரை வெப்பப்படுத்த தேவையான சக்தி செலவின்றி நமக்குக் கிடைக்கின்றது, இச் சக்தி. 8.1 கிலோ வாட் மணிக்கு சமமானது. அதாவது மின்சாரத்தைப் பயன்படுத்தித் தண்ணீரை வெப்பப்படுத்துவதினுல் ஆகும் செலவாகிய ரூ. 4.40 நாள் தோறும் மீதப்படுத்தப்படுகிறது.

எளிதில் கிடைக்கப் பெறும் பொருட்களைக் கொண்டு அமைக்கப்பெறும் இந்த''சூரிய வெப்பத் தண்ணீர் சூடேற்றி அல்லது அடுப்பு ''சுமார் ரூ. 4000 விலை பெறும். கூரைகளின் மீது சூரிய வெப்பத்தை எளிதில் கிரகிக்கும் வகையில் இந்த அமைப்பு நிறுவப் படல் வேண்டும். வெப்பப்படுத்தப்பட்ட நீரை குளிப்பதற்கு பயன்படுத்துவதாக வைத்துக் கொண்டால் ஒரு ஆளுக்கு சுமார் 20 லிட்டர் தண்ணீர் வீதம் இந்நீர் 9 ஆட்கள் கொண்ட ஒரு பெரிய குடும்பத்திற்குப் போதுமானதாகும். கோடைக் காலத்களில் 90 டிகிரி சென்டிகிரேடு வெப்பநிலையையும் தண்ணீர் சில சமயங்களில் பெறுகின்றது.

''சக்தி வெள்ளத்திலே ஞாயிறு
ஓர் குமிழியாம்
சக்திப் பொய்கையிலே ஞாயிறு
ஒரு மலர்
பொருளில்லாப் பொருளின் விளை
வில்லா விளைவு
சக்திக் கடலிலே ஞாயிறு ஓர்
நுரை:
சக்தி வீணையிலே ஞாயிறு ஒரு
வீடு; ஒரு ஸ்வரஸ்தானம்''

என பாரதியார் சூரியனைப் பற்றிக் குறிப்பிடுகின்ருர். அத்தகைய சக்தி வெள்ளத்தின் ஒரு குமிழும்-கடலின் ஒரு நுரையும், வீணையின் வீடுமாகிய—சூரியனின் சக்தியை மனிதன் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்பதால்தான், பாரதியார் அன்றே இந்த இயற்கைச் சக்தியைப் பற்றி எடுத்துரைத்தார் போலும்! முன்னேற்ற பாதையில் விரைந்து சென்று கொண்டிருக்கும் நம் நாட்டின் சக்தி தேவையின் ஒரு பங்கை, நிச்சயமாக சூரிய சக்தி பெரிதளவில் நிறைவேற்றும். இயற்கை அளித்துள்ள இத்தகைய சக்திகளை மனிதன் பெரிதளவில் பயன்படுத்தினுல் நமது நாடு சுற்றுப்புறச் சூழலின் ஆபத்துகளிலிருந்து ( Ecological Hazards ) தடுக்கப்படும்.


தகவல் :

கே. ஆர். சுவாமிநாதன்,
சி. ஆர். சண்முகசுந்தரம்
மு. கி. இரகுபதி, இறுதி
யாண்டு மாணவர்)
பண்ணைக் கருவிகள் துறை.



வெளியீடு :

தகவல் தொடர்பு நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641 003.

## இந்தியாவின் முதல் வானொலி ஒலிபரப்புக் கருவி!



அருகேயுள்ள படத்தில் காணப்படும் கருவி, இந்தியாவில் முதன் முதலாக, 1924-ஆம் ஆண்டில், சென்னை மாநில வானொலிக் குழுவினரால் பயன்படுத்தப்பட்ட வானொலி ஒலிபரப்புக் கருவியாகும். அப்பொழுது சென்னை மாநில ஆளுநரான திரு. வைகவுண்ட் கோஷன் அக்குழுவின் ஆதரவாளராக இருந்தார். இக்கருவியை 1927-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட பிறகு, 1930-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் சென்னை மாநகராட்சியால் இயக்கப்பட்டது. 1938-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ஆம் தேதி வரை இக்கருவியினால் ஒலிபரப்பப்பட்ட ஒலிபரப்பை சென்னையில் மட்டுமல்லாமல், சித்தூர், விஜயநகரம், இலங்கை ஆகிய இடங்களிலும் கேட்கமுடிந்தது. 1938-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16-ஆம் தேதி அன்று அகில இந்திய சென்னை வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதால் இக்கருவியின் மூலம் ஒலிபரப்புவது நிறுத்தப்பட்டது. சென்னை மாநகராட்சி 1938-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 4-ஆம் தேதி அன்று தீர்மானித்தவாறு, இந்தியாவில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்ட இக்கருவி, சென்னை அரும்பொருட்காட்சியகத்திற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

## கிராம சேமிப்புத் திட்டத்தின் சாதனை...

தஞ்சாவூர் மாவட்டம் இந்தியாவிலேயே கிராம சேமிப்புத் திட்டத்தில் முதன்மையாகத் திகழ்கிறது. மாவட்ட சேமிப்பு அதிகாரிகள் நிருபர்களிடம் பேசும்போது, இம்மாவட்டத்தில் கிராமங்கள் தோறும் மக்களுடன் அதிகப் பழக்கம் கொண்ட பொறுப்பான நபர் ஒருவரை ஏஜெண்டாக நியமித்து, மக்களிடம் சேமிப்புத் திட்டத்தை துவக்கியதால், இவ்வாறு இந்தியாவிலேயே முதல் மாவட்டமாக வரமுடிந்தது என்றார். 380 ஏஜெண்டுகள் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்றுவரை 65 ஆயிரம் கிராம தொடர் சேமிப்புக் கணக்கை ஏற்படுத்தி கணிசமான தொகையை இதில் சேர்த்துள்ளனர். இவ்வளவு அதிக கணக்கு வேறு எங்கும் ஏற்படுத்தப்படவில்லை !

## செங்கை மாவட்டத்தில் வனவளம்!

செங்கை மாவட்ட வனங்களில் இருந்து பெரும் வருவாய் பெறும் வகையில் வனவளம் பெருக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 813 எக்டேர் நிலத்தில் முந்திரியையும், 100 எக்டேர் நிலத்தில் 'சிவப்பு சாண்டர்ஸ்' வகை மரத்தையும் உற்பத்தி செய்தனர். காகித உற்பத்திக்கு வேண்டிய மூங்கில், யூகலிப்டஸ் போன்ற மரங்கள் 380 எக்டேரில் வளர்க்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு கிட்டிய 15 இலட்சம் ரூபாய் வருமானத்தில் முந்திரி விற்பனை மூலம் மாத்திரம் 8 இலட்சம் கிடைத்துள்ளது.

## சென்னை வானொலியில் இன்னிசை கேட்க உதவும் புதிய ஒலிபரப்பு முறை



நம் நாட்டில் முதன்முதலாக சென்னை மாநகரில்தான் வானொலி ஒலிபரப்புத் துவக்கப்பட்டது. பொன் விழாக் கொண்டாடவிருக்கும் சென்னை வானொலி நிலையம் புதிய ஒலிபரப்பு முறை ஒன்றினை, இந்தியாவிலேயே முதன் முதலாகத் துவக்கவிருக்கிறது.

இம்மாதம் 23-ம் தேதி முதல் சென்னை வானொலி 'F.M.' (Frequency modulation) சேவை என்னும் புதிய ''அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பு'' ஒன்றினைத் துவக்குகின்றது. அன்று அகில இந்திய வானொலி தனது பொன் விழாவினைக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டில் தற்போதைய ஒலிபரப்புகள் முக்கியமாக நடுத்தர அலைவரிசைகளில் பல ஒலிபரப்புக் கருவிகள் (transmitters) மூலம் 'அலைவீச்சு பண்பேற்றம்' (amplitude modulation) என்னும் முறையில் ஒலிபரப்பாகின்றன. புதிய ஒலிபரப்புகள் முதன்முறையாக நம் நாட்டில் 'F.M.' முறையைப் பயன்படுத்தும். இந்த ஒலிபரப்புகள் காற்றுமண்டல மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடையூறுகளினால் ஒலிபரப்புகளின் தரம் குறைவதைத் தடுக்கும்.

இப் புதிய முறையில் இந்திய மற்றும் மேற்கத்திய இசையின் முழு இனிமையையும் நேயர்களுக்கு அளித்திட முடிகிறது. தற்போதுள்ள 'அலைவீச்சுப் பண்பேற்ற முறையில்' ஒலிபரப்புகளை 10 கிலோ ஹெர்ட்ஸ்கள் வரைதான் ஒலிபரப்ப முடியும். ஆயின் 'அலை எண் பண்பேற்ற முறை' 30 ஹெர்ட்ஸிலிருந்து 15 கிலோ ஹெர்ட்ஸ் வரையுள்ள முழு ஒலிக்குறிப்புகளை ஒலிபரப்ப வல்லது.

தற்போதுள்ள முறையில் நம்மால் அதிக வானொலி நிலையங்களை ஏற்படுத்த முடியாது. ஏனெனில் சர்வதேச ஒப்பந்தத்தின்படி நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் வானொலி நிலையங்களை ஏற்படுத்த முடியும். ஆனால் 'F.M.' ஒலிபரப்புகளில் எவ்வளவு நிலையங்களை வேண்டுமானாலும் ஏற்படுத்தலாம். ஏனெனில் தொலைக்காட்சியினைப் போல ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் அவ் ஒலிபரப்புகளைக் கேட்க முடியும்.

இப்புதிய ஒலிபரப்புகளைக் கேட்பதற்கு, நேயர்கள் அதற்குத் தகுந்த புதிய வானொலிப் பெட்டிகளை வாங்க வேண்டும். ஏற்கனவே இருக்கும் பெட்டிகளில் இவ் ஒலிபரப்புகளைக் கேட்கும் வகையில் மாற்றம் செய்வது கடினம். புதிய வானொலிப் பெட்டிகள் மிக அதிகவிலை இருக்காது. எனினும் இன்னும் சில காலத்தில் கடைகளில் பலவிதமான மாதிரி 'F.M.' வானொலிப் பெட்டிகள் வரும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

30 ஹெர்ட்ஸ் அளவிலிருந்து 15,000 ஹெர்ட்ஸ் அளவு வரை உள்ள ஒலிக்குறிகளை ஒலிபரப்பும் முறைக்கு ஒலி எண் வித்தியாசம் அதிகம் தேவைப்படும் (Larger



**அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பு முறையின் ஒலிபரப்புக் கருவி (Transmitter). இது சென்னை தொலைக் காட்சி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.**

Bandwidth). 'A.M.' முறையில் இவ் வித்தியாசம் 10,000 சைக்கிள்கள் என்றால் 'F.M.' முறையில் அது 75,000 சைக்கிள்கள் ஆகும். இதனால் இப் புதிய ஒலிபரப்புகளுக்கு மிக அதிக ஒலி எண் கொண்ட ஒலிபரப்புப் பகுதி தேவைப்படுகின்றது.

சென்னை 'F.M.' ஒலிபரப்புகளை 107.1 மெகாஹர்ட்ஸ் பகுதியில் கேட்கலாம். தொலைக்காட்சியைப் போல, ''பார்வையின் கொடு'' (Line of Sight) பகுதி வரைதான் இந்நிகழ்ச்சிகளைக் கேட்க முடியும். எனவே ஏரியல்களை எவ்வளவு அதிக உயரத்தில் அமைக்க முடியுமோ அவ்வளவு உயரமான இடத்தில் அமைக்க வேண்டும். உயரமான கட்டிடங்களும், மற்ற அமைப்புகளும் இவற்றின் ஒலிபரப்புகளைத் தடுக்கும். எனவேதான், உயரமான கோபுரங்கள் தேவை. 'F.M.' ஒலிபரப்புகள் அமைப்பதில் அவற்றின் குறைந்த தூர ஒலிபரப்புத்தன்மை காரணமாகவும் உயரமான கோபுரங்கள் அமைப்பதற்கு ஆகும் செலவின் காரணமாகவும், தற்போதுள்ள ஒலிபரப்புகளைவிட இப்புதிய ஒலிபரப்புகளுக்குச் செலவு அதிகம் ஆகின்றது. எனினும், ஒலிபரப்புகளின் சிறப்புத் தன்மை காரணமாக இவற்றை அமைப்பதன் செலவு நியாயமானதே என்பதை அறியலாம்.

தொலைக்காட்சி மற்றும் 'F.M.' ஒலிபரப்புகளுக்கு ஒரே கோபுரம் அமைப்பதின் மூலம் செலவைக் குறைக்க முடியும். எனவேதான் சென்னை, கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற இடங்களில் 'F.M.' ஒலிபரப்புகள் முதலில் தொடங்கப்பட விருக்கின்றன.

ஏற்கெனவே இவ்விடங்களில் உயரமான தொலைக்காட்சிக் கோபுரங்கள் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. இந் நான்கு நிலையங்களில், சென்னை நிலையம் தான் முதன் முதலில் ஒலிபரப்புகளைத் துவக்குகிறது. சென்னை 'F.M.' ஒலிரப்புக் கருவி, சென்னை தொலைக்காட்சி நிலையத்திலும், ஏரியல் தொலைக்காட்சி கோபுரத்தில் தொலைக்காட்சி ஏரியலுக்கு சற்றே மேலேயும் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை ஒலிபரப்புக் கருவி சுமார் 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இக் கருவி முழுவதும் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு இயக்குவிக்கப்பட்டுள்ளதாகும். ஒலிபரப்புக் கருவி மற்றும் ஏரியல்களை பெங்களூரிலுள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம்-சர்வதேச தர நிர்ணயத்திற்கு ஏற்றபடி தயாரித்துள்ளது. இவற்றினை முற்றிலும் அகில இந்திய வானொலியின் தொழில் நுட்ப வல்லுனர்களே அமைத்து இயக்கி உள்ளனர்.

சென்னை தொலைக் காட்சியின் ஒலிபரப்புகள் எத்தனை தூரம் செல்கின்றனவோ அதே தூரம் இப் புதிய ஒலிபரப்புகளும் செல்லும். இத்தூரம் சென்னையை மையமாகக் கொண்ட சுமார் 80 கிலோ மீட்டர்களாகும். தொலைக் காட்சியின் ஒலிபரப்புகளும் 'FM' முறையையே பின்பற்றுகின்றன.

சனிக்கிழமை தவிர மற்ற நாட்களில் இரவு 8.30 முதல் 10.30 வரையும், சனிக்கிழமைகளில் இரவு 11.00 மணி வரையும், இவ் ஒலிபரப்புகளை புதிய 'F.M.' வானொலிப் பெட்டிகளில் நேயர்கள் கேட்கலாம்.

இந்த 'அலை எண் பண்பேற்ற ஒலிபரப்பு' முதன் முதலில் நம் நாட்டில் இப்போதுதான் பொது மக்களுக்கு எனத் துவக்கப்பட்டுள்ளது. நேயர்கள் இவ் ஒலிபரப்புகளின் தரத்தையும் சிறப்பையும் பாராட்டி ரசிப்பார்கள் என நம்புகிறோம்.



# அலை எண் பண்பேற்ற ஒலிபரப்பு என்றால் என்ன?

—பி. டி. எஸ். ராகவன்

"அனைத்து இந்திய வானொலியில் விரைவில் துவக்கவிருக்கும் 'எப். எம்' ஒலிபரப்பு முறை, உங்களுக்கு விந்தையானதாக இருக்கலாம்! 'எப். எம்' என்றால் 'Frequency modulation' என்பதைக் குறிக்கிறது. 'Frequency modulation' என்றால் 'அலை எண் பண்பேற்றம்' என்று பொருள்படும். இப்பொழுது, அனைத்து இந்திய வானொலியின் ஒலிபரப்புக் கருவிகள் (Transmitters), 'அலை வீச்சுப் பண்பேற்றம்' (Amplitute modulation) என்னும் ஒலிபரப்பு முறையைப் பயன்படுத்தி வருகின்றன. உண்மையாகப் பார்க்கப்போனால், இப்போது நான் ஆற்றிடும் உரை, அலைவீச்சுப் பண்பேற்ற முறை ஒலிபரப்புக் கருவி மூலமாகவே, உங்களிடம் வந்து சேருகிறது. என் முன்னால் உள்ள 'மைக்ரோபோன்' என்னும் ஒலிபெருக்கிக் கருவி, என்னுடைய வார்த்தைகளின் ஒலியை, 'ஒலி சார்ந்த அலைகள்' (Audio waves) என்றழைக்கப்படும் மின்சார அலைகளாக (Electrical waves) மாற்றுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். சென்னை 'பி' நிலைய ஒலிபரப்பைக் கேட்பதற்காக நீங்கள் உங்கள் வானொலிப் பெட்டியை இயக்கினால், அது ஒரு செகண்டிற்கு 1,150 கிலோ வானெறிச் சுற்று வட்ட (Kilo cycles) அளவில் வானொலி அலை (Radio wave) வீசுவதைக் குறிக்கிறது.

''ஒலி சார்ந்த அலையை (Audio wave) வானொலி அல்லது 'தாங்கிச் செல்லும் அலை'யுடன் (Radio or carrier wave) அதாவது வானொலி இயக்கியால் அனுப்பப்படும் தொடர்பான மின்காந்த அலையுடன் கலப்பதையே (வானொலி அலையகல அதிர்பு மாற்றமைப்பே), 'பண்பேற்றம்' (modulation) எனப்படுகிறது.

''கேட்கும் முனையில் (Receiver end) அதாவது வானொலிப் பெட்டியில் நடைபெறும் 'டிடெக்ஷன்' (Detection) என்னும் செயல் முறை, 'தாங்கிச் செல்லும் அலை'யை (carrier wave) அகற்றி, ஒலிசார்ந்த அலை'யைத் (Audio wave) திரும்பவும் அளிக்கிறது. இந்த 'ஒலி சார்ந்த அலை' வானொலிப் பெட்டியில் உள்ள ஒலி பெருக்கியினால் (Loudspeaker) மூல உரையாகவோ அல்லது இசையாகவோ மாற்றப்படுகிறது. இதை விளக்குவதற்கு, ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன்.

''நெடுந்தொலைவில் உள்ள உங்கள் நண்பருக்கு ஏதேனும் ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள்? நீங்கள் ஒரு கடிதம் எழுதி, அதை ஒரு உறையினுள் இட்டு, ஒட்டி உங்கள் நண்பருக்கு அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கின்றீர்கள். கடிதத்தை அனுப்ப உதவும் உறை (envelope), 'தாங்கிச் செல்லும் அலை'யைப் (Carrier wave) போன்றதேயாகும் அந்தக் கடிதத்தைப் பெற்றவுடன், உங்கள் நண்பர் உறையைத் திறக்கின்றார். உள்ளே இருக்கும் கடிதத்தை எடுத்துக் கொண்டு உறையை எறிந்து விடுகிறார். இது, வானொலிப் பெட்டியில் நடைபெறும் செயலுக்கு ஒப்பானதேயாகும்.

''தாங்கிச் செல்லும் அலை என்று அழைக்கப்படுவதின் காரணம் என்னவெனில், அது நீங்கள் விரும்பும் ஒலிக்குறிப்பைத் தாங்கிச் செல்கிறது. இந்த அலையே வானொலி அலையாகும். இந்த அலையில் தான் உங்கள் வானொலிப் பெட்டியை இயங்கச் செய்கிறீர்கள். இந்த அலைகளுக்கு 'அலை அதிர்வு எண்' (Frequency), 'அதிர்வு அலையின் வீச்சு' (Amplitude) என்றும் இரு முக்கிய குணங்கள் உண்டு. ஒலிக்குறிப்புகளுக்கு ஏற்ப, இவ்விரு குணங்களுமே மாறக்கூடியவைதான். நாம் அதிர்வு அலையின் வீச்சை மாற்றினால், அது 'அலைவீச்சுப் பண்பேற்றம்' அல்லது 'ஏ. எம்.' (Amplitude modulation) ஆகும்; அலை அதிர்வு எண்ணை மாற்றினால் அது 'அலை எண் பண்பேற்றம்' அல்லது 'எப். எம்.' (Frequency modulation) ஆகும்.

''ஒலி சார்ந்த சுட்டுக்குறி (Audio signal) என்பது, நான் முன்பே சொல்லியபடி வானொலி ஒலி பெருக்கிக் கருவியிலிருந்து (Microphone) கிடைக்கக் கூடிய மின்சார அலைகளின் ஒரு தொகுதியேயாகும். இந்த ஒலிபெருக்கிக் கருவியே உண்மையான ஒலி அலைகளை (Sound waves) மின்சார அலைகளாக (Electrical waves) மாற்றுகின்றன. இவ்வொலி சார்ந்த சுட்டுக் குறியில் ஒரு செகண்டிற்கு சுமார் 50 வானெறிச் சுற்று வட்டங்கள் (cycles) முதல் 15,000 வானெறிச் சுற்று வட்டங்கள் வரையான பல்வேறு அலை அதிர்வு எண் கொண்ட அலைகள் அடங்கியுள்ளன. இதுவே, 'ஒலிக் குறிப்புகளை ஒலிபரப்ப வல்ல தொலைவு எல்லை (Audio bandwidth) என்று கூறப்படுகிறது. இந்தத் தொலைவு எல்லை, பல்வேறு வகையான ஒலிக்கு ஏற்ப மாறுபட்டிருக்கும். உதாரணமாக என்னுடைய பேச்சு 50 முதல் 4,000 அல்லது 4,500 வானெறிச் சுற்று வட்டமுடைய ஒலிக் குறிப்புகளை ஒலிபரப்பவல்ல எல்லையையே கொண்டிருக்கும். ஆனால் உயர்தர இசைக் கருவி அல்லது பல்வகை இசைக் கருவிகள் ஒன்றிணைந்து எழுப்பும் இசை, 15,000 வானெறிச் சுற்று வட்ட அளவுக்கு அலை அதிர்வு எண் கொண்டிருக்கும்.

''மத்திய அலை, சிற்றலை ஆகிய இரண்டிலும் ஒலி பரப்பும் அனைத்து இந்திய வானொலியின் தற்போதைய ஒலிபரப்புக் கருவிகள் (Transmitters), 'அலை வீச்சுப் பண்பேற்றம்' என்னும் முறையையே பயன்படுத்துகின்றன. இந்த ஒலிபரப்புக் கருவிகளின் 'தாங்கிச் செல்லும் அலைகள்' போதிய தொலைவுக்கு ஒலிபரப்பவல்லதாக இருக்க வேண்டும். அதாவது ஒலி சார்ந்த அலை அதிர்வு எண்ணைப் பரப்புவதற்கு, தாங்கிச் செல்லும் அலையின் இரு பக்கமும் அலை அதிர்வு எண் பரவ வேண்டும். ஒலிபரப்புக்களின் எண்ணிக்கை, இடைவெளியின்றி அதிகமாக இருப்பதன் காரணமாக ஒலிபரப்புத் தொலைவு எல்லை முழுவதற்கும் நன்கு ஒலி பரப்ப இயலவில்லை. அலைவீச்சுப் பண்பேற்ற ஒலிபரப்புக் கருவிகளைப் பொறுத்த வரையில் உயர்ந்தபட்சமாக 10,000 வானெறிச் சுற்றுவட்ட அளவுக்கே ஒலி பரப்பப்படுகின்றன.

''அலை எண் பண்பேற்ற முறையில் 75,000 வானெறிச் சுற்று வட்ட அளவுக்கு ஒலி எண் வித்தியாசம் அதிகமாக (larger bandwidth) உள்ளதால், ஒலிபரப்பெல்லை முழுவதிலும் நம்பகமாக ஒலிபரப்புவதில் எந்தவிதப் பிரச்சனையும் எழவில்லை. ஆகவே, 'எப். எம்' முறை, ஒரு 'ஹி-பி' (hi-bi) முறை ஒலி பரப்பாகிறது. ஒலி எண் வித்தியாசம் அதிகமாக இருப்பதற்குத் தாங்கிச் செல்லும் அலையும் அதிக அலை அதிர்வு எண் கொண்டதாக இருக்க வேண்டும். சென்னையில் புதிதாகத் துவக்கப் படவிருக்கும் ஒலிபரப்புக் கருவி (Transmitter) 107.1 மெகா வாட்ஸ் பகுதியில் ஒலிபரப்ப வல்லதாக இருக்கும்.

''இறைச்சலில்லாத, மிக உயர்ந்த, தரமான ஒலிபரப்புகளைக் கேட்கமுடிவதே, அலை எண் பண்பேற்ற ஒலிபரப்புகளின் முக்கிய பயன்களாகும். அலை எண் பண்பேற்ற ஒலிபரப்பில், தாங்கிச் செல்லும் அலையின் அலைவீச்சை ஒரு நிலையில் இருக்கச் செய்கிறோம்; ஒலிக்குறிப்புகளுக்கு ஏற்ப, தாங்கிச் செல்லும் அலைகளின் அதிர்வெண்களை மாற்றுகிறோம். அலைவீச்சுப் பண்பேற்ற ஒலிபரப்பு முறையில் இயற்கை மற்றும் மனிதனுல் ஏற்படுத்தப்படும் எல்லா இடையூறுகளும் காணப்படுகின்றன. இந்த இடையூறுகள் அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பில்-அலைவீச்சு ஒரே நிலையில் வைக்கப்படுவதால் தவிர்க்கப்படுகின்றன. ஒலி எண் வித்தியாசம் அதிகமாக இருப்பதால, ஒலிபரப்புப் பகுதி முழுவதும் மிக உயர்ந்த தரமான ஒலி பரப்புகளை ஒலிபரப்ப முடிகிறது.

''அலை எண் பண்பேற்ற முறையில் சில தீமைகளும் உள்ளன. தாங்கிச் செல்லும் அலைகளில் அலை அதிர்வெண் மிக அதிகமாக இருப்பதால், நடுத்தர அலை அல்லது சிற்றலை டிரான்ஸ் மீட்டர்களைக் கொண்டு நீண்ட தூரத்திற்கு ஒலிபரப்புவதுபோல், இப்புதிய முறையில் நீண்ட தூரத்திற்கு ஒலிபரப்ப முடியாது, தொலைக்காட்சியைப்போல், இப்புதிய முறை, 'பார்வையின் எல்லைக்கோடு' (Line-of-sight) வரைதான் நிகழ்ச்சிகளைக் கேட்கச் செய்யும். அதாவது நிகழ்ச்சிகளைப் பெறுகின்ற 'ஏரியல்' ஒலிபரப்புச் செய்கின்ற ஏரியலைக் காணக்கூடிய தூரத்தில் இருக்க வேண்டும். ஒலிபரப்புக் கருவியின் சக்தி ஒன்ருக இருந்தாலும், ஒலிபரப்பும் 'ஏரியல்' உயரத்தில் இருக்குமானுல், நிகழ்ச்சிகளைப் பெறும் பரப்பு அதிகமாக இருக்கும். சென்னையில் அலை எண் பண்பேற்ற ஒலி பரப்பு முறைக்கான 'ஏரியல்' தொலைக்காட்சி நிலையக் கோபுரத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது எனவே, அலை எண் பண்பேற்ற ஒலிபரப்பின் எல்லை, தொலைக் காட்சியின் ஒலிபரப்பு எல்லையைப் போலவே 80 முதல் 100 கிலோ மீட்டர்களாக இருக்கும். தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ஒலிப் பகுதி, அலைஎண் பண்பேற்ற முறையிலேயே ஒலிபரப்பப்படுகிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். சென்னை தொலைக்காட்சி நிலையம், 67.75 மெகா ஹெர்ட்டஸ் பகுதியில் ஒலிகளைக் கேட்கச் செய்யும். 'இந்த அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பு முறையை, தொலைக்காட்சிப் பெட்டிகளில் கேட்க முடியுமா?' என்று பலர் என்னைக் கேட்டார்கள். இக்கேள்விக்கான விடை, பெரும்பாலும் 'முடியாது' என்பதேயாகும். பெரும்பாலான பெட்டிகள் இடத்திற்கு ஏற்ப இணைப்பு கொண்டதாகும். பல வழித் தொலைக்காட்சிப் பெட்டிகள் கூட தொலைக்காட்சியின் பல்வேறு வழிகளுடன் மட்டுமே இணைக்கப்பட்டதாகும். அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பினைக் கேட்க உதவும் வானெலிப் பெட்டிகள் சரியான அலைநீளத்தில் வைக்கப்படக் கூடியதாக உள்ளதால், அலை அதிர்வெண் கிடைக்குமானுல், தொலைக் காட்சி ஒலி வழியுடன் வானெலிப் பெட்டியை இணைத்துச் சுதி ஏற்படுத்த முடியும்.

''அடிக்கடி கேட்கப்படும் மற்ெருரு கேள்வி, 'இப்போதுள்ள வானெலிப் பெட்டியை, அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பைக் கேட்கும் வகையில் எளிதில் மாற்றியமைக்க முடியுமா?' என்பதேயாகும். அறிவியல் கொள்கைப்படி இது முடியக்கூடியதே! ஆனுல் எளிதானதோ அல்லது சிறந்ததோ அல்ல! ஆகவே, அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பைக் கேட்பதற்கு உதவும் வானெலிப் பெட்டி வேறுபட்டதேயாகும். அலைவீச்சுப் பண்பேற்ற வானெலிப் பெட்டியைவிட, அலைஎண் பண்பேற்ற வானெலிப் பெட்டி விலை உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. ஆனுல், நான் முன்பே குறிப்பிட்டபடி, அலைஎண் பண்பேற்ற முறை ஒலி பரப்பு, சிறந்த தரமான இசை நிகழ்ச்சிகளை அளிக்கும். இந் நிகழ்ச்சிகளை முழுஅளவில் பயன் படுத்திக்கொள்ள, வானெலிப் பெட்டியும் உயர்தரமான நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டும். ஆகவே, அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பைக் கேட்க உதவும், வானெலிப் பெட்டி அதிக விலையுடையதாக இருக்கக்கூடும். ஆனுல் அலைவீச்சுப் பண்பேற்ற ஒலிபரப்பைக் கேட்க உதவும் 'ஹி.பி.' வானெலிப் பெட்டியைவிட அதிக விலையுடையதாக இருக்காது.



''குறைந்த தூரத்திற்கே ஒலிபரப்ப முடிவது, ஒலிபரப்புச் செய்வதற்கு அதிகச் செலவு செய்ய வேண்டியுள்ளது, விலை அதிகமாக உள்ள வானெலிப் பெட்டி வாங்க வேண்டியுள்ளது ஆகியவை அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பு முறையின் குறைதிசயங்களாகும். இக்குறைதிசயங்கள், அலைஎண் பண்பேற்ற ஒலிபரப்பு மேலும் பெருகுவதைக் கட்டுப்படுத்துகின்றன. ஆனுல் இவ்வகையில் தரமான இசையைக் கேட்க விரும்புகின்றவருக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் இவ்வொலி பரப்பு முறை அமைந்துள்ளதால், அதிகச் செலவு செய்வது நியாயமானதே என்று நாங்கள் எண்ணுகின்றேம்.''

—நன்றி :

**அனைத்திந்திய வானெலி நிலையம், சென்னை-4.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், [illegible]



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

''காந்தி அடிகள்''

''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

''மகாகவி பாரதியார்''



பதிவு எண். M. 8676




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"




# தமிழரசு

மலர் : 8 இதழ் : 3

1—8—1977


அட்டைப்படம்
நமது குடியரசுத் தலைவர்

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் 1977-78-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.. | 4 |
| படமும் செய்தியும் | 27 |
| வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும்! | 33 |
| நமது குடியரசுத் தலைவர் (வாழ்க்கை வரலாறு) | 43 |
| கல்வியே ஆற்றல்!.. | 45 |
| எல்லாரும் பாராட்டும் கல்வி ஒலிபரப்புகள் | 47 |


## தமிழ்நாடு அரசின் 1977-78-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பு அம்சங்கள்!

* அடிப்படைத் துறைகளான வேளாண்மை, பாசனம், மின்சக்தி, தொழில்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் அளித்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* குடிநீர் வழங்கல், கல்வி, நல்வாழ்வு, அரிசனங்கள்—பழங்குடிகள் — பின் தங்கிய வகுப்பினர் நலன் முதலிய சமூகப் பணிகளுக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்பட்டுள்ளது.
* நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது 260 கோடி ரூபாய் அளவில் இருந்த நடப்பு ஆண்டுத் திட்டம், இப்போது 263.5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
* கிராமப்புறங்களிலும் தொழில்களைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையுடன், அடுத்த 12 மாதங்களில் 10,000 சிறுதொழில்கள் தொடங்கவும், குறைந்தது இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
* கைத்தறி வளர்ச்சிக்குத் தலையாய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.
* அரிசன—பழங்குடி மாணவர்களுக்கு எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி; பள்ளி இறுதி வகுப்பு வரை இலவசப் புத்தகங்கள்!
* வறுமையில் வாடிடும் விதவைகள் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி பெற உதவித் தொகை அளிக்கப்படும். அவர்தம் குழந்தைகளுக்குப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும்.
* அகால மரணமடையும் மீனவர்களின் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் மானியம்!
* கிராமப்புற மக்களின் உடல் நலம் காக்க நடமாடும் மருத்துவமனைகள்!
* ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு மாதந்தோறும் 75 ரூபாய் உதவித் தொகை!
* கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு நிலப்படை!
* அரசு அலுவலர்களுக்குக் கூடுதல் அகவிலைப் படி; மூன்றாவது ஊதியக்குழு!
* அரசுப் பரிசுச் சீட்டு தொடர்ந்து நடைபெறும்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுடன் , மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் திரு கே. மனேகரன் அவர்கள் 1977-78-ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுவதற்காக எடுத்துச் செல்கிருர்.



மாண்புமிகு தமிழ்நாடு நிதியமைச்சர் திரு கே. மனேகரன் அவர்கள், 1977-78-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை 25.7.1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்து உரையாற்றினுர்.

# தமிழ்நாடு அரசின்

## 1977-78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை

தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு கி. மனோகரன் அவர்கள் 1977–78ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25ஆம் நாளன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1976–77ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும் 1977–78ஆம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் முன் ஒப்புதலுக்காக வைக்கிறேன்.*

2. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்கு வேண்டிய மானிய முன் அனுமதி, தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவியபோது நாடாளுமன்றத்தில் பெறப்பட்டதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இப்போது இந்த ஆண்டுக்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து ஆண்டு நிதி ஒதுக்கீட்டுக்கு அதன் ஒப்புதலைக் கோருகிறோம். இப் புதிய அரசு பதவியேற்றபின் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளை மாற்றியமைக்க அவகாசமும் வாய்ப்பும் போதிய அளவில் இல்லாதிருந்த போதிலும், இந்த ஒதுக்கீடுகளை விரைவாகப் பரிசீலனை செய்து நமது முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் அவசியமான இடங்களில் அவற்றை மாற்றியமைத்துள்ளோம். இதே முறையில் நடப்பாண்டில் நாம் முன்னுரிமை அளிக்கும் திட்டப் பணிகளுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் தேவைப் படுகின்ற நிதி ஒதுக்கீடுகளையும் மாற்றங்களையும் தொடர்ந்து செய்வோமென அவையினருக்கு உறுதி கூறுகிறேன்.



கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் தக்க முறையிலே பயன் படுத்தினால் சமுகத்தை நிச்சயமாகத் திருத்தி அமைத்திடலாம்.

—பேரறிஞர் அண்ணா

3. பொதுவாக இந்தியா முழுவதிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் நிலவுகிற பொருளாதார நிலையையொட்டி வரவு-செலவுத் திட்டத்தை நாம் தயாரிக்க வேண்டியுள்ளது. விலைவாசி நிலையாக ஒரு சில காலம் இருந்தபின், தற்சமயம் அனைத்திந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்கச் சக்திகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. தென் உணவு மண்டலம் உருவாக்கப்பட்டு, தமிழ் நாட்டில் உணவுத் தானியங்களின் விலைவாசி உயர்வு பெரும்பாலும் கட்டுக்கடங்கியிருந்தது என்றாலும், சமையல் எண்ணெய்கள், வணிகப் பயிர்கள், தொழிற்சாலைகளில் தயாரிக்கும் பொருள்கள் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துள்ளன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, அதே நேரத்தில், வளர்ச்சியை ஊக்குவித்து வேலைவாய்ப்புகளைப் பெருக்கவேண்டும். இதற்கான நிதி நிர்வாகக் கொள்கைகளையும் வரிவிதிப்புக் கொள்கைகளையும் வகுக்கும் அதிகாரம் பெரிதும் மத்திய அரசிடமே உள்ளது. தேசியப் பொருளாதாரக் கொள்கைகளை இவ்வாறு செம்மையான முறையில் நிறைவேற்றுவதில் மத்திய அரசுக்கு ஆக்க பூர்வமான ஒத்துழைப்பு அளிப்பதோடு, நிதி இடர்ப்பாடுகளோ முன்னுரிமைகளில் முரண்பாடுகளோ ஏற்படாத வகையில், முதலீடும் பொதுநலனும் பெருக, நாம் மாநிலத் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டியுள்ளது. உடனடித் தேவைகளுக்கும் குறுகிய காலத் தேவைகளுக்கும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்யும்போது, தமிழ் நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்குரிய தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். பற்றாக்குறை நிதி நிலையைத் தவிர்க்க வேண்டும்; அதே நேரத்தில், வரிச்சுமையை மேலும் மேலும் உயர்த்த முடியாது. அரசு அலுவலர்கள், ஏனைய அலுவலர்கள் ஆகியவர்களின் கோரிக்கைகளைக் கருதிப் பார்ப்பதுடன், மாநில வளர்ச்சிக்கும் மக்களின் இன்றியமையாத் தேவைகளுக்கும் போதுமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதும் அவசியம். விலைவாசிகளை உயர விடாமல் பொருள்களின் உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் பெருக்கவேண்டும். நடைமுறையிலிருக்கும் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்த வேண்டும்; இதே நேரத்தில், புதிய திட்டங்கள் பலவற்றையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் வரவு-செலவுத் திட்டத்தை வகுக்கும்போது எல்லாப் பிரச்சினைகளையும் சீர்தூக்கிச் சமன் செய்யும் நோக்குடன் அணுக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

4. மத்திய-மாநில நிதி உறவுகள் சீராக இல்லாதிருக்கும் இப்போதைய நிலை குறித்து, திரு எம். சி. செதல்வாடு அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆய்வுக் குழு செய்த அறிக்கையின் தொடக்கத்திலேயே பொருத்தமாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அறிக்கையில் சொல்லியிருப்பதாவது :

"அரசியலமைப்புச் சட்டத்தில் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே நிதி ஆதாரங்களையும் பொறுப்புகளையும் பிரித்துக் கொடுத்திருக்கும் முறை எப்போதும்

மத்திய அரசுக்கு உபரியையும் மாநில அரசுகளுக்குப் பற்றுக்குறையையும் விளைவித்து வருகிறது. கூட்டாட்சி அமைப்பு எதிலும் நிதி ஆதாரங்களையும் பொறுப்புகளையும் துல்லியமாகச் சமன்படுத்த இயலாதெனினும், இந்தியாவில் மத்திய அரசுக்கு மிகச் சாதகமாக இவை அமைக்கப்பட்டுள்ளன. எனவே, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி உறவுகளின் மிக முக்கியமான அம்சம், மத்திய அரசு எப்போதும் வழங்கும் நிலையிலும் மாநில அரசுகள் எப்போதும் வாங்கும் நிலையிலும் இருப்பதுதான்."

சமூக நலக் கொள்கையான மதுவிலக்கால் ஏற்படும் வருவாய் இழப்பு காரணமாக, ஏனைய பெரும்பாலான மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ் நாட்டின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு உணர்வர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளில் ஒன்றாகிய மதுவிலக்கைச் செயற்படுத்துவதால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யவேண்டுமென்று மத்திய அரசிடம் பலதடவை முறையிட்டும் அதனை அவர்கள் ஏற்காதது நமக்குப் பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறது. ஏழாவது நிதிக் குழு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, தமிழ் நாட்டின் நலன்களைப் பொறுத்த அளவில், இதிலும் முக்கியமான பிறவற்றிலும் நமது கோரிக்கைகளை வலியுறுத்துவோம்.

**அரசியல் குறுக்கீடு கூடாது!**

நாலரைக் கோடி தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது எந்த அரசியலும் குறுக்கிட்டுவிடக் கூடாது என்பது ஒன்றுதான் எனது அக்கறையே தவிர, வேறு எதுவுமல்ல என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன்.

—முதலமைச்சர் திரு எம்.ஜி. ஆர்




### ஆண்டுத் திட்டம்

5. அடிப்படைத் துறைகளான வேளாண்மை, பாசனம், மின் சக்தி, தொழில்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் அளித்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில், 1977-78 ஆண்டுத் திட்டத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதே நேரத்தில், குடிநீர் வழங்கல், கல்வி, சுகாதாரம், அரிசனங்கள்-பழங்குடி மக்கள்-பின்தங்கிய வகுப்பினர் நலன் முதலிய சமூகப் பணிகளுக்கும் சிறப்புக் கவனம் அளித்துள்ளோம். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நடப்பு ஆண்டுத் திட்டம் 260 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இது இப்போது 263·5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. முக்கியத் துறைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் வருமாறு: மின் சக்தி 94·9 கோடி ரூபாய்; பாசனம் 24·7 கோடி ரூபாய்; வேளாண்மையும் தொடர்பான துறைகளும் 30·2 கோடி ரூபாய்; தொழில்கள் 13·8 கோடி ரூபாய்; போக்குவரத்தும் சாலை வசதியும் 25·2 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றலும் 26·5 கோடி ரூபாய்; கல்வி 13·3 கோடி ரூபாய்; ஏனைய சமூக-பொருளாதாரப் பணிகள் 34·9 கோடி ரூபாய்.

### வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளும்

6. தென்மேற்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாக, 1976-77ஆம் ஆண்டில் வேளாண்மை உற்பத்தி தமிழ் நாட்டில் ஓரளவு குறைந்தது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். அந்த ஆண்டில், ஒரு துரித மதிப்பீட்டின்படி, உணவுத் தானிய உற்பத்தி 74 இலட்சம் டன் என மதிப்பிடப்படுகிறது; கரும்பு (வெல்ல) உற்பத்தி 13·5 இலட்சம் டன் எனவும், எண்ணெய் வித்துக்கள் 13·4 இலட்சம் டன் எனவும், பருத்தி 3·6 இலட்சம் பொதிகள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. நடப்பாண்டில் உணவுத் தானியங்கள் 84 இலட்சம் டன் அளவும், கரும்பு (வெல்ல) உற்பத்தி 14 இலட்சம் டன் அளவும், எண்ணெய் வித்துக்கள் 14·9 இலட்சம் டன் அளவும், பருத்தி 4 இலட்சம் பொதிகள் அளவும் உற்பத்தி செய்ய வேண்டுமென இலக்கிட்டுள்ளோம். இக் குறிக்கோள்களைக் குறைவின்றி எய்த அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்வோம்.

7. அரசு விதைப் பண்ணைகளை விரிவுபடுத்தவும் மிகு பயன் தரும் பயிர் விதைகளை அதிக அளவில் பகிர்ந்தளிக்கவும் ஆண்டுத் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். நாம் முன்னுரிமை அளித்துள்ள மற்றொரு துறை மண்வளப் பாதுகாப்பாகும். வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென 302 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டம் புன்செய் சாகுபடிப் பகுதிகளுக்குக் குறிப்பாக நன்மையளிக்கும். மேலும், இத்திட்டம் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் உதவும். வணிகப் பயிர்கள், கறிகாய், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் வேளாண்மையைப் பலதிறப்படுத்த சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படும். வேளாண்மைப் பொருள்களுக்கு விற்பனை வசதிகளை விரிவுபடுத்த இதுவரை போதிய கவனம் செலுத்தப்படவில்லை. இதற்கெனத் தனிப்பட்ட இயக்குநர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளோம். அங்காடிக் குழுக்கள் விவசாயிகளுக்கு நற்பணியாற்றவும், மாநிலம் முழுவதிலும் உள்ள விற்பனை வசதிகளைப் பெருக்கவும் இது உறுதுணையாயிருக்கும். இதனால் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை பெறுவார்கள். நிபுணர் குழு செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் பயிர் காப்புறுதித் திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்து வருகிறது. இத்திட்டத்தை விரைந்து கொண்டு வருமாறும் தமிழ் நாட்டில் இத்திட்டத்தைப் பரவலாகச் செயற்படுத்துமாறும் மத்திய அரசை வேண்டியுள்ளோம்.

8. மீனளத் துறையைப் பொறுத்தவரை இடைத்தரகர்கள் நடவடிக்கைகளைக் குறைத்து, நாளடைவில் அவற்றை நீக்குவதன் மூலமாக மீனவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதிப்படுத்துவதே எங்கள் கொள்கையாக இருக்கும். இதன் பொருட்டு, கடன் வசதி, விற்பனை வசதி, பதப்படுத்தும் வசதி ஆகியவை இணைப்பாக அளிக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து கடல் மீன் முதலியவற்றைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பல வசதிகளை அரசாங்கம் நேரடியாகவும், கூட்டுத் துறையின் மூலமாகவும் வழங்க முற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின்கீழ் தூத்துக்குடியில் மீனளக் கல்லூரி ஒன்று நடப்பாண்டில் தொடங்கப்படும். கடல் மீனளத்தைப் பெருக்குவதற்கான வழக்கமான வேலைத் திட்டங்களுடன் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர்ப்பதற்கான திட்டங்கள் பலவற்றையும்

வகுத்துள்ளோம். கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 15 கிராம முக்கிய வட்டாரங்கள் அமைக்கப்படும். ஐந்து கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும். பாலைப் பதப்படுத்தவும், பால் மாவு, கால்நடைத் தீவனம் தயாரிக்கவும், ஈரோடில் 3 கோடி ரூபாய் மொத்தச் செலவில் புதிதாகப் பாற்பண்ணை அமைக்கப் படும். காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 51,104 ஏக்கர் பரப்பில் மரங்கள் நடப்படும்.

9. மாநில நிலவள வங்கி கடனளிக்கும் திட்டத் திற்காக, அதற்கு அரசு 145 இலட்சம் ரூபாய் உதவும்; இந்த உதவி பெற்று நிலவள வங்கி விவசாயிகளுக்கு 18 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்க இயலும். நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்களையும், பதப்படுத்து கூட்டுறவு நிறுவனங்களையும் (Processing Societies) இன்னும் பல இடங்களில் வலுப்படுத்தலும், செலவுக் கடனும் நகைகளின் மேல் கடனும் கொடுக்க நிதி வசதிகளைப் பெருக்குதலும், இம் மாநில அரசு, கூட்டுறவு வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளவிருக்கும் ஏனைய முக்கியமான திட்டங்களாகும்.

### பாசனம்

10. 1975-76ஆம் ஆண்டில் பாசன முதலீடு 11·9 கோடி ரூபாயாக இருந்தது. இத் தொகை 1977-78ஆம் ஆண்டில் இரு மடங்கிற்குமேல் அதாவது 24·7 கோடி ரூபாயாக உயருமென்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த காலத்தில், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் போதுமான ஒதுக்கீடு செய்யாமலேயே பாசனத் திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டன; இதனால், இத்திட்டங்களை நிறைவேற்றிமுடிப்பதற்கும் காலதாமத மாயிற்று. நடப்பாண்டில் ஏழு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு வேண்டிய நிதி ஒதுக்கி யுள்ளோம். இவற்றால் புதிதாக 35,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்; ஏற்கெனவே பாசன வசதி பெற்றுவரும் 77,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் செண்பகத்தோப்பு என்னுமிடத்தில் கமண்டலாற்றுக்குக் குறுக்கே 3·55 கோடி ரூபாய் செலவில் நீர்த்தேக்கம் ஒன்றை அமைப்பது நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் முக்கியமான புதிய திட்டமாகும். இந்த நீர்த் தேக்கத்தால் 1,962 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறுவதுடன், ஏற்கெனவே பாசனம் பெற்றுவரும் 10,386 ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி உறுதிப்படும்.

11. காவிரி கழிமுகப் பகுதியில் ஏற்பட்ட இடர்ப் பாடுகள் தமிழ் நாட்டில் பழைய பாசன அமைப்புகளில் பாசன நீரைச் செவ்வையாகவும் சிக்கனமாகவும் பயன் படுத்துவதன் அவசியத்தை நன்கு புலப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக, காவிரி கால்வாய்களைச் சீரமைக்கும் பணி விரைந்து செயற்படுத்தப்பட வேண்டும். இப் பணிக்காக வரவு-செலவுத் திட்டத்தில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பெரியாறு மேம்பாட்டுத் திட்டத் திற்கு உலக வங்கி உதவி அளிக்க முடிவு செய்துள்ளது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். இத்திட்டத்திற்கு மொத்தம் 41·04 கோடி ரூபாய் செலவாகும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 3·16 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தால் 38,000 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி பெறுவதுடன் இப்போது பாசனம் பெற்றுவரும் நிலங்களுக்கும் பாசன வசதி உறுதிப்படும்.



12. சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி, குளங்களைத் தூர்வாரிச் சீரமைக்கவும் வரவு-செலவுத் திட்டத்தில் 4·7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுபாசனத் திட்டங்களுக்காக அரசே இவ்வாறு முதலீடு செய்வது தவிர, பாசனக் கிணறுகள் தோண்டுவதற்காக உழவர்களுக்கு உதவி செய்ய, கூட்டுறவுத் துறையில் நிதி ஒதுக்கீடு உள்ளது. கிராம மின் வசதித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் ஏறக்குறைய 30,000 பம்ப் செட்டு களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும். நம் மாநிலத்தில், குறிப்பாக மேற்பரப்பு நீர் அநேகமாகப் பயன் படுத்தப் பட்டுவிட்டதைக் கருதிப் பார்க்கும்போது, நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பது அவசியம். எனினும், பெரும்பாலான பகுதிகளில் நிலத்தடி நீர் உரிய அளவுக்கு அதிகமாகவே இறைக்கப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இதனால் ஆண்டுக்காண்டு நிலத்தடி நீர் மட்டம் தாழ்ந்து விடுகிறது. இந்த நிலைமை நீண்டகால நோக்கில் தீமை பயப்ப தாகவும் தமிழ் நாட்டின் எதிர்கால நன்மையைப் பாதிப்பதாகவும் உள்ளது. வரும் மாதங்களில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கும் அதன் பயனை முறைப் படுத்துவதற்கும் இந்த பிரச்சினையை எல்லாக் கோணங் களிலிருந்தும் ஆராய அரசு முற்படும்.

### மின் சக்தி

13. தமிழ் நாட்டில் மின் உற்பத்தித் திறன் தற்போது 2,364 மெகாவாட்டாகும். 1977–78-ல் குந்தா-IV விரிவு நிலைத் திட்டமும் சுருளியாறு திட்டமும் செயற் படத் தொடங்கும். இதனால் மின் இணைப்பு ஏற்பாட்டில் 145 மெகாவாட் கூடுதலாகக் கிடைக்கும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கு (2×210 மெகாவாட்) 43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செவ்வனே செயற்படுத்தப்பட்டு வருகிறதென இந்த அவைக்கு உறுதி கூறுகிறேன். முதல் பிரிவு 1978 டிசம்பர் மாதத்தில் செயல்படத் தொடங்கும்; இரண்டாவது பிரிவு 1979 ஜூன் மாதத்தில் செயல்படத் தொடங்கும்.

14. மின் சக்தி வளர்ச்சி தொடர்ந்து திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டிய பணியாகும். நெய்வேலியில் தற்போதுள்ள சுரங்கத்தினை வைத்து 200 மெகாவாட் அனல் மின் நிலையம் ஒன்று தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதை நாம் வரவேற்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற் குரிய விரிவான ஆய்வுப் பணிகளுக்கு மத்திய அரசு அனுமதித்துள்ளதும் வரவேற்கத் தக்கதாகும். இந்த ஆய்வுப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்க முடிவுகள் எடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நெய்வேலியில் மாபெரும் அனல் மின் நிலையம் அமைக்க வேண்டியது அவசியம். கல்பாக்கம் அணு சக்தித் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டு மென்றும் தமிழ் நாட்டில் இரண்டாவது அணுசக்தி நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசிடம் கேட்டுள்ளோம்.

15. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் மூன்றாவது பிரிவைத் (210 மெகாவாட்) தொடங்கும் திட்டம் ஒன்றை நாம் ஏற்கெனவே தயாரித்துள்ளோம்; இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் விரைவில் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணியை நடப்பாண்டிலேயே தொடங்க வேண்டு மென்பதும் முதல் இரண்டு பிரிவுகள் செயல்படத் தொடங்கிய பின்னர், இயன்ற விரைவில், மூன்றாவது பிரிவு இயங்க வேண்டும் என்பதும் நமது நோக்க மாகும்.

16. மின் சக்தி உற்பத்தித் திறனைத் திட்டமிட்டுப் பெருக்குவதுடன், வழங்கப்படும் மின் சக்தியின் தரத்தை மேம்படுத்தவும் மின் இழப்பினைக் குறைக்கவும் நாட்டம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, மின் சக்தியைக் கொண்டுசெல்வ தற்கும் வழங்குவதற்கும் 1976-77-ல் 14 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் இத்தொகை இருமடங்காக, அதாவது 28·5 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

### தொழில்கள்

17. நூற்று இருபத்தேழு கோடி ரூபாய் முதலீட்டுடன் சேலம் உருக்காலையின் முதல் நிலைப் பணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். இத்திட்டத்தை விரைந்து செயற்படுத்தப் போதுமான நிதி ஒதுக்கம் தொடர்ந்து செய்யப்பட வேண்டுமென நாம் இந்திய அரசிடம் எடுத்துக் கூறியுள்ளோம்.

18. மாநில அரசின் ஆண்டுத் திட்டத்திலுள்ள பல்வேறு தொழிற் திட்டங்களுக்கும் வேலைத் திட்டங்களுக்கும் 13·77 கோடி ரூபாய் அளவுக்குக் கணிசமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் அரசுத் துறை, கூட்டுத் துறைத் திட்டங்களில் 1977-78-ல் மொத்தம் 20 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும். அரியலூரில் உள்ள அரசுத் துறை சிமெண்ட் தொழிற்சாலையில் திட்டமிட்டபடி பணி நிறைவேறி வருகிறது. இது ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். இதன் மொத்த முதலீடு 29 கோடி ரூபாயாகும். வேலூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், தஞ்சாவூரில் உள்ள அரசுத் துறை சர்க்கரை ஆலையும் 1976-77-ல் செயல்படத் தொடங்கின. பெரம்பலூர் சர்க்கரை ஆலை 1977 செப்டம்பர் திங்களில் கட்டி முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொரு சர்க்கரை ஆலை நிறுவ வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் தோல், மின் அணுவியல், பட்டுப் புழு வளர்ப்பு ஆகிய துறைகளில் கணிசமான அளவு வாய்ப்பு உள்ளமையால், இவை தொடர்பான தொழில் திட்டங்களுக்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

### கிராமங்களில் தொழில் வளர்ச்சி

19. தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகள், சிறு நகரங்கள் அனைத்திலும் தொழில்களைப் பரவலாக ஏற்படுத்தத் திட்டமிட்டு நிறைவேற்றுவதே நமது அரசின் உறுதியான கொள்கையாகும். தமிழ் நாட்டில் பதிவு பெற்ற சிறு தொழிற்கூடங்கள் 50,000 என்ற அதிக அளவில் இருந்தபோதிலும், இவற்றில் பல தொழிற்கூடங்களில் உற்பத்தி



குறைந்த அளவில் உள்ளது; பல தொழிற்கூடங்கள் மூடியும் கிடக்கின்றன. இச்சூழ்நிலையில் தற்போதுள்ள சிறு தொழிற்சாலைகள் முழு அளவு உற்பத்தித் திறன் எய்தாமைக்கான காரணங்கள் பற்றி விரிவான ஆய்வை விரைவாக மேற்கொள்வதென முடிவு செய்துள்ளோம். இந்த ஆய்வின் அடிப்படையில், உற்பத்தி குறைந்துள்ள அல்லது செயலற்று முடங்கிக் கிடக்கும் சிறு தொழிற்கூடங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளித்து உற்பத்தி தொடங்கும் வகையில் தேவையான நிதி உதவி, தொழில் நுட்ப ஆலோசனைகள், மூலப் பொருள்கள் வழங்கல், விற்பனை ஏற்பாடுகள் ஆகியவைகளுக்கு உதவி அளிக்கப்படும்.

20. நவீன சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள், வாணிபம், ஏனைய பணி நடவடிக்கைகள் ஆகியவற்றில் இயன்ற அளவு சொந்தமாகத் தொழில் தொடங்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதன் மூலம் மட்டுமே, வேலையில்லாப் பிரச்சினைக்கு, குறிப்பாகப் படித்து வேலையற்றிருப்போரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும். கடந்த ஆண்டில் புதிதாக 4,000 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அடுத்த 12 மாதங்களில் 10,000 சிறு தொழில்கள் தொடங்கப்பட வேண்டுமென்பதை நாம் குறிக்கோளாக ஏற்றுக் கொண்டுள்ளோம். இவை ஏறக்குறைய 50,000 பேர்களுக்காயினும் வேலை வாய்ப்பளிக்கும். இதற்காக மாநிலத் தொழில் இயக்குநர் அலுவலகமும் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (சிட்கோ) சிறு தொழில் முனைவர்களுக்குப் பல வழிகளில் உதவி செய்யும் நல வளர்ச்சி நிறுவனங்களாகச் செயற்படும். அதே நேரத்தில், செருப்பு தைப்போர், தையற்கலையில் ஈடுபடுவோர், சலவைத் தொழிலாளர், பொற்கொல்லர், கருமார், தச்சர், நீர்க் குழாய்ப் பணியாளர், பழுது பார்ப்போர் இது போன்ற தொழில்களில் ஈடுபட்டிருப்போருக்கு சுய வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க ஊக்கமும் உதவியும் அளிக்கப்படும். வங்கிகளில் நிதி உதவி பெற்று, இத்திட்டத்தின் மூலம் அடுத்து வரும் 12 மாதங்களில் குறைந்தது இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த முற்படுவோம்.

21. கிராமப் பகுதிகளில் உள்ள மகளிருக்கு வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் பொறுப்பை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. இந்தப் பணியில் ஆண் துணையற்ற மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு வீட்டுத் தொழில்களிலும் குடிசைத் தொழில்களிலும் ஏற்படும் வேலை வாய்ப்பு கிராமக் குடும்பங்களுக்கு வருவாயை அதிகரிப்பதுடன், சமூக அமைப்பின் குறைபாடுகளிலிருந்து மகளிர் விடுபடவும் உதவும். வீட்டுத் தொழில்களை விரிவுபடுத்தத் திட்டமிடும்போது, உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்குரிய வசதி குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இத் தொழிற் கூடங்களில் நம் மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் உள்ள மக்களின் தேவைகளுக்கேற்ப உற்பத்தி முறைகளை அமைக்க வேண்டும். இவை குறித்து அரசுக்கு ஆலோசனை நல்கவும், திட்டங்களைச் சிறப்பாகவும் விரைவாகவும் வகுக்க வழிவகை கூறவும் நிபுணர் குழு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம்.

### கைத்தறி வளர்ச்சி

22. கைத்தறி வளர்ச்சிக்கு நாம் தலையாய முக்கியத்துவம் அளிக்கிறோம். கைத்தறி, தமிழ் நாட்டின் பொருளாதாரத்திற்கும் இதனை நம்பி வாழ்கின்ற 20 இலட்சம் மக்களுக்கும் உறுதுணையான தொழிலாகும். கைத்தறித் துறைக்கான வசதிகள் தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அளிக்கப்பட்டு வருகின்றன; நடப்பாண்டில் மேலும் 30,000 நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம். இந்த வசதிகள் நெசவாளர்களுக்குக்



கிட்டுவதில் இருக்கும் குறைபாடுகளை நீக்க இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். கைத்தறித் துணியைக் கொள்முதல் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தேவையான நிதி உதவியை அளிக்க அரசு முன்வரும். சேலைகள், வேட்டிகள் வடிவிலான கட்டுப்பாட்டுத் துணி உற்பத்தி செய்யும் பணியைக் கைத்தறித் துறையிடம் ஒப்படைப்பதென இந்திய அரசு முடிவு செய்துள்ளதை நாம் வரவேற்கிறோம். இதனால் தமிழ் நாட்டில் ஏறக்குறைய 25,000 நெசவாளர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கிடைக்கும். நடப்பாண்டில், சேலம், மதுரை, குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்படும். நுகர்வோரின் மாறிவரும் விருப்பங்களுக்கேற்ப, கவரும் வகைகளில் கைத்தறித் துணிகளைத் தயாரிக்கும் பொருட்டு, சென்னையிலும் மதுரையிலும் வடிவமைப்பு நிலையங்கள் (Design Centres) அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கைத்தறித் துணி விற்பனை வாய்ப்பினை மேம்படுத்தும் பொருட்டு, கூட்டுறவுத் துறையில், இரண்டு இலட்சம் கைத்தறிகள் பயன்படும் வகையில், விரிவான உற்பத்தித் திட்டம் ஒன்றை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

### சமூக நலப் பணிகள்

23. சமுதாயத்தில் வறிய, நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார வாய்ப்புகளையும் மேம்படுத்துவதற்காக உருவாக்கப்படும் திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளிப்பது இப் புதிய அரசின் கொள்கையாகும். அனைத்து மக்களுக்கும் வேலை வாய்ப்புகளையும் வருவாயையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொதுவான வளர்ச்சித் திட்டங்களுடன், அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர், மீனவர், கைத்தறி நெசவாளர், ஆதரவற்ற விதவைகள் போன்றவர்கள் நீண்ட நெடுங் காலமாக அனுபவித்து வரும் துன்பங்களைக் களைய நாம் நேரடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில், கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், கல்வி, சுகாதார வசதிகள், வீட்டு வசதி, சாலைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவை கால வரம்புக்குட்பட்ட திட்டவட்டமான பணிகள் மூலமாக அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும். இது இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நாம் அவசிய அவசர உணர்வோடு கடைப்பிடிக்க முற்பட்டுள்ள கொள்கையாகும்; வருங்காலத்திலும் நாம் நிறைவேற்றும் கிராமப்புற, பின்தங்கியோர் வளர்ச்சி-நல நடவடிக்கைகளில் இக்கொள்கையைப் பின்பற்றுவோம்.

### கிராமக் குடிநீர் வழங்கல்

24. நல்ல குடிநீர் போதிய அளவில் கிடைப்பது மக்களின் இன்றியமையாத் தேவையாகும். தமிழ் நாட்டில் கிராமப் பகுதிகளில் 55,000 குடியிருப்புகளில் குடிநீர் வசதி அளிப்பதற்கு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புகளில் 38,450 குடியிருப்புகளில் மட்டுமே தற்சமயம் நல்ல குடிநீர் போதிய அளவு கிடைக்கும் வசதிகள் உள்ளன என இந்த ஆய்வு புலப்படுத்தியுள்ளது. எஞ்சிய 16,550 குடியிருப்புகளில் 17 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 4,010 குடியிருப்புகளில் ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் குடிப்பதற்கேற்ற நீர் நிலையே இல்லை. இக் குடியிருப்புகளுக்கு உயரிய முன்னுரிமை அளித்துக் குடிநீர் வழங்க ஏறக்குறைய 14 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. முதற் கட்டமாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென முடிவு செய்து நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 6.65 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இதற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின்கீழ் மேலும் 3 முதல் 4 கோடி ரூபாய் கிடைக்குமென நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த 12 மாதங்களுக்குள் இக் குடியிருப்புப் பகுதிகளுக்குப் போதிய அளவில் குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும். நடப்பாண்டு இறுதிக்குள்ளேயே இவற்றில் பெரும்பாலான குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும். அரிசனங்கள், பழங்குடி மக்கள், பின்தங்கிய வகுப்பினர் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்கு இத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

### அரிசனங்கள்—பழங்குடியினர் நலன்

25. அரிசனங்கள், பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர் நலனுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 23·57 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசனங்கள், பழங்குடியினர் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள் அளிப்பது குறித்து நாம் முக்கியமான முடிவுகள் சிலவற்றை எடுத்துள்ளோம். இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அரிசன, பழங்குடி மாணவர்களுக்கு அவர்கள் பள்ளி இறுதி வகுப்பு பயிலும் வரை (அவர்களுடைய பெற்றோர் வருவாய் எவ்வளவாயிருந்தாலும்) இலவசமாகப் புத்தகங்கள் வழங்குவதென்றும் சிறப்புக் கட்டணங்களையும், தேர்வுக் கட்டணங்களையும் இலவசமாக்குவதென்றும் முடிவு செய்துள்ளோம். மேலும், கல்லூரிப் படிப்பு நிலையில் அரிசன, பழங்குடி மாணவர்கள் அனைவருக்கும் (அவர்களுடைய பெற்றோர் வருவாய் எவ்வளவாயிருந்த போதிலும்) படிப்புக் கட்டணமின்றிப் பயில வசதியளிப்பதென நாம் முடிவு செய்துள்ளோம். இந்த முடிவுகளின் விளைவாக, அரிசன, பழங்குடி மாணவர்கள் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி பயில்வர். பள்ளி இறுதி வகுப்பு நிலை வரை முற்றிலும் இலவசக் கல்வி பெறுவதுடன், இலவசமாகப் புத்தகங்களும் பெறுவர். இத் திட்டத்திற்காகக் கூடுதலாக 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

26. தமிழ் நாட்டின் பழங்குடி மக்களின் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகளைக் கணிசமாக உயர்த்தியுள்ளோம். 1976-77-ல் பழங்குடி மக்கள் துணைத்திட்டத்திற்கு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, நடப்பாண்டில் இது 153 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.







ஆங்காங்கே இதற்கான ஆலோசனை கூற உதவி நிலையங்களை அமைக்க இருக்கிறோம்.

## மகளிர் நலன்

27. வறுமையில் வாடும் விதவைகளுக்கும் பிற மகளிருக்கும் உதவ புதிய திட்டங்கள் சிலவற்றைக் கொண்டுவர முடிவு செய்துள்ளோம். ஆண்டொன்றுக்கு 3,000 ரூபாய்க்குக் குறைவான வருவாய் உள்ள, 16 முதல் 30 வயதுள்ள, 1,000 ஏழை மகளிர் சுருக்கெழுத்து, தட்டச்சு வடிவில் தொழிற்பயிற்சி பெற அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 150 உதவித்தொகை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,000-க்குக் குறைவான வருவாய் உடைய கைம்பெண்களின் சிறுர்களுக்குப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் இலவசமாக அளிக்கப்படும். ஆயுள் ஈட்டுறுதித் தொகை, வருங்கால வைப்புத் தொகை போன்ற பயன்களைப் பெற கைம்பெண்களுக்கு உதவவும், கல்வி வசதிகள் குறித்தும் வேலை வாய்ப்புகள் குறித்தும் அவர்களுக்கு ஆலோசனை அளிக்கவும், அவர்களுடைய சிறுர்களை அனுதை இல்லங்கள், கல்விக்கூடங்கள் முதலியவற்றில் சேர்ப்பது குறித்து வழி காட்டவும் மாநிலம் முழுவதிலும்

## மீனவர் நலன்

28. மீனவர்கள், அவர்தம் குடும்பத்தினர் ஆகியோரின் நலனுக்காகச் சிறப்பு நல நிதி ஒன்று தொடங்கப்படும். கடலில் சென்று இயற்கையின் தாக்குதலால் அகால மரணமடையும் மீனவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாக 5,000 ரூபாய் மானியம் அளிக்கப்படும். இதில் 2,000 ரூபாய் ரொக்கமாகவும் எஞ்சிய தொகை தகுந்த தவணைகளிலும் கொடுக்கப்படும். அவ்வாறு கடலில் உயிரிழக்கும் மீனவர்களின் குடும்பங்கள் தனித்துத் தொழில் நடத்தும் வகையில் மீனவரின் கைம்பெண்கள், சிறுர்கள் ஆகியோரின் புது வாழ்வுக்காக மேற்கொண்டும் 5,000 ரூபாய் செலவிடப்படும். இது மீனவர் நலனுக்கான நிலையானதொரு திட்டமாகும். இப்புதிய நிதிக்கு, அரசு ஆண்டுதோறும் 2 இலட்சம் ரூபாய் அளிக்கவும் முதலமைச்சர் பொதுத் துயர்தணிப்பு நிதியிலிருந்து அதே அளவுத் தொகையை அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

29. தொழிலாளர் நல வாரியம், தொழிலாளர்களின் நலனுக்காகப் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளது. தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசின் அழைப்பின் மேல் சென்னைக்கு வரும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் குறைந்த செலவில் வசதியான தங்குமிடம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு மேற்கூறிய வாரியத்திற்கு அரசு உதவியளிக்கும்.

## கிராம வீட்டு வசதி

30. கிராமப் புறங்களில் வீட்டு வசதிகளை அதிகரிக்க இதுவரை போதுமான அளவு கவனம் செலுத்தப்படவில்லை. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராம வீட்டு வசதிக்காக ஆண்டொன்றுக்கு 2 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வழங்கும். நடப்பாண்டில் 50 கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படும். அடிப்படைத் தேவையாகிய வீட்டு வசதியை அரிசனங்களும் பழங்குடி மக்களும் அடையும் பொருட்டு, வீடுகள் கட்டிக்கொள்வதற்காக, அவர்களுக்கு வட்டியின்றிக் கடன் அளிக்கப்படும். கடன் மீதான வட்டித்தொகை முழுவதையும் அரசு உதவித் தொகையாக அளிக்கும். அரிசன, மீனவர் வீட்டு வசதித் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் எஞ்சிய ஏழு பாகங்களுக்கு 3.2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கிராமச் சாலைகள்

31. பெருந்து வழித்தடங்களுடனும் ஏனைய முக்கிய சாலைகளுடனும் இணைக்கும் சாலைகள் சிறு கிராமங்களின் முக்கியமான தேவையாகும். இதன் பொருட்டு நாம் நடப்பாண்டில் செய்திருந்த ஒதுக்கீட்டை 60 இலட்சம் ரூபாய் அதிகப்படுத்தியுள்ளோம். கிராமப் பகுதிகளில் அணுகு சாலைகள் அமைக்க நடப்பாண்டு

மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். இந்த ஒதுக்கீட்டிலிருந்து நியாயமான பங்கினைத் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கிக் கொடுக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்துவோம்.

கிராமப் பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதும் பொருத்தமான இடங்களில் சிறு பேருந்துகளைப் (Mini Bus) பயன்படுத்தி, அவற்றைப் பெருக்குவதும் எங்கள் கொள்கையாகும்.

## கிராம மருத்துவச் சுகாதார வசதிகள்

32. மருத்துவச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் கிராமங்கள் பெருமளவு புறக்கணிக்கப்பட்டுள்ளன என்றே சொல்லவேண்டும். இக்குறையை நீக்கும் பணியை நாம் உடனடியாகத் தொடங்க வேண்டும். கிராமங்களில் மருத்துவ வசதிகளை அளிக்க நாம் பெரு முயற்சி எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். இத் திட்டம் நடப்பாண்டில் நம் மாநிலத்தில் 24 வளர்ச்சி வட்டாரங்களில் தொடங்கப் பெறும். நடமாடும் மருத்துவப் பிரிவுகள் இரண்டு,



ஒவ்வொரு வட்டாரத்திலும் வாரம் ஒரு முறையாவது ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று மருத்துவ வசதி அளிக்கும். இம் மருத்துவப் பிரிவுகள் அவசியமான மருந்துகளையும் மக்களுக்கு வழங்கும். இப் பிரிவுகளுக்கு உதவி செய்யும் வகையில், ஏறத்தாழ 3,000 மக்கள் தொகைக்கு ஒருவரென ஆங்காங்கே துணை மருத்துவப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, பணி புரிவர்.

33. மேற்கூறிய திட்டத்துடன் கூட, 5,000 மக்கள் தொகை கொண்ட இடங்களில் சிறு சுகாதார மருத்துவ நிலையங்களை (Mini Health Centres) நடத்த, தகுதி வாய்ந்த தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்க நாம் முன்வந்துள்ளோம். இத்தகைய சுகாதார நிலையங்களை நடத்த 54 தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இவற்றுக்காகும் தொடர் செலவில் 50 சதவீதத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் அரசு அவர்களுக்கு ஆதரவளிக்கும்.

34. நிதி நிலை சீராக இராத ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் மருந்தகங்களைச் சரிவர நடத்த இயலவில்லை. எனவே, நிதி நிலை சீராக இராத V, VI நிலை ஊராட்சி ஒன்றியங்களில் அமைந்துள்ள இருபது மருந்தகங்களை அரசு மேற்கொள்ள வகைசெய்துள்ளோம்.

35. பள்ளிச் சிறுர்கள் மருத்துவப் பரிசீலனைத் திட்டம் என்பது முக்கியமான மற்ருெரு புதிய திட்டமாகும். குறிப்பாக, செங்கற்பட்டு, தருமபுரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களின் சில பகுதிகளிலும் அதிக அளவில் உள்ள தொழுநோயைத் தடுப்பது இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத் திட்டத்தின்கீழ் இப்பகுதிகளில் உள்ள 11 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் செவ்வையாகப் பரிசீலிக்கப்பட்டு, தொழுநோய் அல்லது பிற நோய்கள் பீடித்திருப்பின், அவற்றைத் தொடக்க நிலையிலேயே கண்டுபிடித்துக் குணப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத் திட்டத்தின்கீழ் 45 இலட்சம் சிறுர்கள் பயன் பெறுவர்.

## கல்வி

36. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேலை வாய்ப்புகள் குறித்த விரிவான ஆய்வின் அடிப்படையில், உயர் இடைநிலைக் கல்வி நிலையில் தொழில் சார்ந்த படிப்பை இணைப்பதைக் கொள்கையாக நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்த அடிப்படை நோக்குடன், 10+2+3 கல்வி முறைத் திட்டம் தமிழ் நாட்டில் செயற்படுத்தப்படும். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில், மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. பள்ளிகளில் பல்வேறு நிலைகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு, 1,100 புதிய ஆசிரியர்களை நியமிக்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்துள்ள ஊதிய வீதங்களை, பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளிப்பதென்ற முடிவை நாம் செயல்படுத்துவோம். அரசுக் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு பரிந்துரை செய்துள்ள ஊதிய வீதங்களின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட சம்பள வீதங்களை வழங்குவதெனவும் முடிவு செய்துள்ளோம். இந்த முடிவுகள் 1—4—1976 முதற்கொண்டு செயலுக்கு வரும்; நிதிப் பயன் 1—1—1977 முதல் கிடைக்கும்.

37. நாடு தழுவிய எழுத்தறிவு இயக்கத்தைச் செயற்படுத்துவதற்குச் சிறப்பிடம் அளிக்கப்படும். இத்திட்டமும் பள்ளிக்கு வெளியே கல்வி புகட்டும் திட்டமும் எழுத்தறிவைப் பரவலாக்கி, பள்ளிக் கல்வியில் ஏற்படும் கால விரயம், தேக்கம் ஆகியவற்றுல் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் பெருமளவில் உதவும்.

38. விளையாட்டுகளிலும் உடற்பயிற்சியிலும் தனி நாட்டம் செலுத்துமாறு கல்விக்கூடங்கள் அனைத்திலும் உள்ள மாணவர்களை ஊக்கப்படுத்த நாங்கள் ஆவலாக இருக்கிறேம். தமிழ்நாடு விளையாட்டு நிறுவனத்திற்கு 16 இலட்சம் ரூபாயும் மாணவர் உடற்பயிற்சிக்கூடங்களை நிறுவுவதற்காக புதியதொரு திட்டத்தைச் செயற் படுத்தக் கல்விக்கூடங்களுக்கு 3 இலட்சம் ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்குவோம். கல்லூரி மாணவர்களுக்காக உணவு அறை, உள் விளையாட்டு அரங்கங்கள், சைக்கிள் நிறுத்துமிடங்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் புதியதொரு திட்டத்திற்கு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்க முடிவு செய்துள்ளோம்.

## தமிழ் வளர்ச்சி

39. தமிழ் இலக்கியம், கலை ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாப்பதும், வரலாறு, தொல்பொருள் ஆராய்ச்சிக்கு ஊக்கமளிப்பதும் அரசின் கொள்கையாக இருக்கும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட் டுள்ளது. இதன் தொடர்பாக இப்போது வகுக்கப் பட்டுள்ள பணித் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டம் வகை செய்யும். தமிழில் பகுதி நேர பட்டயப் படிப்புமுறையைக் (Part-time Diploma Course) கொண்டு வருவதற்குப் பிற மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் நாம் உதவி செய்வோம். மாதந்தோறும் 75 ரூபாய் என்ற அளவில் ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு உதவித் தொகை அளிக்கப்படும். இந்த உதவியைப் பெற முன்வருவோரின் எண்ணிக்கையையொட்டி, இதற்கான நிதி ஒதுக்கம் செய்யப்படும். திருமலை நாயக்கன் மகால், இராமநாதபுரத்தில் உள்ள இராமலிங்க விலாஸ், தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டை முதலிய முக்கியமான வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவும் இந்த இடங்களில் பொருட்காட்சிகளை நிலையாக அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரிய ஓலைச்சுவடிகளையும் கவனிப்பாரற்று ஆங்காங்கே கிடக்கும் சிற்பங்களையும் சேகரித்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் படும். இதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் நான்கு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். பிற மொழிகளில் உள்ள நூல்களைத் தமிழிலும், தமிழிலுள்ள அரிய நூல்களைப் பிற மொழிகளிலும், மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக நிபுணர் குழு ஒன்றையும் நாம் நிறுவவிருக்கிறேம்.



### நகர்ப்புற வளர்ச்சி

40. கிராமப்புற மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்வதைத் தடுக்கும் வகையில் கிராமங்களையும் சிறு நகரங்களையும் வளர்ச்சியுறச் செய்வதற்கான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்கையில், நகர்ப்பகுதிகளில் வாழும் ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. வளர்ந்து வரும் நகர்ப்புறங்களில் நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ள, இன்றியமையாத் தேவைகளாகிய, குடிநீர் வழங்கு-கழிவு நீர் அகற்று வசதிகள், சாலைகள், போக்குவரத்து, வீட்டு வசதி, குடிசை மாற்றம், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தல் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில், நாம், உலக வங்கியின் உதவியுடன், சென்னை மாநகரில் ஒருங்கிணைந்த நகர வளர்ச்சிப் பெருந்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளோம். இத் திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 6·95 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னர் குடிசையில் வாழ்ந்தவர்களுக்காகக் குடியிருப்புகள் கட்ட 3·6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் குடிநீர், துப்புரவு, தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை அளிக்கும் 5 கோடி ரூபாய் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம். சென்னை மாநகராட்சி, 20 நகராட்சிகள், 70 பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு-கழிவுநீர் அகற்று திட்டங்களைச் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் 12·09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கோயம்புத்தூரில் சிறுவாணி குடிநீர் திட்டத்திற்கான 2·5 கோடி ரூபாய், திருச்சியிலும் ஏனைய நகராட்சிகளிலும் குடிநீர் வழங்கல், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவொற்றியூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகியவற்றில் கழிவுநீர் அகற்று திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான நிதி அடங்கும்.

### அரசுப் பரிசுச் சீட்டு

41. நம் முன்னாள் முதலமைச்சர் அமரர் அண்ணா அவர்கள் 1968–69-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கையில் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தைத் தொடங்கியபோது அறிஞர் அண்ணா அவர்கள் விளக்கியதைப்



போல, மாநிலப் பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கும் தொகை மக்கள் நலத் திட்டங்களுக்காகச் செலவிடப்படுவதனால், இத்திட்டத்தைச் சூதாட்டத் தன்மை கொண்டதாகக் கருதாமல், ஏழை எளியவர்களின் நலனுக்கு உதவும் ஒரு வாய்ப்பாகக் கருத வேண்டும். இக்கருத்தை "விழுந்தால் வீட்டுக்கு; விழாவிட்டால் நாட்டுக்கு" என்று அவருக்கேயுரிய தனித் தன்மையில் அவர் விளக்கினார். பரிசுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையிலும் மக்கள் விரும்பும் வகையிலும் சில மாற்றங்களோடு இத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென முடிவு செய்துள்ளோம். இத் திட்டத்திலிருந்து கிடைக்கும் நிகரத் தொகை கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கு வசதிகளைப் பெருக்க ஒதுக்கப்படும்.

### வேலை வாய்ப்பு

42. எல்லாத் திட்டங்களிலும் திட்டப் பணிகளிலும் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதே நமது தலையாய நோக்கமாகும். வேலையில்லாப் பிரச்சினை அனைத்திந்திய பிரச்சினை என்றாலும், மற்ற மாநிலங்களுடன் ஒப்பு நோக்குமிடத்து, படித்தவர்களும் பயிற்சி பெறாதவர்களும் வேலையில்லாமலும், போதிய வேலை யில்லாமலும் இருப்பது தமிழகத்தில் அதிகமாகவே உள்ளது வருந்தத்தக்கது. கிராமப்பகுதிகளில், குறிப்பாக வேளாண்மை நடைபெறாத காலங்களில், வேலை வாய்ப்பைப் பெருக்க வேண்டியது அவசியம். இந்த முறையில்தான் கிராம மக்களுக்கு வெவ்வேறு மாதங்களில் ஏற்றத்தாழ்வற்ற நிலையான வருவாய் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்த முடியும். நடுத்தர, சிறு பாசனத் திட்டங்கள், கிராமச் சாலைகள், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு முதலிய பணித் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கம் 51·70 கோடி ரூபாயாகும். இத் திட்டங்களைக் கோடைக் காலத்தில் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் பெருக்கும் முறையில் உரிய காலத்தில் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும். இதன் பொருட்டு, நிலப் படை (Land army) போன்ற பொருத்தமானதோர் அமைப்பை ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். இந்த அமைப்பு, கிராமப்புறங்களில் செயல்திறன் கொண்ட இளைஞர் மற்றும் ஏனையோரின் மனித சக்தியைப் பயன்படுத்தி, கிராம மக்களின் நன்மைக்காக நிலையான வசதிகளை உருவாக்கவும் பராமரிக்கவும் செயல்படும். இந்த அடிப்படையில், கோடை மாதங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் பெருக்கும் திட்டத்தைச் செயற்படுத்த இயலும் வகையில் பரிந்துரைகள் செய்ய, தலைமைச் செயலாளரின் கீழ் அதிகாரிகள் குழு ஒன்றை நிறுவ முடிவு செய்துள்ளோம். தொழில் துறை பற்றிக் குறிப்பிடுகையில் விவரித்துள்ள திட்டங்கள், சொந்தமாகத் தொழில் நடத்துவோருக்கும் இளம் தொழில் முனைவருக்கும் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் ஏற்படுத்திக் கொடுக்கும்; 10+2+3 கல்வி முறையுடன் இணைந்துள்ள கல்விச் சீர்திருத்தம் தொழில் கல்விக்கான வாய்ப்புகளைக் கணிசமாகப் பெருக்கும்; இது சிறு தொழில்கள் நிறுவுதல். சொந்தமாகத் தொழில் தொடங்குதல் குறித்த திட்டங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும். தொழில் நுட்பப் பயிற்சித் திட்டங்களுக்கும் நாம் முன்னுரிமை கொடுத்துள்ளோம். தற்போதுள்ள தொழில் பயிற்சிப் பள்ளிகளில் நடப்பாண்டில் கூடுதலாக ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

### அரசு அலுவலர் நலன்

43. அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியவர்களின் கோரிக்கைகளை அரசு எப்போதும் நியாயவுணர்வுடனும், பரிவுணர்ச்சியுடனும் அணுகும் என இத்தருணத்தில் அவைக்கு உறுதி கூற விழைகிறேன். அரசுக்குள்ள தவிர்க்கமுடியாத நிதித் தட்டுப்பாடுகள், மாநில வளர்ச்சித் தேவைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு இந்

கோரிக்கைகளை இயன்ற அளவு பூர்த்தி செய்ய அரசு தொடர்ந்து முற்படும்.

**44.** நாம் மூன்ருவது ஊதியக் குழுவை விரைவில் அமைக்க இருக்கிறேம். இக்குழு கவனிக்க வேண்டிய அம்சங்கள் விரிவானவையாக இருக்கும். சம்பள விதங்களையும் படிகளையும் சீரமைக்கவும் மேம்படுத்தவும் அரசுக்குப் பரிவுரை அளிப்பதுடன், தற்போதைய சம்பள விதங்களிலுள்ள முரண்பாடுகளைச் சரி செய்ய இக்குழு ஆலோசனை நல்கும். மேலும், அரசு அலுவலர்கள் பெற்று வரும் மருத்துவ வசதி, வீட்டு வசதி, அவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள், சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் முதலியவற்றையும் ஆராய்ந்து தக்க பரிந்துரைகள் செய்யுமாறு ஊதியக் குழுவைக் கேட்டுக் கொள்ள முடிவு செய்துள்ளோம். இது, அலுவலர்களின் சம்பள விதங்களையும், வாழ்க்கைத் தரத்தையும் குறித்து முழுமையாக ஒருங்கிணைந்த முறையில் அரசு கவனித்துச் செயல்பட உதவும்.

**45.** 1970ஆம் ஆண்டில் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றிய பின்னர், ஏழு முறை கூடுதல் அகவிலைப்படி அளிக்கப்பட்டுள்ளது. இவைகளையும், மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் அண்மையில் அறிவிக்கப்பட்ட இடைக்கால நிவாரணத்தையும் கணக்கெடுத்துப்பார்ப்பின், இவற்றின் பொருட்டு ஆண்டொன்றுக்கு 104 கோடி ரூபாய்ச் செலவை மேற் கொண்டுள்ளோம். அரசு அலுவலர், உள்ளாட்சி நிறுவன அலுவலர், ஆசிரியர்கள் ஆகியோர் மொத்தம் 7.3 இலட்சம் பேர்களில், குறைந்த ஊதியம் பெறும் 3.4 இலட்சம் பேர் இடைக்கால நிவாரணத்தையும் சேர்த்துப் பெறும் அகவிலைப்படி, மத்திய அகவிலைப்படி விதங்களுக்குச் சமமாக தற்போது அமைந்து விட்டது. மற்றவர்களுக்கும் ஓரளவு பயன் அளிக்கும் வகையில், மாதத்திற்கு 200 ரூபாய் அல்லது அதற்கு மேல் சம்பளம் பெறுவோருக்கு இடைக்கால நிவாரணத்தை 10 ரூபாயிலிருந்து 20 ரூபாயாக உயர்த்துவதென இப்போது முடிவு செய்துள்ளோம். இதனால் 4·1 இலட்சம் அலுவலர் பயன் பெறுவர். இந்தச் சலுகையின் காரணமாக, ஏற்கெனவே ஜூன் மாதம் அறிவிக்கப் பட்ட இடைக்கால நிவாரணத்திற்காகச் செலவாகும் 8.8 கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டொன்றுக்கு 4.9 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இந்தக் கூடுதல் இடைக்கால நிவாரணமும் ஆகஸ்ட் முதல் தேதி அளிக்கப்படும் ஜூலை மாதச் சம்பளத்துடன் தரப்படும்.

**46.** அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம் முக்கியமானதொரு திட்டமாகும். நடப்பாண்டில் ஏற்கெனவே இத்திட்டத்திற்குச் செய்யப் பட்டிருந்த ஒதுக்கீடான 150 இலட்ச ரூபாயினை 200 இலட்ச ரூபாய்க்குத் தற்போது உயர்த்தியுள்ளோம். இக் கூடுதல் ஒதுக்கீடு குறைந்த சம்பளம் பெறும் அலுவலர்களுக்கு 660 வீடுகள் கூடுதலாகக் கட்ட வகை செய்யும். காவல் துறையினருக்கு வீடு கட்டும் திட்டத் திற்காக நடப்பாண்டில் 38•இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு அதிக அளவில் ஒதுக்கீடுகள் செய்யப்படும்.

**47.** 7.3 இலட்சம் அலுவலர்களுக்குப் பயன் தரும் வகையில் சிறப்பான புதிய ஓய்வு கால நன்மைத் திட்டம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின்கீழ், அலுவலர்களின் சேமிப்பாக மாதந் தோறும் 15 ரூபாய் பிடித்தம் செய்யப்படும். இப் பிடித்தங்கள் மீதான வட்டியுடன் ஒரு கூடுதல் பணிக் கொடையும் அரசால் வழங்கப்படும். இதனால், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் ஓய்வு பெறும் அலுவலர்களுக்கும் நல்ல பயன் கிட்டும். இருபத்தைந்து ஆண்டு காலப் பணிக்குப் பின் ஓய்வு பெறும் ஓர் அலுவலர், தான் 4,500 ரூபாய் மட்டும் கட்டியிருந்தபோதிலும், ஓய்வு பெறும் போது 10,000 ரூபாய் முழுத் தொகையாகப் பெற்றுப் பயனடைவார். இத்திட்டத்தின் கீழ் வரும் தொகை அலுவலர்களுக்குப் பயன்தரும் வகையில் செலவிடப்படும். அரசு அலுவலர்கள் சொந்தமாக வீடு கட்ட அதிக அளவில் கடன் கொடுக்கவும், அவர்களுக்கு வாடகை வீடு கட்ட வீட்டு வசதி வாரியத் திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவும், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாகக் கடன் வசதி அளிக்கவும் இந்தத் தொகை பெரும்பாலும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின் விவரங்கள் குறித்து அலுவலர் சங்கங்களைக் கலந்து ஆலோசித்து, அதன் அடிப்படையில் இதனைக் கூடிய விரைவில் செயல் படுத்துவோம்.

### நிதி நிலைமை

**48.** இனி, வரவினங்கள் செலவினங்கள் பற்றி ஆராய்வோம். 1976–77 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றுக்குறையாக இருக்கு மென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்த மாகப் பார்க்கும் போது 2.98 கோடி ரூபாய் பற்றுக் குறையாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. திருத்த மதிப்பீடுகளின்படி வருவாய்க் கணக்கில் பற்றுக் குறை 17.28 கோடி ரூபாயாக இருக்குமென்று மதிப் பிடப்பட்டுள்ளது. இருப்பினும், மொத்தத்தில் 1976–77 ஆம் ஆண்டு இறுதியில் 9.82 கோடி ரூபாய் உபரியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

**49.** 1977–78 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கின் கீழ் வரவுகள் 633.24 கோடி ரூபாயாகவும், செலவுகள் 663.40 கோடி ரூபாயாகவும், ஆகவே பற்றுக்குறை 30.16 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளது. 1977–78 ஆம் ஆண்டில் மூலதனச் செலவுகள் 62.88 கோடி ரூபாயாக இருக்கும். வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்து முழுமையாகப் பார்க்கும் போது, 1977–78 ஆம் ஆண்டு இறுதியில் 18.89 கோடி ரூபாய் பற்றுக்குறை இருக்கும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே சமர்ப் பிக்கப்பட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப் பற்றுக்குறை 9.9 கோடி ரூபாயாகவும், மொத்தப் பற்றுக்குறை 13.92 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப் பட்டிருந்தது. அலுவலர்களுக்கு ஜூன் மாதத்தில் அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம், சட்டசபைத் தேர்தல்கள் நடத்தியமைக்கான செலவுகள், கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரைகளின்படி புதிய சம்பள விதங்களை அளிப்பது, சில வருவாய் இனங்களில் வரவு குறைந்தது ஆகிய வற்றால் வருவாய்ப் பற்றுக்குறை அதிகரித்துள்ளது. இருப்பினும், ஆரம்பக் கையிருப்பு காரணமாகவும் மூலதன வருவாய் ஓரளவு கூடியதன் விளைவாகவும் மொத்தப் பற்றுக்குறை நாடாளுமன்ற மதிப்பீடுகளை விட 5 கோடி ரூபாய் அளவில் மட்டுமே அதிகரித் துள்ளது.

### வரி அமைப்புகளில் மாறுதல்கள்

**50.** உங்கள் பொறுமையை மேலும் சோதிக்காமல், உங்களுடைய ஆவலை நிறைவு செய்யும் வண்ணம் இனி வரி அமைப்பில் செய்யவிருக்கும் மாறுதல்கள் பற்றிக் கூற முற்படுகிறேன். மக்களைப் பெரிதும் துன்புறுத்தாத வரி விதிப்பு ஏதாவது ஒன்று கிடைக்குமா என முயன்று தேடினேன். இந்த முயற்சியில் பெருமளவு வெற்றி பெற முடியவில்லை. எனினும், ஓரளவு வெற்றியை எட்டிப் பிடிக்காமலும் இருக்கவில்லை. நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் மது விலக்குக் கொள்கைக்கு ஒவ்வ, அண்டை மாநிலங்களில் நிலவும் விதங்களுக்கு ஏற்ப, இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான வகைகளின் மீதான ஆயத் தீர்வை, ப்ரூப் லிட்டர் (Proof litre) ஒன்றுக்குத் தற்போதுள்ள 14 ரூபாயி

லிருந்து 17 ரூபாய்க்கு உயர்த்தப்படும். இதனால் மது அருந்துவோருக்கு உடல் நலனும், அது இல்லாவிட்டால் பொது நலனுக்காக அரசுக்கு வருவாயாயினும் கிடைக்கும். மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் தெளிந்த சாராவி (Rectified spirit) மீதான ஆயத் தீர்வை, ஒரு முழு லிட்டருக்கு (Bulk litre) தற்போதுள்ள 50 காசிலிருந்து 80 காசாக உயர்த்தப் படும். இந்த மாறுதல்களினால், ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

51. 1976–77ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முதல், இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களில் பாசனக் கட்டணங்கள் அதிகப்படுத்தப்பட்டதையும், வணிகப் பயிர்கள் மீது தனித் தீர்வை விதிக்கப் பட்டதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். 30–6–1977 அன்று முடிவுற்ற பசலி ஆண்டில் இந்த வரி வசூல் தள்ளி வைக்கப்பட்டது. தள்ளிவைக்கப் பட்ட இக் கட்டணங்கள் இனி வசூல் செய்யப்பட மாட்டாது என இப்போது தீர்மானித்துள்ளோம். மேலும், முதல் வகைப் பாசன ஆதாரங்களின் கீழ் இக் கூடுதல் பாசனக் கட்டணங்களை, ஒவ்வொரு பயிருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 12 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும், இரண்டாம் வகைப் பாசன ஆதாரங்களின் கீழ் 10 ரூபாயிலிருந்து 8 ரூபாயாகவும் குறைப்பதென முடிவு எடுத்துள்ளோம். வணிகப் பயிர்கள் மீதான தனித் தீர்வையைப் பொறுத்த மட்டில், திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு இத் தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைக்கப்படும். குறைந்த காலப் பயிர்களான புகையிலை, மிளகாய், பாசனப் பருத்தி, பாசன நிலக்கடலை ஆகியவற்றின் மீதான தனித் தீர்வையை நிர்ணயிப்பதும் வசூலிப்பதும் விவசாயி களுக்குத் தொல்லைகள் தரக்கூடும் என்பதால், இப் பயிர்கள் மீதான, ஏக்கருக்கு 12.5 ரூபாய் என்ற அளவி லுள்ள தீர்வையை அறவே விட்டுக் கொடுக்கவும் முடிவு செய்துள்ளோம். மேற்கூறிய கணிசமான சலுகைகளினால், ஆண்டொன்றுக்கு 2.5 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும்.

52. தமிழ் நாட்டில் தண்ணீர்த் தீர்வையைப் பொறுத்த மட்டில், சிக்கலான முறை இருந்துவருகிறது. மொத்த நன்செய் தீர்வை, புதுப் பாசனத் திட்டங் களுக்கான தனித் தண்ணீர்க் கட்டணம், கூடுதல் நஞ்சைத் தீர்வை, தண்ணீர் மேல்வரிகள் என்று பல வகைக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. பல ஆண்டுக் காலங்களில் உருவான இந்த அமைப்பைத் தற்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி, சீர்படுத்த வேண்டியுள்ளது. மற்ற மாநிலங்களில் விதிக்கப்பட்டு வரும் கட்டண வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தும், மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வகையிலும், விவசாயிகளின் கொடுக்கும் திறனுக்கு ஏற்பவும், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கமளிக்கும் முறையிலும், தண்ணீர் தீர்வை அமைப்பில் மாறுதல்கள் செய்ய வேண்டும். அதே நேரத்தில், பாசனத்தால் பயன் பெறுவோர் பயனுக்கேற்ற கட்டணத்தைக் கொடுப்பதும் அவசியம்; பாசன ஆதாரங்களை விரிவு படுத்தவும், சீரான முறையில் பராமரிக்கவும் அரசுக்கு நிதியும் கிடைக்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில், பாசனத் தீர்வைகள், பாசனம் சம்பந்தப்பட்ட தீர்வைகள் குறித்து விரிவான ஆய்வு நடத்தித் தக்க மாறுதல்களைப் பரிந்துரைக்கக் குழு ஒன்றை அமைக்க நாம் முடிவு செய்துள்ளோம்.

53. விற்பனை வரியைப் பொறுத்தமட்டில், வாங்கு வோரிடமிருந்தும், விற்போரிடமிருந்தும் வந்துள்ள முறையீடுகளின் அடிப்படையிலும், வரி ஏய்ப்பு, வரி கொடாமை ஆகியவற்றை நீக்கும் வண்ணமும் விற்பனை வரியில் பல மாறுதல்களைச் செய்ய முடிவு செய்துள் ளோம். இந்தப் பின்னணியில், கால்நடை, பசும்புல், பன் (Bun), பொரை, தயிர், வெண்ணெய், கதர் கிராமத் தொழில் குழுவினாலோ தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தினாலோ அல்லது இவை களின் உதவியுடனோ அமைக்கப்பட்ட மின் விசைச் செக்குகளில் (Power ghanies) உற்பத்தி செய்யப்படும் எண்ணெய், எண்ணெய்ப் பொருள்கள், ஏற்கெனவே வரி செலுத்திய பொருள்களைக் கொண்ட மருந்துக் கலவைகள், கலவைப் பொடிகள், கைத்தறியிலும் ஆலையிலும் நெய்த கைக்குட்டைகள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்படும். தமிழ்நாட்டின் முக்கியமான சிறு தொழில்களில் ஒன்றாகிய பின்னப்பட்ட உள்ளாடைத் தொழில் (hosiery) நடத்துவோர், மற்ற மாநிலங்களிலிருந்து தீவிர போட்டி உள்ளதாக முறை யிட்டுள்ளார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, பருத்தி உள்ளாடை நூல் (Cotton hosiery yarn) மீதான மாநில விற்பனை வரியை 3 சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகவும், மத்திய விற்பனை வரியை 2½ சத வீதத்திலிருந்து 2 சத வீதமாகவும் குறைப்பதென முடிவு எடுத்துள்ளோம். பல நிலைகளில் வரியைத் தவிர்ப்பதற்காக, பருத்தித் தையல் நூலின் மீதுள்ள பல முனை வரியை நீக்கி, 3 சத வீத ஒரு முனை வரி விதிப்ப தெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பினைத் தடுக்கும் வண்ணம், பட்டை தீட்டப்படாத செயற்கை வைரக் கற்களின் மீது 15 சத வீத ஒரு முனை வரி விதிக்கப்படும். பட்டை தீட்டப்பட்ட செயற்கை வைரக் கற்களுக்குத் தற்போது உள்ள வரி விலக்கு தொடர்ந்து அளிக்கப்படும். இதே போன்று, வெல்லம், வெல்லத்தூள், உருண்டை வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றின் மீதும் பல முனை வரி விதிக்கப்படும். உலோகத்திற்கு மெருகு ஏற்றப் பயன்படும் சோப்பிற்கு, பாலிஷுக்கு (Polish) விதிப்பது போல 8 சதவீத ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படும். வாசனைத் திரவியங்கள், பவுடர், ஸ்னோ, தலைக்குத் தடவும் வாசனைத் தைலம் ஆகியவற்றை, சாதாரண உபயோகத்திற்கு எனவும், ஆடம்பர உபயோகத்திற்கு எனவும் இரு வகையாகப் பிரித்து, சாதாரண வகையின் மீது 8 சதவீத ஒருமுனை வரியும் ஆடம்பர வகையின் மீது 12 சதவீத ஒரு முனை வரியும் விதிக்கப் படும். இவ்வாறு மணம் கமழுமிடத்தில் பணம் திரட்டும் வாய்ப்பைப் பெற்றதற்காக அவையின் ஒப்புதலைப் பெறுவேன் என நம்புகிறேன். அலுமினியத்தின் பல்வேறு வடிவங்களின் மீது விதிக்கப்படும் வரியைத் தவிர்க்கத் தேவையான மாறுதல்கள் செய்யப்படும். எண்ணெய் ஆலை உரிமையாளர்களின் வரி ஏய்ப்பைத் தடுக்க, நாட்டுச் செக்கெண்ணெயும் நாட்டுச் செக்குப் பிண்ணாக்கும் பல முனை வரி விதிப்பின் கீழ் கொண்டுவரப் படும். தற்போது உள்ளது போலவே உண்மையாக நாட்டுச் செக்கெண்ணெய், எண்ணெய்ப் பொருள்கள் உற்பத்தி செய்வோருக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்கு தொடரும். காகிதத்தின் தரம் மாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுங்கால், ஏற்கெனவே வரி கொடுக் கப்பட்டிருந்தால், மறு முறையும் வரி விதிப்பு எழா வண்ணம் தக்க மாறுதல் செய்யப்படும். சாயங்கள், இரசாயனப் பொருட்கள், எஸ்ஸென்சுகள், பழப் பானங் கள் ஆகியவற்றின் மீது இப்போதுள்ள பல முனை வரிக்கு மாறாக ஒரு முனை வரி விதிக்கப்படும். மேற்கூறப்பட்ட மாறுதல்கள் அனைத்தும் தேவையான அறிவிப்புகளின் மூலமாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். இந்த அறிவிப்புகள் கொண்ட சட்ட மாறுதல்கள் அவையின் முன் கொண்டுவரப்படும்போது, அவற்றைப் பற்றி விரிவாக விவாதிக்க உறுப்பினர்களுக்கு வாய்ப்புகள் கிட்டும்.




54. வணிகர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கவும், வரி வசூலைப் பெருக்கவும், அதே நேரத்தில் லஞ்ச ஊழலை ஒழிக்கவும் விற்பனை வரி வழிமுறைகளில் சில மாறுதல்கள் செய்ய முடிவு எடுத்துள்ளோம். ஆண்டிற்கு ஒரு இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டுவரப்படும். கடந்த காலத்தில் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு முரண்பாடாக உள்ள கணக்குகளும், ஆய்வின்போது ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வணிகர்களின் கணக்குகளும் மட்டுமே விரிவாக ஆய்வு செய்யப்படும். இந்த மாற்றத்தினால், நேர்மையான சிறு வணிகர்களுக்குத் தொல்லைகள் குறைவதுடன், பெரும் புள்ளிகளின் மீது மதிப்பீட்டதிகாரிகள் தனிக் கவனம் செலுத்தவும் இயலும். சோதனைச் சாவடிகளில் வழிமுறைகளை எளிதாக்கவும், சோதனைச்சாவடி அதிகாரிகளின் ஆணை சம்பந்தப்பட்ட குறைகளை விரைந்து கவனிக்கவும், வேறு சில முடிவுகளையும் எடுத்துள்ளோம். தாமதமாகச் செலுத்தப்படும் வரியின் மீதான அபராதத் தொகையை அதிகரிக்கவும் உத்தேசித்துள்ளோம். வருமான வரி ஏய்ப்பவர்களுக்கு இருப்பதைப் போன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு, விற்பனை வரி தொடர்ந்து கொடாதவர்களின் பெயர்களைச் செய்தித்தாள்களில் வெளியிட வழி செய்யப்படும். வணிக வரித் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் வரி கொடுப்போரின் சார்பில் வழக்காடுவதை அனுமதிக்கும் விதி முறைகளைக் கடினமாக்கிச் சீரமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

55. விற்பனை வரிச் சட்டம், விதிமுறைகள் இவற்றின் கீழ் எழும், வரிமதிப்பீடு, வசூல், முறையீடுகள் சம்பந்தப்பட்ட வழி முறைகளை முழுமையாகவும் விரிவாகவும் ஆராய நிபுணர் குழு ஒன்று அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். வணிகருடைய அல்லல்களைக் குறைப்பதும், வசூலை அதிகரிப்பதும், லஞ்சத்தை ஒழிப்பதுமான மூன்று முக்கிய குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதே இக்குழுவின் நோக்கமாக இருக்கும்.

56. தமிழ்நாட்டில், கேளிக்கை வரிகளின் சுமை, குறிப்பாகக் கீழ் வகுப்பு நுழைவுக் கட்டணங்களில் அதிக அளவில் இருப்பதாக முறையிடப்பட்டு வந்துள்ளது. இந்த நீண்டகால முறையீட்டைக் கருத்தில் கொண்டு, அரசு குறைந்த கட்டணங்களுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் பின்வரும் முடிவுகள் எடுத்துள்ளது. நிகர நுழைவுக் கட்டணம், கேளிக்கை வரி, மேல் வரி ஆகியவை சேர்ந்து 25 காசுகளுக்கு அதிகமாக இல்லாத கட்டணங்களுக்கு, தற்போது 15 காசுகளாக இருந்து வரும் கூடுதல் மேல்வரி 5 காசுகளாக இனி குறைக்கப்படும். இவ்வாறே நிகர நுழைவுக் கட்டணம், கேளிக்கை வரி, மேல்வரி ஆகியவை 26 காசுகள் முதல் ஒரு ரூபாய் வரை இருக்கும் கட்டணங்களுக்குக் கூடுதல் மேல்வரி தற்போது 15 காசுகளாக இருப்பது, 10 காசுகளாக இனி குறைக்கப்படும். இந்த வரிக் குறைப்பின் பயன் திரைப்படங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு முழுமையாகக் கிட்டும். இதன் காரணமாக, முதற் கட்டத்தில் ஏற்படும் வரி இழப்பு, வரிக் குறைப்பின் விளைவாக, பொது மக்கள் திரைப் படங்களுக்குக் கூடுதலாகச் செல்வதனால், காலப் போக்கில் ஓரளவுக்கு ஈடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

57. திரைப்படங்களைப் பார்ப்போர் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், படங்களின் தரமும் உயரவேண்டும். இந்தக் கருத்தின் அடிப்படையில், குறைந்த செலவில், சமுதாய முற்போக்கு இலட்சிய அடிப்படையில், உயர்ந்த தரமுள்ள சமூகப் படங்கள் தமிழில் எடுப்பதை ஊக்குவிக்கத் திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், தகுதி பெறுகின்ற திரைப் படங்களுக்கு, ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கைக்கு உட்பட்டு, ஒரு இலட்சம் ரூபாய் உதவி மானியமாக வழங்கப்படும்.




58. விற்பனை வரியிலும், கேளிக்கை வரியிலும் செய்யப்படும் மாறுதல்களின் விளைவாக ஆண்டுதோறும் 40 இலட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

59. 1977–78ஆம் ஆண்டு இறுதியில் மொத்தப் பற்றுக்குறை 18.89 கோடி ரூபாயாக இருக்குமென நான் முன்பே குறிப்பிட்டிருந்தேன். வரியமைப்பில் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு மாறுதல்களின் விளைவாகவும், அலுவலர்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள இடைக்கால நிவாரணத்தின் விளைவாகவும், இந்தப் பற்றுக்குறை மேலும் 5.7 கோடி ரூபாய் அதிகரிக்கும். செலவுகளில் சிக்கனம், நடைமுறையிலிருக்கும் வரிகளை நல்ல முறையில் வசூலித்தல், அரசு நிறுவனங்களைச் சீரான முறையில் நிர்வகித்தல் ஆகியவற்றின் மூலமாகவே இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். எல்லா நிலைகளிலும் லஞ்ச ஊழலை அடியோடு ஒழிப்பது என்ற இந்த அரசின் கொள்கையை ஆளுநர் உரையில் உறுதிப் படுத்தியிருப்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறேன். அதே போன்று, அரசுச் செலவுகளில்—அவை திட்டச் செலவாயினும், வளர்ச்சிப்பணிச் செலவாயினும் அல்லது பிற செலவாயினும்—தேவையற்ற விரயச் செலவுகளை இனங்கண்டு அவற்றைக் குறைக்க நடவடிக்கைகள் எடுப்பதும் நமது கொள்கையாகும். வரிப்பணத்தில் ஒவ்வொரு ரூபாயும் மக்களுக்கு நேரடி நன்மைகள் பயக்க ஒழுங்காகச் சென்றடைவதை உறுதிப்படுத்த எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள முற்படுவோம். லஞ்ச ஊழல், வீண் விரயம் இவற்றைக் களைய தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் காரணமாக, நிதி ஒழுங்கு ஏற்பட்டு, பற்றுக்குறையை இந்த ஆண்டு பெருமளவு சமாளிக்க முடியும் என நம்புகிறேன்.

60. பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசின் கன்னி வரவு-செலவுத் திட்டத்தை அனைத்துக் கட்சி உறுப்பினரும் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர் என்று அறிவேன். நாங்கள் பதவி ஏற்று ஒரு திங்கள் கூட முடிவுறவில்லை. இக் குறுகிய காலத்தில், எஞ்சிய ஏழு மாதங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடுகளைச் செய்ய விருக்கும் நிலைமையில் இருப்பினும், தமிழ் நாட்டின் பல்வேறு வளர்ச்சி-நலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பெரும் முயற்சியில் திடமாகவும் திண்ண மாகவும் அடியெடுத்து வைத்துள்ளோம் என்பதை நல்லெண்ணம் படைத்த உறுப்பினர் அனைவரும் ஒப்புக் கொள்வார்கள் என நம்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மீதான வரப்போகும் விவாதத்தை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன். எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாயினும் அவையின் உறுப்பினர்கள் கூற விருக்கும் நல்ல கருத்துக்களை ஏற்று அவற்றின் அடிப் படையில் நடப்பு நிதியாண்டின் எஞ்சிய மாதங்களிலும், வரும் நிதி ஆண்டிற்காக வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும்போதும், தேவையான மாற்றங்களையும், ஒதுக்கீடுகளையும் செய்ய முற்படுவோம் என மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உறுதியளிக்க விரும்பு கிறேன்.

61. குறுகிய காலத்தில் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து, என் பொறுப்பின் பளுவினை எளிதாக்கிய நிதித் துறைச் செயலர் திரு ச. குகன் அவர்களுக்கும், அவருடன் பணியாற்றியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

62. இத்துடன் 1977-78 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

சென்னை,
1977 ஜூலைத் திங்கள் 25ஆம் நாள்.

கி. மனோகரன்,
நிதி அமைச்சர்.

"வயல்களில் கதிர் குலுங்கிடின் சர்க்கார் அலுவலகங்களில் மகிழ்ச்சி துள்ளும். தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும்-நிம்மதியும் கிடைத்து உற்பத்தி பெருகிடின், நாட்டு நிலை உயர்ந்திடும். அங்காடியிலுள்ளோர், கொள்வன-கொடுப்பன என்பவை நேர்மையின் அடிப்படையில் அமைந் திருத்தல் வேண்டும் என்று இருந்திடின் அகவிலையும், பதுக்கலும் அழிந்துபடும். பொது மக்களின் வாழ்வு சீர்படும். நாட்டின் நிலை உயர்ந்திட பணியாற்றிடவே நாம் என்ற உணர்வுடன் மாணவ மணிகள் கல்விக் கூடங்களில் பயிற்சி பெற்றிடின் நாடு மேம்பாடடையும், இவை எல்லாவற்றின் கூட்டே ஆட்சி. சில மண்டபங்களில் மட்டும் செய்யப்படுகிற காரியமல்ல ஆட்சி. நாட்டு ஆட்சி, வீட்டுக்கு-வீடு காணப்படும் பண்பைப் பொறுத்திருக்கிறது.

—பேரறிஞர் அண்ணா

[முதலமைச்சர் பொறுப்பை ஏற்றபின்னர் 15—3—1967-ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையில்]

# படமும் செய்தியும்



மதுரை மாவட்டத்தில் உள்ள தனக்கன் குளம் கிராமத் தில், மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோ கிக்கும் திட்டத்தை 9-7-1977 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து அவர்கள் துவக்கி வைத்தார்.



மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தைச் சார்ந்த ஆண்டிப்பட்டி கிராமத்தில், 19-7-1977 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், சிறுநிலக் கிழார் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மருந்து தெளிக் கும் கருவியை வழங்கினார்.



மாலத்தீவுகளின் அமைச்சர் மாண்புமிகு திரு மம்முன் அப்துல் கயூன் அவர்கள் 21-7-1977 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், 24-7-1977 அன்று, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஊரக மருத்துவ மற்றும் சமூகப் பணி மன்றத்தின் வெள்ளி விழாவைத் துவக்கி வைத்தார். அவ்விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

அடையாறு முனையில் உள்ள டாக்டர் முத்துலட்சுமி பூங்காவில், சென்னை மாநகரின் 100-வது பால் விற்பனை நிலையத்தை 22-7-1977 அன்று மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்தார்.






மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள், 30-7-1977 அன்று, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில், கல்ராயன் மலைவாழ் பழங்குடி மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்ததுடன், மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.



சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் ஊரக மருத்துவ மற்றும் சமுகப்பணி மன்ற வெள்ளி விழாவினைத் துவக்கிவைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், ஊரக மருத்துவச் சேவைக்கு உதவும் பேருந்தை இயக்கி வைத்தார்.




சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த ஊரக மருத்துவ மற்றும் சமுகப் பணி மன்றத்தினரின், நாள்தோறும் இயங்கும் போதனை மருத்துவ மனையை (Daily Clinic) அலமாதி என்ற ஊரில் 24-7-1977 அன்று மாலை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. காளிமுத்து அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு சமுகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்கள், துவக்கி வைத்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தியக் கடற்படையைச் சார்ந்த "விக்ராந்த்" என்னும் கப்பலை 27-7-1977 அன்று பார்வையிட்டார்.
சட்டமன்றப் பேரவையின் சபாநாயகர் அவர்களும் உடன் உள்ளார்.



ஸ்ரீலங்காவின் துணை உயர் ஆணையர் திரு எஸ். கௌதமதாஸா அவர்கள் 27-7-1977 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் தூதர் திரு 'டபெட் ரிச்வென்ஸ்லாப்' அவர்கள் 27-7-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.





குழந்தைகளுக்குத் தேவை
சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517


# வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும்!



ஊட்டச்சத்து மிக்க காய்கறிகளைப் பெறுவதற்கு நாம் அனைவரும் வீட்டுத் தோட்டம் அமைப்பது அவசியமாகும். வீட்டுத் தோட்டம் அமைப்பது வீட்டிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கும் நாம் செய்யும் நல்லதோர் சேவையாக இருக்கும்.

நாம் அனைவரும் அறிவுடனும் ஆற்றலுடனும், அழகுடனும் வாழவேண்டுமானால் நம் நாட்டின் வளத்தைப் பெருக்கவேண்டுமானால்-நாம் அனைவரும் நம்முடைய அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். ஏனெனில், காய்கறிகள் நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அளிப்பதுடன் நம்மைத் தாக்கவல்ல நோய்களைத் தடுக்கவல்ல காப்பு உணவாகவும் (Protective food) விளங்குகிறது. எனவேதான், அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை ஊட்டச் சத்துணவு அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றூர்கள்.

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின் படி வயதுவந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் 285 கிராம் (10 அவுன்சு) காய்கறிகளை உட்கொள்ள வேண்டும் என்றும், அதில் 115 கிராம் (4 அவுன்சு) இலைவகைக் (கீரை) காய்கறிகளாகவும் (Leaf Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளாகவும் (Tuber and Root Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) விதை மற்றும் பழவகைக் காய்கறிகளாகவும் (Seeds and Fruit Vegetables) அமைந்திருக்க வேண்டும் என்றும் ஊட்டச்சத்துணவு வல்லுநர்கள் (Nutrition Experts) பரிந்துரைத்துள்ளார்கள்.



—ஆர். மாணிக்கம்.



பல்வேறு உணவியல் அறிஞர்கள் பரிந்துரைத்துள்ள உணவு அட்டவணைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தபின் திரு. பி. சி. பான்சில் என்ற திட்ட வல்லுநர், ''70 கோடி மக்களுக்கான வேளாண்மைத் திட்டம்'' என்ற நூலில், 'சமநிலை உணவு' (Balanced Diet) பெற, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 7 அவுன்சு காயகறிகளும், 2 அவுன்சு வேர் மற்றும் கிழங்குகளும் தேவை என்று திட்டவட்டமாக விளக்கியுள்ளார்.

ஆனல் தற்பொழுது நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் உட்கொள்ளும் காய்கறிகளின் சராசரி அளவு ஏறத்தாழ 3 அவுன்சு என்ற நிலையில்தான் உள்ளது. இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்கம் நடத்திய கள ஆய்வின் மூலம் 61 சதவீதக் குடும்பங்களே நாளொன்றுக்கு ஒருமுறையாவது காய்கறிகளை உண்பதாகவும், நாளொன்றுக்கு வயது வந்த ஒருவர் அவ்வாறு உண்ணும் அளவும் 2.8 அவுன்சு என்ற அளவிலேயே உள்ளது என்றும் தெரியவந்துள்ளது. மேலும், அந்த ஆய்வின் மூலம் சென்னையில் வாழும் மக்களே உயர்ந்த அளவாக-நாளொன்றுக்கு 4.8 அவுன்சு என்ற அளவில்



காய்கறிகளை உண்பதாகவும், கோயம்புத்தூரில் உள்ளவர்கள் நாளொன்றுக்கு 4.5 அவுன்சு காய்கறிகளையே உண்பதாகவும், நீலகிரியில் வாழும் மக்களே மிகக் குறைந்த அளவில்-நாளொன்றுக்கு 0.8 அவுன்சு என்ற அளவில்-காய்கறிகளை உண்பதாகவும் தெரியவந்துள்ளது.

ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் பரிந்துரைக்கும் அளவில் நாம் காய்கறிகளை உண்பதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் மூன்று; அவை:

1. காய்களில் உள்ள ஊட்டச் சத்துக்களை உணராமை.

2. காய்கறிகளின் உற்பத்திக் குறைவினுல் ஏற்பட்டுள்ள பற்ருக் குறை.

3. அதிக விலை.

எனவே, முதலில் காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்தினை எல்லாருக்கும் உணர்த்த வேண்டியுள்ளது. அடுத்து, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கி, குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு பணிகளையும் செவ்வனே செய்தால்தான், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை, எளிய, சாமான்ய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்கள் முதல், சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் வரை எல்லாரும் ஊட்டச்சத்துணவு பரிந்துரைக்கும் அளவில் காய்கறிகளை அன்ருடம் உண்ணமுடியும்!

## காய்கறிகளை ஏன் உண்ண வேண்டும்?

(1) காய்கறிகள் புரதச்சத்து (Protein) ? மாவுப் பொருள்கள் (Carbo hydrates), தாது உப்புகள் (Mineral Salts), உயிர்ச் சத்துக்கள் (Vitamins) ஆகிய சத்துக்களை நமக்குக் கொடுக்கின்றன.

2. உணவில் சுவை ஏற்படுத்துகின்றன.

3. நமக்குத் தேவையான எல்லா சக்திகளையும் அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

4. நம் உடலுறுப்புகள் வலுவடையவும், நாம் ஊக்கத்துடன் பணிகளில் ஈடுபடவும் உதவுகின்றன.

5. நமக்கு வலிவை மட்டுமல்ல வனப்பையும் தருகின்றன.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

நாம் அரிசி உணவை மட்டுமே உட்கொள்பவர்களாக இருந்தால் நாள்தோறும் நம் உடலுக்குத் தேவையான சுண்ணும்புச் சத்தை (கால்சியம்) அரிசி உணவு கொடுப்பதில்லை. ஆனல் இலை வகைக் காய்கறிகள் (Leafy Vegetables) நமக்குத் தேவையான சுண்ணும்புச் சத்தைப் பெற உதவுகின்றன.

### இலைவகைக் காய்கறிகள்

இலைவகைக் காய்கறிகளான தண்டுக்கீரை, அகத்திக் கீரை, முட்டைக்கோஸ், முருங்கை இலை, 'ஸ்பைனுஷ்', புதினு போன்றவைகள் சிறந்த பாதுகாப்பு உணவாகும். ஏனென்றல் அவைகளில் சுண்ணும்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவை அடங்கிய தாது உப்புகளும் வைட்டமின்களும் நிறைந்துள்ளன.

### விதைவகைக் காய்கறிகள்

விதை வகைக் காய்கறிகளான (Seed Vegetables) 'பீன்ஸ்' பட்டாணி, இளம் மக்காச்சோள விதை போன்றவைகள் வயிறு நிரம்புவதற்கான திடப்பொருள்களையும் (Roughage) புரதச்சத்து, வைட்டமின் 'சி' ஆகியவைகளையும் கொடுக்கின்றன.

### பழவகைக் காய்கறிகள்

பழவகைக் காய்கறிகளான (Fruit Vegetables) தக்காளி, பலாக்காய், வாழைக்காய், முருங்கைக் காய், கத்தரி, வெண்டை, பூசணி, பறங்கி போன்றவைகள் சிறந்த சத்துக்களைக் கொண்டுள்ளன. தக்காளியில் வைட்டமின் 'சி' யும், முருங்கைக்காயில் சுண்ணும்புச் சத்தும், வைட்டமின் 'சி'யும் நிறைய உள்ளன. பறங்கிக் காயில் வைட்டமின் 'ஏ' பெருமளவில் உள்ளன.

### கிழங்கு — வேர்வகைக் காய்கறிகள்

கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளான (Tuber & Root Vegetables) உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, கேரட், பீட்ரூட், முள்ளங்கி, 'டர்னிப்' போன்றவைகள் தானியங்களைப் போலவே மாவுப் பொருள்களையும், வைட்டமின் 'சி'யையும் வழங்குகின்றன. சர்க்கரை வள்ளிக்கிழங்கும், கேரட்டும் வைட்டமின் 'ஏ' யைக் கொடுக்கின்றன. இவ்வகைக் காய்கறிகள், உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் மாவுப் பொருள்களைக் கொடுப்பதால், நமது உணவில் தானியங்களுக்குப் பதிலாக இவைகளைப் பயன்படுத்தி, தானியங்களில் ஒரு பகுதியைக் குறைத்து, மீதப்படுத்தலாம். இவ்வகைக் காய்கறிகளே குறைந்த செலவில் சக்தியைத் தரும் உணவுகளாகும்,

சில முக்கிய காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்துகளைப் பின்கண்ட அட்டவணை 1 - இல் இருந்து அறிந்து கொள்ளலாம்.



அட்டவணை-1.

## ஒரு அவுன்சு (28 கிராம்) காய்களில் உள்ள ஊட்டச்சத்துகள்

| வரிசை எண் (1) | காய்களின் பெயர் (2) | புரதச்சத்து (கிராம்) (3) | கொழுப்பு (கிராம்) (4) | மாவுப்பொருள் (கிராம்) (5) | சுண்ணும்பு (மில்லிகிராம்) (6) | பாஸ்பரஸ் (மில்லிகிராம்) (7) | இரும்பு (மில்லிகிராம்) (8) | உயிர்ச்சத்து-ஏ (இண்டர்நேஷனல் யூனிட்) (9) | உயிர்ச்சத்து-பி (மில்லிகிராம்) (10) | நிகோடினிக் அமிலம் (மில்லிகிராம்) (11) | ரிபோபிளேவின் (மில்லிகிராம்) (12) | உயிர்ச்சத்து-சி (மில்லிகிராம்) (13) | கலோரி (14) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | முட்டைக்கோசு | 0.5 | 0.1 | 1.8 | 8 | 14 | 0.2 | 568 | 14 | 0.1 | 9 | 35 | 9 |
| 2. | காலிபிளவர் | 1.0 | 0.1 | 1.5 | 8 | 17 | 0.4 | 122¼ | 31 | 0.3 | 23 | 19 | 11 |
| 3. | காரட் | 0.3 | 0.1 | 3.0 | 23 | 8 | 0.4 | 568 | 17 | 0.1 | 6 | 1 | 13 |
| 4. | பீட்ரூட் | 0.5 | 0.1 | 3.9 | 57 | 17 | 0.3 | சிறு அளவு | 20 | 0.1 | 26 | 25 | 18 |
| 5. | முள்ளங்கி | 0.2 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 1 | 17 | ... | ... | 4 | 6 |
| 6. | உருளைக்கிழங்கு | 0.5 | 0.1 | 6.5 | 3 | 9 | 0.2 | சிறு அளவு | 6 | 0.3 | 3 | 1 | 28 |
| 7. | மரவள்ளிக்கிழங்கு | 0.2 | 0.1 | 10.9 | 10 | 10 | 0.2 | ... | 4 | 0.1 | 28 | ... | 45 |
| 8. | சர்க்கரை வள்ளிக் கிழங்கு | 0.3 | 0.1 | 8.8 | 6 | 10 | 0.2 | 3 | ... | 0.2 | 11 | 7 | 37 |
| 9. | கத்தரி | 0.4 | 0.1 | 1.8 | 60 | 17 | 0.4 | 1 | 4 | 0.2 | 26 | 6 | 10 |
| 10. | வெண்டை | 0.6 | 0.1 | 2.2 | 25 | 23 | 0.4 | 16 | 6 | 0.2 | ... | 4 | 12 |
| 11. | தக்காளிக்காய் | 0.5 | 0.1 | 1.3 | 6 | 11 | 0.7 | 91 | 7 | 0.1 | 17 | 9 | 8 |
| 12. | தக்காளிப்பழம் | 0.3 | 0.1 | 1.1 | 3 | 6 | 0.1 | 91 | 11 | 0.1 | 17 | 7 | 6 |
| 13. | பெல்லாரி வெங்காயம் | 0.3 | 0.1 | 3.3 | 50 | 14 | 0.2 | ... | 11 | 0.1 | 3 | 3 | 14 |
| 14. | நாட்டு வெங்காயம் | 0.5 | 0.1 | 3.7 | 11 | 39 | 0.3 | 7 | 22 | 0.1 | ... | ... | 17 |
| 15. | புடல் | 0.1 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 45 | ... | 0.1 | 17 | சிறு அளவு | 6 |
| 16. | பாகல் | 0.5 | 0.1 | 1.2 | 6 | 20 | 0.6 | 60 | 7 | 0.1 | 26 | 25 | 7 |
| 17. | பறங்கி | 0.4 | 0.1 | 1.5 | 3 | 8 | 0.2 | 24 | 6 | 0.1 | 11 | 1 | 8 |
| 18. | வெள்ளரி | 1.0 | 0.1 | 0.8 | 3 | 8 | 0.4 | சிறு அளவு | 8 | 0.1 | 1 | 2 | 4 |
| 19. | முருங்கைக்காய் | 0.7 | 0.1 | 1.0 | 8 | 30 | 1.5 | 52 | ... | 0.1 | ... | 34 | 7 |
| 20. | கருணைக்கிழங்கு | 0.4 | 0.1 | 7.5 | 17 | 6 | 0.4 | ... | 7 | 0.2 | ... | சிறு அளவு | 32 |
| 21. | பீன்ஸ் | 1.3 | 0.1 | 2.8 | 14 | 17 | 0.5 | ... | ... | 0.2 | ... | 3 | 17 |
| 22. | வாழைக்காய் | 0.4 | 0.1 | 4.2 | 3 | 8 | 0.2 | 14 | 4 | 0.1 | 57 | 7 | 18 |
| 23. | ஸ்பைனுஷ் | 0.5 | 0.3 | 1.1 | 17 | 3 | 1.4 | 994 | 20 | 0.1 | 17 | 14 | 9 |
| 24. | புதினு | 0.5 | 0.2 | 2.2 | 56 | 21 | 4.2 | 756 | 14 | 0.1 | ... | 3 | 16 |
| 25. | தண்டுக்கீரை | 1.4 | 0.1 | 1.6 | 14 | 3 | 6 | 700 முதல் 3,080 | 8 | 0.3 | ... | 48 | 17 |
| 26. | கறிவேப்பிலை | 1.7 | 0.3 | 4.4 | 224 | 17 | 0.8 | 3,528 | 22 | 0.6 | ... | 1 | 27 |



காய்கறிகளில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளதால் நாம் ஒவ்வொருவரும் இலை, விதை, பழம், வேர் மற்றும் கிழங்கு வகைக் காய்கறிகளை நமது உணவில் நாள்தோறும் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

## வீட்டுத் தோட்டத்தின் இன்றியமையாமை

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியாளர்களின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டின் மக்களுக்கு இந்த ஆண்டில் (1976-77), ஏறத்தாழ 42 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன. ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் சராசரியாக 10 அல்லது 12 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகளே உற்பத்தியாகி வருகின்றன. எனவே, நமக்குத் தேவைப்படும் காய்கறிகளில் நான்கில் ஒரு பகுதியையே நாம் தற்பொழுது உண்ண முடிகிறது.

ஊட்டமளிக்கும் காய்கறிகள் தேவையான அளவுக்கு நமக்குக் கிடைக்காததால், நம்மில் பலர் தேவையான அளவுக்கும் அதிகமான தானிய உணவை உண்ணுகின்றோம். இதனால் ஊட்ட உணவுப் பற்றுக்குறை (Under nutrition) ஏற்படுவதுடன், தானியப் பற்றுக்குறையும் ஏற்படுகிறது. ஊட்ட உணவுப் பற்றுக்குறையால் உடல் நலம் கெடும்; கண்பார்வை மங்கும்; உடல் வலிமை குன்றும்; உழைக்கும் ஆற்றல் குறையும்; உடல் எளிதில் கொடிய நோய்களால் தாக்கப்படும்.

இந்தியாவில் 100-க்கு 50 பேர்கள் ஊட்ட உணவுப் பற்றுக்குறை அல்லது ஊட்டக் குறைவினால் (Malnutrition) பாதிக்கப்படுகின்றார்கள் என்று உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health organisation) கருத்துத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் தற்பொழுது நிலவி வரும் ஊட்ட உணவுப் பற்றுக்குறை, ஊட்டக் குறைகளைப் போக்கிட காய்கறி உற்பத்தியைப் பெருக்கி நம் உணவில் காய்கறிகளைத் தேவையான அளவு சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, காய்கறி உற்பத்தியைப் பெருக்கிட, நாம் ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

## வீட்டுத் தோட்டத்தின் பயன்கள்

''பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழு'' என்பதுபோல், வீட்டுத் தோட்டம் அமைத்தால் கீழ்க்கண்ட பதினாறு பயன்கள் கிடைக்கும்.

1. புத்தம் புதிய காய்கறிகளைப் (Fresh Vegetables) பெறலாம்.

2. விருப்பமான காய்களைப் (Choice Vegetables) பெறலாம்.

3. பலவகைக் காய்களையும், பசுமையாகப் (Green Vegetables) பெறலாம்.

4. வேண்டியபோது, காய்களைப் பறித்துக்கொள்ளலாம்.

5. சுவை குன்றாத காய்களைப் (Tasteful Vegetables) பெறலாம்.

6. உயிர்ச் சத்துக்கள் மிகுந்த காய்களைப் (Vitamin-rich Vegetables) பெறலாம்.

7. குறைந்த செலவில் காய்களை விளைவிக்கலாம்.

8. சமையலறைக் கழிவு நீரையும் உபயோகப்படுத்த முடியும்.

9. வீட்டுக்கு அழகு சேர்க்கும்.

10. பொழுது போக்காகவும் அமையும்.

11. உடற் பயிற்சியாகவும் இருக்கும்.

12. கண்ணிற்குக் குளிர்ச்சி தரும்.

13. மனத்திற்கு அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கச் செய்யும்.

14. நல்வழியில் நாட்டம் ஏற்படுத்தும்.

15. சுவையான உணவு கிடைக்கச் செய்யும்.

16. நலமான வாழ்வு தரும்.

## வீட்டுத் தோட்டம் —அமைக்கும் முறை

1. குடும்பத்தினரின் விருப்பத்திற்கேற்றவாறும்,

2. கிடைக்கும் இடத்தின் அளவுக்குத் தகுந்தாற்போலவும்,

3. நிலத்திற்கும், பருவத்திற்கும் ஒத்ததாகவும்,

4. ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்கள் கிடைக்கும் வகையிலும்,

5. வரப்பின் பக்கம், வாய்க்கால் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகள் முதலிய இடங்களை நன்கு பயன்படுத்தும் முறையிலும்,

6. குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் வகையிலும்,

வீட்டுத் தோட்டத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும். ஆனால் சிலர் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் வெகு ஆர்வம் காட்டி ஈடுபட்டாலும், முதல் முயற்சியிலேயே தோல்வி கண்டுவிடுகின்றனர். இதற்குக் காரணம் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை உணராமையே! எனவே, வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை ஒவ்வொன்றாகக் கீழே விளக்கியுள்ளோம்.

### இடம்

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தி செய்ய 5 செண்ட் நிலம் வேண்டும்.

அந்த 5 செண்ட் நிலமும், குறைந்தது நாள்தோறும் 6 மணி நேரமாவது சூரிய வெளிச்சம் படக்கூடிய திறந்த வெளியாக இருக்க வேண்டும்.

ஐந்து சென்டு பரப்பு இல்லையெனில், 100 சதுர அடியில்கூட வீட்டுத் தோட்டம் அமைக்கலாம்.

### மண்

மணலும், களிமண்ணும் சரியான விகிதத்தில் அடங்கிய இரு-மண்பாடு நிலமே காய்கறி பயிரிட மிகவும் சிறந்தது.

மணற்பாங்கான மண்ணாக இருந்தால், மாட்டெரு, கலவை எரு (கம்போஸ்டு) போன்ற கரிம எருக்களைப் போட்டு வளமான மண்ணாக்கி விடலாம்.

களி மண்ணாக இருந்தால், மணல், மக்கிய தழை, கரிம எருக்கள் ஆகியவைகளை இட்டும், வடிகால் வசதிகளை அமைத்தும் காய்கறி பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணாகச் செய்து விடலாம்.

### நிலம் தயாரித்தல்

5 செண்ட் நிலத்தையும், கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள படி பாத்திகள், நடைபாதை, மைய நடைபாதை, நிரந்தரப் பயிர்களுக்கான பகுதி என்று பிரித்துக் கொள்ள வேண்டும்.




நிலத்தின் பிற்பகுதியை நிரந்தரப் பயிர்களுக்காக ஒதுக்குதல் வேண்டும்.

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நான்கு கம்போஸ்டு குழிகளையும் தோண்டுங்கள்.

பாத்திகள் ஒவ்வொன்றும் 20 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ளதாக இருக்க வேண்டும்.

பாத்திகளின் மேல் மண்ணை 1.5 அடி ஆழத்திற்குத் தோண்டி எடுத்து, அம்மண்ணிலுள்ள கற்களையும், கண்ணாடித் துண்டுகளையும், புற்பூண்டுகளையும் அப்புறப்படுத்திவிட்டு, அம்மண்ணை ஒரு புறமாக வைக்க வேண்டும்.

1.5 அடிக்குக் கீழுள்ள மண்ணை மேலும் 1 அடி ஆழத்திற்குத் தோண்டி, மண் கட்டிகளை உடைத்து, இரு மண்பாடு நிலம் போல ஆக்க வேண்டும்.

அதில் 500 சதுர அடிக்கு 0.5 டன் அல்லது ஒரு வண்டி தொழு எரு அல்லது கலவை எருவை (கம்போஸ்டு) அடியுரமாக இட்டு மண்ணில் நன்கு கலக்குமாறு கொத்தி விட வேண்டும்.

எருவிட்ட மண்ணின் மேல், முதலில்எடுத்த 1.5 அடி மண்ணைப் போட்டுச் சமப்படுத்த வேண்டும்.

விதைப்பதற்கு 10நாட்களுக்கு முன்னதாக 'செரசான்' என்ற பூஞ்சாள மருந்தை மண்ணில் கலந்து, பயிர்களை நோய்கள் தாக்காவண்ணம் தடுக்க வேண்டும்.

விதைப்பதற்கு 3 நாட்கள் முன்னதாக டி.டி.டீ. மருந்தை மண்ணில் கலந்து எறும்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

### பட்டம்

காய்கறி சாகுபடி செய்ய (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடி), (2) ஜனவரி-பிப்ரவரி (தை) ஆகிய இரண்டும் முக்கிய விதைப்புப் பட்டங்களாகும்.

வீட்டிற்கு வேண்டிய காய்கறிகளை ஆண்டு முழுவதும் தொடர்ந்து பெற அட்டவணை-1 இல் கண்டபடி பயிரிடுவதே சிறந்ததாகும்.



அட்டவணை— 2.

## ஆண்டு முழுவதும் காய்கறி பெறுவதற்குரிய வழிமுறை

| பாத்தி எண் | காய்கறிகளின் பெயர் | பயிர் செய்வதற்கான பட்டங்கள் |
|---|---|---|
| பாத்தி 1 | கத்தரி, முள்ளங்கி<br>முட்டைகோஸ்<br>வெண்டை | ஜூன் முதல் செப்டம்பர் வரை.<br>அக்டோபர் முதல் ஜனவரி வரை.<br>பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 2 | கொத்தவரை<br>பீட்ரூட்<br>கீரை வகைகள்<br>தட்டைப்பயறு | ஜூன் முதல் செப்டம்பர் வரை.<br>அக்டோபர் முதல் டிசம்பர் வரை.<br>ஜனவரி முதல் பிப்ரவரி வரை.<br>மார்ச்சு முதல் மே வரை. |
| பாத்தி 3 | காராமணி,<br>கத்தரி, டர்னிப்<br>கொத்தவரை | ஜூன் முதல் செப்டம்பர் வரை.<br>அக்டோபர் முதல் ஜனவரி வரை.<br>பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 4 | வெண்டை<br>தட்டைப்பயறு<br>முள்ளங்கி<br>கீரை வகைகள் | ஜூன் முதல் செப்டம்பர் வரை.<br>அக்டோபர் முதல் ஜனவரி வரை.<br>பிப்ரவரி முதல் மார்ச் வரை.<br>ஏப்ரல் முதல் மே வரை. |
| பாத்தி 5 | மிளகாய், முள்ளங்கி<br>வெண்டை<br>கத்தரி, வெங்காயம் | ஜூன் முதல் செப்டம்பர் வரை.<br>அக்டோபர் முதல் ஜனவரி வரை.<br>பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 6 | பெல்லாரி,<br>வெங்காயம்<br>மிளகாய்<br>கீரை வகைகள்<br>முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை.<br>அக்டோபர் முதல் ஜனவரி வரை.<br>பிப்ரவரி முதல் மார்ச் வரை.<br>ஏப்ரல் முதல் மே வரை. |

கீரை வகைகள், முள்ளங்கி, கத்தரி, வெண்டை, தக்காளி, கொத்தவரை ஆகிய வகைகளை ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

அவரை, பூசணி, பாகல், புடலை ஆகியவைகளை ஜூலை- ஆகஸ்ட் (ஆடி), டிசம்பர்- ஜனவரி (மார்கழி) ஆகிய பட்டங்களில் விதைக்கலாம்.

முட்டைக்கோஸ், 'காலிபிளவர்', 'நூல்கோல்', 'பீட்ரூட்', 'கேரட்' ஆகியவைகளை அக்டோபர் முதல் டிசம்பர் வரை விதைக்கலாம்.

### விதைப்பு

கலப்பில்லாத, திடமான நல்ல முளைப்புத் திறன் உடைய விதைகளை விதைப்பதே சிறந்தது. விதைப்பதற்கு முன் விதைகளை 'அக்ரசான்' மருந்தில் கலந்து விதைக்க வேண்டும். கத்தரி, மிளகாய், தக்காளி, ஆகியவைகளை மேடான பாத்திகள் (Raised Beds) அமைத்து நாற்று விடுவதிலே சிறந்தது.



நாற்றுவிட மரப்பெட்டிகளையும் உபயோகிக்கலாம்.

கீரை போன்ற சிறிய விதைகளோடு எட்டு பாகம் மணலைக் கலந்து விதைத்தல் நல்லது.



நாற்றங்காலில் விதைகளைப் பரவலாக விதைப்பதே நல்லது.

வரிசைகளில் நாற்று விடுவதும் நல்லது.

விதைத்த விதைகள் முளைத்து வரும்போது, அவைகளைப் பறவைகள் தின்றுவிடாமல் தடுக்க, விதைப் பாத்திகளின் மேல் வைக்கோலைப் பரப்பி வைக்கலாம்.

விதைப் பாத்திகளுக்கு பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

ஒரு மாதத்திற்குப் பின் நாற்றுகளைப் பறித்து நடவு செய்தல் வேண்டும்.

நாற்றுகளைப் பறித்து நடுவதற்கு முன் நாற்றங்காலில் தாமிர பூசண கொல்லி மருந்து, என்ட்ரின் அல்லது பாரத்தியான் மருந்து ஆகியவைகளைத் தண்ணீரில் கலந்து தெளித்தல் நல்லது.

நாற்றுகளை வரிசை வரிசையாக நடுவதே சிறந்தது.

கிழங்கு வகைச் செடிகளுக்கு வரிசையில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளியும், வெண்டை, கத்தரி, தக்காளி ஆகியவைகளுக்கு 1.5 முதல் 2 அடி இடைவெளியும் விட்டு நடுதல் சிறந்தது.

### உரமிடுதல்

பொதுவாக எல்லாக் காய்கறி செடிகளுக்கும் (பூசணி ரகங்களைத் தவிர) ஒரு சதுர மீட்டருக்கு 50 கிராம் வீதம் இரசாயன உரங்கள் இடவேண்டும். அதில்,



அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட்—1 பங்கும்

சூப்பர் பாஸ்பேட்—2 பங்கும்

மூரியேட் ஆப் பொட்டாஷ்—1 பங்கும் கலந்திருக்க வேண்டும்.

சிறப்பாக நல்ல மகசூல் எடுப்பதற்கு அட்டவணை 4-இல் குறிப்பிட்டுள்ளது போல, குறிப்பிட்ட காய்கறிப் பயிருக்கு, குறிப்பிட்ட இரசாயன உரங்களைக் குறிப்பிட்ட அளவில் இட வேண்டும்.

அடிஉரத்தை, நாற்றுகளை நடுவதற்கு ஒருவாரம் முன்பாக இட்டுவிட வேண்டும்.

மேலுரமாக இரசாயன உரங்களை இட ஊடுழவு செய்யும் போது அல்லது களையெடுக்கும் பொழுது இடுவதே நல்லது. இரசாயன உரங்களை செடிகளினின்று 10 செ. மீ. தூரம் தள்ளி வைத்து அவைகளை மண்ணுடன் நன்குகக் கலக்குமாறு செய்ய வேண்டும்.

இரசாயன உர்மிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.

பூசணி, புடலை, பீர்க்கு, பாகல், சுரை ஆகியவைகளுக்கு ஒரு குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கலவை எருவையும், அட்டவணை-4-ல் குறிப்பிட்டுள்ள உரங்களையும் விதைகளை நடுவதற்கு முன்பு இடவேண்டும். பூக்கும்பொழுது ஒரு குழிக்கு 12 கிலோ தொழு எரு இடுவது சிறந்தது.

### களை எடுத்தலும் —மண் அணைத்தலும்

மண்ணில் தகுந்த காற்றோட்டம் ஏற்பட்டு, செடிகள் நன்கு வளர களை எடுத்தல் அவசியம். களைகள் தோன்றிய உடனேயே அவைகளை அகற்றிவிட வேண்டும்.

களையெடுக்கும் போது செடிகளின் வேர்களுக்கு கெடுதி ஏற்படாமல் களையெடுக்க வேண்டும். கிழங்கு வகைப் பயிர்களுக்கு மண் அணைக்க வேண்டும்.

### நீர்ப்பாசனம்

விதைகள் முளைக்கும்போது பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

இளஞ்செடிகளுக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

குறைந்த ஈரத்தன்மை, அதிக ஈரத்தன்மை ஆகிய இரு நிலைமைகளுமே செடிகளுக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடும். எனவே தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்பே, மண்ணில் 5 முதல் 6 செண்டி மீட்டர் ஆழத்தில் உள்ள மண்ணின் நிலைமையை அறிந்து அதற்கேற்பத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியம்.

''கேரட்'' போன்ற வேர்க் காய்கறிப் பயிர்களுக்கு அறுவடைக்கு 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விடுவது நல்லது. இவ்வாறு செய்வது கிழங்குகளுக்கு நல்ல சுவையையும், நல்ல நிறத்தையும் கொடுக்கிறது.

### பயிர்ப்பாதுகாப்பு

விதைகளை விதைப்பதற்கு முன்பாக 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலந்து விதைக்க வேண்டும்.

செடிகளில் பூச்சிகளையோ அல்லது நோய்களையோ கண்டால் உடன் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து தகுந்த தடுப்பு முறைகளை அறிந்து, அதன்படி, செய்யுங்கள்.

பூச்சிகள் வராமல் இருக்க, முன் தடுப்பாக 15 நாட்களுக்கு ஒரு தடவை 'என்ட்ரின்' அல்லது 'பாலிடால்' அல்லது 'ரோகார்' தெளிக்க வேண்டும். அது போலவே நோய்கள் வராமல் இருக்க முன் தடுப்பாக மாதமொருமுறை தாமிரப் பூசணக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டும்.

புடல், பாகல், பறங்கி, பீர்க்கு போன்ற பூசணி வகைக் காய்கறிச் செடிகளுக்கு டி.டி.டீ. (D. D. T.) அல்லது பி.எச்.சி. (B. H. C.) ஆகிய மருந்துகளைத் தூவுதலோ அல்லது தெளித்தலோ கூடாது.

பூசணி வகைக் காய்கறிச் செடிகளைப் பூச்சி தாக்கா வண்ணம் பாதுகாக்க 'லின்டேன்' தெளிக்க வேண்டும்.

காய்களை அறுவடை செய்வதற்கு 2 வாரத்திற்கு முன்பாகவே மருந்து தெளிப்பதையோ அல்லது மருந்து தூவுதலையோ நிறுத்திட வேண்டும்.



### எல்லா இடங்களையும் பயனுள்ள முறையில் சாகுபடி செய்தல்:

வீட்டுத் தோட்டத்தின் எந்தப் பகுதியையும் வீணாக்காமல் நன்கு பயன்படுத்தினால் மிகுந்த பலன் பெறலாம். திட்டமிட்டுப் பயிர் செய்தால், ஒரு அங்குல மண்ணைக்கூட வீணாக்காமல், பயன்படுத்தலாம்.

குறிப்பாக குடும்பத் தலைவிகள் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது வீட்டுத் தோட்டத்திற்கென ஒதுக்கி எல்லா வேலைகளையும் செய்ய முயன்றால், ஒரு அங்குல இடத்தைக்கூட வீணாக்காமல் பயன்படுத்தி, காய்கறிகள் விளைவை அதிகப்படுத்த முடியும். வீட்டுத் தோட்டத்திலுள்ள நடைபாதைகள், மைய நடை பாதை, வரப்பின் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், உயிர் வேலிகள், கலவை எருக் குழிகள், நிரந்தரப் பயிர்கள் பகுதி ஆகியவைகளைப் பின்கண்ட முறையில் நன்கு பயன்படுத்தி, மிகுந்த பயன் பெறலாம்.

#### நடைபாதை

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றியுள்ள நடைபாதை, மைய நடை பாதை ஆகியவற்றின் ஓரங்களில் குறுகிய கால வயதுடைய பலவகைக் கீரைகளை வளர்க்க வேண்டும். அவ்வோரங்களில் தண்டுக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக்கீரை, ஸ்பைனஷ், புதினா ஆகியவைகளைப் பயிரிடுங்கள். நடைபாதையின் ஒவ்வொரு ஓரத்திலும் ஒவ்வொரு வகைக்கீரை பயிரிடுங்கள். கீரைகளை வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

#### மைய நடைபாதை

மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரை படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், மைய நடை பாதையின் இரண்டு ஓரங்களிலும் செடிக்குச் செடி 2 முதல் 4 அடி இடைவெளிவிட்டு தக்காளிக் கன்றுகளை நட்டு வளருங்கள். தக்காளி செடிகளை தனிக்குச்சிகளில் இணைத்துக் கட்டி 4 முதல் 5 அடி உயரம் வரை வளர விடலாம்.

மைய நடைபாதையில் பன்னீர் திராட்சை (''மஸ்காட்''), ''அனுப்-இ-ஷாஹி'' போன்ற திராட்சைகளின் பதியங்களை நடுங்கள். மையநடைபாதையின் மேல் ஓர் பந்தல் அமைத்து அதன் மேல் திராட்சைக் கொடியைப் படரவிடுங்கள்.

#### வரப்பின் ஓரங்கள்

இரண்டு முக்கிய பாத்திகளை நீண்ட வாக்கில் பிரிக்கும் வரப்புகளின் ஓரங்களில் கீரை வகைகள் முள்ளங்கி, வெங்காயம் போன்றவைகளைப் பயிரிடுங்கள்.

#### தட்டிகள், வேலிகள்

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகளில் பசலை, பாகல், பீர்க்கன், கோவைக் காய், சௌ-சௌ முதலிய கொடி வகைச் செடிகளை வளர்க்க வேண்டும். இவைகளையும் வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

#### கலவை எருக் குழிகள்

காய்கறிச் செடிகளிலிருந்து விழும் காய்ந்த இலைகள், அறுவடைக்குப் பின் வெட்டப்பட்ட செடிகள், வீட்டில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றை அவ்வப்போது கலவை எருக் குழிகளில் (கம்போஸ்ட் குழிகள்) நிரப்பி, மண்ணால் மூடி எரு தயாரிக்கவும்.

கலவை எருக் குழிகளை மூடியுள்ள மேல் மண்ணிலேயே புடல், அவரை போன்ற விதைகளை ஊன்றலாம். அல்லது தொட்டிகளில் விதைகளை ஊன்றி கலவை எருக் குழிகளின் மேல் வைக்கலாம்.

கலவை எருக் குழிகளின் மேல் பந்தல் அமையுங்கள். அப்பந்தலின் மேல் புடல், அவரை போன்ற கொடிகளைப் படர விடுங்கள்.

#### நிரந்தரப் பயிர்கள் பகுதி

நிரந்தரப் பயிர்களுக்காக, வீட்டுத் தோட்டத்தின் பின் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழை, கறி வேப்பிலை, ஜாப்னா முருங்கை, தவசிக்கீரை அல்லது, செக்கூர் மணிஸ்' எனப்படும் உயிர்ச்சத்துக் கீரை (Multi-Vitamin Greens) மரவள்ளிக் கிழங்கு, கத்தரி, தென்னை ஆகிய நிரந்தரப் பயன்தரும் செடிகளை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் இப்பகுதியில் ஒன்றிரண்டு பழச் செடிகளையும் வளர்த்தல் நல்லது. ஏனென்றால் பெரும்பாலான பழங்கள் குடற்பகுதிகளை நல்ல நிலையிலும், சுறுசுறுப்பாகவும்



வைப்பதற்கு வேண்டிய திடப் பொருட்களைக் (Roughage) கொடுத்து உதவுவதுடன் உயிர்ச் சத்து (வைட்டமின்) 'ஏ' உயிர்ச் சத்து (வைட்டமின்) 'சி' தாது உப்புகள் ஆகியவற்றையும் கொடுக்கின்றன.

மேலும் வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் குறைந்தது 84 கிராம் (3 அவுன்சு) பழங்களை உண்ண வேண்டும் என்று ஊட்ட உணவு ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுவதால் நமக்குத் தேவையான பழங்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பப்பாளியை நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம். பப்பாளி ஆண்டு முழுவதும் பழம் கொடுப்பதுடன், நமக்குத் தேவையான வைட்டமின் 'ஏ' யையும் கொடுக்கிறது.

நமக்குப் பலவகையிலும் பயன்படும் எலுமிச்சையையும், வைட்டமின் 'சி' நிறைந்த 'மேற்கு இந்திய செர்ரி' ( West-Indian Cherries ) போன்றவைகளையும் நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம்.

நிரந்தரப் பயிர்களின் இடைவெளிகளில் சர்க்கரை வள்ளி, தட்டைப் பயறு, பீன்சு போன்றவைகளைப் பயிரிடலாம்.

வாழையின் நிழலில் ஓரிரண்டு சேனைக் கிழங்குகளை நடலாம்.







## வீட்டுத் தோட்டம் அமைக்கப் போதிய இடம் இல்லை என்றால் என்ன செய்வது ?

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுத் தோட்டம் அமைக்க 5 சென்ட் நிலம் தேவை என்ற விகிதப்படி காலி இடம் இல்லை என்றாலும், பெரும்பாலான வீடுகளின் பின்புறத்தில் மிகக் குறைந்தது 100 சதுர அடி பரப்பு இடமாவது காலியாக (வெறுமனே) கிடக்கிறது. அந்தக் காலி இடங்களில் கீழே படத்தில் கண்டபடி வீட்டுத் தோட்டம் அமைக்கவும்.

### *100 சதுர அடி மாதிரி வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறை:*




படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நிலத்தைச் சுற்றிலும் மூங்கிலால் செய்யப்பட்ட வேலி ஒன்றை அமையுங்கள். இவ்வேலியில் பசலை, பாகல், பீர்க்கு, தொண்டங்காய் முதலிய கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

4 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட 4 பாத்திகளை அமையுங்கள், அப்பாத்திகளை முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல் தயார் செய்யுங்கள்.

நிலத்தின் நடுவில் 2 அடி அகலத்திற்கு நடைபாதை அமையுங்கள். நடைபாதையின் இருபுறத்திலும் ஓரங்களில் கொத்தமல்லி, வெந்தயம், புதினா முதலியவைகளைப் பயிரிடுங்கள்.

நிலத்தின் குறுக்காகச் செல்லும் அடுத்த நடைபாதையின் இருபுறத்திலும் முள்ளங்கியினை பயிரிடுங்கள். முள்ளங்கி விதைகளை 1 அடி இடைவெளிக்கு ஒன்றாக நடுங்கள்.

அல்லது படத்தில் கண்டுள்ளது போல் தக்காளிக் கன்றுகளை நடவு செய்து, கம்புகள் அல்லது குச்சிகளுடன் இணைத்துக் கட்டுங்கள்.

100 சதுர அடி பரப்புள்ள வீட்டுத் தோட்டத்திலிருந்து ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்களைப் பெற, 4 பாத்திகளிலும் அட்டவணை-3-இல் கண்டபடி பயிரிடுங்கள்.

ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் வீட்டுத் தோட்டம் போடக் குறைந்தது 100 சதுர அடி இடம் கிடைக்குமாதலின், 100 சதுர அடியில் பயிரிடுவதற்கு ஏற்ற முக்கிய காய்கறிகள், அவைகளை விதைக்கும் காலம், அறுவடை செய்யும் காலம், மகசூல் ஆகியவைகளை அட்டவணை-4-இல் விரிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை—3.**

| பாத்தி எண் | பருவம் | காய்கறிகளின் பெயர் |
|---|---|---|
| பாத்தி 1 | ஜூன்—ஜூலை | கீரை வகைகள் |
| | ஆகஸ்டு—நவம்பர் | வெண்டை |
| | டிசம்பர்—பிப்ரவரி | வெங்காயம் |
| | மார்ச்—ஜூன் | கத்தரி |
| பாத்தி 2 | ஜூன்—செப்டம்பர் | வெண்டை |
| | அக்டோபர்—மார்ச் | கத்தரி |
| | பிப்ரவரி—மார்ச் | கீரை வகைகள் |
| | ஏப்ரல்—மே | முள்ளங்கி |
| பாத்தி 3 | ஜூன்—செப்டம்பர் | தக்காளி |
| | அக்டோபர்—டிசம்பர் | முள்ளங்கி |
| | ஜனவரி—பிப்ரவரி | கீரை வகைகள் |
| | மார்ச்—ஜூன் | வெண்டை |
| பாத்தி 4 | ஜூன்—செப்டம்பர் | கத்தரி |
| | அக்டோபர்—நவம்பர் | கீரை வகைகள் |
| | டிசம்பர்—நவம்பர் | வெண்டை |
| | ஏப்ரல்—ஜூன் | காராமணி |

(தொடரும்.)







# நமது குடியரசுத் தலைவர்

(வாழ்க்கை வரலாறு)

இந்தியாவின் ஆருவது குடி யரசுத் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கும் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் மிகப் பெரிய அரசியல்வாதியாகவும், நிர்வாகியாகவும் திகழ்பவர். இந்தியா சுதந்தரம் அடைவதற்கு முன்பும், அடைந்த பின்பும் அநேக முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார். 1913ஆம்ஆண்டு மே மாதம் 19-ந் தேதி ஆந்திரப் பிரதேஷ், அனந்தப்பூர்மாவட்டத் தின் இல்லூரு என்னும் கிராமத் தில் திரு. சஞ்சீவ ரெட்டி ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந் தார். சென்னை, அடையாறில் உள்ள பழம் பெரும் கல்வி நிலைய மான தியாசாபிகல் உயர்நிலைப் பள்ளியில் அவர் தமது துவக்கக் கால கல்வியைப் பயின்ருர். பின்னர் அனந்தப்பூர் கலைக் கல் லூரியில் சேர்ந்து படித்தார்.

இளைஞரான சஞ்சீவரெட்டிக்கு கல்வியில் நாட்டம் செல்லவில்லை. விடுதலை இயக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர் வம் மேலோங்கியது. ஆகவே, 1931-ல் அவர் தமது கல்லூரிப் படிப்பைத் துறந்தார். இளைஞர் ஸ்தாபனம், மற்ற தேசீய நட வடிக்கைகள் ஆகியவற்றில் அவர் தமது மாணவப் பருவத்தைக் கழித்தார். உண்மையில், மாண வர் சத்தியாகிரகம் ஒன்றில் அவர் கலந்து கொண்டபோதுதான், அவர் யாரென்று முதலில் தெரிய வந்தது.

திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் 25-வது வயதில் ஆந்திரப் பிரதேஷ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பத் தாண்டுகள் அவர் இப்பதவியை வகித்து வந்தார். 1940 முதல் 1945 வரையான காலத்தில் பெரும்பாலான பகுதியை அவர் சிறையிலேயே கழித்தார். 1942 -இல் அவர் சிறிது காலம் விடுதலை செய்யப்பட்டார். ஆனல் மறு படியும் அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மீண்டும் கைது செய்யப்பட்டு தற்போது மஹா ராஷ்டிராவிலுள்ள அம்ரௌத்தி சிறைச்சாலையில் அவர் மீண்டும் அடைக்கப்பட்டார். இச் சிறை யில் திரு. பிரகாசம், திரு. சத்ய மூர்த்தி, திரு. காமராஜ், திரு. கிரி போன்ற பெருந் தலைவர்களு டனும், இன்னும் மற்றவர்களுட னும் திரு. ரெட்டி 1945 வரை இருந்தார்.

1946ல் சென்னை சட்டசபைக்கு திரு. ரெட்டி தேர்ந்தெடுக்கப்பட் டார். அதற்கடுத்த வருடம், சென்னை சட்டசபையில் காங்கி ரஸ் கட்சியின் செயலாளரானுர். 1947ல் அவர் இந்திய அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர் ஆனுர்.

1949 ஏப்ரல் முதல் 1951 ஏப்ரல் வரை சென்னை கூட்டு மாகாணத்தில் மது விலக்கு, வீட்டு வசதி, காடுகள் ஆகிய துறைகளின் அமைச்சராக இருந் தார். 1951ல் ஆந்திரப் பிரதேஷ் காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் போட்டியிடும்

பொருட்டு அமைச்சர் பதவியை அவர் ராஜிஞமா செய்தார். காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் அவர் வெற்றி பெற்ருர். இந்தச் சமயத்தில்தான் அவரது ஐந்து வயது மகன் மோட்டார் விபத்தில் மரணம் அடைந்தான். மகன் இறந்த வருத்தத்தை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவர் பெருத்த அதிர்ச்சிக்கு உள்ளாஞர். அதனுல் திரு. ரெட்டி ஆந்திரப் பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை ராஜிஞமா செய்தார். பின்னர் அவரது ராஜிஞமாவை வாபஸ் பெறுமாறு பலர் அவரை வற்புறுத்தினர்.

1952ல் திரு. ரெட்டி ராஜ்ய சபா உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபையில் 1953ல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் கூட,மறைந்த திரு. டி. பிரகாசம் அமைச்சரவையில் துணை முதலமைச்சர் பதவியை அவர் ஏற்றுக் கொண்டார். 1955-ஆம் ஆண்டில் அவர் மறுபடியும் சட்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திரு. பி. கோபால ரெட்டியின் அமைச்சரவையில் துணை முதலமைச்சராஞர்.

1956 அக்டோபரில் திரு. ரெட்டி மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டதையொட்டி புதிதாக அமைக்கப்பட்ட ஆந்திரப் பிரதேஷ் மாநிலத்தின் முதலமைச்சராஞர். இந்திய தேசிய காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பொருட்டு 1959ல் அவர் தமது முதலமைச்சர் பதவியை ராஜிஞமா செய்தார். 1962 மார்ச் மாதத்தில் அவரது பதவிக் காலம் முடிவடைந்தது. மறுபடியும் அவர் ஆந்திரப் பிரதேஷின் முதலமைச்சராஞர். பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் மீது மக்களின் நம்பிக்கை குறையக்கூடாது என்பதற்காக, 1964 பிப்ரவரியில் அவர் தாமாகவே முன்வந்து தனது முதலமைச்சர் பதவியை ராஜிஞமா செய்தார். அவர் மறுபடியும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயினும் புதிய அமைச்சரவையை அமைப்பதற்கு அவர் தமது சகாவான திரு. கே. பிரம்மானந்த ரெட்டியை அழைக்குமாறு ஆளுநருக்குப் பரிந்துரை கூறிஞர்.

1964 ஜூன் 9ஆம் தேதி திரு. லால் பஹதூர் சாஸ்திரி அமைத்த மத்திய அமைச்சரவையில் எஃகு, சுரங்கங்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1964 நவம்பரில் அவர் ராஜ்யசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் 1966 ஜனவரி முதல் 1967 மார்ச் வரை, போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து, கப்பல்போக்குவரத்து, சுற்றுலா ஆகிய துறைகளின் அமைச்சராக திரு. ரெட்டி பணியாற்றிஞர். 1967 பொதுத் தேர்தலில் ஆந்திரப் பிரதேஷில் இந்துபூர் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்கு அவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 மார்ச் 7-ஆம் தேதி மக்கள் சபையின் அவைத் தலைவராகத் திரு. ரெட்டி தேந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவிதான் அவருக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் பேரும், புகழும் ஈட்டித் தந்தது.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு திரு. ரெட்டியின் வேட்பு மனுவை திருமதி இந்திரா காந்தி தாக்கல் செய்ததனுல், 1969 ஜூலை 9ஆம் தேதி திரு. ரெட்டி மக்கள் சபை அவைத் தலைவர் பதவியை ராஜிஞமா செய்தார். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது அனைவரும் அறிந்ததே.

1969க்குப் பிறகு திரு. ரெட்டி தனது நேரத்தை விவசாயத்தில் முழு மூச்சாக ஈடுபவதன் மூலம் கழித்தார். விவசாயம் எப்போதும் அவரது உயிர் மூச்சாக விளங்கியது. ஆஞலும் 1975 மே மாதம் முதல் தேதியன்று ஐதராபாத்தில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதன் மூலம், அவர் மறுபடியும் தீவிர அரசியலில் ஈடுபட்டார்.

1977 மார்ச் மாதத்தில் நடைபெற்ற மக்கள் சபைத் தேர்தலில் ஆந்திரப் பிரதேஷில் உள்ள நந்தியால் தொகுதியிலிருந்து ஜனதா கட்சி வேட்பாளராக திரு. ரெட்டி போட்டியிட்டார். அத்தேர்தலில் ஆந்திரப் பிரதேஷ் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அல்லாத உறுப்பினர் திரு. ரெட்டி ஒருவர்தான்.

1977 மார்ச் 26ஆம் தேதி மக்கள் சபையின் அவைத் தலைவராக திரு. ரெட்டி போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் பொருட்டு 1977 ஜூலை 13ஆம் தேதி திரு. ரெட்டி தனது அவைத் தலைவர் பதவியைத் துறந்தார். குடியரசுத் தலைவர் பதவிக்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்ற வேட்பாளராக ஏகமனதாக அவர் நியமிக்கப்பட்டார். சமீபத்திய அரசியல் வரலாற்றில் இது அரியதொரு நிகழ்ச்சியாகும். 1977 ஜூலை 21-ஆம் தேதி இந்தியக் குடியரசுத் தலைவராக அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டார்.

திரு. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் 1958ல் திரு. சஞ்சீவ ரெட்டிக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

திரு. சஞ்சீவ ரெட்டி 1935 ஜூன் 8-ஆம் தேதி திருமணம் செய்து கொண்டார். இவரது மனைவியின் பெயர் திருமதி நாகரத்தினம்மாள். இவர்களுக்கு ஒரு மகனும், மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

## ஆடிப்பட்டம் காய்கறி விளக்க விழா

ஆடிப்பட்டம் காய்கறி விளக்க விழாவினை 29-7-'77 அன்று மாலை 3.30 மணிக்கு சென்னை, இராணி மேரிக் கல்லூரியில் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்தார். இவ் விழா 29-7-77 முதல் 16-8-'77 வரை சென்னையில் உள்ள பொது நிறுவனங்களில் நடைபெறும். விழா நடைபெறும் காலத்தில் அந்தந்த நிறுவனங்களில், நடமாடும் விற்பனைப்பகுதி மூலம் தரமான காய்கறி விதைகள், நாற்றுக்கள், தென்னை மற்றும் பழ விதைகள், வாழைக் கன்றுகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உர மருந்துப் பொட்டலங்கள் ஆகியவைகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





# கல்வியே ஆற்றல்!

மாண்புமிகு கல்வி அமைச்சர்
செ. அரங்கநாயகம் அவர்கள்

"மதிப்புக்குரிய ஆசிரியப் பெருமக்களே!

"அன்புள்ள மாணவர்களே!

"வாஞெலி நிலையத்தார் இன்று முதல் கல்வி ஒலிபரப்புகளைத் துவக்குகின்றனர்—பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவுகின்ற வகையிலும், கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்குப் பயன்தரும் முறையிலும், நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றன. கடந்த பல ஆண்டுகளாக நடந்து வரு

...பள்ளி
தொடக்கப்
ஆக மொத்தம்
00 பள்ளிகளில்
பட்டிகள் இருப்பது
ரியது. வாஞெலிப்
இல்லாத பள்ளியே
டில் இல்லை என்று
நிலையை அடையுப்
தொலைவில் இல்லை.

பள்ளிக் கல்வி
டர் ஹெச். என்.
அவர்கள் இத்
ந்த ஆர்வத்
வருவதைப்
திதி வசதி

பொருட்டு அமைச்சர் பதவியை அவர் ராஜிஞமா செய்தார். காங்கிரஸ் தலைவர் பதவிக்கான தேர்தலில் அவர் வெற்றி பெற்ருர். இந்தச் சமயத்தில்தான் அவரது ஐந்து வயது மகன் மோட்டார் விபத்தில் மரணம் அடைந்தான். மகன் இறந்த வருத்தத்தை அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவர் பெருத்த அதிர்ச்சிக்கு உள்ளாஞர். அதஞல் திரு. ரெட்டி ஆந்திரப் பிரதேஷ் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியை ராஜிஞமா செய்தார். பின்னர் அவரது ராஜிஞமாவை வாபஸ் பெறுமாறு பலர் அவரை வற்புறுத்தினர்.

1952ல் திரு. ரெட்டி ராஜ்ய சபா உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டசபையில் 1953ல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் கூட,மறைந்த திரு. டி. பிரகாசம் அமைச்சரவையில் துணை முதலமைச்சர் பதவியை அவர் ஏற்றுக் கொண்டார். 1955-ஆம் ஆண்டில் அவர் மறுபடியும் சட்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திரு. பி. கோபால ரெட்டியின் அமைச்சரவையில் துணை முதலமைச்சராஞர்.

1956 அக்டோபரில் திரு. ரெட்டி மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்டதை யொட்டி புதிதாக அமைக்கப்பட்ட ஆந்திரப் பிரதேஷ் மாநிலத்தின் முதலமைச்சராஞர். இந்திய தேசிய காங்கிரசின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பொருட்டு 1959ல் அவர் தமது முதலமைச்சர் பதவியை ராஜிஞமா செய்தார். 1962 மார்ச் மாதத்தில் அவரது பதவிக் காலம் முடிவடைந்தது. மறுபடியும் அவர் ஆந்திரப் பிரதேஷின் முதலமைச்சராஞர். பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் மீது மக்களின் நம்பிக்கை குறையக்கூடாது என்பதற்காக, 1964 பிப்ரவரியில் அவர் தாமாகவே முன்வந்து தனது முதலமைச்சர் பதவியை ராஜிஞமா செய்தார். அவர் மறுபடியும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயிஞம் புதிய அமைச்சரவையை அமைப்பதற்கு அவர் தமது சகாவான திரு. கே. பிரம்மானந்த ரெட்டியை அழைக்குமாறு ஆளுநருக்குப் பரிந்துரை கூறிஞர்.

1964 ஜூன் 9ஆம் தேதி திரு. லால் பஹதூர் சாஸ்திரி அமைத்த மத்திய அமைச்சரவையில் எஃகு, சுரங்கங்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1964 நவம்பரில் அவர் ராஜ்யசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் 1966 ஜனவரி முதல் 1967 மார்ச் வரை, போக்குவரத்து, சிவில் விமானப் போக்குவரத்து, கப்பல்போக்குவரத்து, சுற்றுலா ஆகிய துறைகளின் அமைச்சராக திரு. ரெட்டி பணியாற்றிஞர். 1967 பொதுத் தேர்தலில் ஆந்திரப் பிரதேஷில் இந்துபூர் தொகுதியிலிருந்து மக்கள் சபைக்கு அவர் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1967 மார்ச் 7-ஆம் தேதி மக்கள் சபையின் அவைத் தலைவராகத் திரு. ரெட்டி தேந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவிதான் அவருக்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்குப் பேரும், புகழும் ஈட்டித் தந்தது.

குடியரசுத் **தலை**வர் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு திரு. ரெட்டியின் வேட்பு மனுவை திருமதி இந்திரா காந்தி தாக்கல் செய்ததஞல், 1969 ஜூலை 9ஆம் தேதி திரு. ரெட்டி மக்கள் சபை அவைத் தலைவர் பதவியை ராஜிஞமா செய்தார். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பது அனைவரும் அறிந்ததே.

1969க்குப் பிறகு திரு. ரெட்டி தனது நேரத்தை விவசாயத்தில் முழு மூச்சாக ஈடுபவதன் மூலம் கழித்தார். விவசாயம் எப்போதும் அவரது உயிர் மூச்சாக விளங்கியது. ஆஞலும் 1975 மே மாதம் முதல் தேதியன்று ஐதராபாத்தில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதன் மூலம், அவர் மறுபடியும் தீவிர அரசியலில் ஈடுபட்டார்.

1977 மார்ச் மாதத்தில் நடைபெற்ற மக்கள் சபைத் தேர்தலில் ஆந்திரப் பிரதேஷில் உள்ள நந்தியால் தொகுதியிலிருந்து ஜனதா கட்சி வேட்பாளராக திரு.ரெட்டி போட்டியிட்டார். அத்தேர்தலில் ஆந்திரப் பிரதேஷ் மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அல்லாத உறுப்பினர் திரு. ரெட்டி ஒருவர்தான்.

1977 மார்ச் 26ஆம் தேதி மக்கள் சபையின் அவைத் தலைவராக திரு. ரெட்டி போட்டியின்றித் - தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு வேட்பு மனுவைத் தாக்கல் செய்யும் பொருட்டு 1977 ஜூலை 13ஆம் தேதி திரு. ரெட்டி தனது அவைத் தலைவர் பதவியைத் துறந்தார். குடியரசுத் தலைவர் பதவிக்கு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்ற வேட்பாளராக ஏகமனதாக அவர் நியமிக்கப்பட்டார். சமீபத்திய அரசியல் வரலாற்றில் இது அரியதொரு நிகழ்ச்சியாகும். 1977 ஜூலை 21-ஆம் தேதி இந்தியக் குடியரசுத் தலைவராக அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்.

திரு. வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் 1958ல் திரு. சஞ்சீவ ரெட்டிக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

திரு. சஞ்சீவ ரெட்டி 1935 ஜூன் 8-ஆம் தேதி திருமணம் செய்து கொண்டார். இவரது மனைவியின் பெயர் திருமதி நாகரத்தினம்மாள். இவர்களுக்கு ஒரு மகனும், மூன்று பெண் மக்களும் உள்ளனர்.

## ஆடிப்பட்டம் காய்கறி விளக்க விழா

ஆடிப்பட்டம் காய்கறி விளக்க விழாவினை 29-7-'77 அன்று மாலை 3.30 மணிக்கு சென்னை, இராணி மேரிக் கல்லூரியில் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்தார். இவ் விழா 29-7-77 முதல் 16-8-'77 வரை சென்னையில் உள்ள பொது நிறுவனங்களில் நடைபெறும். விழா நடைபெறும் காலத்தில் அந்தந்த நிறுவனங்களில், நடமாடும் விற்பனைப்பகுதி மூலம் தரமான காய்கறி விதைகள், நாற்றுக்கள், தென்னை மற்றும் பழ விதைகள், வாழைக் கன்றுகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், உர மருந்துப் பொட்டலங்கள் ஆகியவைகளை விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.





# கல்வியே ஆற்றல்!

மாண்புமிகு கல்வி அமைச்சர்
செ. அரங்கநாயகம் அவர்கள்

"மதிப்புக்குரிய ஆசிரியப் பெருமக்களே!

"அன்புள்ள மாணவர்களே!

"வானொலி நிலையத்தார் இன்று
முதல் கல்வி ஒலிபரப்புகளைத் துவக்கு
கின்றனர்—பள்ளிகளில் படிக்கும் மாண
வர்களுக்கு உதவுகின்ற வகையிலும்,
கற்றுத் தருகின்ற ஆசிரியர்களுக்குப்
பயன்தரும் முறையிலும், நிகழ்ச்சிகள்
திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றன.
கடந்த பல ஆண்டுகளாக நடந்து வரு
கின்ற இவ்வகை நிகழ்ச்சிகள் நல்ல பலனைத் தந்து வருகின்றன.

"நீங்களெல்லாம், இன்று தொடங்கப்படும் இந் நிகழ்ச்சிகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வீர்களென நம்புகிறேன்.

"மாணவர்களைக் கவரும் வண்ணம் நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கல்விப் பணி புரியும் வானொலி நிலையத்தாரை நான் பாராட்டுகிறேன்.

''கண்ணுடையர் என்பவர் கற்ருேர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

—என்பது குறட்பா.

''கண்ணுடையவர் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர்கள் கற்றவர்களே. மற்றையோர் கல்லாதவர். அவர்கள் கண்ணில்லாதவர்கள். அவர்கள் முகத்தின்கண் இரண்டு புண்ணுடையவர்களே. இதுதான் வள்ளுவரின் கருத்து.

''ஒருவன் தான் பெறுகின்ற கல்வியின் மூலம்தான் வாழ்க்கையில் பல்வேறு உண்மைகளைக் காணுகின்ற பார்வையை —ஆற்றலைப்—பெறுகிருன்.

''படிக்கின்ற மாணவர்கள் இதை உணர்வீர்களேயாஞல், படிப்பிலே மிகுந்த அக்கறையைக் காட்டுவீர்கள், நல்ல முறையில் படிப்பீர்கள் என நம்புகிறேன்.

''கல்வி இல்லையேல் நமக்கு நல்ல எதிர்காலம் இல்லை. மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றுத்தருபவற்றைக் கவனித்துப் படித்துத் தேர்ச்சிபெற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

''ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் இயற்கைச் செல்வங்களைப் பொறுத்தது என்பதைவிட, அந்நாட்டு மக்களின் அறிவையும், ஆற்றலையும் பொறுத்தது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

''சமுதாயத்தின் அறிவையும் ஆற்றலையும் வளர்க்கின்ற பணியைத்தான் கல்வி செய்கிறது.

''கற்பதைக் கசடறக் கற்று, கற்றபின் அதற்குத் தக நாம் நடப்போமேயாஞல், சமுதாயம் நிச்சயம் முன்னேறும். நாம் காணும் பல்வேறு கஷ்டங்கள் மறையும்.

''இப்பெரும் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொண்ட ஆசிரியப் பெருமக்கள் இந் நிகழ்ச்சிகளை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; மாணவர்களை முன்னதாகவே தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

''வானெலி நிலையத்தார் பாடங்களைக் கவர்ச்சிகரமாக நடத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர். பாடல், நாடகம், கேள்விகள் போன்ற பகுதிகளையும் வைத்துள்ளனர். இதன்மூலம் கல்வியறிவு பெறுவது எளிதாக்கப்படுகிறது.

''இவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் நல்ல முன்னேற்றம் அடைய வேண்டும், அவர்கள் முயற்சிகளில் வெற்றி பெறவேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன். வணக்கம்.''

—[18.7.1977 அன்று அனைத்து இந்திய வானெலியின் சென்னை நிலையத்தில் கல்வி ஒலிபரப்புகளைத் தொடங்கி வைத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் ஆற்றிய சிறப்புரை.]



''நாடு வாழ நம்முடைய உழைப்பும் தேவை என்ற உணர்வு எல்லாருக்கும் வேண்டும்.

நாம் யாவரும் நமது அறிவாற்றலை நாட்டுக்கு எந்த அளவு தருகின்ருேமோ அந்த அளவுக்கே நாட்டுப் பொது நன்மை உயர முடியும்''.

—பேரறிஞர் அண்ணு



# எல்லாரும் பாராட்டும் கல்வி ஒலிபரப்புகள்



எம். எஸ். கோபால்,
சென்னை வானெலி நிலைய இயக்குநர்

"கல்வி ஒலிபரப்புகள் சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து தொடங்கப்பட்டு, ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஆகின்றன என்ருல் உங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கும். படிப்படியாகக் கல்வி ஒலிபரப்புகள் விரிவாக்கப்பட்டு, இன்று வகுப்பு வாரியாக, பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு, நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

''வகுப்பறைக் கல்வியோடு, பல துறைகளிலும், பலவகைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்குச் சென்று கண்டு கேட்டு அறிவதன் மூலம் மாணவர்களுக்கு வெளி உலக அனுபவமும், பொது அறிவும் வளர வாய்ப்பு ஏற்படும். இந்த அடிப்படையில் வானெலி நிலையம் மூலம் பல இடங்களைச் சென்று பார்த்து வரும் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

''கடந்த ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு, சென்னைப் பல்கலைக்கழக நூற்றுண்டு விழா மண்டபத்தில் சுமார் 22 பள்ளிகளைச் சேர்ந்த 300-க்கும் அதிகமான மாணவ மாணவியர் சேர்ந்து பாடிய நிகழ்ச்சி கண்ணுக்கும், கருத்துக்கும், காதுக்கும் இனிய விருந்தாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் பலர் ஒன்று சேர்ந்து பாடும் கலையில் ஒரு சாதனையையும் புரிந்தது.

''சென்ற ஆண்டு ஒன்பதாம் வகுப்பிற்கும், ஏழாம் வகுப்பிற்கும் ஒலிபரப்பான 'சேர்ந்து பாடுவோம்' நிகழ்ச்சி, இந்த ஆண்டு, பத்தாம் வகுப்பிற்கும், எட்டாம் வகுப்பிற்கும் விரிவாக்கப்பட்டிருக்கின்றது. நாட்டுப் பற்று, ஒருமைப்பாட்டு உணர்ச்சி, கடமை உணர்வு, கட்டுப்பாடு, ஒழுக்கம், கூட்டுறவு, சமுதாயப் பொறுப்புகள் போன்ற உயரிய பண்புகளை வளர்க்கக்கூடிய பாடல்கள் 'சேர்ந்து பாடுவோம்' இசை நிகழ்ச்சியின் மூலம் பெற முடியும். தேசிய கவி பாரதி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தமிழ்ஒளி ஆகியோர் எழுதிய இந்தப் பாடல்களை நீங்களும் கேட்டுச் சேர்ந்து பாடுவதன் மூலம் உள்ளத்தில் ஒற்றுமை உணர்வும், பரந்த மனப்பான்மையும் இசையின்பமும் ஊற்றெடுக்கும். இந்நிகழ்ச்சியின் முக்கியத்துவம் கருதி, சென்னை வானெலி நிலையப் பாடற் குழுவினர், விருப்பம் தெரிவிக்கும் நகரிலுள்ள சில பள்ளிகளுக்கு நேரில் சென்று சேர்ந்து பாடுவோம் நிகழ்ச்சியினை நடத்தி, மாணவர்கள் பாடல்களை விரைவில் கற்றுக்கொள்ளவும் சேர்ந்து பாடும் திறனைப் பெறவும் உதவும் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

''தமிழகமெங்குமுள்ள மாணவ மாணவியர் அனைவரும், வானெலி மூலம் ஒலிபரப்பாக இருக்கும் சேர்ந்து பாடுவோம் நிகழ்ச்சியில் இணைந்து பாடிக் பழகிப் பயனடைவர் என நம்புகிறேன். வசதியுள்ள பள்ளிகள் இந்த நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொண்டு, மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டுப் பாடிப் பழகலாம்.

''கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, நாடகம், விஞடி விஞ, உரைச்சித்திரம்-போன்ற பல வடிவங்களில் ஒலிபரப்பாக இருக்கின்றன. கடந்த ஆண்டு இதே மாதத்தில் சுமார் 5,000 பள்ளிகளில் மட்டுமே வானெலிப் பெட்டிகள் இருந்தன. ஆஞல் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 37,000 பள்ளிகளில், 2,800 உயர்நிலைப் பள்ளிகளிலும், 4,320 நடுநிலைப்பள்ளிகளிலும், 15,550 தொடக்கப் பள்ளிகளிலும் ஆக மொத்தம் சுமார் 22,000 பள்ளிகளில் வானெலிப் பெட்டிகள் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. வானெலிப் பெட்டி இல்லாத பள்ளியே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லும் நிலையை அடையும் நாள் வெகுதொலைவில் இல்லை.

''தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர் டாக்டர் ஹெச். என். எஸ். லாரன்ஸ் அவர்கள் இத் திட்டத்தில் மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்டு வருவதைப் பாராட்டுகிறேன். நிதி வசதியுள்ள பள்ளிகளில் ஏற்கெனவே ஒரு வானெலிப்பெட்டி இருந்தா

ஆும், கூடுதலாக நான்கு டிரான் சிஸ்டர்கள் வரை வாங்கிவைத்து அதிக அளவில் மாணவர்கள் கேட்கும் வசதியைப் பரவலாக்க லாம் என்று கல்வித்துறை சுற்ற றிக்கை விட்டிருப்பது வரவேற் கத்தக்கது.

''சில பள்ளிகளில் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்க, ஒலிபரப்பாகும் நேரங்கள் வசதி யாக இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அத்தகைய பள்ளி களில் 'ஒலிப்பதிவு நாடா'வில் நிகழ்ச்சியைப் பதிவு செய்து கொண்டு, வசதியான நேரத்தில் மாணவர்களைக் கேட்கச் செய்ய லாம்.

''வானொலிக் கல்வி நிகழ்ச்சி களை மாணவர்கள் உன்னிப்பாகக் கேட்பதை ஊக்குவிக்கும் வகை யில், வானொலி 'பரிசுத் திட் டங்கள்' ஏற்பாடு செய்திருப் பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். உயர்நிலைப்பள்ளி, நடு நிலைப் பள்ளிகளுக்குரிய நிகழ்ச்சி களின் இறுதியில் அந்நிகழ்ச்சிகள் பற்றிய கேள்விகளை அவ்வப் போது ஒலிபரப்புகிறோம். மாண வர்கள் அவைகளுக்கு விடை யெழுதி அனுப்ப வேண்டும். ஆண்டு முழுவதும் எழுதும் விடைகள் சேகரிக்கப்பட்டு, சிறந்த விடைகள் எழுதிய மாண வர்களுக்குப் பரிசுகள் வழங்கப் படுகின்றன. 6-ஆம் வகுப்பு முதல் 11-ஆம் வகுப்பு வரை, வகுப்புக்கு இரண்டு பரிசுகள் உண்டு. மாணவர்கள் இப்பரிசுத் திட்டத்தில் உற்சாகத்தோடு ஈடு பட வேண்டுகிறேன்.

''இதுபோன்றே வகுப்பு வாரி யாக வழங்கப்பட்டிருக்கும் கை யேட்டின் கடைசிப் பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் மதிப் பீட்டுத்தாளை மாதிரியாக வைத் துக்கொண்டு ஒவ்வொரு நிகழ்ச்சி யையும் பற்றிய தங்களது கருத் துக்களை உடனுக்குடன் எழுதி யனுப்ப வேண்டுகிறோம். இதன் மூலம் நிகழ்ச்சிகளை மேலும் சிறந்த முறையில் அமைக்க உங் களது நல்ல யோசனைகள் எங் களுக்குப் பயன்படும். அதோடு, சிறந்த முறையில், அதிக அளவில் மதிப்பீட்டுத்தாள்களை அனுப்பு கிற உயர்நிலைப்பள்ளி ஒன்றுக்கும் ஒரு நடுநிலைப்பள்ளிக்கும் பரிசு வழங்கப்படுகிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

''கடந்த 1976-77-ஆம் ஆண் டில் நிகழ்ச்சிகளைக் கேட்டு பள்ளிகள் அவ்வப்போது மதிப் பீடுகளை அனுப்பி வந்துள்ளன. அவற்றில் அதிக அளவில் சிறந்த



மதிப்பீடுகளை அனுப்பிய ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் உயர் நிலைப்பள்ளியும், திருச்சிராப் பள்ளி, இடமலைப்பட்டி கலைமகள் நடுநிலைப் பள்ளியும் பரிசுகள் பெறுகின்றன. இவ்விரண்டு பள்ளிகளுக்கும் எங்களது பாராட் டுக்கள்.

''கடந்த ஆண்டில் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு, மாணவர் கள் அதிக அளவில் விடைகள் எழுதிப் போட்டியில் பங்கு கொண்டிருக்கிறார்கள். இப் போட்டியில் வகுப்பு வாரியாகப் பரிசு பெற்றோரின் பெயர்கள் வருமாறு :

### (1) 6-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

ஆர். அனுராதா
ஜி.ஆர்.எம். பெண்கள் உயர்நிலைப் பள்ளி,
திருவாரூர்.

**இரண்டாம் பரிசு**

ஜே. மீனுகுமாரி,
சி.எஸ்.ஐ. மெதாடிஸ்ட் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, உறையூர்,
திருச்சி.

### (2) 7-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

ஆர். விஜயா,
கோவிலூர் ஸ்ரீ பெரியநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை.

**இரண்டாம் பரிசு**

எஸ். ஆர். சுந்தர்,
ரங்க கிருஷ்ணன் நடுநிலைப்பள்ளி,
வடகரை, பெரியகுளம்.

### (3) 8-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

இரா. இராஜலட்சுமி,
வடமட்டம் உயர்நிலைப்பள்ளி,
கும்பகோணம்.

**இரண்டாம் பரிசு**

கே. செல்வராஜு
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
காட்டம்பட்டி,
பொள்ளாச்சி வட்டம்.

### (4) 9-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

எஸ். பாக்கியலட்சுமி,
கலைமகள் கல்வி நிலையம்,
ஈரோடு.

**இரண்டாம் பரிசு**

ஜி. லலிதா,
திரு அரங்கநாத முதலியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
திருவாரூர்.

### (5) 10-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

ஏ. ரேணுகா,
கோவிலூர் ஸ்ரீ பெரியநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை.

**இரண்டாம் பரிசு**

லாலி சேவியர்,
கோவிலூர் ஸ்ரீ பெரியநாயகி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
முத்துப்பேட்டை.

### (6) 11-ஆம் வகுப்பு

**முதல் பரிசு**

எஸ். அல்லி,
திரு அரங்கநாத முதலியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
திருவாரூர்.

**இரண்டாம் பரிசு**

டி. உமாவேலம்,
சுப்பையா வித்தியாலயம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

*''பரிசு பெற்ற மாணவ மாணவியர்களுக்கு எங்களது வாழ்த்துக்கள்.''*

**[சென்னை வானொலி நிலையத்தில் 18—7—77 அன்று கல்வி ஒலிபரப்பில் ஆற்றிய உரை.]**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



பதிவு எண். M. 8676



# தேசத் தந்தையை நினைவு கொள்வோம்

"[illegible]
[illegible] அதனை ஒழிப்பதற்கு
நடவடிக்கை எடுக்கவேண்டியது நம் கடமை"

—காந்தியடிகள்




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# அரசு - மிகவுயர்ந்த தரமான போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



# தமிழரசு

16—8—1977

மலர் : 8 இதழ் : 4


## இந்த இதழில்

பக்க எண்


சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்வோம் ... 3
தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி ... 7
பால் வளம் பெருகிட ... 9
நிலக்கடலையிலிருந்து புரதச் சத்து மிக்க உணவு! ... 13
பளபளப்பான டின்கள் உருவாகிறது இங்கே! ... 15
தரமான மீன் குஞ்சுகள் உற்பத்திக்கு உதவும் தூண்டு முறை ... 17
அரும் பொருள்களைப் பாதுகாக்க உதவும் அரிய பயிற்சி ... 20
படமும் செய்தியும் ... 23
புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைத் தொழில்! ... 27
பால்வினை நோய்- ஒரு பயங்கரத் தொற்று நோய் ... 29
ஹாலந்து நாட்டுக்குப் பனைப்பொருள் ஏற்றுமதி ... 33
வீட்டுக்கொரு தோட்டம் வேண்டும் (சென்ற இதழ்த் தொடர்ச்சி) ... 34
மூன்றுவது சம்பளக் குழு நியமனம் ... 42




அட்டைப்பட விளக்கம்

## நெருக்கி நட்டு நெல் மகசூல் பெருக்கிடுவீர்!

நெல்மகசூலைப் பெருக்குவதற்குரிய நுட்பங்களில் ஒன்று, உயர்விளைச்சல் தரும் குறுகிய கால நெல் ரகங்களைப் போதிய இடைவெளிவிட்டு நடுவதாகும். குறுகிய கால நெல் ரகங்களை நடும்பொழுது 15×10 செ.மீ. இடைவெளியில் அல்லது ஒரு சதுர மீட்டர் பரப்பில் 66 குத்துகள் இருக்குமாறு நடவு செய்வதும், குத்துக்கு 2 பயிர்கள் வீதம் வைத்து சேற்றில் மேலோட்டமாக நடுவதும் நெல்மகசூல் பெருக்குவதற்குரிய சிறந்த வழியாகும்.

* *அதிக மகசூல் பெற, நாற்றுக்களை 4 முதல் 5 இலையாக உள்ளபொழுது (விதைத்த 20 முதல் 25 நாளில்) நட்டுவிட வேண்டும்.*

* *ஒரு பங்கு சூப்பர்பாஸ்பேட், ஒரு பங்கு மண், இருபங்கு தண்ணீர் ஆகிய மூன்றும் கலந்த கலவையில் நாற்றுகளின் வேர்ப் பகுதியை நனைத்து நடவு செய்ய வேண்டும்.*


அட்டைப்படம் உதவியதற்காக நன்றி :
பொது (சுற்றுலா) துறை,
சென்னை-9.



# விடுதலை நாள் வாழ்த்துச் செய்தி

" அந்நியர் ஆதிக்கத்திலிருந்து இந்தியப் பெருமக்கள் விடுதலை பெற்று, தாயின் மணிக்கொடியை தாரணியினர் பாராட்ட ஏற்றிடும் திருநாள். உரிமைப் போரிலே வெற்றி வாகை சூடி தன்னரசு பெற்ற நன்னாள்— ஆகஸ்ட் பதினைந்தாம் நாள்.

ஆதிக்க வெறி அகன்ற இப்பொன்னாளில், பேரறிஞர் அண்ணாவின் வழியில் அரசு ஏற்றிருக்கும் நாங்கள், ஏழை எளியவர் நல்வாழ்வு பெற— அடித்தள மக்கள் முன்னேற்றம் பெற, அயராது பாடுபடுவோம் என மீண்டும் உறுதி கூறி — தமிழக மக்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த விடுதலை நாள் நல்வாழ்த்துக்களைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். "

அன்பன்,

எம். ஜி. இராமச்சந்திரன்.

# "சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்வோம்"

## முதல்வர் உரை



"ஆகஸ்டு 15—அடிமை விலங்கை முறித் தெறிந்த நாள்! வீர நாள்! விடுதலை நாள்! இந்த மண்ணின் கொடியை விண்ணில் பறக்க விட்ட நாள்! "விழிப்புற்று, வீறுகொண்டு எழுந்து விட்டது இந்தியா" என்பதை உலகுக்கு உணர்த்திய நாள்! கோழையை வீரனாக்கி கூனனையும் நிமிரச் செய்த நாள்! சிந்தை - அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்க வைக்கும் நாள்! இந்த நன்னாளில் தமிழக மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியையும், அன்பார்ந்த வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

''விடுதலை நாள் என்பது ஒரு நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒரு புனிதமான நாளாகும். நம்முடைய நாட்டை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த ஆதிக்கம் அகன்று முப்பதாண்டுகள் முடிந்திருக்கின்றன.

''காடும் மேடும், மலையும் மடுவும், ஆறும் வயலும் நிறைந்த மண்வெளி மட்டுமே ஒரு நாடாகி விடாது. அங்கே வாழ்கின்ற மக்களாலேதான், அந்த நாடு மதிப்பு பெறுகின்றது.

### தியாக மறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவோம் !

''ஆதிக்க கொடுமையிலிருந்தும், அந்நிய பிடியிலிருந்தும் இந்தத் திருநாட்டை விடுவிப்பதற்காகவும், மக்களின் பிறப்புரிமையாம் சுதந்திரத்தை அடைவதற்காகவும், ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை—சிறைவாசத்தை—சித்திரவதையைத் திவாந்திர சிட்சையை-தூக்கு மேடையைக் கூட- மனமுவந்து ஏற்றுக் கொண்டு விடுதலை வாழ்வைத் நமக்குத் தந்த பெருமக்களை, தியாக மறவர்களை இந்த நந்நாளில் நன்றியோடு போற்றி வீர வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### தாயகத்தின் சுதந்திரத்திற்கு எதுவும் ஈடாகாது !

" எவ்வளவு உயர்ந்த பொருளும் ஒரு நாட்டின் சுதந்திரத்திற்கு ஈடாகாது. ஒரு பெண்ணின் கற்புக்கு எப்படி விலை மதிக்க முடியாதோ, அதுபோல, தாயகத்தின் சுதந்திரத்திற்கு எதையும் ஈடாகச் சொல்ல முடியாது. ''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்



வேறென்றும் கொள்வாரோ'', என்பது விடுதலைக் கவி பாரதியின் வீர முழக்கமாகும். சுதந்திரம் பெறுவதை விட, பெற்ற சுதந்திரத்தை பேணிக் காப்பது எவ்வளவு கடினமானது என்பதை முப்பதாண்டு காலமாக நமது நாடு அனுபவித்து வருகின்றது. ''நான் விரும்புவது அரசியல் சுதந்திரம் மட்டுமல்ல, பொருளாதார மேம்பாடும், சாதி-சமய பேதமற்ற சமதர்மச் சிந்தனைப் போக்கும் கொண்ட முழுமை நிறைந்த நல்வாழ்வைத்தான் சுதந்திதம் என்று நான் கருதுவேன்'' என்று உலக உத்தமர் காந்தியடிகள் குறிப்பிட்டார்கள்.



## சுதந்திர வாழ்வின் அடிப்படை !

''சுரண்டலற்ற சம வாழ்வுதான் சுதந்திர வாழ்வினுடைய அடிப்படையாகும். எளிய ஏழைகளையும்கூட, 'இது தங்கள் நாடு' என்று எண்ணவைக்க வேண்டும். இந்த நாட்டின் அமைப்பில்— இந்த நாட்டின் ஆட்சியில் — நல்வாழ்வில் — தங்களுக்கு முக்கிய பங்கும், முழு உரிமையும், அதிகாரமும் உள்ளன என்பதை அவர்கள் உணருமாறு செய்ய வேண்டும். ஏற்றத் தாழ்வு இல்லாமல் எல்லோரும் இணைந்து நாட்டின் மேம்பாட்டுக்குப் பாடுபட வேண்டும்'' என்றார் பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள்.



''அத்தகையச் சுதந்திரத்தை விரும்பியதாலதான் உத்தமர் காந்தியடிகளின் உயிருக்கு ஆதிக்கக்காரர்களின் காலத்திலே ஏற்படாத ஆபத்து, அவர் பெற்றுத் தந்த சுதந்திர நாட்டிலே ஏற்பட்டது. விலை மதிக்க முடியாத தன் இன்னுயிரைத் தத்தம் செய்தார் என்ற நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சியை இந்த சுதந்திரத் திருநாளில், இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் நினைவிற் கொள்ள வேண்டும் என்பது என் பேரவா.



## ஜனநாயகம் வெற்றிபெற சாதிக் கொடுமையைச் சடி-டுவோம்!

''சாதிகள் மலிந்த நாட்டில் ஜனநாயகம் வெற்றிபெறாது. சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வும், பொருளாதாரத்தில் பேதமும் ஊடுருவி புரையோடிப் போன நாட்டில் சோஷலிசம் வெற்றி பெறாது. அதனால் தான் சாதிக் கொடுமையை எதிர்த்துச் சாடினார் காந்தியடிகள். தமிழகத்தில் அதே இலட்சியத்திற்காக தங்கள் வாழ்க்கையை! அர்ப்பணித்தார்கள் தந்தை பெரியார், மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணா ஆகியோர்.



''யாதும் ஊரே யாவரும் கேளிர்''
என்பதே பண்டைத் தமிழர் பண்பாடாகும்.

''எல்லோரும் ஓர் குலம்
எல்லோரும் ஓர் இனம்''
என்றார் பாரதியார்.

''குள்ள உள்ளத்தைக் கொலை செய்!
கூனாதே: நிமிர்ந்து நட''
என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.



## நல்ல மனம் அமைய வேண்டும்!

''அந்நிய ஆட்சி ஒழிந்து விட்டால் மட்டும் போதாது; மக்களாட்சி முழுமையாக மலரவேண்டும்; நடைமுறையில் அது நிரூபிக்கப்பட வேண்டும்; கல்வி பரவ வேண்டும்; தொழில்கள் பெருக வேண்டும்; சாதிமத நோய்கள் மடியவேண்டும்; தீண்டாமை ஒழிய வேண்டும்; கிராமங்கள் சீர்பட வேண்டும்; தங்களைப் புத்தி தெளிவற்றவர்களாகத் தாங்களே மாற்றிக் கொண்டு அழிகின்ற கொடிய மதுப்பழக்கம் போக வேண்டும்; வறுமையும், சுரண்டல் முறையும் சமுதாயத்தை விட்டு அகல வேண்டும்.

''எனக்குத்தான் எல்லாம் எனும் கள்ள மனம் போய், எல்லாருக்கும் எல்லாம் என்னும் அமரர் அண்ணாவின் நல்ல மனம் அமைய வேண்டும்.

## கணக்குத் தீர்த்த நாளும் ! கணக்குப் பார்த்த நாளும் !!

''கடவுளை நான் தரித்திர நாராயணர்களின் உருவத்தில் காணுகின்றேன் என்று உள்ளம் உருகினார் உத்தமர் காந்தியடிகள்.

''தாழ்த்தப்பட்டவர்களுக்கு, ஒடுக்கப் பட்டவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பினருக்கு நாம் என்னென்ன நலன்களைச் செய்து தந்தோம் என்று இந்த விடுதலை நன்னாளில் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். 1947, ஆகஸ்டு 15, அன்னியர் ஆட்சிக்கு, 'கணக்குத் தீர்த்த நாள்' என்றும், அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் கொண்டாடுகின்ற ஆகஸ்டு 15-சுதந்திரத்தினாலே பெற்றப் பயன்களைக் 'கணக்குப் பார்க்கிற நாள்' என்றும் சுட்டிக்காட்டினார்கள். ஒரு வெள்ளிவிழாக் கொண்டாடிய பின்னும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு விடிவு காலம் வந்ததா என்ற கேள்விக்குறியை இந்த விடுதலை நாளில் நாம் ஆழமாகச் சிந்தித்தாக வேண்டும்.

## மண்ணுக்கு ஏற்ற விதையைத் தூவ வேண்டும் !

''பழம் பெருமை மிக்க நமது நாடு சிற்றூர்களைப் பெருவாரியாகக் கொண்டுள்ளது. நமது நாட்டில் நூற்றுக்கு 80-க்கு மேற்பட்டவர்கள் நாட்டுப் புறங்களில் வாழ்பவர்கள். வேளாண்மையைத் தங்கள் வாழ்வாகக் கொண்டு இருக்கிறார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டு, மின்னல் வேகத்தில் அறிவியல் வளர்ச்சியால், மகத்தான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. இந்த நிலையில் பழமையான பண்பாடும், தொன்மையான நாகரிகச் சிறப்பும் கொண்ட ஒரு நாடு, திடீரென்று வளர்ச்சி பெற்று, பிற நாடுகளை அப்படியே பின்பற்றி வாழ்ந்துவிட முடியாது. பிற நாட்டினுடைய செயல் திட்டங்கள் எந்த வகையில் பொருந்தும் என்பதை எண்ணிப் பார்த்து, ஆற அமர ஆராய்ந்துதான் திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. 'தீவிர முற்போக்கு' என்ற ஆவேசத்திற்கு ஆட்படாமல் 'மிதமான போக்கு' என்ற பெயரால் சீர்திருத்தங்களை ஒதுக்காமலும் முறையான செயல் திட்டங்களில் நெறியாக ஈடுபட வேண்டும்.



''மண்ணுக்கு ஏற்றவிதையைத் தூவ வேண்டும்'' என்பது தான் உத்தமர் காந்தியடிகள், அமரர் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் இலட்சியங்களாகும்.

உண்மை,
உழைப்பு,
ஊக்கம்,
நேர்மை,
நியாயம்,
எளிமை,
தூய்மை,
கடமை,
கண்ணியம்,
கட்டுப்பாடு

ஆகியவற்றை நம்முடைய செயல்களுக்கு அடிப்படையாகக் கொண்டால் தான் நாம் மேற்கொண்டுள்ள பணிகள் வெற்றியைத் தரும்.

## ''சுதந்திரம்'' என்றால் என்ன?

''சுதந்திரம் என்றால் எங்கும் எதற்கும் கட்டுப்பாடற்ற உரிமை என்ற பொருளில் சில இடங்களில் விபரீதங்கள் நடைபெறுகின்றன. அடிமைத் தன்மையில் இருந்து-அறியாமையிலிருந்து-விடுதலை பெறவேண்டுமே ஒழிய நாம் ஆற்ற வேண்டிய பொறுப்பிலிருந்தும், கடமையிலிருந்தும் விடுதலை பெற்றோமென்று நாம் கருதிவிடக் கூடாது.

''சுதந்திரம் என்றால், எவரும் எதையும் செய்யலாம் என்பது பொருள் ஆகாது. ஒருவரின் சுதந்திரம் அடுத்தவருடைய சுதந்திரத்தைப் பறிப்பதாக ஆகிவிடக் கூடாது.''



## அண்ணல் காந்தியடிகள், அமரர் அண்ணா நெறிகளே அரசின் இருவிழிகள் !!

''இந்தச் சுதந்திர நன்னாளில் தமிழ்நாட்டு மக்கள் அமரர் அண்ணாவின் அரசினை ஆட்சியில் அமர்த்தி, பொறுப்பினை எங்கள் தோள்களில் சுமத்தியுள்ளனர். உத்தமர் காந்தியடிகள், அமரர் அண்ணா ஆகியோரின் நெறிகளை, இரண்டு விழிகளாகக் கொண்டுள்ள இந்த அரசை நிறைந்த நம்பிக்கையோடு தமிழக மக்கள்-குறிப்பாக ஏழை எளியவர்கள்-அரியணையில் அமரச் செய்துள்ளனர்.

## வேளாண்மைக்கு முன்னுரிமை

''வேளாண்மை என்பது விஞ்ஞானத் தொழில் நுட்பங்களோடு இணைந்த ஓர் உயர்ந்த தொழில் முயற்சியாக கருதப்பட வேண்டும். வேளாண்மைதான் எதிர்காலப் பொருளாதார வளத்திற்கு ஆணிவேராக அமையும். வேளாண்மையில் ஏற்படுகின்ற அந்த உற்பத்தியைப் பொருத்துதான், நாடு வளம் பெற முடியும். புதிய அறிவியல் நுணுக்கங்களை நாம் வேளாண்மைத் துறையிலே இன்னும் வளர்த்தாக வேண்டும்.

''பழங்கால ஏர்க்கருவிகளையும், பழமையில் ஊறிய பயிர் முறைகளையும், கால மழையையும், தங்கள் கைகால்களையும் மட்டுமே நம்பிக் கொண்டு-அவல வாழ்வை நடத்திக் கொண்டு இருக்கின்ற விவசாயப் பெருமக்களின் வேதனை போக்கை மாற்றியாக வேண்டும்.

விதைப்பண்ணைகளை விரிவுபடுத்தவும், ஊட்டமான பலன்களைத் தருகின்ற விதைகளை

பெருமளவுக்குப் பகிர்ந்தளிக்கவும், மண் வளத்தைக் காக்கவும், வேளாண் பெரு மக்களுக்கு உரிய உதவிகளை வழங்கவும் நமது அரசு தனது நிதிநிலை அறிக்கையில் முன்னுரிமை வழங்கியுள்ளது.



### உழவர் பெருமக்களுக்கு உணர்த்த வேண்டியவை!

"ஜப்பான், தைவான், தென் கொரியா போன்ற நாடுகளில் உள்ள உழவர்கள், ஒரு ஏக்கருக்குக் குறைந்த நிலப்பரப்பில், இரண்டு மடங்கு மனித ஆற்றலைப் பயன்படுத்தி, தீவிர அறிவியல் முறைகளால் ஆண்டு ஒன்றுக்கு **மூன்று முதல் ஐந்து போகம்** வரைச் சாகுபடி செய்ய முடியுமென்று நிரூபித்திருக்கின்றார்கள். பயிர்கள் நன்றாக வளர்வதற்கு ஏற்ற தட்ப வெப்ப நிலை இங்கே இருப்பதுபோல், அந் நாடுகளில் இல்லாதிருந்தபோதிலும், அவர்கள் விளைச்சலைப் பெருக்கி உள்ளார்கள் என்ற செய்திகள் நம்முடைய வேளாண் பெருமக்களுக்கு எடுத்து விளக்கப்பட வேண்டும். இஸ்ரேல் நாட்டில் பள்ளிக்கூடங்களில் முதல் படிவத்திலிருந்தே மாணவர்களுக்கும் வேளாண்மை என்பது கட்டாயப் பாடமாக கற்பிக்கப்படுகிறது என்பது போன்ற உலக நாடுகளின் வளர்ச்சியைப் பற்றியும் நாம் உழவர் பெருமக்களுக்கு உணர்த்தியாக வேண்டும். செய்தியும், விளம்பரமும், தகவல் தரும் வானொலி போன்ற சாதனங்களும், தரமான பத்திரிகைகளும் இப்படிப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், சாதனைக்குத் தூண்டுகிற சாதனங்களாகவும் தொண்டாற்ற வேண்டும்.



### கல்வியும் — தொழிலும் நாட்டின் இரு கண்கள் !

"கல்வியும், தொழிலும்தான் ஒரு நாட்டின் இரு கண்கள் என்பார்கள். தொழில் வளர்ச்சியில் நாம் மெல்ல மெல்ல முன்னேறி வருகிறோம். பெரிய ஆலைகளை நிறுவுவதோடு கிராமச் சூழ்நிலைகளுக்கேற்ற வகையில் சிறு தொழில் வளங்களைப் பெருக்கவும், வேலை வாய்ப்பை வளர்க்கவும் இப்போது சிந்தனைகள் செழித்து வருகின்றன.

**ஒரு நாட்டின் தன்னாற்றல் என்பது 'மின்னாற்றல்தான்' என்று சொல்வது பொருத்தமாகும். மின்வசதி நாட்டு மக்களுடைய இருளைப் போக்குகின்ற ஒரு அறிவியல் நன்கொடையாகும். அந்த மின்வசதியைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.**

### விடுதலை வாழ்வின் முழுப்பலனையும் கிராம மக்கள் கண்டாக வேண்டும்!

"பாதைகள் இல்லாத சிற்றூர்கள் இல்லை, குடிநீர் கிடைக்காத கிராமங்கள் இல்லை, மின் விளக்கு இல்லாத தெருக்கள் இல்லை, தீண்டாமை என்ற பேதமில்லை என்ற சமதர்மத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு, கிராம மக்கள் விடுதலை வாழ்வின் முழுப்பலனையும் கண்டாக வேண்டும்.

**" மனிதருள் பேதத்தையும், அச்சத்தையும் மூட்டிவிடக்கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகள்." இது பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழிகள்.**

**"அறியாத இனங்கள் என்று ஒதுக்கப் பட்டிருந்த அரிஜனங்கள், எல்லா உயர்நிலைகளையும் பெற்றாகவேண்டும் என்பதும் நம்முடைய குறிக்கோளாகும்.**

### சுதந்திர நாட்டுக்குடி மக்களின் குறிக்கோள்

"எல்லாம் நான் என்ற நிலை பொய், **'எல்லாம்நாம்'** என்று சொல்லுகின்ற மன நிலை உருவாகவேண்டும், பொதுமக்களுக்கு நன்மை செய்ய இருக்கிறோம் என்ற புனித உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும். ஊரை ஏமாற்றுகின்ற உணர்வும், ஊழலும், லஞ்சமும் அறவே தகர்த்தெறியப்படவேண்டும்.

**"ஆயிரக் கணக்கான தேனீக்கள் ஒன்றாகச் சேர்ந்து தேனடையைக் கட்டுவது போல், ஒரு கூட்டு முயற்சியால் தான் நாட்டு நலம் உருவாக வேண்டும். ஆராய்ந்து முடிவு செய்கின்ற நேர்மையும், அஞ்சாமல் செயலாற்றும் ஆண்மையும், எல்லாரும் சமம் என்னும் எண்ணமும், கறையும் களங்கமும் இல்லாத அரசியல் தூய்மையும் தான் சுதந்திர நாட்டுக் குடிமக்களின் குறிக்கோளாக வேண்டும்.**

### உறுதி எடுத்துக் கொள்வோம் !

"நமது தாயகம் தன்னிகரில்லாத பொலிவையும், தரங்குன்றாத வலிவையும் பெற உறுதி எடுத்துக் கொள்வோம். நாட்டுப் புறத்து மக்களின் அகமும், முகமும் மகிழவும், சகல மக்கள் நலமடையவும், சரிநிகர் சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கவும் நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்வோம்.

"சுதந்திர வாழ்வில் மூன்று பத்தாண்டுகளை முடித்து, முப்பத்தி ஓராவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்தியத் திருநாட்டை மகிழ்ச்சியோடு வாழ்த்துவோம்.

**"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்,**
**வீணில் உண்டுக் களித்திருப்போரை நிந்தனை**
**செய்வோம்"**

என்று இந்தச் சுதந்திரத் திருநாளில் சபத மேற்போம்.

*வாழ்க சுதந்திரம் !*
*வளர்க சமத்துவம் !!*
*அண்ணா நாமம் வாழ்க !!!*

[மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், 15—8—1977 அன்று மாலை 6—30 மணிக்கு அனைத்து இந்திய வானொலியில் ஆற்றிய உரை.]



# தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி

**மாண்புமிகு கல்வி அமைச்சர்**
**திரு. செ. அரங்கநாயகம்**

கல்விக்காக 1977—78ஆம் ஆண்டில் ரூ. 160 கோடி ("மானியக் கோரிக்கை 17—கல்வி" யின் கீழ்) நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு உள்ளது. இத்தொகை 1977—78ல் வரு வாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 663 கோடியில் 24 விழுக்காடாகும். வரவு —செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது. கல்வி மானியத்தின் கீழ் 1975—76ல் ஆன செலவு ரூ. 123 கோடி; 1976—77ல் (திருத்த மதிப் பீட்டின்படி) ஆன செலவு ரூ. 136 கோடி. இதிலிருந்து கல்விச் செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது என்பது தெரிய வரும்.

கல்வி மானியக் கோரிக்கையின் கீழ் 1977—78 வரவு—செலவு மதிப்பீட்டில் பல்வேறு நிலைக் கல்விப் பணிகளுக்கும் செய்துள்ள நிதி ஒதுக்க விவரங்கள் வருமாறு:—



| கல்வி | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| 1. தொடக்கக் கல்வி | 76,23 |
| 2. உயர்நிலைப் பள்ளிக் கல்வி | 53,21 |
| 3. கல்லூரிக் கல்வி | 20,34 |
| 4. சிறப்புக் கல்வி | 86 |
| 5. தேசிய மாணவர் படை, விளையாட்டு முதலியவை | 1,46 |
| 6. பிற இனங்கள் | 18 |
| 7. தொழில் நுட்பக் கல்வி | 5,64 |
| மொத்தம்—கல்வி | 1,57,92 |

| | |
|---|---|
| கலை பண்பாடு | 32 |
| தொல்பொருள் ஆராய்ச்சி | 11 |
| அரும்பொருட்காட்சிச்சாலைகள் | 12 |
| பொது நூலகங்கள் | 79 |
| | 1,34 |
| சமூகப் பாதுகாப்பும் நலனும் (ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன) | 35 |
| மொத்தம் மானியக் கோரிக்கை (''17 கல்வி''யின் கீழ்) | 1,59,61 |

கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், கடன்கள் முதலிய வற்றிற்காகப் பிற கோரிக்கைகளின் கீழ் 1977—78-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :

## பொதுக் கல்வி

**அ) வருவாய்க் கணக்கில் செலவு:**

| | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| சமுதாய வளர்ச்சிப் பணிகள் —ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் ... | 54 |
| சமூகக் கல்வி ... | 8 |
| அலுவலகக் கட்டடங்கள் மானியக் கோரிக்கை 37—பொதுப்பணி | 1 |
| கல்வி—அரசுப் பள்ளிகள் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் | 5 |
| தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒய்வூதியம் ... | 5,16 |

**ஆ) வருவாய்க் கணக்கின்கீழ் வராத செலவு**

**மூலதனச் செலவு**

| | |
|---|---|
| பள்ளிக் கல்வித் துறை அலுவலகக் கட்டடங்கள் | 2 |
| கல்வி, கலைகள், பண்பாடு ஆகியவற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் | 3,39 |
| கடன்கள் — தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன் | 1 |
| தேசிய கடன் படிப்புதவித் தொகைகள் | 34 |
| மொத்தம்—பொதுக் கல்வி ... | 9,60 |



## தொழில் நுட்பக் கல்வி

| | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| அரசு தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டடங்களுக்கான மூலதனச் செலவு ... | 8 |
| தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள் | 9 |
| தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்குக் கடன் | 1 |
| மொத்தம்—தொழிற் கல்வி .. | 18 |
| மொத்தம்—பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும் ... | 9,78 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால், 1977—78ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ.170 கோடியாகும்.

அரிசனங்கள், பின் தங்கிய வகுப்பினர் நலப் பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவும், சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற்கான செலவுகள் மேற்படி செலவினங்களின் கீழ் வாரா. இந்த இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 22 கோடியாகும்.

மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு அந்தந்தத் துறைகளின் கீழ் வரவு—செலவுத் திட்டத்தில் தனித் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 9 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்கான செலவையும் (ரூ. 22 கோடியும், ரூ. 9 கோடியும்) கணக்கில் கொண்டால், 1977—78ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 201 கோடியாக இருக்கும்.




(43—ஆம் பக்கம் பார்க்கவும்)





# பால் வளம் பெருகிட...

—டாக்டர் அ. பரசுராமன்,
திட்ட அலுவலர்,
தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.
மதுரை.

தற்போது தமிழ்நாட்டில் கால்நடை இன அபிவிருத்திக்காக நம் நாட்டுப் பசுமாடுகள், எருமை மாடுகள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் கேந்திர கிராமத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித்திட்டம். முதலிய சீரிய திட்டங்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், மதுரை. தஞ்சை திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை முதலிய இடங்களில், துவக்கப்பட்டுள்ளது.

மதுரை தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் 7-1-'74-ல் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு, திட்ட அலுவலர் ஒருவரின் நிர்வாகத்தில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், தரத்தில் உயர்ந்த கால்நடைகளையும், பாலையும் பெருக்குவதும். பால் பண்ணைத் தொழிலை இலாபகரமாக நடத்த வழிமுறைகளைப் பொதுமக்களுக்கு வழிகாட்டுவதுமாகும். இத்திட்டம். பால்பண்ணைத் தொழிலில் பொது மக்களுக்கு ஊக்கத்தையும், நம்பிக்கையையும். ஏற்படுத்துவதற்குரிய ஒரு பிரத்தியேகமான திட்டமாக, விளங்குகிறது. பெரிய பால் பண்ணைத் திட்டத்திற்குப் பால் வழங்கக்கூடிய பகுதிகளும். அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பசுக்களும் எருமைகளும் நிறைந்த வளமிக்க நகரப் பகுதிகளும் இத் திட்டத்தை அமலாக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நம் நாட்டு மாடுகள் மற்றும் எருமைகள் பால் தரும் அளவு மிகக்குறைவு. அதாவது நாளொன்றுக்கு 2 லிட்டர் அல்லது 3 லிட்டர் அளவிலேயே உள்ளது. தமிழ்நாட்டில் நம் நாட்டுப் பசுக்கள் சராசரியாக ஒரு சுற்றில் 204 கிலோ பாலும், எருமைகள் 364 கிலோ பாலும் கொடுக்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. தீவிர கால்நடை அபிவிருத்தித்திட்டப் பகுதியில், பால் கொடுக்கும் திறன் அதிகமான 'ஜெர்ஸி', 'ரெட்டேன்' முதலிய அயல் நாட்டுக் காளைகளிலிருந்து விந்து எடுக்கப்பட்டுச் செயற்கை முறை இனவிருத்தி மூலம், நம் நாட்டு மாடுகளின் தரம் உயர்த்தப்பட்டு வருகிறது. 'பால் உற்பத்தியை எங்ஙனம் இம்முறையில் உயர்த்த இயலும்?' என்று சிலருக்கு ஐயம் ஏற்படும்.

மரபு வழிப்பண்பியல் (Genetics) படி ஒரு பொலிகாளையின் தாய் அதன் ஒரு சுற்றில் 4,000 கிலோ பால் கொடுத்ததென்று வைத்துக் கொள்வோம். 3,000 முதல் 4,000 கிலோ பால் கொடுக்கக்கூடிய வர்க்கத்தில், பிறந்த சினைக் காளைகளே, தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில் செயற்கை முறை இனவிருத்திக்குப் பயன்படுத்தப் படுகின்றன. இக் காளையின் விந்து மூலம், ஒரு சுற்றுக்கு 200 கிலோ பால் கொடுக்கும் வல்லமையுள்ள பசுவில் இனவிருத்தி செய்வதால் பிறக்கும் கன்று பெரிதாகி கன்று ஈன்று பிறக்குமானால், இது பசுவாகும் போது,

$$\frac{4000+200}{2}=\frac{4200}{2}=2100$$

கிலோ பால் கொடுக்கும் சக்தியுள்ளதாக இருக்கும். ஆகவே இவ்வினவிருத்தியில் நாட்டுப் பசுவை விடக் கலப்பினப் பசுவில் சுமார் 10 பங்கு அதிகப் பால் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது என்பது தெரிகிறது. மேலும் சினைக் கலப்பினக் கன்றுகள் 18 மாதங்களிலேயே சரியான பராமரிப்பின்படி பருவத்திற்கு வந்து சுமார் 27 மாத வயதிலேயே முதல் கன்று ஈன்று விடும் வல்லமையுள்ளது. இப்புள்ளி விவரங்கள், துரிதமாகப் பால் உற்பத்தியை அதிகரிக்க சினையினக் கலப்பு இனவிருத்தி எவ்வளவு தூரம் உதவுகிறது, என்பதைத் தெளிவாக்குகின்றன. தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில், கால்நடை பராமரிப்புச் சம்பந்தமான எல்லாவிதமான தொழில் நுட்பங்களும், அதாவது கால்நடை இனவிருத்தி, கன்று வளர்ப்பு, நோய்த் தடுப்பு, தீவன அபிவிருத்தி, தூயமுறையில் பால் கறத்தல் முதலியன யாவும் ஒரே நிறுவனத்தின் மூலம் செயலாற்ற வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

அயல்நாட்டு இனங்களில், நம் தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றதாக உள்ளது,



தாய்ப்பசு (நாட்டினம்) எண் MLR. 32 நாள்தோறும் கறக்கும் பால் 2.5 லிட்டர்.

ஜெர்சி' இனமேயாகும். ஏனெனில், அதிக வெப்பநிலையை இந்த இனம் தாங்கக் கூடிய சக்தி உள்ளதாய் இருப்பதுடன், இவ்வின பசுக்களின் பாலில் கொழுப்புச் சத்து 5.4 சதவிகிதமாக இருக்கிறது. ஆதலால் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில், 'ஜெர்சி' இனக் காளைகள் ஏனைய அயல்நாட்டு இனங்களைவிட மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மதுரை தீவிர கால்நடை அபிவிருத்தித்திட்ட எல்லையில் பொலிவுக்குத் தகுதியான சுமார் ஒரு இலட்சம் பசுக்களும், எருமைகளும் உள்ளன. இப் பகுதியில் செயற்கை முறை இனவிருத்திக்காக 100 கிளை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளை நிலையப் பகுதியும், சுமார் 1,000 பசுக்களையும் எருமைகளையும் கொண்டுள்ளது. விந்து சேகரிப்பு நிலையங்கள் முறையே மதுரையிலும், விருதுநகரிலும் நிறுவப்பட்டு, அனுதினம் ஊர்தி மூலமும், தூதுவர்கள் மூலமும் கிளை நிலையங்களுக்கு விந்து அனுப்பப்படுகிறது. 14 'ஜெர்சி' காளைகளும், 15 'முர்ரா' இன எருமைக் கடாவும் கொண்டு, சுமார் ஒரு இலட்சம் பசு மற்றும் எருமைகளின் இனவிருத்தித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிற தென்றால், செயற்கை முறை இனவிருத்தியின் ஒப்பற்ற நலமும் துரிதமான கால்நடை அபிவிருத்தியும் நமக்குத் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

இக் கிளை நிலையங்களைத் தவிர, திட்டத்திற்கு வெளியேயுள்ள 44 கிளை நிலையங்களுக்கும் மதுரை நிலையம் அனுதினம் விந்து விநியோகம் செய்து வருகிறது. பதப்படுத்திய விந்தை, குளிர்சாதனப் பெட்டியிலோ அல்லது 'தெர்மாஸ்' குடுவையிலோ 3 டிகிரி முதல் 8 டிகிரி சென்டிகிரேடு தட்பநிலையில் வைத்திருந்து 48 மணி நேரம் வரை பசு மற்றும் எருமைகளுக்குக் கருவூட்ட உபயோகப்படுத்தலாம். திட்டப் பகுதியைச் சார்ந்த மின் வசதியுள்ள கிளைநிலையங்களில் குளிர் சாதனப் பெட்டிகள் வழங்கப்பட்டு, இரண்டு நாட்களுக்கொரு தடவை விந்து வழங்கப்பட்டு வருகிறது.

## திட்டத்தில் ஆக்கப் பணிகள்

1. இனவிருத்தி: மதுரை திட்டப் பகுதியை 4 பாகங்களாகப் பிரித்து முறையே மதுரை, மேலூர், திருவில்லிபுத்தூர், விருதுநகர் முதலிய இடங்களில் பிராந்திய செயற்கை முறை இனவிருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டு, ஒரு பொறுப்பு அலுவலர் நிர்வாகத்தில், ஒவ்வொரு பிராந்திய செயற்கை முறை நிலையத்திலும், 25 கிளை நிலையங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாடோடு கூடிய இனவிருத்தி ( Breeding Control ) முறையினால்தான், நல்ல பிறப்பு அம்சங்களோடு கூடிய கால்நடைகளைப் பெற முடியும். ஒவ்வொரு கிளை நிலையத்திலும் செயற்கை முறை இனவிருத்திக்குரிய தேவைகள் அனைத்தும் செய்து தரப்பட்டுள்ளன. கிளை நிலையங்களில் பணி புரியும் கால்நடை உதவியாளர்கள் பசு மற்றும் எருமைகளுக்குச் செயற்கை முறை இன விருத்திக்கு உதவாத காளைகளை ஆண்மை நீக்கம் செய்தல், தொத்து நோய்த் தடுப்புப் பணி, கால்நடைகள் பராமரிப்புச் சம்பந்தமான அறிவுரைகள், கால்நடை குடற்பூச்சி நீக்கம் முதலிய பணிகளைக் கவனித்து வருகிறார்கள். ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்திலிருந்து ஜூன் மாதத்திற்குள்ளாக கால்நடை உதவியாளர்கள் அவரவர்கள் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று கால்நடைக் கணக்கீடு எடுத்து வருகிறார்கள். இம்முறையினால் கால்நடைக் கணக்கு சரியாகக், கிடைப்பதுடன், பொது மக்களுக்கும் கால்நடை உதவியாளர்களுக்கும், நல்ல தொடர்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. கால்நடை அபிவிருத்திச் சட்டம் ( Live stock Improvement Act ) இப் பகுதிகளில் அமல்படுத்தப் படுகிறது.



MLR பசுவின் முதல் ஈற்றுக்கன்று, பசுவாக மாறி (எண் MLR. F. 181) நாள்தோறும் கறக்கும் பால் 8 லிட்டர்.

### 2. ஆண்மை நீக்கம் செய்தல்

கால்நடைக் கணக்குகள் எடுத்தவுடன் 1 வயது முதல் 2½ வயதுக்குள்ளாக இருக்கும் காளைக் கன்றுகளை ஆண்மை நீக்கம் செய்வது, கால்நடை உதவியாளர்களின் மிக முக்கிய பணியாகும். அவரவர்கள் எல்லையில் உள்ள கிராமங்கள்தோறும் உதவியாளர்கள் சென்று காளைகளின் விவரங்களை சேகரித்து, உதவாக் காளைகளை காயடித்து வருகிறார்கள். இவ்வாறு ஆண்மை நீக்கம் செய்யவில்லையெனில் கால்நடை அபிவிருத்திப் பணி மிகவும் தடைப்பட்டு வரும்.

### 3. பதிவு

திட்டப் பகுதிகளில் உள்ள எல்லா பசு மற்றும் எருமைகளின் காதில் எண், கொடுத்து பதிவு செய்யப்பட்டு வருகின்றன. அவைகளுக்குச் செயற்கை முறை மூலம் பிறக்கும் கன்றுகளுக்கும் எண்கள் பதிவு செய்யப்படுகின்றன.

### 4. தீவன அபிவிருத்தி

தேவையான அளவு தீனியும், தீவனமும் கால்நடைகளின் பால் அளவை அதிகமாக்குவதற்கு இன்றியமையாததாகும். எல்லா பால் பண்ணைகளிலும் கால்நடைப் பராமரிப்புச் செலவில் சுமார் 70 சதவிகிதம் மாடுகளின் உணவிற்குச் செலவிடப்படுகிறது. கால்நடைத் தீவனங்களை இரண்டு வகைகளாகக் கொள்ளலாம். முதல் வகையில் வைக்கோல் காய்ந்த புல் வகைகள், பசுந் தீவனமான கினியாபுல், நேப்பியர்புல், நேப்பியர் கம்பு, கலப்புப் புல், குதிரை மசால் போன்றவைகள் அடங்கும். கடலைப் பிண்ணுக்கு, எள்ளுப் பிண்ணுக்கு, பருத்திக்கொட்டை, அரிசித் தவிடு, கோதுமைத் தவிடு, கடலைப் பொட்டு போன்றவை மற்றொரு வகையான சத்துணவாகும். இவ்வகையான சத்துணவு வகைகள் கிடைப்பது அரிதாக இருப்பதோடு விலையும் அதிகமாக உள்ளது. ஐந்து லிட்டரும் அதற்குக் குறைவாகவும் பால் தரும் கறவை மாடுகளுக்கு, பசும்புல் மட்டும் 40 கிலோ கொடுத்தால், சத்துணவு கொடுக்கத் தேவையே இல்லை என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு ஐந்து லிட்டருக்கு மேல் பால் கொடுக்கும் கறவைமாடுகளுக்குச் சத்துணவு தேவை. ஆதலால் திட்டப்பகுதியில் பசும்புல் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்குப் பாதி விலையில் புல் நாற்றுகள், தீவன விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. பசும்புல் பயிரிட்ட விவசாயிகளுக்கு சென்ட் ஒன்றுக்கு ரூ. 2 வீதமும் குதிரை மசால் தீவனப்பயிர் பயிரிட்டவர்களுக்கு சென்ட் ஒன்றுக்கு ரூ. 2.50 வீதமும் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

சோளத் தட்டு, நேப்பியர் கம்பு மற்றும் புல் வகைகளை ஒரு அங்குலத் துண்டுகளாக வெட்டி, மாடுகளுக்குத் தீவனமாகப் போட்டால் தீவனம் சேதமாகாமலிருக்கும். இக்கருத்தைப் பொது மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் தட்டைவெட்டும் கருவி ஒன்றுக்குப் பாதி விலை அல்லது ரூ. 250 வரை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பிராந்திய செயற்கை முறை இனவிருத்தி நிலையத்திலும், ஒரு துணை வேளாண்மை அலுவலர், தீவன அபிவிருத்திக்கென்றே பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். தலைமை அலுவலகத்தில் தீவன அபிவிருத்திப் பணிகளைக் கவனிக்க மாவட்ட வேளாண்மை அலுவலர் பணியாற்றி வருகிறார்.

## 5. பால் அபிவிருத்தி விரிவாக்கப்பணி

கால்நடை சொந்தக்காரர்கள் தங்கள் கால்நடைகளைத் தகுந்த முறையில் இனவிருத்தி செய்து, பராமரிப்பதற்கு ஊக்கம் ஊட்டும் வகையில் அவர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு, நல்ல விற்பனை வசதி செய்து கொடுப்பது அவசியமாகும். மதுரையில் இத்திட்டம் செயல்படும் எல்லையில், தமிழ்நாடு பால்வள நிறுவனத்தைச் சார்ந்த 90கூட்டுறவுப் பால் பண்ணைச் சங்கங்கள் செயலாற்றி வருவதாலும், விருதுநகர், திருவில்லிபுத்தூர் முதலிய இடங்களில் பாலைக் குளிர வைக்கும் நிறுவனங்களும் (Milk Chilling Centres) இருப்பதாலும் பால் உற்பத்தியாளர்களுக்கு விற்பனை சுலபமாக உள்ளது. தரம் உயர்த்தப்பட்ட கிடாரிக்கன்றுகள் வருங்காலப் பசுக்கள் அல்லது கறவை எருமைகளாகும். எனவே அவைகளை நன்கு பராமரிக்க வேண்டும். அவைகள் திட்டப் பகுதியிலிருந்து விற்கப்படாமல் இருந்தால்தான் வருங்காலத்தில் திட்டப் பகுதியில் பால் உற்பத்தியைக் காணலாம். ஆதலால் தரமுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிடாரிக் கன்றுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 15 (ரூபாய் பதினைந்து) வீதம் மானியமாக 1974-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இக்கன்றுகள் 6 மாத முதல் 3 வயது ஆகும் வரையோ அல்லது பொலிவுக்குப் பருவ நிலை எய்தும் வரையோ மானியத் திட்டத்தில் இருக்கும். இவ்வாறு மானியம் பெறும் 800 கிடேரிகள் தற்போது உள்ளன. மானியம் முதலில் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 ஆகவும், மானியத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட கன்று இரண்டாவது தலைமுறைக் கன்று செய்கை முறையில் ஈன்ற பிறகு மாதம் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் மானியம் வாங்கிய மாதங்களுக்கு மொத்தமாகவும், கன்று சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கறவை மாடுகள் வளர்க்கும் பொது மக்களுக்கு வங்கிகள் கடன் வசதி அளிக்கின்றன. இக்கடனைப் பொதுமக்கள் பெற பால் பண்ணை விரிவாக்க உதவியாளர்கள் உதவி புரிகிறார்கள். மேலும் இவர்கள் மானியம் பெறும் கன்றுகளையும், மற்றும் தரம் உயர்த்தப்பட்ட கன்றுகள், பசுக்கள், எருமைகள் ஆகியவற்றையும் பார்வையிட்டு அவைகள் பராமரிப்புப் பற்றி மக்களுக்கு அறிவுரை வழங்குகிறார்கள். ஒவ்வொரு செயற்கை முறை இனவிருத்தி நிலையத்திலும் ஒரு பால் பண்ணை உதவியாளர் பணியாற்றுகிறார். தலைமை அலுவலகத்தில் ஒரு பால் பணி விரிவாக்க அலுவலர் பணிபுரிகிறார்.

## 6. திட்டத்தின் முன்னேற்றத்தை அளவிடுதல்

இத்தகைய பெரிய முக்கியமான திட்டத்திற்கான புள்ளி விவரங்கள் தக்க முறையில் சேகரித்து, பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும். இவ்வாறு சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள், இத்திட்டப்பகுதியில் பால் அபிவிருத்தி முன்னேற்றம், பசுந்தீவன முன்னேற்றம் முதலிய அம்சங்களையும், முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் விவரங்களையும் ஆராய்வதற்கும் தடைகளை நீக்குவதற்குரிய வழிமுறைகள் வகுக்கவும் பெரிதும் பயன்படும். இப்புள்ளி விவரங்கள் ஓர் அளவு கால்நடை உதவியாளர்களாலும், ஏனையவை இதற்கென்றே பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட உதவியாளர்களாலும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திட்டத்தலைமை அலுவலகத்தில் ஒரு புள்ளியியல் அலுவலர் விவரங்களைச் சேகரித்து, அவர் மேற்பார்வையில், இத்திட்டத்தின் சிக்கனம், திறமை, முன்னேற்றம், பயன்கள் முதலியனவற்றை அளவிட்டு, திட்டம் மேம்படுவதற்கான கருத்துக்களையும் எடுத்துக் கூறி வருகிறார். 1974-ஆம் ஆண்டில் இத்திட்டப் பகுதியில் சேகரிக்கப்பட்ட பால் அளவுப் புள்ளி விவரங்களிலிருந்து, இத் திட்டப் பகுதியில் ஒரு பசு சராசரியாக 2.8 கிலோ பால் கொடுக்கிறதென்றும், எருமை 3.2 கிலோ பால் கொடுக்கிறதென்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

மதுரையில் நடைபெறும் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் அண்மையில்தான் முதல் தலைமுறை கன்றுகள் பசுக்களாகி, இரண்டாம் தலைமுறை கன்றுகளை ஈன ஆரம்பித்துள்ளன. அவ்வாறு பிறந்த கன்றுகளின் தோற்றமும் முதல் தலைமுறை பசுக்கள் பால் கொடுக்கும் அளவுகளும் எதிர்பார்த்த அளவிற்குச் சிறப்பாக உள்ளன. இவ்வாறு தரம் உயர்ந்த கிடாரிக்கன்றுகளின் எண்ணிக்கை திட்டப்பகுதியில் பெருகும்பொழுது-வருங்காலங்களில் இப் பகுதியில் பால் உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு 44 நிமிடங்களுக்கும் ஒரு தரம் உயர்த்தப்பட்ட கன்று இத்திட்டப்பகுதியில் பிறந்து வருகிறது என்று 1976-77-ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

'பாலில்லாப் பசுக்களைக் கொண்டது நம் நாடு' என்ற நிலையினை மாற்றி, பால் பொழியும் பசுக்களை உற்பத்தி செய்து, பால் வளம் பெருகச் செய்யும் திட்டம் கால்நடை பராமரிப்புத் துறையின் தலையாய திட்டம்-தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டமாகும். இத்துணைச் சிறப்பினைக் கொண்ட இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதுடன், நம் மாநில நகரங்கள் அனைத்திலும் இத்திட்டம் செயல்படச் செய்வது இன்றியமையாதது. பால் வளம் பெருக உதவும் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் வாழ்க!

### குத்து அவரைக்கு நுனியைக் கிள்ளி விடுவதனுல் ஏற்படும் பயன்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட கோ. 6, கோ. 7, கோ. 8, கோ. 9 முதலிய குத்து அவரை வகைகளுக்கு விவசாயிகளிடையே சிறப்பான வரவேற்பு உள்ளது. இந்த அவரை வகைகளைப் பூக்கும் பருவத்தில் நுனியைக் கிள்ளி விடுவதால் செடி படராமல் குத்தாக இருக்கிறது. நுனியில் இருந்து இரண்டு கணுக்கள் வரை கிள்ளிவிட்டால் போதும். இதன் மூலம் அதிகமாகக் காய் பிடித்து அதிக மகசூலையும் தருகின்றது.

தகவல்:—பயிரியல் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3.






# நிலக்கடலையிலிருந்து புரதச் சத்து மிக்க உணவு!

சமச்சீர் உணவில், சரியான ஊட்டச் சத்து அளிப்பதற்கு ஏற்ற முக்கியமான எல்லாப் பொருள்களும் அடங்கியிருக்க வேண்டும். தசை நாரையும், அங்கங்களையும் பலப்படுத்த புரதச் சத்து தேவை. பலமும், சக்தியும் பெற கொழுப்புகளும், மாவுப் பொருளும் (கார்போஹைட்ரேட்டு) வேண்டும். ஆரோக்கியமான வாழ்வுக்கும், உடம்பு நன்கு வளரவும் வைட்டமின்கள் வேண்டும்.

### உணவு பற்றி ஓர் ஆய்வு

நாட்டின் பல பாகங்களில் மேற்கொள்ளப்பட்ட பல உணவு ஆய்வுகளிலிருந்து பின்வரும் விவரம் தெரிய வந்தது. அதாவது குறைவான வருவாய் பெறும் நபர்கள் முக்கியமாக தானியங்களை மட்டுமே உண்கின்றனர். நல்ல உணவிற்கு இன்றியமையாத பல பொருள்களை உண்பதில்லை. இதன் விளைவாகப் பெருமளவில் அவர்கள் நோய்களால் அல்லல் படுகின்றனர். இந்நோய்களுக்கே காரணம் அவர்கள் புரதச் சத்து குறைவாக உண்பதுதான் என்று தெரிய வந்தது. இந்த நோய் பொதுவாக குழந்தைகளிடமும், மகப் பேறு உண்டாகியிருக்கும் பெண்களிடமும், குழந்தை பெற்றவர்களிடமும் அதிகமாகத் தென்படுகிறது. இவர்களுக்கு வைட்டமின்களும், தாதுப் பொருள்களும் முக்கியமாகத் தேவைப்படுகிறது.

### கூடுதல் உணவு

இம் மாதிரியான தருணத்தில் விலை மலிவானதும், அதிக ஊட்டச்சத்து அடங்கியதுமான கூடுதல் உணவு அளிக்க வேண்டியது அவசியம். ஆகவே இதை வியாபார அடிப்படையில் செய்யப்பட வேண்டும்.

### நிலக்கடலை விளைச்சல்

உலகத்திலேயே இந்தியாவில் தான் நிலக்கடலை அதிக அளவில் விளைகிறது. முக்கியமாக ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, குஜராத் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் நிலக்கடலை அதிக அளவில் விளைகின்றது. நம் நாட்டில் சுமார் 50 விதமான நிலக்கடலைகள் விளைகின்றன. இவைகளின் அளவிலும் மேல் ஓடுகளிலும், விளைச்சல் முறையிலும் மாறுதல் உள்ளன. எனினும் இந்த விதங்களைப் பொதுவாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். கொத்து கொத்தாக விளைவது ஒரு வகை. இவை மூன்றிலிருந்து நான்கு மாதங்களில் விளையும். மெல்லிய ஓட்டினுள் விதைப் பருப்புகள் சிறிய அளவில் இருக்கும். மற்ருெரு வகை பரவும் வகை. இவை நான்கிலிருந்து ஐந்து மாதங்களில் விளையும். கனமான ஓட்டினுள் கோழி முட்டை வடிவத்தில் விதைப் பருப்புகள் இருக்கும்.





இந்தியாவில் பல மனிதர்கள் ஏதோ ஒரு வகையில், நிலக்கடலையை உண்கின்றனர். சில உணவுப் பதார்த்தங்கள் தயாரிப்பதிலும் இவை உபயோகப்படுகின்றன. ஆனுல் கடலையிலிருந்து எண்ணெய்யை எடுத்த பிறகு, பிண்ணுக்கை உணவாக உட்கொள்ளுவதில்லை. எண்ணெய் வித்து உணவில் புரதச் சத்து அதிகம் அடங்கியுள்ளது.

### நிலக்கடலை மாவு

உண்பதற்கு ஏற்ற வகையில் நிலக்கடலை மாவு தயாரிக்கப்படுகிறது. இந்த மாவு நல்ல உணவு என்று கருதப்படுகிறது. இதில்



நிலக்கடலை மாவால் தயாரிக்கப்பட்ட பண்டங்கள்.

அதிக அளவு அதாவது 50 சதவிகிதம் புரதச் சத்து அடங்கியுள்ளது.

இம்மாதிரியான முறையில் சேதமடைந்ததும், சொத்தையானதுமான கடலைகள் பிரிக்கப்பட்டு, நல்ல நிலக்கடலைகள் வறுக்கப்படுகின்றன. இயந்திரச் சாதனங்கள் மூலம் கடலையில் உள்ள மேல் சிவப்புத் தோலானது அகற்றப்பட்டு, சொத்தையான கடலைகள் பிரிக்கப்படுகின்றன. பரம்பரையாக உள்ள செக்கில், இந்த கடலைகள் போட்டு அரைக்கப்படுகின்றன. இப்படிச் செய்யப்பட்ட பிறகு, பிண்ணுக்கில் 5 முதல் 6 சதவீதம்தான் எண்ணெய் வருகிறது. பிறகு இந்தப் பிண்ணுக்கு மாவாகச் செய்யப்படுகிறது.

**அதிக வீரியமும், ஊட்டச்சத்தும் உள்ளவை**

குறைவான கொழுப்புள்ள நிலக்கடலை மாவில் புரதச்சத்தும், வைட்டமின் 'பி'யும், கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாதுப் பொருள்களும் அடங்கியுள்ளன. இந்தக் குறைவான கொழுப்புள்ள மாவு முக்கியமான உணவாகும். பல காரிய உணவு (Multi purpose food), பிஸ்கட்டுகள், ஆட்டா போன்ற உணவுப் பொருள்களில் இது அடங்கியுள்ளது. மைசூர், மத்திய உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக இவைகள் தெரிய வந்தது. இவ்வாராய்ச்சி நிலையத்திலிருந்து கிடைக்கும் பல காரிய உணவில், விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட நிலக்கடலை மாவு 75 சதவீதமும், வறுக்கப்பட்ட கொத்துக்கடலை மாவு 25 சதவீதமும் அடங்கியுள்ளது. இதில் முக்கியமான வைட்டமின்களும், வைட்டமின் 'ஏ', 'பி' காம்ப்ளக்ஸ், வைட்டமின் 'டி'யும் உள்ளன. இவை பின்வருமாறு மூன்று வகைகளில் கிடைக்கின்றன :

(1) உப்பு கலந்தவை. இவை ரசம், பருப்பு மற்றும் இதர உப்புப் பதார்த்தங்களிலும் உபயோகிக்கக் கூடியவை.

(2) தித்திப்பு பதார்த்தங்களில் உபயோகிக்கக் கூடியவை.

(3) 25 சதவீதம் பால் பௌடருடன், உபயோகிக்கக் கூடியவை. இவை குறிப்பாகக் குழந்தைகளுக்கு ஏற்றவை.

அதிக அளவில் புரதச் சத்து உள்ள கொஞ்ச அளவு உணவை—ஒன்றிலிருந்து ஒன்றரை அவுன்ஸ் உணவை—தினமும் ஒரு பெரியவர் உண்டால், போதுமான புரதச் சத்தும், வைட்டமினும், தாதுப்பொருள்களும் கிடைக்கும். இந்தியாவில் பொதுவாகத் தயாரிக்கும் உணவுப் பதார்த்தங்களில் இதைத் தாராளமாக உபயோகிக்க முடியும்.

**மாவு கலப்பு**

கோதுமை மாவை, நிலக்கடலை மாவுடனும், மரவள்ளிக் கிழங்கு மாவுடனும் கலந்து அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. 10 சதவீதம் நிலக்கடலை மாவு கலந்த கோதுமை மாவைக் கொண்டு சப்பாத்திகளும், பூரிகளும் செய்யலாம். மரவள்ளிக் கிழங்கு அரிசியும், இதரக் கலப்பு உணவுகளையும் தயாரிக்க மரவள்ளிக் கிழங்கின் மாவுடனும், கோதுமை மாவுடனும், நிலக்கடலை மாவைக் கலக்கலாம். ரொட்டியும், இதர உணவுப் பண்டங்களும் செய்ய கோதுமை மாவுடன், நிலக்கடலை மாவையும் கலக்கலாம். நிலக்கடலை மாவினால் படத்தில் காணும் பல்வேறு உணவுப் பொருள்களைச் செய்யலாம்.

இந்தச் சத்துணவைப் பூரணமாகப் பயன்படுத்தினால், மனிதர் உண்பதற்குக் கூடுதல் புரதச் சத்து உணவு கிடைக்கும். அதாவது ஆண்டுக்குச் சுமார் 20 இலட்சம் டன் கிடைக்கும். இது நம் நாட்டின் புரதச் சத்துப்பற்றுக்குறையை ஒழித்துக் கட்டும்.





# பளபளப்பான டின்கள் உருவாகிறது இங்கே!

**கி**ண்டித் தொழிற்பேட்டை!

வகை வகையான தொழில்கள் இங்கே வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம்.

தமிழ்நாடு அரசு 1957-ல் உருவாக்கிய இந்தத் தொழிற்பேட்டையில் துவக்கத்தில் 148 தொழிற்கூடங்களே இருந்தன. ஆனால் இன்று? 200-க்கு மேற்பட்ட தொழிற்கூடங்கள், பல்வேறு தொழில்களைச் செய்து, தமிழ்நாட்டின் தொழில் வளத்துக்கு வழிகோலி வருகின்றன.

404 ஏக்கர் பரப்பளவுள்ள இத்தொழிற்பேட்டை ஏராளமான பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. சுமார் 5,000க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும் இங்கே பணிபுரிகின்றனர்.





இந்தத் தொழிற்பேட்டையிலே ஒரு தொழிற்கூடம்! தகரத்தாலான டின்கள் இங்கே தயாரிக்கப்படுகின்றன. அதன் பெயர்: 'மெட்டல் கண்டெய்னர் கார்ப்பரேஷன்' (Metal Container Corporation)

முதலில் பளபளக்கும் தகடுகளைப் பார்க்கிறோம். இயந்திரத்தினுள் நுழைந்ததும் சிறிது நேரத்தில் அழகிய டின்களாக உருப்பெற்று வெளி வருவதையும் பார்த்து வியக்கிறோம்.



இத்தொழில் முதலில் அதாவது 1948-ல் சிறிய அளவில் துவக்கப்பட்டது. தன்னம்பிக்கை, விடா முயற்சி, உழைப்பு காரணமாக இது படிப்படியாக உயர்ந்து வளர்ந்தது.

1957-ல் கிண்டித் தொழிற்பேட்டை உருவானதும், இது முழு வளர்ச்சி பெற்றது. இங்கே தயாராகும் டின்கள் பிஸ்கட், எண்ணெய் ஆகியவைகளுக்காகப் பயன்படுகின்றன. ஒரு டின் 18 லிட்டர் கொள்ளளவு கொண்டது. பிரிட்டானியா பிஸ்கட், கம்பெனி டாடா ஆயில் கம்பெனி முதலானவற்றுக்கு இந்த டின்கள் அனுப்பப்படுகின்றன. பொதுவாகத் தமிழ்நாடு முழுவதும் இந்த டின்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

டின்கள் செய்யப்படுவதற்கான தகடுகள் கல்கத்தாவிலிருந்து தருவிக்கப்படுகின்றன. ஒரு மாதத்திற்குச் சுமார் 30,000 டின்கள் இங்கே தயாரிக்கப்படுகின்றன.

'அரும்பு வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரந்தொழில் செய்திடுவீரே' என்ற பாரதியின் கனவை நனவாக்கிடும் வகையில் பல்வேறு தொழில்கள் பாங்காய் வளர்ந்திடும் காட்சியை நாள் தோறும் கண்டு களித்திடலாம். கிண்டித் தொழிற்பேட்டையிலே!

—பி. வி. கிரி.





# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.








3 முதல் 6 மணி நேரத்துக்குப் பின், ஆண்—பெண் மீன்கள் தத்தம் பாலுணர்வு தூண்டப்பட்டு, பெண் மீன் முட்டைகளை நீரில் பொழிய, ஆண் மீன் அவைகளின் மீது ஆண் உயிரணுக்களை கலந்த பாலைச் (Milk) சொறிந்து, முட்டைகளைக் கருத் தரிக்கச் செய்கின்றன. கருத் தரித்தவுடன் முட்டைகள் நீரை உறிஞ்சி பெருத்து, நீரில் அமிழ்ந்து அறையின் அடிப்பக்கத்திற்குச் சென்று விடுகின்றன. கருத் தரித்து 8 முதல் 10 மணி நேரத்தில், முட்டைகளிலுள்ள கரு துடிக்க ஆரம்பிக்கும்போது, முட்டைகளை மற்றொரு வலைக்கு (Hatching hapa) பொரிப்பதற்காக மாற்ற வேண்டும். இவ்வலைக்கு இரண்டு பிரிவுகள் உண்டு. வெளிப்புறம் 2 மீ. ×1 மீ.×1 மீ. அளவுள்ள காடா துணியினால் ஆனது; உட்புறம் வட்டக் கண்கள் கொண்ட 1.5 மீ.×0.7 மீ. ×0.5மீ. அளவுள்ள கொசு வலைத் துணியினால் ஆனது. இவ்வலையினுள் 75,000 முதல் 1,00,000 கருத் தரித்த முட்டைகள் வரை பொரிக்க வைக்கலாம். முட்டைகள் தண்ணீரின் வெப்பத்திற்கு ஏற்ப 15—18 மணிகளுக்குள்ளாகப் பொரித்து, நுண் மீன் குஞ்சுகளாக கரு உணவுப் பையைத் (Yolk Sac) தாங்கி வெளிவருகின்றன. இக்குஞ்சுகள் கொசு வலைத் துணியிலுள்ள கண்ணிகள் வழியே, வெளிப்புறக் காடாத் துணியாலான வலையை அடைகின்றன. மூன்று நாள் வரை இவ்வலையிலேயே மீன் குஞ்சுகள் உணவுப் பையிலுள்ள உணவையுண்டு வளர்கின்றன. வெளிப்புற உணவுண்டு வளர வாய், மற்றும் உணவுக் குழாய் இப்போது உருவாகிறது. இந் நுண் மீன் குஞ்சுகள் மூன்றும் நாளில் வலைகளிலிருந்து எடுக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட நாற்றங்கால் குளங்களில் விட்டுத் தரமான குஞ்சுகளாக வளர்க்கப்படுகின்றன. வலைகளுக்குப் பதிலாக, கருத் தரித்த மீன் முட்டைகளை ஜாடிகளில் ( Hatching jars ) பொரிக்க வைக்கும் முறையும் உண்டு.

'தோப்பா,' 'ரோகு', 'மிர்கால்' போன்ற மீன் இனங்கள் நன்கு வளர்க்கப்பட்டால், ஒரு பெண் மீன் ஒரு கிலோ எடைக்கு ஏறக்குறைய முறையே 1.25, 2, 1.5 இலட்சம் முட்டைகள் இடும் திறம் படைத்தது. இதிலிருந்து தூண்டு முறையில் தரமான மீன் குஞ்சுகளை மிகப் பெருமளவில் பெறுவதற்குரிய வாய்ப்பு உள்ளதை எளிதில் உணரலாம்.

## தூண்டு முறைக்கு ஏற்ற தட்ப-வெப்பச் சூழ்நிலைகள்

சினை மீன்களை மே மாத இறுதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையிலான தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் தூண்டலாம். மீன்களைத் தூண்டும் நேரம் குளிர்ந்த மாலை அல்லது இரவுப் பொழுதாக இருக்க வேண்டும். தண்ணீரின் வெப்பம் 26 முதல் 30 டிகிரி செண்டிகிரேடு வரை இருப்பது நலம். குளிர்ந்த தட்ப வெப்பம், தூரல், மழை போன்ற இயற்கை நிலைமைகள் மீன்கள் இனப் பெருக்கம் செய்யத் தூண்டுவனவாகும். இச்சூழ்நிலைகளில் தூண்டுமுறையில் சிறப்பாக இனப்பெருக்கம் செய்யலாம்.

கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.



# தரமான மீன்குஞ்சுகள் உற்பத்திக்க உதவும் தூண்டு முறை




வேளாண்மைக்கு நல்ல விதைகள் தேவை. அது போலவே மீன் வளர்ப்பிற்கும் தரமான மீன் குஞ்சுகள் தேவை. விரைவாக வளரும் மீன் வகைகளின் குஞ்சுகளே தரமானவை எனக் கருதப்படும். பருவ மழைக்குப் பின், ஆறுகளிலிருந்து மீன் குஞ்சுகள் சேகரிக்கப்படுகின்றன. இவற்றில் வேண்டாத பல சிறு மீன் இனங்களும் கலந்து கிடைப்பது இச் சேகரிப்பு முறையிலுள்ள ஒரு பெருங் குறை. பிற மீன் இனக் கலப்பில்லாமல், வேகமாக வளரும் இயல்புடைய மீன் வகைக் குஞ்சுகளைப் பெருமளவில் குளங்களிலேயே உற்பத்தி செய்ய உறுதுணையான தூண்டு முறை இக் குறையைப் போக்குகிறது.

### தூண்டு முறையின் அடிப்படை

சினை முதிர்ச்சி பெற்ற ஆண்—பெண் மீன்களுக்கு இயல்பாகவே இனப் பெருக்க உணர்ச்சி உண்டாகின்றது. மீன் மூளையின் அடிப்புறத்திலுள்ள பிட்யூட்டரி சுரப்பி இவ்வுணர்ச்சியை உண்டாக்குகின்றது. மீனின் 'பிட்யூட்டரி' சுரப்பி 'ஹார்மோன்களை'ச் சுரந்து மீனின் சினை உறுப்புக்களைத் தூண்டி இனப் பெருக்கம் செய்ய உதவுகிறது. 'பிட்யூட்டரி' சுரப்பியைப் பிசைந்து, வெளியாகும் 'ஹார்மோன்'கள் கலந்த நீரை நேரடியாகவே சினை முதிர்ந்த மீன்களினுள் ஊசி மூலம் செலுத்தலாம். இதனால் சினை மீன்கள் தேங்கிய நீர் நிலைகளிலேயே இனப் பெருக்கம் செய்து, தூய, தரமான மீன் குஞ்சுகளைப் பெற முடிகிறது. இதுவே தூண்டுமுறை!

### 'பிட்யூட்டரி' சுரப்பி சேகரித்தல்

ஆண்-பெண் சினை மீன்கள் சினை முதிர்ச்சி பெற்ற நிலையில்தான், 'பிட்யூட்டரி' சுரப்பியில் சுரக்கும் 'ஹார்மோன்'கள் இனப்பெருக்கம் செய்யும் உறுப்புக்களைத் தூண்டும். எனவே, நீர்த் தேக்கங்களில் அல்லது குளங்களில் வளர்ந்த சினை முதிர்ந்த மீன்களிலிருந்தே 'பிட்யூட்டரி' சுரப்பிகள் சேகரிக்கப்படுகின்றன. வேகமாக வளரும் கெண்டை மீன் இனங்களான 'தோப்பா'(கட்லா) 'ரோகு', 'மிர்கால்' போன்றவை

—திரு. வே. நடராசன்,
துணைப் பேராசிரியர்,
மீன்வள அறிவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-3.

ஜூன்—ஆகஸ்ட் மாதங்களில் இனப் பெருக்கம் செய்வதால், மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களிலிருந்தே மீன்கள் பருவ நிலை எய்தத் துவங்குகின்றன. இக் காலத்தில் 'பிட்யூட்டரி' சுரப்பிகளைச் சேகரித்தால், அவைசிறந்த பயனளிக்கும். மீன் மூளையின் அடிப்புறத்தில் 'பிட்யூட்டரி' சுரப்பி பொருந்தி உள்ளது. எனவே, மீன் மண்டை ஓட்டினைப் பிளந்து, மூளைப் பகுதியை அப்புறப்படுத்தி, இச்சுரப்பி சேகரிக்கப்படுகின்றது. ஒரு மீனுக்கு ஒரு சுரப்பியே உண்டு. சுரப்பிகளிலுள்ள 'ஹார்மோன்'கள் நீரில் கரையும் தன்மையுடையவை. எனவே சேகரித்த சுரப்பிகளை, நீர் கலவாத சாராயச் சத்தில் ( absolute alcohol ) வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

ஆண்—பெண் சினை மீன்கள் தேர்வு செய்தல் : நன்கு சினை முதிர்ந்த ஆண்—பெண் மீன்களைத் தேர்ந்தெடுப்பது வெற்றிகரமான தூண்டு முறை இனப் பெருக்கத்திற்குத் துணை செய்யும். முதிர்ந்த ஆண் சினை மீனின் வயிற்றுப் புறத்தை மெல்ல அழுத்தினால் வெண்ணிற பால் (Milk) எளிதில் வெளிவரும். மேலும், ஆண் மீனின் முன்னிரு இறகுகளின் (Pectoral fin) உட்புறங்கள் சுரசுரப்பாகவும், பெண் மீனுக்கு வழவழப்பாகவும் இருக்கும். பெண் மீன் சினை முதிர்ந்த முட்டைகளைப்பெருமளவு கொண்டிருப்பதனால், வயிற்றுப் புறம் மிகப் பருத்தும், சிறிது அழுத்தினால் மிருதுவாகவும் இருக்கும். மீன் பிடிக்கும்போது தற்செயலாய் ஏற்படும் உடற் சேதம் ஏதும் சினை மீன்களுக்கு ஏற்படக் கூடாது. இரண்டு முதல் நான்கு ஆண்டுகள் நிறைந்த மீன்க

தூண்டு முறையில் இனப் பெருக்கம் செய்ய ஏற்றவை. மிகவும் சிறிய அல்லது பெரிய மீன்கள் உகந்தவை அல்ல.

### தேவைப்படும் 'பிட்யூட்டரி' சுரப்பி அளவு

தூண்டுவதற்கு ஒரு பெண் சினை மீனுக்கு இரண்டு ஆண் சினை மீன்களின் பொருத்தமான விகிதமாகும். பெண் மீனின் எடையும், ஆண் மீன்களின் எடையும் ஏறக்குறைய சமமாக இருப்பது சாலச் சிறந்தது. சாதாரணமாக, ஒருகிலோ எடையுள்ள ஆண் மீனைத் தூண்ட 2—3 மி. கிராம் எடையுள்ள 'பிட்யூட்டரி' சுரப்பியும், ஒரு பெண் மீனைத் தூண்ட 7—11 மி.கி. எடையுள்ள பிட்யூட்டரி சுரப்பியும் தேவைப்படும். தேர்ந்தெடுக்கப்படும் சினை மீன்களின் எடையைக் கருத்தில் கொண்டு, தேவைப்படும் சுரப்பிகளின் எடையை மேற்கூறிய அளவில் கணக்கிட வேண்டும்.

### 'பிட்யூட்டரி' சுரப்பி நீர் தயாரித்தல்

சேகரித்துள்ள பிட்யூட்டரி சுரப்பிகளை வேண்டிய அளவு சாராயச் சத்திலிருந்து எடுத்து, ஈரம் இழுக்கும் தாளில் சிறிது நேரம் உலர்த்தி, மின் அரைக்கும் குழாயினுள் (Tissue grinder or Homogeniser) முதலில் சிறிது உப்புத் தண்ணீர் (0.3 சதவீதம்) அல்லது வடிகட்டிய நன்னீருடன் (Distilled water) இட்டுச் சுரப்பிகளை நன்கு பிசைய வேண்டும். ஒரு கிலோ எடையுள்ள சினை மீனுக்கு 0.2 மி.லி. என்ற அளவில் கணக்கிட்டே சுரப்பியுடன் உப்புத் தண்ணீர் அல்லது நன்னீர் வேண்டிய அளவு கலக்க வேண்டும். இந் நீரை ஒரு குழாயினுள் இட்டு, சுழற்றும் கருவியின் (Centrifuge) மூலம் வேகமாகச் சுழற்றினால், தசை போன்ற கடினப் பொருள்கள் அடியில் தங்கி, 'ஹார்மோன்' கலந்த நீர் மட்டுமே மேலே நிற்கும். இந் நீரே மீனினுள் செலுத்தித் தூண்டுவதற்கு ஏற்றது.

### சினை மீன்களைத் தூண்டும் முறை

பெண் மீனுக்கு ஆண் மீனைக் காட்டிலும் தூண்டுதல் அதிகமாகத் தேவைப்படுகிறது. மேலும், ஆண் மீனுடன் கூடுவதற்கான பாலுணர்வு சற்றுத் தாமதமாகவே இதற்குத் தோன்றும். எனவே, ஒரு கிலோ மீன் எடைக்கு 2—3 மி.கி. 'பிட்யூட்டரி' சுரப்பி என்ற அளவில், பெண் மீனுக்கு மட்டும் முதலில் 'ஹார்மோன்' கலந்த நீரை ஊசி மூலம் வால் இறகின் (Tail fin) சதைப் பாங்கான மேற்புறத்தில் (Caudal peduncte) செலுத்த வேண்டும். 6 மணி நேரம் இடைவெளி விட்டு, இரண்டாம் முறையாக பெண் மீனுக்கு, ஒரு கிலோ எடைக்கு, 5—8 மி.கி. 'பிட்யூட்டரி' சுரப்பி என்ற அதிக அளவில் 'ஹார்மோன்' கலந்த நீரை உட்செலுத்தித் தூண்ட வேண்டும். நன்கு சினை முதிர்ந்த ஆண் மீனுக்குத் தூண்டுதல் சிறிதே தேவைப்படும். எனவே ஒரு கிலோ எடைக்கு 2—3 மி.கி. என்ற அளவே போதுமானது. பெண் மீனுக்கு இரண்டாம் முறையாகச் செலுத்தும்போதே, ஆண் மீனுக்கும் 'ஹார்மோன்' கலந்த நீரை ஏற்ற வேண்டும்.

### மீன் முட்டைகள் கருத்தரிப்பதும் நுண்மீன் குஞ்சுகள் உற்பத்தியும்

ஒரு பெண் மீனுக்கு இரண்டு ஆண் மீன்கள் என்ற விகிதத்தில் தூண்டப்பட்ட மீன்கள் இனப் பெருக்கம் செய்வதற்கு வசதியாகச் சிறு கண்ணிகளுடைய துணி அல்லது நைலானிலான அறையினுள் (Breeding hapa) இடப்படுகின்றன. உட்செலுத்திய நீரில் கலந்துள்ள 'ஹார்மோன்கள்' இரத்த ஓட்டத்தில் கலந்து, ஆண்—பெண் சினை உறுப்புக்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவ்வுறுப்புக்களைத் தூண்டுகின்றன. நீர் செலுத்தி



சினை மீனுக்கு ஊசி போடுதல்




3 முதல் 6 மணி நேரத்துக்குப் பின், ஆண்—பெண் மீன்கள் தத்தம் பாலுணர்வு தூண்டப்பட்டு, பெண் மீன் முட்டைகளை நீரில் பொழிய, ஆண் மீன் அவைகளின் மீது ஆண் உயிரணுக்களை கலந்த பாலைச் (Milk) சொறிந்து, முட்டைகளைக் கருத் தரிக்கச் செய்கின்றன. கருத் தரித்தவுடன் முட்டைகள் நீரை உறிஞ்சி பெருத்து, நீரில் அமிழ்ந்து அறையின் அடிப்பக்கத்திற்குச் சென்று விடுகின்றன. கருத் தரித்து 8 முதல் 10 மணி நேரத்தில், முட்டைகளினுள்ள கரு துடிக்க ஆரம்பிக்கும்போது, முட்டைகளை மற்றொரு வலைக்கு (Hatching hapa) பொரிப்பதற்காக மாற்ற வேண்டும். இவ்வலைக்கு இரண்டு பிரிவுகள் உண்டு. வெளிப்புறம் 2 மீ. ×1 மீ.×1 மீ. அளவுள்ள காடா துணியினால் ஆனது; உட்புறம் வட்டக் கண்கள் கொண்ட 1.5 மீ.×0.7 மீ. ×0.5மீ. அளவுள்ள கொசு வலைத் துணியினால் ஆனது. இவ்வலையினுள் 75,000 முதல் 1,00,000 கருத் தரித்த முட்டைகள் வரை பொரிக்க வைக்கலாம். முட்டைகள் தண்ணீரின் வெப்பத்திற்கு ஏற்ப 15—18 மணிகளுக்குள்ளாகப் பொரித்து, நுண் மீன் குஞ்சுகளாக கரு உணவுப் பையைத் (Yolk Sac) தாங்கி வெளிவருகின்றன. இக்குஞ்சுகள் கொசு வலைத் துணியிலுள்ள கண்ணிகள் வழியே, வெளிப்புறக் காடாத் துணியாலான வலையை அடைகின்றன. மூன்று நாள் வரை இவ்வலையிலேயே மீன் குஞ்சுகள் உணவுப் பையிலுள்ள உணவை யுண்டு வளர்கின்றன. வெளிப்புற உணவுண்டு வளர வாய், மற்றும் உணவுக் குழாய் இப்போது உருவாகிறது. இந் நுண் மீன் குஞ்சுகள் மூன்றாம் நாளில் வலைகளிலிருந்து எடுக்கப்பட்டு, தயாரிக்கப்பட்ட நாற்றங்கால் குளங்களில் விட்டுத் தரமான குஞ்சுகளாக வளர்க்கப்படுகின்றன. வலைகளுக்குப் பதிலாக, கருத் தரித்த மீன் முட்டைகளை ஜாடிகளில் (Hatching jars) பொரிக்க வைக்கும் முறையும் உண்டு.

'தோப்பா,' 'ரோகு', 'மிர்கால்' போன்ற மீன் இனங்கள் நன்கு வளர்க்கப்பட்டால், ஒரு பெண் மீன் ஒரு கிலோ எடைக்கு ஏறக்குறைய முறையே 1.25, 2, 1.5 இலட்சம் முட்டைகள் இடும் திறம் படைத்தது. இதிலிருந்து தூண்டு முறையில் தரமான மீன் குஞ்சுகளை மிகப் பெருமளவில் பெறுவதற்குரிய வாய்ப்பு உள்ளதை எளிதில் உணரலாம்.

### தூண்டு முறைக்கு ஏற்ற தட்ப-வெப்பச் சூழ்நிலைகள்

சினை மீன்களை மே மாத இறுதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையிலான தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் தூண்டலாம். மீன்களைத் தூண்டும் நேரம் குளிர்ந்த மாலை அல்லது இரவுப் பொழுதாக இருக்க வேண்டும். தண்ணீரின் வெப்பம் 26 முதல் 30 டிகிரி செண்டிகிரேடு வரை இருப்பது நலம். குளிர்ந்த தட்ப வெப்பம், தூரல், மழை போன்ற இயற்கை நிலைமைகள் மீன்களை இனப் பெருக்கம் செய்யத் தூண்டுவனவாகும். இச்சூழ்நிலைகளில் தூண்டுமுறையில் சிறப்பாக இனப்பெருக்கம் செய்யலாம்.

# அரும் பொருள்களைப் பாதுகாக்க உதவும் அரிய பயிற்சி!



நமது நாட்டிலுள்ள அரும்பொருட் காட்சியகங்களிலே ஆயிரக்கணக்கான அரும்பொருள்கள் இடம் பெற்றுள்ளன! அவைகளைக் காலத்தால் அழிவுறாமல் காத்திடுதல், அரும்பொருட் காட்சியகங்களின் கடமையாக உள்ளது. விலை மதிப்பற்ற தொல் பொருள்களையும், கலைச் செல்வங்களையும் காத்திடுவதில் இந்தியாவிலேயே முன்னோடியாக உள்ளது சென்னை அரசினர் அரும்பொருட் காட்சியகமே என்றால் மிகையாகாது!

சென்னையிலுள்ள அரசினர் அரும்பொருட்காட்சியகமே இந்தியாவிலுள்ள அரசினர் அரும்பொருட்காட்சியகங்களில் மிகப் பெரியதும், மிகப் பழமையானதுமாகும். விலை மதிப்பற்ற தொல் பொருள்களையும், கலைச் செல்வங்களையும் பாதுகாப்பதற்காக, இந்தியாவிலேயே முதன் முதலாக, 1930-ஆம் ஆண்டில் ஒரு இரசாயனப் பாதுகாப்பு ஆய்வகத்தைத் (Chemical conservation Laboratory) துவக்கிய பெருமையும் சென்னை அரசினர் அரும்பொருட் காட்சியகத்திற்கே உரியதாகும். இந்த ஆய்வகம் 1935-ஆம் ஆண்டிலேயே புராதனப் பொருட்களின் நுட்பம்—அமைப்பு பற்றிய புலனாய்வுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

இந்தியாவில் ஏறத்தாழ 200 பெரிய அரும் பொருட்காட்சியகங்கள் உள்ளன. ஆனால் அவைகளில் ஒரு சில அரும்பொருட் காட்சியகங்களே, புராதனப் பொருள்களைக் காப்பதற்குரிய பாதுகாப்பு ஆய்வகங்களைச் (conservation Laboratory) சொந்தமாகக் கொண்டுள்ளன. அந்த ஆய்வகங்களிலும், அரும்பொருட் காட்சியகப் பொருள்களைப் பாதுகாப்பதில் பயிற்சி பெற்றுள்ளவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். எனவே, இந்தியாவின் அரும்பொருட் காட்சியகங்களில் உள்ள கலைச் செல்வங்களையும், தொல்பொருள்களையும் பாதுகாத்து வைப்பதற்கான மறுபயிற்சியை ( Refresher Course ) சென்னையிலுள்ள அரசினர் அரும்பொருட்காட்சியகம் கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகிறது.

மூன்றாண்டுகளுக்கு முன்பு இம் மறுபயிற்சியைத் துவக்கியதன் நோக்கம், புராதனப் பொருள்களைப் பற்றி ஆய்வு செய்தல், அவைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள இதர அரும்



இரசாயனப் பாதுகாப்புக்கு முன்பு வெண்கலச் சிலையின் தோற்றம்.





சென்னை அரசினர் அரும் பொருட்காட்சியகத்தில், இந்தியா வெங்கும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தொல்பொருள்களையும், கலைச்செல்வங்களையும் பாதுகாப்பதில் மறுபயிற்சி அளிக்கப்படுகிறது.



பொருட்காட்சியகங்கள் மற்றும் நிறுவனங்களின் பணியாளர்களுக்கு, சென்னை அரசினர் அரும்பொருட்காட்சியக ஆய்வகத்தின் அனுபவத்தையும், நிபுணத்துவத்தையும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதேயாகும். இம் மறுபயிற்சியை மற்ற மாநிலத்தைச் சார்ந்த அரும்பொருட் காட்சியகப் பணியாளர்கள் கடந்த 3 ஆண்டுகளில் நன்கு பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

அரும்பொருட்காட்சியகம், கைவினைப் பொருள் உற்பத்தி, தொல்பொருள் ஆய்வு, கோயில் அறநிலையங்கள் ஆகிய துறைகளில் பணியாற்றுகின்றவர்களும், அரும்பொருட்காட்சிப் பொருள்கள், நுண்கலை, தொல் பொருள் ஆய்வு ஆகியவற்றைப் பயிலும் மாணவர்களும் இப்பயிற்சியில் சேரலாம், இத் துறையில் ஆர்வம் கொண்டுள்ள மற்றவர்களும் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இப்பயிற்சியில் அரும்பொருட் காட்சிப் பொருள்களை வகைப்படுத்தல், அப்பொருள்களை பாதிக்கும் வானிலைக் கூறுகள், உயர்வாழ்வனவற்றால் ஏற்படும் தீங்குகள், உலோகத்தின் பாதுகாப்பு, வண்ண ஓவியங்களின் பாதுகாப்பு, ஆவணங்களின் பாதுகாப்பு ஆகியவை இடம் பெறுகின்றன. இப்பயிற்சியில் போதனை, செய்முறை ஆகிய இரண்டும் அடங்கியுள்ளன. இப் பயிற்சியின் முடிவில், மனநிறைவு அளிக்கும் வகையில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சென்னை அரும்பொருட்காட்சியகத்தின் இரசாயனப் பாதுகாப்பு ஆய்வகத்தினால் "அரும் பொருட்காட்சியகப் பொருள்களைப் பாதுகாத்தல்" பற்றிய 3வது மறுபயிற்சி வகுப்பு 1977 ஜூன் 15-ஆம் நாள் முதல் ஜூலை 14-ஆம் நாள் வரை நடத்தப்பெற்றது.

எனவே, சென்னை அரசினர் அரும்பொருட்காட்சியகம் கலைச் செல்வங்களையும், தொல்பொருள்களையும் காத்திடும் பணியில், இந்தியாவின் இதர அரும்பொருட் காட்சியகங்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்பது பெருமைக்குரியதாக உள்ளது.

இரசாயனப் பாதுகாப்புக்குப் பின்பு வெண்கலச் சிலையின் தோற்றம்.

## களர்நிலத்தில் கட்டுக் கலம் கண்ட கதை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மதுரை மாவட்டம் வரிச்சியூர் கிராமத்தில் ஒரு விவசாயியினுடைய களர் நிலத்தைச் சீர்திருத்தி விளைச்சல் பெறச் செய்து நிரூபித்துள்ளனர்.

இந்த விவசாயியினுடைய நிலத்தின் காரநிலை 9.3—ஆக இருந்தது. இதில் ராகிப் பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பு 3.7 டன் ஜிப்சமும் 18.5 கிலோ துத்தநாக சல்பேட்டும் நிலத்தில் போட்டு நீர்க்கட்டி உழுது நீர் வடிக்கப்பட்டது. இவ்வாறு பலமுறை செய்த பின்பு நிலத்தின் காரத்தன்மை 8.1 ஆகக் குறைந்தது. இந்த நிலையில் ராகி பயிரிட்ட போது எக்டேருக்கு 2,519 கிலோ தானியம் கிடைத்தது. ஆனால் சீர்திருத்தம் செய்யப்படாத வயலில் எக்டேருக்கு 1,136 கிலோ மகசூல்தான் கிடைத்தது.

ஜிப்சம் 3.7 டன் விலை ரூ. 300/-ஆகும். துத்தநாக சல்பேட் 18.5 கிலோவின் விலை ரூ. 50/-. மொத்தச்செலவு ரூ. 350/- மட்டுமே. ஆனால் சீர்திருத்தம் செய்யாத வயலை விட, செய்த வயலில் 1,033 கிலோ மகசூல் அதிகமாகக் கிடைத்துள்ளது. எனவே, முதல் ஒரு பயிரிலேயே சுமார் ரூ. 1,000 -க்கும் அதிகமான தொகை அதிக நிகர லாபம் கிடைத்துள்ளது. மேலும் அடுத்தடுத்து பயிரிடப்படும் பயிர்களால் தொடர்ந்து அதிக மகசூலும் அதனால் அதிக வருவாயும் கிடைக்கும்.

எனவே,வயலில் மண்ணைச் சோதனை செய்து பரிந்துரைக்கப்படும் அளவு ஜிப்சமும், துத்தநாக சல்பேட்டும்போட்டு அதிக மகசூலைப் பெறலாம். மண்ணைச் சோதனை செய்ய இயலவில்லையாயின் எக்டேருக்கு 4 டன் ஜிப்சமும், 20 கிலோ துத்தநாக சல்பேட்டும் போடலாம் எனப் பரிந்துரை செய்யப்படுகிறது.

தகவல் : மண்ணியல் மற்றும் வேளாண் வேதியல்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை–3.

வெளியீடு : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம், கோவை-3.




## வேர் அழுகல் நோய் தாக்காத புதிய துவரை !

துவரையில் அண்மைக் காலத்தில் வேர் அழுகல் நோயின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. எனவே, வேர் அழுகல் நோய் தாக்காத, அதிக விளைச்சல் கொடுக்கவல்ல துவரை வகை சடுதி மாற்றத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை 'கோ. 3 துவரை' என்ற புதிய பெயரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. ஆடிப்பட்டத்தில் மானாவாரியாகவும், தைப்பட்டத்தில் இறைவைப் பயிராகவும் இப்புதிய துவரையைப் பயிரிடலாம். இது 4½ மாதங்களில் முற்றிப் பயன் தரும்.

வெளியீடு: தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

## படமும் செய்தியும்



தென் மண்டல தளபதி மேஜர் ஜெனரல் திரு எஸ். பி. மகாதேவன் அவர்கள், 2-8-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில், 7-8-1977 அன்று, சென்னையில் காவல்துறை அலுவலர்களின் மாநாடு நடைபெற்றது.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களை, ஜப்பான் நாட்டுத் தலைமை உதவித்தூதர் திரு கழுகிஹோ ஃபயுருசாவா அவர்கள், 8-8-1977 அன்று, சந்தித்து உரையாடினர்.

சென்னையில் உள்ள இங்கிலாந்து நாட்டுத் துணை உயர் ஆணையர் திரு என்.ஏ.ஐ. பிரெஞ்ச் அவர்கள், 8-8-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.





மலேசியா நாட்டின் உதவி உயர் ஆணையர் திரு ஹாஜி குலாம் ஹனீப் கரிம் அவர்கள், 8-8-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

மக்காச்சோளம், 'மக்கரோணி' ஆகிய தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக ஒரு தீவிர இயக்கத்தை அண்மையில் தமிழ்நாடு வேளாண்-தொழிற்கழகம் நடத்தியது. இத் தீவிர இயக்கத்தின் நிறைவு விழாவையொட்டி நடத்தப் பெற்ற சமையற்கலைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் 9-8-1977 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் பரிசுகளை வழங்கினர்.





மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 12-8-1977 அன்று, டோக்கியோ நகரைச் சார்ந்த 'சகாகி பாரா' நாட்டியச் சங்கத்தின் தலைவருக்கு, தமிழ்நாடு அரசின் சார்பாக, நினைவுச் சின்னங்களை வழங்கினார். மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அவ்விழாவில் சிறப்புரையாற்றினார்.

வட கரோலினா மாநிலத்தில் 'டர்ஹாம்' என்ற இடத்தில் உள்ள 'டியூக்' பல்கலைக் கழகத்தின் அரசியல்-அறிவியல் பேராசிரியர் டாக்டர் ஜேம்ஸ் டேவிட் பார்பர் அவர்கள், 13-8-1977 அன்று, மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களைச் சந்தித்து உரையாடினார்.






# புதுக்கோட்டை மாவட்டத்தில் பனைத்தொழில்!

—வி. டி. வீரப்பன், பி.ஏ.பி.எல்.,
மாவட்ட ஆட்சியரின் தனி உதவியாளர் (செ.ம.தொ),
புதுக்கோட்டை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 20 பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களில், 16 சங்கங்கள் செயல்படும் நிலையிலும், 4 சங்கங்கள் செயல்படாமல் கலைத்தல் நிலையிலும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2,361 உறுப்பினர்கள் ரூ. 14,965 பங்குத் தொகை செலுத்தியுள்ளனர்.

இம்மாவட்ட அலுவலகம் கடந்த 1975ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம்தேதி தொடங்கப்பட்டது. அதன் பிறகு 1976—77ல் 9 பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 212 பனைத் தொழில் வல்லுநர்களுக்கு மான்யமாக ரூ. 5,300ம், கடனாக ரூ. 28,000ம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14—12—76 அன்று புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம், மிரட்டுநிலை கிராமத்தில் பனைஓலைப் பொருள் பயிற்சி உற்பத்தி நிலையம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதில் 18 பெண்களுக்கு 3 மாதம் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி காலத்தில் இவர்களுக்கு உபகாரச் சம்பளமாக மாதம் 50 ரூபாய் வீதம் மூன்று மாதங்களுக்கு







வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு மேற்படி பயிற்சி நிலையம் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு, மேற்படி பெண்கள் பனை ஓலைத் தொழில் செய்து வருகிறார்கள். இவர்கள் தினசரி ரூ. 3 முதல் ரூ. 4 வரை கூலியாகப் பெறுகின்றார்கள். மேற்படி பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி உற்பத்தி நிலையத்தின் மூலம், 18 பெண்களுக்குத்தொடர்ந்துவேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. 10-1-77 முதல் புதுக்கோட்டையில் பனந்தும்பைக் கொண்டு, பிரஷ்கள் உற்பத்தி செய்யும் அலகுதிறக்கப்பட்டுள்ளது. இதில் தற்பொழுது 20 பெண்கள் வேலை செய்து வருகின்றனர். சராசரி ரூ. 3 முதல் ரூ. 4 வரை கூலி பெறுகின்றனர்.

தற்பொழுது அறந்தாங்கி வட்டம், ஆவுடையார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மணமேல் குடியில் பனைஓலைப் பொருட்கள் பயிற்சி நிலையம் ஒன்று 15—7—77-ல் திறக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் 15 பெண்களுக்கு மூன்று மாதங்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்ய பயிற்சிஅளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாதம் தலா ரூ. 50 வீதம் உபகாரச்சம்பளம் வழங்கப்படும். பயிற்சி முடிந்த பிறகு இது உற்பத்தி நிலையமாக மாற்றப்படும்.

பயிற்சிக்குப் பின் இவர்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் வழங்கப்படுவதுடன், இவர்கள் உற்பத்தி செய்யும் பனை ஓலைப் பொருட்களை இந்த நிலையமே கொள்முதல் செய்து கொள்ளும். இதன் மூலம் இவர்கள் தினசரி ரூ. 3 முதல் ரூ. 5 வரை கூலி பெறமுடியும்.

இதைப் போல திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கோனபட்டு கிராமத்திலும் பனை ஓலைப் பொருட்கள் பயிற்சி உற்பத்தி நிலையம் ஒன்று 21—7—77 அன்று தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது. இதிலும் 15 பெண்களுக்குபயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மாதிரி, கிராமங்களில் கிராம தொழில்களைத் தொடங்குவதன் மூலம்பெண்களுக்குவேலைவாய்ப்பு கிடைப்பதுடன், நல்ல வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. இவைகள் தவிர மணமேல்குடியில் ஒரு தாழைமடல் தொழிற்சாலையும், புதுக்கோட்டையில் ஒரு பனஞ்சீனி ஆலையும் தொடங்கி அநேகருக்கு வேலை வாய்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், இம்மாவட்டத்தை ஒரு பனைப் பெருவளத்திட்ட மாவட்டமாக ஆக்க திட்டங்கள் தீட்டப்படுள்ளது. இவைகள் யாவும் நிறைவேற்றப் பட்டவுடன் இம் மாவட்டம் பனைத் தொழிலில் சிறந்து விளங்கும் என்பதில் சிறிதும்ஐயமில்லை.

## உழவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி

இடையாட்களை ஒழிப்பதும், உழவர்களுக்குப் பட்டா வழங்குவதும், இனம் ஒழிப்புச் சட்டங்களின நோக்கமாகும். ஆதலால், உழவர்களுக்கும் அல்லது சாகுபடியாளர்களுக்கும் நில உடைமையாளர்களுக்கும் இடையில் பட்டா வழங்குவது குறித்த தகராறு சம்பந்தப்பட்ட வழக்குகளுக்குச் சட்ட ஆலோசனை உதவி, உழவர்களுக்கும் சாகுபடியாளர்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று அரசு கருதியுள்ளது.

இனம் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் பட்டா வழங்குதல் தொடர்பாக உள்ள எந்தத் தகராறுகளில் நிலவரி ஏற்பாடு அதிகாரிகள், நில உடைமையாளர்களுக்கு எதிராக முடிவு கூறி, நில உடைமையாளர்கள் அதன் மேல், மேல் முறையீடு செய்து கொண்டு, துறையானது ஒரு கட்சிக்காரராக சேர்க்கப்பட்டதோ அத்தகைய தகராறுகள் அனைத்திலும், துறை சார்பாக அமர்த்திக் கொள்ளப்பட்ட வழக்கறிஞர், சாகுபடியாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று ஆணையிடப்படவேண்டும் என்றும், துறையானது கட்சிக்காரராகச் சேர்க்கப்படாமலிருந்தால், துறையையும் கட்சிக்காரராகச்சேர்த்துக்கொள்ளவும் உழவர்கள் அல்லது சாகுபடியாளர்கள் சார்பாக வழக்குகளில் எதிர்வாதம் செய்யவும் உள்ளூர் வழக்குரைஞர்கள் மனுக்களைத் தாக்கல் செய்யுமாறு கட்டளையிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆதாரம்: வருவாய்த் துறை மானியக் கோரிக்கை, 1977)



# பால்வினை நோய் ஒரு பயங்கரத் தொற்று நோய்



காலை 7 மணி.

அந்தத் தாய் தன் மெலிந்த கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு மெல்ல வருகிறாள்.

குழந்தை 'மொழு மொழு' வென்று அழகாகத் தன் பொக்கை வாய் திறந்து சிரிக்கிறதா?

இல்லவே, இல்லை! மெலிந்து சோம்பிப் போய் விகாரமாய்க் காட்சியளிக்கிறதே!

மேசையில் கிடத்தப்பட்ட அந்தக் குழந்தையைச் செவிலியர்கள் பரிசோதிக்கின்றனர். அருகே அக்குழந்தையின் தாய் சோகமே உருவாய்க் காட்சியளிக்கிறாள். ஏன்?

கிரந்தி நோய்!

ஆம். அந்தக் குழந்தை கிரந்தி நோயால் பீடிக்கப்பட்டிருந்தது.

தம் பிள்ளைகள் நல்லவனாக, வல்லவனாக விளங்குவதற்குப் பெற்றோர்களும் ஒரு முக்கிய காரணம் அல்லவா? அதைப்போல, நோய் நொடிக்கும்கூட அவர்களே காரணமாக இருக்கிறார்கள்!

எப்படி?

இதை உணர்த்தவும், உபயோகமான பல ஆலோசனைகளை வழங்கவும், உகந்த சிகிச்சையளித்து உதவவும் ஒரு துறை முன்வருகிறது.

அதுதான், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் (Govt. General Hospital) உள்ள ''பால்வினை நோய்த் துறை'' (Institute for the Study of Sexually Transmitted Diseases)

அதோ! ஆண், பெண் நோயாளிகள் வரிசையாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரையும் மிக அக்கறையோடு மருத்துவர்களும், செவிலியர்களும் கவனிக்கின்றனர். ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் தனித் தனிப் பிரிவுகள் இங்கு உள்ளன.

காலை 7 மணியிலிருந்தே இந்தத்துறை சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கி விடுகிறது.

'பால்வினை நோய்' அல்லது 'மேகநோய்' (Venereal Diseases) என்பது ஒரு கொடிய தொற்று நோயாகும். இந்நோய் எப்படி வருகிறது? முதலில் இதைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

பால்வினை நோய் ஆண்-பெண் உடலுறவின் மூலமாகவும், மற்ற நெருங்கிய தொடர்புகளினாலும் பரவுகிறது. இந்த நோய்கள் 5 வகைப்படும். அவை:

1. கிரந்தி (Syphilis)
2. வெட்டை (Gonorrhoea)
3. அரை ஆப்புக் கட்டி.
4. மணற்கழலைநோய்
5. மென்புண் (Soft Sore)

இவற்றுள் முக்கியமானவை கிரந்தியும், வெட்டையுமேயாகும்.

**கிரந்தி ஒரு பயங்கரத் தொற்று நோய் !**

இந்த நோய் 'டிரிபனீமா' என்ற ஒரு நுண்கிருமியினால் உண்டாகிறது. இது அம்மைக் கிருமிகள் போல் காற்றினால் பரவுவதில்லை. நீர், உணவு மூலமாகவும் பரவுவதில்லை. ஆனால் இந்த நோயுள்ள ஆணிடமிருந்தோ, அல்லது பெண்ணிடமிருந்தோ, மற்றொரு பெண்ணுக்கும் அல்லது ஆணுக்கும் முறையே ஆண், பெண் உடலுறவினாலோ மற்ற நெருங்கிய

கிரந்தி நோயால் பீடிக்கப்பட்ட குழந்தை

கர்ப்பிணி ஒருவர் பரிசோதிக்கப்படுகிறார்





நோயாளியிடம் தகவல் சேகரிக்கப்படுகிறது.



நோயாளி ஒருவர் பரிசோதிக்கப்படுகிறார்

தொடர்புகளினாலோ பரவும். தாயிடமிருந்து குழந்தைகளுக்கும் இது ஒட்டிக்கொள்ளும். தாய் கர்ப்பமாக இருந்தால், இரத்தத்தின் மூலம், கர்ப்பத்திலுள்ள சிசுவிற்குப் பரவிவிடும். ஆகையால், இது ஒரு பயங்கரத் தொற்று நோய்!

ஆரம்ப நிலையிலிருந்தே, இது இரத்தத்தில் கலந்து உடம்பில் பரவி, நீண்ட நாட்களுக்கு உடலில் இருந்து பல்வேறு உடலுறுப்புகளை-பாகங்களைப் பாதிக்கிறது!

உடலுறவுக்குப் பின், பத்து நாட்களுக்குப் பிறகு முதலாவதாக ஆண், பெண் குறிகளில் கிரந்திப்புண் உண்டாகிறது. அநேகமாக வலி இருக்காது. சிகிச்சை செய்யாமலேயே புண் ஆறி, நம்மை அறியாமலே இரண்டாவது பருவத்தை அடைந்துவிடும். இரண்டாவது பருவத்தில் அம்மை போன்ற சிரங்குகள் உடலில் உண்டாகும். மற்றும் தொண்டையில் புண்கள், ஆண், பெண் குறிகளில் புண், மூட்டுகளிலும் எலும்புகளிலும் வலி, கட்டிகள் உண்டாகும். சில சமயங்களில் இது கண்களையும் பாதிக்கும். இந்தப் பருவத்தில் தான் மற்றவர்களுக்கு இது எளிதில் தொற்றிக் கொள்ளும்.

**இந்நோய் உடலில் மறைந்திருந்து பல ஆண்டுகளுக்குப் பின் தோல், எலும்பு, மூட்டுகள், கண்கள், மூளை, இருதயம், இரத்தக் குழாய்கள் முதலியவற்றைப் பாதிக்கும்.**

தாய்க்கு இந்நோய் இருந்தால், குறைப்பிரசவம், குழந்தை மரித்துப் பிறத்தல் ஆகியவை உண்டாகும். சில சமயங்களில் குழந்தை பிறந்த சில காலங்களுக்குப் பின், தோல், எலும்பு, மூட்டுகள் முதலியவற்றை இது பாதிக்கும். அதுமட்டுமல்ல, கல்லீரலையும் இது விட்டுவிடுவதில்லை. இந்த நிலையில் அந்தக் குழந்தைக்குத் தகுந்த சிகிச்சை செய்யாவிட்டால், கண்கள், காது, மூளை ஆகியவை பின்னால் பெரிதும் பாதிக்கும்.

**வெட்டை நோய்!**

இந்நோய், மிக நுண்ணிய 'கோனுகாக்கஸ்' என்ற மற்றொரு வகைக் கிருமியினால் உண்டாகிறது. கிரந்தியைப் போன்று இதுவும் நோய் உள்ள ஆணிடமிருந்தோ பெண்ணிடமிருந்தோ, நோய் உள்ளவர்களிடம் உறவு கொள்கின்ற ஆணுக்கோ பெண்ணுக்கோ பரவுகிறது.

ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும்போது இந்நோய் கண்டால் பேறுகாலத்தின்போது குழந்தைக்குப் பரவி, குழந்தையின் கண்களைக் குருடாக்கிவிடும். எனவே, இதுவும் ஒரு தொற்று நோயாகும்.

இந்நோயுள்ள நபரிடம் உடலுறவு கொண்ட இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னர் வெள்ளைபடும். நீர்க்கடுப்பு, எரிச்சல் ஏற்படும். சிகிச்சை பெருவிடில் மூட்டுகளில் வலி, விரைவீக்கம், மலடு, நீர் அடைப்பு, பெண் குறிகளில் கட்டிகள் போன்றவை உண்டாகும்.

**கிரந்தி, வெட்டை நோயுள்ளவர்களுக்கு மருத்துவர்கள் கூறும் பொது அறிவுரைகள் :**

இந்த நோய் உள்ளவர்கள் உடனே மருத்துவரிடம் சென்று காண்பித்து, முழுக் குணம் அடையும் வரையில் சிகிச்சை பெற வேண்டும். அதனால், விளையும் தீமைகளைப் போக்கவும், மற்றவர்களுக்குப் பரவுவதைத் தடுக்கவும் செய்யலாம்.

உங்களுக்குத் திருமணமாயிருந்தால், உங்கள் மனைவியையும், குழந்தைகளையும் மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்லுங்கள். ஏனெனில், உங்கள் நோய் அவர்களுக்கும் பரவும்.

இந்நோய் உள்ளவர்களை, மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ளும்படி வற்புறுத்துங்கள். இந்நோய்களுக்கு இரகசியமாகவும் **இலவசமாகவும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.**

இந்த நோய்கள் உடலுறவினால் மட்டுமே வருகிறதா?

இல்லை. வேறு வழிகளிலும் இந்நோய் வருவதற்கு வாய்ப்புண்டு. கிரந்திப் புண்ணுடைய நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவவரின் இரத்தத்தில் கூட அந்த நஞ்சு சேர்ந்து விடலாம்.

மேகநோயுள்ள குழந்தைக்குப் பால்தரும் செவிலிக்கும் அந்நோய் வரக்கூடும்.

ஒரு தரம் மேற்கொள்ளும் உடலுறவின் மூலமே சில வேளைகளில் இரண்டு மூன்று வகை நோய்கள் ஏற்பட்டுவிடலாம்.

இந்த நோய்கள் மேலும் பரவாமல் ஆரம்பத்திலேயே தடுக்கவும், சென்னை அரசினர் பொது மருத்துவமனையிலுள்ள 'பால்வினை நோய்த்துறை' துரிதமாகச் செயல்படுகிறது.

பழைய நோயாளிகளையும், புதிய நோயாளிகளையும் பார்ப்பதற்கென இங்கே தனித்தனிப் பிரிவுகள் உள்ளன.

முதலில், இந்நோய் கண்டவர் வந்ததும் அவரைப் பற்றிய எல்லாத் தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன.

பார்வையற்ற இளைஞர் ஒருவர் வருகிறார். அவர் பெயர், ஊர், குடும்பநிலை முதலான விவரங்கள் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகின்றன. பிறகு அவர் பரிசோதனைக்கு அனுப்பப்படுகிறார்.

இப்படிப் பழைய, புதிய ஆண்-பெண் நோயாளிகள் வந்தவண்ணமிருக்கின்றனர். இங்கு வந்து சிகிச்சை பெறும் பால்வினை நோயாளி ஒருவர், தமக்குத் தெரிந்த அல்லது கேள்விப்பட்ட

கிரந்தி, வெட்டை மற்ற பால்வினை நோய்கள் தடுப்புமுறை பற்றிய விளக்கங்கள் அங்கே சுவரொட்டிகள், புகைப்படங்கள் மூலமாகக் காட்சி தருகின்றன.

''கிரந்தி நோய், கர்ப்பத்திலேயே குழந்தைகளுக்குப் பரவுகிறது. கர்ப்பிணிகள் இந்த நோயைக் கண்டறிய இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. இல்லையென்றால், குழந்தை உருமாறி பிறக்கும். சரியான முறையில் சிகிச்சை செய்தால், பால்வினை நோயைத் தடுக்கலாம்'' என்னும் எச்சரிக்கைகள் நம்மை விழிப்படையச் செய்கின்றன.

கிரந்தி நோய்க்குச் சிகிச்சை, நோய் கண்டவுடனேயே துவக்க

யில் கலவியில் ஈடுபடக்கூடாது. நோய் முற்றிலும் குணமான பின்னரே திருமணம் செய்ய வேண்டும்.

பொது மருத்துவ மனையில் உள்ள இந்தத் துறை, தம்மை நாடிவரும் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதோடு நின்றுவிடுவதில்லை. இது வெளியிடங்களுக்கும் சென்று இந்நோயுள்ளவர்களைச் சந்திக்கிறது. இதற்கென ஒரு 'வேன்' உள்ளது. இதில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் செல்கின்றனர். சென்னை மத்தியச் சிறைச்சாலை, குடிசைப் பகுதிகள், பிச்சைக்காரர் இல்லங்கள் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு இந்நோய் எவருக்கேனும் இருக்கிறதா என ஆராயப்படுகின்றது.



சிறப்புப் பரிசோதனைக் கூடத்தில்...



நோய் பற்றிய குட்டி கண்காட்சி

இதே நோயாளியை இங்கு அழைத்து வருவதும் உண்டு. இதன்மூலம் இந்நோய் மேலும் பரவாமல் தடுக்க முடிகிறது.

வெட்கப்பட்டு, வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் இந்நோயாளிகள், எந்தத் தயக்கமும் கொள்ளத் தேவை இல்லை. ஏனென்றால், இரகசியமாக இந்தச் சிகிச்சை செய்யப்படுகிறது

மருத்துவரிடம் நாம் எதையும் மறைக்க முயற்சிக்க வேண்டாம். பிறகு அதுவே நம் மறைவுக்குக் காரணமாக ஆகிவிடலாம் அல்லவா?

அதோ! அந்த அறைக்குள் நுழைகிறோம். ஒரு குட்டிக் கண்காட்சியை அங்கே நாம் காண்

வேண்டும். முதலில் ஏற்பட்ட புண் தானாகவே ஆறும். ஆனால் அது ஆறுவதற்குள், இரத்தம் நஞ்சாகிவிடும். அதனால் புண் தானாக ஆறும் என்று எண்ணாமல், முதலிலேயே மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும். இந்த விஷயத்தில் நோயாளி பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவசரப்பட்டு சிகிச்சையை அரைகுறையாக நிறுத்திக் கொள்ளக்கூடாது. அது பல சிக்கலில் கொண்டுபோய் விட்டுவிடும். **நோய் குணமாகிவிட்டது என்று நாமே தீர்மானித்து விடக்கூடாது. அந்தப் பொறுப்பு மருத்துவரைச் சேர்ந்தது.** நோயின் தொற்று, உள்ளேயே இருந்து பிறரையும் வந்து சேரும் என்பதையும், அவருக்குப் பிறக்கும் குழந்தைக்கும் அந்நோய் வரும் என்பதையும் நாம் உணர

இந்தத் துறையில் புள்ளி விவர ஆய்வாளர் ஒருவரும் இருக்கிறார். நோய்கள் குறித்தும், நோயாளிகள் குறித்தும் இங்கு விவரங்கள் சேகரிக்கப்பட்டுப், பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நோய்களின் தன்மைகளைக் கண்டறிவதற்கான 'சிறப்புப் பரிசோதனைக் கூடம்' ஒன்றும் இங்குள்ளது.

**பால்வினை நோய்களுக்குச் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் மட்டுமல்லாது, சென்னை மாநகரில் கீழ்க்காணும் மருத்துவமனைகளிலும் சிகிச்சை அளிக்கப்படுகின்றன.**

*1. சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையிலுள்ள பால்வினை நோய்ப் பிரிவு.*



நடமாடும் மருத்துவ ஊர்தி...



புள்ளி விவரப் பிரிவு.

2. இராயப்பேட்டை மருத்துவமனையிலுள்ள பால்வினை நோய்ப் பிரிவு.

3. மாநகராட்சி தாய்-சேய் நல விடுதி.

4. திருவல்லிக்கேணியிலுள்ள கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை.

5. இராயபுரத்திலுள்ள ஆர். எஸ். ஆர். எம். மருத்துவமனை.

6. எழும்பூரிலுள்ள மகப்பேறு மருத்துவமனை.

வெளியூர்களில் உள்ளவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சென்று ஆலோசனை பெறலாம்.

''பால்வினை நோய்களுக்கு வெளியில் சிகிச்சை செய்து கொள்ள எவரும் முயற்சிக்க வேண்டாம். சரியான முறையில் சிகிச்சை செய்து கொண்டால் இந்நோயைச் சில மணி நேரங்களில் குணப்படுத்திவிடலாம். கண்ட கண்ட மருத்துவரிடம் சிகிச்சை பெறவோ, தன்னிச்சையாகச் சிகிச்சை பெறவோ கூடாது.'' என்று கூறும் இத்துறையின் இயக்குநர் அவர்கள், --ஒருவருக்கு ஏககாலத்தில் கிரந்தியும், வெட்டையும் வரலாம். ஆகையால் இதைக் கண்டறிய இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. திருமணமாகும் முன் ஆண், பெண் அனைவரும் இரத்தப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். கர்ப்பிணிகளுக்கு இது மிக மிக அவசியம்'' என்றும் எச்சரிக்கிறார்.

மோகம் முப்பது நாளோ முப்பது வருஷமோ, அது அளவுக்கு மீறுமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்! மோகம், அளவை—ஒழுங்கை மீறுமானல் அதுவே மேகநோயாக மாறக் கூடும் அல்லவா? அளவுக்கு மீறினல் அமிர்தமும் நஞ்சுதானே?

எனவே, மேகநோய் அல்லது பால்வினை நோயுள்ளவர்கள் விழிப்புடன் இருந்தால் எதற்கும் பயப்படத் தேவையில்லை. உலகச் சுகாதார நிறுவனத்தால் இதற்கென நிர்ணயிக்கப்பட்ட ஒரு வகை சிகிச்சையால், துவக்க நிலையிலுள்ள கிரந்தி நோயை ஒரே வாரத்திலும், வெட்டை நோயை ஒரு சில மணி நேரங்களிலும் முழுமையாக குணப்படுத்தலாம் என்ற மகிழ்ச்சியான செய்தி, பால்வினை நோயாளிகளின் வயிற்றில் பாலை வார்ப்பதாகும்!

— பி. வி. கிரி

## தென்கிழக்கு ஆசியாவிலேயே முதல் நிலையம்!

சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் இயங்கி வரும் பால்வினை நோய்ச் சிகிச்சை — பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், பால்வினை நோய்களைப் பற்றிய கல்விக்குத் தென்கிழக்கு ஆசியா முழுவதற்கும் உள்ள ஒரே ஒரு நிலையமாகத் திகழ்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தினரால், பிரேகு என்னும் இடத்திலும், புதுடெல்லியிலும் நடத்தப் பெற்ற பத்தாவது உள்நாட்டு வட்டாரப் பயிற்சியின்போது கானு, கென்யா, லிபியா, மெக்சிகோ, வெனிஜுலா, ஜோர்டான், பங்களாதேஷ், பர்மா, இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் அந்தமான், ராஜஸ்தான் ஆகிய இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பால்வினை நோயின் கொடுமை குறித்தும் சென்னையில் உள்ள பால்வினை நோய் மருத்துவ நிலையம் அந்நோயைக் கட்டுப்படுத்தும் முறையைக் குறித்தும் பிரதிநிதிகளுக்கு ஒன்பது மணி நேரம் பயிற்சி அளிக்கப்பட்டது.

மத்திய அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சகம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பணியைத் தரப்படுத்துவதற்காக 5 இலட்சம் ரூபாய் மானியத் தொகை வழங்கியுள்ளது.





# ஹாலந்து நாட்டுக்குப் பனைப்பொருள் ஏற்றுமதி!

ஹாலந்து நாட்டிலுள்ள 'ஏபெல்' வணிக நிறுவனத்தார் முதன்முதலாகத் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்திடம் நேரடியாகப் பனைப் பொருட்களுக்கு சுமார் ரூ. 2,000 பெறுமானமுள்ள மாதிரி ஆர்டர் கொடுத்துள்ளார்கள்.

பனஞ்சீனி, பனஞ்சீனி-மிட்டாய் வகைகள், விதவிதமான பனையோலைப் பொருட்கள், பலரகப் பனந்தும்புத் தூரிகைகள் முதலியவை 'ராட்டர்டாம்' துறைமுகத்துக்கு 'இன்டியன் பிரஸ்டீஜ்' என்ற கப்பல்மூலம் 29-6-'77-ல் அனுப்பப்பட்டுள்ளது. இதனல் பனைப்பொருட்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலை நாடுகள் பனைப்பொருட்களை விரும்பி வாங்கத் தொடங்கினல் ஏராளமான கிராமப் பெண்களுக்கும், வாலிபர்களுக்கும் நிரந்தரமான வேலைவாய்ப்பு ஏற்படவும், பயன்படுத்தப்படாமலிருக்கும் இரண்டுகோடிப் பனை மரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படவும் வழிபிறந்துள்ளது.

இதுகாறும் பனையோலைக் கிலுக்குகள், தடுக்குகள் போன்றவற்றை தனியார் ஏற்றுமதி செய்து வந்தனர். தற்போது மாநில இணையம் நேரடியாக ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளது.

19-ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில், கல்கத்தாவிலுள்ள பர்துவானுக்கு அருகில் 'பிளேக்' என்ற ஆங்கிலேயர் பனஞ்சீனி ஆலையை நிறுவி நடத்தினுர். இதே காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தக்கலை, திருச்செந்தூருக்கு அருகிலுள்ள குலசேகரன் பட்டினம் ஆகிய இடங்களில் பனஞ்சீனி ஆலைகள் இயங்கின. இந்தப் பனஞ்சீனியை இங்கிலாந்து மக்கள் விரும்பி வாங்கினர். கதர் வாரியத்தின் இடையருத முயற்சியாலும், ஊக்குவிப்பாலும் 1965-ல் தமிழ்நாட்டில் பனஞ்சீனி ஆலைகள் தோற்றுவிக்கப்பட்டன. தற்போது கோவை மாவட்டத்தில் களிக்க நாயக்கன் பாளையத்திலும் பனஞ்சீனி உற்பத்தி செய்யும் ஆலை இயங்கி வருகிறது. இவற்றை ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களே நடத்தி வருகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் மாதவரம் அருகிலுள்ள குமரப்பாபுரத்திலும், மதுராந்தகம் வட்டத்திலுள்ள கடப்பாக்கத்திலும் மாநில இணையம் பனஞ்சீனி ஆலைகளை நிறுவியுள்ளன.

19-ம் நூற்ருண்டுக்குப்பின் முதல் தடவையாக இப்போது தான் பனஞ்சீனி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மேலும் கலிபோர்னியாவுக்குப் பதப்படுத்தப்பட்ட நுங்கு டின்களை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மற்றுமொரு ஏற்றுமதி நிறுவனத்தாரின் கோரிக்கைப்படி கூழ்ப்பதநீர் நிலையில் பனைவெல்லத்தை டின்களில் அடைத்து அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.









| வரிசை எண் | காய்கறிகளின் பெயர் | நடும் முறை | 100 சதுர அடிக்கு விதை அளவு (சுமாராக) | செடிக்குச் செடி விட வேண்டிய இடைவெளி | வரிசைக்கு வரிசை விட வேண்டிய இடைவெளி | விதைப்பதற்கும், நடுவதற்கும் ஏற்ற பட்டம் | அறுவடை காலம் | வயது | 100 சதுர அடிக்கு இட வேண்டிய எரு, உரங்கள் | 100 சதுர அடியில் விளையக்கூடிய காய் களின் எடை | பயிரிடுவதற்கு ஏற்ற சிறந்த ரகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1 | கத்தரி | மேடான பாத்திகளில் மணலோடு விதைகளைக் கலந்து விதைக்கவும். ஒரு மாத வயதான நாற்றுகளை நடவும். | 0.3 முதல் 0.4 கிராம் தேவை. ஆனால் ஒரு கிராம் விதைப்பது சிறந்தது. | 60 செ.மீ. (2 அடி) | 75 செ.மீ. (2½ அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஜூன்-ஜூலை, 2. பிப்ரவரி-மார்ச்சு விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். | நட்ட 50 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3 முதல் 7 மாதங்கள் | நடுவதற்குமுன்னர் 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம் சல்பேட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவும். நடவு செய்த 3 வாரம் கழித்து 115 கிராம், 6 வாரம் கழித்து 115 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக வைத்து மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும். | 20 முதல் 36 கிலோ | பூசா நீண்ட ஊதா, பூசா உருண்டை, கொத்து வெள்ளை (எஸ். எம். 62), கறுப்பு அழகு, ஊதா நீளம் (எஸ். எம். 60), வரிக் கத்தரிக்காய் (எஸ். எம். 68). |
| 2 | தக்காளி | ,, | ,, | 60 செ.மீ. (2 அடி) | 75 செ.மீ. (2½ அடி) | 1. பிப்ரவரி-மார்ச்சு, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. அக்டோபர்-நவம்பர் | நட்ட 60 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3.5 முதல் 5 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம் சல்பேட், 460 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இடவும். 4 வாரம் கழித்து 230 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விடவும். | 24 முதல் 30 கிலோ | கோ. 1 தக்காளி, கோ. 2 தக்காளி, பூசா ரூபி, பாண்டு ரோசா, மார் குளோப், ஆர்.டி.இ.சி-1, மார்ட்டன், பெஸ்ட் ஆஃப் ஆல், மீருட்டி, ஆக்ஸ்ஹார்ட். |
| 3 | மிளகாய் | ,, | ,, | 45 செ.மீ. (1.5 அடி) | 60 செ.மீ. (2 அடி) | 1. மே-ஜூன், 2. ஆகஸ்ட்-செப்டம்பர், 3. டிசம்பர்-ஜனவரி | நட்ட 2 மாதத்திற்குப் பின்னர் முதல் மகசூல் கிடைக்கும். | 7 முதல் 8 மாதங்கள் | அடி உரமாக 25 கிலோ தொழு உரு, 250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 60 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் இடவும். மேல் உரமாக நட்ட 30-வது, 50-வது, 75-வது நாட்களில் 115 கிராம் அமோனியம் சல்பேட் இடவும். | 10 முதல் 12 கிலோ | கோவில்பட்டி -1 (கே. 1) கோவில்பட்டி-2 (கே. 2), பி. 24, ஏ. 2, என். பி. 46-ஏ, ஜி.1, ஜி.2. மதுரை—1 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | வெண்டை | பார்களில் விதையை ஊன்றவும்.  | 6 கிராம் | 30 செ.மீ. (1 அடி) | 60 செ.மீ. (2 அடி) | எல்லாக் காலங்களிலும் பயிரிடலாம்— 1. ஜூன்-ஜூலை, 2. பிப்ரவரி-மார்ச், விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். | விதை ஊன்றிய 40 நாட்களுக்குப் பின்னர் காய் பறிக்கலாம். | 3 முதல் 4 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 100 கிராம் கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரி பேட் ஆஃப் பொட்டாஷ் இடவும். 4 வாரம் கழித்து 100 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 6 முதல் 12 கிலோ | பூசா சவானி, சிவப்பு வெண்டை, இந்தியன் வெண்டை, வெள்ளை வெல்வெட். |
| 5 | காராமணி (தட்டைப் பயறு) | பாத்திகளில் விதைகளை வரிசையாக விதைக்கவும். | 32 கிராம் | 75 செ.மீ. (2.5 அடி) | 90 செ.மீ. (3 அடி) | 1. ஏப்ரல்-மே, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. நவம்பர்-டிசம்பர். | 4 முதல் 6 வாரங்கள் | 4 மாதங்கள் | கத்தரிக்குச் செய்வது போல் அடி உரம் இடவும். | 3 முதல் 4 கிலோ | கோ. 1, கோ. 2, இ.சி. 455, இ.சி.419 பூசா பால்குனி. |
| 6 | அவரை | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை. | 5 விதைகள் | ... | 10 அடி | ஜூலை—ஆகஸ்ட். | நட்ட 60 நாட்களுக்குப் பின்னர் மகசூல் கிடைக்கும்.  | 6 முதல் 8 மாதங்கள். | விதை ஊன்றுவதற்கு முன்பு அடி உரமாக குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இட வேண்டும். | 8 முதல் 10 கிலோ. | கோ.2, கோ. 3, கோ. 4, கோ. 5. |
| 7 | ஒட்டு விரிய அவரை | வரிசை வரிசையாக விதைகளை ஊன்றவும். பந்தல் தேவை இல்லை. | 100 விதைகள (20 கிராம்) | 6 அங்குலம் | 2 அடி | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். ஆனல் ஜூலை— ஆகஸ்ட் மார்ச்-ஏப்ரல் பருவங்கள் சிறந்தவை. | விதைத்த 45-ஆம் நாள் முதல், காய்கள் கிடைக்கும்.  | 4 மாதங்கள். | விதைக்கும் முன்பு 25 கிலோ தொழு எரு, 115 கிராம் அம்மோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இடவும். | 3 முதல் 6 கிலோ. | கோ.1, கோ. 6, கோ. 7, கோ. 8. கோ—9 |
| 8 | கொத்தவரை | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 10 கிராம் | 15 செ.மீ. (6அங்குலம்) | 45 செ.மீ. (1.5 அடி) | (1) ஜூலை—ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி | ,, | 4 மாதங்கள். | கத்தரிக்கு இடுவது போல் அடி உரம் இடவும். | 5 முதல் 6 கிலோ. | பூசா மௌஸ்மி, பூசா நௌபஹார். |
| 9 | புடல் | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை. | 5 விதைகள் | ... | 8 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடிப்பட்டம்) (2) ஜனவரி-பிப்ரவரி (தைப்பட்டம்) | விதைத்த 50 நாளில் அறுவடைக்கு வரும். | 5 மாதங்கள் | குழிக்கு 25 கிலோ தொழு எருவையும், 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தையும் அடி உரமாக இடவும். விதை ஊன்றிய 30-ஆம் நாள் குழிக்கு 0.5 கிலோ அமோனியம் சல்பேட் இடவும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இடவ்ம். | 10 முதல் 16 கிலோ. | ஆடுதுறை நீளம், நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை, கோடுகளுடன் கூடிய நீண்ட பச்சை, கே. எம். 1, குட்டைப் புடல் (பன்றிப் புடல்) கோடைப் பருவத்திற்கு ஏற்றது. |
| 10 | பாகல் | ,, | ,, | ... | 8 அடி  | | ,, | 5 மாதங்கள். | ,, | 5 முதல் 10 கிலோ. | ஆடுதுறை நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை. |
| 11 | பீர்க்கு | ,, | ,, | ... | 8 அடி | ,, | ,, | 5 மாதங்கள். | ,, | 6 முதல் 12 கிளோ. | அதி நீள உயர் ரகம் |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | பறங்கி | குழியில் விதைகளை ஊன்ற வேண்டும். பந்தல் தேவை இல்லை. | 5 விதைகள் | ... | 10 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி | விதைத்த 120 நாட்களில் அறுவடைக்கு வரும். | 6 முதல் 8 மாதங்கள். | புடலைக்குச் செய்ததுபோல அடி உரம் இடவும். விதைத்த 45வது நாள் 0.5 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 4 முதல் 5 காய்கள். | கோ. 1 பறங்கி, கோ. 2 பறங்கி. |
| 13 | பூசணி | ,, | ,, | ... | ,, | ,, | விதைத்த 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 4 முதல் 6 மாதங்கள். | ,, | ,, | கோ. 1 பூசணி. |
| 14 | சுரைக்காய் | ,, | ,, | ... | 8 அடி | (1) ஜூன்-ஜூலை (2) டிசம்பர்-ஜனவரி | விதைத்த 80 நாளில் அறுவடைக்கு வரும் | 6 மாதங்கள். | ,, | 12 முதல் 16 கிலோ வரை | துடியலூர் ரகம் |
| 15 | முட்டைக் கோஸ் | கத்தரி போலவே நாற்று விட்டு நட வேண்டும் | 1 கிராம்  | 60 செ.மீ. (2 அடி) | 75 செமீ. (2.5 அடி) | சமவெளிகளில் அக்டோபர் மாதங்களிலும், மலைப் பிரதேசங்களில் மார்ச் மாதங்களிலும் விதைக்கலாம். | நட்ட 45 நாட்களில் முதல் அறுவடை. | 4 மாதங்கள் | 25 கிலோ தொழு எரு, 75 கிராம் அமோனியம் சல்பேட், 230 கிராம் சூப்பர் பாஸ்பேட், 185 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். நட்ட 30-வது, 60-வது நாட்களில் 75 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 20 முதல் 30 கிலோ. | ஏர்லிட்ரம் ஹெட், கோல்டன் ஏக்கர், ஓ. எஸ். கிராஸ், பூசா டிரம் கெட், பிரைட் ஆப் இந்தியா. |
| 16 | காலிஃப்ளவர் | ,, | ,, | ,, | ,, | ,, | நட்ட 85 நாளில் முதல் அறுவடை செய்யலாம். | 4 முதல் 5 மாதங்கள். | ,, | 16 முதல் 24 கிலோ. | ஸ்னோபால், பூசா கட்கி, எர்லி பாட்னா. |
| 17 | பீட் ரூட் | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 5 கிராம் | 10 செமீ. (4 அங்.) | 45 செமீ. (1.5 அடி) | ,, | விதைத்த 90 நாட்களில் அறுவடை செய்யலாம். | 3.5 முதல் 4 மாதங்கள். | 25 கிலோ தொரு எழு, 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். | 16 முதல் 20 கிலோ. | கிரிம்சன்குளோப், டெட்ராய்ட் கறுஞ் சிவப்பு. |
| 18 | கேரட் | ,, | ,, | ,, | ,, | ,, | விதைத்த 3 மாதத்திற்கு பின்னர். | 3.5 முதல் 4 மாதங்கள். | ,, | 16 முதல் 20 கிலோ. | லேட் நான்டிஸ், பூசா கேசன். |
| 19 | முள்ளங்கி | ,, | ,, | 15 செமீ. (0.5 அடி) | 30 செ.மீ. (1 அடி) | ஆண்டு முழுவதும் | விதைத்த 40 நாட்களில் அறுவடை செய்யலாம். | 1.5 முதல் 2 மாதங்கள். | பீட்ரூட்டுக்குச் செய்வது போலவே உரமிடவும் | 20 முதல் 30 கிலோ | வெள்ளை முள்ளங்கி (எச். 113), சிவப்பு முள்ளங்கி, பூசா ராஷ்மி. |
| 20 | டர்னிப் | விதைகளை வரிசையில் ஊன்றவும் | 5 கிராம் | 10 செ.மீ. (4 அங்) | 45 செ.மீ. (1.5 அடி) | (1) ஆகஸ்ட்-செப். (2) அக்- நவம்பர். (3) ஜன-பிப்ரவரி. | விதைத்த 90 நாளில் அறுவடை செய்ய | 3 முதல் 4 மாதங்கள் | பீட் ரூட்டுக்குச் செய்வது போலவே உரமிடவும். | 9 முதல் 12 கிலோ. | பர்பிள் டாப், ஒயிட் குளோப், பூசா காஞ்சன். |
| 21 | கீரைகள் | 6 அடிக்கு 6 அடி பாத்திகளில் விதைக்கவும் | 2 கிராம்  | 10 செ.மீ. (4 அங்) | 45 செ.மீ. (1.5 அடி) | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். | விதைத்த 40 நாளில் அறுவடைக்கு வரும். | 3 மாதங்கள் | விதைப்பதற்கு முன் 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 60 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் உரமிடவும். | வாரத்திற்கு 4 கிலோ. | கோ. 1 தண்டுக்கீரை, அரைக்கீரை, சிறுகீரை, பருப்புக்கீரை, முளைக்கீரை. கோ-2 முளைக்கீரை |
| 22 | சமவெளிக்கு ஏற்ற உருளைக் கிழங்கு | பார்களில் நடவும் | 1 கிலோ முளை விட்ட கிழங்கு | 20 செமீ. (8 அங்) | 60 செ.மீ. (2 அடி) | (1) ஏப்ரல்-மே, (2) செப்டம்பர், (3) பிப்ரவரி. | விதைத்த 110 நாட்களில் அறுவடை செய்யலாம். | 110 முதல் 120 நாட்கள் | 25 கிலோ தொழு எரு. 460 கிராம் அமோனியம் சல்பேட், 1,400 கிராம் சூப்பர் பாஸ்பேட், 140 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். | 10 முதல் 12 கிலோ. | கோ - சிம்லா. |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | நூல்கோல் | நாற்று விட்டு 20 முதல் 25 நாட்கள் வயதுடைய நாற்று நடவும் | 2 கிராம் விதைகளை நாற்று விடவும் | 20 செமீ. (8 அங்) | 30 செ.மீ. (1 அடி) | (1) ஆகஸ்ட்-செப்டம்பர். (2) அக்டோபர்-நவம்பர். | 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 90 முதல் 100 நாட்கள். | 25 கிலோ தொழு எரு. 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் ஆஃப் பெட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். | 18 முதல் 24 கிலோ. | வெள்ளை வியன்னு, ஊதா வியன்னு. |
| 24 | பீன்ஸ் | பாத்திகளில் அல்லது பார்களின் சரிவில் (அ) வரப்பு ஓரங்களில் ஊன்றலாம் | 400 கிராம் | 20 செ.மீ. (8 அங்) | 60 செ.மீ. (2 அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். அக்டோபர்-நவம்பர் விதைப்பு அதிக மகசூல் தரும் | நட்ட 100 நாட்களில் அறுவடை செய்ய (சில குறுகிய கால ரகங்கள் நடவுசெய்த 40 நாட்களிலேயே மகசூல் தருகின்றன.) | 4 மாதங்கள். | 25 கிலோ தொழு எரு. 1 கிலோ 6:12:12 கலப்பு உரத்தை அடியுரமாக இட வேண்டும். | 8 முதல் 10 கிலோ. | கண்டெண்டர், கென்டக்கிவொண்டர். |
| 25 | வெள்ளரி | குழியில் விதைகளை ஊன்றவும். (ஒரு குழிக்கு 5 விதைகள்) | 5 கிராம் | 6 அடி | 6 அடி | (1) ஜூலை-ஆகஸ்ட் (2) ஜனவரி-பிப்ரவரி | நட்ட 75 நாட்களில் அறுவடைக்கு வரும் | 4 மாதங்கள். | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். | 15 முதல் 20 காய்கள். | ... |
| 26 | சௌ-சௌ | வேலிகளின் ஓரத்தில் நட்டுப் படர விடலாம் அல்லது பந்தலில் படர விடலாம். | குழிக்கு 2 முளை விட்ட காய்களை நட வேண்டும் | 10 அடி | 10 அடி | ஜூன்-ஜூலை. | நட்ட 9 முதல் 10 மாதங்களில் அறுவடைக்கு வரும். | 2 முதல் 3 ஆண்டுகள் | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். பிறகு 6 மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு குழிக்கும் 50 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | ஒரு கொடியில் 20 கிலோ (அ) 200 காய்கள் கிடைக்கும். | ... |
| 27 | பெல்லாரி வெங்காயம் | நாற்று விட்டுப் பார்களின் இருபுறமும் அல்லதுபாத்திகளில் நடவும். | 4 கிராம் | 10 செ.மீ. (4 அங்) | 10 செ.மீ. (4 அங்) | 1. ஜூன்-ஜூலை. 2. டிசம்பர்-ஜனவரி. | 1. அக்டோபர்-நவம்பர் 2. மே-ஜூன். | 5 முதல் 6 மாதங்கள். | நடுவதற்கு முன் 24 கிலோ தொழு எரு இடவும். 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் பொட்டாஷ்ஆகியவற்றை அடியுரமாக இடவும். நட்ட ஒரு மாதத்திற்குப் பின், 140 கிராம் அமோயம் சல்பேட் மேலுரமாக இடவும். | 9 முதல் 12 கிலோ. | |
| 28 | நாட்டு வெங்காயம் | ஒரு அடி இடைவெளியில் பார்களை அமைத்து இருபுறமும் நட வேண்டும் அல்லது பாத்திகளில் நடவும். | 1 கிலோ வெங்காயம் | 10 செ.மீ. (4 அங்) | 10 செ.மீ. (4 அங்) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஏப்ரல்-மே, 2. அக்டோபர்-நவம்பர். விதைப்பு அதிக மகசூல் தரும். | 80 முதல் 90 நாட்கள் | 60 முதல் 90 நாட்கள். | 12 கிலோ தொழு எரு, 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். 30-வது நாள் 140 கிராம் அமோனியம்சல்பேட்டை மேலுரமாக இடவும். | 9 முதல் 12 கிலோ. | கோ. 1 வெங்காயம். கோ.2 வெங்காயம். |
| 29 | மரவள்ளி | 75 செ.மீ. (2.5 அடி) இடைவெளியில் பார்கள் அமைக்கவும் | 16 கரணைகள் | 75 செ.மீ. (2.5 அடி) | 75 செ.மீ. (2.5 அடி) | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனால் ஜூன்-ஜூலை, டிசம்பர்-ஜனவரி பருவங்களில் நட்டால் அதிக மகசூல் கிடைக்கும். | 8 முதல் 12 மாதங்கள். | 9 முதல் 12 மாதங்கள் | அடியுரமாக 25 கிலோதொழு எரு, 1.25 கிலோ 6:6:12 கலப்பு உரம் இடவும். நட்ட 2 மாதங்களுக்குப் பிறகு 1.25 கிலோ கலப்பு உரத்தை மேலுரமாக இடவும். | 24 முதல் 32 கிலோ. | மலவெள்ளா, ஆனைக்கொம்பன், எச். 226, எச். 165, எஸ். 2, எஸ். 5, எம். 4. |
| 30 | முருங்கை | வீட்டின் பின்புறத்தில், வேலியோரத் நடலாம். | கிளையின் துண்டுகளை நடவேண்டும் | ... | ... | ஜூலை-ஆகஸ்ட் | நட்ட6 முதல் 7 மாதத்தில் காய்கள் பறிக்கலாம். | பல்லாண்டுகளுக்குப் பயன்தரும். | முதலாண்டில்70 காய்களும், 2 ஆண்டுகளுக்குப் பிறகு 500 காய்களும் கிடைக்கும். | ... | ஜாப்னு முருங்கை. |





# மூன்றாவது சம்பளக்குழு நியமனம்

தமிழ்நாடு அரசு அலுவலர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் கல்விக் கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியவர்களின் தற்போதைய சம்பளம், படிகள், ஓய்வுக் கால நன்மைகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பது குறித்துப் பரிசீலனை செய்வதற்காகக் சம்பளக் குழு அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

இக்குழுவில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிப்பர் :

**நீதிபதி திரு ஆர். சதாசிவம்,** தமிழ் நாடு உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி—தலைவர்.

**திரு எம். ஜி. ராஜாராம், ஐ. ஏ. எஸ்.,** தமிழ் நாடு அரசின் வருவாய்த் துறை வாரியத்தின் முன்னாள் முதல்உறுப்பினர்—உறுப்பினர்.

**திரு எஸ். சீனிவாசன், ஐ. ஏ. எஸ்.** தமிழ் நாடு அரசின் தற்போதைய இணைச் செயலாளர்—உறுப்பினர்—செயலாளர்.

இக்குழு கவனிக்க வேண்டிய பணிகள் வருமாறு:—

(அ) நம் மாநில அரசு விதி இயற்றும் அதிகாரத்தின் கீழ் பணியாற்றும் எல்லா வகையான அலுவலர்களின் தற்போதைய வெவ்வேறு சம்பள வீதங்கள், அகவிலைப்படி, ஏனைய ஈட்டுப்படிகள், சலுகைகள், ஓய்வுகால நன்மைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, சம்பள வீதங்களைச் சீரமைக்கவும் எளிதாக்கவும் அவசியமான, நடைமுறையில் செயல்படுத்தத் தக்க மாற்றங்களைப் பரிந்துரை செய்யும். நிகரான பழைய சம்பள வீதங்களிலுள்ள அலுவலர்களைப் புதிய சம்பள வீதங்களில் பொருத்துவதற்கு ஏற்புடைய முறையையும் பரிந்துரை செய்யும்.

(ஆ) சம்பள வீதங்களை முன்னர் மாற்றியமைத்ததால் முரண்பாடுகள் எவையேனும் ஏற்பட்டிருப்பின் அவற்றை ஆராய்ந்து, அந்த முரண்பாடுகளைப் போக்குவதற்குப் பொருத்தமான பரிந்துரைகளைச் செய்யும்.

(இ) தனது பரிந்துரைகளினால் உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், மானியம் பெறும் கல்விக்கூடங்களிலுள்ள பிற பணியாளர்கள் ஆகியவர்களின் ஊதியங்களில் ஏற்படும் விளைவுகளை இக்குழு பரிசீலிக்கும். பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரை செய்த சம்பள விகிதங்களினால் பயனடையும் பல்கலைக் கழக ஆசிரியர்கள், அரசுக் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆகியவர்கள் இக்குழுவின் பரிசீலனைக்கு உட்படமாட்டார்கள்.

(ஈ) தமிழ்நாடு இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரைகளைச் செயற்படுத்திய பின்னர் கூடுதல் அகவிலைப்படி, இடைக்கால நிவாரணம் ஆகிய வகைகளில் அரசு அளித்துள்ள ஊதிய உயர்வுகளையும், ஏனைய சலுகைகளையும் குழு கருத்தில் கொள்ளும்.

(உ) அரசு அலுவலர்களுக்குக் கிடைக்கிற சுகாதார வசதிகள், குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகள், வீட்டு வசதி, சிக்கனத்தை ஊக்குவிப்பதையும், சமூகப் பாதுகாப்பையும் முன்னிட்ட திட்டங்கள் குறித்துத் தக்க பரிந்துரைகளைக் குழு செய்யும்.

(ஊ) குழு தனது பரிந்துரைகளைச் செய்கையில், நம் மாநிலத்திலும் நாட்டிலுள்ள வரலாற்றுப் பின்னணி, பொருளாதார நிலைமை, பரிந்துரைகளால் ஏற்படக் கூடிய நிதிச் செலவு, பொதுவாகத் திட்டத்திற்காகவும், திட்டத்தின் கீழ் வராத ஏனைய இன்றியமையாச் செலவுகள், குறிப்பாக, ஐந்தாவது, ஆறாவது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இம் மாநிலத்திற்கு வேண்டியிருக்கும் நிதி வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்.

(எ) இக் குழு தனது பணியைச் செய்யுங்கால், மாநில அரசு கேட்டுக் கொள்ளக்கூடிய பிறவற்றைக் குறித்தும் பரிந்துரை செய்யும்.

சாட்சிகளை விசாரிப்பதற்காகப் பொருத்தமான நடைமுறைகளைக் குழு வகுத்துக் கொள்ளும். அவசியமான தகவலையும், சாட்சியத்தையும் குழு கேட்டுப் பெறலாம். குழு கேட்கும் அவசியமான தகவல்களை அரசுத் துறைகள் கொடுக்க வேண்டும். முறையீடுகளைச் செய்து கொள்ளச் சம்பந்தப்பட்டவர்களுக்கு முழு வாய்ப்பு அளித்த பின்னர், பொது மக்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளில் ஆசிரியர்கள் உட்பட அரசு அலுவலர்களின் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் ஆகியவர்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளைக் குழு கருத்தில் கொள்ளும்.

இக்குழு சாதாரணமாகச் சென்னை நகரில் அலுவல் பார்க்கும். அவசியமான அளவுக்கு இம்மாநிலத்திற்குள் சுற்றுப் பயணம்செய்யும்.

இயன்ற விரைவில் இக் குழு தனது அலுவல்களை மேற்கொண்டு அறிக்கையை அளிக்க வேண்டுமென்பது அரசின் விருப்பம் ஆகும்.

## (1) 10+2+3 கல்வி முறை



தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி 11 ஆண்டு, கல்லூரிகளில் புகுமுக வகுப்பு ஓராண்டு, பட்டப் படிப்பு 3 ஆண்டு என்ற கல்வி முறை முன்னர் இருந்தது. 1964—66 கோத்தாரி கல்விக் குழு, இந்தியா முழுவதும் 10 ஆண்டு பள்ளிக் கல்வி, பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் 2 ஆண்டு உயர் செகண்டரி வகுப்பு, 3 ஆண்டு பட்டப் படிப்பு என்ற—ஒரே சீரான கல்வி முறையைக் கொண்டு வர வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. 1968 செப்டம்பரில் "தேசியக் கல்விக் கொள்கை" என்ற பெயரில் நாடாளுமன்றம் நிறைவேற்றிய தீர்மானமும் அக்கல்வி முறையை ஏற்கலாமெனப் பரிந்துரை செய்தது. தமிழ்நாட்டில் "11+1+3" கல்வி முறையை மாற்றி 10+2+3 என்ற முறையைக் கொணர்வது பொருத்தமானதா என்பது குறித்து பரிந்துரைக்க 1975 சனவரியில் அரசு, குழு ஒன்றை அமைத்தது. 10+2+3 கல்வி முறையைக் கொண்டு வரப் பரிந்துரைத்து அக்குழு தனது அறிக்கையை 1975 நவம்பர் திங்களில் கொடுத்தது.



பத்தாண்டு பள்ளிப் படிப்பு அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்ட தரம் உயர்த்தப்பட்ட பாடத் திட்டங்களும், அப்பாடத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட பாடப் புத்தகங்களும் 1972—73-ஆம் ஆண்டிலிருந்தே படிப்படியாகக் கொண்டு வரப்பட்டு, 1976—77-ஆம் ஆண்டுடன் 1—10 வகுப்புகளில் அமலுக்கு வந்து விட்டன.



(I) 1977—78-ஆம் ஆண்டில் 11-ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்கள் 1975—76-ஆம் ஆண்டிலிருந்துதான் மேற்சொன்ன புதிய பாடத் திட்டத்தின்படி பயிலத் தொடங்கினர். 1977 மார்ச் திங்களில் நடைபெறும் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவது அவர்களுக்குக் கடினமாக இருக்கும். எனவே, அவர்கள் 1978 மார்ச் திங்களில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதலாமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. புதிய பாடத் திட்டத்தில் 9—10 வகுப்புக்குள்ள பாடங்களை அவர்கள் 9—11 வகுப்புகளில் மூன்றாண்டுகளில் பயில்வர். அவர்கள் 1978—79-ஆம் ஆண்டில் புகுமுக வகுப்பில் படித்து, 1979 ஏப்ரலில் புகுமுக வகுப்புத் தேர்வு எழுதலாம். அவர்கள்தான் ஓராண்டு புகுமுக வகுப்பின் கடைசித் தொகுதியினராவர்.

(II) 1977—78-ஆம் ஆண்டில் 10வது வகுப்பில் படிக்கும் மாணவர்கள், கீழ் வகுப்புகளிலிருந்தே புதிய பாடத் திட்டத்தின்படி பயில்கின்றனராதலால் அவர்கள் 1978 மார்ச் திங்களில் பத்தாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதலாம். இவ்வாறாக 1978 மார்ச் திங்களில் இரு தொகுதி மாணவர்கள் (ஒரு தொகுதியினர் 11 ஆண்டுப் பள்ளிப் படிப்புக்குப் பின்னரும், மற்றொரு தொகுதியினர் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்புக்குப் பின்னரும்) எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவார்கள். 1978 மார்ச் திங்களில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதும் பத்தாண்டுப் பள்ளிப் படிப்பின் முதல் தொகுதியினர் 1978—80ல் உயர் செகண்டரி கல்வி பயின்று, 1980 மார்ச் திங்களில் உயர் செகண்டரி கல்வியின் இறுதித் தேர்வை எழுதலாம்.

பத்தாண்டுப் பள்ளிக் கல்வி 5+3+2 ஆண்டுகளாகப் பிரிக்கப்படும். அதாவது, புதிய முறையின் கீழ் தொடக்கப் பள்ளி 1—5 வகுப்புகளையும், உயர் தொடக்கப் பள்ளி 1—8 அல்லது 6—8 வகுப்புகளையும், உயர்நிலைப் பள்ளிகள் 1—10, 6—10 அல்லது 9—10 வகுப்புகளையும் கொண்டிருக்கும் என அரசு முடிவு செய்து அறிவித்துள்ளது. உயர் நிலைப் பள்ளிகளிலும் சரி, உயர் தொடக்கப் பள்ளிகளிலும் சரி, எட்டாம் வகுப்பில் தற்போது உள்ள ஆசிரியர்களைக் காட்டிலும் அதிகக் கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களைப் போடப் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

உயர் செகண்டரிக் கல்விக் குழு 1976 ஜூலையில் பள்ளிக் கல்வி இயக்குநரது தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. இது 10+2+3 என்ற கல்வி முறையின் +2 ஆண்டுக் கல்விக்கான பொறுப்பை ஏற்கும். +2 ஆண்டுக் கல்விக்குப் பாடத் திட்டங்களை வகுப்பதற்காக 1976 செப்டம்பரில் வல்லுநர் குழுக்களும் அமைக்கப்பட்டன. இக் குழுக்கள் தயாரித்த பாடத் திட்ட வரைவுகள் கல்வி நிபுணர்கள், பொது மக்கள் ஆகியோரது கருத்தினை அறிவதற்காக 1977 மார்ச்—ஏப்ரல் திங்கள்களில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. வரும் யோசனைகளை ஆய்வு செய்த பின்னர் பாடத் திட்டங்களின் இறுதி வடிவம் வெளியிடப்படும். அதன் பின்னர், 2 ஆண்டுக் கல்விக்கான பாடப் புத்தகங்களைத் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும். புதிய கல்வி முறைக்கான பாடத் திட்டங்களில் ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளித்திட 1976—77-ஆம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் செலவில் பெரும் அளவிலான

பயிற்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

புதிய கல்வி முறையின் +2 ஆண்டுக் கல்வியைக் கொண்டு வருவது தொடர்பான பிற பிரச்சினைகள் குறித்து கவனமாக முடிவுகளை எடுக்க வேண்டும். இதற்காகப் பள்ளிக் கல்வி இயக்குநரின் கீழ் இணை இயக்குநர் ஒருவர், துணை இயக்குநர்கள் இருவர், தல அதிகாரிகள் இருவர், புள்ளி விவர அதிகாரி ஒருவர் ஆகியோரடங்கிய சிறப்புப் பணியாளர்கள் விரிவான ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் நடத்தி வருகின்றனர். கல்விச் செயலாளர், நிதிச் செயலாளர், கல்வி இயக்குநர்கள் ஆகியோர் அடங்கிய வழிபடுத்துங் குழு ஒன்றின் ஆணையின்கீழ் இப்பணியாளர்கள் செயல்படுகின்றனர். உயர் செகண்டரி கல்வி தொழில் சார்ந்ததாகவும், வேலை வாய்ப்புக்கு வகை செய்வதாகவும் இருக்க வேண்டுமென்பது புதிய ஆண்டு வரம்பின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றாகும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள வேலை வாய்ப்பு வசதிகள் விரிவாகக் கணக்கெடுக்கப்படும். 1977—78-ஆம் ஆண்டின் புதிய ஆண்டு வரம்புக்காக ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



பள்ளிகளிலேயே +2 ஆண்டுக் கல்வியைக் கொண்டு வருவதே கல்வித் தரத்திற்கு உகந்தது என்பது இவ்வரசின் கருத்து. ஆனால், இதற்குக் கணிசமான அளவுக்குக் கூடுதல் செலவாகும். ஏனென்றால் பல பள்ளிகளில் +2 ஆண்டுக் கல்விக்குத் தேவைப்படும் வசதிகள் இல்லை. புதிய கல்வி முறையைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசின் நிதியுதவி கிட்டுவது குறித்து மைய அரசிடமிருந்து இதுவரை தகவல் எதுவும் இல்லை. இச்சூழ்நிலையில் தற்காலிகமாக 1978—79-ஆம் ஆண்டிலிருந்து கல்லூரிகளில் சிலவற்றிலும் உயர் செகண்டரி கல்வி அளிக்க வகை செய்யலாமெனக் கருதப்படுகிறது. ஆனால் அக்கல்லூரிகளில் சிலவற்றிலும் அவ்வகுப்பு தொடங்கப்பட்ட போதிலும், அது கல்லூரிக் கல்வியைச் சார்ந்ததாகவோ, பல்கலைக் கழகங்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாகவோ இராது. 1978—79லிருந்து எத்தனை பள்ளிகளிலும், எத்தனை கல்லூரிகளிலும் உயர் செகண்டரி வகுப்புகள்தொடங்கலாமென்பது குறித்து விரைவில் முடிவு செய்து அறிவிக்கப்படும். 1978—79-ஆம் ஆண்டில் +2 ஆண்டுக் கல்வி தொடங்குவதற்கு முன்னர், +2 ஆண்டுக் கல்வியில் அளிக்கக்கூடிய தொழில் கல்விப் பயிற்சிகள் (அவற்றைத் தொடங்கும் இடங்கள்), பயிற்று மொழி, ஆசிரியர்களுடைய தகுதிகள், சம்பள வீதங்கள், தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் முதலியவை பற்றிய முடிவுகளை உரிய நேரத்தில் அரசு அறிவிக்கும்.

தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978—79லிருந்து 11-ஆம் வகுப்பு நீங்கிவிடும் காரணத்தால் சுமார் 7,000 பி.டி. ஆசிரியர்கள் பாதிக்கப்படலாம். இவர்களில் உயர் செகண்டரி கல்விப் பணியாளருக்குவரையறுக்கப்படும் தகுதிகளைப் பெற்றுள்ளவர்களை அக்கல்வி பயிற்றுவதற்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனையோரைப் பொறுத்த மட்டிலும் எவரும் வேலையிழக்காதபடி அரசு பார்த்துக் கொள்ளும். ஆசிரியர், மாணவர் விகிதம் அனுமதிக்குமாயின் அந்தந்தப் பள்ளிகளில் உள்ள 8—10 வகுப்புகளுக்கு 11—ஆம்வகுப்பு பி.டி. ஆசிரியர் பதவிகள் மாற்றப்படும். அல்லது ஆசிரியர்—மாணவர் விகிதப்படி கூடுதல் ஆசிரியர்கள் தேவைப்படும் பிற பள்ளிகளுக்கு அப்பதவிகள் மாற்றப்படும்.

## பள்ளிக் கல்வி

கல்விச் செலவில் பெரும் பகுதி பள்ளிக் கல்விக்குத்தான் ஆகிறது. 1977—78-ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூபாய் 160 கோடியில், பள்ளிக் கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகை சுமார் ரூபாய் 130 கோடியாகும்.

1977—78-ஆம் ஆண்டில் 700 இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்த்து 200 உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகளும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு 200 முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் பதவிகளும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டு உள்ளன. உயர் தொடக்கப் பள்ளிகளில் உள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பதவிகளுள் 200ஐ, 1977—78லிருந்து முழு நேரப் பதவிகளாகத் தரம் உயர்த்தப்படும். 100 உயர் நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் ஆங்கிலப் பயிற்று மொழிப்பிரிவுகள் தொடங்க 1977—78-ஆம் ஆண்டில் கூடுதலாக 100இடைநிலை ஆசிரியர் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

### இலவசப்புத்தகங்கள் வழங்குதல் :

1-3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும் சிலேட்டும்; 2, 3 வகுப்புகளில் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இதற்காகப் பாடநூல் நிறுவனம் ஆண்டு தோறும் ரூ. 25 இலட்சம் செலவிடுகிறது. முதல் வகுப்பு மாணவர்கட்குச் சிலேட்டுகள் இலவசமாக வழங்கும் வகையில் 1977-1978-இல் ரூ. 3 இலட்சத்தை மாநில அரசு செலவிடும்.



## (1) தொடக்கக் கல்வி

மாணவர் சேர்க்கை.

6—11 வயதுத் தொகுதிச் சிறார்களில் 91.7 விழுக்காட்டினரும், 11—14 வயதுத் தொகுதிச் சிறாரில் 54.4 விழுக்காட்டினரும் இதுவரை பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1977—78-ஆம் ஆண்டில் இவ்வயதுத் தொகுதிகளின் கீழ் சுமார் 2 இலட்சம் மாணவ மாணவியர் கூடுதலாகச் சேர்க்கப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1976—77-ஆம் ஆண்டில் இருந்த 33,036 தொடக்கப் பள்ளிகளில் படித்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 63.13 இலட்சமாகும். வேலை பார்த்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,78,879 ஆகும். ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 36 ஆகும்.

1977—78-ஆம் ஆண்டில், வீட்டிலிருந்தே பயின்றவர்களும் ஏற்பளிக்கப்படாத பள்ளிகளில் கல்வி பயின்றவர்களும் 8-ஆம் வகுப்பு வரை பள்ளியில் நேரடியாகச் சேரலாம் என்று அனுமதிக்கப்பட்டுள்ளது. (முன்னர் 6-ஆம் வகுப்பு வரைதான் அவ்வாறு சேரலாம் என்று இருந்தது).





தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையை மேம்படுத்தும் பொருட்டு பாடத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அறிவியல் சாதனங்கள் வாங்குதற் பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முந்நூறு ரூபாயும், ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இதன் மூலம் 12,620 தொடக்கப் பள்ளிகளும், 3 ˚80 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1977—78ல் 150 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு இவ்வுதவித் தொகை கொடுக்கப்படும்.

## நண்பகல் உணவு

அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படிச் செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப் பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய—மிகவும் ஏழைக் குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க—உயர் தொடக்க நிலைப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறக்தாழ 19.80 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத் துறை நடத்தி வரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.60 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1977—78-ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக ஏறத்தாழ 4.5 கோடி ரூபாய் செலவிடப்படும். நண்பகல் உணவுத் திட்டத்திற்காக மாநில அரசு ஒரு மாணவனுக்கு நாளைக்கு 10 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு மானியம் அளிக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் ஒரு மாணவனுக்கு நாளைக்கு 5 காசு வீதம் ஆண்டுக்கு 200 நாட்களுக்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது. ''கேர்'' நிறுவனத்திலிருந்து இலவசமாக ஆண்டுதோறும் கிட்டும் சுமார் 20,000 டன் உணவை தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் பயன்படுத்துகிறது. மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத் துறை, சமுதாய நலத் துறை, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆகியவை இளஞ் சிறார் ஊட்டச் சத்துணவுத் திட்டத்துக்காக 'கேர்' நிறுவனத்திடமிருந்து இலவச உணவு பெறுகின்றன. தொழிலாளர் நலத் துறை தொழிலாளர் ஊட்டச் சத்து உணவுத் திட்டத்துக்காக அவ்வாறு இலவச உணவு பெறுகிறது. இவ்வாறு இந்நான்கு துறைகள் பயன்படுத்தும் 'கேர்' இலவச உணவையும் (ஆண்டுக்குச் சுமார் 10,000 டன்) தொடக்கப் பள்ளி நண்பகல் உணவுக்கான 20,000 டன் உணவுடன் சேர்ந்து மாநிலத்தின் பல்வேறு மையங்களுக்கும் அனுப்பும் வேலையைப் பள்ளிக் கல்வித் துறையே செய்து வருகிறது.

நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப் பெற்றுச் சுற்றுப் புறங்களிலுள்ள பள்ளிகட்கு, மூடப்பட்ட வண்டிகளில் உணவு எடுத்துச் சென்று வழங்கும் மையச் சமையற் கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டங்களில் இயங்கிவரும் 97 சமையற் கூடங்களும், ''கேர்'' நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம்மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற் கூடங்களிலிருந்து பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 டெம்போ உந்து வண்டிகளையும் ''கேர்'' நிறுவனம் வழங்கியுள்ளது. இந்த பெட்ரோல் வண்டிகள் பயன்படாத வகையில் பழுதாகும்போது புதிதாக வாங்கும் வண்டிகளை டீசல் வண்டிகளாக வாங்கினால் செலவு குறையும். ஆகையால் அவ்வாறே படிப்படியாகச் செய்யப்பட்டு வருகிறது. 1977—78ல், 8 டீசல் வண்டிகள் அவ்வாறு வாங்கப்படும். இவ்வண்டிகளையும், சமையல் சாதனங்களையும் பழுது பார்க்க 'கேர்'' நிறுவனத்தின் உதவியுடன் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் ஒரு பணிமனை செயல்பட்டு வருகிறது.

நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சீராகச் சேமித்து வைப்பதற்காக ''கேர்'' நிறுவன உதவியுடன் ஏறத்தாழ ரூ. 30 இலட்சம் செலவில் 8 வட்டாரக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.



## (2) உயர்நிலைப் பள்ளிக் கல்வி



1976—77ல் தமிழ்நாட்டில் 14—17 வயதுத் தொகுதியினர் 23.46 இலட்சம் பேர்கள் இருந்தனர். இவர்களுள் 34.1 விழுக்காடாகிய 8.02 இலட்சம் பேர் உயர்நிலைப்பள்ளிகளில் 9—11 வகுப்புகளில் பயின்று வந்தனர். 1976—77ல் இம்மாநிலத்தில் இருந்த 3,020 உயர்நிலைப் பள்ளிகளில் 72,800 ஆசிரியர்களும், 17.99 இலட்சம் மாணவர்களும் இருந்தனர். 1977—78-ஆம் ஆண்டில் 26 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டன. (அரசு பள்ளிகள் 18. தனியார் பள்ளிகள் 8.)





புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஆறும் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித் தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கும் நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு அரசு உயர்நிலைப் பள்ளிக்கும் ரூ. 55,000 செலவிடப்படுகிறது. (ஆய்வுக் கூட கட்டடத்திற்காக ரூபாய் 37,000ம் கருவிகளுக்காக ரூபாய் 18,000ம்), தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றும் பெறும் மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இவற்றைப் பள்ளிக் கல்வித் துறை இயக்குநரே வாங்கி வழங்குகிருர். எஞ்சிய ரூ. 22,200 ஆய்வுக்கூட கட்டடத்திற்காகும். கட்டடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 22,200, இதில் எது குறைவோ, அது என்ற அடிப்படையில் ஆய்வுக்கூட கட்டட மானியம் வழங்கப்படுகிறது. 1976—77 முடிய 892 உயர்நிலைப் பள்ளிகள் ஆய்வுக் கூட நிதியுதவி பெற்றிருந்தன (1976—77-ஆம் ஆண்டில் பெற்ற 14 பள்ளிகள் உட்பட) 1977—78-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்குப் பெருந்தொகையான ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தொகையைக் கொண்டு 50 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.







இதுவரையில் அறிவியல் ஆய்வுக் கூட வசதியினைப் பெருத கிராமப் புற உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும் வண்ணம் தற்போது 36 நடமாடும் அறிவியல் ஆய்வுக் கூட வண்டிகள் உள்ளன. 1977—78-ஆம் ஆண்டில் மேலும் 6 வண்டிகள் வாங்கப்படும். இதஞல் தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 42 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆய்வுக் கூட வண்டி பணி புரியும் நிலை ஏற்படும்.

உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொருத்தமான நூலகப் புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. 1976—77ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சம் மட்டும் இதற்குச் செலவிடப்பட்டது. 1977—78-ஆம் ஆண்டில் இப்பணிக்கான நிதி ஒதுக்கம் ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

1977—78-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் தேர்ந்தெடுத்த ஐந்து பள்ளிகளுக்கு ஒலி—ஒளிக் கல்வி வசதியைப் பெருக்கும் வகையில் பள்ளிக்கு ஒரு 16 மி.மி. திரைப்படம் காட்டும் கருவி வழங்கப்படும். கல்வி திரைப்படங்களையும் துண்டுப் படங்களையும் வாங்கி மாநிலத் திரைப்பட சேமிப்பு நிலையத்தை வளப்படுத்த ரூ. 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையிலும் அதன் அண்மையிலும் உள்ள பள்ளிகள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் கல்வி ஒலிபரப்பின் மூலம் பயன் பெறுகின்றன.

### உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்

அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடப் பணிகளுக்காக 1977—78ல் ரூ. 13 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி மற்றும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டட மானியம் தர ரூ. 7 இலட்சம் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



## கல்லூரிக் கல்வி

1976—77-ஆம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்காகக் கல்வி மானியத்தின் கீழ் ஒதுக்கப்பட்டு இருந்த தொகை ரூ. 11 கோடி. அது 1977—78-ஆம் ஆண்டில், ரூ. 20 கோடியாக உயர்ந்துள்ளது. பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்களை ஏற்றமையும், உதவி பெறும் கல்லூரிகளுக்கு மானியம் அளிப்பதற்குப் புதிய முறையினைப் புகுத்தியமையுமே இப்பெரும் உயர்வுக்குக் காரணங்களாகும். தமிழ்நாட்டில் 1947-ஆம் ஆண்டில் 24 ஆக இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1976—77-ஆம் ஆண்டில் 189 ஆக உயர்ந்துள்ளது. 1947-ஆம் ஆண்டில் கல்லூரிகளில் படித்த மாணவர்களின் எண்ணிக்கை 17,000 என இருந்தது; இது 1976—77-ஆம் ஆண்டில் 2,03,000 ஆக உயர்ந்துள்ளது.



கல்வித் துறைச் செயலர், சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் நால்வர், பல்கலைக் கழக மானியக் குழுவின் சார்பாளர் இருவர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவினை 1976-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அரசு அமைத்தது. குழுவின் அறிக்கை வந்ததும் புதிய பல்கலைக் கழகங்களை அமைப்பதற்குரிய மேல் நடவடிக்கைகளை அரசு விரைவில் மேற்கொள்ளும்.

காந்தி கிராமத்திலுள்ள ஊரக உயர்நிலை நிலையம் 1976—77-ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக் கழகத் தரம் வாய்ந்த நிறுவனமாக ஏற்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 189 கல்லூரிகளில், 51 கல்லூரிகள் அரசுக் கல்லூரிகள்; எஞ்சிய 138 கல்லூரிகள் உதவி பெறுவனவாகும். 1977—78-ஆம் ஆண்டிற்குக் கல்லூரிக் கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடான



### புதிய பல்கலைக் கழகங்கள்

மொத்தமுள்ள 189 கலை, அறிவியற் கல்லூரிகளில் 110 கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடனும், 78 மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்துள்ளன. பல்கலைக் கழகம் ஒன்றுடன் 30 அல்லது 40க்கு மேற்பட்ட கல்லூரிகள் இணைப்புப் பெற்றிருத்தல் கூடாது என பல்கலைக் கழகங்கள் பற்றிய கஜேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்து உள்ளது. எனவே, இம் மாநிலத்தில் மேலும் இரண்டு அல்லது மேற்பட்ட புதிய பல்கலைக் கழகங்களை நிறுவவேண்டுவது தேவையானதெனத் தெளிவுற விளங்குகின்றது.

திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரண்டு புதிய பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கான இவ்வரசின் கருத்துரு
வினைக் கருதிய பல்கலைக் கழக மானியக் குழு
வானது அவ்விடங்களிலுள்ள பல்கலைக் கழகப்
பட்ட மேல்படிப்பு மையங்களின் வளர்ச்சி
நிலையைக் கணக்கிட்டு அம்மையங்களைத் தன்
னாட்சி நிலையங்களாக வளர்ச்சியுறச் செய்வதற்
கான வாய்ப்புகளை ஆராய்வதற்கெனக் குழு
ஒன்றினை அமைக்குமாறு இவ்வரசுக்குயோசனை
கள் தெரிவித்தது. அதற்கிணங்க, பொருத்த
மான பரிந்துரைகளை அரசு அளிப்பதற்காக



ரூ. 20 கோடியில், தனியார் கல்லூரிகளுக்கு மட்டும் சுமார் ரூ. 10 கோடி மானியமாக வழங்கப்படும். கல்லூரி மாணவர் தொகையில் பெரும் பகுதியினர் அதாவது 1.47 இலட்சம் பேர் தனியார் கல்லூரிகளில் பயில்கின்றனர். அரசுக் கல்லூரிகளில் 56,000 பேர் பயில்கின்றனர். பெரும்பாலான தனியார் கல்லூரிகளைவிட அரசுக் கல்லூரிகள் குறைவான கட்டணங்களையே விதிக்கின்றன. தனியார் கல்லூரிகளின் அதிகக் கல்விச் செலவை ஏற்க இயலாதவர்களும் சமுதாயத்தின் நலிந்த பகுதியினரைச் சார்ந்தவர்களும் ஆன மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகள் குறைந்த கட்டணத்தில் நல்ல கல்வியை அளிக்கின்றன.

## கல்லூரி மாணவர்களுக்கு அரசு அளிக்கும் உதவித்தொகை

இம்மாநிலத்திலமைந்த கல்லூரிகளில் மாணவர் ஒருவருக்காகும் செலவினைவிட மாணவரிடமிருந்து வசூலிக்கும் கட்டண வருவாய் மிகவும் குறைவே எனபதைப் பின்வரும் புள்ளி விவரம் காட்டும். அரசு அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவித் தொகை அளிக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகும்.

| | புகுமுக வகுப்பு | | பட்டப் படிப்பு | | பட்ட மேற்படிப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | கலை | அறிவியல் | கலை | அறிவியல் | கலை | அறிவியல் |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்காக அரசுக்கு ஆகும் செலவு ரூ.... | 380 | 500 | 410 | 600 | 775 | 1120 |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவர் தரும் கட்டணம் ரூபாய்........ | [ஒன்றுமில்லை] | | 183 | 183 | அரசினர் கல்லூரிகளில் ரூபாய். 250/- தனியார் கல்லூரிகளில் ரூ. 300-லிருந்து ரூ. 360-வரை | |

### ல்வித் தர மேம்பாடு

ஐந்தாம் திட்டக் காலத்தில் அரசுக் கல்லூரிகளில் கல்வித் தர மேம்பாட்டுக்கே முதன்மை அளிக்கப்படுகிறது. 1977—78-ஆம் ஆண்டிலிருந்தே அரசுக் கல்லூரிகளில் கூடுதலாக அறிவியல் பட்டப் படிப்புகள் நான்கும், கலைப் பட்டப் படிப்பு ஒன்றும், வணிகவியல் பட்டப்படிப்பு ஒன்றும், அறிவியலில் பட்ட மேற்படிப்பு ஒன்றும் துவக்குவதற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வுக்கூட வசதிகள் பெருக்கப்படும். இதற்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் செலவிடப்படும். அதிக விலையுள்ள பாடப் புத்தகங்களை வாங்க இயலாத மாணவர்கள் பயன்படுத்திட தமிழ்ப் புத்தகங்கள் உள்பட பாடப் புத்தகங்களும், பொது அறிவிற்கான புத்தகங்களும் கொண்ட பாடப் புத்தக நூலகங்களை அமைப்பதற்கென 1977—78-ஆம் ஆண்டில் ரூ. 1 இலட்சம் செலவிடப்படும். அரசினர் கல்லூரிகளில், மாணவர்கள் வசதிக்காக உணவருந்தும் இடம், சிற்றுண்டிச்சாலை, மிதி வண்டி நிறுத்துமிடம் ஆகியவற்றை அமைக்கவும் விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றை வாங்குவதற்காகவும் 1977—78-ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் செலவிடப்படும்.

அரசுக் கல்லூரி ஆசிரியர்களுடைய கல்வித் திறனை, தகுதியினை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் செயல்படுகின்றன. குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சி செய்து டாக்டர் (பி.எச்டி) பட்டம் பெறுவதற்காக பேராசிரியர்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர். இதற்கு 1977—78-ஆம் ஆண்டில் ரூ. 2.28 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நிரந்தரமாகப் பணிபுரியும் பேராசிரியர்களைத் தவிர வெளியிலிருந்தும் சில பேராசிரியர்கள் விரிவுரையாற்ற அழைக்கப்படுகின்றனர். தமிழ் மொழி வாயிலாகக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதற்காக இதுவரை 2,915 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக 1977—78-ஆம் ஆண்டில் ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

(தொடரும்)

### பல்கலைக் கழக மானியக் குழுச் சம்பள வீதங்கள்

1976-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள்—அனைத்து அரசு—தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குத் திருத்திய பல்கலைக் கழக மானியக்குழு சம்பள வீதங்களை நடைமுறைப் படுத்துவதற்கென்ற முடிவினை அரசு அறிவித்துள்ளது; ஆனால் பணப்பயன் 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் நாள் முதலாக அளிக்கப்படும். இதனால் அதிகப்படியாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 7. கோடிக்கு மேல் அரசுக்குச் செலவு ஏற்படும். இம்முடிவினைச் செயல்படுத்துவதற்கான விவரங்கள் அடங்கிய ஆணையை அரசு விரைவில் வெளியிடும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை"

"காந்தி அடிகள்"



"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"



# தேசத் தந்தையை நினைவு கொள்வோம்

"குடிப்பழக்கம் ஒரு சமூகத்தீமை அது மனிதனை மிருகத்தின் நிலைக்குத்தாழ்த்தி விடுகிறது. அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது நம்கடமை"

—காந்தியடிகள்




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தமிழரசு

1-9-1977
50 காசு





# தீண்டாமை ஒழிப்பு

"பிறப்பினால் தீண்டத்தகாதவன்
என்று கருதப்படும் கடைசி
மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப்
போவதில்லை"

"காந்தி அடிகள்"

"ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே"

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?"

"மகாகவி பாரதியார்"



R.R. 158/53 "P"


# தமிழரசு

1—9—1977

மலர் : 8 இதழ் : 5


இந்த இதழில்


பக்க எண்

இன்னுயிர் ஈந்தும் இந்தியச் சுதந்திரம் காப்போம்! .. 2

பெருந்தலைவருக்குக் குடியரசுத் தலைவர் சூட்டிய புகழ்மாலை ! .. 5

நிலமற்றவர்களுக்கு நிலம் ! .. 9

தமிழகத்தில் உணவு நிலைமை .. 10

காலத்திற்கு ஏற்ற வகையில் பாசன வசதிகளைச் சீரமைப்போம் ! .. 18

படமும் செய்தியும் .. 24

மக்களின் உடல் நலம் காப்போம் ! .. 28

தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி (சென்ற இதழ்த் தொடர்ச்சி) .. 31

ஊரக வளர்ச்சிக்கு உதவிடுவோம் ! .. 33

அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப் படும் ஓய்வூதியங்கள் .. 41

தென்னையில் தோன்றும் 'தஞ்சாவூர் வாடல் நோய் !' .. 44

கால் நடைகளின் இரு முக்கிய நோய் ! . 46

தொழில்களுக்குத் தகவல் தொடர்ந்து தர வேண்டும் ! .. 48


## அடுத்த இதழ் !



பேரறிஞர் அண்ணா, அமரகவி பாரதியார் சிறப்பிதழாக மலருகிறது ! அனைவரும் படித்து மகிழ்ந்து, பாது காத்துவைக்க வேண்டிய அரிய படைப் பாக வெளிவருகிறது! உங்கள் தேவைக்கு முந்துங்கள் !

## அட்டைப்பட விளக்கம்

இந்தியாவின் 30-வது விடுதலை நாள் விழாவை முன்னிட்டு, 15-8-1977 அன்று, வரலாற்றுப் புகழ் மிக்க சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, வணக்கம் செலுத்தினர்.

# இன்னுயிர் ஈந்தும் இந்தியச் சுதந்திரம் காப்போம்!



"எனது வணக்கத்திற்கும், அன்பிற்கும் உரித்தான தமிழ் நாட்டுப் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே! செயலாளர்களே!

முப்படைத் தளபதிகளே!

முன்னுள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மற்றும் இந்த சுதந்திர விழாவில், இந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ள பெரியோர்களே, தாய்மார்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே!

"உங்கள் அனைவருக்கும் சுதந்தீர தின வாழ்த்துக்களையும், என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒரு நாடு அடிமைப் பட்டுக் கிடக்கிற மாபெரும் கொடுமையைவிட வேறு ஒரு கொடுமை உலகில் எங்கும் இருக்க முடியாது என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்தவர்களாக இருக்கிறோம். இங்கே கொடியேற்றி வைக்கிற இந்த தினத்தில்-இந்த நேரத்தில்-என் நினைவுகள் பல ஆண்டுகளுக்குப் பின்னுலே சென்று பல சுதந்திரப்போராட்ட நிகழ்ச்சிகள் என் கண் முன் தோன்றுகின்றன என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

"சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு, தன் உடைமைகளையும், சொத்து சுகங்களையும், பதவிகளையும், பட்டங்களையும் துறந்து, இந்த நாடு சுதந்திர நாடாக மிளிர வேண்டுமென்ற ஒரு போராட்டத்தில்-ஆசையில்-சுதந்தர உணர்வில்-அவர்கள் செய்த தியாகத்தை நாம் இந்த நேரத்தில் நினைவு கூரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

"இங்கே கொடியேற்றி வைக்கிற நேரத்தில், ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. ஆங்கிலேயர்கள் இந்தக் கோட்டையைச் சுற்றி தன் படைகளை வைத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்த நேரம், கோட்டையில் கொடியேற்ற முடியுமா என்ற கேள்வி-தியாகத் தொண்டர்களுக்குக்கூட உயிரைப் பணயம் வைத்தவர்களுக்குக்கூட-சந்தேகம் ஏற்பட்ட நேரம். ஒரு நாள் விடியற் காலையில் இங்கேயிருந்த வெள்ளையர்கள் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக இந்தக் கோட்டையைச் சுற்றி இருந்த வீரர்கள், அவர்களுடைய படையினர்கள் மேலே பார்த்தபோது தேசியக் கொடி பறந்து கொண்டிருந்ததைக் கண்டு திகைத்தார்கள்! யாரோ ஒரு இளைஞன் இவர்களுக்கெல்லாம் ஈடுகொடுத்து, கொஞ்சம் கூட கவலைப்படாமல் தன் உணர்வை-மக்களுடைய கருத்தை-உலகுக்கு எடுத்துக் காட்டி, இந்தக் கொடியை இங்கே ஏற்றி வைத்தார் என்பதை எண்ணி நான் திகைத்த நாள் உண்டு! இந்த நாளில் என் வணக்கத்தை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அந்த உணர்வுகள் நீடித்து நிலைக்க வேண்டுமென்பதற்காகவும், சுதந்திரம் அடைந்த ஆண்டுகளின் நினைவுகள் நம்மை எத்தனை ஆண்டுகள் முன்னுக்கு அழைத்துச் செல்கின்றன என்பதை எண்ணிப் பார்ப்பதற்கும், முன்னேற வேண்டுமென்று நினைக்கிற எல்லாரும் சமதர்ம தத்துவத்தை ஏற்று, சமத்துவ நிலையடைந்து, ஜாதி பேதமற்ற நிலையை ஏற்படுத்தி, மதமோ ஜாதியோ குறுக்கிட அனுமதிக்காமல் "எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்" என்ற நல்லுணர்வோடு இணைந்து வாழ்ந்து, ஏழை-பணக்காரன் என்ற பேதம் இன்றி, இந்த நாடு வாழவேண்டுமென்ற நம்முடைய கொள்கையை நிறைவேற்றிக் கொள்ள இன்னும் நாம் செய்யவேண்டிய கடமைகள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கிற நாளாகும் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தியாகம் செய்தவர்களுக்கு நன்றி கூறுவது நமக்குள்ள இயற்கையான ஒரு பண்பாடாகும். "நன்றி மறந்தவர்கள் அல்ல தமிழக மக்கள்" என்பதை உலகம் நன்ருகப் புரிந்து கொண்டிருக்கிறது. இந்த உலகத்தின் கண்கள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பது மட்டுமல்லாமல், '30 ஆண்டுகளுக்குள் இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிருர்களே, உலகத்திலே அதிக மக்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கிற ஒரு குடியரசு உலகத்திலே இந்தியத் துணைக் கண்டம் ஒன்றுதான் இருக்கிறது' என்று நினைத்துப் பார்க்கும்போது அவர்கள் திகைக்கிருர்கள்! பொருமை படக்கூட சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

[மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர் அவர்கள், 15-8-1977 அன்று, இந்திய சுதந்தர நாள் விழாவையொட்டி, சென்னை கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைதது ஆற்றிய உரை]

"ஒன்றை நான் தெளிவாகக் கூறிக் கொள்கிறேன். மக்கள் சக்தியை, மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிருர்கள். இந்த நாடு புரிந்து கொள்கிற ஒரு நல்ல வாய்ப்பு ஆகத்தான் சென்ற தேர்தல் நடந்தது என்பதை நான் தெளிவாகச் சொல்லிக் கொள்வேன். மக்கள் எதைச் சரியென்று கருதுகிருர்களோ அதை நிறைவேற்றித் தீர, அதை நம்புகிறவர்கள் - அவர்களால் நம்பப்படுகிறவர்கள் - எப்படிச் செயல் படவேண்டுமென்று எடுத்துக்காட்ட ஒரு நல் வாய்ப்பாக நடந்து முடிந்த தேர்தல் நமக்கு உறுதியளித்து இருக்கிறது என்பதை நினைத்து நாம் பெருமைப் படவேண்டும்.

"நம்முடைய கடமை மிகப் பெரியது. விவசாயிகள், தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட சமுகத்தைச் சார்ந்தவர்கள், மலைவாழ் பெருங்குடி மக்கள், தாய்மார்கள், ஆதரவற்ற தாய்மார்கள் இவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் வாழ்கிற நாள் என்ருே அந்த நாள்தான் மகாத்மா காந்தி அடிகள் எதிர்பார்த்த நாள் என்றும், நம்மை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணு அவர்கள் எதிர்பார்த்த நாள் என்றும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஒரு தனி அரசியல் கட்சியோ எந்த ஒரு தனிமனிதனே அந்தப் பெரும் தலைமை நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, நமக்குள் இருக்கிற கருத்து வேறுபாடுகளைக் கொள்கை வேறுபாடுகளாக ஆக்காமல், தெளிவான கருத்துக்களை நேர்மையான வழியில் தெரிவித்துக் கொள்கிற பாங்கை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை உலகத்திற்குத் தமிழக மக்களும், தமிழகச் சட்டமன்றமும் எடுத்துக் காட்டிக்கொண்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, என் வேண்டுகோள்; தமிழகத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமையை எந்தெந்த வகைகளில் செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அவைகளை நாம் ஜாதியைத் தூக்கியெறிந்து, மதத்தின் பெயரால் நாட்டைப் பிளவு படுத்துகிற தேவையற்ற நம்பிக்கைகளைத் தூக்கியெறிந்து நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து சிறப்பாக உழைத்து இந்த நாட்டுக்குப் புரிய வேண்டிய கடமையைச் செய்யவேண்டிய ஒரு உறுதியை எடுத்துக் கொள்கிற நாளாக இதை நாம் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தமிழக மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

"இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லிக் கொள்கிறேன். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் ஆக இருந்தாலும் வேறு எந்த நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும்-நாட்டுக்கு நல்லது செய்தால் அவர்களைப் போற்ற வேண்டும் என்பதை மனிதத் தன்மை உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறோம்.

"சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தச் சுதந்தரக் கொடி ஏற்றிவைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையில் இருந்தது. அந்த முறையை மாற்றவேண்டுமென்று கோரிய-போராடிய-அந்த உரிமையைப் பெற்றுத் தந்த, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. பிரதிநிதியான-முதலமைச்சராக இருக்கிற-நான் இந்தக் கொடியை ஏற்றி வைக்க, உதவி செய்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். நல்லது செய்வதைப் பாராட்டவும், தீமையை எதிர்த்துப் போராடவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பது நமக்குள்ள கடமையாகும்.

"நாட்டிலே மக்கள் வாழ்வது என்ருல், ஒரு சிறு மாளிகையில் வாழ்வது மட்டும் என்பது ஆகாது. அது நிறைவு பெருதது. மக்கள் மனத்திலே நல்ல மாற்றம் வேண்டும். கிராமத்தில் இருக்கிற



இந்தியாவின் 30-வது விடுதலைநாள் விழாவை முன்னிட்டு, சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றிவைக்க வருகைதந்த மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதை செலுத்தினர்.

மக்கள், இந்த நாட்டை முழுமையாகச் சுதந்திரம் பெற்ற நாடாக மனத்தில் நினைக்கிற அளவுக்கு, அவர்களுக்கு இன்னும் அத்தகைய வாய்ப்புக் கிடைக்கவில்லை. நகரத்தில் இருப்பவர்களுக்கு எந்தெந்த வாய்ப்புக்கள் கிடைக்கிறதோ, அவைகள் அத்தனையும் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்கவேண்டும் — கிடைக்கச் செய்வோம் என்று; அண்ணாவின் மேல்-மகாத்மாவின் மேல் ஆணை எடுத்துக் கொள்வோம்.

''இந்தச் சுதந்திரம் பெறுவதற்கு எத்தெத்த வகைகளில் துன்பத்தையும், துயரத்தையும் தாங்கிக் கொண்டார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தொடக்கத்தில் வன்முறையில் போராடினால்தான் - ஆங்கிலேயர்களுக்கு அந்த மொழிதான் புரியும்-என்று வன்முறையைத் தொடர்ந்த நாள் உண்டு. எத்தனையோ பேர் வன்முறையில் ஈடுபட்டு உயிரிழந்ததும் உண்டு. வாஞ்சிநாதன் போன்றவர்கள், வெள்ளையர்களைச் சுட்டுக்கொன்றுவிட்டு, தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டவர்களும்-தூக்குமேடை ஏறியவர்களும் உண்டு-நாடு விடுதலை பெற வேண்டுமென்ற காரணத்திற்காக.

''மகாத்மா காந்தியடிகள் வன்முறையைத் தாக்கியெறிந்துவிட்டு அறவழியில்-அஹிம்சை வழியில்-போராடி நாட்டுக்குச் சுதந்தரம் வாங்கிக் கொடுத்து, உலகத்திற்கு எடுத்துக்காட்டிய முன்மாதிரியானவர் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அமரர் அண்ணா அவர்கள் எத்தனையோ முறை சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவு கூர வேண்டும்.

''சுதந்திரம் என்பது, எதையும் யாரும் செய்யலாம் என்பதல்ல என்றும் மக்கள் நல்வாழ்வு பெறவேண்டும்; அதனை எதிர்காலத்திற்கு உதவியையும் பெறவேண்டும்; அதற்காகச் சட்டமும்; பழக்க வழக்கங்களும் அமைய வேண்டுமென உணர்கிறோம். பிறருடைய சுதந்தரத்தை மதித்து ஒவ்வொருவரும் சுதந்திரவர்த்தியாக வாழ முடியும்: நம்முடைய மற்றவர்கள் அடிமைப்பட்டவர்கள் என்றோ, சில சுகபோகத்தில் இருந்தவர்கள் இன்னும் அந்த எண்ணத்தில் இருந்தால் இந்தச் சுதந்திர நாளில் தமிழக மக்களின் சார்பாக அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று-மக்கள் மாற்றுவதற்கு முன்னால் நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள் என்று சொல்லக் கூடிய முறையில்-மக்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

''இந்தியச் சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளுக்குள் எதிரிகளால் இது கேள்விக்குறி ஆகியிருக்கிறது-ஆக்கப்பட்டிருக்கிறது - அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். காடும், மேடும், வயலும், நதியும், மக்களும் கொண்டதுதான் சுதந்திர நாடு என்பது அல்ல. மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து, பேச்சுரிமையை, எழுத்துரிமையை, எண்ணுகிற உரிமையை நிலை நாட்டினால்தான் இந்த நாடு சுதந்திர நாடு என்று குறிப்பிட முடியும் என்று உணர்ந்திருக்கிறோம். நாம் செய்கிற செயலும் இந்த நாட்டின் வாழ்விற்காக என்றும், ஆக்க வழியில் உதவி செய்து காட்டவேண்டுமே தவிர ஒருவரை அழித்து ஒருவர் வாழ்வதோ, ஒரு கொள்கையை அழித்து ஒரு கொள்கையை நிலைநாட்டவோ யாருக்கும் அந்த நிலை இங்கே ஏற்பட்டுவிடக்கூடாது என்று இந்தச் சுதந்திர நாளில் நான் சொல்லிக்கொள்வேன்.

''தாழ்த்தப்பட்ட மக்கள், மிற்படுத்தப்பட்ட மக்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், இதைப் போன்ற மலைவாழ் பகுதி மக்கள் இவர்களுக்கெல்லாம் என்றைய தினம் வாழ்வில் மறுமலர்ச்சி கிடைக்கிறதோ, வாழ்வின் உறுதி தரப்படுகிறதோ, அன்றுதான் நம்முடைய நாடு பெற்ற சுதந்திரம் முழுத் தன்மையை அடையும் நாளாக அமையும் என்பதை இங்கே சொல்லி, நாம் அனைவரும் ஜாதி பேதம் இன்றி, மத வேறுபாடின்றி இந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்ற, இந்தக் கொடிக்கு எந்த அவமானமும், தாக்குறைவும் ஏற்படாமல் காப்பதற்கு உயிரையும் ஈந்து காப்பாற்றுவோம் என்று ஆணை ஏற்றுக்கொண்டு, அதை நீங்களும் ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இப்போது நான் சொல்லும் 'இந்திய சுதந்திரம்' என்ற வார்த்தைக்குப் பின் 'வாழ்க' என்று சொல்ல வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

| (முதல்வர்) | (மக்கள்) |
| --- | --- |
| இந்திய சுதந்திரம் | வாழ்க! |
| இந்திய சுதந்திரம் | வாழ்க!! |
| இந்திய சுதந்திரம் | வாழ்க!!! |

''அண்ணா நாமம் வாழ்க.''
''வணக்கம்''.







# பெருந் தலைவருக்குக் குடியரசுத் தலைவர் சூட்டிய புகழ்மாலை!

"அயராத உழைப்பு, உயர்ந்த நிலையிலும் அடக்கமான எளிய வாழ்க்கை, எளிய மக்களை வாழ வைப்பதற்காக அயராத தொண்டு, அரசியலில் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை இவற்றுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியவர் காமராஜ்!"

"பல்கலைக் கழகப் படிப்போ, அல்லது பட்டமோ பெறாத நிலையிலும், உண்மையான உழைப்பால்—தியாகத்தால்—உயர் பதவியை எட்டிப் பிடிக்க முடியும்; உதவி நம்மை நாடிவரும் என்பதற்கு காமராஜின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டு. இந்திய ஜனநாயகத்தின் ஆணிவேரே இதுதான்!"

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில், 18-8-77 அன்று, முன்னாள் தமிழக முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து, இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் உரையாற்றுகையில், பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்குப் மேற்கூறியவாறு புகழ் மாலை சூட்டினார். மேலும் அவர் பேசுகையில், காமராஜ் அவர்களின் அருங்குணங்களைப் பின்கண்டவாறு எடுத்துக் காட்டினார்.

''தமிழகமோ, சென்னையோ எனக்குப் புதிததல்ல. படித்த காலத்திலிருந்து என் இளம் பருவமும், அரசியல் வாழ்வில் பெரும்

பகுதியும் இங்கு கழிந்தன. சென்னையில் உள்ள தெருக்கள், சந்து பொந்துகள் எல்லாம் எனக்குத் தெரியும். மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு தமிழ் நாட்டுடன் காமராஜ் மூலம் தொடர்பு இருந்தது.

''காமராஜ் என் நண்பராக— நல் ஆசானாக — வழிகாட்டியாகத் திகழ்ந்தார். நாங்கள் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொள்வது வழக்கம்.

## அரசியல் பிணைப்பு

''காமராஜுக்கும் எனக்கும் நெருங்கிய ஆழ்ந்த நட்பு இருந்தது மட்டுமல்ல, நாங்கள் இருவருமே ஒருமித்த அரசியல் வாழ்வு நடத்தியவர்கள். அவருடைய அடிச் சுவட்டைப் பின்பற்றி நடந்தவன்; நடந்து வருபவன் நான். காமராஜ் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த போது, நான் ஆந்திர மாநில காங்கிரஸ் செயலாளராக இருந்தேன். பிறகு அம்மாநிலக் காங்கிரஸ் தலைவரானேன். காமராஜ் தமிழக முதல்வராக இருந்தார்;

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்கள், 18-8-1977 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு கு. காமராஜ் அவர்களின் திரு உருவப்படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினர்.



நான் ஆந்திர முதலமைச்சராக இருந்தேன். அனைத்திந்திய காங்கிரஸ் தலைவராக அவரும் இருந்தார் நானும் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தேன். கட்சிக்காக அவர் முதலமைச்சர் பதவியை விட்டு விலகினர். நானும் அவரைத் தொடர்ந்து ஆந்திர முதலமைச்சர் பதவியை விட்டு விலகினேன். இப்படி எங்கள் இருவருடைய 35 ஆண்டு அரசியல் வாழ்வும் பின்னிப் பிணைந்தவை ஆகும்! . . .

## பிரதமர் பதவியை மறுத்தவர் காமராஜ் !

''லால் பகதூர் சாஸ்திரி அவர்களை அடுத்து, பிரதமராக யார் வருவது என்பதை முடிவு செய்யும் பொறுப்பும் காமராஜுக்கு வந்தது. மறைந்த வி. கே. கிருஷ்ண மேனன் போன்றவர்கள் காமராஜரே பிரதமராக வர வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினர்கள். நானும், வேறு சிலரும் காமராஜிடம் இதுபற்றிப் பேசினோம். ''நீங்களே பிரதமராக வந்து விடுங்கள்; தென்னட்டைச் சேர்ந்த ஒருவருக்கு இப் பதவி கிட்டியதாக இருக்கும்'' என்று நான் காமராஜிடம் சொன்னேன். 'நமக்கு வேண்டாம்ப்பா அந்தப் பதவி' என்று காமராஜ் என்னிடம் கூறிவிட்டார். மிகப் பெரிய பதவியான பிரதமர் பதவி தேடி வருவதை வேண்டாம் என்று உதவித் தள்ள யாருக்கு மனம் வரும்? அப்படி தேடி வந்த பதவியை உதறித் தள்ளியவர் காமராஜ்! பதவியை என்றுமே அவர் பெரிதாகக் கருதியதில்லை. 'காமராஜ் அவர்கள் சொல்லாவிட்டால், நான்பிரதமர் பதவிக்குப் போட்டியிட மாட்டேன்' என்று அப்போது இந்திரா காந்தி கூறினர். அப்படிப்பட்ட சக்தி அவருக்கு அப்போது இருந்தது.

## அண்ணன்-தம்பியாகப் பழகினோம் !

''இன்று நான் குடியரசுத் தலைவராக இருக்கிறேன். 1969-ஆம் ஆண்டிலேயே என்னை இப்பதவியில் அமர்த்திப் பார்க்க அவர் ஆசைப்பட்டார். ஆனல் துரதிருஷ்டவசமாக அன்று நடைபெறவில்லை. இன்று நான் குடியரசுத் தலைவராக கலந்து கொண்டு நடைபெறும் முதலாவது நிகழ்ச்சி காமராஜ் உருவப் படத் திறப்பு விழா என்பது குறித்து நான் பெரும் பேறு பெற்றதாகக் கருதுகிறேன்.

ஒரு முறை நானும் காமராஜும் திருப்பதி சென்றோம். அங்கே இறங்கியதும், ''அண்ணன், தம்பி வந்துட்டாங்கடா'' என்று மக்கள் சொன்னது இன்னமும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

''எப்பதவியை அவர் வகித்த போதிலும் எளிமையாக—அடக்கமாக வாழ்ந்தார். பொது வாழ்வில் தூய்மையையும், நேர்மையையும் கடைப்பிடித்தார். கட்சிக்காகவோ, தேர்தலுக்காகவோ சேர்த்த ஒவ்வொரு காசுக்கும் கணக்கு வைத்திருந்தார்.

''காமராஜ் இறப்பதற்கு முன்பாக கடைசிக் காலத்தில் ஒவ்வொரு மாதமும் நான் அவரைச் சந்தித்துப் பேசி வந்தேன். கடைசிக் காலத்தில் அவர் மிகவும் மனம் நொந்த நிலையில் இருந்தார். தேசம் மோசமாவதைத் தாளாமல் வேதனையால் காமராஜ் மாண்டார் என்பதுதான் உண்மை!

## சுதந்திரப் போரில் சிறை வாழ்க்கை

''சுதந்திரப் போராட்டத்தின் போது சிறையில் காமராஜுடன் நான் இருந்த நாட்களை எண்ணிப் பூரிப்படைகிறேன். நான், காமராஜ், நிஜலிங்கப்பா ஆகிய மூவரும் சுதந்திரப் போராட்டக் காலத்தில் போலீசால் தேடப்பட்டு வந்தபோது, ஒரு நாள் ஆந்திராவில் பயணம் செய்து கொண்டு இருந்தோம். நான் கைது செய்யப்பட்டேன். போலீசை ஏமாற்றி காமராஜ் எப்படித் தப்பினர் என்பதுதான் பெரிய வேடிக்கை. அதே போல நிஜலிங்கப்பாவும் தப்பி பிறகு இந்துப்பூரில் கைது செய்யப்பட்டார். தலைமறைவாக இருந்து, கட்சியை நடத்தச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து விட்டு, பத்து தினங்கள் கழித்து காமராஜ் கைதானர். அவருடன் சிறையில் இருந்தபோது அவரைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொண்டேன்.

## தூய வாழ்க்கை

''அவர் தமிழ்நாட்டுத் தலைவர் மட்டுமல்ல. அகில இந்திய அளவில் செல்வாக்கு படைத்தவர். ஏராளமான ஏழை எளிய மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்தார்.

''காமராஜருக்கு நாம் செலுத்தும் மரியாதை அவருடையதூய வாழ்க்கையை நாமும் பின்பற்றி நடப்பதுதான்.

## கறை படாத கை !

''காமராஜரின் கை, கறைபடாதது. அவர் சொத்து சேர்த்து வைக்க வில்லை. பணம் அவரை ஆட்கொள்ள வில்லை. அவர் எந்த பெரிய பதவியை வகித்தபோதிலும் எளிய வாழ்க்கை நடத்தினர். ஒரே வீட்டில் வசித்தார். அவருடைய சாப்பாடே எளிமையானது.

## காமராஜ் வழிப்படி நடப்போம் !

''கட்சிகளில் பிணக்கு ஏற்படலாம். கட்சிகள் பிளவுபடலாம். ஆனல் நாம் எந்தக் கட்சியில் இருந்தாலும் காந்தி வழிப்படி, காமராஜ் வழிப்படி நடக்கிறோமா என்பதை ஆத்மசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி நடக்காதிருந்தால், இனியாவது அவ்வாறு நடக்க முயற்சிக்க வேண்டும். தமிழகம் இந்தியாவுக்கு வழி காட்டும் ; காட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

''ராஜாஜி, காமராஜ், அண்ணுதுரை ஆகிய தலைவர்கள் வாழ்ந்து காட்டிய பாதையைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''தமிழக அரசின் சார்பில் சட்ட மன்றத்தில் அமரர் காமராஜ் திருவுருவப் படம் வைக்க ஏற்பாடு செய்த முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரனுக்கு எனது பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். திறப்பு விழாவுக்கு என்னை அழைக்கஇருப்பதாக நான் செய்தி படித்தவுடன், முதல்வருடன் தொடர்பு கொண்டு இசைவு தெரிவித்து விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டேன். குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று நான்பங்கு கொள்ளும் முதலாவது பொது விழா; சிறப்பு மிக்க விழா; இதற்காக முதல்வருக்கு நன்றிதெரிவிக்கிறேன்.

[தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் 18-8-'77 அன்று, முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஆற்றிய உரையில் சில முக்கிய பகுதிகளின் தொகுப்பு].







# நிலமற்றவர்களுக்கு நிலம்

தற்போதுள்ள அரசின் கொள்கையின் கீழ், மதிப்பில்லாத நிலம் நேரடியாகச் சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற, ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது. ஐந்து அல்லது அதற்குக் குறைவான நபர்களைக் கொண்டுள்ள குடும்பத்தையுடைய, திங்கள் ஒன்றுக்கு ரூ.200 அல்லது அதற்குக் குறைவாக வருமானமுடைய ஒருவரும், ஐந்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தையும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தையும் உடைய ஒருவரும் "ஏழை" என்று கருதப்படுகிறார்.

ஒருவருக்கு ஒப்படை செய்யக்கூடிய நிலத்தின் உச்ச அளவு பரப்பு, அவர் நிலம் ஏதேனும் வைத்திருப்பின் எல்லா நிலத்தின் பரப்பும் சேர்ந்து புன்செய் நிலமாக இருந்தால் 3 ஏக்கர் அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1.5 ஏக்கராகும்.

ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து 3 ஆண்டுக் காலத்திற்குள் நிலம் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்நிலம் பத்தாண்டுக் காலத்துக்கு விற்கப்படவோ, உடைமை மாற்றம் செய்யப்படவோ கூடாது.

இந்நிலம், ஒப்படை பெற்றவரால் அல்லது குடும்ப உறுப்பினர்களால் அல்லது கூலி ஆட்களால் பயிர் செய்யப்பட வேண்டும். வேறு வகையில் சாகுபடி செய்யப்படக்கூடாது.

கடன்கள் வாங்குவதற்காக அத்தகைய நிலங்களை அவர்கள் வங்கிகளில் அடமானம் வைக்கலாம்.

### நில ஒப்படை பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள்

பயிரிடும் காரியத்திற்காக நிலம் ஒப்படை செய்வதற்கான முன்னுரிமை வரிசை(அண்மையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது) கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

1. போரில் இறந்துபட்ட அல்லது ஏலாமை நிலை அடைந்த எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர், வட்டார இராணுவப் பணியாளர் உட்பட இராணுவப் பணியாளரின் குடும்பங்கள் ;

2. நிலமற்ற அரிசன, பழங்குடி மக்கள் ;

2-ஏ. 1976ஆம் ஆண்டுக் கொத்தடிமைத் தொழில் முறை (ஒழிப்புச் )சட்டத்தின் (மத்தியச் சட்டம் 19/1976) கீழ் அடிமைத் தலையிலிருந்து விடுபட்ட தொழிலாளர்கள் ;

3. எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர் உட்பட தற்போது இராணுவப் பணியிலுள்ள நபர்கள் ;

4. முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படைப் பணியாளர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்;

5. பர்மா, ஸ்ரீலங்கா அகதிகள்;

6. தங்கக் கட்டுப்பாட்டு ஆணை காரணமாக வேலையிழந்த பொற்கொல்லர்கள் ;

7. முன்னாள் கள் இறக்குவோர்;

8. நிலமற்ற பிற ஏழை மக்கள்.

### ஒபபடை செய்வதில் உள்ள நிபந்தனைகள்

ஒப்படைக்குப் பெருமளவு நிலம் கிடைக்கும் கிராமங்களில், வருவாய்க் கோட்ட அதிகாரி, எல்லா மாவட்டங்களிலும் அரிசனங்கள், பழங்குடியினருக்கு ஒப்படை செய்வதற்காகக் குறிப்பிட்ட பகுதியை ஒதுக்குகிறார். அரிசனங்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்படுவது, ஒப்படை நிலம் பத்தாண்டுக்கு உடைமை மாற்றம் செய்யப்படவோ, விற்கப்படவோ கூடாது என்ற சிறப்பு நிபந்தனைக்கும் பத்தாண்டுக்குப் பின்னர் அந்நிலம் அரிசனங்களுக்கு மட்டுமே உடைமை மாற்றம் செய்யப்படலாம் அல்லது விற்கப்படலாம் என்ற சிறப்பு நிபந்தனைக்கும் உட்பட்டதாகும். மேற்கூறிய நிலங்களின் தேர்வில் மேற்சொன்ன நிபந்தனைகள் மீறப்பட்டால் இழப்பீடு இன்றி அந்நிலங்கள் மீட்பதற்கு உட்பட்டவையாகும்.

### ஆக்கிரமிப்பு முறைப்படுத்தப்படும்

வேளாண்மை நிலங்களை ஒப்படை செய்வது குறித்த அரசின் தற்போதைய கொள்கை சில காலத்திற்கு முன்பு அரசால் மறுபரிசீலனை செய்யப்பட்டது. அரிசனங்கள், முன்னாள் இராணுவத்தினர் உட்பட, நிலமற்ற ஏழை மக்கள் பயிரிடுவதன் மூலம் ஆட்சேபணைக்குட்படாத ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதை முறைப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது. நிலமற்ற ஏழைகளைத் தவிர பிறர் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் காலி செய்யப்பட வேண்டும் என்றும், காலி செய்யப்பட்ட பின்னர், அவ்வாறு ஆக்கிரமிப்புச் செய்யப்பட்ட நிலங்கள் ஒப்படை செய்யப்படத் தக்கதாகும் என்றும் (சமூக அல்லது அரசுக் காரியத்திற்குத் தேவைப்படாத), அரிசனங்கள், முன்னாள் இராணுவத்தினர் உட்பட நிலமற்ற ஏழை மக்களுக்கு அப் பகுதிகள் ஒப்படை செய்யப்பட வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.

(ஆதாரம்: வருவாய்த் துறை மானியக் கோரிக்கை, 1977.)



# தமிழகத்தில் உணவு நிலைமை

மாண்புமிகு உணவமைச்சர்
**திரு ஜி. ஆர். எட்மண்ட்**

தமிழகத்தில் அரிசி நிலைமை இப்பொழுது மிகவும் திருப்திகரமாக உள்ளது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகப் புழங்குகிறது; விலைகளும் நிதானமாகவே உள்ளன. தமிழ்நாடு தனி உணவு மண்டலமாக இருந்த நிலைமை மாறி, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களும், பாண்டிச்சேரிப் பகுதிகளும், தமிழகமும் உள்ளடங்கிய தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான உணவு மண்டலத்திற்குள் அரிசிப்போக்குவரத்துக்குத் தடை ஏதும் இல்லை. ஆயினும் நெல்லைப் பொறுத்தவரையில், ஒரு மாநிலத்தை விட்டு மற்றொரு மாநிலத்திற்கு நெல்லை எடுத்துச் செல்லக்கூடாது என்ற தடை இன்னும் தொடர்ந்து இருந்து வருகிறது. விரிவான தென் உணவு மண்டலம் அமைக்கப்பட்டதையொட்டி, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு தமிழகத்தில் மாவட்டங்களிடையே நெல், அரிசி போக்குவரத்து மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் அனைத்தும்-கேரளாவை ஒட்டிய சில எல்லையோரப் பகுதிகள் நீங்கலாக-மற்றப் பகுதி



களில் நீக்கப்பட்டு விட்டன. இதன் காரணமாக, உபரி மாவட்டங்களிலிருந்து பற்றாக்குறை மாவட்டங்களுக்கு நெல், அரிசிப் போக்குவரத்துக்கு வழி ஏற்பட்டுள்ளது. மாவட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையொட்டி உபரி மாவட்டங்களில் விவசாயிகளுக்குக் கூடுதலான விலை கிடைக்க வாய்ப்பேற்பட்டுள்ளது. பற்றாக்குறை மாவட்டங்களில் முன்பு இருந்த விலைகளை விட இப்பொழுது விலைகள் குறைந்துள்ளன. மாவட்டங்களிடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இருந்த நேரத்தில் உபரி மாவட்டங்களில் இருந்த குறைவான விலைக்கும், பற்றாக்குறை மாவட்டங்களில் இருந்த மிக உயர்வான விலைக்கும் இடையே இருந்த கணிசமான இடைவெளி, இப்பொழுது குறைக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் விலைகள் ஏறக்குறைய ஒரு சீராக உள்ளன. மேலும், தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதன் பயனாக, குறிப்பாக, ஆந்திர மாநிலத்திலிருந்து, அரிசி தமிழகத்திற்கு வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1976-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ஆம் நாள் முதற்கொண்டு, இன்று வரை, ஒரு இலட்சம் டன்களுக்கு மேல் அரிசி தமிழகத்திற்கு ஆந்திர, கர்நாடக மாநிலங்களிலிருந்து வந்துள்ளது. இவ்வாறு வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வரத்துக்கு வழி செய்துள்ளதாலும், மாவட்டங்களிடையே இருந்த தடைகளையெல்லாம் நீக்கி விட்ட



தாலும் தமிழகத்தில் இப்பொழுது தாராளமாக அரிசி கிடைப்பதுடன் விலைகளும் நிதானமாகவே உள்ளன. சாதாரணமாக சம்பா அறுவடை முடிந்து, குறுவை அறுவடை வருவதற்கு இடையிலுள்ள ஜூன்முதல் செப்டம்பர் வரை வெளிச் சந்தையில் அரிசியின் விலைகள் உயர்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டில் ஜூலை மாத இறுதிவரை கூட, விலைகளில் குறிப்பிடத்தக்க அளவு உயர்வு ஏற்படவில்லை என்பது நமக்கு மன நிறைவு அளிக்கக்கூடியதாய் உள்ளது.

பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு இப்பொழுது கணிசமான கையிருப்பு, அரசின் வசம் உள்ளது. 1976-77-ஆம் ஆண்டில் குறுவைச் சாகுபடி ஓரளவு பாதிக்கப்பட்டதாலும், தாளடிச் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டதாலும், நெல் உற்பத்தியில் ஏறக்குறைய 8 இலட்சம் டன்கள் துண்டு விழும் என்று நாம் அஞ்சினோம். இதை ஈடு செய்வதற்கு, முன் எச்சரிக்கையாக, மத்திய அரசு நமக்கு மே மாதம் முதற்கொண்டு பொது விநியோகத்திற்கு அரிசி வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். மத்திய அரசும் மே முதல் நான்கு மாதங்களுக்கு மாதம் 50,000 டன் அரிசியை ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தின் தேவையை உணர்ந்து, பொது விநியோக முறையைப் பலப்படுத்த, மத்திய அரசு மத்திய கையிருப்புத் தொகுப்பிலிருந்து அரிசி அளிக்க முன் வந்ததற்குத் தமிழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இதில் உள்ள ஒரு சிக்கலை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். நம்முடைய மாநிலத்தில் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசி. பொது விநியோக முறையின் கீழ் நமக்குத் தேவைப்படுவதிலும் மிகப் பெரும் பகுதி, புழுங்கல் அரிசிதான். ஆனால், மத்திய அரசிடம் தரமான புழுங்கல் அரிசி போதிய அளவு கையிருப்பில் இல்லை. அவர்கள் சிரமமின்றிப் பச்சரிசி தர முடியும். ஆனால் பச்சரிசிக்குத் தமிழகத்தில் தேவை மிகவும் குறைவு. ஆகவே இந்த ஒதுக்கீடு முழுவதையும் தரமான புழுங்கல் அரிசியாகவே தர வேண்டும் அல்லது நெல்லாகத் தர வேண்டும் என்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகின்றோம். இம்முயற்சி பயன் அளிக்கும் என்று நம்புகிறோம்.



## பொது விநியோகம்

தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 103 இலட்சம் குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. சுமார் 9,290 நியாய விலைக் கடைகள் பொது விநியோகப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன. இவற்றில் சுமார் 6,500 கூட்டுறவுச் சங்கங்களாலும், சுமார் 830 தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தினாலும், எஞ்சியவை ஊராட்சிக் குழுக்களாலும், சில இடங்களில் கிராமக் குழுக்களாலும் நடத்தப்படுகின்றன. நீலகிரிப் பகுதியில் 4 கடைகள் மட்டுமே தனியார் வியாபாரிகளால் நடத்தப்படுகின்றன. பொது விநியோக முறையின் கீழ் நடத்தப்படும் கடைகள் அனைத்தும், தனியார் வியாபாரிகளிடம் ஒப்படைக்கப்படாமல், பொதுத் துறையில் நடத்தப்படுவது, பொது நலனுக்குகந்த சிறந்ததொரு சாதனையாகும்.

சென்னை நகரத்திலும், கோவை நகரத்திலும் அவற்றின் புறநகர்ப் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்திலும் கல்குளம் வட்டத்தில் 14 கிராமங்களிலும் குடும்பக் கார்டுகளின் பேரில் அரிசி வழங்கும் பொறுப்பை நேரடியாக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. சென்னை, கோவை நகரம் ஆகியவற்றின் புறநகர்ப் பகுதிகள் ஆகிய இடங்களில், வயது வந்தவர் ஒவ்வொருவருக்கும் மாதம் 6 கிலோ அரிசியும், குழந்தைக்கு 4 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்குச் சென்னையில் 30 கிலோ அரிசியும், கோவையில் 24 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லையோரப் பகுதியில் வயது வந்தோர் ஒவ்வொருவருக்கும் மாதம் 8 கிலோ அரிசியும், குழந்தைக்கு 4 கிலோ அரிசியும் குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்கு மாதம் 30 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் வயது வந்தோர் ஒவ்வொருவருக்கும் 12 கிலோ அரிசியும், குழந்தைக்கு 8 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் குடும்பத்துக்குக் குறைந்த பட்சம், மாதம் 24 கிலோ அரிசி வழங்கப்படுகின்றது. மாநிலத்தின் பிற பகுதிகளில் நிரந்தரமாக அரிசி விநியோகப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளாத போதிலும், தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, வெளிச் சந்தையில் விலைகள் உயர்ந்தாலோ, பொது விநியோக முறையின் கீழ் அரிசி விநியோகத்தை விரிவாக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளிலும் மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு 24 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

வாங்கும் சக்தி அதிகமாக இல்லாத மக்கள் வசதிக்காக அவர்கள் அரிசியை மொத்தமாக வாங்காமல் தவணையின் கீழ் பொது விநியோகக் கடைகளில் வாங்கிக் கொள்ளலாமென்று வசதி செய்யப்பட்டுள்ளது. அது போலவே கடலை எண்ணெய்யை 250 கிராமுக்குக் குறையாமல், பல தடவை

வாங்கிக் கொள்ளலாமென்றும் அண்மையில் வசதி செய்யப்பட்டுள்ளது.



1976-ஆம் ஆண்டு முழுவதிலும், பொது விநியோக முறையின் கீழ், 6.23 இலட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டில் ஜூலை மாதம் இறுதி வரை 2.46 இலட்சம் டன்கள் அரிசி வழங்கப்பட்டுள்ளது. 1977 சனவரி மாதத்தில் பொது விநியோகத்தின்கீழ் 35 ஆயிரம் டன்கள், பிப்ரவரி மாதத்தில் 42 ஆயிரம் டன்கள், மார்ச்சு மாதத்தில் 43 ஆயிரம் டன்கள், ஏப்ரல் மாதத்தில் 33 ஆயிரம் டன்கள், மே மாதத்தில் 31 ஆயிரம் டன்கள், ஜூன் மாதத்தில் 29 ஆயிரம் டன்கள், ஜூலை மாதத்தில் 33 ஆயிரம் டன்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் 40 ஆயிரம் டன்கள் பொது விநியோகத்திற்குத் தேவைப்படும் என்று கணக்கிட்டு, உணவு வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பொது விநியோகத்தை நடத்துவதற்கு நம்மிடம் போதுமான அரிசி கையிருப்பில் உள்ளது.

சென்ற ஆண்டு அக்டோபர் வரை இருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடு ஒன்றை நாம் மனத்திற்கொள்ள வேண்டும். சென்ற ஆண்டு நாம் ஒவ்வொரு மாவட்டத்தையும் ஒரு தனித் தொகுதியாகப் பாவித்து, ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அரிசியோ நெல்லோ எடுத்துச் செல்லக் கூடாதென்று, தடை விதித்திருந்தோம். அந்தச் சூழ்நிலையில், குறிப்பாகப் பற்றுக் குறை மாவட்டங்களில், பொது விநியோக முறையை அரசு தீவிரமாகச் செயல்படுத்த வேண்டியிருந்தது. இந்த ஆண்டிலோ மாவட்டங்களுக்கிடையே நெல் அரிசி நடமாட்டத்தின் மீதிருந்த தடைகள் எல்லாம், நீக்கப்பட்டு விட்டன. கேரள எல்லையோரப் பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில், அரிசியும் நெல்லும் மாநிலம் முழுவதும் தாராளமாகப் புழங்கலாம். இச் சூழ்நிலையில், வெளிச் சந்தையில் தாராளமாக அரிசி கிடைப்பதையொட்டி பொது விநியோக முறையின்கீழ் அரிசி விநியோகத்துக்கான தேவை படிப்படியாகக் குறைந்து வரும் என்று எதிர்பார்க்கின்றோம். ஏதேனும் சில இடங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டாலோ, விலைவாசிகள் மிதமிஞ்சி உயர்ந்தாலோ, அங்கு பொது விநியோக முறையைச் செயல்படுத்துவதன் மூலம் நிலைமையைச் சீராக்குவதே நமது நோக்கமாக இருக்கும். இவ்வாறு பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்தி தேவைக்கேற்ப அதை விரிவாக்குவதன் மூலம் தான் வெளிச்சந்தை விலைவாசிகளை நாம் கட்டுப்படுத்த முடியும். இந்த நோக்கத்தை அரசு நிறைவேற்ற வேண்டுமானால், அரசின் கைவசம் எப்பொழுதும் கணிசமான அளவு நெல் இருக்க வேண்டும்.

## கொள்முதல்

பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்துவதற்கும், கணிசமாகச் சேமிப்பைத் திரட்டி வைப்பதற்கும் கொள்முதலைத் தொடர்ந்து நடத்துவது அவசியம். வர்த்தக லெவி முறையின் கீழ், எந்த ஆண்டிலும் இரண்டு இலட்சம் டன்களுக்கு மேல் கொள்முதல் செய்ய இயன்றதில்லை. விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து வந்தபோது குறைந்தபட்சம் 5 இலட்சம் டன்களும், 1975-76-ஆம் ஆண்டில் 8.9 இலட்சம் டன்களும் கொள்முதல் செய்ய இயன்றது. மேலும் வர்த்தக லெவி முறையில் லெவி கொடுக்கும் பொறுப்பை எல்லா வர்த்தகர்களும், நியாய உணர்வுடனும், சமூகப் பொறுப்புணர்வுடனும் நிறைவேற்றி வருகிறார்கள் என்ற நம்பிக்கை எந்த ஆண்டு அனுபவத்திலிருந்தும் ஏற்படவில்லை. இவற்றை எல்லாம் மனத்திற்கொண்டு, வர்த்தக லெவி முறையைத் தொடர்ந்து நடத்துவதா, அல்லது பெரும்பாலான ஆண்டுகளில் நாம் கொள்முதல் செய்து வந்தது போலவே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதா என்ற முடிவை அரசு வெகு விரைவில் எடுக்க வேண்டியிருக்கும். நிலைமைகளை உன்னிப்பாக ஆராய்ந்து, பொது நலனுக்கு உகந்த முடிவை அரசு மேற்கொள்ளும்.

நேரடியாக விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் முடிவை அரசு மேற்கொண்டால் விவசாயிகளுக்கு இடர்ப்பாடு எதுவும் ஏற்படாமல் கொள்முதல் முறை அமைய வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு ஆர்வம் உண்டு. லெவி விகிதங்களும், உற்பத்திக்கேற்ப, நியாயமான முறையில் அமைக்கப்படும். லெவிக்கு நெல் அளந்த பின்பு, எஞ்சிய உபரி நெல்லை, விவசாயிகள் வெளிச் சந்தையில் விற்றுக் கொள்ள உரிமை அளிக்கப்படும். லெவி முறையைச் செயல்படுத்தியபோது, பெரிய விவசாயிகள் நடைமுறையில் லெவி கொடுக்காமல் தட்டிக் கழித்து விட்டனர் என்றும், சிறு விவசாயிகள் கடுமையான நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர் என்றும், சென்ற ஆண்டுகளில் பரவலாக இருந்த குறைபாட்டிற்கு இடம் தராமல், லெவி முறையைச் செயல்படுத்துவதில் இந்த அரசு மிகவும் விழிப்பாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கும்.



## பொது விநியோக அரிசியின் தரம்

பொது விநியோக முறையின் கீழ் விநியோகிக்கப்படும் அரிசியின் தரம், வெளிச் சந்தையில் கிடைக்கும்அரிசியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, திருப்திகரமாக இல்லையென்ற குறை பரவலாக உள்ளதை அரசு உணர்ந்துள்ளது. இக்குறைக்கு இடந்தராத வண்ணம் பொது விநியோக முறையின் கீழ் விநியோகிக்கப்படும்



அரிசியின் தரத்தைப் பாதுகாக்கவும், உயர்த்தவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதிலுள்ள சிரமங்களையும் நாம் அறிவது அவசியம். தங்கள் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தும் நெல்லின் தரத்தைப் பாதுகாப்பதில் காட்டப்படும் அக்கறை, கொள் முதலுக்குத் தருவதற்கு ஒதுக்கி வைக்கும் நெல்லைப் பொறுத்த வரையில் காட்டப்படுவதில்லை. குறிப்பாக குறுவைப்பருவத்தின்போது அறுவடை நேரத்தில் மழை பெய்வதால், ஈரம் கலந்த நெல்லை உலர்த்தாமல், கொள்முதலுக்கு அளந்து விடும் போக்கும் காணப்படுகிறது. உச்சக் கட்டத்தில் கொள்முதல் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலே, விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை, கொள்முதலுக்கு ஏற்றுக் கொள்ளாமல், திருப்பி அனுப்பி விட்டால், விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகளையும், அவர்களிடையே ஏற்படக் கூடிய அதிருப்தியையும், தவிர்க்க விரும்பி கொடுக்கப்படும் நெல்லை கொள்முதல் நிறுவனங்கள் வாங்கிக் கொள்கின்றன. ஈரமான நெல் வாங்கப்பட்டால் அது அரைவைக்கு எடுத்துச் செல்வதற்கு முன்பே முளைத்து விடுகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல் அரைவையாளரிடம் கொடுக்கப்படுகிறது.

தனியார் வியாபாரத்திற்குத் தரமான அரிசியைத் தயார் செய்வதில் காட்டுகின்ற ஆர்வமும் அக்கறையும் அரசினால் கொள்முதல் செய்யப்பட்டு அரைவைக்குக் கொடுக்கப்படுகின்ற நெல்லைப் பொறுத்த வரையில் காட்டப்படுவதில்லை என்ற குறைபாட்டுக்கும் இடமுண்டு. அரிசியைத் தயார் செய்த பின்பு, அதை மொத்த கிடங்குகளில் சேமித்து வைக்கும் போதும், பின்னர் சில்லறைக் கடைகளுக்கு அவற்றை எடுத்துச் செல்லுகின்ற நிலையிலும், தரத்தைப் பாதுகாப்பது கடினமாகி விடுகிறது. மிகப் பெரிய அளவில் பல்லாயிரக்கணக்கான மூட்டை நெல்லை, கொள்முதல் செய்து கிடங்குகளில் சேமித்து வைத்து அரைவையாளரிடம் ஒப்படைத்து அரிசியை மீண்டும் கிடங்குகளுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து தேவைக்கேற்ப, சில்லறைக் கடைகளுக்கு அனுப்புகின்ற பொது விநியோக முறையில் தரத்தைப் பாதுகாப்பது என்பது அரசு அலுவலர்களால் மட்டும் சாத்தியமாகக் கூடியதல்ல; விவசாயிகள் அரைவையாளர், சில்லறைக் கடை நடத்துவோர் ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் இந்தப் பணியில் தேவை.

அரிசியின் தரத்தைப்பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுவதில் உணவுத் துறை தொடர்ந்து விழிப்பாக இருக்கும். கொள்முதல் செய்யப்படும் நேரத்தில் ஈரத்தைத் தணிக்கை செய்வதற்கும், அதற்கேற்ப விலைகளில் வெட்டுகள் விதிப்பதற்கும் முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. நெல்லைச் சேமித்து வைக்கப்படும் கிடங்குகளில் தரப் பரிசோதனை செய்வதற்கும், தரம் கெட்டு விடாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையைச் சார்ந்த விவசாய நிபுணர்கள் கொள்முதல் நிறுவனத்தில் நியமிக்கப்பட்டு, தரத்தைப்பாதுகாக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரைவையாளர் தயார் செய்யும் அரிசியின் தரத்தைப் பரிசோதிக்கவும், தரம் குறைந்தால் அதற்கேற்ப கூலியில் பிடித்தம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சில்லறைக் கடைகள் தரமான அரிசி விநியோகத்தைக் கண்காணிக்க, சில்லறைக் கடைகளில் ஒழுங்காகத் தணிக்கையும் சோதனையும் செய்யப்படுகின்றன தரத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதில் உணவுத் துறை உன்னிப்பாக இருக்கும் என்று நான் உறுதி கூறும் நேரத்திலே, இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் விவசாயிகள், வியாபாரிகள், அரைவையாளர்கள், ஆகிய அனைவருடைய ஒத்துழைப்பும் கிடைப்பது அவசர அவசியத் தேவை என்பதை மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அரிசியையே பெரிதும் பயன்படுத்திப் பழக்கப்பட்ட தமிழக மக்கள் கோதுமையை அதிக அளவில் பயன்படுத்துவதில்லை. அரிசியில் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், அரிசியின் விலைகள் மிதமிஞ்சி உயர்ந்து விட்டாலும், அந்நிலைமையில் தான், கோதுமையின் புழக்கம் அதிகரிக்கின்றது. அந்த நிலையில் கூட கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற சிறு தானியங்களைப் பயன்படுத்தவும், அவையும் போதிய அளவு கிடைக்காவிடிலே கோதுமையைப் பயன்படுத்தவும் தமிழக மக்கள் விரும்புகிறார்கள். தமிழகத்தில் வெளிச்சந்தையில் இப்பொழுது தாராளமாக அரிசி கிடைக்கின்

காரணத்தினுல், பொது விநியோக முறையின் கீழ் கோதுமையின் விநியோகம் பெரிதும் குறைந்துள்ளது. 1975 ஜூலை மாதத்தில் மாதம் 70,000 டன் கோதுமை விநியோகிக்கப்பட்டதற்கு மாறாக, 1977-ஆம் ஆண்டில் பொது விநியோக முறையின் கீழ் மாதம் சுமார் 5,000 டன்கள் கோதுமைதான் வாங்கப்பட்டது.

இப்பொழுது கிலோ ரூ. 1.40 விலையில் கோதுமை தடையின்றி பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகிறது. நகர்ப் பகுதிகளில் மட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளிலும், ஒரு குடும்பம் எவ்வளவு கோதுமை கேட்டாலும் அதைக் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. அரிசியின் விலையைவிட கோதுமையின் விலை குறைவாகவுள்ளது என்பதைக் கருதியும், சத்துணவு அடிப்படையில் கோதுமையையும் சேர்த்துப் பயன்படுத்துவது உடல் நலனுக்கு உகந்தது என்பதைக் கருதியும், கோதுமையைப் பயன்படுத்தும் பழக்கத்தைத் தமிழக மக்கள் மேலும் அதிகமாக மேற்கொள்வார்கள் என்று நம்புகிறேம்.



### கோதுமைப் பொருட்கள் விநியோகம்

ரவை, மைதா, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற கோதுமைப் பொருட்கள் மீது இப்போது தடை எதுவும் இல்லை. 1976 டிசம்பர் முதற்கொண்டு, இப்பொருட்கள் நாடு முழுவதும் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி விற்கப்படலாமென்று மத்திய அரசு ஆணையிட்டது. நம்முடைய மாநிலத்தில் கோதுமைப் பொருட்கள் இப்போது தாராளமாகக் கிடைக்கின்றன. விலைக் கட்டுப்பாடு இருந்த சமயத்தில் நிலவி வந்த விலைகளே, ஏறக்குறைய இப்போதும் நிலவி வருகின்றன.

தமிழ்நாட்டில் கோதுமைப் பொருட்களைத் தயார் செய்யும் 'ரோலர்' மாவு ஆலைகள் 28 உள்ளன. இவை அனைத்தும் தனியாரால் நடத்தப்படுகின்றன.

இவற்றின் அரைவைத் திறன் மாதத்திற்கு 65 ஆயிரம் டன்களுக்கு மேலாகும். சென்ற சில ஆண்டுகள் வரை இவற்றிற்கு, அரைவைக்காக மத்திய அரசு ஒதுக்கி வந்த கோதுமை மிகக் குறைவாக இருந்தது. சென்ற சில மாதங்களாக, மாதம் 40 ஆயிரம் டன்கள் கோதுமை இவற்றிற்கு ஒதுக்கப்பட்டு வருகிறது. இதற்கும் மேலாக ஆலைகளுக்குத் தேவைப்பட்டால் ஒதுக்கீடு செய்யவும் வசதி செய்யப்பட்டுள்ளது. 40 ஆயிரம் டன்கள் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வந்துள்ள போதிலும், நம் மாநிலத்தில் ரோலர் மாவு ஆலைகள் இப்போது சுமார் 30 ஆயிரம் டன்கள் அளவில்தான் கோதுமையை எடுத்துப் பயன்படுத்துகின்றன.

### லெவி சர்க்கரை விநியோக முறை

நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 65 சதவிகிதத்தை லெவி முறையின் கீழ் விநியோகத்திற்கு ஒதுக்கி, 35 சதவிகிதத்தை வெளிச்சந்தையில் விற்க உரிமை அளிக்கும் ஒரு முறையை மத்திய அரசு சென்ற சில ஆண்டுகளாகப் பின்பற்றி வருகிறது. லெவி சர்க்கரை கிலோ ரூ. 2.15 என்ற விலையில் குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் பொது விநியோகத்திற்கு மாதம் ஒன்றுக்கு 13,550 டன்கள் லெவி சர்க்கரையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து வருகின்றது. இந்த ஒதுக்கீடு குறைந்தது 20,000 டன்களுக்கு உயர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் வற்புறுத்தி வருகின்றேம்.

இப்பொழுது ஒதுக்கப்படும் சர்க்கரையைக் கொண்டு நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் குடும்பக் கார்டுகளின் பேரில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளிலும் லெவி சர்க்கரை ஓரளவாகிலும்கிடைக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்ட அரசு, கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்குக் குறைந்தபட்சம் ஒரு கிலோ சர்க்கரையாவது வழங்கவேண்டுமென்று ஆணையிட்டுள்ளது. மத்திய அரசின் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டால், விநியோகத்தை மேலும் சீராக்கி கிராமப் பகுதிகளில் விநியோகம் ஆகும் அளவை உயர்த்துவதற்கு வாய்ப்புக் கிட்டும்.

இப்பொழுதுள்ள விநியோக முறையின்படி பெருநகர்ப்பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு 6 கிலோ வரை வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுகிறது. கிராமப்பகுதிகளுக்கு நாம் ஒரு கிலோதான் இப்பொழுது கொடுக்க முடிகின்றது. நகர்ப்புறங்களில் வழங்கப்படும் சர்க்கரையின் அளவைக் குறைத்துக் கொண்டு கிராமப் பகுதிகளுக்கு அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை வற்புறுத்தப்பட்டு வருகின்றது. பல ஆண்டுகளாக நகர்ப் பகுதிகளுக்கு அதிகம் வழங்கப்பட்டு வருவதை திடீரெனக் குறைத்து விடுவது பரவலான அதிருப்திக்கு இடம் தரும். மேலும் நகர்ப் பகுதிகளில் வழங்கப்படும் சர்க்கரை அளவைக் கணிசமாகக் குறைத்தால் கூட, அதனுல் மிச்சப்படும் சர்க்கரை, கிராமப் பகுதிகளில் விநியோக அளவைக் கணிசமாக உயர்த்துவதற்குப் போதாது. இப்பொழுது வருமானத்தின் அடிப்படையில் சர்க்கரை வழங்கப்படுவதை மாற்றி குடும்பத்தினர் எண்ணிக்கையை மனத்திற்கொண்டு விநியோக அளவை நிர்ணயிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையும் எழுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஒதுக்கீடு கணிசமாக அதிகரிக்கப்பட்டால், இக்கருத்துக்களைப் பரிசீலித்து, விநியோக முறையில் பொது நலனுக்கு உகந்த முறையில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆராயப்படும்.

கிராமப்புறங்களில் விநியோகத்திற்காக ஒதுக்கப்படும் சர்க்கரை சில சமயங்களில் கிராமத்திற்கே போய்ச் சேராமல் பெரிய நகரங்களில் விற்கப்பட்டு விடுகின்றது என்ற புகார்களும் வந்துள்ளன. இக் குறைபாட்டைத் தவிர்க்க, கிராமத்திற்கு ஒதுக்கப்படும் சர்க்கரையைத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமே கிராமங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கேயே சில்லறைக் கடைகளுக்கு வழங்கும் முறையை, பரீட்சார்த்தமாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் செயல்படுத்தினேம். இம்முறை திருப்திகரமாக செயல்பட்டு வந்த அனுபவத்தையொட்டி, இராமநாதபுர மாவட்டத்திற்கும் அண்மையில் விரிவாக்கப்பட்டுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படும் அனுபவத்தைக் கொண்டு, மற்ற மாவட்டங்களிலும் இம்முறையை விரிவாக்கப்படுவதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

## விலைவாசிகளும், விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளும்

### அரிசி

தற்போது அரிசியின் விலைகள் நிதானமாகவே உள்ளன என்று முன்பு குறிப்பிட்டுள்ளோம். நம்முடைய மாநிலத்தில் அதிகம் புழங்குவது நடுத்தர புழுங்கல் அரிசி. இதன் விலைகள் இப்போது உபரி மாவட்டங்களில் கிலோ ரூ. 1.60 முதல் ரூ. 1.95 வரையிலும், பற்ருக்குறை மாவட்டங்களில் கிலோ ரூ. 1.80 முதல் ரூ. 2.05 அளவிலும் உள்ளன. 1974-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் இந்த அரிசியின் விலை கிலோ ரூ. 2.25 முதல் ரூ. 2.85 வரை இருந்தது. 1975-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் இதன் விலை கிலோ ரூ. 3.60 வரை எட்டியிருந்தது. 1976-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் கிலோ ரூ.1.80 முதல் கிலோ ரூ. 2.50 வரை இருந்தது.1976 அக்டோபருக்குப் பின்பு, தென் உணவு மண்டலம் விரிவாக்கப்பட்டதையும், தமிழகத்தில் மாவட்டங்களிடையே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையும் ஒட்டி, உபரி மாவட்டங்களிலிருந்து குறைந்த விலைக்கும், பற்ருக்குறை மாவட்டங்களிலிருந்த உச்ச விலைக்கும் இடையேயிருந்த கணிசமான இடைவெளி இப்போது பெரிதும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆண்டு அரிசியின் விலை, சென்ற நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, குறைவாகவே உள்ளது. சென்ற சில வாரங்களாக அரிசியின் விலையில் ஆங்காங்கு சிறிது உயர்வு காணப்படுகிறது. இயல்பாகவே சூன் மாதம் முதற் கொண்டு அக்டோபர் வரை, முக்கிய அறுவடை எதுவும் இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் அரிசியின் விலைகள் ஒவ்வொரு ஆண்டும் உயர்வது வழக்கம். இந்த ஆண்டு இந்த உயர்வு ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்றே கூற வேண்டும். மேட்டூர் நீர்ப்பாசனப் பிரச்சினைகளிலிருந்த சிக்கல்களையொட்டி குறுவைப் பயிரின் நிலைமை சில நாட்களுக்கு முன்பு வரை தெளிவற்றிருந்ததும், இந்த ஏற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இப்போது குறுவை நிலைமை தெளிவாகி விட்டதால் இந்த உயர்வு கட்டுப்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கலாம். விலைகள் மேலும் உயர்ந்தால், பொது விநியோக முறையை விரிவாக்கி விலைகளைக் கட்டுப்படுத்துவதற்குரிய வகையில் அரசிடம் அரிசி போதிய அளவு கையிருப்பில் உள்ளது. அக்டோபர் மாத இறுதியில், குறுவை அறுவடை கணிசமாக வந்தவுடன் நிலைமை மேலும் சீராகிவிடும்.



### சிறு தானியங்கள்

தமிழ்நாட்டில் சிறுதானியங்களின் விலை அரிசியின் விலையை அனுசரித்துச் செல்வதாக அமைவது வழக்கம். அவ்வாறே சிறு தானியங்களின் விலைகளும் இந்த ஆண்டு நிதானமாகவே உள்ளன. ராகி, சோளம், கம்பின் விலைகள் கிலோ ரூ. 1.10 முதல் ரூ. 1.40 வரை உள்ளன. மொத்தத்தில் சிறு தானியங்களின் விலைவாசிகள் 1974-1975-ஆம் ஆண்டுகளைவிட மிகக் குறைவாகவும், 1976-லிருந்த விலைகளுக்கு ஏறக்குறைய சமமாகவும் உள்ளன.

### பருப்பு வகைகள்

சென்ற மூன்று ஆண்டுகளிலிருந்த விலையைவிட இந்த ஆண்டு சில வகைப் பருப்புகளின் விலைகள் ஏறியுள்ளன. இந்த விலை உயர்வு தமிழ்நாட்டில் மட்டும் ஏற்பட்டதல்ல; நாடு முழுவதும் காணப்படும் போக்கை ஒட்டியது. தமிழ்நாட்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி மிகக் குறைவு. மற்ற மாநிலங்களிலிருந்து வரத்தை நம்பித்தான் தமிழகம் உள்ளது. அந்த மாநிலங்களிலேயே இந்த ஆண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதாலும், விலைகள் உயர்ந்துள்ளதாலும், இங்கும் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. குறிப்பாகத் துவரம் பருப்பின் விலை சாதாரண ஆண்டுகளில் கிலோ ரூ. 2.00 முதல் ரூ. 2.20 வரை இருக்கும்; இந்த ஆண்டு கிலோ ரூ. 3.40 முதல் ரூ. 4.50 வரை உயர்ந்துள்ளது. உளுத்தம் பருப்பின் விலையும் இப்போது ரூ. 3.70 முதல் ரூ. 4.64 வரை உயர்ந்துள்ளது. உற்பத்தி ஆகும் இடங்களில் அடுத்த அறுவடை இன்னும் சில மாதங்களில் வந்ததும், நிலைமை திருந்துமென எதிர்பார்க்கலாம்.

### கடலை எண்ணெய்

கடலை எண்ணெய் விலையில் நாடு முழுவதும் சென்ற சில மாதங்களாகவே காணப்படும் விலை உயர்வு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் கவலை அளிப்பதாய் அமைந்துள்ளது. சாதாரணமாக தமிழகத்தில் உற்பத்தியாகும் கடலை எண்ணெய், மாநிலத்தின் தேவைகளுக்குச் சற்று அதிகமானது. சென்ற சில ஆண்டுகள் வரை தமிழகத்திலிருந்து எண்ணெய் மற்ற மாநிலங்களுக்குச் செல்வதும், அங்கிருந்து எண்ணெய் இங்கு வருவதும் வாடிக்கையாக இருந்தது. ஓரிரு ஆண்டுகளாக இந்தப் போக்கு தடைப்பட்டுள்ளது. தமிழகத்தில் 1976-ஆம் ஆண்டு சூலை மாதத்தில் கிலோ ரூ. 6.50 வரை விற்று வந்த கடலை எண்ணெய் இப்பொழுது ரூ. 10.40 அளவில் விற்கப்படுகிறது.

நாடு முழுவதும் கடலை எண்ணெய்யில் ஏற்பட்டுள்ள தட்டுப்

... போக்கவும், விலைகளைக் கட்டுப்படுத்தவும், மத்திய அரசு அயல் நாடுகளிலிருந்து சமையல் எண்ணெய்களை இறக்குமதி செய்து, சுத்திகரித்து அவற்றைக் கிலோ ரூ. 8.50 விலையில் விற்க ஒரு திட்டம் வகுத்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட இந்த எண்ணெய்க்குத் தமிழகத்தில் அவ்வளவு வரவேற்பு இல்லை. சமையலின் போதும், சமையலுக்குப் பின்பும் ஒருவித வாசனை வருகிறது என்று பொது மக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர். ஆகவே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் சுத்திகரித்த எண்ணெயைப் பெரிதும் நம்பியிராமல், அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கடலை எண்ணெய்யில் கணிசமான பகுதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளோம்.

தமிழக அரசினால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் எல்லா மாவட்டத் தலைநகர்களிலும், ஒரு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள முக்கிய நகர்களிலும், கடலை எண்ணெய்யை கிலோ ரூ. 9.50 விலையில் விற்க இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனாலும், கிலோ ரூ. 8.50 அளவில் விற்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட அயல் நாட்டு எண்ணெய்யின் விற்பனையை விரிவாக்குவதனாலும், நிலைமையைக் கட்டுப்படுத்த முடியுமென்று எதிர்பார்க்கிறோம். மணிலாப் பயிரின் அடுத்த முக்கிய அறுவடை தமிழகத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் வரும். அந்த அறுவடைக்குப் பின் கிடைக்கும் எண்ணெய்யைக் கொண்டு, தமிழ்நாட்டின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒரு சீரான விநியோகத் திட்டம் வகுப்பது குறித்து உணவுத்துறை பரிசீலனை செய்து வருகிறது.

நல்லெண்ணெய்யைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்தின் தேவைகளுக்கு வேண்டிய அளவு இங்கு உற்பத்தியாவதில்லை. மற்ற மாநிலங்களிலிருந்து எண்ணெய் வரத்தை நாம் பெரிதும் நம்பியுள்ளோம். கடலை எண்ணெய்யின் விலைகளையொட்டி, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்களின் விலை உயர்வது வழக்கமாகியுள்ளது. நல்லெண்ணெய்யின் விலை இப்போது கிலோ ரூ. 9.35 முதல் ரூ. 10.45 வரை உள்ளது. சென்ற ஆண்டு விலைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இவை உயர்வாகவே உள்ளன. ஆனால், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரியில் இருந்த

## நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் கடலை எண்ணெய் விற்பனை!

வெளிச்சந்தையில் கடலை எண்ணெய்யின் விலை உயர்ந்துள்ளதையொட்டி சென்னை, கோயம்புத்தூர் நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள நகராட்சிகளிலும் கடலை எண்ணெய்யை கிலோ ரூ. 9.50 விலைக்கு குடும்பக் கார்டுகளின் பேரில் மாதம் ஒன்றுக்கு நான்கு கிலோ வீதம் விற்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முன் வந்துள்ளது. ஒரே நேரத்தில் ஒரு கிலோ எண்ணெய் வாங்குவது சிரமமாக இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளதால், ஒரு கிலோவுக்கும் குறைவாக வாங்க விரும்பும் பொதுமக்கள் ஒரு முறைக்கு 250 கிராம் அதாவது $\frac{1}{4}$ கிலோவுக்குக் குறையாமல் வாங்கிக் கொள்ளலாம் என்ற வசதியைச்செய்து கொடுக்க இப்பொழுது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முன்வந்துள்ளது.

அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து சுத்திகரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் சென்னை, கோயம்புத்தூர் நகரங்களிலும், அவற்றின் புறநகர்ப் பகுதிகளிலும் கிலோ ரூ. 8.50 விலையில் மாதம் ஒன்றுக்கு நான்கு கிலோ வீதம் விற்கப்படுகின்றது. பொதுமக்கள் விரும்பினால் இந்த எண்ணெய்யை ஒரு முறைக்கு 250 கிராமுக்கு குறையாமல் வாங்கிக் கொள்ளலாம்.

விலைகளைவிட இப்போதுள்ள விலைகள் குறைவாகக் காணப்படுகின்றன.

தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்த வரையில் கிலோ ரூ. 10.45 முதல் ரூ. 13.00 வரை விலை அமைந்துள்ளது. 1977 சனவரியில் இந்த விலைகள் ரூ. 15.50 முதல் ரூ. 18.00 வரை எட்டியிருந்தன. அதன் பின்பு விலைகள் மிகவும் குறைந்து, பின்னர் சற்று ஏறி, இப்போது கிலோ ரூ. 10.00 முதல் ரூ. 13.00 அளவில் உறுதிப்பட்டுள்ளன. தேங்காய் எண்ணெய்யைப் பொறுத்தவரை, கேரள மாநிலத்திலிருந்து வரும் எண்ணெய்யைத்தான் தமிழகம் பெரிதும் நம்பியுள்ளது. கடலை எண்ணெய்யின் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசும் மாநில அரசுகளும் மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய்யின் விலைகளையும் விரைவில் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கலாம்.

### நிரந்தரமான தீர்வு

விலைவாசிப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு காண்பதற்கு, உற்பத்திப் பெருக்கம், பண வீக்கத் தடுப்பு, சீரான விநியோகம் ஆகிய அம்சங்கள் ஒருங்கிணைந்த அனைத்திந்தியப் பொருளாதாரத் திட்டத்தின் பின்னணியில் செயல்படுவது இன்றியமையாததாகும். இதற்கு உரிய ஆக்க பூர்வமான பரிந்துரைகளை, மாநில அரசு மத்திய அரசுக்குச் செய்யும், அரிசி, கோதுமையைத் தவிர மற்ற, உணவுப் பொருள்களின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்த அரசுக்கு அதிக வாய்ப்பு இல்லை. உணவுப் பொருள்களின் மொத்த விற்பனை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது ஒரு கருத்து. இது கொள்கையளவில் வரவேற்கத்தக்கதாயினும், நடைமுறையில் இதை உடனடியாகச் செயல்படுத்துவதற்குச் சாதகமான சூழ்நிலை நாட்டில் இப்போது உருவாகவில்லை. உணவுப் பொருட்களின் மொத்த வியாபாரத்தை அரசு ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், செயற்கையாக உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு ஏற்படுத்துவதையும் மிதமிஞ்சிய விலை உயர்வு ஏற்படுத்துவதையும் அரசு அனுமதிக்கவும் முடியாது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், அரசின் சார்பு கொண்ட நுகர்பொருள் வாணிபக் கழகம் (சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்) போன்ற நிறுவனங்கள் மூலமாகவும், இன்றியமையாத உணவுப் பொருட்களின் விநியோகத்தை மேற்கொள்வது, இச்சிக்கலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உசிதமான வழிகளில் ஒன்றாகும்.

### நியாய விலைக் கடைகள்

இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையைத் திறந்து அங்கு அரிசி, கோதுமை மட்டுமல்லாது, பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், புளி, மிளகாய் போன்ற மற்ற உணவுப் பொருட்களையும் நியாயமான விலைக்கு விநியோகம் செய்யத் திட்டம் வகுக்கப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது தமிழ்நாட்டில் ஏறக்குறைய 6,000 கிராமங்களில் அந்தக் கிராமங்களிலேயே நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. ஆனால் இந்தக் கடைகளில் இப்போது பொது விநியோக முறையின் கீழ், அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை போன்றவை மட்டுமே பெரும்பாலும் விற்கப்படுகின்றன. இக்கடைகள் அனைத்திலும், மற்ற இன்றியமையா உணவுப் பொருட்களையும் விநியோகிக்க வழி செய்வது, நாம் எடுக்க உத்தேசித்திருக்கும் முதல்நடவடிக்கையாகும்.



அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்களை நியாயமான விலையில் 'அமுதம்' வழங்குகிறது.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 16,000-க்கு மேற்பட்ட ரெவின்யூ கிராமங்கள் உள்ளன. ஒரு கிராமத்திற்கு ஒரு கடை திறக்க வேண்டுமென்றால், இப்போதுள்ள சுமார் 6,000 கடைகள் நீங்கலாக; இன்னும் சுமார் 10,000 கடைகள் திறக்க வேண்டும். நிர்வாகச் செலவு மிதமிஞ்சி சென்றுவிடாமல், சிக்கனமாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவது என்ற அடிப்படையில் உணவுத்துறை பல்வேறு கோணங்களிலிருந்து இப்பிரச்சினையை ஆராய்ந்து வருகிறது. இப்பொழுது கிராமங்களில் செயல்பட்டுவரும் பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இக்கடைகள் நடத்தப்படலாம் என்பது ஒரு யோசனை. பெரிய கிராமங்களில் ஏற்கெனவே இயங்கி வரும் நியாய விலைக் கடைகளை மையமாகக் கொண்டு, சுற்றியுள்ள கிராமங்களுக்கு வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளன்று உணவுப் பொருட்களை எடுத்துச் சென்று அங்கு விற்பனை செய்யலாமா என்பது மற்றொரு யோசனை. கிராம மட்டத்தில் பணியாற்றி வரும் ஊழியர்களின் உதவியைக் கொண்டு, அவர்களுக்கு ஒரு சிறப்பு ஊதியம் அளித்து, அவர்கள் மூலமாக இந்த விற்பனையை ஏற்பாடு செய்யலாமா என்பது மற்றொரு யோசனை. இப்பல்வேறு வழிகளைத் தீவிரமாக ஆராய்ந்து, சிறந்ததாகவும் சிக்கனமாகவும் உள்ள ஒரு முறையில் இத்திட்டத்தை அடுத்த சில மாதங்களில் நான்கு மாவட்டங்களிலாகிலும், ஓராண்டுக் காலத்திற்குள் மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தும் பொறுப்பை மேற்கொள்வோம்.

*[35-உணவு மானிய கோரிக்கையின் மீது 9-8-1977 அன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]*

## முட்டையைப் பாதுகாக்கும் வழிகள்!

முட்டை ஒரு சத்துணவானாலும் விரைவில் கெட்டுப் போகும் தன்மையுள்ளது. முட்டை கெட்டுப் போகப் பல காரணங்கள் உள. அவற்றுள் முக்கியமானவை மூன்று:

(1) வெப்பம்: முட்டைகள் விரைவில் கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமானால் அவைகளைச் சேகரித்து வைக்கும் அறையின் வெப்பம் 50-55 டிகிரி பாரன்ஹைட் அளவுக்கு மேல் இருக்கக் கூடாது.

(2) காற்றின் ஈரப்பசை: முட்டைகளை 70-80 சதவிகிதம் ஈரப்பசை உள்ள அறையில் வைத்தால் அதிக நாட்கள் வைத்திருக்கலாம்.

(3) முட்டையின் வயது: நாள்பட்ட முட்டைகள் கெட்டுப் போக அதிக வாய்ப்பு உண்டு.

முட்டையின் தரத்தைப் பாதுகாக்கும் வழிகள்:

(1) கோழி வீட்டிலிருந்து முட்டைகள் நாள்தோறும் 3 அல்லது 4 முறையாவது எடுக்கப்பட வேண்டும்.

(2) அழுக்காக உள்ள முட்டைகளை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும்.

(3) சேமிக்கும்போது முட்டையின் சிறிய பகுதி கீழ் நோக்கி இருக்க வேண்டும்.

(4) முட்டையைச் சேமித்து வைத்திருக்கும் அறையில், மூக்கைத் துளைக்கும் மணமுள்ள பொருட்கள் எதையும் வைக்கக் கூடாது.

(5) அறையின் தட்பவெப்ப நிலை சரியாக இருக்க வேண்டும்.

தகவல்:

கால்நடைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



# காலத்திற்கு ஏற்ற வகையில்
# பாசன வசதிகளைச் சீரமைப்போம்

மாண்புமிகு
பொதுப்பணித் துறை அமைச்சர்
**திரு ச. இராமச்சந்திரன்**



தமிழ் நாட்டுப் பாசன வளர்ச்சிக்கு இடையூறுகள் பல உள்ளன. இம் மாநிலம் அதன் மேற்பரப்பு நீரோட்டத்தினை 93 சதவீதத்திற்கும் அதிகமாகப் பயன்படுத்தியுள்ளது. அண்டை மாநிலங்களிலுள்ள நீரைத் திருப்பி விட்டாலொழிய, இனிமேல் முக்கியப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்பு கிஞ்சித்தும் இல்லை என்று கூறலாம். தற்பொழுது நீரைப் பயன்படுத்தும் அளவைக் கொண்டு நோக்கின், இப்போது உள்ள பாசனப் பகுதிகளுக்கு ஆண்டுதோறும் போதுமான நீர் வழங்க முடியுமா என்பதே சந்தேகத்திற்கு இடமாயுள்ளது. ஆண்டுதோறும், பல பாசன அமைப்புகளில், நீர் பற்றாக்குறை பல்வேறு அளவுகளில் இருந்து வருகிறது. இத்துடன், அடுத்தடுத்து வரும் வறட்சியின், கடுமைகளைக் குறைக்கவும், அவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கவும், நிதி வாயில்களைத் திருப்பிவிட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, இதுகாறும் பயன்படுத்தப்படாத உள்ளூரில் உள்ள சிறு ஆற்றுப் படுகைகள், சிறு நீர்த் தேக்கங்கள், ஆகியவற்றின் உபரி நீரைத் தேக்குவதற்கான நடுத்தரப் பாசனத் திட்டங்கள்தான் நமது முக்கிய ஆதாரத் திட்டங்களாக உள்ளன. இத்திட்டங்களிலிருந்து கூட, நாம் உரிய அளவிற்கு மேல் பயனடைந்துள்ளோம். ஏற்கனவே முடிக்கப்பட்ட சில திட்டங்களில் நீரியல் மற்றும் சார்பு நிலை சம்பந்தமாக நாம் எவ்வளவு எதிர்பார்த்தோமோ அந்த அளவுக்குப் பலன் கிட்டவில்லை. கடந்த காலத்தில் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள் பல, விரிவாகப் புலனாய்வு செய்யப்பட்டதன் பேரில் தொழில் நுணுக்கம் மற்றும் பொருளாதார அடிப்படையில், பயனுள்ளவையா என்பதுகுறித்து நமக்கு திருப்தியளிக்கத் தவறிவிட்டன. மேலும் அத்திட்டங்கள் நிறைவேற்றப்படுவதால் ஏற்கனவே உள்ள ஆயக் கட்டுக்களுக்குக் கிடைக்கும் பாசன வசதியும் குறையுமோவென அச்சுறுத்துவதாகவும் உள்ளன.

## நிலநீர் ஆய்வில் முன்னோடி தமிழகமே!

மேற்பரப்பு நீர்வாயில்கள் குறைந்ததன் காரணமாக ஓரளவுக்கு நில நீரை நாம் படிப்படியாக, நாட நேரிட்டுள்ளது; அதிலும் இம்மாநிலத்தின் பல பகுதிகளில் நிறைவு செய்யும் தகுதிக்கு அதிகமாகவே நிலநீரை எடுத்துள்ளோம். நிலநீர் ஆய்வைத் திட்டமிட்டு முறையாக நடத்தி, வரைபடம் தயாரிக்கும் பணியில் மாநிலங்களிலேயே தமிழ் நாடு முன்னதாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் நில நீர் ஆய்வுப் பணிகள், தற்போது மும்முரக் கட்டத்தில் இறங்கியுள்ளன. இதனால் திட்ட வட்டமான பலன்கள் இன்னும் சில ஆண்டுகளில் கிடைக்கக் கூடும். ஆனால் மேற்கொண்டும் நில நீர் சொற்பமான அளவுக்கு மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுக்க அனுமதிக்கப்படுகின்ற அதே நேரத்தில், ஊற்று நீர் பெருகவும், ஏற்கனவே குறைந்த நீரளவைச் சேமிக்கவும் உடனடியாகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

## பாசன வளர்ச்சிக்கான அரசு கொள்கைகள்

பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதிலும், அணுகு முறையிலும், அடிப்படை மாற்றம் தேவை என்பதை இந்நிலைமை திண்ணமாக எடுத்துக் கூறுகிறது. ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டப் பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டும். திட்ட மூலதனச் செலவுகளைக் கூடுதலாக்க வேண்டியதும் அவசியமாகிறது. உற்பத்தி அளவையொட்டித் திட்ட முதலீடுகள் இருக்க வேண்டும். சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுதல், நீர் வாயில்களை அவ்வப்போது முறையாகப் பராமரித்தல், ஆற்றுப் பாசன, ஏரிப் பாசன அமைப்புகளைக் காலத்திற்கேற்றவாறு புதுமைப்படுத்துதல் மற்றும் இம் மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரைத் திருப்பி விடுதல் ஆகியவை புதிய பாசன வளர்ச்சிக்கான அரசுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக விளங்கும்.

இதற்கு இணங்க பாசனத் திட்டங்களை முழுவதுமாகச் சீரமைத்து, பயனுள்ள வகையிலும், செவ்விய முறையிலும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக, பெரிய, நடுத்தர பாசனத்திற்கான ஒதுக்கீடு, 1975-76ல் சுமார் ரூ. 11.9 கோடியாக இருந்ததை, இந்த ஆண்டில் ரூ. 24.73 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. பாசனம் குறித்த மொத்த மூலதனச் செலவு 1975—76ல் ரூ. 41.01 கோடியாகவும், 1976—77ல் ரூ. 48.28 கோடியாகவும் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டில் ரூ. 50.53 கோடியாக இருக்கும்.

## பெருந் திட்டங்கள்

கீழ் நீராறு அணையும் சுரங்கப் பாதை அமைக்கும் பணியும் முடியும் நிலையில் உள்ளன. அதனால் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டமும் முடியும் நிலையில் உள்ளது. நடப்பாண்டில், இத் திட்டத்திற்கு ரூ. 440 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தினின்று கிடைக்கும் நீரின் அளவு, எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாக உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட ஆயக்கட்டுப்பகுதியான 2,50,000 ஏக்கரில், சுமார் 1,80,000 ஏக்கர் நிலம் மட்டுமே ஒவ்வோர் ஆண்டும் பாசனம் பெறலாம். இரண்டாண்டுக்கு ஒரு முறை பாசனம் அளிக்கும் முறையின் கீழ், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1,80,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திற்குப் பாசனமளிக்கும் நோக்கத்துடன், 1976 ஜனவரியில் இந்த ஆயக்கட்டு மேலும் 1,15,000 ஏக்கர் பரப்பளவுக்கு அதிகப்படுத்தப்பட்டது. இதனை எதிர்க்கு. அந்தப் பகுதியிலிருந்து பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், இந்த முடிவை அரசு மறு பரிசீலனை செய்து வருகிறது. மிகவும் மன நிறைவளிக்கத் தக்கதும்,



நிலநீர் எடுத்து
நீர்வளம் பெருக்குவதில்
முன்னோடியாக உள்ளது தமிழகமே'



பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திற்கு நடப்பாண்டில் ரூபாய் 440 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கி உதவி அளிக்கும் இத் திட்டம், வைகை அணைக்கும் பேரணைக்கும் இடையே இணைப்பு கால்வாய் ஒன்று வெட்டுதல், முக்கிய கால்வாய்களுக்கும், கிளை ஆறுகளுக்கும் கரை அமைத்தல், பொறி மதகுகளுக்கு மேம்பாடுகள் ஆகியவற்றைச் செய்வதன் மூலம், இத் திட்டத்தின் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போதுள்ள பகுதியில் 18,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திலுள்ள இரண்டாம் போகப் பயிருக்கும் பாசனமளிப்பதுடன், சுமார் 40,000 ஏக்கர் புதிய பகுதிக்கும் பாசன வசதி அளிக்கும்.

இத் திட்டத்திற்காக இவ்வாண்டு ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

வைகைக் கால்வாய்களைக் காலத்திற்கேற்றவாறு நவீனப்படுத்துதல் நிறைவேற்றப்பட்டு வரும் ஒரு பெரிய திட்டமாகும். இதற்கு ரூ. 823 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாசனமளிக்காது விடுபட்ட சுமார் 10,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிப்பதுடன், சுமார் 95,880 ஏக்கர் ஏரிப் பாசனம் பெறும் பகுதிகளுக்கு இடையறுப் பாசன வசதி அளிப்பதற்கான இத்திட்டங்களை நடப்பாண்டிலேயே முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் பழைய கழிமுகப் பகுதியிலுள்ள காவிரிப் பாசன ஏற்பாட்டிற்கு விரைவு படுத்தப்பட்ட பழுதுபார்க்கும் பணித் திட்டத்திற்காக, இந்த ஆண்டு ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முழு அளவில் காலத்திற்கேற்ப நவீனப்படுத்துவதற்கான தெளிவமைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

பழைய காவிரிக் கால்வாய்கள், பவானி மற்றும் அமராவதி திட்டங்களுக்கு மேம்பாடுகள் செய்வதும் அரசின் கவனத்தை ஈரத்துள்ளது.

## நடுத்தரப் பாசனத் திட்டங்கள்

அதிக நிதி ஒதுக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு வரும் 11 நடுத்தர பாசனத் திட்டங்களில் கீழ்க்கண்ட ஏழு திட்டங்களை இவ்வாண்டில் செய்து முடிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இவ்வாண்டு 35,000 ஏக்கர் நிலம் புதிதாக பாசனம் பெறும்.

(1) மருதா நதி ;

(2) கொடகனாறு ;

(3) வறட்டுப் பள்ளம் ;

(4) குண்டேரிப் பள்ளம் ;

(5) வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கம் ;

(6) வரதமா நதி ;

(7) பி. டி. ராஜன் கால்வாய்.

வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத் தோப்பில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 355 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 1,692 எக்கர் நிலம் புதிதாகப் பாசனம் பெறும். மேலும், ஏற்கெனவே பாசனம் பெறும் 10,386 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின் மூலம் இடையறுப் பாசனம் பெறும்.

## சிறப்புச் சிறு பாசனத் திட்டம்

இம் மாநிலத்தின் வறட்சிப் பாங்கான மாவட்டங்களில் ஏரிப் பாசனம் முக்கிய இடம் பெறுகிறது. சில நூறு ஏக்கர் பரப்பளவு வரையான சிறு நிலப் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிப்பதற்கென்று காட்டாற்று வெள்ளத்திற்கும், திடீர் வெள்ளத்திற்கும் தடை போட்டு நீரைத் தேக்க சிறு பாசனப் பணிகள் மேற்கொள்ளுதல், நிலநீர் மட்டத்தை வலுப்படுத்தவும், தற்போது பாசனம் பெற்று வரும் நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி அளிப்பதுடன் சிறிய பாசன விஸ்தரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தவும், புதிய ஏரிகளையும், கசிவு நீர்க் குட்டைகளையும் அமைத்தல் ஆகியவை இம் மாநிலத்தில் நீர்வளப் பற்றுக்குறைப் பிரச்சினையினால் ஏற்பட்டுள்ள இடையூறுகளைக் களைய நாம் மேற்கொண்டுள்ள திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இத் திட்டத்தில் சாத்தியக் கூறுகள், வரையறுத்த அளவுக்கே உள்ளன. மேன்மேலும் கூடுதலான பாசன வசதிகள் பெற, நீரை உரிய அளவுக்கே பயன்படுத்துவதில் மாநில அரசு தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தை மதிப்பாய்வு செய்ததில், தொழில்நுட்ப, பொருளாதார குறைபாடுகள் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இந்தக் குறைபாடுகள், இத்தகைய திட்டங்களினால் ஏற்படும் உற்பத்தித் திறனளவைக் கணிசமான அளவிற்குப் பாதித்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கு நாம் செய்யும் முதலீடுகள் ஆதாய மிக்கவையாக இருக்க வேண்டும். திட்டங்கள் நீரியல் வகையில் நம்பத்தக்கவையாகவும் இருக்க வேண்டும். திட்டப் பணிகள் உரிய காலத்தில் முடிக்கப்படுமாறு பணிகளை நெறிபடுத்த வேண்டியதாகவும் உள்ளது. திட்டத்திற்காகும் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டுயுள்ளன. பாசனத் திட்டங்களினால் ஏற்படும் நீர்வளம், அதன் வளர்ச்சியும் பயன்படுத்தும் முறையும் மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.

இத்தகைய பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்ந்து செயல் திட்டத்தை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட பணிக் குழுவின் பரிவுரைகளைக் கருத்தில் கொண்டு, இந்தச் சிறு பாசனத் திட்டத்திற்கு இயல்பான சிறப்பும், பயன்முறையும் அளிக்க அரசு கருதியுள்ளது. உபரி நீர் அளவை தீர்மானிப்பதற்காக நீர்ப் படுகை வாரியாக முறையான ஆய்வுகள் நிறைவேற்றப்படும். பயன்படுத்தப்பட வேண்டிய கூடுதல் நீரளவுக்கான ஆண்டுத் திட்ட இலக்குகள், முடிக்கப்பட வேண்டிய திட்டப்பணிகள், பாசனம் பெறும் புதிய பகுதி ஆகியவை யாவும் திட்டமிட்டு வகுக்கப்படும். பொருளாதார சாத்தியக்கூறுகளை நிர்ணயிக்கும் அளவு கோல்களை மாற்றியமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. பின் தங்கிய பகுதிகளுக்கும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இவ்விதிகளைத் தளர்த்துவதற்கான ஏற்பாடும் செய்யப்படும். இத்திட்டப் பணிகள் பெரும்பாலும் சுமார் இரண்டாண்டுக் கால அளவுக்குள் முடிப்பதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். 1975-76, 1976-77 ஆண்டு ஒவ்வொன்றுக்கும் ரூ. 350 இலட்சம் ஒதுக்கியதற்கு மாறாக, இவ்வாண்டில் சிறப்புச் சிறு பாசனத் திட்டப் பணிகளுக்கு ரூ. 450 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இழுபறியாக இருந்து வரும் எஞ்சிய திட்டங்கள் இவ்வாண்டில் முடிக்கப்படக் கூடும்.

## சிறு பாசன அமைப்புக்களை காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்தல் மற்றும் புதுப்பித்தல்

ஏரிப்பாசன அமைப்புக்களின் கீழ் வரும் ஆயக்கட்டுகளைக் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கும் பணி இப்போது எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. இது வெகு காலத்திற்கு முன்னமேயே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். தென்னார்க்காடு மாவட்டத்தில் வீராணம் ஏரியைச் சேர்ந்த ஆயக்கட்டின் ஒரு பகுதியைக் காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கும் முன்னோடித் திட்டம் இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## பாசன வாயில்கள் பராமரிப்பு

புதிய பாசனத் திட்டங்களைத் தொடங்கி, புதிய பாசன வளத்தை உருவாக்குவதன் மூலம் கிட்டிய நன்மையானது, நிலையான உறுதியான பாசன வாயில்களைப் புறக்கணித்ததன் காரணமாக, வீணாகும் கட்டத்தில் இருந்தது. குறிப்பாக, முறைப்படுத்தப்படாத ஏற்பாட்டின் கீழ் வரும் பாசன வாயில் குறித்து எவ்வித சிரத்தையும் காட்டப்படவில்லை. சிறு பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாக, விரைவு படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம் தொடங்கப்பட்டது. விரைவு படுத்தப்பட்ட சிறு பாசனத் திற்கென செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மொத்தத்தில் போதுமானவையாக இல்லை. பாசன வாயில்கள் தனிப்பட்ட முறையில் பழுது பார்க்கப்படுவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சிறு பழுதுபார்ப்புப் பணிகளுக்கு ஒப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டத்தை ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்வதற்கு அரசினால் அமைக்கப்பட்ட பணிக் குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் வடிநிலம் வாரியாக, பாசன ஏற்பாடுகள் பராமரிப்புக்காக, விரிவான வழி முறைகள், நடைமுறைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றை வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பாசன வாயில்கள் குறித்த விவர அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு, வரிசைக் கிரமமாக ஆண்டு தோறும் என்னென்ன பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்வது என்பது குறித்த பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்படும். வழக்கமான பராமரிப்புப் பழுது பார்ப்புப் பணிகளுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளன. பாசன எற்பாடுகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி, அவற்றைப் பேணி வரச் செய்வதும் முக்கிய

## சென்னை மாநகருக்கு கிருஷ்ணா ஆற்று நீர்!

மகாராட்டிரம், ஆந்திரப் பிரதேசம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் கிருஷ்ணா ஆற்று நீரில் தங்களுக்குக் கிடைக்கும் பங்கிலிருந்து 500 கோடி கன அடி நீரை 14-4-1976 அன்று செய்து கொண்ட முறையான ஒப்பந்தத்தின்கீழ் சென்னை மாநகர குடிநீர் தேவைக்குத் தருவதாக ஒப்புக் கொண்டுள்ளன. இத்திட்டம் பற்றிய விரிவான விவரங்களைத் தயாரிக்க 145 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி நீர்த் தேக்கத்திற்குத் திறந்த கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்தின் தொடக்க அறிக்கையைத் தமிழக அரசு ஏற்கெனவே அனுப்பியுள்ளது. மகாராட்டிரம், கருநாடக மாநில அரசுகள், நீர் வரும் வழி முழுவதும் மூடப்பட்ட கால்வாய் மூலம் நீர் வழங்குவதற்கான மாற்றுச் செயற் குறிப்புகளைக் கொடுத்துள்ளன. திறந்த கால்வாயில் நீர் விடப்படும் நேர்வில், இக்கால்வாயின் நீர் ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடாது என்ற உறுதியை இந்த இரு மாநிலங்களும் கோருகின்றன.

சென்னை மாநகரின் அதிகமான நீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினைகருக் கூடிய விரைவில் தீர்வுகாண மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவும் இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறவும் இவ்வரசு முயற்சி செய்யும்.

(ஆதாரம்: பாசன—பொதுப்பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகள் 1977-78)

## பணிபுரியும் பொறியாளர்கள் பட்ட மேற்படிப்புப் பயிலுவதற்கான வசதிகள்!

தமிழ்நாட்டுப் பொறியாளர்கள் ஆற்றலில் இந்நாட்டிலுள்ள எவருக்கும் சளைத்தவர்களல்ல. 1976-ஆம் ஆண்டின், பெரு வெள்ளம் போன்ற உயிர், உடைமைகளைக் காக்க வேண்டிய அவசரம் மற்றும் இக்கட்டான நிலைமைகளில் அவர்களின் திறமையின், உயர் தரத்தினைக் காண முடிகிறது. பணியில் உள்ள போதே அவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கான வாய்ப்புக்கள், அவர்களுடைய திறமையினை மிகுதிப்படுத்துவதாக அமையும். நடப்பாண்டில், பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஐந்து உதவி நிர்வாகப் பொறியாளர்கள், மூன்று உதவிப் பொறியாளர்கள், மேலும் நெடுஞ்சாலை — கிராமப் பணிகள் துறையைச் சேர்ந்த இரண்டு உதவிக் கோட்டப் பொறியாளர்கள், இரண்டு உதவிப் பொறியாளர்கள் ஆகியோரை அரசுச் செலவில பட்ட மேற்படிப்புப் பயிலும் பொருட்டு, அனுப்பி வைக்க அரசு திட்டமிட்டுள்ளது. பொறியியல் துறைக்குத் திறமையான தொழில் நுட்பப் பணியாளர்கள் அச்சாணி போன்றவர் ஆவர். *

மான அம்சங்கள் என்ற வகையில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணி என்னும் கோட்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய பழுது பார்ப்புப் பணிகள் உடல் உழைப்பை முக்கியமாகக் கொண்டவை. இந்தப் பழுதுபார்ப்புப் பணியில் பெரும் அளவு மண் வேலையாகும்; இதன் மூலம், கோடைக் காலத்தில் உள்ளூர் மக்களுக்கு ஆதாயமான ஆக்க பூர்வமான வேலைவாய்ப்பு அளிக்கும் பெருந் திட்டமொன்றைச் செயல்படுத்தும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியன்று பழுது பார்ப்புப் பணிகளைத் தொடங்கலாம். இதனால் உள்ளூர் வாசிகள் தங்களுக்கு வேலையற்ற நாட்களில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். நிலப் படை ஒன்றை அமைப்பதன் மூலம் கோடைக்கால வேலை வாய்ப்புகள் விரிவுபடுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பாசன வாயில்கள் பராமரிப்புப் பணி இத்திட்டத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

## மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளைத் திருப்பிவிடுதல்

நம் மாநிலத்திற்கு வெளியே, உபரியாக நீருள்ள ஆற்றுப் படுகைகளிலிருந்து, நீரை நமது மாநிலத்திற்குத் திருப்பி விடுவதனால் மட்டுமே இனி இம் மாநிலத்தில் பெரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இதற்கு எடுத்துக் காட்டாக 19-ஆம் நூற்றுண்டில் முடிக்கப்பட்ட பெரியாறு திட்டம் அண்மை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக் குளம்—ஆளியாறு திட்டம் ஆகியவற்றைக் கூறலாம். இந்த அரசு பரஸ்பர ஒத்துழைப்பு, நல்ல எண்ணம் ஆகியவற்றின் அடிப்படையில் அண்டை மாநிலங்களுடன் இரு சாராரும் பயனுறும் வகையில் உறவு வைத்துக் கொள்ளப் பாடுபடும்.

கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் போதுமான அளவு உபரி நீர் இருந்தும், அந்நீர் பெரிதும் பயன்படுத்தப் பெறுமலேயே அரபிக் கடலில் சென்று கலக்கின்றது. இந்த உபரி நீரின் ஒரு பகுதி பயனுள்ள முறையில் கிழக்கு முகமாகத் திருப்பப்பட்டால், தமிழ் நாட்டில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களின் வறண்ட பகுதிகள் நீர்ப் பாசன வசதி பெறக் கூடும். அதே சமயம் பாசன, மின்சார உற்பத்தித் திட்டங்களினால்



**கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடி, யாருக்கும் பயனின்றி அரபிக் கடலில் கலக்கும் ஆற்று நீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடுவதற்கான வாய்ப்பு பற்றி ஆராய, தொழில் நுட்பக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

கேரள மாநிலமும் பயனடையலாம். கேரள மாநிலத்திலுள்ள கீழ்க்காணும் ஆறுகளிலிருந்து சுமார் 8,200 கோடி கன அடி நீரைத் தமிழ் நாட்டிற்குள் திருப்பி விட முடியுமென்று இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

(1) பாண்டியாறு-புன்னப்புழா-மோயாறு.

(2) சோழத்திப் புழா.

(3) பங்கி ஹல்லா.

(4) ஆனமலையாறு.

(5) இடுக்கி-கல்லாறு.

(6) பாம்பாறு.

(7) அச்சன் கோயிலாறு.

(8) கல்லடா-அத்திங்கல் - கர்ணமாணு.

1976, டிசம்பர்த் திங்களில் மத்திய அரசு, கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் மேற்காகப் பாயும் ஆறுகளின் உபரி நீரைக் கிழக்கு முகமாகத் திருப்புவதற்கான வாய்ப்பு பற்றி விரிவாக ஆராயத் தொழில் நுட்பக் குழுவொன்றை நியமித்தது. இக்குழுவில், தமிழ் நாடு, கேரளம், கருநாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். மத்திய நீர் ஆணைக் குழுவின் உறுப்பினர் இதன் அமைப்பாளராவார். மத்திய நீர் ஆணைக் குழுவின் இயக்குநர் இதன் செயலாளர் ஆவார். இக் குழுவின் ஆய்வு வரம்பு பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

### காவிரி நீர்ப் பிரச்சினை!

1976-ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்களில் மாநிலங்களுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது காவிரி நீர்ப் பிரச்சினையில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமானது, ஆற்றுப்படுகையில், தற்போதுள்ள பாசனப் பகுதிகளுக்கு, இயல்பான ஓர் ஆண்டில் தேவைப்படும் நீரை வழங்க உத்தரவாதம் அளிப்பதாக இருக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்போதுள்ள பாசனப் பகுதிகளைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்க, மத்திய நீர் ஆணைக் குழு உறுப்பினரின் தலைமையின் கீழ், மூன்று மாநிலங்களின் தொழில்நுட்ப அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை, மத்திய அரசு அமைத்துள்ளது.



அமைக்கக் கருதியுள்ள காவிரிப் பள்ளத் தாக்கு அதிகார மன்றத்திற்கான வரைவு அமைப்பினை வகுக்கும் பொருட்டு மூன்று மாநில அரசுகளைச் சேர்ந்த பொதுப்பணித் துறைச் செயலாளர்கள், மத்திய நீர் ஆணைக் குழுவின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய மற்றொரு குழு அமைக்கப்பட்டு உள்ளது. காவிரி நீர்ப் பங்கீடு செய்வது குறித்தத் திட்டம் எதிலும், ஏற்கெனவே உள்ள பாசனப் பகுதிகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதனைத் தமிழ் நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

இப்பிரச்சினைக் குறித்து நீண்ட கால ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படும் வரை, வேளாண்மைக்கான உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் போதுமான அளவு நீர் அணையிலிருந்து திறந்து விடப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்.

1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நீர் வழங்குவதை கருநாடக அரசு 1974 ஆகஸ்டு முதல் முறைப்படுத்தவில்லை. 1976-77-ஆம் ஆண்டில், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பாதகமான பருவநிலை காரணமாகவும், கருநாடக அரசு நீரைத் தேக்கி வைத்தாலும் மேட்டூர் அணைக்கு நீர் வருவதில் கடும் பற்றுக்குறை நிலவியது. கல்லணைக் கால்வாய், மேட்டூர் கால்வாய்கள், புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய் ஆகியவற்றைப் பாசனத்திற்காகத் திறந்துவிட இயலவில்லை.

நடப்பாண்டு இயல்பாக அமையும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேட்டூர் நீர்த் தேக்கம் ஜூலைத் திங்கள் 15ஆம் நாளன்று திறந்து விடப்பட்டது. தமிழ்நாடு, கருநாடகம் ஆகிய மாநிலங்களுக்கிடையே பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து கொண்டு உதவி செய்யும் நல்ல எண்ணம் காரணமாக நாம் போதுமான அளவு நீரைப் பெற முடிந்தது. இந் நல்லெண்ணத்தை மேலும் மேலும் வளர்ப்பதே இவ்வரசின் முயற்சியாக இருக்கும்.

[தமிழ் நாடு 'சட்ட மன்றப் பேரவையில் 19-8-77 அன்று, பாசன-பொதுப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டது].

## பொதுப்பணித் துறையின் கட்டடம் கட்டும் பணிகள்

தமிழ்நாடு மாநிலத்தில் அரசுக் கட்டடப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றும் முக்கியப் பொறுப்பு பொது பணித்துறைக் கட்டடப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, வரையறுக்கப்பட்டுள்ள சென்டேஜ் கட்டணத்தைச் செலுத்துவதன்பேரில், நகராட்சிகள், மாவட்ட விற்பனைச் சங்கங்கள் மற்றும் அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான சில ஒப்படைப்பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இந்திய அரசு சார்பில், தொழிலாளர் காப்புறுதித் திட்டங்கள், தொலைக் காட்சிக் கூடங்கள் இவை போன்ற யாவும், பொதுப் பணித் துறையால் நிறைவேற்றப்பட்டன. ஆய்வு மாளிகைகள், சுற்றுப் பயண இல்லங்கள் முதலியன யாவும் பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளன. மொத்தம் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் தருமபுரியில் புதிய சுற்றுப்பயண இல்லம் கட்டுதல், பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தினுள் கூடுதல், அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், செங்கல்பட்டு மாவட்டம் மேற்பார்வை பொறியாளருக்கான அலுவலகக் கட்டடம் ஒன்று கட்டுதல் ஆகிய பணிகளை இந்த ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வெள்ளம் ஏற்படாமல் தடுப்பது பற்றிய ஆய்வு...!

1976-ம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் திங்களில், சென்னை மாநகர் வரலாறு காணாத வகையில் வெள்ளத்திற்குள்ளாகியது. இப்பெருவெள்ளம் காரணமாகச் சொத்துகளுக்கு அதிக சேதம் ஏற்பட்டதுடன் மக்கள் சொல்லவொண்ணாத் துன்பத்திற்கு ஆளாயினர். இப்பெருவெள்ளத்திற்கான காரணங்களை ஆய்வு செய்யவும் இத்தகைய கொடிய நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகள் குறித்தும் பரிவுரைகள் செய்யவும் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் பரிவுரைகளைச் செயற்படுத்துவது பற்றி உரியவாறு பரிசீலனை செய்யும். *



முதலமைச்சர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக புதுடில்லி சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், மேதகு குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்களைச் சந்தித்து, மாலை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்தார். அதன்பின், "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்னாள் முதலமைச்சர் திரு கு. காமராஜ் அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்துவைக்க வாருங்கள்" என்று குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் உடன் உள்ளார்.

# படமும் செய்தியும்

இந்திய விடுதலை நாள் விழாவின் ஒரு அங்கமாக 15-8-1977 அன்று, தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறையால், சென்னை இராஜாஜி மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்கள் அப்பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் அக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.





மேதகு இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் 17-8-1977 அன்று திருப்பதி செல்லும் வழியில் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வருகைதந்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்களை வரவேற்றார். மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களும் அருகில் உள்ளார்.

திரு யோஷியோ சகூரா உச்சி என்ற ஜப்பான் நாட்டு எம்.பி., அவர்கள் தலைமையில், சென்னைக்கு வருகை தந்த ஜப்பான் நாட்டு நாடாளுமன்றத்தின் மூவர் தூதுக்குழுவினர், 17-8-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்து, தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.





ஜப்பானிய நாடாளுமன்றத்தின் மூவர் தூதுக்குழுவிற்கு, 17-8-1977 அன்று, ஹோட்டல் சோழாவில், அரசுச் சார்பில் அளிக்கப்பட்ட விருந்தின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தஞ்சாவூர்த் தட்டுகளைப் பரிசாக வழங்கினார்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள், 18-8-1977 அன்று, திருப்பதியிலிருந்து சென்னைக்கு வருகை தந்தபோது, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.





மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவ ரெட்டி அவர்கள், 18-8-1977 அன்று, சென்னை ராஜ்பவனில் மாங்கன்று ஒன்றை நட்டார்.

சென்னை ராஜ்பவனில், அண்ணல் காந்தியடிகள் திருஉருவப்படத்தை, 18-8-1977 அன்று மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்கள் திறந்து வைத்தார். மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மத்திய அரசின் எரிபொருள் அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்களும் உடன் உள்ளனர்.





# மக்களின் உடல் நலம் காத்திடுவோம்!

மக்களின் சிறந்த உடல் நலமே, எல்லாப் பொதுச் சுகாதாரத் திட்டங்களின் நோக்கமாகும். இந்தத் திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்துவதற்கு, சமுதாயத்தில் எந்த அளவுக்கு நோய்கள் பரவியுள்ளன என்கிற தகவல் மிகவும் இன்றியமையாததாகும். மரணம், நோய்ப் பரவும் நிலை குறித்து மட்டுமே அறிவது பொதுமானதல்ல. உடல் நலத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பற்பல திட்டங்களின் மூலம் எந்த அளவுக்கு மக்கள் பயனடைந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். மேலும் மக்கள் தொகையில் 70 சதவிகிதம் கிராம மக்கள் என்பதால் அவர்கள் சிறந்த முறையில் கவனிக்கப்பட வேண்டும். இந்நோக்கத்தை எய்தும் பொருட்டு, அரசு பல ஆண்டுகளாகவே வெவ்வேறு மக்கள் நலப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

தொற்று நோய்த் தடுப்பு, கட்டுப்பாடு, தாய்-சேய் நலன், மக்கள் ஊட்டச் சத்துத் தரத்தை மேம்படுத்தல் ஆகியவை உட்பட சமூகச் சுகாதார நலனுக்கு வகை செய்தல், போதுமான அளவுக்குச் சுகாதாரக் கல்விப் பணிக்கு வகை

மாண்புமிகு
முதலமைச்சர்
திரு எம்.ஜி.ஆர்.



செய்தல் உணவுப் கலப்படத்தைத் தடுத்தல், பிறப்பு-இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதை மேம்படுத்தல், ஆகியவை இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும்.

மாநிலம் முழுவதும் பரந்து அமைந்துள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் மூலம் சுகாதார நலப் பணிகள் அளிக்கப்படுகின்றன.

## ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

ஆரம்பச் சுகாதார நிலையம் கிராமக் குடும்ப நலப் பிரிவு, கிராமப் பகுதிகளில் அடிப்படை மருத்துவப் பணியை மேற்கொள்ளும் முக்கியமான பயனுள்ள அமைப்பு ஆகும். சுமார் 130 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். எஞ்சிய ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இரண்டு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். அடிப்படை மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக மருத்துவ அதிகாரிகளின் இயங்கும் குழு இரண்டு குறைந்தது வாரத்திற்கொரு முறையாவது கிராமங்களுக்குச் செல்வது இயலும் பொருட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் சிலவற்றின் மூன்றாவது மருத்துவ அதிகாரி ஒருவரது பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

383 ஆரம்பச் சுகாதார நிலையங்களுள் 192 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டடங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மற்றுமொரு ஆரம்பச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 190 தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 4.37 கோடி செலவாகும். அதிகச் செலவை முன்னிட்டு, கட்டடங்கள் கட்டும் பணி படிப்படியான திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும்.

## ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் ஆகியவற்றுக்கு மருந்துகள்

அவசியமான, உயிரைக் காப்பாற்றக் கூடிய மருந்துகளைப் போதுமான அளவு வைத்து வரும் பொருட்டு, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்காக ஏற்கெனவே கிடைத்து வரும் ஆண்டு நிதி ஒதுக்கம் ரூ. 10,000 ஆகும். இது ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராம மக்களின் மருத்துவத் தேவைகளை உரிய நேரத்தில் நிறைவு செய்வதுதான் இதன் நோக்கம். கூடுதல் நிதி ஒதுக்கமான ரூ. 2,000 எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. 1977-78ல் இந்த நிதி ஒதுக்கத்தை ரூ. 12,000-த்திலிருந்து ரூ.14,000-க்கு உயர்த்துவது என்ற ஒரு செயற்குறிப்பும் உள்ளது.

துணை நிலையங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 600 ஏற்கெனவே கிடைத்து வருகிறது. தற்போதுள்ள எல்லாத் துணை நிலையங்களுக்கும் குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு துணை நிலையம் ஒன்றுக்கு ரூ. 200 கூடுதல் நிதி ஒதுக்கமும் அனுமதிக்கப்பட்டது. இக் கூடுதல் நிதி ஒதுக்கம் 1977-78ஆம் ஆண்டிலும் கிடைக்கும். மேலும், பல நோக்கு சுகாதார ஊழியர்கள் திட்டம் செயலில் உள்ள தென் ஆர்க்காடு, மதுரை, கன்னியாகுமரி, சேலம், செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படும் துணை நிலையங்களுக்கு மருந்துகளை வாங்குவதற்கு ரூ. 2,0000 நிதி ஒதுக்கம் செய்ய அரசு அனுமதியளித்துள்ளது.

## மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்ட ஒருங்கிணைந்த மேம்பாட்டின் கீழ் மருத்துவ நலனுக்கு வகை செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ் கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. உதகமண்டலம் வட்டாரத்திற்காக தூனேரியில் 1976ல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கூடலூர் வட்டாரத்திற்காக 1977ல் நிலக்கோட்டையில் மற்றொரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களும் தேவையான பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இது, மத்தியத் துறைத் திட்டமாகும்.

காக, சேலம் மாவட்டம், கொல்லி மலை வட்டாரத்திலுள்ள வாழவந்த நாடு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கூடம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## சிறிய சுகாதார நிலையங்கள் (Mini Health Centres)

இது, மத்திய அரசு, மாநில அரசு, தொண்டு நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து 1:1:1 என்ற விகிதாச்சாரத்தில் பெறும் நிதியுதவியுடன், தொண்டு நிறுவனங்கள் கிராமங்களில் நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்பு, நோய்க்குப் பின்னர் உடல் நலம் பேணுதல் ஆகியவை அடங்கிய சுகாதார நல அடங்கல் பணிகள் வழங்கும் ஒரு திட்டமாகும்.



மலைவாழ் பழங்குடி மக்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, நடப்பாண்டில் ரூபாய் 20.26 இலட்சம் செலவிடப்படும்.

## பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு (கல்வராயன் குன்றுகள்), தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகளில் வசித்து வரும் பழங்குடியினரது சுகாதார நிலையை உயர்த்தும் பொருட்டு, 1977-78ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காக ரூ. 20.26 இலட்சம் செலவில் சுகாதார நல அடங்கல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு உள்ளது. பழங்குடியினரில் யார் யாருக்கு மேக நோய் கண்டுள்ளது தென்பதைக் கண்டுபிடிப்பதற்

தமது உடல் நலனைப்பார்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பும் எவரும் சிறிய ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சிகிச்சைப்பெறுவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இச் சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள், சாதி, மத பேதமில்லாமல் (சமயச் சார்பற்ற அடிப்படையில்) 1,000 குடும்பங்களுக்கு அல்லது 5,000 பேருக்கு சுகாதார நல அடங்கல் பணிகளை நல்கும். சிறிய ஆரம்பச் சுகாதார நிலையம், அருகிலுள்ள வங்கியில் ரூ. 3,000 வைப்பீடு செய்ய வேண்டும். இதற்குச் சமமான தொகையை மாநில, மத்திய அரசுகள் வழங்கும்.

மொத்தச் செலவில் 1/3 பாகத்தை ஏற்பதற்கு இந்திய அரசு



இசைவு அளிக்கும் வரையில், சிறிய ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கான மொத்தச் செலவு ரூ. 18,000-ல் பாதியை ஏற்க தமிழ்நாடு அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அத்தகைய சிறிய சுகாதார நிலையங்கள் 34-க்கு அரசு அனுமதியும் வழங்கியுள்ளது. இந்நிலையங்கள் 1-6-77 லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. இது தவிர, முதல் தொகுதியான 34 சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பொருந்தும் வரையறைகள், நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை நடத்த வேறு சில தொண்டு நிறுவனங்களும் முன் வந்துள்ளன. இது குறித்து அரசுக்காகும் கூடுதல் செலவு (அதாவது மொத்தச் செலவில் 50 சதவீதம்) ரூ. 1.80 இலட்சமாகும்.

### மாவட்ட மேம்பாட்டுச் செய்முறை விளக்கத் திட்டம்

மதுரை மாவட்டம் திண்டுக்கல் கோட்டத்தில் (பத்து வட்டாரங்கள் அடங்கியது ஒருங்கிணைந்த அடங்கல் முனைப்புச் சுகாதாரப் பணிகளை நல்குவதற்காக மாவட்ட மேம்பாட்டுச் செய்முறை விளக்கத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. காந்தி கிராமத்திலுள்ள கிராம மருத்துவ வசதி நல நிலையம் இத்திட்டத்தை செயலாற்ற எடுத்துக் கொண்டுள்ளது.

### சுகாதாரப் பணியாளர் பல்நோக்குத் திட்டம்

செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, மதுரை, சேலம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுகாதாரப் பணியாளர் பல்நோக்குத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத் திட்டம், கிராமப் பகுதிகளில் நோய்த் தடுப்பு, நோய்த் தீர்வு, சுகாதாரப் பணிகளைச் செயற்படுத்துவது சம்பந்தப்பட்டதாகும். சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பது உட்பட, சுகாதார நல அடங்கல் பணிகளை நல்க ஒவ்வொரு 5,000 பேருக்கும் இரண்டு பேர் (ஆடவர் ஒருவர், மகளிர் ஒருவர்) நியமிக்கப்படுவர். பயிற்சி முடிந்து பணியாளர்கள் திரும்பிய பின்னர், இத்திட்டம் முனைப்பாகச் செயற்படுத்தப் படும்.

### தாய்-சேய் நலப் பணிகள்

தாய்-சேய் நலப் பணிகள், கிராமப் பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், ஊராட்சி ஒன்றியத் துணை நிலையங்கள், பின் தங்கியப் பகுதித் திட்ட நிலையங்கள் ஆகியவை மூலமும், நகர்ப் பகுதிகளில் நகராட்சிகள் மூலமும் அளிக்கப்படுகின்றன. குழந்தை பெற்றெடுக்கையில் திறம்பட கவனம் செலுத்துவதும் அதன் பின்னர் தாய்-சேய் ஆகிய இருவரது நலனில் கவனம் செலுத்துவதும் அவர்களது நலனைப் பேணுவதுமே இதன் முதன்மையான நோக்கமாகும்.

அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியத்தைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது 2,831 தாய்-சேய் நல நிலையங்களை நடத்தி வருகின்றன. இம் மாநில நகராட்சிகளில் 128 மகப்பேறு இல்லங்களும், 372 மகப்பேறு நிலையங்களும் அரசு மானியத்துடன் செயல்பட்டு வருகின்றன.

மேலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 95 மிகத் தொலைவிலுள்ள, பின்தங்கிய கிராமங்களில் தாய்-சேய் நல நிலையங்களை அரசு அமைத்து உள்ளது. இப் பின் தங்கிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு இவை தொடர்ந்து சேவை செய்யும்.

*[தமிழ்நாடு சட்டப் பேரவையில் 13-8-77 அன்று அளிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]*

தாய்-சேய் நலப்பணிகளைக் கவனிப்பதற்கு தற்பொழுது முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது!





# தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி

சென்ற இதழ் தொடர்ச்சி

மாண்புமிகு
கல்வி அமைச்சர்
திரு சி. அரங்கநாயகம்



### தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பக்கல்விக்காக 1977-78-இல் சுமார் ரூ. 6 கோடி (தொழில் நுட்பக்கல்வி நிலையக் கட்டடச்செலவு போன்றவைஉட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது. இத் துறையின் கீழ், 7 பொறியியல் கல்லூரிகளும், 39 பல்தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும், ஆறு தனித் தொழில் டிப்ளமாக் கல்வியகங்களும், மூன்று கலை-கைத்திறன் கல்வியகங்களும் உட்பட), 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. தற்போது ஆண்டுதோறும், பொறியியல் கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக ஏறத்தாழ 1,300 மாணவர்களும், பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பட்டச் சான்றிதழ் (டிப்ளமா) படிப்பிற்காக 5,000 மாணவர்களும், தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். (மேற் சொன்ன ஏழு பொறியியல் கல்லூரிகள் தவிர பல்கலைக் கழகம் சார்ந்த கல்வியகங்களாகவோ அல்லது தன்னாட்சி உரிமையுள்ள கல்வியகங்களாகவோ இருக்கும் கிண்டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரி, கிண்டியிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப அறிவுக் கல்வியகம், குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி, ஆகிய ஐந்து பொறியியல் கல்லூரிகளும் இம்மாநிலத்தில் உள்ளன.)

### தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம்

இம்மாநிலத்தில் அறிவியல், மற்றும் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க இவ்வரசு ஏற்கெனவே தீர்மானித்து உள்ளது. அப்பல்கலைக் கழகம் அமையுமாயின் பொறியியல், தொழில்நுட்பவியல்மற்றும் அவற்றுடன் இணைந்த அறிவுத் துறைகளில் மிக உயர்தரமான கல்வியும் ஆராய்ச்சியும் பேணி வளர்க்கப்படும். மாறி வரும் தேவைகளைக் கடிதில் உணர்ந்து அவற்றிற்கேற்ப விரைந்து செயற்படும் திறன் அக் கல்வி முறைக்குக் கிட்டும். அவற்றுக்கு மற்றும்



தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்குத் தேவையான தலைமைப் பொறுப்பை அப்பல்கலைக் கழகம் ஏற்று நடத்தும்.

அப்பல்கலைக் கழகம் ஒற்றை வகையைச் (Unitary type) சேர்ந்ததாக இருக்கும். இம் மாநிலத்தில் முதன்மையான கல்வி நிலையமாக உள்ளதும் தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகமாக விரிவு படுத்துவதற்குத்தேவையான எல்லா வசதிகளையும் கொண்டுள்ளதுமான கிண்டிப் பொறியியல் கல்லூரிதான் புதிய தொழில் நுட்பக் கழகத்தின் தலைமை இடமாக இருக்கும்.

இப் பல்கலைக் கழகம் பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் அதனுடன் இணைந்த அறிவியல் துறைகளில் மிக உயர்தரமான கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு வாய்ப்பு வசதிகளை அளிக்கும் பொருத்தமான செயல் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும். ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கும் தொழில் துறையினருக்கும் இடையே ஒத்துழைப்பையும், கருத்துப் பரிமாறல்களையும் ஆதரித்து வளர்க்கும். மேலும் மாணவர்களிடையே தொழில் முனைவர் நிலை, மற்றும் தொழிலில் கருத்தூன்றல் ஆகிய பண்புகளை வளர்க்கும்.

அப்பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான சட்ட முன் வடிவம் ஒன்று ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மீது மைய அரசு தெரிவிக்க விரும்பும் யோசனைகள் எவையேனும் உள்ளனவா எனக் கேட்டு 13-7-77 அன்று மைய அரசுக் கல்வித் துறைக்கு எழுதப் பட்டுள்ளது. மைய அரசு யோசனைகள் எவற்றையேனும் தெரிவித்தால் அவற்றையும் ஆய்வு செய்து, அதன் பின் அச்சட்ட முன் வடிவம் வெகு விரைவில் தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தின் முன் ஆய்வுக்கு வைக்கப்படும்.

### கல்வித் தர உயர்வு

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்திலிருந்து தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து ஒருமுகப்படுத்துவதிலும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும் பிரிவுகளிலும் எந்தெந்தப் பயிற்சிகளைப்பெற்றவர்கள்தேவைப்படுகின்ருர்களோ அந்தந்தப் பயிற்சிகளை அளிக்கவும், தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது பொறியியல் கல்லூரியில் 15 பட்டப் படிப்பு முறைகளும், 33 பட்ட மேற் படிப்பு முறைகளும், 4 பட்ட மேற்படிப்பு டிப்ளமா முறைகளும் உள்ளன. பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 37 டிப்ளமா முறைகளும், 18 டிப்ளமா மேற்படிப்பு முறைகளும், 17 சான்றிதழ் படிப்பு முறைகளும் உள்ளன.

கிண்டிப் பொறியியல் கல்லூரியில் இயந்திரப் பொறியியல் துறையில் கப்பற் பொறியியல் துறையைச் சேர்ந்த கீழ்க்கண்ட நான்கு விருப்பப் பாடங்கள் 1977—78-ஆம் ஆண்டிலிருந்து புகுத்தப்பட ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அவையாவன: கப்பற் கொதிகலன்கள், கப்பல் உள்ளெரி பொறிகள் (Marine Internal Combustion Engines) கப்பல் நீராவிச் சக்தி சாதனங்கள், கப்பல் குளிர்பதனம் மற்றும் காற்றுப் பதனம்.

1977—78-ஆம் ஆண்டிலிருந்துசென்னையிலுள்ள மைய பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் வேதித் தொழில் நுட்பவியலில் (Polymer Technology) வேலையிடைக் கல்வி டிப்ளமா படிப்பு ஒன்றை தொடங்கவும், கோயம்புத்தூர் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் மின்னணுவியல் டிப்ளமா படிப்பு ஒன்றைத் தொடங்கவும் ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

புகுமுகத் தொழில் நுட்பக் கல்வி மட்டத்தில் மொத்தம் 8 பாட முறைகளில், இயல்பியல் மற்றும் பொறியியல் படம் வரைதல் ஆகிய இரண்டு பாடங்களில், தொடக்க கட்டமாக, திருச்சிராப்பள்ளியிலும் தூத்துக்குடியிலுமுள்ள அரசு பல்தொழில் நுட்பப் பயிலகங்களிலும், பொள்ளாச்சியிலுள்ள நாச்சிமுத்து பல்தொழில் நுட்பப் பயிலகத்திலும், தமிழில் பயிலும் முறை செயல்படுகிறது. கல்வி நிலையத்தை விட்டு மாணவர்கள் செல்லும்போது, செய்திப் பரிமாற்றலுக்கு ஆங்கிலத்தையும் தமிழையும் பயன்படுத்தும் வகையில் இரு மொழிப் பயிற்சியுடையவர்களாக்குவது இம் முயற்சியின் நோக்கமாகும்.

(தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைக்கப் பட்ட மானியக் கோரிக்கை 17-ல் இருந்து தொகுக்கப் பட்டது.)





# ஊரக வளர்ச்சிக்கு உதவிடுவோம்!

மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர்
**திரு கா. காளிமுத்து**



சமுதாய வளர்ச்சித் திட்டம் 1952-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. ஊர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் நிலையை உயர்த்துவதற்கும் அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்து அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தர வேண்டுமென்பதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். மக்களின் முயற்சிகளை அரசின் அதிகாரத்துடன் இணைத்துச் செயலாற்றி மக்களின் பொருளாதார, சமூகப் பண்பாட்டினை மேம்படச் செய்து அவர்களை நாட்டின் வாழ்வுடன் இணைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு முழு மனத்துடன் இணைத்துச் செயல்படச் செய்வதை, சமுதாய நலத் திட்டத்தின் செயல்முறையெனத் தெளிவாகக் கூற இயலும்.

முன்னேற வேண்டுமென்ற முனை[illegible]ச் சக்தியானது மக்களிடமிருந்தே எழ வேண்டுமென்றும் ஊர்ப்புறங்களில் செயலற்றுத் தேங்கி நிற்கின்ற மனித ஆற்றலை ஒன்று திரட்டி, நிலையான பணிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்குடனேயே சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப் பெற்றது. எனவே மக்களின் ஒத்துழைப்பையும், திட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்றுவதுமே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாகும்.

தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்தவுடன், சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒரு புதிய கட்டத்தை அடைந்தது. இம்மாநிலத்தில் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் சமுதாய வளர்ச்சி வட்டாரம் ஒன்று உள்ளது. வட்டாரப் பகுதிகள், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு அடுத்து அமைந்துள்ளன. தென்ஞர்க்காடு மாவட்டத்தில், கல்ராயன் குன்றுகள் பகுதிகள், அந்தப் பகுதி மக்களின் நலனுக்காக, அரசு இந்த வட்டாரத்தை அண்மையில் புதுப்பித்துள்ளது. ஆனல், ஊராட்சிகள் அமைக்கப் படாத காரணத்தால், கல்ராயன் குன்றுகள் பகுதிக்கு ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட இயலவில்லை. இந்தப் பகுதிக்கு ஊராட்சிகள் அமைப்பது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மக்களுக்கான நல்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு செயலாற்றுவதோடு மட்டுமின்றி வட்டார அளவில் நிறைவேற்றப் படக்கூடிய திட்டங்களையும் அரசின் பிரதிநிதிகளாக பொறுப் பேற்றுப் பணியாற்றித் திட்டங்களை நிறைவேற்றுகின்றன. இந்த நிலையில்தான் ஒரு முக்கியமான மாற்றம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை மையமாகக் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளில் கிடைக்கும் நிதிகளனைத்தும் திரட்டப்பட்டு, ஊராட்சி வளர்ச்சி திட்டவாரியான நிதிநிலைத் திட்டம் கொணரப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் பயன்படுத்திக் கொள்ள வசதி செய்யப்பட்டது. வளர்ச்சித் திட்டங்களை ஒருமித்த முறையில் நிறைவேற்றுவதற்கு, இம்முறை ஒரு பொருளாதாரக் கட்டுக்கோப்பைத் தந்ததுடன், ஊர்ப்புற மக்களின் உற்சாகம் பெருகி பல்வேறு திட்ட வேலைகளுக்கு நன்கொடை அளிக்கும் மனப்பாங்கும், ஊர்மக்களிடையே பெருக நன்கு உதவியுள்ளது.

ஊராட்சிஒன்றியங்களின் வளர்ச்சிக்கு வருவாய்கள், மானியங்கள் (சட்ட பூர்வமாகவும், சட்ட பூர்வமின்றியும்) வாயிலாக அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய இறுதி நிதி ஆதாரங்களை ஊராட்சி வளர்ச்சித் திட்ட வாரியான நிதி நிலைத் திட்டம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதோடன்றி, உள்ளூர் மக்களின் நன்கொடைத் தொகை பெருகப்

பெருக ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சி நிதியும் அதிகரிக்கும்.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு 1977-78-ல் செய்யப்பட்ட நிதி முதலீடுகளின் அளவு, சுமார் ரூ. 132.55 கோடியாக இருக்கும். சட்டப் பேரவையின் முன்னுள்ள கோரிக்கையான ரூ. 32.13 கோடி என்பது, ரூ. 132.55 கோடியின் ஒரு பகுதியேயாகும்.

**நிருவாக அமைப்பு**

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக, இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது செயலிலுள்ளது. கல்ராயன் குன்றுப் பகுதியில் உள்ள ஜாகீர்ப் பகுதிகளை அரசு எடுத்துக் கொண்ட பின்னர் இப்பகுதியில் ஊராட்சிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. ஊராட்சிகள் அமைக்கப்பட்ட பின்னர், ஊராட்சி ஒன்றியம் அமைக்கப் படும்.

தமிழ்நாட்டில் 12,627 ஊராட்சிகளும், 589 பேரூராட்சிகளும், 12 நகரியங்களும் 374 ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளன.

**நிதிநிலைத் திட்டம்**

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவுக்காக 1976-77-ல் 116.25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1977-78-ஆம் ஆண்டில் 132.55 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

அதுபோல் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வழங்கப்பட்ட சராசரி நிதிஒதுக்கீடும் 1976-77ல் 31.08 இலட்சம் ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1977-78-ல் 35.44 இலட்சம் உயர்த்தப்பட்டுள்ளது.

மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு, ஊரக வளர்ச்சிக்கு இவ்வரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும்.

**பணிகள் பற்றிய திட்டங்கள்**

**(அ) ஊர்ப் பணிகளுக்குரிய திட்ட வேலைகள்**

இத்திட்டத்தில் ''குடி நீர் வழங்கல்'', ''இணைப்புச் சாலைகள்'' 'பள்ளிக் கட்டிடங்கள்' அமைத்தல், ஆகிய பணிகளுக்கு ஒப்பளிக்கப்படுகின்றன. 1976-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் முடிய செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரம் (கூடுதல் எண்ணிக்கை) வருமாறு:



**அனைத்துக் கிராமங்களுக்கும் விரைவில் குடிநீர் வழங்க வேண்டும் என்பதற்காக, நடப்பு ஆண்டிற்கு 1.4 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது !**

| | | | |
|---|---|---|---|
| 1. | மேல் நிலை நீர்த் தொட்டிகள் (எண்ணிக்கை) | ... | 7,154 |
| 2. | கிணறுகள் (எண்ணிக்கை) | ... ... | 81,072 |
| 3. | இணைப்புச் சாலைகள் (கி.மீ.) | ... ... | 36,876 |
| 4. | பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டவை | ... | 18,461 |

இப்பணிகளுக்காக, 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 340 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்**

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்தே, குடிநீர் அளிக்க வேண்டியதன் அவசியம், அரசின் கவனத்தைப் பெற்று வந்துள்ளது. குடிநீர் வழங்குவதற்கென முதலிடம் அளித்துக் காரியமாற்றியுள்ள போதிலும்கூட, குடிநீர்ப் பிரச்சினையின் ஒரு சிறிய கூறினைத் தான் இதுவரை அணுக முடிந்துள்ளது. மக்கட்தொகை, கிடைக்கின்ற குடிநீர் ஆதாரம் ஆகியவற்றைப் பொறுத்து, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள குடிநீர் வசதியைத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் வழங்குவதற்கென முழுமையான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1977-78-ல் 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் குடிநீர் ஆதாரம் ஏதுமில்லாத கிராமங்களில் குடிநீர்வசதி ஏற்படுத்தித்தர இலக்கமிடப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநர், அரிசன நல இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற முகவரமைப்புகளின் கீழ் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ஒன்று சேர்க்கப்பட்டு, இந்த இலக்குகளை எய்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து நிதர்சனமான முறை மேற்கொள்ளப்படும்.

குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக, 1977-78-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 140 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) இணைப்புச் சாலைகள்**

இணைப்புச் சாலைகளுக்காக 1977-78-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 60 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கென 15 சதவீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சதவீதமும்





அரிசனங்களின் பயனுக்கான பணிகள் குறித்து அரிசனநலத் துறை நிதிகளிலிருந்து பெறப் படுகிறது. குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் 20 சதவீதம் அரிசனங்கள் நலனுக்கென்றே ஒதுக்கப்பட வேண்டும்.

**(இ) பள்ளிக் கட்டடங்கள்**

1977-78 நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப்புறங்களில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கென ரூ. 54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) சாலைகளைப் பேணுதல்**

1977-78-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில், மக்கள் தொகை-சாலைகளின் நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 22.5 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

**(உ) சிறுபாசனம்**

1977-78 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சிறுபாசனத் திட்டங்களுக்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உற்பத்தித் திட்டங்கள்**

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்வளம்

1977-78-ல் செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் திட்டங்களை ஆண்டுத் திட்டங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் ஆலோசனையுடனும் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் அரசாணைகளில் வரையறுக்கப்பட்டுள்ள சில திட்டவட்டமான நடைமுறையின் அடிப்படையிலும் தாமே திட்டங்கள் வகுத்துக்கொள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முழு உரிமை வழங்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழில் நுட்ப அதிகாரிகளின் ஆலோசனையுடன் ஊராட்சி ஒன்றியங்களால் இத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன.

ஊராட்சி ஒன்றியங்கள் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டுள்ளன.

**(அ) வேளாண்மை**

(1) வேளாண்மைக் கிடங்கு கட்டுதல்

(2) ஊராட்சித் தோட்டங்களைப் பராமரித்தல்.

(3) மாவட்ட வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனையுடனும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதலுடனும் உள்ளூர்ப் பகுதிக்கேற்பக் கீழ்க்காணும் திட்டங்களைப் போன்று ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் ஏனைய திட்டங்கள்.

(அ) ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் சாதனங்கள் வழங்குதல்.

(ஆ) தனிப்பட்டவர்களுக்குச் சாதனம் வழங்குதல்.

(இ) உதவிகள் விஸ்தரிப்பு-கிராம விழாக்கள், கண்காட்சிப் போட்டிகள் முதலியன.

(ஈ) வேளாண்மை விஸ்தரிப்பு-விளக்கப் பாத்திகள் அமைத்தல்.

(உ) தனிப்பட்டவர்களுக்குப் பசுந்தழை உர விதைகள் வழங்குதல்.

(ஊ) தனிப்பட்டவர்களுக்கு விதைகளும் நாற்றுக்களும் வழங்குதல்.

**சிற்றூர்களுக்கு இடையே இணைப்புச் சாலைகள் இல்லாததால், வரப்புகளின் மேல் நடந்து செல்லும் நிலை (மேலே உள்ள படம்) இன்னும் உள்ளது! அந்நிலை இனியும் இருக்கக் கூடாதென்பதற்காக இணைப்புச் சாலைகள் (கீழே உள்ள படம்) அமைப்பதில் இன்றைய அரசு கவனம் செலுத்துகிறது.**



1977-78 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1977-78-ல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 10,695 ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்குச் சமமாக 8,601 ரூபாயை உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

பணி இனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) கால்நடை மருந்தகங்கள் கட்டுதலும், தற்போதுள்ள மருந்தகங்களை மேம்படுத்தலும்.

2. கால்நடை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.

| | | | ரூபாய் |
|---|---|---|---|
| 1. | வேளாண்மைக் கிடங்கு கட்டுதல் | ... | 2,500 |
| 2 | ஊராட்சித் தோட்டங்கள் பராமரிப்பு | ... | 700 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கும் திட்டங்கள் | | 7,495 |
| | மொத்தம் | ... | 10,695 |

## கால்நடை வளர்ப்பு

இத்திட்டத்தின்கீழ் அரசு மானியமாக 10 இலட்சம் ரூபாய் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஓராட்சி ஒன்றியத்திற்கும் 2,674 ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டது. இதற்குச் சமமாக, 2,045 ரூபாய் உள்ளூர்வாசிகள் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியப் பகுதியிலும் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும்

3. கால்நடைகள், பால், பண்ணை, கோழித்தீவன மேம்பாட்டுக்காக உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் தெரிந்தெடுக்கவிருக்கும் திட்டங்கள்.

## மீன்வளம்

இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதற்கும் "ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியங்கள்" வடிவில் 2 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை, கால்நடை வளர்ப்புத் துறைகளைப் போன்று ஊராட்சி ஒன்றியங்களில் மீன் வளங்களின் மேம்பாடுக்கென்று திட்டவட்டமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. மீன் வளர்ப்பு மேம்பாடு சாத்தியமான ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுடும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

1977-78 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், கீழ்க்காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. மீன்குஞ்சு வளர்ப்பு-பேணுதல்

2. மீன்குஞ்சுகளை வழங்குதல்.

3. ஏரிகளைப் புதுப்பித்தல் (குறைந்த அளவு தேவைகள் முழுவதற்கும்).

## நலப்பணித் திட்டங்கள்

### (அ) தொடக்கக் கல்வி

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 28,394 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்க, உதவி பெறும் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் 23,001 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப் பெறுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் நிறுவனங்களாக உள்ளன. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், உதவிபெறும் பள்ளிகளில் 1.31 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி, 46.27 இலட்சம் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.









நண்பகல் உணவுத் திட்டத்திற்காக நடபபு ஆண்டிற்கு 399.72 இல்ட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூரை வேய்ந்த பள்ளிகளை மாற்றி, நல்ல கட்டடம் கட்டுவதற்காக நடப்பு ஆண்டில் 54 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

தொடக்கக் கல்விக்காக 1977-78ஆம் ஆண்டில் 50.69 கோடி ரூபாய் செலவிடப்படும். அதில் ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு 7.41 கோடி ரூபாயாக இருக்கும்.

### நண்பகல் உணவுத் திட்டம்

ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் நிறுவப்பட்டதன் மூலம் நாட்டுவளர்ச்சிப் பணிகளில் பங்கு கொள்ளும் வகையில் உள்ளாட்சி மன்றங்களின் நண்பகல் உணவுத் திட்டத்தை உறுதியாகச் செயல்படுத்தச் செய்ய அரசினால் இயன்றது. இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் மதிய உணவுக் குழு உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமை ஆசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார்கள். கோரிக்கை எண். 17-ல் ரூபாய் 399.72 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) நல்வாழ்வுப் பணிகள்

#### ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

ஆரமபச் சுகாதார நிலையம் பல்நோக்குப் பிரிவாக நிறுவப்பட்டது. சமுதாயத்துக்குத் தடுப்பு சிகிச்சை அளிப்பதிலும், நோய்ச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு மக்களின் உடல் நலன் நாளடைவில், ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். 374 வட்டாரங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பத்து வட்டாரங்களில் கூடுதல் தொடக்கச் சுகாதார நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

#### தாய் சேய் நல நிலையங்கள்

தாய் சேய் நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியக் குழு சமாளிக்கும் வகையில் மொத்தச் செலவில் 3-ல் 2 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய் சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,818 ஆகும். 1977-78ஆம் ஆண்டில் ரூபாய் 65 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

#### ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்

மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, ஊரக மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம் (ஆண்டொற்றிற்கு ரூபாய் 5,400க்கு மேற்படாமல்) உதவி மானியம் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது. 1977-78-ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**குடும்பநலத் திட்டம்:** தங்களுடைய பகுதிகளில் குடும்ப நலத் திட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்ட குடும்ப நலத் திட்டத்தின்கீழ் இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன.

'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் குழந்தைகள் காப்பகங்களில் சத்துணவு வழங்கும் திட்டம்:

இத்திட்டம் 2 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதில் கருத்தூன்றுகின்ற சிறப்புத் திட்டமாகும். இவர்களெல்லாம் எளிதில் நோய்க்கு ஆட்படும் வகையினர் ஆதலால்

இன்றியமையாத வளர்ச்சிக் காலக் கட்டத்தில் இவர்களுக்குச் சத்துணவு வழங்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். ஆண்டுக்கு 300 நாட்களுக்கு 1,30,000 பேர்களுக்குச் சத்துணவு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், பயன்பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 80 கிராம் வீதம் பாலாகாரம் எனப்படுகின்ற மாவுப் பொருள் உணவும் (அதாவது தானியம், சோயா பீன்ஸ், மக்காச் சோளம் இவை கலந்த மாவு) 7 கிராம் வீதத்தில் சாலாடு எண்ணெயும் ( Salad oil ) அல்லது பீநட் எண்ணெய்யும் ( Pea nut oil ) 'கேர்' நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் சத்துணவு அளிக்கப்பட்டுப் பயன் பெறுவோரின் உயர்ந்தளவு எண்ணிக்கை 120 ஆகும். அதாவது குழந்தைகள் 80 பேர்; தாய்மார்கள் 40 பேர். தற்போது இந்தச் சத்துணவு வழங்கும் திட்டம் 100 வட்டாரங்களில் அமைந்திருக்கின்ற 1,398 குழந்தைகள் காப்பகங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் 1,30,000 பேர் பயன் பெறுகின்றனர்.



பிஞ்சுக் குழந்தைகளைப் பேணி வளர்ப்போம்!

1977-78-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 17.40 இலட்சமாகும். இத்தொகையில் 'கேர்' நிறுவனத்திற்காகும் நிர்வாகச் செலவுகள், பல்வேறு குழந்தைகள் காப்பகங்களுக்கும் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்காகும் போக்குவரத்துச் செலவு, உணவு வழங்குகைக்கு ஆகும் செலவுகள், பாலசேவிகைகள், ஆயாக்கள் ஆகியோருக்கு ஊதியம், மருந்துகள் வாங்குவதற்கு ஆகும் செலவு, பணியாளர் செலவு ஆகியன அடங்கும்.

**குழந்தைகள் காப்பகங்களுக்காக நடப்பு ஆண்டிற்கு 17.40 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**



## கிராம முழு வளர்ச்சித் திட்டம்

வேளாண்மையையே பெரிதும் நம்பியிருக்கின்ற, கிராமப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் நலனை மேம்படுத்தும் உயரிய நோக்குடன், வேளாண்மையை மேம்படுத்தவும், காலத்திற்கேற்ப மாற்றியமைக்கவும் பரிவுரைகளைச் செய்யும் பொருட்டு இந்திய அரசு வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழு ஒன்றை நிறுவியது. இந்த ஆணைக் குழு, கிராமதானக் கிராமங்களையும், சர்வ சேவா சங்கத்தையும் மேம்படுத்துவதற்காகத் திட்ட ஆணைக்குழுவுடன் விவாதம் நடத்தியது. கிராம தானப் பகுதிகளில் கிராம நிலங்களுக்குரிய உரிமை முழுவதும் ஏற்கெனவே உள்ளபடியால், குறிப்பாக அந்தப் பகுதிகளிலெல்லாம் முன்னோடி அடிப்படையில் வேளாண்மை மேம்படுத்துவது, காலத்திற்கேற்ப மாற்றியமைப்பது குறித்த பணிகள் முதற்கண் மேற்கொள்ளப்படலாமென்று வேளாண்மை குறித்த தேசிய ஆணைக் குழு கருதிற்று. மேலும், கிராமதானப் பகுதிகளில் இத்திட்டத்தைச் செயற்படுத்தினால் இது மக்களிடையே பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், அதன் மூலம் அண்டையிலுள்ள கிராமங்களும் இத்திட்டத்தில் பங்குகொள்ள முன்வரலாம் என்றும் ஆணைக் குழு கருதியது.



வேளாண்மை குறித்த தேசிய ஆணைக்குழு, கிராம முழு வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மேலநீலிதநல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த கீழ்க்காணும் கிராமங்களைத் தெரிந்தெடுத்திருந்தது.

சின்னக் கோயிலாங்குளம்,

பெரிய நடுவக்குறிச்சி,

சின்னநடுவக்குறிச்சி,

பட்டடைக் கட்டை

இந்திய அரசின் வேண்டுகோளின் பேரில், 1976-ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்களில் மேற்சொன்ன கிராமங்களுக்கான பெருந் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. இந்தத் திட்டத்திற்காக மொத்தம் ரூபாய் 66 இலட்சம் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. இத்தொகையை அருகில் உள்ள அட்டவணையில் கண்டுள்ளவாறு செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### கிராமப் புறங்களில் சாணத்திலிருந்து எரி வாயு தயாரிப்புக் கூடங்கள் நிறுவுதல்

கிராமப் புறப் பகுதிகளில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடம் நிறுவும் திட்டத்தைச் செயல்படுத்த கிராம வளர்ச்சி இயக்குநர் பொறுப்பு வகிக்கிறார்.

ஒவ்வொரு கூடத்தின் மூலதனச் செலவில் 20 சதவீதம் உதவித் தொகையாக வழங்கப்படுவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. எரிவாயுக்கூடம் வெற்றிகரமாக நிறுவப்பட்டவுடன் மேற்கூறிய உதவித் தொகை வழங்கத்தக்கதாகும். மேலும், இத்திட்டத்தினால் பயனடைவோருக்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் வழங்கும்.

1976-77-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் 1,500 நிறுவப்பட வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, அந்த ஆண்டில் 1,493 கூடங்கள் நிறுவப்பட்டன.

1977-78-ஆம் ஆண்டில், இந்திய அரசு, சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்புக் கூடங்கள் 2,100-ஐ நிறுவுவது என இலக்கு நிர்ணயித்துள்ளது.

**(கோரிக்கை எண் 23-ன் கீழ், சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது).**

### அட்டவணை

| திட்டத்தின் பெயர் | மொத்த மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. வேளாண்மை ... ... ... | 36.49 |
| 2. கால்நடை வளர்ப்பு ... ... | 13.83 |
| 3. தொழிற்சாலைத் திட்டங்கள் ... ... | 3.96 |
| 4. குறைந்த அளவுத் தேவைகள் திட்டங்கள் ... | 8.02 |
| 5. பணியாளர்க்கான செலவு, சில்லறைச் செலவுகள் | 3.70 |
| | 66.00 |

கீழ்க்காணும் திட்டங்களை நிர்வகிப்பதற்காக 3.96 இலட்ச ரூபாயை வழங்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| **(அ) வேளாண்மை** | |
| 1. வேளாண்மைக்குப் பழைய கிணறுகளைப் புதுப்பித்தல் | 52,000 |
| 2. 31 மின்விசையேற்றங்களை அமைத்தல் ... | 1,55,000 |
| 3. பண்ணைக் கருவிகள் ... ... | 34,000 |
| 4. விதைகள் ... ... ... | 10,000 |
| 5. உரங்கள் ... ... ... | 32,000 |
| 6. பூச்சிக்கொல்லி மருந்துகள் ... | 10,000 |
| 7. விளக்கமளித்தலும், பயிற்சி அளித்தலும் ... | 5,000 |
| **(ஆ) கால்நடை வளர்ப்பு** | |
| ஆடுகள் மேம்பாட்டுத் திட்டம் ... | 88,000 |
| **(இ) பணியாளர்களை அமர்த்துதல்** ... ... | 10,000 |
| | 3,96,000 |

மேற்கொண்ட தொகைகளோடு கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட இனங்களை நிருவகிப்பதற்காக ஒரு இலட்ச ரூபாய் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது:

| | ரூபாய் |
|---|---|
| 1. பால் பண்ணை வளர்ச்சி ... ... | 67,500 |
| 2. கால்நடை வளர்ப்பு ... ... | 32,500 |
| | 1,00,000 |

கிராம முழு வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1977—78-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுவதற்காகக் கீழ்க்காணும் திட்டங்களுக்குத் தேவையான செயற் குறிப்புகள் இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டு உள்ளன:

| | ரூபாய் |
|---|---|
| 1. வேளாண்மை ... ... ... | 14,15,975 |
| 2. கால்நடை வளர்ப்பு ... ... | 9,66,025 |
| 3. தொழிற்சாலைகள் ... ... | 1,30,000 |
| 4. பணியாளர்கள், சில்லறைச் செலவுகள் ... | 1,88,000 |
| | 27,00,000 |

# மீண்டும் ஜமாபந்தி முறை

பரீட்சார்த்த அடிப்படையில் 1379-ஆம் பசலி முதற் கொண்டு மாவட்டத்திற்கு ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறையை நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, ஜமாபந்தி நீக்கப்பட்ட வட்டங்களில், கிராம வட்டக் கணக்குகளைச் சரிபார்த்துத் தணிக்கை செய்யும் முறை புகுத்தப்பட்டது. 1381-ஆம் பசலியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் ஏற்கெனவே ஜமாபந்தி நீக்கிய வட்டத்தை உள்ளடக்கிய வருவாய் வட்டாரமொன்றுக்கு ஜமாபந்தி இயங்காத் திட்டம் விரிவாக்கப்பட்டது.

தணிக்கை முறை செயல்படுவது குறித்து சில மாவட்ட ஆட்சியாளர்களின் அறிக்கைகளை ஆய்வு செய்த பின்னர் வருவாய் வாரியம் (நிலவரி) கீழ்க்காணும் இரு காரணங்களுக்காக எல்லா வருவாய் வட்டாரங்களிலும் ஜமாபந்தி முறையை மீண்டும் கொண்டு வரலாம் என்று பரிந்துரைத்தது:

(1) தணிக்கை முறையின் கீழ், கணக்குகள் மீது சரிவர முடிவு எடுக்கப்படவில்லை. இதனால், நிலவரி வசூல் வேலை முதலியவையும், புள்ளி விவரத் தொகுப்பு வேலையும் காலத் தாமதமாகின்றன.

(2) ஜமாபந்தி முறை நீக்கப்படுவதனால், துறை அதிகாரிகளைச் சந்தித்து, தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பை உழவர்கள் இழக்கின்றனர்.

ஜமாபந்தி முறையை மீண்டும் கொண்டு வருவது குறித்த வருவாய் வாரியத்தின் பரிவுரையை அரசு பரிசீலித்து, ஜமாபந்தி முறையை மேம்படுத்துவது குறித்து இதில் பற்றுடைய நபர்களிடமிருந்து குறிப்பாக விவசாயிகளிடமிருந்து ஆக்க பூர்வமான ஆலோசனைகளைக் கேட்டது. ஜமாபந்தி முறையை ஆதரித்தும் எதிர்த்தும் வரப்பெற்ற கருத்துக்களை அரசு ஆய்ந்து பார்த்தது. ஜமாபந்தி எல்லா வகையான கிராமக் கணக்குகளை முழுவதும் சரி பார்ப்பதற்கு வகை செய்வதோடு, அதிகாரிகளை கிராமத்தினர் சந்திக்கவும், அதிகாரிகள், அவசியமான இடங்களில் உழவர்களுக்கு விதிக்கப்படும் லெவிக்கள், வரி வீதங்கள், அபராதங்கள் முதலியவற்றைச் சரி பார்த்துச் சுருக்கமான வகையில் திருத்தி அமைக்கவும் வாய்ப்பளிக்கிறது என்று அரசு கருதியது. தணிக்கை முறையைப் பரீட்சார்த்தமாகப் பின்பற்றியதில் காலத் தாமதமும், வேலை முடக்கமும் ஏற்படுவதுடன் ஜமாபந்தி முறையில் உள்ள சில அனுகூலங்களை மறுக்கும் வகையிலும் அமைந்துள்ளது. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பின்பற்றிய இந்தப் பரீட்சார்த்த முறை கைவிடப்பட்டு, 1386-ஆம் பசலி முதல் வருவாய் வட்டாரங்கள் அனைத்திலும் ஜமாபந்தி முறையை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டுமென்றும் அரசு முடிவு செய்தது.

ஆதாரம்: வருவாய்த் துறை மானியக் கோரிக்கை, 1977.



## பன்றி உணவில் மரவள்ளிக்கிழங்கு

பன்றி உணவில் பழக்கத்தில் உள்ள மக்காச்சோளத்திற்குப் பதிலாக, மரவள்ளிக்கிழங்குச் 'சிப்ஸ்' சேர்த்து ஆய்வு செய்யப்பட்டு, மக்காச்சோளத் தீனியுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வின்படி மக்காச் சோளத் தீனிவிலையைவிட, மரவள்ளிக்கிழங்குத் தீனி 21.4 சதம் குறைவாக உள்ளது. பன்றியின் பொருளாதார குணங்கள் யாவும் பாதிக்கப்படவில்லை. பன்றி இறைச்சியின் தரத்திலேயும் எந்தவித மாறுதலும் இல்லை. மக்காச்சோளத் தீனிப் பிரிவில் பன்றி ஒன்று 71.23 கிலோ எடையை அடையும் வரை ஆகும் மொத்தச் செலவு ரூ. 352.16. ஆனால் மரவள்ளிக்கிழங்கு தீனிப் பிரிவில் 74-20 கிலோ எடையை அடைய ரூ. 299.61 தான் ஆகியுள்ளது. இதனால் ஒரு பன்றியில் இருந்து கிடைக்கும் நிகர லாபம் மரவள்ளிக்கிழங்கு தீனிப்பிரிவில், இறைச்சி கிலோ ரூ. 7.00 ஆக விற்றால் ரூ. 84.93-ம், மக்காச்சோளப் பிரிவில் இருந்து ரூ. 21.39-ம் கிடைக்கும். எனவே, மரவள்ளிக்கிழங்கைப் பன்றி உணவில், மக்காச்சோளத்திற்குப் பதிலாகக் கொடுப்பதால் அதிக நிகர லாபம் கிடைக்கிறது என்பது இந்த ஆய்வின் மூலம் நன்கு தெரியவருகிறது.

தகவல்: கால்நடை பராமரிப்புததுறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.

# அரசுப்பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியங்கள்

—ச. குகன், ஐ.ஏ.எஸ்.,
அரசு ஆணையாளர்—
செயலாளர்,
நிதித் துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு அரசு தனது பணியாளர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதற்காகப் பின்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

**(1) தமிழ்நாடு, தாராளமாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகள்—1960**

அரசுப் பணியாளர் ஒருவர், 25 ஆண்டுகள் தகுதிப் பணியை முடித்த பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்றால் சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெறுவார். 25 ஆண்டுகளைவிட அதிக கால அளவுக்குப் பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சராசரி ஊதியத்தில் 33/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. இதைத் தவிர, முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறு மாதப் பணிக்கும் ஊதியத் தொகையின் 3/10 என்ற வீதத்தில் இறப்பு-ஓய்வூதிய பணிக்கொடையும் (Death - cum - retirement gratuity) அனுமதிக்கப்படுகிறது. ஊதியத்தில் 16.5 மடங்கு என்ற உயரளவுக்கு இது உட்பட்டதாகும்.

(அ) தற்போது குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 ஆகும். இதைத் தவிர, பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 32 அகவிலைப்படி பெறவும் உரிமையுள்ளவராவர். முதலில் அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியத்தில் 10 சதவீதம் என்ற வீதப்படி-இது மாதம் ஒன்றுக்கு ரூ. 15 என்ற வரையறைக்கு உட்பட்டதாகும்-கூடுதல் அகவிலைப்படி 1-1-1977 முதற்கொண்டு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஓய்வூதியத் தொகை ரூ. 300 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலம் அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள், ஆசிரியர்களது குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள், பொதுவாக குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் ஆகியோரும், அவர்கள் சென்னை மாநகரில் வசித்து வந்தால், தங்களது ஓய்வூதியங்களைப் பண அஞ்சல் மூலம் பெறலாம்.

(இ) வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும், அரசுப் பணியாக்கப்பட்ட பணிகளில் பணி புரிவோர் அனைவருக்கும், தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த, அரசுப் பணியின் கீழ்வராமல் வேலை நிதியிலிருந்து ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும் அரசு ஓய்வூதிய நன்மைகளையும் ஏனைய நன்மைகளையும் அரசு வழங்கியுள்ளது.

(ஈ) ஓய்வூதியம் பெறுபவர்கள் வரையறுக்கப்பட்ட மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதியுள்ளவர்களாவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற வரம்புக்கு உட்பட்டு ஆண்டு ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும். மாதம் ஒன்றுக்கு ரூ. 750-வரை ஓய்வூதியம் பெறுபவர்களும் பண்டிகை முன்பணம் பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

**(2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதிய விதிகள்—1964**

(அ) அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கையிலோ ஓய்வூதியம் பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும் சமயத்தில் குறைந்தது ஓராண்டுக் காலமாவது அரசுப் பணி புரிந்திருக்க வேண்டும். அரசுப் பணியாளர் இறக்கும்பொழுது அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வாங்கிய சம்பளத்தில் அடிப்படையில் இந்த ஓய்வூதியம் அமைந்ததாகும். குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்ற குறைந்த அளவிலிருந்து, மாதம் ஒன்றுக்கு ரூ. 300 என்ற உயரளவு வரையில் மாறுபட்டதாகும். குடும்ப ஓய்வூதியம் என்பது விதவையின் ஆயுட்காலம் முழுவதும் அளிக்கப்படத்தக்கதாகும். அவரது இறப்புக்குப் பின்னரும், அந்த ஓய்வூதியத் தொகை, வயது வராத அவரது சிறுவர்களுக்கும் கொடுக்கப்படும்.

(ஆ) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 42 முதல் ரூ. 52 வரையில் அகவிலைப்படி பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் அரசுப் பணியாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் அரசுக்கு 1 ரூபாய் செலுத்துகின்றனர். அரசுப் பணியாளர் பணியில் இருக்கையில் இறந்தால், அவர் குறிப்பிடுபவருக்கு அல்லது அரசுப் பணியாளரின் வாரிசுகளுக்கு ரூ. 10,000 கொடுக்கப்படுகிறது. இக்கணக்கில், அரசுக்கு ஆண்டு தோறும் 1 கோடி ரூபாய் செலவு ஏற்படுகின்றது.

**(4) ஆசிரியர் ஓய்வூதியம்**

தாராளமாக்கப்பட்ட ஓய்வூதிய விதிகளில் கண்டுள்ள சில

நன்மைகள் அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதனுல், ஓய்வூதிய நன்மைகளைப் பொறுத்த வரையில், அரசுப் பள்ளிகள் அல்லாத பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்களுக்கு நிகராகப் பயன் பெறுகின்றனர்.

**(5) நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்**

அரசுப் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் போன்றதொரு திட்டம் நகராட்சிப் பணியாளர்களுக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளது. நகராட்சிகள் அளிக்கும் பங்குத் தொகைகளின் உதவியுடன் இத்திட்டத்தினை உள்ளாட்சி நிதிக்கணக்குகளின் தலைமை ஆராய்வாளர் செயற்படுத்தி வருகிறுர். இங்கும் குறைந்த அளவு ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 50 என்று நிச்சயிக்கப்பட்டுள்ளது. அகவிலைப்படியும் அனுமதிக்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் ஆகியவற்றின் பணியாளர்களும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வருகின்றனர்.

அரசுப் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள் முதலியோர் தொடர்பாக ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்குதல் உட்பட ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள், வருங்கால வைப்பு நிதிக்கான பங்குத் தொகை அவர்களுடைய குடும்ப ஓய்வூதியம் ஆகிய செலவுகளைச் செய்வதற்காகக் கோரிக்கை 42-ன் கீழ், 1977-78-ஆம் ஆண்டிற்குக் கீழ்க்கண்டவாறு மானியங்கள் கோரப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் இக்கோரிக்கையில் அடங்கியுள்ளன:

266. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் — ரூ. 19,93,00,000

288. சமூகப் பாதுகாப்பும் நலனும்—சமூகப் பாதுகாப்பு-நலன் குறித்த ஏனைய திட்டங்கள்: — ரூ. 65,74,000

ரூ. 20,58,74,000

## தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்த அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் ஏழாம் குலுக்கல் வரும் 22-9-77 அன்று நடைபெறும். இந்தக் குலுக்கலுக்கு 'ஏ.எஃப்' (AF), 'ஏஜி' (AG), 'ஏ.எச்' (AH) ஆகிய மூன்று வரிசைகளில் முப்பது இலட்சம் பரிசுச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்படப் பட்டுள்ளன.

### பரிசுகளின் விவரம் வருமாறு

| பரிசின் தரம் | பரிசுத் தொகை ரூ. | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 50,000 | 2 | 1,00,000 |
| 2 | 10,000 | 3 | 30,000 |
| 3 | 5,000 | 5 | 25,000 |
| 4 | 1,000 | 25 | 25,000 |
| 5 | 500 | 100 | 50,000 |
| 6 | 100 | 500 | 50,000 |
| 7 | 50 | 2,000 | 1,00,000 |

### ஆறுதல் பரிசுகள்

முதலாவது, 2வது, 3வது பரிசு பெறும் எண்களுக்கு அடுத்தும் முன்னும் உள்ள எண்களுக்கான ஆறுதல் பரிசுத் தொகைப் பின்கண்டவாறு வழங்கப்படும்:

| பரிசின் தரம் | பரிசுத் தொகை ரூ. | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1,000 | 4 | 4,000 |
| 2 | 500 | 6 | 3,000 |
| 3 | 300 | 10 | 3,000 |
| கூடுதல் மொத்தம் ரூ. | | 2,655 | 3,90,000 |

நடப்பு ஆண்டில் இப்பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் முழுவதையும், கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

**பரிசுச் சீட்டின் விலை ரூ. 1.**




# தென்னையில் தோன்றும் தஞ்சாவூர் வாடல் நோய்!



**த**ஞ்சை மாவட்டத்தில் முத்துப்பேட்டை என்ற ஊரில் 1953-ஆம் ஆண்டு, முதன் முதலில் தோன்றி, பின்னர் கடந்த 24 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் வேகமாகப் பரவி வரும் தென்னை நோய்க்கு "தஞ்சாவூர் வாடல்" என்று பெயரிடப் பட்டிருக்கிறது. 'கானோடெர்மா லூசிடம்' என்னும் பூசணம் இந்த வாடலைத் தோற்றுவிக்கும் காரணிகளில் ஒன்று. கடும் வறட்சியினால் வலிமை குன்றிய, 50 வருட வயதிற்கு அதிகமான தென்னை மரங்கள் இந்த நோய்க்கு எளிதில் இலக்காகின்றன.

**நோய்க்குறிகள்**

நோய்த் துவக்கத்தில், அடிமரத்தில், பல பாகங்களிலிருந்து சாறு கசியும். அதைத் தொடர்ந்து, மரத்தின் உட்பாகம் மேல்நோக்கி அழுகும். அதன் காரணமாக இலைகள் காயத் தொடங்கி மர உச்சியின் கீழ், காய்ந்த மட்டைகள் ஊசலாடிக் கொண்டிருக்கும். நோய் முற்ற, முற்ற இலைகள் காய்வது மேலும் தொடரும்! 6 முதல் 12 மாதங்களுக்குள் மரத்தின் குருத்தும் காய்ந்து, மரம் முழுவதும் பட்டு விடும்.

நோயுற்ற மரங்களிலிருந்து தான், நலமுள்ள மரங்களுக்கு இந்த நோய் தொற்றிப் பரவுகிறது. பத்து முதல் 25 வருட வயதுள்ள மரங்கள் 10 முதல் 12 மாதங்களுக்குள்ளாகவே காய்ந்து விடலாம். தற்சமயம் இந்தக் கடுமையான நோய், தஞ்சை, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தர்மபுரி, சேலம், கோவை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் காணப்படுகிறது. தற்சமயம் சேலம் மாவட்டத்தில் சில இடங்களிலும் இந் நோய் தென்படுகிறது.

கடந்த ஓராண்டு காலமாக, கோவையில் நடைபெற்ற ஆய்வின் மூலம் அறியப்பட்ட கண்டு பிடிப்புகளாவன :

ஆரம்ப நோய்க்குறிகள் தோன்றியவுடன் கீழ்க் கண்ட சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தென்னையின் அடி மரத்தில்—தரையிலிருந்து 90—100 சென்டி மீட்டர் உயரத்தில் இரும்பு ஆக்கர் (1.5—2 செ. மீ. அளவு) துணை கொண்டு, 15—20 செ.மீ. ஆழம் துளையிட வேண்டும். பிறகு மரத்தைச் சுற்றி 1—1.5 மீட்டர் தூரத்தில் 30 செ.மீ. அகலம், 50 செ.மீ. ஆழத்தில் தென்னையின் வேர் தெரியுமாறு குழி தோண்டவேண்டும். பிறகு வேர்களின் நுனியைக் கத்தரிக் கோலால் நறுக்கிவிட வேண்டும்.

'ஆரியோபங்கின் — சோல்' என்ற எதிர் உயிர் [உற்பத்தி செய்யுமிடம் ஹிந்துஸ்தான் ஆன்டிபயாடிக்ஸ் (இந்திய அரசு நிறுவனம்) பிம்ப்ரி, பூனா—441018] மருந்துக் கலவையை (6 கிராம் மருந்துடன் 6 லிட்டர் தண்ணீர்) தயார் செய்த பின், அதில் 3 கிராம் மயில் துத்தம் பொடியைக் கலக்க வேண்டும். இந்தக் கலவையின் ஒரு லிட்டரை குறுகலான வாயுள்ள ஒரு பாட்டிலில் நிரப்பி, அந்தப் பாட்டிலை மரத்தில் இட்ட துளை வாயில் கவிழ்த்து விட வேண்டும். மருந்துச் சிந்தாமல் இருக்க, துளையில் நுழைத்துள்ள பாட்டிலின் கழுத்தைச் சுற்றிக் களி மண்ணால் பூசி விடலாம். மிகுதியாக உள்ள ஐந்து லிட்டர் 'ஆரியோபங்கின்' கலவையை வேர் நுனிய நுனிய தெளிப்பானைக் கொண்டோ, பூவாளியைக் கொண்டோ மரத்தடியில் தோண்டிய குழியில் ஊற்ற வேண்டும். அதற்கு மேல் நன்கு மக்கின தொழு உரத்தையும் போட்டு மண்ணால் மூட வேண்டும். மறுநாள் பாட்டிலில் உள்ள மருந்து முழுவதும் உறிஞ்சப்பட்டவுடன் காலிப் பாட்டிலை அப்புறப்படுத்தி, துளையில் சிமெண்டை அடைத்து துளையை மூடிவிட வேண்டும். இந்தச் சிகிச்சையை ஒரு மாதத்திற்குப் பிறகு மறுபடியும் செய்திடல் வேண்டும். ஒரு முறை மருந்திட ஒரு மரத்திற்கு ஆகும் செலவு ஏறக்குறைய ரூபாய் ஐந்து ஆகலாம். இரு முறை சிகிச்சை அளிக்க ரூ. 10 முதல் 12 வரை ஆகும். சிகிச்சையின் பயன் மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் தெரியும்.

சிகிச்சை அளிக்கப்பட்ட மரங்களில் வாடல் நோய்க் குறிகள் பெருமளவு தடுக்கப்பட்டு, புதிய இலைகளும், பாளைகளும் தோன்றி காய்களும் பிடிக்க ஆரம்பிக்கின்றன. எந்தக் காலத்திலும் தென்னை மரங்களுக்குத் தகுந்த உரமிட்டுத் தேவையான தண்ணீர் கட்டி நன்கு பராமரிக்க வேண்டியது முக்கியமாகும். நோய்த் தாக்கின ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை துவக்கப்பட வேண்டியது மற்றொரு பிரதான குறிப்பாகும். நோய் மிகவும் முற்றின மரங்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் யாதொரு பயனும் இருக்காது. இந்த ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, தென்னை விவசாயிகள் 'ஆரியோபங்கின்-சோல்' மருந்து உபயோகித்து தென்னை மரங்களைத் 'தஞ்சாவூர் வாடல்' நோயின் கொடுமையிலிருந்து பாதுகாக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல் :
தாவர நோயியல் துறை,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-641 003.

வெளியீடு :
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,

கோயமுத்தூர்-641 003.

## பொதுப்பணித் துறை புதிய உருப் பெறும்!

**பொ**துப் பணித் துறையில் 193 வகையான கனரக இயந்திரங்களும், மண் வாரிச் சாதனங்களும் உள்ளன. ஏரிகளைத் தூர்வாரி சீரமைக்கும் உபயோகத்திற்காக, இவற்றில் சில இயந்திரங்கள், சென்னையிலுள்ள தூர்வாருதல் - சீரமைத்தல் கோட்டத்தில் உள்ளன. சாதனங்களில் பெரும்பாலானவை இம் மாநிலம் முழுவதுமுள்ள வெவ்வேறு திட்டப் பகுதிகளில் சிதறிக் கிடக்கின்றன. திட்டத்துடன் இணைந்த இயந்திரம்-பிரிவு ஒவ்வொன்றும், இயக்குதல், பழுது பார்த்தல், பண்டகசாலைகள், பணியாளரமைப்பு ஆகிய வகைகளில் தன்னிச்சையான ஓர் அமைப்பாகும்.

தற்போது சாதனங்கள் முழு அளவில் உபயோகிக்கப்படாமல் கிடக்கின்றன. அவற்றின் உபயோகம், இயக்கம், பராமரிப்பு ஆகியவை குறித்த ஏற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. சரக்குப் பட்டியலும், உபரிகளும் இரட்டிக்கப்படுகின்றன. பராமரிப்பு அலட்சியப் படுத்தப் படுகிறது. ஒரு திட்டப் பணி முடிந்ததும் இயந்திரத்தை அகற்றுவது அல்லது மீண்டும் உபயோகிப்பது குறித்து உடனடியாகக் கவனிக்கப்படுவதில்லை.

கனரக இயந்திரங்கள், மண் வாரி இயந்திரங்கள் அனைத்தையும் பொதுப் பணித் துறையுடன் இணைந்த மத்திய இயந்திரங்கள் அமைப்பு ஒன்றின் பொறுப்பின் கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இனி மேல் இந்நிறுவனம், ஒரே இடத்தில் இயந்திரங்களையும் மண் வாரி இயந்திரங்களையும் வாங்கி, பொறுப்பில் வைத்து, பராமரித்து, இயக்கச் செய்யும். இதற்கென்று இயந்திர வல்லுநர் தர அமைப்பொன்று அமைக்கப்படும். மைய அமைப்பாக்கப்பட்ட, தகுதி வாய்ந்த தொரு அமைப்பின் உதவியினால், தற்போது ஒவ்வோராண்டும் 17,000 யூனிட்டுகள் என்ற அளவில் நடைபெற்று வரும் மண் வேலைகளின் அளவு, சுமார் 90,000 யூனிட்டுகளாக உயரும். ஏரிக் கரைகளைப் பராமரித்தல், சீரமைத்தல் குறித்து முறையான பெருந் திட்டமொன்றுக்குத் தேவையான இயந்திர வசதிகளைப் பெற இந்த ஏற்பாடு உதவும்; வருமாண்டுகளில், இதற்கென்று வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இச் செயற் குறிப்புகள், மூலதன உடைமைகள் முழு அளவில் பயன்படுத்தப்படுவதற்கும், குறைந்த அளவு சாதனத் தேவைகளுக்கு வகை செய்வதற்கும் உதவியாக இருக்கும் வகையில், நம்பிக்கைக்குரிய, திறமையானதொரு இயந்திரப் பொறியியல் அமைப்பொன்று உருவாக வழி செய்யும். இதன் மூலம் இது நாள்வரை தொன்றுதொட்ட பழைய நடைமுறையில் செயல்பட்டு வந்த பொதுப் பணித் துறை ஒரு புதிய உருப் பெற இயலும்.

# கால்நடைகளின் இரு முக்கிய நோய்!



கோமாரி நோய், சாதாரணமாகக் குளம்புகள் கொண்ட எல்லாக் கால்நடைகளுக்கும் வரும். இந் நோயினால் ஏற்படும் இறப்பு விகிதம் அதிகம். மேலும் நோய் வாய்ப்பட்ட மாடுகளால் பால் உற்பத்தித் திறனும், வேலைத் திறனும் பாதிக்கப்படுகிறது.

### நோய் பரவும் விதம்

வாயிலுள்ள சிறு கொப்புளங்கள் உடைந்தவுடன் அதில் உள்ள நீர், உமிழ் நீருடன் கலந்து வெளியேறி மற்றக் கால்நடைகளைத் தாக்குவதற்குக் காரணமாக இருக்கும். பாதிக்கப்பட்ட கால்நடைகளின் பால், மூத்திரம் மூலமாகவும் இந்நோய் மற்ற கால்நடைகளுக்குப் பரவலாம்.

### நோயின் அறிகுறிகள்

1. உடலில் காய்ச்சல் இருக்கும்.
2. நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் தீவனம்சரியாகத் தின்னாது.
3. திடீரென பால் குறைந்து விடும்.
4. உதடுகளை அசைத்துக் கொண்டே இருக்கும். உமிழ் நீர் வடியும்.
5. சிறு கொப்புளங்கள் நாக்கின் மேல் பாகம், உதடு, ஈறுகளில் தோன்றி புண்களாக மாறும்.
6. கால்களை அடிக்கடி உதறும். அல்லது நொண்டி நடக்கும்.
7. சில சமயங்களில் குளம்பு கழன்று விடும்.

### தடுப்பு முறைகள்

1. நோய்வாய்ப்பட்ட மாடுகளைத் தனியே பிரித்துவிட வேண்டும்.
2. மாடுகள் நடமாட்டத்தையும், இடம் பெயர்தலையும் தடுக்க வேண்டும்.
3. வாயை இரண்டு சதவிகிதம் படிக்காரம் அல்லது பொட்டாசியம் பெர்மாங்கனேட் மருந்து கலந்த தண்ணீரில் கழுவலாம்.
4. 1 சதவிகிதம் மயில் துத்தம் கலந்த தண்ணீரிலோ 'பினைல்' கலந்த தண்ணீரிலோ குளம்புகளை நனைக்கலாம். 2 சதவிகிதம் மயில் துத்தம், தார் கலந்த கலவையைக் குளம்புப் புண்களுக்குப் போடலாம்.
5. இளகிய தீனி வகைகளைக் கொடுக்க வேண்டும்.
6. மாடு முற்றிலும் குணமடையும் வரை ஓய்வு கொடுக்க வேண்டும்.
7. பால் மாடுகளின் மடிகளையும், காம்புகளையும் சுத்தமாக வைத்து, 'போரிக்'. களிம்பைத் தடவ வேண்டும்.
8. கால்நடைகளுக்கு நோய் கண்டதும் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி அவருடைய உதவியை நாடுவது நலம்.

தடுப்பு ஊசி : கலப்பினப் பசுக்களுக்கும், மேல்நாட்டு மாடுகளுக்கும் தடுப்பு ஊசி அவசியம்போட வேண்டும். தடுப்பு ஊசி போட்பட்ட மாடுகளை ஆறு மாதம் வரை நோய் தாக்காது.

### கருச் சிதைவு நோய்

தமிழ்நாட்டில் சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாகபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கருச் சிதைவு அல்லது கன்று வீச்சு நோய் அதிகமாகக் காணப்படுகிறது. பிறக்கும் கன்றுகள் இறந்தோ அல்லது ஊட்டமின்றியோ பிறக்கின்றன. நோயினால் பாதிக்கப்படும் கால்நடைகள் தற்காலிகமாக அல்லது ஆயுள் முழுவதும் மலடுகளாகின்றன. இதனால் பண்ணையில் பெரும் நஷ்டம் ஏற்படும்.

### பாதிக்கப்படும் கால்நடை இனங்கள்

மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி முதலிய எல்லாக் கால்நடைகளுக்கும் இந் நோய் வரலாம். குறிப்பாக மாட்டினம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது.

### நோயின் அறிகுறிகள்

1. இந் நோயின் முக்கிய அறிகுறிகள் கன்று வீச்சு அல்லது கருச் சிதைவுதான்.

   குறிப்பாகக் கடைசி மூன்று மாத சினைப் பருவத்தில் இது ஏற்படும்.
2. நாளுக்கு நாள் மாடு மெலிந்து பால் அளவு குறைந்துவிடும்.
3. பண்ணையில் அடிக்கடி கன்று வீச்சு அல்லது கருச்சிதைவு இருக்கும்.
4. கருச் சிதைவு ஏற்படு முன் பிறப்பு உறுப்பிலிருந்து இளம் வெள்ளையாக நீர் வடியும்.
5. நஞ்சுக் கொடி தள்ளாமல் நின்று விடும்.
6. கருச் சிதைவு ஏற்படு முன் கன்று ஈனும்போது ஏற்படும் அறிகுறிகள்போலவே தோன்றும்.

இந் நோயைத் தடுக்கப் பின்வரும் முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

1. சரியான சுகாதார முறைகளைப் பண்ணைகளில் கடைப்பிடிக்க வேண்டும்.
2. இந் நோய் வராமல் இருக்க தடுப்பு ஊசி இருப்பதால் 6 முதல் 12 மாதவயதுள்ள கன்றுகளுக்குத் தடுப்புஊசி போட்டுக் கொள்ளுதல் மிகச் சிறந்தது.
3. பண்ணையில் உள்ள மாடுகளை வருடத்திற்கு ஒரு முறை இரத்தப்பரிசோதனை செய்ய வேண்டும். இதனால் நோய்மாடுகளுக்குத்தகுந்த சிகிச்சை அளிக்க முடியும்.
4. கருச் சிதைவால் பிறந்த கன்றையும் நஞ்சுக் கொடியையும் எரித்து விட வேண்டும்அல்லதுபுதைத்து விட வேண்டும்.
5. சந்தேகமுள்ள பண்ணையிலிருந்து மாடுகளை வாங்கக் கூடாது.

தகவல் :

சென்னைக் கால்நடை
மருத்துவக் கல்லூரி,
சென்னை–600 007.

## தீவனச் சேதத்தைத் தடுக்கக் கோழியின் மூக்கு முனையை முறித்தல்



கோழி வளர்ப்பதில் தீவனச் செலவு ஒரு முக்கிய அம்சம். தற்பொழுது தீவனத்தின் விலை அதிகமாக இருப்பதனால் நமக்குக் கிடைக்கும் இலாபம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே தீவனத்திற்காக ஆகும் செலவைக் குறைத்தால் கோழி வளர்ப்பதில் அதிக இலாபம் கிடைக்கும்.

தீவனச் செலவைக் குறைக்க வேண்டுமானால் பண்ணைகளில் தீவனம் வீணாவதைத் தடுக்க வேண்டும். சாதாரணமாகக் கோழிகள் உணவை உண்ணும்பொழுது அலகினால் கொத்திக் கிளறி, உணவு தானியங்களைப் பொறுக்கி உட்கொள்ளும். இதனால் ஒவ்வொரு கோழியும் ஒரு நாளுக்கு 5 முதல் 10 கிராம் எடை வரை தீவனத்தைச் சேதமாக்குகிறது. இக்கணக்குப்படி 100 கோழிகளால், 500 முதல் 1,000 கிராம் வரை வீண் சேதம் ஆகக்கூடும். இதைத் தடுப்பதற்குக் கோழிகளின் மூக்கை ஒரு குறிப்பிட்ட அளவு வெட்டுதல் ஒரு பயனுள்ள செயலாகும். மூக்கின் முனையை வெட்ட இரண்டு முறைகள் உண்டு.

(1) முட்டையில் இருந்து குஞ்சு வெளிவந்த 6 நாட்களுக்குள் வெட்டலாம்.

அல்லது

(2) 12 முதல் 16 வார வயதிலும் வெட்டலாம்.

இந்த இரண்டு முறைகளிலும் பின்னதே சிறப்பானது.

மூக்கின் முனையை முறிப்பதனால் உணவு தானியச் செலவு மிச்சமாவது மட்டுமின்றி, ஒரு கோழி மற்றக் கோழிகளைக் கொத்திச் சீண்டாமல் இருக்கவும் உதவுகின்றது. கோழிகளின் மூக்கை முறைப்படி வெட்டுவது கோழிப் பண்ணைப் பராமரிப்பில் ஒரு முக்கிய அம்சம். கோழிகளின் மூக்கை மின்சார மூக்கு வெட்டுக் கருவி மூலம் வெட்ட வேண்டும். இதற்கு அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுவது நலம்.

# தொழில்களுக்குத் தகவல் தொடர்ந்து தர வேண்டும்!

**தொ**ழில்களின் ஆக்கத்திற்கு, அத்தொழில்களைப் பற்றிய **"தகவல்கள்"** முக்கியமானவையாகும். தொழில் சார்ந்த தகவல்களின் மதிப்பு இப்பொழுது நன்கு உணரப்படுகிறது. பொருள்களை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குவதற்கு இவை இன்றியமையாத் தூண்டுதலாய் அமைந்துள்ளன. பல முனைப்பட்ட தொழில் அபிவிருத்திகள் யாவற்றிலும், இந்தத் தொழில் நுணுக்கம் பற்றிய தகவல்கள் விளைவித்துள்ள நற்பணிகளை நன்கு உணர முடிகிறது.

தொழில்களுக்கு வேண்டிய, தொழில் நுணுக்கத் தகவல்களை ஆய்ந்தறிதல், அவற்றைச் சேகரிப்பது, தொழில்களுக்கு வழங்குவது பற்றிய எண்ணிலடங்கா செயல் வகைகளை, தொழில்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு, "தொழில்களுக்குத் தகவலளிப்பது" என்ற கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. ஆகஸ்டு திங்கள் ஐந்தாம் நாள் முதல் ஏழாம் நாள் முடிய, கிண்டியிலுள்ள தொழில் வணிகத் துறையின் தொழில் நுட்பத் தகவல் நிலையத்தில் நிகழ்ந்த இக் கருத்தரங்கினை, சென்னை நூலகக் குழு ஏற்பாடு செய்திருந்தது.

தொழில் முனைவர்களுக்கு உதவ ஒரு தனிப்பட்ட நிறுவனத்தை அமைப்பது அவசியம். வேளாண்மைத் துறையில், ஆராய்ச்சியின் விளைவுகளை ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து வேளாண்மைத் தொழிலில் ஒன்று சேரப் புகுத்தியது ஓரளவு சாதனையை உருவாகியுள்ளது. இந்தச் சாதனை உணவில் தன்னிறைவை அடைவதற்கு உதவி செய்துள்ளது.

துரிதமான தொழில் வளர்ச்சிக்குத் துணை புரியும் வகையில், ஆராய்ச்சி நிலையங்கள், இந்திய தொழில் நுட்பவியல் நிலையம், தேசீய ஆய்வுக் கூடங்கள் ஆகியன ஒருங்கிணைந்து செயல்படுவதன் வாயிலாகத் தொழில் முனைவர்களை ஊக்குவிப்பது அவசியமாகிறது.

இதைப் போலவே தொழில் வர்த்தக அமைப்புகளுக்கும், சிறு தொழில் கழகங்களுக்கும், தொழில் நுட்பத் தகவல் நிலையங்களுக்கும், தொழில் முனைவர்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கும் இடையே தொடர்பு அமைந்திருக்க வேண்டியது அவசியம்.

முதல் நாள் கருத்தரங்கில், தொழில் நுட்பத் தகவல்களைச் சேகரிப்பது; தொழில்கள் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது ; தமிழ்நாட்டில், சிறு தொழில்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் அளிப்பதன் பொருட்டு கிண்டியிலுள்ள தொழில் நுட்பத் தகவல் நிலையத்தின் தரத்தை உயர்த்துவது ;



அறிவியல் மற்றும் தொழிலியல் குழு, தொழில் நிறுவனங்கள் இவற்றினிடையே நல்ல தொடர்புகளை வலுப்படுத்துவது ; தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்ப தகவல்களை அளிப்பதில் நூல்களின் பங்கு ஆகியன பற்றிய ஆய்வுச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

தமிழ்நாடு கல்வி அமைச்சர் மாண்பு மிகு திரு சி. அரங்கநாயகம் அவர்கள் இரண்டாம் நாள் கருத்தரங்கில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். அமைச்சர் அவர்கள் பேசுகையில் தொழில் முனைவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்தில், ஒருபடித்தான, காலத்தோடொட்டிய வளர்ச்சியுடையதொழில் நுட்பத் தகவல்களை வழங்கும் வண்ணம் ஒரு தகவல் களஞ்சியத்தை நிறுவ வேண்டும் என்ற கருத்தினை உணர்த்தினர். தேசீய முன்னேற்றத் திட்ட அமைப்புகளில் எந்தெந்தத் துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதனை அறிந்து அவைகளை மேம்படச் செய்யவும், அதன் காரணமாக சமூகத்தின் முன்னேற்றப் பாதையில் மாறுதல்களைக் காணவும் தொழில் நுட்பத் தகவல்களை அளிப்பது, திட்டமிடுதலில் அமைந்துள்ள ஒரு முக்கிய அங்கமாகும் என்று அவர் கூறினர். படித்து வேலையின்றி இருப்பவர்களில் பெரும்பாலோர் தொழில் நுட்பத் தகவல்களைத் தக்க முறையில் அறிந்து கொள்ளவில்லை. அவர்கள் அறிந்து கொள்வது தொழில்களின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்த அவசியமாகிறது. எனவேதான், காலத்தோடு ஒட்டி வளர்ந்து வரும் தொழில நுணுக்கங்களை அவ்வப்பொழுது அறிந்து அவை பற்றிய தகவல்களை அளிப்பது இன்றியமையாததாகிறது.

கருத்தரங்கின் இறுதி நாளில், நடவடிக்கைக் குழுவானது, கிண்டி தொழில் நுட்பத் தகலவகப் பணியின் தரத்தை உயர்த்தி நாட்டிலுள்ள இதர அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களோடு தொடர்புகொண்டு, சிறுதொழில் முனைவர்களுக்குத் தேவையான தகவலறிவிப்புப் ப்ணிகளை வழங்க முடியும் என்ற கருத்தை எடுத்துக் கூறியது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





## விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!





| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெறாத பிற பணிகளுக்கு | 3.50 | |



வேலை நேரம் : உழவு—5 மணி நேரம். பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



# தேசத் தந்தையை நினைவு கொள்வோம்

"குடிப்பழக்கம் ஒரு சமூகத்தீமை அது மனிதனை மிருகத்தின் நிலைக்குத்தாழ்த்தி விடுகிறது. அதனை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது நம்கடமை"

—காந்தியடிகள்




வெளியீடு

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.







# தமிழரசு

16-9-1977

மலர் : 8 இதழ் : 6


COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH

## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| பேரறிஞர் அண்ணா ... | 2 |
| தமிழ் வீரன் ... | 6 |
| அண்ணா ஒரு மருத்துவர் ... | 7 |
| தமிழர் தளபதி ... | 8 |
| இதோ ஒரு பெர்னாட்சா ... | 9 |
| அண்ணாவின் வாழ்விலே! ... | 10 |
| செவ்வாழை (சிறு கதை) ... | 12 |
| மாணவ மணிகளுக்கு அண்ணா அளித்த அறிவுரை! ... | 17 |
| நாடகத்திலும் திரைப்படத்திலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் அண்ணா! ... | 19 |
| படமும் செய்தியும் ... | 21 |
| எதிர்காலத்தை நிர்ணயிக்கும தலைவர் நீங்கள்! ... | 28 |
| வருமானமல்ல! குடும்பங்களின் மகிழ்ச்சிதான் அரசுக்கு முக்கியம்! | 29 |
| எனக்குக் கைகூடாதது அண்ணாவுக்குக் கைகூடியது! ... | 30 |
| பெரியார் ஒரு சகாப்தம்! ... | 31 |
| பெரியாரால் பாராட்டப் பெற்ற அண்ணாவின் தலையங்கம் ... | 32 |
| மக்கள் கவிஞர் ... | 33 |
| கைத்தறி பற்றி அறிஞர் அண்ணா .... | 40 |
| உள்ளங் கவர் கள்வன்! ... | 41 |
| அண்ணாவின் பொன்மொழிகள் ... | 43 |
| மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா எழுதிய கடிதம் ... | 44 |
| அண்ணாவின் நாட்டுப் பற்று ... | 47 |


## பாரதி கலை அரங்குக்கு பத்து இலட்சம் ரூபாய் !

### தமிழக முதல்வர் அறிவிப்பு

பாரதி சங்கத்தின் சார்பில் 10-9-'77 அன்று மயிலாப்பூர் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற 'பாரதியார் விழாவில்', பாரதி சங்கத் தலைவர் திரு என். மகாலிங்கம் அவர்கள் பேசுகையில், "சென்னை நகரில் பாரதி பெயரில் கலை அரங்கத்தை மிகச் சிறந்த முறையில் அமைக்க பாரதியார் சங்கம் எண்ணியுள்ளது. இதற்கு 20 இலட்சம் முதல் 30 இலட்சம் ரூபாய் வரை ஆகலாம். இதற்கு முதலமைச்சர் உதவ வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

விழாவிற்குத் தலைமை ஏற்றுப் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் குறிப்பிட்டார் :

"பாரதி சங்கத்தின் எண்ணம் விரைவில் ஈடேறும். தமிழக அரசு, பாரதி கலை அரங்கம் கட்டுவதற்காக ரூபாய் 10 இலட்சம் வழங்கும் என்பதை இந்த விழாவில் தெரிவித்துக்கொள்கிறேன்."



# பேரறிஞர் அண்ணா

— எம். ஜி. ஆர்

## "அண்ணா"

இந்தப் பெயர் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு மகத்தான சக்தியாகத் திகழ்கிறது.

இரும்புத் திரை போட்டு மாற்றார்களால் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்த அந்தச் சக்தி, மறைக்க முடியாத ஆற்றல் மிக்க சக்தியாக உருவாகியிருக்கிறது.

அரசியலின் ஆழ்ந்த ஞானம், சமூகத்தைப் பற்றிய தெளிவான அறிவு, மனித உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் மனத் தத்துவம், பொருளாதாரக் கூறுபாடுகள், கலாசார வரையறை, விஞ்ஞான சாதனைகள் போன்ற பல துறைகளையும் உணர்ந்து கொண்டு, அவற்றின் உண்மையான கோட்பாடுகளில் இரண்டறக் கலந்து, மறுமலர்ச்சிச் சக்தியாக அந்தச் சக்தி மலர்ந்திருக்கிறது.

பல துறைகளிலும் ஆழ்ந்த அறிவு பெற்றுள்ள இந்தக் காரணத்தாலேயே, தெளிந்த உள்ளங்களின் ஒருமித்த பாராட்டையும், பெருமதிப்பையும் அந்தச் சக்தி பெற்றிருக்கிறது.

இந்திய அரசியலில் ஜனநாயகத்தை முழு அளவில் நம்பியிருந்த, வளர்க்க விரும்பிய உண்மையான ஜனநாயக அரசியல் அறிஞர் அண்ணா அவர்களே.

எதிரிகள் ஆனாலும் அவர்களுடைய கருத்தையும் கேட்க வேண்டும் என்ற நெறியையும், எதிரிகளையும் தம் கருத்துக்கு இசைய வைக்கும் ஆற்றலையும் படைத்துக் காட்டி, பண்பு மிக்க அரசியலை இந்த நாட்டில் உருவாக்கியவர் அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் நுழைவுக்குப் பிறகு தான், வெவ்வேறு கருத்துடையவர்கள் ஒரே மேடையில் சந்தித்து விவாதிக்க முடியும் என்ற உயர்ந்த அரசியல் நாகரிகம் உருவாக ஆரம்பித்தது.

அரசியல் இயக்கம் என்பது உணர்ச்சிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் இடையே போடப்படுகிற ஒரு 'கணக்கு' என்ற நிலையை மாற்றி, ஓர் இயக்கத்தில் ஈடுபட்ட அத்தனை பேரையும் குடும்ப உணர்ச்சி கொள்ள வைக்கும் ஒரு புதிய சித்தாந்தத்தை ஏற்படுத்திய தத்துவவாதி அண்ணா அவர்களே.

விஞ்ஞானத்திலே ஈடுபட்டவர்கள் மனித வாழ்க்கை முறையைப் பற்றியோ, பண்பாட்டைப் பற்றியோ அதிகம் சிந்திப்பதில்லை ஏன், சிந்திப்பவர்களே குறைவு என்றும் கூறலாம்.

ஆனால் விஞ்ஞானம் ஏனைய துறைகளோடு கலந்து, பண்பாட்டோடு இணைந்து, மனிதனை ஆக்கும் சக்தியாக வளர வேண்டும் என்று விரும்பியவர் அண்ணா அவர்கள்.

மனிதர்களுடைய மனம் எதையும் சரியாக எண்ண வேண்டும் என்பதும், அந்த எண்ணத்தை வளர்ப்பதற்கு எல்லாவற்றையும் பற்றிய அறிவை அவர்கள் பெற்றே ஆக வேண்டும் என்பதும் அண்ணா அவர்களின் நோக்கம்.

பொருளாதாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு சமூக மேம்பாட்டுக்குரிய தேவைகளைப் பற்றிச் சிந்திப்பது அரசியல்வாதிகளிடையே வழக்கமாக இருந்து வருகிறது.





ஆனால் மனித மனத்தையும், பொருளாதாரத்தையும், இயற்கைத் தத்துவத்தையும் ஒன்றாக இணைத்து, ஒரு புதிய சமுதாயத்தைக் காணக் கனவு கண்டு கொண்டிருந்தவர், அண்ணா அவர்கள்.

ஆற்றல் மிக்கவர்கள் மட்டு
அரசியலில் தலைவராக வர வே
டும் என்றிருந்த இலக்கணத்
மாற்றி, ஆற்றல் மட்டு
போதாது, அன்பும், நல்ல ப
பும் வேண்டும், அப்பொழுதா
வளமான ஜனநாயகம் அர
வில் வளர முடியும் என்ற பு
அரசியல் கோட்பாட்டை
வாக்கி, அதற்கு இலக்கிய

ஓர் இயக்கத்தை நடத்திக்கொண்டிருந்தவர் அண்ணா அவர்களே!

எல்லோராலும் ''தகுதியுள்ள ஓர் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறும் அரசியல்வாதி'' என்று பாராட்டப்படும் நிலை யாருக்கும் எளிதில் கிடைத்து விடாது. எந்தத் தனி மனிதரும் பிறரால் பாராட்டப்படும் போதோ, உற்சாகப்படுத்தப்படும் போதோ, பெருமைப்படுத்தப்படும்போதோ தன்னையே மறந்து விடும் நிலையை அடைவது தவிர்க்க முடியாததாகும்.

சர்வாதிகார நிலைமையில் செயல்படும் போக்கு அந்தக் குறிப்பிட்ட மனிதரிடம் உண்டாவதும் இயற்கையாகும்.

ஆனால் அண்ணாவைப் பொறுத்த வரையில் இது நேர்மாறானது.

எவ்வளவுக்கெவ்வளவு அவர் உயர்த்தப் பட்டாரோ—தோழர்கள், தொண்டர்கள், பின்பற்றி வருபவர்கள் முதலியவர்களால் எவ்வளவுக்கெவ்வளவு பாராட்டப் பெற்றாரோ—அந்த அளவுக்கு மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு முன்னிலும் அதிக அடக்கத்தோடு, தன்னை மிக மிகச் சாதாரண குடிமகனாக்கிக் கொள்ளும் பண்பை அண்ணாவிடத்தில் நான் கண்டேன்.

உலக அனுபவமே பெறாத சிறு குழந்தைகளுக்கும் கூடப் பழி வாங்கும் நோக்கம் உண்டாவது தவிர்க்க முடியாததாயிருக்கிறது.

ஆனால் அண்ணா அவர்களோ, தன்னையே இகழ்ந்து தலைகுனியச் செய்யும் அளவுக்கு ஏசிச் செயல்படும் ஒருவர், தமது கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் இருப்பவராயிருந்தால்கூட, தம் கட்டளையை மீறிக் கட்சியில் இருக்கவே முடியாதவர் என்றாலும் கூட, அவர் மேல் அனுதாபத்தைச் செலுத்துவாரே தவிர—அவருக்காக மற்றவரிடம் பரிந்து வாதாடுவாரே தவிர—பழி வாங்கும் உணர்வு அவர் உள்ளத்தில் இடம் பெறாதென்றாகும்.

அண்ணா அவர்கள் சொல்லியிருக்கும் ஒரு வாக்கியமே இதற்கு உதாரணமாக அமைந்திருப்பதைச் சொல்லலாம்.

"என்னை யார் வேண்டுமானாலும் வெறுக்கட்டும்; என்னை அழித்துவிடவே முயலட்டும். ஆனால் நான்மட்டும் யாரையும் இழக்க முடியாது. அதைச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு வேறு ஆளைப் பாருங்கள்."



## அறிஞர் பட்டம் பெற்ற வரலாறு

1945-ஆம் ஆண்டில் நாகர்கோவிலில் நடந்த ஒரு கூட்டத்துக்கு அண்ணா சென்றிருந்தார். அக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் திரு. செய்குதம்பிப் பாவலரும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் பேசும் போது கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றிற்கு அண்ணா புது விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் பொருத்தமுடையதாகவே இருந்தது. அதைக் கேட்டுப் புலவர் செய்கு தம்பிப் பாவலர் மிகவும் வியப்படைந்தார். கூட்டம் முடிந்ததும் அண்ணாவும், செய்கு தம்பிப் பாவலரும் கம்பராமாயணத்தைப் பற்றிக் கலந்து பேசினார்கள். அப்போது செய்குதம்பிப் பாவலர், அண்ணாவின் கூரிய அறிவையும், சொற்போர் புரியும் ஆற்றலையும் அறிந்து வியந்தார்; அண்ணா அவர்களுக்கு **'அறிஞர்'** என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தார். அதன் பிறகு அண்ணாவை எல்லாரும் **'அறிஞர் அண்ணா'** என்று அழைக்கலாயினர்.

பிற்காலத்திலோ அண்ணாவின் பேரறிவைக் கண்டு வியந்தவர்கள் அவருக்கு **'பேரறிஞர்'** என்னும் பட்டத்தை வழங்கினார்கள். 'அறிஞர் அண்ணா' அவர்கள், **'பேரறிஞர் அண்ணா'** என்று அழைக்கப்பட்டார்.

அவர்தான் அண்ணா! தமிழ் மக்களின் தனித் தலைவர்.

ஆனால் சில சமயம், இந்த இவருடைய நல்ல பண்பைச் சிலர் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிந்தும்கூட அவர்களும் ஒரு காலத்தில் திருந்தி நல்வழிக்கு வந்துவிடுவார்கள் என்று நம்பிக் காத்திருந்தவர் நம் அண்ணா. பல முறை அப்படி நிறைவேறியும் இருக்கிறது.

தம்முடைய கட்சி வெற்றி பெற வேண்டுமென்பதற்காகச் சமுதாய நலனையோ, தனி மனிதர்களின் வளர்ச்சியையோ, சிந்திக்காமல் செயல்படுவதை அறவே வெறுத்தவர் அண்ணா. அவருக்குத் தனி மனிதர்களின் வளர்ச்சியும், அதன் மூலம் சமுதாய வளர்ச்சியுமே முக்கியம்.

கட்சி என்பது என்ன? பல மனிதர்களின் சேர்க்கைதானே? சமூகமும் அப்படித்தானே!

தனி மனிதர்களை வளர்க்க முடியாத கட்சி, சமுதாயத்தை எப்படி வளர்க்க முடியும்?

அதனால்தான் தமது கட்சியில் உள்ள எல்லோருமே அறிவிலோ, அனுபவத்திலோ, திறமையிலோ, தியாக உணர்விலோ, தகுதியிலோ குறைந்தவர்களாக இருக்கக் கூடாது என்று அவர் கருதினார்.

பொதுவாகவே அரசியல் கட்சிகளில் உள்ள தலைவர்கள் திறமை மிகுந்த பிறர் தங்கள் கட்சிக்குள் வந்தால், எங்கே தங்களுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சுவதைக் காண்கிறோம்.



**உத்தமர் காந்தியடிகளின் உள்ளம்!**

"ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான்! மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி, நல்லாட்சி அமைப்பார்! பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி, மக்களுக்கு நல்வழி காட்டுவார்! உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது!"

—அண்ணா

இதற்கு மாறாக அண்ணா அவர்கள், அறிவும், திறமையும் மிகுந்தவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கட்சியில் இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு கட்சிக்கு நல்லது என்று கருதியவர். அவர்களை வரவேற்கவும் செய்தார்; வளர்க்கவும் செய்தார்.

வளர்த்த கடாவே மார்பில் பாய்வது அரசியல் இயக்க வரலாறுகளிலே வழக்கமாக நடைபெற்று வருகிற சம்பவம் என்றாலும் கூட, அப்படிப்பட்ட தீய சக்திகளால் தம்மை அழித்துவிட முடியாது என்ற தன்னம்பிக்கையும், ஆற்றலும் படைத்திருந்தவர்.

எத்தனையோ அரசியல் கட்சிகளில் ஒவ்வொரு தகுதியில் சிறந்தவர் வளர்வதைக் கண்டிருக்கிறோம். ஆனால் அழகு தமிழில் எழுதக் கூடிய ஆற்றல் பெற்றோரை, உணர்ச்சி மிக்க தமிழில் உரை நிகழ்த்தும் திறன் மிக்கோரை, புதுமைக் கருத்துப் படைக்கும் சிறப்பு வாய்ந்த நாடக ஆசிரியர்களை, துள்ளும் தமிழ் நடையிலே கவிதைகள் பொழியும் நல்ல பல கவிஞர்களை, பகுத்தறிவுடன், இன்பத்தைக் கலந்து அளிக்கும் இலட்சியம் உள்ள கலைஞர்களை, பண்புமிக்க அரசியலை நடத்தக்கூடிய தகுதி மிக்க தலைவர்களை இன்னும் பலப் பல அரிய சக்திகளையெல்லாம் இந்த நாட்டில் தோற்றுவித்திருக்கும் பேராற்றல் மிக்க மாபெரும் சக்தி, அறிஞர் அண்ணா அவர்கள் தான்!

இவரால் தோற்றுவிக்கப்பட்டவர்களில் பலர் வேறு இயக்கங்களில் இருப்பார்கள். ஆனால் தோற்றுவிக்கும் சக்தியாக இருப்பவர் அவர் என்பது நான் கண்கூடாக அறிந்த உண்மை!

எத்தனையோ பேர் தொண்டர்களால், தலைவர்களாக்கப்படுகின்றனர்.

ஆனால் அண்ணாவின் ஸ்தானம் யாராலும் அளிக்கப்பட்டதில்லை.

அந்த ஸ்தானத்துக்காகவே அவர் உருவானவர்!

அவருடைய செயல் அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுத்ததே தவிர, பிறருடைய செயலால் கொடுக்கப்பட்டதுமில்லை; பிறரிடமிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டதுமில்லை. அவருக்கு என்று இருந்தது அந்த ஸ்தானம். அவருக்கே சொந்தமாகிவிட்டது அந்த ஸ்தானம். இந்த உயர்ந்த ஸ்தானத்தின் ஏகப் பிரதிநிதியாகத் திகழ்ந்த அவர், மக்களின் பிரதிநிதிகள் என்ற பெயரில் ஆட்சி நடத்திய ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கும், எதிர்ப்புகளுக்கும் ஈடு கொடுத்து பொது இயக்கங்கள், போராட்ட இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துகிற முறையில், அமைதியையும், அற வழியையும் தாம் துன்பத்தை ஏற்றுக்கொண்டு, பிறருக்குத் துன்பம் தராத உள்ள பண்பையும் மேற்கொண்டதில் காந்தியடிகளுக்கு இணையாக விளங்கினார்!

அண்ணாவின் எழுத்து; மனித உள்ளத்தைப் பண்படுத்தும்!

அண்ணாவின் பேச்சு! மனிதனை மனிதனாக்கும்!

அண்ணாவின் சிந்தனை! நாட்டின் நலிவைப் போக்கும்.

அண்ணா சிரிப்பார்; தம்மை இழிவுபடுத்துபவர்களைப் பார்த்து.

அண்ணா கண்ணீர் சிந்துவார்; எதிரிகளேயானாலும்கூட அவர்களுக்கு ஏற்படும் துன்பத்தைக் காணச் சகிக்காமல்.

அண்ணா வெகுண்டெழுவார்; பிறர் ஜாதி பேதத்தை வியாபாரமாக்கும்போது.

அண்ணா தொல்லைப்படுவார்; மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்படுவதற்காக!

அண்ணா நடிப்பார்; சமூகத்தின் சீரழிவைப் போக்குவதற்காக.

அவர் ஒரு புதிய சமுதாயத்தின் சிற்பி.

திறமை, தந்திரம், கண்டிப்பு இவற்றையெல்லாம் கடந்த பாச உணர்வுத் தீ கொழுந்து விட்டு எரிய அந்தப் பண்புச் சுடர் ஒளி வீசுகின்ற மனித குலத்தின் தத்துவவாதி!

பழைமையையும் புதுமையையும் இணைத்து, பாசத்தின் அடிப்படையில் ஜாதி பேதம் போன்றவைகளை ஒழித்து, மனித இனத்தை ஒன்றாக்கிய அரசியல் ஞானி!

விஞ்ஞானத்தில் மெய்ஞ்ஞானத்தைக் கலந்து, வாழ்க்கையின் வளம் பெருகச் செய்து, 'அன்பு' என்னும் அகன்று விரிந்த சமதர்மக் கோட்பாட்டின் செந்நெறிகளைச் செயற்படுத்தும் இலட்சியத்தை மேற்கொண்டு, புதிய சமுதாயத்தைத் தோற்றுவித்த வழிகாட்டி!

**அவர்தான் அண்ணா!**

# தமிழ வீரன்!

தமிழுக்குத் தொண்டுசெய்து சிறைக்குச் சென்றேன்,
தலைசிறந்த பேச்சுவல்லோன்; தமிழ வீரன்;
தமர் என்றும் தான் என்றும் நினைப்ப தன்றித்
'தமிழ் நாட்டின் நலத்தினுக்கே உயிர் உடல்கள்
அமைக' என இரவு பகல் உழைக்கும் மேலோன்.

—கவிஞர் பாரதிதாசன்.







# அற்புதம்சூழ் மாலுமி!

"அண்ணா துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணன் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் பண்ணவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதம்சூழ் மாலுமியென் றூடு !"

—தமிழ்த் தென்றல் திரு. வி. க.



# அண்ணா ஒரு மருத்துவர்!





இளந் தமிழுலகத்தில் — எழுகின்ற தமிழுலகத்தில் — இன்று 'அண்ணா' என்று அருமையாக அழைக்கப்படுகின்றவர் தோழர் திரு. அண்ணாதுரை. அவர் ஆயிரம் மேடை ஏறிய அறிஞர்; பல்லாயிரம் மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய கூரிய சொல்லாளர்; கண்ணினின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்.

அண்ணாதுரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலையறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய், களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகின்றவர் அவர்.

தமிழ்க் குலத்தை அழிக்கும் வேர்ப் புழுக்களை அழித்தாலன்றித் தமிழகம் தழைக்குமாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினை அற்றிருக்குமளவும் நாம் உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ் நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமாயின், "நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. 'புண்ணுற்ற மேனியைப் புறம் பொதித்து மூடுதலால் என்ன பயன்?' என்பது அவர் கேள்வி.

மதிநலம் வாய்ந்த மருத்துவர், அழுகிய தசையைப் பார்த்து அறுத்தால், தமிழ்க் குலம் தலையெடுக்கும் என்பதில் என்ன தடை? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப்பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி?

தமிழர் வாழ வேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெருங் குறிக்கோளுடையவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

–சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை

# அண்ணாவின் விருந்து!



இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல் வன்மையும், எழுத்து வன்மையும் இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்.

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப்பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் வாலிபர்களையும் தீண்டாமலில்லை. அண்ணாதுரையின் பேச்சிலும், எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒரு வித கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்களும் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை, "சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை" எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்தி செய்தார்.

—ப. ஜீவானந்தம்



# தமிழர் தளபதி

1948-ஆம் ஆண்டில் சென்னைத் தீவுத் திடலில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அண்ணுவும் தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் நிகழ்த்திய பேருரை திரு.வி.க.வை மிகவும் கவர்ந்துவிட்டது.

அதே கூட்டத்தில் அண்ணுவுக்குப் பிறகு பேசிய திரு.வி.க., ''தமிழகத்தில், 'திரு.வி.க. நடை,' 'திரு.வி.க. தமிழ்', 'திரு.வி.க. பேச்சு முறை', 'திரு.வி.க. எழுத்து' என்று இன்று நிலவி வருவது மாறி, இனி வருங்காலத்தில், 'அண்ணுதுரை நடை', 'அண்ணுதுரை தமிழ்', 'அண்ணுதுரையின் 'பேச்சு முறை', 'அண்ணு துரை எழுத்து' என்றுதான் வரப்போகிறது. வருங்காலத்தில் தமிழ் மொழி அழிந்து சிதைந்துவிடுமோ, அதை யார் காப்பாற்றப் போகின்ருர்களோ என்று நான் ஐயப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனுல், இனி நான் ஐயப்படாமல் அமைதியாகவே சாவேன். அண்ணுதுரை தமிழுக்குத் தொண்டு செய்வதை என்னுல் மறக்கவே முடியாது. அண்ணுதுரை ஓர் அரசியல்வாதி மட்டும் அல்லர். அவர் தாய்நாட்டையும் தாய்மொழியையும் காக்கும் தமிழர் தளபதி' என்று அண்ணுவைப் பாராட்டிப் பேசினுர்.







மண்ணில் சிறந்த அரசியல் ஆட்சியே மக்களாட்சி
விண்ணின் சிறந்தது! சான்றவர் மேலது! மேன்மைமிகும்
அண்ணலார் காந்தி அறவழி சென்றே அரசியலின்
கண்ணியம் காக்கும் கரமெங்கள் அண்ணு கவின்கரமே.'

—கவிஞர் வாணிதாசன்.



# இதோ ஒரு பெர்னுட்ஷா



—ரா. கிருஷ்ணமூர்த்தி, 'கல்கி' ஆசிரியர்.

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னுட்ஷாவையும், கிப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். ''நாடகம், கீடகம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனுல் ஒரு பெர்னுட்ஷாவுக்கும், ஒரு கிப்ஸனுக்கும் எங்கே போவது? திருடப் போக வேண்டியது தான்!.'' என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம், தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்திற்கு முன்பு திருச்சிராப்பள்ளியில் ''ஓரிரவு'' என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனுக, ''இதோ ஒரு பெர்னுட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிருர்! கிப்ஸனும் இருக்கிருர்! இன்னும் கால்ஸ்வொர்த்தியுடம்கூட இருக்கிருர்'' என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை அமைத்திருந்த பாணியும், கட்டுக்கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி, என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப் பேசும்படி சொன்ன போது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. ''நன்ருகயிருக்கிறது; மிக நன்ருகயிருக்கிறது; அதிக நன்ருகயிருக்கிறது!'' என்று தான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.

காங்கிரஸுக்கும், தேசிய விடுதலை இயக்கத்துக்கும் எதிர்க் கட்சிகள் என்று கருதப்படும் திராவிடக்கட்சி, சுயமரியாதைக் கட்சி, ஜஸ்டில் கட்சி, ஆகியவற்றில் மிகச் சிறந்த எழுத்தாளரும், சொற் பொழிவாளரும் சிலர் இருக்கிருர்கள்.

திராவிடக்கட்சி-சுயமரியாதைக் கட்சி-ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலைசிறந்து விளங்குகிறவர் திரு சி. என். அண்ணுதுரை அவர்கள். அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். ''சொற்பொழிவு என்ருல் இது வல்லவா சொற்பொழிவு, தட்டுத் தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிருேமே!'' என்று எண்ணத் தோன்றும்.

திரு அண்ணுதுரையின் சொற்பொழிவு ஒன்றை நான் நேரில் கேட்காவிட்டாலும், நண்பர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியது என் மனதில் பதிந்து போயிருக்கிறது. சென்ற ஆண்டின் இறுதியில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது. அச்சமயம் நான் பம்பாயில் அகப்பட்டுக் கொண்டேன். ரயில் பாதையும் உடைப்பட்டுப் போயிருந்தபடியால், மகாநாட்டுக்குவர முடியவில்லை. திரும்பி வந்ததும் எழுத்தாளர் மகாநாட்டைப் பற்றி விசாரித்தேன். திரு அண்ணுதுரையின் பிரசங்கத்தைப் பற்றி ஒருவர் சொன்னுர். நமது கிராமங்களிலுள்ள ஜனங்கள் அறிவு விளக்கம் பெருமல் பழைய குருட்டு நம்பிக்கைகளிலே ஆழ்ந்துகிடப்பதைப்பற்றி திரு. அண்ணுத்துரை பேசினுராம். ''மின்சார சக்தியைக் கண்டு பிடித்தவர் யார் என்று கிராமவாசியைக் கேளுங்கள், தெரியாது; ஆனுல் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்று தெரியும். நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார் என்று கேளுங்கள் தெரியாது; ஆனுல் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பது மட்டும் தெரியும். ரேடியத்தின் உபயோகம் என்னவென்று கேளுங்கள், தெரியாது; ஆனுல் யமனுக்கு வாகனம் என்னவென்று கேட்டால், உடனே எருமைக்கடா என்று பதில் வரும் ....'' இந்த மாதிரி யமனையும் எருமைக்கடாவையும் வைத்துக் கொண்டு திரு. அண்ணுதுரை மேற்படி மகாநாட்டில் வெளுத்து கட்டி விட்டார் என்று பிரசங்கத்தைக் கேட்ட நண்பர் சொன்னுர். எழுத்தாளர் மகாநாட்டிலேயே திரு அண்ணுதுரை பிரசங்கந்தான் விசேஷ நிகழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஆனுல், பேச்சும், பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய்விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் 100க்கு 50 பேர் சொற்பொழிவை சரியாகக் கவனிப்பதேயில்லை; மற்ற ஐம்பது பேர் ஒரு காதினுல் வாங்கி, இன்னெரு காதினுல் விட்டு விடுகிருர்கள்.

பேச்சைக் காட்டிலும், எழுத்து அதிக வலிமையுடையது. ஆனுல் பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை உண்மையில் சீர் திருத்த விரும்புகிறவன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு அண்ணுதுரையிடம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை ''ஓரிரவு'' நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

# அண்ணாவின் வாழ்விலே!

## விடுதலைப் போர்த் தியாகிகளிடம் அண்ணா கொண்டிருந்த மதிப்பு!

விடுதலைப் போர்த் தியாகிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் அண்ணா. தமிழகத்தில் நீண்ட நாட்களாக நிறைவேறுமல் இருந்த ஒரு தியாகியின் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றினார். வாஞ்சி என்னும் தியாகியின் மனைவி தனக்கு வாழ்க்கைப் 'பென்சன்' வேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கேட்டு வந்தார். ஆனால் அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படாமலேயே இருந்துவந்தது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த அம்மையாரின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார். பாவம், அந்த அம்மையார் முதுமை அடைந்திருந்ததால், அண்ணா தந்த பென்சன் பணத்தை நீண்ட காலம் வாங்கி அனுபவிக்க இயலாமல் இயற்கை எய்தி விட்டார்.

என்ருலும், தியாகிகளிடமும் அவர்களது குடும்பத்தவரிடமும் அண்ணா கொண்டிருந்த மரியாதையை இந்த நிகழ்ச்சி எடுத்துரைத்து வருகிறது.

## கோவா விடுதலை வீரருக்கு விடுதலை வாங்கித் தந்தவர் அண்ணா!

முதன் முறையாக அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது கூட, அண்ணா அவர்கள் அந்தப் பயணத்தை வெறும் சுற்றுலாப் பயணமாக்கி விடாமல் மிகப் பெரும் தியாகி ஒருவரின் வாழ்விலே மலர்ச்சி ஏற்படுவதற்குரிய வாய்ப்பாக்கிக் கொண்டார்.

கோவா விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு, நீண்ட காலமாகச் சிறையில் கிடந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தார் ரானடே. அவரது துன்பத்தை இந்திய அரசோ, அண்ணாவுக்கு முன்பு இருந்த மாநில அரசோ பொருட்படுத்தவில்லை. ஆனால் விடுதலை வீரர் ரானடே ... துன்பம் அண்ணா அவர்... இதயத்தை மிகவும் வருத்... அவரது விடுதலைக்கு வழி ... என்று தமக்குள் சிந்... வைத்துக் கொண்டார்



உலகப் பொதுமறை திருக்குறளை அன்புப் பரிசாக அளித்துவிட்டு, போப்பாண்டவருடன் பேரறிஞர் அண்ணா கைகுலுக்கி மகிழ்ந்ததுடன், கோவா விடுதலை வீரர் ரானடே அவர்களை விடுதலை செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

...தாச்சும் மாடு ஓடு ... மிதிச்சுவிடப் ... க்கிரதையாகக் கவ ... அருமையான ... நக... சவ்வாழைன்னு ... குலை, எம் ... க்கும் தெரியு ... வீச்சாவும் ... டையாகவும் ... -பழத்தைக் ... தால்கூடப் ... போகும்'' ... ருமை ... ன்.

...அ... படு... இல... திலே ... அவர்கள... ஆணைகளை ... வில்லை.

சென்னை ... தமிழ்நாடு என்ற ... மன்றத்தில் ஏகமனத... வேற்றப் பட்டிருந்தா... பெயர் சூட்டும் விழா ந... பெருமல் இருந்தது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அண்ணா அவர்கள் முதன் முதலாகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியது தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில்தான்.

'அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அண்ணாவின் குரல் கம்பீரமாக இருக்குமா? அல்லது அதற்கு ஊறு நேர்ந்திருக்குமா?'

"மனிதன் பறக்கக்கூட கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் 'பாக்கெட் சைஸ் ரேடியோ'வுக்குள் அடக்கிவிட்டான். ஆனால் இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டு பிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை!"

—அண்ணா



...சவ்வாழை. உழைப்பு அதிகம், ...யலில். பண்ணை மானேஜரின் ...ர்ப்பாட்டம் அதிகம். இவ்வள...யும் சகித்துக் கொள்வான்-...வ்வாழையைக் கண்டதும் ...மும் மறந்து போகும். குழந்...ள் அழுதால், செவ்வாழை...யக் காட்டித்தான் சமா...ப்படுத்துவான்! துஷ்டத் ... செய்கிற குழந்தையை ...வும், செவ்வாழையைத் ... கவனப்படுத்துவான்! ...கள் பிரியமாகச் சாப் ...ள். செவ்வாழையை ...ண்ணம் செங்கோட... பண்ணை வீட்டுப் ... ஆப்பிள், திராட்சை ... முடிகிறது-கரியனும் ...ப்படி விலை உயர்ந்த ...ளைப் பெற முடியும் ...யத் தந்து தன் ... குதூகலிக்கச் ...ம், என்ற எண் ... செங்கோடனை, ...ழைக் கன்றைச் ...க்கும்படி செய் ...ங்கோடனிடம் ...டுபட்டாலும், ... 'பழமும் ... தரக்கூடிய ...ரமுடியும்? ... வயிற்றை ...ப்பியின் ...சிலையப் ...வும். ...பின் ...ல

செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்று சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனத்திலே தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும் மறையும்-செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந் தான்.

கன்று, வளர்ந்தது. கள்ளங் கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும், ஏற்படும் பிரேமைபோல், அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம், பாசம் ஏற்பட்டுவிட்டது.

''இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?-கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

''இரண்டு மாசமாகும்டா கண்ணு!'' என்று செங்கோடன் பதில் அளிப்பான்.

''செவ்வாழை குலை தள்ளிற்று-...ங்கோடனின் நடையிலேயே ...புது முறுக்கு ஏற்பட்டுவிட்... நிமிர்ந்து பார்ப்பான், ...பெருமையுடன்.



மானுல் ... போல் பிற ... தான நிலையை உ... ...ற், செங்கோட... ஆவலும், ...

# அண்ணாவின் வாழ்விலே!

## விடுதலைப் போர்த் தியாகிகளிடம் அண்ணா கொண்டிருந்த மதிப்பு!

விடுதலைப் போர்த் தியாகிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் அண்ணா. தமிழகத்தில் நீண்ட நாட்களாக நிறைவேறாமல் இருந்த ஒரு தியாகியின் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றினார். வாஞ்சி என்னும் தியாகியின் மனைவி தனக்கு வாழ்க்கைப் 'பென்சன்' வேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கேட்டு வந்தார். ஆனால் அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படாமலேயே இருந்துவந்தது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த அம்மையாரின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார். பாவம், அந்த அம்மையார் முதுமை அடைந்திருந்ததால், அண்ணா தந்த பென்சன் பணத்தை நீண்ட காலம் வாங்கி அனுபவிக்க இயலாமல் இயற்கை எய்தி விட்டார்.

என்றாலும், தியாகிகளிடமும் அவர்களது குடும்பத்தவரிடமும் அண்ணா கொண்டிருந்த மரியாதையை இந்த நிகழ்ச்சி எடுத்துரைத்து வருகிறது.

## கோவா விடுதலை வீரருக்கு விடுதலை வாங்கித் தந்தவர் அண்ணா!

முதன் முறையாக அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது கூட, அண்ணா அவர்கள் அந்தப் பயணத்தை வெறும் சுற்றுலாப் பயணமாக்கி விடாமல் மிகப் பெரும் தியாகி ஒருவரின் வாழ்விலே மலர்ச்சி ஏற்படுவதற்குரிய வாய்ப்பாக்கிக் கொண்டார்.

கோவா விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு, நீண்ட காலமாகச் சிறையில் கிடந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தார் ரானடே. அவரது துன்பத்தை இந்திய அரசோ, அண்ணாவுக்கு முன்பு இருந்த மாநில அரசோ பொருட்படுத்தவில்லை. ஆனால் விடுதலை வீரர் ரானடே படும் துன்பம் அண்ணா அவர்களின் இதயத்தை மிகவும் வருத்தியது. அவரது விடுதலைக்கு வழி என்ன என்று தமக்குள் சிந்தித்து வைத்துக் கொண்டார்



உலகப் பொதுமறை திருக்குறளை அன்புப் பரிசாக அளித்துவிட்டு, போப்பாண்டவருடன் பேரறிஞர் அண்ணா கைகுலுக்கி மகிழ்ந்ததுடன், கோவா விடுதலை வீரர் ரானடே அவர்களை விடுதலை செய்ய வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார்.

அமெரிக்கச் சுற்றுலாவைத் தொடங்கியபோது, இத்தாலி நாட்டுக்குச் சென்று, வாடிகன் நகரில் உள்ள போப்பாண்டவரைச் சந்தித்தார். கோவா வீரர் ரானடே விடுதலை செய்யப்பட வேண்டிய அவசியத்தை போப்பாண்டவரிடம் எடுத்துரைத்தார். அண்ணாவின் வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக்கொண்ட போப்பாண்டவர் போர்ச்சுக்கீசிய அரசிடம் தொடர்பு கொண்டு ஆவன செய்தார். பல்லாண்டுகளாகச் சிறை இருந்த ரானடே விடுதலை பெற்றார்.

கோவா மக்கள் அனைவரின் இதயங்களும் குளிர்ச்சி பெற்றன. அண்ணாவுக்கு வாயார வாழ்த்துக் கூறினார்கள் கோவா மக்கள்.

## "இந்த உயிர் இருந்தென்ன? போய் என்ன?"

அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சைக்கு ஆளானார்கள். சிகிச்சையெல்லாம் முடிந்து, ஓரளவு உடல் நலம்பெற்றுத் தாயகம் திரும்பினார்.

டாக்டர்கள் அண்ணாவைப் பல விதத்திலும் கடுமையாக எச்சரித்து வைத்திருந்தார்கள். 'அதிகம் உரையாடக்கூடாது; அலுவல்களில் அதிகம் ஈடுபடக்கூடாது' என்றெல்லாம் டாக்டர்கள் அவருக்குத் தடை விதித்திருந்தார்கள். ஓடுகின்ற ஆற்றை, உயரே இருந்து அழகு சொரியக் குதித்து வரும் அருவியை எவராலும் கட்டுப்படுத்த முடியுமா? அருவி போன்ற இலட்சிய எண்ணங்களை இதயத்திலே கொண்டிருந்த அண்ணா அவர்களால் டாக்டர்களின் ஆணைகளை மீறாமல் இருக்க முடியவில்லை.

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டிருந்தாலும்—பெயர் சூட்டும் விழா நடைபெறாமல் இருந்தது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அண்ணா அவர்கள் முதன் முதலாகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியது தமிழ்நாடு பெயர் சூட்டு விழாவில்தான்.

'அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அண்ணாவின் குரல் கம்பீரமாக இருக்குமா? அல்லது அதற்கு ஊறு நேர்ந்திருக்குமா?' என்றெல்லாம் மக்கள் எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அண்ணா அவர்கள் மெலிந்த உடலோடு எழுந்து நின்று, "தலைவர் அவர்களே!" என்று மொழிந்த உடனே, அந்தக் கம்பீர ஒலி கேட்டு, மக்கள் எழுப்பிய கர ஒலி, வானத்தையே பிளந்தது என்றுதான் கூற வேண்டும். மக்கள் ஒரு முறை கரஒலி எழுப்பியதோடு நிற்கவில்லை—மீண்டும் மீண்டும்—நினைத்து நினைத்துக் கரஒலி எழுப்பினார்கள், 'தலைவர் அவர்களே' என்ற இரண்டு வார்த்தைகளைக் கேட்டவுடனேயே!

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்றும், கலந்து கொண்டால் உடல் நலம் பாதிக்கும் என்றும் மருத்துவர்கள் அண்ணாவுக்கு எச்சரிக்கை செய்திருந்தார்கள். என்றாலும் அண்ணா அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. தமது அரும் பெரும் இலட்சியம் நிறைவேறும் இனிய விழாவில் கலந்து கொண்டார்; அந்த விழாவிலே அண்ணா குறிப்பிட்டதாவது:

**"இந்த விழாவிலே கலந்து கொள்ள வேண்டாம். உடல் நலம் பாதிக்கும் என்று டாக்டர்கள் கூறினார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எந்தவொரு இலட்சியத்திற்காக இத்தனை காலம் போராடி வந்தோமோ, அந்த இலட்சியம் நிறைவேறும் இந்த இனிய விழாவில் கலந்துகொண்டால் உயிருக்கு ஆபத்து வரும் என்றால்—இந்த உயிர் இருந்தென்ன, போய் என்ன?"** என்று உயிரை வெறுத்து உணர்வை மதித்து உரை ஆற்றினார்கள்.

இலட்சியம் நிறைவேறிட உயிரையும் பொருட்படுத்தாதவர் அண்ணா என்பது, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வரலாற்றில் பொறித்து வைக்கப்பெற்றது.





## பிற மொழிகளின் கலப்பு

**கண்ணுக்கு மையிடுவது போல, பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும்—மை அதிகமானால் கண் எப்படிக் கரித்து விடுகிறதோ, அது போல் பிற மொழிகள் அதிகம் கலப்பதும் ஆபத்தான நிலையை உண்டாக்கும்.**

**—பேரறிஞர் அண்ணா**

# செவ்வாழை

—பேரறிஞர் அண்ணா.



**செங்கோடன் ஆசையோடு வளர்த்தான் செவ்வாழை! அதைச் சுற்றிப் பச்சை உள்ளங்களைப் படரவும் விட்டான்! கடைசியில் அவனுக்கோ, அவன் குழந்தைகளுக்கோ ஒரு பழம் கிடைத்ததா? என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் விளக்கியுள்ளார் இக்கதையில்.**

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும்கூட, வயலிலே அவன் பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப் புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டு இருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது! செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும்போதும், கல் மண்ணைக் கிளறிவிடும் போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம்-அவனுடைய முதல் பையன்-காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கறையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

> "மனிதன் பறக்கக்கூட கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் 'பாக்கெட் சைஸ் ரேடியோ'வுக்குள் அடக்கிவிட்டான். ஆனால் இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டு பிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை!"
>
> —அண்ணா



''குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சுவிடப் போகுது. ஜாக்கிரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று-ஆமாம், செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும்-ரொம்ப ருசி-பழத்தைக் கண்ணாலே பார்த்தால்கூடப் போதும், பசியாறிப் போகும்'' என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள்-அதுமட்டுமா-பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறு எதைப் பற்றி பேசிக் கொள்ள முடியும்-அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத் தோடு பற்றியா, அண்ணன் வாங்கி வந்த 'ரேடியோ'வைப் பற்றியா, எதைப் பற்றிப் பேச முடியும்? செவ்வாழைக் கன்றுதான் அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை சகலமும்!

மூத்த பயல், கரியன், 'செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குத்தான்'—என்று சொல்லுவான்.

''ஒண்ணுகூட எனக்குத் தர மாட்டாயாடா-நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன். கவனமிருக்கட்டும்-வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன், கவனமிருக்கட்டும்''-என்றுஎதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்.

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே, ''உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு'' என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன், முத்து, ''சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதீங்க-ஆமாம்-பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ, யாரு கண்டாங்க''-என்று சொல்லுவான்-வெறும் வேடிக்கைக்காக அல்ல-திருடியாவது மற்றவர்களை விட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டான் அவன்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம், வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான்-செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள் பிரியமாகச் சாப்பிடுவார்கள். செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள், ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது-கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும் செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்ய வேண்டும், என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லமாக வளர்க்கும்படி செய்தது. உழவன் செங்கோடனிடம் எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் 'பழமும் பட்சணமும்' வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேரமுடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும்-குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! உழைப்பின் பெரும் பகுதி வயலிலே செலவாகிறது-அதன் பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான், அவன் சொந்தமாக-மொத்தமாக, புலன் பெறுவதற்கு உதவக்கூடிய 'உழைப்பு'. இதிலே பங்குபெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே, டாடுபட்டு, கண்ணைப்போல் வளர்த்து வரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய டலனைத் தானே பெற முடிகிறதே என்று சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனத்திலே தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும் மறையும்-செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று, வளர்ந்தது. கள்ளங்கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும், ஏற்படும் பிரேமைபோல், அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம், பாசம் ஏற்பட்டுவிட்டது.

''இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?-கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

''இரண்டு மாசமாகும்டா கண்ணு!'' என்று செங்கோடன் பதில் அளிப்பான்.

''செவ்வாழை குலை தள்ளிற்று-செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையை பெருமையுடன்.

குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும் அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வதும், ஓங்கி வளரலாயிற்று. ''எப்போது பழ



### தோழமை

"ஒருவரையொருவர் கண்டவுடன் முகமலர்ச்சி சிரமமின்றி ஏற்பட வேண்டும்; பயன் கருதியல்ல-பாசாங்குக்கு அல்ல-அர்த்த மற்றதுமல்ல-கண்டதும் களிப்பு; நம்மைப் போல ஒருவன் என்ற நினைப்பில் இருந்து அந்தக் களிப்பு மலரவேண்டும். அஃதே தோழமை!"

—அண்ணா

மாகும்?''-என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?' என்று கேட்பான் பையன், செங்கோடன் பக்குவமறிந்து குலையை வெட்டி பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப்பலனை நாம் பெறப்போகிறோம்-இடையே தரகர் இல்லை?-முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது-அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே நமக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ணவேண்டும்- அது தானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும், உடைமையும் செங்கோடனுக்குகே சொந்தம்!

இரண்டு நாட்களில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான்-பிள்ளைகள் துள்ளினர் சந்தோஷத்தால். மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது-பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ,' கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ 'அச்சாரம்' கொடுத்தனர், பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலே நாம் பாடுபடுவது நமக்குப் முழுப்பலன் அளிப்பதாக இருந்தால், எவ்வளவு எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது-ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது-எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது-இதுபோல், நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம்-பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம்கூட, இலேசாகச். செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறி விட்டது அவன் மனத்தில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

* * * *

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள்விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லி விட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றுமல் இருக்குமா? இரண்டு சீப்பு வாழைப்பழம் என்கிறார் பண்ணையார்.

''ஏனுங்க பழம்-கடையிலே நல்ல பழமே இல்லை-பச்சை நாடானுகத்தான் இருக்கு'' என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

''சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு இருந்தா வாங்கேன்?' வேறே நல்ல பழம் எங்கே இருக்கு என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், 'நம்ம செங்கோடன் கொல்லையிலே தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க-அதைக் கொண்டுகிட்டு வரலாம்'' என்றான். ''சரி'' என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக் குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு! குழந்தைகளின் குதூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்து விட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து செங்கோடனின் குடும்பம் முழுதும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானன். சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை, இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து!

தெருவிலே, சுந்தரமும், செங்கோடனும் பேசும்போது குழந்தை செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றிற்று-நாக்குக் குழறிற்று வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக்கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்குப் பிறந்த நாள் பூஜை-என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை அவன் குழந்தைகளின் நாக்கிலே நீர் ஊறச் செய்த ஆசை-இன்று, நாளை, என்று நாள் பார்த்துக்கொண்டிருந்த ஆவல்-எனும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! 'எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை வாய்த் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டு அனுப்பினால், முடியாது என்று சொல்லி விட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றிகெட்டதனமா? கேவலம் ஒரு வாழைக்குலை! அவருடைய அந்தஸ்துக்கு, ஒரு பிரமாதமா!'-என்று ஊர் ஏசுகிறதுபோல் அவன் கண்களுக்குத் தெரிகிறது.

'அப்பா! ஆசைகாட்டி மோசம் செய்யாதே! நான்கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன்-மாடு மிதித்திடாதபடி பாதுகாத்தேன்—செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும்; கல்கண்டு போல் இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும் போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லி விட்டு, இப்போது ஏமாற்றுகிறாயே, நாங்கள் என்னப்பா, உன்னை, கடையிலே காசு போட்டு திராட்சை, கமலாவா வாங்கித் தரச்சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்தல்லவா!'-என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும் அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ பண்ணை கணக்கப் பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு-செவ்வாழைக் குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின; செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான்-உள்ளே கொண்டு வந்தான்-அரிவாளைக் கீழே போட்டான்-'குலையைக் கீழேவை அப்பா' தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். ''கண்ணா! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன்-அழாதீங்க இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கன்று மரமாகிக் குலை தள்ளும், அதை உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்'' என்று கூறிக் கொண்டே வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தைகளின் அழுகுரல், மனத்தைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்துக்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்கு வர! அழுது அலுத்துத் தூங்கி விட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று, துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான்-அவன் மனத்திலே ஆயிரம் எண்ணங்கள், செவ்வாழையை, செல்லப் பிள்ளை போல் வளர்த்து, என்ன பலன்..!

அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல-ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு..அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான்-எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள்-எத்





## இரவைப் பகலாக்கிக் கொண்டு எழுதும் ஆற்றல் பெற்றவர்!

உலகமெல்லாம் உறங்கிக் கொண்டிருக்கும்! ஆனால் அந்த உலகத்திற்கு அறிவு கொளுத்த வேண்டும் என்பதற்காக, விடிய விடிய கண் விழித்திருந்து—உடலைக்கெடுத்துக் கொண்டு—எழுதிக் குவித்த அறிஞர்கள் உலகில் ஒரு சிலரே! அத்தகைய அறிஞர் பெருமக்களில் பண்டித நேரு அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிடத் தகுந்தவர்கள் என்றால் மிகையாகாது.

1968 செப்டம்பர் 8-ஆம் நாளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையை அண்ணா நிகழ்த்தினார். அன்று அவர் ஆற்றிய உரை புத்தறிவுப் பேருரை; கருத்துக் கருவூலம்!

அவ்வுரை அண்ணாவின் கைப்பட எழுதியது. கையெழுத்தில் சுமார் 120 பக்கங்கள். அண்ணாவே ஒரே மூச்சில் அந்த நீண்ட பொருள் செறிந்த உரையினைத் தயாரித்து விட்டார்.

இரவு பன்னிரண்டு மணி அளவில் அண்ணா உரையை எழுதத் தொடங்கினார். அவர் அதை எழுதி முடித்த பொழுது காலை 5 மணி! ஒரே மூச்சில், தொடர்ந்து இரவு பூராவும் உட்கார்ந்து தன் கைப்படவே அப் பேருரையை எழுதி முடித்தார் அண்ணா!

தலை ஆயிரம் தடவைகள், குழந்தைகளுக்கு ஆசைகாட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கறை எத்தனை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!!

* * *

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்ன நடை நடந்து அழகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான். ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங் கலயத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். பழம் வாங்கிக் கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே, செவ்வாழைச் சீப்பு, அழகாகத்தொங்கிக்கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பு முதலிலேயே எடுத்து வந்து விட்டான்-அவன் விற்றான் கடைக்காரனுக்கு-அதன் எதிரே ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே-காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ-போடா! என்று விரட்டினான் கடைக்காரன்..கரியன் அறிவானா பாவம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாவம்! எத்தனையோ நாட்கள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான் பழம் கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டுக்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே. செங்கோடன் கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான்-வாழை மரத் துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதிப் பாட்டி செத்துப் போயிட்டா-அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான், "எங்க வீட்டுச் செவ்வாழைடா!" என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துட்டோம்?-மரத்தை வெட்டிப் பாடையிலே கட்டிவிட்டோம்" என்றான் கரியன்.

பாவம்! சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்பதை.....!

(நன்றி : 'கல்கி')





# மாணவ மணிகளுக்கு அண்ணா அளித்த அறிவுரை!



## வைரமாகத் திகழுங்கள்!

"மாணவர்கள் வைரங்களாக இருக்க வேண்டும் வைரத்திற்கு அதிக மதிப்பு இருப்பதற்கு ஒரு காரணம், பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதே ஆகும்!

"நிலத்தின் கீழே தோண்டினால், சுண்ணாம்பு கிடைக்கும் - நிலக்கரி கிடைக்கும்; அதற்கும் கீழே அழுத்தி வைக்கப்பட்டுள்ள வைரத்திற்கு தான் மதிப்பு இருக்கிறது!

"அதைப்போலவே, மாணவர்களும் தங்கள் இளமைப் பருவத்தை, 'அரசியல் கிளர்ச்சி' என்று ஈடுபடாமல் அழுத்தி வைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

"மாணவர்கள், தங்கள் இளமைப் பருவத்தை அழுத்தி வைக்க வேண்டுமென்று கூறினேனே தவிர, 'அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடக்கூடாது' என்று சொன்னேனே தவிர - அரசியலில் அக்கறை செலுத்தக்கூடாது என்று கூறவில்லை.

"கல்லூரியை விட்டு வெளியே வந்த பின்னர்தான், 'இந்த நாட்டின் தலைமையமைச்சர் யார்?' என்று தெரிந்து கொள்ள. வேண்டும் என்று நான் கூறவில்லை!

"இப்போதைய பருவம் - கிடைத்தற்கரிய பருவம்;. தேடிப் பெறுகின்ற கல்விச் செல்வத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; மாணவப் பருவத்தை அழுத்தி வைத்து, வைரமாகத் திகழுங்கள்!

"இப்பொழுது நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுக்காக மட்டுமல்ல - சமுதாயத்திற்காகக் கல்வி பெறுகின்றீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!"

## புனிதப் பணியில் மாணவர் ஈடுபட வேண்டும்!

"கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்களாகிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தை வளப்படுத்தும் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் அவர்கள் காணும் வெற்

றியில் தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

"புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை - குடிசையில் வாழும் சாமானிய மனிதனை - தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை - முன்னேற்றும் புனிதப் பணியில் மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டுகிறேன்."

•• ••

## அறிவு புகட்ட வேண்டும்!

"சமுதாயத்திற்கு உழைக்கவேண்டும் என்று ஆர்வத்திலுள்ள மாணவர்கள், கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள பாமர மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும்."

** **

## சிறந்த ஆசான்!

"மாணவர்களின் மனவளம் அவர்களின் குடும்ப வளத்தையே பெரிதும் பொறுத்திருக்கிறது. கல்வியில் நாட்டம் பிறக்கவும், அதில் ஆர்வம் வளரவும் சுற்றுச் சார்பைவிடச் சிறந்த ஆசான் வேறு இருக்க முடியாது."

** **

"வாழப் பிறந்தோம், அதற்கேற்ப வையகத்தை மாற்றி அமைப்போம்; அவரவர் தத்தமக்குக் கிடைத்திடும் வாய்ப்புக்கு ஏற்ப, அந்தப் பொது நோக்கம் வெற்றி பெறப் பணியாற்ற வேண்டும்."

** **

## அறிவுத்தூதர்களாக விளங்க வேண்டும்!

"பகுத்தறிவுப் பிரச்சாரம் கடினமானதுதான்! ஆனால், வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களைவிட, வேறு யாரும் இப்பணிக்கு லாயக்கு இல்லை. மாணவர்களே, கிராமாந்திரத்திலுள்ள மக்களிடம் அறிவு எடுத்துச் சொல்லுகிற தூதுவர்களாக விளங்க வேண்டும்."

** **

## ஆராயும் அறிவு வேண்டும்!

"எத்தகைய கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. மாணவமணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும். நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாக வேண்டும். உங்களிடத்தில் தீரமும், திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவு ஆராய்ச்சிகளும் தேவை. அதை அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து, இது சரி, இது தவறு என்று முடிவு கட்டும் மனப்பான்மை உங்களுக்கு வேண்டும். இதோடு திட்டவட்டமான கொள்கையும், பெருநோக்கும் உங்களுக்கு இருக்க வேண்டும்."

•• ••

## சிறந்த புத்தகம்

"எல்லாப் புத்தகங்களையும்விட சிறந்த புத்தகம் இந்த பரந்த உலகம்தான்; உலகத்தைவிட உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.

## உங்களால் முடியும்!

"மாணவர்களாகிய உங்களிடம் கைவிடப்பட்ட 'கேஸ்' ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மனிதனை மனிதனுக்க—மனிதனிடமிருந்து மிருகத் தன்மையைப் பிரிக்க—மக்களிடத்திலே மனவளத்தை உண்டாக்க—நீங்கள் பாடுபட வேண்டும். மூட நம்பிக்கையுள்ள மக்களைத் திருத்த டாக்டர்களால் முடியாது; உங்களால் முடியும்."

## மாணவர்கள் காட்டவேண்டிய நன்றி!

"முழு வயிறு காணாதார், முதுகெலும்பு முறியப்பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக்காய்கள், ஓடப்பர் — இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், பகட்டுகளாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

"வியர்வை பணமாகிறது — வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிகள் வரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை — எத்தனை ஏழ்மை இடையில் இந்நாட்டு மக்கள், தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றனர் என்பதனை - மாணவர் உணர்ந்திடின் அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே இத்தனையும் தந்திடும் ஏழை மக்களுக்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்."

—அண்ணா



# நாடகத்திலும் திரைப்படத்திலும் மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் அண்ணா!



தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளை உடையது. அதனால்தான் நமது தாய்மொழி முத்தமிழ் என்று சிறப்பிக்கப்படுகிறது.

ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்மொழிக்கு இசை ஏது? தமிழ்மொழியில் நாடகம் ஏது? என்று கேட்பவர்கள் பலர் இருந்து வந்தார்கள்.

படிப்படியாக இந்த நிலைமை மாறி வந்தது.

அண்ணாமலை அரசருடைய பெரு முயற்சியால் தமிழிசை வளர்ந்தது. அதேபோல் நாடகத் தமிழ், அண்ணாவால் வளர்ந்தது என்று சொல்லுபடியாக அவர் பல புதுமைகளைச் செய்தார்.

அந்த நாளிலெல்லாம் நாடகம் என்றால் 'கிருஷ்ணலீலா', 'தசாவதாரம்', 'இராமபக்தி' போன்ற நாடகங்கள்தான் நடந்து வந்தன இவற்றை விட்டால் 'கோவலன்', 'பவளக்கொடி', 'வள்ளித் திருமணம்' போன்ற நாடகங்கள் நடந்து வந்தன.

1920-ஆம் ஆண்டில் "ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியார்" ஓரளவு நாடகத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அதன்பிறகு காங்கிரஸ்காரரான திரு. பி. கிருஷ்ணசாமி என்பவர் பிரசாரத்திற்காகச் சில நாடகங்களை நடத்தினார்.

ஆயினும் நாடகத்துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏதும் ஏற்படாமலே இருந்து வந்தன.

நாடகத்தின் மூலம் புரட்சிகரமான பல கருத்துக்களை மக்கள் ஒப்புக்கொள்ளும்படிச் சொல்ல முடியும் என்று அண்ணா நீண்ட காலமாக எண்ணி வந்தார்; சொல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டு வந்தார்.

தம்முடைய நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அவரே நாடகங்கள் எழுதத் தொடங்கினார்.

1943-ஆம் ஆண்டு அண்ணா 'சந்திரோதயம்' என்னும் நாடகத்தினை அரங்கேற்றினார்.

அடுத்து, 'சந்திரமோகன்' என்ற நாடகத்தை அண்ணா அரங்கேற்றினார். 'சந்திரமோகன்' என்ற நாடகம் நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

வீர சிவாஜியின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு அண்ணா அந்த நாடகத்தை எழுதி இருந்தார். அதோடு அந்த நாடகத்தில் 'காகபட்டர்' என்ற பாத்திரத்தை ஏற்று நடித்து வந்தார்.



அண்ணா வருகிற ஒவ்வொரு காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகும். கருத்தைக் கவர்ந்து சிரிக்க வைக்கும் காட்சியாகும்.

சந்திரமோகன் நாடகத்தின் மூலம் நாடகத்துறையிலும் பிரசாரத்துறையிலும் அண்ணா பெரிய மாற்றத்தை உண்டாக்கினார்.

இந்த நாடகத்தைத் தொடர்ந்து 'வேலைக்காரி', 'ஓர் இரவு' என்ற இரு கருத்தோவியங்களை அண்ணா நாடகமாக்கினார்.

அந்த இரு நாடகங்களையும் கே. ஆர். இராமசாமி அவர்கள் தஞ்சை மாநகரில் நாடகமாக அரங்கேற்றினார்.

ஒவ்வொரு நாடகமும் ஐம்பது வாரங்கள் தொடர்ந்து நடந்து நாடக உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின!

அந்த இரு நாடகங்களையும் தமிழ் நாட்டில் உள்ள எல்லா அறிஞர்களும் பார்த்தார்கள்.

அண்ணாவின் திறமை கண்டு வியப்படைந்தார்கள்.

இந்த இரு நாடகங்களுமே பிறகு திரைப்படங்களாக உருவாக்கப்பட்டன.

இவற்றில் 'வேலைக்காரி' நாடு எங்கும் பெரும் புரட்சியை ஏற்படுத்தியது என்று சொல்லலாம். அண்ணாவின் தேன்மொழி வசனம், தமிழ் மக்களுக்குப் பெரும் புதுமையாக இருந்தது.

அந்தத் திரைப்படத்திலே வந்த சீர்திருத்தக் கருத்துக்கள்



பழமையை விரும்புகிறவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. புதுமையை விரும்புகிறவர்களுக்குத்-தேனுக பாலாக-இனித்தது.

'வேலைக்காரி' திரைப்படம் வெளிவந்தபோது நாட்டிலே சிலர் பெரும் எதிர்ப்பைக் கிளப்பினுர்கள். தடைசெய்ய வேண்டும் என்று கூறினுர்கள். ஆனுல் முதலிலே அந்தப் படத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும் தவருக நினைத்த பல பெரியவர்கள் படத்தைப் பார்த்ததும் வாயாரப் புகழ்ந்தார்கள். இவரல்லவா அறிஞர் என்று பாராட்டினுர்கள்.

அண்ணு திரைப்படங்களுக்கு வசனம் எழுதிய பிறகு தமிழ் நாட்டுத் திரைப்படத் துறையில் வசனம் எழுதுபவர்களும் மதிக்கப்பட்டார்கள்.

பெரும் காவிய ஆசிரியர்கள் பாராட்டுப் பெறுவது போல அண்ணு பாராட்டப்பட்டார்.

அண்ணுவின் நாடகங்கள் அரங்கேற்றப்பட்ட பிறகு. அவை திரைப்படமாக ஆன பிறகு நாட்டு மக்களிடம் இருந்த மூட நம்பிக்கை வெகுவாகக் குறைந்தது.

அண்ணு நாட்டு மக்களுக்கு நல்ல தலைவராக விளங்குவதோடு நாடறிந்த கலைஞராகவும் விளங்கினுர்!

**

## கலைத்துறையின் முக்கியத்துவம்!

"கலைத்துறையின் மூலம் சீரிய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன் நான். முற்போக்கு நாடுகளெல்லாம் இதில் நம்பிக்கை வைத்திருக்கின்றன. இது ஒரு தொழில், வருமானம் பெறும் சாதனம் என்றில்லாமல், நாட்டுக்கு நற்கருத்துக்களைத் தரும் சிறந்த துறையுமாகும்."

—அண்ணு.

## பெண் கல்வி வேண்டும்!

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவருன வழியில் செல்லும்போது, படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிருர்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள் கற்றுக் கொண்டிருக்கிருர்கள்.

அவர்களுக்கு, முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும், சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

— அண்ணு

## கல்வியின் தன்மை

வாலிப உணர்ச்சிகள் வேகமாக நடைபோடுவது. இயற்கையிலேயே இது உருவானது என்றுலும் அதிகமான வேகம் நீடித்த தன்மையினதாக இருக்காது என்று சொல்லுவார்கள். மாணவர்களிடையே வேகம் தேவைதான். அது ஏற்படுவது இயற்கைதான் என்றுலும், அந்த வேகம் வகைப்படுத்தப்பட வேண்டும். கல்வியின் வேகம் முறைப்படுத்தப்பட வேண்டும். கல்வியின் தன்மையே வேகத்தை முறைப்படுத்தி வகைப்படுத்துவதுதான்.

— அண்ணு

## தொழிலாளர்களும் கல்வி கற்க வேண்டும்!

"நமது நாட்டில் ஒரு கெட்ட பழக்கம்—படிப்பவன் வேலை செய்ய மாட்டான். வேலை செய்பவன் படிக்க மாட்டான். ஆனுல் இந்த நிலை மெள்ள மெள்ள மாறி, தொழிலாளர்கள் தங்கள் வேலை நேரம் போக, ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது, அவர்கள் தொழிலுக்கே பயன்படும்.

அதோடு கூட, மற்ற பொது அறிவைப் பெறுவது நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால், அளவுக்கு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். "நாம் கேட்டால் கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள்?" என்பது தெரிந்து விட்டால், கேட்கவே மாட்டார்கள்."

—அண்ணு

(25—6—1967 அன்று அரசு அச்சக ஊழியர் கூட்டத்தில் பேசியது.)





# முதலமைச்சர் அண்ணு
## (படமும் செய்தியும்)

முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பேரறிஞர் அண்ணு அவர்கள், அரசின் ஆணைகளோ, நடவடிக்கைகளோ, திட்டங்களோ ஏழை, எளிய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்களுக்கு நன்மை செய்வதற்காக இருக்கவேண்டுமே தவிர எள்ளத்தனை தீமையும் விளைவிக்கக்கூடாது என்பதற்காக, கோப்புக்களைத் துருவித் துருவிப் பார்த்தார்.





அன்றைய ஆளுநர் திரு உஜ்ஜல்சிங் அவர்களிடம் அண்ணா பரிசுச் சீட்டு விற்பனை செய்கிறார். (15-8-1968).

## பரிசுச் சீட்டுத் திட்டம் ஏன் ?

''அரசாங்கம் செய்து தர வேண்டிய வசதிகளுக்கு ஏற்ற வகையில், வரி வருவாய் பெருகவில்லை. புதிதாக வரி போட்டால், தாங்கும் நிலையில் மக்கள் இல்லை. வரி வருவாய் கிடைக்கவில்லை என்பதற்காக, மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க மறுப்பது, சமூக நீதியாகாது. எனவேதான், கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளைப் பெருக்குவதற்காக, பரிசுச் சீட்டுத் திட்டம் போன்ற நல்ல காரியங்களைச் செய்து வருகிறோம்.''

—அண்ணா

நாளைய தலைமுறை நல்லதாக அமைய, புத்தகங்களையும், சிலேட்டையும் இலவசமாக அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார் அண்ணா. (4-8-1967)






ஆச்சாரியா துளசியுடன் அண்ணா.

"அண்ணனும் தம்பியுமாகச் செயல்படுகிறோம்!'' என்று அன்றைய ஆளுநர் திரு உஜ்ஜல்சிங் அடிக்கடி கூறிவந்தார். அந்தப் பெருமிதம் ஆளுநர் முகத்திலும், அண்ணா முகத்திலும், தெரிவதைக் காணலாம்!





தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுவதற்காக, நிதிநிலை அறிக்கையுடன் சட்டமன்றப் பேரவை நோக்கிப் பேரறிஞர் அண்ணா வருகிறார் (17-6-1968).






இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் வரலாற்றுப் புகழ்மிக்க ஊர்வலத்தைக் கண்டுகளிக்கும் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன், தமிழக ஆளுநர் திரு உஜ்ஜல்சிங் ஆகியோருடன் அண்ணா! (3-1-1968).

மூதறிஞர் ராஜாஜி அவர்களுடன் பேரறிஞர் அண்ணா.



திரு மொரார்ஜி தேசாய் அவர்களுடன் அண்ணா.





பெருந்தலைவரும் பேரறிஞர் அண்ணாவும்.




யேல் பல்கலைக் கழகத்தின் வரலாறு கூறும் நூலினைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேரார்வத்துடன் படிக்கிறார்.

ஜெகஜீவன்ராம் அவர்களுடன் அண்ணா.



யேல் பல்கலைக் கழகத்தில், அமெரிக்க மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு நடத்துகிறார் பேரறிஞர் அண்ணா.





## "எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் நீங்கள்!"

திருப்பதியில் 1969—ஆம் ஆண்டு சனவரியில் திரு. சஞ்சீவ ரெட்டி (தற்போதைய குடியரசுத் தலைவர்) அவர்களின் மகன் திருமணம். அண்ணாவுக்கு அழைப்பிதழ் கொடுத்து நேரில் அழைக்க வந்தார் சஞ்சீவ ரெட்டி. அண்ணா நோய்வாய்ப்பட்டிருந்த நேரம்.

"அண்ணா.......இந்த நிலையில் தாங்கள் நேரில் திருமணத்திற்கு வரவேண்டுமென நான் கேட்கமாட்டேன். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாழ வேண்டும். இந்த நாட்டிற்கு— சிறப்பாகத் தென்னகத்திற்கு உங்கள் உழைப்பு, பணி எல்லாம் மிக மிகத் தேவையானது" என்று நெக்குருகக் கூறிவிட்டு, அண்ணாவிடம் விடை பெற்றுக் கொண்டார்.

போவதற்கு முன்னால் திரு. சஞ்சீவ ரெட்டி சொன்ன வார்த்தைகள் :

"— நீங்கள் நெடு நாள் வாழ வேண்டும். அரசியல் வேறுபாடுகள் எவ்வளவுதான் இருந்தாலும், இந்த நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் தலைவர் நீங்கள்......"

## மேடைப்பேச்சு

"பேசுபவரின் கருத்துப் பயன் தருமாயின், கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக்கொள்வர். எனவே, மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படி செய்வது, மிகமிக முக்கியம். பூத்த மலரை அழகுற தொகுத்தல் போல, கிடைத்தக் கருத்தைத் தொகுத்தும், வகுத்தும், பிரித்தும், வெல்லும் சொல் தெளிவான நடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைத்தல் வேண்டும்." —அண்ணா

## "தலைப்பில்லை!", ஆனால்!

சென்னை கல்லூரி ஒன்றில் ஒருமுறை அண்ணா பேச எழுந்தபோது என்ன பேச வேண்டும் என்று கேட்டார்.

'தலைப்பில்லை' என்றார்கள்.

இன்னொரு சமயம் கோகலே மண்டபத்தில் கல்லூரிகள் தமிழ்ப் பேரவை சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திருமதி சௌந்தரம் கைலாசம், திரு. டி. கே. சண்முகம் முதலியோர் தமிழின் சிறப்பைப் பற்றியும், இனிமையைப் பற்றியும் எடுத்துரைத்தனர். இறுதியில் பேசிய அண்ணாவுக்குத் தலைப்புத் தரப்படவில்லை.

ஆகவே அண்ணா, "முன்னால் பேசியவர்கள் தமிழின் மாண்பினையும் சிறப்பையும் எடுத்துரைத்தார்கள். இதற்கு முடிவு கூறவேண்டும் என்றால், 'ஆனால்' என்றுதான் தொடங்க வேண்டும்" என்று கூறி "ஆனால்" என்ற தலைப்பில் பேசினார்கள்! *



# வருமானமல்ல! குடும்பங்களின் மகிழ்ச்சிதான் அரசுக்கு முக்கியம்!

— அண்ணா

"மதுவிலக்கு, ஒரு வாழ்க்கை முறை; அந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டோம்; மாநில அரசின் அமைப்பு எவ்வாறு இருந்தாலும், மதுவிலக்குக் கொள்கை தொடர்ந்து அமுலாக்கப்படும்."

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனமில்லை."

"சென்னையில் ஒரு பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு மதுவைப் பற்றி ஒன்றுமே தெரியாது. குடித்துவிட்டு வீதிகளில் ரகளை செய்யும் காட்சிகளையும் அவர்கள் கண்டதில்லை."

"மதுவிலக்குக் காரணமாக, 'குடித்துவிட்டு ரகளை செய்வதைக்' காணாத புதிய தலைமுறையை இப்போது நாம் காண்கிறோம்! 'ஒரு சிலர் திருட்டித்தனமாகக் குடிக்கிறார்கள்' என்பதற்காக—'ஒரு சிலர் மதுவிலக்குச் சட்டத்தை மீறுகிறார்கள்' என்பதற்காக எந்த நாகரிக அரசும் மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துவிடாது!

"மதுவிலக்குச் சட்ட மீறல் குற்றங்களைப் பார்த்து, 'அந்தத் திட்டம் தோல்வியடைந்துவிட்டது; ஆகவே, ரத்து செய்துவிட வேண்டும்' என்றால் ஏற்றுக்கொள்ள இயலாது; 'இன்னும் வலுவான முறையில் மதுவிலக்குத் திட்டம் அமல் செய்யப்பட வேண்டும்' என்பதன் அவசியத்தையே அது வற்புறுத்துகிறது!

"இன்று காலை கூட பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகி இருப்பதைப் படித்தேன். மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் ரூ. 11 கோடி வருமானம் வரும் என்று ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார். நிதிப் பற்றாக்குறையால் அவதியுறும் இந்த மாநிலத்தின் பொறுப்பை ஏற்றிருக்கும் எனக்குகூட, 'ரூ. 11 கோடி வருமானம்' என்பது மிகுந்த 'வசீகரமாகத்'தான் இருந்தது; ஆனால் அடுத்த நிமிடமே—மதுவிலக்கை ரத்து செய்துவிடுவதன் விளைவாக... கண்ணீர் வடிக்கும் தாய்மார்களின் முகங்களும், அழுது கதறும் குழந்தைகளின் உருவங்களும், நலிந்தவிட்ட குடும்பங்களும் என்னுடைய மகக் கண்முன் காட்சியளித்தன; சிறிது நேரம் சிந்தித்தேன்; இந்த 'வசீகர'மான ரூ. 11 கோடிக்கு 'விடை கொடுத்து' விட்டேன்! அந்த ரூ. 11 கோடி வருமானத்தை விட தாய்மார்களின் மகிழ்ச்சி—திருந்திய குடும்பங்கள்தான் தமிழக அரசுக்கு முக்கியம்; 'இதற்கு எதிராக இந்த வருமானம், எந்த வகையிலும் ஈடல்ல' என்று முடிவு கட்டினேன்; ஆகவே, மது விலக்குச் சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளை மூடி—திட்டத்தை இன்னும் உறுதியாக அமுலாக்கி—அத்துறையில் வெற்றி காண முனைவோம்."

(ஏப்ரல் 12, 1968—அன்று அனைத்துஇந்திய மதுவிலக்கு மாநாட்டில் பேசியது.)

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கோர் இலக்கணமாய்-எடுத்துக்காட்டாய்-திகழ்ந்த அண்ணா அவர்கள், அனைத்து இந்திய மது விலக்கு மாநாட்டில் மதுவின் கொடுமையை எடுத்துக்கூறி, மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிர படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். (12-4-1968).



## எனக்குக் கை கூடாதது அண்ணாவுக்குக் கைகூடியது!...

"பிரசாரங்கள் நடத்துவதில் 'சந்திரோதயம்' போன்ற நாடகம் நடத்துவது மிக முதன்மையானதாகும். இதை நான் பத்து பன்னிரண்டு ஆண்டு காலமாகவே சிந்தித்து, சிந்தித்து ஒன்றும் சரியாய் கை கூடாமல், இப்போது தோழர் அண்ணாதுரை அவர்கள் துணிவோடு கிளம்பி, முகத்திற்குச் சாயம் பூசிக்கொண்டு மேடை ஏறிப் பாவலாப் போடவும், அதை ஒரே சமயத்தில் 5,000 மக்கள் பார்த்துக் களிக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதையும் பார்த்து நான் பெருமை அடையாமல் இருக்கமுடியவில்லை.

"உண்மையைச் சொல்வதானால், அண்ணாத்துரையின் சந்திரோதய நாடகம், அதைப் பார்த்த மக்களுக்கு வெகுஉணர்சியாகவும், அறிவுக்கு நல்விருந்தாகவும், மானத்திற்கு உயர்தர வழிகாட்டியாகவும் -தொடக்கம் முதல் முடிவு வரை-விளங்குகிறது என்பது சிறிதும் மிகைபடக் கூறியதாக ஆகாது."

—பெரியார் ஈ. வே. ரா.







## பெரியாருக்கு அண்ணா அளித்த பரிசு!

"...நெடுந்தொலைவு போன மகன், திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதேபோல, இன்று பெரியாரை பார்க்க வந்திருக்கிற நானும் ஓர் அன்புப் பரிசை—கனியை—ஏதோ என்னால் இயன்றதை—கொண்டு வந்திருக்கிறேன்.

"சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடுபட்டு வருகிறார். பகுத்தறிவு திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன.

"இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கிச் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' கொண்டு வரப் போகிறோம். என்ற நல்ல செய்தியை அன்புப் பரிசை—கனியை—பெரியாரிடம் அளிக்கிறேன்."

இவ்வாறு 7-6-67-ல் திருச்சி பெரியார் மாளிகையில் பொதுவுடைமைத் தலைவர் ப. சிவானந்தம் அவர்களுடைய புதல்வியின் திருமண விழாவிலேயே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

அதைக் கேட்டதும், பெரியாரின் உற்சாகம் கங்கு, கரையை யெல்லாம் உடைத்துக் கொண்டு பொங்கிப் பெருகியது! தம் பருத்த மேனி குலுங்கச் சிரித்து மகிழ்ந்துக் கை தட்டினார்.

பூரிப்பில் மிதந்த பெரியார் அவர்கள் "இதை அண்ணா அவர்களின் அருள்வாக்காகவே எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறி புகழ் மாலை சூட்டினார் அண்ணாவுக்கு!

# பெரியார் ஒரு சகாப்தம்!

— அண்ணா

இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார். நான் அவருடன் இணைந்தபோது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு—அதற்கு முன்பு முப்பதாண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார். இந்த 'ஆண்டுகள்' தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள். திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! சொல்லி எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ என்று கூறியும், விட்டு வைக்கக் கூடாது! ஒழித்துக் கட்டியாக வேண்டும்! நானே தீர்த்துக் கட்டுகிறேன்! என்று மிரட்டியும் தமிழகத்திலுள்ளோரில் பலர் பேசினர். ஏசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஏளனம் செய்தனர்; மறுப்பு உரைத்தனர். ஆனால் அவர் பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தனர்! மூலையில் நின்றாகிலும் மறைந்தாகிலும்! அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருந்தது! எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள் ஏனோ தானோ என்று இருந்தவர்கள் தத்தமது நிலை தன்னாலே மாறிடக் கண்டனர். கொதித்தவர்கள் அடங்கினர். மிரட்டினோர் பணிந்தனர். அலட்சியம் செய்தோர் அக்கறை காட்டினர். அவருடைய பேச்சோ, அது தங்கு தடையின்றி, வேகம் குறையாமல் பாய்ந்தோடி வந்தது. மலைகளைத் துளைத்துக் கொண்டு, கற்களை உருட்டிக்கொண்டு, காடுகளை கழனி வளம் பெறச் செய்து கொண்டு, ஓசை நயத்துடன், ஒய்யார நடையுடன்! அங்கே பேசுகிறார்! இங்கே பேசுகிறார்! அதைக் குறித்துப் பேசுகிறார்! இதைக்குறித்துப் பேசுகிறார்! என்று தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கூறி வருகிறது.

மனதிற் பட்டதை எடுத்துச் சொல்கிறேன்; எது நேரிடினும் என்ற உரிமைப்போர், அவருடைய வாழ்வு முழுவதும். அதிலே அவர் கண்ட வெற்றி மிகப் பெரியது. அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்திடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின் விளைவுகளால், இந்த த்தமிழகத்தில் தூய்மையுடன், மனதிற்குச் சரியென்றுபட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்ற நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதல் கட்ட வெற்றி இது! இதற்கு முழுக்க பொறுப்பாளர் பெரியார்! இந்த வெற்றி கிடைத்திட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது.

அவர் பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத 'பழமை' உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எதற்கு அவர் பணிந்தார். எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பொறுத்தது! ஏ! அப்பா! ஒரே ஒருவர் அவர் நம்மை அச்சு வேறு ஆணி வேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே, என்று 'இந்நாட்டை என்றென்றும் விடப்போவதில்லை' என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த 'பழமை' அலறலாயிற்று! புதுப் புதுப் பொருள் கொடுத்தும்; பூச்சு மெருகு கொடுத்தும், இன்று பழமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. என்றாலும், விழுந்த அடியில் அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இல்லை. எனவே தான், பெரியாருடைய பெரும் பணியை, நான் ஒரு தனி மனிதரின் வரலாறு என்றல்ல;

**"ஒரு சகாப்தம்—ஒரு காலக் கட்டம்—ஒரு திருப்பம்" என்று கூறுவது வாடிக்கை.**

(பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரின் 89வது ஆண்டு பிறந்த நாள் 'விடுதலை' மலருக்குத் தந்த சிறப்புக் கட்டுரையின் பகுதி).

# பெரியாரால் பாராட்டப் பெற்ற அண்ணாவின் தலையங்கம்

'ஆற்றில் கொட்டினாலும் அளந்து கொட்ட வேண்டும்'—என்னும் கொள்கையை உடையவர். அவர் மிகப் பெரிய சிக்கனக்காரர் என்பதை நாடே அறியும். பணத்தைச் செலவழிப்பதில் மட்டுமல்ல; பிறரைப் பாராட்டுவதிலும் 'சிக்கனக்காரரே'!

அத்தகைய சிக்கனக்காரரே அண்ணாவின் எழுத்து வன்மையின் முன்னே 'ஊதாரி'யாகவும் மாறி நின்றார் என்றால் அது வியப்புக்குரியதுதானே!

'நவயுகம்' என்னும் வார ஏட்டின் மூலம் முதன் முதலாகத் தமிழ் எழுத்துத் துறைக்கு அறிமுகமாயிருந்த அண்ணா, 1939ல் 'விடுதலை' ஏட்டின் துணையாசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

விடுதலையில் அவரது எழில் சொட்டும் தமிழ் நடை, குற்றாலத்து அருவியாகத் துடிதுடிப்போடு கொட்டிப் பாய்ந்தது! கருத்துச் செறிவோ, குனிந்து ஒடுங்கிய மக்களையெல்லாம் நிமிர்ந்து நடக்கத் தூண்டியது! 'பரதன்'—'வீரன்'—என்னும் கற்பனைப் பாத்திரங்களை உருவாக்கி அவற்றின் வாயிலாக அவர் எழுப்பிய அரசியல்—பகுத்தறிவு—வாதங்கள் அற்புதமாய் அமைந்திருந்தன! அனைவர் உள்ளங்களையும் கவர்ந்திழுத்தன!

அவருடைய விறுவிறுப்பான தலையங்கங்கள் மாற்றார் மீது குறி தவறாத கணைகளாக—பொறி பறக்கும் தீப் பிழம்பாக—யாவரையுமே திகைக்க வைத்தன!

'விடுதலை'யின் துணை ஆசிரியரான அண்ணா அவர்கள், பெரியார் வீட்டில்தான் தங்கியிருந்தார். அந்த வீடு மூன்று அடுக்கு மாடிகளைக் கொண்டது. கடைசி மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகளோ மிகவும் குறுகலானவை. செங்குத்தானவை; பெரியாரைப் போல் கடினமான உடம்பும், முதுமையும் பூண்டவர்கள் அவற்றின் வழியே ஏறிச் செல்வது என்பது மிகவும் கடினம்.

ஆனால் அண்ணாவோ அந்த மூன்றாவது மாடியில்தான் மாலைப் பொழுதைக் கழிப்பது வழக்கம். அப்படித்தான் ஒரு நாள் மாலை, மூன்றாவது மாடியில் அமர்ந்து அவர் ஏதோ படித்துக் கொண்டிருந்தார்.

அப்போது ஏறமுடியாத படிக்கட்டுகளில், தட்டுத் தடுமாறி ஏறியவாறே அண்ணா அவர்கள் இருந்த மூன்றாவது மாடிக்கு வந்துவிட்டார் பெரியார். அவர் அங்கு வந்ததைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்த அண்ணா,

''இவ்வளவு சிரமத்தோடு, ஏனய்யா இந்தப் படிக்கட்டுகளில் ஏறி மேலே வரவேண்டும்? கூப்பிட்டிருந்தால் நானே கீழே வந்திருப்பேனே?'' என்று கேட்டார்.

அதற்கு,

''நீங்கள் எழுதின '**ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள்**'—என்ற தலையங்கத்தைப் படித்தேன்? ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது'' என்று பாராட்டினாராம் பெரியார்.

''இந்தப் பாராட்டுக்கு இப்போது என்ன அவசரம்? நான் கீழே இறங்கி வந்தபின், எப்பொழுது வேண்டுமானாலும் பாராட்டலாமே'' என்று அண்ணா சொல்லியிக்கிறார்.

**''அது இல்லை அண்ணாதுரை! பொதுவாக நான் யாரையும் பாராட்டுகின்ற பழக்கம் கொண்டவன் அல்ல! ஆனால் உங்கள் தலையங்கத்தைப் படித்ததும் உடனே பாராட்ட வேண்டும் என்று தோன்றியது. உடனடியாக என் விருப்பத்தை நிறைவேற்றவில்லையானால், அந்த எண்ணம் மறுகணமே மாறினாலும் மாறிவிடும். அதனால்தான் மேல் மாடிக்கு ஓடி வந்தேன்,''** என்று மனந்திறந்து கூறினாராம் பெரியார்.

## போனால் வராது!

அண்ணா அவர்கள் கிட்டத் தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பு திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வழியாகக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஓர் ஊரில் நடக்கவிருந்த நாடகத்தில் கலந்து கொள்வதற்காக உந்து வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

அண்ணா பேசுவதை அறிந்த கலைவாணர் காரோட்டியை நிறுத்தும்படியாகக் கூறினார். கலைவாணருடன் வந்த ஒருவர் 'ஏன் நிறுத்தச் சொல்கிறீர்கள்?' என்றார். அதற்குக் கலைவாணர் அண்ணா 'பேசிக் கொண்டிருக்கிறார்; கேட்டு விட்டுப் போகலாம்' என்றார்.

உடனே அந்த ஆள் சொன்னார் ''அண்ணா பேச்சைத்தான் பல தடவை கேட்டிருக்கிறீர்களே! அதுவும் சென்னையிலே அடிக்கடி கேட்டுக் கொள்ளலாமே, நமக்கு நாடகத்திற்கு நேரமாகிறது. ஆகவே புறப்படுவோமே'' என்றார்.

அப்போது கலைவாணர் சட்[illegible]னறு சொன்னார்:

**''அண்ணா பேச்சு ஒவ்வொரு கூட்டத்திலும் புதுமையாக இருக்கும்; ஆகவே இப்போது கேட்காவிட்டால், இனிமேல் வேறு பேச்சுத்தான் கேட்க முடியும், போனால் வராத சரக்கு—புதுச்சரக்கு அண்ணாவின் பேச்சு!** என்று கூறி, அண்ணாவின் பேச்சைக் கேட்ட பிறகே நாடகத்திற்குச் சென்றார்.





# மக்கள் கவிஞர்

— அண்ணா



"மக்கள் கவிஞர்! மனங்கவரும் மகத்தான இந்தப் பட்டம் கவிஞனுக்கு மட்டும் வழங்கப்படும் புகழ்மாலை அல்ல. மக்களுக்கும் அளிக்கப்படும் மாபெரும் பேறுதான். காரணம் மக்களிடையே மன்னர்கள், மந்திரிகள், போர் வீரர்கள், போதகர்கள், சாமியார்கள், சந்நியாசிகள், சித்து புருஷர்கள், பூசாரிகள் இருந்தார்கள்; கவிஞன் இல்லை. பன்னூறு காலமதாய் பாரிலே கவிஞர்கள் உலவி வந்தார்கள்; அளவுக்கு அதிகமாகவே உலவி வந்தார்கள். ஆனால் அவர்கள் செய்து வந்த வேலையெல்லாம் வேதங்களுக்கு விரிவுரை, வியாக்கியானப் பாடல்கள் தீட்டுவது, படாடோப அரண்மனை வாழ்விற்குத் தங்கள் கவிதைத் திறத்தால் பகட்டுப் பூச்சு பூசுவது ஆகியவைதான்.

"மக்களுக்காக, மக்களைப் பற்றி, மக்களிடையே பழகு மொழியில் கவிதை இயற்றிய கவிஞன் மிக மிக அருமை!

"கவிஞனின் குரல், கோவில் கண்டாமணி செய்ய வேண்டியவேலையைச் செய்வதாகவோ, அரண்மனை முரசங்கள் அறைந்து அறிவிக்கும் ஒலியை பரப்புவதாகவோதான் இருந்தது.

"மக்கள் மனதுள் உறையும் எண்ணத் துடிப்புக்களை, சிந்தனையில் குமிழிடும் சீரிய கருத்துக்களை எழுத்து வடிவிலோ, ஒலி உருவிலோ எடுத்து இயம்புவதாய் இல்லை.

"தப்பித் தவறி கவிஞன் மக்களோடு பேசத் தொடங்கினால் அப் பேச்சு இந்த உலக மக்கள் எவ்வளவு பேராசை பிடித்தவர்களாக, இகலோக இச்சை நிறைந்தவர்களாக ஆகிவிட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட—உலகம் எவ்வளவு நிலையற்ற தன்மையது, எத்தகைய மாயையின் சொரூபம் என்பதை விளக்குவதற்காக—வெள்ளி பாவத்தின் கறை, தங்கம் பைசாசத் தன்மையின் பிரதிபலிப்பு என்கிற மாதிரியிலே போதனைகள் உதிர்ப்பதற்காகத்தானிருக்கும்.

"அரச தண்டம், பணக்கார வர்க்கத்தின் சவுக்கு ஆகியவற்றிற்குப் பதிலாகப் பயன்படும் கருவியாக கவிஞனின் குரல் மிளிர்ந்தது.



எட்டையபுரத்தில் உள்ள மகாகவி
பாரதியாரின் இல்லம்

அரச பரிவாரத்திலே மற்றுமொரு இன்றியமையாத அங்கமாக—இகத்திலே குற்றப்பத்திரிகை படித்து, பரலோக விசாரணை மண்டபத்தில் உரிய தண்டனையைப் பெற இழுத்து நிறுத்தும் போலீஸ்காரனாக—ஆகிவிட்டான் கவிஞன்!

“அத்தகைய கவிஞர்கள் மக்களுக்குப் புரியாத, அவர்களுக்கு முற்றிலும், புதியதான மொழியிலேதான் பேசினார்கள். தங்கள் குலமான மக்கள் குலத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டு, தங்கள் மேதையையும், திறமையையும் அரண்மனைப் புறங்களிலே உலவி வர அனுமதி பெறும் சாதனங்களாகப் பயன்படுத்தினார்கள். அங்கே நுழைந்ததும் மன்னர் புகழ் குறித்துப் பாமாலைகள் பாடினார்கள். மன்னன் எத்தகையோனாயிருந்தாலும் கவலையில்லை. அவன் விட்டெறியும் பொன் காசு, பசும் பொன்னாலானதாயிருந்தால் போதும் என்பதே அவர்கள் குறி.

“வேதனை விளைவிக்கும் இந்த விதிக்கு விலக்காய் விளங்கியவர்கள் சங்க காலப் புலவர்கள். ஆனால் அவர்களைப் பற்றி இன்றைய நம்மவர்கள் அறிந்தது மிகவும் கொஞ்சமே.

“ஒழுக்கங்களின் சுமைதாங்கிகளாய் விளங்கிய புலவர்கள் பாடல்களைப் பாடிப் பணம் பண்ணும் வியாபாரிகளாகவோ அல்லது இன்பரசப் பாடல்களை ஏலங் கூறுபவர்களாகவோ மாறினார்கள்.

“மக்களின் கவிஞராக மாறுவது கடினம், அதோடு அது இலாபகரமான தொழிலும் அல்ல என எண்ணினார்கள். அதனால்தான் சங்க காலத்திற்குப் பின்பு பிரசித்தி பெற்ற மக்கள் கவிஞராகத் திகழ்ந்த யாரையும் காண முடியவில்லை!

## பழங்காலப் புலவர்கள்

“பரலோக இன்பம் கிட்டுவதற்காகச் சேர்த்து வைக்கும் சேமிப்புகளே ஒழுக்க முறைகள் என்ற கருத்துப் பரவியது. இந்த நாசகாரக் கருத்து வேரூன்றிய காலத்திற்குப் பின் முளைத்த கவிஞர்கள் இகலோக இன்பங்களைப் பரலோகப் பரமானந்த வாழ்விற்காகத் துறக்கத் தூண்டும் கங்காணிகளாகத் தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்டுச் செயலாற்றினார்கள்.

“புத்திசாலியான பேங்க் முதலாளியைப் போல, சுறுசுறுப்பாக வேலை செய்யும் இன்ஷூரன்ஸ் ஏஜண்ட் மாதிரி பரலோக பாங்கியின் பந்தோபஸ்தான முதல்பலம் பற்றி, நிகழ்கால இன்பத்துறவுப் பாலிஸி பிரீமியம்கள் மூலம் கிடைக்கப்போகும் எதிர்காலப் பரலோக இன்ஷூரன்ஸ் இன்பத் தொகை பற்றி எல்லாம் உரக்கப் பிரசாரம் செய்தார்கள்.

“மனித வாழ்வின் பயனற்ற தன்மை குறித்து எடுத்துச் சொல்லி, இகலோக இன்பங்களைத் துறக்கத் தூண்டினார்கள். மேக மண்டலத்திற்கு மேலே, எங்கோ எவர் கண்ணிலும் படாதிருக்கும் சுவர்க்க பூமியின் பெருமையை மிகைப்படுத்திப் பாடல்கள் இசைத்தார்கள். பாதாளத்திலிருக்கிறது நரகம் எனக் கற்பித்தார்கள்.

“அந்தக் காலம், விஞ்ஞானம் தூரதிருஷ்டிக் கண்ணாடியைப் பெற்றெடுக்காத காலம். எனவே கவிஞர்களின் கற்பனா சக்தி மக்களை மயக்கி மகிழ்வூட்டியது. பாமரர்கள் மெய் மறந்து வியந்தார்கள். பகுத்தறிவாளர்கள்—அறிஞர்கள்—கருத்துக்காக அல்ல; கலை நயத்திற்காகப் பாராட்டு வழங்கினார்கள்.

## மக்கள் கவிஞரின் தன்மை

“மக்களின் கவிஞராக மாறுவது சுலபமான காரியமல்ல. மிகவும் சிரமமான இந்தச் சாதனையில் தான் முயன்று வெற்றி பெற்றிருக்கிறார், பாரதி!

“உயர் தர வர்க்கத்தினர் உளம் மகிழ்விக்கும் கவிஞனாவது மிகவும் சுலபம். நீல வான் கடலில் மிதக்கும் வெள்ளி ஓடமான அம்புலியைப் பற்றி இரண்டு பாடல்கள் பாடினால் போதும்; கருவானத் திரை கிழித்து கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் குறித்துச் சில கவிதைகள் எழுதினால் போதும்; எழில் சிந்தும் மலர்களின் இனிய மணத்தைப் பற்றி இங்கியமாக இசைத்தால் போதும்; ஆற்று நீரின் சலசலப்பில் எழுந்து எதிரொலிக்கும் தாளலயம், காதல் வெறி மூண்டெழக் கிளம்பும் குளறல், வீரர் தம் தீரம் ஆகியவை குறித்துச் சொற் சித்திரம் தீட்டினாலே போதும்; கவிஞர்கள் வரிசையிலே சரியாசனம் பெற்று, புகழ் விருதும் பெறலாம்.



“ஆனால் மக்களின் கவிஞன் ஒருவன் தன் கடமையைச் சரியாய் ஆற்ற வீசியெறியப்படும் வெறுப்பு வேல்களை எதிர்த்து நடக்க வேண்டும். அபாயங்களில் முக்குளித்து எழ வேண்டும். பாராட்டுதல், ஆதரவு, செல்வாக்கு குறித்தெல்லாம் சிந்திக்கவே கூடாது.

“ஆரம்பத்திலேயே சுப்ரமணிய பாரதியாரின் கவித்வ மேதை பற்றியும், திறமை குறித்தும் அவரது நண்பர்களான ஒரு சிறு குழுவினருக்குத் தெரியும். அவர்கள் வியந்து புகழ்ந்தார்கள். ஆனால், ஏனைய மக்கள் அனைவரும் அவர்களது கவிஞராகிய அவரைப் பற்றி அறிந்தது அநேக ஆண்டுகளுக்கு அப்புறம் தான். அப்பொழுது கூட ஒரு வித அரசியல் மெருகேறிய ஒரு சில கவிதைகள் மட்டுமே பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. மக்கள் கவிஞர் மட்டுமே கற்பனை செய்து பாடக் கூடிய அலாதித் தன்மை பெற்ற கவிதைகள் பொது மக்களுக்கு வழங்கப்படவில்லை.

“நம் நாட்டில் கவிகளுக்குக் குறைச்சல் இல்லை. வீட்டையும் வேலையையும் மறந்து கோயில் ஒன்றிலே துயிலில் ஆழ்ந்து விடுகிறான், ஆடு மேய்ப்பவன் ஒருவன். நடு ராத்திரிரோந்து சுற்றும் பணி முடிந்து ஆலய அம்மன் குடிகொண்டுள்ள கோவில் திரும்புகிறாள். அப்பாவியான ஆடு மேய்ப்பவனைக் கண்டதும் அவள் அதரங்களிலே குறு நகை நெளிகிறது. அவனை ஒரு கவிஞனாக மாற்ற வேண்டும் என்ற விசித்திர எண்ணம் தோன்றுகிறது. கையிலுள்ள மந்திரக் கோலால் மெதுவாகத் தட்டுகிறாள். விளைவு, அப்பாவி அற்புதக் கவிஞனாக மாறுகிறான். இத்தகைய கதைகள் மக்களுக்கு மிகவும் பரிச்சயமானவை. தேவதையின் திருக்கர ஸ்பரிசத்தால் கவிஞனானவன் அந்தத் தேவதை குறித்தோ, அல்லது கடவுளர் அடங்கலுக்குமோ தன் நன்றியைத் தெரிவிப்பதற்காக தேவமாக் கதைகள், துதிப் பாடல்கள் பாட வேண்டுவது கடமை.

“இந்தக் கருத்து பேய்ப் பிடியாகப் பற்றி ஆட்சி செலுத்திய காரணத்தால், மக்களுக்கு அவர்கள் நலனுக்காகப் பாட்டிசைக்கும் புலவன் ஒருவன் கிடைத்த போது கூட, அவனை நேருக்கு நேர் சந்தித்து பேச முடியவில்லை.

“நான்தான் மக்கள் கவிஞன். அவர்களுக்காக அவர்களைப் பற்றி நான் பாடுகிறேன். காரணம் நானும் அவர்களுள் ஒருவன்’ என ஒருவன் துணிந்து சொன்னால், மக்கள் சந்தேகக் கண்களுடன் வெறுப்புடன் அவனைப் பார்ப்பார்கள். அவனுக்கு அங்கீகாரம் கிடைக்காது. எத்தனைக் கெத்தனை அவனது கவிதகள் புரட்சிக் கருத்துக்கள் பொதிந்தனவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான எதிர்ப்பை அவன் சமாளிக்க வேண்டி இருக்கும்.

“உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் பாடினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்கள், விளையாட்டு வெளிகளிலோ ஓடிவிளையாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

“கடந்த காலப் புலவச் சிகாமணிகளைப் போல, வேதாந்த வியாக்கியானங்களைச் சுதந்திரக் கோரிக்கைக்குச் சப்பைக்கட்டாக உபயோகிக்கவில்லை. உலகத்தின் தூர தொலைவிலுள்ள நாட்டு மக்களின் சுதந்திரப் போராட்டங்களைக் கவிதைகளாக்கி மக்களுக்குச் சமர்ப்பித்தார். இத்தாலிய சுதந்திர உதயத்தை மாஜினி என்ற தேசீய வீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை உன்னதச் சொற்சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார்.

“புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார்.

“ஜாரின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி வீறுடன் எழுந்து நின்ற ரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினார்.

“சுதந்தர பெல்ஜியம், பிரான்சு, சிகப்பு ரஷ்யா குறித்த சொற்சித்திரங்களே அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தது.

“இந்திரலோக, பிரம்மலோகக் காட்சிகள் பற்றிய அளப்புகளை அல்ல. பிஜித்தீவு வாழ்வு பற்றிய பேனாச்சித்திரத்தை மக்கள் முன் வைத்து, பாருங்கள் சகோதரர்களே உம்முடன் பிறந்த சோதரர் நிலையை எனக் காட்டினார், ஆங்கில நாடாகாசிரியன் ஷேக்ஸ்பியரின் தன்மையிலே, மக்கள் கவிஞனின் லட்சணம் அதுதான்!

பாரதியார் குடும்பம்
உட்கார்ந்திருப்பவர்கள் : புதல்வி சகுந்தலா (‘பாப்பா’), மனைவி செல்லம்மாள்.
நிற்பவர்கள் : புதல்வி தங்கம்மா, நண்பர் ராமு, நண்பர் விஜயராகவன், பாரதியார்.





## போதுமென்றிருக்கலாமா?

''தொல்காப்பியம் நமக்கு இருக்கும் போது, நமக்கு வேறென்ன வேண்டும் என்றிருந்தால், அகமும் சிலப்பதிகாரமும் கிடைத்திருக்க வழியுண்டா? சிலப்பதிகாரமே போதுமென்றிருந்தால், கலிங்கத்துப் பரணி கிடைத்திருக்குமா? கலிங்கத்துப் பரணி போதுமென்றிருந்தால்—மனோன்மணீயமே போதுமென்றிருந்தால்—பாரதியாரின் தேசிய கீதங்களை கேட்டிருக்க முடியுமா? பாரதியாரின் தேசிய கீதங்களே போதுமென்றிருந்தால், தேசிக விநாயகம் பிள்ளையின் தாயினுமினிய அன்பு குழைந்தூட்டும் பாக்களைப் பார்த்திருக்க முடியாது. தேசிக விநாயகம் பிள்ளையே போதுமென்றிருந்தால், நாமக்கல்லாரின் 'கத்தியின்றி இரத்தமின்றி' என்ற புது மாதிரியான சண்டை தத்துவப் பாடலைக் கண்டிருக்க முடியுமா? நாமக்கல்லாரே போதுமென்றிருந்தால், 'கொலைவாளினை எடடா! மிகக் கொடியோர் செயலறவே' எனும் பாரதிதாசனின் உணர்ச்சி மிக்க புரட்சிகரமான பாடலைக் கேட்டிருக்க முடியாது!''

—அண்ணா

" தன் நாட்டு மக்களின் மூட்டாள்தனத்தையும், குற்றங் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்கமாட்டான் மக்கள் கவிஞன்!

" சிந்தையிலும் செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள், அதே வேளையில் உலகத்தின் இதர நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன. எவ்வளவு சிறப்பாகச் செயல்புரிகின்றன, அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது என எடுத்துக்காட்ட அஞ்சமாட்டான்!

" வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக்குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு தொடை நடுங்கவில்லை பாரதி! அவர்களது தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார்! வஞ்சகத்தையும், துரோகத்தையும் அவற்றின் உண்மை சொருபத்திலே கொணர்ந்து நிறுத்தினார்! ஒப்பற்ற தீரம், அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார்-அவர்!

### பழமை உடும்புகளைச் சாடினார்!

" பாரதியை, 'தேசீயக் கவி' என அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீது உள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் மற்றொரு தன்மையை—அதாவது பாரதி மக்களின் கவிஞர் என்ற உண்மையை—மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

" சுற்றி வேலி கட்டிக் கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி, ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த, தேசீயச் சிமிழ்களில் அவற்றை அடைக்க முடியாது. புராதன சம்பிரதாயங்களின், புராணக் கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களை நோக்கி ஆவேசமாக எறிகிறார் அவர் சுடுசொற்களை: 'ஏடு முட்டாள்களே! வெகு காலமாக நிலவி வருகிறது என்ற ஒரு காரணத்திற்காகச் சில விஷயங்கள் உன்னதமானவை, உண்மையானவை என்று சாதிக்க வாடா வருகிறீர்கள்? பொய்யும், புளுகும் யுக யுகாந்திரமாகத்தான் உலவி வருகின்றன. அவை உயர்ந்த பண்புகள்; ஆகவே அவசியம் எல்லோராலும் அனுஷ்டிக்கபட வேண்டியவை என ஒப்புக் கொள்ளத் தூண்ட முன் வருவீர்களா?'

### நிகழ்காலத்தில் வாழ்ந்து, எதிர்காலம் சமைப்போம்!

" புராதன காலத்தில் அறியாமையும், குள்ளக் கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா நீங்கள்! செத்த சிந்தனைகள் என்ற பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டி அழ வேண்டும்? நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள். இறந்த கால அந்தகாரத்தில் துழவ வேண்டாம். கடந்த காலம் கடந்து போனது போனதுதான், **'சென்றது இனி மீளாது'** இது பாரதி வாக்கு. இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறையை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

" புராணக் கோட்பாடுகளைப் போல மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அல்ல அவர் காட்டும் வழி. மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு ஊட்டினார். உலகம் மாயை என்ற சாக்குருவி வேதாந்தம்—'பாழுலகம் பொய்யே; பரமபதம் போ' என்ற படு பாடாவதிப் பண்பாடு—மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய நம்பிக்கையைக் கண்டு சிரித்துத் துப்பினார். ஆசிரமவாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னகுமோ என வீண் பீதி கொள்ளவில்லை. அத்தகையச் சோம்பேறி வேதாந்தங்களில் ஊறிய மக்கள் உதவாக்கரைகளாக, ஒன்றுக்கும் உதவாத பிற்போக்குவாதிகளாக ஆகிவிடுவார்கள் என்பது அவர் கொள்கை.

### அவரது மதம்

" பசி, வறுமை, அறியாமை, முதலியவற்றை அவரால் சகிக்க மூடியாது. பணக்காரர்களின் கொடுமையைப் பலமாகச் சாடுகிறார் அவர்.

**''தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்''** எனக் கர்ஜிக்கிறார்.

**''வாழ்வு வசதிகள் அனைத்தும் பெற்று மக்கள் வாழவேண்டும், வர்த்தகம் வளமாக வேண்டும், இயந்திரத்தொழில்கள் பெருகவேண்டும், புது யுகத்தின் நலன்களெல்லாம் நாட்டிலே குவிய வேண்டும்''** என்றெல்லாம் விரும்புகிறார்.

" பூசாரித்தனமும், சுலோக ஊளையும் அவரது மதக் கோட்பாடுகள் அல்ல. மக்களுக்கு உழைத்தலே—சகோதர ஜீவன்களுக்குப் பணிபுரிவதே—அவரது மதம்.

" இத்தகைய அபாயச் சூழலில், நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையுமாக, உள்ளந் தளராமல் பாரதியார் நடந்து செல்வதை நாம் காண்கிறோம்.

### பாரதி தோன்றிய காலம்

" இரு யுகங்கள் மோதும் எல்லை, பாரதி தோன்றிய காலம். பிறந்த ஊரில் பூர்ண கும்ப மரியாதைகள் பெற்று பிரபுத்வ ஆட்சி கொலுவிருந்தது. குடிசைகள் சூழ மையத்தில் நிமிர்ந்து நின்றது எட்டையபுரத்தில் மன்னரின் மாளிகை. பழைய ஜாதிப் பாகுபாடுகளின் ஆட்சி ஆதிக்கம் குன்றவில்லை அப்போது. அவரும் ஜாதியில் பிறப்பால் பிராமணர். பிரபுத்துவத்திற்கும், வைதீக சனாதனத்திற்கும் ஊடே நவீன நாகரிகம் தலை நீட்டிக் கொண்டிருந்த காலமும் அவர் தோன்றிய சமயம்தான். புரட்சி பூத்துக் கொண்டிருந்தது; இயந்திர உலகில் சோகமும் வெறுப்பும் மின்னும் கண்களுடன் சமுதாயம் பழைமை முறை புதிய, அமைப்பு முறை நுழைவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. புது யுகத்தின் கண்களிலே பழைமைக்குச் சவால் விடுக்கும் மிடுக்கு இருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பாரதி தோன்றினார். பழைய யுகத்திற்கும், புது யுகத்திற்கும் நடக்கவிருக்கும் போராட்டத்தில் தானும் ஒரு வீரனாகப் பங்கு கொள்ளலாம் என அவர் கருதியிருக்கவும் கூடும்! பழைய சமுதாய அமைப்பு முறையிலோ அவரது ஸ்தானம் பந்தோபஸ்து நிறைந்தது. வசதிகள் மலிந்தது.

### பாரதியாரின் சிறப்பு

" பாரதி பிறந்த இந்த நாடு முரண்பாடுகள் செறிந்த களம். அகந்தையும் பணிவும், கொடூரமும், அன்பும் நாட்டிலே ஒருங்கே குடி கொண்டிருந்தன. செயல் திறம் நாட்டிலே ததும்பிக் கொண்டிருந்தது. அதே வேளையில் மக்கள் மனங்குலைந்து செயலாற்றவர்களாகும்படி செய்யும் அபத்தக் கற்பனைகளும் அபரிமிதமாக உலவின. பகட்டான கற்பனைகள், பல்லாயிரக் கணக்கான ஊமை மக்கள், அறிவு மயங்கி ஆழ்ந்த நிலை - பயமும் சூரத்தனமும் பக்கத்திலே பக்கத்திலே கொலுவிருந்த தன்மை--பக்தியும் பயமும் பாசறை கொண்டிருந்த காட்சி-அனைத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்தது நாடு.

'பைரன்', 'பர்க்கு' ஆகியோர் இந்த நாட்டிலே அச்சமயத்தில்தான் கால் பாவினார்கள். அவர்களை வரவேற்க நாட்டிலே இருந்தவை பாரதமும், பாகவதமும்தான். துப்பாக்கியும் பீரங்கியும் முழங்கி நாட்டு மக்களின் காதுகளிலே ரீங்காரம் செய்தன. முரண்பாடுகள் மலிந்த இந்த நிலப்பரப்பிலே அவற்றோடு கோவில் நகராக்கள் கலந்து முழங்கிய முழக்கமும் ஓயவில்லை!

" பாரதி தோன்றினார். ஆனால் நாட்டின் இயல்பிற்கிணங்க சரித்திரம் ஆமை வேகத்தில் தான் நகர்ந்து கொண்டிருந்தது. சரித்திர ரதத்தைத் துரித கதியிலே செலுத்தப் பலமாகத் தடிபோட்டு எழுப்ப வேண்டி இருந்.

**எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் நினைவு மண்டபம்**



தது. பாரதியின் சிறப்பு அவர் அத்தகைய தடிபோட்டு எழும்பும் பணியில் ஈடுபட்டதில் தான் இருக்கிறது. மக்களின் கவிஞராக மாறி மகத்தான முறையில் அவர் அப்பணியைச் செய்தார்.

"**பாரதி வெறும் தேசீயக் கவிஞர் அல்ல. சீர்திருத்த வானில் மின்னிய விடிவெள்ளி அவர்!** அந்நியன் மீது அவருக்கு ஆத்திரம். நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என விரும்பினார், அவர். அது மட்டுமே அவர் இலட்சியமாக, தீர்மான முடிவாக இருந்துவிடவில்லை. அதுதான் அவரது இலட்சியத்தின் ஆரம்பம்.

"அந்நிய ஆட்சியினின்று விடுதலை பெறுவதுடன் நாட்டு மக்கள், அவர்களைப் பிணைத்து இறுக்கும் தளைகள் அத்தனையையும் தகர்த்து எறிந்து உண்மைச் சுதந்திர புருஷர்களாக விளங்க வேண்டும் என விரும்பினார் அவர். உலக மக்களின் முன்னிலையிலே உன்னத உயர்வு பெற்றுத் திகழ வேண்டும் என அவாவினார். புதிய விழிப்புப் பெற்று புதுமை ஆண்களாகவும், பெண்களாகவும் நாட்டு மக்கள் நடமாடும் காட்சியைக் காண ஆசைப்பட்டார்!

"மக்களைப் பீதிப் போர்வை, முக்காடாகக் கவிழ்ந்து மறைத்திருப்பது அவர் பார்வையில் பட்டது. அச்சம் அணி செய்யும் முகத்தினராகக் கண்டார் மக்களை. தொட்டதற்கெல்லாம்—எடுத்ததற்கெல்லாம்—நாட்டு மக்கள் பயந்து செத்தனர். அந்நியனையும் அவனது துப்பாக்கித் தோட்டாக்களையும் கண்டு மட்டும் அஞ்சி ஒடுங்கி நடக்கவில்லை அவர்கள். சக மனிதர் சிலர் முணுமுணுக்கும் மந்திரங்கள், சுலோகங்கள் முன்பும் பம்மி மரியாதை செய்து வாழ்ந்தார்கள். பிசாசுகள், பூதங்கள் என்று அவர்களை எவ்வளவோ குலை நடுங்கச் செய்தன!

## சுதந்திரப் போராட்டம்

"இத்தகைய மனிதர்கள் சுதந்திரக் கொடி உயர்த்தும் மக்களாகத் திகழ முடியாது ; இத்தகையோர் வாழும் நாடு தலைநிமிர்ந்து, உலகத்தின் இதர நாடுகளுக்குச் சரிசமமாகப் பார்வை எறிய முடியாது; அந்நிய ஆதிக்கத்தை அகற்றிய பின்பும் கூட இது சாத்தியம் இல்லை என்பதை அவர் உணர்ந்தார். அதனால் நாட்டு மக்கள், முதலில் அச்சத்தை அடித்துத் துரத்த வேண்டும் என அவாவினார். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினார். மக்கள் மனதிலே நம்பிக்கையையும், தைரியத்தையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் சக்தியைப் புலப்படுத்தினார். அந்த மகத்தான பலம் எவ்வாறு விரயமாகிறது, மக்களின் தூங்குமூஞ்சித் தன்மை, அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனோபாவம், ஜாதி வெறி காரணமாக எவ்வளவு வியர்த்தம் விளைகிறது என்பதை விளக்கினார்.

"சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் உலவும் தீமைகளை வேரோடு கெல்லி எறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கரை கொண்ட மக்கள் கவிஞரைத் தவிர யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது.



## பாரதியாரின் கையெழுத்து



"பாரதியாருக்குத் தெரியும், மக்கள் சக்தி ஆட்சி செய்யத் தொடங்கும் யுகம் இந்த யுகம் என்பது. மக்களே மன்னர்களாக மாறும் காலம் இது என்பதை அவர் அறிவார். எனவே அத்தகைய சுதந்திரத்திற்காகப் போராடும்படி பொது மக்களை அவர் தூண்டினார்.

"கடவுளர்களுக்குப் பாமாலைப் பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடுவதில்லை. பாரதி, மண் ஆளும் மன்னர்களுக்கு விண்ணப்பப் பாக்கள் எழுதி விடுக்கவில்லை.

## முடியாத பணி முற்றுப்பெறும்!

"**மக்கள் கவிஞனை எதிர்நோக்கி நிற்கும் பிரச்னைகள் மகத்தானவை. புதிய உண்மைகளை மக்கள் உணரும்படிச் செய்வது-புதுப் பாதையிலே அவர்கள் நடைபோடத் தூண்டுவது-புதிய நோக்கிலே விளைவுகளை எடைபோட அவர்கள் முயலும்படி செய்வது-எல்லாம் மக்கள் கவிஞனின் வேலை!**

"ஜோதிடனது பிணைப்பிலிருந்து விடுவித்து நாட்டு மக்களை வான சாஸ்திரி பக்கம் திருப்புவது, இரசவாதியை அவர்கள் மத்தியிலிருந்து துரத்திவிட்டு இரசாயனவாதியைக் கொணர்ந்து நிறுத்துவது எல்லாம் அவன் வேலை!

"மதகுருவை விலக்கிவிட்டு, அறிவுக் கண் திறக்க உதவும் ஆசானை நாடச் செய்வதும் அவன் வேலைதான்!

"செப்பிடு வித்தைகள், மந்திர தந்திரங்கள் மூலம் வியாதி ஓட்டுபவனை ஓட்டிவிட்டு, மருந்துகள் மூலம் குணப்படுத்தும் மருத்துவனுக்கு வழி வகுத்துக் கொடுக்க வேண்டியவனும் மக்கள் கவிஞனே!

"மூடநம்பிக்கைகள் நிர்மூலமாக்கப்பட வேண்டும், விஞ்ஞானம் விருத்தி பெறுவதற்காக. சுருக்கமாகச் சொல்லப்போனால், ஒரு புரட்சிக்காரனாக மக்களின் கவிஞன் இயங்க வேண்டும். கொடுங்கோலனை வாழ்விக்க வந்த வானகத் தூதன் என்றும், வாழ்விக்க வந்தவனை கொடுங்கோலன் எனவும் மக்கள் சுலபமாக நம்பிவிடுவார்களாதலால், மக்கள் கவிஞனின் வேலைச் சிரமம் மிக்கதாகிறது!

"பாரதியார் பயமின்றிப் போராடினார்! அவர் நடத்திய போராட்டம் முடியவில்லை! அதற்குள்ளாகவே அவர் மறைந்துவிட்டார். அவர் சிந்தனைப் படைபலத்தை நமக்கு உதவியுள்ளார். அதனைத் துணைகொண்டு போராட்டத்தை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும்.

"மக்கள் கவிஞருக்கு நாம் வழங்கும் மகத்தான மரியாதை அவர் நடத்திய போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதுதான். உக்கிரகமாக-உன்னதமான போக்கில்-மக்கள் சுதந்திரத்திற்கான போராட்டம் நடைபெற வேண்டும். வேண்டிய வீரர்கள் இருக்கிறார்கள்! வெற்றி காணுவது உறுதி!"

**[பேரறிஞர் அண்ணா அவர்கள் வானொலி மூலம் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவின் தமிழாக்கம் இது.]**

**(நன்றி : செல்வ நிலையம், சென்னை-7.
அனைத்து இந்திய வானொலி, சென்னை]**

**பாரதியாரால் பூணூல்
அணிவிக்கப் பெற்ற
அரிசனச் சீடர் கனகலிங்கம்.**





# கைத்தறி பற்றி அறிஞர் அண்ணா



"நூல்—எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்! நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான்! பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவதுதான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்காத வாய்ப்பும், வசதியும் விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும்கூட நேர்த்தியான—மெச்சத் தக்க—துணிகளைக் கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்.

"ஆலைத் துணியில்தான் கண்ணைக் கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால் இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.

"நெசவாளர்களது எதிர்காலத்தைக் கவனித்து—வேறு தொழிலில் அமர்த்த வேண்டும் என்பது கவனிக்கப்படத்தக்க பிரச்சினை என்றாலும்—

"பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வரும் நேர்த்தியான கைத்திறமையை—வெளிச் சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித் தந்த கைத் திறமையை—விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத்தக்க கருத்தல்ல.

"மக்களின் தேவைகளை அறிந்து ஆடைத் தினுசுகளை அடிக்கடி மாற்ற வேண்டும் என்று சில பெரியவர்கள் கூறுகிறார்கள்.

"அப்படிப்பட்டவர்கள் ஆண்டுக்கொரு முறை கண்காட்சியில் மட்டும் ஆடைகளைக் காண்பவர்களாக இருப்பார்கள். ஏனென்றால், கைத்தறியாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை சேலைத் தினுசுகளை மாற்றி வருகிறார்கள்.

"ஒரு சினிமா வெற்றிகரமாக ஓடிவிட்டால் போதும், அடுத்த வாரமே அந்தப் பெயரில் ஒரு அழகான சேலைத் தினுசு தயாரித்து விடுவார்கள் கைத்தறியாளர்கள்.

"இத்தனைக்கும் அந்தச் சினிமாவை நான்கு முறை பார்க்கும் வசதி அந்த நெசவாளர்களுக்கு இல்லை. ஒரே முறைதான் பார்க்கிறார். அந்தப் படத்தில் வரும் கதாநாயகி அணிந்திருக்கும் சேலையைப் போல், தயாரிக்க நினைக்கிறார். அந்த நினைப்பு நம்பிக்கையாய் மாறி, உள்ளத்திலிருந்து கிளம்பி, விரல் நுனிக்கு வருகிறது. பிறகு தறியிலமர்ந்து அழகான சேலையைத் தயாரிக்கிறார்.

"கோடிக்கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளிநாட்டின் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

"நெசவுத் தொழில் இதுநாள் நசித்துப் போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட—உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள்தான்! ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள்தான் மறவாமல் கைத்தறியாடைகளை வாங்குபவர்கள்! ஆகவே, கைத்தறியாளர்களைக் காப்பாற்றும் தாய்க் குலத்திற்கு எனது மரியாதை கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆடவர்களைப் போல் தாய்மார்களும் ஆமதாபாத்தையும், கட்டாவையும் நம்பத் தொடங்கினார்கள் என்றால் நெசவாளர்கள் வண்ணாரப்பேட்டையில் — தண்டையார்ப்பேட்டையில் —வீதியோரங்களிலோ — குடிசைகளிலோ—குடியேற வேண்டிய வேதனையான நிலை ஏற்பட்டிருக்கும்!"



# உள்ளங்கவர் கள்வன்!

—நாவலர் இரா. நெடுஞ்செழியன்



உள்ளங்கவர் கள்வன்! ஆம்! என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன்! அனைவர் உள்ளத்தையுங் கவர்ந்த கள்வன்! ஆனால் குற்றமற்ற கள்வன்!

கள்வன் கொள்ளை கொள்பவன்தான் ; ஆனால் செய்யும் களவுக்காகக் குற்றக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்த முடியவில்லை. காரணம் குற்றம் அவன் மேலிருப்பதில்லை. பறி கொடுப்பது உண்மைதான்; ஆனால் ஏமாந்து எவருங் கொடுப்பதில்லை. ஆகவே பறி கொடுத்தோர் வழக்குத் தொடுக்க இயலுவதில்லை.

அத்தகைய கள்வனொருவனை நான் என் வாழ்நாளில் கண்டேன்—காதல் கொண்டேன்—கட்டித் தழுவினேன்—அண்ணாவென்று கண்டேன்—தம்பியானேன்!

குள்ள உருவம்; குறும்புப் பார்வை; விரிந்த நெற்றி; பரந்த மார்பு; கறைபடிந்த பற்கள்; கவலையில்லாத தோற்றம்; நறுக்கப்பட்ட மீசை; நகை தவழும் முகம்; சீவாத தலை; சிறிதளவு வெளிவந்த தொப்பை; செருப்பில்லாத கால்; சரிப் பொருத்தமில்லாத உடைகள்; இடுப்பில் பொடிமட்டை, கையில் வெற்றிலைப் பாக்கு பொட்டலம் இந்தத் தோற்றத்தோடு அதோ காட்சியளித்து நிற்கிறாரே அவர்தான் அண்ணாத் துரை! அறிஞர் அண்ணாத்துரை!! அண்ணா!!!

அறிவாளி—படிப்பாளி—பேச்சாளர் —எழுத்தாளர்—பத்திரிகாசிரியர்—நடிகர் —நாடகாசிரியர்—தலைவர்—தளபதி என்ற முறையில் அண்ணாத்துரையை நாட்டு மக்கள் அறிவார்கள். ஆனால் 'அண்ணா'வைப் பலரும் அறியமாட்டார்கள்; அறிந்ததில்லை; அறிய முடிவதில்லை.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்பமொழிவதாம் சொல்" என்று வள்ளுவர் வகுத்துக் கூறிய இலக்கணத்திற்கு இலக்கியம் உண்டாக்கியவர் அறிஞர் அண்ணாத்துரை தான்!

சிறந்த பேச்சாளர் பட்டியலின் முன்னணியில், டெமாஸ்தெனிஸைக் கொண்டு வந்து நிறுத்துகிறது கிரேக்க நாடு ; சிசரோவைக் கொண்டு வந்து நிறுத்துகிறது இத்தாலி ; எட்மண்ட் பர்க்கைக் கொண்டு வந்து வைக்கிறது இங்கிலாந்து; ராபர்ட் கிரீன் இங்கர்சாலைக் கொண்டு வந்து நிலைநிறுத்துகிறது அமெரிக்கா ; சிறந்த பேச்சாளர் வரிசையின் முதலிடத்தில் தமிழகம் நிலைநிறுத்துவதற்குரிய ஒரே ஒருவர் அறிஞர் அண்ணாதான்.

**ஏனைய எழுத்தாளரின் எழுத்தில் தமிழைக் காண்கிறோம்; அறிஞர் அண்ணாவின் எழுத்தில் தமிழரையே காண்கிறோம்!**

அவருடைய உரையாடலிலும், சொற்பொழிவிலும், எழுத்திலும் காணப்படும் ஒரு பெரும் பண்பு, 'தெளிவு'. அவரிடத்தில் அவசரச் சிந்தனை கிடையாது. எந்த உருவத்தில் வந்தாலும் ஆழ்ந்த கருத்துக்களே அதில் காணப்படும். அவருடைய கண் காதுகளில் பட்டுத் தெறிக்கும் எந்த நிகழ்ச்சியும், பசு மரத்தடித்த ஆணி போல் அவரது உள்ளத்தில் பதிந்துவிடும். பதியும் அவை ஊற்றுக்கண் போல் உன்னுந்தோறும் ஊற்றெடுக்கும். முன்பின் கருத்துக்களை ஒத்திட்டுப் பார்க்கும் ஆற்றலும், அவற்றைத் தெளிவுபடுத்திக் காட்டும் முறையும் அண்ணாவுக்கு அமைந்திருப்பதுபோல் வேறு எந்த எழுத்தாளருக்கும், பேச்சாளருக்கும் அமைந்ததில்லை. அவருடைய சொற்பொழிவு கலகலவென்று ஓடும் சிற்றருவியின் பாங்கு போலவும், சொற்கள் நாணயச் சாலையில் அடிக்கப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாய் விழும் நாணயங்கள் போலவும், ஒன்றோடு ஒன்று மோதுதலின்றி வெளிவரும் தன்மையனவாகவும் காணப்படும்.

அண்ணாவின் உரையாடலே தனிச் சிறப்பு வாய்ந்தது. எவ்வளவு நேரமானாலும், ஏன், எவ்வளவு நாட்களானாலும் தெவிட்டாதத் தீங்கனி போன்றது. உரையாடலில் கேலி, கிண்டல், நகைச்சுவை ஆகிய ஆயுதங்களை அவர் வீசுமளவுக்கு அழகாக வீசுபவர் வேறு யாரையும் யான் கண்டதில்லை!

அவர் எழுதுவது பெரும்பாலும் இரவு நேரங்களில்தான். எழுத உட்கார்ந்துவிட்டால் காலை ஐந்து அல்லது ஆறு மணி வரையிலும் எழுதுவார். ஒரு அடித்தல், திருத்தமில்லாமல் எழுதி கீழே விடும் காகிதங்கள், ஒன்றன் பின் ஒன்றாக வந்து குவிந்து கொண்டே இருக்கும். சளைக்காமல் ஆயிரக்கணக்கான பக்கங்களை எழுதித் தள்ளும் அருந்திறனுடையவர்.

**'எதையும் தாங்க இந்த இதயம் உண்டு'** என்ற குறிக்கோளோடு, எதையும் வரவேற்று நிற்கும் பண்புடையவர். புகழ்ச்சிச் சொற்கள் அவர் மேல் வீசப்படும் போதும் அதிகமாக மகிழ்ச்சியடைந்துவிடுவது கிடையாது ; வசைச் சொற்கள் வீசப்படும் போதும் ஆத்திரமடைவது கிடையாது. இரண்டிற்கும் பதில் ஒரு புன்னகைதான்! வஞ்சம், சூழ்ச்சி, பொறாமை, பேராசை, தன்னலம், தற்பெருமை, யதேச்சாதிகாரம் முதலிய கீழ்த்தர பண்புகள் அவரிடம் எப்பொழுதும் இருந்தது இல்லை.

அரசியல் கட்சியாகிய திராவிடக் கழகத்தில் தன் பங்கைப் பற்றி அவரே தெரிவிக்கிறார். கேளுங்கள் : ''கழகம் எடுத்துக் கொண்ட, எந்த முக்கியமான திட்டத்துக்கும், வேலை முறைக்கும், கட்டுப்படாமலிருந்தவன் அல்ல; கழகம் நெருக்கடியான கட்டத்தில் இருந்தபோதெல்லாம், விட்டுவிட்டு ஓடினவனல்ல; பட்டம் பதவிகளை வைத்துக் கொண்டு விட்டுவிட முடியாது என்று கூறினவனல்ல ; தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று கட்சி தீர்மானித்த பிறகு, மீறித் தேர்தலுக்கு நின்றவனல்ல ; சிறை புக வேண்டிய திட்டம் வந்த போது, ஒளிந்து கொண்டவனுமல்ல; அடிக்கடி, கட்சி பலவற்றைத் தேடிக்கொண்டவனுமல்ல; கட்சிக்குள்ளாகவே, சேலம் மாகாண மாநாட்டின்போது, செல்வவான்களின் மயக்க மொழியில் வீழ்ந்தவனல்ல—இதுவரை வழுக்கி விழுந்ததில்லை—திட்டங்களைக் கண்டித்தோ, மாற்ற வேண்டுமென்று கூறினதோ, கட்டுக்கடங்க மறுத்ததோ இல்லை—ஆனால் இந்த ஆகஸ்ட் 15-ஆம் தேதி பற்றிய பிரச்சினை, உண்மையாகவே, என்போல் எண்ணற்றவர்கட்கு மனவேதனை தரக்கூடிய விதத்திலே, தவறான முறையிலே, திருப்பப்பட்டிருக்கிறது. . . .இது கட்சிக் கட்டுப்பாட்டையும், தலைவரின் அறிக்கையையும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு, என் மீது நடவடிக்கை எடுக்க, முன்வருவதானாலும், என் வாழ்நாளில் **''பிரிட்டிஷ் ஆட்சி கூடாது''** என்ற கொள்கையைக் கொண்டவனே நான், என்பதை மக்களுக்குக் கூற, எனக்கிருக்கும் ஒரே நாளான, கடைசிநாளான ஆகஸ்ட் 15-ஆம் தேதியின் முக்கியத்துவத்துக்காக வேண்டி, கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறேன். **தலைவரும், கட்சியும் என் போக்கு தவறு என்று கருதி, என்னைக் கட்சியை விட்டு நீக்கினாலும், நான், சமூகச் சீர்திருத்தம், பொருளாதாரச் சமத்துவம் என்னும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்து வருவேன்.''**

அண்ணாவின் போக்கு கண்டு வெறுப்புற்று சிங்கமெனச் சீறுவோரும், புலியெனப் பாய்வோரும் அண்ணாவின் முன் வந்ததும், பூனையென அடங்கிப் போவதை பல முறை பார்த்திருக்கிறேன்.

எனினும் அவரே கூறுவதுபோல் அவர் **பெரியாரின் பரம்பரை.** பெரியாரின் உள்ளத்தில் இருப்பதை எப்படிப் பிறர் அறிய முடியாதோ அவ்வாறே, அண்ணாவின் உள்ளத்தில் இருப்பதையும் அறிய முடிவதில்லை. பிறர் உள்ளத்தைக் கவர்வது போலவே என் உள்ளத்தையும், அண்ணா கவர்ந்துதான் வாழ்ந்தார். அவர் கள்வன்தான்! ஆனால் குற்றமற்றக் கள்வன்!

**'' இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம் ; அதிலே நியாயமிருக்கிறது !.... கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம் ; அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால் !.... ஆனால் 'சோறு போடு' என்று அன்னியரிடம் கேட்பது ?"**

**—அண்ணா**



## சட்டம்

"சட்டம் ஒரு இருட்டறை; அதிலே வக்கீலின் வாதம் ஒரு விளக்கு! அந்த விளக்கு ஏழைகளுக்கு எட்டாது!"

—அண்ணா



"சொந்த வாழ்க்கையிலே அக்கறை காட்டுவது ஒரு சபலம். அதனை நீக்காதவர்களால் பொது வாழ்க்கை என்னும் போர்க்களத்திலே உலவ முடியாது!"

—அண்ணா

## வீட்டுக்கொரு புத்தகசாலை வேண்டும்!

''விஞ்ஞான வித்தகர்கள் மக்கள் வாழ்க்கையை வளமாக்க பல அற்புதங்களைக் கண்டு பிடிப்பதை மக்கள் அறியமாட்டார்கள். எதிர்கால உலகம், விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்திச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தக சாலையை அமைக்க வேண்டும்.''

—அண்ணா



"அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற முன்வருபவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்கிறது. மதிப்பளிப்பதில்லை - மாச்சரியத்தை வாரி வீசுகின்றது. துணை புரிவதில்லை; தொல்லை தருகிறது. எனினும் அந்த ஒரு சிலரால்தான் நாடு முன்னேறுகிறது.

—அண்ணா

"வைரம் ஜொலிக்க வேண்டுமானால், சாணை பிடிக்கத்தான் வேண்டும். தங்கம் பிரகாசிக்க வேண்டுமானால், தணலில் காய்ச்சத்தான் வேண்டும். ஆம், அதைப் போல, நல்வாழ்வு பெற வேண்டுமானால் நாம் பகுத்தறிவுப் பாதையில் செல்லத்தான் வேண்டும்."

—அண்ணா



"மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கும் மணம் உண்டு - ரசிக்கத்தான் செய்வோம். அது போலத்தான் பேசுபவரின் கருத்து பயன் தருமாயின், கேட்போரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் கேட்பவர்கள் ஏற்றுக் கொள்வது உறுதி."

—அண்ணா

"நமக்கு இன்னலும், இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீணாகாது!"

—அண்ணா



## நமது தலையாய கடமை!

''போர் வீரர்கள் செல்வதற்கு முன், பாதை போடுவோர் கரடு முரடான பாதைகளைச் செப்பனிட்டு முன்னே செல்வது போல, நம்முடைய எதிர்காலச் சந்ததிகளுக்கு நாம், முள்ளும் கல்லும் புதரும் போல நம் சமுதாயத்தில் அடைந்துள்ள ஊழல்களையும், ஆபாசங்களையும், அறவே ஒழித்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொடுத்து விட்டுச் செல்வது நம்முடைய தலையாய கடமைகளில் ஒன்றாகும்.''

—அண்ணா

''காலம் மாறக் கூடியது; மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.''

—அண்ணா



ஓமர்—...

அமெரிக்காவிலிருந்து தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் தமது கைப்படத் திரு ராஜாஜிக்கு எழுதிய அன்பொழுகும் ஆங்கிலக் கடிதத்தையும் அதன் தமிழாக்கத்தையும் நம் வாசகர் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் வழங்குகிறோம்.

நியூயார்க்
11-10-1968.

மதிப்பிற்குரிய ராஜாஜி,

மருத்துவ மனையிலிருந்து வெளி வந்த அன்றே தங்களுக்கு எழுத விரும்பினேன். ஆனால் அப்போது மிக்க பலவீனமாயிருந்தேன். அதோடு, டாக்டர் மில்லர்மேற்கொண்டு தெரிவிக்கும் அபிப்பிராயத்துக்காகவும் காத்திருந்தேன். 10-ந் தேதி டாக்டர் மில்லர் என்னை மீண்டும் பரிசோதித்து பார்த்துப் பூரண திருப்தி தெரிவித்தார். ஆயினும் நான் இம் மாத இறுதி வரை இங்கு நீடித்துத் தங்க வேண்டும் என்று கூறினார். மீண்டும் இம் மாதம் 14-ந் தேதி நான் டாக்டர் மில்லரைச் சந்திக்கிறேன். தங்களது கடிதத்தில் தாங்கள் பேரன்புடன் குறிப்பிட்டது போல், புதிய சாப்பாட்டு முறைக்கு நான் எந்த அளவுக்கு என்னைச் சரிப்படுத்திக் கொள்ளப் போகிறேன் என்பதே பிரச்சனை. இதுவரையில் நான் முழுச் சாப்பாடு உட்கொள்ளும் நிலையில் இல்லை. இருப்பினும் அதனால் நான் அயர்வாகவோ, பலவீனமாகவோ உணரவில்லை. தங்களது நல்லெண்ணம் எனக்குத் தலை சிறந்த ஔடதமாக வேலை செய்தது. தங்களிடமிருந்து வந்த அன்பு மொழிகளை நான் என்றென்றும் நினைவில் வைத்

New York
11/10/68

Revered Rajaji,

I wanted to write to you the day I was discharged from the Hospital — but I was too weak. Moreover I was awaiting Dr. Miller's further opinion. Dr. Miller examined me again on the 10th and expressed complete satisfaction. But he also asked me to prolong my stay here till the end of the month. I am meeting Dr. Miller again on the 14th of this month. As you have so kindly referred in your letter, the problem now is how best to acclimatise myself to the new food policy. As yet I am not in a position to take a full meal! But on that account I do not feel fatigue or weakness. Your goodwishes acted as the best tonic to me and I shall ever remember the kind words from you. I do not know how to express my heartfelt thanks to G.P. our

திருப்பேன். இங்குள்ள நமது தூதர் ஜி. பி.-க்கு எனது இதய பூர்வமான நன்றிகளை எப்படி வெளியிட்டுச் சொல்வது என்றே தெரியவில்லை. எனக்கு ஒரு சகோதரராக அவர் இருக்கிறார். அவரைவிட அன்பான ஓர் ஆன்மாவை, பண்பான ஓர் ஆன்மாவை நான் கண்டதில்லை. மூக்குப்பொடி போடும் விஷயமாகத் தங்களது அறிவுரைப் படி நடக்க எல்லா முயற்சியும் எடுத்திருக்கிறேன். சிறிது காலத்திலேயே இம் முயற்சியில் வெற்றி காண முடியும் என நம்புகிறேன். நம் நாட்டு அரசியல் நிலை பற்றி அவ்வப்போது நான் கவலை கொண்டாலும், என் சகாக்களுக்கு வழி காட்டவும், மக்களை முன்னின்று நடத்திச் செல்லவும் தாங்கள் அங்கு இருக்கிறீர்கள் என்பதிலிருந்து நம்பிக்கையும், உற்சாகமும் பெறுகிறேன். திரு சதாசிவத்துக்கும் அவர் தம் மனைவிக்கும் எனது வணக்கத்தைத் தயவு செய்து தெரிவிக்கவும். சென்ற மாதத்து 'ஸ்வராஜ்யா' இதழ்களை இங்கு அனுப்பி வைத்தால், மிக்க மகிழ்ச்சி அடைவேன். காந்தி ஜயந்தி பற்றிய தங்கள் கட்டுரையைக் 'கல்கி'யில் படித்தேன். அதில் பொதிந்திருந்த தங்களது ஆழ்ந்த தாபத்தை உணர்ந்தேன். சில ஆண்டுகளுக்கு முன் சென்னை மாநகராட்சியின் வரவேற்பில் தாங்கள் நிகழ்த்திய உரை என் நினைவுக்கு வந்தது. ஆயினும், தாங்கள் பொறுமையுடன், விதைத்துக் கொண்டிருக்கும் சிந்தனைகள், களர் நிலத்தில் விழுந்து விடவில்லை என்று திண்ணமாக நம்புகிறேன். எதிர் காலத்தில் பசும் பயிர்கள் எழும்புமென நம்புகிறேன்.

அன்பு வணக்கங்கள்.

நன்றி : கல்கி)

Ambassador here. He is unto me a brother and I have never met a kinder soul or gentler spirit. I am making all efforts to act up to your advice — the snuff habit. I hope to succeed in that effort ere long. Though from time to time I feel the anxiety about the political situation in our Country, I get confidence and encouragement from the fact that you are there to guide my Colleagues and lead our people. Please convey my regards to Mr & Mrs. Sadasivam. I would be happy indeed if the issues of 'Swarajya' of last month are sent here. I read your note about Gandhi Jayanti in Kalki and felt the poignant feelings couched therein and was reminded about your address some years ago in the Madras Corporation reception. But I am quite confident that the thoughts you are so patiently sowing has not fallen on barren land and I am hopeful of the greens to come. With kind regards,

I remain
Yours sincerely
C.N. Annadurai

# குடிநீருக்காகத் தினமும் ஒரு நீண்ட நடை தேவைதானு?



இப்பெண்மணி குடிநீருக்காகத் தினமும் 2 கி.மீ. தூரம் செல்ல நேரிடுகிறது. ஒரே தினத்தில் பல முறைகள் செல்கிருள். மழையிலும் கடும் வெயிலிலும் இதே தொல்லை.

இதைத் தவிர்க்க ஏதேனும் செய்யப்படுகிறதா?

ஆம். தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய், கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்குச் செலவழிக்கப்படுகிறது. தமிழகம் முழுமையிலும் மொத்தம் 4,000 கிராமங்கள் இந்த வசதியினைப் பெறும்.

தமிழகத்தில் உள்ளவர்கள் அனைவரும் அல்லல்களிலிருந்து விடுதலை பெறும் வரையில் தமிழக அரசின் இந்தப் பணி தொடரும். மக்களுக்குக் குடிநீர் வழங்கும் இந்த மகத்தான பணி மும்முரமாக நடைபெறும்.

குலுக்கல் தேதி:
22. 9. '77

சீட்டு ஒன்றின் விலை:
ரூ. 1

**அதிக நபர்களுக்கு அதிகப் பரிசுகள்**

2 முதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 50,000
3 இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10,000
5 மூன்ருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5,000

மேலும் பல பரிசுகள் — கூடுதல் ஆறுதல் பரிசுகள் உட்பட.

மூன்று வரிசைகள். ஒவ்வொரு வரிசைக்கும் ரூ. 3,90,000 மதிப்புள்ள 2,655 பரிசுகள்.




வெளியிட்டோர்:
இயக்குநர்,
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
சென்னை 600 002

**தமிழக அரசு பரிசுச் சீட்டு வாங்குங்கள் — மக்களின் நல்வாழ்வுக்கு உதவுங்கள்**


# அண்ணாவின் நாட்டுப்பற்று



பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுப் பற்று அற்றவர் என்றும், பிரிவினைவாதி என்றும் கண்மூடித் தனமாய் பலர் எண்ணி வந்தார்கள். காலம் அவர்களின் கண்களைத் திறந்தது!

அண்ணா அவர்கள் நாட்டுப் பற்று மிக்கவர் என்பதும் பிரிவினைவாதி அல்ல என்பதும் பின் கண்ட நிகழ்ச்சிகளிலிருந்து தெளிவாகியது.

சேலத்தில் 1944-ல் நடைபெற்ற மாநாட்டில்தான் அண்ணா நீதிக்கட்சிக்குத் திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்து வெற்றி பெற்ருர்.

அண்ணா அந்த மாநாட்டில் கொண்டுவந்த தீர்மானங்களில் முதல் தீர்மானமாவது: "வெள்ளையன் ஆட்சியில் தரப்பட்ட 'சர்.' 'ராவ்பகதூர்', 'திவான்பகதூர்' 'சாகேப்' போன்ற கௌரவப் பட்டங்கள் பெற்றவர்கள் அந்தப் பட்டங்களைத் துறக்க வேண்டும். மீண்டும் அவர்களோ, மற்றவர்களோ அத்தகைய பட்டங்களையும், விருதுகளையும் வெள்ளையர்களிடமிருந்து பெறக் கூடாது."

அண்ணா தம்முடைய தீர்மானத்தில் 'வெள்ளையர்' என்றுகூடக் குறிப்பிடவில்லை. 'வெள்ளையன்' என்றே குறிப்பிட்டுள்ளார்.

இதிலிருந்து நம்மை, அடிமைப் படுத்திக் கொடுமைகள் பல செய்த வெள்ளையர்கள் மீது அண்ணாவிற்கு இருந்த வெறுப்பு அளவு கடந்தது என்பது தெரிகிறதல்லவா?

அதே சமயம் அண்ணா இந்த நாடு விடுதலை அடைய வேண்டும் என்ற எண்ணம் நிறைந்தவர் என்பதும் தெரிகிறதல்லவா?

அந்த எண்ணம் இல்லாவிட்டால் வெள்ளையரை அண்ணா ஏன் வெறுக்கப் போகிருர்? **

அண்ணாவின் நாட்டுப்பற்று இன்னும் ஒரு சமயம் குன்றின் மேல் ஏற்றப்பட்ட தீபம்போலப் பிரகாசிக்கத் தொடங்கியது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றது.

நாடு விடுதலை அடைவது கண்டு அண்ணா மகிழ்ச்சியடைந்தார்.

இந்திய நாடு விடுதலை அடைவதை மகிழ்ச்சிப் பெருநாளாகக் கொண்டாட வேண்டும் என்று அன்று ஆட்சியில் இருந்தவர்கள் அறிவித்தார்கள்.

பெரியார் நம் நாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கை உடையவராக இருந்தார்.

பெரியார் சுதந்திர நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று அறிவித்தார்.

அண்ணா பெரியாரின் அறிவிப்பைக் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தார். வெள்ளையன் இந்த நாட்டை அடிமைப்படுத்தியவன் அவனால் நமது நாடு நீண்ட காலமாகப் பல துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறது.

கொடுமைகள் பல செய்த வெள்ளையன் நம் நாட்டை விட்டு போகும் நாள் நமக்கு எப்படித் துக்க நாளாகும் என்று எண்ணினார்.

இதனால், அண்ணா பெரும் சங்கடத்திற்கு ஆளானார். பெரும் தலைவர், தன்னுடைய வழிகாட்டி, தந்தையைப் போன்றவர், மதிப்பிற்கும் அன்பிற்கும் உரியவர் அப்படிப்பட்ட பெரியார் சுதந்திர நாளை துக்க நாளாகக் கொண்டாட வேண்டும் என்று சொல்கிருரே, இப்பொழுது நம் கருத்தைச் சொன்னால் தலைவர் மனம் வருந்துமே என்று எண்ணினார்.

ஆயினும் அண்ணாவின் நாட்டுப் பற்றுத்தான் வெற்றி பெற்றது!

ஆகஸ்டு 15-ஆம் நாள் துக்க நாள் அல்ல. மகிழ்ச்சிக்கு உரிய நாளே என்பதை விளக்கி அறிக்கை ஒன்றை அண்ணா வெளியிட்டார்.

அந்த அறிக்கை பெரும் புயலையே கிளப்பியது என்று சொல்லலாம்.

அந்த அறிக்கையிலே அண்ணாவின் நாட்டுப்பற்று சுடர் விட்டுப் பிரகாசித்தது.

அந்த அறிக்கையில், 1939-ம் ஆண்டு முதலே அந்நியர் ஆட்சி கூடாது என்று கழகம் எதிர்த்து வந்திருக்கிறது என்பதை அண்ணா குறிப்பிட்டார்.

"நாட்டு விடுதலைக்காக காங்கிரசு கட்சிக்காரர்கள் செய்த தியாகங்களை நாம் பாராட்ட வேண்டும்" என்றும் அண்ணா குறிப்பிட்டார்.

யாருக்கு வரும் இந்த பரந்த மனப்பான்மை. மற்ற கட்சிக்

காரர்கள் செய்த நன்மையை, அண்ணவைப் போல் வேறு யார் இப்படி மனம் திறந்து ஒப்புக் கொள்வார்கள்.

அண்ணு அரசியலில் சேர்ந்த காலம் முதல் கடைசி வரை நாட்டுப்பற்று மிகுந்தவராகவே விளங்கி வந்திருக்கிருர் என்பது தெள்ளத் தெளிந்த உண்மையாகும்.

அண்ணுவின் இந்த அறிக்கைக்குக் பிறகு அவர் வெள்ளையரின் ஆட்சியை ஆதரிப்பவர் என்று கூறிவந்தவர்கள் எல்லாம் வாயடைத்துப் போனுர்கள்.

பெரியாரை எதிர்த்து அண்ணு அறிக்கை வெளியிட்டதால், கட்சியிலிருந்து அவருக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

ஆனுலும் அதைக் கண்டு மனம் தளரவில்லை. கடமையைச் செய்த மன நிறைவோடு அண்ணு சில காலம் கட்சியிலிருந்து ஒதுங்கியிருந்தார்.

அண்ணுவின் நாட்டுப்பற்று மற்ருெரு முறையும் இந்நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரிந்தது !

சீன, இந்தியா மீது பகைமை கொண்டு போர் தொடுத்தது. அதைக் கண்டு பாராத மக்கள் மனம் கொதித்தார்கள். அதை எதிர்த்துத் தலைவர்கள் அணி திரட்டினுர்கள். வேற்றுமை அனைத்தையும் மறந்து மக்கள் ஒன்று பட்டார்கள்; சீனுவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினுர்கள். இப்போர் காரணமாக அண்ணுவும், மற்றவர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்ருர்கள் (அப்போது, விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக வேலூர் சிறையில் அடைக்கப் பெற்றிருந்தார்).

விடுதலையடைந்த அண்ணு வாளாயிருக்கவில்லை; சீனப் படையெடுப்பைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டார்; அயலாரை முறியடிக்க அரசாங்கத்தோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கழகத் தோழர்களுக்குக் கட்டளையிட்டார்; போரில் ஈடுபட்டிருந்த அரசுக்கு ஆதரவு அளிக்கும்படியும், பொருளுதவி புரியும்படியும் மக்களுக்கு வேண்டுகோள்களும் விடுத்தார். பகைவரை முறியடிக்கப் பாரத அரசுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு, அண்ணு வானெலியில் ஆங்கிலத்திலும், அருந்தமிழிலும் நிகழ்த்திய பேச்சுக்கள் உணர்ச்சியும் உயிரோட்டமும் நிறைந்தவையாகும்.

பேசியதோடு அவர் நின்றுவிடவில்லை. போர் நிதியும் திரட்டிக் கொடுத்தார். பகைவரின் படையெடுப்பை முறியடிக்கக் கழகம் என்றும் அரசுடன் ஒத்துழைக்கும் என்னும் உறுதிமொழியையும் அண்ணு அளித்தார். அவருடைய நாட்டுப்பற்றை என்னென்று புகழ்வது!

சீனப்படையெடுப்புக்குப் பிறகு நாட்டின் ஒற்றுமையைக் காக்க விரும்பிய அண்ணு, ''திராவிட நாடு பெறும் பிரிவினைக் கொள்கையைத் தி. மு. கழகம் கைவிட்டுவிட்டது'' என்று அறிவித்தார். அதை அறிந்த மக்கள் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொண்டார்கள்!.

[வானதி பதிப்பகம் வெளியிட்ட 'அறிஞர் அண்ணுதுரை' என்ற நூலில் இருந்தும், பாரி நிலையம் வெளியிட்ட ''அறிஞர் அண்ணு'' என்ற நூலில் இருந்தும் தொகுக்கப் பட்டது.]

நன்றி :

வானதி பதிப்பகம்,
தியாகராய நகர், சென்னை—17.

பாரி நிலையம்,
59, பிராட்வே, சென்னை—1.

# என் வாழ்வில் வசந்த காலம்!

எனக்கென்று ஒரு ''வசந்த காலம்'' இருந்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு — அந்த 'வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழமுடியாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு, அந்த 'வசந்தகாலமும்' தெரியும். இன்று நான் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும். 'வசந்த காலம்' என்றேனே, அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி, அவருடன் 'காடு மேடு பல சுற்றி வந்த நிலை. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றிய போது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன். நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

ஒருவர் புறப்பட்டு, ஓயாது உழைத்து, உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும், எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற வரலாறு இங்கன்றி வேறெங்கும் இருந்ததில்லை. அந்த 'வரலாறு' துவக்கப்பட்டபோது நான் சிறுவன். அந்த வரலாற்றிலேயே புகழேடுகள் புதிது புதிதாக இணைக்கப்பட்ட நாட்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றி இருக்கிறேன். அந்த நாட்களைத்தான் என் 'வசந்தம்' என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடலின் மூலம் தந்திருக்கிருர். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதனை நான் கற்று வரும் வாய்ப்பும் தந்தார். பொதுத் தொண்டாற்றுவதில் ஓர் ஆர்வமும், அகமகிழ்வும், மன நிறைவும் பெற்றிடச் செய்தார். எப்போதும் ஒரு கனிவு, எனக்கென்று, தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது குடும்பத்தில் பிறவாப் பிள்ளை எனக் கொண்டிருந்தார்.

—பேரறிஞர் அண்ணு

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பிஞல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"



''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதி





தமிழரசு

# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடு களைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16




# கிழக்குக் கடற்கரையின் அரசி!

தரங்கம்பாடியில் உள்ள 'டான்ஸ்பர்க்' ( Donsborg ) கோட்டை, இந்த இதழின் மேலட்டையை அலங்கிரித்துள்ளது.

தரங்கம்பாடி என்றால் 'அலை கிராமம்' ( Wave Village ) என்று மாவட்ட வரலாற்று நூலில் காணப்படுகிறது.

தரங்கம்பாடியில் கடல் அரிப்பினால் பாழடைந்துள்ள சிவன் கோவிலில் குலசேகரப் பாண்டிய மன்னனின் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அக் கல்வெட்டில் தரங்கம்பாடியின் பெயர் 'சடங்கன் பாடி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்குக் கடலில், கி. பி. 1618-ஆம் ஆண்டில், கப்பல் உடைந்ததால், 'கேப்டன் ரோலண்ட் கிரேப்' (இவர் தன் இளமைக் காலத்தில், சிலகாலம் தஞ்சாவூரில் இருந்துள்ளார்) என்பவர், தஞ்சாவூரை ஆண்ட நாயக்க மன்னரிடம் சென்று பாதுகாப்புப் பெற்றார். நாயக்க மன்னரிடம் இருந்து 5 மைல் நீளமும், 3 மைல் அகலமும் உள்ள இடத்தை, ஆண்டிற்கு ரூபாய் 3,111 வாடகைக்குப் பெற்றார். அந்த இடத்தில் தான் 'கேப்டன் ரோலண்ட் கிரேப்', 'ஒவ் கெடி' ஆகிய இருவரின் கூட்டு முயற்சியால் டேனிஸ் குடியேற்றம் (செட்டில்மெண்ட்) அமைக்கப் பட்டது.

தரங்கம்பாடியில் உள்ள 'டான்ஸ்பர்க்' கோட்டை கி. பி. 1620-ஆம் ஆண்டில், டேனிஸ் நாட்டுக் கிழக்கு இந்தியக் கம்பெனிக்காக, 'ஒவ் கெடி' என்பவரால் கட்டப் பட்டதாகும். இக்கோட்டை 1624-ஆம் ஆண்டில் டென்மார்க் அரசரின் உரிமையாகியது. 1801-ஆம் ஆண்டில் இக்கோட்டை ஆங்கிலேயர்களின் கைவசமாகியது. இறுதியில் இக்கோட்டையை, 1845-ஆம் ஆண்டில் ரூபாய் 12.5 இலட்சத்திற்கு ஆங்கிலேயர்கள் வாங்கியதாகத் தெரிய வருகிறது. 1860-வரை தரங்கம்பாடியே தஞ்சை மாவட்டத்தின் தலைநகரமாக இருந்துள்ளது. அங்குதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றமும் இருந்துள்ளது.

'லெய்ப்ஷிக் லூத்தர்ன் மிஷன்' தலைமையகமும், 'ரோமன் கத்தோலிக்க மிஷனும்' தரங்கம்பாடியில் உள்ளன.

முதல் தமிழ்-ஆங்கில லெக்சிகன் அகராதி, 1779-ஆம் ஆண்டில், ஜெர்மன் நாட்டு லூத்தர்ன் மிஷனால், தரங்கம்பாடியிலேயே வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். முதன் முதலாக அச்சு இயந்திரம் நிறுவப்பட்ட இடம் என்ற பெருமையைப் பெற்றதும் தரங்கம்பாடியே! முதன் முதலாகத் தமிழில் பைபிளை வெளியிட்ட பெருமையும் தரங்கம்பாடிக்கே உரியது!

வரலாற்றுப் புகழ்மிக்க தரங்கம்பாடியில் உடல்நலத்திற்கு உறுதுணை செய்யும் பருவநிலைமை தொன்று தொட்டே இருந்து வந்துள்ளது. உடலுக்கு வலிவும், உள்ளத்திற்கு உவகையும் அளிக்கக்கூடிய 'ஓசோன்' (Ozone) என்னும் ஒருவகைக் காற்று தரங்கம்பாடியில் நிறைந்துள்ளது. 'டான்ஸ் பர்க்' கோட்டையிலிருந்து கடலைப் பார்த்தால், கோட்டையின் முன்னே உள்ள கடற் பகுதி சிவந்த நிறமாகக் காட்சியளிக்கிறது. இது சிந்தைக்கு விருந்தாக உள்ளது. கோட்டையின் முன்னுள்ள கடற் பகுதியில் சுற்றுலாவரும் ஏராளமான பேர் அன்றாடம் குளித்துக் குதுகலமடைகின்றனர். எனவேதான், 'கிழக்குக் கடற்கரையின் அரசி' ( The Queen of the Coromandel Coast) என்ற சிறப்புப் பெயரைத் தரங்கம்பாடி பெற்றுள்ளது.

வரலாற்று முக்கியத்துவமும், சுற்றுலாப் பயணிகளின் உள்ளத்தைக் கவரக் கூடியதுமாக உள்ள தரங்கம்பாடி கோட்டையைப் பாதுகாக்கவும், அதில் நிலையான ஒரு பொருட்காட்சியை அமைக்கவும் இன்றைய தமிழ்நாடு அரசு திட்ட மிட்டுள்ளது.

—ஆர். எம்.


# தமிழரசு

16 - 10 - 1977

மலர் : 8 • இதழ் : 8


## இந்த இதழில்


| இந்த இதழில் | பக்க எண் |
|---|---|
| கிழக்குக் கடற்கரையின் அரசி ! | 1 |
| சாலைகள் அமைப்போம்! பாலங்கள் கட்டுவோம்! | 2 |
| சுதேசி—காந்திஜியின் சித்தாந்தம் | 9 |
| உற்பத்தியைப் பெருக்கி, உழவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்! | 12 |
| மாநிலக் கூட்டுறவு வங்கியின் மகத்தானப் பணிகள் | 18 |
| படமும் செய்தியும் | 21 |
| டான்சியின் புகழ்க் கோபுரம் | 27 |
| 'மோபெட்' மோட்டர் சைக்கிள் | 28 |
| தமிழ்நாட்டில் காந்தியடிகள் | 33 |
| கிராமங்கள் புத்துயிர் பெற உதவுவது ராட்டையே! | 35 |
| மீன்வளம் பெருக்குவோம்! மீனவர் நலங் காப்போம்! | 36 |
| சாணத்திலிருந்து சக்தி! | 42 |
| அண்ணல் காந்தியடிகள் அரைத்துண்டை ஆடையாக அணிந்தது ஏன்? | 47 |



# சாலைகள் அமைப்போம்! பாலங்கள் கட்டுவோம்!

**வ**ணிகத் துறையின் முன்னேற்றத்திற்குப் போக்குவரத்து வசதிகள் அதிலும் குறிப்பாக சாலைகள் மிக இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. தமிழ்நாட்டில் பெரியசாலைகளின் மேம்பாடுகள் தொடர்ந்து அடுத்து வரும் திட்டங்களில் போதிய அளவு கவனத்தில் கொள்ளப்பட்டன; ஆனால், கிராமப்புறச் சாலைகளின் தேவைகள் போதுமான கவனிப்பைப் பெறவில்லை. கிராமங்களையும் பெரிய சாலைகளையும் இணைக்கும் சாலைகள் ஒரு நிலையான கிராமப் பொருளாதார அடிப்படை அமைப்புக்கு அடி கோலுகிறது.

நடப்பு ஆண்டில், இம்மாதிரிக் குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு கிராமத் தேவைகளை மையமாகக் கொண்ட சாலைத் திட்டங்களைச் சீரமைக்கத் தமிழ்நாடு அரசு கருதியுள்ளது.

கிராமப்புறங்களில் அணுகு சாலைகளை அமைப்பதில் மாநில அரசுகளின் முயற்சிகளில் பண ஒதுக்கீடு செய்து பங்கேற்க மத்திய அரசு தற்போது முடிவு செய்துள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு கணிசமான நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசிடம் இத்திட்டத்திற்காக எதிர் நோக்குகிறது.

மாநில அரசின் கீழுள்ள சாலைகளையும் பாலங்களையும் அமைத்தல், மேம்படுத்துதல், பராமரித்தல் ஆகியவற்றைக் கவனிக்கும் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பணித் துறை, சாலைப் பணிகளைக் கவனித்து வருகின்றது. மத்திய அரசின் தேசிய நெடுஞ்சாலைகளின் பணிகளை நிறைவேற்றும் முகவராகவும் இத்துறை செயல்படுகிறது. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் சாலைத் திட்டங்களில் தொழில் நுணுக்க மேற்பார்வைப் பணியினையும் ஆற்றுகிறது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்,

**திரு. சி. பொன்னையன்,**



## மாநில சாலைத் திட்டம்

மாநில சாலைத் திட்டத்தின் கீழ், பலம் குறைவான அமைப்புகளை இடப்பெயர்ச்சி செய்தல், விரைவான வாகனப் போக்குவரத்துக்கு ஏதுவாக முன்னேற்றங்கள் செய்தல், சாலை அமைப்புகளில் முன்னேற்றங்கள் செய்தல் முதலிய பணிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. திருச்சியில் உள்ள சென்னை — திருச்சி—திண்டுக்கல் சாலையில் காவேரியின் குறுக்கே புதுப்பிக்கப்பட்ட பாலம் (தேசிய நெடுஞ்சாலை—நகர்ப்புற எல்லை) ஒரு மாநில சாலைத் திட்டத்தின் கீழ் அமைந்த மாபெரும் திட்டமாகும். இதைச் செயல்படுத்தி முடிக்க ஆன செலவு ரூ. 102.50 இலட்சம் ஆகும். 1976-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 19-ஆம் நாளன்று போக்குவரத்திற்காக இப்பாலம் திறந்து விடப்பட்டது.

தூத்துக்குடியில் உள்ள 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலைகட்குத் தேவையான சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ. 133·50 இலட்சம் பெறுமான பணிகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

சேலம் எஃகுத் தொழில் திட்டத்திற்குத் தேவையான அடிப்படை அமைப்பினைச்செய்ய சூரமங்கலம்—தாரமங்கலம் சாலை மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப் பணிகளின் மொத்தச் செலவு ரூ. 130.00 இலட்சம் ஆகும். இதன் முதல் படி முடியும் தறுவாயில் உள்ளது. ரூ. 31.70 இலட்சம் செலவில் ஆறு பணிகள் முறையே 1976—77ல் அங்கீகரிக்கப் பட்டது. 1977—78ல் இதற்கான மதிப்பீடு ரூ. 25 இலட்சம் ஆகும்.

## இதர சாலைத் திட்டம்

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகளை மேம்படுத்தவும் பாலங்கள் அமைக்கும் பணிகள் ரூ. 40,000ம் அதற்கும் மேற்பட்டால் அப்பணிகளை அரசு செய்ய இத் திட்டம் அடிகோலுகிறது. சாலைகள், பாலங்கள் வேலை முடிந்ததும் அவற்றின் பராமரிப்பு [illegible] ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படும். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் நிதிப் பற்றுக் குறையினால் இப்பணிகளைச் செய்ய இயலாததால் அரசே இத்திட்டத்திற்கு உதவி செய்வது குறிப்பிடத் தக்கதாகும்.

1976—77—ஆம் ஆண்டில் பதினான்கு பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1977—78ல் மேலும் எட்டுப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1976—77ல் ரூ. 40.25 இலட்சம் செலவில் பன்னிரண்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1977—78 ஆம் ஆண்டில் மேலும் எட்டுப் பணிகள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1977—78ல் இதற்கான மதிப்பீடு ரூ. 25.00 இலட்சம் ஆகும்.

## கடப்புப் பாதைகளை (Level Crossings) ஒட்டியமைக்கப் பெறும் மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள்.

கடப்புப் பாதைகள், போக்குவரத்தை நிறுத்துவதால் மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் இவற்றைக் கொண்டு மாற்றியமைக்கப் படிப்படியாக நிறைவேற்றும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநிலம் ஏற்கும் பங்குச் செலவு ரயில்வே பாதுகாப்பு நிதியிலிருந்து திருப்பித் தரப்படும். நான்காவது திட்டக் காலத்தில் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்த அமைப்பின் கீழுள்ள பதினாறு பணிகள், வெவ்வேறு கட்டங்களில் செயல் பாட்டில் உள்ளன.

## சில பணிகள், சில விவரங்கள்

ரூபாய் 46 இலட்சம் செலவில் திருச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பாலக்கரைக்கு அருகிலுள்ள சுரங்கப் பாதை முடியும் தருவாயிலுள்ளது. மாயவரம் முத்துப்பேட்டை சாலையில், திருவாரூரில் ஒரு மேம்பாலமும், நாகை கூடலூர் சாலையில் திருவாரூரில் மற்றொரு பாலமும் கட்டப்பட்டு வருகின்றன.

ஒன்பது பணிகள் சென்னை மாநகரத்தில் வெவ்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. 1976—77ஆம் ஆண்டில் ரூ. 53.30 இலட்சம் செலவில் மூன்று வேலைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தது.

## தொடங்கப்பட வேண்டிய முக்கிய பணிகள்

1. கோட்டூர், டர்ன்புல்ஸ் சாலைகளுக்கு அருகே அடையாற்றில் குறுக்குப் பாலம் ஒன்று அமைத்தல்.

2. அடையாற்றில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிலையத்துக்கு அருகில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் மீண்டும் கட்டப்புடுதல்.

3. லஸ்ஸுக்கும் அருகில் ராமகிருஷ்ண மடச் சாலையில் பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கேயுள்ள பாலத்தை அகலப்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டுக்கு மொத்தமாக ரூ. 20 இலட்சம் இப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கிராமச் சாலைத் திட்டம்

மக்கள் தொகை 1500, அதற்கு மேலும் கொண்ட கிராமங்களை அருகில் உள்ள பெரிய சாலைகளுடன் இணைக்க தாரிட்ட மேற்பகுதியுடன் தேவையான இடங்களில் பாலங்கள், சிறு பாலங்கள் ஆகியவற்றுடன் எல்லாப் பருவ



காலத்திற்கும் ஏற்ற பாலங்கள், சாலைகளை அமைக்க 1972ல் தொடங்கிய இத் திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்றதும், அரசே அவற்றின் பராமரிப்பினை மேற்கொள்கிறது.

மக்கள் தொகை 1,500ம் அதற்கு மேலும் கொண்ட 1,194 கிராமங்கள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுகாறும் 1,220 கி.மீ. சாலைகள் மூன்று காலக் கட்டங்களில் ரூ. 1,468 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டன.

நடப்பு ஆண்டிற்கு (1977-78) வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 208 இலட்சம் ஆகும்.

### சீர் பருவகாலச் சாலைத் திட்டம்

1974 ஆகஸ்ட் திங்களில் இத் திட்டம் தொடங்கப் பெற்றது. புதுச் சாலைகளை, மண்ணினைச் சீர் செய்து கருங்கல் மேற்பரப்புடன் எவ்வளவு மக்கள் தொகை கொண்ட கிராமங்களாயினும், அக்கிராமங்களில் சாலைகள் அமைக்கும் பணி இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். மழை காலம் தவிர, ஆண்டு முழுவதும் இவ்வாறு அமைக்கப்பட்ட சாலைகள் பயன்படும். சாலைகள் அமைக்கப்பெற்ற பின் இச்சாலைகள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பின் கீழ்க் கொண்டு வரப்பெறும். ரூ. 390.00 இலட்சம் செலவில் 4,125 கி.மீ. சாலைகள் 3,225 கிராமங்களில் இத்திட்டத்தின் கீழ் இது வரை அமைக்கப் பெற்றுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 1976—77 நிதி ஆண்டில் மட்டும் சீர் பருவச் சாலைகள் அமைப்பதற்காக ரூ. 250.42 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு நிதியாண்டில் ரூ. 98.76 இலட்சம் மதிப்பீடு கொண்ட மேற்படிச் சாலைகளை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### மலைவாழ் பகுதி மேம்பாட்டுத் திட்டம் !

மலைவாழ் மக்கள் நலன் கருதி மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்த இந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

அனுமதியளிக்கப்பட்ட 101 கி.மீ. நீளமுடைய 21 வேலைகளில் 80 கி.மீ. நீளமுள்ள சாலை அமைக்கப்பட்டுள்ளது. 30—6—77 முடிய இத்திட்டத்திற்காக ரூ. 77.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் ரூ. 19.42 இலட்சம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.



### மலைவாழ் மக்கள் நலனுக்காகத் துணைத் திட்டம்

மலைவாழ் மக்கள் பயனடையும்படி அவர்கள் வாழும் கிராமங்களைப் பிரதான சாலைகளோடு இணைக்கும் வண்ணம் அமைக்கப்பட்ட திட்டம் இச் சிறப்புத் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் வைத்திய, கல்வி, சமூக முன்னேற்ற நலன்களைப் பெற உதவியாக இருக்கும்.

தென்னார்க்காடு, சேலம் மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலைப் பகுதியில் ரூ. 64.50 இலட்சம் மதிப்புடைய வேலைகளை எடுத்துச் செயலாற்ற அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி தொகையில் ரூ. 44.60 இலட்சம், சாலை அமைப்பு முதலிய வேலைகளுக்கு 1976—77ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

### நடைபெற்று வரும் முக்கிய வேலைகள் பின்வருமாறு :

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| அ. சின்னக் கல்ராயன் மலைப் பகுதியில் உள்ள சடையகவுண்டன் ஜாகீரை இணைக்கும் ஜீப் பாதை ( *Jeep Truck* ) (7 கி.மீ.) | 8.00 |
| ஆ. பச்சேரி - தம்பை வழியாக அரசம்ம பட்டி-முத்தம்பட்டியை இணைக்கும் ஜீப் பாதை (10 கிமீ.) | 15.50 |
| இ. குருபு கவுண்டன் ஜாகீர் மார்க்கமாக ஆரியக் கவுண்டன் ஜாகீரில் உள்ள கீழ்க் கார்ட்டை ரங்கப்பருனூடன் இணைக்கும் ஜீப் பாதை (32 கி.மீ.). | 31.00 |

இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சாலைக்கு மைய சாலை நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்டுள்ளது.

### மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம்

மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தில் ரூபாய் 15.00 இலட்சம் மதிப்பில் மதுரை மாவட்டத்தில் உள்ள சிறுமலைச் சாலையை மேம்படுத்திட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சிறுமலைச் சாலையில் சுமார் 13 கிலோ மீட்டர் நீளமுடைய சாலைகள் மேம்படுத்தப்பட்டு, வேலைகள் முன்னேற்ற மடைந்து வருகின்றன.

### உலக வங்கித் திட்டப் பணிகள்

சென்னை மாநகரில் போக்குவரத்தை எளிதாக்கவும் பாதசாரிகள், மிதி வண்டியாளர் இவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் அண்ணாசாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை போன்ற நகரின் பிரதான சாலைகளை மேம்படுத்தவும் தேசிய நெடுஞ்சாலைகள் 4, 5, 45 ஆகிய சாலைகளை இணைக்கும் வண்ணம் சென்னை நகர் உள் வளைவுச் சாலை அமைந்திடவும், நகரத் தெருக்களை மேம்படுத்தவும் உலக வங்கியின் நிதி உதவியுடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதைத் தவிர இத்திட்டம் சென்னை மாநகரில் மாநகராட்சிப் பகுதியில் பாதசாரி சுரங்கப்பாதை, மிதி வண்டிப் பாதைகள் முதலியன அமைத்துச் சாலைகளை மேம்படுத்தவும், உதவுகிறது. அரசுச் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 400.80 இலட்சமும், மாநகராட்சிச் சாலைகளை மேம்படுத்த ரூபாய் 317.833 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் வேலைகள் மூன்று ஆண்டு காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்படும். முதலாண்டு வேலைக்கு ரூபாய் 125 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைகளுக்கான மதிப்பீடுகள் ஒப்புதலளிக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பேசித் தீர்க்கப்பட்டு வருகின்றன.

### கருவிகளும், இயந்திரங்களும்

சாலை அமைப்பு, பாலம் அமைப்பு போன்ற பணிகளுக்குத் தேவைப்படும் பொறிகளும் மற்றும் கருவி, இயந்திரங்களும் தளவாடங்களும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்குத் தேவைப்படும் விஞ்ஞானச் சாதனங்களும் வாங்குவதற்கு 1977—78 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பராமரிப்பு

நெடுஞ்சாலைத் துறை பராமரிப்புக்குட்பட்ட பல்வேறு வகையான சாலைகள் (நிழற் சாலைகள் உட்பட) கட்டடங்கள் பராமரிப்பதற்கென்று நடப்பு நிதி ஆண்டில் ரூபாய் 975 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. துறை இயந்திரங்களைப் பராமரிப்பதற்காக ரூபாய் 144.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தேசிய நெடுஞ்சாலை

தமிழகத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தேசிய நெடுஞ்சாலை 47ல் குமாரபாளையம்—பவானி மாற்று வழியில், காவிரி நதியின் குறுக்கே ஒரு பிரதான பாலம் 1976-77 ல் ரூபாய் 80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுப் போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளது.

தேசிய நெடுஞ்சாலை 45ல் கொள்ளிடம் நதியின் குறுக்கே ரூபாய் 64.116 இலட்சம் செலவில் பெரும் பாலம் ஒன்று கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசு 1977—78ல் தேசிய நெடுஞ்சாலை வேலைகளுக்காக மொத்தமாக ரூபாய் 420 இலட்சம் மதிய அரசிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையில் ரூபாய் 142.67 இலட்சத்தை ஏற்கெனவே மத்திய அரசு வழங்கிவிட்டது.

### மையச் சாலை நிதி வேலைகள்

மத்திய அரசால் வசூலிக்கப்படும் ஆயத் தீர்வையில் ஒரு லிட்டர் மோட்டார் எண்ணெய்க்கு 3.5 பைசாக்கள் வீதம் வசூலிக்கப்படும் தொகையிலிருந்து மையச் சாலை நிதிக்கு வருவாய் கிடைக்கிறது. மொத்த வருவாயில் 80 சதவிகிதம் இத்திட்டத்தின் கீழ் உள்ள வேலைகளுக்கென்று மாநில அரசுகளுக்கும் ஒதுக்கப்படுகிறது. 20 சதவீதத்தை மத்திய அரசு 'வைப்பு நிதியாக' நிறுத்தி வைத்துக் கொள்கிறது. இம்மாநிலத்தில் செலவழிக்கப்படும் டீசல் (*Diesel*) மீது வசூலிக்கப்படும் ஆயத் தீர்வையிலிருந்தும் இம்மாதிரியான ஒதுக்கீட்டை அளிக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மலைவாசிப் பகுதிச் சாலைகளும், பின்தங்கிய பகுதிகளில் பால வேலைகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### கீழ்க்கண்ட பாலவேலைகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்டன

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. காய் களத்தூர் பெரிய வடகரை ரோடில் கி.மீ. 11-6ல் கல்லாற்றுக்குக் குறுக்கே பாலம் அமைத்தல் | 6.12 |
| 2. எடையகாத்தூர் அருகே வைகை ஆற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைத்தல் | 13.78 |
| 3. அச்சரப்பாக்கம் — வந்தவாசி சாலை-கி.மீ. 46-40 சுகா நதிக்குக் குறுக்கே பாலம் அமைத்தல் | 6.50 |
| 4. அரவக்குருச்சி—சின்ன தாராபுரம் சாலை கி.மீ. 3-2ல் அமராவதி ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்தல் | 13.20 |

இத்திட்டத்தின் கீழ் எடுத்து முடிக்கப்பட்ட மிகப் பெரிய திட்டம் ரூபாய் 135



இலட்சத்தில் கோடைக்கானலேயும் பழனியை யும் இணைக்கும் மலைச் சாலைத் திட்டமாகும். இதனுல் கோடைக் கானலுக்கும் பழனிக்கும் உள்ள தூரம் 135 கிலோ மீட்டரிலிருந்து, 66 கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது.

**கீழ்க்கண்ட மலைவாசிப் பகுதிச் சாலைத் திட்டங்கள் சமீபத்தில் முடிவு பெற இருக்கின்றன.**

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. ஆதலூரிலிருந்து பண்ணைப்பட்டி பாச்சலூரிலிருந்து 12-0 மைலுக்கு அருகேதாண்டிக் குடிமலைச்சாலையை இணைக்கும் சாலைத் திட்டம் | 33.60 |
| 2. பாச்சலூரிலிருந்து வடுக்காடுக்கும் அங்கிருந்து ஒட்டன்சத்திரத்திற்கும் ஒரு மலைப்பாதை அமைத்தல் | 48.40 |

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு ரூபாய் 254.70 இலட்சம் மதிப்பில் 13 வேலைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஆண்டிற்கு ரூபாய் 83.55 இலட்சம் இவ்வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ள திட்டங்களுக்கு இது வரை ரூபாய் 55.65 இலட்சத்திற்குத்தான் இத்திட்டத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறது.

**இவைகளில் முக்கியத்துவம் உள்ள பணிகளாவன :**

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. பாளையம்கோட்டை—நாகலாபுரம் ரோட்டில் சிவலப்பேரி என்னும் இடத்தில் தரைப்பாலம் அமைத்தல் | 20.00 |
| 2. சேலத்தின் அருகே பெண்ணகரம் -பெரும்பலா ரோட்டில் தொப்பையாற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்தல் | 14.50 |
| 3. சென்னை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனைப் பாதை அமைத்தல் | 22.00 |

## பாம்பன் பாலத் திட்டம்

இத் திட்டம் தேசிய நெடுஞ்சாலை எண் 49ல் 7,692 அடி (1.46 மைல்) நீளமுள்ள ஒரு பாலமும், மண்டபம் பக்கம் 6 கிலோ மீட்டர் பாம்பன் பக்கம் (தீவுப் பகுதி) 2 கிலோ உள்ள அணுகு சாலைகளையும் கொண்டது. ஆகையினுல் இத்திட்டத்திற்காக ஆகும் மொத்தச் செலவும் மத்திய அரசினுல் ஏற்றுக் கொள்ளப்பட்டு மாநில அரசினுல் நடத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு தொகை ரூபாய் 532.87 இலட்சங்களாகும். இதில் ரூ. 60 இலட்சம் இரு பக்மும் அணுகுசாலை அமைப்பதற்கான மதிப்பீடு ஆகும். இத்திட்டத்திற்கு 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இப்பாலத்தில் 76 பாலக் கண்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 89 அடி அகலம் உள்ளதாகும். மத்தியில் கப்பல் போக்குவரத்து வசதிக்காக 378 அடி அகலம் உள்ள ஒரு பாலக் கண்ணும், 225 அடி உள்ள இரு பாலக் கண்களும் அமைந்திருக்கும். தங்கு தடையற்ற கப்பல் போக்குவரத்திற்காகப் பாலத் தளத்தின் கீழ் மட்டம் உயர்ந்த அலை மட்டத்திலிருந்து சுமார் 55 அடி உயரத்தில் உள்ளது. இத்திட்டம் பல விதங்களில் தனித் தன்மை கொண்டது.

அஸ்திவாரமும் இரு புறமும் சார்புச் சுவர்களும் மற்றும் 17 பாலத் தூண்களும் முடிக்கப் பெற்றது. அணுகு சாலைகளும் கட்டட வேலைகளும் நடைபெற்று வருகின்றன. 31-3-1977 முடிய ரூபாய் 250.62 இலட்சமும், 30-6-1977 முடிய ரூபாய் 270.40 இலட்சமும் செலவிடப் பட்டுள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் மொத்த ஒதுக்கீடான ரூபாய் 4.20 இலட்சத்தில் இத் திட்டத்திற்கு ரூபாய் 1.28 இலட்சம் மானியம் 1977-78ஆம் ஆண்டுக்கான மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டம் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மாநிலத் தொடர்பு மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டப் பணிகள்

இத்திட்டம் மத்திய அரசால் அங்கீகரிக் கப்பட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கு மத்திய அரசு செலவுத் தொகை அனைத்தையும் முழுக் கடன் தொகையாக அளிக்கிறது. தவிர, இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத் தொடர்பு மற்றும் பொருளதாரப் போக்குவரத்துத் திட்டங்கள் சிலவற்றுக்கு ஆண்டு தோறும் உதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், குறிப்பிட்ட சில பணிகள் மட்டும் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படும்.



**கீழ்காணும் வகையினைச் சார்ந்த சாலைகள் மற்றும் பால வேலைகள்**

(அ) மாநிலங்களை இணைக்கக் கூடிய நேரடிப் போக்குவரத்துச் சாலைகள்.

(ஆ) சமீப எதிர் காலத்தில் இருப்புப் பாதைகள் அமைக்க முடியாத இடங்களில் புறப் பகுதிகளை இணைக்கும் சாலைகள் மற்றும் பாலங்கள்.

(இ) உயர் ரக தாது வளம், தாவரங்கள் மற்றும் இதர வளம் கொண்ட மலைப்பாங்கான மற்றும் சாதாரணப் பகுதிகளை இணைத்துப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன் படும் சாலைகள் மற்றும் பாலங்கள் போன்றவைகள்.

நான்காவது திட்டக் காலத்தில் ரூபாய் 261.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் 38 பாலங்கள் கட்ட மத்திய அரசு அங்கீகாரம் அளித்தது. இதில் ரூபாய் 2.61 இலட்சம் போக மேற்கொண்டு ஆகும் செலவை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்னும் நிபந்தனைக்குட்பட்டது. இது வரை பாலங் களில் 38-ல் 32 பாலங்கள் முடிவு பெற்றுள்ளன. இதில் 31.3.1977 வரை ரூபாய் 3,54.34 இலட்சம் செலவிடப்பட்டது. இதில் மத்திய அரசு 31.3.1977 வரை மாநில அரசுக்கு வழங்க வேண்டிய ரூபாய் 2,43.35 இலட்சம் கடனுக அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் மூன்று பால வேலைகளை முழுமையாகக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் எட்டுப் பால வேலைகள் கூடிய வரை முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் முதன்மையாகக் கருதப்படும் பணி, திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை—துறையூர் சாலையில் முசிறியையும், குளித்தலையையும் இணைக்கக் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப் பெற்று வரும் பாலமாகும். இதன் மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 1.39 இலட்சம் ஆகும். இத்திட்டம் 1977-78ஆம் ஆண்டுக் காலத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்காணும் இரு வேலைகளுக்கு மத்திய அரசு ரூபாய் 60.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் அளித்துள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. சென்னை-திருத்தணி சாலையை கி.மீ. 47-0 முதல் கி.மீ. 85-6 வரை செப்பனிடவும், அரக்கோணம்-ரேணிகுண்டா சாலையில் கி. மீ. 13-8 முதல் கி.மீ. 23-2 வரை உள்ள பகுதியை தேசிய நெடுஞ்சாலைத் தரத்திற்குக் கொண்டு வருதல். | 40.00 |
| 2. மார்த்தாண்டம்-பணிச்சமொடு ரோடில் கி.மீ. 1-6ல் குழித்துறை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் ... | 20.00 |

இத்திட்டத்திற்கு 1977—78ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 44.91 இலட்சம் தனியே ஒதுக்கப்பட்டு உள்ளது.

[தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையில் அளிக்கப்பட்ட நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறைக்கான மானியக் கோரிக்கைக் கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]



ஒரே ஒரு ரூபாய்...



கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்க உதவிடும்!

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ஒரு நலவாழ்வுத் திட்டம். இதன் வருவாய் கிராமப் பகுதிகளின் மேம்பாட்டுக்கு — குடிநீர் வழங்க பயன்படுத்தப்படுகிறது! உங்களுக்கும் பரிசு பெற வாய்ப்புண்டு — மற்றவர்களுக்கும் பயனுண்டு!

இன்றே வாங்குங்கள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

2 முதல் பரிசுகள் ரூ. 5,00,000 வீதம் ஒவ்வொரு வரிசைக்கும்

அதிக நபர்களுக்கு அதிகப் பரிசுகள்

ஒரு வரிசைக்கு வழங்கப்படும் பரிசுகள் விவரம்

| பரிசு | தொகை ரூ | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ |
|---|---|---|---|
| I | 50,000 | 2 | 1,00,000 |
| II | 10,000 | 3 | 30,000 |
| III | 5,000 | 5 | 25,000 |
| IV | 1,000 | 25 | 25,000 |
| V | 500 | 100 | 50,000 |
| VI | 100 | 500 | 50,000 |
| VII | 50 | 2000 | 1,00,000 |
| ஆறுதல் பரிசுகள் | | | |
| I | 1,000 | 4 | 4,000 |
| II | 500 | 6 | 3,000 |
| III | 300 | 10 | 3,000 |
| மொத்தம் | | 2655 | ரூ 3,90,000 |

சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- மட்டுமே

குலுக்கல் நாள்: 19.10.1977

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600 002


# "சுதேசி"— காந்திஜியின் சித்தாந்தம்

—திரு. பியாரே லால்

விடுதலைக்காகப் போராடிய எந்த ஒரு நாட்டிலும், உள்நாட்டுப் பொருட்கள் மீதான பற்று, அல்லது உள்நாட்டுப் பொருட்களையே உபயோகிக்க வேண்டும் என்ற சுதேசி உணர்வு, போராட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக இருந்து வந்திருக்கிறது.

1776-ஆம் வருடம் 'ஸ்டாம்ப்' சட்டம் விலக்கு சம்பந்தமான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் மக்கள் சபைக் கமிட்டியின் முன்னால் பெஞ்சமின் ஃபிராங்க்ளின் ஆஜரானார். ''அமெரிக்கர்களுக்கு முன்பு பெருமை அளித்த விஷயம் எது?'' என்று அப்போது அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பெஞ்சமின், ''பிரிட்டனின் மோஸ்தரைப் பின்பற்றி, அதன் பொருட்களைப் பயன்படுத்துவதுதான் அமெரிக்கர்களுக்குப் பெருமையாக இருந்தது'' என்று பதிலளித்தார்.

''இப்போது அவர்களுக்குப் பெருமை அளிப்பது எது?'' என்ற வினா மீண்டும் பெஞ்சமினை நோக்கி எழுந்தது.

''ஆடைகளை நாங்களே தயாரித்து அணியும் வரையில், மீண்டும் மீண்டும் பழைய துணிகளை அணிந்து கொள்வதுதான்'' — இது பெஞ்சமின் அளித்த பதில்!

ஜார்ஜ் வாஷிங்டனின் ராணுவத்தை ''உள்நாட்டுத் துணிகள்'' என்று கேலியாக அழைப்பதுண்டு. அதை அவர்கள் ஒரு கௌரவமாகவே பெருமையுடன் மதித்தார்கள். ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்க ஐக்கியநாடுகளின் முதல் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர், ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் ஏற்க வந்தபோது—தலை முதல் கால் வரை அமெரிக்காவில் தயாரான ஆடைகளையே அவர் அணிந்திருந்தார் என்று கூறப்படுவதுண்டு.

## சுதேசி இயக்கத்தின் உதயம்

நம் நாட்டில், சுதேசி இயக்கம் வங்கப் பிரிவினைக்கு அடுத்தாற் போல் துவங்கியது. அதுவே நம் பொன்னான திருப்பு முனையாக அமைந்தது. விஸ்வநாத் நாராயண் மாண்ட்லிக்-புகழ்பெற்ற சட்ட நிபுணர். அதுமட்டுமல்ல-வைசராய் கவுன்சிலில் ஒரு நியமன உறுப்பினர். லண்டனின் வற்புறுத்தலையொட்டி லங்காஷைர் துணிகளுக்கான இறக்குமதித் தீர்வையை ரிப்பன் பிரபு தள்ளுபடி செய்ததற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில்— விஸ்வநாத் நாராயண் முரடான உள்நாட்டு ஆடைகளை அணிந்தே கவுன்சில் கூட்டத்தில் ஆஜரானார்.



இதே போல-கல்கத்தாவில் உள்ள கல்லூரி மாணவர்கள், பரிட்சையில் கேள்விகளுக்கு விடையளிக்க வழங்கப்பட்ட தாள்களை ஏற்க மறுத்து விட்டனர். காரணம் அந்த விடைத் தாள்கள் வெளிநாட்டுக் காகிதத்தில் தயாரானவை. உள்நாட்டுக் காகிதத்தில் தயாரிக்கப்பட்ட தாள்களே தங்களுக்கு விடை எழுத விநியோகிக்கப்பட வேண்டும் என்று அந்த மாணவர்கள் கோரினார்கள். இப்படி சுதேசிச் சுடரை ஒளி வீசச் செய்தனர் மாணவர்கள். தங்களுக்குப் பிறந்த நாள் பரிசாக வந்து குவியும் வெளிநாட்டு விளையாட்டுப் பொம்மைகளை ஏற்கக் குழந்தைகள் மறுக்கத் தொடங்கினர். வெளிநாட்டில் தயாரான காலணிகளைப் பயன்படுத்துவதையும் நிறுத்தினர். இதனைத் தொடர்ந்து காலஞ்சென்ற லோகமான்ய திலகர்—உள்நாட்டுப் பொருட்களை உபயோகிக்க வேண்டும் என்று எடுத்தியம்பி, செயல்படுத்திய நடவடிக்கைகள் மகாராஷ்ட்ர மாநிலத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. லோகமான்யரின் இந்த இயக்கத்தில் பி. சி. பால், லாலா லஜபதி ராய் ஆகியோரும் ஓடோடி வந்து உறுதுணையாக நின்றனர். இந்த மூவரின் அயராத உழைப்பு— இயக்கத்தின் வளர்ச்சிக்கு விறுவிறுப்புக் கூட்டியது. சுதேசி இயக்கம் நல்வளர்ச்சி பெற வேண்டும் என்ற துடிப்பில் அரவிந்த கோஷ் ஒரு பிரச்சாரக் குழுவை அமைத்தார்.

## பிரிட்டிஷ் துணிகள் பகிஷ்காரம்

பிரிட்டிஷ் துணிகளை அவசியம் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வங்காளத்தில் 'பங்கா லட்சுமி டெக்ஸ்டைல் மில்' துவக்கப்பட்டது. பொது

நிதியைக் கொண்டு இந்த மில் அமைக்கப்பட்டது. இலட்சிய உணர்வின் முதல் துடிப்புக்குப் பிறகு மில் உரிமையாளர்கள் அதிக இலாபத்தின் ஆசைப் பிடிக்குள் சிக்கினார்கள், நாட்டுப் பற்று உணர்வு பின் வாங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக 'சுதேசி' உணர்வும் துடிப்பை இழந்தது.



**காந்தியடிகளின் சுதேசிக்கோட்பாடு**

உள்நாட்டுத் தொழில்களின் மறுமலர்ச்சிக்குப் பாதுகாப்பு அளிக்கும் ஒரு நடவடிக்கையாக சுதேசி இயக்கம் துவங்கியது. பிரிட்டிஷ் பொருட்களைப் பகிஷ்கரிப்பதன் மூலம் பிரிட்டிஷ் அதிகாரத்தை அடியோடு அகற்றுவதற்கான போர்க்கருவியாகவும் அது கருதப்பட்டது.

சுதேசி இயக்கத்திலிருந்து அளவு கடந்த தன்னாட்டுப் பற்று என்னும் அம்சத்தை அகற்றி, **மனிதப் பண்பு, ஆன்மிகம் என்ற புதிய அம்சங்களைச் சேர்த்து அதற்குப் புத்துணர்வூட்டினார் காந்தியடிகள். "சுதேசி இயக்கத்தில் சுயநலத்துக்கு இடமில்லை. பிறர் அனைவரின் நலனுக்கான சேவையின் கருவூலம் சுதேசி. இந்த இயக்கத்தில் உண்மையான பற்றுள்ளவர்கள் மற்ற எவருக்கும் எதிரியாகச் செயல்படமாட்டார்கள். பகை உணர்வை வளர்க்கும் கலையல்ல சுதேசியம். மிகத் தூய்மையான அகிம்சையில் வேரூன்றி நிற்கும் தன்னலமற்ற சேவை சித்தாந்தமே சுதேசி இயக்கம்"** என்று விளக்கமளித்தார் காந்தியடிகள்.

முன்பெல்லாம், இங்கு குடியேறாத ஐரோப்பியர்கள் மூலதனத்தையும், தேர்ச்சி பெற்ற ஆட்களையும், இயந்திர சாதனங்களையும் வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து அமைத்து, நடத்தி வந்த ஆலைகள் இந்தியத்தொழில் சாலைகள் எனக் கருதப்பட்டன. பெருவாரியான மக்களுக்கு தீங்கு விளைவிப்பதாக அந்த ஆலைகள் இருக்கின்றன என்று நிரூபிக்கப்பட்டாலும் கூட, அவை இந்திய ஆலைகள் என்றே கருதப்பட்டன. ஆனால் காந்தியடிகளின் கருத்துப்படி ஒரு தொழில் இந்தியத் தொழில் என்று கூறப்பட வேண்டுமென்றால், அது மக்களின் நலனுக்கு உதவுவதாக இருக்க வேண்டும். அதன் மூலதனமும், இயந்திர சாதனங்களும் இந்தியாவினுடையதாக இருக்க வேண்டும். அதில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியமும், சௌகரியமான வீடு வசதியும் கிடைக்க வேண்டும்; அவர்களுடைய குழந்தைகளின் நல்வாழ்வுக்குத் தொழிலதிபர்கள் உத்தரவாதமளிக்க வேண்டும். அப்போதுதான் அதனை ஓர் இந்தியத் தொழிலாகக் கருத முடியும் என்றார் காந்தியடிகள்.

மூலதனமும், தொழிலாளரும் வெளிநாட்டினதாக இருந்த போதிலும் கூட இலட்சக்கணக்கான மக்களின் நலனுக்குப் பயன் அளிக்கக் கூடிய எந்தப் பொருளும் சுதேசிப் பொருள் ஆகும் என்ற புதிய விளக்கம் தோன்றலாயிற்று. இப்படிப் பார்த்தால், வெளிநாட்டு மூலதனத்துடன் வெளிநாட்டு நிபுணர்களை இயக்கி ஆனால் இந்தியரின் கட்டுப்பாட்டில் செயல்படுமானால் கூட கதர்த் தொழில் சுதேசித் தொழிலேயாகும். மாறாக, ரப்பர் அல்லது காலணி தயாரிப்புத் தொழிலை யார் நடத்தி வந்தாலும், அதில் வேலை செய்பவர்கள் இந்தியர்களாகவும், அதன் மூலதனம் அனைத்தும் இந்தியாவினுடையதாகவும் இருந்தாலும் கூட அத்தொழில் அந்நியத் தொழில்தான். இன்னும் சொல்லப் போனால், அது இருமடங்கு அந்நியத் தொழில் என்றே கூற வேண்டும். ஏனெனில் அத்தொழில் அந்நியர்களின் ஆதிக்கத்தில்தான் இருக்கும்; அது தயாரிக்கும் பொருள் எவ்வளவு மலிவாக இருந்தாலும், நம் கிராமத்துச் செருப்புத் தொழிலாளியின் வாழ்க்கையை அது நசித்து விடச் செய்யும் என்பதே அதற்குக் காரணம்.

வெளிநாட்டுப் பொருட்களின் போட்டியிலிருந்து உள்நாட்டுத் தொழில்கள் மூலம் தயாராகும் பொருட்களுக்குப் பாதுகாப்பு அளித்து, எப்படி முன்னுரிமை வழங்க வேண்டும் என்று உள்ளதோ, அதே போல இயந்திரங்கள் மூலம் அவை வெளி நாட்டைச் சேர்ந்ததாயினும் அல்லது உள்நாட்டு இயந்திரங்களாயினும் அவற்றின் மூலம் தயாரான பொருட்களின் போட்டியிலிருந்து குடிசைத் தொழில்களுக்கும், கிராமத் தொழில்களுக்கும் பாதுகாப்பான முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார். நகரங்கள் கிராமப்பகுதியைச் சுரண்டுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றாரவர்.

இடைக்கால அரசைக் காங்கிரஸ் அமைத்து மாகாணங்களில் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற போது அமைச்சர்களிடம் காந்தி இவ்வாறு கூறினார்:

"நாட்டு மக்களின் பாதுகாவலர்களாக, மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு செயல்படும் பிரதிநிதிகளாக நீங்கள் உங்களைக் கருதுவீர்களானால் இந்திய மக்களில் 80 சதவீதமாயுள்ள கிராம மக்களின் நலனில் அக்கறை காட்டுங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் அந்த மக்களின் நலனில் அக்கறை கொண்டதாக இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மெல்லிய ரகத்துணி நூலிழையோடு மட்டுமே தங்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் தொழிலாளர்களுக்கு மோட்டா ரகம் தேவையாகையால், அந்த ரகத்தில் துணி, நூலிழை உற்பத்தியைக் கையால் நூற்பவர்களுக்கும், கைத்தறி நெசவாளர்களுக்கும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஜவுளி ஆலை உரிமையாளர்களிடம் அமைச்சர்கள் அவசியம் எடுத்துரைக்க வேண்டும். அல்லது-மோட்டா ரகத்திலோ, நடுத்தர ரகத்திலோ துணியையும், நூலிழையையும் உற்பத்தி செய்ய வேண்டும் என்றால், அவை தேவைப்படும் அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதிக்காக மட்டுமே இருக்க வேண்டும். நிர்ணயிக்கப்படும் ஒரு குறிப்பிட்ட கெடு தேதிக்குப் பின்னர்-ஜவுளி ஆலைகளிலிருந்து எந்த ஒரு துணியும் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அல்லது அவர்களிடம் விற்பனைக்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று கிராமத் தொழிலாளர்களுக்கு மந்திரிகள் முன்னறிவிப்புச் செய்து விட வேண்டும். இதன் மூலம், நிர்ணயிக்கப்படும் கெடு தேதிக்குள்ளாகவே-கிராமக் கைத்தறி, நூற்புத் தொழிலாளர்கள் துணி, நூலிழை விநியோகத்தைப் பொறுத்த மட்டில் தற்சார்புடையவர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று காந்தி எடுத்துரைத்தார். அத்துடன்-கிராம மக்களுக்குக் கடன், கருவிகள், கச்சாப் பொருட்கள், விற்பனைக் கழகம், நிபுணர்கள் யோசனை போன்ற பல வசதிகளை அரசாங்கம் செய்து தர வேண்டும். கைக்குத்தல் அரிசி, கால்நடை இழுக்கும் செக்குகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்கள், நாட்டுச் சர்க்கரை போன்ற கிராம கைவினைப் பொருட்களோடு போட்டி போடும் வகையில் மின்சாரத்தில் இயங்கும் இயந்திரங்களையோ, அல்லது அந்த இயந்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களையோ கிராம மக்களின் மத்தியில் நடமாடச் செய்யும் எண்ணம் இருக்கக் கூடாது என்றும் காந்தி வலியுறுத்தினார்.

ஆளும் வர்க்கத்தினர் தங்களது சொந்த வாழ்வில் 'சுதேசி'ப் பற்றைக் கைக் கொண்டு முன்னுதாரணமாகத் திகழ்வார்களானால்—ஜனநாயகத்தின் அஸ்திவாரமாகத் திகழும் சுய உதவி, சுய தேவைப் பூர்த்தி என்னும் இலக்குகளை நாட்டு மக்கள் அடையச் செய்யும் விதத்தில் 'சுதேசிப்பற்று'ச் சித்தாந்தத்தை ஊக்குவிக்கும் பணியில் இளைஞர்களின் சக்தி திரட்டப்படுமானால், குறுகிய கால கட்டத்துக்குள் நம் நாட்டில் உள்ள இலட்சோப இலட்சம் மக்கள் மத்தியில் புது வாழ்வு மலரும்—ஒளிமயமான எதிர்காலம் உதயமாகும்; இப்படிப்பட்ட தொரு பொற்காலத்தில், இந்திய மக்களில் பரம்பரை உரிமையை இழந்து நிற்கும் பிரிவினர், விதியை மாற்றி அமைத்த மன்னர்களாகத் தங்களை நினைத்துப் பெருமிதம் காணும் நிலையை அடைந்து விடுவோம் என்று அண்ணல் காந்தி அன்றே கணித்து விட்டார். அந்தச் சவால் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

## மீனாட்சி கோவிலில் மகாத்மா

1946 ஆம் ஆண்டு! காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். மதுரைக்குச் சென்றிருந்தார். அங்கே புகழ்பெற்றுத்திகழும் மீனாட்சியம்மன் ஆலயத்திற்குச் சென்றார். பூஜை முறைகளை கவனமாகப் பார்த்தபடி வந்த காந்தி, இடையிடையே தமக்கு எழுந்த சந்தேகங்களையும் கேட்டுத் தெளிவு செய்து கொண்டார். கோவிலில் உள்ள வாகனாதிகளையும் பார்வையிட்டார்; கோவிலை விட்டுப் புறப்படும் போது, கோவில் தர்மகர்த்தா, பார்வையாளர் பதிவுப் புத்தகத்தை காந்தியிடம் நீட்டினார். அதனை வாங்கிய மகாத்மா "எனது வாழ்க்கையில் நான் முக்கியமாகக் கருதிய ஒரு காரியம் இன்றுதான் கைகூடியது" என்று எழுதிக் கையொப்பமும் இட்டார்.



## நேரம் தவறாத காந்தி



1927 ஆம் ஆண்டு! அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடத்தில் உரை நிகழ்த்துவதற்காக காந்திஜி சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிவுற்றது. அதன் பின் சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்று, அங்கு மாலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. காந்தியடிகளை அகமதாபாத்துக்கு அழைத்து வந்த கார் வேறு எங்கேயோ போயிருந்தது. அது வருவதற்கு நேரம் ஆகும் போல் தெரிந்தது. குறித்த நேரத்தைக் கோட்டை விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட காந்தி, சபர்மதி ஆசிரமத்துப் பிரார்த்தனைக் கூட்டத்தைத் தவறவிட விரும்பவில்லை.

எனவே, குஜராத் வித்யா பீடத்திலிருந்த நண்பர் ஒருவரின் சைக்கிளை இரவல் கேட்டு வாங்கிக் கொண்டார். சைக்கிள் விடுவதில் சரியான பழக்கம் இல்லாவிட்டாலும் முயன்று ஒன்றரை மைல் தூரத்திலிருந்த ஆசிரமத்தைக் குறித்த நேரத்தில் சென்று அடைந்தார்; பிரார்த்தனைக் கூட்டத்திலும் குறித்த நேரத்தில் கலந்து கொண்டார்!

18470



# உற்பத்தியைப் பெருக்கி உழவர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்!

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கிக் குடியானவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உழவியல் ஆய்வு முடிவுகளையும் தொழில் நுட்ப ஆலோசனையையும் அவர்களுக்கு வழங்குவது வேளாண்மைத்துறையின் தலையாய பணி. பயிர் செய்வதில் உள்ள பிரச்சினைகளைப் போக்கிட ஆராய்ச்சியும், தனியார் துறை மற்றும் அரசுத்துறையின் மூலம் பயிர் செய்வதற்கு வேண்டிய இடுபொருட்களை வழங்குவதும், குறிப்பாக உழவர்களுக்குத் தேவைப்படும் உற்பத்திச் சாதனங்களான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகியவைகளை உரிய காலத்தில் கிடைப்பதற்கான வழிவகைகளை இத்துறை கவனித்துக் கொள்கிறது.

தொழில்நுட்ப அறிவுரை வழங்குவதுடன் நிலத்தைப் பண்படுத்தவும் மற்றும் நிலத்தடி நீரை வெளிக்கொண்டு வந்து பயன் பெற்றிடவும், வேண்டிய இயந்திரங்களையும் இதர கருவிகளையும் வாடகைக்கு இத்துறை வழங்குகிறது. விதை, உரம் மற்றும் பூச்சி பூசண மருந்துகள் போன்ற இடுபொருட்களின் தரத்தினைப் பாதுகாத்தல், வேளாண்மை விளைபொருட்களின் தரத்தினைப் பாதுகாத்தல், வேளாண்மை விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக விற்பனை செய்வதற்கு உழவர்களுக்கு உதவுதல் போன்றவை வேளாண்மைத் துறையின் இதர பணிகளாகும்.



மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

**திரு. ப. குழந்தைவேலு**

## 1977-78-ஆம் ஆண்டிற்கான குறிக்கோளும் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களும் :

1977-78-ஆம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்டுள்ள பயிர் உற்பத்திக் குறியீடுகள் பின்வருமாறு உள்ளன.

| | | இலட்சம் டன் |
|---|---|---|
| 1 | நெல் | 62.00 |
| 2. | சிறுதானியங்கள் | 19.00 |
| 3. | பயறுவகைகள் | 3.00 |
| 4. | எண்ணெய்வித்துப் பயிர்கள் | 14.90 |
| 5. | கரும்பு (வெல்லம்) | 14.00 |
| 6. | பருத்தி | 4.00 (இலட்சம் பேல்கள்) |

மேற்குறித்த உற்பத்திக் குறிக்கோள்களை அடைவதற்கான வழிவகைகள் வருமாறு:—

### (அ) நெல்

உயர் விளைச்சல் தரவல்ல இரகங்கள் 22 இலட்சம் எக்டேரில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளன. அதிக விளைச்சல் பெற்றிட குறிப்பாக ஐ. ஆர். இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படும். குறுகிய வயதுள்ள ஆடுதுறை 31 மற்றும் டி. கே. எம். 8 ஆகிய இரகங்கள் அதிக அளவில் பயிரிடத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சம்பாப் பருவத்திலும், செங்கல்பட்டு, இராமநாதபுரம் புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள புழுதி நெல் சாகுபடி செய்யப்படும் பகுதிகளிலும், உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிட வழிவகைகள் செய்யப்படும். காவிரி டெல்டாவில் சம்பாப் பருவத்தில் பயிரிடுவதற்கு ஏற்புடைய சிறந்த கோ. 40 ரகத்தை தஞ்சை மாவட்டத்தில் அதிக அளவில் பயிரிட வழிவகைகள் செய்யப்படும். ஆந்திரப் பிரதேச இரகமான என். எல். ஆர். 9672 என்ற சன்ன இரகம் சம்பாப் பருவத்தில் பெருமளவு பயிரிட ஏற்றதா எனச் சோதனை செய்யப்படும். இவ்வாண்டு 9,500 மெட்ரிக் டன்கள் சான்றிதழ் பெற்ற உயர் விளைச்சல் இரக விதைகள் விநியோகம் செய்ய வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

### (ஆ) சிறு தானியங்கள்

சிறு தானிய உற்பத்தியைப் பெருக்க உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிட வழிவகை செய்யப்படும். 1.20 இலட்சம் எக்டேர் பரப்பளவில் சோளமும், 1.80 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கம்பும், 1.40 இலட்சம் எக்டேர் பரப்பளவில் கேழ்வரகும், 0.70 இலட்சம் எக்டேரில் மக்காச் சோளமும் உயர் விளைச்சல் ரகங்களைக் கொண்டு பயிரிடப்படும். ஐ. எஸ். 3541, கோவில்பட்டி நெட்டை, சி.எஸ் எச். 1, சி. எஸ். எச். 5 சோளம், கே. எம். 1, கே. எம். 2 கம்பு, போன்ற ரகங்கள் மானாவாரிப் பகுதிகளில் உழவர்களால் பெருமளவில் விரும்பப்படுகின்றன. மானாவாரி நிலங்களில் இந்த ரகங்களை அதிக அளவில் பயிரிட வகைகள் மேற்கொள்ளப்படும். உயர் விளைவு இரகங்களைப் பயிரிட்டு அதிக விளைச்சல் பெற்றிடத் தகுந்த உழவியல் முறைகளும் மேற்கொள்ளப்படும். கீழ்க்கண்ட அளவில் சிறுதானிய வித்துக்களை உழவர்களுக்கு வழங்க வேளாண்மைத்துறை திட்டமிட்டுள்ளது.

| | | மெட்ரிக் டன் |
|---|---|---|
| 1 | கம்பு | 150 |
| 2 | சோளம் | 400 |
| 3 | கேழ்வரகு | 175 |
| 4 | மக்காச் சோளம் | 315 |
| | மொத்தம் | 1,040 |

### (இ) பயறு வகைப் பயிர்கள்

கோடையில், நெல்லை அடுத்து, கூடுதல் பரப்பு பயிரிடுவதன் மூலமாகவும், கலப்புப் பயிர் முறை மூலமாகவும் பயறு வகைப் பயிர்கள் பயிர் செய்யப்படும் பரப்பளவு, 9.70 இலட்சம் எக்டேரிலிருந்து 10.40 இலட்சம் எக்டேராக அதிகரிக்கப்படும்.



நிலக்கடலை, பருத்தி போன்ற பயறு வகைப் பயிர்களை கலப்புப் பயிராகப் பயிரிடும் முறை தீவிரப் படுத்தப்படும். நுண்ணுயிர் ஊட்டுதல், மணிச் சத்து உரங்களைப் பயன்படுத்துதல், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள் பயறு உற்பத்தியைப் பெருக்க பரந்த அளவில் மேற்கொள்ளப்படும். 1,600 மெட்ரிக் டன் தரமான விதைகளை விநியோகிக்க இத்துறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

### (ஈ) எண்ணெய் வித்துப் பயிர்கள்

நிலக்கடலை, எள் மற்றும் சூரிய காந்தி போன்ற எண்ணெய் வித்துப் பயிர்கள் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகப்படுத்தத் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இறைவைப் பருவத்தில் அதிகப் பரப்பளவில் நிலக்கடலை பயிரிடவும், மானாவாரிப் பருவத்தில் திருந்திய உழவியல் முறைகளை மேற்கொள்ளவும், சிறப்பான கவனம் செலுத்தப்படும். சுமார் 15,000 எக்டேர் கூடுதல் பரப்பளவில் நிலக்கடலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இவ்வாண்டின் நிலக்கடலை சாகுபடிப் பரப்பளவு 11 லட்சம் எக்டேராக இருக்கும். மானாவாரி நிலக்கடலைப் பயிருக்கு உரமிட குடியானவர்களை ஊக்குவிப்பதுடன், விவசாயத்துறை புதிதாகக் கண்டு பிடித்துள்ள நுண்ணூட்டக் கலவையைப் பயன்படுத்துதல், ஜிப்சம் இடுதல் போன்ற புதிய முறைகளைச் சுமார் ஒரு லட்சம் எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 1,08,000 மூட்டை நிலக்கடலை விதை இத்துறையின் மூலம் விநியோகிக்கப்படும்.

சூரியகாந்திப் பயிர் 25,000 எக்டேரில் கூடுதலாகப் பயிர் செய்யப்படும். இதன் மூலம் சூரியகாந்தியின் மொத்தப் பரப்பளவு 1.75 இலட்சம் எக்டேர் அளவுக்கு எட்டும். வேளாண் தொழில் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு உறு துணையாக இருப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் 900 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகள் விநியோகம் செய்யப்படும்.

### (உ) பருத்தி

கூடுதலாக 7,000 எக்டேர் பரப்பளவில் இறவைப் பருத்தியும் 20,000 எக்டேர் பரப்பளவில் மானாவாரிப் பருத்தியும் பயிரிட முயற்சி எடுத்துள்ளோம்.



12,000 எக்டேர் பரப்பளவில் வீரிய ஒட்டு இரகமான 'வரலட்சுமி' பருத்தி பயிர் செய்யப்படும். பஞ்சாயத்து யூனியன் டிப்போக்கள் மூலமாக 1,750 மெட்ரிக் டன் பருத்தி விதைகள் வழங்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசினர் உதவியுடன் மேலும் ஒரு தீவிர பருத்தி மேம்பாட்டுத் திட்டம் துவக்கப்படும். இந்த ஆண்டு 25 மெட்ரிக் டன் வரலட்சுமி விதைகள் நமது மாநிலத்திலேயே உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

### (ஊ) கரும்பு

தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் பாலக்கோடு சர்க்கரை ஆலைப்பகுதிகளில் கூடுதலாக 9,000 எக்டேர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் விளைச்சல் தரும் கரும்பு இரகங்கள் பயிரிடுவது பரவலாக்கப்படும். 24,000 எக்டேர் பரப்பளவுக்கு விதைக்கரணைகள் வழங்கப்படும்.

**சர்க்கரை ஆலைச் சாலை அபிவிருத்தித் திட்டம் :** சர்க்கரை ஆலைப்பகுதிகளில், கரும்பு போக்குவரத்தை எளிதாக்க, புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைச் செப்பனிடவும் இத்திட்டம் வகை செய்கிறது.

1977-78-ம் ஆண்டு புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளைச் செப்பனிடவும், ரூ. 85 இலட்சமும், பழைய சாலை

களைப் பராமரிக்க ரூ. 15 இலட்சமும், ஆலைப்பகுதிகளில் மத்திய அரசு உதவித் திட்டத்தில் இணைப்புச் சாலைகள் அமைக்க ரூ. 5 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 105 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### (எ) காய்கறிப் பயிர்கள்

காய்கறி அபிவிருத்தித் திட்டத்தைத் தீவிரப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 50,000 எக்டேர் பரப்பளவில் 6.88 இலட்சம் டன்கள் அளவுக்குக் காய்கறி உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலும், இம்மாநிலத்தின் மற்ற பெருநகர்ப் பகுதிகளிலும் வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைப்பது தீவிரப்படுத்தப்படும்.

### (ஏ) இடு பொருள் தொடர்பு நடவடிக்கைகள்

**1. விதைகளும், நாற்றுகளும் :** நெல், சிறுதானியம் மற்றும் பயறு வகைகளில் தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கென வேளாண்துறை 49 மாநில விதைப்பண்ணைகளை நிறுவியுள்ளது. நிலக்கடலை விதை உற்பத்தி 4 மண்டல விதைப்பண்ணைகளில் செயல்படுகிறது. தென்னங்கன்றுகள் 24 தென்னை நாற்றங்கால்களிலும், பழக்கன்றுகள் மற்றும் காய்கறிப் பயிர்கள் 19 மாதிரிப் பழத்தோட்டங்களிலும் இதர அரசுப் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தப் பண்ணைகள் யாவும் லாபகரமாக, மாதிரிப் பண்ணைகளாக அமைய நடவடிக்கை எடுக்கப்படும். சுமார் 12 இலட்சம் நெட்டை இரக தென்னைக் கன்றுகளும், 25,000 நெட்டை X குட்டை வீரிய ஒட்டுக்கன்றுகளும், 7 இலட்சம் பழக்கன்றுகளும் நடப்பு ஆண்டில் மேற்கூறிய பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும். 48 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் விநியோகிக்கப்படும். விதை அபிவிருத்திக்காக, 8,000 மெட்ரிக் டன் அளவுள்ள விதைகள் சுத்திகரிக்கும் திறன்கொண்ட 5 விதை மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல தரமான, சான்றிதழ் பெற்ற விதைகளை உற்பத்தி செய்து, உரிய காலத்தில் விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்வதே இத்துறையின் பெருநோக்கமாகும். புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள அண்ணா பண்ணையில், வீரிய ஒட்டு விதை உற்பத்தி பற்றிய பயிற்சி, விருப்பமுள்ள உழவர்களுக்கு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு பெருமளவில் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகிக்க, இத்துறையைச் சார்ந்த ''விதைச் சான்றிதழ் அளிக்கும் பிரிவு'' விரிவுபடுத்தப்படும்.

**இரசாயன உரங்கள் :—** புதிய புதிய இரகங்களின் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்தும் எந்த திட்டத்திலும் சீராக உரமிடுதலையும் தீவிரப்படுத்துதல் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு 1977-78-ஆம் ஆண்டு 2.75 இலட்சம் டன் தழைச்சத்து உரத்தையும், 0.70 இலட்சம் டன் மணிச்சத்து உரத்தையும், 0.70 இலட்சம் டன் சாம்பல்சத்து உரத்தையும் விநியோகிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திற்குத் தேவையான அளவு இவ்வுரங்களை பெறுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இவை 12,000 தனியார் மற்றும் கூட்டுறவுத் துறை விற்பனை மையங்கள் மூலமாக உழவர்களுக்கு விநியோகிக்கப்படும். மேலும் தகுந்த அளவில் உரமிடுதல் பற்றிய தீவிரப் பிரச்சாரமும் அதே சமயத்தில் மேற்கொள்ளப்படும். இயற்கையாக கிடைக்கும் தழைச்சத்து உரமான நீலப்பாசியின் உற்பத்தியையும், உபயோகத்தையும் விவசாயிகளுக்கு விளக்கும் பொருட்டும் விவசாயிகளே உற்பத்தி செய்து கொள்ளும் பொருட்டும் அதிக அளவில் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும்.

**பயிர்ப் பாதுகாப்பு :—** போதுமான அளவு பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் உள்ளன. பயிர்ப்பாதுகாப்பு கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1,000 புதிய விசைத் தெளிப்பான்கள் வாங்கி உழவர்களுக்கு குறைந்த வாடகைக்கு விடப்படும். நெற் பயிரில் தோன்றும் தண்டு துளைப்பான், நிலக்கடலையில் தோன்றும் சிவப்புக் கம்பளிப்புழு போன்ற பூச்சிகளும் மற்றும் நோய்கள் தாக்குதலில் இருந்து காப்பாற்ற சுமார் 60,000 எக்டேர் பரப்பளவில் மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்படும்.



புகையான் தாக்குதலைத் தவிர்ப்பதற்கென சுமார் 20,000 எக்டேர் பரப்பளவில் குறைந்த செலவில் மருந்து தெளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். பூச்சி தாக்குதலைப் பற்றிய 'கண்காணிப்பு முறை' சீரமைக்கப்படும். பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பற்றிய எச்சரிக்கைச் செய்திகள் அகில இந்திய வானொலியின் வாயிலாக உழவர்களுக்கு தொடர்ந்து அறிவிக்கப்படும். பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதல் குறித்து, காலத்தே உழவர்களுக்கு எச்சரித்திட, பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரியர்களின் பணி சிறந்த முறையில் பயன்படுத்தப்படும்.

### ஆராய்ச்சிப் பணிகள்

உயர் விளைச்சல் ரகங்கள், குறிப்பாக மானாவாரி மற்றும் புழுதி விதைப்புப் பகுதிகளுக்கு ஏற்ற பயிர் ரகங்களைசோதனைகள் மூலம் தேர்ந்தெடுக்கும் பணி தொடரப்படும். 31 நெல் ரகங்கள் பல்வேறு நிலையில் ஆய்வில் உள்ளன. புழுதி நிலப் பகுதிகளுக்கு ஏற்ற 3 இரகங்களும், களர் மற்றும் உவர் நிலங்களுக்கு ஏற்ற நான்கு இரகங்களும் இவற்றில் சேரும். இவ்வாய்வின் முடிவுகள், கன்னியாகுமரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உழவர்களுக்கு மிகப் பெரிய அளவில் பயனுடையதாய் இருக்கும். ''பயிர் உணர்வு ஆய்வுகளின்'' அடிப்படையில் மண் பரிசோதனையும் உரப் பரிந்துரைகளையும் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றவாறு அமைக்கப்படும். மானாவாரிப் பகுதிகளின் தேவைகளுக்கு சிறப்பான கவனம் செலுத்தப்படும். இதற்காக மானாவாரி சாகுபடி முறைகளை பற்றிய ஆய்வும், நீர் சேகரிப்பு நுட்ப முறைகள் பற்றிய ஆய்வும் மேற்கொள்ள'த் திட்டமிடப்பட்டுள்ளது.

### சிறப்புத் திட்டங்கள்

**மலைப்பகுதித் திட்டம்:—** நீலகிரி மாவட்டத்தின் தனித் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள மண்வளப் பாதுகாப்பு, விதை உற்பத்தி, சிறிய விவசாயிகளின் தேயிலை மற்றும் காப்பி தோட்டங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்களுக்காக ரூ. 84.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் தோடர்கள் மற்றும் மலைவாழ் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டங்கள் :—** புதுக்கோட்டை, கோவில்பட்டி பகுதிகளில் செயல்படுத்தப்படும் முன்னோடி மானாவாரி மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 14.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வாழையில் முடி கொத்து நோய்த் தடுப்பு :—** மலைவாழை மிகுந்த பரப்பளவில் பயிரிடப்படும் கொடைக்கானல் பகுதியில் கடுமையான அளவில் முடிக் கொத்து நோய் காணப்பட்டது. இந்நோய் பரவுதலைத் தடுக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழை சாகுபடியை சீராக்கவும் மாநில அரசு உரிய பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டுள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த, முறையான மருந்து தெளிப்பு முறைகளை தீவிரப்படுத்துவதுடன், சமச்சீர் உரமிடுதல் போன்ற உழவியல் முறைகளையும் பரிந்துரை செய்து, நோய் தாக்கப்பட்ட தோட்டங்கள் மீண்டும் வளம் காண வழிவகைகள் செய்யப்படும். இந்த ஆண்டில் 36,000 ஏக்கர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



### இந்திய ஜெர்மானிய நீலகிரி மாவட்ட அபிவிருத்தித் திட்டம்

1977-78-ம் ஆண்டில் 1,200 மெ. டன் நோய் தாக்காத விதை உருளைக் கிழங்குகள் விநியோகம் செய்யப்படும். 100 எக்டேரில் நூல்புழுவை கட்டுப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும். உயர் விளைச்சல் தரும் காய்கறி விதைகள் 19 மெ. டன் விநியோகம் செய்யப்படும். கூடுதலாக 20 எக்டேரில் பழக்கன்றுகளும், 120 எக்டேரில் மரவள்ளியும், 800 எக்டேரில் உயர் விளைச்சல் தரும் இஞ்சியும் மற்றும் 40 எக்டேரில் வாசனைத் திரவியப் பயிர்களும் பயிர் செய்யப்படும்.

### பயிற்சித் திட்டம்

உழவர்களுக்கு பயிற்சி அளிக்க இம்மாநிலத்தில் ஒன்பது உழவர் பயிற்சி நிலையங்கள் இதுவரை நிறுவப்பட்டுள்ளன. நடப்பு, ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், தர்மபுரி மாவட்டத்தில் ஒன்றும், ஆக இரண்டு உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாக நிறுவப்படும். இம்மாநிலத்தில் 13 விவசாயப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வேளாண் குடும்பத்தைச் சார்ந்த 390 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கை தொடர்ந்து நடத்தப்படும்.

### விற்பனையும் தரக்கட்டுப்பாடும்

நல்ல விற்பனை முறைகள் மூலம் விவசாயிகளின் வருவாயை அதிகமாக்கும் வகையில்வேளாண் துறையின் விற்பனைப் பிரிவு, பருத்தி தரம் பிரித்தல் மற்றும் எண்ணெய், நெய் போன்ற வேளாண் விளை பொருட்களின் தரம் பிரித்தல் போன்றவைகள், பரவலாக்க பிரத்தியேகமான கவனம் செலுத்தப்படும். 1977-78-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு ''அக்மார்க்'' ஆய்வுக் கூடங்களும், 10 தரம் பிரிக்கும் மையங்களும், 15 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தரம் பிரிக்கும் மையங்களின் வாயிலாக கூடுதலாக 1,29,000 குவிண்டால் பருத்தியைத் தரம் பிரிக்க உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



# 1977-78-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

நடப்பு ஆண்டில் ரூ. 112.58 லட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இத்திட்டங்கள் பெரும்பான்மையாக, தரமான விதைகள் உற்பத்தி செய்யவும், உழவர்களுக்கு நல்ல வசதிகள் கிடைப்பதற்கும் வழிவகை செய்யும். மாநில விதைப் பண்ணைகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அமைக்கப்படும். தரக் கட்டுப்பாட்டிற்கும், விதைகள் சான்றிதழ் செய்வதற்கும் தனியே ஒரு ஆய்வகம் நிறுவப்படும்.

'ரொபஸ்டா' வாழை பயிரிடுவதை அதிகரிக்க திருச்சி மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் 200 ஏக்கர் பரப்பளவில் நல்ல தரமான கன்றுகளை உற்பத்தி செய்ய சிறப்புப் பண்ணைகள் நிறுவப்படும்.

நல்ல தரமான கரும்பு ரகங்களின் இனப்பருக்கத்தை அதிகரிக்கும் பொருட்டு விதைக் கரணைகள் உற்பத்திக்காக 6 மண்டலப் பண்ணைகள் அமைக்கப்படும்.

நூல் புழு தாக்காத உருளைக் கிழங்கு விதைகள் தயார் செய்வதற்காக, ஹோசூரில் உருளைக் கிழங்கு விதை உற்பத்தி மையம் நிறுவப்படும்.

நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து பயன்படுத்துவதற்கு கூடுதல் துளைக்கருவிகள் வாங்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றரிப்பு தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 10,000 ஏக்கரில்நீர் பராமரிப்பு பகுதிகள் நிறுவப்படும்.

## வேளாண்மைப் பொறியியல்

வேளாண்மைப் பொறியியல் பிரிவு, நிலத்தையும், நீரையும் நல்ல முறையாகப் பயன்படுத்துதற்குரிய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும்.

### (அ) நிலச் சீர்திருத்தம்

நிலத்தை சமப்படுத்துவதற்கும், உழவு வேலைகளுக்காகவும் 163 புல்டோசர்களும், 177 டிராக்டர்களும், இத்துறை வசம் உள்ளன. 1977-78-ஆம் ஆண்டில் 4,600 எக்டேர் நிலம் புல்டோசர்கள் மூலமாக சமப்படுத்தப்படும். 20,200 எக்டேர் பரப்பளவில் டிராக்டர் மூலம் உழவு வேலைகள் மேற்கொள்ளப்படும்.



### (ஆ) சிறுபாசனம்

விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்காக இத்துறை வசம் 147 விசைத் துளைப்பான்களும் மற்றும் பல கருவிகளும் உள்ளன. 6,000 குழாய்க் கிணறுகள் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள 2,300 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2,000 கிணறுகளில் துளைகள் இடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### (இ) மண்வளப் பாதுகாப்பு

மண்வளப் பாதுகாப்பின் கீழ் சமதள வரப்புகள் அமைத்தல், படிப்பாத்திகள் அமைத்தல், நிலத்தைச் சமப்படுத்துதல் போன்ற முறைகள் 39,620 எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும். தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சி நிவாரணமாக 10,000 எக்டேர் பரப்பில் இதுபோன்ற திட்டங்கள் செயலாக்கப்படும். மதுரை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 4,000 எக்டேர் பரப்பளவில் ''காற்றரிப்புத் தடுப்பு முறைகள்'' மேற்கொள்ளப்படும்.

## புதிய முயற்சிகள்

(அ) நீர் பராமரிப்பு:—நமது மாநிலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய அளவு பாசன நீர் இல்லாதது ஒரு பெரும் குறை. கிடைக்கின்ற நீரினின்று அதிக அளவு பயன் பெற்றிட வாய்க்கால் வழியாகவும், வயலிலும் நீர் வீணாவதைத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்து குடியானவர்களிடம் பரப்பிட வேண்டும். இந்த லட்சியத்தைக் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டில் வைகை ஆற்றுப் பகுதியில் சுமார் 1,000 ஏக்கரில் ''நீர் பராமரிப்பு'' பற்றிய முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான பூர்வாங்க ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற ''நீர் பராமரிப்பு''த் திட்டங்கள் தஞ்சையிலும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) மானாவாரி சாகுபடி:— இதுகாறும் வேளாண்மைத் திட்டங்கள் பெருமளவு இறவைப் பகுதியிலேயே திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது. மானாவாரிப் பகுதிகளில், வேளாண் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த தீவிர முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும். மானாவாரிக்கான உழவியல் முறைகளைப் பரப்புதல், உயர் விளைச்சல் ரக சிறுதானியங்கள், பயறு வகைகள், பருத்தி மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை அதிக அளவில் பயிரிடச் செய்தல், இருபயிர் சாகுபடி மூலம் உற்பத்தித் திறனை கூடுதலாக்குதல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய முறைகளை உழவர்களுக்கு விளக்க பெருவிளக்கப் பண்ணைகள் நிறுவப்படும்.

(இ) பெருவிளக்கப் பண்ணைகள் விரிவாக்கப் பணியில் பெருவிளக்கப் பண்ணைகள் அமைப்பது ஒரு புதிய திட்டமாகும். இதன் குறிக்கோள் ஒவ்வொரு நீர் வரவுப் பகுதியிலும் நிலத்தையும், நீரையும் நல்ல முறையில் பயன்படுத்துவது ஆகும். நடப்பு ஆண்டில் சுமார் 2,000 விளக்கப்பண்ணைகள் குறைந்தது 60,000 விவசாயிகள் பங்கு கொள்ளும் வகையில் அமைக்கப்படும். சுமார் 25 விவசாயிகளுக்குச் சொந்தமான 20 ஏக்கருக்கு குறையாத நீர் வரவுப் பகுதியில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை அளவீடு செய்யப்படும். மண்ணின் தரம் பரிசோதிக்கப்பட்டு, மண் மற்றும் நீர் ஆகியவைகள் சேதமாகாமல் பாதுகாக்க வழி முறைகள் வகுக்கப்படும். மண் பரிசோதனையின் முடிவுக்கு ஏற்ப, நிலச் சீர்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படும். முறையாக இயற்கை உரங்களை பயன்படுத்தி மண்வளத்தைப் பாதுகாக்கும் நுட்பமுறைகள் செயல்விளக்கமுறையில் விளக்கிக் காட்டப்படும். இந்தப் பகுதிக்கு ஏற்பவும், விவசாயிகளுக்கு ஆதாயமானதாகவும் இருக்கும் பயிர்முறைகள், மற்றும் உழவியல் முறைகள் உருவாக்கப்பட்டு விவசாயிகளின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இவ்விளக்கப் பண்ணைகள் அம்மாவட்டத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்கள், தேர்தெடுக்கப்பட்ட பண்ணையின் விவசாயிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். இப்பண்ணைகளைக் காணும் பொருட்டு மற்ற விவசாயிகள் குழுவாகச் சேர்த்து அழைத்துச் செல்லப்படுவார்கள். இம்முயற்சி பாசனப்பகுதிகளிலும், மானாவாரிப் பகுதிகளிலும் நிலத்தையும் நீரையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு வழி வகுக்கும்.

[1977-78-ஆம் ஆண்டிற்குரிய வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையிலிருந்து தொகுக்கப் பெற்றது.]



# மாநிலக் கூட்டுறவு வங்கியின் மகத்தான பணிகள்!

மு. அகமது, ஐ.ஏ.எஸ்.
தனி அதிகாரி, நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி.

1905-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டது தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி. இது 71 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. சிறப்பான வகையில் தனது கூட்டுறவுப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான பயிர்க் கடன் உதவிகளை வழங்கியதன் மூலம் தமிழ் நாட்டின் பசுமைப் புரட்சியை மலரச் செய்ததில் தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு முக்கிய பங்கு உண்டு.

வங்கியின் அதிகாரம் பெற்ற பங்கு மூலதனம் ரூ. 500 இலட்சம். தமிழக அரசு ரூ. 126.00 இலட்சத்தை வங்கியின் பங்கு மூலதனத்துக்குச் செலுத்தியுள்ளது ; 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் ரூ. 335.01 இலட்சம் செலுத்தியுள்ளன ; எஞ்சிய தொகையை தனி நபர்கள் வழங்கியுள்ளனர்.

## சேம நிதியும் இதர நிதிகளும்

30-6-77ல் வங்கியின் சேம நிதி ரூ. 185.50 இலட்சமாக இருந்தது. ஒவ்வொரு ஆண்டிலும் அடைந்து வந்த நிகர இலாபத்திலிருந்து 25 சதவிகிதத் தொகையை ஒதுக்கியதன் மூலம் இந் நிதி வளர்ந்து உயர்ந்துள்ளது. விவசாயக் கடன் நிலை நிறுத்த நிதியில் ரூ. 428.59 இலட்சம் சேர்ந்துள்ளது. வங்கியின் நிகர இலாபங்களிலிருந்து 15 சதவிகிதமும் அரசாங்கப் பங்குத் தொகையின் மீது 3 சதத்திற்கு அதிகமாகவுள்ள டிவிடெண்டு, வட்டி 3 சதம், அரசு மானியம் ஆகியவைகளின் கூடுதல் மூலம் சேர்க்கப்பட்ட தொகையும் கொண்ட இந் நிதியானது, இயற்கையின் விளைவு காரணமாக நாட்டில் வேளாண்மை பாதிக்கப்பட்ட சமயங்களில் மத்திய வங்கிகள் வாங்கிய குறுகிய கால விவசாயக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றிக் கொடுக்கப் பயன்படுத்தப்படுகிறது. விவசாயக் கடன் நிலை நிறுத்த நிதியை மேலும் வலுப்படுத்த தமிழக அரசு ரூ. 84.42 இலட்சம் கடன் உதவியையும் இந் நிதிக்கு வழங்கியுள்ளது. வங்கியின் இதர சேமிப்பு நிதிகள் ரூ. 133.67 இலட்சம் சேர்ந்துள்ளன.

## டிபாசிட்டுகள்

30-6-76ல் வங்கியில் ரூபாய் 3,988.08 இலட்சம் டிபாசிட்டுகள் நிலுவை இருந்தன. 30-6-77-ல் இவை ரூபாய் 5,607.10 இலட்சமாக உயர்ந்தன. இதில் ரூ. 500 இலட்சம் அரசு முதலீடு செய்த டிபாசிட் தொகையும் அடங்கும். 1976-77ஆம் ஆண்டில் டிபாசிட்டுகளின் வளர்ச்சி 40.6 சதவிகிதமாகும்.

## கடன்கள்

30-6-77ல் வங்கி வாங்கியிருந்த கடன்களின் மொத்தம் ரூ. 8,629.55 இலட்சம். கீழ்க் கண்ட வழி வகைகள் மூலம் இது பெறப்பட்டதாகும்; இந்திய ரிசர்வ் வங்கி ரூ. 7,963.29 இலட்சம். தொழில் மேம்பாட்டு வங்கி ரூ. 1.4 இலட்சம், விவசாய மறுநிதி முதலீடு மேலும் மேம்பாட்டு நிறுவனம் ரூ. 62.26 இலட்சம், தமிழக அரசு ரூ. 500 இலட்சம். இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றிருந்த கடன் ரூ. 7,963.29 இலட்சத்தில் ரூ. 4,506.18 இலட்சம் பருவ கால விவசாய நடவடிக்கைக்கு அவ்வங்கியால் வழங்கப்பட்ட கடனுகும். வறட்சியால் ஏற்பட்ட வேளாண்மை நட்டம் காரணமாக குறுகிய காலக் கடனை மத்தியக் காலக் கடனுக மாற்றவும், மத்தியக் காலக் கடனின் தவணைகளைத் திருத்தியமைக்கவும் ரூ. 3,216.10 இலட்சமும், கைத்தறி துணி உற்பத்தி விற்பனை நடவடிக்கைகளை ஊக்குவிக்க வழங்கப்பட்ட ரூ. 241.01 இலட்சமும் ரிசர்வ் வங்கியின் மற்ற கடன்களாகும்.

## முதலீடுகள்

மத்திய, மாநில அரசாங்கங்களின் கடன் பத்திரங்கள், நில வள வங்கியின் கடன் ஈட்டுப் பத்திரங்கள், தமிழ்நாடு மின்சார வாரியக் கடன் பத்திரங்கள், இதர ட்ரஸ்ட் பத்திரங்கள் ஆகியவைகளில் வங்கி செய்திருந்த முதலீடு ரூ. 1,466.18 இலட்சம் ஆகும். வங்கிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் சம்பந்தமாக மத்திய அரசின் சட்டத்தின் நிபந்தனைக்கேற்ப, கூட்டுறவு வங்கிகள் கேட்பின்போதும் மேலும் கால வரையறையின் போதும் அவை கொடுக்க வேண்டிய பொறுப்புகளின் மொத்தத் தொகையில் 25 சதவிகிதத்தை அங்கீகரிக்கப் பெற்ற கடன் ஈட்டு பத்திரங்களில் முதலீடு செய்து வைக்க வேண்டியிருப்பதற்கிணங்க இந்த முதலீடுகள் செய்யப்பட்டன.

## இலாபம்

1976-77ஆம் ஆண்டில் வங்கி ரூ. 110 இலட்சம் நிகர இலாபம் அடையும் (இப்புள்ளி தணிக்கைக்கு உட்பட்டதாகும்). 1975—76 ஆண்டில் வங்கிபெற்றிருந்த நிகர இலாபம் ரூ. 73.93 இலட்சத்துக்கு இது கணிசமான உயர்வாகும். 1975-76 ஆண்டில் செலுத்தப்பட்ட பங்குத் தொகையின் பேரில், கூட்டுறவுச் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட உச்ச அளவான, 9 சத டிவிடெண்டை வங்கி வழங்கியது.

## கிளைகள்

சென்னை நகரில் பல பகுதிகளில் வங்கியின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் 23 கிளைகளாக இருந்தவை தற்போது 26 கிளைகளாக உயர்ந்துள்ளன. 1977 மார்ச்-ஏப்ரலில் 3 புதிய கிளைகள் துவக்கப்பட்டன. மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் நிறுவப் பெற்றுள்ள இக்கிளைகள் அனைத்தும் பொது மக்களின் வசதிக்கேற்ப காலையிலும் மாலையிலுமாக நாள்தோறும் இரண்டு முறை செயல்பட்டு வருகின்றன. வாரம் முழுவதும் (7 நாட்களிலும்) 5 கிளைகள் செயல்பட்டு வருகின்றன. 4 கிளைகளிலும் தலைமை அலுவலகத்திலும் பாதுகாப்புப் பெட்டக வசதி நிறுவப்பட்டு பொதுமக்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## புதிய டிபாசிட் திட்டங்கள்

பொது மக்களை ஊக்குவித்து புதிய டிபாசிட்டுகளைத் திரட்டும் முயற்சியில் வங்கி வெற்றி முகம் கண்டுள்ளது. 33 புதிய டிபாசிட் திட்டங்களை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. வழக்கமாக நடைமுறையிலுள்ள டிபாசிட்டுகளுடன், பென்ஷன் திட்டம், மாணவர்களின் கல்வி வசதிக்கு வழங்கும் டிபாசிட் திட்டம், திருமண டிபாசிட் திட்டம், வீடுகட்ட உதவும் டிபாசிட் திட்டம்போன்ற பல திட்டங்களுடன், இன்ஸ்யூரன்ஸ் பாதுகாப்பு இணைந்த நிரந்தர டிபாசிட், ரெக்கரிங் டிபாசிட் ஆகியவைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மேலும் "உங்கள் விருப்ப திட்டம்" என்ற பெயரில் அவரவர்களின் விருப்பம் போல் பணம் டிபாசிட் செய்து திரும்பப் பெற வாய்ப்பளிக்கும் ஓர் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இணைக்கப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் சில கவர்ச்சியான டிபாசிட் திட்டங்களைப் பற்றியும் வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது. அண்மையில் ஓர் புதிய முறைச் சேமிப்புக் கணக்கு ஏற்பாட்டை வங்கி பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் இதற்காக உள்ள சிறப்பு வகை சேமிப்புக் கணக்கை ஒருவர் ஏதாவது ஒரு கிளையில் ஏற்படுத்திஞல் போதும்; நகரிலுள்ள எந்த ஒரு கிளையிலும் மேற்படி கணக்கில் அவர் வரவு-செலவு செய்ய வசதி வழங்கப்படுவார்.

## நலிந்தோர்க்கு உதவி

தங்க நகைகள் மீது கடன் வழங்கும் ஏற்பாடு 1976ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வங்கியின் மூன்று கிளைகளில் முதன் முறையாகத் துவங்கப்பட்டது. நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 3 கிளைகளுக்கு இது மேலும் விரிவாக்கப்பட்டது. மற்றும் உள்ள இதர கிளைகளிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த ஏற்பாடுகள் உள்ளன. 30-6-77ல் நகைக் கடன் நிலுவை ரூ. 14.91 இலட்சமாகும். 2,352 கடன் கணக்குகளுக்குச் சம்பந்தப்பட்ட தொகையாகும் இது. மத்திய கூட்டுறவு வங்கிகள் அவைகளின் கிளைகள் மூலமும், மத்திய வங்கிகளுக்கு இணைக்கப்பட்ட ஆரம்ப விவசாய நாணயச் சங்கங்கள், நகர வங்கிகள் ஆகியவைகள் மூலமும் வழங்கிய நகைக் கடன்களுக்கு உரிய மறு கடன் வசதியாக வங்கி மத்திய வங்கிகளுக்கு ரூ. 999 இலட்சம் உதவ ஏற்றுக்கொண்டது. 30-6-77ல் இந்த வகையில் மத்திய வங்கிகள் மீது ரூ, 651.28 இலட்சம் கடன் நிலுவை இருந்தது.

## நலிந்த பிரிவினருக்கு சுயதொழில் கடனுதவி

நலிந்த பிரிவினருக்குக் கடன் வழங்கும் பணியிலும் வங்கி ஈடுபட்டுள்ளது. சைக்கிள்கள், சைக்கிள் ரிக்ஷா, தையல் இயந்திரம், மாவு அரவை செய்யும் இயந்திரம், நடமாடும் 'இஸ்திரி' வண்டி முதலியன வாங்கி, அவை மூலம் சுயதொழில் செய்து தங்கள் பொருளாதார நிலையை வளமாக்கிக் கொள்ள 327 நபர்களுக்கு சென்னை நகரில் ரூ. 2.99 இலட்சம் கடன் உதவியை நேரடியாக கிளைகள் மூலம் வங்கி வழங்கியது. தவிர, மத்திய வங்கிகளுக்கும் இத்திட்டத்தின்கீழ் மறு நிதி வசதி அளிக்க வங்கி முன் வந்துள்ளது.

## அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்

மக்களின் அவசியத் தேவைகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் அவற்றின் விநியோகத்தை மேற்கொண்டு வெற்றி கண்டு வருகின்றன. கிராம விவசாய சங்கங்களுக்கு இதன் தொடர்பாகத் தேவைப்படும் நிதி வசதியினை வழங்க கூட்டுறவு மத்திய வங்கிகள் முன் வந்துள்ளன. அந்த வங்கிகளுக்கு மாநில வங்கி மறு நிதி வசதியை வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. இதற்காக மத்திய வங்கிகளுக்கு ரூ. 207 இலட்சம் 'காசுக்கடன்' வசதியை மாநில வங்கி அனுமதித்தது. 30-6-77ல் இந்த வகையில் நிலுவையிருந்த தொகை ரூ. 70.22 இலட்சம்.



### கோ-ஆப்டெக்ஸுக்கு உதவி !

தமிழகத்தில் கைத்தறி துணி விற்பனைப் பணியில் முன்னணியில் இருந்து செயலாற்றி வரும் 'கோ-ஆப்டெக்ஸ்' நிறுவனத்துக்கு வங்கி அவசியமான காசுக் கடன் வசதியை வழங்கி உதவி வருகிறது. இதற்கு இந்திய ரிசர்வ் வங்கியின் மறு நிதி உதவி மாநில வங்கிக்கு இருந்து வந்தபோதிலும் அந்த வசதி சில சமயங்களில் பற்றாமலிருந்தாலும் வங்கியானது அதன் சொந்த நிதி கொண்டு இந்த உதவியைத் தொடர்ந்து நீடித்து வந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் துணிகளைப் பொதுமக்கள் பெருமளவில் வாங்கி ஆதரிக்க 'வண்ணப் புதையல்' திட்டம் என்ற ஒரு புதிய டிபாசிட் திட்டத்தை வங்கி துவக்கியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### சர்க்கரை ஆலைகளுக்குக் கடன் வசதி

சர்க்கரை ஆலைகளுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கி தேவையான முதற்பொருள் நிதி உதவியினை வழங்கி கூட்டுறவு சர்க்கரை உற்பத்தித் தொழில் வளர வகை செய்துள்ளது. 30-6-76ல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு இவ் வங்கி வழங்கிய உதவி ஒன்றும் இல்லை. 30-6-77ல் இந்த நிலை மாறி ரூ. 180 இலட்சமாக இக் கடன் வசதியில் நிலுவை இருந்தது. இதில் ரூ. 24 இலட்சம் தொழில் மேம்பாட்டு உதவி வங்கியிலிருந்து மறு நிதி உதவி மூலம் மாநில வங்கி பெற்றதாகும்.

### உர விநியோகம்

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் இம் மாநிலத்திலுள்ள விவசாய மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகத்தை மேற்கொண்டுள்ளது. தஞ்சை, நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் இணையத்தின் இப் பணி நடைபெற்று வருகிறது. இந்த இரு மாவட்டங்களிலும் உள்ள மத்திய வங்கிகளுக்கும், தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துக்கும் உர விநியோகப் பணிக்காகத் தேவைப்படும் கடன் வசதி அனைத்தையும் மாநில வங்கி உதவி வருகிறது.

### பயிற்சி

வங்கி அதிகாரிகள் அவர்களது பணியினை சிறப்புடன் செயலாற்ற அவர்களுக்கு பயிற்சித் திட்டத்தை மாநில வங்கி செயல்படுத்தி வருகிறது. வங்கி முறையின் பல்வேறு பிரிவுகளின் செயல் முறை விளக்கங்கள் அவர்களுக்கு வழங்கப்பெற்று, அவர்களின் திறன் சிறப்புற இந்தப் பயிற்சி முறை பெரிதும் உதவியுள்ளது. தவிர, இந்திய ரிசர்வ் வங்கி, பூனாவில் உள்ள வைகுந்தலால் மேத்தா பயிற்சிநிலையம் ஆகியவைகள் அவ்வப்போது நடத்தும் பயிற்சிக்கும் வங்கி அதிகாரிகள் அனுப்பப்படுகிறார்கள்.

# அரிசன-பழங்குடியினருக்குப் பயிற்சியும் வேலை வாய்ப்பும்

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு நடத்தும் தேர்வு எழுதப் பயிற்சி அளித்தல்:

அரிசனங்கள் மற்றும் பழங்குடியினருக்கான வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழுவால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்ற 4வது தொகுதிப் பணிகளுக்கான போட்டித் தேர்வு எழுதுகின்றவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நான்காவது தொகுதிப் பணியாளர்களுக்கான போட்டித் தேர்வு தொடங்குவதற்கு முந்திய ஐந்து திங்கள் கால அளவுக்கு இப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மாநிலத்தில் மொத்தம் 15 பயிற்சி நிலையங்கள் உள்ளன. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 1.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### அகில இந்தியப் பணிகள் போட்டித் தேர்வுகள் எழுதும் அரிசன, பழங்குடி இனத்தவருக்கான தேர்வு முன் பயிற்சி நிலையம் :

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முதலிய அகில இந்தியப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுதும் அரிசன, பழங்குடி இனத்தவருக்கு தனிப் பயிற்சி அளிப்பதற்கான, தேர்வு முன் பயிற்சி நிலையம் ( Pre Examination Training Centre) தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 11வது பயிற்சி வகுப்பிற்காக இந்தியா முழுவதிலும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஒரு மாணவர் இல்லம் உண்டு. இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிலுகின்ற அனைவரும் இல்லத்தில் தங்கிப் பயில வேண்டும். உணவுச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 ஒதுக்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் ரூ. 2.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வுகளில் இறுதியாக வெற்றி பெற்று அப்பணிகளில் நியமிக்கப்படும் இப் பயிற்சி நிலையத்தின் தமிழ்நாட்டு மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மானியமாக வழங்கப்படுகிறது. இத் திட்டம் திறமையான மாணவர்கள் இப் பயிற்சி நிலையத்தில் சேர்வதற்கும் அவர்களது தேர்வினை ஊக்குவிக்கும் பொருட்டும் 1977-78ஆம் ஆண்டில் இருந்து செயல்படுகின்றது.

### ஊக்க உதவித் திட்டம்

ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலிரண்டு இடங்களைப் பெறுகின்ற 2 அரிசன மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் கல்லூரிக் கல்வியைத் தொடர்வதற்கு உதவியளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 80 சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இதற்கு வருமான வரம்பு எதுவுமில்லை. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவர்கள், அரிசன மாணவர் இல்லங்களில் தங்க வேண்டும் என்ற முன் நிபந்தனை எதுவும் விதிக்கப்படுவதில்லை.

# படமும் செய்தியும்



தமிழகத்திற்கு வருகை தந்த மாண்புமிகு இந்திய விமானப்போக்குவரத்து-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு புருஷோத்தம் எல். கௌசிக் அவர்களுக்கு சென்னை தாஜ் கோரமண்டல் ஹோட்டலில், 24-9-1977 அன்று அளிக்கப்பட்ட விருந்தின்போது, மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களால் நினைவுச் சின்னம் வழங்கப் பெற்றது.



மேஜர் ஜெனரல் திரு சுந்தரம் அவர்கள் 30-9-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.



ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் சார்பாக இந்தியாவில் உள்ள தூதர் திரு திரிக் ஆன்கென் அவர்கள், 30-9-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.



சென்னை மாநகராட்சியின் பொதுமக்கள் குறைதீர்க்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள், 30-9-'77 அன்று, சென்னை இராயபுரத்தில் துவக்கி வைத்து, பொதுமக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார்.



அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை யொட்டி, 2-10-1977 அன்று, சென்னை காமராஜ் சாலையில் உள்ள காந்தியடிகள் சிலைக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலை அணிவித்தார்.



த் தந்தை மகாத்மா காந்தியின் பிறந்த ளை முன்னிட்டு, 2-10-1977 அன்று, ன்னை காமராஜ் சாலையில் உள்ள ண்ணல் காந்தியடிகள் சிலைக்கு, ண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு .ஜி.ஆர். அவர்கள் மாலை அணிவித்தார்.



காந்தியடிகள் பிறந்தநாள் விழாவை யொட்டி, சென்னை குறளகத்தில் உள்ள 'காதி கிராப்ட்'டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 2-10-1977 அன்று கதர் விற்பனையைத் துவக்கி வைத்தார்.

காந்தியடிகள் பிறந்தநாள் விழாவை யொட்டி மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், 2-10-1977 அன்று, சென்னையில் உள்ள அரசினர் பொது மருத்துவ மனையில் தொழுநோய்ப்பிணியாளர் பிரிவைத் துவக்கி வைத்துப் பார்வை யிட்டார். அவ்வமயம் தொழுநோய்ப் பிணியாளர் ஒருவருக்கு, ஆளுநர் அவர்கள் இனிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலைய "வீடும் வயலும்" என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்புத் திட்டத்தை, 2-10-1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். விழாவிற்கு மாண்புமிகு தமிழகவேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை தாங்கினார். அவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், செங்கற்பட்டு மாவட்ட சிறு உழவர்களுக்கு, சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வேளாண்மைக் கருவிகளை வழங்கினார்.





சென்னை காந்தி மண்டபத்தில் 2-10-1977 அன்று நடைபெற்ற காந்தியடிகள் பிறந்தநாள் விழாவில் திரு ஆச்சாரிய கிருபளானி அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர் அவர்களுக்குக் கதர் ஆடைகளை வழங்கினார். ▼

▼ சென்னை கிராமோதயக் பவனில் 3-10-1977 அன்று நடைபெற்ற கதர் நாள் விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்கு, முதன் முதலாகக் கதர் துணிகள் விற்பனை செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர் அவர்கள் கதர் விற்பனையைத் துவக்கி வைத்தார்.







◄ உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, சென்னை, சர்தார் வல்லபாய் பட்டேல் சாலையில் உள்ள காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை, 2 - 10 - 1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்தார். மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என். கிருஷ்ண மூர்த்தி அவர்களும் அருகில் உள்ளனர்.

▼ அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவையொட்டி சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்ற நூற்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 3-10-1977 அன்று பரிசுகள் வழங்கினார்.



▼ தேசிய குடும்பநலஇருவார விழாவை முன்னிட்டு, 4-10-1977 அன்று, சென்னையில் தொழிலாளர் நாள் விழா நடைபெற்றது. அவ்விழா வில் மாண்புமிகு தமிழக கைத்தறி அமைச்சர் திரு கே. இராஜாமுகமது அவர்கள் கலந்து கொண்டு சிறப் புரையாற்றினார்.





மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் தலைமையில், 30-9-1977 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் அலுவலர்களின் மாவட்ட சமூக நல மாநாடு நடைபெற்றது.

வனவிலங்கு வார விழாவை 3-10-'77 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழக உணவு-வனத் துறை அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபு தாஸ் பட்வாரி அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்.




# டான்சியின் புகழ்க்கோபுரம்!

டான்சியின் மொத்த உற்பத்தியில் 'பெரிய கட்டுமானத் தொழிற்சாலைகள்' (Structural Works) கால் பங்கு உற்பத்தியைச் செய்து விடுகின்றது.

இத் துறையில், இயங்கிவரும் மூன்று தொழிற்சாலைகள் சென்னை அம்பத்தூரிலும், சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணையிலும், திருச்சியிலும் இயங்கி வருகின்றன.

சென்னை தொழிற்சாலை, விசாகப்பட்டினத்திலுள்ள இந்துஸ்தான் கப்பல் தளத்திற்கும், திருச்சியிலுள்ள பாரத கனரகத் தொழிற்சாலைக்கும் திறம்பட கட்டுமான வேலைகள் செய்து வருகின்றது.

மேட்டூர் அணையிலுள்ள தொழிற்சாலையில் கட்டுமான வேலைக்கான வசதிகளுடன், தென்னிந்தியாவிலேயே மிகப் பெரியதாக உள்ள முலாம் பூசும் அறையும் உள்ளது. இரயில்வேக்காக இந்தத் தொழிற்சாலையால் உற்பத்தி செய்து தரப்பட்ட 'மைக்ரோவேவ்' கம்பங்கள் அனைத்திந்தியப் பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது. திருச்சியில் அமைந்திருக்கும் பாரத கனரகத் தொழிற்சாலைக்குத் தேவையான கட்டுமான வேலைகளைச் செய்து வருகிறது.

தபால் தந்தி, இரயில்வேத் துறைக்குத் தேவையான கட்டுமான வேலைகளையும் இத்தொழிற்சாலை செய்துள்ளது.

'ஆர்ய பட்டா' செயற்கைக் கோளுக்குத் தேவையான 110 மீட்டர் கோபுரம், 'டான்சி' தான் தயாரித்து உள்ளது.

குடிநீர் வடிகால் வாரியத்திற்குத் தேவையான இரும்புக் குழாய்கள், வீட்டு வசதிவாரியம், நகராட்சிகளுக்குத் தேவையான பொருள்கள், ஆவடி டாங்க் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணங்கள் முதலானவற்றை இந் நிறுவனம் தயாரித்து வழங்கி வருகின்றது.

'இயந்திரக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள்' கிண்டி, அம்பத்தூர், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. கிண்டிக் கூடம், இந்தத் துறையில் அனைத்திந்திய தொழிற்சாலைகளுள் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதன் உற்பத்திகள், தும்பா ஏவுகணை நிலையம், சித்தரஞ்சன் லோகோ தொழிற்சாலை போன்ற பெரு நிலை தொழில் நிலையங்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றன.

'தோல் பதனிடும் தொழிற்சாலைகள்' உலகத் தோல் சந்தைகளில் ஒவ்வொரு ஆண்டும் பங்கு பெற்றதன் பயனாக, டான்சியின் தோல் பதனிடும் தொழிற்சாலை ( Tannery ) அனைத்துலகிற்கும் நன்கு அறிமுகமாகியிருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் என்ற ஊரில் இயங்கி வரும் இந்தத் தொழிற்சாலை, பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கும் பதனிட்ட தோல்களை ஏற்றுமதி செய்து வருகின்றது.



மத்திய இரயில்வேயினருக்காக 'ஜான்சி' என்ற இடத்தில், 'டான்சி' நிறுவியுள்ள 100 மீட்டர் உயரமுடைய 'மைக்ரோவேவ்' கம்பங்கள்.



# 'மோபெட்' மோட்டார் சைக்கிள்

**கா**லை நேரம்!

அதோ! அந்தத் தொழிற்கூடத்தில் தொழிலாளர்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் மத்தியில் இயந்திரங்கள் இயங்குகின்ற சத்தம் காதைத் துளைக்கிறது.

ஒரு பிரிவில், பல்வேறு இயந்திரங்களிலிருந்து வந்த பாகங்கள் எல்லாம் ஒரு சேர இணைக்கப்படுகின்றன. முடிவில் பார்க்கிறோம். அதுதான் 'மோபெட்'!

ஆம். 'மோபெட்' (MOPED) மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் தமிழ்நாடு 'மோபெட்' நிறுவனத்தின் தொழிற்கூடம் தான் அது!

சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ள இந்தத் தொழிற்கூடம், நவீன வடிவமைப்புள்ள இந்த அழகிய சைக்கிளைக் கடந்த ஆறு மாதங்களாகத் தயாரித்து வருகிறது.

ஆமாம்! 'மோபெட்' என்றால் (MOPED) என்ன? MOTOR என்ற சொல்லும் PEDAL என்ற சொல்லும் சேர்ந்து 'MOPED' என்று ஆகிவிட்டது!

முழுவதும் சுதேசி பாகங்களைக் கொண்டே தயாரிக்கும் இந்த 'மோபெட்' 'மினி' மோட்டார் சைக்கிள் ஆமத்நகர் ஆராய்ச்சி நிலையத்தில் கடும் சோதனைக்கு உட்பட்டு வெற்றி கண்டிருக்கிறது.

இந்த 'மினி' மோட்டார் சைக்கிளுக்கான வடிவமைப்பு (Design) இங்கேயே உருவாக்கப்பட்டதாகும். இதற்கான பாகங்கள் அனைத்தும் இந்நிறுவனமே தயாரித்துக் கொள்கிறது.

தகடுகளை வடிவமைக்கும் இயந்திரம்.





ஆய்வுக்கூடத்தில் . . . .

'மோபெட்' எளிமையானது; ஆனால், எஃகுப் போன்று உறுதியானது. விலையோ, நாம் எல்லோரும் வாங்கக் கூடிய அளவுக்குக் குறைவானது. ஆம். இதன் விலை வரிகள் நீங்கலாக ரூ. 2,200. 'பவர்' உள்ள வண்டிகளில் இதுதான் குறைந்த விலை என்றும் கூறப்படுகிறது.

கிண்டியில் உள்ள இந்தத் தொழிற்கூடத்தில் பல்வேறு பிரிவுகள் உள்ளன.

சைக்கிளின் பாகங்கள் எந்த உருவில் (Shape) வேண்டுமோ அந்த உருவில் பெற ஒரு பெரிய இயந்திரம் துணை செய்வதைப் பார்க்கிறோம்.

மிகுந்த அழுத்துந் திறனுள்ள ஒரு இயந்திரம் 'டை' (Dye) மூலம் பல பாகங்களைத் தயாரித்

கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ள இத்தொழிற்கூடத்தில் 250 பேர் பணியாற்றுகிறார்கள். 'மோபெட்'டுக்குப் பெரும் ஆதரவு இருப்பதால், அதனைப் பெருமளவில் தயாரிக்க இந்தத் தொழிற்கூடத்தில் போதிய இடமில்லை. எனவேதான், இத்தொழிற்கூடம் தற்போது உருவாகி வரும் மறைமலை நகருக்கு மாற்றலாகவிருக்கிறது. இன்னும் ஆறு மாதத்தில் இது அங்கு தன் உற்பத்தியைத் தொடங்கும். இதன் மூலம் வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்த ஆண்டில் 4,000 'மோபெட்' தயாராகும். அடுத்த ஆண்டில் 10,000மும், அதற்கு அடுத்த ஆண்டு 15,000மும் இப்படிப் படிப்படியாகக் கூடுதலாகிக் கொண்டே இது தன் உற்பத்தி எண்ணிக்கையை அதிகரிக்கும்.

இந்த அழகிய 'மினி' மோட்டார் சைக்கிளுக்கு வெளியில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. இதற்குக் காரணம், தரமும், நல்ல உழைப்புமேயாகும்.

வண்டி ஓடிக்கொண்டிருக்கும் போது பெட்ரோல் தீர்ந்துவிட்டால், காலால் மிதித்து இதனை ஓட்டலாம்; ஒரு லிட்டர் பெட்ரோலில் 60—65 கிலோ மீட்டர் தூரம் வரை போக முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக இது உறுதியானது.

'மோபெட்'டில் 400 பாகங்கள் உள்ளன. இதில் 200 பாகங்கள் ஆன்ஸிலரி தொழில்களிடமிருந்து கிடைத்துள்ளன.



அழுத்துந் திறனுள்ள இயந்திரம்.

'மோபெட்'டின் பாகங்கள் பற்ற வைக்கப்படுகிறது.





சக்கரம் பரிசோதிக்கப்படுகிறது.

துத்தள்ளிக் கொண்டே இருக்கிறது.

இங்குத் தயாராகும் பாகங்கள் (Parts) எல்லாம் ஆய்வு செய்வதற்கென்றே ஒரு தனிப் பிரிவு (Inspection) உள்ளது. இந்தப் பிரிவில் அந்தப் பாகங்கள் ஆய்வு செய்யப்பட்ட பிறகே அவை இணைக்கும் பகுதிக்கு (Vehicle Assembly) அனுப்பப்படுகின்றன.

பாகங்களைப் பற்ற வைப்பதற்கும், அவற்றுக்கு வண்ணம் பூசுவதற்கும் தனித் தனிப் பிரிவுகள் உள்ளன.

'மோபெட்'டுக்குத் தேவையான எல்லாவிதக் கடைசல் சாமான்களைத் தயாரிப்பதற்கென்றே, தனியே ஒரு இடத்தில் ஒரு தொழிற்கூடம் (Machine Shop) இயங்கி வருகிறது.

காலத்துக்கு ஏற்ற வகையில் நவீன வடிவமைப்புடன் மோபெட்டைத் தயாரிக்கவும் இந் நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. 'லைட்', 'சீட்' போன்றவற்றை மாற்றியமைக்கும் பணியிலும் இது இறங்கியிருக்கிறது. மாதிரிக்காகப் புது மாடல் 'மோபெட்' ஒன்றும் இங்கே தயாரிக்கப் பெற்று காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

டான்சியின் (TANSI) ஒரு பிரிவாக இயங்கி வந்த 'மோபெட்' தொழிற்சாலை 19—8—77 முதல் தனி நிறுவனமாகச் (Tamilnadu Mopeds Limited) செயல்படுகிறது. இது, தமிழகம் தவிர பிற மாநிலங்களிலும் 'மோபெட்'டுகளைப் பெருமளவில் விற்பனை செய்து வருகின்றது.

பாண்டிச்சேரி, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் இங்கெல்லாம் விற்பனை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. மகாராஷ்டிராவில் இப்போது விற்பனை துவக்கப்பட்டிருக்கிறது.

எனவே, 'மோபெட்' நிறுவனம் மேலும், மேலும் பலப்பல வடிவமைப்புகளில் வகை வகையான வண்டிகளைத் தயாரித்துத் துரிதப் போக்குவரத்துக்குத் துணை செய்யும் ஒரு தன்னிரகற்ற தனி நிறுவனமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை!

**

—பி. வி. கிரி.

## டான்சி

தரமான பொருள்களைத் தயாரித்து, தமிழகத்தில் மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் நல்ல புகழை ஈட்டி வரும் 'டான்சி'யின் சார்பில் பல்வேறு தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. அவை:

1. பெரியகட்டுமானத்தொழிற்சாலைகள் (Structural Works)

2. பொறியியல் தொழிற்சாலைகள் (Engineering Works)

3. தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலை (Furniture Works)

4. மரத் தட்டுமுட்டுச் சாமான்கள் தொழிற்சாலைகள் (Wooden Furniture Works)

5. இயந்திரக் கருவி செய்யும் தொழிற்சாலைகள் (Tools Room)

6. இரும்பு வார்ப்படத் தொழிற்சாலைகள் (Foundry)

7. வேளாண்மை உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் (Farm Implements Units)

8. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் (Leather Works)

9. ஏனைய பிற தொழிற்கூடங்கள்.

'மோபெட்' விற்பனைக்குத் தயார்!





# அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடம் ஒதுக்குவதற்கான விதி

### 1) மாணவர்களைக் கல்வி நிலையங்களில் சேர்த்தல் :-

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழிற் கல்வி நிறுவனங்கள் உட்பட, கல்வி நிறுவனங்களில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் உரிய இடம் கொடுக்க 18 சதவீத இடங்கள் அரிசன மாணவர்களுக்கும் பழங்குடி மாணவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### 2) அரசுப் பணிகளில் நியமனம் :-

மாநில அரசுப் பணிகளில் 18 சதவீத இடங்கள் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. துறைத்தலைவர் ஒவ்வொருவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரக் கணக்கு ஒன்றை அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம் இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்தாற்போல் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கு—பழங்குடி மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய தலைமைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட உயர் மட்டக் குழுவொன்று செயல்பட்டு வருகிறது.

### 3) கண்காணிப்பு குறித்த துணைக் குழு:-

உயர்மட்டக் குழுவின் துணை நிலைக் குழுவாக, ''உயரதிகாரக் கண்காணிப்புக் குழு'' ஒன்று, பணியாளர்—நிர்வாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பதவி உயர்வு—பதவி மாற்றம் காரணமாகச் செய்யப்படவிருக்கும் எல்லா நியமனங்கள் தொடர்பாகவும், அரிசன—பழங்குடி மக்களுக்கான இட ஒதுக்கீடு விதியை நீட்டிக்கும் செயற்குறிப்பை பரிசீலனை செய்யும். மேலும் பல்வேறு நிலைகளில் செய்யப்பட்ட நியமனங்களை ஆய்வு செய்யும். அத்துடன் தற்போது உள்ள நிலைமையை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் அரிசனங்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் ஏற்பாட்டை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றியும் இக் குழு ஆலோசனை கூறும்.

**

## குழந்தைகளுக்கு காந்தி எழுதிய கடிதம் !

எரவாடா சிறைச்சாலையில் இருந்தபோது காந்தியடிகள் ஒருமுறை பின்வரும் கடிதத்தை ஆசிரமக் குழந்தைகளுக்கு அனுப்பி வைத்தார்.

''பறவைகளுக்குச் சிறகுகள் இல்லாவிடின் அவற்றினால் பறக்க முடியாது; சிறகுகள் இருப்பின் நம் எல்லோராலும் பறக்க இயலும். சிறகுகள் இன்றி நீங்கள் பறக்கக் கற்றுக் கொண்டால் உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விடும். நான் உங்களுக்கு போதிப்பேன். எனக்குச் சிறகுகள் இல்லை. ஆனால் தினந்தோறும் சிந்தனையிலே உங்களிடம் பறந்து வருகிறேன்.

''இங்கு பாருங்கள் ; அதோ குட்டி வனமாலா நிற்கிறாள். இங்கு ஹரி நிற்கிறான் ; அதோ தர்மகுமார் நின்று கொண்டிருக்கிறான். நீங்கள் கூட சிந்தனையின் மூலம் என்னிடம் பறந்து வர முடியும். சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு ஆசிரியர் எவரும் தேவையில்லை. ஆசிரியர் நமக்கு வழிகாட்டியாகத்தான் இருக்க முடியும். நமக்குச் சிந்தனா சக்தியை அவர் அளிக்க முடியாது. சிந்தனா சக்தி நமது உள்ளிடையே இருக்கிறது. ஞானமுள்ளவர்களுக்கு நற்சிந்தனைகள் எளிதில் உதிக்கும்.''

* * * *

## சிறு காகிதமும் பெரும் பயன் தரும்!....

காந்தியடிகள் ஒரு சிறு காகிதத்தைக் கூட வீணாக்கமாட்டார். உதாரணமாக, அவர் ஒரு பக்கம் மட்டிலுமே எழுதப்பட்ட காகிதங்களைத் தூர எறிந்துவிடாமல் பாதுகாத்து வந்தார். வெற்றுப் பக்கத்தை வீணாக்காமல் கடிதங்களை எழுதுவதற்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்வார். அவருக்குக் கிடைத்த கடிதங்களில் எழுதாமல் விடப்பட்டிருந்த கீழ்ப்பகுதிகளைக் கிழித்துத் தனியே வைத்துக் கொள்வார்.

சிறு சிறு காகிதங்களைக் கூட சிறு குறிப்புக்களையோ அசல் குறிப்புக்களையோ எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்வார். முகவரி எழுதப்பட்டு ஏற்கெனவே உபயோகிக்கப்பட்ட கவர்களைக் கூட அவர் விடுவதில்லை. அவற்றைப் பிரித்துப் பின்பக்கத்தை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்வார்.

அவர் ஆசிரமத்துக்கு வெளியே இருக்குங் காலையில், ஆசிரமவாசிகளுக்கு எழுதும் கடிதங்கள் அனைத்தையும் ஒரே கவரில் போட்டு அனுப்புவார். காகிதங்களுடன் குண்டூசிகளையும், பின்களையும் எறிந்துவிடாமல் அவற்றைத் தனியே எடுத்து ஜாக்கிரதையாகச் சேர்த்து வைப்பதும் அவரது வழக்கமாக இருந்து வந்தது.

ஆதாரம் : நாம் அறிந்த காந்திஜி.
பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்.




சேலத்தில் ஆதிநாராயணன் செட்டியார் மகாத்மாவைத் தம்முடைய வீட்டில் வரவேற்று உபசரித்தார். தமக்கு மணமாகி இருபது வருடங்களுக்குப் பிறகு பிறந்த அருமைக் குழந்தையை மகாத்மாவிடம் கொடுத்து ஆசீர்வதிக்கச் சொன்னார்.

காந்தி குழந்தையைக் கைகளில் எடுத்துக் கொண்டு, எடை போடுவது போல மேலும் கீழும் ஆட்டினார். குழந்தை பொக்கை வாயைத் திறந்து சிரித்தது. காந்தியும் பெற்றோர்களும் அதைக் கண்டு ஆனந்தித்தார்கள். உடனே ''எனக்கு இந்தக் குழந்தையின் எடைக்குச் சரியாக நூல் கொடுத்தால் எப்படிச் சந்தோஷப்படுவேன், தெரியுமா?'' என்று கேட்டார் மகாத்மா.

சுற்றித் தீபாலங்காரமும் அமைக்கப்பட்டிருந்தன. கூட்டத்துக்கு வந்ததுமே காந்திஜி மேடையையும் அலங்காரத்தையுந்தான் கவனித்தார். உடனே டாக்டர் ராஜனைக் கூப்பிட்டு, ''ஹரிஜன நிதிக்காக வசூலான பணத்திலிருந்துதானே இந்த அலங்காரங்களுக்குச் செலவு செய்யப்பட்டிருக்கும்?'' என்று கேட்டார்.

தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் தலைவரும் காந்தியின் சுற்றுப் பிரயாண ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாளருமான டாக்டர் ராஜன் உள்ளூர்ப் பிரமுகர்களைக் கூப்பிட்டு விசாரித்தார். பொதுப் பணத்திலிருந்து ஒரு பைசாக்கூடச் செலவாகவில்லை என்றும், உற்சாகமுள்ள ஒருவரால் மேடையும் அலங்காரமும் அமைக்கப்பட்டன என்றும்

இடத்தினை விலைபேசி முடிவு செய்தார்கள். ஆனால் பத்திரம் பதிவு செய்து, கிரயத்தைப் பூர்த்தி செய்ய அவகாசம் இல்லை. நிலத்தை விற்பனை செய்ய முன் வந்தவருடைய பெயர் சடையக் கவுண்டர். தம்முடைய சொந்த உழைப்பினால் பத்துக் காணி பூஸ்திதியுடையவர். அவர் எழுத்தறிவில்லாத விவசாயி. அவருக்குக் காந்திஜியைப் பற்றியோ ஹரிஜன இயக்கத்தைப் பற்றியோ தெரியாது. உள்ளூரிலுள்ள குர்ஜாலி ஹரிஜனங்களுக்காகப் பள்ளிக்கூடம் நடத்தத் துவங்கியதும், சாதி இந்துக்கள் அதை எதிர்த்ததுந்தான் அவருக்குத் தெரியும். காந்திஜியின் விஜயத்துக்குப் பிறகு பத்திரப் பதிவு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்து, தக்க சாட்சிகளை வைத்துக் கொண்டு ஒரு சிறு தொகையை அச்சாரமாகக்



# தமிழ் நாட்டில் காந்தியடிகள்

செட்டியார் திகைத்துப் போனார். குழந்தையைத் துலாபாரமிட்டுப் பொன் கொடுக்கச் சொன்னாலும் தயாராக இருக்கும் அவருக்கு நூல் கொடுப்பது பெரிதல்ல.

அதற்குள் காந்தி சொன்னார் ''பல வருஷங்களுக்குப் பிறகு உங்களுடைய வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தை அருமை உங்களுக்குத் தெரியும். நானும் பல வருஷங்களுக்குப் பிறகு ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறேன். சர்க்கா நம்முடைய நாட்டுக்குப் புதிதல்ல. ஆனால் என்னுடைய அருமைக் குழந்தை கதர். குழந்தை அருமை தெரிந்த நீங்கள், உங்களுடைய குழந்தையின் எடைக்குச் சரியாகக் கதர் நூலைக் கொடுத்தால் எத்தனை குடும்பங்களின் வயிறு நிரம்பும்?''

* * * *

தூத்துக்குடியில் விஸ்தாரமான மேடையும், மேடையைச்

தெரிந்தது. காந்திஜி திருப்தியடையாமல், ''அந்த மனிதர் இங்கே இருந்தால் கூப்பிடுங்கள்'' என்றார்.

நல்ல வேளையாக, மேடையிலேயே அந்த மனிதர் இருந்தார். தம்முடைய சொந்தச் செலவில்தான் மேடை நிர்மாணம் செய்ததாக அவர் நேரில் ஒப்புக்கொண்டார். அதன் பிறகுதான் கூட்டத்தில் பேசக் காந்தி எழுந்தார்.

## திருவெண்ணெய் நல்லூரில் காந்தியடிகள்!

திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும் கிருபா ஆசிரமத்துக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிச்சயித்த நிர்வாகிகள், அதற்குக் காந்திஜியே அஸ்திவாரம் போட வேண்டும் என்று விரும்பினார்கள். காந்திஜி ஒப்புக்கொள்ளவே, நிர்வாகிகள் ஊருக்கு வெளியே ஓர்

கொடுத்து விற்பனையை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள்.

காந்திஜி அந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப் போகிறார் என்பது ஜனங்களுக்குத் தெரியுமே தவிர, சடையக் கவுண்டரின் நிலத்தில் வித்தியாலயத்துக்காக அஸ்திவார விழா நடக்கப் போகிறது என்ற செய்தி பலருக்குத் தெரியாது. காந்திஜி விஜயம் செய்யும் தினத்தன்று சடையக் கவுண்டரின் தூரபந்துவும் தேசபக்தருமான அரசூர்ப் படையாச்சி என்பவர் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தார். தம்முடைய தூரபந்து ஒருவருடைய நிலத்தில் காந்திஜி அடியெடுத்து வைத்துப் புனிதமாக்கப் போகிறார் என்ற செய்தி அவரை ஆனந்தத்திலாழ்த்தியது. அவர் கவுண்டரிடம் ஓடோடிச் சென்றார். ''உன்னுடைய பாக்கியமே பாக்கியம்'' என்று கூறி அவரைத் தழுவிக் கொண்டார்.

கவுண்டர் திகைத்துப்போனார். காந்திஜியைப் பற்றி மிகவும் சுருக்கமாகப் படையாச்சி எடுத்துச் சொல்லி விட்டு, 'நம்முடைய கிராமத்துக்கு அடிகள் விஜயம் செய்வதே பெரும் பாக்கியம். அந்தக் காலத்தில் கம்பனுக்கு உதவி, சடையன் பெருமைப்பட்டு விட்டான். இன்று நிலத்தை விற்று விட்டாலும், அடிகள் கால் பட்டுப் புனிதமான நிலத்தினால் உன்னுடைய பெயரும் பிரசித்தமாகிவிடும்' என்றார்.

சடையக் கவுண்டர் சிறிது நேரம் சிந்தித்தார். 'என்னை அடிகளுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். கிரயத்தை மாற்றி, அந்த நிலத்தை அடிகளுக்கு தானமாகக் கொடுத்து விடுகிறேன்' என்றார்.

''நீ மகா பாக்கியசாலி, அடிகளுடைய பாததூளி படுவதால் பெருமையென்றதைக் கேட்டு நீ அவசரமான முடிவுக்கு வந்து விடாதே. ஆனால் உன்னுடைய முடிவு போற்றத்தக்கது' என்றார் நண்பர்.

சடையக் கவுண்டர் சொல் தவறாதவர். ''நான் தானம் செய்ய முடிவு செய்துவிட்டேன்'' என்றார் உறுதி வாய்ந்த குரலில்.

படையாச்சி வித்தியாலய நிர்வாகிகளிடம் ஓடிவந்து செய்தியைச் சொன்னார். இது எப்படிச் சாத்தியம்? சடையக் கவுண்டர் பேரம் பேசுவதில் நிபுணர் என்பதும், காசில் கரிசனம் உள்ளவர் என்பதும், நிலத்தை விலை பேசும் போது அவர்கள் அநுபவித்தறிந்த உண்மையாயிற்றே! படையாச்சியின் செய்தியையும் ஒதுக்கிவிட முடியாது. சிந்தித்துக் கொண்டிருக்கவோ நேரம் இல்லை. எல்லாரும் விழா நடக்க வேண்டிய இடத்தில் கூடினார்கள். அங்கு சடையக் கவுண்டரும், அவருடைய குமாரர்களும் இருந்தார்கள். குர்ஜாலி கவுண்டரைச் சந்தித்ததும், ''ஸ்வாமி நான் கிரயத்தை மாற்றிவிட்டேன். மகாத்மாவுக்குத் தானமாக இந்த நிலத்தைக் கொடுக்க நிச்சயித்து விட்டேன். இது என்னுடைய சொந்தச் சம்பாத்தியம். ஆனாலும், நான் செய்த முடிவை, என்னுடைய குமாரர்களும் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்'' என்றார் சடையக் கவுண்டர், மலர்ந்த முகத்துடன்.

டாக்டர் ராஜனும், ராஜாஜியும் மற்ற ஊழியர்களும் சூழ்ந்து நிற்கக் காந்திஜி சடையக் கவுண்டரைச் சந்தித்தார். விழா துவங்குவதற்கு முன்பு மிகவும் சுருக்கமாகக் கவுண்டரின் மனமாறுதலைப்பற்றி குர்ஜாலி காந்திஜியிடம் கூறினார். காந்திஜி கவுண்டரை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ''நல்லது, எது எப்படி நடக்க வேண்டுமோ, அப்படியே நடக்கிறது. உத்தமமான தானம் தான்' என்றார். காந்திஜியின் கையில் மாவிலைக் கொத்தை வைத்து, நீர்வார்த்துத் தானம் செய்தார் கவுண்டர். அவருடைய குமாரர்கள் சாட்சியாக நின்றார்கள். காந்திஜி ஏற்றுக் கொண்டதும் மூவரும் அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினார்கள்.

விழா முடிந்ததும், காந்திஜி வித்தியாலயத்துக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொண்டார். திடீரென அவர் குர்ஜாலியைக் கூப்பிட்டு ''நான் கவுண்டரைப் பார்க்க வேண்டும்'' என்றார்.

கவுண்டரை அழைத்து வந்தார்கள். வந்ததும் காந்திஜியை வணங்கி விட்டு ஒதுங்கி நின்றார் கவுண்டர். ''இப்படி உட்காருங்கள்'' என்று பக்கத்தில் இடம் காட்டிவிட்டு, காந்திஜி கேட்டார். ''கவுண்டரே, காலையில் எனக்குத் தானம் கொடுத்தீர்களே, அந்த நிலத்தை என்ன செய்வது? நான் இங்கு தங்குவது முடியாத காரியம். உள்ளூரில் இருப்பவர்களிடம் கொடுத்தால் உங்களுடைய ஆசை நிறைவேறுமா என்று சந்தேகிக்கிறேன். ஹரிஜன சேவை செய்வதால் இந்த ஊரில் குர்ஜாலியும் மற்ற ஊழியர்களும் சாதி இந்துக்களுடைய கோபத்துக்கு ஆளாகி விட்டார்கள். காங்கிரஸ் ஊழியர்களுக்கு அனுதாபம் காட்டினால் உங்களுக்கும் போலீஸ் தொந்தரவு ஏற்படும்''

''நீங்கள் மகாத்மா. இதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதன்படிச் செய்யுங்கள். நான் இந்த இடத்தை விற்கவே விரும்பினேன். திடீரென என் மனத்தில் மாறுதல் ஏற்பட்டது. உங்களுடைய ஆசி பெற்று இந்த இடத்தில் வித்தியாலயம் நடக்கும் என்ற நம்பிக்கை தோன்றவே என்னுடைய பங்குக்கு நிலத்தைத் தானம் செய்துவிட்டேன். இது சம்பந்தமாக எவ்விதத் துன்பம் வந்தாலும் ஏற்கத் தயார்'' என்றார் கவுண்டர்.

''இந்த நிலத்தைக் குர்ஜாலிடயிடம் ஒப்படைத்து விடுவதில் உங்களுக்கு ஆட்சேபணையுண்டா? நான் சர்க்காருக்கு விரோதி. குர்ஜாலியும் சர்க்காருக்கு விரோதி தான். எங்களால் உங்களுக்குத் தொந்தரவு நேரக்கூடும். நன்றாக யோசித்துக் கூறுங்கள். நான் இருக்கும்பொழுதே உங்களிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று எண்ணுகின்றேன்'' என்றார் மகாத்மா.

சடையக் கவுண்டர் கண்களில் நீர்மல்க எழுந்து மகாத்மாவின் பாதங்களைப் பிடித்துக் கொண்டார். ''என்ன அபச்சாரம்; ஸ்வாமி, என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள்? நீங்கள் மகாத்மா! நல்லதும் கெட்டதும் உங்களுக்கு ஒன்றுதான், கொடுத்ததை நீங்கள் மறுக்கலாமா? நீங்கள் சொன்ன வார்த்தைகளை மாற்றும் வரையில் உங்களுடைய பாதங்களை விடமாட்டேன். பல பேர் அறிய நான், நீர் வார்த்துத் தானம் செய்தேன். அதை எப்படித் திரும்பப் பெறுவேன்?'' என்றார்.

காந்திஜி மனம் நெகிழ்ந்து விட்டார். இரு கைகளாலும் கவுண்டரைத் தூக்கி நிறுத்தினார். ''என்னுடைய ஆயுளில் நடந்த நற்சம்பவங்களில் இதுவும் ஒன்று. சட்டமும் தஸ்தாவேஜும் குறுக்கிடாத மகத்தான சம்பவம் இது'' என்றார்.

காந்திஜிக்குத் தானம் கொடுத்த நிலத்தைக் குர்ஜாலி நிர்வகித்து வர வேண்டும் என்று தான சாசனம் எழுதிப் பத்திரப் பதிவு செய்தார் சடையக் கவுண்டர். அதன் பிறகு பதினைந்து வருஷம் வாழ்ந்து தம்முடைய எண்பத்தைந்தாவது வயதில் அவர் காலமானார். அந்தப் பதினைந்து வருஷங்களிலும் அவருக்குக் காந்திஜி தான் பேசுந் தெய்வமாக விளங்கினார்.

[திரு. கே. எஸ். ஜம்புநாதன் எழுதிய 'காந்தி கதைகள்' என்னும் நூலிலிருந்து]



அம்பத்தூருக்கு 1946-ல் வருகை தந்த அண்ணல் காந்தியடிகளை, திரு. காமராஜ், வரவேற்று அழைத்துச் சென்றார்.



# கிராமங்கள் புத்துயிர் பெற உதவுவது ராட்டையே!

—மகாத்மா காந்தி

ராட்டை, கிராமங்கள் புத்துயிர் பெறுவதற்குள்ள சாதனமென்பது என் கருத்து. ராட்டை என்று தொலைந்ததோ அன்றே நம் மக்கள் பெயரளவிலேனும் இருந்து வந்த தம் சுதந்தரத்தைப் பறிகொடுத்து விட்டார்கள். ராட்டை கிராமத்தாரின் விவசாயத் தொழிலுக்குப் பக்க பலமாயிருந்து அதற்குப் பெருமையளித்து வந்தது; கணவனை இழந்து தவித்த பெண்ணுக்கு நண்பனாய், ஆதரவாய் இருந்தது; கிராமத்தாரின் சோம்பலைப் போக்க உதவிற்று. எப்படியெனில், ராட்டையென் கையில் வெறும் நூல் நூற்பதோடு நில்லாது, அதற்கு முன்பும் பின்பும் பருத்தி அரைத்தல், பஞ்சு வெட்டிப் பட்டை போடுதல், பாவுதோய்தல், தறியில் பூட்டி நெய்தல், சாயமிடுதல் ஆகியவையும் நடந்து வந்தன.

இவையெல்லாம் நடக்கையில் கிராமத் தச்சனுக்கும் கிராமக் கொல்லனுக்கும் நல்ல வேலை இருந்தது. ராட்டை நம் ஏழு லட்சம் கிராமங்களும் உடை என்ற ஒரு முக்கியமான தேவையின் விஷயத்தில் பிறர் கை பாராது வாழ உதவிற்று. ராட்டை சுற்றுதல் நின்றதுமே கிராமத்தில் நடந்து வந்த எண்ணெய் ஆட்டுதல் போன்ற தொழில்களும் நின்று போயின. இவை போனது போனதுதான். வேறு தொழில்களும் தோன்றவில்லை. இவ்வாறு கிராமங்களின் பல்வேறு தொழில்களும், கிராமத்தாரின் தொழில் திறனும், அவர்களுக்குக் கிடைத்து வந்த நாலு காசும் பறிபோயின.

எனவே கிராம மக்கள் மீண்டும் தம் பழைய நிலையை எய்த வேண்டுமென்றால் அதற்கு இயல்பாக உதவக்கூடியது ராட்டைத் தொழிலும் அதோடு இணைந்த பிற தொழில்களுமேயாகும்.

இவ்வாறு ராட்டையை மீண்டும் கிராமங்களில் புகுத்துவது என்பது, சிறந்த அறிவும் நாட்டுப் பற்றுமுள்ள சுயநலமற்ற ஊழியர்களின் பெரும்படையொன்று கருமமே கண்ணாய் ராட்டைத் தத்துவத்தை கிராமங்களெங்கும் பரப்பி ஒளி இழந்த கிராம மக்களின் கண்களில் மீண்டும் ஒளி தோன்றுமாறு செய்தாலல்லது சாத்தியமல்ல. இது நடந்தால் இது பிரம்மாண்டமானதொரு சிறந்த கூட்டுறவு முயற்சியாயும், முதியோர் கல்வித் திட்டமாயும் இருக்கும். சந்தடியின்றிச் சுற்றும் ராட்டை மக்களுக்கு உறுதியான பிழைப்பு அளிப்பதே போன்று, இதுவும் அமைதியான முறையில் மக்கள் வாழ்க்கையை உருத்தெரியாமல் மாற்றிவிடும்.

எனது இருபது ஆண்டு ராட்டை அனுபவத்திலிருந்து என் இந்த வாதம் மிகவும் சரியானது என்பதை உணருகிறேன். ராட்டை ஏழை முஸ்லீம்களுக்கும், இந்துக்களுக்கும் அநேகமாய் ஒரே வகையில் உதவியிருக்கிறது; சிறிதும் ஆடம்பரமின்றி இலட்சக்கணக்கான இந்தக் கிராமத் தொழிலாளர் கைக்குச் சுமார் ஐந்து கோடி ரூபாய் போய்ச் சேருமாறு செய்திருக்கிறது.

இதனாலேயே சமய வேறுபாடின்றிப் பொதுமக்கள் அனைவருக்குமே சுய ராஜ்யம் கிடைக்க ராட்டை உதவுமென்று நான் சிறிதும் தயங்காது சொல்லுகிறேன். ராட்டை, கிராமங்களுக்கு அவைகளுக்கு உரிய பழைய அந்தஸ்தை மீண்டும் அளித்து, உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகளை அகற்றும்.

இப்பொழுது பெரும்பாலான கிராமங்கள் தம் தேவைக்கான உணவு தானியங்களைத் தாமே உற்பத்தி செய்து கொள்வதைப் போல, அவற்றைத் தம் உடைத் தேவைக்கு வேண்டிய நூலையும் நூற்று, நெய்து கொள்ளச் செய்தல் நல் இலட்சியம் என்பதில் ஐயமில்லை. தன் தேவைக்கு வேண்டிய உணவு தானியங்கள் முழுவதையும் ஒவ்வொரு கிராமமும் விளைவிப்பதைவிட, தன் தேவைக்கு வேண்டிய நூலை நூற்றலும் நெய்து கொள்ளலும் சுலபம். ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய பருத்தியைச் சேமித்து வைத்துக் கொண்டு அதைச் சிரமமின்றி நூற்று நெய்து கொள்ளலாம்.



## கைராட்டை பிறந்த விதம்

காந்தியடிகள் சிறைவாசத்தின்போது நூல்களைப் படிப்பது வழக்கம். ஒருமுறை சிறையில் இருந்தபோது கத்தேயின் 'ஃபாஸ்ட்' என்னும் நூலை அவர் படிக்க நேர்ந்தது.

அந்நூலில் வரும் கதாநாயகி, கணவனை இழந்து சோகத்தின் உருவமாகக் காட்சி தருகிறாள். அவளது மனம் அமைதியை இழந்து விடுகிறது. ஏராளமான நூல்கள் அவளிடம் இருக்கின்றன; அவற்றில் ஒன்றைக்கூட அவள் படிக்க விரும்பவில்லை. வாசிப்பதற்கு அநேக இசைக் கருவிகள் தன்னிடமிருந்தும் இசைத் திறமை பெற்ற அவள், அவற்றை வாசித்து மன அமைதிபெற முயலவில்லை. ஆனால் சர்க்காவில் நூற்பதன் மூலம் மன அமைதி பெறுகிறாள்—உளச் சாந்தி அடைகிறாள்.

இந்தக் கதாபாத்திரமும் அவளது செயலும் காந்தியடிகளின் மனத்தைக் கவர்ந்து விட்டன. மன அமைதி தரும் சாதனமாக 'ஃபாஸ்ட்' என்னும் நூலில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள கைராட்டையை ஏழைகளின் வாழ்வு மேம்படுவதற்காகப் பயன் படுத்தலாம் என்ற எண்ணம் அடிகளுக்குத் தோன்றியது. அதன் பின் சர்க்காவை அறிமுகம் செய்தார் காந்தியடிகள்.

# மீன்வளம் பெருக்குவோம்!
# மீனவர் நலங் காப்போம்!




மாண்புமிகு உணவமைச்சர்

**திரு ஜி. ஆர். எட்மண்ட்**




மீன்பிடித் தொழில் தொன்மையான தொன்றாகும். உலகில் மற்றையதொழில்களைப்போலவே மீன்பிடித் தொழிலும் நவீனமாக்கப்பட்டு முன்னேற்றம் அடைந்து வருகிறது. சமீப காலத்தில் உலகில் அநேக நாடுகள் தங்கள் நாடுகளை ஒட்டியுள்ள கடலில் மீன் வளத்தை மட்டுமின்றி, எண்ணெய், கனிப் பொருள் முதலியவற்றைப் பயன் படுத்திக் கொள்வதில் பெரும் அளவு அக்கறை காட்டி வருகின்றன. அதுவும் குறிப்பாக நம் இந்திய நாடு தனது நாட்டெல்லையைச் சார்ந்த கடல் எல்லையிலிருந்து 200 கல் தொலைவினை நம் நாட்டின் தனி உரிமைப் பட்ட பொருளாதார எல்லையாக பறை சாற்றியுள்ள நிலையில், நாட்டின் நலனுக்காக கடல் வளப் பயனைப் பெருக்குவதில் தமிழ் நாடும் தன் பங்கினைச் செய்ய, தமிழ் நாட்டில் மீன் பிடித் தொழில்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாததாகும்.

வங்காள விரிகுடா, இந்து மகா சமுத்திரம் மற்றும் அரபிக் கடல் ஆகிய மூன்று கடல்களைத் தொட்டுச் செல்கின்ற நமது தமிழகத்தின் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுகிய கடற்கரை மீன்பிடித் தொழிலையும், அதனைச் சார்ந்த மற்றைய தொழில்களையும் பெருக்குவதற்குப் பெருமளவு வாய்ப்பினைக் கொண்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஆறுகள், துணை ஆறுகள், கிளையாறுகள், அணைக்கட்டுகள் ; பாசன நீர்த் தேக்கங்கள், கழிமுகங்கள், காயல்கள், உப்பங்கழிகள் முதலியன 3.51 இலட்சம் எக்டேர் அளவுள்ள இயற்கையான உள் நாட்டு மீனவள அபிவிருத்திக் களமாக அமைந்துள்ளது. இவைகளில் முனைப்புடன் தரமான மீன் குஞ்சுகளை நீர்நிலைகளில் விட்டு அறிவியல் அடிப்படையில் மீன்களை வளர்த்தல், நிர்வகித்தல் போன்ற பணிகளை மீன் துறை மேற்கொண்டு உள் நாட்டு மீன் வளத்தை உயர்த்தி வருகிறது.

தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மீன்பிடித் தொழில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்று இருக்கிறது. தமிழ் நாட்டின் ஒட்டு மொத்த மாநில வருமானத்தில் மீன் வளப் பகுதி மூலம் கிடைக்கும் வருமானம் 0.83 சதவிகிதமாகும் (1975-76). இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கடல் மீன் பொருள்களின் மொத்த மதிப்பில், தமிழ் நாட்டிலிருந்து மட்டும் 13.43 சதவிகிதம் (1976) ஏற்றுமதியாகின்றது. மீன் பிடித் தொழிலின் இப்புள்ளி விவரங்கள் தமிழ் நாட்டில் இத்தொழில் வளர்ச்சி பெற வேண்டிய முக்கியத்தையும், அதன் பங்கினையும் தெள்ளென விளக்குகின்றன. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் கால ஆரம்பத்தில் 0.45 இலட்சம் டன்னாக இருந்த கடல் மீன் உற்பத்தி, 1975-76-ல் 2.20 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதே போல உள் நாட்டு மீன் உற்பத்தி 0.34 இலட்சம் டன்னிலிருந்து 1.50 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக் கால இறுதியில் கடல் மீன் பிடிப்பை 4.00 இலட்சம் டன்னாகவும், உள் நாட்டு மீன் பிடிப்பை 2.30 இலட்சம் டன்னாகவும் உயர்த்துவதே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறியீட்டு எண்ணாகும் (Target). அனைத்து மேம்பாட்டு நடவடிக்கைகளிலும், மீனவர்களும் ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். இந்த இலக்கினை அடைய, மீன் துறையின் நோக்கங்கள் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டு உள்ளன :

(1) தொன்று தொட்டுப் பயன் பட்டு வரும் கலன்களையும், கருவிகளையும் மேம்படுத்தி மீன் பிடித் திறனை அதிகரித்தல்.

(2) சிறிய மீன்பிடி விசைப் படகுகள் மூலம் அண்மைக் கடல் மீன் பிடிப்பை அதிகரித்தல்.

(3) பெரிய மீன்பிடி டிராலர்களைக் கொண்டு ஆழ்கடல் மீன் பிடிப்பைப் பெருக்குதல்.

(4) வெவ்வேறு பருவங்களில் கூட்டமாக வரும் மேல் மட்ட மீன்களைப் பிடிக்க பலவகைப் படுத்திய மீன்பிடி முறைகளைக் கையாளுதல்.



(5) உப்பங்கழிகள், கழிமுகங்கள், காயல்களில் மீன் உற்பத்தியைப் பெருக்க உவர்நீர் மீன் வளர்ப்பு முறையைப் புகுத்துதல்.

(6) மீன் வளர்ப்புக்கு உகந்த அனைத்து உள்நாட்டு நீர்நிலைப் பரப்புகளில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்து, தற்கால மீன் வளர்ப்பு தொழில் நுட்ப முறையைக் கடைப்பிடித்து உள்நாட்டு மீன்பிடிப்பை உயர்த்துதல்.

(7) மீன் பிடிப்பும், அதனைச் சார்ந்த தொழில்களும் விரைந்து முன்னேற மீன்பிடித் துறை முகங்கள், பனிக்கட்டி நிலையங்கள், பராமரிப்பு நிலையங்கள் முதலிய வசதிகளை ஏற்படுத்துதல்.

(8) வீட்டு வசதி, இணைப்புச் சாலை வசதி, நிவாரணங்கள் மூலம் மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

### தமிழ் நாட்டு மீன் அபிவிருத்திக் கழகம்

தேவையான நிதி உதவியை வணிக வங்கிகளிலிருந்து பெற்று மீன் துறையின் வணிக நோக்குப் பிரிவுகளான படகு கட்டும் நிலையங்கள், பதன நிலையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைப் பெருக்குவதற்காகவே, தமிழ் நாடு மீன் அபிவிருத்திக் கழகம் துவக்கப்பட்டது. இக் கழகம் சென்னையில் 2-ம், நாகப்பட்டினத்தில் ஒன்றும், மண்டபத்தில் ஒன்றுமாக நான்கு படகு கட்டும் நிலையங்களை நடத்தி வருகிறது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் இக்கழகம் 750 படகுகளை வழங்க இயலும் என எதிர்பார்க்கலாம். முதலாவதாக வழங்கும் 500 படகுகளுக்கு 100 சதவிகிதம் வட்டி மான்யமும் அடுத்த இரண்டாண்டுகளுக்கு முறையே 66.7 சதவிகிதம், 33.3 சதவிகிதம் வட்டி மான்யம் கொடுக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

எண்ணூர், மண்டபம், தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள பதன நிலையங்கள், தனியார் நிறுவனங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மண்டபத்தில் உள்ள மீன் தூள் நிலையமும் முதலில் குத்தகைக்கு விடப்பட்டு மறுபடியும் கழகமே எடுத்துக் கொண்டு, 1-4-77 முதல் கழகமே நடத்தி வருகிறது. சென்னை, தூத்துக்குடி மீன்பிடித் துறை முகங்களில் பெரிய மீன் பதன நிலையங்களை ஏற்படுத்த தமிழ் நாடு மீன் அபிவிருத்திக் கழகம் திட்டமிட்டுள்ளது.



இக் கழகம் 23 மீட்டர் நீளம் உள்ள இரண்டு 'மெக்சிகன் டிராலர்'களைப் பெறவிருக்கிறது. இந்த டிராலர்களின் மதிப்பு ரூ. 80.00 இலட்சமாகும். இந்த டிராலர்கள் தமிழ் நாட்டிற்கு 1977 அக்டோபரில் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த டிராலர்கள் வந்தவுடன் ஆழ் கடல் மீன் வளம் பயனடைவதற்குச் செயல்படுத்தப்படும். இதே மாதிரியான இரண்டு டிராலர்களை உள் நாட்டிலேயே கட்டுவதற்கும் கழகம் திட்டமிட்டு உள்ளது.

தமிழ் நாடு மீன் அபிவிருத்திக் கழகம் விற்பனையில் தன் செயல்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு உதவியாக கீழ்க்கண்ட 5 பெரிய நீர்த் தேக்கங்களிலுள்ள மீன்பிடி உரிமத்தை 1-7-77 முதல் இக் கழகத்திற்கு மாற்ற அரசு ஆணையிட்டுள்ளது.

1. மேட்டூர் அணை—சேலம் மாவட்டம்.

2. சாத்தனூர் அணை—வட ஆர்க்காடு மாவட்டம்.

3. அமராவதி.

4. ஆளியார்.

5. திருமூர்த்தி.

6. பவானி சாகர்—கோயம்புத்தூர் மாவட்டம்.

### அளவாய்வு

கீழ்க்கண்ட இடங்களில் அமைந்துள்ள அண்மைக் கடல் மீன் பிடிப்பு நிலையங்கள், அண்மைக் கடலில் மீன் வளத்தைக் கண்டறிய அளவாய்வு செய்து கொண்டிருக்கின்றன :

1. சென்னை.

2. கடலூர்.

3. மல்லிபட்டிணம்.

4. இராமேசுவரம்.

5. கன்னியாகுமரி.

இந் நிலையங்களில் சிறிய மீன் பிடி விசைப் படகுகளே உள்ளன. ஒரு சில 43.5 அடி படகுகள் மட்டுமே, சில நிலையங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தன. 1977-78ல் மல்லிப்பட்டிணம் நிலையத்திற்கு மேலும் ஒரு 43.5 அடி படகு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

நமது எல்லையைச் சார்ந்த ஆழ்கடல் பரப்பில் உள்ள மீன் வளத்தைப் பற்றிய போதுமான விவரங்கள் நம்மிடம் இல்லை. ஆழ்கடல் மீன் வள ஆய்வு நடத்துவது மத்திய அரசின் பொறுப்பாகும். உலக நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கூட்டோடு, இவ்வளவாய்வினை மேற்கொள்ளுமாறு மத்திய அரசினை மாநில அரசு கடந்த காலங்களில் வலியுறுத்தி வந்தும் குறிப்பிடத்தக்க விளைவுகள் இல்லை. தகுந்த கலன்களும், கருவிகளும் இல்லாதது இவ்வளவாய்வு தாமதமாவதற்கு மற்றொரு காரணம். மீன் பிடிப்பினைப் பெருக்குவதற்கும், மீன் பொருள்களை ஏற்றுமதி அபிவிருத்தி செய்வதற்கும் ஆழ்கடல் மீன் வளத்தைப் பற்றிய விவரங்கள் மாநில அரசுக்குப் பேருதவி செய்யும் என்பதால், ஆழ்கடல் மீன் வள ஆய்வினை மேலும் காலந்தாழ்த்தாது விரைந்து நடத்துவது அவசியம். 100 பெரிய மீன்பிடிக் கலன்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு சமீபத்தில் அனுமதியளிப்பதையொட்டியும் இவ்வளவாய்வு செய்வது அவசியம். எனவே, இவ்வளவாய்வினை விரைந்து மேற்கொள்ளுமாறு மத்திய அரசினை வற்புறுத்த மாநிலஅரசு எண்ணியுள்ளது. அவ்வாறு மீன் வளத்தைக் கண்டு அறிந்தபின், ஆறுவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலாவது ஆழ் கடல் மீன் வளத்ினைத் துய்க்க தகுந்த திட்டங்கள் தீட்டமுடியும்.

### பனிக்கட்டி நிலையங்களும் குளிர் அறை நிலையங்களும்

கடந்த காலத்தில் மீனவர்களின் நன்மைக்காகவும், மீன் பிடித்தொழில் முன்னேற்றத்திற்கும் கடலோரப் பகுதிகளில் 36 பனிக்கட்டி தயாரிக்கும் பொறிகளையும், குளிர் அறைகளையும் மீன் துறை நிறுவி இருக்கிறது.

மீனவர்களின் நன்மைக்காக, இத்துறை சிறிய அளவுள்ள வசதிகளைத் தொடர்ந்து ஏற்படுத்தும். அதே சமயத்தில் மீன் அபிவிருத்திக் கழகம் வியாபார நோக்கமுள்ள பெரிய அளவில் உள்ள வசதிகளை சென்னையிலும், தூத்துக்குடியிலும் மீன் பிடித்துறைமுகங்களில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள உய்யாலிக்குப்பத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ளபெரியதாழையிலும், கோவை மாவட்டத்தில் உள்ள பவானிசாகரிலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பனிக்கட்டி நிலையங்கள் நடப்பு

### மீனவர்களைக் காப்பாற்ற மீட்புக் கலன்கள்

அநேக நாட்களாக அத்தியாவசியமாகத் தேவைப்பட்டதும் மீனவர்களுக்கு நன்மை பயக்கக் கூடியதுமான இரு "மீட்புக்கலன்கள்" ( Rescue Vessels ) எனக் கூறப்படும் கலன்களைத் தயாரிக்கும் பொருட்டு, அரசு இப்பணிக்காக ரூ. 10 இலட்சம் ஒதுக்க உள்ளது. இந்தக் கலன்கள் மீனவர்களுக்குக் கடலில் ஏற்படும் ஆபத்துக்களின் போது உதவுவதற்கென்றே பயன்படுத்தப்படும்.

### உவர்நீர் மீன்வளம்

உவர்நீர் மீன்வள அபிவிருத்திக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்துறையில் செயல்படுத்தப்பட்ட ஒரு சில மாதிரித் திட்டங்கள் இலாப நோக்கோடு உவர்நீர் மீன் வளர்பபை மேற்கொள்ளலாம் என உணர்த்தியுள்ளன. தமிழகத்திலுள்ள 80,000 எக்டேர் பரப்புள்ள காயல்கள், உப்பங்கழிகள் இவைகளில் 27,000 எக்டேர் பரப்பில் இருல், கல் இருல், நண்டு, ஆளிகள், மீன்கள் வளர்ப்புக்குப் பயன்படுத்தலாம். இவ்வகைகளில் பலவற்றை உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமின்றி, அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் முடியும். மாதிரித் திட்டங்களை அடுத்து கோவளம், பழவேற்காடு, கிள்ளை முதலிய இடங்களில் வணிக நோக்கோடு செயல்படக்கூடிய பெரிய பண்ணைகளை அமைக்க மீன் துறை திட்டமிட்டுள்ளது. அம் மாதிரிப் பண்ணை ஒன்று 1977-78-ல் மாநில அரசுத் திட்டத்தின் கீழ் கோவளத்திலும், மத்திய அரசு பிணையாயிருக்கும் திட்டத்தின்கீழ் கிள்ளையிலும் ஏற்படுத்த திட்டமுள்ளது. இது தவிர இத்தகைய சுமார் ஒரு எக்டேர் பரப்புள்ள சிறு பண்ணைகளை அமைத்து மீனவர்கள் நடத்த, தொழில் நுட்ப உதவி மற்றும் பண உதவி வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டங்களும் மற்றும் உவர்நீர் மீன்வளத்தைப் பாதுகாக்க எடுக்கப்படும் திட்டங்களும் உவர்நீர் மீன் பிடிப்பை மேலும் 2 அல்லது 3 மடங்கு பெருக்க உதவும் என்பது உறுதி.





ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டுத் துவங்கியிருக்கின்றன. அதோடு இராமேசுவரத்திலுள்ள இரண்டு டன் உற்பத்தி செய்யும் பனிக்கட்டி நிலையத்தை ஐந்து டன் உற்பத்தி செய்யும் நிலையமாக நடப்பு ஆண்டில் விரிவாக்கப்படும்.

### மீன் பிடிப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பேட்டை!

பல தரப்பட்ட மீன் பிடித் தொழில்களை ஆரம்பிக்கவும், தமிழ் நாட்டிலுள்ள தனியார் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் பொருட்டும், முக்கியமான மீன் இறங்கும் இடங்களில் உள்ள, மீன் துறைக்குச் சொந்தமான சீர்படுத்தப்பட்ட நிலங்களை அவர்களுக்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், எண்ணூர், கடலூர், மண்டபம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் இத்துறையின் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னையிலுள்ள மீன்பிடி துறைமுகம் கட்டி முடிந்ததும், மேம்படுத்தப்பட்ட நிலங்களைப் பிரித்து மீன்பிடித் தொழில்களை நிறுவ முன்வரும் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும்.

### மீன்பிடித் துறைமுகங்கள்—இறங்கு துறை வசதிகள்

இயந்திர மீன் பிடிப் படகுகளுக்குத் தேவையான இறங்கு துறை, தங்கு துறை வசதிகள், மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட திட்டங்களின் கீழ், ஏற்கனவே கீழ்க்கண்ட இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. கடலூர்—சிறு மீன்பிடித் துறைமுகம்.

2. நாகப்பட்டிணம்—இறங்கு வசதிச் சுவர்.

3. மண்டபம்—கரை குடா.

4. இராமேஸ்வரம்—'டி' வடிவ கடல் முகப்பு ஜெட்டி.

5. தூத்துக்குடி—பெரிய மீன் பிடித் துறைமுகம் (9 அடி மிதப்பு வசதி).

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சின்னமுட்டத்தில், ரூ.200 இலட்சம் செலவில் ஒரு பெரிய மீன்பிடித் துறைமுகத்தைஅமைக்கும் செயல் திட்டம் இந்திய அரசின் ஏற்புக்காகக் காத்திருக்கிறது.

கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் படகு தங்கும் துறைகளை ஏற்படுத்துவதற்கான திட்டம், உத்தேச செலவு விவரங்களை நடப்பு ஆண்டில் பெங்களூரில் உள்ள முன் முதலீட்டு திட்ட அளவாய்வு இயக்குநர் தயாரித்து முடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(1) வாலி நோக்கம்—இராமநாதபுரம் மாவட்டம்.

(2) பழையாறு — தஞ்சாவூர் மாவட்டம்.

மேலும் படகுகளுக்குத் தங்கு துறை, இறங்கு துறை வசதிகளை மேற் கொள்ளுவதற்குரியனவாக 15 இடங்கள் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. நிதி வசதிக்கு ஏற்பவும் திட்டம், உத்தேச செலவு ஆகியன தயாரிக்கப்பட்டு இந்திய அரசின் ஒப்புதல் கிடைத்த பின் இவ்விடங்களிலும் மேற்சொன்ன பணிகள் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.

### உள்நாட்டு மீன் வளம்

தற்போது ஆண்டொன்றுக்கு 1.50 இலட்சம் டன்னுக உள்நாட்டு மீன் உற்பத்தி இருந்து வருகிறது. இந்த உற்பத்தி அளவை 2.30 இலட்சம் டன்னுக உயர்த்துவது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலட்சியமாகும். வற்றுத நீர் வளம் இன்மையால் இயற்கை நீர்நிலைகளிலிருந்து மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யக் கூடிய வாய்ப்பு குறைவாக உள்ளது.



முக்கிய மீன் குஞ்சு சேகரிப்புக்கு வழிகோலும் காவிரி நதியில் குறைவாகவும் தடைப்பட்டும் நீர் ஓட்டம் இருந்ததன் விளைவாக இயற்கையாகக் கிடைக்கும் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கை குறைவுபட்டிருக்கிறது. மேற்கண்ட நிலையின் விளைவாக மீன் குஞ்சுகள் உற்பத்தியைப் பெருக்க மாநிலத்தில், 12 இடங்களில் தூண்டும் முறை மீன் குஞ்சு நிலையங்களை படிப்படியாகப் மீன் துறை உருவாக்கியுள்ளது. நீர்

தமிழகத்திலுள்ள மீன் வளர்ப்பிற்குத் தகுந்த எல்லா நீர்ப்பரப்புகளிலும் இருப்புச் செய்ய 1,050 இலட்சம் மீன் குஞ்சுகள் தேவை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இலாபகரமான மீன் இனக் குஞ்சுகளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டி தற்போதுள்ள நிலையங்களை அபிவிருத்தி செய்வதோடு மேலும் 5 புதிய தூண்டும் முறை மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையங்களை ஐந்தாவது திட்டத்தில் உருவாக்க மீன் துறை திட்டமிட்டுள்ளது. ஏற்கெனவே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கத்தில் ஒரு தூண்டும் முறை மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப் பாறையிலும், மதுரை மாவட்டத்திலுள்ள பாலார் — பொறந்தலாறிலும் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருக்காட்டுப்பள்ளியிலும் ஒவ்வொரு நிலையம் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீன் குஞ்சு

நிலைகளில் விரைவாக வளர்ந்து பலன் தரக் கூடிய போதுமான மீன் குஞ்சுகளை இருப்புச் செய்வனால் மட்டுமே, உள் நாட்டு மீன் உற்பத்தி பெருகக் கூடுமாதலால் தகுந்த எல்லா இடங்களிலும் தேவையான அளவிற்கு மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

பராமரிப்புக் குட்டைகள் வசதியைப் பெருக்க வேண்டி மேலும் புதிய மீன் நர்சரிக் குட்டைகளை 1977-78ல் ஆளியாறு, திருமூர்த்தி, சாத்தனூர் அணை, பாலார்—பொறந்தலாறு, பேச்சிப்பாறை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டத்தின் இறுதியில் மீன் குஞ்சுகளின் உற்பத்தி 750இலட்சம் என்ற அளவை எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ; இந்த முயற்சி ஆருவது திட்டத்தில் தன்னிறைவு பெறும் என்பதும் தெளிவு.



சினை மீனுக்கு இனவிருத்திக்கான ஊசி போடுதல்.



பால் கெண்டை

## நீர்த்தேக்கங்களில் மீன் வள வளர்ச்சி

முறையாக மீன் குஞ்சுகளை இருப்புச் செய்து, வளர்த்து, பாதுகாத்து, அவற்றைப் பிடித்து—மீன் வர்த்தகம் மேற்கொள்ளவும் பொதுப் பணித் துறையினால் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தேக்கங்களை மீன் துறை மேற்கொண்டுள்ளது. இதுவரை 36 பெரிய நீர்த் தேக்கங்கள் மீன் வள மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1976-77ஆம் ஆண்டின் இறுதியில் இந் நீர்த் தேக்கங்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 1,200 டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. 1977-78ஆம் ஆண்டில் இந்த நீர்த் தேக்கங்களிலிருந்து பிடிக்கப்படும் மீன்கள் அளவின் இலக்கு 1,652 டன்னாகும்.

1977-78ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்திலுள்ள பொன்னணி ஆறு அணையை மீன் வளர்ப்பதற்கு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மீன் துறை வசமுள்ள 36 நீர்த் தேக்கங்களில் 5 நீர்த் தேக்கங்கள் 1-7-1977 முதல் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம் !

தனியார்கள் உள் நாட்டு மீன் வளர்ப்பிலும், நவீன மீன் வளர்ப்புத் தொழில் நுட்ப முறைகளிலும் ஆர்வம் கொள்ள வேண்டி தஞ்சாவூரில் 26-3-76ல் ஒரு மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசினரால் உருவாக்கப்பட்ட இத்திட்டத்திற்கு அவர்களால் ரூ. 4.50 இலட்சம் நிதி உதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. (ரூ. 3.90 இலட்சம் மானியம்—0.60 இலட்சம் கடன்). 1976-77ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் தஞ்சை மாவட்டத்திலுள்ள 60 எக்டேர் நீர்ப் பரப்பினை மீன் வளர்ப்பிற்காகத் தேர்ந்தெடுத்து 61 அங்கத்தினர்களுக்குக் குத்தகைக்கு விடுத்துள்ளது. இந்த அங்கத்தினர்கள் மீன் வளர்ப்புத் தொழில் நுட்பத்தில் 15 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டார்கள். தற்போது ஒரு எக்டேருக்கு 300 கிலோ கிராமாக இருக்கும் இந் நீர்ப் பரப்பின் மீன் உற்பத்தி, கூட்டு இன மீன் வளர்ப்பினால் ஆண்டொன்றுக்கு 1,500 கிலோ கிராமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மேலும் 140 அங்கத்தினர்களை ஈடுபடுத்தி மேலும் 140 எக்டேர் நீர்ப் பரப்பினை தஞ்சை மாவட்டத்தில் இந்த நிறுவனம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற மீன் பண்ணையாளர் வளர்ச்சி நிறுவனங்களை தர்மபுரி, மதுரை மாவட்டங்களில் ஏற்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

## பயிற்சி

இயந்திரப் படகுகளையும், நவீன மீன் பிடி கருவிகளையும் இயக்கும் தொழில் நுட்பத்திறம் படைத்தவர்கள் கிடைக்க வேண்டி மீன் துறை 6 கடல் மீனவர் பயிற்சி நிலையங்களையும், 1 உள்நாட்டு மீனவர் பயிற்சி நிலையத்தையும் உருவாக்கியது. இந்நாள் வரை இந்நிலையங்களில் 4,153 கடல் மீனவர்களும், 838 உள் நாட்டு மீனவர்களும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

சில விசேஷத் துறைகளில் பயிற்சி அளிக்கும் மத்திய அரசு நிறுவனங்களும் உள்ளன. மீன் துறை அலுவலர்களை இந்த நிறுவனங்களுக்கு அனுப்பி, இந்தப் பயிற்சி வசதிகளை மீன் துறை பெற்று வருகிறது. இந்நோக்கத்திற்காக நடப்பு ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





## சமூக நலத் திட்டம்

(1) வீட்டு வசதி—தமிழகக் கடலோரப் பகுதியில் பரவிக் கிடக்கும் 331 மீனவர் குப்பங்களில் 3.92 இலட்சம் கடல் மீனவர்கள் வாழ்கிறார்கள். மேலும், உள் நாட்டு மீனவர் கிராமங்களில் 1.20 இலட்சம் மீனவர்கள் வசிக்கின்றார்கள். 'தீ 'புயல்', 'கடலரிப்பு' ஆகிய ஆபத்துக்களின் நடுவே அவர்கள் பெரும்பாலும் குடிசைகளின் வாழ்கின்றார்கள். அவர்களுக்குத் தகுந்த வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த ஆண்டு 1,692 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்வதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நாளாவட்டத்தில் எல்லாக் குடும்பங்களும், இத் திட்டத்தின் கீழ் பயன்பெறும்.

## கூட்டுறவுக் கடன் வசதி

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், மீனவர்களுக்கு, மீன்பிடி கருவிகள், வலைகள் வாங்குவதற்குக் கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகின்றது. 1977-78ல் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், மீனவர்களுக்குப் பல விதமான கடன் வசதிக்காக ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உள்ளது. மேலும், இந்திய ரிசர்வ் வங்கியின் மூலமும், புது டெல்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலமும், மீன் பிடிப்பு, மீன் பதனிடுதல், மீன் விற்பனை ஆகியவைகளுக்கு நிதி உதவி பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.



## ஆபத்து உதவி நிவாரணம்

கடலில் மீன் பிடிக்கச் செல்லுகையில் மீனவர்கள் உயிர் இழந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் ஆயிரம் வழங்கப்படுகின்றது. இது வரை பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு ரூபாய் 2,89,000 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து இவ்வுதவித் தொகையை 1,000 ரூபாயிலிருந்து ரூ. 5,000 ஆக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இனி, மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்கள் மூலம், நமது மாநிலம் கடல், மற்றும் உள் நாட்டு மீன் உற்பத்தியில், முன்னேறிச் செல்லும் என்பது என்னுடைய சீரிய எண்ணமும், நம்பிக்கையும் ஆகும். பெரிய மீன் பிடி டிராலர்களை அறிமுகப்படுத்துவது மூலம் ஆழ்கடல் மீன் வளத்தைப் பயன்பெறச் செய்ய முடியும் என்று ஆக்கப் பூர்வமாக எதிர்பார்க்கப்படுகின்றது. இயந்திர மயமாக்குதல், மீன் பதப்படுத்துதல் ஆழ்கடல் மீன் பிடிப்பு, மீன் வர்த்தகம் ஆகிய துறைகளில் தமிழ்நாடு மீன் அபிவிருத்திக் கழகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியோடு இந்த நாட்டில் நமது மாநிலம் மீன் உற்பத்தியில் சிறந்த ஓர் இடத்தை அடைய முடியும் என்று நான் கருதுகின்றேன். **

*[1977—78-ஆம் ஆண்டுக்கான மீன்வளத்துறை மானியத்திலிருந்து தொகுக்கப்பட்டது].*



# சாணத்திலிருந்து சக்தி!

—எஸ். கணபதி.

'சாணம்தானே' என்று ஒரு காலத்தில் அலட்சியமாக ஒதுக்கிய நிலை போய், இன்று 'சாணத்திற்கும் சக்தி உண்டு' என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சாணத்திலிருந்து 'மீத்தேன்' என்ற எரிவாயுவை உற்பத்தி செய்யலாம். இவ்வாயு, விலைமலிவாகக் கிடைக்கும் சிறந்த எரிபொருளாகப் (Energy) பயன்படுகிறது. இவ்வாயு அடுப்பெரிக்கவும், விளக்கு எரிக்கவும் பயன்படும் என்றிருந்த நிலையுடன், இன்று 'டீசல்' எண்ணெய் இயந்திரத்தைச் சிக்கனமாக இயக்கிடவும் பயன்படும் என்ற அளவுக்கு அறிவியல் வளர்ந்துள்ளது. அந்த அறிவியல் நுட்பத்தைக் கேள்விப்பட்ட திரு. எஸ். கணபதி என்ற முன்னோடி உழவர் பெருமகன் (தோட்டப்பாடி கிராமம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், தென்ஆர்க்காடு மாவட்டம்) சாணத்திலிருந்து கிடைக்கும் சக்தியைப் பயன்படுத்தி, தன் 'டீசல்' என்ஜினை இயக்கித் தண்ணீர் இறைத்துச் சாகுபடி செய்து வருகிறார்.

டீசலையும், சாண எரிவாயுவையும் கலந்து இஞ்ஜினை இயக்குவது பற்றிய தன் அனுபவத்தை, அவர் இக்கட்டுரையில் விளக்கியுள்ளார். இம்முறையினால் அவருக்கு ஆண்டொன்றுக்கு 'டீசல்' வகையில் செலவாகும் ரூபாய் 2,000 மீதமாகிறது என்று கூறுகிறார். அவரைப்போல் மற்ற உழவர் பெருமக்களும் இம்முயற்சியில் ஈடுபட்டால், உழவர்களின் 'டீசல்' செலவு குறைவதுடன், 'டீசல்' இறக்குமதி செய்யும் வகையில் வீணாகும் நம் நாட்டின் அந்நியச் செலாவணியும் மீதமாகும்.

'டீசல்' எண்ணெய் இயந்திரங்களைப் பயன்படுத்தித் தண்ணீர் இறைத்து, வேளாண்மை செய்து வரும் எண்ணற்ற உழவர்கள், 'டீசல்' விலை உயர்ந்துவிட்டதால் சாகுபடி செலவு அதிகமாகிறது என்று முறையிடுகிறார்கள். மின் இணைப்புப் பெற்று மோட்டார் பொருத்தித் தண்ணீர் இறைக்கலாம் என்றால், மின்சாரப் பற்றாக் குறையும் அவ்வப்போது தோன்றி, உழவர் பெருமக்களை அச்சுறுத்துகிறது.

"இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாதா?" என்று ஏங்குகின்றார்கள் பல உழவர் பெருமக்கள். இப்படி ஏங்கும் உழவர் பெருமக்களுக்கு இக்கட்டுரை நல்வழி காட்டும்.

தென்னார்க்காடு மாவட்டம் சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் தோட்டப்பாடி கிராமத்தில் 7.00 ஏக்கர் சாகுபடி நிலப்பரப்பில் ஒரு பாசனக் கிணற்றுடன் பண்ணைத் தொழில் செய்து வரும் எனக்கு மோட்டார் அமைக்க மின்சாரம் தேவைப்பட்டது. அதற்காக 1973—ஆம் ஆண்டு மின்சார வாரியத்தோடு பம்பு செட்டுக்கு மின் இணைப்புக் கோரி ஒப்பந்தம் செய்தும், மதிப்பீட்டுத் தொகை அதிகமாவதைத் தான் காரணம் காட்டி, காலந் தாழ்த்துவதைத்தான் நான் இதுவரையில் காண முடிந்தது. ஆகவே, இதற்கு மாற்று வழி ஆயில் இஞ்சின் அமைத்து பண்ணையை நடத்துவது என முடிவு செய்தேன்.

ஆயில் இஞ்சின் அமைத்துப் பண்ணையை நடத்தி வரும் எனக்கு டீசல் எண்ணெய் பெரும் பிரச்சினையாகிவிட்டது. எண்ணெய் வாங்கி ஊற்றிப் பண்ணையை நடத்தி வர முடியவில்லை. ஏனெனில் நாளுக்கு நாள் டீசலின் விலை ஏறிக்கொண்டே இருக்கும் இந்த நாளில் பண்ணையிலிருந்து நஷ்டமே அதிகமாயிற்று.

இந்த அவல நிலையிலிருந்து எப்பொழுது நாம் விடுபடுவோம் என ஏங்கிக் கொண்டு இருந்த நான் ஒரு நாள்வானொலியில்,"சாணத்திலிருந்து உற்பத்தியாகும் சாணஎரிவாயுவைக் கொண்டு விவசாயிகள் 5 எச்.பி. ஆயில் இஞ்சினை இயக்கலாம்' என்ற கோவை வேளாண் பல்கலைக் கழக அறிவிப்பைக் கேட்டேன்.

ஆகவே, இது சம்பந்தமான விளக்கங்களை அறிந்து கொள்ள கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் அலுவலர்களை அணுகி சில விளக்கங்களைப் பெற்றேன். நிதி வசதியற்ற எனக்கு சாண எரிவாயு தயாரிப்பதற்குச் சாதன அமைப்புப் பொறியை அமைப்பதற்கான ஒத்துழைப்பும், நிதி உதவியும் தேவைப்பட்டன. ஆதலால் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று ஆவன செய்யக் கோரினேன். அவர்கள் எங்களிடம் இந்தத் திட்டத்தைப் பற்றிய விளக்கம் எதுவும் இல்லை என்றும் கடன் வழங்க இயலாது என்றும் கூறி அது சம்பந்தமாக அரசிடமிருந்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டால் உங்களுக்கு ஆவன செய்கிறோம் என்று கூறிவிட்டார்கள்.

இவ்வளவு முயற்சி செய்யும் எட்டாக் கனியாக இருந்தது இந்தத் திட்டம். என்ன செய்வது என்று இருந்த எனது இல்லந் தேடி கிராம நல ஊழியர் அவர்கள் வந்தார். சாண எரிவாயுந் திட்டம் பற்றி கூறி அதற்கான விண்ணப்ப நமூனாவையும் பூர்த்தி செய்து கொடுத்து இது அமைப்பதற்கான நிதி வசதியை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் பெறலாம் என்ற நம்பிக்கையையும் ஊட்டினார்.

"முயற்சி உடையார் இகழ்ச்சி யடையார்" என்பதற்கொப்ப அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டேன். இரண்டு திங்களில் சின்ன சேலத்திலிருக்கும் 'இந்தியன் ஓவர்சீஸ் வங்கி'யின் கிளை அலுவலகம் எனக்கு ரூ. 4,000 நிதி உதவி அளிக்க முன் வந்தது.

எரி வாயுவின் இஞ்சினை இயக்க ஆசைப்பட்ட நான் அவ்வாறு இயங்குவதைக் காண வேண்டும் என ஆசைப்பட்டேன். அப்போது, ஆத்தூர் நண்பர் திரு ராமகிருஷ்ணன் அவர்கள் என் இல்லத்திற்கு வந்தார். என் ஆவலை அவரிடம் தெரிவித்தேன். இதில் சிறிது அனுபவம் உள்ள அவர் 'இஞ்சினை இயக்க முடியும்' என உறுதி கூறியதுடன், திருச்சி மாவட்டம் மலையாளப்பட்டியில் சாண எரிவாயுவினால் 6 எச்.பி. லிஸ்டர் இஞ்சின் இயங்கி வருகிறது என்றும் கூறினார். இதைக் கேட்ட நான் மறுநாளே மலையாளப்பட்டி சென்றேன். இஞ்சின் இயக்குபவரைக் கண்டேன். முறையை அறிந்தேன். அவர்கள் 100 மில்லி லிட்டர் டீசல் எண்ணெயுடன், எரிவாயுவையும் சேர்த்து இயக்கினால் இஞ்சின் 1.00 மணி நேரம் இயங்கும் என்று கூறினார்கள். இதனால் மனம் தெளிவு பெற்றது. திடமான நம்பிக்கையுடன் ஒரு முடிவுக்கு வந்தேன்.

ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், வங்கி அலுவலர் . இவர்களின் ஒத்துழைப்போடு



8 எச். பி. இஞ்சினுக்குள் சாண எரிவாயு செலுத்தப்பட்டு இஞ்சின் இயக்கப்படுகிறது.

தொழில் தெரிந்தவரைக் கொண்டு ரூ. 6,200 மதிப்பீட்டில் 10 அடி விட்டமுள்ள வாயுக் கொள்கலன் (Gas Holder) 350 கன சதுர அடி திறன் கொண்ட சாண எரிவாயு சாதன அமைப்பு கட்டடத் தொழிலாளரின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 6ஆம் நாள் முதல் டீசல் எண்ணெயுடன் எரிவாயு உட்செலுத்தப்பட்டு இஞ்சின் இயங்க ஆரம்பித்தது.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கொப்ப என் போன்ற ஏழை எளிய நடுத்தர விவசாயிகள் பயனடைய வேண்டுமென்பதற்காக, சாண எரிவாயு மூலம் இஞ்சின் இயங்கும் விதம், இதனால் ஏற்படும் நன்மைகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

எளிய வாழ்வினை மேற்கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு எளிதில் கிடைப்பது சாணம். நமது அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் வங்கு வகிப்பது சாணம். வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு சக்தி மிக மிகத் தேவை என்பதை யாவரும் அறிவர். அந்தச் சக்தியை, நமது கால்நடைகளின் மூலம் எளிதில் கிடைக்கும் சாணத்திலிருந்தே எளிதில் பெற முடியும். சாணத்திலிருந்து உற்பத்தியாகும் 'மீத்தேன்' என்ற எரிவாயு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கீழ்க்கண்ட முறைகளில் பயன்படுகிறது.

1. சாண எரிவாயுவைக் கொண்டு அடுப்பு எரிக்கலாம். இதனுல் நமக்கு விறகோ, மண்ணெண்ணெயோ தேவையில்லை. பெண்கள் புகையினின்றும், 'ஸ்டவ்'களிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

2. சாண எரிவாயுவைக் கொண்டு விளக்கு எரிக்க முடியும். இதனுல் திடீர் திடீர் என்று அணைந்து போகும் மின்சாரத்தை நம்பியோ, மறைந்திருக்கும் மண்ணெண்ணெயை நம்பியோ இருக்க வேண்டியதில்லை.

3. எரி வாயு தயாரிக்கப்பட்ட பின்பு வெளிவரும் சாணக் கரைசல், நன்கு தயாரிக்கப்பட்டு மக்கு உரமாக—பயிர்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துள்ள உரமாக — பயன்படுகிறது.

4. 'டீசல்' எண்ணெய் மூலம் இயங்கும் நீரேற்று இயந்திரத்தையும் எரிவாயு மூலம் இயக்கலாம்.

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று பயன்களையும், அவ்வப்போது வானொலி மூலமும், செய்தித் தாள்கள் மூலமும் அறிந்திருக்கலாம். ஆனுல் நான்காவதாக குறிப்பிட்டுள்ள ஆயில் இஞ்சினுக்கு பயன்படுத்துவது பற்றிய விளக்கங்கள் இன்னும் சரியாக வெளிவரவில்லை.




**சாண எரிவாயுவின் உதவியால் இயங்கும் எண்ணெய் இயந்திரத்தை சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அலுவலர்களும் பார்வையிட்டனர்.**

இதுபற்றிய விளக்கங்கள் விவசாயிகளுக்குக் கிடைத்தால், அவர்கள் வாழ்வு வளம் பெறும் என்பதில் ஐயமில்லை. ஆகவே, 75 சதவிகிதம் விவசாயிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்திய துணைக்கண்டப் பொருளாதார மேம்பாட்டிற்கு, **'சாண எரிவாயுத் திட்டம்'** ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். இதன் மூலம் எரி பொருளுக்கென்று அரபு நாடுகளுக்கு நாம் தரும் அன்னியச் செலாவணியை மீதப்படுத்தலாம்.

**'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை'** என்பதைப் போல, கிணற்றில் தண்ணீர் இருந்தும் இஞ்சினுக்கு எண்ணெய் வாங்கி ஊற்றி தண்ணீரை இறைக்க முடியாமல் தவித்து வரும் ஏழை விவசாயிகளும், மின் இணைப்புப் பெற்று பம்பு செட் அமைத்துத் தண்ணீர் பாய்ச்ச முடியாத நடுத்தர விவசாயிகளும் இனி கவலையுற வேண்டியதில்லை.

சாதாரணமாகக் கிடைக்கும் சாணத்தைக் கொண்டு எரி வாயுவை உற்பத்தி செய்து அவற்றைப் பயன்படுத்தி இஞ்சினை இயக்கி தண்ணீரை இறைத்துப் பாய்ச்சிப் பயன் அடையலாம்.

## எரிவாயுவினுல் இஞ்சினை எப்படி இயக்குவது ?

வாயுக் சொள்கலனிலிருந்து அடைப்பான் பொறுத்தப்பட்ட 1 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் எரிவாயு வெளியே எடுக்கப்படுகிறது. அக்குழாயுடன் $\frac{3}{4}$ அங்குல விட்டமுள்ள குழாய் பொறுத்தப்பட்டு இஞ்சினுக்கு அருகில் கொண்டு வரப்படுகிறது. அங்கு மீண்டும் $\frac{1}{2}$ அங்குல விட்டமுள்ள குழாயுடன் அடைப்பான் பொறுத்தப்பட்டு இணைக்கப்படுகிறது. பிறகு இன்னும் சிறிது விட்டம் குறைவாய் உள்ள ரப்பர்க் குழாயுடன் இணைத்து மறு முனையை டீசல் இஞ்சினின் காற்று உட்செல்லும் குழாய்க்குள் (Air Filter Pipe) சிறிய குழாயைப் பொறுத்தி, வால்வு (Inlet Valve) அருகாமையில் எரி வாயு செல்லுமாறு அமைக்கப்படுகிறது. எரி வாயுச் சாதனத் தொட்டியின் அருகாமையில் (சுமார் 5 அடி தூரம்) வாயு செல்லும் குழாயோடு நீர் வடிகட்டி (Water Filter) ஒன்று அவசியம் பொறுத்தப்படல் வேண்டும். இதனுல் அவ்வப்போது கொள்கலனிலிருந்து வாயுவுடன் வரும் நீராவி குளிர்ந்து வடிகட்டியில் தங்கிவிட ஏதுவாகும். இஞ்சினின் தொடர் ஓட்டத்தில் தொல்லை இராது.

வழக்கம் போல் இஞ்சினை டீசலில் இயக்கிவிட (Start) வேண்டும். சிறிது நேரம் கழித்து (5 நிமிடம்) $\frac{1}{2}$ அங்குல வாயு அடைப்பானைச் (Cock near the oil Engine) சிறிது சிறிதாகத் திறக்க, எரிவாயு உட்செல்லும். டீசல் எடுத்துக் கொள்ளும் அளவை Fuel Pump-ல் குறைத்துக் கொள்ளலாம். டீசல் அளவு துல்லியமாக கணக்கெடுக்கும்பொருட்டு 'மில்லி லிட்டர்' அளவு குறிக்கப்பட்ட பாட்டிலில் டீசலை ஊற்றி அத்துடன் Fuel Pump-ல் டீசல் செல்லும் குழாயை இணைக்கலாம்). ஓட்டத்தில் இருக்கும் இஞ்சினில் எரிவாயு உட் சென்றவுடன், Fuel Pump —ல் இருக்கும் Governor Rod தன்னிச்சையாக டீசல் செலுத்துவதைக் குறைப்பதைக் காணலாம். இந்த நிலையில், இஞ்சின் புகைபோக்கியில், புகை கூடச் சரியாகத் தெரியாது. (தனி டீசல் ஓட்டத்தில் இருப்பது போல் புகை இருக்காது). இஞ்சின் ஓட்டம், நீர் ஏற்றத் திறன் ஆகியவைகளுக்கொப்ப வாயு உட்செலுத்துவதைக் கூட்டவோ, குறைக்கவோ அடைப்பானைத் திருகுவதன் மூலம் சரி செய்து கொள்ளலாம். ஆனுல் டீசலைப் போல், எரிவாயு (Gas) உட்செல்லும் அளவைக் கணக்கிடத் தனிக் கருவியைப் பொருத்தினுல்தான் முடியும். அப்படியொரு அமைப்பு இருந்தால் இன்னும் பேருதவியாக இருக்கும்.

நான் பார்த்து வந்த இஞ்சினுக்கும், என்னிடம் இயங்கும் 8 'எச்.பி.' இஞ்சினுக்கும் உள்ள மாறுபட்ட விவரங்களைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

| குதிரை திறன் (H.P.) | ஓட்டம் மணிக்கு (R.P.M.) | குழாய்கள் நீளம், பொறியின் | | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | நீரேற்றும் உயரம் (Lift) | உறிஞ்சும் உயரம் (Suction) | டீசல் மட்டும் மணிக்கு | எரிவாயு+ டீசல் 1 மணிக்கு | |
| 6 | 650 | 25 அடி | 25அடி | 1.000 முதல் 1.150 லிட்டர் வரை | 0.100 முதல் 0.150 லிட்டர் வரை | மணிக்கு மீதப்படுவது 1 லிட்டர் டீசல் |
| 8 | 1,200 | 45 அடி | 27அடி | 1.150 முதல் 1.350 லிட்டர் வரை | 0.250 முதல் 0.350 லிட்டர் வரை | 1 லிட்டர் டீசல் |

முதல் வகைப் பொறியை விட, இரண்டாம் பொறியின் பம்புக்கு நீர் உறிஞ்சும் ஆழங்கூடச் சற்று அதிகம். ஆகவே மேற்கூறிய அட்டவணையிலிருந்து பொறியின் இயங்கும் சக்தி, ஓட்டத் திறன், நீரை உறிஞ்சி தள்ளும் திறன் அதிகமாவதைப் போல், மணிக்கு எடுத்துக் கொள்ளும் டீசலின் அளவும் அதிகமாகிறது என்ற உண்மை புலப்படுகிறது.

தினசரி எனது பண்ணையிலிருந்து கிடைக்கும் சாணத்தைக் கரைத்து எரிவாயு தயாரிக்கும் சாதனத்தில் ஊற்றப்படுகிறது. அதனுல் தற்போது உற்பத்தியாகும் எரிவாயு 8 எச்.பி. இஞ்சினுக்கு 3.25 மணி நேரம் (காலையில் மட்டும்) இயக்கப் போதுமானதாக இருக்கிறது. தனி டீசலில் இயங்கும்பொழுது கிணற்று நீரை வடிக்க 4 மணி நேரம் பிடித்தது. தற்போது எரிவாயுவும் சேர்ந்துச் செல்வதால் தண்ணீரின் வேகம் சற்று அதிகரிப்பதோடு, 0.5 மணி நேரம் முன்னதாகவே நீரை வடித்து விடுகிறது. மீதி நேரங்களில் எரி வாயு, சமையல் செய்யப் பயன்படுத்தப்படுகிறது.

### அன்றுடச் செலவில் சிக்கனம்

| | அன்றுடம் இயங்கும் நேரம் | தேவைப் படும் டீசல் | செலவு (ரூபாய்) |
|---|---|---|---|
| டீசல் மட்டும் | 4 மணி | 5.5 லிட்டர் | 7.70 |
| டீசல் மற்றும் எரி வாயு | 3.5 மணி | 1.5 லிட்டர் | 2.10 |
| சேமிப்பு | | 4 லிட்டர் | 5.60 |

ஆகவே, டீசலுடன், சாண எரிவாயுவைச் செலுத்தி, இஞ்சினை இயக்குவதால் நாள் தோறும் எனக்கு 4 லிட்டர் டீசல் செலவு அதாவது ரூபாய் 5.60 மீதமாகிறது.

சமையல் செய்யவும், விளக்கு எரிக்கவும் ஆகும் செலவு ரூ. 1.50-ம், சாண எரிவாயு மூலம் மீதமாகிறது. ஆகவே அன்றுடம் எனக்கு 7.10 மீதமாகிறது.

எனவே ஆண்டுச் சேமிப்பு 7.10X365= ரூ. 2,555. மழைக்காலங்களில் பாசனம் குறைவதால் அதற்கென்று ரூ. 550 குறைத்தாலும், ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 நிகர சேமிப்பு உண்டு.

8 எச்.பி. இஞ்சின் இயக்கச் செலவு, [1 மணிக்கு 300 மில்லி லிட்டர் விதம்] = $\frac{300 \times 14}{100}$ = 42 பைசா மட்டுமே.

இதிலிருந்து ஒரு மணி நேரம் 5 எச்.பி. மின்சார மோட்டாரை இயக்க ஆகும் செல





எண்ணெய் இயந்திரம் இயங்காத நேரத்தில் சாண எரிவாயு சமையல் செய்வதற்குப் பயன் படுத்தப்படுகிறது.

வைவிட, 8 எச்.பி. ஆயில் இஞ்சினில் செலவு குறைவதைக் காணலாம்.

சாதாரண வேளாண் குடிமகனுகிய என்னுல் அன்ருடம் 4 லிட்டர் டீசல் சேமிக்க முடிகிற தென்ருல், 75 சத விவசாயிகளேக் கொண்ட இந்திய நாட்டில் உள்ள கோடிக் கணக்கான விவசாயிகளும் சாண எரிவாயு தயாரித்து டீசல் இஞ்சினே இயக்கினுல், எவ்வளவு டீசலேக் குறைக்க முடியும் என்பதையும், அதன் மூலம் எவ்வளவு அன்னியச் செலாவணியை மீதப் படுத்த முடியும் என்பதையும் சிந்தித்துப் பார்த்தால் இத்திட்டம் எவ்வளவு பயனுள்ளது என்பது தெளிவாகும்.

வருங்காலத்திற்கு வேண்டிய சக்தியைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட தொழில் நுணுக்க அறிஞர்கள் பொறியியல் மற்றும் வேளாண்மைத் துறைகளில் மேலும் மேலும் ஆய்வு செய்து பல துறைகளிலும் இச்சக்தியைப் புகுத்துவார்களேயானுல் இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் இத்திட்டம் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லே.

இத்திட்டம், பட்டி தொட்டிகளெல்லாம் பரவுமேயானுல் அண்ணல் காந்தி அடிகள் கண்ட ‘சுய தேவைப் பூர்த்தி’ கனவு நனவாகும். அதுதான் நமது பொற்காலம்.

## டாக்டரிடமே ‘ஃபீஸ்’ வாங்கியவர்!



1933-ஆம் ஆண்டு.

காந்தியடிகள், சுற்றுப்பயணத்தின் போது மிகவும் களேப்பாகக் காணப்பட்டார். அப்போது அவர் லாகூரில் தங்கியிருந்தார். காந்தியின் உடல் நிலேயை உணர்ந்துகொண்ட ஒரு புகழ்பெற்ற டாக்டர், அவரிடம் வந்து, ‘‘மகாத்மாஜி! நான் உங்களே வைத்தியப் பரிசோதனே செய்து பார்க்க விரும்புகிறேன்!’’ என்ருர்.

‘‘சரி! செய்யுங்கள்! எனக்கு உடம்பு அப்படியொன்றும் மோசமாக இல்லே!’’ -காந்தி பதில் கூறினுர்.

‘‘பரிசோதித்துப் பார்க்காத வரையிலும் எங்களுக்குச் சமாதான மாயிராது’’ -டாக்டர் சொன்னுர்.

‘‘சமாதானத்திற்கென்ருல் சரி! ஆனுல் எனக்கு ‘ஃபீஸ்’ கொடுக்காமல் யாரையும் நான் பரிசோதிக்க விடுவதில்லே. என்னேப் பார்க்க வந்தவர்கள் எத்தனேயோ பேர் காத்துக்கொண்டிருக்கும் போது, உங்களுக்காக எதற்காக நேரத்தை வீணுகச் செலவிடுவது?’’ -காந்தியடிகள் கேட்டார்.

டாக்டர் அசந்துபோய்விட்டார். நோயாளி, டாக்டருக்கு ஃபீஸ் கொடுப்பது போக, மகாத்மா என்னும் நோயாளி, டாக்டரிடமே ‘ஃபீஸ்’ கேட்கிருரே! என்று வியந்த டாக்டர், காந்தியின் விருப்பத்திற்குச் சம்மதம் தெரிவித்து, தன் பையில் அப்போதிருந்த 16 ரூபாயை எடுத்து காந்தியின் முன்னே வைத்து, ‘‘ஒரு நோயாளியைப் பார்க்கப் போயிருந்தேன்; அவர் எனக்குக் கொடுத்த ‘ஃபீஸை’ உங்கள் முன் வைத்துவிட்டேன்’’ என்ருர்.

காந்தியடிகள் அந்தப் பணத்தை மிகுந்த திருப்தியுடன் எடுத்துக் கொண்டார். அரிஜன நிதியில் சேர்த்து விட்டார்.

# அண்ணல் காந்தியடிகள் அரைத் துண்டை ஆடையாக அணிந்தது ஏன்?



‘‘அரைத் துண்டை நான் என்னுடைய பிரதான உடையாக மேற்கொண்டது என்னுடைய வாழ்க்கை வரலாற்றில் ஏற்பட்ட உடுப்பு மாறுதல்களில் மிகவும் முக்கியமானதொரு கட்டமாகும்’’ என்று காந்தியடிகள் தமது ‘‘யங் இந்தியா’’ பத்திரிகையில் ஒரு முறை எழுதியிருந்தார். அரைத்துண்டை அவர் எவ்வாறு தமது இறுதி உடையாக மேற்கொள்ள நேரிட்டது?

மாணவர் வாழ்க்கைக் காலத்தில் லண்டனில் தாம் இருந்து வந்தபோது, அவர் ஐரோப்பிய பாணியில் அமைந்த ஆடைகளேயே உடுத்தி வந்தார். பிறகு சுமார் இருபதாண்டுக் காலம் வரை அத்தகைய ஆடைகளேயே அவர் அணிந்து வந்தார். தென்னுப்பிரிக்காவில் வேலே நிறுத்தத்தில் ஈடுபட்ட இந்தியர்கள் சிலர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சமயத்தில்தான் அவர் உடுப்பு மாற்றத்தின் அவசியம் பற்றி முதன் முதலில் சிந்திக்கலாயினுர். அச்சம்பவத்திற்குத் துக்கம் தெரிவிக்கும் வகையிலாக அவர் தமது ஐரோப்பிய உடைகளேக் களேந்தெறிந்துவிட்டு இந்திய ஒப்பந்தத் தொழிலாளிகள் அணியும் எளிய உடுப்பையே தானும் மேற்கொண்டார். *1913*-ஆம் வருடத்துப் படங்களில் காந்தியடிகள் அத்தகைய உடைகளேப் பூண்டு சத்தியாகிரகி ரூபத்தில் காணப்படுவதைப் பார்க்கலாம்.

ஆனுல், *1921* செப்டம்பர் மாதத்தில் தான் அவர் உண்மையிலேயே உடையில் பெரும் மாறுதல்களேச் செய்து கொண்டார். அக்காலம் முதலாக இறுதி வரையில் அரைத் துண்டு ஒன்றை மட்டிலுமே அவர் உடுத்தி வந்தார். அம் மாறுதல் பற்றிய வரலாற்றை காந்தியடிகளே வர்ணித்திருக்கிருர்.

காந்தியடிகள் மதுரை வரை தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணம் ஒன்றை மேற்கொண்டிருந்த சமயம் அது. அவர் எப்பொழுதும் ரயில் வண்டியில்தான் பிரயாணம் செய்வது வழக்கம். ஜன நெரிசல் மிகுந்த ரயில் பெட்டிகளில் பயணம் செய்து வந்த அனேவரும் அந்நியத் துணியில் தைக்கப்பட்ட உடைகளே அணிந்திருந்ததைக் கண்டார். அவர்களிடம் காதியின் உபயோகம் பற்றிப் பேச்சுக் கொடுக்கலாயினுர். அவர்கள் தங்கள் தலேகளே அசைத்து, ‘‘காதியின் விலே மிகவும் அதிகமாக உள்ளது; நாங்கள் மிகவும் ஏழைகள் ஆதலால் எங்களால் அதை வாங்குவது சாத்தியமில்லே’’ என்று பதிலளித்தனர்.

அவர்கள் பதிலேக் கேட்டு காந்தியடிகள் சிந்தனேயில் ஆழ்ந்தார். அவர்கள் கூறுவதிலும் ஓரளவு உண்மை உள்ளது என்பதையும் அவர் உணர்ந்தார். ஆனுல் பிற்பாடு ஒரு சமயத்தில் அவருக்கு ஏற்பட்ட ஓர் அனுபவம் அவ்வுண்மையின் முழு பிரபாவத்தையும் அவர் பரிபூரணமாக உணர்வதற்குக் காரணமாக இருந்தது.

நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய வறுமை காரணமாக கோவணம் ஒன்றையே தங்களது ஆடையாக அணிந்து வந்ததையும் அவர் கண்டார். அவர்களுக்கு தாம் என்ன பதிலளிக்க முடியும் என்று காந்தி சிந்தனே செய்யலானுர். தாமும் அவர்கள் போலவே எளிய உடையை உடுத்துவதன் மூலமே அவர்களுடைய நிலேயைத் தாம் பூரணமாக உணர்ந்திருப்பதை எடுத்துக் காட்ட முடியும் என்ற முடிவுக்கும் அவர் வந்தார்.

அதுவரை அரையங்கியும், காந்திக் குல்லாயும், முழு வேஷ்டியும் அணிந்து வந்த

அவர், அவற்றைக் களைந்தெறிந்து விட்டு, இனி அரைத் துண்டு ஒன்றையே தமது ஆடையாக மேற்கொள்வது என்றும் தீர்மானித்தார். அதன் மூலமாகத்தான் தாமும் ஏழ்மைக் கோல ஆடையுடைகளை யணிந்து பாமர மக்களிடம் நெருங்கிப் பழக முடியும் என்ற முடிவுக்கும் அவர் வந்தார்.

மறுநாட் காலை அவர் தம் தலையை மொட்டையடித்துக் கொண்டார். தம்முடைய குல்லாயையும், அரையங்கியையும் களைந்து எறிந்தார். தம்முடைய மாமூலான வேஷ்டிக்குப் பதிலாக ஒரு முழமே அகலமுள்ள கதரினாலான அரைத் துண்டு ஒன்றைத் தம் இடையில் சுற்றிக் கொண்டார். இந்த அரைத் துண்டு தான் வரலாற்றுப் பிரசித்தம் பெற்று, அவரது கடைசி நாள் வரை அவருடைய வழக்கமான அன்றாட உடையாக அமைந்திருந்தது.

பல ஆண்டுகள் கழித்து, லண்டனில், அவர் அரைகுறையாக ஏன் ஆடையுடுத்தியுள்ளார் என்று கேட்கப்பட்டதற்கு பதிலளிக்கையில்: ''இந்தியாவில் இலட்சக் கணக்கான மக்கள் இவ்வாறு அரைத் துண்டு ஒன்றைத் தான் உடுத்தி வருகின்றனர். அதனால்தான் நானும் அதை உடையாக மேற்கொண்டேன். என்னை 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று கூடச் சிலர் கூறுகின்றனர். இந்தியாவில் உள்ள ஏழைகளுள் ஏழைகளான மக்களுடன் என்னை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் பொருட்டே நான் இவ்வாறு உடுத்தி வருகிறேன்'' என்று கூறினார்.

—'நாம் அறிந்த காந்திஜி',
'பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்.'

## விதிக்கு அளித்த மதிப்பு!

கதர் ஆடைகளை அணிவதிலும், அந்நிய நாட்டுத் துணியால் ஆகிய ஆடைகளை வெறுப்பதிலும் காந்தியடிகளுக்கு இணை காந்தியடிகளே தான்! அப்படி இருந்தும் அவரே அந்நிய நாட்டுத் துணியால் ஆன ஆடையை ஒருமுறை அணிய நேர்ந்தது. அரசாங்க விதியை மீறுவது கூடாது என்ற உணர்வில்தான் அதனை அணிந்திருந்தார். அந்த நிகழ்ச்சி இது...

1921—ஆம் ஆண்டு, ஆறு வருடத் தண்டனை அளிக்கப்பெற்று எரவாடா சிறையில் வைக்கப்பெற்றிருந்தார் காந்திஜி. அப்போது அவருக்கு 'குடல்வால் அழற்சி' நோய் ஏற்பட்டதால் மருத்துமனையில் சேர்க்கப்பெற்றிருந்தார். அங்கே, அந்நிய நாட்டுத் துணியால் ஆகிய உடையை அவருக்கு வழங்கியிருந்தார்கள். மருத்துவ மனையில் நோயாளி சொந்த ஆடைகளை உடுத்தக்கூடாது ; மருத்துவமனை கொடுக்கும் ஆடையையே உடுத்த வேண்டும் என்பது விதி. மருத்துவமனையின் விதிகளினின்றும் விலக விரும்பவில்லை காந்தியடிகள் ; அதனால் அந்நிய நாட்டுத் துணியால் ஆன ஆடையை அணிந்து கொண்டார்.

காந்தியடிகளுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அவர் மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார். ஒரு நாள் ஓர் அதிகாரி அவரிடம் வந்து, '' உங்களுக்கு விடுதலை அளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்திடமிருந்து உத்தரவு வந்துள்ளது. இனி உங்கள் விருப்பம் போல் செய்யலாம் ; மருத்துவமனையில் இருக்க நினைத்தால் இருக்கலாம்; வெளியே போக நினைத்தால் போய் விடலாம் ! ஆனாலும் நீங்கள் மருத்துவ மனையில் இன்னும் சில நாட்கள் இருப்பது நல்லது என்பது டாக்டர்களின் ஆலோசனை '' என்று கூறினார்.

காந்தியடிகள் அதற்குச் சம்மதம் தெரிவித்தார் ; ஆனால் மறுநிமிடமே, பக்கத்திலிருந்த தனது சகாவிடம் அவர் சொல்லிய வாசகம் என்ன தெரியுமா ?

'' என் இந்த (அந்நியநாட்டு) ஆடைகளைக் கழற்றிவிடு ; என் சொந்தத் துணிகளைக் கொண்டு வா. இனி ஒரு கணம் கூட இந்த ஆடைகளை என்னால் சகித்துக் கொள்ள முடியாது '' என்பதுதான் !

அரசாங்கத்தின் கைதியாக இருந்தபோது தான், அரசாங்க விதிக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். விடுதலை கிடைத்தபிறகு ஏன் விதிக்கு அடிமையாக வேண்டும் என்ற எண்ணமே காந்தியடிகளுக்கு ஏற்பட்டது.

அந்நிய நாட்டு ஆடையைக் களைந்துவிட்டு கதர் ஆடை அணிந்த பின்னரே அவரது மனம் அமைதியடைந்தது.

''கிராமங்களில் ஒரே குளத்தின் நீர் வரைமுறையின்றி குளிக்கவும், துணி துவைக்கவும், குடி தண்ணீருக்கும், சமைக்கவும் பயன்படுத்தப்படுகிறது. பல கிராமங்களில் மாடுகளையும் இவற்றிலேயே குளிப்பாட்டுகிறார்கள். இந்நீர் நிலைகளில் எருமைகள் விழுந்து புரண்டு கொண்டிருப்பது நாம் அங்கே சாதாரணமாகக் காணக் கூடிய காட்சியாகும். இம்மாதிரி அக்கிரமம் செய்தும் கிராமங்கள் கொள்ளை நோய்களுக்கு இரையாகி, இன்னும் அழிந்து போகாதிருப்பது ஆச்சரியமே ! கிராமத்தாரை வதைத்து வரும் பெரும்பாலான நோய்களுக்கு கிராமங்களில் சுத்தமான குடி தண்ணீருக்கு வசதி செய்வதில் போதிய கவனம் செலுத்தப்படாமையே முக்கிய காரணமென்பது வைத்தியர்களின் ஏகோபித்த அபிப்பிராயம்''.

— அண்ணல் காந்தியடிகள்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.




வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676



மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத்துறை.
தமிழ்நாடு அரசு.







# தமிழரசு

1 - 11 - 1977

மலர் : 8 இதழ் : 9


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| இந்தியாவை உருவாக்கிய சிற்பி! | 2 |
| வெள்ளம் விளைத்ததோ வேதனை! அரசு செய்ததோ சாதனை! | 6 |
| பிற்பட்டோர் நலங்காப்போம்! | 9 |
| பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பிரச்சினைகள் | 14 |
| சித்தேரி மலைவாழ் மக்களுக்கு வனத்துறை செய்திடும் நன்மைகள் | 17 |
| படமும் செய்தியும் | 22 |
| கூட்டுறவுப் பயிற்சிக்கு ஒரு கல்லூரி | 27 |
| அரசினர் அருங்காட்சியகம் ஆற்றிடும் பணிகள் | 34 |
| வேளாண்மை மறுநிதி-அபிவிருத்திக் கழகத் திட்டங்கள் | 41 |
| பேனுவின் கதை! | 43 |
| வேடந்தாங்கல் நீர்ப்பறவைச் சரணாலயம் | 45 |
| வெள்ளத்துயர் துடைப்புப் பணிகளுக்கு அள்ளி வழங்குங்கள்! | 48 |


### அட்டைப்பட விளக்கம்

பறவைகள் பலவிதம் பார்த்து மகிழ, வேடந்தாங்கல் சென்றிடுவீர்! வேடந்தாங்கலில், பல்வேறு நாட்டுப் பறவைகளையும், பலவண்ணப் பறவைகளையும் நவம்பர் முதல் பிப்ரவரி வரைக் கண்டுகளிக்கலாம்! வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம் பற்றி அறிய பக்கம் 45-ஐப் பாருங்கள்.

## தேவர் பிறந்த நாள் விழா !

விடுதலை வீரரும், அரசியல் தலைவரும், தேவர்குலத் திலகமுமான பசும்பொன் திரு முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை இந்த ஆண்டு தமிழ்நாடு அரசே நடத்தியுள்ளது. அரசின் சார்பில் முதல்முறையாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 30-10-'77 அன்று தேவர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. தேவரின் பிறந்த நாளும், இறந்த நாளும் அக்டோபர் 30-ம் நாள் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சென்னை மாநகரில் குடிநீர் பஞ்சம் என்றென்றும் ஏற்படாதிருக்க வேண்டும் என்பதற்காக, கிருஷ்ணா நதியில் இருந்து நீர் கொண்டு வருவதற்கான உடன்பாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் 28-10-77 அன்று கையொப்பம் இட்டுள்ளார்.

நீண்டகாலமாக ஆலோசனையில் இருந்துவந்த இந்தத் திட்டம் பற்றி டெல்லியில், மாண்புமிகு மத்திய விவசாய — பாசன அமைச்சர் திரு எஸ்.எஸ். பர்னாலா அவர்கள் முன்னிலையில், 27—10—1977 அன்று, பேச்சு வார்த்தை நடந்தது.

கிருஷ்ணா ஆறு மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் ஓடும் ஆறு ஆகும். எனவே, இந்தப் பேச்சு வார்த்தையில் மாண்புமிகு மராட்டிய முதலமைச்சர் திரு. வசந்தராவ் பட்டீல், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்சு, மாண்புமிகு ஆந்திரா மாநில பாசன அமைச்சர் திரு கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர், திரு. ச. இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலத்தில் இருந்து வடபெண்ணை ஆற்றுக்குத் திறந்த கால்வாய் மூலம் கொண்டு வந்து, அங்கிருந்து சோமசீலா அணை (இப்போது கட்டப்பட்டு வருகிறது) வழியாகத் தண்ணீரை மற்றொரு கால்வாய் மூலம் செங்கல்பட்டு மாவட்டம் பூண்டி ஏரிக்குக் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டும் உள்ளது.

வழியில் இந்தத் தண்ணீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்பது நிபந்தனை. இதை அவ்வப்போது அதிகாரிகள் நேரில் பார்வையிட்டுச் சோதனை செய்வார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது. **இத்திட்டத்துக்கு 143 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவாகும். இந்தச் செலவைத் தமிழக அரசு ஏற்கும்.**

இத்திட்டம் சென்னை மாநகர மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் மாபெரும் திட்டமாகும் !

# இந்தியாவை உருவாக்கிய சிற்பி!

—திரு பிரபுதாஸ் பட்வாரி
தமிழ்நாடு ஆளுநர்.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு-இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரிப்பதற்கு முன்பு-இந்தியாவில் 556-க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அவைகளின் மொத்தப் பரப்பு இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ 48 சத அளவுக்கு இருந்துள்ளது. அவைகள் விரும்பினால் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம் அல்லது தனித்து இயங்கலாம் என்று வெள்ளை ஏகாதிபத்தியம் கள்ள மனத்துடன் அறிவித்துவிட்டது. சுதேச சமஸ்தானங்கள் விடுதலை பெற்ற இந்தியாவுடன் சேராமல் தனித்து இயங்கினால், இந்திய ஒருமைப்பாட்டுக்கு-ஒற்றுமைக்கு-பாதுகாப்புக்கு-கேடு விளையும் என்பதை எண்ணிய, 'இரும்பு மனிதர்' என்று பெயர் பெற்ற திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள், தம் ராஜ தந்திரத்தைப் பயன்படுத்தி சுதேச சமஸ்தானங்களையெல்லாம் இந்தியாவுடன் இணைத்து ஏக இந்தியாவை ஏற்படுத்தி, 'இந்தியாவை உருவாக்கிய சிற்பி' (Architect of India) என்ற பெயர் பெற்றார். அவருடைய பிறந்தநாள் விழா 31-10-1977 அன்று நாடெங்கும் நடைபெற்றதையொட்டி அவருடன் நெருங்கிப் பழகிய தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், திரு சர்தார் பட்டேல் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை இக் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

"ஜனக ராஜா போன்று ஈடு இணையற்றிருந்த ஒருவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அரண்மனைப் பளபளப்புக்கும், அரச ஆடம்பரத்திற்கும் இடையே எதிலும் பற்றற்று வாழ்ந்த ஜனக ராஜாவைப் போல், அவர் வாழ்ந்தார். அரசாங்கத்தில் அவர் இருந்ததன் காரணமாகவே, நாடு என்னும் நாவாய் அவருடைய கைகளில் மிகுந்த பாதுகாப்புடன் இருப்பதாக மக்கள் உணர்ந்தனர்!"

—இவ்வாறு, 1950-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் நாள் அன்று, திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் மறைந்த துக்கச் செய்தியைத் தன் ஆஸ்ரமத்தில் கூடியிருந்த கிராம மக்களிடையே திரு விநோபா அவர்கள் கூறினார். இக்கூற்று, ஓரளவுக்கு சர்தார் அவர்களின் குணாதிசயத்தைச் சுருங்கக் கூறுவதுடன் பாரத மாதாவுக்குச் சர்தார் செய்த செயற்கரிய சேவையையும், அதன் மூலம் அவர் எய்திய இறவாப் புகழையும் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

சாக்ரட்டீஸ் காலத்தில் பரவியிருந்த அறிவுப் பேரொளியைத் தான் காண நேர்ந்ததற்கும், சாக்ரட்டீஸின் மாணவனாக இருக்கும் அரிய வாய்ப்பைத் தான் பெற்றதற்கும் கடவுளின் பெருங் கருணையே காரணம் என்று புகழ்பெற்ற தத்துவஞானி பிளேட்டோ கூறியதாகச் சொல்லப்படுகிறது. அதிகார வர்க்கத்திற்கு எதிராக, பர்தோலி வட்டத்தின் விவசாயிகள் அனைவரையும் அகிம்சா முறையில் போராட திரு சர்தார் பட்டேல் தூண்டியதை நினைக்கும்போது கடவுளுடைய அளவற்ற கருணையின் காரணமாகவே, திரு சர்தார் அவர்களின் உணர்ச்சிமிக்க விளக்கவுரைகளை-மந்திர சக்தியைப் போல், மக்களிடையே வலிமையையும், துணிவையும் ஏற்படுத்தி, பயந்தாங் கொள்ளிகளாக இருந்தவர்களை உண்மையான வீரம் மிகுந்தவர்களாக ஆக்கிய உணர்ச்சி மிக்க விளக்கவுரைகளை-பேரார்வத்துடன் கூர்ந்து கவனிக்கும் வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது என்பதை நான் அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். திரு சர்தார், மக்களின் உணர்ச்சியைத் தூண்டிய அந்தக் காலத்தை, பிரேம் லீலா தாக்கர்சே என்பவர் பின்கண்டவாறு நினைவு கூர்கிறார்.

"சாதாரண-கடவுளிடம் பயந்த சுபாவம் கொண்ட-பர்தோலி விவசாயிகளை வீரதீரம் மிகுந்தவர்களாக மாற்றியதோடு, பயந்தாங் கொள்ளிகளாகவும், அறியாமையில் மூழ்கியவர்களாகவும் இருந்த விவசாயக் குடும்பப் பெண்களை ராஜபுதனத்து வீராங்கனைகளாகவும் மாற்றினார் சர்தார்."

காந்திஜியைப் போலவே, திரு சர்தார் அவர்களும் மனிதர்களைச் செம்மையாக்கி, நமது தேச வாழ்வைச் செழிக்கச் செய்வதற்கு அவர்களின் சக்திகளை ஒருமுகப்படுத்தி விட்டார்.

துயர்துடைப்புப் பணிகளில் சர்தார் ஆற்றிய பங்கு, குஜராத் மாநிலத்திற்கு வெளியில் தெரியாத செய்தியாக உள்ளது. அப்பணிகளில் அவர் பெருமகிழ்வுடன் ஈடுபட்டார். தரித்திர நாராயணர்களுக்குச் சேவை செய்ததன் மூலமாகவே, நாட்டின் நலனுக்காக உழைக்கும் வலிமையை—யாருக்கும் இல்லாத வல்லமையை— பெற்றார்.



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள், இந்தியாவை ஒன்றுபடுத்திய இரும்பு மனிதர் திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் திருவுருவப் படத்தை, சென்னை காந்திமண்டபத்தில், 22—9—1977 அன்று திறந்து வைத்து உரையாற்றினார். அவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னையில் உள்ள எலியட்ஸ் கடற்கரைச் சாலைக்கு 'சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை' என்று பெயரிடப்படும் என்று அறிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் முறையான துயர் துடைப்புப் பணிகளை மேற்கொண்டதில் திரு சர்தார் அவர்களே முன்னோடி என்றால் மிகையாகாது. நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த (1918) சர்தார், 'பிளேக்', 'இன்புளுவென்சா' ஆகிய நோய்கள் தாக்கிய போதிலும் தற்காப்புக்காக நகரைவிட்டு அகன்றுவிடாமல், மக்களின் அருகில் இருந்து பணியாற்றுவதையே விரும்பினார். அந்த நாட்களில் பாரிஸ்டர் வல்லபாய் அவர்கள், நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி, ஆழ்துயரில் மூழ்கியிருந்தவர்களை அகம் மகிழச் செய்வதற்காக, ஒவ்வொரு சேரியாக நடந்து சென்றார். 'பிளேக்' நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, தற்காலிக மருத்துவ மனைகளையும் திறந்து வைத்தார். இவைகளையெல்லாம் சர்தார் எந்தவித ஆரவாரமும் இன்றியே செய்தார்.

குஜராத் மாநிலம் 1927-ஆம் ஆண்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, ஒரு வார காலத்திற்கு மழையினால் பாதிக்கப்பட்டது. அப்போது அவர் மேற்கொண்ட துயர் துடைப்புப்பணி, குஜராத் முழுவதையும் தழுவியதாக இருந்தது. மழை கொட்டும் அந்த நள்ளிரவில், சர்தார் தூக்கமின்றித் துடித்தார். அவரால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. கொட்டும் மழையையும், கும்மிருட்டையும் பொருட்படுத்தாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஒரு நண்பரின் வீட்டை அடைந்து, அந்த நண்பரையும் அழைத்துக் கொண்டு, நகரில் பாதிக்கப்படக் கூடிய எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார்; அதன் பின் நேரடியாக நகராட்சி மன்ற பொறியாளர் இல்லம் சென்று, தூங்கிக் கொண்டிருந்த பொறியாளரை எழுப்பி, அவரையும் அழைத்துக் கொண்டு நகராட்சி மன்ற அலுவலகம் சென்றார். நகராட்சி ஊழியர்களையும், பணியாளர்களையும் உடன் அழைத்து வரச் செய்து, மழையால் தேங்கிய வெள்ளத்தை வடிக்க விரைவான நடவடிக்கை எடுத்து, நகரம் மேலும் பாழடையாமல் காப்பாற்றினார். மக்களுக்குரிய கடமையைச் செய்வதில் சர்தார் கொண்டிருந்த உணர்வுக்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக் காட்டாகும்.

அப்பொழுது காந்திஜி பெங்களூரில் உடல்நலமின்மையால் படுத்த படுக்கையாக இருந்தார். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதற்குக்கூட வலிமை இல்லாதிருந்தும், சர்தார் ஒப்புக் கொண்டால் தானும் வருவதாகக் கூறி, காந்திஜி, சர்தா

ருக்குத் தந்தி கொடுத்தார். 'சுய உதவி, கூட்டுறவு பற்றிய உங்களின் போதனைகளை எந்த அளவுக்கு நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதை அறிய விரும்பினால், நீங்கள் அங்கேயே தங்கி உடல் நலம் பெறுங்கள்' என்று கூறி திரு சர்தார் அவர்கள், காந்திஜி அவர்களுக்குப் பதில் தந்தி கொடுத்தார். இயற்கையால் ஏற்பட்ட தீங்குகளிலிருந்து குஜராத்தை விடுவிப்பதில் சர்தாரின் உள்ளார்ந்த, ஆழமான திறமைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்ததால், சர்தாரின் ஆலோசனையைக் காந்திஜி ஏற்றுக் கொண்டார். திரு சர்தாரின் துயர் துடைப்புப் பணிகள் குஜராத்தின் மூலைமுடுக்குகளில் இருந்த கிராமங்களையும் அடைந்தன. இவ்வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறையாகவும், கட்டுப்பாடாகவும் நடைபெற்றதால், இரண்டே மாதத்தில், குஜராத் இயல்பான நிலைக்குத் திரும்பியது. காலந் தவறாமலும், முழு நிறைவாகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் கண்டு அரசு வியந்தது. திரு சர்தாரின் பணிகளைப் பாராட்டியது; வீடிழந்த பல்லாயிரக் கணக்கானவர் மீண்டும் புதிதாக வீடுகட்டிக் கொள்வதற்கு எளிய கடனும், நன்கொடையும் வழங்குவதற்காக ரூபாய் 2 கோடி அளவில் ஒதுக்கி வைத்தது.

இத்துடன் நிறுத்திக் கொண்டு, நவீன இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு திரு சர்தார் ஆற்றியுள்ள சேவையைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகின்றேன். பிரிந்து கிடந்த சுதேச சமஸ்தானங்களை ஒன்று சேர்த்து, இந்த நாட்டை ஒரே நாடாக ஆக்குவதில் சர்தார் ஆற்றிய பணிக்கு ஈடாக, முன்னெப்போதும் எவரும் இதுவரை செய்யவில்லை எனலாம்.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு முந்திய காலத்தில் 556-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள், இந்தியாவின் மொத்தப் பரப்பில் 45 சத அளவைக் கொண்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக பிரிவினை ஏற்பட்டபோது, அச்சமஸ்தானங்களின் பரப்பு சுமார் 48 சத அளவுக்கு உயர்ந்தது. ஜம்மு-காஷ்மீரின் பரப்பு மட்டுமே 82,000 சதுர மைலாக இருந்தது. 10,000 சதுர மைலுக்கும் ... பட்ட பரப்புக் கொண்ட 15 சமஸ் ... அப்போது இருந்தன. மேலு ... 1,000 சதுர மைல் முதல் 10 ... வரையான பரப்புக் ... ங்கள் இருந்தன. ... சுருக்கம ... டுகள் குறி ...




இதற்கோர் எடுத்துக் காட்டாக உள்ளது. அதன் விவரம் வருமாறு:—

''ஏற்படவிருக்கும் அரசியல் அமைப்பு மாற்றம் (பிரிட்டிஷ் இந்தியா) எதுவும், காலங்காலமாக நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள், சன்னதுகள், வாக்குறுதிகள் ஆகியவைகளின்படி அரசர்கள் அனுபவித்து வரும் உரிமைகள் மதிப்புகள், தனிச்சலுகைகள் முதலியவைகளைப் பறிக்காது என்று இந்தியாவில் உள்ள சமஸ்தானங்களின் அரசர்கள், முழுமையாகவும் நிர்பந்தமின்றியும் உறுதியளிக்கப்பட வேண்டும்''.

இந்த ஏகாதிபத்தியக் கொள்கையின் நோக்கம் ஒரு கல்லில் இரு பறவைகளை வீழ்த்துவதேயாகும்! முதலாவதாக இக்கொள்கை, அரசர்களால் ஆளப்படும் இந்தியாவில் தேசிய உணர்வு ஏற்படுவதைத் தடுக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவதாக இது, சுதந்திரத்தற்காக இந்தியாவை ஒன்றுபடுத்துவதென்பது நடைபெற முடியாத ஒரு செயலாக ஆக்க வேண்டும் என்ற இறுதி நோக்கத்துடன் அரசர்களால் ஆளப்படும் இந்தியாவையும், அப்போதிருந்த பிரிட்டிஷ் இந்தியாவையும் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்தது.

வேவல் பிரபு, 12-5-1946 அன்று, அரசர்கள் சங்கத்தில் அளித்த உறுதியை இந்த இடத்தில் எடுத்துக் கூறுவதும் மிகுந்த பொருத்தமானதாக இருக்கும். அவர், ''பேச்சுவார்த்தைகள் மூலமாக அல்லாத வேறு எதன் மூலமாகவும் இந்திய அமைப்பில் சமஸ்தானங்களைச் சேர்ப்பதற்குரிய தீர்மானத்தைக் கொண்டு வரும் நோக்கம் பிரிட்டிஷ் ... இல்லை'' என்று உறுதி கூறினார். ... சந்தர்ப்பத்தை நன்கு ... அரசர்கள் சங்கம் ...

சமஸ்தான அ... கைகளை ...

சமஸ்தானங்களின் அரசர்கள் இந்தியாவுடன் சேருமாறு கட்டாயப்படுத்தப்பட்டனரா? இல்லை. அவ்வாறு கட்டாயப்படுத்தி இருந்தால் நிலைமை வேகமாக முன்னேறி இருக்காது. சமஸ்தானங்களின் அரசர்களும் திரு சர்தாரிடம் பெருமதிப்பு வைத்திருக்க மாட்டார்கள்; திரு சர்தார் இறந்தபோது, கைவிடப்பட்ட நிலைமை அடைந்துவிட்டதாக சமஸ்தானங்களின் அரசர்கள் துயரம் அடைந்திருக்க மாட்டார்கள். தோழமையுடனும், தாய்நாட்டுப் பற்றுடனும் சமஸ்தானங்களின் அரசர்கள் சர்தாரை நம்பி இந்தியாவுடன் சேர முன்வந்ததாலும், சமஸ்தான அரசர்களின் நலனை நன்கு உணர்ந்து அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க திரு சர்தார் முன் வந்ததாலும் இந்தியாவில் 'இரத்தம் சிந்தாத புரட்சி' ஒன்று ஏற்பட்டது என்று கூறலாம். இப்புரட்சியில் சமஸ்தான இளவரசர்களும், மக்களும், இந்திய அரசும் கூட்டாளிகளா... செயல்பட்டு, மகாத்மாவின் ... கினர் என்றால் மிகையா...

ஜுனகாத், ஹைதராபாத், காஷ்மீர் ஆகிய மூன்று சமஸ்தானங்களைத் தாய்நாட்டில் இணைப்பதில்தான் பிரச்சனைகள் மிகுதியாகத் தோன்றின. ஜுனகாத், ஹைதராபாத் ஆகிய இரண்டையும் இந்தியாவுடன் இணைப்பதில் சர்தார் முழு மூச்சுடன் ஈடுபட முடிந்தது. ஆனால் காஷ்மீர் இணைப்பைப் பொறுத்த வரையில் அவரால் முழுமூச்சுடன் ஈடுபட முடியவில்லை. ஏனெனில், காஷ்மீர் பிரச்சனை ஆரம்பம் முதலே மாநில அமைச்சரவையால் கவனிக்கப்பட்டு வந்தது. பாரமூலா என்ற இடத்திற்கு மிக அருகில் எதிரிகள் இருந்த நேரத்தில், திரு ... மேனன் அவர்கள் ஸ்ரீநகருக்கும் ... சென்று, மகாராஜாவிடம் ... தத்தில் ...



... பத்தினால் செத்த ... குடும்பத்திற்கு எந்த அளவுக்குப் பண உதவி தேவை, அவர்கள் மறைவினால் அந்தக் குடும்பங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்று தனித்தனியாகக் கணக்கெடுத்து, தேவைக்குத் தகுந்தாற்போல் உதவிப் பணம் வழங்கப்படும்.



ருக்குத் தந்தி கொடுத்தார். ‘சுய உதவி, கூட்டுறவு பற்றிய உங்களின் போதனைகளை எந்த அளவுக்கு நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதை அறிய விரும்பினால், நீங்கள் அங்கேயே தங்கி உடல் நலம் பெறுங்கள்’ என்று கூறி திரு சர்தார் அவர்கள், காந்திஜி அவர்களுக்குப் பதில் தந்தி கொடுத்தார். இயற்கையால் ஏற்பட்ட தீங்குகளிலிருந்து குஜராத்தை விடுவிப்பதில் சர்தாரின் உள்ளார்ந்த, ஆழமான திறமைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்ததால், சர்தாரின் ஆலோசனையைக் காந்திஜி ஏற்றுக் கொண்டார். திரு சர்தாரின் துயர் துடைப்புப் பணிகள் குஜராத்தின் மூலைமுடுக்குகளில் இருந்த கிராமங்களையும் அடைந்தன. இவ்வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறையாகவும், கட்டுப்பாடாகவும் நடைபெற்றதால், இரண்டே மாதத்தில், குஜராத் இயல்பான நிலைக்குத் திரும்பியது. காலந் தவறாமலும், முழு நிறைவாகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் கண்டு அரசு வியந்தது. திரு சர்தாரின் பணிகளைப் பாராட்டியது; வீடிழந்த பல்லாயிரக் கணக்கானவர் மீண்டும் புதிதாக வீடுகட்டிக் கொள்வதற்கு எளிய கடனும், நன்கொடையும் வழங்குவதற்காக ரூபாய் 2 கோடி அளவில் ஒதுக்கி வைத்தது.

இத்துடன் நிறுத்திக் கொண்டு, நவீன இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு திரு சர்தார் ஆற்றியுள்ள சேவையைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகின்றேன். பிரிந்து கிடந்த சுதேச சமஸ்தானங்களை ஒன்று சேர்த்து, இந்த நாட்டை ஒரே நாடாக ஆக்குவதில் சர்தார் ஆற்றிய பணிக்கு ஈடாக, முன்னெப்போதும் எவரும் இதுவரை செய்யவில்லை எனலாம்.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு முந்திய காலத்தில் 556-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள், இந்தியாவின் மொத்தப் பரப்பில் 45 சத அளவைக் கொண்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக பிரிவினை ஏற்பட்ட போது, அச்சமஸ்தானங்களின் பரப்பு சுமார் 48 சத அளவுக்கு உயர்ந்தது. ஜம்மு-காஷ்மீரின் பரப்பு மட்டுமே 82,000 சதுர மைலாக இருந்தது. 10,000 சதுர மைலுக்கும் மேற்பட்ட பரப்புக் கொண்ட 15 சமஸ்தானங்கள் அப்போது இருந்தன. மேலும் அப்போது, 1,000 சதுர மைல் முதல் 10,000 சதுர மைல் வரையான பரப்புக் கொண்ட 67 சமஸ்தானங்கள் இருந்தன. அந்த நாளைய இந்தியாவைச் சுருக்கமாக வரைய, ஏராளமான திட்டுகள் குறிக்கப்பட்டன.

அரசியலமைப்புச் சட்டப்படி, சுதேச சமஸ்தானங்கள் தாய்நாட்டின் ஓர் அங்கமாகக் கருதப்படவில்லை. விக்டோரியா மகாராணியின் அறிவிப்பு (1858) முதல், 1946-ஆம் ஆண்டு மே மாதத்தில் வேவல் பிரவு வெளியிட்ட தெளிவாக்க அறிக்கை வரையான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தொடர்ந்த அதிகார அறிவிப்புகள், சுதேச சமஸ்தானங்கள் தாய்நாட்டிலிருந்து செயற்கையாகப் பிரிந்திருப்பதற்கே ஆதரவு அளித்துள்ளன. முந்திய அரசியலமைப்பு முடிவுகளில், மாண்டேகு பிரபுவும், செம்ஸ்போர்டு பிரபுவும் சேர்ந்து, அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி 1919-ஆம் ஆண்டில் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ள கூட்டுக் கருத்து இதற்கோர் எடுத்துக் காட்டாக உள்ளது. அதன் விவரம் வருமாறு:—

‘‘ஏற்படவிருக்கும் அரசியல் அமைப்பு மாற்றம் (பிரிட்டிஷ் இந்தியா) எதுவும், காலங்காலமாக நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள், சன்னதுகள், வாக்குறுதிகள் ஆகியவைகளின் படி அரசர்கள் அனுபவித்து வரும் உரிமைகள் மதிப்புகள், தனிச்சலுகைகள் முதலியவைகளைப் பறிக்காது என்று இந்தியாவில் உள்ள சமஸ்தானங்களின் அரசர்கள், முழுமையாகவும் நிர்பந்தமின்றியும் உறுதியளிக்கப்பட வேண்டும்’’.

இந்த ஏகாதிபத்தியக் கொள்கையின் நோக்கம் ஒரு கல்லில் இரு பறவைகளை வீழ்த்துவதேயாகும்! முதலாவதாக இக்கொள்கை, அரசர்களால் ஆளப்படும் இந்தியாவில் தேசிய உணர்வு ஏற்படுவதைத் தடுக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவதாக இது, சுதந்திரத்தற்காக இந்தியாவை ஒன்றுபடுத்துவதென்பது நடைபெற முடியாத ஒரு செயலாக ஆக்க வேண்டும் என்ற இறுதி நோக்கத்துடன் அரசர்களால் ஆளப்படும் இந்தியாவையும், அப்போதிருந்த பிரிட்டிஷ் இந்தியாவையும் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்தது.

வேவல் பிரபு, 12-5-1946 அன்று, அரசர்கள் சங்கத்தில் அளித்த உறுதியை இந்த இடத்தில் எடுத்துக் கூறுவதும் மிகுந்த பொருத்தமானதாக இருக்கும். அவர், ‘‘பேச்சு வார்த்தைகள் மூலமாக அல்லாத வேறு எதன் மூலமாகவும் இந்திய அமைப்பில் சமஸ்தானங்களைச் சேர்ப்பதற்குரிய தீர்மானத்தைக் கொண்டு வரும் நோக்கம் பிரிட்டிஷ் அரசுக்கு இல்லை’’ என்று உறுதி கூறினார். இத்தகைய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள அரசர்கள் சங்கம் முயன்றது.

சமஸ்தான அரசர்களின் உள்ளக் கிடக்கையை நன்கு உணர்ந்து கொண்ட சர்தார் அவர்கள் இந்தியாவில் சேருமாறு ஒவ்வொரு சமஸ்தானத்தையும் தூண்டி வந்தார். இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன்பே, அரசியல் நிர்ணய சபையில் சமஸ்தானங்கள் பங்கு பெறலாம் என்ற உறுதியையும் அளித்தார். இந்தியாவின் ஒற்றுமைக்குப் படிப்படியாக உழைத்தார்.

காலந் தாழ்த்தினால் கேடு விளையும் என்பதை நன்கு உணர்ந்திருந்த சர்தார் அவர்கள் சமஸ்தானங்களில் ஏற்பட்ட தனித்திருக்கும் உணர்வை முளையிலேயே கிள்ளியெறிவதற்கான நடவடிக்கைகளை, குழப்பம் விளைவிக்காமல், எடுத்தார். பொதுமக்களின் நல்வாழ்விலிருந்து அரசர்களின் வாழ்வு பிரிந்ததல்ல என்றும், தாய்நாட்டின் ஓர் அங்கமாகவே சமஸ்தானங்கள் இருப்பதால், சகோரத்துவத்தின் அடிப்படையில் தங்கள் ஆட்சியைத் தாய் நாட்டுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சர்தார் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதனால் சமஸ்தானங்களின் இளவரசர்கள், சர்தார் அவர்கள் நடுநிலைமையாக நடந்துகொள்வார் என்றும், தங்களுடைய உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பார் என்றும் நம்பினர். அந்த நம்பிக்கையின் காரணமாகவும், தாய்நாட்டுப் பற்றின் காரணமாகவும் முன்னதாகக் கையொப்பமிட்ட வெற்றுத்தாளைச் சர்தாரிடம் கொடுத்தனர்!

சமஸ்தானங்களின் அரசர்கள் இந்தியாவுடன் சேருமாறு கட்டாயப்படுத்தப்பட்டனரா? இல்லை. அவ்வாறு கட்டாயப்படுத்தி இருந்தால் நிலைமை வேகமாக முன்னேறி இருக்காது. சமஸ்தானங்களின் அரசர்களும் திரு சர்தாரிடம் பெருமதிப்பு வைத்திருக்க மாட்டார்கள்; திரு சர்தார் இறந்தபோது, கைவிடப்பட்ட நிலைமை அடைந்துவிட்டதாக சமஸ்தானங்களின் அரசர்கள் துயரம் அடைந்திருக்க மாட்டார்கள். தோழமையுடனும், தாய்நாட்டுப் பற்றுடனும் சமஸ்தானங்களின் அரசர்கள் சர்தாரை நம்பி இந்தியாவுடன் சேர முன்வந்ததாலும், சமஸ்தான அரசர்களின் நலனை நன்கு உணர்ந்து அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க திரு சர்தார் முன் வந்ததாலும் இந்தியாவில் ‘இரத்தம் சிந்தாத புரட்சி’ ஒன்று ஏற்பட்டது என்று கூறலாம். இப்புரட்சியில் சமஸ்தான இளவரசர்களும், மக்களும், இந்திய அரசும் கூட்டாளிகளாகவே செயல்பட்டு, மகாத்மாவின் கனவை நனவாக்கினர் என்றால் மிகையாகாது.

இந்திய வரலாற்றில் இது ஒரு முக்கியமான கட்டமாகும். பிரிந்து கிடக்கும் இந்தியாவை ஒன்று படுத்த வேண்டும் என்று மகாத்மா கனவு கண்டார்; அந்தக் கனவை நனவாக்கும் உணர்வைத் தூண்டினார். அண்ணலின் கனவை நனவாக்கும் கருவியாக சர்தார் விளங்கினார். அவரது அயராத முயற்சியால் ஏற்பட்ட புரட்சியின் அரங்கேற்றம், இணைப்பு ஒப்பந்தம் என்ற உருவில், 1947-ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்றது. ஆம்! அன்றுதான் 22,000 சதுர மைல் பரப்பும், வெவ்வேறு எல்லைகளையும் கொண்ட 449 கத்தியவாடு சமஸ்தானங்கள் ‘சௌராஷ்டிரா யூனியன்’ என்ற பெயரில் கிழக்கு மற்றும் மத்திய இந்தியாவைச் சார்ந்த 40 ‘பி’ மற்றும் ‘சி’ மாநிலங்கள் இந்தியாவுடன் இணைந்தன. இந்த நிகழ்ச்சி, மேலும் பல சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைய வழிகோலியது. அடுத்து மத்திய யூனியன், சிறிய ராஜஸ்தான், விந்திய பிரதேஷ், மத்தியபாரத் எனப்படும் ‘மால்வா’ ‘பெப்சு’ முதலிய சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைந்தன. பெரிய ராஜஸ்தான் யூனியன், திருவாங்கூர்-கொச்சி யூனியன் ஆகிய இரண்டும் 1949-ல் இந்தியாவுடன் இணைந்தன.

சமஸ்தானங்களை இணைப்பதில் சர்தார் எதிர்கால நோக்கோடும், சில முக்கியமான யுக்திகளோடும் செயல்பட்டார். அவர் முதலில் சௌராஷ்டிராவைத்தான் இணைத்தார். ஏனெனில், அங்குதான் குழப்பம் விளைவித்துச் சிறுசிறு அரசுகளாகப் பிரிந்திருக்க வேண்டும் என்பதற்காகத் துணிகர முயற்சிகள் நடைபெற்றன. இந்தியாவின் பாதுகாப்பைப் பொறுத்த வரையில் பூகோள அடிப்படையில் பார்க்கும் போது ‘கட்ச்’ பகுதிதான் பாதிக்கப்படக் கூடிய பகுதியாக இருப்பதாக திரு சர்தார் கருதினார். ஆகவே ‘கட்ச்’ பகுதியை மத்திய அரசின் நேரடி ஆட்சியில் இயங்கச் செய்தார். இதேபோல், வடக்கிலிருந்து ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து காத்துக் கொள்வதற்கான பாதுகாப்புத்தளம் அமைப்பதற்காகவே ‘பெப்சு’ யூனியனை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று கருதினார்.

ஜூனகாத், ஹைதராபாத், காஷ்மீர் ஆகிய மூன்று சமஸ்தானங்களைத் தாய்நாட்டில் இணைப்பதில்தான் பிரச்சனைகள் மிகுதியாகத் தோன்றின. ஜூனகாத், ஹைதராபாத் ஆகிய இரண்டையும் இந்தியாவுடன் இணைப்பதில் சர்தார் முழு மூச்சுடன் ஈடுபட முடிந்தது. ஆனால் காஷ்மீர் இணைப்பைப் பொறுத்த வரையில் அவரால் முழுமூச்சுடன் ஈடுபட முடியவில்லை. ஏனெனில், காஷ்மீர் பிரச்சனை ஆரம்பம் முதலே மாநில அமைச்சரவையால் கவனிக்கப்பட்டு வந்தது. பாரமூலா என்ற இடத்திற்கு மிக அருகில் எதிரிகள் இருந்த நேரத்தில், திரு கிருஷ்ண மேனன் அவர்கள் ஸ்ரீநகருக்கும், ஜம்முவுக்கும் சென்று, மகாராஜாவிடம் இணைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பம் வாங்கச் சென்றதையும், காஷ்மீர் பள்ளத்தாக்கைக் காப்பாற்றுவதற்காக இந்தியப் படைகளை விமானம் மூலம் அனுப்பும் நோக்கத்துடன் டெல்லி விமான நிலையத்திலேயே திரு சர்தார் அவர்கள் திரு கிருஷ்ணமேனனின் வருகைக்காகக் காத்திருந்ததையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வது சிறப்புடையதாகும். காஷ்மீர் மலைப் பிரதேசத்தில் நமது படையினர் காட்டிய வீர தீரம் மிக்க செயல்கள் பாராட்டிற்குரியதாக இருந்தன.

ஆனால் வெகு விரைவிலேயே, காஷ்மீர் பிரச்சனையை டெல்லி மேற்கொண்ட வகைக் கண்டு, திரு சர்தார் நம்பிக்கையைக் கைவிட்டார். நம்பிக்கை இழந்த நிலையிலேயே, சர்தார் காஷ்மீர் பிரச்சனையினையிலிருந்து தன் கைகளைக் கழுவிக் கொண்டார்.

பிரிந்துகிடந்த இந்தியாவை ஒன்றுபடுத்த, அமைதிப் புரட்சி நடத்திய-பண்பாட்டாலும் பழக்க வழக்கத்தாலும் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டிருந்த பெரிய நாட்டை ஒன்றுபடுத்திய-இந்திய மக்கள் வாழ்வது போலவே, சமஸ்தானங்களின் மக்களும் உரிமைகளுடனும், சுதந்திரமுடனும் வாழ வகை செய்த-திரு சர்தார் அவர்களை நினைத்துப் பார்த்தால், இந்திய ஒற்றுமைக்காக அவர் செய்த செயற்கரிய செயல் வெள்ளிடைமலையென விளங்கும். அந்த ஒற்றுமையே நமக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் கைகொடுத்து உதவியதுடன், எதிர்காலத்தில் தோன்றும் எந்த வித பேராபத்திலிருந்தும் இந்தியாவைக் காப்பாற்றக் கூடியதாகவும் உள்ளது. இதற்காகவே நாம் திரு சர்தார் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம். இந்தியாவை ஒன்றுபடுத்துவதே இலக்காக இருந்தாலும், இந்நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தின் அண்மையில் நாம் வாழ்வதால், இதனால் ஏற்பட்ட நன்மை தீமைகளை ஆராய்வது கடினமானதாகும். எதிர்காலச் சந்ததியும், வரலாற்று ஆசிரியர்களும் உண்மையை உணர்வதுடன், இச்சாதனையை ஏற்றிப் போற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

நமது நாட்டை ஒன்றுபடுத்தி, உயர்காப்பாளராகத் திகழ்ந்த திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுக்கு என் வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(தமிழாக்கம் : ஆர். மாணிக்கம்)**



# வெள்ளம் விளைத்ததோ வேதனை! அரசு செய்ததோ சாதனை!!



வடகிழக்குப் பருவமழை தொடங்கிய இரு வாரங்களுக்குள்ளாகவே, தமிழகமெங்கும் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்த இராமநாதபுரம் மாவட்டத்தில்கூட நல்ல மழை பெய்து, ஏரி குளங்கள் நிரம்பியுள்ளன. பல்லாண்டுகளாக நிரம்பாதிருந்த இராஜசிங்க மங்கலம் ஏரிகூட இந்த ஆண்டில் நிரம்பியுள்ளது. நீர்த் தேக்கங்களில் எல்லாம் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இந்த ஆண்டில் சாகுபடி நல்ல முறையில் நடைபெறும், மின்வெட்டு இருக்காது என்று எண்ணி மகிழ்ந்திருந்த நேரத்திலே, இன்பமும் துன்பமும் இணைந்தேவரும் என்பதை எடுத்துக்காட்டுவதுபோல் புயல் தோன்றியது!

அக்டோபர் மூன்றும் வாரத்தில் தோன்றிய புயலின் காரணமாகச் சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் பெருமழை ஏற்பட்டு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளன. புயல் தோன்றியவுடனேயே தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பெருமழை காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைச் சமாளிக்கவும், அரசு தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள் பற்றி பரிசீலிக்கவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்,** 26-10-1977 அன்று, உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்றைக் கூட்டினார்.

அதிகாரிகளுடன் கலந்து பேசிய பிறகு, கீழ்க்கண்ட ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்தார்.

1. சென்னை நகரைப் பொறுத்தவரை, தற்போது நடந்து வரும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து நீடிக்கவேண்டும்.

2. சென்னை கோட்டூர்புரம், வியாசர்பாடி ஆகிய இடங்களில் உடனடியாக நிவாரண நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்வதுடன், நிரந்தர நிவாரணப் பணிகளையும் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. செம்பரம்பாக்கம் ஏரியில் அதிகத் தண்ணீரைத் தேக்குவதற்கும், ஏரியில் வந்து பாயும் தண்ணீருக்கு மாற்று வழியைக் காணவும் ஆராய்ந்து ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.

4. சென்னை நகருக்குள் அதிக அளவில் பாயும் வெள்ளத்தைத் தேக்கி வைத்துக் காக்கும் நீர்த் தேக்கங்கள் பலவற்றை, சென்னையைச் சுற்றி அமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. சென்னை சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேக்கத்தினால் அவதிப்படும் மக்கள் குறைகளைத் தீர்க்க, அந்தப் பகுதி மக்களுடன் கலந்து ஆலோசித்து, தேவையான திட்டங்களை அரசுக்குக் கொடுக்க, வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ஆர். நடராசன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் பார்வையிட்டு, அவதியுறும் மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், நிவாரணப் பணிகள் விரைந்து நடைபெற ஆவன செய்தனர்.



தமிழ்நாட்டில் கடந்த அக்டோபர் மாதக் கடைசியில் பெய்த மழையினால் வீடு இடிந்து விழுந்தும், இடி—மின்னல் தாக்கியும், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும் இறந்தவர்கள் எண்ணிக்கை 74.

இவ்வாறு விபத்தினால் செத்தவர்கள் குடும்பத்திற்கு எந்த அளவுக்குப் பண உதவி தேவை, அவர்கள் மறைவினால் அந்தக் குடும்பங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்று தனித் தனியாகக் கணக்கெடுத்து, தேவைக்குத் தகுந்தாற்போல் உதவிப் பணம் வழங்கப்படும்.





அதிகப்பட்சம் ஒரு குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1 இலட்சத்து 95 ஆயிரத்து 450 உணவுப் பொட்டலங்கள் வீதம் வழங்கப்பட்டன.

சென்னையில் 1 இலட்சத்து 65 ஆயிரம், மதுரையில் 14,150, செங்கல்பட்டில் 9,150, கோவையில் 6,000, இராமநாதபுரத்தில் 5,750 உணவுப் பொட்டலங்கள் வீதம் வழங்கியிருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சியினர் 10,000 குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் பால் வழங்கி இருக்கிறார்கள்.



செம்பரம்பாக்கம் ஏரியினால் சென்னைக்கு ஆபத்து வரக் கூடாது என்பதற்காகப் பொதுப் பணித்துறை அலுவலர்கள் விழிப்புடன் கண்காணித்து வருகின்றனர். அந்த ஏரியில் இருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

உணவுப் பொட்டலங்கள் வழங்குவது 'காலரா' நோய்க்குத் தடுப்பு ஊசி போடுவது போன்றவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே, வெள்ளத்தில் வீடிழந்து தவிப்பவர்களுக்கு உதவி செய்ய, பொதுமக்கள் தாராளமாக நன்கொடை அளிக்க முன்வரவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். **



# பிற்பட்டோர் நலங்காப்போம்

மாண்புமிகு அரிசன நல அமைச்சர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்,



பிற்பட்ட வகுப்பினர் மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் என்பதன் காரணமாக, அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில், 1977-78-ம் ஆண்டிற்கு திட்ட மதிப்பீட்டில் ரூ. 6,40,90,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இது இப்பிற்பட்ட நலத் துறை, பிற்பட்டோர் நலனுக்கென எடுத்துள்ள விரைவான முழுமூச்சான நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகிறது. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் பிற்பட்ட வகுப்பின் முன்னேற்றம் கருதியே செயல்பட்டு வருகின்றன.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காகப் பிற்பட்ட நலத் துறை அமைச்சரின் தலைமையில் ''மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு'' ஒன்று இயங்கி வருகிறது. இக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதேபோல் மதுரை மாவட்டத்தில் பிற மலைக்கள்ளர்களின் முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக் குழு உள்ளது.

## உபகாரச் சம்பளம்

1. பிற்பட்ட வகுப்பு மக்கள் நல்ல உடல் வலுவிருந்தும் உழைக்கக் கூடிய தன்மை இருந்தும் கல்வி கற்கப் போதிய வசதியின்மையால் இன்னமும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு, கல்வி மேம்பாட்டுக்கு வழி வகை செய்வது மிக அவசியம். ஆகவே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் படிப்பு வசதிக்காக உபகாரச் சம்பளங்கள், உணவு விடுதிகள் முதலிய வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. ஏழ்மையான குடும்பத்து மாணவர்கள் உபகாரச் சம்பளத்தினாலும் விடுதிகளில் தங்குவதாலும் தங்கள் படிப்பைத் தொடர முடிகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு முதலாம் வகுப்பிலிருந்தும் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களுடைய பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்கும் அதிகமாக இருக்கக் கூடாது. உதவித் தொகை பெற, பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றிருந்தாலே போதுமானது.

1969—70லிருந்து• பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ்ப் புலவர் ஆகிய 57 பாட முறைகளுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இம்மாணவர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்கான பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டண்ட்) பயிற்சி பெறும் பொழுதும் உபகாரச் சம்பளம் வழங்க அரசு அனுமதித்திருக்கிறது.

மத்திய அரசு உதவியுடன் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1964—65-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு 1968—69 வரை நிதி உதவி செய்து வந்தது.

ஆயினும் தொடர்ந்து இந்தத் திட்டத்தின் கீழ் 1969—70, 1970—71ஆம் ஆண்டுகளில் மத்திய அரசின் உதவியின்றியே உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. 1971—72ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டத்தின் கீழ் புது மனுக்கள் ஏற்கப்படவில்லை. ஏற்கெனவே இச்சலுகை பெற்றவர்கள் அவர்கள் எடுத்துக் கொண்ட பாட முறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை இத் திட்டம் அவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் தற்போது மாற்றப் பட்டுவிட்டது.

**படிப்புக் கட்டணச் சலுகை**—புகுமுக வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற்கு மேல், பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் ஆண்டிற்கு ரூ. 1,500க்கு மேற்படாதிருப்பின் முறையே அரைக் கட்டணச் சலுகையும், முழுக் கட்டணச் சலுகையும் வழங்கப்படுகிறது. இம் மாதிரிக் கட்டணச் சலுகையால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஏற்படும் இழப்பை இத்துறை ஈடு செய்கிறது.

**அரசு மாணவர் இல்லங்கள் :** மாணவர்கள் கல்வி பயிலும் வசதியை அதிகரிப்பதற்காக அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு, பேணப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர் :

| | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்க்கான விடுதிகள். | பிற்பட்டோர் வகுப்பினர்க்கான விடுதிகள். | அரிசன வகுப்பினர்க்கான விடுதிகள். |
|---|---|---|---|
| பிற்பட்ட வகுப்பினர் | 10 | 65 | 20 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் | 60 | | |
| அரிசன வகுப்பினர் | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் | 5 | 10 | 5 |
| | 100 | 100 | 100 |

தற்பொழுது பிற்பட்ட வகுப்பினருக்காக 215 விடுதிகளும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக 51 விடுதிகளும் உள்ளன. 215 பிற்பட்ட வகுப்பு விடுதிகளில் 55 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்குரியவை.

மொத்த விடுதிகள் 266ஐயும் பராமரிப்பதற்காக 1977—78ஆம் ஆண்டிற்கு ரூ. 94,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக மேலும் 13 புதிய விடுதிகளைத் திறப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலேயே குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 6 விடுதிகள் திண்டுக்கல், கம்பம், ராயப்பன்பட்டி, வெள்ளையம்மாள்புரம், தேனி (மதுரை மாவட்டம்), கோவிலாங்குளம் (முகவை மாவட்டம்) ஆகிய இடங்களில் திறக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. புதியதாக ஆரம்பிக்கப்படும் விடுதிகளுக்காக ரூ. 4,40,000, 1977—78ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதுவன்றி ஏற்கெனவே உள்ள பழைய விடுதிகள் 5ல், 185 மாணவர்களை அதிகமாகச் சேர்க்கும் பொருட்டு, 63,000 ரூபாய் நடப்பாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்காக அனுமதிக்கப்படும் உணவுச் செலவு 1977—78 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது (அடைப்புகளில் காண்பிக்கப்பட்டவை 1977-78க்கு முந்தைய விகிதங்கள்).

| | சென்னை (ரூபாய்) | புறநகர் (ரூபாய்) |
|---|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் | 65(60) | 55(50) |
| 2. தொழிற் கல்வி மாணவர் விடுதிகள் | 65(60) | 55(50) |
| 3. இதர விடுதிகள் | 40(36) | 40(36) |



## மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்கள்

மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்களைக் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நடப்பாண்டில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்ட மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

**பள்ளிக் கூடங்கள் :** பிற்பட்டோர் நலத் துறையினால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு எல்லா வசதிகளுடன் கூடிய கட்டடங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்ற 1976—77ல் ரூ. 1,92,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1977—78ல் 5 பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ. 3,00,000 வகை செய்யப்பட்டு உள்ளது.

**மதிய உணவு :** குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள், தம் ஏழ்மையின் காரணமாக பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல் இருப்பதற்கான தூண்டுகோலாகக் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் பள்ளிகளில் அம் மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒருமதிய உணவின் விலை 15 காசுகள், இது தவிர, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அரசினர் அல்லாத தனியார் பள்ளிக்கூடங்களிலும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால் அம்மாவட்டங்களில் மதிய உணவு வழங்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள்களின் விலை அதிகமாகிவிட்டதால் ஒரு மதிய உணவின் விலை 30 காசுக்கு அதிகரிக்கும்படி கோரப்பட்டது. ஆனால், அரசு இந்த விதமான அதிகச் செலவைத் தவிர்க்க அம் மாணவர்களுக்கு ''கேர்'' நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இது, அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதலும், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் ஜனவரி 1976 முதலும் அமல் செய்யப்பட்டு வருகிறது.

**கல்லூரிப் படிப்பு :** கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்லூரியினர் அங்கீகாரம் செய்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்வித் துறையினர் அல்லது அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை அங்கீகாரம் பெற்ற விடுதிகளில் தங்கிப் படித்தாலும் அவர்களுக்கு உபகாரச் சம்பளத்துடன் உணவு, செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது.



**புத்தகங்களும், சிலேட்டுகளும் :** அரசினர் நடத்தும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும், சிலேட்டுகளும், இனமாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு இலவச உதவி பெற்றவர்கள் 1969—70ல் 7,600 மாணவர்கள். பயன்பெற்ற மாணவர்கள் தொகை ஆண்டு தோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்ட புத்தகம், சிலேட்டுகள் பெற்றவர்கள் எண்ணிக்கை 1976—77ல் 28,390. நடப்பு ஆண்டிலும் இதே அளவு மாணவர்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படும்.

**ஆடை வழங்குதல் :** குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளிலும் உணவு விடுதிகளிலும் உள்ள எல்லா மாணவ, மாணவியர்களுக்கும், ஒவ்வொரு ஆண்டும் 2 செட் ஆடைகள் வழங்கப்படுகின்றன. முதல் செட், பள்ளி ஆரம்பித்ததும், 2வது செட், பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகிறது. முதன் முதலாக இவ்வாறு இலவச உடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969—70ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றும் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே ஒரு செட் ஆடை வழங்கப்பட்டது. இப்போது இரு முறை வழங்கப்படுகின்றன.

மேலும் 1971—72 முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட மாணவர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் உணவு விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் 2 செட் ஆடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்காக 1977—78ல் ரூ. 3,36,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல் :** கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமைபெறத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இதற்கு 1977—78 ஆம் ஆண்டிற்கு ரூ. 45,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 8வது வகுப்புத் தேர்விலும், 11வது வகுப்புத் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு பரிசுகள் (முதல் பரிசு ஒன்று இரண்டாவது பரிசு ஒன்று) வழங்கப்படுகின்றன. இப்பரிசுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு. இதற்காக இவ்வாண்டிற்கு ரூ. 2,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு வீடுகள்

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூபாய் 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படும். நடக்கும் 1977—78ஆம் ஆண்டிலும் 5 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 52,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான பயிற்சிக்கூடம் :** கடந்த 1971ல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் மற்றும் உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட 1971—72ஆம் ஆண்டில் 12 மாணவர்கள் சேர்ந்தனர். இதில் 8 பேர் தேர்வுக்கும், 3 பேர் நேர்முகத் தேர்வுக்கும் சென்றனர். ஆனால் எவரும் தேர்ச்சி பெறவில்லை. 1972—73ல் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 34 பேர் தேர்வு எழுதினர். 6 பேர் நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்-க்கும், இருவர் மத்திய அரசுப் பணிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 1973—74ல் 33 பேர் தேர்வு எழுதினர். 4 பேர் நேர்முகத்தேர்வுக்குதேர்ந்தெடுக்கப்பட்டனர், இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்க்கும், ஒருவர் மத்திய

அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1974—75ல் 51 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, 41 பேர் தேர்வு எழுதினார்கள். இதில் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடைசியாக ஒருவர் ஐ.பி.எஸ்க்கும், இருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975—76ல் 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 3 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்திய யூனியன் தேர்வாணைக் குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசீய பாதுகாப்புக் கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக்கும் 15 அரிசன, பழங்குடி மாணவர்களுக்கும் இடம் உண்டு. அம்மாணவர்களுக்குக் கைச் செலவுக்காகவும், போக்குவரத்துச் செலவுக்காகவும் மாதம் ரூ. 40 வழங்கப்படுகிறது.

**பொருளாதார வளர்ச்சி**

இத்திட்டத்தின் கீழ் முடிதிருத்துவோர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் தத்தம் தொழில்களைச் செய்து வரத் தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1977—78ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ், ரூ. 6,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**சலவைத் துறைகள் கட்டுதல் :** சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்பட செய்வதற்கு, சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளைச் சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சி, நகராட்சி நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்தச் செலவில் பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 39 இடங்களில் சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்குப் பொறியியல் பணிமனைகள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களின் உயர்வு கருதித் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரையில் செக்கனூரணியிலும், திருநெல்வேலியில் வீரகேரளம்புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் உள்ளது. இவைகளில் பற்ற வைத்தல், சேர்த்தல் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் தொழில் நுணுக்க அறிவு பெற்று வேலை வாய்ப்புகளை அதிகம் பெற்று தங்களுடைய பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வழி வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சென்ற 1976—77ல் ரூ. 2,22,000 ஒதுக்கப்பட்டது. 1977—78ல் ரூ. 3,87,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், புதியதாக 1977—78ல் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ரூபாய் 1,49,000 செலவில் ஒரு பொது நோக்குப் பொறியியல் பணி மனை ஆரம்பிக்கப்பட இருக்கிறது பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் நடத்தப்படுகின்றன.

1. தையல் மற்றும் ரெடிமேடு ஆடைகள் பயிற்சிக் கூடம், பெருங்குளம், திருநெல்வேலி மாவட்டம்.

2. மூங்கில் வேலைக் கூடம், சாமியாபுரம், தர்மபுரி மாவட்டம்.

3. தையல் பயிற்சிக் கூடம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

4. பிரம்பு மற்றும் நார்ப்பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம்.

(1) பாகோடு, (2) குழித்துறை, கன்யாகுமரி மாவட்டம். இந்தத் தொழில் கூடங்களை நடத்துவதற்கும் பராமரிப்பதற்கும் 1977—78ல் ரூ. 1,67,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நடப்பு 1977-78ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதிதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்க ரூபாய் 1,37,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் விவரம் வருமாறு :

| மாவட்டம் | | பயிற்சியாளர்கள் |
|---|---|---|
| கன்னியாகுமரி | ... | 20 |
| அஜீஸ்நகர், தென்னூர்க்காடு | | 20 |
| மதுரை | ... | 20 |
| இராமநாதபுரம் | ... | 20 |
| திருநெல்வேலி | ... | 20 |

**விவசாயம் :** குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றிற்கு ரூ. 2,500 மானியமாக அளிக்கப்படுகிறது. இதற்காக, 1977—78ல் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.





## சுகாதாரம் வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு, ரூபாய் 1,200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300 ; மானியம் ரூ. 900. சென்ற 1975-76ல் இருந்து ஒரு வீட்டிற்காக மொத்தத் தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இது ரூ. 2,025 மானியமாகவும், ரூ. 675 பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ பயனடைவோர் பங்காகவும் உள்ளது. ஒரு வீட்டிற்கு ஆகும் மொத்தச் செலவை மேலும் உயர்த்துவது அரசுப் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு 1977—78க்கு ரூ. 4,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குழந்தைகள் காப்பகம்**

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் அஜீஸ் நகர் குடியிருப்பில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. இக் குழந்தைகளின் நலனைப் பேணி வளர்ப்பதற்காகவும் கருவுற்ற தாய்மார்களின் நலத்தைப் பேணுவதற்காகவும் அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை சமூக நலத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும். இவைகளுக்கான செலவைப் பிற்பட்டோர் நலத் துறை ஏற்கும். கேர் நிறுவனத்தின் உதவி இவைகளுக்குக் கிடைக்கும். இவைகளில் 350 தாய்மார்களும் குழந்தைகளும் சத்துணவு அளிக்கப்படுவர். ஐந்து பாலசேவகிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக 1977-78ல் ரூ. 59,400 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பிற்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

*[சட்டமன்றப் பேரவையில் வைக்கப் பெற்ற 1977-78ஆம் ஆண்டின் பிற்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 32-ன் கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது].*



## சமையல் கழிவைப் பன்றியின் உணவாகப் பயன் படுத்தலாம்!

தாயிடமிருந்து பிரித்த வெள்ளை யார்க்ஷயர் பன்றிக் குட்டிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவிற்குச் சமையல் கழிவை உணவாகவும், மற்றொரு பிரிவிற்குப் பன்றிக் கலப்புணவை உணவாகவும் கொடுக்கப்பட்டது. பன்றிகள் 240 நாள் வயது வரை இவ்வுணவினால் வளர்க்கப்பட்டன. இரண்டு பிரிவுகளிலும் சராசரி எடை அதிகரிப்பு, 1 கிலோ எடை கூடுதலுக்கு உணவிற்கு ஆகும் செலவு போன்றவைகள் கணக்கிடப்பட்டன. இரண்டு பிரிவிற்கும் சராசரி எடை அதிகரிப்பில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை. 1 கிலோ எடை அதிகரிப்பிற்குச் சமையல் கழிவை உட்கொண்ட பிரிவில் 180 நாள் வயது வளர்ச்சிக்கு ரூ. 2.09-ம் செலவாகியுள்ளது. பன்றிக் கலப்புணவுப் பிரிவில் இதே வயதில் முறையே ரூ. 2.29-ம் ரூ. 3.47-ம் ஆகியுள்ளது. இந்த ஆய்வின் மூலம், சமையல் கழிவைப் பன்றியின் மலிவான உணவாகப் பயன் படுத்தலாம் என்பது தெரிய வருகிறது. **

## பன்றிக் குட்டிகள் வளர்ப்பில் சில பராமரிப்பு முறைகள்

இளம் பன்றிக் குட்டிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவிற்குத் தனிப்பட்ட சத்துணவு கொடுத்தும், மற்றொரு பிரிவிற்குத் தனிப்பட்ட சத்துணவு கொடுக்காமலும் வளர்க்கப்பட்டன. இரண்டு பிரிவுகளிலும் ஒரு பிரிவு சிமெண்ட் தரையிலும் மற்றொரு பிரிவு மண் தரையிலும் வளர்க்கப்பட்டன. சத்துணவு பெற்ற குட்டிகளைத் தாய்ப் பன்றியில் இருந்து 8 வார காலத்தில் பிரிக்கும் போது சராசரி 14·63 கிலோ கிராம் எடையும், அச்சத்துணவு கொடுக்கப்படாத பிரிவில் சராசரி 10·51 கிலோ கிராம் எடையும் இருந்தன. இக்குறிப்பிடத்தக்க எடை வேறுபாடு சிமெண்ட் தரை மற்றும் மண் தரையில் வளர்க்கப்பட்ட பன்றிகளிடையே காணப்படவில்லை. ஆகவே தரையின் தன்மை பன்றிக்குட்டியின் வளர்ச்சியைப் பாதிப்பதில்லை என்று தெரியவருகிறது. மேலும் சத்துணவு பெற்ற குட்டிகள் அவ்வுணவு பெறாத பிரிவுக் குட்டிகளைக் காட்டிலும், 154 நாள் வயது காலத்தில் அதிக எடையைப் பெற்றன என்பதும் அறியப்பட்டுள்ளது. இதில் இருந்து தாயிடமிருந்து பிரிக்கும் முன்பு கொடுக்கப்படும் சிறந்த பராமரிப்பு முறை, பன்றியின் உடல் எடையை அதிகரிக்கிறது என அறியப்பட்டுள்ளது. **

தகவல் : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்—3.



# பள்ளிக்கூடக் குழந்தைகளின் உடல்நலப் பிரச்சினைகள்

டாக்டர்
ஏ. எச். எஸ். லாரன்ஸ்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு.

நல்ல உடல் நலமும், நல்ல கல்வியும் நெருங்கிய தொடர்பு உடையன. அவை பிரிக்க முடியாதன. உடல் நலத்தை இழந்தால் மனநிலையை இழக்க நேரிடும். கடைசியில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பிரச்சினைகளைக் குறித்து கல்வித் துறையினரும் உடல் நலக் கல்வித் துறையினரும் ஒத்துழைப்பதுடன் ஆசிரியர்கட்கான புத்துணர்வு வகுப்புகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

வளரும் நாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் பிறக்கும் 8 கோடி குழந்தைகள், நோய்க்கான பாதுகாப்பினைப் பெறுவதில்லை. வளரும் நாடுகளில், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளில், 77 சதவீதத்திற்கும் மேலானவர்கள் உடல் நலக் குறைவினால் பாதிக்கப்படுகின்றனர். அறியாமை, மூட நம்பிக்கை, வதந்தி, ஐயம் ஆகியவைதான், இன்றைய சத்துணவின்மைக்குக் காரணங்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இத் துன்பங்களை, அறவே நீக்க, கல்விதான் சிறந்த வழியாகும். சத்துணவும், உடல் நலக் கல்வியும் நெருங்கிய தொடர்புடையன. செல்வம் கொழிக்கும் நாடுகளில், 97 சதவீதக் குழந்தைகள், நோய்த் தடுப்பு வசதிகளைப் பெற்று, அதன் பயனாகப் பலவிதமான தொத்து நோய்களினின்றும் காப்பாற்றப்படுகிறார்கள். குழந்தைகள் கூட உடல் நலப் பணியாளர்களால் பார்க்கப்படுவதில்லை.

## 1. சத்துணவும் உடல் நலக் கல்வியும் (Nutrition and Health Education): —

பள்ளியில் சேர்வதற்கு முன்பும் பள்ளியில் சேர்ந்த பிறகும், சத்துணவும், உடல் நலக் கல்வியும் இன்றியமையாதன. வாழ்க்கையின் தொடக்கத்திலேயே சரியான உடல் நலப் பழக்கங்களை ஏற்படுத்துவது மிகவும் நன்று.

நல்ல உடல் நலம், சத்துணவு ஆகியவற்றைப் பற்றிய அறிவை, குழந்தைகளுக்குப் புகட்டுவது அவசியமாகும். சரியான வழியைப் பின்பற்றுவதன் வாயிலாகத்தான், நல்லதொரு தேசிய வளர்ச்சியை நிர்மாணிக்க முடியும். குழந்தைகளிடையே, தகுந்த நேரத்தில், நோய் தடுப்பைப் பற்றித் தகுந்த கவனம் எடுத்துக் கொண்டால், வளர்ந்தவர்களிடையே ஏற்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும்.

## 2. கல்வித் துறையும், உடல் நலத் துறையும் (Education and Health Departments):—

நம் நாட்டில், உடல் நலமுள்ள சமுதாயத்தை உருவாக்க, கல்வித் துறையும், உடல் நலத் துறையும் ஒத்துழைப்பது இன்றியமையாததாகும். டாக்டர் கில்பார்ட்ரிக் கல்வியும் சோப்பும் மிகச் சிறந்த ஆயுதங்கள் எனக் கூறியுள்ளார். நம் சமுதாயத்தில், சிறந்த உடல் நல மாற்றத்தை ஏற்படுத்த, இவ்விரு துறைகளும் இணைந்து மிகச் சிறந்த கருவிகளாகச் செயல்பட வேண்டும். பள்ளிச் சிறுவர்களுக்கு, ஆசிரியர்களும், உடல் நலத் துறையினரும் ஆற்றும் தொண்டுகள், வருங்காலத்தில் மிகச் சிறந்த பயனை நல்கும். கிராமங்களிலுள்ள பெற்றோர்கள் குழந்தைகள் வாயிலாகச் சிறந்த உடல் நலப் பழக்கங்களை அறிந்து கொள்வர். குழந்தைகளின் உடல் நலம், துப்புரவு ஆகியவற்றில் பெற்றோர்கள் உதவ, இது வழி வகுக்கும்.

**பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குச் சத்துள்ள உணவு அளிப்பதுடன், உடல் நலம், சத்துள்ள உணவு ஆகியவைப் பற்றிய அறிவைப் புகட்டுவதும் அவசியமாகும்.**





**குழந்தைகளுக்குத் தோன்றக்கூடிய நோய்கள் பற்றியும், சத்துள்ள உணவுகளைப் பற்றியும் தாய்மார்களுக்கு விளக்கம் அளித்தல் வேண்டும்.**

## 3. ஆசிரியர் விழிப்புடன் இருத்தல் (Teachers to be Vigilant):-

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணுவதில், ஆசிரியர்கள் மிக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள், தங்கள் பாதுகாப்பிலுள்ள குழந்தைகளிடையே காணப்படும், டிப்தீரியா', 'டெட்டனஸ்', கக்குவான் இருமல், காச நோய், இளம்பிள்ளைவாதம், மற்றும் சத்துணவுக் குறைவினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றைத் தவிர்க்கலாம். குழந்தைகளிடையே, இத்தகைய நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான, வழிமுறைகளைத் தகுந்த நேரத்தில், ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் கூற வேண்டும். ஆசிரியர்கள் ஒற்றுமையுடனும், உடல் நல ஊழியர்களின் ஒத்துழைப்புடனும், பேச்சுக்கள், படங்கள், விவாதங்கள் ஆகியவற்றின் வாயிலாகக் கிராமங்களிலும் நகரங்களிலும் சிறந்த உடல்நலப் பழக்கங்கள் ஏற்பட திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். கண்காட்சி வாயிலாக நோய்களின் காரணங்களையும், அவற்றைத் தடுக்கும் வழிகளையும் காட்டுதல் வேண்டும். குழந்தைகளுக்கு வழி காட்டும் மருத்துவ மனைகள் பெருகவும், அவற்றின் வாயிலாகக் குழந்தைகளின் மன கோளாறுகள் நீங்கவும், ஆசிரியர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பெற்றோரிடையே நிலவும் சில மூட நம்பிக்கைகளையும், தவறான நம்பிக்கைகளையும் களைவதற்கான திட்டங்களை ஆசிரியர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். சிறந்த அறிஞரும், குற்றம் காண்பவருமான பெர்னட்சா அவர்களே, ''அம்மை குத்துதல் போன்ற தடுப்பு முறைகளை அரைக்காட்டுமிராண்டித்தனமான சடங்கு'' என்று கூறியிருக்கின்றார். அதனால், நோய்களுக்கான காரணங்களைத் தடுப்பதும், சிறந்த உடல் நலப் பழக்கங்களை ஏற்படுத்துவதும், சுற்றுப்புறத் துப்புரவைக் கவனிப்பதும், ஆசிரியர்களுடைய பொறுப்பாகும். மேலும் ஆசிரியர்கள் வரை படங்கள், கற்பித்தல் ஆகியவற்றின் வாயிலாகக் குழந்தைகளுக்கு, நல்ல உடல் நலப் பழக்கங்களைக் காட்டுதல் வேண்டும். அம்மை குத்துதல் வாயிலாகப் பெரியம்மை தடுப்புப் பற்றிய விவரங்கள், அடங்கிய வரைபடங்களைக் காட்டி, பெற்றோர்களும் மாணவர்களும் நன்மை பெறச் செய்ய வேண்டும்.

## 4. கிராம ஏற்பு திட்டம் (Village Adoption Scheme): —

மாணவர்களும், ஆசிரியர்களும், கிராமஏற்புத் திட்டத்தின் வாயிலாகச் சில குறிப்பிட்ட கிராமங்களை ஏற்றுக்கொண்டு படிக்காத பெற்றோர்கள், மற்றும் பொது மக்கள் ஆகியோருக்குக் குழந்தைகள் நோய்களைப் பற்றி விவரித்தல் வேண்டும். அதனால், குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைத்து, உடல் நலமிக்க சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

## 5. ஆசிரியர் செயல்கள் (Teacher's Activities): —

ஆசிரியர்கள் கீழ்க்கண்டவற்றில் சிறப்பாக பணிபுரிந்தால் குழந்தைகள்பால் விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்த இயலும்.

1. நோக்கமுள்ள பள்ளி மதிய உணவுத் திட்டம்.
2. பள்ளி உடல் நலக்குழுவை அமைத்தல்.
3. தானாக முன் வந்து உதவும் மருத்துவர்களின் உதவியுடன் பள்ளியில் மருத்துவச் சோதனைக்கு ஏற்பாடு செய்தல்.
4. மருத்துவச் சோதனையின் குறிப்புகளைப் பெற்றோர்களுக்கு அனுப்பி, பின் விளைவுகளைத் தவிர்த்தல்.
5. பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களில், உடல் நலக் கல்வி பற்றிய கல்வித் துணைப் பொருள்களைப் பயன்படுத்தல்.
6. தொற்று நோய்களைத் தடுக்க, பருவ முறையில் அம்மை குத்தவும், ஊசி குத்தவும் ஏற்பாடு செய்தல்.
7. பள்ளிகளில் காய்கறித் தோட்டம் அமைத்தல்.
8. தானாக முன் வந்து உதவுபவர்களின் உதவியுடன், கழிவிடங்களைப் பள்ளியில் அமைத்தல்.
9. போதிய அளவு உடற்பயிற்சிக்குப் பள்ளியில் வசதி ஏற்படுத்துதல்.
10. குழந்தைகளின் கண்களையும், பற்களையும் கவனித்துப் பாதுகாத்தல்.
11. சுற்றுப் புற ஆரோக்யம், நல்ல உடல் நலப் பழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவை வளர்த்தல்.
12. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழி செய்தல்.

## 6. நடத்தையில் மாறுதல் (Change in behaviour) :—

கற்றலில் மூன்று 'R' கள் என்று கூறப்படுவதை விட, நடத்தையில் மாறுதல் ஏற்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். மாணவர்களின் உடல் நலத்தைப் பேணுவதால், இதனை அடைய முடியும். முன்னோடித் திட்டமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில், 19 வட்டாரங்களில், (BLOCKS) அமைந்துள்ள 660 பள்ளிகளிலுள்ள 3,461 ஆசிரியர்கட்கு சத்துணவுக் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்புத்துணர்வு,



நாளைய தலைமுறை நலமாகவும், வளமாகவும் வாழ மருத்துவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், கற்பிக்கும் கிராமங்களில், சிறந்த விளைவுகள் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அனைத்து இந்திய பல் மருத்துவர் சங்கத்தின் உதவியுடன் இவ்வாண்டு சென்னையிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் பயிலும் ஒருஇலட்சம் மாணவர்களுக்குப் பற்களின் பாதுகாப்புப் பற்றிக் கற்பிக்கப்படுகின்றது. பிற்காலத்தில் ஏற்படும், பல் நோய்களைத் தடுக்க இது உதவும். திருநெல்வேலி மாவட்டத்தில், உடல் நலக்கல்வி பற்றிப் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயிற்சியுடன் வழிகாட்டும் திட்டங்கள் பல சோதனை முகத்தான் மேற்கொள்ள இருக்கின்றோம். இதனால், தொடக்கத்திலேயே தொற்றுநோய்களைத் தடுக்க இயலும்.

### 7. அறிவு நிறைந்த ஆசிரியர்கள்

சிறந்த உடல் நலப் பழக்கங்கள், சுகாதாரம் ஆகியவற்றைப் பற்றிய அறிவு நிறைந்த ஆசிரியர்களாலேயே, குழந்தைகளின் தொடக்க நிலையில், சூழ்நிலைக்கு ஏற்ப நடத்தை மாறுதல்களை உருவாக்க முடியும். சுற்றுப்புறச் சுகாதாரம் முக்கியமானது; சிறந்த உடல் நலப் பழக்கங்களோடு தொடர்புடையது. குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் இதைப் பற்றிக் கற்பித்தல் வாயிலாகப் பல தொற்றுநோய்களைத் தவிர்க்க இயலும். கிராமங்களிலும், நகரங்களிலும் இது முக்கிய பிரச்சினையாகும். தொடக்க நிலையில் அளிக்கப்படும் சிறந்த உடல் நலக் கல்விதான், சத்துணவுக் குறைவு மற்றும் சுகாதாரமின்மை ஆகியவற்றால் குழந்தைகளிடையே ஏற்படும் பல உடல் நலப் பிரச்சினைகளைத் தவிர்க்க உதவும். இவை பற்றிய நவீன அறிவை ஆசிரியர்கள் பணியிடைப் பயிற்சிகள் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.



## இறைச்சியினக் கோழிகளும் தட்பவெப்ப நிலையும்!...

தட்பவெப்ப நிலைகளும், காற்றின் வெப்பமும், காற்றின் ஈரத்தன்மையும் இறைச்சியினக் கோழிகளின் உடல் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிய ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு முடிவின்படி அக்டோபர் மாதம் பொரித்து, பிப்ரவரி வரை வளரும் குஞ்சுகள் அதிக வளர்ச்சியையும், அதற்கடுத்து டிசம்பர் மாதம் பொரித்து ஏப்ரல் வரை வளரும் குஞ்சுகள் அதிக வளர்ச்சியையும் அடைவதாகத் தெரியவந்தது அக்டோபர் முதல் பிப்ரவரி வரை உள்ள பருவ காலத்தில் இறைச்சியினக் கோழிகள் 20 வார வயதில் 1892.5 கிராம் எடையை அடைந்ததாகவும், வார சராசரி எடை அதிகரிப்பு 9·92 கிராம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கூறிய பருவ காலத்தின் போது சராசரி காற்றின் வெப்பநிலை 80·2 டிகிரி என்றும் காற்றின் சராசரி ஈரத்தன்மை 66·9% என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

**

## தட்பவெப்ப நிலையும் கோழியின் முட்டை உற்பத்தியும்

காற்றின் வெப்பநிலை 82° பாரன்ஹீட் டிகிரிக்கு அதிகமானால் கோழியின் உடல்நிலை பாதிக்கப்பட்டு முட்டையின் எண்ணிக்கையும், எடையும் குறைகின்றன, என்று ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, கோழிகளுக்கு அமைக்கப்படும் இருப்பிடம் காற்றின் வெப்பத்தைத் தணிக்கக் கூடிய வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. காற்றின் ஈரத் தன்மை, காற்றின் வெப்பநிலை 74·5° முதல் 89·0° டிகிரி வரை இருக்கும் போது கோழியின் ஆரோக்கியத்தை இது பாதிப்பதில்லை. இதனால் முட்டையின் எண்ணிக்கையும், எடையும்கூட பாதிக்கப்படுவதில்லை என்று தெரிய வருகிறது.

**

தகவல் : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்—3.



# சித்தேரி மலைவாழ் மக்களுக்கு வனத் துறை செய்திடும் நன்மைகள்

—க. க. சோமசுந்தரம், ஐ.எப்.எஸ்.
மாவட்ட வன அலுவலர்,
தருமபுரி.

சித்தேரி மலை என்பது தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில், அரூர் நகரிலிருந்து இருபத்தாறு கிலோ மீட்டர் தூரம் தெற்கில் அமைந்துள்ளது. இம்மலைக்குச் செல்ல அரூரிலிருந்து வனத்துறையால் 1897-ஆம் ஆண்டு போடப்பட்ட சாலை உள்ளது. இச்சாலை அந்நாளிலிருந்து இன்றுவரை வனத்துறையால் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. சித்தேரி மலையின் மொத்தப் பரப்பு 400 சதுர கிலோ மீட்டராகும். இம்மலையில் மொத்தம் 44 கிராமங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான கிராமங்களில் மலை ஜாதியினர்தான் வசிக்கின்றனர். சித்தேரி கிராமம்தான் இவ்வெல்லாச் சிற்றூர்களுக்கும் தலைமையிடம் போல் விளங்குகிறது. சித்தேரி ( Chitteries ) என்று குறிப்பிடுவது பொதுவாக அம்மலையில் அடங்கியுள்ள எல்லா கிராமங்களையும் குறிக்கும். சித்தேரி மலை, பள்ளத்தாக்குகளும் மலைகளும் நிறைந்தது. இதன் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் மூவாயிரம் அடி. வருடம் முழுவதும் தட்பவெப்ப நிலை மிதமாக உள்ளது. 'போட்டுமலை' என்ற மலை முகடுதான், சித்தேரி மலையிலேயே மிக அதிகமான உயரம் (4182 அடி) உடையது. சித்தேரி மலையிலுள்ள எல்லா கிராமங்களிலும் 'மலையாளி' என்று கூறப்படுகிற மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். இம்மலையிலுள்ள மலைவாழ் மக்களின் எண்ணிக்கை சுமார் பதின்மூன்றாயிரம் ஆகும். எல்லா கிராமங்களும் காடுகளால் சூழப்பட்டுள்ளன. சித்தேரியிலிருந்து சுமார் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு நொச்சிக்குட்டைக்கும், சூர்யகடை, புதூர், வெலாம்பள்ளி ஆகிய ஊர்களுக்கும் சித்தேரியை இணைத்து வனத்துறையால் வறட்சி மீட்புத் திட்டத்தின்கீழ், நல்ல சாலைகள் போடப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களை 'ரோடு கேங்' கூலிகளாக வைத்து இச்சாலைகளை வனத்துறையினர் நன்கு பராமரித்து வருகின்றனர். மேலும் சித்தேரியிலிருந்து மன்னூர், மாங்கடை, கலசப்பாடி ஆகிய ஊர்களுக்கும் இன்னும் பல சிறு ஊர்களுக்கும் சாலை அமைக்க மலைவாழ் மக்களின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வனத்துறையால் தயாரிக்கப்பட்ட திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. அரூரிலிருந்து சித்தேரி வரை இப்பொழுது பஸ் வசதி கிடையாது. ஆகவே 'ஜீப்வேன்' அல்லது வேறுவகை சிறிய வாகனங்கள் விடும் வகையில், 26 கிலோ மீட்டர் ரோடும் மலைவாழ் மக்களையே 'கேங்' கூலிகளாக வைத்து நன்கு பராமரித்துச் சீர்படுத்தப்படுகிறது.

### 'லாம்ப்' பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்

மலைவாழ் மக்களின் முன்னேற்றத்தைக் கருதி தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட ஏழு 'லாம்ப்' ( Lamp ) கூட்டுறவு சங்கங்களில் ஒன்று சித்தேரியில் அமைக்கப்பட்டுள்ளது. 'லாம்ப்' சங்கம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், சித்தேரி மலைப் பகுதிகள் அடங்கிய அரூர் வனச் சரகத்தைச் சேர்ந்த வனச்சரகர் தான் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். மலைவாழ் மக்கள் வனத்தின் ஊடேயே வசித்து, வனங்களினூடே ஒன்றியுள்ளதால் அவர்களின் முழுமையான தேவைகளை அறிந்து அவர்களுக்கு நன்மை செய்ய தர்மபுரி மாவட்ட வன அலுவலரும் 'லாம்ப்' சங்கத்தின் ஓர் இயக்குநராக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### சித்தேரி மலைவாசிகள் பற்றிய குறிப்பு

சேர்வராயன், கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சமலை முதலிய மலைவாழ் மக்கள் போலவே சித்தேரி மலைவாசிகளும் 'மலையாளி' என அழைக்கப்படுகின்றனர். மலைகளில் வாழ்வதாலேயே 'மலையாளி' என அழைக்கப்படுகின்றனர். இவர்களை தோடர்கள், குரும்பர்கள், பனியர்கள் போல மலை ஜாதியினர் ( Hill Tribes ) எனக் கொள்ளலாகாது. திப்புசுல்தான் தெற்கில் படையெடுத்தபொழுது, இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்ததாக நம்பப்படுகிறது. இவர்கள் தங்களை 'வெள்ளாளர்' இனத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கிறார்கள். தங்கள் பெயருக்குப் பின்னர் 'கவுண்டர்' என்ற அடைமொழியை உபயோகப்படுத்திக் கொள்வதில் பெருமைப்படுகிறார்கள். தமிழைத்தான் தாய்மொழியாகப் பேசுகிறார்கள். இவர்கள் கீழ் நாட்டிலிருந்து சித்தேரி மலைக்கு வந்ததை வேறு பல விதமாகவும் கூறுகிறார்கள்.

சித்தேரி மலைவாழ் மக்கள் இந்துக்கள். இந்துக்கடவுள்களின் பெயரைச் சூட்டிக் கொள்கிறார்கள். சிவன், விஷ்ணு, காளி, பிடாரி மாரியம்மன் முதலிய தெய்வங்களை வழிபடுகிறார்கள். கூரையில்லாத கோவில்களில் அல்லது திறந்த வெளியில் வழிபாடு நடத்துகிறார்கள். 'ஆண்டி' என்று சொல்லப்படும் பூசாரி, வழிமுறையாக ( Hereditary ) வருபவர். தீபாவளி, பொங்கல் இவைதான் இவர்களுக்கு முக்கிய




**ஸ்டேட் பாங்க் ரிக்கரிங் டெபாஸிட் திட்டம்**

**மாதந்தோறும் சேமிக்கும் பழக்கம்—நாளை நலன் தரும்.**

ஒவ்வொரு மாதமும் எத்தனை சேமிக்க வேண்டும், மற்றும் எத்தனை காலம் சேமிக்க முடியும் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆரம்பித்தவுடன், உங்கள் சேமிப்பு வட்டியுடன் வளரும் வேகத்தைக் கண்டு மலைத்துப் போவீர்கள்.

இன்னும் எளிதாக்க வேண்டுமானால், ஸ்டேட் பாங்கில் ஒரு சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள். மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை உங்கள் ரிக்கரிங் டெபாஸிட் கணக்கில் மாற்றும்படி உங்கள் ஸ்டேட் பாங்க் கிளைக்குக் கூறிவிடவும்.

வசதியான காலவரையறைக்கு, ரூ. 5/-ன் மடங்கில் நீங்கள் சேமிக்கலாம். வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு வருமாறு: 12, 24 மற்றும் 36 மாதங்களுக்கு 6%, 37, 48, மற்றும் 60 மாதங்களுக்கு 8%, மேலும் 61, 72, 84, 96, 108 மற்றும் 120 மாதங்களுக்கு 10%.

இன்னும் என்ன? நீங்கள் போகுமிடமெல்லாம் உங்கள் பணமும் கூடவே வரும். காரணம், இந்தியாவில் 4,200க்கும் மேற்பட்ட வெவ்வேறு இடங்களில் உங்களுக்கு சேவை புரிகிறது ஸ்டேட் பாங்க்.

**ஸ்டேட் பாங்க்**

அதிகமாக 'மரங்கள் வளருங்கள்






சித்தேரி மலைவாழ் மக்கள் தானியங்களை வட்டமான குதிர்களில் சேர்த்து வைக்கின்றனர்.

விழாக்கள். இவர்கள் மாட்டுப் பொங்கலை விமரிசையாகக்கொண்டாடி, காட்டுக்கு வேட்டைக்குப் போவதுண்டு. வேட்டைக்குப் போவது இப்பொழுது பெரும்பாலும் குறைந்துவிட்டது. சித்தேரி மக்களின் முக்கிய தொழில் விவசாயம்; ஆடு, மாடு, பன்றி முதலியவையும் வளர்க்கின்றனர். ராகி, வரகு, சோளம், சாமை, மலைநெல் முதலியவையும் பருப்பு வகைகள், மிளகாய், ஆமணக்கு முதலியனவும் பயிரிடுகின்றனர். சோளம், வரகு, ராகி ஆகியவற்றை விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

### சித்தேரி மக்களின் பொருளாதார நிலை

சித்தேரி மலைவாழ் மக்கள் மிகவும் ஏழைகளாகவும், கடன் பட்டவர்களாகவும் உள்ளனர். அவர்களது நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் போதுமானதாக இருப்பதில்லை. ஆகவே, வனத்துறையில் மேற்கொள்ளப்படும் சந்தன மரங்கள் பெயர்த்தெடுத்தல், மூங்கில் வெட்டுதல், கடுக்காய், புளி, தேன் முதலிய வனப்பொருள்கள் சேகரம் செய்தல் முதலிய வேலைகளில் ஈடுபட்டுத் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்கிறார்கள். தங்கள் சொந்த நிலங்களிலுள்ள கடுக்காய், புளி, பலா ஆகிய பொருள்களை முன்கூட்டியே அடமானம் வைத்து விடுகின்றனர். கீழ் நாட்டிலுள்ள சிலர், புளி, கடுக்காய் ஆகியமரங்களின் பாத்தியதையைப் பல ஆண்டுகளுக்கு வாங்கிக் கொண்டுள்ளார்கள். ஆகையால் இம்மக்கள் எப்போதும் கடன் பட்டே உள்ளார்கள். வழக்கமாக திருமணம் முதலிய சடங்குகளைக் கடன் வாங்கியே நடத்துகிறார்கள். அவர்கள்வளர்க்கும் மாடுகளும் மிகவும் தரம் குறைந்ததாகவே உள்ளது. வீரியம் குன்றிய விதைகளையே உபயோகிப்பதாலும், இரசாயன உரமிடுதல், கரைகள் கட்டி மண் வளப்பாதுகாப்பு செய்தல் ஆகிய மேம்பாட்டு வேலைகளைச் செய்யாததாலும் இவர்களுக்கு விவசாயத்தில் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவாகவே உள்ளது. விளை பொருள்களை வாரச் சந்தைகளுக்குக் கொண்டு சென்று, கிடைக்கும் விலைக்கு விற்று விடுவதால், எப்பொழுதும் கையில் பணம் இல்லாத ஏழ்மை நிலையிலேயே இருந்துள்ளனர். இவர்கள் உணவிற்கும், விதைகளுக்கும் தேவையான தானியங்களை ஊரின் ஒரு புறத்தில் வட்டமான 'தானியக் குதிர்களில்' சேமித்து வைக்கின்றனர். தானியக்குதிர்களின் கூரைகள் புற்களால் வேயப்பட்டிருக்கும். குதிர்களின் அடிப்பாகமும், பக்கங்களும் மூங்கில் தட்டிகளால் பின்னப்பட்டு, பின்னர் மண்ணால் பூசப்பட்டிருக்கும். குதிரின் பக்கவாட்டில் தானியம் எடுக்கவும், கொட்டவும் ஒரு துவாரம் உண்டு.

### வனவிலங்குகள்

சித்தேரியில் யானை, புலி கொடிய மிருகங்கள் ஒருபோதும் இருந்ததில்லை. சிறுத்தை இனம் ஒரு காலத்தில் இருந்ததாகவும், அவை அழிக்கப்பட்டுவிட்டன என்றும் கூறப்படுகிறது. மலையாளிகள் வனவிலங்குகளையோ பறவைகளையோ வலைகள் வைத்தோ, கண்ணி வைத்தோ பிடிப்பதில்லை. சித்தேரி மலையில் புள்ளிமான், கடமான், காட்டெருமை முதலிய விலங்குகள் உள்ளன. காட்டெருமைகளைச் சுடுவதோ அல்லது அவற்றின் மாமிசத்தைச் சாப்பிடும் பழக்கமோ அவர்களுக்குக் கிடையாது. வனங்களினூடே வசிப்பதால் மலையாளிகளின் பொது நன்மைகளைக் கருதி ஒவ்வொரு கிராமத்திலும் ஊர்க்கவுண்டர் அல்லது நாட்டானுக்கு மட்டும் துப்பாக்கி உரிமம் வழங்க ஆட்சேபணை இல்லையென வனத்துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### சித்தேரி மக்களுக்கு வனத்துறையால் அளிக்கப்படும் நன்மைகள் :—

1. சித்தேரி மக்கள் தங்கள் ஆடு, மாடுகளை வனங்களில் மேய்ச்சல் அனுமதிச்சீட்டு இல்லாமல், இல-

வசமாக ஆண்டு முழுவதும் மேய்த்துக் கொள்ளலாம்.

2. வனங்களிலிருந்து கூரைகள் வேய மூங்கில், புல் மற்றும் மரத் துண்டுகளையும் இலவசமாக வெட்டிகொள்ளலாம். விவசாயக் கருவிகளான கலப்பை, தடி ஆகியவைகளையும் வனங்களில் வெட்டி எடுத்துக் கொள்ளலாம். மேற் கண்ட வசதிகளை அனுபவிக்க அவர்கள் வனத்துறையினரின் கீழ்க்கண்ட முக்கிய நிபந்தனைகளைப் பின்பற்றவேண்டும்.

1. காப்புக்காடுகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவர்கள் வெள்ளாடுகள் வளர்க்கக்கூடாது.

2. பாதுகாப்புக் காட்டில் வளரும் சந்தனம், மூங்கில் மற்றும் இதர செடிகளைப் பாதுகாப்பதின் பொருட்டு தங்களுக்குச் சொந்தமில்லாத கீழ்நாட்டவரின் கால்நடைகளை வளர்க்கக் கூடாது.

3. தங்கள் கிராமங்களைச் சுற்றியுள்ள காடுகளில் உள்ள சந்தன மரங்களையும், இதர வனப்பொருள்களையும் திருட்டிலிருந்தும், தீயிலிருந்தும் பாதுகாத்தல் வேண்டும்.

4. வனத்துறையினர், கீழ்நாட்டிலிருந்து ஆட்கள் கொண்டு வந்து வேலை செய்ய இயலாததால், அவர்களால் செய்யப்படும் சந்தனமரம் பிடுங்குதல், செடிகள் வளர்த்தல், மரம் வெட்டுதல், சாலை போடுதல் ஆகிய வேலைகளை முன் வந்து செய்ய வேண்டும். தக்க கூலி வழங்கப்படும்.

5. கொடுக்கப்பட்ட காப்புக் காடுகளில் சந்தன மரத் திருட்டுக்கள் ஏற்பட்டாலோ அல்லது காடுகளைத் தீயிலிருந்து பாதுகாக்கத் தவறினாலோ மேய்ச்சல்வைப்புத் தொகையிலிருந்து தக்க தொகை பிடித்தம் செய்யப்பட்டு பாக்கி ஊர்க்கவுண்டர் வசம் ஒப்படைக்கப்படும். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாத இறுதியில் ஒவ்வொரு ஊர்க் கவுண்டராலும் மாவட்ட வன அலுவலகத்தில் வைப்புத் தொகை கட்டப்படுகிறது. சித்தேரி மலைவாழ் மக்கள், காடுகளைத் தீயிலிருந்தும், திருட்டுக் களிலிருந்தும் ஒவ்வொரு ஆண்டும் மிகவும் கவனமாகப் பாதுகாத்து வனத்துறையினருக்கு உறுதுணையாக உள்ளனர். வனத்துறையால் மேற்கொள்ளப்படும் எல்லா வகை வேலைகளையும் முன் வந்து செய்கின்றனர். ஆகவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது. காடுகளை தீயின்று காப்பாற்றும் கிராம மக்களுக்கு ஊர்க்கவுண்டர் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வன அலுவலரால் பரிசு வழங்கப்படுகிறது.

## சித்தேரி மக்களுக்கு வனத் துறையால் அளிக்கப்படும் வேலைவாய்ப்பு...

### சந்தனமரம் பிடுங்குதல்

சித்தேரியில் வளரும் சந்தன மரம் நல்ல தரமானதாகவும், விலை உயர்ந்ததாகவும் உள்ளது. சராசரியாக ஒரு டன் ரூபாய் ஐம்பதாயிரத்துக்கு விற்பனையாகிறது. காய்ந்து, உலர்ந்த, சந்தன மரங்களே வனத்துறையினரால் வேரோடு பிடுங்கப்பட்டு சேலம் சந்தன மரக்கிடங்கிற்கு அனுப்பப் படுகிறது. அங்கு சந்தன மரங்களைச் சுத்தம் செய்து பின்னர் சத்திய மங்கலம் அனுப்பப் பட்டு, ஆண்டுக்கு இருமுறை விற்பனை செய்யப்படுகிறது. சராசரியாக சித்தேரி மற்றும் சுற்றுமுள்ள காடுகளில் மட்டும் நூறு முதல் நூற்றைம்பது டன் வரையுள்ள சந்தன மரங்கள் பிடுங்க வாய்ப்புள்ளது. இம் மரங்களைப் பிடுங்குதல், காடுகளிலிருந்து மத்திய கிடங்கிற்குக் கொண்டு வருதல், லாரிகளில் ஏற்றுதல் முதலான வேலைகள் முழுவதையும் மலைவாசிகள்தான் செய்கின்றன. இவ்வேலை சராசரியாக வருடம் முழுவதும் உள்ளது.

### சாலைகள் பராமரித்தல்

அரூரிலிருந்து சித்தேரி மற்றும் நொச்சிக்குட்டை, கத்திரிப்பட்டி கம்பாலை மற்றும் சூர்யகடை, வெலாம்பள்ளி முதலிய ஊர்களுக்குச் செல்லும் மொத்தம் எழுபத்தைந்து கிலோ மீட்டர் நீளச்சாலைகளும் மலைவாசிகளாலேயே 'கேங்' கூலி என்ற திட்டத்தின்கீழ் பராமரிக்கப்படுகிறது. சுமார் முப்பது மலைவாசிகள் இத்திட்டத்தின் கீழ் தினமும் வேலை செய்கின்றனர். புதிதாகப் போடப்படும் சாலைகள்

முதிர்ந்து காய்ந்த சந்தன மரங்களைப் பிடுங்கி எடுத்துவரும் பணிகளை, வனத்துறைக்காக, சித்தேரி மலைவாழ் மக்களே செய்கின்றனர்.






சித்தேரி மலைவாழ் மக்களால் விளைவிக்கப்படும் கடுக்காய்கள் 'லாம்ப்' கூட்டுறவுச் சங்கத்தால் வாங்கப் படுகின்றன. 'லாம்ப்' சங்கத்தினரால் மலையில் விளையும் சிறு பொருள்கள் அனைத்தும் மாவட்ட வன அலுவரால் வாங்கப் படுகின்றன.

மலைவாசிகளாலேயே செய்யப்படுகின்றன.

### மூங்கில் மற்றும் சந்தனத் தோட்டங்கள் போடுதல்

சித்தேரியில் சந்தனமரம் நன்கு வளருவதால், அங்கு ஆண்டுதோறும் சுமார் 40 ஏக்கர் பரப்பில் புதிதாகச் சந்தன நாற்றுக்கள் நடப்படுகின்றன. மேலும் தீவிர சந்தன உற்பத்தித் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் சுமார் 300 ஏக்கர் பரப்பில் சந்தன நாற்றுக் களின் பராமரிப்பு செய்யப்படுகிறது. செடிகளுக்கு குழி வெட்டுதல், செடி நடுதல், களையெடுதல் ஆகிய அனைத்து வேலைகளும் மலைவாசிகளாலேயே செய்யப்படுகின்றன. இவ்வாண்டில் 125 ஏக்கர் பரப்பில் மூங்கில் நடப்பட்டு வருகிறது.

### கிணறு, நாற்றங்கால் மற்றும் தண்ணீர் வசதி

சித்தேரி மலைவாழ் மக்கள் திட்டத்தின் கீழ் (Tribal Scheme), வனத்துறையால் ஒரு கிணறு வெட்டப்பட்டு, மேல் நிலைத் • தொட்டிகட்டப்பட்டு, பம்பு செட்டு பொருத்தப்பட்டு வருகிறது. அருகிலுள்ள பள்ளிக்கும் தண்ணீர் வசதி செய்துதர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே திட்டத்தின் கீழ், மலைவாசிகளுக்கு இலவசமாகச் செடிகள் வழங்க வனத்துறை நாற்றங்காலில் புளி, பலா, மாதுளை, கொய்யா, பப்பாளி, எலுமிச்சை முதலிய பழவகைச் செடிகளும் தேக்கு, மூங்கில், 'யூகாலிப்ட்ஸ்', 'சில்வர்ஓக்' போன்ற மரவகைச் செடிகளும் எழுப்பப்பட்டுள்ளன. இவ்வாண்டு மட்டும் இருபதாயிரம் செடிகள் இவ்வாறு இலவசமாக வழங்கப்படும். அத்துடன் அவைகளை நடுதல், பராமரித்தல் பற்றிய விவரங்களும் வனத்துறையால் எடுத்துச் சொல்லப் படும்.

### தங்கும் விடுதி

சித்தேரி மலை சமவெளியிலிருந்து மிகவும் தொலைவில் உள்ளதால் அங்கு அரசாங்க அலுவலர்களும், ஏனையோரும் சென்று பல அலுவல்களை முடிக்க அங்கு அவசியம் தங்கியாக வேண்டும். மேலும் பெரும்பாலான கிராமங்களுக்குச் சித்தேரி சென்று, அங்கிருந்துதான் செல்ல வேண்டும். ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு . வனத்துறையினரால் அங்கு ஒரு தங்கும் விடுதி கட்டுவதற்காக ரூபாய் அறுபதாயிரம் செலவிட, அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வேலை துவங்கும் தறுவாயில் உள்ளது.

### சித்தேரி கால் நடைகளுக்கு தண்ணீர் வசதி

சித்தேரியிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள ஏராளமான கால்நடைகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வனத்துறையால் திட்டங்கள் அனுப்பப் பட்டுள்ளன. சென்ற ஆண்டு இரண்டு இடங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. வறட்சி மீட்புத் திட்டத்தின் கீழும் (D.P.A.P.) இவ்வாண்டு இவ்வாறான வேலைகள் மேற் கொள்ளப்படும்.

### குமரி முறையில் சாகுபடி செய்ய நிலம் வழங்குதல்

சுமார் 100 ஏக்கர் நிலத்தில் குளக்குரிச்சி மற்றும் சித்தேரிக்கு அருகாமையில் சந்தனம் மற்றும் மூங்கில் தோட்டங்களில் 'குமரி' சாகுபடி செய்ய மலைவாசிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சித்தேரி 'லேம்ப்' கூட்டுறவு சங்கத்தின் மூலமாக, 'குமரி' சாகுபடி செய்ய கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### வன சிறு மகசூல்களை 'லாம்ப்' சங்கத்துக்கு ஒதுக்குதல்

வனங்களில் விளையும் பலவகையான சிறு மகசூல்களான புளி, கடுக்காய், சிகைக்காய், நெல்லி, எட்டி, கறிவேப்பிலை மற்றும் பல வகையான பழவகைகள், வேர்கள் தேன் மற்றும் ஏராளமான சிறு மகசூல்களை நிர்ணயம் செய்யப் பட்ட விலைக்கு 10 சதம் குறைத்து கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்க மாவட்ட வன அலுவலர்களை அரசு அனுமதித்துள்ளது. மலைவாழ் மக்களை 'கண்ட்ராக்டர்'கள் சுரண்டி பணம் பறிக்காமல் இருக்கவும், இவர்களுக்கு நேரிடையாக கூட்டுறவுச் சங்கம் மூலம் வேலை கொடுக்கவும் சித்தேரியில் உள்ள முப்பத்தேழு வகையான வன விளை பொருள்களும் 'லாம்ப்' சங்கத்துக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. இனிமேல் எல்லா வகையான சிறு மகசூல்களும் 'லாம்ப்', சங்கத்துக்கு ஒதுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு அரசு, மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கல்ராயன்மலை, கொல்லிமலை, ஜவ்வாது மலை, பச்சமலை, சித்தேரிமலை, அரனூத்துமலை முதலிய பின் தங்கிய இடங்களில் வசிக்கும் மக்களுக்காக ரூபாய் 1.53 கோடி ஒதுக்கியுள்ளது. ஏழு இடங்களில் ஏற்கெனவே 'லாம்ப்' கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையாக இயங்கி வருகின்றன. இன்னும் ஐந்து 'லாம்ப்'கள் ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளது. இந்த 'லாம்ப்'களின் மூலம் மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்வின் 'ஒளி'யைக்காண்பார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

# படமும் செய்தியும்





மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள், கடலூர் சேவை இல்லத்திற்காக ரூபாய் 2 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை, 6-10-1977 அன்று திறந்து வைத்தார். சமூகநலத்துறை இயக்குநர் திருமதி லட்சுமி பிரானேஷ் அவர்களும், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ. எஸ். பத்மநாபன் அவர்களும் மேலேயுள்ள படத்தில் காணப்படுகின்றனர்.




குடும்ப நல இருவார விழாவை முன்னிட்டு சென்னையில் 10-10-1977 அன்று 'இளைஞர் நாள்' விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமை வகித்தார். மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் இளைஞர் நாள் விழா வைத் துவக்கி வைத்தார். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டார்.



மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநில மரம் நடும் குழுவின் கூட்டம், 12-10-1977 அன்று, சென்னை ராஜ்பவனில் நடைபெற்றது. அவ்வமயம் ஆளுநர் அவர்கள் ராஜ்பவன் தோட்டத்தில் ஒரு மாங்கன்றை நட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், 18-10-1977 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், ''நாடாளு மன்றத்தின் வரலாறு'' என்ற பொருட்காட்சியைத் துவக்கி வைத்துப் பார்வையிட்டார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களை, 19-10-1977 அன்று, மாண்புமிகு ஆந்திரப் பிரதேச சிறுதொழில் அமைச்சர் திரு ஒய். நாராயணசாமி அவர்கள் சந்தித்து உரையாடினர்.

மாண்புமிகு பீகார் மாநில சுற்றுலா-அறக்கட்டளைத் துறை அமைச்சர் திரு மோகன்ராம் அவர்கள், 19-10-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.







திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெண்ணலூரில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கட்டடத்தை, 20-10-1977 அன்று, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைத்தார்.



தமிழ்நாட்டிற்கு 20-10-1977 அன்று வருகை தந்த மெக்சிகோ நாட்டுக் குடியரசுத் தலைவரின் துணைவியார் திருமதி போர்ட்டில்லோ அவர்களை, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார்.

# கூட்டுறவுப் பயிற்சிக்கு ஒரு கல்லூரி

கூட்டுறவு இயக்கம் இன்று தமிழ்நாட்டு நகரங்களில் மட்டுமல்ல—கிராமங்களிலும் இயங்கி வருகிறது. அதனால் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்திய நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் தமிழ்நாடு மிகப் பெரும் இடத்தைப் பெற்றிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் மிக வலுவான ஓர் இயக்கமாக—சமூக, பொருளாதாரத் துறையில் புகழ் பெற்ற இயக்கமாக விளங்குகிறது ; பொது மக்களுக்கு நல்ல சேவை செய்து வருகிறது.

கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் ஜெர்மனி நாட்டில் ரெய்பீசன் என்பவரால் 1899ஆம் ஆண்டில் துவக்கம் செய்யப்பட்டது. சர் பிரடரிக் நிக்கல்சன் என்பவர், இந்த இயக்கத்தை இந்திய நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். 1904ஆம் ஆண்டு இவ்வியக்கம் தமிழ்நாட்டில் தோன்றியது.

துவக்கத்தில் ஏழை விவசாய மக்களின் வறுமையைப் போக்குவதற்குக் கடன் கொடுத்து உதவுவதே இந்த இயக்கத்தின் குறிக்கோளாக இருந்தது. பின்னர் படிப்படியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்தது.

இன்று, கூட்டுறவு இல்லாத துறையே இல்லை. வேளாண்மை, தொழில், கால்நடை வளர்ப்பு, கைத்தறி, பால் வளம், கிராமத் தொழில், வீட்டு வசதி இப்படிப் பலப்பல துறைகளிலும் கூட்டுறவு என்னும் குளிர் தென்றல் வீசி வருகிறது.

எனவே, கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளிலும் பணி புரிவோர், தங்களது பணியைத் திறம்பட நடத்துவது மிக அவசியம் அல்லவா? கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைகள், விதி முறைகள் ஆகியவற்றை அவர்கள் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததல்லவா? இந்தத் திறமைகள் எல்லாம் அவர்களிடம் ஒளி வீசித் திகழ்வதற்குரிய ஒப்பற்ற பணியைச் செய்து வருகிறது, சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.

இந்திய நாடு முழுவதும் இது போன்ற கல்லூரிகள் மொத்தம் 16 இருக்கின்றன. சென்னையில் உள்ளது போல, பெங்களூர், புவனேஷ்வர், சண்டிகர், டேராடூன், கௌஹாத்தி, ஐதராபாத், இந்தூர், கல்யாண், ஜெய்ப்பூர், லக்னோ, நாகபுரி, பாட்னா, பூனா, வி.வி. நகர் (குஜராத்), திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிலும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன.

ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த கூட்டுறவு மையக் குழு 1954ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பாகங்களில், வட்டாரக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களை ( Regional Co-operative Training Centres ) உருவாக்கியது. பின்னர், இதன் நிருவாகம், 1962ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு ஒன்றியத்திற்கு (National Co-operative Union of India) மாற்றம் செய்யப்பட்டது. அப்போது வட்டாரம் என்னும் சொல் நீக்கம் செய்யப்பட்டு, 'கூட்டுறவுப் பயிற்சி நிலையம்' என வழங்கப்பட்டது. 1967ல் 'கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி' எனப் பெயரிடப்பட்டது.

புது டில்லியிலுள்ள தேசியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் ( National Council for Co-operative Training ) நேரடி நிர்வாகத்

மாவட்ட இளநிலை கூட்டுறவுப் பயிற்சி நிலைய முதல்வர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் நடத்தப் பெற்ற குறுகிய காலப் பயிற்சியில் பங்கேற்றவர்கள்.





"வைப்புத் தொகை சேகரிக்கும் முறை" என்ற பயிற்சித் திட்டத்தின்கீழ், பயிற்சியாளர்கள், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வேளாண்மை விரிவாக்க அலுவலரிடம் நேரடியாகத் தகவல் சேகரிக்கின்றனர்.

தில் இந்தக் கல்லூரி உள்ளது. இதற்குரிய நிதியை, மத்திய அரசின் உணவுப் பொருள் விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சகம், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் மூலம் வழங்கி வருகிறது. பயிற்சி முறைகள் குறித்த கொள்கைகளும், நிர்வாகமும், மேற்குறிப்பிட்ட குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றன. கல்லூரியின் அன்றாட நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் "சிறப்புக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு" என்னும் ஒரு தனிக் குழு, சென்னை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் இருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர்தான் இந்தக் குழுவுக்கும், தலைவராக இருக்கிறார். தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர், தமிழ்நாடு மாநில நிலவளக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னையிலுள்ள மத்திய கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தின் முதல்வர் ஆகியோர் இச்சிறப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருக்கின்றனர். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி முதல்வர், உறுப்பினர் அமைப்பாளராக இருக்கிறார்.

இக்கல்லூரியின் பாடத் திட்டம், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. அக் குழு பாடத் திட்டத்தைப் பார்வையிட்டு, ஒப்புதல் தருகிறது. தேவைப்பட்டால் திருத்தமும் செய்கிறது. பின்னர், 'டிப்ளமா' பட்டம் தருகிறது. சுருங்கச் சொன்னால், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழு ஒரு தேசிய நிறுவனமாகச் செயலாற்றித் தொழில் நுட்ப உதவியைத் தருகிறது ; வழிகாட்டுகிறது. இதன் மூலம் இந்திய நாடு முழுதும் இந்தத் தரமான திட்டம் அமலாக்கப்படுகிறது.

இக்கல்லூரியின் குறிக்கோள்கள் வருமாறு :

1. தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலும் உள்ள கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அலுவலகங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் பயிற்சித் தேவைகளை மதிப்பிடுதல்.

2. நடுநிலை வகையைச் சேர்ந்த கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரிபவர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சியினை நடத்துதல்.

3. பயிற்சியின் விளைவுகளை மதிப்பிடுதல்.

4. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை நேரில் சென்று பார்த்து, அதன் பணிகளின் பலன்களை ஆய்ந்து பார்த்தல்.

5. கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கருத்துரை வழங்கும் பணியை மேற்கொள்ளுதல், ஆகியவை ஆகும்.

இக் கல்லூரி நான்கு வித 'டிப்ளமா'ப் பயிற்சிகளையும், பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது. பொதுவாக, பட்டதாரிகள்தான் 'டிப்ளமா' பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

"டிப்ளமா" பயிற்சிகளாவன : உயர்நிலை கூட்டுறவு டிப்ளமா ( Higher Diploma Course in Co-operation ), கூட்டுறவு வங்கித் தொழில் 'டிப்ளமா' (Diploma in Co-operative Banking), கூட்டுறவுத் தணிக்கை 'டிப்ளமா' ( Diploma Course in Co-operative Audit ), கூட்டுறவுத் தொழில் துறை 'டிப்ளமா' (Diploma Course in Industries Co-operative).

**உயர்நிலை கூட்டுறவு 'டிப்ளமா' பயிற்சி :**

36 வார காலம் கொண்ட இப் பயிற்சி, கூட்டுறவுத் துறை பற்றிய எல்லாச் செய்திகளையும் ஓரளவு அடிப்படைக் கருத்தாக அறிந்து கொள்வதற்குப் பயன்படும். இது, பெரும்பாலும் கூட்டுறவு இயக்கத்தில் புதிதாக நுழைவோருக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையில் புதிதாகப் பணியைத் துவக்கிடும் முதுநிலை ஆய்வாளர்கள் ( Senior Inspectors ), அவர்களைவிட உயர்ந்த பதவியிலுள்ள சார் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் மற்றும் நடுநிலை அலுவலர் வகையைச் சார்ந்த, மையக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நடுநிலை அலுவலர்கள் ஆகியோர் இந்தக் கல்லூரியின் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்தப் பயிற்சி, கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளையும் தழுவியதாக



உள்ளது. அவையாவன : (1) கூட்டுறவுத் துறையின் கொள்கைகள், வரலாறு மற்றும் திட்டமிடப்பட்ட வளர்ச்சி ; (2) கூட்டுறவுக் கடன் மற்றும் வங்கிப் பணி; (3) கடன் வழங்காத கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறை மற்றும் வேலை முறை; (4) கூட்டுறவுச் சட்டம் மற்றும் அதன் சார்பான இதர சட்டங்கள்; (5) கூட்டுறவுக் கணக்குகள்; (6) கூட்டுறவுத் தணிக்கை; (7) கூட்டுறவு மேலாண்மையின் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நிர்வாகம்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான் நிகோபார் தீவு, லட்சத் தீவுகளைச் சேர்ந்தவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்த 'டிப்ளமா' பயிற்சி அமைக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வங்கித் தொழில் 'டிப்ளமா' :**

இது 16 வார காலப் பயிற்சி கொண்டது. கூட்டுறவு வங்கிகளில் பணி புரிபவர்களுக்காகவும், கடன் வசூல் செயயும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்காகவும் இப்பயிற்சி அமைக்கப் பெற்றுள்ளது. பொதுவாக மைய, மாநில அரசுகளைச் சேர்ந்த கூட்டுறவு வங்கிகளின் நடுநிலை ஊழியர்கள்தான் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இந்தியாவின் தென் வட்டாரப் பகுதி, கிழக்கு வட்டாரப் பகுதி ஆகியவற்றிலுள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரிவோர் ஆகியோருக்கும் இந்தப் பட்டப் பயிற்சியை வழங்குவதில் இந்தக் கல்லூரிக்குப் பெரும் பங்கு உண்டு. பயிற்சியாளர் போதுமான அனுபவம் பெறுவதால் கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவு நடைமுறை, கூட்டுறவு வங்கித் தொழில், நடைமுறை வங்கித் தொழில் மற்றும் கூட்டுறவுக் கணக்கு ஆகியவை பற்றிய புதிய புதிய முறைகளும் மிக அவசியமான தகவல்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**கூட்டுறவுத் தணிக்கைத் துறை 'டிப்ளமா':**

கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அலுவலர் மற்றும் கூட்டுறவு நிறுவன அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் பயிற்சிகளில் இதுவும் ஒன்று. இது 12 வார காலப் பயிற்சியாகும். பெரும்பாலும் தென் மாநிலங்களின் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த தணிக்கைப் பிரிவு அலுவலர்களுக்கும், சில நேரங்களில் கூட்டுறவு நிறுவனங்களின் உட் தணிக்கைப் பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கும், இப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்குத் தணிக்கை முறையில் உள்ள நுட்பங்களைக் கற்றுத்தருவதுடன், நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், நிதி நிலை ஆய்வுகளை நடத்துதற்கும், நிதி நிர்வாகத் திறமை பெறுவதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிதிக் கணக்குகள், கணக்கீடுகள், தணிக்கை முறையின் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவையும் கற்பிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட மூன்று பயிற்சிகளிலும் கூட்டுறவுத் துறையில் வளர்ந்து வரும் நாடுகளிலிருந்தும் வளர்ச்சியில்லா நாடுகளிலிருந்தும் UNDP (United Nation Development Programme), ILO (International Labour Organisation), SCAAP (Special Commonwealth African Assistance Plane), TCS (Technical Co-operation Scheme of Columbu Plane) முதலிய திட்டங்களின் மூலமாக மத்திய அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தக் கல்லூரிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

**தொழில்முறை 'டிப்ளமா':**

நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் கூட்டுறவுத் துறையின் கீழே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்லாமல் மற்றும் பல துறைகளின் கீழே உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தொழில் மற்றும் வணிகத் துறை, காதி கிராமத் தொழில் வாரியம், கைத்தறித் துறை ஆகியவற்றில் ஏற்கெனவே பணிபுரியும் கூட்டுறவுத் தொடர்பான அலுவலர்களும், புதிதாகப் பணியைமேற்கொள்பவர்களும், இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இது 18 வார காலப் பயிற்சியாகும். பல்வேறு விதமான தொழில் கூட்டுறவுத் துறையில் பணிபுரிவதற்கும், நிர்வாகம் செய்வதற்

தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்ட மொத்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தனி அலுவலர்களுக்கு நடத்தப் பெற்ற நான்கு நாள் சிறப்புப் பயிற்சியின் நிறைவு விழாவில் ஐ. எல். ஓ. நிபுணர் திரு. ஜேகப்தாசன் சிறப்புரை ஆற்றினார்.








உயர் டிப்ளமா பயிற்சி துவக்க விழாவில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி முதல்வர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களையும் கூட்டுறவுத் துறையின் கூட்டுப் பதிவாளர் அவர்களையும் வரவேற்று உரையாற்றுகிறார்.

கும் போதுமான திறமையைப் பயிற்சியாளர்கள் பெறுகிறார்கள். தொழில் துறை வளர்ச்சி, மற்றும் கூட்டுறவுத் தொழில் துறை, கூட்டுறவுச் சட்டம் மற்றும் இதர சட்டங்கள் கூட்டுறவுக் கணக்கு முறை மற்றும் தணிக்கை முறை—கூட்டுறவுத் தொழில் நிர்வாகம் ஆகிய பாடங்கள் இந்தப் பயிற்சியில் கற்றுத் தரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நான்கு 'டிப்ளமா' பயிற்சிகளிலும் பொதுவான நிலை ஒன்று உள்ளது. பயிற்சி வகுப்பில், படிப்பு முறை ( Theoretical ), செயல் முறை ( Practical ) என இரு முறைகள் உள்ளன. நிறுவனத்தைப் பற்றிய போதிய அறிவைப் பெற்றவுடன், பயிற்சியாளர்கள், முதல் நிலைத் தகவலை அறிந்து கொள்வதற்காகக் களத்துக்கு அனுப்பப்படுகின்றனர். செயல் முறைப் பயிற்சிக்குச் செல்லும்போதே அலுவல் பயிற்சியும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உயர்நிலை டிப்ளமாப் பயிற்சியிலும் தொழில் துறை 'டிப்ளமா' பயிற்சியிலும் ஈடுபடும் பயிற்சியாளர்கள் அயல் மாநிலங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் பயில்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

செயல்முறைப் பயிற்சியின்போது, பயிற்சியாளர்களுக்கு வேலை ஏடு ( Job chart ) ஒன்று அளிக்கப்படுகிறது. செயல்முறைப் பயிற்சியின் இறுதியில், பயிற்சியாளர்கள், சம்பந்தப்பட்ட பயிற்சியைக் குறித்துக் கருத்துரைகள், விமரிசனங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். படிப்பு முறைப் பயிற்சிக் காலத்தில், சில குறிப்பிட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றின் கூட்டுறவு வளர்ச்சி குறித்து ஆய்வு நடத்துவதற்காகப் பயிற்சியாளர்கள் அவ்வப்போது அங்குச் சென்று வர வேண்டும். அவர்கள் வாரம் ஒரு முறை அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை சென்று வருகின்றனர். சென்னையைச் சுற்றிலும் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுப்பினர் அதிகரித்தல், கடன் வசூல் செய்தல், கணக்குகளைச் சரியாக வைத்திருத்தல், கூட்டுறவுச் சங்கங்களின் டெபாசிட் தொகைகளை அதிகரித்தல் ஆகிய இனங்களில், பயிற்சியாளர்கள் உதவி செய்து வருகின்றனர்.

புது டில்லியில் உள்ள தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழு, தமிழ்நாடு கூட்டுறவுத் துறை, தொழில் வணிகத் துறை, கூட்டுறவு வங்கிகள் ஆகிய பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பல்வகை அலுவலர்கள் இந்தக் கல்லூரியில் விரிவுரையாளர்களாகப் பணி புரிகிறார்கள். வெளியூர்களிலிருந்தும் சில பிரமுகர்கள் அவ்வப்போது வரவழைக்கப்படுகிறார்கள். அரசுத் துறைகள், பல்வேறு கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள், வங்கிகள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றைச் சார்ந்த அனுபவமும் திறமையும் பெற்ற பெருமக்கள், சில நேரங்களில் வகுப்பறைச் சொற்பொழிவுக்கு வரவழைக்கப்படுகிறார்கள்.

குழு விவாதம், கூட்டுக் கல்வி, ஆய்வு விவாதம், சொற்போர், கருத்தரங்குகள் ஆகிய பல்வேறு விதமான பயிற்சி நுணுக்கங்களைப் பயிற்சியாளர்கள் அமைக்க வேண்டும். பருவ காலத் தேர்வும் ( Terminal Examination ) இறுதித் தேர்வும் நடத்தப்படுகின்றன. எழுத்துத் தேர்வில் பெறுகின்ற மார்க்குகள், செயல்முறைத் தேர்வுகளில் பெறுகின்ற மார்க்குகள், செயல்முறைத் தேர்வுகளில் அவர்கள்

காட்டுகின்ற திறமை, தாங்களாகவே பாடம் தயாரித்துக் கொள்ளும் ஆற்றல் ஆகியவற்றைக் கொண்டு மதிப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி பெறுபவர்களுக்கு, கட்டணம் இன்றிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தங்குவதற்கு விடுதியும் (Hostel) இலவசமாகத் தரப்படுகிறது. 36 வார காலப் பயிற்சியில், பயிற்சியாளர்கள் 8 வாரம் செயல் முறைப் பயிற்சிக்கு வெளியூர்களுக்குச் செல்ல நேரிடுகிறது. இந்த 8 வார செயல் முறைப் பயிற்சியில் 3 வாரம் கூட்டுறவுத் துறையில் முன்னேற்றம் கண்டுள்ள மராட்டியம், குஜராத், மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குச் செயல் முறைப் பயிற்சி பெறுவதற்கு அனுப்பப்படுகிறார்கள். மற்ற 5 வாரங்கள் தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பணியைப் பற்றி நேரில் கண்டறிய அனுப்பப்படுகிறார்கள். அதற்கு ஆகும் செலவையும் பயிற்சிக் கல்லூரியே தருகிறது. ஏறக்குறைய ஒரு பயிற்சியாளருக்கு மொத்தம் ரூ. 4 ஆயிரத்திலிருந்து ரூ. 6 ஆயிரம் வரை கல்லூரியில் செலவிடப்படுகிறது. மற்ற மாநிலங்களில் இப் பயிற்சி கட்டாயம் இல்லை. தமிழ்நாட்டில் இது கட்டாயமாக வைக்கப்பட்டிருக்கிறது. பயிற்சியாளர்கள், பயிற்சி பெற்ற பின்பு, கூட்டுறவுத் துறையில் பணியாற்றாமல் வேறு துறைக்குச் சென்று விட்டால், அவருக்குச் செலவு செய்யப்பட்ட ரூ. 6 ஆயிரத்தை, இக்கல்லூரிக்கு அவர் திருப்பித் தர வேண்டும்.

பல்வேறு குறுகிய காலப் பயிற்சியும் இக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது.

கருத்துரை சொல்லும் நிறுவனமாகவும் இந்தக் கல்லூரி பயன்பட்டு வருகிறது. சில கூட்டுறவு நிறுவனங்களின் பண வரவு செலவைக் கட்டுப்படுத்துவதில் பிரச்சினை இருக்கும். அந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பது இக்கல்லூரியில் சொல்லித் தரப்படுகிறது. இது போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கப் பயிற்சி வேண்டும் எனக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் கோரும்போது இத்தகைய சிறப்புப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையைச் சார்ந்த கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் கால்நடை உதவி அறுவை மருத்துவர்கள் கூட்டுறவு என்றால் என்னவென்றே தெரிந்திருக்க முடியாது. அது குறித்து அவர்களுக்குக் கற்றுத் தருவதற்காக இரண்டு வாரப் பயிற்சி நடத்தப்படுகிறது. சில நேரங்களில் அவர்களது இடத்துக்குக் கல்லூரி ஆசிரியர்கள் சென்று, அவர்களது பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கேற்ற வழி வகைகளைச் சொல்லி வருகின்றனர்.

இவ்வாண்டு, பல்கலைக் கழகங்களில் கூட்டுறவைப் பாடமாக நடத்துகின்ற ஆசிரியர்களுக்கும் இக்கல்லூரியில் ஒரு வார குறுகிய காலப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகளின் வளர்ச்சிக்காகவும் அவர்களுக்கு ஒரு வாரப் பயிற்சி ஒன்றும் நடத்தப்படுகிறது.

இக்கல்லூரி வியாபார சம்பந்தமான சில யோசனைகளையும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தெரிவித்து வருகிறது. சான்றாக, சென்னை செரியன் நகரில் உள்ள குடிசைப் பகுதியில் சில பெண் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, 'பத்திக் பிரிண்டிங்' செய்து மேல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யத் தக்க ஆடைகளைத் தயாரித்து வருகின்றனர். அவர்களுக்குத் தக்க வகையில் கருத்துரை வழங்கி, அவர்களது தயாரிப்புகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்கு நல்ல இலாபம் கிடைப்பதற்கு இந்தப் பயிற்சிக் கல்லூரி பணிபுரிந்து வருகிறது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பை உணர்த்துவதற்காக (Image Building of consumer Co-operation ) ஒரு திட்டத்தை உருவாக்கி நடத்தி வருகிறது. குடிசைப் பகுதிக்குச் சென்று அங்குள்ள தாய்மார்களிடம் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்தின் பொருள்களைப் பயன்படுத்தச் சொல்வதுதான் இந்தத் திட்டம். இதற்குக் கல்லூரியில் பயிலும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவியர் பயன்படுத்தப்படுகிறார்கள். சென்னை நகரில், எத்திராஜ் கல்லூரி, ராணி மேரிக் கல்லூரி, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, பெண்கள் கிறித்துவக் கல்லூரி, தாம்பரம் கிறித்துவக் கல்லூரி, ஸ்டெல்லா மேரி கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சார்ந்த மாணவியர் இப்பணியில் சென்ற ஆண்டு ஈடுபடுத்தப்பட்டனர். அப்பணியைச் செய்ய அவர்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கத் தனிப் பயிற்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவின் வேறு மாநிலங்களிலும் இத் திட்டத்திற்கு வரவேற்பு இருக்கிறது. டெல்லி, ஐதராபாத் ஆகிய நகரங்கள் இது குறித்து இந்தக் கல்லூரியை விசாரித்து எழுதியுள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் ஆண்டுக்கு இரண்டு கருத்தரங்குகளையும் இந்தக் கல்லூரி உருவாக்கி நடத்தி வருகிறது.

6,000 புத்தகங்கள் கொண்ட நூலகம் ஒன்றும் இக்கல்லூரியில் உள்ளது. கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான பல்வேறு வகை இதழ்கள் (Magazines) வரவழைக்கப்படுகின்றன.

தற்சமயம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சேத்துப்பட்டுப் பாலத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லூரி, விரைவில் அண்ணா நகரில் புதிதாக ஒரு கட்டடத்தை அமைத்துக் கொள்ள இருக்கிறது. ஏறக்குறைய 4 ஏக்கர் (76 மனை) பரப்பளவுள்ள இடம், இதற்கென 6.5 இலட்ச ரூபாய் விலையில் வாங்கப்பட்டுள்ளது. இதில் வகுப்பறைகள், அலுவலகம், மாணவர் விடுதி, நூலகம், ஆசிரியர் வசிப்பிடம் ஆகிய அனைத்தும் அமைக்கப்பட உள்ளன. இவை உருவாவதற்கு தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் 6.5 இலட்சம் ரூபாயும், இந்திய அரசு 10 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு அரசு 10 இலட்சம் ரூபாயும், தமிழ்நாட்டிலுள்ள ஏனைய கூட்டுறவு நிறுவனங்கள் சுமார் 10 இலட்சம் ரூபாயும் வழங்கியுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகப் பல காலம் பணிபுரிந்த காலஞ் சென்ற டாக்டர் நடேசன் அவர்களின் பெயரால் 'டாக்டர் நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி' என இது வழங்கப்பட இருக்கிறது.

இக்கல்லூரி தமிழ்நாட்டுக் கூட்டுறவுத் துறைக்கு நாடி நரம்பாக விளங்குகிறது என்பது தமிழ்நாட்டுக்கே பெருமை தரும் செய்தியாகும்!

—எஸ். சண்முகசுந்தரம், பி.லிட்.





# அரசினர் அருங்காட்சியகம் ஆற்றிடும் பணிகள்

திரு என். ஹரிநாராயணா
உதவி இயக்குநர், அரசு அருங்காட்சியகம், சென்னை.

"கல்லூரியில் உள்ள அருங்காட்சியகம் தினமும் (ஞாயிறு நீங்கலாக) காலையில் 6 மணி முதல் 7 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரையும் வருகையாளர்களுக்கெல்லாம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.''

1851 ஏப்ரல் 29-ல் வெளியிடப்பட்ட சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் அரசிதழில் அமைந்திருந்த அறிக்கையின் தமிழாக்கம் இது. இந்நாட்டின் மிகப் பெரிய மாநில அரசு அருங்காட்சியகமாகவும், கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்திற்கு அடுத்த பழமை மிக்க அருங்காட்சியகமாகவும் விளங்கும் சென்னை அரசு அருங்காட்சியகத்தை ஆரம்பித்ததைத்தான் மேலே குறிப்பிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. மிகப் பெரும் அருங்காட்சியகங்களாகிய இந்திய அருங்காட்சியகம், பிரிட்டிஷ் அருங்காட்சியகங்களைப் போன்று உயிரியல் பொருள்களைக் கொண்டு ஒருங்கு வைத்து ஒப்பிடப்படும் சிறப்பு இதற்கு உண்டு. இவ்வருங்காட்சியகம் அறிஞர் குழுவாய் செயலாற்றிய சென்னை இலக்கியக் கழகத்தின (Madras Literary Society) ரால் துவக்கப்பட்டது. புவியியல் பொருள்களின் சேகரிப்புகளுடன் துவங்கியது.

தற்போது கல்வி இயக்குநர்கள் இருக்கும் இடத்தில் இருந்த பழைய கல்லூரியின் முதல் மாடியில், சென்னை அருங்காட்சியகம், முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 1854ல் பொது அறைகள் என்றும் கூடங்கள் என்றும் அழைக்கப்பட்ட ''பாந்தியன்'' கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. பாந்தியன், கிளைவ், சர் ஆர்தர் வெல்லஸ்லி, லார்ட் காரன் வாலிஸ் போன்ற கிழக்கிந்தியப் பெருந்தகைக் காரர்களின் ஆடல் பாடல், கேளிக்கை விருந்துகளுக்கு உரிய இடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்நாளில் பெரும் மனிதர்களாய் விளங்கிய சீமான்களின்—சீமாட்டியரின் காலடியோசைகளை எதிரொலித்த பாந்தியன், பொது மக்களில் பூத்திருக்கும் ஆர்வம் மிக்க அறிஞர்களின் காலடியோசைகளை இன்று எதிரொலிக்கிறது. பாந்தியனின் எஞ்சியிருக்கும் பகுதிகள் தற்போது அருங்காட்சியகத்தின் மற்றக் கட்டடங்களால் சூழப்பட்டிருக்கின்றன.

தலைமை அறுவை மருத்துவர் எட்வர்ட் கிரீன் பால்பர், அருங்காட்சியகம் அமைத்திடும் பொறுப்பை ஏற்ருர். அப்பணியில் குன்ருத ஊக்கத்தோடும், பணி மனப்பாங்கோடும் ஈடுபட்டார். இயன்ற வரைக்கும் மிகப் பெரிதாக அருங்காட்சியகத்தை அமைத்திட வேண்டும் என்கின்ற ஆர்வத்தில் சேமிப்பின் தன்மைகளுக்கு எல்லைகள் வகுக்காமல் அருங்காட்சியகப் பொருட்களைச் சேகரித்தார்.

1859ல் பால்பர் அருங்காட்சியகப் பணியை விட்டுச் செல்கையில் புதிய அருங்காட்சியகத்தை உறுதியான தளத்திலே அமைத்திருக்கிறேம் என்ற மன நிறைவுடனே சென்ருர். சென்னை இலக்கியக்கழகத்தில் புவி அமைப்பியல் பொருட்கள் (சுமார் 1,100) அருங்காட்சியகத்தின் புவியியல்





சென்னை அருங்காட்சியகத்தின் முதல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய அறுவை மருத்துவர் எட்வர்ட் கிரீன் பால்பர்.

பொருட்களாக இருந்தன. அருங்காட்சியகத்தின் முதல் தலைவராக இருந்த பால்பர் உழைத்த கடும் உழைப்பு,விரைவில் பெரும் பயனை அளித்தது. அருங்காட்சியகம் திறக்கப்பட்டவுடன் மாதத்திற்கு 1,000 எனப் பொருட்கள் அருங்காட்சியகத்திற்காகப் பெறப்பட்டன. அவரும் அவரைத் தொடர்ந்து பதவி வகித்த மூவரும் பொருட்களைச் சேமிக்கும் கொள்கையை மிக விரிவாகச் செயல்படுத்துவதில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர். பால்பர், எவ்வித நிபந்தனையும் இன்றி எல்லாப் பொருட்களையும் பெறுவது குறித்துத் தெளிந்த உறுதியான கொள்கையைக் கொண்டிருந்தார். ''இவ்வருங்காட்சியகத்தின் செயல் எல்லையை மிகப் பெரிதாக அமைப்பதற்குரிய மற்ருெரு காரணம், இந்த மிகப் பெரிய நாட்டை, எடுத்துக் காட்டி உணர்த்த வேண்டுமெனின் அதற்கேற்றவாறு பெரும் அளவில் அமைப்பதே முறை என்ற வழக்கே. குறுகிய வரையறைகள் உடைய அருங்காட்சியகம் இம்மாநிலங்களை எடுத்துக் கூறுவதற்குப் பயன்படாததோடு, அரசு ஆதரிப்பதற்கும் தகுதியற்றதாகிவிடும்'' என்பது அவரது சிந்தையைக் காட்டும் வரியோட்டங்களாகும். பால்பர் அமைத்த பெரு நோக்கு, டாக்டர் எட்கர் தர்ஸ்டன் வரும் வரை பின்பற்றப்பட்டு வந்தது. 1885 முதல் 1908 வரை. அருங்காட்சியகக் கண்காணிப்பாளராக இருந்த 'நான் எனது முழுக் கவனத்தையும் தென்னிந்தியாவின் உயிரியல், கலைகள், பண்பாட்டுக் கோலங்கள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றிலேயே செலுத்துவது எனத் தீர்மானித்துள்ளேன்'' என்று கூறி அருங்காட்சியகத்தின் சேகரிப்பு எல்லையைக் குறைத்து விட்டார்.

தர்ஸ்டனின் சேகரிப்பு எல்லையைக் குறைத்த செயல், ஆய்வு முறையை ஆழமாக்கியது. அவருடைய காலத்தில், எல்லாத் துறைகளிலும் வெளியிடப்பட்ட சிறந்த தரம் மிக்க பல வெளியீடுகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. அருங்காட்சியகத்தின் முதல் வெளியீடு 1853ல் வெளி வந்தது. அருங்காட்சியகப் பொருட்களைப் பற்றி பட்டியல்களும், அறிக்கைகளும் தாங்கிய இருபது வெளியீடுகள் பால்பர் பதவியை விட்டுச் செல்கையில் இருந்தன. அவரைத்தொடர்ந்து பதவியேற்றவர்களும் தங்கள் பங்காக நூல்களை வெளியிட்டனர்.

டாக்டர் பிடி 1872 முதல் 1884 வரை கண்காணிப்பாளராக இருந்தார். நல்ல புகழ் பெற்ற தாவரவியல் அறிஞராகிய அவரது ஆய்வெல்லையை விரிவுபடுத்திக் கொண்டு அருங்காட்சியகத்தில் உள்ள நாணயங்களைப் பற்றி இரு நூல்களை எழுதினர். டாக்டர் தர்ஸ்டன், இன்று வரை சிறந்த ஆதார நூலாக விளங்கும் ''தென்னிந்திய சாதிகளும் பழங்குடிகளும்'' என்னும் நூலை 1893 முதல் அருங்காட்சியக வெளியீடுகளாக ஏழு பாகங்களில் வெளியிட்டார். நாணயவியல் முதல் தேசியக் கைவினைகள், தாதுப் பொருட்கள், மீன் வகைகள் வரை பல்வேறு துறைகளில் பல நூல்களை அவர் எழுதினர். அருங்காட்சியக வெளியீடும் பெரும் வளர்ச்சியில் திகழ்ந்த காலத்தில் தமது 1938—40 ஆண்டு நிர்வாக அறிக்கையில் ''இயற்கை'' என்னும் அறிவியல் இதழில் தொல் பொருளியல் கூடங்களுக்கு விளக்கங்கள்' என்னும் நூலைப் பற்றி இந்த விளக்கங்களால் கல்வி முறையில் வேகம் மிக்க முன்னேர்க்குக் கொள்கையை வைத்துள்ளதைப் போன்று இந்தியா முழுமையிலும் உள்ள அருங்காட்சியகங்கள், வேறு இதை விட வலிவான விளக்கத்தைத் தர இயலாது'' என்று தர்ஸ்டனுல் கூறப்பட்டுள்ளதை டாக்டர் எப். ஜி. கிரேவ்லி எடுத்துக் காட்டியுள்ளார். அருங்காட்சியகத்தின் பல வெளியீடுகள் பல முறை மறுபதிப்புகள் போட வேண்டிய அளவிற்கு, அவற்றிற்குரிய துறைகளின் தரம் மிக்க நூல்களாக இன்றும் திகழ்கின்றன.

அருங்காட்சியகத்தின் இடப்பெருக்கம் மெதுவாக, ஆனுல் நன்கு தெரியும் வகையில் வளர்ந்திருக்கிறது. 1864லேயே பாந்தியன் கட்டடத்திற்குப் பல இணைப்புக் கட்டடங்கள் இருந்தன. தற்போது மானிடவியல் கூடங்கள் உள்ள பகுதி, நாடக அரங்கு, கன்னிமாரா நூலகத்



தென்னிந்தியாவில் கற்சிலைகள் வளர்ந்த வகையை எடுத்துக் காட்டும் பகுதி.

தின் ஒப்பு நோக்குக் கூடம் உள்ள பகுதி ஆகியவற்றைக் கட்டுவதற்கு 1890ல் அனுமதி அளிக்கப்பட்டு 1896ல் அவை கட்டி முடிக்கப்பட்டன. தொல் பொருள் வேதியல் ஆய்வகத்திற்குத் தனியாக ஒரு கட்டடம் 1934ல் கட்டப்பட்டது. பழம் பொருட்களை அறிவியல் முறையில் காப்பதற்கும், ஆய்வதற்கும் இந்நாட்டில் கட்டப்பட்ட முதல் அருங்காட்சியக ஆய்வகம் என்ற பெருமை இதற்கு உண்டு. நுழைவாயிற் கூடத்தையும், காப்பாட்சியர் பணியகங்களையும் கொண்ட புதிய தொல் பொருளியல் இணைப்புக் கூடம் 1939ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் நாள் திறக்கப்பட்டது. டாக்டர் எ. ஐயப்பன், கண்காணிப்பாளராக இருந்தபோது 1951ல் நிகழ்ந்த அருங்காட்சியக நூற்றுண்டு விழாவின்போது, கவர்ச்சி மிக்க கட்டடமாகிய தேசியக் கலைக் கூடம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் முன்பு விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனம் இருந்தது. விலங்கியல் கூடங்கள் விரிவு படுத்தப்பட்டன. வேதியல் காப்பு ஆய்வகத்திற்கு இரு மாடிக் கட்டடம் ஒன்று சேர்க்கப்பட்டது. கடந்த பதினைந்து ஆண்டுகளில் சிறுவர் கூடம், அஞ்சல் தலைக் கூடம், நாணயவியல் கூடம் எனப் புதிய கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விலங்கியல் காப்பாட்சியர் பணிக் கூடம், இறுதியாகச் சேர்க்கப்பட்டுள்ள புதுக் கட்டடமாகத் திகழ்கிறது.

## அருங்காட்சியகச் சேகரிப்பு

சேகரிப்புகளின் அளவும் தன்மையும் வளம் பெற்றுக் கொண்டே வருகிறது. 1873—1874ல் ரூபாய் 1,500க்கு வாங்கிய லெப்டினென்ட் கர்னல் பீடாம் ஹெர் பேரியம்' அருங்காட்சியக தாவரவியல் சேமிப்பை வளப்படுத்தியது. அமராவதி சலவைக் கல் சிற்பங்கள் டாக்டர் பிடியின் காலத்தில் பெறப்பட்டன. அவை ஸ்தூபாவின் வெளிச் சுற்று வேலையில் அமைக்கப்பட்டிருந்தவை.

அந்தச் சிற்பங்களை, உண்மையான ஸ்தூப அமைப்பை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அருங்காட்சியகத்தில் அமைத்திருக்கின்றனர். விலங்கியல்பகுதியின் முதல் கூடத்தில் வருகையாளர்களை பிரமிக்க வைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் திமிங்கிலத்தின் எலும்புக் கூடு, 1864 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மங்களூர் கடற்கரையில் ஒதுங்கிய இறந்த திமிங்கிலத்தினுடையது ஆகும்.

அருங்காட்சியகத்தின் முந்து வரலாற்றுக் காலப் பொருட்கள் (ப்ரி ஹிஸ்டாரிக்) மிக முக்கியமானவை. நீலகிரியின் பழைய புதை குழிகளிலிருந்து பிரீக்ஸ் அவர்களால் சேகரிக்கப்பட்ட பானைகள் முதலியனவற்றைக் கொண்டு 1878—ஆம் ஆண்டு முதல், முந்து வரலாற்றுக் காலப் பொருட்களின் சேகரிப்பு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 1904ஆம் ஆண்டு முதல், இந்திய முந்து வரலாற்று ஆய்வின் முன்னோடியாக விளங்கும் இராபர்ட் புருஸ்டிட்டிடமிருந்து, அவரது விலை மதிப்பு மிக்க முந்து வரலாற்றுப் பொருட்கள் வாங்கப்பட்டன. அதே ஆண்டில் தேக்கு, ரோஸ் உட் ஆகிய மரங்களின் இரு குறுக்கு வெட்டில் அமைந்த அடி மரத் துண்டுகள் வாங்கப்பட்டன. தேக்கு 500 ஆண்டுகள் பழமையும் ரோஸ் உட் இருநூறு ஆண்டுப் பழமையும் உடையவை. தேக்கு மரத்தின் ஆண்டு வளையங்களைக் கணக்கிட்டு, குறிப்பிட்ட ஆண்டு வளையங்களுடன் வரலாற்று நிகழ்ச்சிகளும் குறிக்கப்பட்டுள்ளன. இது காண்போரின் ஆர்வத்தைப் பெருக்குகிறது.

அருங்காட்சியகத்தில் உள்ள செப்புச் சிலை பகுதி.





தொடர்ந்து மிக அழகிய திருமேனிகள் புதையல்களாகக் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. காசுகளும், புதையல்களாகக் கிடைத்துள்ளன. உதாரணமாக ரோமானிய, தங்க, வெள்ளி நாணயங்கள், 1946ல் தவளேஸ்வரத்தில் கண்டெடுக்கப்பட்ட ராஜராஜ சோழன், முதலாம் குலோத்துங்கச் சோழன் ஆகியோர் கால தங்க நாணயங்கள், கி.பி. இரண்டு, மூன்று நூற்றுண்டுகளைச் சேர்ந்த ஆண்டுப் பட்டியில் கண்டெடுத்த ஈய நாணயங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கன. புதிய இணைப்பு தொல்பொருளியல் கூடங்கள் 1937ஆம் ஆண்டு திறக்கப்பட்டன. அப்போது பல அழகிய வட இந்தியச் சிற்பங்கள் பெறப்பட்டு, சிற்பக் கூடத்தில் அமைக்கப்பட்டன. 1951ல் தேசியக் கலைக்கூடம் அமைக்கப்பட்டபின் தற்காலத்திய இந்திய ஓவியங்களும், சிற்பங்களும், அவற்றிற்குரிய இடத்தில், அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டு உள்ளன.



பறவைகளுக்கென்றும் ஒரு தனிப்பகுதி உள்ளது.

## அருங்காட்சியகத்தில் ஒரு பயணம்

தனது சிறியதோற்றக் காலத்திலிருந்து பல்வேறு பொருள்களைக் கொண்ட பல கட்டிடங்களை உடையதாக பெருமளவிற்கு அருங்காட்சியகம் வளர்ந்து காட்சியளித்தது. அருங்காட்சியகத்தை ஒரு சுற்றுப் பார்வையிட்டு வருவோமேயானால் அதன் சேகரிப்பின் செறிவையும், நுட்பத்தையும் அங்கேயுள்ள பொருள்கள் உறுதி செய்வதை அறியலாம். அருங்காட்சியக நுழைவாயில் கவர்ச்சி மிக்க கட்டட அமைப்போடு விளங்குகிறது. அதில் நுழைந்து சென்றால் தென்னிந்திய சிற்பக் கலையின் வளர்ச்சியை கால முறையாக, விளக்குகின்ற வகையில் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதை அடுத்து கோயில் கலை, கல்வெட்டியல், பௌத்த, சமணக் கலைகள் ஆகியவை கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன. அமராவதிச் சிற்பங்கள் அவைகளில் சிறந்து விளங்குகின்றன.

மனித இன வேறுபாடுகளையும், பண்பாடுகளையும் விளக்கும் பகுதி.



விலங்கியல் கூடங்கள் பெரும் திமிங்கிலத்தின் எலும்புக் கூடு, யானை, குதிரை ஆகியவற்றின் எலும்புக் கூடுகள் ஆகியவற்றோடு துவங்குகின்றன. பறவைகள் கூடம், பறவைகளை ஆய்வோருக்கு ஒரு சொர்க்கமாகும். முதல் மாடியில் பொருளாதார, தாவரவியல், வகைப்படுத்திய தாவரவியல் என இரு பிரிவுகளைக் கொண்ட தாவர இயல் பகுதி உள்ளது. கீழே திமிங்கில எலும்புக்கூடு இருக்கும் கூடத்தின் வடக்குப் பகுதியில், புதிய முறையில் அமைக்கப்பட்ட புவி அமைப்பியல் கூடமும் ஓவியக் கூடமும் உள்ளன. புவிஅமைப்பியல் கூடம் கல், மண், ஆகியவற்றின் கதைகளையும் நாகரிகத்தில் அவற்றிற்கு உள்ள் பங்கினையும் எடுத்துக் கூறுகின்றன.

மூன்று மாடிகளைக் கொண்ட படியக் கூடம் 1963ல் திறக்கப்பட்டது. திருவெண்காட்டிலிருந்து பெற்ற அழகிய மாதொருபாகர் சிலை, நாம் அடியெடுத்து வைத்ததும் அன்பாக அழைப்பதைப் பார்க்கலாம். அங்குள்ள திருமேனிகள் தென்னிந்தியக் கலைகளின் முத்தாய்ப்பாகச் சுடர்

விட்டுப் பிரகாசிக்கின்றன. கலை இரசிகர்களை ஆனந்தப் பெரு வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. சைவம், வைணவம், சாக்கியம், சமணம் ஆகிய சமயங்களின் திரு மேனிகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

படிமக் கூடத்திற்கு முன்னதாக இருக்கும் முகப்புப் கூடத்தில் முந்து வரலாற்றுப் பொருள்கள் வைக்கப்படடுள்ளன. ஆதிச்சநல்லூரின் இரும்புப் பொருள்கள் நம்மை அவற்றின் அழகிய வடிவத்தாலும் வேலைத் திறத்தாலும் வியப்பிலாழ்த்துகின்றன. பண்பாட்டுக் கூடத்தில், காட்சிப் பெட்டிகளில் பழங்குடிகளின் வாழ்க்கை சித்திரிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுத்த பழங்குடி மக்களின் பண்பாட்டுப் பொருள்களைக் கொண்டு, சூழ்நிலைக்கும், வாழ்க்கைக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்படும் வினைகளைக் காட்டும் கருவிகள், அணிமணிகள், ஆயுதங்கள் ஆகியவற்றையும் காட்சியில் காணலாம். முதல் மாடியில் மரச் சிற்பக் கூடம், உலோகக் கலைக் கூடம், இன்னிசைக் கருவிக் கூடம், எழுது கருவிகள், நெருப்புக் கடைதல் போன்றவற்றைக் காட்டும் பல கூடங்கள் உள்ளன. கீழ்ப் பகுதியில் உள்ள ஆயுதக் கூடத்தில் உள்ள ஆயுதங்களில் சில, இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர் காலத்தில் போர்களில் பயன்படுத்தப் பட்ட சிறப்பு உடையவை.

தேசியக் கலைக் கூடத்தில், இந்தியக் கலையின் சிறப்பு பண்டுமுதல் இன்று வரை கால முறையிலும், நுண்கலை முதல் அழகுக் கலை வரை, திறத்தாலும் வேறுபட்ட பல வகைச் சிறப்பை அருங்காட்சியகத்தில் உள்ள பொருள்கள் மூலம் உணர்த்துகின்ற தன்மையில் அமைக்கப்பட்டுள்ளன. புகழ் பெற்ற திருவாலங்காடு நடராசர், இராமர், சீதை, இலக்குவன், அனுமான் ஆகிய திருமேனிகள், கூடத்தின் பக்கங்களில் சிறப்புற வைக்கப்பட்டுள்ளன. கூடத்தின் உயர்ந்த விதானம், இடத்தின் அமைதிச் சூழல், இதமான ஒளி ஆகியவை ஒரு சிறந்த உன்னதமான சூழலைத் தோற்றுவிக்கின்றன. இந்த இனிய சூழலிலே அமர்ந்து அழகிய திருமேனிகளைக் கண்டு களிமோனக் காட்சியிலே, கழி பேருவகைப் பொய்கையிலே மூழ்கி, முழுதுமாய்க் கரையலாம். தஞ்சை ஓவியங்களும், சின்னஞ் சிறு சிறப்போவியங்கள் இங்கே இருக்கின்றன. ஜைமினி ராய் போன்ற நவீன காலத்து ஓவியர்களின் கை வண்ணங்களும், வர்ண ஜாலங்களும், பல்வேறு பாணி



பொருளாதார அடிப்படையான உற்பத்திப் பொருள்களை விளக்கும் பகுதி.

களைப் பிரதிபலிக்கின்ற வகையில் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

## அருங்காட்சியகம் ஆற்றும் பணிகள்

சென்னை அருங்காட்சியகத்தின் கூடங்களை ஒரு சுற்றுப் பார்வையிட்டு வருவதென்பது உண்மையில் தென்னிந்தியாவின் கலை, பண்பாடு, உயிரியல் வாழ்க்கை ஆகியவற்றை உணர்ந்து கொள்வதென்பதாகும். ஒரு சிறிய விளக்க நூல், விற்பனைக் கூடத்தில் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. இது முக்கியமான காட்சிப் பொருள்களைப் பற்றித் தெரிவிக்கும். சென்னை அரசு அருங்காட்சியகத்தின் ஆங்கிலக் கையேடு, அருங்காட்சியகத்தின் வரலாற்றைப் பற்றியும், அதன் சேகரிப்புக்களைப் பற்றியும் விளக்கமாக உரைக்கும். வருகையாளர்கள் விளக்குநர்களிடமிருந்து விளக்கங்களைப் பெறலாம். மாதந்தோறும் படக் காட்சிகளும், பொது மக்கள் ஆர்வத்திற்கு உரிய உரைகளும் நடத்தப்பெறுகின்றன. சிறப்புக் கண்காட்சிகளும் அமைக்கப்படுகின்றன. இவையும் மற்றப் பணிகளும் பொது மக்களின் உணர்வையும், ஆர்வத்தையும் அருங்காட்சியகம் ஈர்க்கச் செயல்படுகின்றன.

ஆறு மாதங்களில் அருங்காட்சியகம் ஆற்றிய பணிகளையும் ஆறு மாதங்களுக்கு ஆற்றப்போகும் பணிகளையும் தெரிவிக்கும் அரையாண்டு அறிக்கையும் அருங்காட்சியகத்தால் வெளியிடப்படுகிறது. ஆர்வமுள்ள எவருக்கும் இது அனுப்பப்படும். இவ்விதமாக அரையாண்டு அறிக்கை வெளியிட்ட இந் நாட்டில் முதல் அருங்காட்சியகமாக, நமது அருங்காட்சியகம் விளங்குகிறது. அதே போன்று தனக்கென ஒரு தனி அச்சுக் கூடத்தைத் நிறுவி மற்ற அருங்காட்சியகங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கிறது.

## அருங்காட்சியகத்தின் தொழில் நுட்பச் சேவைகள்

அருங்காட்சியகம் தனது பட்டறிவுச் சேவையைத் தேவைப்படும் நேரங்களில் வழங்கியிருக்கிறது. 1949ல் கல்வித் துறை இயக்ககத்தின் ஒத்துழைப்போடு கோடை விடுமுறையில் அருங்காட்சியகத் தொழில் நுட்பப் பயிற்சி தரப்பட்டது. பள்ளிகளில் சிறிய அருங்காட்சியகங்களை அமைக்க ஆசிரியர்களைத் தகுதி உள்ளவர்களாக ஆக்குவதற்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. விலங்கியல் துறை இம்மாநிலத்திலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் வரும் கல்லூரி ஆய்வகப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டு கோடையிலும் போலி உயிரினம் ஆக்கும் கலையைக் கற்பித்துப் பயிற்சி அளிக்கிறது. வேதியல் பாதுகாப்புத் துறையால் அருங்காட்சியகப் பொருள்களைப் பாதுகாக்க நடத்தப்படும் ஒரு மாதப் பயிற்சி வகுப்பு 1975-ஆம் ஆண்டு





வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் அடங்கிய பகுதி.

துவக்கப்பட்டுள்ளது. தென் மாநில தொல் பொருளாய்வுத் துறைகளிலிருந்தும், அருங்காட்சியகங்களிலிருந்தும் பலர் இப் பயிற்சியைப் பெற்றுள்ளனர். பட்டறிவு ஆலோசனைகள் இவ் வருங்காட்சியக விற்பன்னர்களிடமிருந்து எப்போதும் பெறப்பட்டு வந்திருக்கிறது. சித்தன்னவாசல் ஓவியங்களை ஆய்ந்தறியவும், பாதுகாக்கவும் 1935ல் இவ் வருங்காட்சியகம்வேதியல் காப்பு, காப்பாட்சியரின் சேவை கோரிப் பெறப்பட்டுள்ளது. இது ஓவிய நுட்பங்களைப் பற்றி '‘இயற்கை'' தொழில் நுட்ப ஆய்வுகள்'' போன்ற தரமும் தகுதிப் பெருமையும் மிக்க நூல்களுக்குக் கட்டுரைகள் வழங்க வைத்தது. சமீப ஆண்டுகளில் வேதியல் காப்புக் காப்பாட்சியரின் சேவையை அருங்காட்சியகத்திற்கு வெளியே பல இடங்களில் பயன்படுத்திக் கொண்டனர். திருவரங்கம் கோவில் வேணுகோபால் சன்னதியில் உள்ள ஓவியங்கள் சுத்தம் செய்யப்பட்டன. திருப்பதி தேவஸ்தானத்தின் அன்னமாச்சாரியாரின் செப்புப் பட்டயங்களுக்குக் காப்புப் பணிகள் செய்யப்பட்டன. மானிடவியல் காப்பாட்சியர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் மானிடவியல் டிப்ளமோ வகுப்புகளோடு தொடர்பு உடையவர்களாக இருந்து வருகின்றனர். அவர்கள் அந்தப் பயிற்சிக்குப் பல்கலைக் கழகத்தின் பகுதி நேரப் பேராசிரியர்களாகவும் பணியாற்றியுள்ளனர்.

அருங்காட்சியகத்தின் தொல் பொருளியல் துறையினரால் சுற்றுலாத் துறையின் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு, தொடர்ச்சியாகத் தென்னிந்தியக் கலைகளைப் பற்றி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சென்னையின் புகழ் மிக்க நிறுவனங்கள் பலவற்றிற்கும் தோற்றக் காலாக இருந்த பெருமை அருங்காட்சியகத்திற்கு உண்டு. அருங்காட்சியகத்தை அமைத்ததும், சர்ஜன் பால்பர் (முதல் இயக்குநர்) விலங்குகள் தோட்டம் அமைக்கும்எண்ணத்தைக் கொண்டிருந்தார். அவரது எண்ணம் பெரும் வரவேற்பைப் பெற்றது. 1856ல் அவை மக்கள் பூங்காவிற்கு மாற்றப்பட்டுச் சென்னை நகராண்மைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பால்பருக்குப் பின் பதவியேற்ற கேப்டன் ஜேசி மிட்செல் பொது நூலகத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தார். '‘நியாயமாக ஆண்டுதோறும் செலவழிக்கப்படும் சில நூறு ரூபாய்கள் நாளடைவில் அரசின் பெருமைக்குரிய, ஆலோசனைக்கு ஏற்ற ஒரு நூலகத்தை மக்களுக்குப் படைக்கும்'' என அவர் கூறியுள்ளார். இவ்விதமாக 1860ல் ஆரம்பிக்கப்பட்டு 1862 ஜூன் மாதத்தில் பொது மக்களை அனுமதித்த அருங்காட்சியக நூலகம் பின்னாளில் கன்னிமாரா பொது நூல்கமாக வளர்ந்தது. இது தற்போது தேசிய நூலகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கீழை நாட்டுச் சுவடி நூலகமும் 1935ஆம் ஆண்டு வரை அருங்காட்சியகத்தோடமைந்திருந்தது. சென்னை மீன் காட்சியகம் தற்போதைய இடத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு, முதலில் அருங்காட்சியகத்தில்தான் அமைக்கப்பட்டது.

இந்நகரின் கலாச்சார வாழ்க்கையில் மறைமுகமாக இரு வழிகளில் அருங்காட்சியகம் பங்கேற்றுள்ளது. அருங்காட்சியக அரங்கு துவக்க நிலைக்கலைஞர்களை ஊக்குவிக்கவே அமைந்து நெடுங்காலமாகப் பணியாற்றி இருக்கிறது. அருங்காட்சியகத்தின் மறுபகுதியில் அருங்காட்சியக நூற்றுண்டுக் கூடம், கலைஞர்கள் தங்கள் படைப்புகளைக் கண்காட்சி அமைத்துக்காட்ட வசதி அளிக்க இருக்கிறது. மற்றக் கலைக்கூடங்கள் நகரில் அமைக்கப்படும் முன்பு கலைஞர்கள் தங்கள் கலைப் படைப்புகளைக் குறைந்த செலவில் கண்காட்சி அமைக்கும் ஓரிடமாக இது இருந்தது. இந்த வசதி தனியார்களாலும், நிறுவனங்களாலும் நன்கு துய்க்கப்படுகின்றது.

# ஊரறிந்த இரகசியமும்...?



## உங்களுக்கும் தெரியட்டுமே!

எனது புதுமையான சேமிப்புத் திட்டம் இரட்டைப் பலன்களுக்கு உறுதியளிக்கிறது. பிராவிடெண்ட் பண்ட், CTD, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் போன்றவைகளில் முதலீடு செய்யப்படும் பணத்திற்குக் கவர்ச்சியான வரிவிலக்குச் சலுகைகளை வழங்குகிறது வருமான வரி சட்டங்கள்

இவற்றுள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வரி விலக்கு தருவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இன்ஷ்யூர் செய்த நாளிலிருந்து, அபாயங்களுக்கு எதிரான பாதுகாப்பை இதன் மூலம் மட்டுமே நீங்கள் பெற முடியும்

முழு விவரங்கள் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம்கள் மூலம் கிடைக்கும் அதிகபட்ச வரிச் சலுகைகள் பற்றி தெரிந்து கொள்ள, உங்கள் இன்ஷ்யூரன்ஸ் முகவரை ஏன் கலந்தாலோசிக்கக் கூடாது?

**ஆயுள் இன்ஷ்யூரன்ஸைப் போல் ஆதரவளிப்பது எதுவும் இல்லை!**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

PRATISHA-LIC-1156/77 TAM


# வேளாண்மை மறுநிதி-அபிவிருத்திக் கழகத் திட்டங்கள்

பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு அரசு சில திட்டங்களை செயலாற்றி வருகிறது. இத் திட்டங்களின் நிதித் தேவையில் 75 சதவீதத்தை இக்கழகமும், மற்ற 25 சதவீதத்தைத் தமிழ்நாடு அரசும் ஏற்றுக் கொள்கின்றன. இம்மறு நிதி உதவியுடன் உள்ள திட்டங்கள் அனைத்தும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி மூலம் கூட்டுறவுப் பதிவாளரால் செயல்படுத்தப்படுகிறது.

**1977–78-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்:**

**(1) தென்னை:—**

இவ்வாண்டு, 5 தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் நம் மாநிலத்தில் செயல்படுத்தப்படும். திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் 500 ஏக்கரில் புதிய தென்னந் தோப்புகள், ரூ. 13.26 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில் 500 ஏக்கரில் தென்னந்தோப்புகள் அமைக்கவும், 14,000 தென்னங் கன்றுகளை வயல் ஓரங்களில் நடவும் ரூ. 17. 73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, சேலம் மாவட்டத்தில் ரூ. 24.38 இலட்சம் செலவில், 500 ஏக்கரில் புதிய தென்னந் தோப்புகள் அமைக்கவும், 35,000 தென்னங் கன்றுகள் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 900 ஏக்கரில் தென்னந் தோப்புகள் அமைக்கவும், 700 தென்னங் கன்றுகள் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 27.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செங்கை மாவட்டத்தில் ரூ. 28.40 இலட்சம் செலவில் 1,000 ஏக்கரில் தென்னந்தோப்புகள் அமைக்கப்படும்.

**(2) திராட்சை:—**

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ரூ. 24.57 இலட்சம் செலவில் 150 ஏக்கரில் திராட்சைத் தோட்டம் அமைக்கப்படும்.





**(3) ரப்பர்:—**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 9.45 இலட்சம் செலவில் 300 ஏக்கரில் ரப்பர் தோட்டம் அமைக்கும் கூடுதல் திட்டம் செயல்படுத்தப்படும்.

**(4) கிராம்பு:—**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 200 ஏக்கரில் கிராம்பு சாகுபடி செய்ய ரூ. 12.81 இலட்சம் செலவில் மற்றுமொரு திட்டம் செயல்படுத்தப்படும்.

**(5) பழத் தோட்டங்கள்:—**

மதுரை மாவட்டத்தில், கீழ் பழனிப் பகுதியில் பழத் தோட்டங்கள் அமைக்க ரூ. 12.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 490 ஏக்கரில் பழத் தோட்டங்கள் அமைக்கப்படும்.

**பரிசீலனையில் உள்ள திட்டங்கள்:-**

மேற்கூறியவை தவிர, கீழ்க் கண்ட இதர திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன:—

**(1) தென்னை:—**

கோவை மாவட்டத்தில் கோவை, பொள்ளாச்சி, உடுமலை பேட்டை, அவிநாசி மற்றும் தாராபுரம் வட்டங்களில் ரூ. 2,09.71 இலட்சம் செலவில் சுமார் 7,900 ஏக்கரில் புதிதாகத் தென்னந் தோப்புகள் அமைக்கும் திட்டம்.

(2) இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 1,05.46 இலட்சம் செலவில் 3,000 ஏக்கரில் தென்னை அபிவிருத்திக்கான திட்டம்.

**(3) கோகோ:—**

மதுரை மாவட்டத்தில் ரூ. 9.64 இலட்சம் செலவில் 300 ஏக்கரில் கோகோ அபிவிருத்தித் திட்டம்.

**(4) திராட்சை:—**

கோவை மாவட்டத்தில் ரூ. 45.63 இலட்சம் செலவில் 500 ஏக்கரில் திராட்சை அபிவிருத்தித் திட்டம்.

**(5) மல்லிகை:—**

மதுரை மாவட்டத்தில் 350 ஏக்கரில் ரூ. 23.10 இலட்சம் செலவில் மல்லிகைப்பூ சாகுபடி அபிவிருத்தித் திட்டம்.

**(6) ஆரஞ்சு:—**

நீலகிரி மாவட்டத்தில் ரூ. 8.59 இலட்சம் செலவில் 500 ஏக்கரில் ஆரஞ்சு சாகுபடித் திட்டம்.



**(7) மிளகு:—**

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் ரூ. 9 இலட்சம் செலவில் 500 ஏக்கரில் மிளகு அபிவிருத்தித் திட்டம்.

**(8) காப்பி:—**

மதுரை மாவட்டத்தில் ரூ. 19 இலட்சம் செலவில் 300 ஏக்கரில் காப்பித் தோட்டத் திட்டம்.

**[1977-78-ஆம் ஆண்டின் வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது.]**



# பேனாவின் கதை தெரியுமா?



உலகில் ஆடவர், பெண்டிர், பண்டிதர், பாமரர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும் நான் இருக்கிறேன். நான் யார் தெரியுமா? ஏன் இந்த தயக்கம்? நான்தான் உங்கள் கையிலிருக்கும் மையூற்றுக் கருவி (பேனா)! என் வரலாற்றை அறிய வேண்டுமா? உங்கள் ஆவல் எனக்குத் தெரிகிறது.

இதோ சொல்கிறேன் கேளுங்கள்...! உலக அதிசயங்களில் ஒன்றுன பிரமிட்டுகள் எந்த நாட்டிலுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? ஆம். அந்த எகிப்து நாட்டின் மக்கள்தான் முதன் முதலில் என்னைக் கண்டறிந்தவர்கள். பின்னர் சுமேரியர்கள் உலகு எங்கும் எனது புகழைப் பரப்பிட்டவர்கள். ஆதி எழுத்தெல்லாம் மணலில் விரலால் எழுதப்பட்டது தான். பின்னர் பச்சைக் களி மண்ணில் குச்சிகளைக் கொண்டு எழுதச் செய்து அவற்றைச் சுட்டுப் பாதுகாத்து வந்தனர். செல்வம் மிக்கவர், அரசர் போன்றவர்கள் அன்னத்தின் தூவி, மயில் இறகு போன்ற அரிதான பொருள்களை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். கவிஞர்கள் கவிதைகளை எதில் எழுதி வந்தனர் தெரியுமா? நல்ல பதப்படுத்தப்பட்ட பனை ஓலைகளில் எழுதி வந்தனர். இவை எல்லாம் நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைக்க முடியாது அல்லவா?

எனவே, எழுத்துத் துறையில் பல்வேறு மாற்றங்கள் நாளடைவில் ஏற்பட ஆரம்பித்தன. அவற்றுள் ஒன்று காகிதம் கண்டுபிடிப்பாகும். அக்காகிதத்தில் எழுதுவதற்கு அனைவரும் பயன்படுத்திய கருவிதான் நான். என்னை எல்லோரும் பயன்படுத்தினர். பயன்படுத்துகின்றனர். பயன்படுத்துவர். நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி பார்த்தீர்களா? என்னிடமிருந்து பிரிக்க முடியாத தோழன்தான் 'மை' என்ற கலவைப் பொருள். இக்கலவைப் பொருள் படிகார உப்பு, கடுக்காய்த் தூள், அன்னபேதி என்ற வெண்ணிற உப்பு ஆகியவற்றைக் கலவையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

ஒரு மெல்லிய பளபளப்பான கட்டைகளின் நுனியில் உலோகத்தாலான கூரிய 'நிப்' என்ற உருவத்தைச் செய்து பொருத்தி, மையில் தோய்த்து எழுதி வந்தனர். ஆனால் அதை எடுத்துச் செல்வது கடினமல்லவா? அதற்காக என் உருவத்தில் இன்னும் எத்தனையோ முன்னேற்றங்கள் செய்வதற்கான அவசியம் ஏற்பட்டது. என் முனை தேயாமல் நீடித்து உழைக்க 'இருடியம்' என்ற பொருளைச் சேர்த்து வலுப்படுத்தினர். தங்கத்தாலான நிப்புகள் கூட உண்டு. அவை அதிக நாள் நீடித்து உழைக்கும்.

இப்படிப்பட்ட முன்னேற்றத்தைக் கண்டுபிடித்து உலகிற்கு 1864-ஆம் ஆண்டு என்னை அறிமுகப்படுத்தியவர் அமெரிக்க அறிவியல் அறிஞர் 'வாட்டர்மென்' என்பவர் ஆவார். மெழுகு போன்ற வேதியல் கலவைப் பொருள் ஒன்றினைத் தீயிலிட்டு உருக்கிய பின் அக்குழம்பினை மெல்லிய குழாய் போல் செய்தனர். அதுவே மை நிரப்புவதற்குப் பயன்பட்டது. பின்னர் கழுத்து என்ற ஓர் அமைப்பினை அதன் மேல் பொருத்தினர். அந்தக் குழாயின் உள் இருக்கும் 'மை' எப்பொழுதும் காயாமல் ஊறி வெளிவர நாக்கு என்ற பகுதியின் மீது நிப்பையும் பொருத்தினர். இவை எல்லாம் பாதுகாப்புடனும் எடுத்துச் செல்ல மூடி என்ற பகுதியையும் வசதியாகப் பொருத்தி எனக்கு முழு உருவம் அளித்தனர். பிளாஸ்டிக் உலகம் என்று அழைக்கப்படும் இந்நாட்களில் என் உடல் பகுதிகள் வண்ண வண்ண பிளாஸ்டிக்குகளால் உருவாக்கப்பட்டதால் நான் தோற்றத்தில் மிடுக்குடனும், பொலிவுடனும், கவர்ச்சியுடனும் உலகில் உலவி வருகிறேன்.

பால் பாயிண்ட், செல்ஃப் ஃபில்லர் போன்றவர்கள் என் உடன் பிறந்தவர்களே! தற்போது நான் மிக மலிவான விலையிலும் மிக உயர்ந்த விலையிலும் கிடைத்து வருகிறேன். ஆயுள் முழுவதும் சாவி கொடுக்காமல் ஓடும் கைக் கடிகாரம் போல வாழ்நாள் முழுவதும் எழுதிப் பயன் தர வல்ல என் இனத்தவரை இன்று உலகில் தொழில் முன்னேற்றம் அடைந்த நாட்டினர் அனைவரும் தயார் செய்து வருகின்றனர்.

நான் இந்தியப் பல்வேறு பெயர்களில் உருவாகி வருகிறேன். நான் இந்நாட்டின் முதுகெலும்பு என்று சொன்னால் அது மிகையாகாது. 'எழுதுகோல் போர் வீரனின் வாளைக் காட்டிலும் கூர்மையானது' என நீ அறிந்திருப்பாய்! என் சக்தியால் இவ்வுலகை வாழ வைக்கவும், வீழ வைக்கவும் முடியும்.

எனவே, தம்பி, தங்கைகளே! எனது வரலாற்றையும் பயனையும் ஒருவாறு உணர்ந்த நீங்கள் என்னைச் செம்மையாகப் பயன்படுத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வீர்களாக!

**—ஏ. ஆர். தீனதயாளு ரெட்டி,**

**(சென்னை வானொலிக் கல்வி ஒலிபரப்பில் 8—9—77 அன்று ஒலிபரப்பாகியது).**



ஏராள பரிசுகள்! வென்றிட பல வாய்ப்புகள்!!

ஒரு வரிசைக்கு வழங்கப்படும் பரிசுகள் விவரம் :

| பரிசு | தொகை ரூ | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ |
|---|---|---|---|
| I | 50,000 | 2 | 1,00 |
| II | 10,000 | 3 | 30, |
| III | 5,000 | 5 | 25,000 |
| IV | 1,000 | 25 | 25,000 |
| V | 500 | 100 | 50,000 |
| VI | 100 | 500 | 50,000 |
| VII | 50 | 2000 | 1,00,000 |
| ஆறுதல் பரிசுகள்: | | | |
| I | 1,000 | 4 | 4,000 |
| II | 500 | 6 | 3,000 |
| III | 300 | 10 | 3,000 |
| | மொத்தம் : | 2655 | ரூ . 3,90,000 |

# புதுப்பட்டி முனுசாமி புன்னகை பூத்திட உதவுங்கள்!

அவன் வசிக்கும் கிராமத்துக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டால், முனுசாமி சிரித்து மகிழ்ந்திடுவான். அவன் குடிநீர் தேடி மைல் கணக்கில் இனி நடந்து செல்ல வேண்டியதில்லை!
நீங்கள் உதவிடலாம்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை வாங்குங்கள்.
ஏனெனில் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ஒரு நல்வாழ்வுத் திட்டம்.
இதன் வருவாய் கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

**இன்றே வாங்குங்கள்**
**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

2 முதல் பரிசுகள் ரூ. 50,000
வீதம் ஒவ்வொரு வரிசைக்கும்

**சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- மட்டுமே**
**குலுக்கல் நாள்: 19.11.1977**

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600 002

DIPR/49961/77




# வேடந்தாங்கல்
## நீர்ப்பறவைச் சரணலயம்

—ச. அ. ரஹமதுல்லா இ.வ.ப.,
தலைமை வன விலங்குக் காப்பாளர் தமிழ்நாடு.

தமிழ்நாட்டில் மாரிக்காலத்தில் நீர்ப் பறவைகள் நீர்நிலைகளுக்கு மத்தியில் அல்லது நீர் நிலைகளுக்கருகிலுள்ள மரங்களில் கூடு கட்டி இனம் பெருக்குவது வழக்கம். சென்னையிலிருந்து சுமார் 53 மைல் தொலைவிலுள்ள 'வேடந்தாங்கல்', 'கார் கிளி' என்ற 2 ஏரிகளில் அடர்ந்த கடப்ப மரத் தோப்புக்குள் 14 வகை நீர்ப் பறவைகள் பெருங்கூட்டமாய்க் கூடி, மரக் கிளைகளில் அடுத்தடுத்துக் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கின்றன. சுமார் 200 வருடங்களுக்கு மேல் இவை இந்தத் தோப்பிலேயே வம்ச வம்சமாக வாழ்ந்து வருகின்றன. தென்னிந்தியாவில் 10, 15 இடங்களில் பலவகை நீர்ப் பறவைகள் வாழ்ந்தாலும், வேடந்தாங்கலில் பார்க்கக்கூடிய காட்சியைப் போல் வேறெங்கும் அவ்வளவு சிறப்பாகக் காண்பது அரிது.

வேடந்தாங்கல் ஏரியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட கடப்ப மரங்கள் இருந்தன. சென்ற 10 ஆண்டுக்காலமாகப் புயலாலும், வறட்சியினாலும் பாதிக்கப்பட்டு இப்பொழுது சுமார் 100 கடப்ப மரங்களே எஞ்சியுள்ளன. இதையறிந்து வனத்துறை சுமார் 90 பெரிய கடப்ப மரங்களை வேற்றிடத்திலிருந்து வேர் மண்ணுடன் கொண்டு வந்து நட்டு உள்ளனர். மேலும் நாற்று வைத்து உண்டாக்கப்பட்ட கடப்ப மரங்களும், நீர் மருது மரங்களும் சுமார் 1,600 உள்ளன. பெருமரங்களிலும், சிறு மரங்களின் கிளைகளிலும் ஆயிரக் கணக்கான பறவைகள் கூடு கட்டி, இரை தேடி, முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வருகின்றன. குஞ்சுகள் வளர்வதைப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

நமது மாநிலத்தில் ஆயிரக் கணக்கான ஏரிகளிலிருந்தும் 'வேடந்தாங்கல்', 'கார்கிளி' போன்ற ஏரிகளிலே பறவைகள் ஆண்டுதோறும் கார்காலத்தில் வந்தடைவதன் காரணம் சிறப்பாகச் சில வசதிகள் இவ்விடத்தில் இருப்பதேயாகும். குஞ்சுகளுக்கு வேண்டிய அளவு இரையான மீன், தவளை, நத்தை, பூச்சிகள் ஆகியவை அக்கம் பக்கத்திலிருப்பது முதலாவது காரணமாகும். நிலத்தில் வாழும் கீரி, பூனை போன்ற எதிரிகள் அணுகாதவாறு பெரிய மரங்களைச் சுற்றி ஆழமாகத் தண்ணீர் தேங்கியிருப்பது இரண்டாவது காரணமாகும். மூன்றாவது காரணம் இந்தக் கிராமத்தினர் தொன்றுதொட்டு இப்புள்ளினங்களுக்கு நல்ல பாதுகாப்பு அளித்து வருவதாகும்.

### புலம் பெயர் புள் :

வசதி படைத்தோர் கோடைக் காலத்தில் எவ்வாறு நீலகிரி, கொடைக்கானல் போன்ற வாசஸ்தலத்திற்குச் செல்கிறார்களோ அல்லது குளிர்மிகுந்த ஊர்களிலிருந்து சற்று உஷ்ணமுள்ள இடத்திற்கு வருகிறார்களோ அதே போல் சில வகைப் பறவைகள் இமயமலை, அதற்

*பறவைகளைக் கண்டு களிக்கவரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக, வனத்துறையினரால் வேடந்தாங்கலில் கட்டப்பட்டுள்ள ஓய்வு இல்லம்.*



கப்பாலுள்ள பிரதேசங்களில் குளிர்காலத்தில் எல்லாம் பனியால் மூடப்பட்டு இரை கிடைக்காத நிலையில் அங்கிருந்து இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற தெற்கேயுள்ள வெப்ப நாடுகளுக்கு வந்து, சில மாதங்கள் தங்கியிருந்து மறுபடியும் வடக்கே கோடைகாலம் பிறக்கும்பொழுது நெடுந்தூரம் பயணம் செய்து வடக்கேயுள்ள தனது சொந்த நாட்டை அடையும். இவை இரை தேடுவதற்காக வருவதேயல்லாமல், கூடுகட்டி இனம் பெருக்க வருவதில்லை. இவ்வாறு வடக்கே வடதுருவம், சைபீரியா முதலிய தேசங்களிலிருந்து 4,000 மைல்கள் தெற்கே வந்து, கோடைக்காலம் பிறந்ததும், தம் சொந்த நாட்டிற்குப் போவதைப்பண்டைக் காலத்தில் 'புலம் பெயர்தல்' என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. இதையே தற்காலததில் 'வலசை போதல்' என்றும் கூறுகின்றனர். இவ்வாறு வேடந்தாங்கல் ஏரிக்குள் புலம் பெயர் புள்கள் வருவதற்கு ஆதாரம் உள்ளது. 30 ஆண்டுகட்கு முன்பு ''கிழுவை'' என்ற ( Whistling teal ) வேடந்தாங்கலில் கொல்லப்பட்டபோது அதன் காலில் இருந்த அலுமினியக் காப்பு 'மாஸ்கோ' என்ற எழுத்துக்களுடன் காணப்பட்டது. இதிலிருந்து - மாஸ்கோ நகர்ப் பறவை நிபுணர்கள் அப்பறவையின் காலில் கட்டிய காப்பு வேடந்தாங்கலில் கிடைக்கப் பெற்றமையால், அப்பறவை மாஸ்கோவிலிருந்து வேடந்தாங்கலுக்கு வலசை-வந்தது என்பது தெரிய வருகிறது.

'வேடந்தாங்கல்,' 'கார்கிளி' ஆகிய இரு ஏரிகளிலே மீன், தவளை, பூச்சி, நத்தை போன்ற இரை வகைகள் மிகுதியாக இருப்பதால் கூடு கட்டாத பறவையினங்கள் சிலவும் ஏரிக்கு வருவதுண்டு. இவ்விரு ஏரிகளில் உள்ள மரங்கள் பறவைகளுக்குக் கூடுகட்டுவதற்கு மட்டுமில்லாது அடை மரங்களாகவும் உதவுகின்றன.

வேடந்தாங்கலில் காணப்படும் அயல்நாட்டுப்புலம் பெயர்ப் பறவைகளில் முக்கியமானது கிழுவை ( Teals ). வாலாட்டிக் குருவி வீடு கட்டாது; இரை தேட மட்டும் வரும். உள்நாட்டுப் பறவைகளில் முக்கியமானது பவலிக்காலி ( Black winged stilt ). இவை கரையருகில் சிறு கூட்டங்களாகக் காணப்படுகின்றன.

சிற்சில வேலைகளில் இங்கு கூழைக்கடா ( Spot billed



பறவைகள் தங்குவதற்கு வசதியாக, பெரிய கடப்ப மரங்களை வேருடன் பெயர்த்து நடுகின்றனர்.

pelican ) என்னும் பறவைகள் வந்துசில நாட்கள் தங்குகின்றன.

நாமக்கோழி எனப்படும் வெள்ளைநாமம் தீட்டிய கருநீர்க்கோழி ( Coots ) நீர்மட்டத்தை உற்று நோக்கியவாறே பறத்தலையும், உப்புக் குருவிகளையும் (River Tern) பார்க்கலாம்.

இவ்வேரிகளில் கூடுமட்டும் கட்டி இனம் பெருக்காது சஞ்சரிக்கும் பறவைகளில் முக்கியமானவை வெண்கொக்கு (Egret) உண்ணிக் கொக்கு, மடையான் ஆகியனவாகும்.

கடப்ப மரக்கிளைகளில் மட்டுமன்றி, மரங்களின் அடியிலும், கரையோரமாகவும் ஏரியில் நீந்தி வளையவரும் முக்குளிப்பான் (Dabchick), நீர்க்கோழி (Moorhen) ஆகியவைகளையும் இங்கு சாதாரணமாகக் காணலாம்.

இவ்வாறு நெருக்கமாகவும், பெருங்கூட்டமாகவும் பறவைகள் கூடுகட்டுமிடத்தில் முட்டைகளுக்கும், குஞ்சுகளுக்கும் ஏரியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு இருக்கும் காக்கை, பருந்து, கருடன் போன்ற எதிரிகளால் தீங்கு விளைவது உண்டு.

வேடந்தாங்கல் சரணாலயத்தில் வாழும் பறவைகளில் 14 வகைகள் முக்கியமானவை. அவையாவன:—

**நீர்க்காகங்கள் (Cormorants ):** சிறியது, நடுத்தரமானது, பெரியது என 3 வகையாக நீர்க்காகத்தைப் பிரிக்கலாம். இவை நீரில் மூழ்கி நீந்துவதில் திறமையுள்ளவை. நீரில் மூழ்கி விரைந்து மீன்களைப் பிடிப்பதில் தேர்ச்சி பெற்றவை. இவை நீந்தியும் மூழ்கியும் இரை தேடுவதை இந்த ஏரியில் சுலபமாகப் பார்க்கலாம். மாலையில் இவை அணி அணியாகக் கருந்திரளாக இறக்கையடித்து வந்து தோப்பிலடையும் காட்சி பார்ப்பவர்க்குச் சிந்தனையைக் கிளரும்.

**2. பாம்புத் தாரா ( Darter ):** நீர்க்காகத்திற்கு ஒரு வகை எட்டிய உறவு என்று சொல்லப்படுவது பாம்புத்தாரா. இது தண்ணீரில் மூழ்கி நீந்தும் பொழுது நீண்ட கழுத்தும், சிறு தலையும், குத்துக்கத்தி போன்ற அலகுமே நீரின் மேலிருப்பதால், தலை தூக்கி வரும் பாம்பு போலவே தென்படும். இதை ஆங்கிலத்தில் ' Snake bird ' என்று சொல்வதுண்டு.

**3. வெண்கொக்குகள் (Egrets)** சிறியது, நடுத்தரமானது, பெரியது என்று 3 வகைகளாக வெண்கொக்குகளைப் பிரிக்கலாம். இவை சுத்த வெள்ளை நிறமாக இருக்கும். அலகு, கால்களின் நிறம், அளவு ஆகியவற்றிலிருந்து இதன் இன அடையாளத்தைத் தெரிந்து கொள்ளலாம். சிறிய வெண்கொக்கை அதன் அளவிலிருந்தும் கருப்புக் கால்களிலிருந்தும், அலகுகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். கூடுகட்டும் காலத்தில் இதன் அடித்தலையினின்றும் இரண்டு நீண்ட இளஞ்சிறகுகள் தொங்குவதைக் காண அழகாக இருக்கும். அதே மாதிரி, மார்பிலும் முதுகிலும் மெல்லிய வெண்சிறகுகள் தென்படும். இது தன் பரந்த இறக்கைகளை விரித்து நிதானமாகவும், ஒய்யாரமாகவும் பறந்து செல்வது மிக அழகிய காட்சியாகும். நடுத்தர வெண்கொக்கிற்கும், பெரிய வெண்கொக்கிற்கும் அளவிலுள்ள வேறுபாடு தூரத்தில் தென்படாது. பெரிய வெண்கொக்கே கொக்குகளில் உயரமானது. கரையோரங்களில் இது மெல்ல நடந்து மீன் வேட்டையாடும்.



**4. உண்ணிக் கொக்கு அல்லது மாட்டுக் கொக்கு (Cattle Egret):** புல்தரையில் மேயும் மாடுகளைப் பின்பற்றிச் செல்வதால் இதற்கு 'மாட்டுக் கொக்கு' என்று பெயர். இவை முக்கியமாகப் பூச்சிகளையே புசிக்கும். அலகு-மஞ்சள் நிறம்.

**5. மடையான் (Pond Heron):** சென்னையிலும், சுற்றுப பக்கத்திலுமுள்ள ஊர்களிலும் சகஜமாகக் காணப்படும் இப்பறவைக்கு 'மடையான்' என்பது பழந்தமிழ்ப் பெயர். இதைக் 'குருட்டுக் கொக்கு' என்றும் அழைப்பர். நம்மை அது கண்ணைக் கட்டி மயக்குவதைக் குறிக்கும். ஆனால் அது குருடில்லை. மீன் வேட்டைக்காகக் கரையோரமாக நின்று கொண்டு இருக்கையில் அதன் நிறம், சூழ்ந்துள்ள மண் நிறத்தை ஒத்திருக்கும். திடீரென்று பறந்து செல்கையில் அது வெண்பறவையாக மாறித் தோற்றமளிக்கும்.

**6. வக்கா – அல்லது அன்றில் (Night Heron):** இவை பெரும்பாலும் இருட்டிய பின்பே வெளிவரும். வயதுவந்த வக்காவின் மேல்புறம் சாம்பல் நிறமாயிருக்கும். இதன் மேல்தலை கருநிறச் கறுத்து இருக்கும். இரண்டு நீண்ட சிறகுகளும், செறிந்த வெண்சிறகுகளும் கொண்லை இதற்குண்டு; அடிப்பாகம் வெளுப்பு; கூடுகட்டுங் காலத்தில் கால் சிவந்திருக்கும். வளர்ச்சியடைந்தும் இன்னும் பருவமடையாத வக்கா, மடையானைப்போல் களிமண் நிறப் புள்ளிகள் கொண்டிருக்கும். ஆனால் வெள்ளை இறக்கைகள் கிடையாது.

**7. நரையான் (Grey Heron):** இந்தப் பறவைக்கு ''நாரையான்' என்ற பெயரும் வழங்குகிறது. தமிழில், பறவையினங்களின் பெயர்களோடு ''புள்'', 'பட்சி; 'குருவி' என்ற பொதுப் பெயர்களையும் கடையடை மொழிகளாகச் சேர்த்துச் சொல்வது வழக்கம். உதாரணம்:— செம்போத்துப்புள், சோளப்பட்சி, மைனுப்பட்சி, தினைக்குருவி. வேடந்தாங்கலில் ''நாரையன் பட்சி'' என்பது ''நாராயணப் பட்சி'' என்று மாறி, இப்பெயராலேயே நரையானை அழைக்கிறார்கள்.

வக்கா, மடையான், கொக்குகள், நரையான் இவையெல்லாம் பறந்து செல்லும்போது கழுத்தை மடக்கி, தலையை முதுகை ஒட்டினாற்போல் இழுத்துக் கொள்ளும். நாரை வகைகள் கழுத்தை நீட்டிப் பறக்கும்.

**8. நத்தைக் குத்தி நாரை (Open Billed Stork):** இந்திய நாரையினங்களில் இதுவே சிறியது; ஆயினும் வேடந்தாங்கலிலுள்ள பறவைகளில், நரையான், துடுப்பு மூக்கு நாரை இவைகளுடன் ஒப்பிடும்போது இது பெரியது. நரையான் அளவில் இன்னும் உடல் தடித்திருக்கும். வயதுவந்த நத்தைக் குத்திகளின் அலகுகள், மேலலகும் கீழலகும் ஒன்றோடொன்று இணைந்து கூடாமல், பறவை வாய் மூடியிருக்கும்போதும் இடையே ஒரு விரிசல் (இடைவெளி) இருக்கும்; இளம் பறவைகளுக்கு இந்த இடைவெளி இருக்காது. நீரில் வாழும் நத்தையினங்களே இந்த நாரையின் முக்கிய இரை. மீன் முதலிய மற்ற இரையையும் இது தேடும்.

மாலையில் இரைதேடி வீடு திரும்பும் நத்தைக்குத்திகள் பெருந்திரளாகக் கூடி, வானத்தின் உச்சியில் தோப்பின் மேல் இறக்கை பரப்பி வட்டமிடும் போது ஆகாயத்தில் மிதக்கும் புள்ளிகளாகவே தென்படும். அவ்வளவு உயரத்தில் அவை பறக்கும். சில நிமிஷங்கள் இப்படி வட்டமிட்டபின், எல்லாம் ஒருங்கே இறக்கை மடித்துப் பெரும் வேகத்துடன் செங்குத்தாய்ப் பாய்ந்து இறங்கும். தோப்பை அணுகினதும், பல திக்குகளிலும் சிதறி, இறக்கை விரித்துத் தத்தம் கூடுகளை நோக்கிப் பறந்து செல்லும் இந்த அற்புதமான காட்சியைக் கண்டவர் எளிதில் மறக்க மாட்டார்கள்.

**9. துடுப்பு மூக்கு நாரை:** இதை ஆங்கிலத்தில் Spoon bill என்பர். வேடந்தாங்கலில் ''மண்வெட்டு வாயன்'' என்று சொல்லுகிறார்கள். சட்டுவம்போல் நுனி விரிந்து சப்பையாகவுள்ள விசித்திர அலகைக் கருதியே இவ்வாறு பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஜதை கூடும் பருவத்தில் இதற்குத் தலையின் பின்புறமாக வெள்ளைச் சிறகுகளடர்ந்த ஒரு பெருங்குடுமியுண்டு. வேடந்தாங்கலில் வந்திறங்கிய நாளிலிருந்து இங்கிருந்து வெளியேறும் வரை இங்குள்ள துடுப்பு மூக்கு நாரைகளுக்கு இப்படிக் குடுமி வாய்த்திருப்பதைக் கவனிக்கலாம். குஞ்சுகளுக்கும், வளர்ந்த இளம் பறவைகளுக்கு மட்டுமே தலை மொட்டையாயிருக்கும்.



பலவிதமான பறவைகளைப் பார்த்து மகிழ்வதற்கு வேடந்தாங்கல் மிகவும் ஏற்றது.

**10. கங்கணம் (White Ibis):** இதுவும் கிட்டத்தட்ட துடுப்பு மூக்கு நாரை அளவில், அதைப் போல் வெள்ளையாகவிருக்கும். ஆனால், கழுத்துச் சிறகற்றும், தலையும்மூக்கும் கறுப்பாயும் இருக்கும். இதன் அலகு வளைந்து அரிவாள் போலிருப்பதால் வேடந்தாங்கலில் இதை 'அர்வாள் மூக்கன்' என்கிறார்கள். வக்காக்களைப் போல இதுவும் இரவில் இரை தேடும் பறவை. ஆனால், குஞ்சுகளுக்காக இரைதேடப் பகல் போதிலும் வெளிக்கிளம்பும்.

இவ்வேரிக்கு வலசை வரும் பறவைகளாவன: பெரிய சிறவி, (Garganey Teals), தட்டவாயன் (Shoveller), மார்க்களியன் (Pin Tail), பவனக்காலி (Black winged stilt), கொசு உள்ளான் (Common sand pipers), உப்புக்கொத்தி (Curlew), மஞ்சவாலாட்டி (Yellow wagtail), மானம்பாத்தான் (Grey wagtails).



## வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்கு அள்ளி வழங்குங்கள் !

—முதலமைச்சர் வேண்டுகோள்.

வறட்சியும், வெள்ளமும் இயற்கையின் இரட்டைக் குழந்தைகள்; அதுவும் இன்னல் விளைவிக்கும் இரட்டைக் குழந்தைகள் (Notorius twins of Nature) என்று கூறப்படுகிறது. இவைகளால் தமிழகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

வறட்சியை வென்றிட முயன்றுவரும் தமிழ்நாடு அரசுக்கு, அண்மையில் ஏற்பட்ட புயலால் தோன்றிய வெள்ளம் விளைத்த வேதனையைத் தீர்க்கும் பொறுப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே, "வெள்ள நிவாரணப் பணிகளுக்கு, கருணை உள்ளம் படைத்த பொதுமக்கள் அனைவரும் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும்" என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான காசோலைகளை (Cheques) "முதல் அமைச்சர் பொது நிவாரண நிதி" என்று குறிப்பிட்டு, சென்னை கோட்டையில் உள்ள நிதித் துறைத் துணைச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

## தமிழக வெள்ள நிவாரணத்திற்கு பிரதமர் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினர்.

டெல்லிக்குச் சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் புயலாலும் மழையாலும் ஏற்பட்ட சேத விவரங்களையும், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நிவாரண நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினர். தமிழகத்தின் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு உதவி செய்வதற்காக, பிரதமர் அவர்கள் உடனடியாக பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்கியுள்ளார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.




வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.



பதிவு எண். M. 8676



# அரசு-மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC



# தமிழரசு

16 - 11 - 1977

மலர் : 8 இதழ் : 10


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| புயலும் வெள்ளமும் செய்த கொடுமைகள் | 2 |
| உறவுகள் தொடரட்டும்! ... | 7 |
| செய்தி-ஒலிபரப்புத்துறையில் சிந்திக்க வேண்டியவை! ... | 13 |
| பால்வளத் துறையின் பாங்கான பணிகள் | 17 |
| நான்கண்ட வ. உ. சி. .. | 26 |
| வீட்டு வசதிகளை விரைவாகப் பெருக்கிடுவோம்! ... | 28 |
| நேருவின் வாழ்விலே! (படத்தொகுப்பு). | 33 |
| நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள் ... | 41 |




## வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்கு முதல்தவணையாக 15 கோடி ரூபாய்!

R.R.188/54 "P"

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் 20—11—1977 அன்று அமைச்சர்களுடனும், உயர் அதிகாரிகளுடனும் புயல், வெள்ள நிவாரண நடவடிக்கைகள் குறித்துக் கலந்தாலோசித்தார். அந்தக் கூட்டத்தில் பின்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

* வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்கு முதல் தவணையாக ரூ. 15 கோடி ஒதுக்குவது என்று தமிழக அரசு முடிவு செய்தது.
* வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்துக்கும் கொடுக்கப்படும் உதவித் தொகை ரூ. 80 லிருந்து ரூ. 100ஆக உயர்த்தப்படும். அதுதவிர ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 சேலைகளும், 2 வேட்டிகளும் வழங்கப்படும்.

## புயல்-வெள்ளத் துயர் துடைப்புப் பணிகளுக்காக மத்திய அரசு 5 கோடி ரூபாய் வழங்கியது!

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களின் புயல்-வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்காக, 'அட்ஹாக்' அடிப்படையில், தலா ரூபாய் 5 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது. இவ்வுதவி முதல் உதவியாகவே அமையும். இரு மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் முழுமையாக கிடைத்தபின், மத்திய அரசு மேலும் உதவக்கூடும்.

# புயலும் வெள்ளமும் செய்த கொடுமைகள்





உள்ளத்தை உருக்கி கண்களைக் குளமாக்கும் காட்சிகள்!












## புயல்-வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள்!

இறந்தவர்களின் எண்ணிக்கை — 481

சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை—2,99,749

பாழடைந்த நெற்பயிரின் பரப்பு—4,46,698 ஏக்கர்

அழிவுற்ற வாழைத் தோட்டங்களின் பரப்பு— 14,000 ஏக்கர்

முறிந்து விழுந்த தென்னை மரங்கள்—1 இலட்சம்

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்த கால்நடைகளின் எண்ணிக்கை—19,955



வரலாறு காணாத வகையில் தமிழகத்தை 12—11—1977 அன்று தாக்கிய புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 13—11—1977 அன்று விமானத்திலிருந்து பார்வையிட்டார். (கரூர்-திருச்சி இரயில் பாதையில் அமராவதி ஆற்றின் குறுக்கேயுள்ள இரயில் பாலம் உடைந்து பாலத்தின்மேல் வெள்ளம் ஓடுவதைப் படத்தில் காணலாம்.)

## வெள்ளப் பகுதிகளில்...



மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு மத்திய பெட்ரோலிய-இரசாயனத் துறை அமைச்சர் திரு பகுகுணா அவர்களும், மாண்புமிகு மத்திய எரிபொருள் துறை அமைச்சர் திரு பா. இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களும், மாண்புமிகு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களும், 18-11-1977 அன்று, வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளை விமானத்தில் இருந்து பார்வை யிட்டுச் சேதங்களை மதிப்பீடு செய்தனர்.

# உறவுகள் தொடரட்டும்!

தமிழ் படித்தோரின் ஏக்கத்தைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு முதலிடம் தரும் நியாயமான கடமையைத் தமிழக அரசு நிறைவேற்றும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்துள்ளார்.

### மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்.



நீலபத்மநாபன் எழுதிய ''உறவுகள்'' என்னும் தமிழ் நாவலுக்கு அண்ணாமலை அரசர் நினைவுப் பரிசாக, ரூபாய் பத்தாயிரத்தை வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

''சில நேரங்களில் ஒரு சிலருக்குக் கிடைப்பதற்கரிய வாய்ப்புக் கிடைப்பதுண்டு. அதைப்போன்ற ஒரு வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்திருக்கிறது.

''இங்கே பேசிய மாண்புமிகு நீதிபதி (இஸ்மாயில்) அவர்கள் இந்த நூலைத் தேர்வு செய்த குழுவில் ஒருவராக இருந்த காரணத்தால், இந்த விழாவில் கலந்து கொள்வதற்கு அவருக்குத் தகுதி இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

''அவரைப்பற்றி, எழுத்தாளர் மத்தியில் அவரது தமிழறிவைப் பற்றி, எப்படி எல்லாம் மதிக்கப் படுகிறார் என்பது பற்றி நீங்களும் நானும் அறிந்து வைத்திருக்கிறோம். அவரைப்பற்றிப் பேச நான் அச்சப்படுகிறேன்.

''எந்த ஒரு மனிதனும் வாழ்க்கையில் தனது மனத்தில் தன்னுடைய அறிவுக்கேற்பத் தோன்றும் எண்ணங்களின் விளைவுப்படி வாழ விரும்பும்போது, அவனைச் சுற்றி ஒரு உலகம் உருவாகிறது. சூழ்நிலைக்கேற்ப அந்த உலகம் பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கலாம். தன்னைப்பற்றி அவன் என்னென்ன கருத்துக்களை நினைக்கிறானோ, சிந்திக்கிறானோ அதனால் ஏற்படுத்திக் கொள்ளப் பட்ட சுற்றுச் சூழ்நிலைகளுக்கு அப்பால் அது எதிரொலிக்கின்றது. அவன் சிந்திக்கின்றவை, நினைப்பவைகளுக்கு மாறாக — அவன் எதிர்பாராதது நடந்து விடுகிறது.

### எழுத்தை ஆள்பவர்கள் !

''இங்கே உள்ள உங்களில் எத்தனை பேர் எழுத்தாளர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் உங்களை எல்லாம் எழுத்தாளர்கள் என்றே கருதி எனது கருத்தைக் கூறினால், அது தவறாகாது என்று கருதுகின்றேன்.

''எழுத்தாளர்கள் என்றால் எழுத்தை ஆள்பவர்கள் என்று கருதுவதால்-அந்த எழுத்துக்கு அவர்கள் உரிமையுள்ளவர்கள் எனக்கருதுவதால் — உங்களிடம் இவ்வளவு பெரிய பொறுப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த வேளையில் சிந்தித்துப் பார்க்கின்றேன்.

### எழுத்தின் வகைகள் !

''எழுத்துக்கள் என்பதில் பல் வேறுவகை இருக்கின்றன. பிறரைச் சிந்திக்க வைக்கிற மாதிரி எழுதுவது ஒரு வகை, பிறரைப் புண்படுத்தாமல் எழுதுவது ஒருவகை. பிறரைச் சிரிக்கவைத்துச் சிந்திக்க வைப்பது என்பது ஒரு வகை; அப்படிச் சிந்திக்க மறுப்பவர்களைச் சந்திக்கு இழுப்பது என்பது ஒரு வகை.

''எழுத்தாளர்களின் திறமை என்பது காலப்போக்கில் மாறுவது என்றாலும் அந்த எழுத்தாளர்களின் எழுத்துக்கள், எதிர்காலச் சந்ததிகளின் தலையெழுத்தை நிர்ணயிக்கின்றவைகள் என்பதை அழுத்தந் திருத்தமாக நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''எழுத்து என்றால் அழகாக எழுதுவதல்ல. சிலருடைய கையெழுத்து மிக அழகாக இருக்கும்; ஆனால் அது யாருக்கும் பயன்படாது. பயன்படாத எந்த எழுத்துக்களும் நாட்டுக்கு துரதிர்ஷ்டமாகக் கருதப்படுபவையாகும். அந்த எழுத்துக்கள் நாட்டின் எழுத்தை மாற்றக் கூடியதல்ல.

''சில நேரங்களில் நேரடியாக எழுத்துலகில் பங்கு பெற முடியாவிட்டாலும், சில பரிதாபத்துக்குரியவர்கள் தாங்கள் எழுதி, யாருடைய பெயரிலோ வெளியிடுகிறவர்களாக இருக்கிறார்கள் என்றாலும், அப்படிப்பட்ட நிலை இங்கே இல்லாமல், தகுதி உள்ளவர் எழுதி, அதை நல்லோர் மத்தி

யில் பாராட்டக் கேட்டுப் பரிசு பெறுகிற இந்த விழாவில் நான் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

''போட்டி என்பது வேறு—பொருமை என்பது வேறு என்பதை நாம் அறிந்து இருக்கிறேம்.

''தங்களது கருத்துக்களை யாருடைய தீர்ப்புக்கோ விட்டு விட்டு, ஒன்றிரண்டு பேரின் கருத்துக்கள்தான் பரிசைப் பெறும் என்று தெரிந்தும் மீதி உள்ளவர்களது கருத்துக்கள் பரிசு பெருது என்று தெரிந்ததற்குப் பிறகும்-போட்டியில் துணிந்து கலந்து கொண்ட மற்றவர்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''பத்தாயிரம் ரூபாய் பரிசு என்பது எவ்வளவு உயர்ந்த தொகை என்பதை இன்றையச் சூழ்நிலையில் எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகுகிறவன் என்ற காரணத்தால் நான் நன்ருக அறிவேன்.

## எழுத்தாளர்கள் செய்யும் தியாகம்

''மக்களுக்குப் பயன்படும்—மக்களுக்காகவே பயன்படும் கருத்துக்களை முன்வைத்து—அவை மக்களால் ஏற்கப்படுகின்றனவா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல்—அவை மக்களுக்கு நிச்சயம் பயன்படும் என்று கருதி இப்படிப்பட்ட போட்டியில் பங்கு பெறுவது என்பது நாட்டுக்கு எழுத்தாளர்கள் செய்கிற தியாகம் ஆகும்.

''எழுத்தாளர்களைப் பற்றிப் பேசுவதற்கு எழுதத் தெரியாத என்னை அழைத்திருப்பதற்கு நான் வருத்தப்பட்டேன். என்னை ஏன் அழைக்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு, என்னை அழைத்தவர்கள், 'நீங்களும் எழுதியிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்' என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். அதைத்தான் நான் நல்லதொரு வாய்ப்பு என்று பேச்சின் துவக்கத்தில் குறிப்பிட்டேன்.

''இங்கே 'உறவுகள்' நூலை எழுதிய சகோதரர், எழுத்தில் புதிய முறையைக் கையாண்டுள்ளார். இந்த எழுத்தில் அவர் எந்த அளவுக்கு ஊக்கமாய்ச் செயல்பட்டிருக்கிருர் என்பது புரிகிறது. அவர் படைத்திருக்கிற பாத்திரங்கள் அதனதன் அனுபவத்துக்குத் தக்க மாதிரி, உணர்வுகளைக் கொட்டுகிற வகையில் படைத்திருக்கிருர் என்பதை நூலைப் படிக்கிறவர்கள் உணர முடியும்.

''கமலாம்பாள் சரித்திரத்தையும். படித்திருக்கிறேம். இப்போது 'உறவுகளை'யும் படிக்கிறேம். கமலாம்பாள் சரித்திரத்தை எழுதியபோது, எழுதியவரை ஒரு ஆசிரியராக ஏற்றிருப்பார்களா என்பது ஆச்சரியத்துக்குரியதுதான்.

''சிலர், அவரைக் கேலி செய்திருக்கவும் கூடும். எந்த எழுத்தாளர்களும் எதிர்காலத்துக்கானபடி அமைத்துக் கொடுப்பவர்கள்—பாலம் அமைத்துக் கொடுப்பவர்கள்-என்பதை மனத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

## தமிழ்மொழியின் சிறப்பு

''தமிழ் மொழியை யார் எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ருலும் அப்படி எல்லாம் பயன்படத்தக்க அளவுக்குத் தமிழ்மொழி பரவி, விரிந்து தேவையான சொற்களை வழங்குகிற மொழியாக இருக்கிறது. நான் இதனைக் கூறுவது எனது பேராசையின் வெளியீடு என்றே அல்லது இப்படிப் பேசினுல்தான் அது பேச்சாக இருக்கும் என்று கருதிப் பேசுவதாகவோ நீங்கள் நினைத்துக் கொள்ள வேண்டாம்.

''பாலிமொழியிலிருந்து—சமஸ்கிருத மொழியிலிருந்து-தமிழுக்கு எத்தகைய சோதனைகள் ஏற்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது.

''நான் ஒருவரிடம் நாடகம் ஒன்று எழுதித்தரும்படி கேட்டேன். பாண்டிய நாட்டை ஆண்ட ஒருவரது சரித்திரத்தை அவர் எழுதிக் கொடுத்தார்.

''தமிழ் இலக்கியத்தை அழித்தாலொழிய தமிழர்களை அடக்க முடியாது—தமிழுணர்வைச் சிதைக்க முடியாது—என்று கருதியவர்களிடமிருந்து பாண்டிய இளைஞன் ஒருவன் இலக்கியத்தைக் காத்து, தமிழைக் காத்து, பாண்டிய நாட்டை மீண்டும் தமிழருக்கே சொந்தமாக்கிக் கொடுத்தான்.

''இந்தக் கதையை அந்த நண்பர் எனக்கு எழுதிக் கொடுத்தார்.

''விஞ்ஞான வளர்ச்சியில் எப்படி எல்லாம் மாற்றம் ஏற்படுமோ என்று கருதத்தக்க நிலையில் விளையும் உணர்வுகள்-விளைவுகள்-அத்தனையும் தமிழால், அதன் சுற்றுச் சார்புள்ளனவாக இருக்கும் என்பதைக் கவனிக்கும் அவசியத்தில் இந்த நாடு உங்களைப் பாராட்டியே தீரும்.

## எழுத்தாளர்களின் கடமை

''ஒரு கதாசிரியர். ஒரு கதாநாயகனை உருவாக்குகிருர் என்று வைத்துக் கொள்வோம். பிறகு ஒரு வில்லன் பாத்திரம் ஒன்றை உருவாக்குகிருர் என்று வைத்துக் கொள்வோம்.

''கதாசிரியர் எதை நியாயம் என்று கருதுகிருரோ, எது நீதிக்கு மாறுபட்டது அல்ல என்று கருதுகிருரோ அதனை அந்தக் கதாநாயகன் பாத்திரத்தில் வைப்பார். அதற்கு எதிர்மாருன கருத்தை—குணதிசயத்தை—எதிரியின் பாத்திரத்தில் வைப்பார். அப்படி அவர் சொல்கிறபோது இந்தச் சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் அந்த எழுத்தில் கூறுகிருர் என்று அர்த்தமாகிறது.

''ஆனுல் அதே எழுத்தாளர் கதாநாயகன், வில்லன் குணதிசயங்களை மாற்றியமைத்திருப்பாராஞல், அவர் இந்த நாட்டுச் சூழ்நிலையை மாற்ற முயலுகிருர் என்று அர்த்தம். ஆக எழுத்தாளர்களின் கடமை, மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

''தமிழர்க்குரிய பண்பை—தமிழர்க்குரிய கலாச்சாரத்தை-நிறைவேற்றும் காரியத்தைச் செய்ய எழுத்தாளன் என்று யார் முன்வந்தாலும்-அவர்களது கருத்தை மக்கள் ஏற்கிருர்களா இல்லையா என்பது பிரச்சினையல்ல-ஆனுல் அந்த எழுத்தாளர்கள் தங்களின் எழுத்தைப் பயன்படுத்தி எத்தனை பெரிய சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

## 'உறவுகள்' எடுத்துக்காட்டும் உண்மை

''இங்கே இளைஞர் ஒருவர் 'உறவுகள்' என்று எழுதி, நமது உறவுகள் எப்படிப்பட்டது, எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிருர்.

''அவரது 'உறவுகளில்' ராஜுகோபால், பரமேஸ்வரன், சிவகாமி என்று வருகிற எந்தப் பாத்திரமானுலும் அதன் உணர்வுகள்—அந்தப் பாத்திரங் மூலம் அவர் தெரிவிக்கிற கருத்துக்கள்—நிலைமைகள் சமுதாயத்தில் ஆங்காங்கே நடைபெறுகிற ஒரு பிரச்சினையின் எதிரொலிகள்தான் என்பதைப் படிப்பவர்கள் உணர முடியும்.



''கணவனை இழந்த ஒரு தாய் அனுதையாக்கப் படும்போது, அவரது மகன்-12 வயதுப் பையன் ஒரு மரத்தடியின் கீழ் சென்று வேலை செய்கிருன் என்று ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டியிருப்பது ஆங்காங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளின் வரைகோள் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''12 வயதுப் பையன் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வேலைக்குப் போகிருன்-உழைக்கிருன்-தியாகியைபபோல் வாழ்கிருன் என்பதல்ல பிரச்சினை. இந்த நாட்டில் வாழ்வதற்கு உரிமையுள்ள அவன் படித்துப்பட்டம் பெற்று வேலைக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது—இந்தச் சமூகம் அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறது என்பதைத்தான் ஆசிரியர் உணர்த்திக் காட்டுகிருர். எழுத்தாளர் எதைக் கூறினுலும், அது இந்தச் சமுதாயத்தின் நிலையை உணர்த்துவதாகவே இருக்கும்.

## மணிக்கொடியின் பணி !

''முன்பு முப்பது முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னுல் 'மணிக்கொடி' வாரப்பத்திரிகை வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். அந்தப் பத்திரிகையில், புதிய எழுத்தாளர்களை ஊக்குவித்தார்கள். அதன் விளைவாக, 'பாரதியார் தேசீய கவியா? மகா கவியா?' என்ற விவாதத்தைக் கூட நடத்திஞர்கள். இன்னும் என் மனத்தில் அது பசுமையாக இருக்கிறது. ஆனுல் அப்போது எனக்குள் ஏற்பட்ட கேள்வி எல்லாம்-நான் அப்போது காங்கிரஸ்காரன் என்பதை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்—'பாரதியார் மகாகவியா? தேசிய கவியா? என்பதற்காக இப்படி எழுத்துக்களைப் பயன்படுத்துகிருர்களே—அவர் தேசியக்கவியாக இருந்தால் என்ன? மகாகவியாக இருந்தால் என்ன? அவர் எப்படி இருந்தாலும் சுதந்திர தாகத்தை-விடுதலை உணர்ச்சியை - ஏற்படுத்தியவர் தானே என்று நான் கருதியதுண்டு என்பதை இங்கே தெரிவித்துக் கொள்வதில் தவறில்லை என்று கருதுகின்றேன்.

''எழுத்தாளரைப் பொறுத்த வரையில் எதிர்காலத்தில் அவர்களது உள்ளத்து உணர்வுகள் இன்னும் நம்பிக்கையுள்ளதாக—வன்மையுள்ளதாக ஆகுமே தவிர—பக்குவம் அதிகமாகுமே தவிர அதில் எப்போதும் குழப்பம் இருக்காது.

''நான் இங்கே ஒன்றை உறுதியாகச் சொல்வேன். இந்த நாட்டின் எதிர்காலம் உங்களது கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

''ஒரு விஷயத்தை நான் பல இடங்களிலும் சொல்லியிருந்தாலும் இங்கே சொல்வது பொருத்தம் என்று கருதுகின்றேன்.

''மணிக்கொடி பத்திரிகையில் ஒரு கதைப் போட்டி நடத்தப்பட்டது. அதில் மாணவர்கள் கலந்து கொண்டார்கள். ஒரு மாணவன் தற்கொலை செய்து கொள்ளும்போது என்ன உணர்வு இருக்கும் என்ற நிலையில், ஒரு பாத்திரத்தை அமைத்திருந்தான். தற்கொலை செய்து கொள்ளும் முன் என்ன உணர்வைப் பெற்றிருப்பார்கள் என்பதை எழுத்தில் காட்ட நினைத்த அந்த மாணவன் எதுவுமே தோன்ருத நிலையில், தானே தற்கொலை செய்து கொண்டு அந்த நேரத்தில் என்ன உணர்வு தோன்றுகிறது என்பதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டு ஒரு கத்தியை எடுத்து, தன்னையே அவன் குத்திக் கொண்டான். ஆனுல் அவனுக்கு அப்போது என்ன உணர்வு தோன்றிற்று தெரியுமா? சாவதற்குள் எழுதி முடித்து விட வேண்டும் என்றுதான் அந்த மாணவனுக்குத் தோன்றிற்று. அவனது முயற்சி வென்றது. புதிய எழுத்தாளர்கள் உருவாவதற்கு மணிக்கொடி காரணமாக இருந்தது என்பதை அனைவரும் அறிவீர்கள்.

## எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை!

''மணிக்கொடி பத்திரிகையில் அப்போது ஒரு அறிவிப்பு வெளியிட்டிருந்தார்கள் 'எழுதுகிற கதை வேறு மொழியைச் சார்ந்தது என்ருல், யாருடையது என்பதை எழுதிவிடுங்கள்' என்று அந்த அறிவிப்பு வெளிவந்தது. அப்போதே எவ்வளவு எச்சரிக்கையாக இருந்திருக்கிருர்கள் என்பதற்காக இதனைக் கூறுகின்றேன். இப்படிப்பட்ட பரிசுத் தொகைகள் அறிவிக்கப்படாத காலத்திலும்கூட, எப்படி எழுத்தாளர்கள் எழுத முன்வந்தார்கள் என்பதற்காகவும் இதனைச் சொல்கிறேன்.

''தமிழகத்தைப் பொறுத்த வரையில் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ் எழுத்தாளர்களுக்குப் பஞ்சமில்லை. தமிழ் எழுத்தாளர்களும், படித்த எழுத்தாளர்களும் இங்கே நிறையப் பேர் இருக்கிருர்கள்.

''நான் 'சிவகாமியின் சபதம்' கதையைப் படமாகத் தயாரிக்கத் தீர்மானித்திருந்த நேரத்தில் எனக்கு மலேசியா, ஊட்டி போன்ற இடங்களில் இருந்து கடிதங்கள் வந்தன. 'இங்கெல்லாம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இடங்கள் இருக்கின்றன. வாருங்கள்' என்று பலரும் கடிதம் எழுதியிருந்தார்கள். அந்த அளவுக்கு வரலாற்று விவரம் தெரிந்தவர்கள் இருக்கிருர்கள்.

''நான் கூறுவேன்-எழுத்தாளர்களுக்குப் பஞ்சம் என்று கூறுவதை நான் ஏற்கமாட்டேன்—இப்படிப்பட்ட பரிசுத் தொகை தரப்படுவது சாலப் பொருத்தமான செயல் என்பேன்.

**''எந்த நேரத்தில், எந்த கருத்தை, எப்படி சொல்வது என்பதைப் பொறுத்துத்தான், அவர்களது தியாகமும், அறிவாற்றலும் இந்த நாட்டில் புகழுக்குரிய இடத்தில் போய்ச் சேருகிறது.**

## அண்ணமலை அரசர் ஆற்றிய அரும்பணி !

''டாக்டர் அண்ணமலைச் செட்டியார் தமிழிசைக்குச் செய்த சேவை பற்றி இங்கே சொன்ஞர்கள். தண்டபாணி தேசிகர் தமிழிசையைப் பாடிஞர். அவரை மேடையேறச் செய்து மிளிரச் செய்தவர் அண்ணமலைச் செட்டியார் அவர்கள். மறைந்திருக்க வேண்டிய கட்டத்தில் பல இசைக் கலைஞர்கள் இருந்தபோது, அவர்களில் பலரைக் காத்துத் தனது கடமையைச் செய்தவர் அண்ணமலைச் செட்டியார்.

**''நீங்கள் ஆற்றும் தமிழ்த் தொண்டுகள் பாராட்டப்படாமலும் இருக்கலாம். ஆனுல் உங்கள் எழுத்துக்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளப்போகின்றன.**

''தமிழ்க் கருத்து—தமிழ்ப் பண்பாட்டுக்கான உறவுகள்—என்றைக்கு இந்த நாட்டை முழுமையாக ஆள்கிறதோ அன்றுதான் தமிழ் எழுத்துக்கள் விருப்பு, வெறுப்பின்றி காப்பாற்றப்படும்.

''பணம் வைத்திருப்பது பெரிதல்ல; அதைப் பிறருக்காகப் பயன்படுத்துவதுதான் அர்த்தமுள்ளதாக இருக்கும். அந்த வகையில் எம். ஏ. சிதம்பரம் அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்வதன் காரணமாக, நான் அவரது குடும்பத்தாரைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாவட்ட அளவில் எழுத்தாளர்களுக்குப் பரிசு!

''இந்த அறக்கட்டளை நடத்தி வருவதைப்போல, தமிழக அரசும் விரைவில் எழுத்தாளர்களுக்கான ஒரு சீரிய திட்டத்தைக் கொண்டு வர இருக்கிறது.

''பரிசுத் திட்டத்தை பெரிய அளவில் வைத்து அது ஒரு பரிசாக இல்லாமல், மாவட்ட வாரியாகப் பரிசுகளை வழங்கத் திட்டம் கொண்டு வரப்படும்.

''இது உங்கள் பணம்தான். மக்களின் பணம் மக்களுக்கே பயன் படட்டுமே என்ற நோக்கத்தில் இதைத் தெரிவிக்கிறேன்.

''தமிழில் அக்கறை எடுத்துப் படிப்போர் எதிர்காலத்தில் என்ன செய்வது என்ற கவலையில்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். தமிழ் படித்தவர்களுக்கு—தமிழர்களுக்கு—எதிலும் முதலிடம் தரப்பட்டாக வேண்டும் என்று நான் கூறுவது நியாயத்தின்பால் பட்டது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

''தகுதிகளைப்பற்றி—உறவு பற்றி ஆசிரியர் எழுதியிருக்கிறார். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழ் உறவு, தமிழர் உறவு, சமுதாய உறவு சமுதாயத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள உறவு—நிதிக்கும், நாணயத்துக்கும் (காசு) உள்ள உறவு—ஒழுங்குக்கும், மனிதனுக்கும் உள்ள உறவு—மனிதனுக்கும் நாட்டுக்கும் உள்ள உறவு—சாதிக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு—எழுத்துக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு—இவைகளைப்பற்றி நீங்கள் எழுதுவீர்களேயானால், நீங்கள் தமிழகத்தில் நல்ல காரியத்துக்கு வித்திட்டவர்கள் ஆவீர்கள். அந்த வித்து வேரூன்றி வளர்ந்துவிடும்.

''உங்களது உள்ளத்தில் என்னென்ன கேள்விக் குறிகள் இருக்கின்றன என்பது தெரிகிறது. எழுத்தை - அதிலும் தமிழ் எழுத்தை - ஆளுகிற நீங்கள் கேள்விக்குறிகளைக் கொண்டிருக்கிறீர்கள் என்பது புரியாமலில்லை.

''நீங்கள் என்ன கூறினாலும், யாரைப்பற்றிக் கூறினாலும்—பெரியோர் எதைக்கூடாது என்றனரோ அதைத் தவிர்த்து-நீங்கள் தமிழ்ப்பணியை வெளிக்காட்டுகிற கருத்தாக வெளியிடுங்கள்.



''அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற முன்வருபவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்கிறது. மதிப்பளிப்பதில்லை - மாச்சரியத்தை வாரி வீசுகின்றது. துணை புரிவதில்லை; தொல்லை தருகிறது. எனினும் அந்த ஒரு சிலரால்தான் நாடு முன்னேறுகிறது.

—அண்ணா

## தமிழ்ப்பண்பாட்டை வளர்த்து வழி காட்டுங்கள் !

''எல்லோருடைய கருத்தும் எல்லோருக்குமே ஏற்றதாக இருப்பதில்லை. உங்கள் கருத்து சிலருக்கு வெறுப்பானதாகக்கூட இருக்கலாம். தவறு செய்யும் சூழ்நிலைகள் அனுமதிக்கப்பட்டிருக்கிற இந்த நாட்டில், உங்களின் நல்ல கருத்துக்கள் சிலருக்கு வெறுப்பை யூட்டலாம். அது குறித்து நீங்கள் கவலைப்படாமல் தமிழ்ப் பண்பாட்டை நீங்கள் வளர்த்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 'கல்கி'யின் பெருமை !

''நம்மால் மதிக்கப்படுகிற 'கல்கி' அவர்கள் எழுதிய எழுத்து எனது நினைவில் பசுமையாக இருக்கிறது. இரண்டு பேருக்கு வாக்குவாதம் நடைபெறுகிறது. ஒருவர் வசதியில் உள்ள பெரியவர்-மற்றவர் தெருச்சண்டை போடுகிறவர். இருவரும் வாதம் புரிகின்றனர். அந்தத் தெருச் சண்டைக்காரரர், மூதாதையர்களையெல்லாம் சந்திக்கு இழுத்தார் என்று 'கல்கி' சுருக்கமாக எழுதியிருந்தார். மூதாதையரைச் சந்திக்கு இழுத்தான் என்று எழுதியிருப்பதில் நாம் அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

''ஒரே வார்த்தையில் பிரச்சினையை விளக்கிய 'கல்கி'யைப் போன்ற எழுததாளர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்.

''நான் எழுத்தாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; எழுதும்போது எங்களையும் மறந்து விடாதீர்கள் என்று. இப்படி நான் கூறுவது உங்கள் உள்ளத்தை ஈர்ப்பதற்காக அல்ல; நான் அடுத்த தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் கிடையாது-மக்களின் வாழ்வைப் பற்றிக் கவலைப்படுகிறவன்!

இந்த மூன்றுமாதக் காலத்தில் நான் பல பேர் கூறிய பிரச்சினைக்கு வாதம் செய்து அதைப் பெரிதுபடுத்தாமல் மக்களின் பிரச்சினைகளையே கவனித்து வருகிறேன். மக்களுக்கு நானும், எனது நண்பர்களும் சரியாகக் கடமையாற்றுகிறோமா என்பதில்தான் கவனம் செலுத்தி வருகிறேன்.

''எப்படிக் கடமையாற்றினால் தமிழர்களின் வாழ்வு பின்னால் மேன்மையுறும் என்று ஆய்ந்து பணிபுரிகிறோம். நீங்கள் சுட்டிக் காட்டும் குறைபாடுகளை எங்களுக்கு வழிகாட்டுகிறவைகளாக ஏற்போம்.

''நீங்கள் நேரடியாகச் சுட்டிக் காட்டாவிட்டாலும் கூட, கதையாக—வரலாறாக—குறிப்பிட்டுச் சொல்லலாமே!

## கடமைகளைச் செய்யுங்கள் !

''இந்தச் சமூகத்தில் எதைக் காண்கிறீர்களோ, அதை-அறிவின் மூலம் நிறுத்துப் பார்த்துக் கூறுங்கள்.

''சாதி, பணம் பற்றி கவலைப் படாதீர்கள். உங்கள் எழுத்துதான் இந்த நாட்டை உருவாக்கிடும். உங்களுக்கென்று குடும்பம் இருந்தாலும், அந்தப் பிரச்சினைதான் இங்கும் எதிரொலிக்கிறது என்பதை நினைவில் வைத்து உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

''இந்த நாட்டின் பண்பாட்டை யாரும் தகர்க்க முடியாத அளவுக்கு உங்கள் எழுத்துக்கள் பயன்பட வேண்டும்.

''ஒரு பக்கம் நீதிபதி-மறு பக்கம் வழக்கறிஞர்-இடையில் நான். இங்கே சமுதாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த அனைவரும் கூடியிருக்கிறீர்கள்.

''இந்த உறவுகள் தொடரட்டும்-வளரட்டும்.

''இந்த உறவுகளின் சொந்தக் காரரர் இன்னும் பல்லாண்டு எழுந்துச் சேவையாற்றிட என் அன்னையை இறைஞ்சுகின்றேன்.''



# செய்தி ஒலிபரப்புத் துறையில் சிந்திக்க வேண்டியவை!

1977 நவம்பர் 4-ஆம் தேதியன்று புதுடில்லியில் நடைபெற்ற செய்தித் துறை அமைச்சர்களின் 4-வது மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை :

—மாண்புமிகு செய்தி-சுற்றுலா அமைச்சர்
திரு. ஆர். எம். வீரப்பன்



தலைவர் அவர்களே! பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய என் நண்பர்களே!

மத்திய அரசின் செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு எல். கே. அத்வானி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சார்பிலும், என் சார்பிலும் முதற்கண் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு அத்வானி அவர்கள் நாட்டின் பொது வாழ்வில் உன்னதமான இடம் பெற்றிருப்பவர்; பாராளுமன்ற விவகாரங்களில் மிகச் சிறந்த அனுபவம் பெற்றவர். அத்துடன் எழுச்சி மிக்க நிர்வாகியாகவும், அரசியல் விவேக மிக்க பண்பாளராகவும் விளங்கி வருகிறார். இவ்வளவு இருந்த போதிலும் அவர் எளிமையே உருக் கொண்டவர். அவரால் அவரது பதவி, கண்ணியமும், பெருமதிப்பும் பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, எனது கருத்துக்கள் சிலவற்றை எடுத்து வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மத்தியிலும் மாநிலங்கள் பலவற்றிலும் புதிய அரசுகள் அமைந்து, நாம் முதல் தடவையாக இங்கே கூடியிருக்கிறோம். பல வரலாற்றுப் பின்னணியில், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், வெளியீடுகள் போன்றவற்றின் மூலம் மக்களுக்குச் செய்திகளைச் சொல்வதற்கான ஒரு கொள்கையை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ள குறிப்புச் சம்பந்தமான சில முக்கிய கருத்துக்களை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

## செய்தித் தாள்கள்

மாநிலச் சட்ட மன்றங்கள், நாடாளு மன்றம் ஆகியவற்றின் நிகழ்ச்சிகளைப் பிரசுரிக்கும் உரிமை பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டும். **தங்கள் பிரதிநிதிகள் என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு.** இதில் கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்றால், சட்ட மன்ற, நாடாளு மன்ற விதிமுறைகளின் கீழ் அவைத் தலைவர்கள், நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். இது சம்பந்தமாக விரைந்து நடவடிக்கை எடுப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

## செய்தித் தாள்களுக்குக் கடன் வசதி

செய்தித் தாள்களுக்குக் கடன் வசதி அளிப்பது வரவேற்கத் தக்கதே. எனினும்,



பத்திரிகை நடத்துவது இலாபகரமான தொழிலாக இல்லை. பத்திரிகைகளில் செய்யப்படும் முதலீடு பெரும்பாலும் திரும்பி வராமலே போவதுடன், அவை பெரு நட்டத்தில் மூடப்பட்டு விடுகின்றன.

எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால், தமிழ் நாட்டில் இரண்டு நாளிதழ்களுக்கு இயந்திரங்கள் வாங்குவதற்காக, தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடன்கள் வழங்கப்பட்டன. இந்த இரண்டில், ஒரு நாளிதழ் நட்டத்தில் மூடப்பட்டுவிட்டது. இன்னொரு நாளிதழ் நடந்து வருகிறது என்றாலும், அது கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இந்த அனுபவத்திலிருந்து நாம் அறிந்து கொள்வது என்னவென்றால், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான குறைந்தபட்ச உறுதிமொழி கொடுக்கப்பட்டால்தான், செய்தித் தாள்களுக்குக் கடன் வசதி அளிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

சிறு பத்திரிகைகளுக்குக் கடன் வசதி செய்வதோடு, வேறு வகைகளிலும் உதவலாமா என்பது பரிசீலனைக்குரியதாகும். எடுத்துக் காட்டாக அரசு வர்த்தகக் கழகத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பத்திரிகைக் காகிதம் சிறு பத்திரிகைகளுக்கு விலை அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெரிய பத்திரிகைகள் வெளி நாடுகளிலிருந்து மொத்தமாக வாங்கிக் கொள்ளுகின்றன. எனவே, சிறு பத்திரிகைகளுக்குக் குறைந்த விலையில், பத்திரிகைக் காகிதம் கிடைக்க ஏதாவது வழி செய்யலாம்.

## திரைப்படம்

**திரைப்படம் சமூகத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. செய்திகளைச் சொல்வதில் அதற்குள்ள சக்தி மகத்தானது. ஆயிரக்கணக்கானோருக்கு வேலையும், அரசுக்கு அதிக அளவில் வருமானமும் தரும் தொழில் இது.** இத்தொழிலுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. நாடெங்கும் இது நெருக்கடியில் உள்ளது. முக்கியமாகப் பிராந்தியப் படங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியத் திரைப்படத்தைப் பற்றி எண்ணும்போது, நாம் இந்திப் படங்களையே மனத்தில் கொள்கிறோம். இந்த அடிப்படையில் தான் திட்டங்களும், வரி விதிப்புக் கொள்கையும வகுக்கப்படுகின்றன. இந்திப் படங்களுக்கு இந்தியா முழுவதிலும், வெளிநாடுகளிலும் ஏராளமான மார்க்கெட் இருக்கிறது. ஒரு இந்திப் படத்திற்கு 40 இலட்சம் ரூபாய் முதல் ஒரு கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்படுகிறது. அதே நேரத்தில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராத்தி, வங்காளி போன்ற பிராந்தியப் படங்கள் குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றின் இலாபமும் குறைவே. பிராந்தியப் படங்களுக்கு நிதி, வெற்றிவாய்ப்பு சம்பந்தமாக உள்ள இத்தகைய அம்சங்களை நிதி அமைச்சகம் கருதிப் பார்ப்பதாகவே தோன்றவில்லை என்பதை இங்கே வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. இன்று பிராந்தியப் படங்கள், வாய்ப்பும், வசதியும் அதிகம் பெற்றுள்ள இந்தி, மற்றும் வெளிநாட்டுப் படங்களோடு போட்டி போட முடியாமல் தவிக்கின்றன. மத்திய நிதி அமைச்சகத்தின் வரி விதிப்புக் கொள்கையால் அவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் ஸ்டூடியோக்கள் மூடப்படுவதும், தொழிலாளர்களும், கலைஞர்களும் வேலையிழப்பதும், நடுத்தர, ஏழை மக்களுக்குப் பொழுதுபோக்கு வசதி இல்லாமல் போவதுமான நிலை உருவாகிறது. இதனால் மாநில அரசின் வருமானமும் பெருமளவில் குறையும் என்பது எனது கருத்து. இந்தப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண்பது அவசியம்.

## திரைப்படங்கள் மீதான 'எக்ஸைஸ்' வரி

திரைப்படங்கள் மீது 'எக்ஸைஸ் வரி' விதிக்க அண்மையில் செய்யப்பட்ட முடிவு, பிராந்தியப் படங்களைப் பொறுத்த வரை மிக மோசமான விளைவுகளை உண்டு பண்ணும்.

முதலாவதாக, வெளியிடப்பட்ட 12 மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்படும் பழைய கறுப்பு வெள்ளைப் படத்தின் 'பிரிண்டு'களுக்கு விதிக்கப்படும் 'எக்ஸைஸ்' வரி பெரும் சுமையாகும். இவ்வளவு காலமாக இவைகளுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிக்கப்படவில்லை. 1975-இல் வரி விதிக்கப்பட்ட போது கூட, அது பற்றி எடுத்துச் சொன்ன நேரத்தில், சில மாதங்களுக்குப் பிறகு, கறுப்பு வெள்ளை பழையப் படங்களின் பிரதிகளுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிப்பிலிருந்து அப்போதைய நிதியமைச்சர் விலக்களித்தார். இந்தச் சலுகை பிராந்தியப் படங்களுக்காவது உடனடியாக அளிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு அதிக இழப்பு ஏற்பட்டுவிடாது. பழைய படங்களுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிக்கப்பட்ட பிறகு, திரைப்படச் சுருள்களின் விற்பனை குறைந்துவிட்டதாக இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் நிறுவனம், இந்திய அரசுக்குத் தெரிவித்திருப்பதையும் நான் இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.





இரண்டாவதாக, படப்பிரதிகளுக்கு 'எக்ஸைஸ்' வரி விதிப்பில் தற்போது கையாளப்படும் முறை பிராந்தியப் படக் கொள்கைக்கு உதவிகரமாக இல்லை. முதல் 12 பிரதிகளுக்கு வரி இல்லை. 13-லிருந்து 24 வரை பிரதிகள் எடுக்கப்பட்டால், பிரதி ஒன்றுக்கு ரூ. 2,500 வசூலிக்கப்படுகிறது. 24 முதல் 36 பிரதிகள் எடுக்கப்பட்டால் பிரதி ஒன்றுக்கு ரூ. 7,500 விதிக்கப்படுகிறது. பிராந்தியப் படத் தயாரிப்பாளர்களுக்கு இது பெரும் சுமையாகும். பொதுவாக, பிராந்திய மொழிகளில் 24 முதல் 36 வரை பிரதிகள் எடுக்கப்படுகின்றன. ரூ.; 2,500-லிருந்து ரூ. 7,500 வரை என்று வரியை ஒரேயடியாக உயர்த்தியிருப்பது பெரிதும் பாதிக்கக்கூடியதாகும். இது ரூ. 5,000க்குக் குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



## திரைப்பட ஏற்றுமதி

தற்போது 'இம்பெக்' நிறுவனம்இந்தியப் படங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. அதே நேரத்தில், நீண்ட காலமாக இந்தியப் படங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்த தனியார் சிலரும் திரைப்படங்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், குறிப்பிட்ட 10 நாடுகளுக்கு 'இம்பெக்' நிறுவனம் மட்டுமே ஏற்றுமதி செய்வதாகவும், தனியார் அனுமதிக்கப்படுவதில்லை எனவும் தெரிகிறது. இந்தத் தடை, தனிப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கும் படத் தயாரிப்பாளர்களுக்கும் பல சங்கடங்களையும், பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது. இந்த 10 நாடுகளுக்கு ஏகபோக உரிமை பெற்றுள்ள 'இம்பெக்' நிறுவனம், எல்லாப் படங்களையும் ஏற்றுமதி செய்ய உறுதியளிப்பதாகவும் தெரியவில்லை. எனவே, தனியார் திரைப்படம் ஏற்றுமதி செய்யத் தடையேதும் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் தவறுகள் நேருமானால், அவற்றைத் தடுக்க, தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அதை விடுத்து, திரைப்படத் தொழிலின் வளர்ச்சியைத் தடை செய்வது விரும்பத்தக்கது அல்ல.

இந்தியப் படங்களுக்கும், தமிழ்ப் படங்களுக்கும் இலங்கையில் முன்பு நல்ல கிராக்கி இருந்தது. அது இப்போது குறைந்துவிட்டது. மேலும் இலங்கையில் திரைப்பட இறக்குமதி நாட்டுடைமையாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தியப் படங்களுக்கு-முக்கியமாக, தமிழ்ப் படங்களுக்கு-வழங்கப்படும் தொகை மிகவும் குறைக்கப்பட்டுவிட்டது. பழைய தொகையில் நான்கில் ஒரு பாகம் தான் இப்பொழுது கிடைக்கிறது. இது திரைப்படத் தொழிலைப் பெரிதும் பாதித்திருப்பதுடன், திரைப்பட ஏற்றுமதி மூலம் அரசுக்கு வரும் வருமானத்தையும் குறைத்திருக்கிறது. இலங்கை போன்ற நாடுகளுக்கு திரைப்பட ஏற்றுமதியை 'இம்பெக்' மேற்கொண்டால், அதன் மூலம் அரசும், தொழிலும் பலன் பெறும். இதைச் செய்யாமல், தனியார் உருவாக்கிய மார்க்கெட்டை 'இம்பெக்' ஏகபோகமாக்கிக் கொள்வதால் அரசுக்கோ, திரைப்படத் தொழிலுக்கோ நன்மை ஏதும் விளையாது.

இறுதியாக, இலங்கை அரசோடு வணிக ஒப்பந்தங்கள் மூலம், அந்நாட்டுக்கு அதிகத் திரைப்படங்கள் ஏற்றுமதி ஆகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி உடன்பாடு காண வர்த்தக அமைச்சகத்தை வலியுறுத்தும்படி மத்திய செய்தி அமைச்சரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்றுமதியாகாத பிராந்திய மொழிப் படங்களுக்கு வண்ணக் கச்சாப் படச் சுருள் வாங்குவதில் மிகுந்த சங்கடங்கள் இருக்கின்றன. வண்ண மற்றும் கறுப்பு வெள்ளை படச் சுருள்களின் விலைகளைக் குறைக்கவும், இறக்குமதியைச் சற்றுத் தாராளப்படுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

## படத் தணிக்கை

அரசு கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு அம்சம் படத் தணிக்கையாகும். **படத் தணிக்கை, கால மாறுதலுக்கேற்ப இருக்க வேண்டும். சமூகம் அப்படியே இருப்பதன்று. சமுதாய இலட்சியங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. மக்களின் மனப் போக்கைப் புரிந்துள்ளவர்களே தணிக்கைக் குழுவில் இடம் பெற வேண்டும்.** அவர்களும் கூட அவ்வப்போது மாற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் இலட்சிய நோக்கில் தேக்கம் இருக்காது. நாம் எத்தகைய வழிகாட்டி விதிகளைப் பிறப்பித்தாலும், இது மிகவும் நுட்பமான விஷயமாகும்.

இந்த நாட்டில், படத் தணிக்கையில் எந்த ஒரு சீரான கொள்கையும் பின் பற்றப் படவில்லை என்பதை நான் , மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு மாநிலத்தின் தற்போதையக் கலாச்சாரத்தின் அடிப்படையில், படத் தணிக்கை செய்யப்படுகிறது என்ற வாதம், நம்முடைய நாட்டைப் போன்றதொரு பெரிய நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. சில மொழிப் படங்களுக்குச் சில சலுகைகள்

காட்டப்படுகின்றன. ஒரு இந்தி அல்லது மலையாளப் படத்தை, அந்த மொழி பேசுகிற மக்கள் மட்டும் பார்ப்பதில்லை. அது நாடு முழுவதும் திரையிடப்படுகிறது. ஒரு இந்தி அல்லது மலையாளப் படத்திற்கு அவர்களது கலாச்சாரம் அல்லது மரபு என்ற போர்வையில் பின்பற்றப்படுகிற நடைமுறை, மற்ற மொழிப் படங்களுக்கு மறுக்கப்படக் கூடாது. இதனால், மற்ற மொழிப் படங்கள் வர்த்தக ரீதியில் மார்க்கெட்டில் போட்டியிட முடியாமல் அழிந்துவிட நேரிடும். இது மட்டுமல்லாமல், அந்நியப் படங்களைத் தணிக்கை செய்வதில் காட்டப்படும் பாரபட்சம், இந்த நாட்டின் பிராந்திய மொழிப் படங்களை வர்த்தக ரீதியில் பாதித்துள்ளது. எனவே, ஒரு பிராந்தியத்தின் கலாச்சார உணர்வினை மதிக்கும் அதே நேரத்தில், திரைப்படத் தொழிலுக்குப் பொருளாதார வகையில் உதவக் கூடிய தணிக்கை முறைக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாகப் பிராந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழுக்களுக்கு ஆலோசனைக் குழு அங்கத்தினர்களை நியமிப்பது பற்றி மாநில அரசுகளுக்கு உள்ள குறைபாட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.



ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும் பொழுது, மாநில அரசுகள் கலந்து கொள்வதில்லை. திரைப்படத் தணிக்கைக் குழுக்கள், சட்டப்படியான அமைப்புக்களாக இருந்தாலும் மாநில அரசுகளோடு கருத்துப் பரிமாற்றத்திற்கு வகை செய்யலாம். இதற்காக அவசியமானால், சட்ட விதிகளைத் திருத்தம் செய்யலாம்.

படத் தயாரிப்பு விதி முறை தெளிவில்லாமல் இருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அதற்கு விளக்கமளிக்கிறார்கள். திரைப்படங்களில், பல்வேறு பொருள்களைப் படைப்பதில், எவ்வளவு தூரம் செல்லலாம் என்பது குறித்து தெளிவாக—திட்டவட்டமான—வழிகாட்டி நெறிமுறைகள் படத்தயாரிப்பாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கையில், திரைப்படத் தொழில் துறையினரைக் கலந்து கொண்டு அவ்வப்பொழுது மாற்றங்கள் செய்வதும், அதுபற்றி அவர்களுக்கு முன்னதாகவே சரியாக எடுத்துச் சொல்வதும் அவசியமாகும்.

படத் தணிக்கை செயல்படுவதில் சென்னை சம்பந்தப்பட்ட வரை தற்போது உள்ள சில சங்கடங்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சென்னையிலுள்ள பிராந்திய அலுவலகம் ஆண்டொன்றுக்கு பல்வேறு மொழிகளைச் சார்ந்த 250 திரைப்படங்களை இரண்டே அலுவலர்களின் துணை கொண்டு தணிக்கை செய்ய வேண்டியுள்ளது. இதனால் படத் தணிக்கைச் சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இந்த அலுவலகங்களை விரிவுபடுத்தலாம். மொழி மாற்றம் செய்யப்படும் படங்களைப் பொறுத்த வரையில், வசனம், பாட்டு தவிர படமே மீண்டும் தணிக்கை செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. பிராந்தியக் குழுவுக்கு எதிராக மேல்முறையீடு செய்ய, ஒரு மன்றமும், அதற்குமேல் நீதி மன்றமும் என்ற வகையில் இருக்க வேண்டும்.

அண்மை மாதங்களில் தணிக்கைச் சான்றிதழ் பெற மறுபதிவு 'பிரிண்டு'களுடன் முதல் 'பிரிண்டை'யும் அங்கத்தினர்களுக்குக் காட்ட வேண்டுமென்று படத் தயாரிப்பாளர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். இதனால் காலதாமதம் ஏற்படுவதால் 'பிரிண்ட்' எடுத்த பிறகு சொல்லப்படும் மாற்றங்களைச் செய்வதில் பெரும் பொருள் இழப்பும் ஏற்படுகிறது. எனவே மறுபதிவுப் 'பிரிண்டு'களைக் காட்டும் வழக்கத்தையே தொடர்ந்து கடைப்பிடிக்கலாம். மேலும், சான்றிதழ் வழங்குவதில் பிராந்திய அலுவலகத்திற்கு இன்னும் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும்.



## வானொலியும், தொலைக்காட்சியும்

வானொலி சிற்றூர்களையும் எட்டக்கூடிய நிலையில் இருப்பதால், மத்திய, மாநில அரசுகளின் வளர்ச்சிப் பணிகளை மக்களுக்கு விளக்கிச் சொல்வதில் அது பயனுள்ள வகையில் பணியாற்ற முடியும். வானொலி மத்திய அரசுக்குச் சொந்தமாக இருந்தபோதிலும், பிராந்திய மக்களுக்குச் செய்தி விளக்கம் அளிக்கும் பணியை அது மேற்கொள்ளவேண்டும். வானொலிமூலம், திட்டங்களைப் பயனுள்ள முறையில் அமலாக்குவதில் மாநில அரசுகளின் பங்கை நான் விரித்துரைக்க விரும்பவில்லை. உள்ளூர் மக்களின் உணர்ச்சிகளைக் கருத்தில் கொள்வதன் மூலம், இயற்கை விபரீதங்கள், கலகங்கள் ஏற்படும் பொழுது, வானொலி மகத்தான பணியாற்றும். வானொலி மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து பயனுள்ள வகையில் திறம்படப் பணியாற்றுவதற்குத் தெளிவான கொள்கையொன்றை உருவாக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரை, இன்னும் சில பகுதிகள் வானொலியின் ஒலிபரப்பு வரம்புக்குள் வராமலிருக்கின்ற காரணத்தினால், செய்திகள் பயனுள்ள வகையில் சென்று எட்ட, தற்போது உள்ள வானொலி நிலையங்களை உடனடியாக மேலும் வலுப்படுத்த வேண்டும் என நான் எண்ணுகிறேன். சென்னை 'ஏ' நிலையத்தின் ஒலிபரப்புச் சக்தியை 20 கி.வா.விருந்து, 300 கி.வா.ஆகவும் சென்னை 'பி' நிலையத்தின் ஒலிபரப்புச் சக்தியை ஒரு கி.வா.விருந்து 20 கி.வா.ஆகவும், அதிகரிக்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன். மதுரை மாநகரம், தமிழகத்தின் மத்தியில் அமைந்துள்ள முக்கியமான ஒரு பெரு நகராகும்; அங்கு ஒரு 50 கி.வா. வானொலி நிலையம் அமைக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும்.

சென்னை தொலைக்காட்சி நிலையத்தைப் பொறுத்த வரை, அதன் ஒளிபரப்பு எல்லைக்குள் சென்னை மாநகரமும், செங்கற்பட்டு மாவட்டமும், வட-தென் ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளும் மட்டுமே வருகின்றன. விவசாய முக்கியத்துவம் உள்ள தஞ்சை, திருச்சி மாவட்டங்களின் சிற்றூர்களும் தொலைக்காட்சி வசதியைப் பெறும் வகையில்



மதுரையில் ஒரு தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தை நிறுவலாம். அங்கு 10 கி. வா. 'டி.வி. டிரான்ஸ்மிட்டரும்', 150 மீட்டர் 'டி.வி.' கோபுரமும், மூன்று ஒரங்குல 'வீடியோ டேப் ரிக்கார்டர்களும்' (Video tape recorders) ஏற்படுத்தலாம். இதனால், ஒரு கோடி மக்கள் பயன் பெறுவர். இது இல்லாவிட்டால், 1 கி. வா. டி. வி. டிரான்ஸ்மிட்டரும், 100 மீட்டர் கோபுரமும், 3 ஓரங்குல 'வீடியோ டேப் ரிக்கார்டுகளும்' அமைக்கலாம். இவை எடுத்துக்கொள்ளப்பட்டால், தெற்கே முழு வசதிகள் கொண்ட 'எஞ்சினியரிங்' பிரிவு ஒன்று இருக்க வேண்டும். ஏற்கனவேயுள்ள நிலையத்தின் பராமரிப்பு, தொழில் நுட்ப அலுவலர்கள் கிடைப்பதைச் சார்ந்து செயல்படக் கூடியதாக உள்ளது. இந்தப் பின்னணியில்தான், சென்னையிலுள்ள 'எஞ்சினியரிங்' பிரிவை, டில்லிக்கு மாற்றும் முயற்சி உதவிகரமாக இருக்காது என்று மாநில அரசு கருதுகிறது. இது பற்றி, ஏற்கெனவே நாங்கள் உங்களுக்கு எழுதியிருக்கிறோம். சென்னையிலிருந்து 'எஞ்சினியரிங்' பிரிவை மாற்ற வேண்டாம் என்று மீண்டும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வானொலியையும், தொலைக்காட்சியையும் தன்னாட்சி உரிமையுள்ளனவாகச் செய்வது பற்றிய எங்கள் கருத்துக்களை நாங்கள் பி.ஜி. வர்க்கீஸ் குழுவிற்கு அனுப்பியுள்ளோம். அது சம்பந்தமாக, இங்கே நான் உங்கள்நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

## வெளியீடுகள்

'வேலைவாய்ப்பு'—இதழ் பிராந்திய மொழிகளில் கொண்டு வருவது பற்றி நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். வாய்ப்பு நேருகின்ற இடங்களில், வேலைவாய்ப்பு இதழைத் தமிழக அரசு பயன்படுத்தி வருகிறது. நாங்கள் தொடர்ந்து அவ்வாறு செய்வோம். இதை, வர்த்தக ரீதியில் ஆன வெளியீடாக மட்டும் கருதக் கூடாது. வேலைவாய்ப்பு கிடைக்காமலிருக்கும் ஏழை இளைஞர்களுக்கு உதவி அளிப்பதை அது நோக்கமாய்க் கொண்டுள்ளது. மானிய உதவி பெறும் வெளியீடாகக் கூட அது தொடர்ந்து இருப்பது அவசியம். அதன் விற்பனைக்கான முயற்சிகள் போதிய அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்று நான் கருதுகிறேன். மொழிப் பதிப்புக்களை தொடர்ந்து வெளியிடுமாறும், விற்பனைக்கும் விளம்பரத்திற்கும் தீவிர இயக்கம் ஒன்றை ஆரம்பிக்குமாறும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## தேசீய இயக்கங்கள்

பெரிய தேசீய இயக்கங்களுக்கான உங்களது கருப்பொருள்களை நான் வரவேற்கிறேன். இம்மாதிரியான எல்லா இயக்கங்களிலும் தமிழக அரசு ஒத்துழைக்கும். இவை வெற்றிகரமாகச் செயலாற்றப்படுவதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய அரசின் பாடல் மற்றும் நாடகப் பிரிவு தென்புலத்தைச் சேர்ந்த தேசீயத் தலைவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டில் அவர்கள் கவி சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒலி—ஒளிக் காட்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள். அது மகத்தான வெற்றி கண்டது. தற்போது இந்தப் பிரிவின் ஒரு குழு சென்னையில் இருப்பதால், தேசிய ஒருமைப்பாடு பற்றிய நாடகங்களை அவர்கள் உருவாக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசு அளித்து வரும் எல்லா வகையான ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் நாங்கள் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

நன்றி. வணக்கம்.

# பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட் [பெருநகர்ப் பிரிவு]

அண்ணாசாலை : : சென்னை—600 002

*பல்லவன் போக்குவரத்துக் கழகம், தனது பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்களுக்குப் பின்கண்ட சலுகைகளை வழங்குகிறது.*

* இரு கண்களிலும் முழுஅளவில் பார்வை இழந்தவர்கள் நகர எல்லைக்குள் பயணம் செய்ய "இலவச அனுமதிச் சீட்டுகள்" (FREE PASS) வழங்குதல்.
* முடமானவர்களும், புற்றுநோய்ப் பிணியாளர்களும் சிகிச்சை பெறுவதற்காகத் தங்கள் இல்லத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்லவும், மருத்துவமனையிலிருந்துத் திரும்ப இல்லத்திற்குச் செல்லவும் "இலவச அனுமதிச் சீட்டுகள்" வழங்குதல்.
* அன்றாடம் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்பட்டு குறிப்பிட்ட இடம் சென்று பணியாற்றிவிட்டுத் திரும்புகின்றவர்களுக்கு 1/3 சலுகை விகிதத்தில் "மாதாந்திர பருவப் பயணச்சீட்டு" வழங்குதல்.
* மாணவர்கள் தங்கள் இல்லத்திலிருந்து கல்வி நிலையங்களுக்குச் செல்லவும், கல்வி நிலையங்களிலிருந்துத் திரும்ப இல்லத்திற்குச் செல்லவும் 1/2 கட்டணத்தில் (கட்டணம் திருத்தப்படுவதற்கு முந்திய விகிதத்தில்) மாணவர்களுக்குச் சலுகைப் பயணச் சீட்டு வழங்குதல். மேலும், எல்லா வழித்தடங்களிலும் மாணவர்கள்—மாலைநேரக் கல்லூரி மாணவர்கள் உட்பட—கல்வித் தொடர்பான பணிகளுக்காகப் பயணம் செய்வதற்காக, "15 ரூபாய் பருவப் பயணச் சீட்டு" வழங்குதல்.

*மேலும் விவரங்கள் அறிய தயவுசெய்து பின்கண்ட அலுவலரை நேரில் தொடர்பு கொள்ளலாம்.*

மக்கள் தொடர்பு அலுவலர்,<br>
பல்லவன் போக்குவரத்துக் கழகம் லிமிடெட்,<br>
[பெருநகர்ப் பிரிவு],<br>
அண்ணாசாலை, சென்னை—600 002

*அல்லது தொலைபேசி மூலமாகப் பின்கண்ட எண்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.*

**846980,**<br>
**846063**—எக்ஸ்டென்ஷன்—36

சி. ஏ. ஸ்ரீனிவாசன்,<br>
நிருவாக இயக்குநர்.

Advt. டிஐபிஆர். 54792/77





# பால்வளத் துறையின் பாங்கான பணிகள்!

மாண்புமிகு<br>
வேளாண்மைத் துறை அமைச்சர்<br>
திரு. ப. குழந்தைவேலு



இயற்கை அளித்துள்ள முழுமையான சிறந்த உணவாகப் பால் கருதப்படுகின்றது. மனித உடல் நலமுடனும், வளமுடனும் இருப்பதற்குத் தேவையான எல்லாவகைச் சத்துப் பொருள்களும் இதன்கண் உள்ளன. உழவர்கள் பயிர்த்தொழிலை முக்கியமாகக் கொண்டிருப்பினும், பாற் பண்ணை அவர்களது துணைத் தொழிலாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் கறவை மாடுகள் ஒவ்வொன்றும் சராசரி கொடுக்கக்கூடிய பால் அளவும், நபர்வாரியாக நுகரும் பால் அளவும் உயர்ந்த தரத்தை அடையவில்லை. ஒரு மனிதனுக்குரிய சமநிலை உணவுக்கு, நாளொன்றுக்கு 300 கிராம் பால் தேவைப்படுகிறது. அனைத்து இந்திய அடிப்படையில் நபர் வாரியாகக் கிடைக்கும் சராசரி பால் அளவு 130 கிராம். ஆனால், கால்நடை வளர்ப்புப் பற்றிய செயற் குழு மதிப்பீட்டின்படி, தமிழ்நாட்டில் நபர் வாரியாகக் கிடைக்கும் பால் அளவு 63 கிராம் மட்டுமே ஆகும்.

ஆகவே குடியானவர்களுக்கு உகந்த, தனித்துச் செயல்படக்கூடிய ஒரு தொழிலாக பாற் பண்ணையை உருவாக்குவதற்காகவும், மக்களின் உணவில் சத்துக் குறையை ஈடு செய்வதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

மாதவரத்தில் உள்ள கால்நடைக் குடியிருப்புக்கும், பாற்பண்ணைக்கும் பால் வளத்துறை பொறுப்பேற்றுள்ளது. தமிழ்நாட்டில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் ஏனைய பாற்பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது. ''பால் பெருக்கு திட்டத்தின்கீழ்'' இம்மாவட்டங்கள் அடங்கா.

செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், தருமபுரி நீலகிரி, மதுரை ஏனைய 8 மாவட்டங்கள் **"பால் பெருக்குத் திட்டத்தின்"** கீழ் வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுப் பால் வழங்கு சங்கங்கள்-ஒன்றியங்கள் அனைத்தின் நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடும் பொறுப்பும் இத்துறைக்கு வந்துள்ளது.

## பால் பெருக்குத் திட்டம்

உலக உணவு நிறுவனத்தின் 618-ஆம் எண் திட்டம் ''பால் பெருக்குத் திட்டம்'' என அழைக்கப்படுகிறது. இத்திட்டம், பால் உற்பத்திச் செலவைச் சிக்கனப்படுத்திச் சீராக்கவும், கிராமங்களில் கிடைக்கும் பாலை வாங்கிப் பதப்படுத்தி, பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை போன்ற பெரிய நகரங்களில் விற்பனை செய்வதற்காகவும் வகுக்கப்பட்ட ஒரு பாற்பண்ணை வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டமாகும்.

பால் வழங்குதலைப் பரவலாக விரிவுபடுத்தி மக்கள் வாங்கும் சக்திக்கேற்ற விலையில் அதனை விற்பனை செய்வதற்காக, உலக உணவு நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்படும் ஆடை நீக்கிய பால் பொடியையும், வெண்ணெய்யையும் பயன்படுத்துவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

உலக உணவு நிறுவனத்தின் உதவி, ஆடை நீக்கிய பால் பொடி வடிவிலும், வெண்ணெய் வடிவிலும் அமைகிறது. பால் உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, நான்கு பெருநகர் பாற் பண்ணைகளில் இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களின் விலைமதிப்பு, பால் உற்பத்தி, பெருக்கம், பாற்பண்ணைகள் நிறுவவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலே சொல்லிய பொருட்களைப் பயன்படுத்திப் பாலை வேண்டிய அளவுக்குத் தொடர்ந்து அளிப்பதற்கு ஏற்ப செய்முறைப் பதன வசதிகள் கூடுதலாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் கீழ் நிதி உதவி 70 சதவீதம் கடனுகவும், 30 சதவீதம் மானியமாகவும் கிடைக்கிறது. தமிழ்நாட்டுக்கு ரூ. 887 இலட்சம் முதலில் ஒதுக்கப்பட்டது. இதில் ரூ. 475.86 இலட்சம் இதுவரை கொடுக்கப்பட்டுள்ளது. 1976-77-ஆம் ஆண்டின் முடிவில் ரூ. 470.71 இலட்சம் செலவிடப்பட்டது.

தமிழ்நாடு பால்வள நிறுவனம், பாலைக் கொள்முதல் செய்து, செய்முறைப் பதப்படுத்தி, சென்னை, மதுரை மாநகரங்களுக்கு விற்பனை செய்வதையும், பால் பெருக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதையும், ஏற்றுள்ளது. தமிழ்நாட்டில் பால் உற்பத்தி அளவை உயர்த்துவதில், கிராமங்களில் பரவலாக அமைந்துள்ள பால் கூட்டுறவுகள் குறிப்பிடத்தக்க பணியினைச் செய்து வருகின்றன.

## ஆனந்த் பாணிச் சங்கங்கள்

பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் 'ஆனந்த்' பாணியில் அமைக்கப்பட்ட புதிய வகை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன. இது வரையில் 1,133 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களின் சிறப்பு அம்சங்களாவன:



எர்த்தாங்கல் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அவர்கள், உறுப்பினர்களுக்குப் பணம் வழங்குகிறார்.

(அ) முன்பு அமைக்கப்பட்டு வந்த சங்கங்களில், பாலின் அளவின் அடிப்படையில் மட்டும் பணம் செலுத்தப்பட்டு வந்தது. இதற்கு மாறாகப் புதிய சங்கங்கள் அந்த இடத்திலேயே ஒவ்வொருவர் தரும் பாலில் கொழுப்புச் சத்து எவ்வளவு என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் பாலுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) சங்கங்கள் கடனை மையமாகக் கொண்டதல்ல.

(இ) இச்சங்கம் உற்பத்தியாளர் நலனை ஆதாரமாகக் கொண்டதாகும்.

(ஈ) உள்ளூர் விற்பனையில் இது ஈடுபடுவதில்லை.

(உ) பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடை மருத்துவப்பணி, செயற்கை முறைக் கருத்தரிப்பு, கால் நடைச் சமநிலைத் தீவனம் முதலிய அடிப்படை வசதிகள், உறுப்பினர்கள் இருப்பிடங்களிலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

(ஊ) இத்தகைய உற்பத்தியாளர்கள் சங்கங்களின் செயலாளர்கள், செயற்கைக் கருத்தரிப்புப் பணி செய்யும் முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

(எ) உற்பத்தியாளர் சங்கங்கள் அமைப்பதற்கும், பாரம்பரியமாக உள்ள சங்கங்களை 'ஆனந்த்' பாணியில் மாற்றியமைப்பதற்கும் முன் ஆய்வுப் பணியும், சிக்கன முறையில் பால் சேகரிப்பு மார்க்கங்களை நிர்ணயிப்பதும் அவசியமாகும்.

பால் வள நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 137.96 இலட்சமாகும். தமிழ்நாடு அரசிடமிருந்து பால்வள நிறுவனம் எடுத்துக் கொண்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 241 இலட்சமாகும்.

1975-76-ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வியாபாரத் தொகை ரூ. 13 கோடியாக இருந்தது. இது 1976-77-ல் ரூ.22 கோடியாக உயர்ந்தது. 1977-78-ல் ரூ. 25 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 1977-78-ஆம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கத்தில் கீழ்க்காணும் முக்கிய திட்டப் பணிகளை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது :-

(அ) மேலும் குளிர்பதன வசதி தேவையில்லாமல் பாலை நீண்ட காலத்திற்குத் தரமாக வைத்திருக்கும் பொருட்டு, பாலைப் பதம் செய்யும் நவீன இயந்திரம் ஒன்றை நிறுவுதல்; இந்த இயந்திரம் 10,000 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். தற்போது திருநெல்வேலியில் பாலைப் பதம் செய்யும் இயந்திரம் ஏதும் இல்லாததால், இந்த இயந்திரத்தை அங்கு நிறுவக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட கொள்முதல் குழுவுக்குக் கூடுதலாக உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைப்பதற்காக, மேலும் இரண்டு மாவட்டங்களில் கொள்முதல் குழுக்களை அமைக்கக் கருதப்படுகிறது.

(இ) திருச்சிராப்பள்ளி, மற்றும் இரு மாவட்டங்களில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, 1977-78-ஆம் ஆண்டில் 3 நடமாடும் கால்நடைப் பிரிவுகள் தொடங்கப்படும்.

(ஈ) தோராயமாக இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 4,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட குளிர்பதன நிலையம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம் நாங்குவேரியில் அமைக்கப்படும்.

### 1977-1978-ஆம் ஆண்டிற்காக அங்கீகாரம் பெற்ற நிதி ஒதுக்கீடு பற்றியவை விவரம் பின்வருமாறு :

| | 1977-78 வரவு செலவு திட்டத்தின் மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பால் கொள்முதல் திட்டம் | 2.97 |
| அரசு, பால் பண்ணைக்குச் சாதனங்கள் வாங்குதலும், கட்டடங்கள் கட்டுதலும் | 0.77 |
| கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு நிறுவுதல் | 2.20 |
| சென்னையிலுள்ள அரசுப் பாற் பண்ணையை விரிவுபடுத்தல் | 2.26 |
| கலப்பினக் கால் நடைகளின் இரத்தத்தில் உள்ள சிவப் பணு (ஹீமோகுளோபின்) குறித்த ஆராய்ச்சி | 0.12 |

எர்த்தாங்கல் கிராம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து பால் அனுப்பப் படுகிறது.



| | |
|---|---|
| தொழில்நுட்ப வசதித் திட்டம் | 0.02 |
| துறை அளவிலான குளிரவைக்கும் நிலையம் | 2.00 |
| பாலை முறைப்படிச் சூடாக்கிச் சுத்தம் செய்யும் நிலையம் தொடங்குதல் | 5.00 |
| மொத்தம் | 15.34 |
| **கூட்டுறவு** | |
| பால்வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவியும், கால்நடைகள் வாங்குவதற்குக் கடனுதவியும் | 22.00 |
| வாகனங்கள் வாங்குவதற்குக் கடன் | 2.00 |
| பால் வழங்கு சங்கங்களின் நிர்வாக தொழில் நுட்பப் பணியாளர் வகையில் இச்சங்கங்களுக்கு உதவித் தொகை | 0.73 |
| | 24.73 |
| பால் பண்ணை வளர்ச்சிக்கு கூடுதல் மொத்தம் | 40.07 |

மேலே கூறப்பட்ட விவரங்கள், திட்டப் பணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட செலவாகும். 1977-78-ஆம் ஆண்டில், கோரிக்கை எண்கள் 10-ன் கீழும், 56-ன் கீழும், திட்டத்தின் கீழ் வராத பணிகளின் கணக்கில் ரூ. 95.36 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பால் பண்ணைப் பராமரிப்பிற்கான செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதால், திட்டத்தின்கீழ் வராத பணிகளின் செலவும் அதிகரிக்கின்றது. ஆகையால் 1977-78-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மொத்தச் செலவு ரூ. 135.43 இலட்சமாகும். இத்தொகை மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், மேற்கு மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம், அரிசன நலத் திட்டம் ஆகிய சிறப்புத் திட்டங்களுக்கென்றே ஒதுக்கப்பட்டதாகும்.

## பால் சேகரித்தலும், செய்முறைப் பதப்படுத்தலும்

தமிழ்நாடு பால் வள நிறுவனம், சராசரியாக ஒரு நாளைக்கு, 2 இலட்சம் லிட்டர் பால் சேகரிக்கின்றது. 1976-77-ஆம் ஆண்டில், அதிக அளவு பால் கிடைக்கும் காலங்களில், நாள் கொள் முதல் 2.60 இலட்சம் லிட்டராகும். குறைந்த அளவு பால் கிடைக்கும் காலங்களில், ஒரு நாளைக் கொள்முதல் 1.26 இலட்சமாகும்.

சென்னை, மதுரை பால்பண்ணைகள், 4.5 சதவீதக் கொழுப்பும், 8.5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் ( S.N.F. ) அடங்





பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பால்மாடுகளுக்குத் தற்பொழுது நல்ல மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கிய தரப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்கிறது. சென்னை மாநகரத்தில் 3 சதவீதம் கொழுப்பும், 8.5 சதவீதக் கொழுப்பற்ற திண்மைப் பொருளும் அடங்கிய, 15,000 லிட்டர் கொழுப்புச்சத்து குறைக்கப்பட்ட பாலும் ( Toned Milk ) விற்பனையாகின்றது. குறைந்த அளவு பால் கிடைக்கும் காலங்களில், வெண்ணெய் மற்றும் பால்பொடி சேர்த்துப் பால், பதப்படுத்தப்படுகிறது. அதிக அளவு பால் கிடைக்கும் காலங்களில், குறைந்த அளவு ஆடைநீக்கப்பட்ட பால் பொடியே சேர்த்துப் பால் பதப்படுத்தப்படுகிறது.

குளிர்காலம், மாடுகள் கன்று ஈனும் காலமாதலால், நவம்பர் முதல் மார்ச் வரையில் (அதிகப் பால் கிடைக்கும் காலம்) மற்ற மாதங்களை விடப் பால் உற்பத்தி பெரும்பாலும் இரு மடங்காக உள்ளது. பருவ கால ஏற்ற இறக்கங்கள் இருந்த போதிலும், விற்பனை ஒரே சீராக இருக்க வேண்டியது அவசியமாகிறது. பால் குறைந்த அளவே கிடைக்கும் காலங்களில், பாலின் தேவையை நிறைவு செய்வதற்கும், பால் மிகுதியாகக் கிடைக்கும் காலங்களில் பாலின் கொழுப்புச் சத்தை தரமான நிலையில் அமைப்பதற்கும், ஆடை நீக்கப்பட்ட பால் பொடி, வெண்ணெய் ஆகியவை தேவைப்படுகின்றன. அதிக அளவு பால் கிடைக்கும்பொழுது, அது 'மதுரை பால் பவுடர் நிலையத்திற்கு' அனுப்பப்படுகின்றது. அங்கு பாலை, ஆடை நீக்கப்பட்ட பால் பொடியாகவும், வெண்ணெய், நெய்யாகவும் மாற்றுவதற்கான வசதிகள் உள்ளன.

## பால் விற்பனை

சென்னை மாநகரில் பால் விற்பனை, 1972-73-ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 80,750 லிட்டராக இருந்தது; தற்போது 2,20,000 லிட்டராகக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது; இதனால் ஒரு இலட்சம் மக்கள் பயனடைகின்றனர்.

## தொழில் நுட்ப வசதி வழங்குதல்

பசுக்களின் தீவிரக் கலப்பின உற்பத்தி, எருமைகளின் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்காகப் பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், புதிய திட்டங்களைச் செயலாக்குவதுடன், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தேவையான கால்நடைத் தீவனம், தழை உணவு வசதி, மருத்துவ உதவி போன்ற பிற தொழில் நுட்ப வசதிகளையும் அளிக்கின்றது. கால்நடை மருத்துவப் பணிகள் உறுப்பினர்களது இல்லங்களிலேயே அளிக்கப்படுகின்றது. மேலும், அவர்களுக்குக் கிடாரிக் கன்றுகளை வளர்ப்பதற்கும், மாட்டுத் தீவனத்தை உற்பத்தி செய்வதற்கும் உதவித் தொகை அளிக்கப்படுகின்றது.

பால்பண்ணைக் கழகம், ஊட்டியில், 'பொலிகாளை-தாய்ப் பண்ணையில்' அயல் இன ஜெர்ஸி மாட்டு மந்தை ஒன்றையும், எட்டு, செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களையும், பராமரித்து வருகின்றது. இவையன்றி, 27 நடமாடும் கால்நடை மருத்துவமனையும், 9 அவசரகால மருத்துவப் பிரிவுகளையும், நடத்துகின்றது. இவற்றில் 67 கால்நடை மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாதவரம் கால் நடைத் தீவனத் தயாரிப்பு ஆலை, தற்போது, திங்களொன்றுக்குச் சராசரியாக 1,000 டன் கால் நடைத் தீவனம் உற்பத்தி செய்கின்றது. மாநிலத்திலுள்ள, கால்நடை பராமரிப்புத் துறையின் பண்ணைகளுக்குக் கால்நடைத் தீவனம் வழங்கும் பொறுப்பு பால் வள நிறுவனத்தினிடம் உள்ளது. 1,300 டன் அளவு பால் விற்பனைப் பொறுப்பை நிறைவு செய்வதற்காகக் கால் நடைத் தீவன உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, வட ஆர்க்காடு மாவட்டத்தின் ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் கால் நடைத் தீவன உற்பத்தி ஆலையை, இந்நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. சில மூலப் பொருட்களின் தட்டுப்பாடு, பெரிதும் வேறுபடுகின்ற விற்பனை நிலவரங்கள் ஆகிய இரு முதன்மைப் பிரச்சனைகளை, இந்நிறுவனம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆதாயமோ, விரயமோ இன்றி, கால் நடைத் தீவனம், பால் பண்ணை வைத்திருக்கும் உழவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## விரிவாக்கம்

''பால் பெருக்குத் திட்டத்தின் கீழ்'' மாதவரம் நிலையத்தின் பால் பதப்படுத்தப்படும் திறன், ரூ. 21 இலட்சம் செலவில் 50,000 லிட்டரிலிருந்து 1,25,000 லிட்டராக அதிகரித்துள்ளது. மூன்று கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 2,00,000 லிட்டர் திறனுடைய புதிய நிலையம் ஒன்று அம்பத்தூரில் (சென்னை) 16-4-1976 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இப்புதிய நிலையம், மொத்த விற்பனை அடிப்படையில் அமைக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில், ஒரு மணி நேரத்திற்கு 5,000 பைகளை நிரப்பும் திறனுடைய இரண்டு இயந்திரங்கள் இங்கு நிறுவப்படவிருக்கின்றன. மதுரையில் ரூ. 90 இலட்சம் செலவில் அமைந்த, நாளொன்றுக்கு 10 டன் பால் பொடி தயாரிக்கும் திறனுடைய, பால்பொடி தயாரிக்கும் நிலையமொன்று நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் ஒன்றியத்திலுள்ள பால் பதப்படுத்தும் நிலையத்தை விரிவு

வடஆர்க்காடு மாவட்டம், திமிரி வட்டாரம் காவனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சசிதரன் என்ற பட்டதாரி பால்பண்ணையாளருக்கு, வேலூர் மண்டல உதவித் திட்ட அலுவலர் மானிய விலையில் கால்நடைத் தீவனத்தை வழங்குகிறார்.





நாட்டுப் பசுவும், செயற்கை முறை இனவிருத்தி மூலம் பிறந்த கன்றும்.

படுத்தவும், கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த இதுவரை செயல்படாமல் இருந்த குளிர்விக்கும் நிலையங்களை, மீண்டும் இயங்கச் செய்யவும், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம், இந்தியப்பால், பண்ணை வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 9 இலட்சம் உதவித் தொகை பெற்றுள்ளது. பால் பண்ணை, கால் நடை பராமரிப்புப்பணிகள் ஆகியவற்றில் கூட்டுறவுகளுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியையும் இது அளிக்கிறது.

## சிறப்புத் திட்டங்கள்

இக்கழகத்தின் இயல்பான நடவடிக்கைகள் தவிர, சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பினருக்காகப் பல திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. இவற்றின் விவரங்களாவன:

### (அ) மலைப்பகுதிகள் வளர்ச்சித் திட்டம்:

1975-76-லிருந்து தொடங்கி ஐந்து ஆண்டுக் காலத்திற்கு நீலகிரி மாவட்டத்தில் ரூ. 85.00 இலட்சம் மதிப்பில் பால்பண்ணை வளர்ச்சிக்கு இத்திட்டம் வகை செய்யும். ஐந்தாம் ஆண்டு இறுதியில் பால் உற்பத்தியின் அளவு 30,000 லிட்டர்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 10,000 விவசாயிகள் பயனடைவார்கள். இதற்கென இதுவரை 41.31 இலட்சம் ரூபாய் அரசு கொடுத்துள்ளது.

### (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ் ரூ. 11.90 இலட்சம் செலவில் பாலாடை-வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலையொன்று கொடைக்கானலில் நிறுவப்படுகிறது. கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் சங்கத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1977 மார்ச் திங்களில் ரூ. 5.00 இலட்சம் முதல் தவணையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தொடக்கப்பணிகள் நடந்தேறி வருகின்றன. நடந்தேறி வரும் பணியினைக் கண்காணித்த பிறகு மேற்கொண்டும் தேவைப்படும் தொகைகள் வழங்கப்படும்.

### (இ) பட்டதாரி/மெட்ரிகுலேஷன் விவசாயிகள் பால்பண்ணை திட்டம்:

''ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டம்'' மற்றும் ''வேலைவாய்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்'' ஆகியவற்றின்கீழ், 119 பட்டதாரிகளுக்கும், 41 மெட்ரிக்குலேஷன் தேறியவர்களுக்கும் சுயவேலை வாய்ப்பிற்காகப் பால்பண்ணையில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி அளிக்கப்பட்ட பால் பண்ணை வளர்ச்சி விவசாயிகளில், 24 பட்டதாரிகளும், ஒரு மெட்ரிகுலேட்டும் மாதவரம் பால்பண்ணை காலனியில் 'அவர்களுடைய பால் பண்ணைப் பிரிவை அமைத்துள்ளனர். 35 பட்டதாரிகளும், 4 மெட்ரிகுலேட்டுகளும் நாட்டுடைமையாக்கப்பட்ட நான்கு வங்கிகளிடமிருந்து ரூ. 34.62 இலட்சம் நிதி உதவி பெற்று, மாவட்டங்களில் அவர்களுடைய சொந்த நிலங்களிலேயே பால்பண்ணையை அமைத்துள்ளனர்.

மாதவரம் பால்பண்ணையில் உள்ள பட்டதாரிகள் 500 லிட்டர்கள் பால் வழங்குகின்றனர்: வெளியூர்களில் உள்ள பட்டதாரிகளின் மூலம் நாளொன்றுக்கு 1,140 லிட்டர்கள் பால் இந்நிறுவனத்துக்கு வழங்கப்படுகிறது.

### (ஈ) சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டம்/கன்று வளர்ப்புத் திட்டம்: .

25,000 சிறு உழவர்கள் சொற்ப நில உழவர்கள் வேளாண்மைத் தொழிலாளர்களிடம், உள்ள கலப்பினக் கிடாரிக் கன்றுகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காக இத்திட்டம் . தீட்டப்பட்டுள்ளது. இதன்படி தேவையான சத்துணவும், மருத்துவ உதவியும் அளிக்கப்படும். சத்துணவின் விலையில் பெரும்பகுதி மானியமாகவும் வழங்கப்படும்.

வடஆர்க்காடு, தென்னார்க்காடு, சேலம், கோவை, மதுரை, ஆகிய மாவட்டங்களில் 3 வருட காலத்திற்கு கன்று வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ. 237.97 இலட்சம் நிதியுதவியை அளிக்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதுவரை இந்த மாவட்டங்களில் 2,486 கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

### (உ) அரிசன நலத் திட்டம்:

இத்திட்டத்தின்கீழ், அரிசன உறுப்பினர்களுக்குக் கறவையினங்களை வாங்குவதற்கான உதவியை அளிப்பதற்கு, மதுரை மாவட்டத்தில் 15 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 12 கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்களையும் அரசு தேர்ந்தெடுத்துள்ளது. மதுரை மாவட்டத்திற்கு ரூ. 22.50 இலட்சமும், வடஆர்க்காடு மாவட்டத்திற்கு ரூ. 18.00 இலட்சமும் மூன்று ஆண்டுக்கால அளவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு சங்கத்திடமிருந்தும் 100 உறுப்பினர்களுக்குக் கறவையினங்கள் வாங்குவதற்கான கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

கறவையினங்கள் வாங்குவதற்கு அரிசன உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,500





செயற்கைமுறை இனவிருத்தி மூலம் பிறந்த கன்றுகளை வளர்ப்பதற்குத் தமிழ்நாடு பால்வள நிறுவனம் மானியம் வழங்குகிறது.

வழங்க இத்திட்டம் வழி செய்கிறது. இதில், ரூ. 1,000 கடனாகவும் எஞ்சிய 500 ரூபாய் உதவியாகவும் வழங்கப்படுகிறது. ஒரே உறுப்பினர் இரண்டாவது கறவையினம் வாங்க வேண்டுமாயின், முதல் கறவையினத்தை வாங்கிய பிறகு 10 மாதங்கள் கழித்து பிறகு தொகை அளிக்கப்படுகிறது.

### (ஊ) வறட்சியால் பாதிக்கக் கூடிய பகுதிகளுக்கான திட்டம்:

இம்மாநிலத்தில் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகக் குறிப்பிடப்படுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 23.55 இலட்சம் செலவு மதிப்பீட்டில் பால்பண்ணை வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்டம் ஆய்வின் கீழ் உள்ளது. முகவை மாவட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடு 16.81 இலட்சம் ரூபாய்கள். இதன்கீழ், பால் குளிர் பதன நிலையமொன்று பரமக்குடியில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்காக ரூ. 1.8 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## பிரச்சினைகள் தீர்க்கப்படும்!

சிறு உழவரின் வளர்ச்சி முகவரமைப்பு, வறட்சிக் காட்படும் வட்டாரத் திட்டம் போன்ற ஏனைய பல திட்டங்களின் துணையுடன் பால் பெருக்குத் திட்டமும் செயல்படுத்தப்படுவதால் பால் உற்பத்தி பெருகியுள்ளது. கொள்முதல் செய்வதற்காகக் கிடைக்கக்கூடிய பாலின் அளவு உயர்ந்துள்ளது. ஆனால், தனியார் நிறுவனங்கள், பிறமாநில பால்வள நிறுவனங்கள் ஆகியவற்றின் போட்டியின் காரணத்தால் பால், பால் பண்ணை உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதில் சில சிக்கல்கள் உருவாகியுள்ளன.

கேரளா, ஆந்திரா, கர்நாடகம், மகாராஷ்டிரம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நம்முடைய பால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தமிழ்நாடு பால்வள நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், மாநிலத்தில் மேற்கொண்டும் பல நகரங்களிலும், சிறு நகரங்களிலும் பால் விற்பனைக்காக ஏற்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு முன் கண்டிராத அளவுக்கு பால் உற்பத்தி பெருகி உள்ளதன் விளைவாக, சில பிரச்சினைகள் ஏற்பட்டு உள்ளன. அதாவது பால்வள நிறுவனத்தின் பால் நிலையங்கள், சேரிக்கும் பாலின் அளவை ஒழுங்குபடுத்தும் அவசியம் ஏற்பட்டு உள்ளது. வழங்கப்படும் பாலை ஏற்றுக் கொண்டால் அதனை உடனே பதப்படுத்தி விற்பனை செய்வதற்கான வசதிகளைக் கருத்திற்கொண்டு, பால் அதிகமாகக் கிடைக்கும் காலங்களில் உற்பத்தியாளரிடமிருந்து ஏற்க வேண்டிய பாலின் விகிதத்தை வரையறுப்பது ஓரளவுக்குத் தவிர்க்க முடியாததாகும். பால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் ஆகிய இருதரப்பாரின் நலன்களைக் கருத்திற்கொண்டு நியாயமான முறையில் இவ்வாறு செய்யப்பட்டுவருகிறது.

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் அனுமதிக்காக வைக்கப்பட்ட பால் பண்ணை வளர்ச்சித் துறையின் 1977-78-ஆம் ஆண்டு கொள்கை விளக்கத்திலிருந்து தொகுக்கப்பட்டது.]



அடையாறு குழந்தைகள் மன்றத்தில் நேரு



கப்பலோட்டிய தமிழன்
வ. உ. சிதம்பரனார்

தோற்றம் : 5 - 9 - 1872.
மறைவு : 18 - 11 - 1936.

# நான் கண்ட வ.உ.சி.

— திரு கி. ஆ. பெ. விசுவநாதம்



திருவாளர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டுத் தேச பக்தர்களுள் ஒருவர். தேச பக்தர் என்றாலே திரு. பிள்ளை அவர்களைத்தான் குறிக்கும். நாட்டின் மீது அவருக்கு உள்ள பற்று உள்ளபடியே அளவைக் கடந்தது எனக் கூறலாம்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தொண்டு செய்திருந்த காலத்திலேயே திரு பிள்ளை அவர்கள் இந்தியாவில் தேசத் தொண்டு செய்தவர்கள். உலோக மான்ய பாலகங்காதர திலகர் அவர்களின் அரசியல் மாணவர் ஆவர்.

பலமுறை சிறை சென்றவர்கள். அவர் செய்த குற்றமெல்லாம் இந்நாட்டின்மீதும், மக்களின் மீதும் அன்புகொண்ட ஒன்றுதான். இக்காலத்தில் சிறைக்குச் செல்ல விரும்புவோர் பலருக்கு நன்கு தெரியும், முதல் வகுப்பும் முந்திரிப்பருப்பும், அல்வாவும், ஆரஞ்சுப் பழமும் கிடைக்குமென்று. அந்தக் காலத்தில் அனைவருக்கும் தெரியும், செக்கு இழுத்துச் சீரழிய வேண்டுமென்பது! கற்கள் உடைபடச் செய்ய வேண்டும். இன்றேல் பற்கள் உடைபட வேண்டும். குத்துவதெல்லாம் நெல்லாக இருக்கும். உண்பதெல்லாம் களியாக இருக்கும். இக்காலம் சிறைக்குச் சென்றவர்கள் போற்றுதலும் பூமாலையும் பெறுகிற காலம்; அக்காலம் தூற்றுதலும், துயரமும் பெறுகிற காலம். முடிவாகக் கூறவேண்டுமானால் அக்காலத்தில் எல்லாச் சாதியினரும் சிறைக்குச் சென்றவர்களை வெறுத்துச் சமூக பகிஷ்காரம் செய்த காலம் எனக் கூறலாம். அப்படிப்பட்ட காலத்தில்தான் திரு. பிள்ளை அவர்கள் சிறை புகுந்தார்கள். செக்கும் இழுத்தார்கள். களைப்பு மிகுதியினால் குடிக்கத் தண்ணீர் கேட்டு, தண்ணீர் பெறாமல் சவுக்கடியையே பெற்றார்கள். சில நாட்கள் அல்ல; பல ஆண்டுகள். நாட்டுப் பற்றுக் காரணமாக உயிர் போகும் வேதனையைப் பெற்று 'வாடி வதங்கி' வருந்த உழைத்தவர் திரு. பிள்ளை அவர்கள் ஆவர்.

படிப்பு இல்லாமல் தேசத் தொண்டு செய்யப் போனவரல்லர் அவர்; அக்காலத்திலேயே கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர்கள்; தொழிலில்லாமல் தேசத் தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்லர் அவர்; வக்கீல் தொழில் செய்து கொண்டிருந்தவர். வருமானமில்லாமையால் தேசபக்தி காட்டப் புறப்பட்ட வக்கீல்களைச் சேர்ந்தவர் அல்லர் அவர்; தொழிலில் நல்ல வருமானத்தைப் பெற்று வந்தவர். புகழுக்கும் பெருமைக்கும் ஆசைப்பட்டுப் பொதுத்தொண்டு செய்யப் புறப்பட்டவர் அல்லர் அவர்; அவரது அருஞ்செயலையும், பெருங்குணத்தையும், உள்ளத் தூய்மையையும், உழைப்பின் சிறப்பையும் விளக்க இதைவிட வேறெதுவும் கூறவேண்டியதில்லை.

திரு பிள்ளை அவர்களின் பேச்சு இரத்தத் துடிப்பை அல்ல. எலும்புகளையும் துடிக்கச் செய்யும். உணர்ச்சி கலந்த அரசியல் ஆவேசப் பேச்சுக்கள் திரு. பிள்ளை அவர்களோடு மறைந்து ஒழிந்தன.

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லும் கட்டணத்தை உயர்த்தித் தமிழ்நாட்டு வர்த்தகத்திற்கே கேடு விளைவித்தன. இதனையறிந்த திரு. பிள்ளை அவர்கள், அவர்களோடு, போராடியும், நியாயத்திற்கு இணங்க மறுத்ததனால் அவர்களோடு போட்டியிட்டும், தாமே ஒரு கப்பலை ஓட்டித் தமிழ்நாட்டு வர்த்தகத்திற்குத் தொண்டு செய்தார்கள்.

அவர் ஒரு தொழிலாளர் தலைவர், தொழிலாளர் போக்கைத் தொடர்ந்து போகும் தலைவராயில்லாமல், தொழிலாளரைத் தன் போக்கில் நடத்திச் செல்லும் தலைவராயிருந்தவர்.

அவர் ஒரு முறை சிறை சென்றபோது தூத்துக்குடி இரயில்வே நிலையமும் சர்க்கார் கட்டிடங்களும் தூள் தூளாக்கப்பட்டன. நெருப்புப் பொறிகளும் பறந்தன. அரசாங்கமே நடுங்கி அஞ்சுகின்ற அளவுக்கு அவர் ஓர் ஆபத்தான மனிதராகக் கருதப்பட்டார்.

அவருடைய தமிழ்ப் பற்று தமிழ்நாட்டிலே நன்கு பதிக்கப் பெற்றிருக்கிறது. அதுதான் ''திருக்குறள் வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பு'' என்பதாகும். இது இன்னும் நம்மிடையே இருந்து கொண்டு அவர்களையும் அவர்களது தமிழ்ப் பற்றையும் நினைப்பூட்டி வருகின்றது.

திரு. பிள்ளை சிறையிலிருப்பார்; வீட்டிலிருந்து செய்திவரும். வருகின்ற செய்தி ''குழந்தைக்குத் துணியில்லை; உணவுக்கு வழியில்லை'' என்றிருக்கும். கண்கள் கலங்கும்; மனம் கலங்காது. இத்தகைய செய்திகள் பலவற்றை அரசியல் உத்தியோகஸ்தர்களே அவரிடம் அனுப்பி வைப்பார்கள். காரணம் எந்த வகையிலாயினும் மன்னிப்பைப் பெற்று விடுதலை பெற்று வெளியேற வேண்டுமென்பதுதான். இருமுறை ஆயுட்காலத் தண்டனை, அந்தமான் தீவுக்கு நாடு கடத்தும் தண்டனைகளைப் பெற்று, செக்கிழுத்து வாடி வதங்கி அடைத்துப் போன காதுகளுக்கு இச்செய்திகள் எட்டும். மடிவதில் மனம் கொண்டாரேயன்றி மன்னிப்பில் மனம் கொள்ளவில்லை.

ஒரு நாட்டுத் தலைவன் மனைவியையும், மக்களையும் காப்பாற்றத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமையினால் அவர்கள் இணங்கி உதவி செய்யவில்லை. அவர் வாழ வகையின்றி வருந்தினார். 'இப்படிப்பட்ட மக்களுக்காகச் சிறை புகுந்து, செக்கிழுத்து, மடிவதும் தன்னை நம்பியுள்ள மனைவி மக்களை இப்படிப்பட்டவர்களிடம் உயிரோடு ஒப்புவித்து அவர்களையும் மடியச் செய்வதும் நியாயமாகுமா?'' என்று சிறையில் பல ஆண்டுகள் எண்ணி எண்ணி வருந்தி நொந்தார்கள். கடைசியாக ஒரு நாள் கோர்ட் அவருக்கு மன்னிப்பு அளித்தது. மீண்டும் வக்கீல் தொழிலை நடத்தினார்கள். திரு. பிள்ளை அவர்களோடு சேர்ந்து நான்கு கூட்டங்களில் பேசியிருக்கிறேன். நான் பேசும் சில ஊர்களுக்கும் அவர்கள் வந்திருக்கிறார்கள். தமிழுக்காக அவர் மீது எனக்கு அளவு கடந்த அன்பு உண்டு. அதற்காக என் மீது அவருக்குப் பற்றுதல் உண்டு. தமிழ் ஒன்றே எங்களைப் பிணைத்தது.

அரசியலிலே நாங்கள் இருவரும் மாறுபட்ட கொள்கையுடையவர்கள். மாறுபட்ட இயக்கங்களைச் சார்ந்தவர்கள். ஒரு நாள் தட்டப்பாறையில் சந்தித்து ''உங்களைப் போன்றவர்கள் ஜஸ்டிஸ் கட்சியை விட்டுக் காங்கிரஸ் கட்சிக்கு வந்து சேர வேண்டும்'' எனக் கூறினார்கள். எனது இளமை முறுக்கினாலும், இரத்தத் திமிரினாலும் அவர்களைக் கடுமையாகத் தாக்கிக் கடுஞ்சொற்களைக் கூறிவிட்டேன். இன்றைக்கு முப்பது ஆண்டுகள் ஆயின என்றாலும் இன்றைக்கும் அது என் உள்ளத்தைச் சுடுகின்றது.



இது தற்சமயம், சென்னை அரசினர் தோட்டத்தில் 'காந்தி இல்லத்'தின் அருகில், பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதற்காக அவர்கள் எனக்களித்த தண்டனை — அவர்களின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று பல மணி நேரம் நிலைமையை விளக்கி, எனது கருத்தை மாற்றி அவர் தவறு செய்யவில்லை என மெய்ப்பித்ததுதான். பொதுவாக அவர் உள்ளத்தைத் திறந்து காட்டி, தம்முள்ளத்தே மறைத்து வைத்திருந்த பல செய்திகளையும் கூறிக் கண்கலங்கினார்கள். வருந்தினேன். எனது வலக்கையால் அவரது கண்ணீரைத் துடைத்ததுதான் இன்றைக்கு ஆறுதலாக இருந்து வருகின்றது. அவர் கூறிய செய்திகளை, வெளியிடும் காலம் இன்னும் வரவில்லை. அவரது மனைவியார் என் வயிற்றிற்கு ஒரு வேளை உணவளித்தார்கள். அவரோ என் அறிவுக்குப் பலநாள் உணவையளித்து மறைந்தார்கள். அவர் அளித்த உணவு, ''எவரையும் வையாதே! வைவது தமிழனின் பண்பல்ல-பிறரை வைவது தான் முன்னேறும் வழி என்று எண்ணாதே! எவன் முன்னேறினாலும் வைபவன் முன்னேற முடியாது என்பதை நம்பு, தவறு என்று கண்டால் தீமையற்ற சொற்களால் அச்சமற்றுக் கூறு'' என்பதுதான்.

திரு. பிள்ளை அவர்களின் அறிவுரையும் அற உரையுமாகிய இது எனக்குப் பயன்பட்டது.. உங்களுக்கும் பயன்படுமா? முயலுங்கள்.

எனது தலை சிலருடைய திருவடிகளில் மட்டுமே விழுந்திருக்கிறது. திரு. பிள்ளை அவர்கள் திருவடிகளும் அதில் சேர்ந்ததுதான். காரணம், பொய் பேசுவதில்லை என்பதை வாழ்நாள் முழுவதும் ஒரு கொள்கையாகக் கொண்டு உண்மையையே பேசி வந்தார்கள். அதுமட்டுமல்ல; உயிர்போகும் வரை ஒழுக்கத்தைக் கையாண்டு வந்த ஒரே தலைவர் அவர் என்பதினாலுமேயாம்!

வாழ்க வ. உ. சி. புகழ்!
வாழ்க அவர் பிறந்த நாடு!

(புக்ஸ் வொர்ல்டு வெளியிட்டுள்ள வ.உ.சி. நூற்றாண்டு மலரான 'விடுதலை' வீரர் வ. உ. சி. என்னும் நூலிலிருந்து)

## நன்றி செலுத்திய நல்லவர்!

''எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், தங்கள் விழுமந்துடைத்தவர் நட்பு'' என்னும் பொய்யா மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார் வ.உ.சி. சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் ஊக்கங்காட்டி உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்தார்.

ராஜத் துவேஷக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனையடைந்ததன் காரணமாக இழந்துவிட்ட தமது வக்கீல் சன்னத்தைத் திரும்ப வாங்கிக் கொடுத்த நீதிபதி வாலஸ் துரையின் பெயரை மறவாது, தமது மற்றொரு புதல்வனுக்கு வாலீஸ்வரன் என்று பெயர் சூட்டினார்.

தமக்கு அவ்வப்போது வேண்டிய பொருளுதவி புரிந்து வந்த வேதியப்பப் பிள்ளையின் நினைவாகத் தமது மகளுக்கு வேதவல்லி என்று பெயர் வைத்தார். இவ்வாறு பல்லாற்றாலும் உதவி புரிந்த பலருக்கும் பிள்ளை தமது நன்றியைச் செலுத்தியுள்ளார்.

# வீட்டு வசதிகளை விரைவாகப் பெருக்கிடுவோம்!

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர்.
—எஸ். இராகவானந்தம்



வீட்டு வசதித் துறையின் 1977-78-ஆம் ஆண்டுத் திட்டங்களில் கீழ்க் கூறப்பட்ட முக்கிய அம்சங்கள் அடங்கியுள்ளன.

## அதிக மூலதன ஒதுக்கீடு

இந்தத் திட்டங்களில் மிக முக்கியமான அம்சம் யாதெனில் 1975-76, 1976-77ஆம் ஆண்டுகளின் மூலதனங்களைக் காட்டிலும் இந்த ஆண்டில் மூலதனம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் வீட்டு வசதித் துறையின் திட்டங்களின் மூலதனம் ரூ. 26.42 கோடியாகும். 1976-77 ஆம் ஆண்டின் மூலதனம் ரூ. 23.93 கோடியாகும். 1977-78ஆம் ஆண்டில் இந்த மூலதனம் ரூ. 32.20 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, 1976-77ஆம் ஆண்டின் மூலதனத்தைக் காட்டிலும் 35 சதவீதம் அதிகமாகும்.



## நிதி ஆதாரங்களிலிருந்து பங்கீடு

இரண்டாவது முக்கியமான அம்சம் யாதெனில் மேலே கூறப்பட்டுள்ள மூலதனங்களுக்கு நிதி ஆதாரங்களிலிருந்து பங்கீடு (ஒதுக்கீடு) செய்துள்ளதாகும். 1975-76ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி ரூ. 6.59 கோடியாகும். 1976-77-ஆம் ஆண்டில், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் கடன் ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவி ரூ. 6.57 கோடியாகும். 1977-78-ஆம் ஆண்டில் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட இருக்கும் மொத்த நிதியுதவி ரூ. 9.50 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

**இந்தச் சூழ்நிலையில் குறிப்பிடத்தக்க திருப்திகரமான அம்சம் யாதெனில், வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ள திட்டங்களின் எண்ணிக்கையிலும் அதற்காகக் கொடுக்க ஒப்புக்கொண்டுள்ள மொத்தக் கடன் தொகையிலும் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது.**

## உலக வங்கியின் நிதியுதவி

மற்றும் ஒரு புது அம்சம் யாதெனில், வீட்டு வசதி வாரியத்தின் திட்டங்களுக்கும் உலக வங்கியின் நிதியுதவி கிடைத்துள்ளதாகும். இந்திய அரசு மூலமாகப் பெறப்பட இருக்கும் உலக வங்கியின் நிதியுதவியிலிருந்து வீட்டு வசதி வாரியத்தினுடைய "முழு வசதிகள் அடங்கிய மனைகள்" (Sites and Services) திட்டங்களுக்கு ரூ. 2.25 கோடி முதலீடு செய்வதற்கும், குடிசை மாற்று வாரியத்தினுடைய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 1.40 கோடி முதலீடு செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

## ஊரகக் குடியிருப்பு வசதிக்கு முக்கியத்துவம்

மற்றொரு முக்கியமான அம்சம் யாதெனில், தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக நிர்வகிக்கப்பட இருக்கின்ற ஊரகக் குடியிருப்பு வசதிக்கு ரூ.2கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகும். இந்த ஒதுக்கீட்டில் குறிப்பிடத் தக்க நிதி பழங்குடியினர் மற்றும் அரிசன மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில், அவர்களுக்கு அளிக்கப்படும் கடன்களுக்கான முழு வட்டித் தொகையையும்மானியமாக ஈடுசெய்வதற்குத் தமிழ் நாடு அரசு முடிவு செய்திருக்கிறது. இம்மாற்றத்தின் விளைவாக, நகர்ப்புறத்தைச் சார்ந்திருக்கும் சங்கத்தின் கடனுதவிகளில் மிகப் பெரிய மாற்றம் ஏற்படும். இம்மாற்றம், ஊரகக் குடியிருப்புத் திட்டங்களுக்கு சங்கக் கடனுதவிகளை அதிகமாகசெலவு செய்யப்படும் கொள்கையின் முன்னோடியாக விளங்கும்.

## நலிந்த பிரிவினர்களுக்கு அதிக வீடுகள்

மற்றும் ஒரு வரவேற்கத் தக்க அம்சம் யாதெனில், பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர்கள் மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கான வீடு கட்டும் திட்டங்களுக்கான மூலதனத்தில் ஏற்படும் ஒரு மாற்றம் ஆகும். பொருளாதாரத்தின் மெலிந்த பிரிவினர்களுக்கும் குறைந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கும் 1975-76-ஆம் ஆண்டில் கட்டப்பட்டுள்ள 5,506 குடியிருப்புகளுக்கு எதிராக; இந்த இரு பிரிவினர்களுக்கும் 1977-78ஆம் ஆண்டில் 6,850 குடியிருப்புகள் கட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## அரசுப் பணியாளர்களின் வாடகைக் குடியிருப்புக்கு அதிக மூலதனம்

அரசு ஊழியர்களுக்குத் தேவையான வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கு மூலதனத்தை அதிகப்படுத்தியிருப்பது மற்றும் ஓர் அம்சமாகும். இந்தக் கணக்கில் 1975-76-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 150 இலட்சம், 1976-77-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 125 இலட்சம் தொகைக்கு எதிராக, 1977-78-ஆம் ஆண்டின் மூலதனம் ரூ. 200 இலட்சமாகும்.

## பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்கான திட்டங்கள்

வீட்டு வசதி வாரியம், ஆண்டு வருமானம், ரூ. 4,200-க்கும் குறைவாகப் பெறுகின்ற, பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினருக்குக் குறைந்த செலவிலான வீட்டு வசதிச் சிறப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 6,000த்திலிருந்து ரூ. 13,000 வரை செலவிலான வீடுகளைத் தவணை முறைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கல் செய்வதற்காகக் கட்டுகிறது. வீட்டின் மொத்தச் செலவுத் தொகையில் 1/10 பகுதி முன் பணமாக வசூல் செய்யப்படுகிறது. மீதித் தொகை 20 ஆண்டுக் காலத்தில் வசூல் செய்யப்படுகிறது. இதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மேற்பார்வைக் கட்டணம், வழக்கமான 12.5 சதவீதத்திற்குப் பதிலாக, 6.25 சதவீதம்தான் வசூலிக்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 2,353.

அரசு நிதி நிலை அறிக்கையில் இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 5 இலட்சம், வீட்டு வசதி வாரியத்திற்குக் கடனாகக் கொடுக்கப்படும். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவிகளைக் கொண்டும், இந் திட்டத்திற்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 65.56 இலட்சம் செலவு செய்வதற்கு உத்தேசித்திருக்கிறது.

## குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஆண்டு வருவாய் ரூ. 4,200க்கும், ரூ. 7,200க்கும் இடைப்பட்ட வருவாயினரின் நலனுக்காக, இத்திட்டத்தின் கீழ், வீடுகளைக் கட்டித் தருகிறது. இந்திட்டத்தின் கீழ் கட்டப்படுகிற வீட்டின் விலை ரூ. 18,000 ஆகும். இத்திட்டத்தின்கீழ், வீடுகள் ஒதுக்கல் பெறுகிற நபர்கள் 25 சதவீதத் தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். மீதித் தொகை 20 ஆண்டுக் காலத்தில் மாதத் தவணையில் செலுத்தப்பட வேண்டும். 1977-78-ஆம் ஆண்டில், 1,227 வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

## நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ள பல வீட்டு வசதித் திட்டங்களில் நடுத்தர வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டமும் ஒன்றாகும். ஆண்டு வருமானம் ரூ. 7,200க்கும் ரூ. 18,000-த்திற்கும் இடைப்பட்டவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ், வீட்டு வசதி செய்து தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கட்டப்படும் வீட்டின் விலை ரூ. 42,000 என்று வரையறுக்கப்பட்டு உள்ளது. மொத்த விலையில் 25 சதவீதம் முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். மீதித் தொகையை 15 ஆண்டுகளில் மாதத் தவணைகளில் செலுத்த வேண்டும். வீட்டு வசதி வாரியம் இது காறும் 5,003 வீடுகளைக்



கட்டியுள்ளது. 1977-78-ஆம் ஆண்டில் 1,119 வீடுகளைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், அரசுக் கடன் தொகையைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியைக் கொண்டும், இத்திட்டத்திற்கு 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 391.19 இலட்சம் செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.

## உயர்ந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், உயர்ந்த வருவாய்ப் பிரிவினர்களுக்கும் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ், வீடு ஒதுக்கல்பெறுவதற்கு வருவாய் வரம்பு ஆண்டுக்கு ரூ. 18,000த்திற்கும் மேற்பட்டதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வீட்டின் மொத்த விலையில் 25 சதவீதம் முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். மீதித் தொகையைத் தவணைகளில் செலுத்த வேண்டும்.

## நிலம் கையகப்படுத்தல்—வீட்டு மனை மேம்பாட்டுத் திட்டம்

நிலத்தின் விலைகளில் ஊக பேரங்களைத் தடுக்கும் பொருட்டும், வீடு கட்டுவதற்கு நியாயமான விலையில் நிலம் கிடைக்கச் செய்யும் பொருட்டும், பெருமளவில் வளர்ந்து வரும் நகரங்களில் நெரிசலைத் தணிக்கும் பொருட்டும், நிலங்களைப் பெருமளவில் முன்னதாகக் கையகப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்தை ஆதாயம்—விரயம் அற்ற அடிப்படையில் செயற்படுத்தி வருகிறது. இது நகரங்களுக்குள்ளும், வெளியிலும் பெருமளவு நிலங்களைக் கையகப்படுத்துகிறது. அவற்றைத் தன்னிறைவுள்ள சிறிய நகரியங்களாக அல்லது நகர அண்மைப் பகுதிகளாக மேம்படுத்துகிறது. அப்பகுதியில் நல்ல சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல், கழிவு நீர்க்கால்கள், விளையாடும் இடங்கள், பூங்காக்கள், மற்றும் பள்ளிகள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள் போன்ற ஏனைய பொது வசதிகளை அமைத்துத் தருகின்





றது. 1977-78—ஆம் ஆண்டின் குறியீட்டின் படி, 300 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட இருக்கின்றன.

இத்திட்டத்திற்காக அரசு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, வீட்டு வசதி வாரியத்திற்குக் கடனாக வழங்கப்படும். தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் தனது சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வீட்டு வசதி நகர்ப் புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியான ரூ. 137 இலட்சத்தின் உதவியுடனும் இத்திட்டத்திற்காக 1977-78—ஆம் ஆண்டில் ரூ. 240 இலட்சம் செலவு செய்ய உத்தேசித்துள்ளது.

## உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட இருக்கும் முழு வசதிகளுடன் அடங்கிய மனைகள் திட்டம்

வீட்டு வசதி வாரியம் கூடிய விரைவில் உலக வங்கி நிதியுதவியுடன், முழு வசதிகள் அடங்கிய மனைகள் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கின்றன. இத் திட்டத்தின் கீழ் சென்னை நகரத்தை ஒட்டியுள்ள அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் 13,467 மனைகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக, ரூ. 932.88 இலட்சம் செலவில் மொத்தம் 168 எக்டேர் நிலங்கள் கையகப்படுத்தப்படும். இத்திட்டத்தில் வீட்டு மனைகளைத் தவிர வாணிபத்திற்காகவும், சிறு கைத் தொழிலுக்காகவும் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

இத்திட்டத்தில் சுகாதார வசதிகளுடன் கூடிய ஒவ்வொன்றும் 40 சதுர மீட்டர் பரப்பளவிலான 6,228 மனைகளும், 47 சதுர மீட்டர் பரப்பளவிலான கூரையுடன் கூடிய 2,742 மனைகளும், 47 சதுர மீட்டர் அளவிலான குடியிருப்புடன் கூடிய 792 மனைகளும் பொருளாதாரத்தில் மெலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்படும். மேலும் 74 முதல் 140 சதுர மீட்டர் பரப்பளவுடைய 3,284 மனைகளும், 223 சதுர மீட்டர் பரப்பளவிலான 421 நடுத்தர வருவாய்த் தொகுதி மனைகளும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில், ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், பொது உபயோகம், வாணிப உபயோகம், சமுதாயக் கூடங்கள், சிறு தொழில்கள் ஆகியவைகளுக்குத் தேவையான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 932.88 இலட்சமாகும். இது, மூன்று ஆண்டுகளில் முடிக்கப்படவிருக்கிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் கழகம் தனது நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கியிருக்கும் இத் திட்டத்தைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

## தமிழ்நாடு அரசுப் பணியாளருக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம் எல்லா அரசுப் பணியாளருக்கும் உரியது. தமிழ் நாடு அரசு, வீட்டு வசதி அளிக்கப்பட்டவர்களிடமிருந்து குறைந்த வாடகையாகச் சம்பளத்தில் 10 சதவீதத்தைப் பிடித்துக் கொள்கிறது. இவர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை. சாதாரணமாக இந்த அடிப்படையில் பிடிக்கப்படுகின்ற வாடகை கட்டுபடியாகும் வாடகையை விடக் குறைவாகும். தொகை வேறுபாடு மாநில அரசால் ஈடு செய்யப்படுவதால், அரசுப் பணியாளர்கள், அரசின் ஈட்டுத் தொகையின் பலனை அனுபவிக்கின்றனர். திட்டத்தைச் செயல்படுத்தும் முகவர் அமைப்பாக வீட்டு வசதி வாரியம் உள்ளது. கட்டி முடிக்கப்பட்ட பின், வீடுகளைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பினையும் அதுவே ஏற்கிறது. கட்டடங்களின் உரிமை மாநில அரசிடம் நிலை பெறுகிறது. பொதுவாக இத்திட்டத்தின் கீழ், வீடுகள் அரசாங்க நிலங்களில் கட்டப்படுகின்றன.

1977-78ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு உள்ள தொகை ரூ. 150 இலட்சத்திலிருந்து, ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தில் 557 வீடுகளும், புதிதாகத் தொடங்கிச் செயல்படுத்தப்பட்ட இருக்கும் திட்டத்தில் 756 வீடுகளும் கட்டி முடிக்கப்படும். 1977-78—ஆம் ஆண்டில் கூடுதலாக, 2,000 குடியிருப்புகள் கட்டும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொள்ளுவதற்கு உறுதுணையாக வரவு செலவுத் திட்டத்தில் மேலும் ரூ. 50 இலட்சம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்ட முன் பணம் வழங்கல்

மனைகள் வாங்குவது உட்பட வீடுகள் கட்டுதல், முன்னரே கட்டப்பட்ட வீடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன் பணங்கள் வழங்கப்படுகின்றன. 6 ஆண்டுகள் தொடர்ந்து அரசின் கீழ் பணி புரிகின்ற அரசுப் பணியாளர்கள் இக்கடன் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். அரசுப் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது ரூ. 70,000 இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை முன் பணமாக வழங்கப்படுகிறது. கடன் தொகை, பணியாளர்கள் தங்கள் பணிக் காலத்திற்குள் அவர்களது சம்பளத் தொகையில் 1/3 பங்கு வீதம் திருப்பிச் செலுத்துவதற்கு உள்ள திறனின் அடிப்படையில், இறப்பு மற்றும் ஓய்வுக்காலப் பணிக் கொடையின் அடிப்படையிலும் நிச்சயிக்கப்படுகிறது. 1977-78—ஆம் ஆண்டில் மாநில அரசு அலுவலர்களுக்கு இவ்வாறு முன் பணம் வழங்கும் வகையில் ரூ. 125 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலம் வரை இக்கடன் தொகைக்கு ஆண்டுக்கு 9 சதவீத வட்டி வசூலிக்கப்பட்டு வந்தது. அரசுப் பணியாளர்களுக்கு மிகப் பெரிய சலுகை அளிக்கும் நோக்குடன், அரசு 1977-78—ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்படும் வீடு கட்டும்தொகைக்கு கீழ்க் கூறப்பட்டுள்ள வீதங்களில் வட்டி வசூல் செய்ய முடிவு செய்துள்ளது :

| | சதவீதம் |
|---|---|
| ரூ. 25,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு ... | ...7.5 |
| ரூ. 25,001-லிருந்து ரூ. 50,000 வரையிலுமான கடன் தொகைக்கு ஆண்டுக்கு ... ... | ...8 |
| ரூ. 50,001லிருந்து ரூ. 70,000 வரையிலுமான தொகைக்கு ஆண்டுக்கு ... ... | ...9 |

## காவலர் வீட்டு வசதித் திட்டம்

காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் நோக்கமே காவல் துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவிகிதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதாகும். 1977-78—ஆம் ஆண்டு வரவு—செலவு திட்டத்தில் பொதுப்பணித்துறை மூலம் 55 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ரூ. 17.58 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ. 20.69 இலட்சம், வீட்டு வசதி வாரியம் மூலம் சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் 268 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டு உள்ளது.

## தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், அரசுத் துறை, தனியார் துறை ஆகிய இரண்டு வழியிலும் தொழிலாளர் குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அவை குறைந்த வாடகையில் அதாவது 1948—ஆம் ஆண்டுத் தொழிற்சாலைகள் சட்டத்தில் வரையறுத்துள்ளவாறு தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. அவை ஒரு தொழிலாளரின் மாத வருவாய் ரூ. 350க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 500க்கு உட்பட்டிருந்தால் நியாய வாடகையிலும் விடப்படுகின்றன. வீடு கட்டுவதற்காகும் செலவு உச்ச வரம்பில் கடனாக 50 வீதம், மானிய உதவியாக 25 சதவீதம் என்னும் விகிதாச்சாரத்தில் தனிப்பட்ட தொழிலதிபர்களால் ஏற்றுக் கொள்ளப்படும். இவ்வீடுகளுக்கு மாத வாடகை ரூ. 12லிருந்து ரூ. 15 வரை வசூலிக்கப்படுகிறது.

அரசு, தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 23.01 இலட்சம் செலவில் 372 குடியிருப்புகள் கட்டுவதற்காக 4 வீட்டு வசதித் திட்டங்களுக்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1977-78-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது. (கடன் ரூ. 7.50 இலட்சம்; மானியம் ரூ. 2.25 இலட்சம்).

## ஊரக வீட்டு வசதித் திட்டம்

தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் நிதி ஆதாரத்திலிருந்து ரூ. 2 கோடி ஒதுக்கீடு பெற்றதன் பயனாக, ஊரக வீட்டு வசதித் திட்டத்திற்கான தொகையானது குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இது காறும் 10 ஊரக வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் வட்டார மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 1977—78-ஆம் ஆண்டில் மேலும் 50 சங்கங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் கடன் கொடுக்கும் திட்டத்திற்கு ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரிசனங்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்படும் வீடு கட்டும் கடன்களுக்கு, கடன் தொகையின் முழுப் பயனையும் பெறுவதன் பொருட்டு, கடன்களுக்கு வட்டி வாங்காமல் சலுகை அளித்து, அரசு முழு வட்டித் தொகையையும் ஈடு செய்கிறது.

## குடிசைப் பகுதி மாற்றும் பணி

குடிசைப் பகுதி மாற்றும் திட்டங்களுக்கு 1976-77-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 320 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில், குடிசை மாற்று வாரியத்தின் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களுக்கும், விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் உலக வங்கித் திட்டங்களுக்கும் சேர்த்து ரூ. 540 இலட்சம் ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

**[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அனுமதிக்காக வைக்கப்பட்ட 1977-78-ஆம் ஆண்டின் வீட்டு வசதி மானியக் கோரிக்கையின் கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]**



# நேருவின் வாழ்விலே!
## (படத் தொகுப்பு)



குழந்தைப் பருவத்திலே நேரு.



ஐந்து வயதிலே நேரு.

தந்தை மோதிலால் நேரு, தாய் ஸ்வரூப ராணி ஆகியோருடன் நேரு.





ஹாரோ பள்ளியில் நேரு (1906)



அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராய்ப் பணியாற்றிய தந்தையுடன் நேரு (1912)




நேரு வளர்ந்த 'ஆனந்த பவனம்'



மனைவி கமலா அவர்களுடன் நேரு (1931)

பேரறிஞர் பெர்னாட்ஷாவுடன் நேரு.



கவியரசர் ரவீந்திரநாத் தாகூருடன் நேரு (1936)





சுபாஸ் சந்திர போஸ் அவர்களுடன் நேரு (1937)



மகாத்மா காந்தி அடிகளின் அறிவுரையை ஆழ்ந்து கேட்கிறார் நேரு.
(1945, புதுடில்லி)



குதிரைச் சவாரி என்றால் நேருவுக்கு மிகவும் விருப்பம்.
(கிண்டி ராஜ்பவன் அருகில்—1959).



கிரிக்கெட்டும் விளையாடுவார்!
(வெள்ளத் துயர்துடைப்பு நிதி வசூலுக்காக, 1953-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் நேருவும் கலந்து கொண்டு விளையாடினார்)



மோட்டார் சைக்கிளும் ஓட்டுவா



1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14-ஆம் நாள் இரவு 12 மணி அடித்தவுடன், இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக 1947, ஆகஸ்ட் 15 அன்று, பதவி ஏற்றார் நேரு.



செங்கோட்டையின் கொத்தளத்தில் நின்று சுதந்திர நாள் விழா உரையாற்றுகிறார்.





வின்ஸ்டன் சர்ச்சிலுடன் நேரு (1949).

இந்தியா சுதந்திரம் அடைந்த போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்த அட்லி யுடன் நேரு (1947)



கூட்டுச் சேராக் கொள்கையுடைய ஐம் பெரும் நாடுகளின் தலைவர்கள் (நேரு, நுக்குருமா, நாசர், சுகர்னோ, டிட்டோ)



1954-ஆம் ஆண்டில் சைனாவுக்குச் சென்றபோது (மறைந்த) சீனப் பெருந் தலைவர் மா-சே-துங் அவர்களைச் சந்தித்துப் பஞ்சசீலக் கொள்கைகளைப் பற்றித் தெளிவு படுத்தினார்.



மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடி யுடன் நேரு (இடையில் நிற்பவர் லிண்டன் பி. ஜான்சன்)

“நமது இலட்சியம் உலக சமாதானமே என்கிறார்களா?





இந்தியாவின் நவீன ஆலயங்களில் ஒன்றான பக்ரா அணையின் மின் நிலையத்தைத் துவக்கி வைத்தார் (1963)



குஜராத் மாநில கிராமிய நடனக் கலைஞர்களுடன் நேரு.

அறிவியல் அறிஞர் 'ஆல்பர்ட் ஐன்ஸ்டின்' அவர்களைப் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் சந்தித்து உரையாடினார் நேரு.



# தமிழ்நாட்டில் நேரு



அகமும் முகமும் மலர முதறிஞர் ராஜாஜியை, சென்னை விமான தளத்தில், கட்டித் தழுவிய கண்கொள்ளாக் காட்சி; 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்பதை மெய்ப்பிக்கிறது.



குழந்தைகளுடன் அமர்ந்து, குழந்தைகள் நடத்திய நிகழ்ச்சியைக் காண்கிறார்.

தூத்துக்குடியில் நடைபெற்ற கல்விச் சீர் திருத்த மாநாட்டில்......





1959-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வந்தபோது மரம் நடும் விழாவைத் துவக்கி வைத்தார்.



பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் நேரு அவர்களும் கலந்துரையாடுதல்.



அடையாற்றில் உள்ள புற்றுநோய் மருத்துவ மனைக்கு வருகை தந்தார்.

மாமல்லபுரம் சிற்பங்களைக் கண்டு வியக்கிறார்.





# நேருவின் வாழ்க்கைக் குறிப்புகள்

1889 நவம்பர்த் திங்கள், 14ஆம் நாள் மோதிலால் நேருவுக்கும் சொருப ராணிக்கும் அலகாபாத்தில் பிறந்தார்.

1905 மே திங்களில் இங்கிலாந்தில் ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்.

1910 பட்டப் படிப்பை முடித்து, சட்டப் படிப்பைத் தொடர்ந்தார்.

1912 வழக்கறிஞராகி இந்தியா திரும்பினார். பங்கிபூர் காங்கிரசில் பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

1915 காங்கிரசின் சார்பில் முதன் முறையாக மேடை ஏறிப் பேசினார்.

1916 பிப்ரவரி 8-ல், கமலாவை மணந்தார். டிசம்பரில் காந்தியடிகளுடன் முதல் சந்திப்பு.

1919 மோதிலாலுடன் சேர்ந்து 'இண்டிபெண்டன்ட்' என்ற செய்தி இதழைத்தொடங்கினார்.

1921 கிசான் கிளர்ச்சியில் ஈடுபட்டார்; வேல்ஸ் இளவரசர் வருகையின்போது கடையடைப்பு நடத்தத் திட்டமிட்டதற்காக, டிசம்பர் 6-ல் கைது செய்யப்பெற்று, ஆறு மாதச் சிறைத்தண்டனை அடைந்தார்.

1925 அலகாபாத் நகராட்சித் தலைவரானார். பின்னர் அப்பதவியைத் துறந்தார்.

1927 நவம்பரில், மாஸ்கோவில் நடைபெற்ற ருசியப் புரட்சியின் 10-ஆம் ஆண்டுவிழாவில் கலந்து கொண்டார். 'சோவியத் ருஷ்யா' என்ற நூலை எழுதினார். டிசம்பரில் சென்னையில் நடைபெற்ற 42-வது காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1930 ஏப்ரல் 14-ல், உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டதனால், ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

1931 பிப்ரவரி 6-ல் மோதிலால் மறைவு.

1934 ஜனவரி 1-ல் 'உலக வரலாறு' என்னும் நூலை எழுதி முடித்தார்.

1935 பிப்ரவரி 14-ல், 'தன் வரலாற்றை' எழுதினார். செப்டம்பர் 4-ல் மனைவி மிகவும் உடல் நலம் குன்றியதால், அவரைப் பார்ப்பதற்காக, விடுதலை பெற்று, ஐரோப்பா சென்றார். வெளிநாட்டிலிருக்கும் போதே காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1936 பிப்ரவரி 28-ல் கமலா சுவிட்சர்லாந்தில் காலமானார். ஜூன் 2-ல் இந்திய அரசியல் சட்டத்தின் மாதிரிப் படியை உருவாக்கினார்.

1938 நேருவின் தாயார் சொருபராணி மறைவு.

1939 சுபாஷ் சந்திர போஸுக்கும் காந்தியடிகளுக்கும் இடையில் எழுந்த வேறுபாட்டைப் போக்க முயன்றார்.

1940 'இந்தியரைக் கேட்காமலே உலகப் போரில் இந்தியா கலந்து கொள்ளும்' என்று ஆங்கில அரசு அறிவித்ததனால் எழுந்த சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டமைக்காக அக்டோபர் 31-ல் கைது செய்யப்பெற்று, இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார்.

1941 டிசம்பரில், விடுதலை பெற்றார்.

1942 ஜனவரி 1-ல், 'நேருவே என் வாரிசு' என்று காந்தியடிகளால் புகழ் மாலை சூட்டப் பெற்றார்.

ஆகஸ்ட் 7-ல் பம்பாய் காங்கிரஸில் 'வெள்ளையனே வெளியேறு' என்னும்

# ஊரறிந்த இரகசியம்....?



## உங்களுக்கும் தெரியட்டுமே!

எனது புதுமையான சேமிப்புத் திட்டம் இரட்டைப் பலன்களுக்கு உறுதியளிக்கிறது. பிராவிடெண்ட் பண்ட், CTD, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் போன்றவைகளில் முதலீடு செய்யப்படும் பணத்திற்குக் கவர்ச்சியான வரிவிலக்குச் சலுகைகளை வழங்குகிறது வருமான வரி சட்டங்கள்

இவற்றுள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வரி விலக்கு தருவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இன்ஷ்யூர் செய்த நாளிலிருந்து, அபாயங்களுக்கு எதிரான பாதுகாப்பை இதன் மூலம் மட்டுமே நீங்கள் பெற முடியும்

முழு விவரங்கள் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம்கள் மூலம் கிடைக்கும் அதிகபட்ச வரிச சலுகைகள் பற்றி தெரிந்து கொள்ள, உங்கள் இன்ஷ்யூரன்ஸ் முகவரை ஏன் கலந்தாலோசிக்கக் கூடாது?

**ஆயுள் இன்ஷ்யூரன்ஸைப் போல் ஆதரவளிப்பது எதுவும் இல்லை!**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா**

PRATIBHA-LIC-1156/77 TAM


தீர்மானத்தை நிறைவேற்றியதனால், ஆகஸ்ட் 8-ல் கைதானார். நீண்ட காலம் சிறைவாசம் பெற்றார்.

1944 ஏப்ரல் 13-ல், 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' என்ற நூலை, சிறையிலே எழுதத் தொடங்கி, செப்டம்பரில் முடித்தார்.

1945 ஜூலை 17-ல், முஸ்லீம் லீக் கேட்ட பாகிஸ்தான் பிரிவினையை வன்மையாகக் கண்டித்தார். பொதுத் தேர்தலில் ஈடுபட்ட காங்கிரசுக்கு முழு மூச்சுடன் தொண்டு செய்தார்.

1946 மார்ச் திங்களில், 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' நூலை வெளியிட்டார். ஆகஸ்ட் 12-ல், இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு, வைஸ்ராய், நேருவிடம் கேட்க, அவர் ஒப்புக் கொண்டார்.

1947 ஆகஸ்ட் 15-ல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார்.

1948 ஜனவரி 30-ல், காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்; நேரு கண்கலங்கினார். வானொலியில் உருக்கமாக உரையாற்றினார்.
ஆகஸ்ட் 20-ல் அணுசக்திக் குழுவின் முதற் கூட்டத்தைத் துவக்கினார்.

1950 ஜனவரி 26-ல்,. இந்தியா குடியரசு நாடு ஆகியது.

மார்ச் திங்களில், இந்தியத் திட்டக் குழுவைத் தொடங்கினார். ஜூலை 14-ல் கொரியாப் போரை நிறுத்தச் சொல்லி மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

1954 ஜூன் 25-ல், சீனப் பிரதமர் சூ-என்-லாயை வரவேற்றார். பஞ்சசீலம் என்னும் ஐந்து கொள்கைகளை விளக்கினார்.

1955 ஜூலை 15-ல், 'பாரத ரத்னா' விருது பெற்றார்.

1957 ஜனவரி 12-ல், நாளந்தாவில் புத்தரின் 2,500-வது ஆண்டு விழாவில் பங்கேற்றார்.

1962 டிசம்பர் திங்களில், கோவா மக்களை போர்ச்சுக்கீசியரின் பிடியிலிருந்து விடுதலை பெறச் செய்தார்.

1964 ஜனவரியில், புவனேஸ்வரத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபொழுது நோய்வாய்ப்பட்டார். சிகிச்சைக்குப் பின் நலம் பெற்றார்.

மே 27. புதன் கிழமை காலை 6.20 மணிக்கு மீண்டும் நோய்வாய்ப்பட்டார். குருதிக் குழலில் கோளாறு ஏற்பட்டதனால், பகல் 2.00 மணிக்கு உயிர் துறந்தார்.

# குழந்தைகளைச் செம்மையாக வளர்க்க வேண்டும்

*—ஜவஹர்லால் நேரு*

"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும், நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில், குழந்தைகள் இந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

"உலக முழுவதிலும் உள்ள குழந்தைகளின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களிடம் பல விதங்களில் வெளிப்படையான மாறுதலைக் கண்டேன். பேசும் மொழிகள் எத்தனை! உடுத்தியிருந்த உடைகள்தான் எத்தனை விதம்! ஆனால் அவர்கள் அழகு முகங்களிலே காணப்பட்ட உணர்ச்சி, அதனால் தோன்றும் கவர்ச்சி, உலக முழுவதிலும் ஒன்றாகவே இருப்பதைக் கண்டேன். அவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தால், அவர்கள் விளையாடவோ, சண்டை போடவோ செய்வார்கள்.

"அவர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் ஒரு விளையாட்டுத்தான். தங்களுக்குள்ளே இன, நிற, சாதி, மத வேற்றுமைகளை அவர்கள் பார்ப்பதில்லை. அவர்களுடைய தாய் தந்தையரைவிடப் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். "துரதிருஷ்டவசமாக பெரியவர்களாக ஆகும்போது அவர்களுடைய இயற்கை அறிவை, பெரியவர்களின் போதனைகளும், நடத்தையும் மறைத்துவிடுகிகின்றன.

"ஆம், வயது வளர வளரத்தான் அவர்களுடைய உள்ளம் கறைப்படுகிறது என்று சொல்வதைவிட, கறைப்படுத்தப்படுகிறது என்றுதான் கூறவேண்டும்.

"குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால், குழந்தைதைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக—அறிவாளிகளாக—விளங்குவார்கள்.

"உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்து கொள்ள, நாம் வசதி வாய்ப்புக்கள் செய்து தரவேண்டும். நாமாக நமது மனப் போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக் கூடாது.

"குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் இலட்சியமாகத் திகழ வேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழுமுதல் கொள்கையாக இருக்க வேண்டும்."

(இது ஒரு தொகுப்பு)

# நிதி குவிகிறது !



▲ மாண்புமிகு இந்திய அரசின் பெட்ரோலிய-இரசாயனத்துறை அமைச்சர் திரு பகுகுணு அவர்கள், தமிழக புயல்-வெள்ள நிவாரணத்திற்காக, 'இந்தியன் பார்மசூட்டிகல் லிமிடெட்', 'இந்தியன் ஆண்டிபயாடிக் லிமிடெட்' ஆகியவற்றின் சார்பில், ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள மருந்து வகைகளை வழங்கும் முகத்தான், மருந்துகள் அடங்கிய ஒரு அடையாளப் பெட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கினர். மேலும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் சார்பில் ரூபாய் 3 இலட்சத்திற்குரிய காசோலையையும், சென்னை உரஆலை, சென்னை எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலை ஆகியவற்றின் சார்பில் தலா ரூபாய் 1 இலட்சத்திற்குரிய காசோலையையும் மாண்புமிகு தமிழக முதல்வரிடம் வழங்கச் செய்தார்..



◀ தமிழக புயல், வெள்ள நிவாரண நிதிக்கு சென்னை குதிரைப் பந்தய சங்கத்தின் சார்பில் ஏற்கெனவே கொடுத்த 1 இலட்சம் ரூபாயைத் தவிர மேற்கொண்டு 3 இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களிடம் குதிரைப் பந்தய சங்கத்தலைவர் திரு எம். ஏ. எம், ராமசாமி, குதிரைப் பந்தயச் சங்க நிர்வாக சபை உறுப்பினர் ஆர். ராமகிருஷ்ணன், சங்கச் செயலாளர் சோபே ஆகியோர் மூன்று இலட்ச ரூபாய்க்கான ''காசோலை''யை வழங்கினார்கள்.



புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட தமிழக பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பகுகுணு அவர்கள், 18-11-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில், சென்னை காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த நிவாரண முகாமில் தங்கியிருந்த மக்களுக்குப் போர்வைகளை வழங்கினர்.

# நிவாரணப் பணிகள் விரைந்து நடைபெறுகின்றன !



நாகப்பட்டிணம் அருகில் உள்ள சடையங்கோட்டம் என்ற ஊர் வெள்ளத்தில் மூழ்கியது. அக்கிராம மக்கள் படகின் மூலம் பாதுகாக்கப்பட்டனர்.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொட்டிகள் வழங்கப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்யப்படுகிறது.





# வெள்ளத் துயர் துடைப்புக்கு அள்ளிக் கொடுத்திடுவீர்!





## ஆளுநர் வேண்டுகோள் !

தஞ்சை, திருச்சி, மதுரை மாவட்டங்களும், மற்றும் அதன் அருகில் உள்ள பகுதிகளும் புயல்—வெள்ளத்தினால் பெரும் சேதம் அடைந்திருப்பது மிகவும் கவலைக்குரியது ஆகும்.

தமிழக அரசு நிவாரணப் பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது.

இந்தச் சமயத்தில் அறப்பணி நிறுவனங்களும், மற்றும் பொதுமக்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ, தாராளமாக நிதி உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரபுதாஸ் பட்வாரி
தமிழக ஆளுநர்.

## முதலமைச்சர் வேண்டுகோள் !

இயற்கையின் கடுமையான சீற்றத்திற்கு ஆளாகி, தொடர்ந்து பெய்த பெருமழையின் காரணமாக, வீடு, கால்நடைகள், உடைமைகள் அனைத்தையும் இழந்தோர், கண்ணீர் சிந்தி நிற்கும் தாய்மார்கள் இவர்கள்தம் துயர்துடைக்கும் பணியில் மிகத் தீவிரமாகச் செயலாற்றிடும் தமிழக அரசிற்கு உதவிட ஏராளமான, தாராள உள்ளம் படைத்த பெருமக்கள் முன்வந்துள்ளனர். இரக்க உணர்வோடு, நல்லோர்கள், தங்களது நன்கொடையைப் பணமாகவோ, காசோலை மூலமாகவோ எங்கே அனுப்புவது எனக் கேட்ட வண்ணமுள்ளனர். அவர்களுக்கெல்லாம் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*"முதலமைச்சர் நிவாரண நிதி",*
*கோட்டை,*
*சென்னை-600009.*

என்ற முகவரிக்கு நன்கொடைகள் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானமூலம் சுற்றிப் பார்த்த வரை, ஏற்பட்டிருக்கும் சேதம், என்னைத் திடுக்கிட வைத்துவிட்டது. எத்தனை பேர்கள் பலியானார்கள், எத்தனை குழந்தைகள் அனாதையாக்கப்பட்டுள்ளனர், சேதம் எவ்வளவு, என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியாவிட்டாலும், பலகோடி ரூபாய்களைத் தாண்டும் என நான் அஞ்சுகிறேன். ஒவ்வொருவரும் தங்களது பொறுப்பை, கடமையை உணர்ந்து விரைந்து செயலாற்றக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பன்,
எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு [illegible] அரசினர் தோட்டம், சென்னை-[illegible]





# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும்,
நடத்தையையும், அறிவையும்
பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை
மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும்,
கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும்
பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல்
அரிசனங்களுக்கும்,
விவசாயத் தொழிலாளர்களுக்கும்
விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.


1-12-77




# தமிழரசு

1—12—1977

மலர் : 8 இதழ் : 11


## இந்த இதழில்.........


| | பக்க எண் |
|---|---|
| குடியரசுத் தலைவரின் வேண்டுகோள் ... | 2 |
| ஒத்துழைப்பு நல்கிடுவீர் ! —பிரதமர் வேண்டுகோள் ... | 5 |
| அல்லற்பட்டோரின் கண்ணீரைத் துடைக்க அரசு அளித்துள்ள உதவிகள்! ... | 6 |
| தோளோடு தோள் நின்று துயர் துடைப்புப் பணிகளுக்கு உதவிடுவீர்!—ஆளுநர் வேண்டுகோள் ... | 9 |
| சீரமைப்புப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன! ... | 17 |
| கல்நெஞ்சமும் கலங்கும்! ... | 19 |
| படமும் செய்தியும் ... | 22 |
| நீந்திச் சென்றார்! நிவாரணப் பணி செய்தார்! ... | 27 |
| மத்திய அமைச்சர்கள் அளித்த பாராட்டுகள்! ... | 29 |
| மின்னல் வேகத்தில் மின்சாரத் தொடர்புகள் சீரமைக்கப்பட்டன!... | 32 |
| வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரிசன நல அமைச்சர் ஆற்றிய பணிகள்! ... | 33 |
| வெள்ளத்தை முந்தும் வேகத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்! ... | 34 |
| அனுதாபம் தெரிவித்தார்கள்! ... | 42 |
| அள்ளியும் கொடுத்தார்கள்! ... | 43 |
| பொருள் குவிகிறது! ... | 45 |
| நிதி குவிகிறது! ... | 46 |
| தருவீர் ஒரு நாள் ஊதியம்! ... | 48 |


## தமிழ்நாட்டில் புயல்—வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்கள் !

| | | |
|---|---|---|
| 1. | உயிரிழந்த மக்கள் ... | 557 |
| 2. | உயிரிழந்த கால்நடைகள்... | 21,982 |
| 3. | காணாமல் போன மக்கள் ... | 199 |
| 4. | காணாமல் போன கால்நடைகள் | 767 |
| 5. | சேதமடைந்த வீடுகள் ... | 4,40,000 |
| 6. | பாழடைந்த நெற்பயிரின் பரப்பு ... | 4,46,698 ஏக்கர் |
| 7. | அழிந்த வாழைத்தோட்டப் பரப்பு | 14,000 ஏக்கர் |
| 8. | முறிந்து விழுந்த தென்னை மரங்கள் ... ... | 1 இலட்சத்துக்கும் அதிகம் |
| 9. | உடைப்பு எடுத்த பாசன ஆதாரங்கள் ... | 7,888 |
| 10. | சேதமுற்ற சாலைகள் ... | 5,833 |
| 11. | தொடர்பறுந்த தொலைபேசிகள் | 5,655 |
| 12. | பழுதடைந்த 'டிரான்ஸ் பார்மர்'கள், மின் கம்பங்கள்... | 7,570 |

## முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதி !

தமிழக முதலமைச்சரின் வெள்ள நிவாரண நிதிக்கு 30-11-1977 முடிய வசூலான தொகை ரூபாய் 59,16,215.83.

# குடியரசுத் தலைவரின் வேண்டுகோள்



மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் 25—11—1977 அன்று விமானம் மூலமாக வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

குடியரசுத் தலைவருடன், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பர்னாலா அவர்களும், மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு கே. மனோகரன் அவர்களும் விமானத்தில் சென்றனர்.

தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுடனும், மற்ற அமைச்சர்களுடனும் விமான நிலையத்தில் ஆலோசனை நடத்திய குடியரசுத் தலைவர் அவர்கள் புயல், வெள்ளத்தால் ஏற்பட்ட உயிர்ச் சேதம் கேட்டுக் கலங்கினார்! கண்ணீர் சிந்தினார்!

ஐதராபாத்திலிருந்து இந்திய விமானப் படை மூலம் குடியரசுத் த்லைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் 25—11—77 அன்று காலை 10.05 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தார்.

குடியரசுத் தலைவர் விமானத்திலிருந்து இறங்கியவுடன் விமான நிலையத்தில் தமிழக அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை ஏற்பாடு செய்திருந்த வெள்ளச் சேதங்களை விளக்கும் புகைப்படக் கண்காட்சியைப் பார்த்தார்.

கண்காட்சியில் இடம் பெற்றிருந்த புகைப்படங்களில் புயலால் வாழை மரங்கள் சேதம்டைந்திருப்பதைக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரிகள் விளக்கிக் கூறினார்கள்.

சேதமடைந்த வாழை மரங்களின் புகைப்படத்தைப் பார்த்த குடியரசுத் தலைவர் அவர்கள் கண்ணீர் சிந்தியவாறே,

**"வாழை மரங்கள் சேதங்களைக்கூட நாம் சரிசெய்துவிடலாம்! ஆனால், பச்சிளங் குழந்தைகள், வாலிபர்களின் உயிர்களை இழந்திருக்கிறோமே அதை எப்படி ஈடு செய்யப் போகிறோம்? இறந்து போன உயிர்களை நாம் எப்படி மீட்கப் போகிறோம்?"** என்று கூறிக் கண்கலங்கினார்.

புகைப்படக் கண்காட்சியைப் பார்த்து முடித்த குடியரசுத் தலைவர் அவர்கள், அங்கே இருந்த தமிழக அரசின் அதிகாரிகளிடம்,

"முதலில் தகவல் தொடர்பு, **மின்சார இணைப்புக்களை ஏற்படுத்துங்கள். செலவைப் பற்றிக் கவலைப்படாமல் மனிதாபிமான உணர்வுடன் அதிகாரிகள் செயல்பட வேண்டும்"** என்று கேட்டுக் கொண்டார்.

அன்று காலை 10.20 மணிக்கு விமான நிலையத்தில் உள்ள ஒரு அறையில் வெள்ள நிவாரண ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோருடனும் குடியரசுத் தலைவர் ஆலோசனை நடத்தினார்.





**புயல்-வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களின் புகைப்படக் காட்சியை, சென்னை விமான நிலையத்தில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் பார்வையிட்டுக் கண் கலங்கினார்.**

காலை 11 மணி வரை இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

காலை 11.05 மணிக்கு விமானப் படை விமானம் மூலம் வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட குடியரசுத் தலைவர் அவர்கள் புறப்பட்டார்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சை, நாகப்பட்டினம், திருச்சி, குடகனாறு அணைப் பகுதி ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டுச் சென்னை திரும்பினார்.

சென்னையில் பத்திரிகையாளர்களிடம் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் கூறியதாவது :

**"தமிழ்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானத்தில் இருந்து பார்த்தேன். நெல், கரும்பு போன்ற உணவுப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி இருக்கின்றன.**

**"முன் எச்சரிக்கையாக இருந்ததால், தமிழ் நாடு காப்பற்றப்பட்டது! அதிகாரிகளும், மருத்துவர்களும் உடனடியாக வெள்ளப் பகுதிக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.**

**"ஒவ்வொரு குடிமகனும் நிவாரண நிதிக்கு தன்னால் இயன்ற உதவி செய்ய வேண்டும். இதை ஒவ்வொருவரும் தங்களது மனிதாபிமான கடமையாகக் கருத வேண்டும்.**

**"இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவுகளைப் பொதுமக்கள் தைரியத்துடன் சமாளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் நிவாரணப் பணிகள் அனைத்தையும் மத்திய மாநில அரசுகள் இணைந்து செய்யும்."**

இவ்வாறு மேதகு குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் கூறினார்.

# புயல் வெள்ளச் சேதங்களைக் கண்டு குடியரசுத் தலைவர் கண்ணீர் விட்டார்!

## புயல் விளைவித்த சேதத்தின் மதிப்பு 200 கோடி ரூபாய்!

தமிழகத்தைத் தாக்கிய கடும் புயல்கள், கனத்த மழை ஆகியவற்றினல் ஏற்பட்டுள்ள சேதத்தின் மதிப்பு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் இருக்கும் என்று தெரிய வருகிறது. சேதங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு முடிந்ததும், சேதங்களின் மதிப்பு திட்டவட்டமாக அறிவிக்கப்படும்.

## மைய அரசு எல்லா உதவியும் செய்யும்!

## பிரதமர் அளித்த உறுதி!

"தமிழ்நாட்டில் புயலினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க மத்திய அரசு தேவையான அனைத்தையும் செய்யும்.

"தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள புயல் சேதங்கள் வரலாறு காணுதது. இது நாட்டுக்கே ஏற்பட்ட விபரீதமாகும்.

"புயல் வெள்ள நிவாரண வேலைகள் தமிழ்நாடு அரசு மட்டுமே கவனிக்க வேண்டிய விஷயமல்ல. மத்திய அரசும் மாநில அரசும் தேவையான அனைத்தையும் செய்து வருகின்றன.

"என்ன செய்யப்பட வேண்டுமோ அதை மாநில அரசு செய்யும்; செய்து வருகிறது."

இவ்வாறு மாநிலங்கள் அவையில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் கூறினர்.

## தமிழக அரசு வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்கு முதல்தவணையாக 15 கோடி ரூபாய் வழங்கியது!

## புயல்-வெள்ளத் துயர் துடைப்புப் பணிகளுக்காக மத்திய அரசு 5 கோடி ரூபாய் வழங்கியது!

## தமிழ்நாட்டுக்கு மேலும் ரூபாய் 10 லட்சம்! பிரதமர் அறிவிப்பு!!...

*தமிழக புயல் நிவாரண நிதிக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் மேலும் ரூ. 10 இலட்சம் அனுப்பியுள்ளார்.*

*பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து, இந்த தொகை அனுப்பட்டு உள்ளது.*

*ஏற்கனவே, அவர் பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து ஒரு இலட்சம் ரூபாய் வழங்கி இருந்தார். தமிழ் நாட்டுக்கு வந்து சேத விவரங்களை நேரில் பார்த்த அவர், இப்போது, மேலும் ரூ. 10 இலட்சம் அனுப்பி உள்ளார்.* **

புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் தமது ஒரு மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்கினர்.

# ஒத்துழைப்பு நல்கிடுவீர்!



COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL ...
15-12-1977

பிரதமர் வேண்டுகோள்

*தமிழ்நாட்டில் புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 30-11-'77 அன்று, விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தந்தார்.*

*திருச்சி விமான நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தமிழகப் புயல் சேத விவரங்கள் குறித்த புகைப்படத் தொகுப்புக் காட்சியை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் பார்வையிட்டார். பிரதமர் அவர்களிடம், தமிழக அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்ட துயர்துடைப்புப் பணிகளைப் பற்றியும், மின்சார இணைப்பைப் புயலுக்கு முன்னரே துண்டித்து விட்டதால் எப்படி உயிர்ச் சேத எண்ணிக்கையைக் குறைக்க முடிந்தது என்பதைப் பற்றியும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்களும், வருவாய் வாரிய உறுப்பினர் திரு. நடராஜன் அவர்களும், நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றும் அலுவலர் திரு கே. ஆர். ஷெனய் அவர்களும் விளக்கினர்கள்.*

*பிறகு, பாதிக்கப்பட்ட பகுதிகளில், புயல்-வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதங்களை விமானம் மூலம் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் பார்வையிட்டார். அவருடன் சென்ற மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களும் சேத விவரங்கள் குறித்துப் பிரதமருக்கு விளக்கினர்கள். தமிழக அரசு மேற்கொண்டுள்ள துயர் துடைப்பு நடவடிக்கைகள் குறித்தும் பிரதமரிடம் அவர்கள் எடுத்து விளக்கினர்கள்.*

*புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் பார்வையிட்டு விட்டுத் திரும்பிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சென்னை விமான நிலையத்தில் கூடியிருந்த பத்திரிகைச் செய்தியாளர்களிடையே பேசுகையில், தமிழகத்தில் நடைபெற்றுவரும் நிவாரணப் பணிகளைப் பற்றிப் பாராட்டினர்.*

**"தமிழ்நாடு அரசு அதிகாரிகள் காட்டும் சமுகப்பணி உணர்வைப் பாராட்ட வேண்டும்"** *என்று அவர் கூறினர்.*

*தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு எல்லா வகையிலும் உதவுமா என்று கேட்டதற்கு,* **'இது ஒரு தேசியப் பெருந்துயர்'** *என்றும்,* **'இதில் எல்லோரும் உதவ வேண்டும்'** *என்றும் பிரதமர் பதிலளித்தார்.*

**"சமீபத்திய புயல், வெள்ளச் சேதம் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்பு தேசத்தையே உலுக்கிய ஒரு பேரிழப்பாகும். மத்திய அரசும், மாநில அரசும் மட்டுமே இந்த இழப்பைச் சரிகட்டி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்து விட முடியாது. அனைவரும் தங்களால் இயன்ற அளவுக்கு இந்தத் துயர் துடைப்பு முயற்சிகளுக்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தரவேண்டும்"** *என்றும் பிரதமர் கூறினர்.*



# அல்லற்பட்டோரின் கண்ணீரைத் துடைக்க அரசு அளித்துள்ள உதவிகள்!

வரலாறு காணாத வகையில் தமிழகத்தில் அண்மையில் வீசிய கடும் புயல்கள், பெய்த பெருமழை ஆகியவற்றினால் ஏற்பட்ட சேதங்கள், 'போர்க்காலப் பணிகளைப் போல்' மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள், வெள்ள நிவாரண நிதி வசூல் போன்ற வைகளைக் குறித்து விவாதிப்பதற்காகத் தமிழக அமைச்சரவைக் கூட்டம் 28-11-1977 அன்று காலை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புயலாலும், வெள்ளத்தாலும் இன்னலுற்ற மக்களின் துயரைக் குறைக்கவும், மீண்டும் அவர்கள் தத்தம் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் வேண்டி அமைச்சரவை பல முடிவுகளை எடுத்துள்ளது.

அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை விளக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிக்கையில், பின்கண்ட 25 உதவிகளையும், சலுகைகளையும் தமிழ்நாடு அரசு அளிக்கும் என்று அவர் அறிவித்துள்ளார்.

## குறுகிய காலக் கடன் மத்தியக் காலக் கடனாக மாற்றப்படும்!

1. புயலாலும், வெள்ளத்தாலும் பயிர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ள குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்படும். இதற்கு "அன்னவாரி" சான்றிதழ் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

## மத்திய காலக் கடன்

2. மத்திய காலக்கடன்களைப் பொறுத்த வரையில் இயன்ற நிவாரணம் அளிக்க 'ரிசர்வ்' வங்கியுடன் தொடர்பு கொள்ளப்படும்.

## இலவச நெல்விதை

3. தாளடிப் பயிருக்கு நாற்றுப் பாவிட, நெல் விதைகள் இனமாக வழங்கப்படும்.

## மானிய விலையில் இரசாயன உரம்

4. வெள்ளத்தாலும், புயலாலும் சேதமடைந்த பகுதிகளில் தாளடிப் பயிருக்கு உரமிடுவதற்காகச் செயற்கை உரங்கள் 25 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும். உரச் செலவுக் கானமீதமுள்ள தொகை கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

## சம்பாப் பயிருக்கு மேலுரமிட மானியம்!

5. சம்பாப் பயிர்கள் பல பகுதிகளில் நீரில் மூழ்கி உள்ளன. இதனால் மகசூல் பாதிக்கப்படும். இந்தப் பகுதிகளில் மீண்டும் ஒருமுறை யூரியா மேலுரமாக இடுவது அவசியம். மேலுரம் இடுவதற்கான உரச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். உரத்திற்கான மீதிப் பணம் கூட்டுறவு கடனாக வழங்கப்படும்.

## மானிய விலையில் பயிர் பாதுகாப்பு மருந்துகள்

6. 1978 மார்ச் மாதம் 31-ஆம் நாள் வரை, மாநிலம் முழுவதும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்துடன் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.

## மூடிய மணலை அகற்ற உதவி!

7. மணலால் மூடப்பட்ட நிலங்களில் சிறு விவசாயிகளுக்கு அரசே தன் பொறுப்பில் மண்ணை அகற்றித் தரும்.

8. ஏனைய விவசாயிகளுக்கு மண்ணை அகற்ற 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

## இலவசமாகத் தென்னங்கன்றுகள்

9. பரந்த அளவில் தென்னை மரங்கள் சேதமடைந்துள்ளன. தென்னை சேதமுற்ற பகுதிகளில் தென்னங் கன்றுகள் இனமாக வழங்கப்படும்.

## கரும்பு, வாழைத் தோட்டங்களைப் புதுப்பிக்க மானியம்!

10. சேதமுற்ற கரும்பு, வாழைத் தோட்டங்களை மீண்டும் புதுப்பிக்க ஒரு ஏக்கருக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் மான்யம் அளிக்கப்படும்.

## சிறுவிவசாயிகளுக்கு மானியம்!

11. விதை, உரம், விதை முதல் போன்ற பொருளுக்கான மானியங்கள் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படும். (நீர்ப் பாசன வசதியுள்ள நிலமாக இருந்தால் (நன்செய்) 2.50 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்களுடையவர்களும், இதர நிலங்களாக இருந்தால் (புன்செய்) 5 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்கள் உடையவர்களும், குத்தகைக்குச் சாகுபடி செய்பவர்களும் சிறுவிவசாயிகள் எனக் கணக்கிடப்படுவர்)

## நில நீர் வரிகளுக்கு விலக்கு!

12. புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நில வரி, நீர்த் தீர்வை, இதர நிலவரிகள், இதர நீர் வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

13. எங்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் உள்ளூர் வரி ('லோக்கல் செஸ்') விலக்கும் அளிக்கப்படும்.

14. இதே இடங்களில், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் வரியின் மேல் விதிக்கும் கூடுதல் வரியையும் ('லோக்கல் செஸ் சார்ஜ் ஜையும்') தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அரசு கேட்டுக் கொள்ளும்.

## தக்காவிக் கடன் தள்ளிவைப்பு!

15. நிலவரி மற்றும் 'லோக்கல் செஸ்' தள்ளுபடி பெறுகின்ற நபர்களுக்கு தக்காவிக் கடன் பாக்கிகளும், நடப்பு ஆண்டில் செலுத்த வேண்டிய தக்காவிக் கடன் தவணையும் 1387-ஆம் பசலியிலிருந்து 1388-ஆம் பசலிக்குத் தள்ளி வைக்கப்படும்.

## கால்நடைகள் வாங்கக் கடனுதவி!

15. கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கால்நடை வாங்கக் கடனுதவி வழங்கப்படும்.

## மீனவர்களுக்கு உதவி!

17. கட்டுமரம், நாட்டுப் படகுகள், வலைகள் ஆகியவற்றை இழந்த மீனவர்களுக்கு 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் கடனாகவும் அளித்து மேற்கண்டவற்றைப் பெற உதவி அளிக்கப்படும்.

## கைத்தறி நெசவாளர்களுக்கு

18. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு அவர்களின் நட்டங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவை தயாரானதும் நிவாரணம் பற்றி அறிவிக்கப்படும்.

## குடிசை இழந்தவர்களுக்கு உதவி!

19. குடிசை இழந்தோருக்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ரூ. 100-க்கும் மேலாக, மேலும், ரூ. 100 சேர்த்து மொத்தம் ரூ. 200 தரப்படும்.

20. மேலும் அவர்களுக்கு வீடுகட்ட கடனாக ரூ. 300 தர மத்திய அரசின் உதவி கோரப்படும்.

## கட்டடப் பொருள்களின் விலை கட்டுப்படுத்தப்படும்!

21. அவசிய பண்டங்கள் சட்டத்தின் கீழ், மத்திய அரசு அனுமதியுடன் கட்டடப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், நிர்ணயப்படுத்தவும், நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும். செங்கல், கீற்றுகள், மூங்கில், சவுக்குக் கம்புகள், நார்க்கயிறுகள் ஆகியவை இதில் உட்படும்.

## சில்லறை விற்பனை நிலையங்கள் துவக்கப்படும்!

22. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூங்கில், சவுக்குக் கம்புகள் மற்றும் கட்டடப் பொருட்களைச் சில்லறை விற்பனை செய்ய நிலையங்கள் துவங்கப்படும்.

## தென்னங்கீற்றுகள் வரவழைக்கப்படும்!

23. பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்த தென்னங் கீற்றுகள், மூங்கில் கம்புகள் ஆகியவற்றை இதர மாநிலத்திலிருந்து பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிமெண்ட் தேவை

24. வீடுகள், பாலங்கள் மற்றும் கட்டட வேலைகளுக்குத் தேவையான சிமெண்ட் கோட்டாவை மாநில அரசிற்கு அதிக அளவில் உடனடியாக வழங்கும்படி மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## பொதுக் கொட்டகைகள் அமைக்கப்படும்!

25. பொதுக் கட்டடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை, பொதுக் கொட்டகைகள் ( Dormitories ) அமைத்து அவற்றில் வசிக்க ஏற்பாடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.









# தோளோடு தோள் நின்று துயர்துடைப்புப் பணிகளுக்கு உதவிடுவீர்!

## — ஆளுநர் வேண்டுகோள்!

[சென்னை இராஜாஜி மண்டபத்தில் 23—11—'77 அன்று நடைபெற்ற நகரப் பொதுமக்கள் சிறப்புக் கூட்டத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், [illegible] நிவாரணம் குறித்து ஆற்றிய உரை]

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

தமிழ்நாட்டிற்கு மழை வழங்கும் வடகிழக்குப் பருவ மழை இந்த ஆண்டில் முன் கூட்டியே-அக்டோபர் மாத ஆரம்பத்திலேயே-தொடங்கி 17-ஆம் தேதி முதல் வலுத்துப் பெய்தது. வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளபடி 1977 அக்டோபர் முதல் நாள் முதல் நவம்பர் 17-ஆம் நாள் வரை 14,824 மில்லி மீட்டர் அளவுக்குப் பெருமழை பெய்திருக்கிறது. வழக்கமாகப் பெய்யும் மழையளவைக் காட்டிலும் இது 6,219 மில்லி மீட்டர்-அதாவது 72 சதவீதம் கூடுதலானதாகும். இந்த ஆண்டு மாநிலமெங்கும் பரவலாக மழை பெய்தது. வறட்சிப் பகுதிகளான இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களிலும் கூடப் பெருமழை பொழிந்துள்ளது. பருவ மழையையே கண்டறியாத இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை விடாமல் பெய்ததனால் ஏரி, குளங்கள் அனைத்தும் நிரம்பின. வைகையாற்றில் வெள்ளம் கரை புரண்டோடியதனால் பரமக்குடி, இராமநாதபுரம் வட்டங்களிலுள்ள பல கிராமங்களும், சிற்றூர்களும் வெள்ளத்தில் மூழ்



கின. ஏரிகளில் பல இடங்களில் உடைப்பெடுத்துக் கொண்டதனுல் பக்கத்துக் கிராமங்களும், வயல்களும் பெரிதும் பாதிக்கப் பட்டன. 28-10-'77ஆம் நாளன்று இராமநாதபுரத்திலுள்ள பெரிய ஏரியில் உடைப்பு ஏற்படும் நிலைமை இருந்ததால், இராமநாதபுரம் நகரமே அழிந்துவிடுமோ என்ற அச்சமும் உருவாகியது. பெரும் சேதம் ஏற்படக் கூடும் என்பதனை முன்கூட்டியே எதிர்பார்த்து, விழிப்போடிருந்த மக்களும், பொதுப் பணித்துறை அதிகாரிகளும் ஏரியின் கரையை வெட்டித் திருப்பியதோடு ஏரியை நோக்கிப் பாய்ந்த வைகையாற்று வெள்ளத்தையும் கடலில் கலக்குமாறு செய்தனர்.

அக்டோபர் மாதம் 17-ஆம் நாள் முதல், 27-ஆம் நாள் வரை பெரும்பாலும் விடா மழை பெய்ததால் சென்னை மாநகரின் தாழ்வான பகுதிகளில் நீர்புகுந்து, பொதுமக்களின் அன்றாட வாழ்வு சீர் குலைந்தது. சென்னையில் வியாசர்பாடிப் பகுதி குறிப்பாகப் பெரிதும் பாதிக்கப்பட்டது. அடையாற்று வெள்ளம் கோட்டூர்புரத்திலுள்ள குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளில் புகுந்தது. கடந்த ஆண்டு சென்னை மாநகரில் ஏற்பட்ட வெள்ள அனுபவம் நமக்குப் படிப்பினையாயிருந்தது. எனவே மழை பெய்யத் தொடங்கியவுடனே தாழ்வான பகுதிகளிலிருக்கும் மக்களை வெளியேற்றியதோடு, சென்னை மாநகராட்சி தாம் அமைத்திருந்த 200-க்கு மேற்பட்ட முகாம்களில் அவர்களுக்குப் புகலிடம் வழங்கியது. வெள்ளப் பாதிப்பின் கடுமை தொடங்கியதுமே வியாசர்பாடி, கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளிலிருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் சென்னையில் அமைத்த ஐந்து பெரும் முகாம்களுக்குச் சுமார் 1 இலட்சம் மக்கள் அழைத்து வரப்பட்டனர். அங்கு அவர்களைத் தங்க வைத்ததோடு உணவும் வழங்கப் பட்டது.

அக்டோபர் மாதம் பெய்த மழையின் பிடியிலிருந்து முற்றிலுமாக நாம் விடுபடும் முன்னர்,



அக்டோபர் 1977-ல் பெய்த அடை மழையினுல் சென்னை மாநகரின் குடிசைகளெல்லாம் வெள்ளத்தில் சிக்கின !

சென்னையில் குடிசை இழந்த மக்களுக்காக, 5 பெரும் முகாம்கள் அமைத்துத் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்ததோடு, உணவும் அளிக்கப்பட்டது.



கோட்டூர்புரம் குடியிருப்புகளில் வெள்ளம் புகுந்தபோது காவல் துறையினர் குழந்தைகளைக் காப்பாற்றினர்!



மேலும் ஓர் இடியாகக் கடும் சூறைக் காற்று நவம்பர் 12-ஆம் தேதி காலையிலிருந்தே மணிக்கு 100 கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்துடன், நாகப் பட்டினம் நகரை வன்மையாகத் தாக்கிச் சீர்குலைத்துச் சின்னுபின்னப்படுத்தியது. தொடர்ந்து கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள வட்டங்கள் அனைத்தையும் சூறையாடியது. மேலும், புதுக்கோட்டை, தென்னுர்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களையும்கூட அந்தக் கடுமையான புயல் தனது கொடுமையான பிடிக்குள் சிக்க வைத்தது. பெரும் புயலோடு வலுத்த மழையும் மாநிலத்தைத் தாக்கியது. கால்வாய்களும், காட்டாறுகளும், சிற்ருறுகளும், பேராறுகளும் பெருக்கெடுத்துக் கரை புரண்டு சுற்றுப்புறங்கள் அனைத்தையும் வெள்ளக் காடாக்கியது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வெள்ளாற்றிலும், குண்டாற்றிலும் வெள்ளம் மிகுந்து பல கிராமங்களை மூழ்கடித்தது. படகுகளில் தான் இச்சிற்றூர்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அமராவதி ஆற்றிலும், ஆண்டு முழுவதும் அனேகமாக வறண்டு கிடக்கும் வறட்டாறு, குடகனுறு, சாந்தவர்த்தனியாறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்துச் சற்றும் எதிர்பாராவண்ணம் திருச்சிராப்பள்ளி நகரில் புகுந்ததோடு கரூர்ப் பக்கம் பல சாலைகளைச் சீரழித்து அமராவதி இரயில் பாலத்தையும் சிதைத்துச் சென்றது.

மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் அருகேயுள்ள குடகனுற்று அணை உடைந்து தாழ்வான பகுதிகளிலிருந்த கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின. கொள்ளிட ஆறும் பல இடங்களில் உடைப்பெடுத்துக்கொண்டு ஊருக்குள் புகுந்தது.

நாகப்பட்டினத்தைப் புயல் தாக்கியவுடன் மேலும் ஒரு புயல் உருவாகித் தீவிரமடைந்து வருவதாக வானிலை ஆராய்ச்சித்துறை அறிவித்தது. இச்சூறைக் காற்று, நவம்பர் 17, 18ஆம் தேதிகளில் பாம்பன் கடற்கரையைத் தாக்கக் கூடும் என்று முதற்கண் எதிர்பார்த்தோம். ஆனுல் அது வடக்கே நகர்ந்து நாகப்பட்டினம், கடலூர், சென்னைப் பகுதிகளை நோக்கி வந்தது. பின்னர் திசை மாறி வடக்கு நோக்கி மேலும் நகர்ந்து 19ஆம் தேதி பிற்பகல் ஆந்திர மாநிலத்தில் சிராலாப் பகுதியைத் தாக்கிச் சீரழித்தது. தமிழ்நாட்டின் கடற்கரையோர



## வங்கக் கடலிலே ஒரு புயல் ! அரபிக் கடலிலே மற்ருெரு புயல் !!

(17—11—1977 தேதிய நிலவரம்)

மேலே காணப்படும் படத்தில் வங்கக் கடலில் ஒன்றும், அரபிக் கடலில் மற்ருென்றுமாக இரு பகுதிகள் வெண்மையாகத் தெரிகின்றன. இவ்விரு பகுதிகளும், இரு புயல்களைக் குறிக்கின்றன! 17-11-1977 அன்று காலை 8-25 மணியளவில் இவ்விரு புயல்களும் இருந்த நிலைமையை மேலேயுள்ள படம் எடுத்துக் காட்டுகிறது. இப்படம் செயற்கைக்கோள் மூலம் எடுக்கப்பட்டதாகும்.

வங்கக்கடலில் உருவாகி, நாகைப்பட்டினத்தை 12-11-1977 அன்று தாக்கி கரைகடந்து சென்ற புயல்தான் மீண்டும் அரபிக்கடலிலே தோன்றியுள்ளது. (இதுவே திசைமாறி மங்களூருக்கு அருகே கரையைக் கடந்துள்ளது).

அடுத்தாற்போல் உருவாகி, தமிழகத்தை அச்சுறுத்திக் கொண்டிருந்த புயலே வங்கக் கடலில் தெரிகிறது. (இதுவே, திசைமாறி ஆந்திராவில் சிராலாவிற்கு அருகே கரையைக் கடந்துள்ளது.





மாவட்டங்களில் வாழும் மக்கள் அனைவருமே இப்புயலால் அஞ்சிப் பெரிதும் திகைத்தனர். புயலால் நேரவிருந்த பாதிப்பை, முடிந்த அளவுக்குத் தணிப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொண்டது. நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையோடும், மாறாக அல்லது வரினும் அஞ்சாமல் எதிர்கொள்ளலாம் என்ற உறுதியோடும் அரசு செயல்பட்டது.

தொடர்ந்து பல நாட்களாக மழை பெய்ததாலும், எண்ணற்ற பகுதிகள் புயலுக்கும், வெள்ளத்துக்கும் இரையானதாலும் தமிழ் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பெருஞ்சேதம் ஏற்பட்டுள்ளது. புயலின் கடும் தாக்குதல் போக்குவரத்து வசதிகளையும் சீர்குலைத்துவிட்டது. குறிப்பாகக் கிழக்குத் தஞ்சாவூர்ப் பகுதியில் காவல்துறையினரின் வானொலித் தொடர்புகள் முழுவதுமாக நிலை குலைந்து விட்டன.





ஆறுகளிலும், கால்வாய்களிலும் வெள்ளப் பெருக்கெடுத்து உடைப்பு ஏற்பட்டதாலும், வேரொடு மரங்கள் சாய்ந்ததாலும், சாலைகளும், மின்சார அமைப்பும் இரயில் பாதைகளும் பெரிதும் சீர்குலைந்தன. கிழக்குத் தஞ்சைப் பகுதியில் தொலைபேசித் தொடர்புகளும், மின்சாரத் தொடர்புகளும் இன்னும் சீர் பெறவில்லை. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாகச் செல்ல முடியாத நிலையில், சேதத்தின் அளவைச் சரியாக மதிப்பிட இயலவில்லை.

நமது வேண்டுகோளுக்கு இணங்கி விமானப் படையினரும், கப்பற் படையினரும் 8 விமானங்களைத் தந்து உதவினர். வெள்ளத்தில் சிக்கியிருக்கும் மக்களைக் காப்பாற்றி உடனடியாக நிவாரணப் பணிகளை அவர்கள் மேற்கொண்டனர். நெருங்க முடியாத பகுதிகளில் உள்ள மக்களுக்கு விமானத்திலிருந்து





**வெள்ளம் சூழ்ந்த கிராமங்களில் உணவின்றி வாடிய மக்களுக்கு உணவுப் பொட்டலங்களும், அரிசி மூட்டைகளும், பிஸ்கட்டுகளும், விமானத்தில் இருந்து போடப்பட்டன!**

உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பெற்றன. நம்மிடமும், இராணுவத்திடமும், உள்ள பல மோட்டார் வண்டிகளும், படகுகளும், பெரிதும் பயன்படுத்தப் பட்டன. மக்களைக் காப்பாற்றும் நிவாரணப் பணியின் முதற்கட்டம் நிறைவேறியுள்ளது.

வெள்ளத்தினால் சீரழிந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் இரண்டாவது கட்டத்தில் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். இயற்கையின் சீற்றத்தால் இம் மாநிலம் முழுவதும் பெருந் துயரத்திற்கு ஆளான போது பெருந் துயரையும், பேரிழப்பையும் தணிக்கும் வகையில் சிறந்த முறையில் மீட்புப் பணிக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டு அரும் பணியாற்றிய அரசு நிர்வாகத்தினருக்கும், உள்ளாட்சி மன்றத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்கூட்டியே தக்க நடவடிக்கையை இவர்கள் மேற்கொள்ளாதிருந்தால் மாண்டோர் எண்ணிக்கை மேலும் மிகுதியாயிருந்திருக்கும். நிவாரணப் பணிகளுக்காக விமானங்களையும், இராணுவ வீரர்களையும் கருவி, கலன்களையும், பொருள்களையும் அளித்து உதவிய இராணுவத்தினருக்குச் சிறப்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செஞ்சிலுவைச் சங்கம், இராமகிருஷ்ண மிஷன், கேர் நிறுவனம் போன்ற தொண்டு நிறுவனத்தினர் பணமாகவும், தானியங்களாகவும் பண்டங்களாகவும் பிற வகையிலும் நன்கொடை அளித்ததோடு தொண்டர்களையும் அனுப்பி நிவாரணப் பணிகளிலும் கைகொடுத்து உதவி புரிந்தனர். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

**மீட்புப் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் இராணுவத்தினர் ஆற்றிய பணி பாராட்டிற்குரியது.**



**இயற்கையின் கொடுஞ் சீற்றத்திற்கு உள்ளான மக்களின் துயர்** துடைக்க, மாநில அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்துள்ளது. இனியும் தொடர்ந்து செய்யும் என்று நான் உறுதியளிக்கிறேன். பேரிழப்பிற்கு ஆளானவர்களுக்கும், அனைத்தையுமே இழந்து தவிப்போர்க்கும் என் அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்பாராத வெள்ளத்தால் அல்லல்பட்டு ஆற்றுது அழும் மக்களின் துயரங்களைத் துடைக்க நிதி உதவி செய்யுமாறு மத்திய அரசை வேண்டினோம். முதலமைச்சரும், நானும், டில்லியில் தலைமை அமைச்சரைச் சந்தித்தோம். முதற்கட்டமாக 5 கோடி ரூபாயை மத்திய அரசு மனமுவந்து வழங்கியுள்ளது. சேதங்களை மதிப்பிட மத்தியக் குழு ஒன்று விரைவில் வரவிருக்கிறது. வெள்ளம், புயல் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள இப்பிரச்சினை மிகப் பெரியதாகும். அனைத்தையுமே இழந்து அல்லல்படுபவர்கள்; தங்களது குடும்பத்தின் தூணாய் நின்று துணையாய் விளங்கியவர்களை இழந்து தவிப்பவர்கள் ஆகியோரின் துயர்களுக்கும் தேவைகளுக்கும் எல்லையே இல்லை. பாதிக்கப்பட்டோருக்கு மறு வாழ்வு அளிப்பதே தற்போது நாம் மேற்கொள்ளத்தக்க தலையாய பணியாகும்.

பாதிக்கப்பட்டவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கப் பணமாகவும், பொருட்களாகவும், தாராளமாகவும், ஏராளமாகவும் நன்கொடை வழங்க வேண்டும் என்று உங்களையெல்லாம் விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்.

சமூக சேவை நிறுவனங்களும், பிற அமைப்புகளும் நாட்டின் பல்வேறு இடங்களில் இயங்கி வருகின்ற ஏனைய நிறுவனங்களையும் அணுகி அவர்களிடமும் வேண்டிய உதவிகளைப் பெற முயல வேண்டும்.

**நாம் மேற்கொண்டுள்ள இந்தப் பணியைச் சிறப்பாக நிறைவேற்ற உங்கள் உயரிய கருத்துக்களை வழங்குவதோடு, எங்களுடன் தோளோடு தோள் நின்று துயர் துடைப்புப் பணிகளுக்கு ஆவன அனைத்தையும் செய்து உதவ முன்வருமாறு அன்போடு அழைக்கிறேன்.**



# சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு 1.61 கோடி ரூபாய் நட்டம்!

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய 3 மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளுக்கு அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் மொத்தம் 1.61 கோடி அளவுக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

தோராய மதிப்பீடுகளின்படி திருச்சியில் மட்டும் பின்கண்ட அளவில் நட்டம் ஏற்பட்டுள்ளது :

| | கல்லூரியின் பெயர் | நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரி, திருச்சி ... | 43.00 |
| 2. | செயிண்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி ... | 31.00 |
| 3. | ஹோலி கிராஸ் கல்லூரி, திருச்சி ... | 23.00 |
| 4. | பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி ... | 6.50 |
| 5. | தேசியக் கல்லூரி, திருச்சி ... | 1.70 |
| | | 105.20 |

உடனடி நிவாரண உதவி தேவைப்படும் கல்லூரிகளுக்கு ரூபாய் 2.75 இலட்சம் முன் பணமாக வழங்கச் சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் முடிவு செய்துள்ளது.

## புயலால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு தமிழக அரசு தரும் மானியம் ரூபாய் 10 இலட்சம்.

தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கல்லூரிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் மானியமாக அளிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரது பரிந்துரையின் பேரில், ரூ. 10 இலட்சம் பின்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது :

| கல்லூரிகளின் பெயர் | அரசு அளிக்கும் மானியம் ரூபாய் |
|---|---|
| 1. சீதாலெட்சுமி ர்ாமசாமி மகளிர் கல்லூரி, திருச்சி | ரூ. 4 இலட்சம் |
| 2. செயிண்ட் ஜோசப் கல்லூரி, திருச்சி | 2 இலட்சம் |
| 3. பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி | 1 இலட்சம் |
| 4. நேஷனல் கல்லூரி, திருச்சி | 50 ஆயிரம் |
| 5. காதர் மொய்தீன் கல்லூரி, அதிராமபட்டினம் | 25 ஆயிரம் |
| 6. ஏடி. என். எம். மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம் | 20 ஆயிரம் |
| 7. புஷ்பம் கல்லூரி, பூண்டி | 1,500 ரூபாய் |
| 8. பேரவைக் கல்லூரி, பூம்புகார் | 1,500 ரூபாய் |
| 9. மன்னர் கல்லூரி, புதுக் கோட்டை | 1,000 ரூபாய் |
| 10. ராஜா சரபோஜி கல்லூரி, தஞ்சை | 1,000 ரூபாய் |

## சென்னைப் பல்கலைக்கழக மாணவர்கள் 8 இலட்சம் முதல் 10 இலட்சம் ரூபாய் அளிப்பார்கள்!

''சென்னைப் பல்கலைக் கழக அதிகார வரம்புக்கு உட்பட்ட கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து 8 இலட்சம் முதல் 10 இலட்சம் ரூபாய் வரையில் புயல்—வெள்ள நிவாரண நிதி தருவார்கள்'' என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள், 23-11-'77 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் கூட்டிய பொது மக்கள் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

''சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளுக்கு ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கும் மேலாக நட்டம்ஏற்பட்டிருந்தாலும், சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் சேகரித்து வரும் பணத்தை இதற்குச் செலவிடாமல், புயல்—வெள்ள நிவாரண நிதிக்கே கொடுப்போம்!'' என்றும் அவர் தெரிவித்தார்.

''சென்னைப் பல்கலைக் கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தங்கள் ஓய்வு நேரங்களில், புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளில் தூர் வாருதல், வயல்களில் மூடிய மணலை அகற்றுதல், வீடுகள் கட்டிக் கொடுத்தல் ஆகிய 3 வகைப் பணிகளுக்கு உடல் உழைப்பைத் தருவார்கள் '' என்றும் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்கள் அறிவித்துள்ளார்.





# சீரமைப்புப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன!

''வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பணம் ஒரு பொருட்டல்ல; நிவாரண-சீரமைப்பு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன'' என்று மாண்புமிகு தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு ச. ராமச்சந்திரன் அவர்கள் கூறினார்.

பல்வேறு ஆறுகள், ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள், அவற்றினால் ஏற்பட்ட சேதங்கள், நெடுஞ்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் ஆகியவற்றை மதிப்பிட்டுக் கூற இரண்டு சிறப்புத் தலைமைப் பொறியாளர்கள் விரைவில் தமிழக அரசினால் நியமனம் செய்யப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

உடைந்த குடகனாறு அணை, வேடசந்தூர் மற்றும் மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய அவர், செய்தியாளர்களிடம் 24—11—1977 அன்று கூறியதாவது:—

### பணம் குறுக்கீடாக நிற்காது!

''சேதமடைந்த சாலைகள், பாலங்கள், உடைப்பு எடுத்த ஏரிகள், ஆறுகள் போன்றவற்றை துரிதமாகச் சீர்செய்து, சீக்கிரமாக, இயல்பான நிலைக்குத் திரும்ப வழி செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. சீரமைப்பு பணிகள் விஷயத்தில் பணம் ஒரு குறுக்கீடாக நிற்காது!

''மேட்டூர் அணை உடையும் என்றொரு பீதியும் கிளப்பப்பட்டு இருக்கிறது. இந்த அணை உடையும் நிலையே இல்லை. காவிரி ஆற்று நீர் பிடிப்பு பகுதியில் அப்படியொன்றும் மழை பெய்துவிடவில்லை. 40 மில்லி மீட்டர் மழைதான் பெய்து இருக்கிறது. ஆனாலும் காவிரியாற்றில் மீண்டும் வெள்ள அபாயம் ஏற்படுமானால், அதைச் சமாளிக்கத் தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

''முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது என்று சிலர் கூறுகிறார்கள். வெள்ளம் வந்து சேதத்தை உண்டாக்கிய பல ஆறுகளில், ஆண்டாண்டு காலமாக வெள்ளம் வந்தது இல்லை! வறண்டு கிடந்த அந்த ஆறுகளில் திடீர் என்று வெள்ளம் வரும் என்று யார் எதிர்பார்த்து இருக்க முடியும்?



''குடகனாறு அணை உடைந்ததால்தான் பல கிராமங்களில் வெள்ளம் வந்தது என்று கூறப்படுவதும் சரியல்ல. இந்த அணைக்கு மேல் பகுதியில் உள்ள பல கிராமங்களும் அடித்துச் செல்லப்பட்டு இருக்கின்றன. வானம் திறந்ததுபோல, பலத்த மழை கொட்டியதில் காட்டாறுகள் பெருக்கெடுத்ததாலேயே இந்த சேதம் ஏற்பட்டது.

### மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட சேதம்!

''தஞ்சை, திருச்சி மாவட்டத்தில் மின்சார நிலையங்கள், கம்பிகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ஏறத்தாழ 4 கோடி ரூபாய் சேதம் ஏற்பட்டிருக்கிறது திருச்சியில் மட்டும் மின்சாரத் துறைக்கு ஏற்பட்ட சேதம் 90 இலட்சம் ரூபாய்!''

### கொள்ளிடம் உடைந்ததேன்!

''கொள்ளிடம் ஆற்றில் இதற்கு முன்பு எப்போதுமே ஏற்படாத அளவுக்கு வெள்ளம் வந்தது. 2.85 இலட்சம் கன அடி தண்ணீரைத்தான் இந்த ஆறு தாக்குபிடிக்க முடியும். ஆனால் 5 இலட்சம் கன அடி தண்ணீர் வந்திருக்கிறது. இதனால் கொள்ளிடம் கரை பல இடங்களில் உடைத்துக் கொண்டது. யுத்த கால அடிப்படையில் இந்த உடைப்புகளைச் சீர்செய்யும் பணி துரிதமாக நடைபெறுகிறது. ஏரி, குளங்களிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் சீர்செய்வதற்கு பொதுப்பணித் துறை அதிகாரிகள்-ஊழியர்களைப் பயன்படுத்தி வருகிறோம்.

### அலுவலர்களுக்குப் பாராட்டு!

''மின்சார வாரிய அதிகாரிகளும், ஊழியர்களும் சிறந்த முறையில் பணியாற்றி இருக்கிறார்கள். புயலின்போது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 32 நகரங்களில் 31 நகரங்களுக்கு மின் இணைப்பு கிடைத்துள்ளது. மின்சார வினியோகம் பாதிக்கப்பட்ட 1,149 முக்கிய கிராமங்களில் பெரும்பாலானவற்றுக்கு இப்போது மின்சார வினியோகம் சீராகக் கிடைக்கிறது'' என்று மாண்புமிகு தமிழகப் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு ச. ராமச்சந்திரன் அவர்கள் 24-11-77 அன்று தெரிவித்தார்.





# கல்நெஞ்சமும் கலங்கும்!

மதுரை மாவட்ட வெள்ளப் பகுதிகளில் எட்டுத் தினங்கள் இரவு பகலாகச் சுற்றி நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்திவிட்டு சென்னை திரும்பியுள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் கூறிய விவரங்கள், கல்நெஞ்சையும் கலக்குவதாக இருந்தன.

வெள்ளம் சூழ்ந்தவுடனேயே அதிகாரிகள் மேற்கொண்ட நிவாரணப் பணிகளைப் பற்றி அமைச்சர் கூறிய விவரங்கள் மெய்சிலிர்க்க வைத்தன.

வெள்ளம் சூழ்ந்த கிராமங்களுக்கு மதுரை மாவட்ட கூடுதல் ஆட்சித்தலைவர் திரு திரிபாதி தன் உயிரையும் பொருட்படுத்தாது சைக்கிளிலேயே சென்று மக்கள் துயர் துடைக்க உதவினர் என்று உணர்ச்சிப் பெருக்குடன் அமைச்சர் கூறினர்.

உயிர்ச் சேதம், பொருட் சேதம் பற்றி அமைச்சர் விவரித்தபோது பல தடவை அவர் உணர்ச்சி வசப்பட்டார். அவரது கண்கள் கலங்கின. அவர் கூறிய விவரம் வருமாறு:—

''என் வாழ்நாளில் இப்படிப்பட்ட கொடூரமான சம்பவங்களை நான் கண்டதில்லை. மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைப்படி இம்மாதம் 16-ஆம் தேதி விமானம் மூலம் புறப்பட்டு மதுரையை அடைந்தேன்.

''வெள்ளம் சூழ்ந்த பிறகு எந்தெந்தக் கிராமங்களுக்குப் போக முடியவில்லை என்பதைக் கேட்டறிந்தேன். வேடசந்தூருக்குச் செல்லும் வழியில் ஒரு பாலத்தில் உடைப்பு ஏற்பட்டு இருந்ததால் அங்குச் செல்ல முடியவில்லை என்றும், பயங்கர வெள்ளத்தால் சூழப்பட்ட அழகாபுரி, நரசிங்காபுரம், கைத்தியங்கா கோட்டை, இராமநாதபுரம் என்ற கிராமங்களுக்குச் செல்ல முடியவில்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஏ. சுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.



''இந்தக் கிராம மக்களுக்குத் திருச்சியிலிருந்து விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

''உடனடியாக அந்தக் கிராமங்களுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டேன்.

''மணல் மூட்டைகளை வெள்ளப் பகுதிகளில் இறக்கி, அக்கிராமங்களுக்கு விரைந்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது.

''மதுரையிலிருந்து அதிகாரிகளுடன் திருக்கண், லக்கம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு விரைந்தோம். இந்தக் கிராமங்கள் இயற்கையின் சீற்றத்தால் முற்றிலுமாக அழிந்து இருந்தது. ஓரிரு கூரை வீடுகளைத் தவிர இவ்விரு கிராமங்களிலும் இருந்த எல்லா வீடுகளும் நாசமடைந்து விட்டன.

''நல்லமனூர் கோட்டை என்ற கிராமத்தை வெள்ளம் சூழ்ந்து இருந்தது. ஆற்றில் பெருவெள்ளம் ஓடிக்கொண்டு இருந்தது. இக்கிராமத்திற்குச் செல்லவே முடியவில்லை.

''குளத்தூர் என்ற கிராமம் பாதிக்கப்படவில்லை. இவ்வூரில் உள்ள பள்ளிக்கூடக் கட்டடத்தில் திருக்கண், லக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்களும், நல்லமன்னூர் கோட்டையில் இருந்து தப்பி வந்தவர்களும் குடி அமர்த்தப்பட்டுப் பள்ளிக்கூடம் நிவாரண முகாமாகச் செயல்பட்டது.

''இந்த முகாமில் இருந்தவர்கள் கூறிய சோகக் கதைகள் நெஞ்சை உலுக்குவதாக இருந்தன.

**சோகக் கதைகள் !**

''இரவு எட்டு மணி, ஊரில் எல்லோரும் சாப்பிடும் நேரம், திடீரென்று பயங்கரமான சத்தம் கேட்டது.

''சத்தம் கேட்டதும் சாப்பாட்டை விட்டுவிட்டு கை கழுவுவதற்குள் கிராமங்களை வெள்ளம் சூழ்ந்து விட்டது. மொத்த வீடுகளும் நாசமாயின'' என்று அவர்கள் கண்கலங்கக் கூறினர்கள்.

''திருக்கண்ணைச் சேர்ந்த ஒரு பெரியவர் என்னிடம் சொன்ன விவரம் என்னைக் கதிகலங்க வைத்தது.

''திடீரென்று வெள்ளம் சூழ்ந்து விட்டது. வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன; பலர் அடித்துச் செல்லப்பட்டனர். ஒரே ஒரு பையன் மட்டும் என் கையில் சிக்கினன். அவனைத் தூக்கிக் கொண்டு உயரமான ஒரு கூரை மீது உட்கார்ந்து கொண்டேன். விடிய விடிய மழை, குளிர், நாங்கள் உட்கார்ந்து இருக்கும் குடிசையும் அடித்துச் செல்லப்பட்டுவிடுமோ என்ற அச்சம். எப்படியோ தப்பினோம்

என்று அந்தப் பெரியவர் கண் கலங்கக் கூறினர்.

''குளத்தூரிலிருந்து நேராக லக்கம்பட்டி சென்றோம். போகிற வழியில் ஒரு கிணற்றருகே ஒரு மாடு செத்துக் கிடந்தது. அதன் கண்கள் பிதுங்கி, பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அந்தச் சுற்றுப்புறம் முழுதும் பிணவாடை வீசிற்று; எங்காவது பிணம் ஒதுங்கியிருக்கிறதா என்று தேடினேம். பிணங்களை இரண்டு அடி ஆழத்திலேயே புதைத்து இருந்ததால் பிணவாடை அடித்தது. நாய், நரிகள் அப்பிணங்களை இழுத்து விடலாம் என்பதால் அப்பிணங்களைத் தோண்டி எடுத்து ஆழமாகக் குழி வெட்டிப் புதைக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

''வீடுகள் இடிந்து, தானியங்கள் நாசமாகி லக்கம்பட்டி கோரமாகக் காட்சி அளித்தது.

**அதிகாரிகளின் சாதனை !**

''பிறகு வேடசந்தூருக்குப் போய்ச் சேர்ந்தோம். வேடசந்தூரில் உயிருக்குச் சேதமில்லை. வெள்ளத்திற்குப் பிறகு அன்று தான் வேடசந்தூருக்குச் செல்ல முடிந்தது.

''பிரதான சாலையிலிருந்து வேடசந்தூர் செல்லும் வழியில் ஏற்பட்ட உடைப்பால் முதல் நாள்வரை வேடசந்தூர் செல்ல முடியவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினர்.

''ஏணிகள், கயிறுகள் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் வேடசந்தூர் செல்ல முயற்சித்தும் வெள்ளப் பெருக்கில் இம்முயற்சிகள் பயன் அளிக்கவில்லை.

''ஆனல், அதிகாரிகள், நெடுஞ்சாலை ஊழியர்கள் தீவிரமாகப் பணியாற்றி ஒரே நாளில் இந்த உடைப்பைச் சரிசெய்து, போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தனர்.

''இந்த அற்புத, அசுர சாதனைக்காக அதிகாரிகளையும், உதவிய ஊழியர்களையும், பொதுமக்களையும் எத்தனை பாராட்டினலும் தகும்.

''வேடசந்தூர் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமிற்குச் சென்று வீடிழந்தவர்களுக்கு நிதி உதவி, உடை ஆகியவற்றை வழங்கினேம்.

''திண்டுக்கல்லுக்கும் மணப்பாறைக்கும் இடையே இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு பாலம் உடைந்து, திண்டுக்கல்—திருச்சி சாலைப் போக்குவரத்துத் தடைப்பட்டது.

''அப்பாலத்தின் இரு பக்கமும் பஸ்கள் நிற்கும் பாலத்தில் ஓடிய வெள்ளத்தைக் கடக்க முடிந்தவர்கள் மட்டும் கடந்து, திருச்சி திண்டுக்கல் பஸ்களில் ஏறிக் கொள்வார்கள்.

''நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் தலைமையில் அத்துறை ஊழியர்கள் இரவு பகலாக அங்குத் தங்கிப் பாலத்தைச் சீர்படுத்தினர்கள். கொட்டும் மழையிலும் 'ஜெனரேட்டர்' மூலம் இரவில் விளக்குகளை வைத்து, மணல் மூட்டைகளை உடைப்பில் போட்டு, நான்கே நாட்களில் சாலைப் போக்குவரத்தை அவர்கள் சரி செய்தனர்.

''இது அற்புதச் சாதனை. பாராட்டப்பட வேண்டிய பணி.

**நெஞ்சைவிட்டு அகலாத சோகக் காட்சிகள் !**

''பிறகு கோரச் சேதங்களுக்கு ஆளான குடவனுற்று அணைப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தோம். அணை முற்றிலும் நாசமடைந்து இருந்தது.

''குளத்தூர் முகாமில் கணவனையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்து பிரமை பிடித்த நிலையில் இருந்த ஒரு தாயின் சோக உருவம் இன்னும் என் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது.



மதுரை மாவட்டம் குளத்தூர் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த துயர் துடைப்பு முகாமில் தங்கியிருந்த மக்களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆறுதல் கூறுகிறர்.



மாண்புமிகு தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் சென்னை வியாசர்பாடி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 26-11-'77 அன்று ஆடைகள் வழங்கினர்.



''தும்மக் குண்டில் இரண்டு சிறுவர்கள் தாய், தந்தையர் உற்ருர், உறவினர் அனைவரையும் இழந்து அனதையானர்கள். இவர்களுக்கு காந்தி கிராமம் அடைக்கலம் கொடுத்துள்ளது.

''இவ்வூரில் ஒரு கம்பியைப் பிடித்துக் கொண்டே 25, 30 பேர் வெள்ளத்திலிருந்து தப்பிய விவரம் கேட்டபோது நீரமிக்க நிகழ்ச்சியின் வியப்பாக இருந்தது.

''மாரம்பாடியில் கேட்ட கதைகள்.....அப்பப்பா.....கும்மிருட்டு.....வெள்ளம் சூழ்ந்தது. சர்ச் பாதிரியார் சர்ச் மணியை அடிக்க அந்த ஒலி கேட்டு அந்த திசையில் ஓடிய மக்கள் தாங்கள் பிழைத்த கதையைச் சொன்னர்கள். பாதிரியார் ஜான் பீட்டரை இவ்வூர் மக்கள் எப்போதும் மறக்க மாட்டார்கள்.

'' ரூ. 26 ஆயிரம் செலவில் கட்டப்பட்டு, திறக்கவே படாத ஒரு புத்தம் புதிய பள்ளிக் கட்டடம் தரை மட்டமானது.

''எங்கும் சோகம் நிலவியது! பெரிய பெரிய விவசாயிகள்கூட அனைத்தையும் இழந்து பஞ்சையாகி விட்டனர்.

''உணவுப் பொட்டலம் வாங்க வரிசையில் நின்று கொண்டு இருந்த ஒருவரை என்னிடம் சுட்டிக்காட்டி ''இவர் 35 ஏக்கருக்குச் சொந்தக்காரர்; இரண்டு மூன்று ஆண்டிற்கான தானியம் இவர் வீட்டில் எப்போதும் இருக்கும். இவர் வீட்டிற்கு ஒரு வேளைக்கு 25, 30 விருந்தாளிகளாவது வருவார்கள். இன்று சோற்றுப் பொட்டலத்திற்காகக் கையேந்தி 'கியூ' வரிசையில் நிற்கிறர்'' என்று சொன்னதைக் கேட்டு என் இதயமே வெடித்து விடும்போல இருந்தது.

''தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நிவாரணப் பணிகளினல் மக்கள் தற்போது நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கியுள்ளனர்.

''மக்கள் அனைவரும் அரசின் தீவிர நிவாரணப் பணிகளைக் கண்டு மன ஆறுதல் அடைந்து உள்ளார்கள். அரசிற்கு ஆதரவாக இருக்கிறர்கள். மக்களைத் துயர வெள்ளம் சூழ்ந்துள்ள இந்த நேரத்தில் அரசு அதிகாரிகள் ஆற்றிவரும் அரும்பணி பாராட்டுக்குரியது'' என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் கூறினர்.



வேடசந்தூர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக 'ஊள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் துயர் துடைப்புக்கான பணம் வழங்கினர்.

## இரண்டரை கோடி ரூபாய் மதிப்புள்ள கால்நடைகள் இறந்தன!

''தமிழ் நாட்டில் வீசிய புயல், பெரு வெள்ளம் காரணமாக 2 கோடியே 56 இலட்சத்து 6 ஆயிரத்து 525 ரூபாய் மதிப்பு உள்ள கால்நடைகள் மரித்து விட்டன'' என்று மாண்புமிகு **தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் தெரிவித்துள்ளார்.**

''25 ஆயிரத்து 102 பசு, காளை மாடுகள் இந்த வெள்ளத்திற்குப் பலியாகிவிட்டன என்று இதுவரை கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது. இவற்றின் மதிப்பு 2 கோடியே 51 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய் இஆகும்.

''செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி ஆகியவை 7,606 மரித்து விட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 4 இலட்சத்து 56 ஆயிரத்து 360. கோழி, சேவல், வாத்து ஆகியவை 9 ஆயிரத்து 633 இறந்து இறந்துவிட்டன. இவற்றின் மதிப்பு ரூ. 48 ஆயிரத்து 168'' என்ற புள்ளி விவரங்களை அவர் தந்தார்.

கால்நடைகள், கோழி, வாத்து போன்றவை இந்தப் புயலில் பலியானது பற்றிய கணக்கெடுப்பை புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று கால்நடைத் துறை அதிகாரிகள் சேகரித்து வருகிறர்கள். இந்த முழு கணக்கும் தெரிந்த பிறகுதான் முழு விவரம் தெரியும் என்றும் அவர் கூறினர்.

## ஆஸ்திரேலியாவில் இருந்து உயர்ரக பசுமாடுகள் விமானத்தில் வருகின்றன !

அதிக பால் கொடுக்கும் உயர்ந்த ரக பசு மாடுகள் ஆஸ்திரேலியாவில் இருந்து, தமிழ்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த மாடுகள் விமானத்தில் கொண்டு வரப்படுகின்றன.

''தமிழ் நாட்டில் நிறைய பால் கொடுக்கும் உயர் ஜாதி மாடுகளை உருவாக்குவதற்காக, ஆஸ்திரேலியா நாட்டில் இருந்து ''ஜெர்சி'' இனப் பசுக்கள் 240ம், காளைகள் 10ம் விமானம் மூலம் கொண்டு வந்து, தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணையில் வைக்கப்படும்.

''அதன் முதல் தவணையாக, 5-12-'77 அன்று, 50 பசுக்களும், 2 காளைகளும் வருகின்றன. அந்த மாடுகள் தினம் ஒன்றுக்கு அதிக பட்சம் 25 லிட்டர் பால் கொடுக்கும்.''

''ஒசூர் கால்நடைப் பண்ணையில் 3 கோடி ரூபாய்ச் செலவில் சிந்திப் பசுப் பண்ணை விரிவு படுத்தப்படும்.

''அங்குள்ள குதிரைப் பண்ணையில், போலீசாருக்குகாக உயர்ந்த ஜாதிக் குதிரைகள் உருவாக்கப்படும்.''

**இவ்வாறு மாண்புமிகு தமிழக சமூக நலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் கூறினர்.**




பாரதத்தின் முன்னுள் பிரதமர் திரு ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் விழா, குழந்தைகள் நாள் விழாவாக 12—11—1977 முதல் 14—11—1977 வரை சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவின் முதல் நிகழ்ச்சியான சிறுவர்களுக்கான திரைப்படக் காட்சியை, மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், 12—11—1977 அன்று காலை, கலைவாணர் அரங்கில் துவக்கி வைத்து உரையாற்றினுர்

# படமும் செய்தியும்



குழந்தைகள் நாள் விழாவை முன்னிட்டு மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சென்னையில் உள்ள மருத்துவ மனைகளுக்குச் சென்று, சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினுர்.



நேரு பிறந்த நாள் விழாவையொட்டி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 14—11—1977 அன்று நடைபெற்ற பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற்ற குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் பரிசு அளித்தார்.





குழந்தைகள் நாள் விழாவை முன்னிட்டு அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலையம், 12—11—1977 அன்று, வள்ளுவர் கோட்டத்தில் சிறுவர்களுக்கான சிறப்புக் கலை நிகழ்ச்சியை நடத்தியது. இக்கலை விழாவிற்கு மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமை வகித்தார்.



"கப்பலோட்டிய தமிழன்" வ. உ. சிதம்பரனுரின் நினைவு நாளையொட்டி, 18—11—1977 அன்று காலை 7.00 மணி அளவில், சென்னைத் துறைமுக வாயிலில் உள்ள வ. உ. சி. அவர்களின் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மாலை அணிவித்தார்.

குழந்தைகள் நாள் விழாவையொட்டிச் சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழக சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் பரிசுகள் வழங்கினுர்.





புதுடில்லியில் தற்பொழுது நடைபெற்று வரும் வேளாண்மைப் பொருட்காட்சியில் (**Agri—Expo—77**), 22.11.1977 அன்று, "தமிழ்நாடு நாள்" கொண்டாடப் பெற்றது. "தமிழ்நாடு நாள்" விழாவை மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு சரண்சிங் அவர்கள் துவக்கி வைத்தார்.

"தமிழ்நாடு நாள்" விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள், மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு சரண்சிங் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார். மாண்புமிகு தமிழக செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும் அருகே உள்ளார்.







புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக பகுதிகளைப் பார்வையிடுவதற்காக, 25-11-1977 அன்று, சென்னைக்கு வருகை தந்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களை, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.

வரலாறு காணாத வகையில் புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக பகுதிகளை மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள், 25-11-1977 அன்று, விமானம் மூலம் பார்வையிட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுட்டிக் காட்டி விளக்கினார்.





சோவியத் நாட்டு 'போல்ஷாய்த் தியேட்டர்' பாலே நடனக் குழுவினர், 20—11—1977 அன்று, சென்னை 'மியூசிக் அகாடெமி' தியேட்டரில் கலைநிகழ்ச்சி நடத்தினர். அந்நிகழ்ச்சியின் முடிவில், சோவியத் நாட்டுக் கலாச்சார அமைச்சர் திரு. வி.ஐ.பாபோவ் அவர்களுக்கும், பாலே நடனக் குழுவினருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர், அவர்கள் நினைவுச் சின்னம் வழங்கினார்.



# நீந்திச் சென்றார்! நிவாரணப் பணி செய்தார்!



வெள்ளம் சூழ்ந்து, தீவுபோல் ஆன கிராமங்களுக்கு மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள் நீந்திச் சென்று நிவாரணப் பணிகளைக் கவனித்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தஞ்சை மாவட்ட வெள்ளப்பகுதிகளைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் சென்றிருந்தார்.

கல்லாறு, தீச்சங்குப்பம், அக்கறைப்பேட்டை ஆகிய கிராமங்கள் வெள்ளம் சூழ்ந்து தீவுகள் போல இருந்தன.

ஆள் உயரத்துக்கு மேல் இருந்த தண்ணீரில் அமைச்சர் நீந்தி, அந்தக் கிராமங்களுக்குச் சென்றார்.

வெள்ளப் பகுதிகளில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்க அமைச்சர் ஏற்பாடு செய்தார்.

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து அவர்கள் கோரிக்கைகளைக் கேட்டறிந்து அவற்றை உடனுக்குடன் நிறைவேற்றினார்.

வீடு இழந்த மக்களுக்குத் தாமதம் இன்றி உடனுக்குடன் உணவு கிடைக்க ஏற்பாடு செய்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குறைகளை உடனுக்குடன் கவனிக்கத் தனிப் பிரிவு ஒன்றை நாகப்பட்டினத்தில் அமைத்து, நிவாரணப் பணிகளைத் தீவிரப்படுத்தினார்.

அரிசி, மண்ணெண்ணெய் வேண்டுமானால் ஏற்பாடு செய்வது போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பது, மருத்துவ வசதிகளைச் செய்து கொடுப்பது போன்ற பணிகளை இந்தத் தனிப் பிரிவு ஆற்றி வருகிறது. இந்த தனிப் பிரிவில் உள்ள அதிகாரிகளும் ஊழியர்களும் இரவு பகலாக 24 மணி நேரமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் தேவைகளைக் கவனித்துப் பணியாற்றி வருகிறார்கள்.

ஆங்காங்கே கிராமங்களில் தங்கியிருக்கும் மக்கள் சமைத்துச் சாப்பிட இரண்டு, மூன்று மூட்டை அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்தார்.



சென்னை வியாசர்பாடி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், 26-11-1977 அன்று உடைகள் வழங்கினார்.

தஞ்சை மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி, துயர்துடைப்புப் பணிகளைத் துரிதமாக நடைபெறச் செய்துவிட்டு, சென்னை திரும்பியுள்ள மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். ராகவானந்தம் அவர்கள் கூறியதாவது:

''ஜீப்பில் போக முடிந்த இடங்களுக்கு ஜீப்பில் போய்ப் பார்த்தேன். வெள்ளம் இருந்த இடங்களில் நீந்திச் சென்று பார்த்தேன். இடுப்பு வரை தண்ணீர் உள்ள இடங்களில் நடந்தே சென்று பார்த்தேன். வெள்ளத்தால் துண்டிக்கப்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் சென்று பார்த்தேன்.

''மின்சார 'டிரான்ஸ்பார்மர்கள்' புயல் காற்றில் சாய்ந்து விழுந்து விட்டன. மின்சாரக் கம்பங்களுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

''தஞ்சை மாவட்டத்தில் மட்டும் பள்ளிக்கூடங்களுக்குப் புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட சேதம் ரூ. 14 இலட்சமாகும். இவற்றில் 36 பள்ளிகள் அரசினர் தொடக்கப் பள்ளி உயர்நிலைப் பள்ளி போன்றவையாகும். 18 பள்ளிகள் அரசின் உதவி பெற்ற பள்ளிகளாகும்.

''நாகப்பட்டினத்தில் மட்டும் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் மதிப்பு ரூ. 6 இலட்சமாகும். பல இடங்களில் பள்ளிகளின் கட்டடம் இடிந்து போயிருக்கின்றன. சில இடங்களில் கூரைகள் சாய்ந்தும் கிடக்கின்றன.

''வேளாங்கண்ணியில் 1,000 மீனவர் குடிசைகள் சேதமாகி விட்டன. வீடிழந்த மீனவர்களைப் பார்த்து ஆறுதல் கூறினேன். அவர்களுக்குக் கணிசமான அளவுக்கு நிவாரணத் தொகையை அரசு அளிக்கும். புயலால் வேளாங்கண்ணி கோயிலும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் வெள்ள நிவாரணப் பணிகளை வேளாங்கண்ணி பாதிரியார் பெரிதும் பாராட்டினர்.

''தஞ்சை மாவட்டத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள மொத்தச் சேதம் கோடிக்கணக்கில் இருக்கும்!'' என்று மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கூறினார்.

## புயலால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு இலவச அரிசி!

புயலால் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்குத் தமிழக அரசு இலவசமாக அரிசி வழங்குகிறது.

தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் சென்னை, தென் ஆர்க்காடு, தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஏறத்தாழ 50 ஆயிரம் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

15 நாட்களுக்கு மேல் தொடர்ந்து மழை பெய்ததாலும், கடலில் கொந்தளிப்பு இருந்ததாலும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியவில்லை.

இதனால் அவர்களுக்கு வருமானம் இல்லை.

புயலால் பாதிக்கப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்ய முதலமைச்சரின் நிவாரண நிதியில் இருந்து ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகையில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஊரக மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி வழங்கப்படும். **





# மத்திய அமைச்சர்கள் அளித்த பாராட்டுகள்!

## மத்திய இரசாயனத் துறை அமைச்சர் அளித்த பாராட்டு

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய அரசின் சார்பில் பார்வையிட்ட மாண்புமிகு மத்திய இரசாயன அமைச்சர் திரு பகுகுணா அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களில் புயல், வெள்ளம் காரணமாக ஏற்பட்ட சேதத்திலிருந்து அதை மீட்டு, புதிதாக அமைக்கும் பணி, அனைத்திந்திய மட்டத்தில் தேசிய அளவில் செய்யப்பட வேண்டும்.

இந்த முயற்சியில் தமிழக அரசுடன் தோளோடு தோளாக நின்று மத்திய அரசு தேவையான உதவிகளைச் செய்து கொடுக்கும்.

ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள் திகைக்க வைக்கின்றன. சேத விவரங்களை மதிப்பீடு செய்ய மத்திய நிபுணர் குழுவை மத்திய அரசு விரைவில் அனுப்பி வைக்கும்.

பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு உதவவும், துயர்துடைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் தமிழக அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் முனைப்பாகச் செய்துள்ளது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

ஒரு மாநில அரசு, தன்னால் செய்யக்கூடிய அனைத்தையும் அது செய்துள்ளது.

மத்திய அரசின் சார்பிலும், மாண்புமிகு பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் சார்பிலும் பாதிப்புக்கு ஆளாகி உள்ள மக்களுக்கு ஆறுதல் கூறிக் கொள்கிறேன்.

எளிதில் போக்க முடியாத, அழிக்க முடியாத இந்த அழிவின் வடுவை மாற்றி இந்த மாநிலத்தைப் புதிதாக நிர்மாணிக்க, தமிழக அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்துக்கும் மத்திய அரசு உதவும். உறுதுணையாக நிற்கும்.

மாண்புமிகு நிதியமைச்சர் திரு மனோகரன் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு பொன்னையன் அவர்களும் தமிழ்நாட்டில் சாலைப்போக்குவரத்து, செய்தித் தொடர்பு துண்டிப்பு ஏற்பட்டுள்ள விவரங்களை என்னிடம் எடுத்துக் கூறினார்கள். உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் எவ்வளவு ஏற்பட்டுள்ளது என்று இப்போது மதிப்பிட்டுக் கூறமுடியாது.

புயல் வீசி முடிந்து, வெள்ளம் வடிந்த பிறகு பரவும் தொத்து நோய்களைத் தடுப்பது போன்ற முன்னேற்பாடான நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டி



...அதைக் குறையாகக் ...து.

...ப் பணிகளை சீர் ... எனநேரம் வகையில் யாருடைய பேச்சோ, செயல்களோ இருக்கக் கூடாது.

...யது அவசியம். இவை அனைத்தையும் போர்க்கால ... மாநில அரசுகள் பேரு... விரைவில் வெற்றி பெறும் என்று நம்புகிறேன்.

துயர் துடைப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் தமிழக அரசு சற்று மெத்தனமாக நடந்து கொண்டதாகச் ''சிலர்'' கூறுகிறார்களே என்று மத்திய அமைச்சர் பகுகுணாவிடம் ஒரு நிருபர் கேட்டபோது "இதைவிட வேறு என்ன செய்திருக்க முடியும் என்று கருதுகிறீர்கள் ? சாத்தியமான எல்லாவற்றையும் மாநில அரசும், மத்திய அரசும் செய்துள்ளன" என்று திரு பகுகுணா கூறினார்.

## மத்திய மின்துறை அமைச்சர் அளித்த பாராட்டு

''மாநில அரசு சார்பில் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் அனைத்தும் சரியானவையே. அதிகாரிகள் மிகச் சிறப்பான முறையில் நிவாரண வேலைகளைச் செய்து வருகிறார்கள். இது போன்ற சந்தர்ப்பங்களில் சில குறைகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்யும். அனைவரையும் திருப்திப்படுத்திவிட முடியாது.

நான் பொறுப்பு வகிக்கும் இலாகாவைச் சேர்ந்த நெய்வேலி, சிங்கரேணி, கோல் இந்தியா போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் சார்பாக முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு ரூ. 10 இலட்சம் நன்கொடை அளிக்கிறோம். இது முதல்படி தான்.

நாங்கள் கொடுக்கும் ரூ. 10 இலட்சத்தில் தொழிலாளர்களின் பங்கும் சேர்ந்துள்ளது.''

## மத்திய பாதுகாப்பு அமைச்சர் அளித்த பாராட்டு

கடும் புயலாலும், கடுமையான மழையாலும் பாதிக்கப்பட்ட தமிழகப் பகுதிகளை மாண்புமிகு மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும் 26-11-1977 அன்று தனி விமானம் மூலம் சுற்றிப் பார்த்தார்கள்.

மாண்புமிகு மைய எரிபொருள் அமைச்சர் திரு பி. ராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்களும் உடன் சென்றனர்.

நாடாளுமன்ற வெள்ள நிவாரணக்குழு உறுப்பினர்கள் நால்வரும் மத்திய பாதுகாப்பு அமைச்சர் அவர்களுடன், புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டனர்.

வெள்ளச் சேதப் பகுதிகளை விமான மூலம் சுற்றிப் பார்த்த மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள், ஆளுநர் மாளிகையில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

''பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட பொது நிறுவனங்களிடமிருந்து ரூ. 10 இலட்சம் **'முதல் அமைச்சர் வெள்ள நிவாரண நிதி'**க்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**''தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிவாரணப் பணிகள் பிரமாதமாக பாராட்டும் படியாகச் செய்திருக்கிறார்கள்.**

''தமிழ்நாட்டில் ராணுவம் பாராட்டும்படி நடந்துள்ளது உங்களுக்குத் தெரியும்.

''**இன்று காலை, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் சுற்றிப் பார்த்தேன். நிவாரண நடவடிக்கைகளைப் பாராட்டும் வகையில் தமிழ் நாடு அரசு செய்திருக்கிறது.**

இவ்வாறு மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் கூறினார்.

திரு ஜெகஜீவன்ராம் பேட்டி அளித்தபோது மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்களும் உடன் இருந்தனர்.

## மத்திய இரயில்வே அமைச்சர் அளித்த உறுதி !

"சுதந்தரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுள்ள **மிகப் பெரிய இயற்கை உற்பாதமாகும்**" என்று தமிழ்நாட்டில் புயல், வெள்ளங்களினால் ஏற்பட்டுள்ள பெரும் சேதத்தைப் பற்றி மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு மது தண்டவதே 17-11-1977 அன்று விவரித்தார். தமிழ்நாட்டுக்கு நிவாரணம் அளிப்பதில் நிதி ஒரு தடையாயிராது என்று மத்திய அரசு சார்பில் தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் உறுதி அளித்தார். இந்தத் துயரத்திலிருந்து தமிழ்நாடு காப்பாற்றப்பட வேண்டும். தமிழ்நாடு காப்பாற்றப்பட்டால் இந்தியாவின் மற்றப் பகுதிகளும் காப்பாற்றப்படும் என்று கூறினார்

தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் சேதம் பற்றி பிரதம மந்திரிக்கும், நிதி மந்திரிக்கும் தெரிவிப்பதாயும், தமிழ்நாட்டுக்கு மத்திய உதவி கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறினார். தமிழ்நாட்டில் உள்ள நிலைமை பற்றி நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுவதாயும் கூறினார்.

திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசுகையில், தமிழ்நாட்டின் இப்போதைய வெள்ளத்திலும், புயலிலும் பெரும் உயிர்ச் சேதமும் அதிக சொத்துச் சேதமும் ஏற்பட்டிருப்பது பற்றி தம்முடைய வருத்தத்தை தண்டவதே தெரிவித்துக் கொண்டார்.

தமிழ்நாட்டில் 25,000 முதல் 30,000 இரயில்வே ஊழியர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். இவர்களில் பெரும்பாலோர் கலாசிகள். பாதிக்கப்பட்டுள்ள இரயில்வே ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகளை விவரித்தார். பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்குத் தலா ரூ. 200 முன்பணம் வழங்க தென் ரயில்வே பொது மேலாளர் ஏற்கெனவே அனுமதி வழங்கியிருக்கிறார். இது தவிர இரயில்வே அமைச்சரின் நிவாரண நிதி, மற்ற நல நிதியிலிருந்து தாம் ரூ. 1 இலட்சம் அனுமதித்திருப்பதாக அமைச்சர் கூறினார். இரயில் ஊழியர்களுக்கு இனாம் தொகையாக இது வழங்கப்படும்.

## குடிசை கட்டும் சாதனங்கள் அத்தியாவசியப் பொருட்கள் எனப் பிரகடனம் !

குடிசைகள் கட்டுவதற்கான தென்னந்தட்டிகள், பனந்தட்டிகள், சவுக்குக் கம்புகள், மூங்கில் மரங்கள், கயிறுகள் ஆகிய ஐந்து பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்கள் எனத் தமிழ் நாடு அரசு பிரகடனம் செய்திருக்கிறது.

தமிழ்நாடு அத்தியாவசியப் பொருள் கட்டுப்பாடு, ஆர்ஜிதச் (தற்காலிக அதிகார) சட்டத்தின் கீழ், இவை அத்தியாவசியப் பொருள்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.







# மின்னல் வேகத்தில் மின்சாரத் தொடர்புகள் சீரமைக்கப்பட்டன!

**த**மிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல்—வெள்ளத்திஞல், தமிழக மின்சார வாரியத்திற்கு ஏறத்தாழ 4.0 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

புயல்-வெள்ளத்திஞல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரக் கம்பங்கள் விழுந்ததன் காரணமாகவும், 'டிரான்ஸ்பார்மர்'கள் கீழே சாய்ந்து பாழ்பட்டதன் காரணமாகவும் கடந்த 11—11—1977, 12—11—1977 ஆகிய இரு நாட்களில் மின்சாரத் தொடர்பு அறவே இல்லாமல், கிராமங்களும் நகரங்களும் இரவில் இருண்டு கிடந்தன!

தமிழகத்தில் புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், புயலுக்கு முன்பு 7,300 'டிரான்ஸ்பார்மர்'கள் இயங்கியுள்ளன. அவைகளில் 5,402 'டிரான்ஸ்பார்மர்'கள் அதாவது 74 சதவிகித 'டிரான்ஸ்பார்மர்'கள் நவம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் வீசிய கொடும் புயலால் நிலைகுலைந்து, பாதிக்கப்பட்டு, இயங்கவில்லை என்று 13—11—1977 அன்று தெரியவந்தது.

பாழ்பட்ட 'டிரான்ஸ்பார்மர்'களைச் சீரமைத்து மீண்டும் மின்சாரத் தொடர்பை அளித்திடுவதற்கு மின்சார வாரியத்தின் பணியாளர்கள் இரவு பகலெனப் பாராமல்—கொட்டும் மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமல்—மின்னல் வேகத்தில் பணியாற்றிஞர்கள்! அதன் பயனுய், 5,402 ஆக இருந்த பாழ்பட்ட 'டிரான்ஸ்பார்மர்'களின் எண்ணிக்கை 10 நாளில் 759 ஆகக் குறைந்தன! அந்தப் பத்து நாளில் படிப்படியாக ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பின்கண்ட அட்டவணையில் இருந்து அறிந்து கொள்ளலாம் :

| நாள் | பழுதுபட்டு இருந்த டிரான்ஸ்பார்மர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் | சீரமைக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்களின் தொடர் முன்னேற்றச் சதவீதம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 13—11—1977 | 5,402 (74%) | — |
| 15—11—1977 | 4,944 (67.7%) | 6.3% |
| 17—11—1977 | 2,473 (33.9%) | 40.1% |
| 19—11—1977 | 1,391 (19.0%) | 55.0% |
| 21—11—1977 | 880 (12.0%) | 62.0% |
| 23—11—1977 | 759 (10.4%) | 10.4% |

**பல நாட்கள் பாடுபட்டு அமைத்த 'டிரான்ஸ்பார்மர்'களை ஓரிரு நாட்களில் புயல் பாழ்படுத்தியது! ஆனுல் மின்சார வாரியப் பணியாளர்களோ அவைகளை 15 நாட்களுக்குள் மீண்டும் பழைய நிலைக்குச் சீரமைத்து விட்டனர்!**



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரிசன நல அமைச்சர் ஆற்றிய பணிகள்!

**கோ**டும் புயலாலும் கொடிய வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு ஏற்ப, மாண்புமிகு தமிழக அரிசன நல அமைச்சர் திரு சௌந்தர பாண்டியன் அவர்கள் வெள்ளப் பகுதிகளில் நவம்பர் 12-ஆம் தேதி முதல் 18-ஆம் தேதி வரை சுற்றுப் பயணம் செய்து, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் கிடைக்கச் செய்தார். இந்த 7 நாட்களில் அவர் மணப்பாறை, பழனி, வேடசந்தூர், கரூர், குளித்தலை, திருச்சி, முசிறி ஆகிய வட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார்.

திருச்சி நகரத்திலும், வெள்ளம் பாய்ந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தார்.

திருச்சியில் சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் கூட்டி அவர்களுடன் நிவாரணப் பணிகள் குறித்து விவாதித்தார்.

கரூர், குளித்தலை, மணப்பாறை திருச்சி மாவட்டங்களில் மட்டும் நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குச் சென்ருர். கார்கள் செல்ல முடியாத இடங்களுக்கெல்லாம் நடந்தே சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறிஞர்.

கரூர், குளித்தலைப் பகுதிகளில் பல கிராமங்களுக்கு அவர் செல்லுகையில், தங்களுக்கு உணவுக்குக்கூட வழியில்லை என்று ஏராளமான கிராம மக்கள் அவரிடம் தெரிவித்தார்கள்.

இதைக் கேட்டதும் மனம் கலங்கிய அவர், உடனே அரிசி வியாபாரிகளை அழைத்துப் பேசி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு கேட்டார். அவர்கள் 200 மூட்டை அரிசியைஅளித்தார்கள். கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு 150 மூட்டை அரிசி கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். இந்த 350 மூட்டை அரிசியை அந்தப் பகுதி மக்களுக்கு வினியோகிக்கவும் ஏற்பாடு செய்தார்.

''வேடசந்தூர்ப் பகுதிக்குச் சென்று பாதிக்கப்பட்ட கிராமங்களைப் பார்த்தேன். எங்கு பார்த்தாலும் வீடுகள் இடிந்து தரை மட்டமாகக் கிடந்தன. ஆடு, மாடுகள் இறந்து ஆங்காங்கு கிடந்தன. பாசனக் கிணறுகள் எல்லாம் வெள்ளத்தால் மண் மூடிக் கிடந்தன. விவசாயப் பயிர்களையும் மணல் மூடிக் கிடந்தது'' என்று அந்தப் பகுதியின் கோரக் காட்சி பற்றி அமைச்சர் விவரித்தார்.

''இந்தப் பகுதியில் உள்ள குடகனூறு அணையில் மூன்று இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் பாதிக்கப்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் சென்று அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் 'செய்யும்படி அதிகாரிகளிடம் வற்புறுத்தினேன்'' என்றும் அவர் கூறிஞர்.

# வெள்ளத்தை முந்தும் வேகத்தில் வெள்ள நிவாரணப் பணிகள்!



வரலாறு காணாத வகையில் 12-11-1977 அன்று தமிழகத்தைத் தாக்கிய கடும் புயலாலும் பெரு வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு மோசமாகச் சேதமடைந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துயர் துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஐந்து ஹெலிகாப்டர்களும், ஒரு 'டகோடா' விமானமும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டன. வெள்ளத்தால் சூழப்பட்டு மற்ற இடங்களுடன் தொடர்பில்லாதிருந்த இராமங்கள் மீது இடைவிடாது பறந்து சென்று, மக்களுக்குத் தைரியமூட்டி உணவுப் பொட்டலங்களையும், ரொட்டிகளையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கின. சில நாட்களில் இரண்டு 'ஆவ்ரோ' விமானங்கள், சில நாட்களில் மூன்று 'அவ்ரோ' விமானங்கள் வீதம் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு 20,000 30,000 40,000 ரொட்டித் துண்டுகளை ஒவ்வொரு நாளும் எடுத்துச் செல்லும் பணியில் மாநில அரசுக்குப் பெரிதும் உதவின. நாகப்பட்டினத்துக்கும், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் ரொட்டி முதலிய உணவுப் பொட்டலங்களை எடுத்துச் செல்வதற்காக திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் லாரிகள் தொகுதி தொகுதியாகக் காத்துக் கொண்டிருந்தன. சென்னையிலிருந்து, திருச்சிராப்பள்ளிக்கும், நாகப்பட்டினத்திற்கும், புதுக்கோட்டையின் கரையோரப் பகுதிகளுக்கும் புயலாலும், வெள்ளத்தாலும் சூறையாடப்பட்ட வேடசந்தூரின் பகுதிகளுக்கும், ரொட்டி, உணவுப் பொட்டலங்கள் முதலியவற்றையும் காவல் துறை, மற்றும் இராணுவத்துறை





யினரின் வான் தந்திக் கருவிகள், மின்கலங்கள், மின்உற்பத்தி இயந்திரங்கள் ஆகிய சாதனங்களையும் கொண்டு செல்வதில் விமானப் படை ஒப்பற்ற வகையில் பணியாற்றியது.

விமானம் ஹெலிகாப்டர்கள், முதலிய வானூர்திகளின் மூலம் மீட்புப் பணிகள் நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில் மாயூரம், திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய இடங்களிலிருந்துதொகுதி தொகுதியாக அலுவலர்கள் கிராமங்களுக்கு விரைந்து சென்று சாலைகளைச் சீர் செய்து, திக்கற்ற நிலையில் விடப்பட்டிருந்த மக்களைச் சந்தித்து, ஆறுதல் கூறியும், அவர்களுக்கு வேண்டும் உணவுகளை வழங்கியும் தைரியமூட்டினர். உணவு வழங்கு நிலையங்களையும், அவர்கள் ஆங்காங்கே ஏற்பாடு செய்தார்கள்.

புயல் இரண்டாவது முறை தாக்கக்கூடும் என்ற அச்சமிருந்ததால், விமானங்கள் தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், இரண்டாவது முறை புயல் வீசக்கூடிய அச்சம் நீங்கி விடவே விமானங்கள், பின்னர் அவற்றின் தளங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன. ஆயினும் நாகப்பட்டினம் பகுதியில் வான் தந்திக் கருவிகள், வாகனங்கள் போன்ற இராணுவச் சாதனங்களை அரசு இன்னும் சிறிது காலத்திற்குப் பயன்படுத்திக்கொள்வதற்காக வைத்துக் கொண்டுள்ளது.

இத்தகைய சோதனையான சூழ்நிலைகளில் சில நடவடிக்கைகளுக்கு முதலிடம் தருவதோடு, சில நடவடிக்கைகள் ஒரே சமயத்தில் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வெள்ளத்தால் சூழப்பட்டு அவதியுறுகிறவர்களை முதலில் மீட்டு, பாதுகாப்பான இடங்களுக்குக்கொண்டு சென்று அவர்களைத் தங்கவைத்து உணவளிக்கப்பட்டது. சாலைப் போக்குவரத்து சீர் செய்யப்படுகிற வரையில் இந்த மீட்புப்பணி காத்திருக்க முடியாதென்பதால் விமானத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு உணவு வழங்கி பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்காக இராணுவப் படகுகளை மாநில அதிகாரிகள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மின் வசதியையும், நீர் வழங்கு வசதியையும் மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது அடுத்த பணியாகும்.

மூன்றாவதாக, அதே சமயத்தில் சாலைத் தொடர்பையும், இரயில் தொடர்பையும் செய்தித் தொடர்பையும் மீண்டும் ஆங்காங்கே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்தது. இவற்றில், சாலைகளைச் சீரமைக்கும் பணிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு, வெள்ளத்தாலும், புயலாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வுக்கான வசதிகள் செய்து கொடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கருணை மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

உழவு மாடுகள் வாங்கக் கடன், அவர்கள் ஈடுபட்டிருந்த தொழிலை மீண்டும் நடத்துவதற்குக் கடன் முதலியவகைகளில்அவர்களுக்குத் தக்க உதவி செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டப் பணி முடிவுற்றது. வெள்ளத்தால் சூழப்பட்டு அல்லலுற்றவர்கள் மீட்கப்பட்டனர். முதல் சில நாட்களில் படகுகள், சாலை, விமானம் மூலம் உணவுப் பொட்டலங்கள் கொண்டு செல்லப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டன. பெரும்பாலும், எல்லாக் கிராமங்களிலும் மின்வசதி மீண்டும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. சாலைத் தொடர்புகளும் சீரமைக்கப்பட்டன. நூற்றுக் கணக்கில் உணவு வழங்கும் இடங்கள் ஏற்படுத்தப்பட்டன. அதிகாரிகள், தொகுதி தொகுதியாக ஒவ்வொரு கிராமத்திலும் பணியாற்றி வருகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறு



தல் கூறியும், உணவு குடிநீர், மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பண்டங்கள் ஆகியவற்றை அதிகாரிகள் வழங்கியும் வருகின்றனர். மாவட்ட நிர்வாகப் பணி அலுவலர்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றிய வண்ணம் உள்ளனர்.

மாநில அரசின் மூன்று அமைச்சர்கள் நிவாரண ஏற்பாடுகளை நேரில் மேற்பார்வையிட்டு வருகின்றனர். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம், நவம்பர் 16-ஆம் தேதி முதல், நாகப்பட்டினத்தில் இருந்து கொண்டு நிவாரணப் பணிகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். மாநில அரசுக்கு உதவி வரும் இராணுவ வண்டிகளோடு வீட்டு வசதி வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் முதலிய துறைகளிலிருந்து ஏராளமான வண்டிகளை அமைச்சர் அவர்கள் அனுப்பச் சொல்லி அவைகளும் விரைவில் வந்தன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு. கையமுத்தப் பம்புகளுடன் அந்த வண்டிகள் உடனே விரைந்தன. எல்லா கிராமங்களுக்கும், அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் குழுக்கள் மூலமாக உணவு வழங்கப்படுவதையும், பிற உதவிகள் அளிக்கப்படுவதையும் அமைச்சர் நேரடியாக மேற்பார்வையிட்டார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வேடசந்தூர்ப் பகுதியில் நிறைவேற்றப்படும் நிவாரணப் பணிகள் அனைத்திற்கும் முழுப் பொறுப்பு வகித்து வருகிறார். மாவட்ட ஆட்சியாளருடன் அமைச்சர் அவர்கள் குடகனாற்றின் நெடுக உள்ள கிராமங்கள் எல்லாவற்றிற்கும் சென்று மீட்புப் பணிகளை நேரடியாகக் கவனித்து வருகிறார். இந்த ஆற்றில் தண்ணீர் பெரும்பாலும் ஓடுவது இல்லை. அத்தகைய ஆற்றில் இதற்கு முன் காணாத அளவுக்கு ஓரிரவுக்குள்ளாக வெள்ளநீர் அதிகமாக நிறைந்து விட்டது. இதனால் மக்கள் எதிர்பாராத வகையில் வெள்ளத்தால் தாக்குண்டனர்.

வேடசந்தூரில் ஆற்றின் குறுக்காக உள்ள பாலத்தின் மேல் தளம் ஆற்றுப்படுகைக்குச் சுமார் 10 அடி மேலே உள்ளது. ஆற்றுப் படுகையிலுள்ள தொலைபேசிக் கம்பங்கள், மின்சாரக் கம்பங்கள் மீதுள்ள நீர்மட்டக் குறிகளிலிருந்து பாலத்தின் தளத்திற்கு மேல் 7 அடி முதல் 8 அடி வரையில் வெள்ளம் ஓடியதாகத்



நாகப்பட்டிணம் அருகில் உள்ள சடையங்கோட்டம் என்ற ஊர் வெள்ளத்தில் மூழ்கியது. அக்கிராம மக்கள் படகின் மூலம் பாதுகாக்கப்பட்டனர்.

தெரிய வருகிறது. இந்த ஆற்றில் இதற்கு முன் கண்டிராத அளவிற்கு நீர் பெருகியதால் சுற்றுப்புறத்தில் உள்ள 41 கிராமங்களிலுள்ள மக்கள் அதிர்ச்சியும், அச்சமும் அடைந்தனர். ஒரு சில மணி நேரங்களில் சுற்றிலும் உள்ள எல்லா இடங்களும் பெரும் சேதத்திற்குள்ளாயின. ஆடவரும் பெண்டிரும், சிறார்களும் அடித்துச் செல்லப்பட்டனர். கால்நடைகளும் அடித்துச் செல்லப்பட்டன. குடகனாற்றின் கிளையாறுகளில் வெள்ளநீர் பெருக்கெடுத்தோடியதன் விளைவாகவே பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. அணை உடைப்பெடுத்து விட்டதாலேயே அந்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டதாகக் கூறுவதற்கில்லை. வேடசந்தூரின் நீரோட்டத் திசையில் சுமார் 7 மைல் தொலைவில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பி. சௌந்தரப் பாண்டியன் அவர்கள், திருச்சிராப்பள்ளியில் இருந்து கொண்டு திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களில் நிறைவேற்றப்படும் வெள்ள நிவாரணப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

## முன்னேற்பாட்டினால் பலர் காப்பாற்றப்பட்டனர் !

நாகப்பட்டினம் புயலால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது. ஆனால், இது முன்கூட்டியே சிறிது எதிர்பார்க்கப்பட்டதால், முந்திய நாளன்றே மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர். வீடுகள் புயலின் வேகத்தில் இடிந்து சிதறிப் பாழாயின. புயலின் விளைவாக இப்பகுதியில் சேதங்கள் ஏற்பட்ட பிறகு, வீடுகள் எங்குள்ளன, சாலைகள் எங்குள்ளன என்று பிரித்தறிய முடியாத நிலைதான் நிலவியது. மரணமுற்றவர்களின் எண்ணிக்கை சொற்பமே. மக்கள் முன்கூட்டியே வேறிடங்களுக்குப் பெயர்ந்து சென்றதால் பலர் காப்பாற்றப்பட்டனர்.

திருச்சிராப்பள்ளி அல்லது வேடசந்தூர் வெள்ளத்தைப் பொறுத்தவரையில் அது எதிர்பாராமல் நடந்து விட்டது. மக்களை வேறிடங்களுக்கு அனுப்ப அவகாசமில்லாமற் போனதோடு முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்படவுமில்லை.



ஆனால் கிழக்குத் தஞ்சாவூர் பகுதியைப் பொறுத்தவரையில், மக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அவர்கள் வேறிடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அதன் விளைவாக மாவட்டத்தின் ஒரு பகுதி சேதமடைந்து, வடக்கே கொள்ளிடத்திலிருந்து தெற்கே வேதாரண்யம் வரையில் உள்ள பகுதி முழுவதும் பாதிக்கப்பட்ட போதிலும் வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 150 என்ற அளவோடு நின்றது.

ஒவ்வொரு நாளும் சென்னையிலிருந்து விமானத்தின் மூலம் ரொட்டிப் பொட்டலங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதே நேரத்தில், சாலை இணைப்புகள் சீர் செய்யப்பட்ட பின்னர், ரொட்டித் துண்டுகள் லாரி லாரியாக நாகப்பட்டினத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. சென்னையிலிருந்து நான்கு இலட்சம் ரொட்டித் துண்டுகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதைத் தவிர மாவட்ட அதிகாரிகள் ஆங்காங்கே உணவு வழங்கும் இடங்களை ஏற்படுத்தி கஞ்சி, புளிசோறு, உப்புமா முதலியன தயாரிக்கச் செய்து, வழங்கினர். புயலால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்ததாலும், சமைப்பதற்கு வேண்டிய பாத்திரங்கள், அடுப்பு முதலியவற்றை வைத்திருந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய்யும் அளிக்கப்பட்டன.

மாநில அரசு கேட்டுக்கொண்டபடி, வேண்டிய இடங்களுக்கு மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல், விமான எரிபொருள், எண்ணெய் ஆகியவற்றை விரைந்து அனுப்பி வைப்பதில் இந்திய எண்ணெய்க் கழகம் (I. O. C.) பெரும் பணி புரிந்தது. இன்னமும் தொடர்ந்து பணி புரிந்து வருகிறது. சென்னையிலுள்ள இந்திய எண்ணெய்க் கழகமும், மாநில அதிகாரிகளும் சிறந்த முறையில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். திருச்சியிலும், மதுரையிலுமுள்ள இந்திய எண்ணெய்க் கழக அதிகாரிகள் நாகப்பட்டினத்திற்கும், புதுக்கோட்டைக்கும் வண்டி வண்டியாக எரிபொருளை அனுப்பி வைக்க எப்போதுமே சித்தமாயிருந்தனர்.

திருச்சி மதுரை மாவட்ட ஆட்சியர்கள் தத்தம் மாவட்டங்களில் கவனிக்க வேண்டிய பிரச்சினைகளைக் கவனிப்பதுடன், மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் ஆகியவற்றை நாகைக்கும், புதுக்கோட்டைக்கும் அனுப்பி வைப்பதில் அலுக்காது, சலிக்காது பாடுபட்டனர். குறிப்பாகத் திருச்சி மாவட்ட அதிகாரிகள், விமான மூலமாக வந்த ரொட்டி, மருந்து, மின்கலங்கள், கம்பியில்லாத் தந்தி இணைப்புப் பெட்டிகள் முதலிய சாதனங்களை லாரி மூலமாக நாகப்பட்டினத்துக்கு அனுப்பிய வண்ணமிருந்தனர்.

திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் பகுதிகளில் பயன்படுத்துவதற்காக 3 இலட்சத்துக்கு மேற்பட்ட காலரா தடுப்பு ஊசி மருந்துக் குப்பிகள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. மாநில அரசிடம் 5 இலட்சம் காலராத் தடுப்பு ஊசி மருந்துகள் உள்ளன. தேவைப்படும் இடங்களுக்கு மருந்துகள் விரைந்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

25,000 ஜோடி வேட்டி, புடவைகள் நாகப்பட்டினத்துக்கு விரைந்து அனுப்பி வைக்கப்பட்டு, புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் மேலும் இவ்வாறே அனுப்பி வைக்கப்படுகிறது.





செஞ்சிலுவைச் சங்கம் இம்மாநில அரசுக்குப் பெருமளவில் கைகொடுத்து உதவி செய்தது. 1,500 படுக்கை விரிப்புகளையும், 100 பெரிய டின் பிஸ்கட்டுகளையும் தந்து உதவியது. இவையனைத்தும், நாகப்பட்டினத்திற்கும், சிதம்பரத்திற்கும் விரைந்து அனுப்பி வைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன.

## முதல் வெள்ளத்தைச் சமாளித்தோம் !

அக்டோபர் 15-ந்தேதி வாக்கில் இம்மாநிலத்தின் சில பகுதிகளில், முதன் முதலாக வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வைகையிலும், அதன் கிளை நதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வரலாறு காணாத வகையில் ஏற்பட்ட இந்தக் கொடுமையான வெள்ளத்தில் இராமநாதபுரம் சிக்கித் திக்குமுக்காடியது. 17 கிலோ மீட்டர் நீளமுள்ள இராஜசிங்க மங்கலம் ஏரியும், இராமநாதபுரம் பெரிய ஏரியும் நிரம்பி வழிந்து, உடைப்பெடுக்குமோ என்ற அச்சமிருந்தது. அவை உடைப்பெடுத்திருந்தால் ராஜசிங்கமங்கலமும், இராமநாதபுரமும் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டு அழிந்து போயிருக்கும். அதிகாரிகளும், மக்களும் சிறந்த முறையில் ஒத்துழைத்து நடவடிக்கை எடுத்ததால் இந்த அபாயம் தவிர்க்கப்பட்டது. தண்ணீர் வீணாகாமல் பெரிதும் பாதுகாக்கப்பட்டது. உயிருக்கோ உடைமைக்கோ குறைந்த அளவு சேதத்துடன் நிலைமை சமாளிக்கப்பட்டது.



வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொட்டிகள் வழங்கப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்யப்படுகிறது.







வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் இலவச அரிசி வழங்கினர்.



புயலின்போது வீடு இடிந்ததால் காய முற்றவர்கள் மருத்துவ மனையில் சேர்க் கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வரு கின்றனர். அவர்களை மாண்புமிகு தமிழக தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், பார்வை யிட்டு ஆறுதல் கூறினர்.

# வீடு இழந்தவர்களுக்கு 2.36 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது!

தமிழ்நாட்டில் புயலாலும் வெள்ளத்தாலும் வீடு இழந்து தவிப்பவர்களுக்கு அரசாங்கம் பல விதங்களிலும் உதவி செய்து வருகிறது.

வீடு இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் [illegible] 100 உதவிப் பணம் வழங்கப்பட்டது. இப்போது ரூ 200 கொடுக்கப்படுகிறது.

கடந்த [illegible]-ஆம் தேதி [illegible]

| மாவட்டத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|
| தஞ்சை | [illegible]62,61,[illegible]00 |
| திருச்சி | 37,38,300 |
| புதுக்கோட்டை | 21,22,600 |
| மதுரை | 4,61,770 |
| இராமநாதபுரம் | 4,88,155 |
| கோவை | 3,49,255 |
| சேலம் | 53,290 |
| செங்கல்பட்டு | 52,870 |
| வட ஆற்காடு | 30,805 |
| தென் ஆற்காடு | 13,060 |
| திருநெல்வேலி | 9,690 |
| நீலகிரி | 8,370 |
| [illegible] | 1,400 |

மொத்தம் 2 கோடியே 36 இலட்சத்து 72 ஆயிரத்து 265 ரூபாய் வீடு இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## மூன்று புயல்கள் !

அக்டோபர் மூன்றாவது வாரத்தில் தோன்றிய புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துயர் துடைப்புப் பணிகளைச் செய்து முடிப்பதற்குள் மற்றொரு புயல் தோன்றி அச்சுறுத்தியது. ஆனால் அது மறைந்து விட்டது. 'அப்பாடா! தப்பித்தோம்' என்றிருந்த நிலையில் ஏறத்தாழ தீபாவளியன்று மற்றொரு கடும்புயல் வீசத் தொடங்கியது. பல ஆண்டுகளாக நீர்ப் பெருக்குக் காணாத பல ஆறுகள், கடும்புயல், பெருமழை காரணமாக வெள்ளத்தால் நிரம்பி வழிந்தன. மேட்டூர் நீர்த் தேக்கம் நிரம்பி வழிந்ததால், திருச்சிராப்பள்ளி நகரத்தின் தொல்லைகள் பெருகின என்று கூறுவதற்கில்லை. அதனால் காவிரியில் ஏற்பட்ட வெள்ளத்தை நாம் கட்டுப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அமராவதி, வறட்டாறு, குடகனாறு, சந்தானவர்த்தினி ஆறு முதலிய பல ஆறுகளின் வெள்ளப் பெருக்குக் காரணமாகவே திருச்சி நகரம் அல்லலுக்கு ஆட்பட வேண்டி வந்தது.

## திக்குமுக்காட வைத்த புயல் !

அதன்பின் மற்றொரு புயல் அடிக்கும் அபாயம் உருவாயிற்று. இது முதலில் நாகப்பட்டினத்தைப் பாதிக்கும்போல் இருந்தது. அதன்பின் கன்னியாகுமரியை நோக்கித் தெற்காகத் திரும்பியது. பின்னர் வடக்காகத் திரும்பி பாம்பனையும் மீண்டும் நாகப்பட்டினத்தையும், அதன் பின் கடலூரையும், சென்னையையும் நோக்கி வந்து, முடிவில், ஆந்திரப் பிரதேசத்திலுள்ள சிராலாவிற்குப் போயிற்று. இந்தப் புயல் இம்மாநிலத்தையே திக்குமுக்காட வைத்த, திணறடித்த, அபாயம் இங்கு வருமோ, அங்கு வருமோ என அச்சமுறும் அளவுக்கு மாறி மாறித் திசை திரும்பிய, எங்கும் தயார் நிலையில் இருந்தாக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்திய பெரும் புயலாகும். **மனிதனை விடத் திட்டமிட்டுப் பாய்ச்சல் காட்டுவதில் இயற்கை எத்துணை வலிமை வாய்ந்தது என்பதற்கு இப்புயல் எடுத்துக் காட்டாக அமைந்தது.**

ஏதேனும் ஒரு தவறு செய்யப்பட்டிருப்பினும், ஒரு முனையில் மட்டும் அதாவது பாம்பன் பகுதியிலோ, தூத்துக்குடிப் பகுதியிலோ மட்டும் நாம் ஆயத்த நிலையில் இருந்திருப்போமேயானாலும் மனம் போன போக்கில் திசை திரும்பிய இப்புயலால் என்ன விளைவு ஏற்பட்டிருக்கும்! இரண்டு நாட்களாகச் சூறாவளியாக மாறிய புயலால்—மனம் போன போக்கில் திசை திரும்பிய இப்புயலால் எந்த இடத்தில் ஆபயம் ஏற்படுமோ எனத் தெரியாது, தவித்து, எல்லா இடங்களிலும் எல்லா வகைகளிலும் ஆயத்த நிலையில் இருப்பதற்கு எவராலும் ஏற்பாடு செய்வது அருமையாகும். விமானம் மூலம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இம்மாநில அரசு மின்னல் வேகத்தில் எடுத்து முடித்ததால், ஆந்திரப் பிரதேசம் விமானம் வேண்டும் எனக் கேட்பதற்கு முன்னரே விமானப்படை விமானங்களைப் பெங்களூர் தளத்துக்கு அனுப்பி வைக்க இயன்றதைக் குறித்து நாம் பெருமிதம் கொள்ளலாம்.

புயலால் தாக்குண்ட பகுதி மக்களைக் காப்பாற்றித் துயர் தணிக்கும் முதல் கட்டப் பணி நிறைவெய்தியது. அவர்களுக்குப் புதுவாழ்வளிக்கும் இரண்டாம் கட்டப் பணி, சென்ற வாரம் தொடங்கியது. இம்மாநில அமைச்சர்கள், மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம், அவர்கள் நாகப்பட்டினத்திலும் மாண்புமிகு திரு கே. காளிமுத்து அவர்கள் மதுரையிலும், மாண்புமிகு திரு பி. சௌந்தரபாண்டியன் அவர்கள் திருச்சியிலும் இருந்து கொண்டு நேரடியாக துயர் துடைப்புப்பணிகளை மேற்பார்வையிட்டு வருகின்றனர். வருவாய்த்துறை வாரிய உறுப்பினர்களான திரு ஆர். நடராஜன் அவர்கள் நாகப்பட்டினத்திலும், திரு ராமச்சந்தர் அவர்கள் திருச்சிராப்பள்ளியிலும் தங்கியிருந்து செயல்படுவதன் மூலம் இந்த இரண்டாம் கட்டப் பணி முனைப்பாக நிறைவேறி வருகிறது.

## மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகம்

"புயலால் பாதிக்கப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு, இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்க, ஏற்பாடுகள் செய்யப்படும்" என்று தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் திரு எச். எஸ். எஸ். லாரன்ஸ் அவர்கள் கூறினார்.

"புயல், வெள்ளத்தின் கொடுமையால், மாணவர்களது நோட்டுப் புத்தகங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டன. பாதிக்கப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை, விரைவில் வழங்கப்படும்" என்று அவர் கூறினார்.



# தமிழ்நாட்டில் 1,200 பேர்களை இராணுவம் காப்பாற்றியது !

தமிழ்நாட்டில் புயல்-வெள்ளத்தில் சிக்கிய 1,200 பேர்களை இராணுவ வீரர்கள் காப்பாற்றினார்கள் என்று இராணுவ அதிகாரி திரு ஆர். என். மதன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் நிருபர்களிடம் கூறியதாவது:—

புயல்-வெள்ளத்தில் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தபோது, வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்ற இராணுவ உதவி கேட்கப்பட்டது.

உடனடியாகச் சென்னையில் உள்ள இராணுவ வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டனர்.

விசைப்படகுகள் மூலமாகவும், கட்டு மரங்கள் மூலமாகவும் வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று அவர்கள் மீட்புப் பணிகளைச் செய்தனர்.

அவர்களது உதவியால் 1,200 பேர் உயிரோடு காப்பாற்றப்பட்டனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில் மழையினால் வெள்ளம் ஏற்பட்டபோது வெள்ளத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றிய அனுபவம் இராணுவ வீரர்களுக்கு இருந்ததால் இந்த அளவுக்கு அதிகப் பேர்களைக் காப்பாற்ற முடிந்தது.

## வீடுகட்டும் பொருள்கள் விற்க அரசுக் கிடங்குகள் !

புயல், வெள்ளத்தினால் வீடிழந்தவர்கள் மீண்டும் குடிசைகள் கட்டிக் கொள்வதற்குத் தேவையான மூங்கில் கழிகள், சவுக்குக் கட்டைகள், காற்றில் விழுந்து போன யூகலிப்டஸ் மரத் தூண்கள் முதலியவற்றை விற்பதற்குக் கிடங்குகளைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

நாகப்பட்டினம், திருவாரூர், மன்னார்குடி, மரக்காணம், குடுமியாமலை, புதுக்கோட்டை, வேடசந்தூர் ஆகிய இடங்களில் இந்தக் கிடங்குகள் திறக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகக் கடைகள் மூலமாகவும், நகர சபைகள் மூலமாகவும், இந்தப் பொருட்கள் விற்கப்படும்.

# தமிழ்நாட்டில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்றுள்ள சீரமைப்பு—துயர் துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்!

## 1. சீரமைப்புப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1. | உடைப்புகள் அடைக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட பாசன ஆதாரங்கள் — | 3,595 |
| 2. | செப்பனிடப்பட்ட சாலைகள் — | 826 |
| 3. | மீண்டும் தொடர்பு பெற்ற தொலைபேசிகள் — | 5,135 |
| 4. | பழுதுபார்க்கப்பட்ட 'டிரான்ஸ்பார்மர்'கள், மின்சாரக் கம்பங்கள் — | 7,555 |

## 2. துயர்துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1 | குடிசை இழந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை மானியம் | ரூ. 2,67,83,540 |
| 2 | வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வேட்டிகள், புடவைகள் | 2,57,037 ஜோடி |
| 3. | வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்குப் போடப்பட்டுள்ளத் தடுப்பு ஊசிகள் — | 6,68,525 |
| 4. | சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை உதவி | ரூ. 46,000 |

# அனுதாபம் தெரிவித்தார்கள்!

### அமெரிக்கா

''சமீபத்திய புயல்களினுல் உங்கள் நாட்டில் பலர் உயிரிழந்ததற்கும், ஏராளமானச் சேதம் நேர்ந்துள்ளதற்கும் அமெரிக்க மக்கள் சார்பிலும், எனது சார்பிலும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''புயலின் விளைவாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் அவசரத் தேவைகளைத் தீர்ப்பதற்கு எங்களால் ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், தூதர் கொஹின் மூலமாகத் தயவு செய்து எனக்குத் தெரிவிக்கவும்'' என்று ஐக்கிய அமெரிக்க குடியரசின் தலைவர் திரு ஜிம்மி கார்ட்டர் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### ரஷ்யா

இந்தியாவில் புயலினல் ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதம், பொருட் சேதம் குறித்து ரஷிய அதிபர் திரு பிரெஷ்னெவ் அவர்களும், பிரதமர் திரு கோஸிஜின் அவர்களும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கும், இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் தந்தி அனுப்பியுள்ளனர்.

ரஷ்யாவில் உள்ள இந்திய தூதர் திரு ஐ. கே. குஜ்ரால் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வருக்கு அவரது சார்பிலும் ரஷ்யாவில் உள்ள இந்தியர்கள் சார்பிலும் வெள்ளச் சேதம் பற்றி அனுதாபச் செய்தி அனுப்பியிருக்கிறுர்.

### பிரிட்டன்

பிரிட்டிஷ் பிரதமர் திரு ஜேம்ஸ் கல்லகன் அவர்கள், நமது இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு டெலிபோன் செய்தார். தென்னிந்தியாவில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப் படும் நிவாரண முயற்சிகளில் உதவி தருவதாக அவர் கூறினுர். புயல் பாதிப்பு குறித்து அவர் அனுதாபம் தெரிவித்தார்.

### பாகிஸ்தான்

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் புயலால் ஏற்பட்ட உயிர் இழப்பு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் செய்தியைப் பாகிஸ்தான் அதிபர் பஸல் இலாஹி செளதிரி அவர்கள் இந்தியக் குடியரசுத்தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கு அனுப்பியுள்ளார்.

### யுகோ

புயலால் தென்னிந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பெரும் சேதம் குறித்து அனுதாபம் தெரிவித்து யுகோ அதிபர் திரு டிட்டோ குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டிக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

### சுவிஸ்

இந்தியாவில் புயலால் பெரும் கஷ்ட நஷ்டமடைந்துள்ள மக்களுக்கு சுவிஸ் மக்களின் அனுதாபத்தை அந்நாட்டு அதிபர் திரு கர்ட் பாக்னர் தெரிவித்துள்ளார்.

### ஜப்பான்

இந்திய புயல் சேதம் குறித்து மேதகு ஜப்பானிய மன்னர் திரு ஹிரோஹிடோ அவர்கள் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

இந்தியாவில் புயலினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஜப்பான் பிரதிநிதிகள் சபை சபாநாயகர், யுகோஸ்லேவிய சோஷலிஸ்ட் குடியரசு அசெம்பிளித் தலைவர் ஆகியோர்களிடமிருந்தும் செய்திகள் வந்துள்ளன.

### நார்வே மன்னர்

நார்வே மன்னர் திரு ஓலவ் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து செய்தி அனுப்பியுள்ளார்.

### இலங்கை

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம், மக்கள் ஆகியோரின் ''மனப்பூர்வமான, ஆழ்ந்த அனுதாபத்தை'' அந்நாட்டுப் பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துக் கொண்டிருக்கிறுர்.

### நேப்பாளம்

புயலால் உயிருக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்டுள்ள பிரம்மாண்ட சேதம் குறித்து ஆழ்ந்த வருத்தம் தெரிவித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நேப்பாள மன்னர் திரு வீரேந்திரா அவர்கள் ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.

### உ. பி. ஆளுநர்

புயலால் துன்புறும் தமிழ்நாடு மக்களுக்கு உத்திர பிரதேச ஆளுநர் திரு தபலே அவர்கள் தம் ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்து தமிழக ஆளுநர் அவர்களுக்குச் செய்தி அனுப்பியுள்ளார்.

### மேற்கு வங்கம்

தமிழ்நாட்டிலும், ஆந்திரப்பிரதேசத்திலும் புயலினுல் ஏராள மக்கள் உயிரிழந்ததற்கும், பெருமளவுக்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதற்கும், மேற்கு வங்க அமைச்சரவை அனுதாபம் தெரிவித்துள்ளது. அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு நிமிஷ நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

மாண்புமிகு மேற்கு வங்காள முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு குஜராத் முதலமைச்சர் அவர்களும் தமிழகப் புயல் சேதத்திற்கு வருத்தம் தெரிவித்து தந்தி அனுப்பி இருக்கிறுர்கள்.

### புனு நகரசபை

தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து புனு நகரசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

* * *

யு. எஸ். தூதர் ராபர்ட் கொஹீன் தனியாக அனுப்பிய செய்தியில், அனுதாபம் தெரிவித்தார்



# அள்ளியும் கொடுத்தார்கள்!

### 'கத்தோலிக்' பாதிரியார்களின் உதவி!

இந்திய கத்தோலிக்க பாதிரியார் மாநாட்டைச் சேர்ந்த நிவாரண அமைப்பான 'காரிடாஸ் இந்தியா', ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் நிவாரணம் அளிக்க ரூ. 1 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த அமைப்பு பிரதமர் நிவாரண நிதிக்கும் ரூ.1 இலட்சம் தரும்.

'காரிடாஸ் இந்தியாவின்' வெளிநாட்டு நன்கொடை அமைப்புகள், முதல் தவணையாக ஏற்கெனவே ரூ. 16 இலட்சம் வழங்கியுள்ளது.

### யூனிசெப் உதவி !

ஐ. நா. குழந்தைகள் நிதி (யூனிசெப்) ஆந்திரா, தமிழ்நாடு புயல் நிவாரணத்துக்கு உதவ உடனடியாக ரூ. 12.75 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது.

மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களுக்குத் துணி, கம்பளிகள், பாத்திரங்கள் போன்றவைகளை வாங்கி அனுப்ப இந்த நிதி பயன்படுத்தப்படும்.

### செஞ்சிலுவைச் சங்க உதவி

தமிழ்நாட்டில் உடனடி புயல் நிவாரணப் பணிக்காகப் பணமாகவும், பொருளாகவும் ரூ. 10 இலட்சம் வரை உதவி செய்ய இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம் (தேசியத் தலைமையகம்) உறுதி கூறியிருக்கிறது என்று சங்கத்தின் மாநிலக் கிளை வெளியிட்ட செய்திக் குறிப்பு கூறியது.

### பூடான் மன்னர் ரூ. 10 இலட்சம் உதவி !

தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க பூடான் மன்னர் திரு ஜிம்மி சிங்கே வாங்கக் அவர்கள், பிரதமர் நிவாரண நிதிக்கு ரூ. 10 இலட்சம் வழங்கியுள்ளார்.

### ஆகாகான் ரூ. 10 இலட்சம் உதவி !

தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் புயலினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க ரூ. 10 இலட்சம் நன்கொடையளிப்பதாக திரு ஆகாகான் அறிவித்துள்ளார்.

### 5 டன் கம்பளங்கள் உதவி!

தமிழ்நாட்டில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 5 டன் எடையுள்ள கம்பளங்களும் துணிகளும் இலண்டனிலிருந்து புதனன்று விமானம் மூலம் மீனம்பாக்கம் வந்து சேர்ந்தது. இலண்டனில் உள்ள ''முதியோருக்கு உதவும்'' நிறுவனம் இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளது. இந்த நிறுவனத்திலிருந்து வந்துள்ள குழுவின் தலைவர் திரு பிரான்சிஸ் சேவியர் அவர்கள் அப்பொருள்களைச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரதி வினேஜா அவர்களிடம் ஒப்படைத்தார்.

இந்த நிறுவனம் தற்போது முதியோர் விடுதிகளை நிறுவி நடத்துவதற்காகச் சென்னை, புதுச்சேரி, மதுரை ஆகிய இடங்களில் நிதி வசூலித்து வருகிறது.

### மத்திய நிலக்கரி நிறுவன ஊழியர்

சென்ட்ரல் கோல் பீல்ட்ஸ் ('கோல்') நிறுவனத்தின் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் அரைநாள் ஊதியம் தருவர். இதன் மூலம் ரூ. 11 இலட்சம் கிடைக்கும்.

மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளைக் கண்டறியத் தொழிற்சங்கத் தலைவர்கள் குழு ஒன்றையும் இந்த நிறுவனம் அனுப்புகிறது.

### நெல்லை மாவட்ட உதவி !

திருச்சி மாவட்டத்தில் கரூர், குளித்தலை நகர்களில் புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நெல்லை மாவட்டத்திலிருந்து ஒரு லாரி நிறைய ரூ. 80,000 பெறுமானமுள்ள வேட்டி, சேலைகள் 26-11-77 அன்று இரவு அனுப்பப்பட்டது.

நெல்லை மாவட்டம் உதவும் நான்காவது உதவி இது. அங்கிருந்து ஏற்கெனவே 12,000 வேட்டிகள், 12,000 சேலைகள் அனுப்பப்பட்டன. தஞ்சைக்கு 2 லாரியிலும், திருச்சிக்கு 2 லாரியிலும் இந்தப் பொருள்கள் போயுள்ளன.

### ஆஸ்திரேலியப் பிரதமர் உதவி !

பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்க ஆஸ்திரேலியப் பிரதமர் திரு மால்கம் பிரேஸர் 50,000 டாலர் நன்கொடை வழங்கியுள்ளார்.

* * * *

மகாராஷ்டிர அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் தங்கள் ஒரு நாள் ஊதியமான 7 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளனர்.

* * * *

திருச்சி கொதிகலன் ஆலை ஊழியர்கள் விடுமுறை நாளான ஞாயிறன்று வேலை செய்து, அதன் மூலம் கிடைத்த ஒரு நாள் ஊதியமான ரூ. 1.50 இலட்சத்தை வழங்கியுள்ளனர்.

* * * *

### காத்ரெஜ் அறக்கட்டளை

காத்ரெஜ் அறக்கட்டளை புயல் நிவாரண நிதிக்கு ரூ. 2 இலட்சம் வழங்கியது.

அபீஜே நிறுவனம் ரூ. 1.50 இலட்சம் கொடுத்தது.

மாண்புமிகு மேற்குவங்க முதல்வர் திரு ஜோதிபாசு அவர்கள் தமிழக முதல்வர் வெள்ள நிவாரண நிதிக்கு ரூபாய் ஒரு இலட்சம் அனுப்பி உள்ளார்.

குஜராத் முதல்வரும் ரூபாய் ஒரு இலட்சம் அனுப்பியிருக்கிறுர்.

### ஜைன சமூக உதவி

வர்த்தமான சேவா கேந்திரம் என்ற ஜைன சமூகசேவை நிறுவனம் இரண்டு மாநிலங்களுக்கும் ரூ. 2 இலட்சம் நிதி திரட்டி அனுப்ப முடிவு செய்துள்ளது.

### யு. எஸ். தூதர் உதவி

தன் வசமுள்ள 25,000 டாலர் முழுவதையும் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு உடனடியாக வழங்குவதாக யு. எஸ். தூதர் ராபர்ட் கொஹீன் அவர்கள் கூறினுர்.

* * * *

காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜ சுவாமி ஆலய அறங்காவலர்கள் ரூ. 1801 பெறுமானமுள்ள புடவைகளை வழங்கியுள்ளனர்.

## மேற்கு ஜெர்மன் உதவி ரூ. 77 இலட்சம் !

தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் ஏற்பட்ட புயல்-வெள்ள நிவாரணத்துக்காக மேற்கு ஜெர்மன் அரசாங்கம் ரூ. 77 இலட்சம் கொடுப்பதாக அறிவித்திருக்கிறது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களிடம் மேற்கு ஜெர்மனி தூதுவர் திரு டர்க் ஆங்கன் ரூ. 38,30,000-க்கான காசோலை ஒன்றை அளித்தார். சென்னையில் உள்ள மேற்கு ஜெர்மனி கான்ஸில்-ஜெனரல், உடனடி நிவாரணத்துக்காக ஆந்திராவுக்கு ரூ. 1,31,041, ம், தமிழ்நாட்டுக்கு ரூ. 60,521-ம் அளித்திருக்கிறார்.

## ஐ. நா. ஸ்தாபனம் 1.5 இலட்சம் டாலர் உதவி !

இந்தியாவில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஐ. நா. குழந்தைகள் ஸ்தாபனம் (யூனிசெப்) 12 ஆயிரம் போர்வைகள் மற்றும் சில சாதனங்களை வாங்கியிருப்பதாக அறிவித்தது.

புதுடில்லி, சென்னையிலுள்ள இந்த ஸ்தாபனப் பிரதிநிதிகளிடம் இதுபோன்ற பொருட்களை விலைக்கு வாங்க 25,000 டாலர் நிதி உள்ளது என்றும் தெரிவிக்கிறது.

இந்தியாவுக்கு உதவ 'யுனிசெப்' ஸ்தாபன நிர்வாக இயக்குநர் திரு ஹென்றி லாபாகி அவசர நிதியிலிருந்து 1,50,000 டாலர் அளித்தார்.

## பிரிட்டன் உதவி

தென்னிந்திய புயல் நிவாரணத்துக்கு வயோதிகர்களுக்கான பிரிட்டிஷ் அறக்கட்டளை 5,000 பவுன் நன்கொடை வழங்கியுள்ளது.

இலண்டனிலுள்ள ஜீவரட்சக சங்கம் 5,000 பவுன் மதிப்புள்ள மருந்துகளை அன்பளிப்பாக விமானம் மூலம் சென்னைக்கு அனுப்புகிறது. இதைத் தவிர கம்பளிகள் அனுப்பவும் ஏற்பாடாகி வருகிறது.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி

பல நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் இந்தியாவில் ஏற்பட்டுள்ள புயல் நாசத்துக்கு உதவ முன்வந்துள்ளதாக ஜினீவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இணைப்பு அலுவலகம் தெரிவிக்கிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர் ஒருவரும் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தமிழ்நாட்டின் கிளை, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு மாவட்டத்திலும் நான்கு கிராமங்களின் நிவாரணப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தஞ்சை, நாகப்பட்டினத்திற்கு அருகில் 4 மீனவ கிராமங்களை அது தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் செஞ்சிலுவைச் சங்கம் ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள பண்டங்களை நன்கொடையாக வழங்கியிருப்பதாக அதன் தமிழ்நாட்டுக் கிளையின் துணை தலைவர் ஜெனரல் திரு ராஜ் அவர்கள் தெரிவித்தார். 5 வாகனம் நிறைய குழந்தைகளுக்கான உணவு, பால் பவுடர், அரிசி ஆகியவை வந்து கொண்டிருக்கின்றன.

## குஜராத் அரசு ரூ. 3 இலட்சம் உதவி !

தமிழ்நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்திற்காக, குஜராத் மாநில அரசு ரூ. 1 இலட்சம் நன்கொடையை அளித்துள்ளது.

## மகாராஷ்டிர அரசு உதவி !

புயலினால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கு ரூ. 2 இலட்சமும், புதுச்சேரிக்கு ரூபாய் ஒரு இலட்சமும் உடனடியாக நிதி உதவி அளிப்பது என்று மகாராஷ்டிர அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

## 'காஸா' நிறுவன உதவி !

தமிழ்நாட்டிலும், ஆந்திராவிலும் புயலால் பாதிக்கப்பட்ட 50,000 பேருக்கு நிவாரணத்திற்கு சமூகப் பணிக்கான சர்ச்சின் துணை நிறுவனம் (காஸா) என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த ஏற்பாட்டின்படி தமிழ்நாட்டில் திருச்சி, மதுரை, தஞ்சை மாவட்டங்களில் 25,000 பேருக்கும், ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்தில் 25,000 பேருக்கும் 7 நாட்களுக்குச் சமைக்கப்பட்ட உணவு வழங்கப்படும். அத்துடன் 12,000 போர்வைகளும் தரப்படும். சுமார் ரூ. 4 இலட்சம் செலவில் இது நடக்கும்.

## 'கேர்' நிறுவனம் மூலம் 25,000 டாலர் உதவி :

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புயல் நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக 'கேர்' நிறுவனத்தின் சார்பாக 25,000 டாலருக்கு ஒரு காசோலையை அமெரிக்கத் தூதர் திரு இராபர்ட் கோஹீன் டில்லியில் அளித்தார்.

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகியவற்றில் ஸ்தல சமூக நலத்துறை மூலமாக 'கேர்' நிறுவனம் உதவி அளிக்கிறது. 'கேர்' நிறுவனம் 1,300 டன் உணவுப் பொருட்களைப் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உடனடியாக அனுப்புகிறது. தமிழ்நாட்டுக்கு உணவுப்பொருட்களும் ரூ. 3,40,000 பெறுமானம் உள்ள துணிகளையும் சம்பந்தப்பட்ட நிவாரணப்பொருட்களையும் 'கேர்' 'நிறுவனம்' வாங்கியிருக்கிறது.

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி ரூ. 10 இலட்சம் வழங்குகிறது !

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமிழக முதல்வர் திரட்டும் வெள்ள நிவாரண நிதிக்குத் தங்களது ஒரு நாள் ஊதியத்தை அளிக்கின்றனர்.

ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட இந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி தரும் தொகை 10 இலட்ச ரூபாய் ஆகும்.

## இந்துஸ்தான் லீவர் ரூ. 3 இலட்சம்

தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளில் உதவுவதற்காக ரூ. 3 இலட்சத்திற்கான காசோலை ஒன்றை 'இந்துஸ்தான் லீவர்' நிறுவனத்தின் தலைவர் திரு டி. தாமஸ், பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களிடம் வழங்கினார்.

## 'இந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ்'

ரூ. 25 இலட்சம் பெறுமான் பெனிஸிலின், ஸ்டிரெப்டோமைசின் மருந்துகளை 'பிம்ப்ரி' என்ற இடத்தில் உள்ள இந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் (அரசாங்க மருந்து உற்பத்தி) நிறுவனம் ஆந்திராவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. ஏற்கெனவே ரூ. 1.5 இலட்சம் பெறுமான மருந்துகள் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.





▲ மாண்புமிகு இந்திய அரசின் பெட்ரோலிய-இரசாயனத்துறை அமைச்சர் திரு பகுகுணா அவர்கள், தமிழக புயல்-வெள்ள நிவாரணத்திற்காக, 'இந்தியன் பார்மசூட்டிகல் லிமிடெட்', 'இந்தியன் ஆண்டிபயாடிக் லிமிடெட்' ஆகியவற்றின் சார்பில், ரூபாய் 5 இலட்சம் மதிப்புள்ள மருந்து வகைகளை வழங்கும் முகத்தான், மருந்துகள் அடங்கிய ஒரு அடையாளப் பெட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் வழங்கினார்.

# பொருள் குவிகிறது!



▲ 'கேர்' நிறுவனத்தின் தமிழகக் கிளை நிர்வாகி திரு ஜேம்ஸ் லோரி அவர்கள், 'கேர்' நிறுவனத்தின் சார்பாக ரூபாய் 57,60,397 மதிப்புள்ள உணவுப் பொருள்களை வழங்கும் முகத்தான், உணவுப் பொருள்கள் அடங்கிய ஒரு அடையாளப் பெட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்



சென்னை மலர்வியாபாரிகள், கமிஷன் ஏஜெண்டுகள் சங்கத்தின் சார்பில் ரூபாய் 10,100 மதிப்புள்ள 1,001 ஆடைகள் வழங்கினர்.



தமிழ்நாடு முதல்வர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களிடம் இந்தியன் வங்கித் தலைவரும், நிர்வாக இயக்குநருமான திரு எம். வி. சுப்பாராவ் ரூ. 3 இலட்சத்துக்கான காசோலை ஒன்றை வழங்கினார். முதலமைச்சர் வெள்ள நிவாரண நிதிக்காக இந்தியன் வங்கி சார்பில் இந்தத் தொகை அளிக்கப்பட்டது.





# நிதி குவிகிறது!





## வெள்ளம் வடிந்து விட்டது!
## கண்ணீர் வடிவது நிற்க வில்லை!!
## அந்தக் கண்ணீரைத் துடைப்பது
## நம் கடமையல்லவா?

ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று புயல்கள் தோன்றி
தமிழகத்தை வெள்ளக் காடாக்கி விட்டன!
அந்த வெள்ளத்தினால்,
உற்றார் உறவினரை இழந்து
வீடுகளை இழந்து,
மாடுகளை இழந்து,
ஆடுகளை இழந்து,
அறுவடைக்குத் தயாராய் இருந்த பயிரையும் இழந்து
இலட்சக்கணக்கானோர் தேம்பி அழுகின்றனர்!



தேம்பி அழுவோரின் கண்ணீரைத் துடைப்பதற்காக,
தமிழ்நாடு அரசு, துயர்துடைப்புப் பணிகளைப்
'போர்க்காலப் பணிகளைப் போல்' விரைவாகச்
செயல் படுத்தி வருகிறது. மைய அரசும்
தாராளமாக நிதி உதவுவதாக உறுதியளித்துள்ளது.
ஆயினும், நம் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களுக்கு
உதவுவது நம் கடமையல்லவா?

அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்றவர்களின்
கண்ணீர் நிற்க வேண்டுமானால், அவர்களின்
வேதனைகளை விரைந்து தீர்த்திட வேண்டும்!



வேதனைகளை விரைவாகத் தீர்த்திட வேண்டுமானால்,
துயர்துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால்
அனைவரும் மனமுவந்து நிதியளித்திட வேண்டும்!

**எனவே,**
**பேரன்பு மிக்கோரே! பெற்ற தாய்மாரே!!**
**நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர்!**
**நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்!!**
**உடல்வலிவுள்ளோர் உழைப்பினைத் தாரீர்!**
**ஏனையோரெல்லாம் இயன்றதைத் தாரீர்!!!**

## தருவீர்! ஒரு நாள் ஊதியம்!

## தொழிலாளத் தோழர்களுக்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுகோள்!

வெள்ளத்தினாலும், புயலினாலும் தவிப்பவர்களுக்கு உதவ, தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தொழிலாளர்களும், கட்சி வேற்றுமையின்றி, ஒரு நாள் ஊதியத்தை அளிப்பது என்று தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்துக் கட்சித் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம், **20-11-1977** அன்று சென்னையில் நடந்தது.

கூட்டத்துக்கு மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு அமைச்சர்கள் திரு மனோகரன், திரு பொன்னையன், திரு இராகவானந்தம், தொழிலாளர் நலத்துறைச் செயலாளர் திரு இராமச் சந்திரன், தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் திரு கமல ரத்தினம், கூட்டு ஆணையாளர் திரு எஸ். நரசிம்மன் ஆகியவர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

(1) ஐ.என்.டி.யூ.சி.

(2) ஏ. ஐ. டி. யூ. சி.

(3) உழைக்கும் மக்கள் மாமன்றம்

(4) சி.ஐ.டி.யூ.

(5) அண்ணா தொழிற்சங்கப் பேரவை

(6) ஐக்கிய தொழிற் சங்க காங்கிரஸ்

(7) தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ்,

(8) தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை

(9) ஹிந்த் மஜ்தூர் சபா

ஆகிய 9 தொழிற் சங்கத் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு பி. ராமமூர்த்தி

திரு ஆர். உமாநாத்

திரு வி.பி. சிந்தன்

திரு கே. எம். சுந்தரம்

திரு ஏ. எம் கோபு

திரு கே. டி. கே. தங்கமணி

திரு ஆர். ரங்கராஜன் குமாரமங்கலம்

திரு எஸ். சி. சி. அந்தோணிப் பிள்ளை

திரு ஆர். குசேலர்

திரு ஆர். ராமநாதன்

திரு ஏ. நல்லசிவம்

திரு வை. பெருமாள்

திரு கே. எஸ். நாராயணன்

திரு சி. குப்புசாமி

ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் புயலினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட சேதங்கள் பற்றிக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின :—

''தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயலும், வெள்ளமும் ஏற்படுத்தியுள்ள உயிர்ச்சேதமும் உடைமை நட்டமும், வரலாற்றில் கண்டிராததாகும்.

''தமிழகத்திற்கு இயற்கையின் சீற்றத்தால் நேர்ந்துள்ள இந்தக் கடும் சோதனையைச் சமாளிக்க, மத்திய மாநில அரசுகள் எடுத்து வரும் முயற்சிகளுக்குத் தொழிலாளத் தோழர்கள் தங்கள் பங்கைச் செலுத்த முன் வருவது சீராக் கடமை என்று நாங்கள் உணருகிறோம்.

''மாநிலத்தில் உள்ள தொழிலாளர்களும், ஊழியர்களும், சங்க வேற்றுமைகளைப் பாராமல் வாராந்திர விடுமுறை நாளில் வேலை செய்து, அதனால் கிடைக்கும் ''ஓவர் டைம்'' முழு ஊதியத்தையும், தமிழக முதல்வரின் நிவாரண நிதியில், சேர்க்க முன் வர வேண்டும். இதற்குக் கம்பெனி நிர்வாகங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

''வாராந்திர விடுமுறை இல்லாத தொழிற்சாலைகளில், பணிமனைகளில், ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்கள், ஒரு நாள் சம்பளத்தை உடனடியாக முன் பணமாக நிவாரண நிதிக்கு வழங்க வேண்டும்.

''நிவாரணப் பணியின் அவசர அவசியம் கருதி, ஊழியர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்து கொள்வதை எதிர்பார்த்து, உடனடியாக ஊதியத் தொகையைச் சேர்த்து முதல்வரின் நிவாரண நிதிக்கு வழங்க நிர்வாகங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

பாங்கி, ஆயுள் இன்சூரன்சு போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும், மத்திய, மாநில அரசு ஊழியர்களும், தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அனைவரும், இதே முறையில் உதவி செய்ய வேண்டும் எனக் கோருகிறோம்.''

மேற்கண்டவாறு தீர்மானத்தில் கூறப்பட்டு உள்ளது.

### உலகத் தொழிற்சங்க சம்மேளனம் 10,000 டாலர் உதவி:

உலகத் தொழிற்சங்க சம்மேளனம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10,000 டாலர் நன்கொடையை அளித்துள்ளது.

### கர்நாடக அரசு தொழிலாளர்கள் அளிக்கும் உதவி

தமிழ்நாடு, ஆந்திராவில் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்க கர்நாடக அரசு தொழிலாளர் இலாகா அதிகாரிகாரிகள், ஊழியர்கள் ஒரு நாள் ஊதியத்தை வழங்க 26-11-77-ல் முடிவு செய்தனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.







# தமிழரசு

16-12-1977 50 காசு.

# அரசு-மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலையால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ARASU CEMENT
TIDCO

### தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** -வலிவும் வனப்பும் வாய்ந்தது


# தமிழரசு


16—12—1977

மலர்: 8 இதழ்: 12


## இந்த இதழில்...


| | பக்க எண் |
|---|---|
| சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார். | 2 |
| ராஜாஜியின் கனவை நனவாக்குவோம்!.. | 4 |
| மதுவிலக்கைத் தீவிரப் படுத்தி மகிழ்ச்சி நிலவச் செய்வோம்! ... | 9 |
| மகாகவியின் மகத்துவம் ... | 12 |
| மகாத்மாவின் மனச்சாட்சிக் காவலர்... | 15 |
| நாடகத்திற்கு ஒரு சங்கரதாசர் ... | 17 |
| சாலை விபத்துக்கள்! ... | 20 |
| படமும் செய்தியும் ... | 2 |
| இராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது ! ... | 27 |
| துண்டிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்புகள் துரிதமாகச் சீரமைக்கப்பட்டன! ... | 28 |
| இரயில்வே துறையினர் இரவு பகல் பாராது பாடுபட்டு, இரயில் போக்குவரத்தை மீண்டும் துவக்கினர்!... | 29 |
| அழகைக் காட்டும் கண்ணாடி! ... | 31 |
| மனித உரிமைகள் ... | 33 |
| கண்களைக் குளமாக்கும் கதைகள்! ... | 30 |
| தமிழ்நாட்டு அறிவு! ... | 41 |
| நிதி குவிகிறது! ... | 45 |
| எதிர்காலச் சமுதாயம் சீரோடும், சிறப்போடும் வாழ ஒன்றுபட்டு உழைக்க முன்வருவீர்! ... | 47 |


## கல்வி நிலையங்களில் வள்ளுவர் பெரியார் அண்ணா ராஜாஜி காமராஜ் உருவப் படங்கள்!

மறைந்த தமிழகத் தலைவர்களின் உருவப்படங்களைக் கல்வி நிலையங்களில் வைப்பது பற்றி அரசு பரிசீலித்து கீழ்க் குறிப்பிட்ட தலைவர்களின் படங்களை எல்லாக் கல்வி நிலையங்களிலும் வைக்கலாம் என்று முடிவு எடுத்துள்ளது.

**திருவள்ளுவர்**
**பேரறிஞர் அண்ணா**
**கே. காமராஜர்**
**ராஜாஜி**
**தந்தை பெரியார்**

இவர்களின் உருவப் படங்களை வைக்கலாம்.

கல்வி நிலையங்களில் வைக்கப்படும் இந்தப் படங்கள் எல்லாம் ஒரே அளவில் இருக்க வேண்டும். இதற்கு முன்பு ஏதேனும் படங்கள் இருந்தால் அந்தப் படங்களின் அளவுக்கு இந்தப் படங்களும் இருக்க வேண்டும். பொதுத்துறை அங்கீகரித்த படங்களையே வைக்க வேண்டும்.

## "தமிழரசு" வாசகர்களுக்கும் ஏஜெண்டுகளுக்கும் முக்கிய அறிவிப்பு!

அடுத்த இதழ் முதல் வாசகர்களின் வேண்டுகோள்களுக்கு ஏற்ப, கேள்வி-பதில் பகுதியையும், அனைத்துத் துறைகளைப் பற்றிய செய்திகளையும் தாங்கி, அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் அரிய படைப்பாகத் "தமிழரசு" வெளிவரவிருக்கிறது. மேலும் "தமிழரசு" இதழ்களைக் காலதாமதமின்றி, குறிப்பிட்ட தேதியில் வெளியிடவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

எனவே, தமிழரசு வாசகர்களும், ஏஜெண்டுகளும் "தமிழரசு" இதழின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.



# சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

## ( 1878-1972 )

"ராஜாஜி" என அன்போடு அழைக்கப்படும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் 1878ல் தமிழ்நாட்டில், தற்போது தர்மபுரி மாவட்டத்திலுள்ள தொரப் பள்ளி என்னும் கிராமத்தில் பிறந்தார். அவர் பெங்களூர் சென்ட்ரல் காலேஜிலும், சென்னை சட்டக் கல்லூரியிலும் படித்தார். 1900ல் தொடங்கி 1919 வரை சேலத்தில் வக்கீல் தொழில் நடத்தினார். 1906 முதற் கொண்டே சுதந்தர இயக்கத்தோடு அவரது ஈடுபாடு தொடங்கியது. ஆனால் நாட்டுக்குத் தீவிரப் பணி புரிய வேண்டுமென்ற வேகம் வளர்ந்து, அவர் வக்கீல் தொழிலைத் துறந்து, காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்தில் 1919ல் சேர்ந்து, 1920ல் தேசியப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

ராஜாஜி 1921ல் இந்திய தேசிய காங்கிரசின் காரியதரிசியாகவும், பின்னர் 1922 முதல் 1942 வரையிலும், 1951 முதல் 1954 வரையிலும் காரியக் கமிட்டி உறுப்பினராகவும் இருந்தார். 1921—42 காலத்தில் அவர் சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்ட காரணத்துக்காக, 6 முறை சிறைப் படுத்தப்பட்டார். காங்கிரஸ் தலைவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர் 1942 ஏப்ரலில் காங்கிரசிலிருந்து விலகினார். 1930ல் அவர் இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் (Prohibition League of India) காரியதரிசியாகப் பணியாற்றினார். 1937 முதல் 1939 வரை அவர் சென்னை ராஜதானியின் பிரதமராக இருந்தார். சில ஆண்டுகள் அவர் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபையின் உபதலைவராகவும் இருந்துள்ளார். 1944-ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி காலஞ் சென்ற ஜின்னா அவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது ராஜாஜி பெருந் துணை புரிந்தார். 1946—47ல் ஏற்பட்ட இடைக் கால மந்திரி சபையில் அமைச்சராகவும் ஆகஸ்டு 1947 முதல் ஜூன் 1948 வரை மேற்கு வங்காளத்தின் கவர்னராகவும் இருந்தார்.

ராஜாஜி 1947ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தற்காலிக கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றினார். பின் ஜூன் 1948 முதல் ஜனவரி 1950 வரை முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகப் பணிபுரியும் பெருமை பெற்றார். அவர் ஆற்றிய நாட்டுப் பணிகளுக்காக அவரைக் கௌரவிக்கும் முறையிலும் அவரது திறமைகளைப் பாராட்டும் முறையிலும் நாடு இந்த உயர் பதவியை அன்னாருக்கு அளித்தது. இதன் பிறகு அவர் 1950 ஜூலை முதல் டிசம்பர் வரை மத்திய மந்திரி சபையில், இலாகா இல்லாத மந்திரியாகவும் 1950—51ல் உள் துறை அமைச்சராகவும், பிறகு 1952—54ல் சென்னை மாகாணத்து முதலமைச்சராகவும் பணி புரிந்தார். அவர் ஆற்றிய ஒப்பற்ற சேவைகளுக்காக 1954ல் அவருக்கு நாட்டின் தலை சிறந்த 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது.

உலக அமைதியில் பெரும் நாட்டங் கொண்ட ராஜாஜி அணு குண்டுச் சோதனைகளைத் தாட்சண்யமின்றிக் கடுமையாகக் கண்டித்து வந்தார். அதற்காகவே தீவிர இயக்கம் நடத்தி வந்தார். அணு ஆயுதங்களை ஒழிக்க ஆதரவு தேட காந்தி அமைதி இயக்கத்தின் (Gandhi Peace Foundation) சார்பில் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட தூதுக் குழுவின் முக்கியமானவராக அவர் சென்றார். ஆன்மீகம், அற நெறியில் ஆழ்ந்த அவர் மனமும் உலக மக்களின் நலனில் அவர் கொண்ட தணியா ஆர்வமுமே இந்த அணு குண்டு எதிர்ப்பாக அவரிடம் வெளிப்பட்டது.



வங்களே அவர் வாழ்க்கையின் நெறிகளாக இருந்தன. அவர் எழுதியுள்ள எல்லா நூல்களும் குழப்பங்கள் நிறைந்த உலகுக்கு அறவழி காட்டுபவைகளாக உள்ளன. உலகாயதத் தத்துவத்தின் வழி நிற்கும் நாகரிகம் அழிவு நோக்கிச் செல்லும் என உறுதியாக நம்பிய அவர், அறவழியில் வாழ்ந்தால்தான் என்றும் நிலைத்து நீடிக்கும் நாகரிகத்தை உருவாக்க முடியும் என்று கூறி வந்தார்.

ருக்குப் பெரும் ஊக்கமூட்டக் கூடியது.

காந்தியடிகள் சிறையிலிருந்த சமயத்தில் ராஜாஜி அவரது 'யங் இந்தியா' பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். 'ஸ்வராஜ்யா' பத்திரிகையில் பிரதானமாக எழுதி வந்தவரும் அவரே. தன் மதி நுட்பத்தால் அவர் எந்தச் சிக்கலான பிரச்சினை தோன்றும்போதும் அதனைத் தீர்க்க வழி சொல்

அவர்கள் தம் சுய சரிதையில் "அவரது (ராஜாஜியின்) அறிவும் தன்னலமற்ற தன்மையும் பிரச்சினைகளை ஊடுருவிப் பார்த்து ஆராயும் திறமையும் எங்களுக்கு என்றுமே பெரும் மூலதனமாகப் பயன்பட்டன" எனக் கூறியுள்ளார்.

1972 டிசம்பர் 25ல் அவரது மறைவில் நாம் பெரும் அறிவாளியையும், தேச பக்தரையும், ராஜதந்திரியையும் இழந்தோம். எனினும் அவர் வழங்கிச் சென்ற கருத்துக்கள் இன்றும் நமக்கு வழி காட்டி உதவுகின்றன.

மூதறிஞர் ராஜாஜி அவர்களின் பிறந்த வீடு (தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்ற ஊரில் உள்ளது).



ராஜாஜி எழுதியுள்ள மார்க்கஸ் அரேலியஸ், சாக்ரடீஸ், வேதாந்தம், பகவத் கீதை, உபநிஷதங்கள், வாய்ஸ் ஆஃப் தி அன்இன்வால்வுட் ( Voice of the Uninvolved ) கம்பராமாயண—அயோத்தியா காண்டம் ஆகிய நூல்கள் பொக்கிஷங்களாகும். இராமாயண, மகா பாரத நூல்கள் நேர்த்தியும் நயமும் நிரம்பியவை. 'Hinduism Doctrine and way of Life' என்ற நூல் அவரது வேதாந்தம் என்ற நூலின் விரிவான விளக்கமே. இது பிற நாட்டு மேதாவிகளால் மிகவும் பாராட்டப்படுகிறது. இதுவரை நம் மனித குலத்தைக் காப்பாற்றி வந்துள்ள ஆதார நம்பிக்கைகளுக்கும் சிலங்களுக்கும் பின்னணியாக நிற்கும் வேதாந்த உண்மைகள், அறநெறிகள் ஆகியவற்றைச் சிரத்தையுடன் கடைப்பிடித்தாலன்றித் தற்கால நெருக்கடிகள் மனிதவர்க்கத்தையே நிர்மூலமாக்கிவிடும். இந்நூலின் அடிப்படைக் கருத்து அற வழிப்பட்ட நாகரிகத்தை



சென்னையில் உள்ள ராஜாஜி நினைவாலயம்

# ராஜாஜியின் கனவை நனவாக்குவோம்!

மாண்புமிகு
தமிழக முதலமைச்சர்
திரு எம்.ஜி.ஆர். அவர்களின்
உரை

"தன் மனதில் தோன்றுவதை வெளிக் காட்டி அதைச் செயல்படுத்தப் பின்வாங்கு பவன் பொறுப்பேற்கத் தகுதியற்றவன்" என்று மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சொன் ஞர்கள்.

"ராஜாஜி அவர்களின் நேர்மையைப் பற்றியும், நிர்வாகத் திறனைப் பற்றியும் இங்கே பேசியவர்கள் சொன்னார்கள். யாருக்கும் அஞ்சாமல்—விட்டுக்கொடுக்காமல்—கருத்தை எடுத்து வைப்பதில் வல்லவர் ராஜாஜி அவர் கள்.

"அதுபோல என் உள்ளத்தில் எழுந்த கருத்தைச் சொல்வது அவரைப் பின்பற்றுகிற நீங்களும்—மேடையிலே அமர்ந்திருப்பவர் களும்—விரும்புவார்கள் என்று நம்புகிறேன்.

**யாருக்காக உழைத்தார்?**

"ஒரு முறை ராஜாஜி அவர்கள் டெல்லி யில் ஒரு கூட்டத்தில் பேசியபோது, அசம்பா வித நிகழ்ச்சி ஒன்று நடந்தது. மரியாதை தெரியாத ஒருவன்—இங்கிதம் தெரியாத ஒருவன்—பெரியவர்களை மதிக்கத் தெரியாத ஒருவன்—அழுகிய கோழி முட்டையை அவர் மீது எறிந்துவிட்டான்.

"அந்த அழுகிய கோழி முட்டை அவர் சட்டையில் பட்டுவிட்டது. ஆத்திரப்படாமல் துடைத்துக் கொண்டார். அப்போது அவர், "நான் எதற்காகப் பாடுபடுகிறேன், உழைக் கிறேன் என்றால், இப்படிப்பட்ட அழுகிப் போனவர்களின் உள்ளத்தைத் திருத்த வேண் டும் என்பதற்காகத்தான்" என்றார்.

"ராஜாஜி அவர்களின் பணிகளை எண்ணி, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள் கைகளை நிறைவேற்ற செயல்பட்டு வருகிறேன் என்பதில் பெருமைப்படுகிறேன்.

"மக்கள் நாணயமாக வாழ வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் விரும்பினார்கள். மக்கள் நாணயமாக வாழ்வதற்குப் பாதுகாப்புத் தர வேண்டியது அரசின் கடமை என்பதை நான் உணருகிறேன்.

"இங்கே பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கங் களும், புத்தகங்களும் வழங்கப்பட்டதைப் பார்த்தீர்கள்.

"எதற்காக இவைகள் எல்லாம் வழங்கப் படுகின்றன. இவர்களின் பேரன், பேத்திகள் இவர்கள் பெற்ற பரிசுகளைப் பார்க்கும்போது, மூதறிஞர் ராஜாஜியின் 100-வது பிறந்த நாள் விழாவில் பெரியவர்கள் மற்றும் ஆளுநர் முன் னிலையில், முதலமைச்சர் வழங்கினார் என்ற செய்தியைப் பார்க்கும்போது அவர்களுக்குப் பெருமையாக இருக்கும்.

"அதற்கு மாறாகத் தனது தாத்தா வெடி குண்டு வைத்தார்; தீ வைத்தார்; பஸ்ஸைக் கொளுத்தினார்; கல்லெறிந்து பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தினார்; பெண்கள் என்று பாராமல் கல்லெறிந்து அவர்களைக் காயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார் — கொலை முயற்சியில் ஈடுபட்டார் என்ற செய் தியைப் பார்ப்பார்களேயானால், அவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க —அவர்கள் ஆக்க முயற்சியில் ஈடுபட — ஊக்கம் அளிக்கும் பணியில் அனைவரும் ஈடுபட —வேண்டுகிறேன்.

**"இன்றைக்கு மூதறிஞர் ராஜாஜி அவர் களை எதற்காகப் பாராட்டுகிறோமோ, அந்த மூதறிஞர் பிறந்த நாட்டில், நாட்டின் முன் னேற்றத்திற்காக யார் தடையாக இருந்தாலும்**






**முதன் முதலாக நல்லவை யாவும் முயன்று முடிக்கும் தமிழ்நாடு அரசு, மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 100-வது பிறந்த நாள் விழாவை, 8-12-1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில் முதன்முதலாக அரசின் சார்பில் கொண்டாடியது. அவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.**

**—அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந் தாலும்—அவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள்.**

"ஆட்சியில் இருக்க உரிமை வழங்கும் மக்கள் நம்பிக்கையைப் பெற்ற மூதறிஞர் ராஜாஜி அவர்கள், நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் செயல்பட்டார் கள்.

**மக்களுக்குத் தொண்டு செய்யவே தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்!**

"ராஜாஜி அவர்கள் பதவிக்குச் சென்று சட்ட மன்றத்தில் பேசும் போது ஒன்றை அடிக்கடி... குறிப்பிடுவார்கள் என்பதை நான் கூறியிருக்கிறேன்.

"நான் தொலைநோக்குப் பார்வையோடு 100 ஆண்டுகளுக்குப் பயன்படும் திட்டத்தைப் போடுகிறேன். ஆனால், அதே நேரத்தில் அடுத்த வினாடி பதவி விலக ராஜினாமாக் கடி தத்தைச் சட்டைப் பையில் வைத்திருக்கி றேன்" என்று குறிப்பிடுவார்கள்.

"மாஜிஸ்திரேட்டாக இருந்து, நீதிபதி யாக, உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெறுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

**"மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இந்தி யாவின் முதல் கவர்னர் ஜெனரலாக, உயர்ந்த பதவியில் இருந்தவர். ஆனால் ராஜாஜி அவர்கள் உயர்ந்த பதவி, சின்னப் பதவி என்று கணக்குப் பார்க்காமல், மக்களுக்குத் தொண்டாற்றுவதில் தனது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டார்.**

"இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனர லாக இருந்த ராஜாஜி அவர்கள் மேற்கு வங்கத் தின் கவர்னராக இருந்தும் பணியாற்றி இருக் கிறார்கள்.

"அதற்குப் பிறகு, தமிழகத்தில் பல மா நிலங்கள் ஒன்றாக இருந்த சென்னை மாநிலத் தில், காங்கிரஸ் கட்சியில் சட்டமன்ற உறுப் பினர்கள் குறைவாக இருந்த நேரத்தில், காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக—வேறு கட்சி ஆட்சிக்கு வரு வதைத் தடுப்பதற்காக—முதலமைச்சர் பதவி யை ஏற்றுக் கொண்டார்.

'அப்போது திறமையான நிர்வாகத்தால், தூய்மையான ஆட்சியை நடத்தினார். தனக்கு கெட்ட பெயர் வரும் என்று கருதாமல் மக்கள் நலத்துக்காகத் துணிச்சலோடு செயல்பட்டார். கட்சி நலன் கருதாமல், பொதுமக்களின் நலனையே முக்கியமாகக் கருதிச் செயல்பட் டார்.

**ராஜாஜி கண்ட கனவை நனவாக்குவோம்!**

"தமிழகத்தில் மீண்டும் உண்மையான மதுவிலக்குக் கொண்டு வர வேண்டும் என்று ராஜாஜி அவர்கள் கூறினார்கள். ராஜாஜி அவர்கள் கண்ட கனவை நனவாக்க மதுவிலக்கு கண்டிப்பாக அமல் நடத்தப்படும்.

"உறவு, கட்சி, ஜாதி, மதம், வசதி படைத்தவர்கள், வேண்டியவர்கள் என்று எதைப் பற்றியும் பாராமல், ராஜாஜி அவர்களின் கொள்கையான மதுவிலக்கு அமல் நடத்தப்படும்.

"மூதறிஞர் ராஜாஜி, பேரறிஞர் அண்ணு ஆகியோரின் கொள்கையை நிறைவேற்ற எது குறுக்கே நின்ருலும் அது அகற்றப்படும்.

**ராஜாஜிக்குச் சிலை வைப்போம்!**

*"மூதறிஞர் ராஜாஜியின் 101வது பிறந்த நாள் விழாவில் ராஜாஜியின் திருவுருவச் சிலை சென்னை பாரி முனையில் வைக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.*

*"மூதறிஞர் ராஜாஜி அவர்கள், தியாகத்தால்—அறிவாற்றலால்—மக்கள் தொண்டால்—உயர்ந்து நின்ருர். அவரின் அறிவாற்றலை உலகம் போற்றியது. அவருக்குச் சிலை வைப்பது பொருத்தமானது என்று கருதுகிருேம்.*

*"சென்னை நகரமே விழாக் கோலம் பூண்ட நகரமாக அமையும் விதத்தில் ராஜாஜி சிலை திறப்பு விழா கோலாகலமாக நடைபெறும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*[மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னை ராஜாஜி மண்டபத்தில் 8—12—'77 அன்று நடைபெற்ற ராஜாஜியின் 100-வது பிறந்த நாள் விழாவில், மூதறிஞர் ராஜாஜியின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரையில் சில பகுதிகள்.]*

## முதன் முதலில் மதுவிலக்குத் திட்டத்தைச் செயல் படுத்தியது தமிழ்நாடே!

இந்தியாவில் முதன் முதலாகக் கள்ளை ஒழித்தது தமிழ்நாடு தான். 1938-ஆம் ஆண்டில், சென்னை மாநில முதலமைச்சராகப் பதவி ஏற்ற திரு இராஜாஜி அவர்கள், முதன் முதலாகச் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்குத திட்டத்தைச் செயல்படுத்தினர்.

## ராஜாஜி அஞ்சல் தலை

ராஜாஜியின் நூற்ருண்டு விழா நினைவாக அஞ்சல் தலை வெளியிடுவது என்றும், டெல்லி நாடாளுமன்ற மைய மண்டபத்தில் ராஜாஜியின் முழு உருவப் படம் வைப்பது என்றும் ராஜாஜி நூற்ருண்டு விழாக்குழு முடிவு செய்திருக்கிறது.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சஞ்சீவரெட்டி அவர்கள் தலைமையில் ராஜாஜி நூற்ருண்டு விழாக் குழுவினரின் கூட்டம் நடந்தது. நாட்டின் சுதந்திரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் சிறந்த சேவை செய்பவர்களுக்கு, ராஜாஜி அவர்களின் நினைவுப் பரிசாக ஆண்டுதோறும் ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள விருது அளிப்பது என்றும், சென்னையில் ராஜாஜியின் நினைவாக நூல் நிலையம் ஒன்று அமைப்பது என்றும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## ராஜாஜி பிறந்த வீடு நினைவுச் சின்னம் ஆக்கப்படும்!

ராஜாஜி பிறந்த வீடு நினைவுச் சின்னமாக்கப்படுகிறது.

தர்மபுரி மாவட்டம், தொரப்பள்ளி என்ற ஊரில் ராஜாஜி பிறந்த வீடு உள்ளது. அந்த வீட்டை அரசாங்கம் விலைக்கு வாங்கி அதைப் பராமரிக்கும் பொறுப்பைப் பொதுப்பணித் துறைக்கு விட்டு இருக்கிறது.

பழைமை வாய்ந்த அந்த வீட்டைச் சீர்ப்படுத்தி, அதை ஒரு நினைவுச் சின்னமாக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

விரைவில் அங்கு ஒரு நூல் நிலையம் அமைக்கப்படும். அதில் பெரும்பாலும் ராஜாஜி எழுதிய நூல்களே இடம் பெறும்.

இது தவிர வீட்டின் உட்புறச் சுவர்களில் ராஜாஜியின் பொன்மொழிகள் பொறிக்கப்படும்.

ராஜாஜியின் நூற்ருண்டு விழாவையொட்டி ராஜாஜி பிறந்த வீட்டில் நடந்த விழாவில் பேசும்போது, இந்தத் தகவலைத் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. ரங்காராவ் அவர்கள் தெரிவித்தார்.



## தமிழகத்தின் பெருமையை உலகில் உயர்த்தியவர்!

*"ராஜாஜியின் பிறந்தநாள் விழா இன்று (8-12-1977) தமிழக அரசின் சார்பில் கொண்டாடப்படுகிறது.*

*"அடுத்த ஆண்டு நூருவது ஆண்டு நிறைவு நாள் வருகிறது. அதுவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.*

*"புரட்சித் தலைவர் முதல்வராக வந்தவுடன், தமிழகத்தில் பிறந்த அறிஞர் பெருமக்களுக்கு அரசின் சார்பில் விழா நடத்தப்படும் என்று அறிவித்தார்.*

*"அதன் அடிப்படையில் பேரறிஞர் அண்ணு பிறந்தநாள், கவிபாரதி, முத்துராமலிங்கத் தேவர், வ. உ. சி. ஆகியோரின் பிறந்தநாட்கள் கொண்டாடப்பட்டன.*

"தமிழகத்தின்-இந்தியத் துணைக் கண்டத்தின்-பெருமையை உலகில் உயர்த்தியவர் மூதறிஞர் ராஜாஜி! அண்ணுவால் பாராட்டப்பட்ட மூதறிஞரின் பிறந்தநாள் விழாவை அரசு நடத்துகிறது.

*"ஒரு நாட்டின் பெருமை அதன் நீள அகலத்தைப் பொறுத்து இருப்பதில்லை. அங்குள்ள அறிஞர் பெருமக்களை பொறுத்து தான் அதன் பெருமை இருக்கும்!*

*"இந்த நாட்டின் பெருமையை உயர்த்திய ஆற்றல்மிக்க தலைவர்களுள் ராஜாஜி ஒருவர்.*

*"இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகளின் தொண்டராக-தோழனுக-விளங்கிஞர். காந்தியடிகளுக்குச் சங்கடம் வந்தபோது எல்லாம், உற்ற துணையாக இருந்து நல்ல ஆலோசனை வழங்கியவர். விடுதலைப் போராட்டத்தில் மாபெரும் சக்தியாக விளங்கியவர்.*

*"வெள்ளைக்காரர்களுக்குச் சவால் விடும் வகையில் ஆற்றல் மிக்கத் தலைசிறந்த நிர்வாகியாக விளங்கிஞர்.*

*"கருத்து வேறுபாடு கொண்ட நேரத்திலும் எதிர்ப்புக்கு அஞ்சித் தனது கருத்துக்களைச் சொல்லத் தயங்கியதில்லை.*

*"தவறுகளைச் சுட்டிக்காட்டவும் தயங்கியதில்லை. ஆட்சிக்கு முன் மாதிரியாக விளங்கிஞர்.*

"அரசியலில் தூய்மை-ஒழுக்கம்-நியாயம் வேண்டும் என்ருர். இலஞ்ச-லாவண்யம் அற்ற நிர்வாகம் நடத்திக் காட்டியவர் ராஜாஜி."

*[மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், சென்னை ராஜாஜி மண்டபத்தில் 8-12-1977 அன்று நடைபெற்ற ராஜாஜியின் 100-வது பிறந்த நாள் விழாவில் ஆற்றிய வரவேற்பு உரையில் இருந்து தொகுக்கப்பட்டது.]*

## மனித உணர்ச்சிகளின் பாதுகாவலன்!

*"இந்தியத் துணைக்கண்டத்தின் தேசிய விடுதலை வரலாற்றில், ராஜாஜியின் வாழ்க்கை பின்னிப் பிணைந்து இருக்கிறது.*

*"ராஜாஜி தமிழகத்திற்கு மட்டும் சொந்தமானவர் அல்ல! மனிதாபிமான உணர்வின் பிரதிபலிப்பாக இருந்தார்! மனித உணர்ச்சிகளின் பாதுகாவலனுக இருந்தார்!*

*"எதிர்ப்புகளுக்கு அஞ்சாதவர். எதிர் நீச்சல் போட்டே வாழ்க்கை நடத்தியவர்; தீர்க்க தரிசனம் கொண்டவர்.*

*"ராஜாஜியின் 100-வது பிறந்தநாளை சர்வதேச மனித உரிமை ஆண்டாகக் கொண்டாட வேண்டும்."*

—பிரபுதாஸ் பட்வாரி,
தமிழக ஆளுநர்.

## சிறந்த சமூக சீர்திருத்தவாதி!

*"தலைசிறந்த தேசியத் தலைவர்களில் ஒருவராக ராஜாஜி விளங்கிஞர். அவருக்குத் தமிழக அரசு விழா எடுப்பதைப் பாராட்டுகிறேன். "ராஜாஜி அவர்கள் ஒரு சிறந்த சமூக சீர்திருத்தவாதி. மகாத்மா காந்தியடிகளின் பிரதம சீடராக இருந்தார்.*

*"மதுவிலக்கில் தீவிரமாக இருந்தார்; தலைசிறந்த பார்லிமெண்டேரியன்.*

*"நிர்வாகத்தில் நாணயம், ஒழுக்கம் இருக்கப் பாடுபட்டார்.*

*"ராஜாஜியை நான் எதிர்த்த காலத்திலும், என் மீது அவருக்குப் பற்று-பாசம்-குறையவில்லை.*

*"அவர் காட்டிய நல்வழிகளை மறந்து விடக்கூடாது. அவர் காட்டிய வழியைப் பின்பற்றி தீய சக்திகளை அகற்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்."*

—திரு எம். பக்தவத்சலம்

## தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ராஜாஜி செய்த பணி!

*"தாழ்த்தப்பட்ட மக்கள் ராஜாஜிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிருர்கள்.*

*அவரால்தான், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித்தொகுதி ஏற்பட, காந்தி-அம்பேத்கார் ஒப்பந்தம் ஏற்பட்டது.*

*அவர் முதல்வராக இருந்தபோதுதான், ஆலயப் பிரவேசம் நடந்தது.*

*பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தையும் அவர்தான் கொண்டு வந்தார்.*

—திருமதி சத்தியவாணி முத்து

# புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகள்!

“தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயல்-மழையால் பாதிக்கப்பட்ட மக்களுள் பலர், நெசவாளர்கள் ஆவர். இம் மாவட்டங்களில் ஏறக்குறைய 5 ஆயிரம் நெசவாளர்கள் வீடு இழந்தும், தறியிழந்தும், நூல், துணிகள் பாழடைந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கெனவே வீடு இழந்தோருக்கு தலா ரூ. 200 மானியமாக அளிப்பது என அரசு முடிவு எடுத்து விநியோகித்துள்ளது.

“நெசவாளர்களைப் பொறுத்தவரை அவர்களது வீடுகள் தொழிற்கூடங்களாகவும் அமைவதால் தங்கள் வீடுகள் மீண்டும் கட்டிக் கொள்வதற்கான இந்த மானியத் தொகையுடன் மேலும் ரூ. 300 கடனுதவி அளிப்பது என அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர அவர்களது தறி மற்றும் உபகரணங்கள் சேதப்பட்டிருந்தால் தலா ரூ. 125 அளிக்கப்படும்.

“மாநில அரசு அளிக்கும் இந்த உதவியோடு இதே அளவுக்கு வீட்டுக்கு ரூ. 500 வீதமும் தறி மற்றும் உபகரணங்களுக்கு 125 ரூபாய் அளிக்க மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களால் நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க ரூ. 22 இலட்சம் மாநில அரசால் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது,

“மாநில அரசு அளிக்கும் 625 ரூபாயோடு மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கும் 625 ரூபாயும் சேர்த்து மொத்தம் ரூபாய் 1,250 கிடைக்கும்.

“இத்தொகையைக் கைத்தறி நெசவாளர்கள் தறிகள் வாங்கவும், கட்டிடம் கட்டவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

“முசிறி, மணல் மேடு பகுதிகளில் 2 ஆயிரம் நெசவாளர்களின் வீடுகள் சேதம் அடைந்துள்ளன. மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து வங்கிகள் மூலம் அவர்களுக்கு ரூ. 500 கடன் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

“இந்தத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 80 லட்சம் செலவாகும். மத்திய அரசிடம் இந்த நியாயமான காரியத்திற்காகக் கேட்டிருக்கிறோம். அவர்களும் இதைக் கொடுத்து உதவுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. மத்திய அரசு ஒதுக்கிய ரூபாய் 33 கோடி உதவியில் கைத்தறி நெசவாளருக்கான நிவாரணம் சேர்க்கப்படவில்லை. ஆகவே அதைத் தனியாகக் கேட்டிருக்கிறோம்,

“மத்திய அரசு அதிகாரிகளும் வந்து பார்த்துப் போயிருக்கிறார்கள். தேவைப்பட்டால் மாநில அரசு மேலும் நிதி ஒதுக்கும். தமிழகக் கைத்தறி நெசவாளர்களைத் தொழில் கூட்டுறவின் கீழ்க்கொண்டு வரவும் முயற்சி எடுக்கப்படும்.”

இவ்வாறு மாண்புமிகு தமிழகக் கைத்தறித்துறை அமைச்சர் திரு கே. ராஜாமுகமது அவர்கள் கூறினார்.

## புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசு அளித்துள்ள உதவிகள்!

அண்மையில் தமிழகத்தில் வீசிய புயலினால் தஞ்சை, புதுக்கோட்டை, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சென்னை ஆகிய மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் பெரும் அவதிக்கு உள்ளானார்கள்.

புயலினாலும், வெள்ளத்தினாலும் மீனவர்கள் தங்களது கட்டுமரம், படகு, வலை முதலியவைகளைப் பறி கொடுத்தார்கள். இதனால், அவர்கள் தொடர்ந்து மீன் பிடி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

மீனவர்கள் தங்கள் உடைமைகளை இழந்து விட்டனர். அதன் மதிப்பு ஒரு கோடியே 32 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி சாதனங்களைப் பழுது பார்க்கவும், புதிதாகச் சாதனங்களைப் பெறவும் தமிழக அரசு ஒரு கோடியே 32 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளது.

இதில் 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் கடனுகவும் கொடுக்கப்படும். இந்த உதவி நேரடியாகப் பணமாகக் கொடுக்கப்படாமல் மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடி சாதனங்களாக மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உதவி இயக்குநர் மேற்பார்வையில் வழங்கப்படும்.

இந்த உதவியில் கடனுகக் கொடுக்கப்படும் தொகை வட்டியில்லாத கடனுகும். இந்தக் கடன் தொகையை 30 மாதத் தவணைகளில் மூன்று ஆண்டுகளுக்குள் அரசுக்குத் திரும்பச் செலுத்த வேண்டும்.

புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் மீனவர் குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அரிசி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.



# மதுவிலக்கைத் தீவிரப்படுத்தி மகிழ்ச்சி நிலவச்செய்வோம்!



திரு பிரபுதாஸ் பட்வாரி,
தமிழ்நாடு ஆளுநர்.

ஆழ்ந்த அறிவாளியும், அரசியல் ஞானியுமாகிய கௌடில்யர் கி.மு. 321-ஆம் ஆண்டிற்கும் கி.மு. 296-ஆம் ஆண்டிற்கும் இடையில் அரசியல் கலை பற்றிய, காலத்தால் அழியாத ஆய்வு நூலை எழுதினார். அந்நூலில் அரசர்கள், அமைச்சர்கள், அலுவலர்கள் ஆற்றவேண்டிய பணிகள், கடமைகள், ராஜதந்திரக்கலை ஆகியவை பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆசையின் காரணமாகத் தோன்றும் வேட்டையாடுதல், சூதாடுதல், பிறபெண்கள் மேல் காமுறுதல், குடிப்பழக்கம் முதலிய நான்கு கெட்ட பழக்கங்களைப் பற்றியும் கௌடில்யர் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். எல்லா கெட்ட பழக்கங்களுக்கும் குடிப்பழக்கமே தாய் போன்றதாக இருப்பதால், குடிப்பழக்கத்தை மிகவும் கொடிய, தீய பழக்கமாகக் கருதினார்.

“எல்லாப் பாவங்களையும் தராசின் ஒரு தட்டில் போட்டு, மறு தட்டில் குடிப் பழக்கத்தைப் போடலாம் (அவை ஒன்றுக்கொன்று சரி சமமாக இருக்கும்). இவ்வாறு சில பழைய ஒழுக்கவிதிகள் கூறுகின்றன. ஒழுங்கு நிலை தவறிய மனத்தின் காரணமாகக் குடிப்பழக்கம் உள்ள மனிதன் எல்லாவற்றிலும் தவறு செய்வதுடன், பொய்யை உண்மையென்று கூறி-பிதற்றி, கானலை நீரென்று நம்பி-சீரழிகின்றான். மதுவின் மயக்கத்தினால், குடிகாரன் தன் சொந்தத் தாயைக்கூட வெட்கமின்றி விரும்புகின்றான்.

துரதிர்ஷ்ட வசமாக பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டவுடன், மது வியாபாரம் அரசின் அரவணைப்பைப் பெற்றது. குடிப்பதை வாழ்க்கை வழியாகவும், கேளிக்கை மண்டபங்களில் மது அருந்தி மகிழும் பழக்கத்தையும் கொண்ட பிரிட்டிஷ்காரர்கள், மதுவுக்கு கௌரவம் அளித்தனர். ஆடம்பரமான சமுதாயத்திற்கு அவசியமான ஒன்றாகக் குடிப்பழக்கம் இந்நாட்டில் புகுத்தப்பட்டது. இதன் காரணமாக மதுவின் தீமைகள் மளமளவென்று பரவின.

பொருளீட்டுவதற்குரிய பெரும் ஆதாரம் எரிசாராயம் மற்றும் போதைப் பொருள்களே என்று கருதி அவைகளின் மீது ~~தூலால்~~ வரி விதித்ததில், பிரிட்டனைச் சார்ந்த கிழக்கு இந்தியக் கம்பெனியே முன்னோடியாக விளங்கியது. வரம்பு மீறிய குடிப்பழக்கத்தினால் ஏற்படும் மயக்கம் காரணமாக மக்களிடம் காணப்பட்ட மதவிரோதப் போக்கு, நீதி வழுவிய பண்பு, பரவலாகக் காணப்பட்ட பேரிடர் ஆகியவைகளைக் கண்டு இந்த நாட்டில் இருந்த சிந்திக்கக்கூடிய நாட்டுப்பற்று மிக்க சிலர் அஞ்சினர்.

### மகாத்மா காந்தியின் முயற்சிகள்

மது மற்றும் போதைப் பொருள்களுக்கு எதிராகப் பொது மக்களின் ஆதரவைப் பெருமளவில் திரட்டும் பொறுப்பு மகாத்மா காந்தியிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர், பிரிட்டிஷ் அரசின் “மது மற்றும் போதைப் பொருள்களின் மீது வரி விதிக்கும் கொள்கை”க்கு எதிராக ஓர் இயக்கத்தைத் துவக்கினார். போதைப் பொருள்களின் மேல் விதிக்கப்படும் வரி அவமானத்திற்குரியது என்றும் அந்த வரியின் மூலம் பெறும் வருமானம் “கறைபட்ட பணம்” என்றும் கூறி இடித்துரைத்தார்.

அவர், மதுபானக்கடைகளின் முன்னால் அமைதியான முறையில் மறியல் நடத்தவும் ஏற்பாடு செய்தார். பெரிய

குடும்பத்தைச் சார்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெற்றிகரமாக மறியல் செய்தனர். அவர்களில் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர், தடியடிபட்டனர்; பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளாயினர்.

மகாத்மா காந்தியின் வழிகாட்டுதலின்படி இயங்கிய காங்கிரஸ்கட்சி இந்தியாவின் ஏழு மாகாணங்களில் 1933-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு - ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, மதுவிலக்கைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் துவக்கப்பட்டன.



## மதுவிலக்கும் அரசியல் அமைப்புச் சட்டமும்

இந்தியா 1947-ஆம் ஆண்டில் விடுதலை அடைந்தபோது-நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்பட்டபோது 47-வது விதிமுறையில் மாநில அரசுக் கொள்கையின்கீழ் செயல்படுத்த வேண்டிய நெறிமுறைக் கோட்பாடுகளாகப் பின்கண்டவை அடங்கியிருந்தன.

''சத்துணவு கிடைக்கும் அள்வையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துதல், மக்கள் நல்வாழ்வைத் தன் முதன்மையான கடமையாகக் கொண்டு மேம்படுத்துதல் ஆகியவற்றில் மாநிலம் கவனம் செலுத்தும். குறிப்பாக, உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடியதும் போதை ஏற்படுத்தக்கூடியதுமான மது மற்றும் போதைப் பொருள்களை அருந்துவதற்கு மருத்துவக் காரணங்களைத் தவிர-தடைச்சட்டம் கொண்டுவர மாநிலம் முழு அளவில் பாடுபடும்.

அதன்பயனாய், இந்திய யூனியனின் பல்வேறு மாநிலங்கள், தங்கள் தங்கள் பகுதியில் மதுவிலக்கைச் செயல்படுத்தப் பல்வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. ஆனால் ஒரு சில ஆண்டுகளிலேயே மதுவிலக்குக் கொள்கையில் குஜராத்- தவிர்த்த மற்றெல்லா மாநிலங்களிலும் உள்ளரிப்பு ஏற்பட்டது. குஜராத் தவிர்த்த மற்றெல்லா மாநிலமும் மதுவினால் கிடைக்கும் மாபெரும் வருவாய் கண்டு மலைத்து நின்று விட்டன. ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி அம்மாநிலங்கள் மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தின. மதுவின்மூலம் மாநில அரசுக்குக் கிடைக்கும் ஒரு டாலர், மது அருந்துவோர்க்கு 4 டாலர் செலவை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இத்தொழிலில் இடைத்தரகர்களின் இலாபமும் இதர செலவினங்களும் அடங்கியுள்ளன. மதுவிலக்கைத் தளர்த்துவதால், குற்றங்கள், சாலை விபத்துக்கள், நோய்கள் முதலியன அதிகமாகக் கூடும். அவைகள் அரசின் நிதி நிலைமையில் நெருக்கடியையும், சுமையையும் ஏற்படுத்தும்.

முன்பே கூறியபடி, மயக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா வகையான மதுபானங்களையும் போதைப் பொருள்களையும் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல், போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தல், வைத்திருத்தல், குடித்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்குச் சட்டம் தடைவிதிக்கிறது. எரி சாராயம் தயாரிப்பதற்குப் பெரும் அடிப்படையாக உள்ள சில கச்சாப் பொருள்களைக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக அக்கச்சாப் பொருள்களின் மீது தேவையான கட்டுப்பாடுகளை விதிக்கவும் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் மதுபானம் தயாரித்தல், அவைகளை ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல் முதலிய முக்கிய குற்றங்கள் ஜாமீனில் விடுதலை பெற முடியாத குற்றங்களாகக் கருதவும், மதுவிலக்குக் குற்றங்களை ஒட்டு மொத்தமாக விசாரித்துக் கடும் தண்டனை வழங்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தினை வலியுறுத்திச் செயல்படுத்தும் பணி காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பனைப் பணி, புனித வினைமுறை, மருத்துவம் ஆகிய காரணங்களுக்காகவும் அயல் நாட்டினருக்காகவும் மது வழங்கும் உரிமம், அனுமதிச் சீட்டு வழங்கவும் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பணி, பல்வேறு விதி மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ், அரசின் கலால் வரி, மதுவிலக்குப் பிரிவால் செயல்படுத்தப்படுகிறது. மதுவிலக்கு என்பது இந்த நாட்டிற்கே உரிய சட்டமாக இருப்பதால், எந்தக் குடிகாரருக்கும் எந்தத் தகுதியோ அல்லது மதிப்போ கொடுக்கப்படக்கூடாது என்பதே அரசின் கொள்கையாக உள்ளது.

பொதுவான கண்ணோட்டத்தில் பார்த்தாலும், மது அருந்த அனுமதிச் சீட்டுப் பெற்றுள்ளவர்கள்-அவர்கள் தொழில் அல்லது நிதி உலகில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தபோதிலும்-பொது மக்களிடமிருந்து ஒழுக்க நெறிக்குட்பட்ட கௌரவத்தையும், நம்பிக்கையையும் பெற முடியவில்லை.

## போதனை மற்றும் விளம்பரப் பணிகள்

மதுவிலக்குக்கொள்கை முக்கியமாகச் சமுதாய சீர்திருத்தக் கொள்கையாக இருப்பதால், மதுவிலக்குக் கொள்கையின் வெற்றி அது எந்த மக்களுக்காக உருவாக்கப்பட்டதோ, அந்த மக்கள் மனமுவந்து, இடையறாது அளிக்கும் ஒத்துழைப்பையே பெரிதும் பொறுத்திருக்கிறது. சட்டம் மட்டுமே, நாம் காண விரும்பும் முடிவை அளிக்க முடியாது. ஆகவேதான், மதுவிலக்கைப் பற்றிப் போதனை மற்றும் விளம்பரப் பணிகள் பல்வேறு சமுதாய நிறுவனங்களாலும், அறக்கட்டளைகளாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## மதுவிலக்கினால் கிடைக்கும் சமூகப் பொருளாதாரப் பயன்கள்

பொருளாதார அடிப்படையில் நோக்கினால் இந்தியா வளர்ந்து வரும் ஒரு நாடாகவே உள்ளது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான மக்கள் ஏழைகளாகவே உள்ளனர். மதுவிலக்குத் திட்டம் அமல்படுத்தப்படுவதற்கு முந்திய காலத்தில், முன்னாள் குடிகாரர்கள் துயரமான வாழ்க்கையே நடத்தினர். குடிப்பழக்கம், அவர்களை, வீட்டிற்கு வேண்டிய சாதாரணத் தேவைகளைக்கூட அறிய முடியாத குருடர்களாக ஆக்கியது. சொத்துக்கள், துணிமணிகள், சமைக்கும் பாத்திரங்கள், கால்நடைகள் முதலியவற்றைக் குறைந்த விலையில் விற்கவோ அவைகளைக் கடுமையான வட்டி விகிதத்தில் அடகு வைக்கவோ அவர்கள் தயங்கியதில்லை. அவ்வாறு பெற்ற பணத்தைத் தங்கள் மதுபான தாகத்தைத் தணித்துக் கொள்ளவே அவர்கள் பயன்படுத்தினர்.



குடிகாரன், தன் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. தன் மனைவியையும், குழந்தைகளையும் அடிக்கடி தொல்லைப் படுத்துகின்றான்.

தெருச்சண்டைகளும், குடித்துவிட்டுச் சண்டை போடுதலும் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தன. பெரும்பாலான குடிகாரர்களின் வாழ்விலும், சுற்றுப்புறச் சூழ்நிலையிலும் நிம்மதி குலைந்த நிலையே காணப்பட்டது.

முழு மதுவிலக்கு நிலவிய இருபத்தைந்து ஆண்டுகள், பொதுவாகச் சமுதாயத்தின் நிலைமைகளிலும், குறிப்பாக உழவர்கள், தொழிலாளர்கள், நலிந்த பிரிவினர்களிடையேயும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் குடிகாரர்களால், மதுபானங்களின் மீது முன்பு செலவு செய்யப்பட்டு வந்த பணம், தற்பொழுது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக அவர்களால் பயன்படுத்தப் பெறுகிறது. அவர்களில் பெரும்பாலோர் கடன் சுமையிலிருந்து விடுபட்டுள்ளனர்; அமைதியான குடும்ப வாழ்க்கையையும், சமுதாய வாழ்க்கையையும் பெற்றுள்ளனர். தெருக்களில் குடிகாரர்களைக் காண்பதும், குடிகாரர்கள் சாக்கடையில் விழுந்து புரள்வதும், குடித்துவிட்டுச் சண்டை போடுதலும் கடந்த கால நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டன.

தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தைத் தற்பொழுது பயனுள்ள வகையில் செலவிடுகிறார்கள். உற்பத்தித் திறன் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உயர்ந்துள்ளது. தங்களுடைய கட்டுப்பாடு, திறமை ஆகியவற்றின் மூலம் தொழில்கள் செழிக்க அவர்கள் உதவியுள்ளனர். முன்பிருந்ததைவிடத் தற்பொழுது வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும் குறைவாகவே உள்ளன. தொழிலாளர் உறவு மிகவும் சுமுகமாகவே உள்ளது. தொழிலாளர், பின்தங்கிய வகுப்பினர், ஏழை எளிய பிரிவினர் ஆகியோர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளுக்கும், நிலங்களுக்கும், சொந்தக்காரர்களாகி உள்ளனர். அவர்களுடைய பிள்ளைகள் எல்லா வகையான நல்ல கல்வியும் பெற்று வருகின்றனர். மது, தொழிலாளியை மிருகமாக்கியது. ஆனால் மதுவிலக்கு, தொழிலாளியை நல்ல குடிமகனாக ஆக்கியுள்ளது.

குற்றங்களின் விகிதமும், நோய்கள் தோன்றுவதும், சமூக விரோத நடவடிக்கைகளும் மிக மிகக் குறைந்து விட்டன.

## குடிவகைகள் கட்டுப்பாடும் மது விலக்கும்

பிரச்சாரம் மற்றும் போதனை மூலமாகவே, குடியினால் விளையும் கொடுமைகளிலிருந்து மனிதனைக் காப்பாற்ற முடியுமே தவிர, சட்டத்தின் மூலமாக அல்ல என்பது ஒரு கருத்தாகும். குடியின் தீமைகளை விளக்கும் பிரச்சாரம் இன்றியமையாததுதான். ஆனால் வெறும் பிரச்சாரத்தினால் விளைவது சிறு பயனே என்பதை அனுபவம் மெய்ப்பித்துள்ளது.

அமெரிக்காவில் மதுவிலக்கு வெற்றி பெறவில்லை என்று வாதாடப்படுகிறது. இத்தகைய பாதகமான சூழ்நிலை ஏற்படுவதற்கு மதுபானம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருஞ்செல்வர்கள் காரணம் என்று அண்மையில் நடைபெற்ற ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன. இலாபம் தேடுவதையே இலட்சியமாகக் கொண்ட இப்பெருஞ்செல்வர்கள் பத்திரிகைகளுக்குப் பெருமளவில் கையூட்டுக் கொடுத்துக் கடன், நிர்வாகத்தில் இலஞ்ச ஊழல் ஆகியவற்றை ஏற்படுத்தினர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. அமெரிக்காவில் இன்றைய நிலைமை என்ன? குடிப்பழக்கம் நாளுக்குநாள் அச்சுறுத்தும் விகிதத்தில் அதிகமாகி வருகிறது. அதன் விளைவாக, நோய்கள், ஒழுங்கற்ற நிலைமைகள், விபத்துக்கள், குற்றங்கள், மணவிலக்குகள் ஆகியவை வியப்பிற்குரிய வேகத்தில் மலையெனக் குவிகின்றன.

குடிப்பழக்கத்தினால் ஏற்படும் பேராபத்திற்கெதிராக உலகமெங்கும் பல மாநாடுகள் நடத்தப்படுகின்றன; விஞ்ஞானிகள், மருத்துவர்கள் மற்றும் பலர் புள்ளி விவரங்களை எடுத்துக்கூறி எச்சரிக்கை விடுக்கின்றனர். இவைகளின் முடிவு என்ன?

மதுவிலக்குப் பற்றி ஒரு முழுமையான திறனாய்வு நடத்தவும், கடந்த 10 ஆண்டுக் காலத்தில் நடைபெற்ற அனைத்துலக மாநாடுகளால் விளைந்த பயன்களை அறியவும் அனைத்து நாட்டு மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏற்பட்டுள்ள சில நன்மைகளை மட்டும் எடுத்துக் காட்டி நாம் மன நிறைவு அடையக் கூடாது. மொத்தத்தில் தற்பொழுதுள்ள நிலைமை, மிகவும் அதிர்ச்சியளிப்பதாகவே உள்ளது. குடிவெறி என்னும் பேய், நாகரிகத்தின் மேல் படையெடுத்து மேலும் மேலும் முன்னேறி வருகிறது. மனித உரிமை, உடைமைகளையும், மனித உயிரையும் கவர்வதே அதன் இலக்காக உள்ளது.

மனித இனத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படுவதற்கு முன்பு, இம்முக்கிய பிரச்சினையில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது.

# மகா கவியின் மகத்துவம்





**அமரர்**
**எஸ். சத்தியமூர்த்தி**

[அரை நூற்றுண்டிற்கு முன்னர், ஆங்கில ஏகாதிபத்தியத்தால் மகாகவி பாரதியாரின் பாடல்கள் தடை விதிக்கப்பெற்றுப் பறிமுதல் செய்யப்பட்ட பொழுது தீரர் சத்திய மூர்த்தி சட்ட மேலவையில் உணர்ச்சிப் பிழம்பாக நின்று பேசியது]

மாண்புமிகு தலைவர் அவர்களே!

இந்த மசோதாவை ஆதரித்துப் பேசுவதற்கு எனக்கு முன்கூட்டிய அறிவிப்போ, விவரமான வாதங்களோ தேவையில்லை! இந்த அவையில் தமிழனாகவும் தமிழறிந்தவராகவும் தேசபக்தியுடையவராகவும், தேசபக்தியைக் கண்டு அஞ்சாதவராகவும் இருக்கின்ற எந்த ஒரு உறுப்பினரின் உணர்ச்சியையும் நான் பெரிதுபடுத்திக் காட்டுவதாக எண்ண வேண்டாம். சென்னை மாநில அரசு, காவல்துறையை விட்டு, பாரதியாரின் பாடல்களைப் பறிமுதல் செய்யும் முயற்சியை எதிர்த்துக் கொண்டுவரப்படும் இம்மசோதாவிற்கு ஆதரவாக எந்த ஒரு விளக்கமும் தேவையில்லை. எவ்வளவுதான் சென்னை மாநில அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தாலும், இந்த நாட்டில் எதுவரை தமிழ்மொழி வாழ்கின்றதோ, எதுவரை ஒரு தமிழனாவது வாழ்கின்றானோ, அதுவரை மகாகவி பாரதியாரின் விலைமதிக்க முடியாத தேசபக்திப் பாடல்களும் இச் செந்தமிழ் மொழியில் நிலைத்து நிற்கும்!

தலைவர் அவர்களே!

மறைந்த இம்மகாகவியின் திருநாக்கிலேதான் சரஸ்வதி தேவியே தன் தேசபக்தி நடனங்களை நடத்திக் காட்டியிருக்கிறாள். பாரதி வேறெந்த சுதந்தர நாட்டிலே பிறந்திருந்தாலும், ஏன் சுதந்தரநாடு? இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலே பிறந்திருந்தாலும், அம்மகாகவி அந்தநாட்டினுடைய தேசிய கவியாக (Poet Laureate) அங்கீகரிக்கப்பட்டிருப்பான்! மக்களுடைய உணர்ச்சிகளை மதிக்கத் தெரிந்த அந்த நாடுகளில் பெரிய பட்டங்களையும் கௌரவங்களையும் பெற்றிருப்பான்! எல்லாக் கௌரவங்களையும் பெற்ற மனிதனாக வாழ்ந்தும், மறைந்துமிருப்பான். ஆனால், இந்த அடிமை நாட்டில் பிறந்த காரணத்தால், பாண்டிச்சேரியில் அடைக்கலம் புக நேரிட்டது. புதுச்சேரி அரசின் ஆதரவிலே வாழ்ந்த அவன் இந்த அடிமை நாட்டில் தன் வாழ்வு பயனற்றுப் போய்விட்டதை எண்ணி, இதயம் உடைந்து இறந்தான். பாரதிக்கு முன் இந்த நாட்டிலே வாழ்ந்த தியாகிகளும், தேச பக்தர்களும் அதே கதிக்குத்தான் ஆளானார்கள். சுப்பிரமணிய பாரதியார் வாழ்விலும் சாவிலும் தேசபக்தராகவே விளங்கினார்.

தலைவர் அவர்களே!'

நான் மீண்டுமொருமுறை உங்கட்கு நினைவூட்ட விரும்புகின்றேன். தமிழிருக்கின்ற வரையில் கூட, அதிலுள்ள அனைத்து நூல்களையும் நீங்கள் பறிமுதல் செய்யலாம்! ஆனால், இன்றைக்கு நாங்கள் பெற்றிருக்கின்ற புனிதமான வேதங்கள் அனைத்தும் எப்படிப் பெற்றோம் தெரியுமா? தலைமுறை தலைமுறையாக, சகாப்தங்கள் சகாப்தங்களாக ஓர் அச்சுப் பிரதி கூட இன்றி, மெக்காலே மில்டனுடைய இழந்த சொர்க்கத்தின் (Paradise Lost) ஒவ்வொரு வரியையும் பார்க்காமலே சொல்வாராமே, அவ்வாறு எங்களுடைய மூதாதையர்களால் ஞாபகசக்தியின் மூலமாகவே எங்களுக்கு வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. எனவே, எதுவரையில் இந்த நாட்டில் ஒரு தமிழனாவது வாழ்கின்றானோ, அதுவரையில் பாரதியினுடைய விலை மதிக்கவொண்ணாப்பாடல்கள் தமிழனுடைய தனிச் சொத்தாகக் காக்கப்படும் என்ற நம்பிக்கையில் எனக்குச் சிறிதும் சந்தேகம் கிடையாது.

தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், துர்ப்போதனை செய்யப்பட்ட இந்த அரசின் நடவடிக்கையால், பாரதியினுடைய ஒவ்வொரு பாடலையும் அனைவரும் மனப்பாடம் செய்ய வேண்டும் என்ற பிரச்சார இயக்கத்தைத் துவங்கப் போகின்றோம் என்பதே! மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், உள்துறை அமைச்சர் அவர்களும் பாரதியினுடைய ஒவ்



வொரு சொல்லையும் கூடப் பறிமுதல் செய்யலாம். ஆனால், மனித அறிவு இன்னமும் மனப்பாடம் செய்யும் ஆற்றலையும், ஞாபக சக்தியையும் பறிமுதல் செய்யும் இயந்திரத்தைக் கண்டு பிடிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நினைவாற்றலும், எண்ணங்களும் என்றும் பெருகிக் கொண்டே இருக்கும். மாண்புமிகு சட்ட அமைச்சரும் உள்துறை அமைச்சரும் எங்கெங்குச் சென்றாலும் அங்கெல்லாம் பாரதியாருடைய பாடல்கள் முழங்கப்படுவதைத் தான் கேட்க நேரும். அந்த வீரமிக்க தேசபக்திப் பாடல்களைக் கேட்பதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்பிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ள விரும்பினால் அவர்கள் தங்கள் செவிகளில் பஞ்சை வைத்துத் தான் பொத்திக் கொள்ள வேண்டும்.



டப் பிரச்சாரத்தின் தொடக்கம் உங்கட்கு அன்புப் பரிசு கூட அன்று! இந்த அரசு, தேச பக்திப் பாடல்களை நிறையப் பெற்ற, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களை ஆளுகின்ற அரசு! இருபத்தைந்து ஆண்டுகளாக, இப்பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பாடப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல தமிழ் மாணவர் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்கள் இப்பாடல்களை இதுவரை கேட்டு மகிழவில்லை என்றால்—இப்பாடல்களைக் கேட்டு அவரது இதயம் துடிக்கவில்லையென்றால் - நாடி நரம்புகளிலுள்ள இரத்தம் சூடேறவில்லை என்றால், ஆத்மாவை உருக்கும் அம்மகத்தான பாடல்களை ஒருமுறை கேட்க வேண்டுகிறேன். சமீபத்தில் கட்சி மாறிய எனது இரண்டு நண்பர்கள் இப்பொழுது இங்கு இல்லையே என்று வருந்துகின்றேன்; அவர்கள் இங்கு இருப்பார்களேயானால் என்னுடைய கருத்துக்கு மாறுபடமாட்டார்கள். ஏனென்றால், அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வென்று இந்த அவைக்கு வந்ததற்கும், பின்னர் கட்சிமாறி அமைச்சர்கள் ஆனதற்கும் காரணம் சில தேர்தல் தந்திரங்களே! அத்தந்திரங்களில் ஒன்று தேர்தல் பிரச்சார மேடைகளில் சின்னப் பையன்களையும், பெண்களையும் கொண்டு இந்தத் தேசபக்திப் பாடல்களைப் பாட வைத்தது ஆகும். உங்கட்கு ஒன்று தெரியுமா? தமிழ் நாட்டிலே நீங்கள் ஒரு பிரம்மாண்டமான கூட்டத்தைப் பெற வேண்டுமென்றால், அவையினரின் உற்சாகத்தைத் தட்டி எழுப்ப வேண்டுமென்றால் அதற்குரிய சுலபமான வழி, இந்த தேச பக்திப் பாடல்களைப் பாடச் செய்வதே ஆகும். எனக்குப் பாடக் கூடிய குரல் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு சட்ட அமைச்சர், உள்துறை அமைச்சர் போன்றோரின் கல் மனத்தைக் கூட உருக்கக்கூடிய தேச பக்திப் பாடல்களின் சில வரிகளைப் பாடிக் காட்ட விரும்புகின்றேன். இப்பாடல்களை உரைநடை போன்று படித்தால் கூட அவை உங்களுடைய கல்மனத்தையும் உருக்கும்.

தலைவர் அவர்களே !

இப்பாடல்கள் என்ன சொல்லுகின்றன? உங்களுடைய ஆணையின் கீழ் அப்பாடல்களின் புரட்சிகரமான போக்கைப் பற்றிச் சொல்லப் போவதில்லை. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆங்கில இலக்கியத்தில் தேசியத்தைப் பற்றிய கவிதைகள் என்ன சொல்லுகின்றன அழகினைப் பற்றி எப்படிப் பேசுகின்றனவோ—தேசத் தலைவர்களையும் அவர்களது வெற்றியையும் பற்றி என்ன பாடுகின்றனவோ—தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றி எப்படிக் கனவு காணுகின்றனவோ அப்படித்தான் பாரதியாரும் பாடியுள்ளார் என்பதைத் தான் இந்த அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். அப்பாடல்களின் படிகளை இங்கு நான் வைத்திருக்கிறேன். அப்பிரதிகளைச் சட்ட அமைச்சர் அவர்கட்கும், உள்துறை அமைச்சர் அவர்கட்கும் பரிசளிக்க விரும்புகின்றேன். அத்துடன், சட்டமன்ற நூலகத்திற்கும் ஒன்றை அன்பளிப்பாக அளிக்க விரும்புகின்றேன். காவல் துறையினர்க்குத் தேவைப்பட்டாலும், அதிலிருந்து தேடி எடுத்துக் கொள்ளலாம். அரசு இப்பாடல்களைத் தடை செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதற்காகச் சில பாடல்களைப் படிக்க விரும்புகின்றேன்.

''வந்தே மாதரம் என்போம்
எங்கள்
மாநிலத்தாயை வணங்குதும்
என்போம் (வந்தே)

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜென்மம் இத்தேசத்தில் எய்தின
ராயின்
வேதியராயினும் ஒன்றே-அன்றி
வேறு குலத்தினராயினும்
ஒன்றே (வந்தே)

ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர்
அன்றோ?
சீனத்த ராய் விடுவாரோ?—பிற
தேசத்தவர் போற்பல
தீங்கிழைப்பாரோ (வந்தே)

ஒன்றுபட்டால் உண்டு—வாழ்வே
— நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும்
தாழ்வே
நன்றிது தேர்ந்திடல்
வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது
வேண்டும்'' (வந்தே)''

* * * *

செந்தமிழ் நாடெனும்
போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே
(செந்)

அவைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ இருக்கும் எந்தத் தமிழனாவது இப்பாடலைக் கேட்டு தன் இதயம் உருகாமல் இருப்பானா? மாட்சிமை தங்கிய தலைவர் அவர்களே! இத்தகைய பாடல்களைத் தாம் இந்த அரசு தடை செய்திருக்கிறது. இன்றைக்கு இங்கே சில பேர் ஆட்சியில் அமர்ந்திருப்பது இந்தப் பாடலால்தான்! இப்பாடல்களின் ஓசைநயம் மிகவும் உயர்ந்தது. என்னைப்போல தட்டுத்தடுமாறிப் படிப்பவன்கூட உங்களைக் கவர முடிகிறதென்றால் இப்பாடல்களின் இசையே காரணம்.

நேற்றைய தினம் மாண்புமிகு சட்ட அமைச்சர் இங்கு சப்தம் போட்டதை நானும் கவனித்தேன். அவர் ஒருமுறைகூட இப்பாடல்களைப் படிக்காமல் தடை செய்து விட்டார். இப்பாடல்களில் ஏதாவதொன்றை அல்லது இரண்டை எடுத்துத் தடை செய்திருந்தால் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் அப்படி நீங்கள் செய்யவில்லை. இந்த இரண்டு தொகுதிகளும் தேச பக்திக்கு மட்டுமின்றி, நம்முடைய மதம், இலக்கியம் போன்றவற்றைப் பற்றிய உருக்கமான பாடல்களையும் கொண்டிருக்கின்றன.



**ஆங்கிலேயர் பாடியது என்ன?**

சில ஆங்கிலக் கவிஞர்களுடைய கவிதைகளைக் கோடிட்டுக் காட்டி விட்டு என் பேச்சை முடிக்க விரும்புகின்றேன். இப்பாடல்கள் இங்கிலாந்திலே பாடப்படுகின்றன. இந்தியாவிலேயும் விருந்து வைபவங்களிலும், மற்ற இடங்களிலேயும் பாடப்படுகின்றன. அவை இங்கிலாந்து தேசத்தின் பெருமையைப் பாடுகின்றன. ''பிரிட்டன் ஒரு பொழுதும் அடிமையாகாது; இந்தியர்கள் எப்பொழுதும் அடிமைகளே!' எல்லா இடங்களையும் பிரிட்டனே ஆளவேண்டும்!' அப்பாடல்களின் இலட்சியங்களை வைத்து அவற்றை மதிப்பிட்டால் அவை ஒரு பெரும் சுமையே

டென்னிசன் பாடினன்:

இங்கிலாந்தினுடைய
இடுப்பிலே தான்
கிழக்கிற்கும் - மேற்கிற்குமுரிய
பொற்சாவிகள் தொங்கு
கின்றன
உலகைச் சுற்றிவந்த
அவளுடைய
பொற்கரங்களிலே, சுழலும்
சாவிகளில்
உலகநாடுகளின் தலைவிதிகள்
தொங்குகின்றன.

வில்லியம் பிளேக் எழுதுகிறான்:
''அவர்களுடைய இறக்கைகள்
கிழக்கு மேற்காய் விரிந்திருக்கின்
றன,
அவர்களின் கூடு நடுக்கடலில்
மிதக்கின்றது
...ல் இரைதேடும்
கழுகினைப் போல
அவர்கள் எங்கும் பறக்கின்
றனர்.

'பார்க்கர்' பாடுகிறான்.

வீரமும் தைரியமும் பொருந்திய மாலுமிகளே!
தளர்ந்து விடாதீர்கள்,
புயலடித்தபோதும்!
பொன்னையே தேடுங்கள்.

லார்ட் டென்னிசனும்

''கப்பற்படையே உன் தலைவிதி'' என்கிறான்.

ஆங்கில தேசிய இலக்கியத்திற்கும் எங்களுடைய இலக்கியத்திற்கும் இடையேயுள்ள மூன்று தலையாய வேறுபாடுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆங்கில தேசிய இலக்கியம் தன்னுடைய நாட்டின் பெருமைகளைப் பேசுவதோடு எதிரிகளுடைய குழப்பத்தையும் அழிவையும் கூடப் பேசுகின்றன. ''ஆண்டவன் அரசனைக் காப்பாற்றுகின்றான். அதனால் எதிரிகளைக் குழப்பி வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் கொண்டு வந்து குவியுங்கள்'' இதுதான் ஆங்கிலேயரின் பாட்டு.

ஆங்கிலேயரின் பார்வையில் இரண்டே இரண்டு வகை மனிதர் தர்கள் தாம் உண்டு (1) இங்கிலாந்தும் அதனுடைய மனிதர்களும் (2) அதனுடைய எதிரிகள் மறுபுறம். கடவுள், தனது மற்ற கடமைகளையெல்லாம் விட்டு விட்டு இங்கிலாந்தைத் தொடர்ந்து காப்பாற்றுவதோடு அதனுடைய எதிரிகளையும் குழப்ப வேண்டும். இங்கிலாந்தினுடைய பார்வையில் இந்த இரண்டு வகை மனிதர்கள் தாம். ஆனால் பாரதியாரோ எல்லா வகை மனிதருக்கும், எல்லாக் கவிஞர்களுக்கும் எல்லாத் தத்துவ ஞானிகளுக்கும், எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் உடையவனாவான்.

இந்தியா சுதந்தரமடைந்து மகிழ்ச்சியாய் இருக்கட்டும், மற்ற நாடுகளும் விடுதலை பெற்று மகிழட்டும்! தேசியம், தேச பக்தியில் ஆனா, ஆவன்னா கூடத் தெரியாத சென்னை அரசாங்கம் தனது அழுக்குக் கரங்களை வைத்து புனிதமான நூலை அசுத்தப் படுத்துவதற்குத்தானா பாரதி உலக சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் பற்றிப் போதித்தான்? பாரதி பிறப்பால் ஓர் அந்தணன்! நான் தெற்கே வாழ்கின்ற மற்ற ஜாதிக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பாரதியாருடைய பாடல்களில் எங்கேயாவது . ஓரிடத்திலாவது-வகுப்புத் துவேஷத்தையோ, உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டையோ காட்ட முடியுமா? பாரதியாருடைய நண்பர்களில் பலர் இதர ஜாதிக்காரர்களே! அவர்களின் பெயர்களை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்பவில்லை. பாரதி எல்லோரையும் இந்தியர்களாகவே பார்த்தான். வகுப்பு வேறுபாடோ-மத வேறுபாடோ-இன வேறுபாடோ அவன் பாடல்களில் கிடையாது. இன்றைக்கு வாழ்கின்ற புலவர்களில் அவன்தான் மிகப் பெரிய சீர்திருத்தவாதி. இன்றைக்கு அவனது பாடல்களைப் பறிமுதல் செய்கின்ற மனிதர்களுக்கு, அவனது சகோதரத்துவமும், ஒருமைப்பாடும் பயன்படவில்லையா? இன்றைக்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை எந்த விதத்தில் பார்த்தாலும் நியாயமாகாது. (Poet Laureate) ஆஸ்தான கவிஞன். இங்கிலாந்து நாட்டிலே ஒரு கவிஞனுக்குக் கொடுக்கப் படும் மிகப் பெரிய பதவி)

**கட்டுரையின் தமிழாக்கம்:**

**—தி. ராஜகோபால்.**

## அன்புக்கு உண்டோ அடைக்கும் தாழ்?

**ராஜாஜி 1962-ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பொழுது, ஜனதிபதி கென்னடியைச் சந்திப்பதற்காக வெள்ளை மாளிகையின் முன் அறையில் அமர்ந்திருந்தார்.**

**ஒரு சில நிமிடங்களில் விறுவிறு என்று உள்ளே நுழைந்த ஓர் இளைஞர், ராஜாஜியுடன் கை குலுக்கினர்; பின்னர் அவரை ஜனதிபதியின் அறைக்கு அழைத்துச் சென்றார்.**

**பிரம்மாண்டமான ஜனதிபதியின் அறை காலியாக இருந்தது. தமக்காகக் கென்னடி உள்ளே காத்துக் கொண்டு இருப்பார் என்று எண்ணிய ராஜாஜி, அங்கு யாரும் இல்லாமற் போகவே, தம்மை அழைத்து வந்தவரை நிமிர்ந்து பார்த்தார்.**

**அவ்வளவுதான்! ராஜாஜி அதிர்ச்சி அடைந்து விட்டார்! கென்னடியின் மெய்ப் பாதுகாப்பாளரோ, அந்தரங்கக் காரியதரிசியோ தான் தம்மை அழைத்து வந்தவர் எனக் கருதியிருந்த ராஜாஜி, ''நான் அமெரிக்க ஜனதிபதியின் சமூகத்திலா இப்போது இருக்கிறேன்?'' என்று உணர்ச்சி ததும்பக் கேட்டார்.**

**வயதுக்கும், அறிவுக்கும் மரியாதை செய்ய எண்ணிய இளம் ஜனதிபதி பணிவோடும், பண்போடும், அன்போடும் தாமே வெளியே வந்து ராஜாஜியை அழைத்துச் சென்ற செய்தியை ரஷ்யாவில் முன்னர் இந்தியத் தூதராக இருந்த திரு. கே. பி. எஸ். மேனன், ஐ.சி.எஸ், 'ஸ்டேட்ஸ்மன்' 1-5-1966 இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் குறிப்பிட்டு இருக்கின்றார்.**



# மகாத்மாவின் மனச்சாட்சிக் காவலர்

—பியாரேலால்

**[திரு பியாரேலால் பல்லாண்டுகள் காந்திஜியின் அந்தரங்கக் காரியதரிசியாக அரும்பணி ஆற்றி, அடிகளின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அண்ணலிடம் இருந்த தொடர்பு காரணமாகச் சுதந்திரப் போராட்டப் பெருந்தலைவர்கள் அனைவருடனும் நெருங்கிப் பழகிய திரு. பியாரேலால் இக்கட்டுரையில் ராஜாஜியிடம் தமக்குள்ள பேரன்பையும் பெருமதிப்பையும் வெளியிடுகிறார்.]**

என்னைப் பொறுத்தமட்டில் ராஜாஜி ஒரு தனி மனிதருக்கு மேம்பட்டவர்; அவரே ஒரு ஸ்தாபனம். அவர் முப்பதாண்டுக் காலத்தில் காந்திஜியிடமிருந்து கருத்து மாறுபாடு கொண்ட போதெல்லாம் நான் அவரைப் பின் பற்றவில்லை. ஆயினும் ராஜாஜியை விடுத்து காந்திஜியையோ, நமது சத்தியாக்கிரகச் சுதந்திரப் போராட்டத்தையோ என்னால் நினைக்கவும் முடியவில்லை.

'ஸி. ஆர்.' என்ற மனிதர் அவர் வெளியிடும் கருத்துக்களை விட உயர்ந்தவர்; அவர் வகித்த பெரும் பதவிகளைவிட உயர்ந்தவர். அவரது அரசியல் சேவையின் சரிதம் மிக உயர்ந்தது. ஆனால் 'ஸி. ஆர்.' என்ற மனிதரோ அந்தச் சேவையைவிடவும் உயர்ந்தவர்.

அவரது சிந்தனை ஸ்படிகம் போல் தெளிந்தது; அவரது புத்தி, கூர்வாள்போல் தீட்சண்யமானது. அவரது வாதம் வெல்லவொண்ணாதது; பொருளைப் பகுத்து ஆராய்வதில் அவர் பெரும் ஆற்றல் பெற்றவர்; விவாதத்தில் அவரைக் கலங்கச் செய்ய முடியாது—இதையெல்லாம் அறியாதார் யார்? அவரது அறிவொளி கனிந்த நகைச்சுவை பற்றியும், எதிராளியை வாடி விழச் செய்யும் குத்தல் பேச்சுப் பற்றியும் அறியாதார் இல்லை. ஆனால் அவரது இயல்பிலுள்ள அன்பின் இதமான கதகதப்பைப் பலர் அறியவில்லை என்றே அஞ்சுகிறேன். அவரது இதயம் அன்பு மயமானது. அவரது அனுதாபம் அகன்று விரிந்தது; உள்ளுக்குள் அவர் மிகவும் மென்மையும், நுட்பமும் பொருந்தியவர். வெளிப் பார்வைக்கு அவர் வாஞ்சையற்றவர் போல் தோன்றியிருக்கக் கூடும். ஆனால் தமது நுட்பமான அந்தரங்கத்துக்குக் காப்பாகவே அவர் இப்படிப்பட்டதொரு கவசத்தைப் போட்டுக் கொண்டிருந்தார். காந்திஜியின் பணியில் நான் ஈடுபட்டது முதல் பலப் பல ஆண்டுகள், வீட்டுப் பெரியவர்களுக்குக் குழந்தை சேவை செய்வதுபோல் ராஜாஜிக்குச் சேவை செய்திருக்கிறேன். அவரது அன்பையும் விசுவாசத்தையும், விவேகமான அறிவுரையையும் ஏராளமாகப் பெற்றிருக்கிறேன். இந்த அனுபவங்களில் அடைந்த தூய ஆனந்தத்தை என்னால் என்றும் மறக்க முடியாது.

ராஜாஜிக்குத் தீவிரமான ஆஸ்துமா இருந்தது. நான் அறிந்த மட்டில், மருந்துகள் ஏதுமின்றித் தமது இரும்பை நிகர்த்த திடசங்கற்பத்தாலும் தயை தாட்சண்யமின்றி ஒழுக்கக் கட்டுப்பாடுகளை அனுசரித்ததாலுமே ஆஸ்துமாவைக் குணமாக்கிக் கொண்ட ஒரே ஒருவர் ராஜாஜி தான்.

காந்திஜி தமது ''மனச்சாட்சியின் காவலர்கள்'' என்று கருதிய பலரை எப்போதும் தம்முடன் வைத்திருப்பார். அவர்களில் ராஜாஜி முதல் ஸ்தானம் பெற்றவர். காரணம், அவரது வெண்பனிபோன்ற தூய நடத்தையும், சத்தியத்தில் அவருக்கு உள்ள தீவிரப் பற்றும், பரிபூரணமாக ஆன்ம அர்ப்பணம் செய்துகொள்ளும் அவரது இயல்புமே.

ராஜாஜியின் வாழ்க்கை மிக எளிமையானது; தெய்வத்துக்கு அஞ்சி நடத்தப்பட்ட அவ்வாழ்க்கை நன்கு வரையறை செய்யப்பட்டது, அதன் பலனாக தள்ளாத வயதிலும் அவர் சலியாத உழைப்புத் திறனும், சக்தி வாய்ந்த அறிவுத் திறனும், சோர்வுறாத உடல்—மனத் திட்பமும் பெற்று ஆதரிசமாக விளங்கினார். குறிப்பாக இளைஞர்கள் அவரது சீலத்தைப் பின்பற்ற வேண்டும்.

## ராஜாஜியின் யோசனை!

சென்னையில் நாள்தோறும் 'தசாவதாரம்' நாடகம் நடந்து கொண்டிருந்த காலம். ராஜாஜி அவர்கள் தமிழ் நாட்டு முதல்வராக இருந்த பொழுது, நாடகம் பார்க்க வந்திருந்தார்.

இடைவேளைக்குப் பிறகு மேடைக்குள் வந்து, தனியாக என்னை அழைத்து ராஜாஜி அவர்கள் சொன்னார்: ''நரசிம்மாவதாரத்தோடு 'இன்டர்வெல்' விடுகிறீர்கள். பயங்கரமான நரசிம்ம உருவத்தில் மகாவிஷ்ணு தோன்றி, இரணியனைக் கிழித்து எறிகிற ஒரு கோரக் காட்சியோடு இடைவேளையை முடிக்காதீர்கள்! அதைவிடப் பக்தன் பிரகலாதனின் வேண்டுகோளுக்குத் திருமால் இணங்கித் தன்னுடைய பயங்கர உருவத்தை மாற்றிக் கொண்டு, சாந்த சொரூபியாகக் காட்சி தருவது போல் முடிப்பது நல்ல முடிவாக நான் கருதுகிறேன். நாடகம் பார்ப்பவர்களுக்கும் அந்த மாறுதல் மனநிறைவைத் தரும்''.

ராஜாஜி அவர்களின் யோசனையை உடனே நான் ஏற்றுக்கொண்டு, மறுநாள் நாடகத்திலேயே அந்த மாறுதலைச் செய்தேன். அடுத்த நாள் இடைவேளை விடுவதற்குச் சற்று முன்னால் ராஜாஜி அவர்கள் நாடகம் பார்க்க வந்திருந்து, நான் அந்த மாறுதலைச் செய்திருக்கிறேனா என்று கவனிப்பது போல் அந்தக் காட்சி முடியும் வரை நாடகம் பார்த்தபின் திருப்தியோடு கிளம்பிச் சென்றார்.

—நவாப் ராஜமாணிக்கம்.

# பரு சேதம்!





**தமிழ்நாடு பரிசுச் சீட்டு அளிக்கும் சிறப்புக் குலுக்கல் மூலம் கிடைக்கும் வருவாய் தமிழ்நாடு வெள்ளம் மற்றும் புயல் நிவாரணப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும்.**

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ஒரு நல்வாழ்வுத் திட்டம். சமீபத்தில் இம்மாநிலத்தில் இயற்கையின் சீற்றத்திற்குள்ளாகித் தவிக்கும் எண்ணற்றவர்களுக்கு நிவாரணமளிப்பது இன்றைய அவசரத் தேவையாகும். இதற்கென இந்தச் சிறப்புக் குலுக்கல் மூலம் கிடைக்கும் வருவாய் பயன்படுத்தப்படும்.

தமிழ்நாடு பரிசுச் சீட்டை வாங்குங்கள்! துன்பத்திற்கு ஆளான அனைவருக்கும் இதன் மூலம் உதவிடுங்கள்!!

2 சிறப்பு முதல் பரிசுகள் ஒவ்வொன்றும்
ரூ. **5,00,000** வீதம்
**3 சிறப்பு இரண்டாவது பரிசுகள் ஒவ்வொன்றும்** ரூ. **1,00,000** வீதம்
**இதைத் தவிர ஒவ்வொரு வரிசைக்கும்**
ரூ. **50,000** வீதம் இரண்டு முதல் பரிசுகள். மற்றும் பல பரிசுகள்!

**குலுக்கல் தேதி 21-1-1978**
பரிசுச் சீட்டின் விலை ரூ. 1 மட்டுமே.
10 வரிசைகள்

இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை 600 002


# நாடகத்திற்கு ஒரு சங்கரதாசர்



—மாண்புமிகு செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன்.



"சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்த நாள் விழாவைத் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கொண்டாட வேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் விரும்பினுர்கள். அதன் படி இந்த விழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

"தமிழக அரசு புதிய வரலாற்றைப் படைக்க எண்ணிச் செயல்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளது.

"வ. உ. சி., தேசியக் கவிஞர் பாரதி ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களையும் கொண்டாடியுள்ளது. அவர்கள் எல்லாம் எந்தக் கட்சிக்காரர்கள் என்று இந்த அரசு பார்க்கவில்லை; அவர்கள் என்ன சட்டை அணிந்திருந்தார்கள் என்றும் இந்த அரசு கவலைப் படவில்லை.

"இந்த நாட்டுக்காக —இந்த மண்ணுக்காகப் பாடுபட்டவர்களின் புகழைப் பாட வேண்டும் என்று நமது முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிருர்.

"நாடகத்திற்கு இலக்கணம் வகுக்க ஆள் இல்லாமல் இருந்த காலத்தில் சங்கரதாஸ் சுவாமிகள் தோன்றினுர். இயல், இசை, நாடகத்திற்காகப் பாடு பட்டார்.

"நாடகத்திற்காகப் பாடுபட்ட சம்பந்த முதலியார் அவர்கள் பிறந்த நாளையும் தமிழக அரசு கொண்டாட விருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

"கட்சி வேற்றுமைகள், பாகுபாடுகள் ஆகியவற்றை மறந்து

இந்த அரசு செயல்படும்—என்றைக்காவது தேர்தல் வருகின்றபோது வேண்டுமானால் கட்சியைப் பற்றிய எண்ணம் வரட்டும்.

**"தமிழனை, தமிழன் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்; இந்த எண்ணத்தைத் தமிழ் மண்ணில் நாம் விதைத்தாக வேண்டும்.**

"பாரதியா! பாரதிதாசனா? பெரியாரா? அண்ணாவா? என்றெல்லாம் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

**"பெரியார் இல்லை என்றால், அண்ணா இல்லை! காந்தியடிகள் இல்லை என்றால் பெரியார் இல்லை!**

"நமக்குள்ளே இருக்கும் இடைவெளிகள்—அபிப்பிராய பேதங்கள் மறையட்டும். ஒருவரை ஒருவர் பார்க்கும்போது முறைத்துப் பார்க்கும் பழக்கம் நீங்கட்டும்; இந்த மாற்றம் ஏற்பட வேண்டும் என்றுதான் பேரறிஞர் அண்ணா பாடுபட்டார்.

"இங்கே அமர்ந்திருக்கும் ம. பொ. சி. அவர்களுடைய தமிழ்த் தொண்டு தெரிகிறதே தவிர — தமிழ் மொழிக்காக ஒருவராகவாவது இருந்து பாடுபட வேண்டும் என்பதுதான் தெரிகிறதே தவிர—அவரது சட்டை என்ன என்பது எனக்கோ, நமது முதலமைச்சருக்கோ தெரியவில்லை.

"இன்று நாடக உலகில் மேடை வித்தைகள் மாறி இருக்கலாம். காட்சி அமைப்புகளில் எவ்வளவோ விநோதங்கள் உருவாகி இருக்கலாம். ஆனாலும், சங்கரதாஸ் சுவாமிகள் இல்லை என்றால் நாடகமே இல்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

"எனக்கு நேரடியாக சங்கரதாஸ் சுவாமிகளிடம் பழக்கம் கிடையாது. திரு டி. கே. சண்முகம் அண்ணாச்சி அவர்களின் நாடக மன்றத்தில் சேர்ந்து, நானும் ஒரு நடிகராக இருந்த காலத்தில், அண்ணாச்சி அவர்கள் சங்கர தாஸ் சுவாமிகளைப் பற்றி அடிக்கடி தெரிவித்த அருங்கருத்துக்களைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றிருந்தேன்.

"சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள் பேராற்றல் பெற்றவை. அவை, கல்லூரிகளிலே—பள்ளிகளிலே—பாடப் புத்தகங்களாக வைக்கப்பட வேண்டியவை. எனது 13-வது வயதிலே அவரது வசனத்தைப் பயிற்றுவிக்கப்பட்ட அந்த ஒரே ஒரு தகுதிதான், அந்தப் பெருமகனாரிடம் நான் பெற்ற தகுதி.





**தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் ஆண்டு விழாவையொட்டி, சென்னை இராஜாஜி மண்டபத்தில், மறைந்த நாடகத் தந்தை திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் தமிழ்நாடு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு நீதிபதி திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன், திரு ம. பொ. சிவஞானம், திரு சகஸ்ரநாமம், திரு டி. வி. நாராயணசாமி ஆகியோர் அருகே உள்ளனர்.**

"டி. கே. எஸ். அண்ணாச்சி அவர்களைக் கதாநாயகனாக நடிக்க வைப்பதற்காக ஒரே இரவில் 'வீர அபிமன்யு' என்ற நாடகத்தை அமைத்தார் சங்கரதாஸ் சுவாமிகள். அவரைப் போலவே, 1945-ல் நடிப்பிசைப் புலவர் திரு கே. ஆர். ராமசாமி அவர்கள் நொந்துபோய் இருந்த காலத்தில் அவருக்காக, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரே இரவில் ஒரு நாடகத்தை உருவாக்கித்தந்து, அந்நாடகத்திற்கு 'ஓர் இரவு' என்று பெயரும் சூட்டினார். இந்த வகையில் சங்கரதாஸ் சுவாமிகளுக்கும் பேரறிஞர் அண்ணாவுக்கும் ஒற்றுமை இருக்கிறது.

"எங்கிருந்தாலும் வாழ்க" என்று ஒரு முறை பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அவ்வுரையைப் பொன்னுரையாக கருதித் தமிழகஅரசு செயல்பட்டு வருகிறது.

"கடந்த மாதம் 30-ஆம் தேதி தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாளைத் தமிழக அரசு கொண்டாடியது; இத்தகைய நல்ல உணர்வுகள் — இலட்சியங்கள்-நமது முதலமைச்சரின் கொள்கைகளாகும்.

அரசியல் வேறுபாடுகளை மறந்து, **"யாதும் ஊரே, யாவரும் கேளிர்"** என்ற இலட்சியத்தை மதிப்பது தமிழகத்தின் கொள்கையாக இருக்க வேண்டும்.

"தனி நாடகக் குழுவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் சங்கம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சங்கரதாஸ் சுவாமிகளின் பிறந்த நாளைத் தக்க விதத்தில் கொண்டாட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்".

[சென்னை இராஜாஜி மண்டபத்தில் 14-11-77 அன்று நடைபெற்ற சங்கரதாஸ் சுவாமிகளின் 110-வது பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து....]

# சங்கரதாஸ் சுவாமிகளின் வரலாறு

**த**மிழக வரலாற்றிலே தலையாய இடம் பெற்ற வ.உ. சிதம்பரனார், பாட்டுக்கொரு புலவன் பாரதியார் ஆகியோர் பிறந்த திருநெல்வேலி மாவட்டத்தில் துறைமுக நகரமான தூத்துக்குடியில் 1867-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ஆம் நாளில் சங்கரதாஸ் சுவாமிகள் தோன்றினார்.

இவரது தந்தையார் தாமோதரக் கணக்குப் பிள்ளை ஒரு தமிழ்ப் புலவர்; அவரது இலக்கிய அறிவு, 'இராமாயணப் புலவர்' என்னும் சிறப்புப் பெயரை அவருக்குத் தேடித் தந்திருந்தது. ஊரெல்லாம் போற்றும் தம் தந்தையிடமே தமிழ்க் கல்வி பயிலத் தொடங்கினார் சங்கரதாஸ்.

பின்னர், 'புலவரேறு' என்று அறிஞர்களால் போற்றப்பட்ட பழனி தண்டபாணி சுவாமிகளிடம் பாடம் கேட்டுத் தமிழறிவை அவர் வளர்த்துக் கொண்டார்.

இலக்கிய ஆர்வம் மிக்க சுவாமிகள் தூத்துக்குடியில் உப்புப் பண்டகசாலையில் சில காலம் கணக்கராக வேலை பார்த்து வந்தார் என்னும் செய்தி வியப்பாக இருக்கிறது.

பதினாறுவது வயதிலேயே வெண்பா, கலித்துறை, இசைப் பாடல்கள் முதலியவற்றை எழுதத்தொடங்கினார். கவிதைக்கும், கணக்கு வேலைக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் கவிதையே வென்றது! நாடகத் துறைக்கு சுவாமிகளை அழைத்து வந்தது! அப்போது அவருக்கு வயது 24.

நாடக நடிகராக வாழ்க்கையைத் துவக்கம் செய்தவர், பின்னர் நாடக ஆசிரியராகவும் ஆனார். சிறிது காலம் நாடக இயக்குநராகவும் பணியாற்றினார். நாடகம் குறித்தும், நாடக நுணுக்கம் குறித்தும் நாடகத்தில் சொல்லப்பட்டுள்ள நீதி குறித்தும் அவர் அப்போது ஆற்றி வந்த விரிவுரையைக் கேட்டு மக்கள் அமோகமான பாராட்டுக்களை வழங்கி வந்தார்கள்.

சுவாமிகளால் உருவாக்கப்பட்ட சீடர்கள் தமிழ் நாடக உலகிலும், திரை உலகிலும் பெரும் புகழ் பெற்றுத் திகழ்கிறார்கள். காலம் சென்ற மதுரை மாரியப்ப சுவாமிகள், நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம், டி.கே. எஸ். சகோதரர்கள் ஆகியோர் சுவாமிகளின் சீடர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தந்தை பெரியார் அவர்களுக்கும், சுவாமிகளுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. திடீரென்று வாழ்க்கையை வெறுத்துத் துறவியான பெரியாரைப் போலவே, சுவாமிகளும் சிறிது காலம் வாழ்வை வெறுத்துத் துறவியாக மாறினார்; அப்போதுதான் சுவாமிகள் என்ற அடைமொழி அவரை ஒட்டிக் கொண்டது. பின்னர் பல நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று, தந்தை பெரியார் இல்லம் திரும்பியதைப் போலவே, சுவாமிகளும் நாடக உலகத்துக்குத் திரும்பி வந்துவிட்டார்; மறுபடியும் நாடக ஆக்கங்களைத் தொடர்ந்தார்.

அத்தகைய ஆற்றல் மிக்க நாடகாசிரியரின் 110-வது பிறந்த நாள் விழா, தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் 14-11-77 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது இவ்விழாவிற்கு மாண்புமிகு நீதிபதி திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமை தாங்கினார்.

அவ்விழாவில் மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், சங்கரதாஸ் சுவாமிகளின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து சங்கரதாஸ் சுவாமிகள் ஆற்றிய பணிகளைப் பற்றிப் பாராட்டிப் பேசினார்.

# சங்கரதாஸ் சுவாமிகளின் புலமை!

**கோ**வலன் நாடகத்தை முதன் முறை மதுரையில் அரங்கேற்றிய போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி சுவாமிகளின் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. 'கோவலன்' நாடகக் கதை எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் விளக்கமாகக் குறிப்பிட வேண்டியதில்லை. கண்ணகி கொடுத்த காற் சிலம்பை விற்று வர மதுரை நகருக்குப் போவதாகக் கூறுகிறான் கோவலன். அப்போது கண்ணகியின் வாய்மொழியாக,

"மாபாவியோர் கூடிவாழும்
மதுரைக்கு
மன்னா போகாதீர் இன்று"

என்ற பாடல் பாடப்படுகின்றது. மதுரை நகரில், மதுரை மக்களின் முன்னிலையிலேயே "மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்குப் போக வேண்டாம்" என்று பாடினால் அவர்கள் மனம் எப்படி இருக்கும்? இந்தப் பாடலைப் பாடத் தொடங்கியதும் சபையோர் கூச்சலிட்டு, "எங்கே சங்கரதாசர்? கொண்டு வா மேடைக்கு!" என்று ஆரவாரம் செய்தார்கள்.

சுவாமிகள் மேடைக்கு வந்து பெருமிதத்துடன் நின்றார். சபையோர்களிடமிருந்து கேள்விகள் சரமாரியாகக் கிளம்பின. "மாபாவியோர் கூடி வாழும் மதுரை' என்று குறிப்பிட்டு எழுதியதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும்" என மக்கள் குழப்பம் செய்தனர். சுவாமிகள் தமது கரங்களை உயர்த்தி அமைதியாக இருக்கும்படி வேண்டிக் கொண்டு தமது கருத்தை விளக்கத் தொடங்கினார்.

'மா' என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், 'பா' என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும், 'வி' என்ற சொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கிறது" என்று கூறி, அதற்கு ஆதாரமாகப் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலிருந்து சில செய்யுட்களைப் பாடி விளக்கம் தந்தார். "மாபாவியோர் கூடி வாழும் மதுரை என்றால் திருமகளும், கலைமகளும் மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள் படுகிறது.

"அதாவது, சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் மதுரையில் செல்வம் கொழிக்கும் அத் திரு நகரில், இந்தச் சிலம்பை வாங்க ஆள் கிடைக்காதே என்ற கருத்துப்பட "மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்கு மன்னா போகாதீர்" என்று மதுரை நகரைப் பெருமையாகக் குறிப்பிட்டிருக்கிறேனே தவிர, சிறுமைப்படுத்தும் எண்ணம் எனக்கில்லை" என்றார். சபையோர் சுவாமிகளின் புலமையை வியந்து கைதட்டிப் பாராட்டினார்கள்.



# சாலை விபத்துக்கள்!

பி. பரமகுரு, ஐ.பி.எஸ்.,
காவல்துறை ஆணையாளர்,
சென்னை.

முந்தைய காலத்தில் ஓர் இடத்திலிருந்து, வேறு இடத்திற்குக் கால்நடையாகவேதான் போக வேண்டியதிருந்தது. நம்முடைய முன்னோர்கள் தங்களுடைய பொருட்களைத் தோளில் சுமந்து கொண்டு, மனைவிமக்களோடு ஆடு மாடுகளை முன்னால் வழிநடத்திச் சந்தோஷமாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

காலப்போக்கில் வசதியுள்ளவர்கள், இரண்டு கம்புகளை இணைத்து அதன் நடுவில் ஒருவகையான இருக்கையை அமைத்து அதைத் தங்களுடைய வேலைக்காரர்கள், அல்லது அடிமைகள் தூக்கிச் செல்வதான ஒரு சாதனத்தைக் கண்டு பிடித்தார்கள். இதுவே, ஐரோப்பாவிலும் நடைமுறையில் வந்து, இந்தியாவில் பல்லக்கு என்ற சாதனமாக அமைந்தது.

இதற்குப் பிறகு, பயண உலகின் முக்கிய காலக்கட்டமாகச் 'சக்கரம்' கண்டுபிடிக்கப்பட்டு, குதிரை, மாடு, ஒட்டகம், யானை முதலியன பூட்டப்பட்ட வண்டி, நடைமுறையில் வந்தது. அடுத்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது சைக்கிள். கடைசியாக இன்றைய நாகரிகத்தின் முன்னோடியாக மோட்டார் கார் கண்டு பிடிக்கப்பட்டு, வாகன உலகில் முக்கியமான இடத்தைப் பெற்றது.

தீவிர மக்கள் தொகைப் பெருக்கம், வாகனங்களின் அதிகரிப்பு, குறைவான சாலைகளின் விஸ்தரிப்பு எல்லாமாகச் சேர்ந்து பெரும் பிரச்சினைகளை உண்டு பண்ணியிருக்கின்றன. அதில் முக்கியமானது சாலை விபத்துக்கள்.

வாகனங்களைப் போலப் பாதசாரிகளின் எண்ணிக்கையும் ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே போகிறது. இன்றைய வாகனங்கள் அகலமாகவும், உயரமாகவும், நீளமாகவும், அதி வேகமாகவும் செல்வதால் சாலைகளில் அதிக இடத்தை ஆக்ரமிக்க வேண்டியதிருக்கிறது.




ஆனால் பழைய காலத்தில் கட்டப்பட்ட பல சாலைகள் இன்றைய வாகனங்களின் அளவையும், எடையையும் தாங்கக்கூடிய நிலையில் இல்லை. குழப்பமான சாலைச் சந்திப்புகள், கண் மறைவான சந்துகள் (Blind Corners) சரியான விளக்கு ஒளியில்லாத இடங்கள் முதலியவற்றால் சாலைப் போக்குவரத்து பாதிக்கப்பட்டு விபத்துக்கள் நடைபெற்று விடுகின்றன.

வாகனங்களின் எண்ணிக்கையும் பாதசாரிகளின் எண்ணிக்கையும் கூடுவதுபோல, வாகனங்கள் செல்லக்கூடிய சாலையின் பரப்புக் கூடுகிறதா என்று பார்த்தால், இல்லை. அதற்குப் பதிலாகக் குறைகிறது. காரணம் என்னவென்றால். சாலையின் ஓரம் உள்ள கடை திடீரென முன்னால் சில அடிகள் நீண்டு விடுகிறது.

கடைகளின் முன்னால் வாகனத்தை நிறுத்தி வைப்பது, தேவையில்லாமல் அதிக நேரம் நிறுத்தி, மற்ற வாகனங்களுக்கு இடையூறு விளைவிப்பது, திடீரெனத் தோன்றும் வழிநடைக் கடைகள், சரக்குகளை லாரி ஷெட்டுகளுக்கு முன்னால் ஏற்றுவதும் இறக்குவதும், கால்நடைகளைச் சாலைகளில் அலைய விடுவதும், சாலையின் ஓரம் ஏல வியாபாரிகள் கூடுவதும், ஒரே நேரம் வேகமுள்ள வாகனங்களும் சாலையில் போவதும், மதச் சம்பந்தமானதும், அரசியல் சார்புள்ள கட்சிகள் ஊர்வலம் நடத்துவதும் அரசுத் துறையில் உள்ள பணியாளர் அடிக்கடி சாலையைக் கிளறித் தங்கள் துறையின் வேலைகளைச் செய்வதாலும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு இதனால் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகி விடுகின்றன.

சாலை விபத்துக்களை ஆராய்ந்து பார்த்தால், தவறாக, கண் மூடித்தனமாக ஓட்டுவதால்தான் விபத்துக்கள் நேருகின்றன என்பது தெரிகிறது. 'பெருஞ்சாலைப் போக்குவரத்தை எளிதாக்குதல்'



என்ற தனது புத்தகத்தில், திரு ஈனே, காரோட்டிகளை 4 வகையாகப் பிரிக்கலாம் என்பதாகக் கூறியுள்ளார்.

1. சாலை விதிகளைத் தெரிந்தவர்கள்; அதன்படி நடக்க விரும்புபவர்கள்.

2. சாலை விதிகளைத் தெரியாதவர்கள்; ஆனால் அதைத் தெரிந்து கொண்டால் அதன்படி நடந்து அதைக் கைக்கொள்ள விரும்பாதவர்கள்.

3. சாலை விதிகளைத் தெரிந்தவர்கள்; ஆனால் அதன்படி நடந்து கொள்ள விரும்பாதவர்கள்.

4. சாலை விதிகளைத் தெரியாதவர்கள். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும், அதைத்தெரிந்துகொண்டு வழி நடக்க விரும்பாதவர்கள்.

இதில் கடைசியாக உள்ள 3 பிரிவினரையும்தான் சாலை விதிகளைக் கற்றுக் கொள்ள வைத்து, பொறுப்பை உணர வைத்து- சாலை விதிகளின் அவசியத்தையும், விபத்துக்களைத் தடுக்க ஒரு நாட்டின் குடிமகனாக எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் உணர வைக்க வேண்டும்.

**"தனக்கு வழிவிட்டு அடுத்தவன் ஓட்ட வேண்டும் என்று நீ நினைப்பதுபோல, அடுத்தவனுக்கு நீ வழிவிட்டு ஓட்ட வேண்டும்"** என்ற சாலையின் மிக முக்கிய சட்டத்தை எல்லா வாகன ஓட்டிகளின் மனத்திலும் புகுத்த வேண்டும். சாலை விதிகளைப் பற்றிக் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் போதிக்க வேண்டும்.

சாலை விபத்துக்கள் அதிகமாக நடக்கின்ற பகுதிகளில் சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், புகைப்படங்கள் வைப்பதன் மூலமாகவும், பத்திரிகை, சினிமா, வானொலி நிகழ்ச்சிகள். கண்காட்சிகள் மூலமாகவும், சாலை விதிகளை அறிவுறுத்திச் சாலைகளில் ஒழுங்காக ஓட்டுவதைப் பற்றியும், ஒழுங்காக நடப்பதைப் பற்றியும் போதிக்க வேண்டும்.

சாலை விபத்துக்கள் நடப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன:

1. அதிவேக வாகன ஓட்டத்தாலும், தன் கவனக்குறைவான பாதசாரிகளாலும், வாகனம் ஓட்டத்திலிருக்கும்போது வாகனத்திலிருந்து இறங்குவதாலும், ஏறுவதாலும்,

2. அனுபவமில்லாத காரோட்டியாலும், மோசமான சாலையாலும், சரியான சாலை விதி இல்லாததாலும்.

3. கால நிலையினாலும், வழுக்கான சாலையினாலும், கூர்மையான திருப்பத்தாலும், சாலையின் விபத்தினால் மீட்கமுடியாத ஒன்று மனித உயிர். மற்ற எல்லாக் குற்றத்தையும்விடச் சாலை விபத்துக்களால்தான் அதிக உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சமீபகாலம் வரை நிறையப் பேர் அறிந்திருக்கவில்லை.

சென்னை நகரின் போக்குவரத்து, சில பிரச்சினைகளைக் கொண்டது. ஏனெனில் அதி வேகமாகப் போகும் கார்களும், பஸ்களும், லாரிகளும், மூன்று சக்கரவண்டிகளும், இரண்டு சக்கர வண்டிகளும், வேகக்குறைவான சைக்கிள்களும், காலால் ஓட்டப்படும் ரிக்ஷாக்களும், கையால் ஓட்டப்படும் வண்டிகளும் ஒரே நேரத்தில் போக வேண்டியதிருக்கிறது. இந்த ஒரே சீரான போக்குவரத்துக் கட்டுப்படுத்தப்படவில்லையானால் மனித உயிர்களைக் காப்பாற்றுவது கஷ்டம்.

1967-ஆம் ஆண்டு, பதிவு செய்யப்பட்ட மொத்த வாகனங்கள் 33,766. ஆனால் இந்த எண்ணிக்கை 1976-ஆம் ஆண்டு இரண்டு மடங்காகியது.(மொத்த வாகனங்கள் 64,266). 1967-ல் ஏற்பட்ட மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை 8,144. இவ் விபத்துக்கள் 1976-ஆம் ஆண்டில் 5,452 ஆகக் குறைந்தது. ஆனால், 1967-ஆம் ஆண்டில் நடந்த விபத்துக்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 143-லிருந்து 1976-ஆம் ஆண்டில் 198 ஆக உயர்ந்தது. 1976-ஆம் ஆண்டில் நடந்த மொத்த விபத்துக்கள் 5,452-க்கும் முக்கியமான காரணங்கள்:—

(1) நெருங்கிப் பின்னே செல்லுதல்,

(2) சாலை அறிவிப்புகளை மீறுதல்,

(3) தவறான முன்னேறுதல்,

(4) ஓடும் வாகனத்தில் ஏறுதல், இறங்குதல்,

(5) கண்மூடித்தனமான, முட்டாள்தனமான வேகம்,

(6) பிரேக் சரியாக இயங்காமை,

(7) குடித்துவிட்டு ஓட்டுதல்,

(8) தவறான பக்கத்தில் முந்துதல்.

ஆனாலும் 1967-ஆம் ஆண்டை விட 1976-ல் விபத்துக்கள் குறைந்ததற்குச் சாலை விதிகள் ஒழுங்கான முறையில் நடைமுறையில் கொண்டு வரப்பட்டு கண்ட்ரோல் செய்யப்பட்டதே காரணமாகும்.

சாலை விபத்துக்களுக்கான முக்கிய காரணங்கள் நல்ல முறையில் தெளிவாக ஆராயப்பட்ட வேண்டும். முறையான கல்வியின் மூலம் சாலை விதிகள் அறியப்பட்டு, ஒழுங்கான முறையில் அனுஷ்டிக்கப்பட்டு, விபத்துக்கள் நடக்காதபடி வழிவகைகள் செய்யப்பட வேண்டும். சாலை விதிகள் ஒழுங்கான முறையில் கைக்கொள்ளப்பட்டு அதன் மூலம் விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பது பாதசாரிகள், மோட்டார் ஓட்டிகள், காவலர் ஆகிய மூவரின் ஒன்றுபட்ட முயற்சியில்தான் அடங்கியுள்ளது. ஆகவே, இந்த முக்கியமான பிரச்சினையான, சாலை விபத்துக்களைத் தடுப்பது எல்லோருடைய ஒன்றுபட்ட கடமையாகும்.





புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் நிவாரணப் பணிகள், நிவாரணநிதி வசூல், புயல்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற் கொண்டு செய்யவிருக்கும் மறுவாழ்வுப் பணிகள் ஆகியவை பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக 6-12-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் நடைபெற்றது.

# படச் செய்திகள்

தமிழ்நாடு கால்நடை பராமரிப்பு அலுவலர்கள் மாநாட்டை 6-12-1977 அன்று, சென்னை இராஜாஜி மண்டபத்தில், மாண்புமிகு தமிழகச் சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் துவக்கி வைத்துக் கண்காட்சியைப் பார்வையிட்டார்.



ஈரான் நாட்டு முன்னாள் முதல்வரும், 'செனட்' தலைவருமான திரு. ஜாபர் ஷெரீப் இமாமி அவர்கள் தலைமையில், தமிழ்நாட்டிற்கு வருகை தந்த ஈரான் நாட்டுப் பிரதிநிதிகள் 6-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களைச் சந்தித்தனர்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் உடைந்துபோன குடகனாறு அணையைப் பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வேடசந்தூர்-குடகனாறு பகுதியில் நடைபெறும் வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார்.





முன்னாள் இராணுவ வீரர்களின் நலனுக்காக 7-12-1977 அன்று இந்தியாவெங்கும் "கொடிநாள்" விழா நடைபெற்றது. மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரதி வினய் ஜா அவர்களிடம் கொடிநாள் நிதி அளிக்கிறார்.

முதறிஞர் இராஜாஜி அவர்களின் 100-வது பிறந்த நாளையொட்டி, இராஜாஜி நினைவாலயத்தில் உள்ள இராஜாஜி சிலைக்கு 8-12-1977 அன்று, மேதகு தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் மாலையணிவித்தார்.





முதறிஞர் இராஜாஜி அவர்களின் 100-வது பிறந்தநாளையொட்டி, சென்னை சர்தார் வல்லபாய் பட்டேல் சாலையில் உள்ள இராஜாஜி நினைவாலயத்தில் இருக்கும் இராஜாஜி சிலைக்கு 8-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் மாலையணிவித்தார்.



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 8-12-1977 அன்று நடைபெற்ற முதறிஞர் இராஜாஜி அவர்களது 100-வது பிறந்தநாள் விழாவில், முதறிஞர் இராஜாஜி நூற்றாண்டு விழாக் குழுவினர் சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சென்னை சட்டக் கல்லூரி மாணவர் திரு ஆர். பழனிச்சாமிக்கும், 'ஹோலி ஏஞ்சல் கான்வெண்ட்' மாணவி செல்வி ரதிகாவுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தங்கப் பதக்கங்களையும், பரிசுப் புத்தகங்களையும் வழங்கினார்.





சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த பள்ளி மாணவர் நல மருத்துவக் குழு மற்றும் சமூக சேவைப் பிரிவைச் சார்ந்த மருத்துவர்கள் 30-11-1977 அன்று, காசுத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த சிறுவர்-சிறுமியர்களுக்குத் தடுப்பு ஊசி போட்டனர்.



திரைப்படப் பட்டதாரிகள் சங்க முதலாண்டு விழாவிற்குத் தலைமை வகித்த மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்,முதற்பரிசுபெற்றவருக்குச்சுழற்கேடயம்' வழங்கினர்.

திரைப்படப் பட்டதாரிகள் சங்கத்தின் முதலாண்டு விழா தென்னிந்திய திரைப்பட வர்த்தகச் சங்க அரங்கில் 11-12-1977 அன்று நடைபெற்றது. அவ்விழாவையொட்டி வெளியிடப்பெற்ற சிறப்புமலரை மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வெளியிட்டு. பரிசு பெற்றவர்களுக்கு 'நினைவுச் சின்னம்' வழங்கினர்.





# ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகியது!

**— கல்கி**



கதைகளில் எத்தனையோ வகைக் கதைகள் இருக்கின்றன. அராபியக்கதை, அத்தைப் பாட்டிக் கதை, விக்ரமாதித்தன் கதை, மதனகாமராஜன் கதை. தற்காலத்து நவீனச் சிறு கதைகள்—எல்லாம் இருக்கின்றன. உபநிஷதங்களிலும், பைபிளிலும் கூடக் கதைகள் இருக்கின்றன. இவற்றில் ராஜாஜியின் கதைகள், உபநிஷதக் கதைகளோடு சேர்க்கப்பட வேண்டியவை.

கட்டுரைகளில் எத்தனையோ வகைகள் உண்டு. ஒரு தடவை படித்து விட்டு எறிய வேண்டியவை, இரண்டு மூன்று தடவைகள் படித்துச் சிந்தித்துப் பயன்பெற வேண்டியவை. படிக்காமலேயிருந்தால் க்ஷேமம் என்ற இனத்தில் சேர்ந்தவை-இப்படிப் பலவகைக் கட்டுரைகள் உண்டு. பகவத்கீதையைப் போல் தினம் பக்தியுடன் பாராயணம் செய்ய வேண்டிய கட்டுரைகளும் உண்டு.

இந்தக் கடைசி வகையைச் சேர்ந்தவை ராஜாஜியின் கட்டுரைகள்.

சென்ற நாற்பதாண்டுக் காலத்தில் தமிழ் மொழியிலே எத்தனை எத்தனையோ வசன நூல்கள், கவிதை நூல்கள்-பதினாயிரம், லட்சம் என்ற கணக்கில் வெளியாகியிருக்கின்றன.

இவ்வளவு நூல்களிலே இன்னும் நூறு வருஷங்களுக்குப் பிறகு வரும் தமிழர் சந்ததிகள் படிக்கக் கூடிய நூல்கள் எவை என்று கேட்டால், பாரதியாரின் கவிதைகளும், ராஜாஜியின் கதைகள்- கட்டுரைகளும்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏனெனில் இந்தக் கதைகளில் வரும் பாத்திரங்கள் நம் காலத்து ஸ்திரீகள், புருஷர்களேயானாலும், அவர்களைக் கொண்டு விளக்கப்படும் உண்மைத் தத்துவம் முக்காலத்துக்கும் பொதுவானது: சாசுவதமானது; அழிவில்லாதது, உண்மைத் தத்துவத்தை விளக்கும் காரணத்தினாலே, கதையின் ஓட்டமும் சுவையும் குறைந்து விடுகின்றனவா? படிக்க ஆரம்பிக்கும் போதே, "இதெல்லாம் பெரிய விஷயங்கள், நமக்கு எங்கே விளங்கப் போகிறது?" என்று தோன்றி விடுகிறதா?

ராஜாஜி அப்படியெல்லாம் நம்மைப் பயமுறுத்துவதில்லை. சின்னஞ் சிறு பிள்ளைகள் கூடப் படிக்க ஆசை கொள்ளும் முறையிலே கதையைத் தொடங்குகிறார். அப்புறம் கதையின் சுவாரசியத்திலே தங்கு தடை இல்லாமல் நம்மை இழுத்துக் கொண்டே போகிறார். கதையை முடிக்கும் போது, "இத்தனை நேரமும் நாம் கதை படித்தோமா, வேத மந்திரம் படித்தோமா?" என்று திகைக்கும்படிச் செய்து விடுகிறார்.

எளிய வாழ்வுக்கும் உயரிய சிந்தனைக்கும் ராஜாஜி உதாரண புருஷராக விளங்குகிறார். இந்த இரண்டு அம்சங்களையும் அவருடைய தமிழ் நடையிலும் காண்கிறோம்.

எளிமை என்றால், இதைவிட எளிமையாகத் தமிழ் எழுதவே முடியாது என்று சொல்லலாம். ஆனால், நடை எவ்வளவுக்கு எளியதோ, அவ்வளவுக்கு ராஜாஜி எழுதும் விஷயங்கள் உயர்வானவை.

இன்னும் ராஜாஜியிடம் நாம் காணும் ஒப்பற்ற தூய்மை, கட்டுப்பாடு, வினைத்திட்பம் ஆகியவற்றையும் அவருடைய தமிழ்நடையில் காண்கிறோம். மலைச் சுனையில் உற்பத்தியாகிப் பாறைகற்களின் மீதும் கூழாங்கற்களின் மீதும் சலசல வென்று ஓடும் பளிங்கு போன்ற தூய்மையான ஓடை நீரில் எத்தகைய தெளிவை நாம் காண்கிறோமோ, அத்தகைய தெளிவை ராஜாஜியின் தமிழ் நடையில் காண்கிறோம்.

குற்றாலம், பாபநாசம் முதலிய மலைகளில் தெளிந்த நீரருவி ஆடிக் கொண்டும் பாடிக்கொண்டும் வரும்போது நடுவில் சில இடங்களில் ஆழமான சுனைகளில் விழுந்தும் வருவதுண்டு. அந்தச் சுனைகளில் கழுத்து அளவு ஆழமும், அதைவிட அதிகமான ஆழமுங்கூடச் சில இடங்களில் இருப்பதுண்டு. ஆனால் சுனையில் குனிந்து பார்த்தோமானால், அவ்வளவு ஆழத்தின் அடியில் கிடக்கும் கூழாங் கற்களும் சரள்கற்களும் நன்கு புலனாகும். அப்படியே ராஜாஜியின் கட்டுரைகளைப் படித்துக் கொண்டே போகும் போது சில சமயம் ஆழ்ந்த கருத்துக்களடைந்த பகுதிகளுக்கு வருகிறோம். ஆனால் ஆழத்தைக் கண்டு நாம் பயப்படுவதில்லை. அடியிலுள்ள முத்துக்களையும் ரத்தினங்களையும் தெளிவாகக் கண்டு அதிசயிக்கிறோம். சிலர் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்று உபசாரத்துக்குச் சொல்வதுண்டு. ராஜாஜி தொட்டதெல்லாம் தெளிவாகிறதென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

—ஆதாரம்: கல்கி இதழ் (1961)



## துண்டிக்கப்பட்ட தொலைபேசித் தொடர்புகள் துரிதமாகச் சீரமைக்கப்பட்டன !

புயல் வீசுவதற்கு முன்பு திருச்சி, கரூர், பாண்டிச்சேரி, கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் 15,000 தொலைபேசி வழிகள் (Lines) இயங்கி வந்தன. புயல்—வெள்ளத்தால் தந்திக் கம்பங்கள் சாய்ந்ததாலும், மரங்கள் விழுந்துத் தந்திக் கம்பிகள் அறுந்ததாலும், 12-11-1977 அன்று மேற்கூறிய பகுதிகளில் 7,500 தொலைபேசி வழிகள் தொடர்பற்று இயங்கவில்லை.

புயலாலும், அதன்பின் ஏற்பட்ட வெள்ளத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டது திருச்சி தொலைபேசி அமைப்பேயாகும். திருச்சி நகரின் தாழ்வான பகுதிகள், ஏறத்தாழ 48 மணி நேர அளவுக்கு வெள்ளத்தில் மூழ்கின! மேல் மட்ட தந்திக் கம்பிகள் மட்டுமன்றி, பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள 'கேபிள்'களும் பாழ்பட்டதால், திருச்சியில் உள்ள 5,200 தொலைபேசி வழிகளில் 3,000 தொலைபேசி வழிகள் இயங்காமல் இருந்தன. அவைகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டு 23-11-1977க்குள் இயல்பான நிலைக்குத் திரும்பின.

ஸ்ரீரங்கம் தொலைபேசித் தொடர்பகத்தில் ஏறத்தாழ 2 நாள் வரை வெள்ளம் நின்றது. இத்தொலைபேசித் தொடர்பகம் வெள்ளத்தின் காரணமாக 12-11-1977 அன்று மூடப்பட்டது. இந்தத் தொலைபேசித் தொடர்பகத்தின் ஒரு பகுதியை 19-11-1977 அன்றுதான் மீண்டும் இயங்கச் செய்ய முடிந்தது.

இது போலவே, பல நகரங்களின் தொலைபேசித் தொடர்பகங்களும், புயல்—வெள்ளத்தால் பாழடைந்தன. இதனால் அவ்வூர்கள் வெளியுலகத் தொடர்பற்று இருந்தன!

சாய்ந்த கம்பங்களை நிலைநிறுத்தி, ஒடிந்த கம்பங்களை அகற்றிப் புதிய கம்பங்களை நட்டு, அறுந்த கம்பிகளைப் புதுப்பித்துத் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்த தொலைபேசித் துறையினர் துரிதமாகப் பணியாற்றினர். அவர்களுடைய அயராத முயற்சினால் தொடர்பற்றிருந்த தொலைபேசி வழிகளின் எண்ணிக்கை 7,500லிருந்து படிப்படியாகப் பின்கண்டவாறு குறைந்து 10 நாளில் 1,100 என்று ஆகியது.

| நாள் | தொடர்பற்றிருந்த தொலைபேசி வழிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 12—11—1977 | 7,500 |
| 15—11—1977 | 5,100 |
| 18—11—1977 | 3,400 |
| 21—11—1977 | 2,400 |
| 23—11—1977 | 1,100 |

தொடர்பற்றிருந்த மீதி 1,100 தொலைபேசி வழிகளும் பிறகு உடனடியாகச் சரி செய்யப்பட்டு விட்டன. தற்பொழுது எல்லாத் தொலைபேசி வழிகளும் இடையூறு இன்றி இயங்குகின்றன. சோதனை மேல் சோதனை ஏற்பட்டு வந்த போதிலும், தொலைபேசித் துறையினர் துவண்டுவிடாமல் சாதனை படைத்துள்ளனர் என்றால் மிகையாகாது! எனவே. அவர்களைப் பாராட்டுவது நம் கடமையாகும்.





## இரயில்வே துறையினர் இரவுபகல் பாராது பாடுபட்டு இரயில் போக்குவரத்தை மீண்டும் துவக்கினர் !

"அடுத்த அறிவிப்பு வெளியாகும் வரை எந்த இரயிலும் புறப்படாது!'' என்ற இரயில்வே நிலைய ஒலிபெருக்கிகள் ஒலித்துக் கொண்டிருந்தன! அவசரமாகச் செல்ல வேண்டிய பயணிகள் மூட்டை முடிச்சுகளுடனும், குழந்தைகளுடனும் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்றனர்!

* * * *

''நடு வழியில் இரயில் நின்றுவிட்டதே! இரயில் போகாதா?'' என்று கேட்டவண்ணம் பயணிகள் இரயில் வண்டியிலிருந்து தடதட வென்று கீழே இறங்கினர்!

''வழியில் பாலம் உடைந்து விட்டதால் இரயில் போகாது!'' என்று கேள்விப்பட்டு, ''போக வேண்டிய இடத்திற்கு எப்படிப் போவது?'' என்று திகைத்து நின்றனர்!

* * * *

இரயில் நிலையத்தின் ஓடுகளெல்லாம் புயலில் பறந்து விட்டதால் பயணிகள் தங்க இடமின்றி, சாப்பிட வழியின்றித் தவித்தனர்!

* * * *

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தமிழகத்தின் பல இடங்களில் அண்மையில் காண நேர்ந்தது! ஆம்! அண்மையில் வீசிய புயல், பெய்த மழை ஆகியவற்றினால் தமிழகத்தின் பல இடங்களில் இரயில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு பயணிகள் தவித்த காட்சியைக் கண்டு மனம் உருகியது!

வங்கக் கடலில் தோன்றிய புயல் நாகப்பட்டினம் அருகே 12-11-1977 அன்று கரையைக் கடந்தது. நாகப்பட்டினம் இரயில் நிலையத்தின் மேலே வேயப்பட்டிருந்த 'ஆஸ்பெஸ்டாஸ்' ஓடுகளெல்லாம் புயலில் பறந்து விட்டன. பயணிகள் தவித்தனர்.

கடும் மழை பெய்ததால்—காட்டாறுகளிலெல்லாம் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால்—பல இடங்களில் இரயில் பாதைகளில் உடைப்புகள் ஏற்பட்டன!

கரூருக்கு அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இரயில் பாலம் இடிந்து விட்டது!

### சேதங்கள்

புயல்—வெள்ளத்தால் இரயில்வே துறைக்குப் பின்கண்ட சேதங்கள் ஏற்பட்டு உள்ளன.

| | |
|---|---|
| இரயில் பாதைகளுக்கும், இரயில் நிலையக் கட்டடங்களுக்கும் ஏற்பட்டுள்ள சேதங்களின் மதிப்பு | ரூபாய் 1.5 கோடி |
| கரூருக்கு அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே மீண்டும் புதிதாகப் பாலம் கட்டுவதற்கு ஆகக்கூடிய செலவு | ரூபாய் 1.0 கோடி |
| சேதமடைந்த இரயில் பாதையின் நீளம் | 6,533 மீட்டர் |
| இடிந்த பாலங்களின் எண்ணிக்கை | 94 |
| சேதமடைந்த இரயில்வே தொழிலாளர் வீடுகளின் எண்ணிக்கை | 437 |
| பாழடைந்த இரயில் நிலையங்களின் எண்ணிக்கை | 19 |

இரயில் பாதையில் பற்பல இடங்களில் ஏற்பட்ட உடைப்புகளாலும், இரயில் பாலங்கள் இடிந்ததாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்தின் பகுதிகளில் கடந்த நவம்பர் 12, 13 ஆகிய இரு நாட்களில் இரயில் போக்குவரத்து ஏறத்தாழ முழு அளவுக்கு நடைபெறவில்லை.



இரயில்வே துறையினர் பல்லாயிரக்கணக்கான ஆட்களை வைத்து இரவும் பகலும் பணியாற்றி, உடைப்புகளை அடைத்து, பாலங்களைச் சீரமைத்ததால், பின்கண்டவாறு பல பிரிவுகளில் இரயில் போக்குவரத்து மீண்டும் துவங்கப்பெற்றது.

### மீண்டும் இரயில் போக்குவரத்து துவங்கியது !

| பிரிவின் பெயர் | இரயில் போக்குவரத்து மீண்டும் துவங்கிய நாள் |
|---|---|
| 1. திண்டுக்கல்-பொள்ளாச்சி | 14-11-77 |
| 2. விழுப்புரம்-காட்பாடி | 16-11-77 |
| 3. விருத்தாசலம்-சேலம் | 16-11-77 |
| 4. திருச்சி-விழுப்புரம் முக்கிய வழியில் கடலூர்-திருச்சி | 16-11-77 |
| 5. திருச்சி-விழுப்புரம் குறுக்கு வழியில் விழுப்புரம்-லால்குடி | 17-11-77 |
| 6. திருச்சி-விழுப்புரம் முக்கிய வழி முழுவதும் | 18-11-77 |
| 7. மாயவரம்-தரங்கம்பாடி | 18-11-77 |
| 8. மாயவரம்-காரைக்குடி | 18-11-77 |
| 9. பேரளம்-காரைக்கால் | 18-11-77 |
| 10. விழுப்புரம்-திருச்சி குறுக்கு வழி முழுவதும் | 19-11-77 |
| 11. திருச்சி-திண்டுக்கல் பிரிவில் திருச்சியிலிருந்து மணப்பாறை வரை | 19-11-77 |
| 12. திருச்சி-ஈரோடு பாதையில் திருச்சிக்கும் வீரராக்கியத்திற்கும் இடையில் | 21-11-77 |
| 13. திருச்சி-ஈரோடு பாதையில் வீரராக்கியத்திற்கும் கருருக்கும் இடையில் உள்ள பகுதி தவிர்த்த மீதிப் பாதை முழுவதும் | 21-11-77 |
| 14. நாகை-நாகூர் | 22-11-77 |
| 15. திருச்சி-திண்டுக்கல் பாதை முழுவதும் | 23-11-77 |

### சீரமைப்புக்குப் பயன்படுத்தப்பட்ட ஆட்களும், பொருள்களும் !

இவ்வாறு பத்தே நாட்களில் இரயில் போக்குவரத்தை எல்லாப் பிரிவுகளிலும் மீண்டும் துவக்குவதற்கு இரயில்வேத் துறையினர் 72,000 பேர்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் பின்கண்டவைகளைப் பயன்படுத்தியுள்ளனர்:

| | |
|---|---|
| பயன்படுத்தப்பட்ட 'சிண்டர்' வாகன்கள் | 1,600 |
| பயன்படுத்தப்பட்ட 'பௌல்டர்' வாகன்கள் | 182 |
| பயன்படுத்தப்பட்ட 'ஸ்லீப்பர்கள்' | 3,500 |

இரவு பகல் பாராது பாடுபட்டு, பத்தே நாட்களில் 15 பிரிவுகளில் முழு அளவில் இரயில்வே போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்காகவும், 25 இலட்சம் ரூபாய் செலவிட்டுப் பதினைந்தே நாட்களில் அமராவதி ஆற்றின் குறுக்கே தற்காலிகப் பாலம் அமைத்து, 16—12—1977 அன்று திருச்சி—ஈரோடு இரயில் போக்குவரத்தை முழுமையாகத் துவக்கியதற்காகவும் நாம் இரயில்வே துறையினரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.





# அழகைக் காட்டும் கண்ணுடி !

"அலங்காரம் இன்னுமா முடியலே? மணி ஆகுதே!"

"இதோ வந்துட்டேங்க!"

கண்ணுடிமுன் மணிக்கணக்காக நின்றுகொண்டு அலங்காரம் பண்ணிக் கொள்வது பெண்கள் மட்டுமா, ஆண்களும் கூடத்தான்!

அகத்தின் அழகு முகத்தில் தெரிகிறதோ இல்லையோ, ஆனுல் முகத்தின் அழகு கண்ணுடியில் தெரிகிறது!

அன்றுட வாழ்க்கையில் கண்ணுடி ஓர் இன்றியமையாத பொருளாக விளங்குகிறது. இதன் உதவி இல்லாமல் நாம் வெளியே வருவதில்லையே! யார் முகத்தில் விழிக்கிறேமோ இல்லையோ, நாம் கண்ணுடி முகத்தில் விழித்தே ஆக வேண்டும்!

முகம் பார்க்கும் கண்ணுடிகளில்தான் எத்தனை வகை!

சதுரம், வட்டம், நீண்ட வட்டம், முக்கோணம் இப்படிப் பல வகைகளில், பல அளவுகளில் அழகிய சட்டங்களுடன் காட்சியளிக்கும் கண்ணுடிகளைக் கடைகளில் பார்க்கும்போது, யாருக்குத்தான் அதை வாங்க மனம் வராது?

வாங்குவதற்கு முன், அந்தக் கண்ணுடிகள் தயாராகும்தொழிற்கூடத்துக்குப் போய் வருவோமா?

சென்னைக் கிண்டித் தொழிற்பேட்டை!

தமிழ்நாடு அரசு உருவாக்கியிருக்கும் இத்தொழிற்பேட்டையில் பல்வேறு தொழில்கள் பாங்காய் வளர்ந்து வருகின்றன; அதன் மூலம் பல்லாயிரவர் வேலைவாய்ப்புப் பெறுவதையும் நாம் பார்க்கிறேம்.

உழைக்கும் கரங்கள் உருவாக்கும் பொருள்களிலே ஒன்றுய்த் திகழ்வது முகம் பார்க்கும் கண்ணுடியும் ஆகும். இதனை உருவாக்குகிறது, இந்தத் தொழிற்பேட்டையில் உள்ள ஒரு நிறுவனம்.

## வளரும் தொழில்

1946-ல் குடிசைத் தொழிலாக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் பிறகு படிப்படியாக வளர்ந்தது. இதற்குக் கை கொடுக்கும் வகையிலே மத்திய, மாநில அரசுகள் உதவின. தொழிலுக்கு இடந்தந்தது தமிழக அரசு. தொழிலை வளர்க்கப் பொருளுதவி வேண்டுமல்லவா? அதற்கு உதவமுன் வந்தது 'சிட்கோ'. இயந்திரங்களுக்குத் தேசிய உடைமையாக்கப்பட்ட 'ஸ்டேட் வங்கி' கடன் தந்து உதவியது.

எல்லாவற்றுக்கும் மேலாக விடாமுயற்சியும், கடின உழைப்பும் இந்நிறுவனத்தாருக்கு இருந்ததால், மனம் தளராமல் இத்தொழிலில் அவர்கள் வெற்றி காண முடிந்தது. உழைப்பால் உயரலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய்த் திகழும் இந்நிறுவனம், இப்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இத்தொழிற்கூடத்தினுள் நுழைகிறேம்.

பெரிய கண்ணுடியின் நான்கு பக்க ஓரங்களுக்குப் பட்டை தீட்டுகிறது ஒரு இயந்திரம். இந்த இயந்திரம் பெல்ஜியத்திலிருந்து தருவிக்கப்பட்டது என்றும், இங்குள்ள மற்ற இயந்திரங்கள் இந்நிறுவனத்தாராலேயே தயாரிக்கப் பெற்றவை என்றும் அறிகிறேம்.

பட்டை தீட்டிய கண்ணுடிகளுக்கு மெருகு தரும் இயந்திரத்தையும் பார்க்கிறேம். சிறிய கண்ணுடிகளுக்குப் பட்டை தீட்டும் மற்றெரு இயந்திரத்தையும் பார்த்துக் கொண்டே [illegible] செல்கிறேம்.

பெரிய கண்ணுடிகளுக்குப் பட்டை தீட்டும் இயந்திரம்.





கண்ணாடிகளுக்கு வடிவு அமைத்தல்.



கண்ணாடிக்குத் 'தாமிரப் பூச்சு' பூசப்படுகிறது.

கண்ணாடிகள் எந்த உருவில்-சதுரம், வட்டம், நீண்ட வட்டம் முதலான எந்த உருவில் வேண்டுமோ அந்த உருவில் கண்ணாடிகளைப் பெற உதவுகிறது ஒரு இயந்திரம்.

பிறகு இந்தக் கண்ணாடிகளுக்கு வெள்ளிப்பூச்சு (Silvering Spray) அதாவது 'ரசம்' பூசப்படுவதையும், பிறகு தாமிரப் பூச்சு (Copper Spray) பூசப்படுவதையும் பார்க்கிறோம். கடைசியாகக் கண்ணாடியின் பின்புறம் காவி வர்ணம் பூசப்படுகிறது. இவையனைத்தும் கருவிகளின் உதவி கொண்டே செய்யப்படுகின்றது.

இப்போது கண்ணாடிகள் சட்டம் போடும் பிரிவுக்குக்கொண்டு வரப்படுகின்றன. அங்கே பல வண்ணங்களில், பல கன அளவுகளில் உள்ள மரச் சட்டங்கள் கண்ணாடிகளுக்குப் பொருத்தப்படுகின்றன. இப்போது கண்ணாடி முழு உருவம் பெறுகிறது.

கண்ணாடி நம் கைக்கு வர, முதலில் அது கடைக்கு வர வேண்டாமா?

'பார்சல்' பிரிவில் இந்தப்பணி நடைபெறுகிறது. கண்ணாடிகள் சிறுசிறு அட்டைப் பெட்டிகளில் போடப்பட்டு, அவை பெரிய மரப்பெட்டிகளில் அடைக்கப்படுகின்றன.

இங்குத் தயாராகும் அழகிய முகம் பார்க்கும் கண்ணாடிகள் தமிழகம் தவிர ஆந்திரம், கேரளம், கர்நாடகம் முதலான மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இந்தக் கண்ணாடிகளுக்கு நல்ல ஆதரவு பெருகுவதற்குக் காரணம், இதன் தரமும் குறைந்த விலையுமே ஆகும். இங்குத் தயாராகும் ஒரு கண்ணாடியின் குறைந்த விலை ரூ. 1.10

கண்ணாடியில் பார்த்து நம்மை அழகுப்படுத்திக் கொள்கிறோம். ஆனால், அந்தக் கண்ணாடியும் கொஞ்சம் அழகாக இருக்க வேண்டாமா?

அதற்குக் கண்ணாடிகளைப் பல வடிவங்களில் மட்டும் அமைத்தால் போதுமா? அந்தக் கண்ணாடியில் பூ வேலைப்பாடுகளும் இருந்தால் மேலும் அது வீட்டுக்கு அழகைத் தராதா? அந்தப் பூவேலைப்பாடும் இங்கே தக்கவர்களால் செய்யப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் ஒரு அங்கமாகப் பெரிய அளவில் இயங்கி வருவது 'பில்கோ மிர்ரர்' தொழிற்கூடமாகும். இதுவும் கிண்டித் தொழிற்பேட்டையிலேயே 1961 முதல் இயங்கி வருகிறது.

தென்னிந்தியாவில். நவீன இயந்திர வசதிகளுடன் பல்வேறு கண்ணாடிகளைத் தயாரிக்கும் ஒரே நிறுவனமாக இந்நிறுவனம் விளங்கி வருகிறது. இந்தத் தொழிற்கூடத்தில், இந்தியாவில் வேறெங்கும் இல்லாத 'Airless Spray Equipment' என்ற நவீன தானியங்கி இயந்திரம் ஒன்று உள்ளது. இது விரைவாகவும், தெளிவாகவும் கண்ணாடிகளுக்கு 'ரசம்' பூசுகிறது. இன்னொரு நவீன இயந்திரமும் இங்கு உள்ளது. அதன் பெயர்: (Curtain Coat painting Machine).

கண்ணாடிகள் பெல்ஜியம், ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. கல்கத்தாவிலிருந்தும் கண்ணாடிகள் நமக்குக் கிடைக்கின்றன. இவற்றைத் தேவையான அளவுக்குத் துண்டித்து, பட்டை தீட்டி, மெருகு ஏற்றி, 'ரசம்' பூசுவது போன்ற பணிகள் எல்லாம் இங்கே நடக்கின்றன

இங்குத் தயாராகும் முகம் பார்க்கும் மற்றும் ஜன்னலுக்கான அழகிய கண்ணாடிகள் சவூதி அரேபியா, குவைத், மொரீசியஸ் தீவு ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல, பல்வேறு சிறு தொழில்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழ்நாட்டின் தொழில் வளத்துக்கு அணிசேர்க்கின்றன அல்லவா? அதில் இந்த இரு சகோதர நிறுவனங்களுக்கும் சிறப்பான பங்குண்டு என்பதை நாம் மகிழ்ச்சியோடு சொல்லலாம்.

—பி. வி. கிரி





பிரிவு 8. அரசியலமைப்பு அல்லது சட்டம் என்ற இவை வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு முரணைத் தோன்றும் செய்கைகளுக்குத் தகுதி மிகு நாட்டியல் நடுவர்குழுவால் (Tribunal) பரிகாரம் தேடிக்கொள்ள உரிமையுண்டு.

பிரிவு 9. நினைத்தபடி கைது செய்தல், காரணங்காட்டாது சிறையிடல் அல்லது நாடு கடத்தல் என்ற இவற்றுக்கு எவரும் உட்படுத்தப் படார்.

பிரிவு 10. ஒருவரது உரிமையைப் பற்றியோ, கடமையைப் பற்றியோ அன்றி தண்டனைக் குற்றச் சாட்டைப்பற்றியோ முடிவு செய்யுமுன் சுதந்திரமான ஒருபாற் கோடாத நடுவர்குழு முன் நேர்மையான பொதுமன்றத் தீர்ப்பு வேண்ட எவருக்கும் சரிநிகர் உரிமையுண்டு.

பிரிவு 11.—(1) தற்காப்பு எதிர்வாதத் திற்கு வசதியளிக்க உறுதி கூறும் சட்ட இயல்புளி நடக்கும் பொதுமன்ற விசாரணையில் குறிப்பிட்ட குற்றம் மெய்பிக்கப்படும் வரை தண்டனைக் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு குற்றமும் அற்றவர் என்றே கருதப்படுவர்.

(2) அப்பொழுதைய நாட்டியல் அல்லது அனைத்து நாட்டியல் நடைமுறைச் சட்டப்படி ஒருவருடைய செய்கையோ அன்றி செய்யாமையோ அது நிகழும் காலத்தில் தண்டனைக் குற்றமாகாதெனில், அதனை செய்தார் குற்றவாளியாகக் கருதப்படார். அன்றியும் அப்பொழுதைய விதிப்படிப் பொருந்தும் தண்டனையை விடக் கடுமையான தண்டனையும் வழங்கப் படார்.

பிரிவு 12. ஒருவனது அந்தரங்கம், குடும்பம், இல்லம், கடிதப் போக்குவரத்து ஆகியவை பிறரது நினைத்தபடி தலையீட்டுக்கு உட்படா. அன்றியும் ஒருவனது பெருமையும், புகழும் தாக்கப்படா. இத்தகைய தலையீடுகளிலிருந்து தம்மை சட்ட மூலமாகக் காத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. இத்தகைய தலையீடுகள் அல்லது தாக்கல்களிலிருந்து தன்னை சட்ட மூலமாகக் காத்துக் கொள்ள ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு.

பிரிவு 13.—(1) நாட்டு எல்லைக்குள் விரும்பியவாறே எங்கும் போகவோ, குடியிருக்கவோ ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தன் நாட்டை, அல்லது எந்நாட்டையும் விட்டு அகலவோ அவைகளுக்குத் திரும்பவோ உரிமையுண்டு.

பிரிவு 14.—(1) அலைப்புப் பிடியிலிருந்து அகலவும், பிற நாட்டை ஏற்ற புகலிடமாகத் தேடிக்கொள்ளவும், அங்கிருந்து இன்பம் நுகரவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) உண்மையாகவே அனைத்து நாட்டியல் நோக்கத்திற்கும், கொள்கைக்கும் முரணைத் தோன்றுவனவும் அரசியல் குற்றமாகாதனவுமான தொடர் வழக்குகள் பற்றி இவ்வுரிமைகள் வற்புறுத்த மாட்டா.

பிரிவு 15.—(1) நாட்டியலில் சேர்ந்திருக்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) எவரும், தம் நாட்டியலில் தான் தோன்றித்தனமாக மறுக்கப்படார்; அன்றியும் அதனை மாற்றிக்கொள்ளவும் தடை செய்யப்படமாட்டார்.

பிரிவு 16.—(1) இனம், நாட்டியல், சமயம் என்ற இவைகளின் பிடிப்பிலிருந்து நீங்கி வயது வந்த ஆண் பெண் எவரும் விரும்பியவாறே மணம் புரிந்து இல்வாழ உரிமையுண்டு. அவர்களுக்குத் திருமண விடயத்திலும், மண வாழ்க்கையின் போதும், மண விலக்கு (மண முறிவு) விடயத்திலும் சம உரிமையுண்டு.

(2) மணக்க விரும்பும் இருபாலரது சுதந்திரமான முழு இசைவும் பெற்ற பின்பே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்படும்.

(3) குடும்பம், சமுதாயத்தின் இயல்பாக அமைந்த அடிப்படைக்குழு



ஆதலின், அதற்குச் சமுதாயம் அரசு என்ற இவைகளின் பாதுகாப்பைப் பெற முழு உரிமையுண்டு.

பிரிவு 17.—(1) ஒவ்வொருவருக்கும் தனியாகவோ, சேர்ந்தோ சொத்துடைமை கொள்ள உரிமையுண்டு.

(2) முறைகேடான நிலையில் எவருடைய பொருளும் கவர்ந்து கொள்ளப்படமாட்டாது.

பிரிவு 18. ஒவ்வொருவருக்கும் தம் கொள்கையையும், எண்ணத்தையும் சமயத்தையும் பின்பற்ற உரிமையுண்டு. இந்த உரிமை, சமயத்தை மாற்றிக் கொள்ளவும், தனியாகவோ அல்லது கூடியோ சமயக் கோட்பாட்டையோ நம்பிக்கையையோ வெளிப் படுத்துவதற்கும், பின்பற்றுவதற்கும், வணங்குவதற்கும், வழிபடுவதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 19. ஒவ்வொருவருக்கும் எண்ணுவதற்கும், எண்ணியதை வெளியிடுவதற்கும் உரிமையுண்டு. இந்த உரிமை எத்தகைய தலையீடுமின்றி, ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய செய்திகளையும் கருத்துக்களையும் எந்த நாட்டிலிருந்தும் எந்த முறையாலும் பெற்றுக்கொள்வதற்கும் கொடுப்பதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 20.—(1) ஒவ்வொருவருக்கும் அமைதியான முறையில் கூடுவதற்கும், கழகம் அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

(2) எந்தக் கழகத்திலும் சேரும்படி எவரையும் கட்டாயப் படுத்த உரிமை யில்லை.

பிரிவு 21.—(1) ஒவ்வொருவரும் தங்களுடைய நாட்டாட்சியில் நேராகவோ, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் (Representatives) மூலமாகவோ, பங்கெடுத்துக் கொள்வதற்கு உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவரும் அரசியல் அலுவல்களிலே சமமான பங்கு பெற உரிமையுண்டு.

(3) உலகம் ஒப்புக்கொள்ளும் முறையில் மறைமுக வாக்குரிமையாலோ அல்லது அது போன்ற வேறு வழி ஒன்றாலோ காலத்திற்குக் காலம் நடத்தப்படும் தேர்தல்களின் மூலம் வெளியாகும் மக்களின் எண்ணத்தின்படி ஆட்சியின் அடிப்படை அமையும்.

பிரிவு 22. ஒவ்வொருவருக்கும் நாட்டியல் முயற்சியினாலும் கூட்டு நாட்டியல் ஒற்றுமையினாலும் அந்தந்த நாட்டின் அமைப்புக்கும், பொருளாதார நிலைமைக்கும் தகுந்தபடி சமுதாயப் பாதுகாப்பு உறுதி அளிக்கப்படும். அதற்கேற்ப ஒருவருடைய வாழ்வும், பண்பும் உயர்வதற்கு வேண்டிய பொருளாதார, சமுதாய, கலை பண்பு உரிமைகள் காப்பாற்றப்படும்.

பிரிவு 23.—(1) ஒவ்வொருவருக்கும் தமக்கு விருப்பமான வேலையில் அமர்வதற்கும், நலந்தரும் நிலைமைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திலின்று தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் எத்தகைய வேறுபாடுமின்றி தம் தம் வேலைக்கேற்ப ஊதியம் பெற உரிமையுண்டு.

(3) வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் தேவையானபோது சமுதாயப்



பாதுகாப்பு அளிப்பதுடன் மக்கள் வாழ்க்கையின் மதிப்பிலே ஒவ்வொருவரும் அவரவர் குடும்பங்களும் வாழ்வதற்கேற்ற ஊதியம் பெறும் உரிமையுண்டு.

(4) ஒவ்வொருவருக்கும் தம் தம் நலனைக் காப்பாற்றிக் கொள்ள வணிகக் கூட்டுறவுச் சங்கங்களில் சேருவதற்கும் அவற்றை அமைத்துக் கொள்வதற்கும் உரிமையுண்டு.

பிரிவு 24. ஒவ்வொருவருக்கும் வேலை நேரத்தில் வரையறையும், ஓய்வும், விடுபாடும் காலத்திற்குக் காலம் ஊதியத்தோடு பெறும் விடுமுறையும் அடைவதற்கு உரிமையுண்டு.

பிரிவு 25.—(1) உணவு, உடை, வீடு, வைத்திய பராமரிப்பு என்பவற்றுடன் தேவையான சமுதாயச் சேவைகளையும் தானும் தன் குடும்பமும் ஆரோக்யமாக நல்வாழ்வு வாழ்வதற்குப் போதிய வாழ்க்கைத் தரத்தைப் பெறுதற்கும் வேலையின்மை, சுகவீனம், அங்கக்குறை, கைம்பெண்ணுதல், முதுமை அல்லது தன் சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஊதியமின்மை ஏற்படும் காலத்தில் பாதுகாப்புப் பெறுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

(2) கர்ப்பிணிகளும் சிசுக்களும் விசேஷ பாதுகாப்புக்கும் உதவிக்கும் உரிமை உடையவராவர். முறைப்படி விவாக மானவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளாயினும் அவர்கள் ஏற்றத் தாழ்வின்றி ஒரே விதமான சமுதாயப் பாதுகாப்பினை அனுபவிக்க உரிமை உடையவர்களாவர்.

பிரிவு 26.—(1) ஒவ்வொருவருக்கும் படிப்பதற்கு உரிமையுண்டு. முதல் நிலை கல்வியும், அடிப்படைக் கல்வியும் இலவசமாக அளிக்கப்படும். அடிப்படைக் கல்வி கட்டாயமாக வற்புறுத்தப்படும். பொதுவாக, தொழிற் கல்வியிலும் நுட்பக் கல்வியிலும் எல்லோருக்கும் சமமாக வாய்ப்பளிக்கப்படும். உயர்நிலை கல்வி தகுதியின் அடிப்படையிலே வழங்கப்படும்.

(2) அடிப்படை உரிமைகளையும், மனிதரது உரிமைகளின் மதிப்பையும் பெருக்கவும், மனிதரது பண்பாட்டை நிறைக்கவும் ஆன முறையில் கல்வியின் போக்கு அமையும். அது ஒற்றுமையையும், நட்பையும் நாடுகளுக்குள்ளும் இனத்திற்குள்ளும், கூட்டத்திற்குள்ளும் வளர்த்து அமைதியை நிலைநாட்டும் ஐக்கிய நாட்டின் முயற்சியையும் ஓங்கச் செய்யும்.

(3) பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி வகையைப் பற்றி முன்கூட்டியே முடிவு செய்ய முழு உரிமையும் உண்டு.

பிரிவு 27.—(1) ஒவ்வொருவருக்கும் சமுதாயத்தின் கலை வாழ்விலே கலந்து கொள்வதற்கும், கலையிலே ஈடுபடுவதற்கும், அறிவியல் துறை முன்னேற்றத்தில் பங்கு கொள்வதற்கும் அதன் பயனைப் பெறுவதற்கும் உரிமையுண்டு.



பிரிவு 28. இந்த அறிக்கையில் கண்டபடி நாட்டிற்கும், உலகத்திற்கும் பொதுவான அமைப்புக்களால் உரிமைகளை அடைவதற்கு, ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

(2) ஒவ்வொருவருக்கும் தங்களால் வெளியிடப்பட்ட அரசியல், விஞ்ஞான இலக்கிய உண்மைகளினால் வரும் பெயரையும், பொருளையும் பாதுகாத்துக் கொள்ள உரிமையுண்டு.

பிரிவு 29.—(1) ஒவ்வொருவரதும் சுபாவம் கட்டுப்பாடின்றிப் பரிபூரணமாக அபிவிருத்தி யடைதற்குரிய ஒரே ஒரு சாதனம் அவரவரது சமூகமே ஆதலின் அவ்வச் சமூகத்துக்கு அவரவர் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு.

(2) ஒவ்வொருவரும் தன் தன் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகிக்குங்கால் அவர்களது கருமங்களைக் கட்டுப்படுத்துவனவாய செயல்கள், மற்றவர்களது உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அளிக்க வேண்டிய கணிப்பினையும் மதிப்பினையும் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் மாத்திரம் சட்டபூர்வமாக நிருணயிக்கப்பட்டனவாயும், ஓர் சனநாயக சமுதாயத்தின் ஒழுக்கம், பொது சன அமைதி, பொதுச் சேமாபிவிருத்தி என்பவற்றுக்கு நீதி நியாயப்படி வேண்டிய அளவினவாயும் இருக்கும்.

(3) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்து நோக்கங்கள் கொள்கைகளுக்கு முரணாக இவ் வுரிமைகளையும் சுதந்திரங்களையும் எவ் விடயத்திலேனும் பிரயோகிக்க வொண்ணாது.

பிரிவு 30. இவ் வறிக்கையில் கண்ட உரிமைகளையோ, விடுதலைப் பேறுகளையோ அழிக்க வேண்டி எதனையேனும் செய்யவோ, அத்தகைய இயக்கத்தில் ஈடுபடவோ, எந்த நாட்டுக்கும், எந்த குழுவினுக்கும், எந்த மனிதனுக்கும் உரிமையளிக்கும் குறிப்புடையதாக இந்த அறிக்கையில் உள்ள எதற்கும் பொருள் செய்தலாகாது.



# கண்களைக் குளமாக்கும் கதைகள்!

''காற்று வீசியபோதுதான் நான் தங்கியிருந்த வீட்டிலிருந்து வெளியே எட்டிப் பார்த்தேன். என் தலையையே அறுத்துச் செல்லும் வேகத்தில் காற்று வீசியதால் உடனே வீட்டுத் தரையில் மல்லாந்து விழுந்து விட்டேன்.

"பேய்க் காற்றில் வீடுகள் 'படார்', 'படார்' என்று இடிந்து விழும் சத்தம் கேட்டது. நான் இருந்த வீடும் இடிந்து விடுமோ என்ற பயத்தில் மெதுவாக எழுந்து ஜன்னல் வழியே பார்த்தேன்.

''ஓடுகளும், வீட்டுக் கூரைகளும், 'ஆஸ்பெஸ்டாஸ்' மேற்கூரைகளும் அப்பளம் போல் நொறுங்கி விழுந்து கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து நகரை இருள் கப்பிக் கொண்டது. நாகை நகரமே கடலுக்கு இரையாகிவிடுமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தேன்''

## புயலில் சிக்கியவர்கள் கூறியது!

சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர புயல் வெள்ளத்தால் நாகை நகரில் மட்டும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் நாசமடைந்தன.

இந்தப் பயங்கரப் புயல் பற்றி நாகையைச் சேர்ந்த 70 வயது கிழவர் ஒருவர் கூறியதாவது :

''கடந்த 11-ஆம் தேதி நள்ளிரவில் நாகைத்துறைமுகத்தில் புயல் அபாய அறிவிப்பு எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டது. எச்சரிக்கைக் கூண்டு கொடி மரத்தில் ஏற்றப்பட்டதுமே, அந்தக் கூண்டு, கொடி மரத்துடன் முறிந்து விழுந்தது.

''உடனே அபாய அறிவிப்பு மணி அலறத் தொடங்கியது. துறை முகத்தில் உள்ள அபாய அறிவிப்புச் சங்குகளும் தொடர்ந்து ஒலித்தன. அதைத் தொடர்ந்து பேரிரைச்சலுடனும், பெரும் வேகத்துடனும் புயல் காற்று வீசியது.

நாகை கடற்கரைச் சாலை அருகே வசித்த ஒருவர் இந்தப் பயங்கரப் புயல் பற்றிக் கூறியதாவது:

''புயல் வீச ஆரம்பித்த உடனேயே கடலில் கொந்தளிப்பு அதிகரித்தது. வழக்கமாகக் கடலில் கிளம்பும் அலைகளை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், புயல் வீசியபோது எழுந்த அலைகள் கடலில் மிதக்கும் கப்பல் உயரத்திற்கும் சில சமயங்களில் இரண்டு கப்பல்களின் உயரத்துக்கும் எழுந்தன.

''இதனால் துறைமுகத்தின் அருகிலுள்ள உப்பாற்றினுள் கடல் நீர் புகுந்தது. கடலும் உப்பாறும் ஒன்றாகிவிட்டன. இந்த நிலையில் பேய் மழை கொட்டத் தொடங்கியது.

''உப்பாற்றில் புகுந்த வெள்ளம் கட்டுக்கடங்காமல் கண்ட திசைகளிலும் கரை புரண்டு ஓடியது. அந்த ஆற்றின் ஓரத்தில் பல இடங்களில் நிறுத்தப்பட்டிருந்த மின்சாரப் படகுகளும், தோணிகளும் தாறுமாறாக ஓடித் தண்ணீருக்குள் மூழ்கின.''



## ஏழு பேர் கொண்ட குடும்பமே பலியாகியதை நேரில் பார்த்தவர் கூறியது !

வேளாங்கண்ணி அருகே பாப்பா கோயில் என்ற கிராமம் இருக்கிறது.

அங்கு, உயிர் தப்பிய திரு சுப்பிரமணியம் என்ற வாலிபர் நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

அவர் கூறிய சோகக் கதை விவரம் வருமாறு :

''நான் மில்லில் வேலை செய்கிறேன். மில் டிரைவர் குடும்பம் புயலுக்குப் பயந்து மில்லுக்குள் ஓடியது. புயல் பயங்கரமாக அடித்துக் கொண்டு இருந்தது. அவரது குடும்பத்தில் மொத்தம் 7 பேர் இருந்தனர்.

''மில்லுக்குள் இருப்பது அவ்வளவு பாதுகாப்பாக இருக்காது என்பதை நான் உணர்ந்து, அவர்களை அங்கிருந்து அழைத்து வர ஓடினேன்.

''புயல் காற்று ஓயட்டும் போகலாம் என்று டிரைவர் கூறினார். ஆனால் காற்று ஓய்வதற்கு முன்பு மில் கட்டடம் சட சட வென்று இடிந்து விழுந்தது.

''அய்யோ! அய்யோ! என்ற அலறல் சப்தம் கேட்டது.

''நான் மயக்கமுற்று வீழ்ந்து விட்டேன். மயக்கம் தெளிந்து விழித்துப் பார்த்தேன். நான் மட்டும் தப்பித்தேன்! என் கண் முன்னே அந்தக் குடும்பம் முழுவதும் பலியாகி விட்டது!'' என்று கூறினார் திரு சுப்பிரமணியம்.

## இளம் மனைவியை இழந்தவர் கூறியது!

மாரம்பட்டி என்ற ஊரைச் சேர்ந்த ஈசாக் என்பவர், மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு காளிமுத்து அவர்களைக் கண்டதும் தேம்பித் தேம்பிக் கதறி அழுதார். அவர் அழுகையை நிறுத்த நெடுநேரம் ஆயிற்று!

திருமணமாகி 75 நாட்களில் தன் இளம் மனைவி இன்ப மேரியை வெள்ளம் அடித்துச் சென்ற சோகக் கதையை ஈசாக் விவரித்தார்.

''எனக்குக் கல்யாணமாகி 75 நாட்கள் தான் ஆகின்றது. இரவில் திடீரென்று பேரிரைச்சல் கேட்டது. நான் முதலில் விழித்துக் கொண்டு எனது மனைவியை எழுப்பினேன். கதவைத் திறந்து பார்த்தோம். வெளியே வெள்ளக் காடாக இருந்தது. அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து 'ஓ' என்ற அலறல் கேட்டது. பயத்தால் நடுங்கிய எனது மனைவி என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

''நாங்கள் வெளியே ஓடினோம். ஒரே இருட்டு ; ஒன்றும் தெரியவில்லை. முள் மரத்தில் மோதினோம். அப்போதும் என் மனைவி என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். அதன் பிறகு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நாங்கள் பல மரங்கள், புதர்களில் மோதி இழுத்து செல்லப்பட்டோம். அதன் பின் என் மனைவி வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டாள். நான் எப்படியோ தட்டுத் தடுமாறி மேட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தேன்.

இவ்வாறு அழுது கொண்டே ஈசாக் தனது சோகக் கதையைச் சொன்னார்.

## குடும்பத்தையே இழந்தவர் கூறியது!

மாரம்பட்டியைச் சேர்ந்த வேளாங்கண்ணி ஆரோக்கியம் என்பவர் கூறியதாவது:

''வெள்ளம் வந்தவுடன் என் குடும்பத்தைச் சேர்ந்த சந்தியாகு, ஜஸ்டின், ஆரோக்கியம் ஆகிய நாங்கள் வீட்டை விட்டு வெளியேறி மேடானப் பகுதிக்கு ஓடினோம்.

''வெள்ளத்தின் கோரப் பிடியில் சிக்கிய எனது குடும்பத்தினர் அனைவரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர்.

''நான் ஒரு பனைமரத்தைப் பற்றினேன். அந்த மரமும் சாய்ந்தது. அதற்குப் பிறகு ஒரு தென்னை மரத்தைப் பற்றினேன். அதுவும் சாய்ந்தது. இப்படி மரங்களையும், புதர்களையும் பற்றி ஒருவாறாக உயிர் தப்பினேன்''.





## தாய் தந்தையரை இழந்தவர் கூறியது!

வேளாங்கண்ணி அருகே, தெற்குப் பொய்யூர் என்ற கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்தைச் சேர்ந்த ஐசக் செல்[illegible] தன் தந்தை, தாய் இருவரும் இறந்த விவரத்தைக் கூறினர்.

இடது கால் முறிந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அவர் கூறியதாவது :

''என் தந்தை பெயர் இஸ்ரேல். தாயார் பெயர் நேசமணி.

''புயல் அடித்த அன்று நானும், எனது தந்தையும் எங்கள் வீட்டு முன் புறத்தில் கட்டிலில் படுத்து இருந்தோம். காற்று விர் விர் என்று அடிக்க ஆரம்பித்தது. கட்டிலே பறப்பது போல இருந்தது.

''நாங்கள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனோம். அம்மாவும் அப்பாவும் ஒரு சுவர் ஓரத்தில் இருந்தனர். என் தம்பியும் தங்கச்சியும் மற்றோர் புறத்தில் இருந்தனர்.

''இரவு 2.35 மணிக்கு வீடே கிடுகிடு என்று ஆடியது.

''எங்கள் வீட்டைச் சுற்றிப் பனைமரங்கள் இருக்கின்றன. அவைகள் முறிந்து விழும் சப்தம் கேட்டது.

''வெளியே போனால் பனை மரம் வீழ்ந்து இறந்து விடுவோமே என்று வெளியே வரப் பயந்தோம்.

''அப்போது வீடு ஒரு பக்கத்தில் பிளந்து வீழ்ந்தது. (இதைச் சொல்லும்போது அவரது கை கால்கள் ஆட, குரல் நடுங்கியது! கண்ணீர் வழிந்தது!)

''அம்மா, அப்பாவின் 'அய்யோ!' என்ற குரல் கேட்டது. என்னுடைய கால்கள் இடிந்த சுவரில் மாட்டிக் கொண்டு விட்டன என்னால் எழ முடியவில்லை. நானும் அலறிக் கொண்டே இருந்தேன்.

''3 மணி நேரம் அப்பா அம்மாவின் சப்தம் கேட்டது. பிறகு நின்றுவிட்டது.

''காலையில் ஊரார் வந்து அந்த இடிபாடுகளைத் தோண்டி எடுத்தனர். அப்பா இறந்து கிடந்தார். அம்மா என்ன ஆனாள் என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை.

''என்னை மருத்துவமனைக்குக் கொண்டு வந்து விட்டனர். அப்பாவை அடக்கம் செய்ததைக் கூட நான் பார்க்க முடியவில்லை.

''என் தம்பி, தங்கை பிழைத்துக் கொண்டு விட்டார்கள். அம்மாவையும், அப்பாவையும் புயல் பலி கொண்டுவிட்டது'' என்று கூறிக் கண் கலங்கினர்.

## காற்றில் பறந்த குழந்தையைக் கண்டவர் கூறியது!

சுழன்று அடித்த சூறுவளிக் காற்றில் 3 வயது ஆண் குழந்தை ஒன்று பறந்து சென்றது. மறுநாள் அந்தக் குழந்தையின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் வேளாங்கண்ணியில் நடந்தது. வேளாங்கண்ணிப் பகுதி கோரப் புயலுக்கு ஆளாகியது.

''மாதா கோயிலைச் சுற்றி இருந்த கிராம மக்கள் அந்தக் கோயிலில் அடைக்கலம் புக ஓடி வந்தனர்.

''ஜேம்ஸ் என்பவரின் குடும்பம் அதில் ஒன்றாக இருந்தது. அவரும், அவரது மனைவியும் இரண்டு குழந்தைகளோடு ஓடி வந்தனர்.

''ஒரு குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொண்டு, மற்றோர் 3 வயது ஆண் குழந்தையை கையில் பிடித்தபடி ஜேம்சின் மனைவி ஓடி வந்தார்.

''100 கிலோ மீட்டர் வேகத்தில் கோரப் புயல் சுழன்று அடித்தவண்ணம் இருந்தது. சுழன்று அடித்த புயல் அந்த 3 வயதுக் குழந்தையைப் பறித்துச் சென்று விட்டது.

''குழந்தை காற்றில் பறந்து விட்டது! தாய் பதறினாள்! ஆனாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை!

''மறுநாள் அந்தக் குழந்தையின் உடல் கண்டு பிடித்து எடுக்கப்பட்டது'' என்று கூறினார்கள்.

## மரக்கிளையில் சிக்கிப் பிழைத்தவர் கூறியது!

வெள்ளத்தில் மனைவி, மகன்களைப் பறி கொடுத்த ஒரு வாலிபர் வெளியிட்ட தகவல்கள் உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது!

வெள்ளப் வந்தபோது விளைந்த விபரீதம் பற்றி வேடசந்தூரைச் சேர்ந்த திரு வேலாயுதம் என்பவர் கூறியதாவது :

''அன்று இரவு 7 மணி இருக்கும். மழை கொட்டிக் கொண்டிருந்தது. இதற்கு முன் இது போன்ற மழையை நான் பார்த்தது இல்லை. என் மனத்தில் ஒரு வித அச்சம் ஏற்பட்டது.

''அதே நேரத்தில் வெளியே மழை வெள்ளம் ஓடிக் கொண்டு இருந்தது. இதனால் என் மனைவி மூக்காயி, மகன் பிச்சை மூத்து (15), மற்றொரு மகன் ராமமூர்த்தி (13), மகள் வெங்கடம்மாள் (11), கடைசி மகன் துரையரசு (6) ஆகியோரை அழைத்துக் கொண்டு பக்கத்து வீட்டுக்குச் சென்றேன்.

''அடுத்த வீட்டில் ராமசாமி அவரது மனைவி வீரம்மாள், மகன் கருப்புச்சாமி, மகள் ராணி ஆகியோர் இருந்தார்கள். இரண்டு குடும்பத்தினரும் பயந்து கொண்டே இருந்தோம்.

''திடீர் என்று வீட்டுக்குள் வெள்ளம் வரத் தொடங்கியது. உடனே நானும், ராமசாமியும் அவரவர் குடும்பத்தை வீட்டுக் கரை மீது ஏற்றி உட்கார வைத்துவிட்டு நாங்களும் ஏறிக் கொண்டோம்.

''அந்த நேரத்தில் வேறு வழி எதுவும் கிடையாது. பிள்ளைகள் குளிராலும் மழையாலும் 'வெட வெட' என்று நடுங்கினார்கள். அழுதார்கள்,

''யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் நானும் ராமசாமியும் திகைத்தோம்.

''சற்று நேரத்தில் எங்கள் குடிசை வெள்ளத்தில் மிதந்து செல்லத் தொடங்கியது. பல இடங்களில் அந்தக் குடிசை, சுழன்று சென்ற போது, எங்கள் உயிர் போய்த்திரும்பி வந்தது போல் இருந்தது.

''ஏறத்தாழ 2 பர்லாங் தூரம் சென்ற பிறகு, கூட்டாறு என்ற காட்டாறு சங்கமம் ஆகும் இடத்தில் வேகமாக எங்கள் குடிசை சுழன்றது! அப்படியே வெள்ளத்தில் அமிழ்ந்து விட்டது.

''நான் இரு கைகளாலும் கிடைத்தவர்களைப் பிடித்துக் கொண்டேன். என் இரண்டு மகன்களும் என் கைக்குக் கிடைத்தார்கள். மற்றவர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டார்கள்.

''மூக்காயி, ராமமூர்த்தி, வெங்கடம்மாள் 3 பேரும் வெள்ளத்தில் பிணமானார்கள். பக்கத்து வீட்டு வீரம்மாளும், ராணியும் வெள்ளத்தோடு போய்விட்டார்கள் என்பதை பின்புதான் ராமசாமி சொன்னதன் பேரில் தெரிந்து கொண்டேன்.

''நான், பிச்சைமுத்து, துரையரசு ஆகிய 3 பேரும் ஒரு பனை மரத்தைத் துணையாகக் கொண்டு தொத்திக் கொண்டு இருந்தோம். என் தோளில் துரையரசை வைத்து இருந்தேன். சற்று நேரத்தில் அந்தப் பனைமரமும் சாய்ந்து விட்டது. 3 பேரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டோம்.

''தோளில் இருந்த துரையரசு வெள்ளத்தில் விழுந்து விட்டான். உடனே அவனை வலது கையில் அணைத்துப் பிடித்தபடியே ஏதாவது தென்படுகிறதா என்று பார்த்தேன். அதே நேரத்தில் என் மகன் பிச்சை முத்து ஒரு பனை மரத்தைப் பிடித்துக் கொண்டதாகச் சொன்னான்.

''நான், அவன் எந்த திசையில் இருக்கிறான் என்று கூடத் தெரியாத நிலையில் 'அய்யா, என் பெயரைச் சொல்ல நீ ஒருவனாவது பிழைத்துக் கொள்ளப்பா!'' என்று சொன்னபடி துரையரசை அணைத்துக் கொண்டே வெள்ளத்தில் போய்க் கொண்டு இருந்தேன்.

''சிறிது நேரத்தில் மரக் கிளையில் சிக்கிக் கொண்டேன். நல்ல வேளை இனி பிழைத்துக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டேன். துரையரசை நல்ல உயரமான கிளையில் உட்கார வைத்து விடலாம் என்று கூட பார்த்தேன்.

''அந்தக்கிளையில் முள் செடிகளும், கூரைகளும் சிக்கி இருந்தன. ஒரு பிணமும் சிக்கி இருந்தது. மனிதனின் பிணமோ மாட்டின் பிணமோ தெரியவில்லை. அந்தப் பிணத்தின் மீது என் மகனை அணைப்பாக வைத்து விட்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

''ஆனால் 5 நிமிடம் கூட நிம்மதி நீடிக்கவில்லை. கடல் அலை போல் பொங்கி வந்த வெள்ளம் என்னையும், என் மகனையும் பிரித்து விட்டது. 'அப்பா!' என்ற ஒரே சத்தம்தான் கேட்டது. அப்புறம் என் அருமை மகனின் குரலைக் கேட்க முடியவில்லை. அவன் போய் விட்டான்.

'நாமும் தொலைந்தோம்'' என்று எண்ணிக் கொண்டேன். எந்தப் பக்கமும் நீந்திச் செல்ல முடியாது என்பது போல, திசையும் தெரியவில்லை. ஆனால் குடகனாறு அணைப்பக்கம் நான் இருப்பதை மட்டும் உணர முடிந்தது.

''வெள்ளத்தில் வேகமாக நான் இழுத்துச் செல்லப்பட்டேன். சிறிது நேரத்தில் 20 பேர் சேர்ந்து ஒரு ஆளை எப்படி வீசுவார்களோ அப்படி நானும் வீசப்பட்டேன். ஏதோ தெய்வச் செயல் என்று நினைக்கிறேன். குடகனாறு அணை மதகுப் பக்கம் நான் தூக்கி வீசப் பட்டேன்.

''அப்போது இரவு 2 மணி இருக்கும். அங்குள்ள அறைகளில் யாரும் இல்லை. வேட்டிகள் இருந்தன. அவற்றை எடுத்துப் போய் போர்த்திக் கொண்டு, அங்கு இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, நம் குடும்பத்தைச் சேர்ந்த யாராவது கிடைக்க மாட்டார்களா என்று விடிய விடியப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

''3-30 மணி அளவில் அணைப் பகுதி உடையும் பயங்கரச் சத்தம் கேட்டது. இனி நாமும் தொலைந்தோம் என்று பயந்து கொண்டே இருந்தேன்.

''பொழுது விடிந்தது. வெள்ளம் சிறிதளவு குறைந்து இருந்தது. பக்கத்து கிராமத்துக் காரர்கள் மற்றும் சிலர் அங்கு வந்தார்கள்.

''நான் என் கதையைச் சொன்னேன். அவர்கள் தங்கள் கதைகளைக் கூறினார்கள். என் மகன் பிச்சை முத்து தென்னை மரத்தில் இருப்பதாகச் சொன்னேன். அவர்களோ அந்தச் சிறு பையன் இவ்வளவு நேரம் வெள்ளத்திற்குத் தாக்குப் பிடித்து இருக்க மாட்டான். மரமும் இருக்காது என்று சொல்லி என்னைக் கூட்டிக் கொண்டு சென்றார்கள். என் மனம் கேட்காமல் வழியில் திரும்பித் திரும்பி தென்னை மரங்களில் எல்லாம் பார்த்தேன். என் மகனைக் காணவில்லை.

''அழுதுகொண்டே ராஜா கவுண்டனூரை அடைந்தேன். அங்கே என் மகன் பிச்சை முத்துவைப் பார்த்தேன்!

''அப்பா! அம்மா போய்விட்டார்கள். நான் மட்டும் தப்பி வந்தேன்!'' என்று அங்குள்ளவர்களிடம் சொல்லி அழுது கொண்டு இருந்தான். என்னைப் பார்த்ததும் 'ஓ' என்று கதறி அழுதான். நானும் அழுதேன்.








# தமிழ்நாட்டு அறிவு

—திரு.வி.க

**ஆ**ச்சாரியார் அறிவு, நுண்ணியது; கூரியது; சிந்தை ஆழச் செல்வது; நியாய வாதம் வன்மையது. இராஜதந்திரம் அவர் அறிவுக்கும் சிந்தனைக்கும் வாதத்துக்கும் அகழியாக நிற்கும். தங்கோள் நிறுத்துவதில் ஆச்சாரியார் பேர் பெற்றவர். எனது அரசியல் வாழ்க்கை அவருடனும் உறவு கொண்டது.

எனது அன்பு ஒவ்வொரு தேச பக்தரை ஒவ்வொரு விதமாகச் சிறப்பித்துப் பேசும்; எழுதும். அவ்வன்பு இராஜகோபாலாச்சாரியாரை எப்படிப் பேசும்? எழுதும்? ஒரு முறை லஜபதிக்கும், ஆச்சாரியார்க்கும் பத்திரிகையில் வாக்குவாதம் நடந்தது. அதைப்பற்றி 'நவசக்தி'யில் என் கருத்தைத் தெரிவிக்கப் புகுந்தேன். அப்பொழுது லஜபதியைப் **பாஞ்சால சிங்கம்** என்றேன் ஆச்சாரியாரைத் **தமிழ் நாட்டு அறிவு** என்றேன்.

சக்கரவர்த்தி இராஜபோலாச்சாரியாரின் சென்னை உறைவிடம் 'திலகர் பவனம்' ஆயிற்று. இப்பவனத்துக்கு அணித்தே 'தேச பக்தன்' நிலையமிருந்தது. அவ்வணிமை ஆச்சாரியாரையும், என்னையும் அடிக்கடி சந்திக்கச் செய்யும். அச்சந்திப்பு ஆச்சாரியாரைத் தொழிலாளர் இயக்கத்திலும் ஈடுபடுத்தியது.

ஆச்சாரியாரைச் சென்னைக்கு அழைத்தது எது? வக்கீல் உலகம். அந்தப் பெரிய வக்கீல் உலகம் ஆச்சாரியாரை ஹைகோர்ட்டில் சில காலமாதல் வாதிக்க விடுத்ததா? இல்லை. இங்கேயே மனித முயற்சிக்கு மேம்பட்ட ஒரு சக்தியிருத்தல் விளங்குகிறது. அச்சக்தி ஆச்சாரியாரை என்ன செய்தது? அகிம்சா தர்ம தீட்சையில் வேட்கை கொள்ள ஏவியது; சத்தியாக்கிரக யாகத்தில் நாட்டம் பெறச் செய்தது; தியாகியாக்கியது.

'ரௌலட்' மசோதாவை முன்னிட்டுக் காந்தியடிகள் பரத கண்டத்தை வலம் வந்தார்; சென்னைக்கும் வந்தார்; எங்கே தங்கினார்? 'திலகர் பவனத்'தில் தங்கினார். அப்பவனத்தில் தென்னாட்டுத் தேச பக்தியே பொங்கித் ததும்பி வழிந்தது. ஆச்சாரியார் நிலையம் திருவள்ளுவர் விருந்ததிகாரமெனப் பொலிந்தது.

'திலகர் பவனம்' குருந்த மரமாயிற்று. காந்தியடிகள் தட்சணாமூர்த்தியானார். இராஜகோபாலாச்சாரியார் வாதவூரடிகளானார். தீட்சை சூட்மமாக நிகழ்ந்தது. ஆச்சாரியாரின் உடல், பொருள், ஆவியெல்லாம் காந்தீயத்துக்கு அர்ப்பணமாயின.

1917-ஆம் ஆண்டில் சேலத்தில் ஆச்சாரியாரை என் கண் எப்படிப் பார்த்தது? 1919-ல் அக் கண் அவரை எப்படிக் கண்டது? அரசராயிருந்த ஆச்சாரியார், ஆண்டியானார். யான் எப்பொழுதும் ஆண்டி. அதனால் மாற்றம் எனக்கு நன்கு புலனாயிற்று.

இராஜகோபாலச்சாரியாரும் யானும் கதராண்டியானோம்; ஈருடல் ஓருயிரானோம்; சத்தியாக்கிரகப் போர்க் களத்தில் நின்றோம்; போர் புரிந்தோம்; பெரும் போர் புரிந்தோம். ஒருடல் சிறைப்பட்டது; மற்றொருடல் சிறைப்பட வில்லை.

வேலூரில் (4-12-1921) தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரியக்குழுக் கூட்டங் கூடியது. அவ்வேளையில் கூட்டத்திலேயே இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன், இராமசாமி நாயக்கர், சுப்பிரமணிய சாஸ்திரியார் முதலிய எல்லோர்க்கும் 144 வழங்கப்பட்டது. எனக்கு மட்டும் அஃது வழங்கப்படவில்லை. அன்று மாலை வேலூர் கோட்டை மைதானத்தில் பெருங்கூட்டம் கூடியது. பேசுவோர் யார்? யான் பேசினேன். என்ன பேசினேன்? 'இப்பொழுது சட்ட மீறல் நடைபெறல் வேண்டும். ஆனால் அது நடைபெறாது. ஏன்? வேலூரில் கதர் மணங்கமழவில்லை. கதர் மணத்திடையே சட்ட மீறல் நிகழ்வது சிறப்பு. இன்னும் ஒரு வாரத்துக்குள் கதர் மணங் கமழ்ந்தே தீர வேண்டும். அம் மணச் சூழலில் நின்று, தேச பக்தர்கள் சட்டமீறுவார்கள்; சிறை புகுவார்கள். ஆதலின் உடனே வேலூர் கதர் அணிவ

தாக; கதர் வண்ணமாவதாக' என்று கருத்துப்படப் பேசினேன்.

வேலூரினின்றுந் திரும்பிய தேச பக்தர் பலர் ஆங்காங்கே சிறைக்கு இரையாயினர். இராஜ கோபாலாச்சாரியாரும், சுப்பிர மணிய சாஸ்திரியாரும் வேலூரி லே கதர் மணங் கமழச் சட்ட மீறிச் சிறை நோக்கினர்.

வேலூரில் அகிம்சா தர்ம தீட்சிதர் காலம் எப்படிக் கழிந் தது? அவர் மற்ருேர் அகிம்சா தர்மத் தீட்சிதருடன் உறவு கொண்டார். அவ்வுறவு ஒரு தமிழ் நூலாகியது. ஆச்சாரியார் 'சோக்ரதர்' என்ற நூலுடன் வெளிவந்தார். ஆச்சாரியார் இயற்றிய அவ்வரிய தமிழ் நூல் எனது அணிந்துரையைப் புனைந்து வெளியாயிற்று.



கயை காங்கிரஸுக்குப் பின்னே ஆச்சாரியாரின் பெரும் பொழுது ஆக்க வேலையில் கழிந்தது. திருச் செங்கோட்டுக்கு அருகேயுள்ள புதுப்பாளையத்திலே காந்தி ஆசிர மம் அமைக்கப்பட்டது. அது சோம்பல் நெளியும் ஆசிரமம் அன்று. அது சுறுசுறுப்பும் ஊக்க மும் முயற்சியும் தாளாண்மையும் மதர்த்து நிற்கும் உயிர்ப்பிடம். காந்தி ஆசிரமம் கதர்ச் சுரங்கம் ஆயிற்று. தென்னுட்டிலே கதர் உற்பத்திக்கு அதுவே பெரும் பீட மாயிருந்தது. அந்த நல்லாசிரமம் ஆச்சாரியார் மேற்பார்வையில் நடந்து வந்தது. அக் கதர் சுரங் கத்தை யான் ஒரே முறை பார்த் தேன். அங்கே யான் போன போது ஆச்சாரியார் கையில் 'நாலாயிரம்' இருந்தது. அவ் வேளையில் அரிசிப் பொரிமா வந்தது. அதை அவர் எனக்குங் கொடுத்தார்; தாமும் உண்டார். ஆழ்வார் தமிழ்த் தேனில் கலந்த பொரிமா அமிழ்தென இனித்தது.

## ராஜாஜியின் சொல்லாற்றல்!

ராஜாஜி அவர்கள் சென்னையில் முதலமைச்சராக இருந்தபோது சட்டசபையில் இரண்டு முக்கியச் சட்டங் களைக் கொண்டு வந்தார். ஒன்று, மதுவிலக்குச் சட்டம்; மற்ருென்று விற்பனை வரிச் சட்டம். சட்டம் கொண்டு வருவதற்கு முதல் நாளே பொதுமக்களை அணுகி, அந்தச் சட்டத்தைப் பற்றி விளக்க மாகப் பேசிவிட்டு வருவது அவர் வழக்கமாயிருந்தது.

மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வருமுன் ராயபுரம் 'ராபின்சன்' பார்க்கில் பொதுக் கூட்டம் நடந்தது. திரு. சி. பி. சுப்பையா அதற்குத் தலைமை தாங்கினர். ராஜாஜி பேசினர்:

"முதலில் சேலத்தில் ஏன் மதுவிலக்கைக் கொண்டு வருகிறேன் என்று என்னைப் பலர் கேட்கிருர்கள். சேலம் என் சொந்த ஜில்லா என்பதற் காக அல்ல. சுடச் சுடத் தட்டு நிறையக் கூழ் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறவர்கள், முதலில் ஓரத்தில்தான் விர லால் தடவி எடுத்துச் சாப்பிடு வார்கள். நடுவில் தொட்டால் கையைச் சுட்டுவிடும். அது போல, மதுவிலக்கை அமல் படுத்தும் போதும் உஷாராக இருக்க வேண்டும், ஓரத்திலி ருந்துதான் மத்தியப் பகுதிக்கு வரவேண்டும். சேலம் ஜில்லா ஓரப்பகுதி. ஆகவே, அங்கே முதலில் கை வைத் திருக்கிறேன்."

"விற்பனை வரி பற்றி வியாபாரிகள் பயப்பட வேண் டாம்; அதைக் கொடுக்கப் போகிறவர்கள் வாங்குகிற வர்கள்தான்!" என்பதை விளக்குவதற்காக அன்று அவர் கொத்தவால் சாவடிக் கூட்டத்தில் பேசிய பேச்சு என்றும் மறக்க முடியாத ஒன்று.

கடைசியாக, 1962-ல் அணுகுண்டு சோதனையை நிறுத்த வேண்டும் என்பதற் காக அமெரிக்காவுக்குச் சென்று, வாஷிங்டன் வெள்ளை மாளிகையில் கென்னடியைச் சந்தித்துப் பேசிவிட்டு வந் தாரே, அப்போது நிருபர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, "போன காரியம் என்ன ஆயிற்று? காயா, பழமா?" என்று கேட்ட போது, "*If you can coin a new word, you may say not fruitful, but flowerful. The flower may become fruit later on*" என்று கூறினுரே, அவரைத் தவிர அப்படி வேறு யாரால் கூறமுடியும்?

### மனித உரிமைகளும் ராஜாஜியும்

மனித உரிமைகள் குறித்து ஐ. நா. பிரகடனம் அதிகாரப்பூர்வ மாக அறிவிக்கப்படுவதற்கு முன்பே அதை மனத்தில் கற்பனை செய்தவர் ராஜாஜி. மேலும் அதை வாழ்க் கையில் அனுசரித்துப் பிரகடனம் செய்தவர்.

—டாக்டர் ஆதிசேஷையா.



## உழவர் பெருமக்களுக்கு ஓர் வேண்டுகோள்!

தமிழகத்தில் சமீபத்தில் வீசிய பெரும்புயல், பேய் மழை காரணமாக அறுவடை ஆக இருந்த பயிர்ச் சேதத்தை ஈடுகட்டுவதற்காக தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தாளடி, மற்றும் கோடை காலப் பயிர்களைச் சாகுபடி செய்வதற்காக மேட் டூர் நீர்த் தேக்கத்திலிருந்து மார்ச் மாதம் 10ஆம் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படும்.

"சாதாரணமாக ஜனவரி மாதம் வரைதான் மேட்டூரிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். இந்த ஆண்டில் புயல், பெருமழை காரணமாக அறுவடைப் பருவத்தி லிருந்த ஏராளமான நெற்பயிர் சேதமடைந்ததால், விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கவும், தாளடி, கோடைப் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு வசதியாகவும் மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விட முடிவு செய்யப்பட்டுள்ளது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மூன்றரை இலட்சம் ஏக்கரில் தாளடி சாகுபடி செய்யவும், திருச்சி, சேலம், தென்னுர்க்காடு ஆகிய மாவட்டங் களில் ஐம்பதாயிரம் ஏக்கரில் கோடைக் காலப் பயிர் சாகுபடி செய்யவும், ஆக மொத்தம் நான்கு இலட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து விடப்படும்.

விவசாயிகள் இந்தப் பாசன நீர் வசதியை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டும், அரசுத் தரப்பில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி விதை நெல், பூச்சி கொல்லி மருந்து, உரம் ஆகியவை வழங்கும் சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டும், புதிய பயிர்களைச் சாகுபடி செய்ய முன்வர வேண்டும்" என்று மாண்புமிகு தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் திரு ராமச் சந்திரன் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

### ஏரி, குளம் சீரமைப்பு

மழை, வெள்ளம் காரணமாக பழுதுபட்ட நீர் நிலைகள், குளங்கள், ஏரிகளின் கரைகளைச் செப்ப னிடுவது உள்ளிட்ட பொதுப் பணித் துறை வேலை களை வருகிற ஜூன் 30ஆம் தேதிக்குள் செப்ப னிட்டு முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதற் காக என்றே தனியாக இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஸ்தலப் பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட வேலைகளைத் தாமாக மேற்கொண்டு செய்யலாம் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது. அரசினுல் நியமிக்கப்பட்ட பொறி யாளர்கள் இந்தப் பணிகளை நிறைவேற்றுவர் என்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் கூறினுர்.

## தமிழ்நாட்டில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில நடைபெற்றுள்ள சீரமைபபு—துயா துடைப்பு—மறுவாழ்வுப பணிகள்!

(16—12—1977 தேதிய நிலவரம்)

1. சீரமைப்புப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1. | உடைப்புகள் அடைக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட பாசன ஆதாரங்கள் | 7,597 |
| 2. | செப்பனிடப்பட்ட சாலைகள் | [illegible] |
| 3. | மீண்டும் தொடர்[illegible] தொலைபேசிகள் | 6,[illegible] |
| 4. | பழுதுபார்க்கப்பட்ட 'டிரான்ஸ்பார்மர்கள் மின்சாரக் கம்பங்கள் | 44,269 |

2. துயர் துடைப்பு—மறுவாழ்வுப் பணிகள்

| | | |
|---|---|---|
| 1. | குடிசை [illegible] வழங்கப்பட்டுள்ள [illegible] மானியம் | ரூபாய் [illegible],39,32,799-[illegible] |
| 2 | வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு [illegible] கப்பட்டுள்ள [illegible], புடவைகள் | 3,66,601 ஜோடி |
| 3. | வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதி மக்களுக்குப் போடப்பட்டுள்ளத் தடுப்பு ஊசிகள் | 35,23,169 |
| 4 | சம்பாதிக்கும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருணை உதவி | ரூ. 57,500 |

# நிதி குவிகிறது!



மாண்புமிகு தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள், 10 வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுக்களின் சார்பாகவும், வேளாண்மைத்துறைப் பணியாளர்கள் சார்பாகவும் புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு ரூபாய் 20,06,902.54-க்குரிய காசோலையை 12-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார். இக் காசோலையில் 10 வேளாண்மை விளைபொருள் விற்பனைக் குழுக்கள் அளித்த ரூபாய் 19,30,000-மும், வேளாண்மைத்துறைப் பணியாளர்கள் அளித்த ரூபாய் 49,697-ம் அடங்கியுள்ளன.



தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத்துறைப் பணியாளர்கள் புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு வழங்கிய ரூபாய் 94,141.80-க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழகச் சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் 12-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.



தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை ஆசிரியர்களும், மாணவர்களும், பணியாளர்களும், புயல்-வெள்ள நிவாரண நிதிக்கு அளித்த ரூபாய் 3,94,435-க்குரிய காசோலையைத் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திரு எச்.எஸ். எஸ். லாரன்ஸ் அவர்கள் 14-12-1977-ல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினர்.

தமிழக வெள்ள நிவாரண நிதிக்காக, கூட்டுறவு நிறுவனங்கள் அளித்த ரூபாய் 10 இலட்சத்திற்குரிய காசோலையை மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் 8-12-1977 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்களிடம் அளித்தார்.





திருவாளர்கள் ரிச்சர்ட்சன் அண்ட் குரு தாஸ் லிமிடெட்டின் நிறுவனத்தினர், வெள்ள நிவாரண நிதியாக 18,600 ரூபாய்க்குரிய காசோலையை 9-12-1977 அன்று மாண்புமிகு தமிழகத் தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகாவானந்தம் அவர்களிடம் அளித்தனர்.

தமிழக முதல்வர் வசூலிக்கும் வெள்ள நிவாரண நிதிக்காக சென்னை 'தாஜ்கோரமாண்டல்' ஹோட்டலின் பணியாளர்கள், ரூபாய் 3,795-10-க்குரிய காசோலையை மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களிடம் அளித்தனர்.



வெள்ளம் வடிந்து விட்டது!
கண்ணீர் வடிவது நிற்க வில்லை!!
அந்தக் கண்ணீரைத் துடைப்பது
நம் கடமையல்லவா?

## நல்லிதயம் படைத்தோர்
## அள்ளிக் கொடுத்த நிதி!
## 30 நாளில் 2.44 கோடி ரூபாய்!!

இயற்கையின் கடுமையான சீற்றத் திற்கு ஆளாகி அல்லற்படும் மக்களுக்கு உதவிடுவீர் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்., அவர்கள் சென்ற மாதம் 16-ஆம் தேதி வேண்டுகோள் விடுத்தார்.

சென்றமாதம் 17-ஆம் தேதி முதல் இந்த மாதம் 16-ஆம் தேதி வரையான 30 நாட்களில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டு கோளை ஏற்று, 2 கோடியே 44 இலட்சத்து 83 ஆயிரத்து 129 ரூபாய் 71 காசுகளை நல்லிதயம் படைத்தோர் அள்ளிக் கொடுத் துள்ளனர்!

தமிழக முதலமைச்சரின் வேண்டு கோளை ஏற்று, தொடர்ந்து தமிழக மக்கள் மட்டுமல்ல, வெளி மாநில மக்களும் வெள்ள நிவாரண நிதிக்கு அள்ளித் தந்து வருகிறார்கள்.

சமுதாயத்தின் சகல பகுதி மக்களும் பள்ளி மாணவர்களிலிருந்து தொழி லாளர்கள் வரை அனைத்து மக்களும் நிவாரண நிதி வழங்கி வருகிறார்கள்.

ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று புயல்கள் தோன்றி
தமிழகத்தை வெள்ளக் காடாக்கி விட்டன!
அந்த வெள்ளத்தினால்,
உற்றார் உறவினரை இழந்து,
வீடுகளை இழந்து,
மாடுகளை இழந்து,
ஆடுகளை இழந்து,
அறுவடைக்குத் தயாராய் இருந்த பயிரையும் இழந்து
இலட்சக்கணக்கானோர் தேம்பி அழுகின்றனர்!

தேம்பி அழுவோரின் கண்ணீரைத் துடைப்பதற்காக,
தமிழ்நாடு அரசு, துயர்துடைப்புப் பணிகளைப்
'போர்க்காலப் பணிகளைப் போல்' விரைவாகச்
செயல் படுத்தி வருகிறது. மைய அரசும்
தாராளமாக நிதி உதவுவதாக உறுதியளித்துள்ளது.
ஆயினும், நம் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களுக்கு
உதவுவது நம் கடமையல்லவா?

அல்லற்பட்டு ஆற்றாது அழுகின்றவர்களின்
கண்ணீர் நிற்க வேண்டுமானால், அவர்களின்
வேதனைகளை விரைந்து தீர்த்திட வேண்டும்!

வேதனைகளை விரைவாகத் தீர்த்திட வேண்டுமானால்,
துயர்துடைப்புப் பணிகள் துரிதமாக நடைபெற வேண்டுமானால்,
அனைவரும் மனமுவந்து நிதியளித்திட வேண்டும்!

**எனவே,**
**பேரன்பு மிக்கோரே! பெற்ற தாய்மாரே!!**
**நிதி மிகுந்தோர் பொற்குவை தாரீர்!**
**நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்!!**
**உடல்வலிவுள்ளோர் உழைப்பினைத் தாரீர்!!!**
**ஏனையோரெல்லாம் இயன்றதைத் தாரீர்!!!!**

# "எதிர்காலச் சமுதாயம் சீரோடும் சிறப்போடும் வாழ ஒன்றுபட்டு உழைக்க முன்வருவீர்!"

—முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர்.



"இன்றைக்குத் தமிழகம் துன்பச் சூழ்நிலை யில் இருக்கிறது. நாம் நமது மரபுப்படி எந் தெந்த வகையில் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியுமோ அந்தந்த வகையில் தாங்கிக் கொள்ள, அதேநேரத்தில் எதிர்கால வாழ்க்கையை அமைத்துக் கொள்ள-வாய்ப்பு களை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள-நமது மன உறுதி உதவும் என்று நம்பு கிறேன்.

"அதற்கு மன உறுதியும், தெளிவான போக்கும், நம்பிக்கையான செயல்பாடும் உதவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக் கிறது.

"தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக் கைகள் எதையும் பெருமைக்காகச் செய்ய முன் வரவில்லை. பிறர் போற்ற வேண்டும் என்பதற் காகவும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அப்படிச் செய்ய நாங்கள் தயாராகவும் இல்லை.

"உண்மையாகவே யார் கஷ்டப்படு கிறார்களோ - அவதிப்படுகிறார்களோ - அவர் களுக்குத் துணை நிற்கவும், சுற்றுச் சார்பில் அமைதி நிலவவும் மக்கள் நல்வாழ்விற்காக தொண்டு செய்து வருகிறோம்.

"மக்களின் வரிப்பணத்தை நல்ல முறை யில் செலவழிக்க ஆட்சிப் பொறுப்பில் இருக் கிற நிர்வாகிகள், அதிகாரிகளின் திறமையை பயன்படுத்தி, நாங்கள் உறுதிகூறிய பல கட மைகளை நிறைவேற்ற விரும்புகிறோம்.

"அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல் லியது போல 'தூற்றுவோர் தூற்றட்டும்....' அதைப் பற்றிக் கவலைப்படாமல்-யார் பேசினா லும், ஏசினாலும்-மக்களுக்கு நல்வாழ்வு அளிக் கும் பணியில் தொடர்ந்து செயல்பட்டு முன் னேறி வருகிறோம்.

"என்னுடைய கடமையிலிருந்து நான் நழுவ மாட்டேன். என்னுடன் பொறுப்பில் இருக்கும் அமைச்சர்களையும், அமைச்சர் களாக இல்லாமல் ஆற்றலும், அறிவும், தொண்டுள்ளமும் கொண்ட நல்ல உடன் பிறப்புகளையும் நான் பெற்றிருக்கிறேன்.

"தாய்மார்கள், முதியவர்கள், இளை ஞர்கள் ஆகியவர்களின் ஆதரவை நம்பி இருக்கின்றோம். அவர்கள் எங்களுக்குத் தந்த பதவியை, அவர்களுக்குத் தொண்டு செய்யப் பயன்படுத்த வேண்டும் என்ற கடமை உணர்வுடன் பயன்படுத்துவோம்.

"மக்களுக்கு முடிந்த அளவு தொண் டாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் இருந்து வந்திருக்கிறது; இப் போதும் இருக்கிறது.

"நாம் எத்தனை கோடி மதிப்புள்ள சொத்துக்களை-விலை மதிக்க முடியாத உயிர் களை-இழந்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது பேரிழப்பிலிருந்தும், துயரத்திலிருந்தும் நல்ல எண்ணத்தோடு செயல்பட்டு மீள்வோம், வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது.

"மக்களின் நல்வாழ்விற்காக-ஒளியூட் டும் எதிர்காலத்திற்காக—சீரிய பாதையை அமைத்து முன்னேறுவோம் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

"மக்களின் நல்வாழ்விற்காக செயல் படும் எங்களுக்கு, அத்தனை பேரும் மன முவந்து உதவமுன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொருவரும் தங்களின் கடமையை உணர்ந்து, மக்கள் நல் வாழ்வுப் பணியில் ஈடுபடக் கேட்டுக் கொள் கிறேன்.

நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள், ஏன்? உழைத்து, உழைத்து அன்றாடம் சம்பாதிக்கும் அனைத்துப் பகுதி மக்களும் தங்களால் முடிந்த நிதி உதவிகளை அளித்து வருகின்றனர்.

''நமக்குப்பாதுகாப்பாக-அரணாக-இருந்தவர்களை இப்போது துயரம் சூழ்ந்திருக்கிறது. அன்பு உள்ளங்கள், இந்த நேரத்தில் உதவி செய்து தங்களை அடையாளம் காட்டிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

''இதுவரை இல்லாத அளவிற்குப் பல மாநில அரசுகளும், மக்களும் தமிழகத்திற்கு நன்கொடை வழங்கி வருவதையும் பார்க்கிறோம்.

''எதிர்காலச் சமுதாயம் சீரோடும், சிறப்போடும் வாழ—இன்றுள்ள துன்ப துயரத்திலிருந்து மீள-எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் வெற்றி பெற-அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க முன் வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

''மக்கள் நல்வாழ்வுப் பணிகளில் அனைத்துக் கட்சியினரையும் தொடர்ந்து ஒத்துழைப்பு தருமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

''அண்ணா நாமம் வாழ்க! என்று கூறி முடிக்கிறேன்.''

*[மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் திருச்சி வானொலி மூலமும், சென்னை வானொலி மூலமும் வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து தமிழக மக்களுக்கு விடுத்த சிறப்புச் செய்தியில் இருந்து தொகுக்கப் பட்டது.]*

## மூதறிஞர் ராஜாஜி ஆற்றிய அரும்பணிகள்

மனித சமுதாய முழுவதற்கும் பொதுவான பிரச்சினைகளில் ஒருமித்த கவனம் செலுத்த ராஜாஜி விரும்பினார். அஹிம்சா மார்க்கத்திற்கு அவர் தம்மை அர்ப்பணித்திருந்தார்.

உலக மதுவிலக்கு இயக்கத்தில் ராஜாஜி தீவிரப் பங்கு கொண்டிருந்தார். அணுசக்தி ஆயுதங்களை ஒழிப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்திருந்தார். இதற்காக அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு அவர் சென்றார். உலகில் எல்லோருடைய நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். நீதி நெறியையும், சமயத்தையும் வலியுறுத்துவதன் மூலம் தான் இதைச் செய்ய முடியும் என்று அவர் உணர்ந்திருந்தார்.

—*திரு. கே. சந்தானம்.*

## புயல்—வெள்ளத்தினால் வீடு இழந்தவர்களுக்கு 5.39 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது!

தமிழ்நாட்டில் புயல்-வெள்ளத்தினால் சேதமடைந்துள்ள 4 இலட்சத்து 40 ஆயிரம் குடிசைகளையும், வீடுகளையும் மீண்டும் புதுப்பித்துக் கட்டிக் கொள்வதற்காக தமிழக அரசு உதவிப் பணம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு, 8 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

குடிசை அல்லது வீடுஇழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் முன்பு ரூபாய் 100 வீதம் உதவிப் பணம் அளிக்கப்பட்டது. அத்தொகையைத் தற்பொழுது ரூபாய் 200 ஆக உயர்த்தி தமிழக அரசு வழங்கி வருகிறது.

இவ்வகையில் 16—12—1977 வரை மாவட்ட வாரியாக எவ்வளவு பணம் வழங்கப் பட்டுள்ளது என்ற விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| மாவட்டத்தின் பெயர் | | வழங்கப்பட்டுள்ள ரூபாய் |
|---|---|---|
| தஞ்சாவூர் | — | 3,40,39,800.00 |
| திருச்சிராப்பள்ளி | — | 79,19,565.50 |
| புதுக்கோட்டை | — | 24,60,400.00 |
| மதுரை | — | 15,79,835.00 |
| தென் ஆர்க்காடு | — | 37,24,870.00 |
| வட ஆர்க்காடு | — | 1,61,925.00 |
| சேலம் | — | 1,21,340.00 |
| கோயம்புத்தூர் | — | 4,37,915.00 |
| செங்கல்பட்டு | — | 8,92,715.00 |
| இராமநாதபுரம் | — | 23,86,054.00 |
| தருமபுரி | — | 16,690.00 |
| திருநெல்வேலி | — | 1,76,380.00 |
| நீலகி[illegible] | | 15,310.00 |
| மொத்தம் | | 5,3[illegible]32,799.50 |

1847

DIPR.
ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி [illegible] தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம்; சென்னை-600002.



தமிழரசு தொழிலாளர்கள்,

பதிவு எண். M. 8676





"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா

வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.